# சமாதானத்தின் புதிய பரிமாணங்கள்

அமெரிக்கப் புரட்சியின் அடிப்படைக் கருத்துக்களும், லட்சியங்களும், என்றும் எதிரொலித்துக்கொண்டிருக்கும். அந்தப் புரட்சி விரர்களின் வீரமொழிகளும், கோஷங்களும், சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கும் எல்லா மக்களின் உணர்ச்சிகளையும், தட்டி எழுப்பக்கூடிய முக்கியத் துவம் வாய்ந்தவையாகும்.

உலகில் எங்கெல்லாம் மக்கள் கொடுங்கோலாட்சியின் கீழ் வாழ்கின்றனரோ, அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்டி ருக்கின்றனரோ அல்லது நிலப்பிரபுத்வத்திற்கு ஆட்பட்டி ருக்கின்றனரோ, எங்கெல்லாம் சுதந்திரக் கனவுகள் கண்டு, சுதந்திரத்தை அடைவதற்காகத் திட்டமிட்டுப் போராடு கின்றனரோ, அங்கெல்லாம் உங்கள் புரட்சியில் நீங்கள் கடைப்பிடித்த நிலையான கொள்கைகளை மனத்தில் கொண்டே எல்லா விடுதலை விரர்களும் போராடி வந்திருக்கின்றனர். அமெரிக்கப் புரட்சிக் கருத்துக்கள், மேற்கூறிய இடங்களி லெல்லாம், அணுகுண்டைவிடத் தீவிரமாக உலகத்தை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தவையா யிருக்கின்றன.

ஊ நு, பர்மா பிரதமர்

(3-7-55-இல் பிலடல்பியா சுதந்திர மாளிகையில் செய்த சொற்பொழிவின் பகுதி)

# முன்னுரை

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாட்டு ஸ்தானீக
ராக இந்தியாவில் நான் பதவி வகித்த காலத்தில் இந்தப்
புத்தகத்தை எழுத உத்தேசித்தேன். உலகெங்கும் நமது
நண்பர்களாயிருக்க வேண்டியவர்களின் அபிமானத்தை
நாம் இழந்து வருவதைக் கண்டு, நான் கவலையுற்றதே
இதற்குக் காரணம்.

யுத்தத்திற்குப் பிறகு நமது கொள்கைகள் மூலம் நாம்
சாதித்தவை உற்சாக மூட்டுவனவே. அந்தக் கொள்கைகளை
வகுத்தவர்களிடம் எனக்கு நீடித்த மரியாதை உண்டு.
எனினும், எதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமோ
அதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றே எனக்குத்
தோன்றியது. எனவே உலக மக்களின் முயற்சிகளுக்கு
உற்சாகம் தரும் யோசனைகளைக் கூறலாமா என நினைத்தேன்.

அச்சமயத்திலிருந்து எழுதத் தொடங்கினேன். சில
காலத்திற்கு எழுதுவதைக் கைவிட்டேன். பின்பு மீண்டும்
எழுதத் தொடங்கினேன். ராஜதந்திரிகளும், சாமானிய
மக்களும் சமாளிக்க முனைந்துகொண்டிருக்கும் பரவச
மூட்டும் புதிய சக்திகளை எளிய முறையில் ஆராய முற்படு
வது அசாத்தியமான காரியம் என்பது எனக்குத் தெரியும்.

சென்ற ஆண்டில் உலக நிலை தீவிரமாக மாறியிருக்
கிறது. ஜெனீவாவில் 1955-இல் உலக அதிபர்கள் மகாநாடு
நடந்துவிட்டது. இந்த மகாநாடு நடக்கவேண்டும் என
வின்ஸ்டன் சர்ச்சில் நீண்டகாலமாக வற்புறுத்தி வந்திருக்
கிறார். இதையே அமெரிக்க செனட் அயல்நாட்டு விவகா
ரக் கமிட்டித் தலைவர் வால்டர் ஜார்ஜும் கேட்போர்
மனத்தில் பதியும் வகையில் எடுத்துக் கூறிவந்துள்ளார்.
சோவியத் தந்திரங்களில் தீவிரமான மாறுதல்கள் ஏற்பட்டு
இருப்பதும், அதிபர்கள் மகாநாட்டில் நிலைமை சீர்பட
ஐஸன்ஹோவர் சிரத்தையுடன் முயற்சி செய்து வந்ததும்,
இரண்டும் ஒன்று சேர்ந்து உலகில் பல புதிய பிரச்னைகளை
எழுப்பி புதிய சந்தர்ப்பங்களையும் அளித்திருக்கின்றன.

திடீரென யுத்த அபாயம் அகன்றுவிட்டது என்று
நினைப்பது பொறுப்பற்ற தன்மையைத்தான் குறிக்கின்றது.
இருப்பினும் உறவு முறைகளில் இதுவரை கண்டிராத மாறு
தல்களை இனி நாம் எதிர்பார்க்கலாம் என நான் நம்புகிறேன்.

ஸ்டாலினுடைய ஆக்கிரமிப்புப் போக்கினால் யுத்த
கெடுபிடி ஏற்பட்டது மாறுபடாவிட்டாலும், ஸ்டாலினுடைய
கொள்கையை நிறுத்தும் முறையில் சோவியத் தலைவர்கள்
திடீரென சமீபகாலத்தில் செயல் புரிந்து வருகின்றனர்.
இதிலிருந்து நாசம் விளைவிக்கக்கூடிய ஸ்டாலினின் தவறு
களைத் திருத்த அவருடைய சகாக்கள் சமயம் பார்த்துக்
கொண்டிருந்தனரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

ரஷ்யாவின் இந்தப் புதிய தந்திரம் ஸ்டாலின் எண்ணியிருந்
ததைவிட ஒரு புரட்சிகரமானதும் அபாயகரமானதுமான
பாதையில் கொண்டுபோய் விடலாம். ஓராண்டுக்கு முன்பு
நிலைமையைச் சமாளிக்க வாய்ந்தது, குறுகிய தன்மை
வாய்ந்தது என்று நாம் கருதிய அமெரிக்காவின் கொள்கைகள்
இப்போது காலங்கடந்தவைகளாகிவிட்டன.

ஆயுதப் போரினால் ஏற்படக்கூடிய அபாயங்கள்
குறைந்தாலும், நமது கவனம் ரஷ்யத் தலைமைப் பீடத்தி
லும் கம்யூனிஸத்திலும் அவ்வளவாகச் செல்லாது. உலகத்
தில் பிறபாகங்களில் அர்த்தபுஷ்டியுள்ள, மிகுந்த பய
னளிக்கவல்ல, சுதந்திரம் பெறுவதற்கான பிரமிப்பூட்டக்
கூடிய நேரடியான பணி ஆற்றுவதில் ஊக்கம் காட்ட
வேண்டும். எல்லா இடங்களிலும் எழக்கூடிய பிரச்னைகளை
நாம் புரிந்துகொள்ளவேண்டும். உலகத்தை ஆட்டிவைக்
கும் புரட்சிகரமான சக்திகளையும் நாம் அறிந்துகொள்ள
வேண்டும். சுருங்கக்கூறின் சமாதானத்தின் புதிய பரிமா
ணங்களை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த அறிவு தோன்றவேண்டுமென்றால் நாம் புதிய
தொரு கண்ணோட்டத்தை அடைய முயற்சி செய்யவேண்டும்.
சென்ற குளிர்காலத்தில் நானும் என் மனைவியும் மூன்று
மாதங்கள் 35 ஆயிரம் மைல் தூரம் சுற்றுப்பிரயாணம்
செய்தோம். கோல்டு கோஸ்டில் (Gold coast) உள்ள அக்
ராவிலிருந்து மேற்கு, மத்ய, கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதி
களைக் கடந்து, பாகிஸ்தான், இந்தியா, பர்மா முதலிய
நாடுகளுக்குச் சென்று, லண்டன் வழியாக அமெரிக்கா
வுக்குத் திரும்பினோம். புதிய கண்ணோட்டத்தோடு இந்த
மூன்று கண்டங்களையும் சுற்றிப் பார்த்ததில் பின்கண்ட
செயல்களை உடனடியாக நாம் செய்யவேண்டும் என அவர்கள்
சவால் விடுவதை உணர்ந்தோம். "வெள்ளையர்களே,

பழுப்பு நிறமக்களே, கறுப்பு நிற ஜனங்களே, ஆசியா, ஆஃப்ரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா வாசிகளே, உடனடியாகச் செயல்புரியுங்கள். இப்பொழுதே செயல்புரியுங்கள். ஒன்றுபட்டுச் செயல்புரியுங்கள். புதிய உலகைச் சிருஷ்டி செய்யும் முறையில் குழப்பம் பெருகுவதற்கு முன் செயல்புரியுங்கள். புதிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாமல் பணி ஆற்ற முன்வாருங்கள். சீனாவிலும், இந்தோ—சீனாவிலும் நிகழ்ந்த துன்பமயமான சம்பவங்களைப் பிறநாடுகள் பின்பற்றி மகாகோரம் வாய்ந்த சோக நிலை ஏற்படாமல் தவிர்க்க முன்வாருங்கள். இப்பொழுதே செயல்புரிய முன்வாருங்கள். ஏனெனில் அடுத்த பத்து ஆண்டுகளில் பீரங்கிகளாலும் குண்டுகளாலும் ரத்தக்களறி மூலமாகவும் விளைவிக்க முடியாத நலன்களை மக்களை மாற்றக்கூடிய கருத்துக்கள், சேவைகள் மூலம் சாதித்துவிட முடியும்.''

இப்படி அந்தக் கண்டத்து மக்களிடையே பரவி வளர்ந்துவரும் சவாலை ஏற்று நடத்தி அமெரிக்காவால் சமாளிக்க முடியுமா? பலவகைப் புரட்சிகள் நிகழ்ந்துவரும் இவ்வுலகை நமது மக்கள் புரிந்துகொண்டு, திட்டவட்டமாக உரிய காலத்தில் செயல்புரிய முடியுமா? நம்மால் இயலும் என நான் நம்புகிறேன்.

அரசாங்கப் பதவி வகித்த காலத்திலும், வர்த்தகத் துறையிலிருந்த காலத்திலும் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் நான் சென்று வந்திருக்கிறேன். ஒரு ராஜ்யத்தின் கவர்னர் என்கிற முறையில் 'கனெக்டிகட்டி'ல் (Connecticut) உள்ள எனது நண்பர்களுடனும் அண்டையில் வசிப்பவர்களுடனும் நெருங்கிப் பழகியதனால் அவர்களுடைய நம்பிக்கைகளையும் அச்சங்களையும் வெறுப்புக்களையும் கூட நன்கு அறிந்திருக்கிறேன்.

1953-ஆம் ஆண்டு மே மாதம் இந்தியாவிலிருந்து நான் திரும்பி வந்த பிறகு, அமெரிக்காவில் 50 ஆயிரம் மைல் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறேன். 350 சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறேன். வர்த்தகர்கள், குடியானவர்கள், தொழிலாளிகள், ஸ்டோர்கீப்பர்கள், குடும்ப ஸ்திரீகள், மாணவர்கள் முன்பாகவெல்லாம் பேசியிருக்கிறேன். எல்லாக் கூட்டங்களிலும் நான் பேசிய விஷயம் ஒன்றேதான். தற்கால உலகின் பிரத்தியட்ச நிலையைச் சமாளிக்கக்கூடிய, இரண்டு கட்சிகளும் ஒன்றுபட்டுக் கொள்கை வகுக்க வேண்டியதன் அவசரத்தைப் பற்றித்தான் எல்லா இடங்களிலும் நான் பேசினேன். அமெரிக்கப் பொதுஜன அபிப்பிராயத்தை நெருங்கிப் பழகித்தெரிந்துகொள்ள முடிந்ததால் பல முடிவுகள் எனக்குத் தெளிவாகப் புலப்படுகின்றன.

1. அரசாங்கத்திலும் பல்கலைக் கழகங்களிலும் ஆச்சரியப்படத்தக்க முறையில் கருத்து ஒற்றுமை நிலவுகிறது. சர்வதேச அரங்கில் நிகழும் பல முக்கியமான சம்பவங்கள் பத்திரிகைகளில் முக்கியத்துவம் பெறுவதில்லை என்பதை அவர்கள் அறிவார்கள். இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அமெரிக்கா போதுமான ஆர்வம் காட்டுவதில்லையென்று அவர்கள் மனத்தாங்கல் கொண்டுள்ளனர்.

2. பிறரிடம் இதமாகப் பழகும் பண்பு அமெரிக்கரிடம் அபரிமிதமாக இருக்கிறது. கம்யூனிஸத்தை வெறுத்தால் மட்டும் போதுமானதல்ல என்பதையும் அவர்கள் அறிவார்கள். மனோதர்மம், சகிப்புத்தன்மை—இவைகளில் அரசாங்கத்தைவிட அமெரிக்க மக்கள் முன்னணியில் இருக்கின்றனர் என்று நான் நம்புகிறேன். உலகத்தைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டும் என என்றுமே அமெரிக்கர்களுக்குள்ள ஆவல், பிறநாட்டு மக்களின் அபிலாஷைகளில் அவர்களுக்குள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற அநுதாபம் இவை குறைந்துவிடவில்லை.

3. பதவியிலிருப்பவர்களின் அபிப்பிராயத்திற்கும், மக்களைச் சென்றடையும் செய்திகளுக்கும் ஆச்சரியமடையக்கூடிய அளவு வித்தியாசம் இருக்கிறது. மக்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்குமிடையே உள்ள அரசியல்வாதிகள், ''எங்கள் பேச்சுக்கள், செயல்கள் பலவற்றின் முடிவுகள் பற்றி எங்களுக்கே சந்தேகம் உண்டு. ஆனால் இவைகளுக்கு மாறுபட்ட வேறு எதையும் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்களே'' என்று கூறுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். ''நமது கொள்கையைப் பற்றிக் கவலைப்படவேண்டாம் என எவ்வளவு முயற்சித்தாலும் முடியவில்லையே. ஆனால் இது பற்றி நமது தலைவர்கள் கவலையின்றி ஆனந்தமாய் இருக்கின்றனரே'' என தனிப்பட்ட மக்கள் சொல்வதையும் நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன்.

இந்த இடைவெளி ஏன் நீக்கப்படவில்லை.? நமது மக்களின் ஆற்றலைப்பற்றி அமெரிக்க அரசியல் வாதிகள் மிகக் குறைவாக மதிப்பிடுவதே இதற்குப் பெரிதும் காரணம் என்று நான் நினைக்கின்றேன். நமது விவகாரங்களை உருவகப்படுத்திவரும் உலகப் புரட்சியை நமது அரசியல் வாதிகளில் பெரும்பாலோர் அறிந்துகொண்டிருக்கின்றனர். ஆனால் இந்தப் புரட்சியின் தன்மையை எவ்வளவு சிறப்பாக எடுத்துக் கூறினாலும் அதை நமது மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என அவர்கள் நினைக்கின்றனர்; இப்பொழுது நம்மை எதிர்நோக்கியுள்ள மிக நெருக்கடியான பிரச்னைகளுக்கு. அரசியல், பொருளாதாரத் துறைகளில் புதிய

பொருள் உண்டு என்பதை மக்களுக்கு விளக்கிக்கூற எவ்வித
முயற்சியும் செய்வதில்லை.

அரசியல்வாதிகள் கூறுவது ஒருவேளை உண்மையாயிருக்
கலாம். ஆனால் இந்த விஷயத்தில் நமது அரசியல் வாதிகள்
கூறுவது தவறாயிருக்குமென்றே நான் நினைக்கின்றேன்.

நமது அந்நிய நாட்டுக் கொள்கை வகுப்பதில் தங்களது
தேர்ந்த அபிப்பிராயத்தை அரசாங்கத்திடம் உணர்த்தக்
கூடிய அளவு விஷயம் தெரிந்த பிரஜைகள் இல்லாவிட்
டால் நமது ஜனநாயகம் போலித்தன்மை வாய்ந்ததாகவும்,
ஒன்றுமில்லாத சித்தாந்தமாகவும் போய்விடும். தேர்ந்த
அறிவு படைத்தவர்கள் பெரும்பாலோர் உலக நிலையின்
தேவைகளை அறிந்து, அவைகளுக்கேற்ப நமது தேசக்
கொள்கைகளை வகுக்காவிட்டால் நமது எதிர்காலமே
ஆபத்திற்குட்பட நேரிடும்.

இப்பொழுது முடிவு பெறாமல் காணப்படும் பெரும்
பிரச்னைகளைக் கஷ்டப்பட்டு ஆராய முயற்சிக்கும் நோக்கத்
துடன்தான் இந்தப் புத்தகத்தை நான் எழுதினேன். நமது
காலத்தில் நிகழ்ந்த பெரிய உலகப் புரட்சிகள்-இதில் அன்று
தொடங்கி இன்னமும் நீடித்துவரும் அமெரிக்கப் புரட்சியும்
அடங்கியிருக்கிறது-பற்றி என் சொந்த ஆராய்ச்சியே இந்
நூல். இந்தப் புரட்சிகளிலிருந்து சமாதானத்தின் புதிய
பரிமாணங்களை அறிந்துகொள்ளுவதற்கான விஷயங்கள்
கிடைத்தன என்று, இன்றுள்ள அரசியல் மேதைகளில் சிறந்த
வரான **செஸ்டர் பௌல்ஸ்** தம் முகவுரையில் கூறுகிறார்.
அரசாங்கத்தில் பெரும் பதவி வகித்தவராயினும் பொது
மக்கள் சார்பில், பொது மக்களிடையே நின்று, பொது மக்
களுக்காக அரசியல் அந்தரங்கங்களை எளிய, இனிய முறை
யில், உலகச் சமாதானம் என்ற உயரிய நோக்கத்தோடு
புதுமையான புது நெறி வகைகளை அம்பலப்படுத்தி அரண்
செய்யும் இந்நூலை யாவரும் அவசியம் படிக்க வேண்டும் என
நாம் கூறவா வேண்டும்?

—**பதிப்பினர்**

225803

## பகுதி 1

# வெற்றியிலிருந்து தேக்க நிலை

சென்ற பத்து ஆண்டுகளின் நினைவுகள் பசுமை
யாயிருக்கையில் இங்கு நாம் கூடியுள்ளோம்.
இந்தக் காலத்தில் எவ்வளவு ஏமாற்றம் அடைந்
திருக்கின்றோம்? நம்மிடையே எவ்வளவு அபாய
கரமான பிளவுகள் ஏற்பட்டன? இனி மீளவே
முடியாதோ என்று மனச்சோர்வு ஏற்படும் அள
வுக்கு அபாயங்களைச் சமாளித்திருக்கிறோம். இவை
மட்டுமல்ல, திருப்திகரமான அநுபவமும் அடைந்
திருக்கிறோம். ஒருவரையொருவர் நம்பியே வாழ
வேண்டும் என்கிற அளவுக்குப் பிணைந்திருக்கும்
இவ்வுலகில் சமாதானமாக வாழ முடியுமா என்று
ஐயமுறும் சூழ்நிலையில், ''முடியும்'' என்று உறுதி
யளிக்கக்கூடிய, மனிதனின் சேவை ஆற்றலுக்கான
சான்றுகளையும் கண்டோம்.

—**டாக் ஹாமர்ஷோல்டு**

ஐ. நா. பொதுச் சபையின் பத்தாவது
ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசியது.




*அத்தியாயம்—1*

# ஜரோப்பாவில் ஆதரவு

**1955–ஆம்** ஆண்டு ஜூன் மாதக் கடைசியில் ஐ. நா.
சபையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்
டாடுவதற்காக, அறுபது நாடுகளின் பிரதிநிதிகள் ஸான்
ஃபிரான்ஸிஸ்கோவில் கூடினர். பல்லாண்டுகளாக மேற்
கத்தி நாடுகளுக்கும், ரஷ்யாவுக்கும் இருந்த யுத்த கெடு
பிடியை (Cold war)* விளைவிக்கும் சொற்போர் நிகழ்ந்த பின்
அங்கே பேசியவர்களின் தோரணையிலிருந்து அவர்கள் கவலை
நீங்கி இருப்பதாகத் தென்பட்டது. அங்கே பேசிய ஒவ்வொரு
வரும் சற்று நிதானமான நம்பிக்கையுடன் உலகத்தின்
எதிர்காலம்பற்றித் தங்களது நம்பிக்கைகளை வெளியிட்டனர்.
நிதானமாக இருந்தாலும், நற்காலம் உதயமாகிறது
என ஜனதிபதி ஐஸன்ஹோவர் தெரிவித்தார். அது உண்
மையாயிருந்தாலும், அந்தப் பொற்காலம் வெகு நாட்களுக்கு
முந்தியே உதித்திருக்க வேண்டும் என்பதை யாவரும் ஒப்புக்
கொள்வார்கள். 1945 லிருந்து 1955 வரையில் இந்தப் பத்து
ஆண்டுகளில் உலகம் தலைகீழாகப் புரட்டப்பட்டது. நாம்
யாவரும் ஏதோ கெட்ட கனவு கண்டவர்களின் மனே நிலையி
லிருந்தோம்.

யுத்த காலத்தில் நமது நேச நாடுகளாயிருந்த ரஷ்யா
வும், சீனவும் நமது சமாதான காலப் பகைவர்களாகிவிட்
டனர். யுத்த காலத்தில் நமது பகைமை நாடுகளாயிருந்த
ஜெர்மனியும், ஜப்பானும் நமது சமாதான கால நேயர்
களாயுள்ளனர்.

---

* ஆங்கிலத்தில் (Cold war) எனும் பதத்தை தமிழில் விளக்க வேண்டியது
அவசியமாகிறது. இருதரப்பு வல்லரசுக்கும் ஆயுதப் போராட்டமின்றி, யுத்த
வேகத்தைப் பரப்பும் பிரசாரத்திற்கே ஆங்கிலத்தில் "கோல்டு வார்"
எனப் பெயர் சூட்டியிருக்கின்றனர். இந்நூலில் இனி யுத்த கெடுபிடி என்று
வருமிடங்களில் இந்த 'கோல்டு வார்' நிலை என்று பொருள்படுத்திக் கொள்ள
வேண்டும்.

உலகக் கம்யூனிஸ இயக்கம் எழுபது கோடிக்கு அதிகப்
படியான மக்களைத் தனது ஆதிக்கத்திற்குட்படுத்திவிட்டது.
அதாவது மனித வர்க்கத்தில் மூன்றில் ஒரு பங்கினர் கம்யூ
னிஸ்ட் ஆட்சிக்குட்பட்டு வாழ்கின்றனர். இதே சமயத்தில்
ஆசிய, ஆஃப்ரிக்க மக்களில் அறுபத்தைந்து கோடிப் பேர்
பழங்கால மேற்கத்திய ஏகாதிபத்தியக் 'காலனி' ஆதிக்கத்தி
லிருந்து எப்படியோ விடுபட்டுவிட்டனர்.

யுத்தத்தின் மூலம் இரண்டரைக் கோடி மக்கள் உயிர்
இழந்தனர். அதைப்போல இரு மடங்கினர் எவ்வித வேலைக்
கும் உதவாதபடி அங்கஹீனர்களாயினர். யுத்தத்தினால்
ஜெர்மன், இத்தாலி, போலந்து, பால்கன் நாடுகள், ரஷ்யா,
சீனா, ஜப்பான் முதலிய பிரதேசங்களின் பெரும் பகுதிகள்
நாசமடைந்து போய்விட்டன. அடுத்த யுத்தத்தில் அணு
குண்டுகளால் உலகம் எப்படி படுநாசமடையலாம் என்
பதைச் சென்ற மகா யுத்தம் காட்டிவிட்டது. இவைகளைப்
பின்னணியாக வைத்துக்கொண்டுதான் நாம் மேலே கூறிய
அச்சுறுத்தக்கூடிய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்
பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

பிளவுபட்டு நிற்கும் இன்றைய உலகத்தில், 1945-ஆம்
ஆண்டில் நிலவிய மக்களின் மனோநிலையை நினைப்பூட்டிக்
கொள்ள முடியாது போனாலும், சென்ற பத்து ஆண்டுகளில்
நிகழ்ந்த கொந்தளிப்பான சம்பவங்களைச் சுருக்கமாக ஞாபகப்
படுத்திக்கொள்ளுவது இன்றைய சூழ்நிலையில் பயனுள்ள
தாகும்.

யுத்த காலத்து நேச நாட்டுத் துருப்புக்கள் இருபுறங்
களிலிருந்தும் புறப்பட்டு யுத்தம் புரிய ஜெர்மன் மண்
ணிலே கூடிய நேரத்தில், அமெரிக்கர் போர் முடி
வுறப் போவதை நினைத்து அதனால் அதிக நலன்கள் தங்களுக்கு
ஏற்படலாமென்று எதிர்பார்த்திருந்தனர். போர் புரியப்
பிற அரங்குகளுக்குச் சென்ற தங்களது மக்கள் தாய்நாடு
திரும்புவர் என அவர்கள் எதிர்பார்த்தனர். ராணுவச்
செலவு குறையும் என நம்பினர். பெட்ரோல் கட்டுப்
பாட்டிலிருந்து விடுபட்டுத் தங்களது கார்களை இஷ்டம்
போல் ஓட்டிச் செல்ல வசதி ஏற்படும் என நம்பினர். ஒரு
ஞாயிற்றுக்கிழமை தினம் திடீரென பேர்ல் (Pearl) துறை
முகம்* தாக்கப்பட்ட அதிர்ச்சியூட்டும் செய்தி கேட்டதி
லிருந்து அவர்களை வாட்டிவரும் மனக்கவலை படிப்படியாக
நீங்கும் என்றும் எண்ணியிருந்தனர்.

---

*இந்தத் தாக்குதல் மூலம்தான் அமெரிக்காவுடன் ஜப்பான் நேரடியாக
போர்புரிய முன்வந்தது. அமெரிக்காவும் இரண்டாவது உலக யுத்தத்தில்
ஈடுபடுவதற்கு அடிகோலிற்று.



ஏற்கனவே முன்னேறி அனுபவம் பெற்றவர்கள்தான்
1945, யுத்தம் முடிந்ததும் உலகத்தின் எதிர்காலத்தை
முன்னோக்கி நின்ற அமெரிக்கர்கள். நூற்று எழுபது ஆண்டு
களுக்கு முன்பே யாவரும் கடவுள் சிருஷ்டியில் சமமே என்
அடிப்படையில் ஒரு சமுதாயத்தை உருவகம் செய்தவர்
கள். மற்ற செல்வம் படைத்த ஒரு கண்டத்தை அவர்கள்
சிருஷ்டித்திருந்தனர். அதனாலான நலன்களைப் பெரும்
பாலானவர்கள் ஏற்கனவே அனுபவித்தனர். ஐரோப்பிய
நாடுகளிலிருந்து குடியேறவந்த லட்சோப லட்சம் பேர்களை
அவர்கள் இந்நாட்டிற்குள் வரவேற்றனர்.

அவர்கள் ஆதரித்து நிலைக்கச் செய்த ஆட்சிமுறைக்
கொள்கைகள் உலகில் பல்வேறு மதத்தினர், ஜாதியின
ரிடையே மிகுந்த உற்சாகத்தை வளர்த்தது. மிகுந்த
பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் நிறைந்த கடுமை
யான உள்நாட்டுச் சண்டையின் விளைவாக அவர்களது
இறுதி நோக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டன. அவர்களது
பிறப்புரிமையும் ஸ்திரப்படுத்தப்பட்டது.

உள்நாட்டு யுத்தத்திற்குப்பின் ஒவ்வொரு தலைமுறை
யிலும் அமெரிக்கர் தங்களது சராசரி வருவாயை இரு மடங்
காக்கி யிருந்தனர். பிற நாட்டினரை விட அவர்கள் அதிக
மான சுகபோகங்கள் அனுபவித்தாலும், நீடித்து முன்னேற்ற
மடையக் கடுமையாக உழைத்தாக வேண்டும் என்பதை
ஒருபோதும் மறந்ததில்லை.

சுதந்திரம் என்னும் சொல்லின் பரந்த பொருளை அவர்
கள் அறிந்திருந்தனர். பிரஜை என்கிற முறையில் அவர்கள்
அனுபவித்து வந்த அரசியல் சுதந்திரத்தைத் அத்தியாவசிய
மான பொருளாதார சுதந்திரத்தை விரிவுபடுத்துவதற்குப்
பயன்படுத்தினர். ஏனெனில் தொழில் புரிவதிலும், விவசாயத்
திலும், வர்த்தகத் துறையிலும் பொருளாதார சுதந்திரம்
தங்களது உரிமை என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.
ஆடம்பரமான ஆட்சி முறையில் இயல்பாகவே அவர்கள் அவ
நம்பிக்கை கொண்டிருந்தாலும், நாளாவட்டத்தில் அரசாங்
கத்திலுள்ள முறையிலும் செயல்படுத்தக் கற்றுக்கொண்
டிருந்தனர். இப்படி அவர்கள் நடந்துகொண்டதில் அமெரிக்க
அரசியலமைப்பின் வாசகப்படி "பொதுநலத்தைப் பெருக்
கவே" அரசாங்கத்தைப் பயன்படுத்தினர்.

எதிர்பாராதவகையில் அவர்கள் ஒரு மகத்தான பொரு
ளாதார மந்தத்திற்குள்ளானார்கள். இந்த மந்தம் நீடித்தி
ருந்தால் அது தனிப்பட்டோர் உரிமையை அழித்திருக்கும்,
ஜனநாயகத்திற்கே ஒரு முடிவு கட்டியிருக்கும். ஆனால்
அவர்கள் எப்படியோ நிலைமையைச் சமாளித்ததுமின்றி,
எல்லோர் நலனையும் காத்தும் தங்களது சேவை ஆற்றலை

இழக்காத, நிலையான பொருளாதார அமைப்பை ஸ்தாபித்தனர்.

எனினும் புது உலகத்தின் எதிர்காலம் நிர்ணயிக்க முடியாததாயிருந்தது. முதல் உலக யுத்தத்தின் பின் அமைதி வேண்டி அமெரிக்கர்கள் ஒதுங்கியிருக்கத் தலைப்பட்டனர். ஹிட்லரது படைகள் ஐரோப்பாவை அரட்டியதும் பெர்ல் ஹார்பர் தீவின்மேல் ஜப்பானியர்கள் வெடிமழை பொழிந்ததும் நெருங்கி பிணைந்த உலகத்தில் எவரும் தனித்திருக்க முடியாததென்று அறிந்துகொண்டனர். யுத்தத்திற்கான வெற்றிச் சாதனங்களை உற்பத்தி செய்தது போலவே பொருளாதாரச் சீரழிவைத் தீர்க்கும் சாதகங்களை உற்பத்தி செய்ய முடியுமா? சாதாரணமாக தனித்தியங்கும் கொள்கையை அமெரிக்கா ஒரே அடியாக கைவிடும்படியான அளவு அதிர்ச்சி ஏற்பட்டு விட்டதா?

அயல்நாட்டு விவகாரங்களில் அவர்களது அநுபவம் குறைவாயிருந்தாலும், பொதுவாக எல்லா மக்களும் தத்தம் நாட்டில் தாங்கள் விரும்பும் ஆட்சிமுறையை அமைத்துக் கொள்ளும் உரிமைக்காக அமெரிக்க மக்கள் போராடியிருக்கின்றனர். இரண்டு உலக யுத்தங்களில் அவர்கள் மனமின்றியே கலந்துகொண்டனர். எனினும் கலந்துகொண்டபின் வெற்றி கிட்டுவதற்காக முழு மூச்சுடன் போர்புரிந்திருக்கின்றனர். அவர்களது நாடு இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு மகோன்னத சக்தி வாய்ந்து, தலைமைப் பதவியின் சிகரத்தையும் அடைந்தது.

1945-ஆம் ஆண்டில் கவலையுடன் நமது நாட்டில் மக்கள் இம்மாதிரிக் கேள்விகளைக் கேட்டனர். இதே கேள்விகள் இதே கவலையுடன் உலகத்து பிரதான தலைநகர்களிலும் கேட்கப்பட்டுவந்தன. ஆனால் இக்கேள்விகளுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் பதில் கண்டாக வேண்டும் என்பதை உணர்ந்தவர்கள் வெகு சிலரே. யுத்த காலத்தில் இருந்த ஒத்துழைப்பு மனப்பான்மையின் விளைவாக ஏற்பட்ட சுமுகமான மனநிலையினால் ஓடர்—நெய்ஸே* (Oder-Neisse) நதி எல்லைக்கோட்டிலிருந்து எம்மாதிரி அபாயம் நம்மை அண்டவிருக்கிறது என்பதை எவரும் உய்த்துணரவில்லை.

அமெரிக்கரின் அன்புக்குரிய ஆங்கிலேயரான வின்ஸ்டன் சர்ச்சில், பல்லாண்டுகளுக்கு முன்பு, போல்ஷிவிஸத்தை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென விரும்பினார். ஆனால் 1941-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரஷ்யாவிற்குள் ஹிட்லரின் படை புகுந்ததும், முதன் முதலாக அதே சர்ச்சில் தான்

*ஓடர் எனும் நதியும் நெய்ஸே எனும் நதியும் கூடும் இடம்தான் ரஷ்யா வசமுள்ள ஜெர்மன் பகுதிக்கும், போலந்து வசம் 1945-இல் ஒப்படைக்கப்பட்ட ஜெர்மன் பகுதிக்கும் எல்லைக்கோடாகும்.



ஸ்டாலினுக்கு உதவிபுரிய கச்சை கட்டிப் புறப்பட்டார். நாஜிகள் ஆக்ரமித்திருந்த ஐரோப்பிய பகுதிகளில் எதிர்ப்பு இயக்கங்களுக்கு துணிவுடன் வாழ்ந்து தீவிரமாக உயிர்நீத்த கம்யூனிஸ்டுகளே தலைமை தாங்கினர். அட்லாண்டிக் சமுத்திரத்திற்கு அண்டையிலுள்ள நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் தங்களது முதல் பக்கங்களில் செஞ்சேனைப் படைகளின் வீர தீரப் பிரதாபங்களுக்கு முதல் இடம் அளித்தன.

ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு சோவியத் யூனியனை அமெரிக்கத் தலைவர்கள் புகழ்ந்ததை இன்று படித்தால் விசித்திரமாகவே இருக்கின்றது. "தீரம் நிறைந்த ரஷ்யப் படையின் வெற்றிச் சின்னங்களில்தான் இருக்கிறது நமது நாகரிகத்தின் எதிர்காலம். அவர்களது ராணுவத்தின் திறமையும் மகத்தான சிறப்பும் சரித்திரத்திலே சிறந்த சாதனைகளாக குறிக்கப்படுகிறது." இவ்வாறு 1942-ஆம் ஆண்டில் ஜெனரல் மக் ஆர்தர் கூறினார். 1943-இல் ஸ்டாலினுடன் தாம் பேசியது பற்றி ஜனாதிபதி ரூஸ்வெல்ட் குறிப்பிடுகையில், "அவருடனும், ரஷ்ய மக்களுடனும் நாம் மிகமிக சுமுகமாகப் பழகப்போகிறோம்" எனக் கூறினார்.

ஜனாதிபதி தேர்தலில், ரூஸ்வெல்டைச் சமீபத்தில் எதிர்த்த வெண்டெல் வில்கி (Wendell Willkie) "கெய்ரோவிலும் (Cairo), டெஹ்ரானிலும் (Teheran)[1] ரஷ்யர்களுடன் கூடிப் பேசியதில் ரூஸ்வெல்ட் அதிகப்படியாகச் செல்லவில்லையென்றும், யுத்தத்தின் பிற்காலத்தில் நாம் ரஷ்யருடன் ஒத்துழைக்கலாமென்றும்" கூறினார். "ரஷ்யர்களும் நம் மாதிரியே கஷ்டப்பட அஞ்சாதவர்கள். சூதுவாதின்றிப் பேசக்கூடியவர்கள். முதலாளித்வ முறையைத் தவிர, அமெரிக்காவில் உள்ள எல்லாவற்றையும் அவர்கள் பாராட்டுகின்றனர்" என்பதுதான் நாம் ரஷ்யர்களுடன் ஒத்துழைக்கலாம் என்பதற்கு வில்கி கூறிய காரணம். ராக்ஃபெல்லர் ஸெண்டரில் நடந்த வைபவமொன்றில் அமெரிக்காவிலுள்ள "ராணுவ அதிகாரிகளின் தாய்மார்கள்" (Gold star Mothers) ஸ்தாபனத்தினர் செஞ்சேனையின் மகோன்னத தீரத்தைப் பாராட்டித் தட்டு ஒன்று பரிசளித்தார்கள். "ரஷ்யா, அமெரிக்கா இரு நாட்டு யுவர்களின் ஒன்றுபட்ட லட்சியங்களின் சின்னமாக," அந்தப் பரிசை அளிப்பதாக அவர்கள் கூறினர்.

செஞ்சதுக்கத்தில், லெனின் சமாதிமேல்தளத்திலிருந்து ராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டுவிட்டு மாஸ்கோவிலிருந்து 1945-ஆம் ஆண்டில் திரும்பி வந்த தளபதி ஐஸன்ஹோவர் அமெரிக்க சட்ட சபைக் கமிட்டிகளிடம்

[1] கெய்ரோ, டெஹ்ரான், யால்டா முதலிய இடங்களில் யுத்த சம்பந்தமாக வல்லரசுகள் மகாநாடுகள் நடந்தன.

கூறியதாவது: ''அமெரிக்காவுடன் நேசமாயிருக்க வேண்டு
மெனும் ,ஆவல்தான் மற்றெல்லாவற்றையும் விட ரஷ்யர்
களின்கொள்கை நிர்ணயத்திற்குப் பெரிதும் வழிகாட்டியா
யிருந்திருக்கிறது.''

உலகத்தில் கம்யூனிஸத்தைப் பரப்புவதில் அதன் தலை
வர்கள் பிரத்தியட்ச நிலையை அறியாமல் வறட்டுக்கொள்கை
அடிப்படையில் செயல்புரிகின்றனர் என்பதை அறிந்த அமெ
ரிக்கர்கள்கூட, கடைசியாக சோவியத் தலைவர்களும் வீரர்
களும் பெரிய அளவில் ஜனநாயகத் தலைவர்களையும், அவர்க
ளது கருத்துக்களையும் தாராளப்போக்கையும், சாதனைகளை
யும் புரிந்துகொண்டு விட்டனர் என ஆறுதல் பெற்றனர்.
உறுதிகொண்ட மார்க்ஸியவாதிகளின் மனத்தையும், இந்த
அநுபவம் இளகவைக்காதா? வெளிநாட்டவர்களைக் கண்டு
அச்சமடையும் புராதன ரஷ்ய மனப்பான்மை யால்டா மகா
நாட்டோடு புதையுண்டு போகாவிட்டாலும், மூன்று மாதத்
திற்குப் பிறகு எல்ப் (Elbe) நதிக்கரையில் ரஷ்யப் படையின
ரும், அமெரிக்க வீரர்களும் வெற்றிப்பெருமிதத்தில் ஒருவ
ருக்கொருவர் கைகுலுக்கி, ஆடிப்பாடி, மொழித் தடையை
யும் மீறி ஒருவரையொருவர் நையாண்டி செய்து, சிரித்ததன்
மூலம் அந்தப் புராதன பயம் மறைந்து மங்கிவிடவில்லையா?

வெற்றி விழாவன்று அமெரிக்கப் படை வீரர்களின் குடும்
பத்தாரும், நண்பர்களும், காதலிகளும் ஜனாதிபதியின் வாச
ஸ்தலமாகிய வெள்ளை மாளிகையைச் சுற்றி வரிசையாக
நின்றனர். அவர்களது மகிழ்ச்சிக்குக் காரணம் போர் நின்
றது மட்டுமல்ல, சமாதானம் நிலைக்கும் என்பதற்கான அறி
குறிகள் காணப்படுகின்றன என்கிற நம்பிக்கையை அவர்க
ளது முகவிலாசத்தில் காணமுடிந்தது என்பதுதான். இம்
மாதிரிச் சூழ்நிலையில் நமது வாள்களைக் கலப்பைகளாகவும்,
இழைப்புளி இயந்திரங்களாகவும், டைப் அடிக்கும் சாதனங்
களாகவும் துரிதமாக மாற்ற முனைந்ததுபற்றி ஆச்சரியப்
படுவதற்கில்லை. இது சம்பந்தமாக வாஷிங்டன் தலைநகரை
நெருக்கிய பல்வேறு அரசியல் சக்திகளின் நெருக்கடி எளிதில்
சமாளிக்கக் கூடியதாக இல்லை.

1946 ஜனவரி 22-ஆம் நாள் வாஷிங்டனிலுள்ள ராணுவத்
தலைஸ்மக் காரியாலயத்தில், அச்சமயம் ராணுவ தளபதியா
யிருந்த ஐஸன்ஹோவரை (சண்டைக்குச் சென்ற) ''எங்க
ளது தந்தையரைத் திருப்பி அழைத்துவாருங்கள்'' எனக்
கிளர்ச்சி செய்யும் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் வளைத்துக்
கொண்டனர். கோபாவேசம் கொண்ட மாதர்கள் அவரைத்
திக்குமுக்காடச் செய்துவிட்டனர். அவர்களிடமிருந்து தப்
பித்துச்செல்ல வழியின்றி அப்படியே சுவற்றின்மீது சாய்ந்து
கொண்டு அவர்களுக்கு அவர் பதில் கூறவேண்டி வந்து



விட்டது. பத்து நிமிஷங்களுக்கு அவரை நோக்கி குறைகளும்,
புகார்களும் நிறைந்த கேள்விமாரி பொழிந்தனர். மேற்படி
ஸ்தாபனத்தாருடைய மூர்த்தண்யத்தினால் அவர் முகம்
சிவந்தது. மூச்சுத் திணரும்படியான நிலையும் ஏற்பட்டுவிட்
டது. இந்தச் சம்பவத்தைப் பற்றி அவர் சட்டசபை ராணுவ
விவகாரக் கமிட்டியிடம் சாட்சியம் சொல்லுகையில்
''உணர்ச்சி வசப்பட்டு, தத்தளித்துப் போனேன்'' என்று
கூறியுள்ளார்.

அதேநாள் இரு கட்சியினரும் அடங்கிய ஒரு செனட்
சபை உபகமிட்டி, படைக்கலைப்பு விரைவாக நடந்தும், அதில்
திருப்திகொள்ளாமல் ''ராணுவத்தில் இன்னமும் இருபது
லட்சம் வீரர்கள் உபரியாயிருக்கின்றனர், அவர்களை உடனடி
யாகத் திருப்பியழைக்க வேண்டும்'' என வற்புறுத்தியது.
காங்கிரஸின் இருகட்சித் தலைவர்களும் பொதுமக்களின் ஆத
ரவுகளைப் பெற படைக் குறைவு யோசனையில் தீவிரமாகப்
போட்டியிட்டனர்.

இரு அரசியல் கட்சிகளிலும் சில தீர்க்கதரிசனம் வாய்ந்த
தலைவர்கள் இருந்தனர். அவர்கள் ராஜதந்திர முறையில்
செயலாற்றினர். அவர்களுடைய யோசனைகளைப் பெருவாரி
யான அமெரிக்க மக்கள் நன்கறிந்து ஆதரித்தனர். இம்
மாதிரித் தலைவர்களும் அவர்களை ஆதரிக்கும் மக்களும் மட்டும்
இல்லாதிருந்தால், எப்படியாவது அமைதியை அடையவேண்
டும் என்று நாம் துடிதுடித்ததன் விளைவு மிகவும் விபரீத
மாகப் போயிருக்கும்.

அரசாங்க அதிகாரிகளும், தனிப்பட்டோர் ஸ்தாபனங்
களும், பொதுமக்களும், ஐரோப்பா, ஆசியாவின் தேவைக
ளைப் பூர்த்தி செய்வதில் மனமுவந்து ஈடுபட்டனர். உலக
நிலையை அறிந்து வருவதற்காகப் பலநாடுகளுக்கு ஜனாதிபதி
ட்ருமனால் அனுப்பப்பட்டமாஜி ஜனாதிபதி ஹூவர், உடனடி
யாக பிரம்மாண்டமான அளவுக்கு உதவிபுரிய வேண்டும்
என்பதற்கான வாதங்களைப் பிறர் ஏற்கும் வகையில் எடுத்துக்
கூறினார். அவர்களது இயல்பான தாராளநோக்குடன் அமெ
ரிக்கரும், அந்த யோசனைகளுக்கு ஆதரவளித்தனர். ஐ. நா.
அகதிகள் புனர்நிர்மாண ஸ்தாபனம், உலகப் பாங்கு, மற்றும்
சர்வதேச ஸ்தாபனங்கள், உலக நிதி, யாவும் கணிசமான அள
வில் பணியாற்றுவதில் அமெரிக்க ஆற்றலும், பணமும் பெரி
தும் உதவி புரிந்தன.

செய்யவேண்டிய பணி அசாத்தியமானது!

ஐரோப்பாவில் நாகரிகத்தின் கேந்திரமான இடம்,
ஒருகாலத்தில் உலக இரு உலக யுத்தங்களுக்கு
சர்வநாசம் விளைவிக்கக்கூடிய அமெரிக்கர்,
இரண்டு தலைமுறையில் உட்பட்டதைக் கண்ட முதலில் நினைத்
ஐரோப்பா இனி மீளமுடியாது என்று

திருந்தால் அவர்கள் மீது குற்றங்காண முடியாது. இவ்
வளவு அழிவை விளைவித்த இரு யுத்தங்களுக்குப்பின்
ஐரோப்பிய வாழ்க்கை மீட்சி பெறுவதற்கான உயிர்ச் சக்தி
எப்படி ஏற்படும்?

ஐரோப்பாவில் பெரும் பகுதி சீர்செய்ய முடியாத
அளவுக்கு அழிந்துபோயிருந்தது. விமான வெடிகுண்டுகளால்
நகரங்கள் சிதைவுற்றுக்கிடந்தன. கிராமாந்தரங்கள் கட்
டாந்தரையாகப் போகுமளவுக்கு நாசமடைந்திருந்தன.
குடும்பத் தலைவர்களின் மரணத்தினாலும், உற்றார் உறவினர்
மாண்டதனாலும், ஆக்கிரமிப்புகளாலும், எதிரியை மறைந்
திருந்து தாக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினாலும், மனக்கசப்
படைந்து சலிப்புற்றனர். ஐரோப்பாவில் வெற்றியின் விளை
வாகச் சமாதானம் ஏற்பட்டதனால் எம்மாதிரி எதிர்
காலத்தை எதிர்பார்க்கலாம், எதை நம்பலாம், எதை
நம்பமுடியாது என்று ஐரோப்பிய மக்கள் அறிந்துகொள்ள
முடியாமல் அவர்கள் திகைத்து நின்றனர்.

1914-க்கு முன் இருந்த, நிலையான, கண்கவர் நாகரிகச்
சின்னங்கள் இரண்டாவது யுத்தத்திற்குள் ஆட்டங் கண்டு
விட்டன. "ஐரோப்பிய விளக்குகள் அணைகின்றன" என முதல்
மகாயுத்தம் தொடங்குமுன் பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்
திரி சர். எட்வர்டு கிரே, கண்கலங்கிக் கூறினார். 1945-இல்
உள்ள நிலைமையை நினைத்துப் பார்த்தால் கிரே அன்று
அஞ்சியது நிகழ்ந்தே விட்டது.

இரண்டு உலக யுத்தங்களில் ஃபிரான்ஸ் ஏராளமான
நஷ்டம் அடைந்துவிட்டது. 1914 லிருந்து 1918 வரை
320 லட்சம் மக்களில் 13 லட்சம் பேர் இறந்தனர். 1940-இல்
மீண்டும் ஜெர்மானியர் தாக்கியபோதும் முதல் மகாயுத்த
அதிர்ச்சியிலிருந்து எவ்வகையிலும் அவர்கள் விடுபடவில்லை.
இரண்டாவது மகாயுத்தத்தில் பிரிட்டனையும், அமெரிக்கா
வையும்விட அதிகமான ஃபிரஞ்சு இளைஞர்கள் உயிர் இழந்
தனர். 1940-45-இல் அடைந்த தோல்வி, ஆக்ரமிப்பு, மீட்சி
முதலியவைகளின் விரிவான விளைவுகளை இன்னும் பல்லாண்டு
களுக்கு ஃபிரான்ஸ் அநுபவிக்க வேண்டிவரும்.

வாட்டர்லூ [1](Waterloo), ஸோம் [2](Somme) சண்டைக்கு
இடையே பிரிட்டன் வகித்து வந்த உன்னத நிலையும் படிப்
படியாகக் குறைந்துவிட்டது. இரண்டு யுத்தங்களும் பிரிட்ட
னுக்கு அதிகமான உயிர்ச் சேதத்தை விளைவித்ததுடன்
விக்டோரியா ராணி ஆட்சிக் காலத்தில் சேமித்து வைத்த

[1] வாட்டர்லூ —என்னுமிடத்தில்தான் 1814-இல் பிரிட்டிஷ் தளபதி வெல்
லிங்டன் ஃபிரஞ்சு சர்வாதிகாரி நெப்போலியனைத் தோற்கடித்தார்.

[2] ஸோம்:— (Somme) முதல் மகாயுத்தத்தில் 1916-இல் நேசநாட்டினருக்
கும் ஜெர்மானியருக்கும் இவ்விடத்தில் முக்கியமான சண்டை நிகழ்ந்தது.



மூலதனமும் வெகுவாகக் கரைந்துவிட்டது. உணவுக்குப் பிற
நாடுகளையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பிரிட்டனின்
பொருளாதார எதிர்காலம் அச்சமூட்டும் நிலைக்கு வந்து
விட்டது.

1914-ஆம் ஆண்டிலிருந்து ஜெர்மானியரின் வரலாறு
ஒருபுறம் வெற்றிக்கொந்தளிப்பையும், மற்றொருபுறம்
மனச்சோர்வையும் அளித்து வந்திருக்கிறது. யுத்தத்திற்
குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் மனமொடிந்தே
இருந்தனர். ராணுவ ரீதியில் அந்நியர் தங்கள் நாட்டில்
புகுந்ததனால் பட்ட அவமானம்; மனிதன் உயிர்வாழ்வ
தற்குத் தேவையான உணவில் மூன்றில் ஒரு பங்கு-அதா
வது 1,200 காலரிகள்தான் ரேஷன் அதிகாரிகளால்
அவர்களுக்கு அளிக்கப்பட்டதாகையால் பட்டினி கிடக்க
நேரிட்டது; இயந்திரங்களும் ஆலைகளும் சின்னாபின்னமாகி
விட்டபடியால் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவு; மேற்
கத்திய ஜெர்மனியில் நேசநாட்டினரின் வெடிகுண்டு வீச்சினால்
அங்குள்ள வீடுகளில் நாற்பது சதம் அழிந்திருக்கையில், கிழக்
குப் பகுதியில் ரஷ்யர் கொடுமை தாங்காமல் எழுபது
லட்சம் அநாதை அகதிகள் உட்புகுந்தது— இவ்விதமெல்
லாம் அவர்கள் பட்ட தொல்லைகளுக்கு அளவேயில்லை.

ஐரோப்பாவின் நிலை சூன்யமாயிருந்தது. கஷ்டங்களி
லிருந்து மீண்டு வருவதே இன்னும் சந்தேக நிலையிலிருந்தது.
இந்தச் சந்தர்ப்பத்தில் ஐரோப்பா மீள்வதற்கான முறையில்
பணிபுரிய அமெரிக்கா துணிவுடன் முன்வந்தது. ஏனெ
னில் லட்சோபலட்சம் அமெரிக்க மக்களுக்கு ஐரோப்பாவே
தாயகம். ஃபிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஹங்கேரி,
போலந்து, பால்கன் நாடுகள் முதலிய விடங்களில்
அமெரிக்க மக்களது உறவினர்கள் உதவி வேண்டித் தவிக்
கின்றனர். இது தவிர அவர்களுடன் நமக்குள்ள கலாசா
ரம், பழக்கவழக்கம், நீண்டகாலத் தொடர்பு முதலியவை
களால் ஏற்பட்ட பாசம், இவையெல்லாம் நமது முதல்
உதவி முயற்சிகளுக்குக் காரணமாயிருந்தன.

நாம் உதவுவதற்கு இந்தக் காரணங்கள் போதவில்லை
யெனில், உதவியை நாம் அவசியம் அளித்தேயாக வேண்
டும் என்பதற்கு கம்யூனிஸ்ட் சண்டித்தனம் தூண்டுதலளித்
தது. நிலப்பரப்பு தங்களுக்கு அதிகமாகக் கிடைத்ததை
யும் பெருகியுள்ள ராணுவ பலத்தையும், சோவியத் யூனியன்
பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டது. இதன் விளைவாக
தனது எல்லையையும், செல்வாக்கையும் பெருக்கிக்கொண்டது.

யால்டா உடன்பாடு கையெழுத்தாகி முடிந்ததும்,
ஸ்டாலின் எவ்வளவு அனுயாசமாக வாக்குறுதியளித்து,

அதேமாதிரியே அதை மீறுவார் என்பதற்கான அறிகுறிகள் தோன்றின.

ஜெர்மனியின் நிர்வாக சம்பந்தமாக ரஷ்யாவின் மூர்க்கமான எதிர்ப்பு மனப்பான்மை கொண்ட நடவடிக்கையும், நாம் விரைவாகப் படையைக் கலைத்து வருகையில் அவர்கள் ராணுவத்தைப் பலப்படுத்தும் வகையில் செயல் புரிந்ததும், அணுச்சக்திக் கட்டுப்பாடு சம்பந்தமாக அகீசன், லிலியன்தால், பரூக் (Acheson-Lilienthal-Baruch)[1] முதலியோர் யோசனைகளை எவ்வித ஆலோசனையும் செய்யாமல் மறுத்ததும், கிழக்கு ஐரோப்பாவில் சுதந்திரத் தேர்தல் நடத்த அவர்கள் மறுத்ததும் யுத்தம் முடிந்த சில மாதங்களுக்குள் எதிர்காலத்தைப் பற்றி நம்மை மேலும் அச்சமடையச் செய்தன.

யுத்த காலத்தில் நிலவிய நேசப்பான்மையினால் ஏற்பட்ட நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து வந்தது. 1946 மார்ச்சில் மிஸ்ஸோரியிலுள்ள ஃபுல்டன் (Fulton) நகரில் வின்ஸ்டன் சர்ச்சில், ''ஐரோப்பா கண்டத்தை இரும்புத் திரை மறைத்துவிட்டது'' என்று கூறியது கேட்டு யாவரும் அதிர்ச்சியுற்றனர். இம்மாதிரிப் பேச்சைக் கேட்போமென அமெரிக்கர் எதிர்பார்க்கவில்லை.

1946-இல் ஐ. நா. கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ள நான் ஐரோப்பா சென்றதன் பயனாக எனது மனப்பான்மை தீட்சண்யம் பெற்றது. கடுகடுத்த முகத்துடன் பத்தாயிரம் கம்யூனிஸ்ட் தொழிலாளிகள் ராணுவப்பாணியில் ஃபிரான்சிலுள்ள சாம்ப்ஸ் எலிஸிஸ் பக்கம் அணிவகுத்துச் சென்றதை என்னால் சீக்கிரத்தில் மறந்துவிட முடியாது.

சில நாட்களுக்குப் பிறகு ரஷ்ய அதிகாரவர்க்கத்தினரைச் சந்தித்தபோது, அவர்களுடன் முதன் முதலாகத் தொடர்பு கொண்டதையும் நான் மறக்க முடியாது. அச்சமயம் ரஷ்யாவில் நமது தூதராயிருந்த ஜெனரல் வால்டர் பெடேல் ஸ்மித் (Walter Bedell Smith) எங்களை ஒரு வாரம் மாஸ்கோவில் தங்கும்படி அழைத்திருந்தார். எங்களுக்கு சோவியத் பிரயாண அநுமதிச் சீட்டு துரிதமாக அளிக்கப்பட்டது. தூதரின் விமானம் எங்களை அழைத்துச்செல்வதற்கு பாரிஸ் வந்து சேர்ந்தது. ஆனால் நாங்கள் பெர்லினுக்கப்பால் செல்லவில்லை. எவ்வளவோ வேண்டிக்கொண்டும் பயனில்லை. எங்கள் பிரயாணத்திற்கு அநுமதியளிக்க

[1] டீன் அகீசன் என்பவர் 1949-இல் அமெரிக்க அரசாங்க காரியதரிசியாயிருந்தவர். 1946-இல் அமெரிக்காவில் இயற்றப்பட்ட அணுசக்தி கட்டுப்பாட்டுச் சட்டப்படி நியமிக்கப்பட்ட கமிஷனுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் டேவிட் இ. லிலியந்தால். அணுசக்தி ஆராய்ச்சி, கட்டுப்பாடு முதலியவற்றைக் கவனித்துக்கொள்ள ஒரு சர்வதேச ஸ்தாபனத்திற்கான திட்டம் வகுத்தவர் பரூக். இம்மூவரும் அமெரிக்கர்கள்.



ரஷ்ய அதிகாரிகள் மறுத்துவிட்டனர். மறுப்புக்கு யாதொரு காரணமும் அவர்கள் கூறவில்லை. சர்ச்சில் குறிப்பிட்ட இரும்புத் திரை உண்மை என்பது இதன் மூலம் இன்னுமோர் அமெரிக்கனுக்குப் புலப்பட்டது.

இதற்கு பதின்மூன்று மாதங்களுக்குப் பிறகு, பிராக் (Prague) நகரத்தில் நான் ஜான் மாஸாரிக்குடன் (Jan-Masaryk) இரண்டு தடவை நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தேன். மாஸ்கோவுக்கும் வாஷிங்டனுக்கும் ''ஓரளவாவது உடன்பாடு'' ஏற்பட எவ்வளவு காலம் பிடிக்கும் என அவர் திரும்பத் திரும்பக் கவலையுடன் என்னைக் கேட்டார். ''ஜெக்குகளாகிய (Czechs) நாங்கள் நடுநிலையில் இருக்கிறோம்; நாங்கள் செய்யக்கூடியது விசேஷமாக ஒன்றுமில்லை. எங்களுக்கு அதிருஷ்டமிருந்தால் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு இழுத்துப்பிடிக்கலாம்'' என அவர் வருத்தத்துடன் கூறினார். ஆனால் அதிருஷ்டம் அவர்களுக்கு எதிரிடையாகவே இருந்தது. ஒரு மாதத்திற்குப் பின் என் பிறந்த ஊராகிய கனெக்டிகட் (Connecticut)டில் இருக்கையில் பிராக்கைக் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றிவிட்டனர் என்றும், அந்நாட்டின் ஜனாதிபதி ஜான் மஸாரிக் இறந்துவிட்டார் என்றும் கேள்விப்பட்டோம். இந்தச் செய்தியை அன்று கேட்ட அட்லாண்டிக் நாடுகளில் வாழும் லட்சக்கணக்கான மக்கள், மிகுந்த கவலையளிக்கக்கூடிய புதியதோர் போராட்டத்தில் தாங்கள் ஈடுபடவேண்டிவரும் என்பதை அன்றே உணர்ந்திருப்பர்.

1948-ஆம் ஆண்டு வசந்தகாலத்திற்குள் ரஷ்யா தனது மகத்தான ராணுவ பலத்தைக் கிழக்கு ஐரோப்பாவில் பயன்படுத்தி, பால்டிக் (Baltic) கடலிலிருந்து ஏஜியன் (Aegean) கடல் வரையில் பரந்துகிடக்கும் நிலப்பரப்பில் இருந்த தனது பிடியை பலப்படுத்திக்கொண்டது. இந்தப் பகுதியில் மட்டும் 12 கோடி மக்கள் வாழ்கின்றனர். இதற்குள் மேலும் கம்யூனிஸ்ட் ஆக்ரமிப்பு நிகழலாம் என்பதனால் நமது நிலை கடுமையானதாகப் போய்விட்டது.

பிராக்கிற்குள் நுழைவதற்கு ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பே கிரீஸ், துருக்கி நாடுகள் மீதும் தங்கள் ஆதிக்கத்தை விஸ்தரிக்கப்போவதாகச் சோவியத் நாடு எச்சரிக்கை செய்தது. துருக்கிமீது ரஷ்யத் தலைமைப்பீடம் மகத்தான பிரசாரத் தாக்குதலைத் தொடங்கிற்று. அந்தப் பிரசாரத்தில் கிழக்கு துருக்கி மாகாணங்களுக்கு முன்பு உரிமை கொண்டாடியதை ரஷ்யா அமுல் செய்ய முற்பட்டதுடன், (Dardanelles) டார்டனல்ஸ் பகுதியின் பாதுகாப்பிலும், நிர்வாகத்திலும் பங்குண்டு என்றும் வற்புறுத்திற்று.

இதற்கிடையில் கிரீஸ் தேச கம்யூனிஸ்ட் கொரில்லாப்
படையினருக்கு ரஷ்யா திருட்டுத்தனமாக ஆயுதங்கள்
அனுப்பி உதவியது. கிரேக்க அரசாங்கத்தை எதிர்த்து
முழுப்போராட்டமே தொடங்கிவிட்டது. கிரீஸ், துருக்கி
நாடுகளின் அபாயநிலை தெளிவாகப் புலப்பட்டது.

இந்த நிலையில்தான் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு
துருக்கியும், கிரீசும் நீடித்து சுதந்திர நாடுகளாயிருக்க
வேண்டும் எனும் சரித்திரப் புகழ் பெற்ற தீர்மானத்தை
ஜனதிபதி ட்ரூமன் வெளியிட்டார். இந்தத் தீர்மா
னத்தை செல்வாக்கு மிகுந்த அயல் தேசத் தொடர்புக்
கமிட்டியின் தலைவர் ஸெனடர் ஆர்தர் வான்டன்பர்க்கும்
(Arthur Vandenburg) மற்றும் இருபது குடியரசுக் கட்சி
உறுப்பினரும், ஜனநாயகக் கட்சிப் பிரதிநிதிகளும், ஆதரித்
தனர். நாம் உடனடியாக உதவி செய்தோம். தீவிரமாக
வும் உதவி செய்தோம். இந்த ஆதரவின் விளைவாக இந்த
நெருக்கடி நிறைந்த பிராந்தியத்தில் கெடுபிடி குறைந்தது.
மேற்குப் பகுதிகளிலிருந்து பெர்லினுக்குள் புக முடியாமல்
திடீரென ரஷ்யா ரெயில், ரஸ்தா போக்குவரத்தைத் தடை
செய்தது. செஞ்சேனை பிரவேசித்ததும், மேற்கத்தி நாட்டு
அதிகாரிகள், ராணுவ வீரர்கள், போலீஸ் அதிகாரிகள்
யாவரும், ஜெர்மனியின் சிறப்புகளுக்கெல்லாம் பல நூற்
றுண்டுகளாய் எடுத்துக் காட்டாயிருந்த பெர்லினை விட்டு,
போட்டது போட்டபடி ஓடிவிடுவர் என ரஷ்யர்கள் ஆவ
லுடன் எதிர்பார்த்தனர்.

மீண்டும் திட்டவட்டமான முறையில் நாம் உதவி புரிய
முன்வந்தோம். சில நாட்களுக்குள் அமெரிக்க, பிரிட்டிஷ்,
சாமான்கள் சுமக்கும் விமானங்கள் 1-1/2 நிமிஷத்திற்கொன்
ருக பெர்லினின் டெம்பல்ஹாஃப் (Tempelhof) விமான நிலை
யத்தில் வந்திறங்கின. சில மாதங்களுக்குப் பின் தடை
நீக்கப்பட்டது.

1947-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் அரசாங்கக் காரியதரிசி
மார்ஷல் (Marshall), ஹார்வர்டில் பிரசித்தி பெற்ற
தனது முதல் பிரசங்கம் செய்தார். அந்தச் சொற்பொழி
வில் ஐரோப்பிய பொருளாதாரச் சீரமைப்புக்குப் பெரிய
அளவில் உதவி புரிய அமெரிக்கா தயாராயிருப்பதாகத்
தெரிவித்தார். அமெரிக்காவின் இந்த உதவித் திட்டம்,
எந்த நாட்டையும் தாக்கும் நோக்குடையதல்ல. ஆனால்,
பசி, குழப்பம், வறுமை யாவற்றையும் ஒழிக்கும் நோக்
குடையது என்பதைச் சுட்டிக் காட்டினர். அரசியல் வித்தி
யாசங்களைப் பொருட்படுத்தாமல் ஐரோப்பிய நாடுகளின்
பிரதிநிதிகள் அனைவரையும் அழைத்து பாரிஸ் நகரில் கூட்
டம் கூட்டப்பட்டது. இதற்கு மாஸ்கோவிலிருந்து மாலடோவ்



வந்திருந்தார். என்ன செய்வதென்றறியாமல் சில நாட்கள்
தங்கிவிட்டுப் பின்னர் அவர் திரும்பிவிட்டார்.

1948-இல் ஏப்ரலில் 'ஐரோப்பிய பொருளாதார ஒத்
துழைப்பு (OEEC) ஸ்தாபனம்' நிறுவப்பட்டது. மார்ஷல்
திட்டத்தில் பங்குகொண்ட பதினேழு ஐரோப்பிய நாடு
களின் பிரதிநிதிகள் இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்துகொண்
டனர். இதற்கு ஆறு ஆண்டுகளுக்குப் பின் இந்தப் பதினேழு
ஐரோப்பிய நாடுகளுள் பரஸ்பர வியாபாரத் தொடர்பு
1948-லிருந்ததைவிட இரட்டிப்பு அளவு பெருகியும், 1938-
லிருந்ததைவிட அறுபத்தொன்பது சதம் கூடுதலாயுமிருந்
தது. 1938-லிருந்ததைவிட ஆலைத்தொழில் உற்பத்தி ஐம்
பது சதம் அதிகமாகவும், விவசாய உற்பத்தி முப்பது சதம்
கூடுதலாகவும் இருந்தது. பால் ஹாஃப்மன் (Paul Hoffman)
அவரது சகாக்களின் சீரிய தலைமையில் மார்ஷல் திட்டம்
மேற்கு ஐரோப்பாவுக்குப் புத்துயிர் அளித்தது. அந்த உதவி
கிட்டாமலிருந்திருக்குமானல் மாஸ்கோ எதிர்பார்த்திருந்த
குழப்பம் நிகழ்ந்தேயிருக்கும்.

யுத்தத்திற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின் மேற்கு
ஐரோப்பாவில் பாதுகாப்பே இல்லையென்று கூறலாம்.
இந்தப் பாதுகாப்பு அபிவிருத்திக்கான நேரடி உதவியும்
செய்யப்பட்டது. ஒரு பிரிட்டிஷ் தளபதி கூறியதுபோல்,
''செஞ்சேனையினர் புறப்பட வேண்டியதுதான் தாமதம்.
உடனே அட்லாண்டிக் கடற் கரைமீது படையெடுக்கலாம்''
என்கிற நிலை நிலவியது.

1949-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் நான்காம் தேதி
வாஷிங்டனில் வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் பதினன்கு
நாட்டினர் கையெழுத்திட்டனர். உடனே நேடோ* (NATO)
உதயமாயிற்று. ஆறு ஆண்டுகளுக்குப் பின் இந்த ஸ்தா
பனத் தளபதிகள் ஏற்படுத்திய பாதுகாப்பு அரண்கள் மூலம்
சோவியத் தரைப் படையின் ஆக்ரமிப்பைத் தவிர்க்க முடியா
விட்டாலும் தடுத்து நிறுத்தலாம்.

---

* நேடோ:—(Nato) வட அட்லாண்டிக் உடன்பாட்டு ஸ்தாபனம்.
இந்த ஒப்பந்தம் 1949-இல் ஏப்ரல் நான்காம் தேதியன்று வாஷிங்டனில்
கையெழுத்தாயிற்று. இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட எல்லா நாடுகளும்
ஐ.நா.வின் உரிமைச் சாஸனத்தின் அடிப்படைக் கொள்கைகளிலும் சாஸன
ஷரத்துக்களிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த நாட்டினர் எல்லா நாடு
களிடமும் மக்களிடமும் சமாதானமாக வாழப் பிரியப்படுகின்றனர். தங்களது
மக்களின் சுதந்திரம், பொதுவான கலாசாரம், நாகரிகம், ஜனநாயகம், தனிப்
பட்டோர் சுதந்திரம், சட்டத்தின் ஆதிக்கங்களைக் காப்பதாக உறுதிகொண்
டுள்ளனர். வட அட்லாண்டிக் பகுதியின் நலனையும், நிலையான தன்மையையும்
வளர்ப்பதற்குப் பாடுபடுவர். சமாதானத்தையும் இதில் சேர்ந்த எல்லா
நாடுகளும் பத்திரமாக வாழ்வதையும் ஒன்றுகூடிப் பாதுகாக்க உறுதிகொண்
டுள்ளனர். ஆகையால் இந் நாடுகள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்
கின்றன.

இந்த நேடோ திட்டம் மூலம், அந்தத் திட்டத்தில்
சேர்ந்த எந்த நாட்டையும் வெளிநாட்டார் தாக்கினால்,
அமெரிக்கா தனது பண பலத்தையும், படை பலத்தையும்
கொண்டு ஆக்கிரமிக்கப்படும் நாட்டுக்கு உதவி செய்வதாக
வாக்களித்தது. அப்படி உதவி புரிவது தன்னிஷ்டம்போல்
தனக்குத் தோன்றிய சமயத்தில் அல்ல; நேடோ நாடு தாக்
கப்பட்டவுடன் அளிக்கப்படும். நேடோ ஸ்தாபனம்
அமைக்க முன்வந்தது தீர்மானமான ராணுவப் பாதுகாப்பை
விட மேம்பட்ட ஒரு செயலாகும். அட்லாண்டிக் பிராந்
தியத்தின் பொதுவான நாகரிகத்தைப் பகைவர்களிடமிருந்து
பாதுகாப்பதற்காக அதன் உறுப்பினர் தம்மிச்சையாகத்
தங்களது சக்திகளைத் திரட்டுவதாகும்.

மேற்கு ஐரோப்பாவின் சுதந்திரத்தைத் தொடர்ந்து
பாதுகாப்பதற்கான உதவிகளைப் புரிய அமெரிக்கா செய்த
முயற்சிகள் ராஜதந்திர வரலாற்றிலேயே ஈடற்றது.
இந்தச் சாதனைக்கு அடிப்படையான கொள்கைகளை இரு
கட்சியினரும் அமெரிக்கரில் பெரும்பாலானவர்களும், தீவிர
மாக ஆதரித்தனர். தங்களது மக்கள் ராணுவத்தில் சேரு
வதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். தங்கள் வசம் இருந்
ததையெல்லாம் வரிகளாகக் கொட்டிக் கொடுத்தனர்.
இந்த வரிகளை ராணுவப் பாதுகாப்புக்காக மட்டும் கொடுக்க
வில்லை; தங்களது ஐரோப்பிய நேச நாடுகளின் பொருளா
தார அமைப்பு நிலைத்து நிற்பதற்காகவும் உதவினர்:

1955 கோடைகாலத்தில் இன்னும் மகத்தான பிரச்னை
களுக்கு ஐரோப்பியர்கள் முடிவு காணவேண்டியிருந்தது.
ஜெர்மனி இன்னும் பிளவுபட்டே இருந்தது. ரஷ்யாவின்
சரித்திர பூர்வமான எல்லைகளுக்கு மேற்கே பல நூறு
மைல்களுக்கப்பால் இன்னமும் ரஷ்யத் துருப்புக்கள் தங்கி
யிருந்தன. எனினும் மேற்கு ஐரோப்பாவின் ராணுவ,
பொருளாதார, அரசியல் சுதந்திரத்தைக் காப்பதற்கான
வழி வகைகள் மகத்தான முறையில் செய்யப்பட்டுவிட்டன
என்பதையும், ரஷ்யர்களுடன் பயனுள்ள முறையில் சமரஸப்
பேச்சு நடத்துவதற்கான சக்திவாய்ந்த நிலை ஏற்படுத்தப்
பட்டுவிட்டது என்பதையும் சுலபமாக மறுக்கமுடியாது.

1945-ஆம் ஆண்டில் நாம் கொள்கைகள் வகுக்கையில்,
ஐரோப்பாவே முதலிடம் பெற வேண்டியிருந்தது என்பதைப்
பெருவாரியான அமெரிக்கர் ஏற்றுக்கொள்வார்கள். யுத்த
முயற்சியில் அந்தக் காலம் மிக நெருக்கடியானது. யுத்தத்
தினால் எவ்வளவோ நாசம் விளைவிக்கப்பட்டிருந்தும் உலகத்
திலே ஆலைத் தொழில் வசதியில் மேற்கு ஐரோப்பா இரண்
டாவது ஸ்தானம் வகித்தது. அட்லாண்டிக் நுழை வாயில்
அதன் நிர்வாகத்திலிருந்தது. மத்தியதரைக் கடலில் அது



ஆதிக்கம் செலுத்தியது. உலக வர்த்தகப் போக்குவரத்துகள்
யாவற்றையும் அது காவல் புரிந்து வந்தது.

இதையும்விட முக்கியமானது, மேற்கத்தி சுதந்திர சித்
தாந்தம், மனிதப் பண்பாடு, முன்னேற்றம் முதலியவைகளில்
ஆர்வம் தோன்றிய இடம் மேற்கு ஐரோப்பாதான் எனும்
விஷயம். நமது குடும்பங்களின் பூர்வீகம், நமது அரசியல்
ஸ்தாபனங்கள், நமது கலாசாரம், நமது மதங்கள் யாவும்
ஐரோப்பிய மண்ணில் வேரூன்றியவை என்பதையும் மறந்து
விடலாகாது. ஐரோப்பிய மொழிகள் நமது நகரங்களில்
பேசப்படுகின்றன, நமது பள்ளிகளில் போதிக்கப்படுகின்றன.
நமது கலைஞர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள் யாவ
ரும் கல்வி பயில ஐரோப்பா செல்கின்றனர். அதன் சரித்திரத்
தில் நமது சரித்திரம் ஒரு பகுதியேயாகும்.

நமது அநுபவம் பெரும்பாலும் ஐரோப்பாவிலிருந்தது.
அதனால் நமது கொள்கைக்கு உடனடியான பயன் கிட்டியதும்,
கணிசமான அளவுக்குப் பயன் விளைந்ததும் இயற்கையே. ஆனால்
கிட்டத்தட்ட ஏகோபித்த ஆதரவு கிடைத்ததும்,
ஐரோப்பிய நாடுகளிடையே சமபலம் நிலவினால் உலகம்
பூராவும் ஒரு நிலையாயிருக்கும் என்று கூறிவிடுவதற்கில்லை.

"ஆண்டவன் கடாட்சம் பெறாத நாடுகள்" என்று
முன்பு கூறப்பட்டு வந்த தொலைவாயுள்ள கண்டங்களில்,
இந்த நூற்றாண்டு நிகழ்ச்சிகளின் விளைவாகப் புது சக்திகள்
தோன்றியிருக்கின்றன. நமது நலனுக்கு, ஐரோப்பா பலம்
பொருந்தியதாகவும், பாதுகாப்பு அரணாகவும் இருக்க
வேண்டியது இன்னமும் அவசியம்தான். ஆனால் அமெரிக்கா
வின் புதுப் பொறுப்புகள் முழுப் பயன் அளிக்கவேண்டு
மானால், உலகின் மற்றோர் பகுதியிலுள்ளவர்களை அணுகு
வதில் நாம் மென்மை உள்ளமும் துணிவும் காட்ட வேண்டும்.
ஆனால் இந்த வகையில் நமது கொள்கை பயனளிக்கக்
கூடியதாயில்லை.

*

அத்தியாயம்—2

# மத்திய உலகில் எதிர்ப்பு

**1945**-இல் ஜப்பானை வென்ற வெற்றி தினத்திலிருந்து டோகியோவிலிருந்து கேப்டவுன் வரையிலுள்ள மத்திய கீத் கில், அமெரிக்காவின் மதிப்பு உச்சநிலை அடைந்திருந்தது. ஆசியாவில் பாதி பகுதியை ஜப்பானியரிடமிருந்து நாம் தலைமைதாங்கி விடுவித்திருந்தோம். பிலிப்பைன்ஸிற்கு சுதந்திரமளிப்பதாக நாம் அளித்திருந்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் தறுவாயிலிருந்தது. நமது ராணுவ பலத்தை எதிர்த்து நிற்போர் யாருமில்லை. நமது ஜனநாயக ஸ்தாபனங்கள் ஒரு டஜன் நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்கின.

1955-இல் இதற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின் இந்த இணையற்ற நிலை பெரிதும் சரிந்துவிட்டது. புதிய தலைவர்களின் கீழ், சீனு நம்மைக் கடுமையாக எதிர்த்து நின்றது. கொரியாவில் நாம் செயலற்றுத் தேக்க நிலையிலிருப்பதற்குக் காரணமாகவும் அந்நாடு இருந்தது. நம்மை, "ஏட்டில் வரையப்பட்ட புலி" என பீகிங் ரேடியோ விவரிக்கையில், லட்சக்கணக்கான ஆசியர்கள் அதைக் கேட்டு ஏளனமாகச் சிரித்தனர். இந்தோ சீனுவிலும், ஆஃப்பிரிக்காவிலும் நாம் ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு ஆதரவளிப்பதாக எண்ணி மனம் நொந்துபோன பல லட்சக்கணக்கான மக்கள் நமது புரட்சிப் படிப்பினைக்கு மாறுக நடக்கிறோம் எனக் குற்றம் சாட்டினர்.

இந்த நேர்மாறான நிலைக்கு நாம் எப்படி விளக்கம் கூறமுடியும்? ஐரோப்பாவில் யுத்தப் பிற்காலத்தில் நாம் புரிந்த சாதனைகளைத் தவிர, நாம் செயல் புரிவதற்கான உற்சாகமளிக்க வேறெதுவுமில்லாததற்குக் காரணமென்ன? பிற விடங்களில் நமது அநுபவம் பெரிதும் ஏமாற்றம், சில சந்தர்ப்பங்களில் படுதோல்வியுமாக ஏற்பட்டதன் காரணம் என்ன? இதற்குச் சரித்திர ஆசிரியர்கள் பல்வேறு காரணங்கள் கூறலாம்.

இம்மாதிரி காரணங்களில் ஒன்றை இங்கே குறிப்பிடலாம். ஐரோப்பாவில் நமது நிலையிலும், திறமையிலும் நாம் நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனல் ஆசியாவையும்,





ஆசிய மக்களையும் பற்றி நினைக்கையில் அவர்கள் "புரிந்து கொள்ள முடியாத கிழக்கத்தியர்கள்" என்றே பெரும்பாலான அமெரிக்கருக்குத் தோன்றுகிறது. இவர்களைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள், வேற்று மனிதர்கள், பிறர் மனத்தில் குழப்பம் விளைவிக்கக் கூடியவர்கள் என்றே அமெரிக்கர் மதித்து வந்திருக்கின்றனர். இந்த மனோபாவத்தின் காரணமாக, ஆசியாவைவிட ஐரோப்பா பற்றி நமது கொள்கையை நிர்ணயிப்பது ஓரளவு எளிதாயிருக்கிறது. ஆசியப் பிரச்னைகள் பற்றி ஏகோபித்த முடிவு காணுவதற்கான முயற்சிகள் நம் நாட்டு கட்சிப்பிளவுகள் காரணமாக சங்கடம் நிறைந்ததாகி விடுகின்றன. இம்மாதிரி சங்கடங்களிஞல் நம்மில் பலர் உலகம் பூராவிலும் ஏற்கக்கூடிய கொள்கைகளை, ஐரோப்பிய கொள்கை அடிப்படையில் குறுகிய நோக்குடன் முடிவு செய்கிறோம். ஐரோப்பிய சம்பவங்களிலிருந்து நாம் கற்ற படிப்பினைகளை உலகத்தின் பிற பகுதிகளிலும் பயன்படுத்த முற்படும்போது அவை பொருந்தாமற் போய்விடுகின்றன.

இதற்கு உதாரணமாக 1947-இல் வெளியான ஜனதிபதி ட்ரூமன் கொள்கையைக்[1] கூறலாம். முன்பெல்லாம் ஐரோப்பாவில் எந்த நாடோ அல்லது பல நாடுகள் ஒன்று சேர்ந்தோ சமாதானத்தைக் குலைக்காமலிருப்பதற்காக பலஹீனமான நாடுகளை வல்லரசுகள் ஆதரிப்பதுண்டு. இந்தக் கொள்கையை பிரிட்டன் கையாண்டு, பல சந்தர்ப்பங்களில் சோதனை செய்து 250 ஆண்டுகாலம் வெற்றி பெற்றது. இந்த முறை வெற்றிபெறுமென நம்பி ட்ரூமன் கொள்கையை யுத்த கெடுபிடி நிலைக்குப் பொருத்திப் பார்த்தனர் என்று கூறலாம். ஸ்பெயின் நாட்டில் ஆட்சி பீடத்தை பிடிப்பதற்கென நடைபெற்ற சண்டை[2] 1713-இல்

[1] ட்ரூமன் கொள்கை:—(Truman Doctrine) 1947-இல் மார்ச்சில் கிரீசுக்கும் துருக்கிக்கும் உதவிபுரிய நாநூறு கோடி டாலர் செலவு செய்ய ஜனதிபதி ட்ரூமன் காங்கிரசின் அநுமதி பெற்றார். இந் நாடுகளுக்கு பிரிட்டன் செய்துவந்த உதவி நிறுத்தப்பட்டதால், கிரீஸ் நாட்டில் கம்யூனிஸ்டுகள் நுழைந்து சங்கடம் விளைவிக்க முயற்சித்தனர். துருக்கியும், கம்யூனிஸ்ட் அபாயத்திற்குட்படவிருந்தது. பண உதவி தவிர, ராணுவத் தளவாடங்களும் தொழில் நுணுக்க நிபுணர்களும் அனுப்பக் காங்கிரஸ் அநுமதி அளித்தது. 1950-க்குள் கம்யூனிஸ்ட் "கொரில்லாப்" படையினர் தொல்லை குறைந்தது. இந்த உதவி துருக்கியில் உடனடியாகப் பயனளித்தது.

[2] (War of the Spanish Succession)—ஸ்பெயின் நாட்டை ஹாப்ஸ்பர்க்குகள் ஆண்டனர், பதினைந்திலிருந்து பதினேழாவது நூற்றாண்டுவரை. 1700 லிருந்து 1713 வரை அரசுரிமை வர்க்கப் போட்டிச் சண்டை நிகழ்ந்தது. இந்தப் போரின் விளைவாக 1713-இல் ஏற்பட்ட உட்ராக்ட் ஒப்பந்தப்படி போர்போன் வம்சத்தைச் சேர்ந்த அஞ்சாவ் கோமகன் (Duke of Anjou) அரசனுனன். ஜிப்ரால்டர் ஜலசந்தி, ஹாலண்டு, தெற்கு இதாலி முதலிய இடங்களில் ஸ்பானிஷ் ஆதிக்கத்திலிருந்த நாடுகளை அது இழக்க வேண்டி வந்துவிட்டது.

முடிந்த பிறகு பிரிட்டன் ஐந்து பெரிய போர்களில் ஈடு
பட்டது. இரண்டு வகை நோக்கங்களுடன் பிரிட்டன் இந்
தப் போர்களில் ஈடுபட்டது என்று கூறலாம். எந்த அர
சாங்கமோ அல்லது பல அரசாங்கங்கள் ஒன்று கூடியோ
ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்பது;
அந்தக் கண்டத்தின் இயற்கை வளத்தையும் அங்கே தங்கள்
சரக்குகளை விற்பனை செய்வதையும், பிரிட்டன் அடையாமல்
தடுப்பதைத் தவிர்ப்பது.

புராதன காலத்தில் ஜெர்மானியர்கள் செய்தமாதிரியே
1947-இல் சோவியத் யூனியன் மத்தியதரைக்கடலை நோக்கி
விரைகையில் நாமும் பழைய பிரிட்டிஷ் முறையைப் பின்
பற்றி அங்கே விரைந்தோம். சோவியத் ஆக்ரமிப்பும் தடை
செய்யப்பட்டது. ஐரோப்பாவில் சோவியத் ஆக்ரமிப்பைத்
தடுப்பதற்காக இதே புராதனப் பாணியில்தான் நேடோ
நாடுகளுடன் சேர்ந்துகொண்டோம்.

ஆனால் அந்தக் காலத்தில் எந்த நிலையில் பிரிட்டன்
செயல் புரிந்ததோ அதற்கும், யுத்தத்திற்குப் பின் நம்மை
எதிர்நோக்கி நின்ற நிலைக்கும் ஒரு அடிப்படையான வித்தி
யாசம் உண்டு. இந்த வித்தியாசத்தை அறிந்து கொள்ள
அமெரிக்கத் தலைவர்கள் தவறிவிட்டனர்.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் அரசியல், ராணு
வத் துறைகளில் ஐரோப்பாவில் அமைதி நிலவினால், உலகி
லும் அதே நிலை இருக்கிறது என ஒருவாறு முடிவு செய்ய
லாம். தலைமுறை தலைமுறையாக சீனாவை பலஹீனமான
பேரரசர்களோ, அன்றி யுத்த வெறிகொண்ட தளபதிகளோ
ஆட்சி செய்து வந்தனர். அந்த நாடு உலக வல்லரசுகளில் ஒன்
றாகத் தோன்றியதிலிருந்து 1932-இல் ஆக்ரமிப்புப் பேரார்
வம் காட்டியதும், பிரிட்டனின் நேசநாடு என்கிற முறையில்
ஜப்பான் ஆசியாவில் ரஷ்யரின் பேராசைக்குத் தடை செய்து
வந்தது. தாய்லாந்து நீங்கலாக ஆசியாவின் பிற பகுதி
கள் சம்பந்தமான முடிவுகள் காலனி ஆட்சியினர்களால்,
லண்டனிலோ, (பிரிட்டனின் தலைநகர்) பாரிஸிலோ, (ஃபிரான்
ஸின் தலைநகர்), லிஸ்பனிலோ (போர்ச்சுகலின் தலைநகர்)
ஹேக்கிலோ (ஹாலந்தின் தலைநகர்) செய்யப்பட்டு வந்தது.

இவ்வாறாக பிரிட்டனின் நீண்டகால சாம்ராஜ்ய ஆட்சி
நிலவி வந்த காலத்தில் ஐரோப்பாவில் பயனளிக்கக் கூடிய
கொள்கை அநேகமாக உலகெங்கிலும் பொருந்தக்கூடும்
என்பது உண்மையாயிருந்து வந்தது. ஆனால் 1949-இல் இந்த
நிலை அடியோடு மாறிவிட்டது. அறுபத்து ஐந்து கோடி
ஆசியமக்கள் காலனி ஆட்சி முறையை உதறித்தள்ளிவிட்
டனர். தொழில் துறை உள்பட எல்லாத் துறைகளிலும் இந்



தியாவும், சீனாவும் வல்லரசுகளாக மாறிக்கொண்டு வந்தன.
ஜப்பானும் தோல்வியுற்றபின் மீட்சி பெற்று வந்தது. ஆப்பி
ரிக்காவும் கிளர்ந்தெழ முனைந்தது. இந்தப் புதிய மாறுதல்
களை மனத்தில் கொண்டு உலகுக்கெல்லாம் பொருந்தக்கூடிய
புதிய கொள்கையை வகுக்க வேண்டியது அவசியம் என்று
தெட்டென விளங்கியது.

துரதிருஷ்டவசமாக, சிந்தித்து சர்ச்சை செய்து, வாதம்
புரிந்து முடிவுக்கு வரவேண்டிய சூழ்நிலை நீடிக்கவில்லை. இம்மா
திரி விவாதமின்றி ஒரு ஜனநாயக ஆட்சியில் பயனுள்ள அயல்
நாட்டுக் கொள்கையை வகுக்க முடியாது 1949 டிசம்பருக்குள்
சீனா மீது மா சே துங்கின் பிடி இறுகிவிட்டது. இதற்கு ஆறு
மாதங்களுக்குப் பின் எதிர்பாராத வகையில் கொரியாவில் கம்
யூனிஸ்ட் ஆக்ரமிப்பை எதிர்த்து நாம் ஒரு முதல்தரப்போர்
புரிய வேண்டிவந்து விட்டது. அடுத்த அக்டோபருக்குள் நமது
படை சீனப்படைக்கு எதிராகப் போர் புரிந்துவந்தது. பிரத்
யட்ச நிலைக்கேற்ப, இரண்டு கட்சிகளும் ஒப்புக்கொள்ளக்
கூடிய கொள்கையை வகுப்பதில் ஒன்று சேரவேண்டியிருக்க
அநேக அமெரிக்க அரசியல்வாதிகள் பிறர் மீது புது
முறையில் வசைமாரி பொழிவதில் காலம் கழித்தனர்.

இம்மாதிரிக் கட்சிச் சண்டைகள் நமக்குள் குழப்பத்தை
விளைவிக்கும் வகையில் ஏற்பட்டிராவிட்டாலும், ஐரோப்பா
வுக்குப் புறம்பாக உள்ள நாடுகளுக்குப் பயன்படக்கூடிய
கொள்கையொன்றை நாம் வகுக்கவேண்டுமானால், மற்றொரு
தவறான எண்ணத்தையும் நாம் திருத்திக்கொள்ள வேண்டும்.
ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், நாம் பெற்றிருக்கும் அநு
பவத்திலிருந்து, சக்தி என்னும் சொல்லுக்கு அபாயகரமான
குறுகிய பொருளைத்தான் கண்டு வந்திருக்கிறோம்.

பலகாலமாக ராணுவ 'பரம்பரையைப் பின்னணியாகக்
கொண்டிருக்கும் ஐரோப்பாவின் அரசியலில் தலையிடுவது
மிகுந்த அபாயம் விளைவிக்கும் செயல் என்பதை இயல்பா
கவே நாம் ஒப்புக்கொண்டு வந்திருக்கிறோம். ஐரோப்பிய
வீரர்கள் நமது படையினரைப் போலவே உறுதிபெற்
றவர்கள், ராணுவச் சாதனங்கள் உடையவர்கள்,
நம்மைவிட எண்ணிக்கையில் கூடுதலானவர்கள். ஐரோப்
பிய விவகாரங்களில் இஷ்டப்படி தலையிடும் எண்ணம்
அமெரிக்காவுக்குக் கிடையவே கிடையாது. இரண்டு உலக
யுத்தங்களிலும், நாம் நீண்டகாலம் தயங்கி, ஆழ்ந்து
யோசித்துச் சர்ச்சை செய்த பின்பே கலந்து கொண்டோம்.

ஆனால் ஆசியா, லத்தின் அமெரிக்கா விஷயம் வேறு.
இங்கேதான் சிறிய அளவில் பதம் பார்த்தது. நான்கரை நூற்றாண்டுகளாக
சாம்ராஜ்ய ஆசைகளை அமெரிக்கா
மேற்கத்தி நாடுகளின் உயர்தர ராணுவ நுட்ப ஆதிக்கத்

திற்கு ஆசியா உட்பட்டு வந்திருக்கிறது. எதிர்ப்பு மனப்
பான்மையுள்ள அரசாங்கங்களைப் பணியவைக்க ''அடி உதவு
வதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்'' எனும்
அடிப்படை ராஜதந்திரமே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்
பட்டு வந்தது.

ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் வாலாட்டி வந்தது
போல், தென் அமெரிக்காவில் ஐரோப்பிய நாடுகள் தலை
யிடாமலிருந்ததற்குக் காரணம் தங்களுடைய நலன்களைக் காத்
துக்கொள்ளப் போதிய பலம் தென் அமெரிக்கர்களுக்கு இருந்
தது என்பதல்ல. குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிப் பிற
நாடுகள் நுழையலாகாது எனும் அமெரிக்கர் வகுத்த **மன்ரோ
கொள்கை*** தடையாயிருந்ததுடன், தங்களது கடற்படையை
நமக்கு உதவி புரிய அனுப்புவதன் மூலம் தங்களது நலனைக்
காப்பாற்றிக்கொள்ளலாம் என பிரிட்டன் ஒப்புக்கொண்ட
தும்தான்.

ஐரோப்பாவில் தலையிட்டால் அபாயம், பிற இடங்களில்
பிரவேசிப்பது அவ்வளவாக ஆபத்தல்ல எனும் நம்பிக்கை
தான் அமெரிக்கா நீண்டகாலமாக ஐரோப்பிய விவகாரங்
களில் ஒதுங்கி நிற்பதற்கும், பிறவிடங்களில் துணிந்து பிர
வேசிப்பதற்கும் காரணம் எனக் கூறலாம். ஐரோப்பாவைப்
பற்றியோ ஆசியாவைப் பற்றியோ சிந்திக்கும்போது பல
அமெரிக்கர்கள் தங்களை அறியாமலேயே சக்தி என்றால்
ராணுவ பலம் என்று எண்ணி விடுவதற்கும் இதுவேதான்
காரணம்.

நமது ஆலைத்தொழில், ராணுவ பலம் இரண்டையும்
கொண்டு, மிகச் சக்தி வாய்ந்த பகைவர்களையும் வெற்றி
கொள்ளலாம் என்பதை இரண்டு மகா யுத்தங்களில் நிரூ
பித்து விட்டோம். இரண்டாவது மகா யுத்தத்திற்குப்
பிறகு ஐரோப்பாவில் மாஸ்கோவிலிருந்து எழுந்த அபாயம்
ராணுவ அபாயம் என்பதை அறிந்து பெரிதும் ராணுவ
முறையிலேயே அந்த ஆபத்தைச் சமாளித்துவிட்டோம்.
ஆசியாவில் நிச்சயமானதொரு ராணுவக் கொள்கையைக்
கடைப்பிடிக்கவேண்டிய அவசியம் எற்பட்டபோது, ஐரோப்
பாவில் பலக் குறைவான இடங்களில் செஞ்சேனை புகுவதை
அணு ஆயுத பலத்தை நிறுத்தியமாதிரியே ஆசியாவிலும்

*மன்ரோ கொள்கை:—(Monroe Doctrine) அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த
ஜேம்ஸ் மன்ரோ 1828-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் தேதியன்று
தென் அமெரிக்காவில் சுதந்திரமாக உள்ள நாடுகளில் ஐரோப்பிய வல்லரசு
கள் தலையிடலாகாது எனும் கருத்துக்கு அமெரிக்க காங்கிரசின் ஆதரவு
பெற்றார். இதற்குத்தான் ''மன்ரோ டாக்டிரின்'' என்று பெயர். இதன்
விளைவாக, ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவில் புகுந்து சங்கடம் விளைவிக்க
முடியாமல் போய்விட்டது.



தடுத்துவிடலாம் என இயல்பாகவே நினைத்தோம். ஆனால்
ஆசிய நிலைக்கு இந்தச் சித்தாந்தம் பொருந்தவில்லை.
ஆசிய நிலைக்கு இந்தச் சித்தாந்தம் பொருந்தவில்லை.

ஆகவே நமது பழங்கால, தற்கால அனுபவத்தின் விளை
வாக யுத்தப் பிரசாரக் கெடுபிடியின் தன்மையால் விளையக்
கூடிய ஆபத்தை எளிதாக மதிப்பிடுகிறோம். இன்று, ஆசியா,
தென் அமெரிக்கா, ஆஃபிரிக்கா முதலிய விடங்களில் நம்மை
எதிர்நோக்கி நிற்கும் ஆபத்துக்கள் மட்டுமல்ல, ஐரோப்
பாவில் நீண்ட காலத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைச்
சமாளிப்பதற்கு இந்த மதிப்பீடு உதவி புரியாது.

இன்றைய போராட்டச் சூழ்நிலையில் பலம் என்பது பற்றி
அவர்கள் கருத்தென்ன என்று வாஷிங்டனிலுள்ள மதிப்பு
மிக்க பதினொரு தலைவர்களைக் கேட்டபோதுதான் இந்த
நம்பிக்கை எவ்வளவு தூரத்திற்கு நமது சிந்தனையை ஆட்
கொண்டிருக்கிறது என்பதை நான் உணர்ந்தேன். பின்
வரும் விஷயங்களின் கலவையே சக்தி என்பதை அவர்கள்
உடனடியாக ஒப்புக்கொண்டனர்—அணுஆயுதங்கள், விமா
னப்படை, தரைப்படை, கடற்படை, நேடோ, *சீடோ
போன்ற ராணுவ உடன்பாடுகள், ஆலைத்தொழில் உற்பத்தி,
தளவாடங்கள், போக்குவரத்து சாதனங்கள், பூகோள
அமைப்பில், மக்களையோ, கருத்துக்களையோ அவர்கள் குறிப்
பிடவேயில்லை.

இந்த இரண்டு முக்கியமான அம்சங்களை அத்தலைவர்கள்
குறிப்பிடத் தவறியதிலிருந்து புதிய சக்திகளை நாம் நன்கு
புரிந்து கொள்ளவில்லையென்பது புலனாகிறது. இந்தப் புதிய
சக்திகள்தான் யுத்தப் பிற்காலத்தில் ஆசியச் சரித்திரத்தைப்
பெரிதும் உருவகப்படுத்தி வந்திருக்கிறது. இதே சக்தி
இன்று, ஆஃபிரிக்காவை ஊக்குவிக்கிறது. இதே சக்திகள்
தான் இனி எதிர்காலச் சரித்திரத்தை வகுக்கும் எனக் கம்யூ
னிஸ்டுகள் திட நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த
சக்திகளின் பலத்தைப் பின்வரும் உண்மையிலிருந்து தெட்
டெனப் புரிந்து கொள்ளலாம். நாம் இதுவரையில் எதை
சக்தியின் சாரம் என மதித்து வந்தோமோ, அந்தச் சக்தி
அச்சமயம் நிலவிய ஆட்சியை ஆதரித்தாலும் உலக மக்களில்
பாதிப்பேர் தங்கள் நாட்டு ஆட்சியை மாற்றுவதற்கான
சக்தியைத் தாங்களே திரட்டியிருக்கின்றனர்.

1926-இல் சீனாவில் மா-சே-துங்கிடம் 1,000 வீரர்கள்,
இருநூறு துப்பாக்கிகள், மக்களைத் திரட்டும் அசாத்யமான

*சீடோ:—(Seato) தென் கிழக்கு ஆசியா ஒப்பந்த ஸ்தாபனம்: இந்த
ஒப்பந்தம் 1954 செப்டம்பரில் கையெழுத்தாயிற்று. இதில் சம்பந்தப்பட்ட
நாடுகள் அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்ஸ், ஆஸ்டிரேலியா, நியூஜிலண்டு,
பாகிஸ்தான், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இவைகளில் ஏதாவது ஒரு நாடு
தாக்கப்பட்டால் பிறநாடுகள் தங்களைத் தாக்கியதாக மதித்து, தாக்கப்பட்ட
நாட்டைப் பாதுகாக்க முன்வரும். கம்யூனிஸ்ட் சீனாவால் ஆபத்து ஏற்படா
மல் தவிர்ப்பதற்கே இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

திறன் எல்லாம் இருந்தன. ஒரு கருத்து அவரை மேலும்
ஆட்கொண்டிருந்தது. அவரும் புரட்சியைத் தொடங்கினர்.
1949-இல் அவர் சீனுவின் அதிபதி ஆகிவிட்டார். 1947-இல்
காந்தி தனது தீரத்துடனும், அமைதியான முறையில்
மாறுதல் விளைவிக்கவேண்டும் எனும் கருத்துடனும் பிரிட்
டனிடமிருந்து இந்தியாவும், பாகிஸ்தானும் விடுதலை பெறச்
செய்தார். இதன் மூலம் பர்மாவும், இலங்கையும் விடுதலை
பெற வழி காட்டினர். இந்தோனேசியாவிலும், இந்தோ
சீனுவிலும் டச்சு, ஃபிரஞ்சு உயர் தர தொழில் வளமும் ராணுவ
பலமும் பணியவேண்டி வந்துவிட்டது. இவர்களும் தங்களை
விட உயர்வான பொருள் பலத்தால் பணியவில்லை. மக்களை
ஆட்கொள்ளும் கருத்துக்களின் உன்னத சக்தியாலேயே
பணிந்தனர்.

கருத்துக்களோ, லட்சியங்களோ, அவைகள் நல்ல
வையோ, தீயவையோ, அவைகளில் பக்திபூண்ட திறமை
வாய்ந்த தலைவர்கள், ராணுவ ரீதியில் பலஹீனமாயிருந்
தாலும்—இருக்கும் நிலையை மாற்றியிருக்கின்றனர். உதா
ரணமாக 1945 லிருந்து தூரக்கிழக்குப் பகுதியில் மட்டும்
கீழ்க்காணும் தவருன கருத்து அடிப்படையிலேயே சிந்தனை
செய்து வந்திருக்கிரும்.

1945-அமெரிக்க ராணுவ சாதனங்கள் உதவி பெற்ற
சியாங்கின் படைகள் மா-சே-துங்கைத் தோற்கடித்து ஒரு
ஜனநாயக ஆட்சியின் கீழ் சீனுவை ஒன்றுபடுத்த முடியும்.

1950 கொரியாவில் 38-வது அக்ஷரேகையை* ஐ. நா.
படைகள் தாண்டினுல் சண்டையில் சீன கம்யூனிஸ்ட்
துருப்புக்கள் தலையிடும் என்பது வெறும் பயமுறுத்தல்.

1953 சியாங்கிற்கு ஆயுத உதவி செய்து அவரைத்
தூண்டித் துணைபுரிந்தால், அவர் சீனநாட்டிற்குள் புக நாம்
உதவி செய்வதாகும்.

1950-54 அமெரிக்கா போதிய அளவு ஆயுத உதவி
புரிந்திருந்தால் ஃபிரெஞ்சு ஏகாதிபத்ய ஆட்சியினர் தங்க
ளது ஆதிக்கத்தை இந்தோ சீனுவில் நீடிக்கச் செய்திருக்க
முடியும்.

தவருன சிந்தனைக்கு மேலே கூறப்பட்ட உதாரணங்

* 88-வது அக்ஷரேகை என்பதைப் புரிந்து கொள்ள கொரியாவின் சமீப
கால வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவது
உலக யுத்தம் 1945-இல் முடிவடைகையில் கொரியாவின் வடபுறம் ரஷ்யர்
வசமும், தென்புறம் அமெரிக்கர் வசமும் இருந்தன: இவ்விரண்டிற்கும்
எல்லைக்கோடாயிருந்தது 88-வது அக்ஷரேகை (அதாவது 88-th Parallel).
வட கொரியா, தென் கொரியாவில் ஆக்ரமித்தவுடன் ஐ. நா. துருப்புகள்
தென்பகுதிக்கு உதவி புரிந்தன. ஐ. நா. படை 88-வது அக்ஷரேகை
யைத் தாண்டி வடக்கே சென்றதும், சீனப்படை நேரடியாக வடகொரியா
வுக்கு உதவிபுரிய வந்தது.



களில் ஒரு பொதுவான அம்சத்தைக் காணலாம். ராணுவப்
பலத்தில் அளவுக்கு மீறிய நம்பிக்கை ஒருபுறம், ஜீவன்
ததும்பும் கருத்துக்கள், ஏமாற்றமடைந்து பசியால் வாடும்
மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டால் என்
னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் போதிய அளவு
அறிந்து கொள்ளாதது மற்ருெரு புறம்.

மிகவும் சுமுகமான சூழ்நிலையில் கூட ஆசியாவிலும்,
ஆஃபிரிக்காவிலும் நமது நடவடிக்கைகள் எளிதாயிருந்தி
ருக்காது. நாம் ஒன்றுபட்டு வேலை செய்து உதவவேண்டிய
பல நாடுகள் புதிதாகச் சுதந்தரம் பெற்றவை. ஐரோப்பிய
காலனி ஆட்சியில் அவர்கள் நீண்டகாலம் அல்லல்பட்டத
ைல் அவர்கள் நம்மைச் சந்தேகிக்கிருர்கள். நம்மிடம் வெறுப்
படைகின்றனர்.

1939-இல் ஸ்டாலின் ஹிட்லருடன் செய்துகொண்ட
உடன்பாட்டுக்குப் பிறகு அட்லான்டிக் நாடுகள் பட்ட அவஸ்
தைகளில் ஆசிய மக்களின் பலருடைய உணர்ச்சியும்
உள்ளமும் கவனமும் செல்லவில்லை.

ஐரோப்பாவில் கம்யூனிஸ்டுகள் நீண்டகாலமாக ஆக்ர
மித்து வந்திருக்கின்றனர். அல்லது ஆக்ரமிப்பதாக பய
முறுத்தியிருக்கின்றனர். இந்த வரலாறுதான் ரஷ்யாவைப்
பற்றி நமது கொள்கையை வகுக்கப் பெரிதும் தூண்டு
கோலாயிருந்து வந்திருக்கிறது. இருந்தும் சரித்திரத்தில்
இந்த நெருக்கடியான வரலாறு ஆசியாவில் எவருக்கும்
தெரியாது. காரணம் இந்தக் காலங்களில் ஆசியர்களில்
பெரும்பாலோர் தங்களது சுதந்திரப் போராட்டத்திலும்
தங்களது உயிர்வாழ்க்கைக்கான போராட்டங்களிலுமே
ஈடுபட்டிருந்தனர்.

மேற்கு ஐரோப்பாவில், இல்லாதவர்களுக்கு உதவி
செய்வதில் நமது ராணுவ, பொருளாதார சக்தி பயன்
பட்டுவருகையில் நாம் உட்பட்டிருக்கும் அதே அபாயத்
திற்குட்பட்டவர்களும், அதை நம்மாதிரியே சமாளிக்கத்
தயாராயுள்ளவர்களிடையேதான் நாம் பழகிவந்தோம்.
மத்தியக் கிழக்கில், சோவியத் தலையீட்டையும், கொரியா,
தென்கிழக்கு ஆசியப் பகுதிகளில் சீன ஆக்கிரமிப்பையும்
தடுக்க நாம் முயற்சிக்கையில், நம்மைச் சந்தேகக் கண்
கொண்டே ஆசியர்கள் பார்த்தனர். தங்களுடைய தீப
கற்பங்களில், தீவுகளில் தங்களது உயர்ந்த மலைத்தொடர்
களுக்குப் பின்பும், ஆசியாவில் நுட்பமான தேசப்பற்
றுள்ள புதிய அரசாங்கங்கள் உலகக் கம்யூனிஸ்ட் ஆக்ரமிப்பு
உடனடியாக நிகழக் கூடியதல்ல எனக் கருதின. மேலும்
காலனி ஆட்சிக் கொடுமைகளும், அவர்கள் மனத்தில்
இன்னும் பசுமையாயிருந்தன.

கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தில் சற்று இழுத்த இழுப்
புக்கு வரும் இளக்கத்தன்மை தோன்றுவதற்கான சூசகங்
கள் தென்படுகின்றன. ரஷ்ய, சீன ராஜதந்திர முறைகளில்
நுட்ப புத்தியும், சாதுர்யமும் காணப்படுகிறது. இந்தப்
புதிய மாறுதலை ஐரோப்பாவில் எதிர்த்த மாதிரியே ஆசியா
விலும் நாம் சமாளிக்கவேண்டி இருக்கிறது. நமது ஜனநாயகப்
பரிபாஷைகளை மாஸ்கோவும், பீகிங்கும் உபயோகிக்கத்
தயங்குவதில்லை. நம்முடைய மாணவர்கள், கலாசார தூது
கோஷ்டி பரிவர்த்தனை-ஏன் நமது *மார்ஷல் திட்டத்தைக்
கூட அவர்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டனர்.

உலக கம்யூனிஸம் பாரிஸ் நகரில் இடம்பெற வேண்டு
மெனில் அது பீகிங் கல்கத்தா வாயிலாகவே செல்லவேண்
டும் என ஒருசமயம் லெனின் கூறினர். இதே வழியைப்
பின்பற்ற எதிர்காலத்தில் கம்யூனிஸ்டுகள் அபாரமாக
முயற்சிகள் செய்யக்கூடும்.

ஸ்டாலின் இறந்தபிறகு, சமாதானமாகக் கூடிவாழ்
தல் பற்றி ரஷ்யத் தலைமைப்பீடம் ஓயாமல் பேசிவருகிறது.
1955-இல் இதையொட்டிச் செயல்புரியத் தொடங்கியது.
அவர்கள் ஆஸ்திரியாவுடன் சமாதான உடன்பாடு செய்து
கொண்டனர். ஒருகாலத்தில் பழித்துவந்த மேற்கு ஜெர்
மனியுடன் ஒத்துப்போயினர். டிட்டோவின் யுகோஸ்லாவியா
வுடன் சமரசம் செய்ய முக்கியத் தலைவர்கள் காவடி எடுத்
துச் சென்றனர். கம்யூனிஸ்ட் அல்லாதார்க்கும், கம்யூ
னிஸ்ட் விரோதிகளுக்கும் ரஷ்யாவில் தாராளமாகப் பிரயா
ணம் செய்ய அநுமதிச் சீட்டளித்தனர். இதற்கெல்லாம்
சிகரம் வைத்தாற்போல், அவர்களுடைய ராஜதந்திரத்தில்
நல்லெண்ணத்தின் நறுமணம் வீசத்தொடங்கிற்று.

உலக அரசியலில் ரஷ்யாவின் இந்த மாற்றத்துக்குப் பல்
வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இவைகளில் சிலவற்
றைப் பற்றி அடுத்த பகுதியில் விவாதிப்போம். ஆனல்,
காரணங்கள் யாதாயிருந்தாலும், அவைகளின் விளைவுகள்
ஆழச் சிந்திக்கக் கூடியதாக இருக்கும்.

ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் முன்னைவிடத்
துரிதமாகச் சிறப்பான சுதந்திர வல்லரசுகளாகத் தலைதூக்கிக்
கிளம்பி வரலாம். இந்தியாவின் செல்வாக்கு நிச்சயமாக

*மார்ஷல் திட்டம்:—1947-இல் ஜூன் மாதத்தில் அமெரிக்க ராஜாங்க
காரியதரிசி ஜியார்ஜ் மார்ஷல், பட்டினி, வறுமை, மனச்சோர்வு, குழப்பம்
ஆகியவற்றை அகற்ற ஐரோப்பாவுக்குப் பண உதவி செய்யவேண்டுமென
வற்புறுத்தினர். 1948 ஏப்ரலில் காங்கிரஸ் இதற்காக 5.4 பிலியன் டாலர்
அநுமதித்தது இதுதான் மார்ஷல் திட்டம் என்பது. முதலில் பொருளா
தார அபிவிருத்திக்கே பண உதவி செய்யப்பட்டாலும், கொரியா சண்டை
தொடங்கியதும் ராணுவ புனர்நிர்மாணத்திற்கும் இந்தத் திட்டத்தின் மூலம்
உதவி அளிக்கப்பட்டது.



விரிவடையும். தெற்கு ஆசியா, ஆஃப்ரிக்கா, தென் அமெ
ரிக்காவின் நடவடிக்கைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்த
வையாக இருக்கும். ''நீங்கள் ஒன்று எங்களுடனிருக்க
வேண்டும். இல்லையேல் எங்களுக்கு எதிரிடையாயிருக்க
வேண்டும்'' என்று யுத்தக் கெடுபிடிப் பிரசார தோரணையில்
கணக்குப்போட்டால் அதற்கு இனிப் பொருள் இருக்காது.

இனி ரஷ்யாவின் உலக கம்யூனிஸத்திற்கும், அமெரிக்
காவின் மேற்கத்திக் கூட்டமைப்பிற்கும் நேரடியான போராட்
டம் நடக்கும் என நாம் சமீபகாலத்தில் கருதிவந்தோமே,
அதைவிடச் சிக்கல் நிறைந்ததாயிருக்கும் படிப்படியாக உருப்
பெற்றுவரும் உலகம். முன்பு உலக விவகாரங்களை நாமும்,
ரஷ்யாவும் மட்டும் கட்டுப்படுத்தி வந்த மாதிரி இனி நாம்
கட்டுப்படுத்த முடியாதென்றே தோன்றுகிறது.

எல்லா நாடுகளும் கூடி வாழும் இந்தக் காலத்தை,
அரசியல் தந்திரத்துறையில் குறுகிய கால ஓய்வு என்றும்,
பின்னர் ஆயுத பலங்கொண்டு தங்கள் ஆதிக்கத்தை விரிவு
படுத்தலாம் என்றும் ரஷ்யர்கள் நினைப்பார்களானல், அவ்
வாறு நடக்கப்போவதில்லை. ஏனெனில் இப்போது தோன்றிப்
பெருகிவரும் சக்திகளைத் தங்களால் அடக்க முடியாது என்
பதை அவர்கள், அச்சமயம் உணர்வார்கள். ''சுதந்திரம்
எனும் நோய் பரவத்தொடங்கிவிட்டது'' என ஜெஃபர்ஸன்
ஒரு சமயம் கூறினர். யுத்தத்தால் சலித்துப்போன இவ்வுல
கில் உருட்டலும், மிரட்டலும் பலிக்கும் என ரஷ்யத்
தலைமைப்பீடம் நினைக்குமானல், சமாதான வேட்கையும்
தொத்திப் பரவக்கூடியது என்பது நிரூபணமாகிவிட்டதை
அவர்கள் அறியவேண்டும்.

அமெரிக்கர்களுக்கும், அவர்களது கொள்கை வகுப்
போர்களுக்கும் சங்கடமளிக்கக்கூடிய ஒரு விசித்திரமான
நிலை இருக்கிறது. பகிரங்க ஆக்கிரமிப்பு, ஆக்கிரமிக்கப்போவ
தாக மிரட்டல் நிலவிய காலம் மாறி, இப்போது பயங்கர
முறைகள் மூலம் நிலவும் கவலைக்கிடமான சமாதான காலத்
திற்கு நாம் வந்துவிட்டோம். அமைதியைக் குலைக்கும்
பெரிய சச்சரவுகளுக்குப் பதிலாகச் சில்லறைத் தொந்தரவுகள்
பெருகலாம். நமக்குள்ளேயோ அல்லது நமது நேச நாடு
களுக்குள்ளோ பல சங்கடங்கள், சிக்கல்கள், மோதல்கள்
ஏற்படலாம். இவைகள் இதுவரையில் யுத்தக் கெடுபிடிப்
பிரசார ஆர்ப்பாட்டத்தில் மறைந்து கிடந்தன. தற்
போதைய நிலையில் நம்மால் சமாளிக்க முடியாதபடி
பல்வேறு புதிய பிரச்னைகள் எழலாம்.

இந்தப் புதிய காலத்தில் நாம் நடுநிலையில் நின்று
கொண்டிருக்க முடியாது. இது சோம்பிக் கிடப்பதற்கான
காலமல்ல. மனோதர்மத்துடன் செயல் புரியவேண்டிய சந்

தர்ப்பம் இது. ''பரஸ்பரம் ஏமாற்றம், பரஸ்பர பயம் எனும் அடிப்படையில் கூடி வாழ்வதை...சமாதானம் எனக் கூறுவது தகுதியல்ல'' என்று போப்பாண்டவர் 12வது பயஸ் (Pius XII) கூறியது உண்மை. ''அது உண்மையாக ஒன்றுபட்டு வாழ்தலாக மாற வேண்டும். அறநெறி ஆதர்சத்தினால் ஏற்பட்டு அதனாலேயே பாதுகாக்கப்பட்ட உண்மையான ஒன்றி வாழ்தலாக மாறவேண்டும். இல்லையேல், அந்த வாழ்வு உறைந்துபோன பாரிசவாயுவாகவே இருக்கும்.'' இவ்வாறு அவர் தம் போதனைக்கு விளக்கம் தந்தார். கடைசியில் இந்த நிலை மக்கள் யாவரும் கண்டு நடுங்கும் உலக யுத்தத்தில் கொண்டுபோய்விடும்.

போப்பாண்டவர் உபதேசம் செய்யும் ''சமாதானமாக ஒன்றி வாழ்தல்'' ஏற்பட வேண்டுமானால், நமது சிந்தனை சக்தியின் எல்லா அம்சங்களும் சீர்ப்பட வேண்டும்.

இன்று புதிய உலக முன்னேற்றத்தில் நாம் காண்பது சற்று முன்னேறுவதும், உடன் பின்வாங்குவதும்தான். உதாரணமாக ஆயுதப்பரிஹரணத் துறையில் ஒரு சமயத்தில் நம்பிக்கை காண்கிறோம். மற்றோர் சமயம், தயக்கம் தென்படுகிறது. இந்த நிலையில் ஒவ்வொரு கட்சியினர், ஒவ்வொரு விதமான உபதேசம் செய்வார்கள். நமது நல்லெண்ணத்திற் கறிகுறியாக ராணுவ பலத்தைக் கைவிட வேண்டுமெனச் சிலர் கூறுவார்கள். ஆனால் இந்த ராணுவ பலத்தின் உதவியால்தான் சமரஸப் பேச்சு வார்த்தைக்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர். ''சமாதானம் என்பது மனிதன் அடையக்கூடியதன்று, சோவியத் யூனியனும், அமெரிக்காவும், இரு அணு ஆயுத மலைக்குவியலுக்கு அதிபர்களாயிருந்துகொண்டு, நடுங்கும் உலகத்தில் ஒருவரையொருவர் துவேஷக்கண்ணால் பார்த்துக்கொண்டே இருக்கக்கடவர்'' என விதி வசப்பட்டவர்கள் போதித்து வரலாம்.

புதிய நிலையில் புதிய வாதப் பிரதிவாதங்களுக்கிடையே கொள்கை வகுக்கும் பொறுப்புள்ளவர்களுக்கு உயர்தரமான மனோதர்மம், துணிவு, பொறுமை, யாவும் இருக்க வேண்டும். எல்லாவற்றையும்விட நமக்கு ஒரு அரிய குணம் இருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் எல்லைக்கப்பால் வாழும் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு பேருடன் நாம் எவ்வாறு வாழுகிறோம் என்கிறதைப் பொறுத்திருக்கிறது நமது சமூகத்தின் உயிர் வாழும் சக்தி. இந்த உண்மையை அமெரிக்கர்களும், அவர்களது தலைவர்களும் அறிந்திருக்கின்றனரா என்பதுதான் அவர்களது திறனை அறிவதற்கான உரைகல். ரஷ்யத் தலைமைப் பீடத்தின் போக்கை நோக்கியே அமெரிக்கக்கொள்கை வகுக்கப்படவேண்டுமென்றால், அது தோல்



விக்கே வழிகாட்டும். இதே மாதிரி மற்றொரு உண்மையையும் நாம் உணர வேண்டும். கொள்கை வகுப்பதில் ராணுவ அம்சங்களில் கவனம் செலுத்துவதனால் மட்டும் நிலைமையைச் சமாளித்துவிட முடியாது என்பதை 1945-55 ஆகிய பத்து ஆண்டுகளில் கண்டோம். இதே கொள்கையை இனியும் கையாண்டால் 1955-65 ஆண்டுகளில் ஏற்படப் போகும் மாறுதல்கள் நிறைந்த நிலையில் சர்வநாசம் விளையக்கூடும். மத்திய உலகுடன் உறவு அவ்வளவாக நம்மிடம் உள்ள அணு ஆயுதங்களைப் பொறுத்திருக்கவில்லை. அது பெரிதும் மக்கள் சிந்தனையும், உணர்ச்சியும் எவ்வாறு இருக்கிறது, அவர்கள் தேவை என்ன, அவர்கள் எதைக் கண்டு அஞ்சுகின்றனர், அவர்களை ஊக்குவிக்கும் கருத்துக்களும், அவைகளின் தன்மையும் யாவை எனப் புரிந்துகொள்ளும் நமது திறமையையே பொறுத்திருக்கிறது.

தற்போதுள்ள நிலைமை நீடிக்கவேண்டுமெனும் கொள்கையை உருத் தெரியாமல் அடித்த சக்திகளை அறிந்துகொள்ளுவதற்கு இருபதாவது நூற்றாண்டில் நிகழ்ந்த மூன்று புரட்சிகளை ஆதியோடந்தமாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இரண்டு தலைமுறைகளில் இம்மூன்று புரட்சிகளும், ஐரோப்பிய ஆசிய நிலப்பரப்பின் அமைப்பை மாற்றியதுடன், மற்றக் கண்டங்களை நம்பிக்கை, அச்சம், பொறாமை, பரபரப்பு முதலிய உணர்ச்சிகளை அலைஅலையாக மோதும்படிச் செய்துவிட்டன. இம்மூன்று புரட்சிகளில் இரண்டில் ரஷ்யர்கள் வெற்றி கண்டுவிட்டனர். மூன்றாவது புரட்சியில் ஜெயம் பெற அவர்கள் தந்திரமாக வேலை செய்து வருகின்றனர். ரஷ்யாவும், சீனாவும் தத்தம் தனி வழியில் ஆசியா, ஆஃபிரிக்கா கண்டங்கள் அடங்கிய மத்ய உலகில் தங்களது செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ள முயற்சித்து வருகின்றன. இந்தப் பகுதியில்தான் நமது கொள்கைகள் பயனற்றவையாயிருக்கின்றன. ரஷ்யா, சீனாவின் இறுதி லட்சியம் மாறிவிட்டது என்று நினைப்பது முட்டாள்தனம். படிப்படியாக அமெரிக்காவை அதன் நேச நாடுகளிடமிருந்து பிரித்து கடைசியில் உலக கம்யூனிஸம் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் இன்னமும் அவர்களது குறிக்கோள். இருபதாவது நூற்றாண்டில் நிகழ்ந்த இந்தப் புரட்சிகள் தோன்றிய விதம், அவைகளின் பலம், பலவீனங்கள், விளைவுகள் யாவற்றையும், ஒப்பிட்டுப் பார்த்து, இவைகளை அநுசரித்து நமது புரட்சியின் தன்மையைச் சுருக்கமாக விவரிப்பதில் இனிக் கவனம் செலுத்துவோம்.

## பகுதி 2

# மார்க்ஸ் மாஸ்கோவுக்கு வருகிறார்

ரஷ்ய நாடே! எங்கே விரைந்து செல்கிறாய்? பதில் கூறு! ஆனால் ரஷ்ய நாடு பதில் கூறவில்லை. மணியோசை இசையுடன் கலந்துவிட்டது: காற்றுச் சிதறியடிக்கிறது. புயற்காற்று மாதிரி சீறிக் கொண்டு விரைகிறது. புவியிலுள்ள யாவும் விரைகின்றன. மற்ற ராஜ்யங்கள், ஏளனமாக ஓரக் கண்ணால் பார்க்கின்றன.

—நிகோலய் கோகோல்

ரஷ்ய நாட்டின் பழைய வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. அதன் தற்கால நிலை பயங்கரமாயிருக்கிறது; ஆனால் சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்க அதற்குத் தகுதியுண்டு. தனது தற்போதைய நிலை நீடிக்கும் என அதற்கு நம்பிக்கை இல்லை... காலம் தனக்கு அதிகமாக உதவி புரியும் என எதிர்பார்க்கிறது.

அலெக்ஸாண்டர் ஹெர்ஸன்
1812—1870

*அத்தியாயம்-3*

# ரஷ்யப் புரட்சியின் பூர்வாங்கம்

இருபதாவது நூற்றாண்டில் மிக உணர்ச்சிப் பெருக்கும் கொந்தளிப்பும் நிறைந்த முதல் புரட்சி ரஷ்ய மக்களிடையே நிகழ்ந்தது. இன்னமும் மாஸ்கோதான் அந்தப் புரட்சியின் தலைமைக் காரியாலயம். இந்தப் புரட்சியையும், இதன் பலாபலன்களையும் நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால், அந்தப் புரட்சி தோன்றிய நாட்டைப்பற்றி ஓரளவு அறிந்துகொள்ள வேண்டும். ரஷ்யா எனும் பெயரைக் கேட்டதும், அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் பெருவாரியானவர்கள் 'இது ஒரு கவர்ச்சியற்ற கரடுமுரடான கண்டமோ எனக் கருதக்கூடிய எல்லையற்றதொரு நிலப்பரப்பும் அந்த நிலப்பரப்பில் ஐரோப்பா ஒரு தீப கற்பம்' என்ற எண்ணமே தோன்றும். பிடிவாதமும், புத்திசாலித்தனமும், மகா சிறப்பும் வாய்ந்த இந்த மக்கட்கூட்டம் எல்லையில்லாக் கஷ்டங்களுக்குட்பட்டு வந்திருக்கிறது. அதனுடைய சரித்திரத்தையும் இலக்கியத்தையும் ஊன்றிக் கவனித்தால் ஓராயிரம் ஆண்டு ரத்தக்களறியும் போரும், கொடுங்கோன்மையும் கொடுமைப்படுத்தலும், நிறைந்திருப்பதைக் காண்போம். 1917-ஆம் ஆண்டு நடுங்கச் செய்யும் சம்பவங்கள் நேர்ந்த காலத்தில், ரஷ்ய அரசபீடம் ஆட்டங்கண்டபொழுது, ரஷ்ய ராணி தமது கணவன் 'நிக்கோலஸ்' மன்னனிடம் ''உறுதியாக இரு, சாட்டையடி பெறுவதில்தான் ரஷ்யர்களுக்கு ஆசை'' எனத் தூண்டினார். சாட்டையடியை அவர்கள் விரும்பினார்களோ இல்லையோ, சாட்டையின் அடியை அவர்கள் பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்திருக்கின்றனர்.

ஆனால் இதே மக்கள் தங்களது தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்காக முதலில் 1812-லும், பின்னர் 1943-லும் கிளர்ந்தெழுந்தனர். நவீன ஐரோப்பா தயாரித்திருந்த சக்தி மிக்க ராணுவச் சாதனங்களையெல்லாம் எதிர்த்துக்காட்டினர்.

சென்ற நூற்ருண்டின் இறுதிவரை பெரும்பாலான ரஷ்
யர்கள் குடியானவர்களா யிருந்தனர். மத்திய சகாப்தத்தில்
மேற்கு ஐரோப்பாவிலும், இன்று ஆசியா, ஆஃரிக்கா,
'லாடின்' அமெரிக்காவின் சில பகுதிகளிலும் கையாளப்படும்
புராதனமான, கரடுமுரடான சாதனங்களின் உதவியால்,
பயிரிட்டு அவர்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழி செய்து
கொண்டனர். 1861 வரையில் பெரும்பாலான ரஷ்ய மக்கள்
அடிமைகளாயிருந்தனர். சட்டப்படி அவர்களை விற்கலாம்,
மற்றப்படி அவர்கள் பிறப்பிலிருந்து சாகும்வரை தங்களது
யஜமானர்களுக்கும், தாங்கள் உழும் நிலத்துக்கும் அடிமை
களாகக் கட்டுண்டு கிடந்தனர். அந்த ஆண்டுக்குப் பிறகு,
அவர்கள் சட்டப்படி சுதந்திரமானவர்கள். ஆனால் மற்ற
பின்தங்கிய சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த
சமூகத்தினர்போல் அவர்களது அறியாமையையும், புராதனப்
பழக்க வழக்கங்களையும் பயன்படுத்தி வசதியுள்ளவர்கள்
அடிமைகளாகவே வைத்திருந்தனர்.

ஜார் ஆட்சியின் கடைசிப் பகுதியில் குடியானவர்களுக்கு
நிலம் விற்பது துரிதப்படுத்தப்பட்டாலும் அவர்களது
வாழ்க்கை துன்பமயமாகவே இருந்தது. கல்வி, ஆரோக்கிய
வசதிகள் படிப்படியாக அபிவிருத்தியடைந்திருந்தாலும்,
மிருகத்தனமான முறைகள் நிறைந்த பிரபுக்கள் ஆட்சியே
நீடித்து வந்தது. வறுமையால் வாடும் மக்கள் மீது, தந்தைக்
குள்ள அதிகாரத்துடன் யஜமான் ஆதிக்கம் செலுத்திஞன்.
வேலையில்லாத் திண்டாட்டம் நிறைந்திருந்தது. ஆகையால்
மக்கள் சோம்பிக் கிடந்தனர்: சில சமயம் பஞ்சமும் நிலவியது.

நவீன காலத்தில், பதினெட்டாவது நூற்ருண்டு வரை
ரஷ்யாவுக்கு ஐரோப்பாவுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட
வில்லை. 18-ஆம் நூற்ருண்டில்தான் மகாபீடர் மன்னனும்,
காதரின் ராணியும் அந்நாட்டை மேற்கத்திய பாணிக்கு
மாற்ற முயன்றனர். 1697-இல் பீடர் மன்னன் மாறுவேஷம்
பூண்டு ஐரோப்பாவில் பிரயாணம் செய்தான். அவன் ஆலை
களைப் பார்வையிட்டான். ஹாலந்தில் ஒரு சாதாரணக் கப்பல்
தொழிலாளியாய் வேலை செய்தான். இதற்கிடையில் ரஷ்யா
வில் ஏற்பட்ட கலகத்தை அடக்குவதற்காக அழைக்கப்பட்ட
அவன் தன் கையாலேயே கலகக்காரர்களைத் தூக்கிலிட்டு
விட்டு, உடனே தான் கண்டறிந்து வந்த மேற்கத்தி முறை
களில் சிலவற்றை நாட்டில் இடம் பெறச்செய்தான். இன்று
இதே முறைகளைத் தற்போதுள்ள பின்தங்கிய நாடுகள்
அநுஷ்டிப்பதைப் பார்த்தால், ஜார் மன்னன் தீர்க்க தரிசனம்
வாய்ந்தவனே என்று எண்ணத்தோன்றுகிறது.

பல ஆண்டுகளுக்கு இந்தப் புதிய கருத்துக்களும், சக்தி
களும் ஜனத்தொகையில், ஒரு சிறு பகுதியினருக்குத்தான்



பயன்பட்டன. ராணுவ அதிகாரிகள், பிரபுக்களின் குமாரர்கள்,
அரசாங்க உத்தியோகஸ்தர்கள், மேற்கு ஐரோப்பாவில்
பிரயாணம் செய்துவிட்டு, புதிய அரசியல், சமூகக் கருத்து
களுடன் திரும்பி வந்தனர். அதே சமயத்தில் கல்வியிலும்,
வாழ்க்கை நிலையிலும் தங்களுக்கும், தங்கள் நாட்டு ஏழைகளுக்
கும் உள்ள ஏற்றத்தாழ்வை அறிந்ததனுல் சற்று அடக்கம்
கொண்டனர்.

இந்த நூற்ருண்டுத் தொடக்கத்தில் ஆலைத்தொழில்
துறையில், ரஷ்யா விரிவாக முன்னேற்றமடைய ஆரம்பித்
தது. இன்று வட இந்தியாவில், தாமோதர் பள்ளத்தாக்குத்
தொழில் பகுதி கிளம்பிய மாதிரி மாஸ்கோ, பீடர்ஸ்பர்க்,
டானெட் (Donet) நதிப் பகுதி யெங்கிலும், நாடகத்தில் தோன்
றும் காட்சிகளைப்போல் ஆலைகள் தோன்றத் தொடங்கின.

தொழில் அபிவிருத்தியின் விளைவாக நகரில் வாழும்
ஆலைத்தொழிலாளர் வர்க்கம் என்று ஒன்று தோன்றியது.
அவர்கள் பெரிதும் தேர்ச்சிபெருத தொழிலாளிகள்; அவர்கள்
கிராமத்தைவிட்டு வந்து, சில ஆண்டுகளே ஆகியிருந்தன.
குடியானவர்களுக்கேற்ற சமூக அமைப்புகளினின்று, மாறு
பட்டு வாழவேண்டியதைக் கண்டு இவர்கள் சற்றுத் தடுமாற்ற
முற்றனர். முதலாளிகள் அவர்களை இரக்கமின்றி கசக்கிப்
பிழிந்தனர். யந்திரப் புரட்சி ஏற்பட்டபோது, ஜெர்மனி,
ஃபிரான்ஸ், இங்கிலாந்து முதலிய நாடுகளில் இருந்த தொழி
லாளர்களை அவர்கள் ஒத்திருந்தனர்.

குடியானவர்களும், ஆலைத்தொழிலாளர்களும் ஒன்று
சேர்ந்தால், எம்மாதிரி அரசியல் கொந்தளிப்பு ஏற்படும்
என்பதைப் பிற இடங்களில் தெளிவாகக் கண்டிருக்கிருேம்.
தெற்கு ஆசியா, ஆஃபிரிக்கா, தென் அமெரிக்க நாடுகள்
மட்டிலுமின்றி ரஷ்யாவிலும், சீனுவிலும் கூட நில உரிமை
யில்லாமல் அடக்கியாளப்பட்ட குடியானவர்களும், சேரி
வாழ் மக்களும், வாழ்க்கைக்குப் போதிய அளவு கூலிபெருத
ஆலைத்தொழிலாளிகளும், தங்கள் எண்ணம் ஈடேருது
வெறுப்புற்றிருக்கும் மேற்கத்திக் கல்வி பயின்ற அறிவாளி
களும் ஒன்று கூடித்தான் இருபதாவது நூற்ருண்டுப் புரட்
சிக்கு ஆதாரமாக அமைந்தனர்.

ரஷ்யாவில் புரட்சி நடவடிக்கைகள் 1825 டிசம்பர்
இருபதிலேயே ஆரம்பித்துவிட்டன. அன்று, நெப்போலிய
னுக்கு எதிராகப் புரியப்பட்ட போர்கள் மூலம், மேற்கு
ஐரோப்பாவின் முற்போக்குக் கொள்கையின் ருசிகண்ட
ராணுவ அதிகாரிகள் ஜார் முதலாவது நிகோலஸ் பட்டத்திற்கு
வந்த அன்றே அவனுக்கு எதிராகக் கிளம்பினர். மயிரிழையில்
அவர்களுடைய திட்டம் பலிக்காமற்போகவே, இந்த டிசம்பர்

வாதிகள் (புரட்சி டிசம்பரில் தொடங்கியதால் ஏற்பட்ட
பெயர்) மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டனர்.

ஆனால் புரட்சித் தீ புகைந்து கொண்டேயிருந்தது.
ரஷ்யா புரிந்த ஒவ்வொரு போர் முடிந்ததும் ஜார் ஆட்சி
யினரிடமிருந்து நிர்ப்பந்தமாகச் சலுகைகள் பெறப்பட்டன.
1856-இல் கிரிமியா சண்டை, 1878-இல் ரஷ்ய துருக்கிப்
போர், 1905-இல் ரஷ்யா—ஜப்பான் யுத்தம், ஒவ்வொரு
தடவையும் சலுகைகள் ரத்தாகலாம் எனும் நிபந்தனையுடன்
வேண்டாவெறுப்பாக அளிக்கப்பட்டன. 1914-க்கு முன் சமா
தான காலத்தில் கடைசி ஆண்டில் (1914-இல் முதல் உலக
யுத்தம் ஆரம்பமாயிற்று) மிதமான அளவில் நிலச் சீர்திருத்
தங்கள்; ஜூரியின் உதவி கொண்டு வழக்கு விசாரணை செய்வது
போன்ற தாராளப் போக்குள்ள சலுகைகள் அளிக்கப்பட்
டதனால் பயன் ஏற்படவில்லை. ஏனெனில் சீர்திருத்தங்கள்
காலம் தாழ்த்தி அளிக்கப்பட்டன. செய்வதறியாது நிர்ணய
மில்லாது இருந்த ஆட்சியை ரஷ்யப் புரட்சி கவிழ்த்தது.

ஜார் ஆட்சி பலஹீனமாகவும், திறமையற்றும் இருந்
ததனால், அதற்குப்பின் வந்த கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு பயங்கர
முறையில் அது இணையற்றது என்று கூறுவதற்கில்லை.
பார்லிமெண்ட் பிரதிநிதிகள், குறிப்பாக முடியரசின் கடை
சிப் பத்து ஆண்டுகளில், சிறிய அளவில் சுதந்திரமாக அர
சியல் துறையில் செயல்புரிந்தனர். பத்திரிகைகள் எப்போ
தாவது தணிக்கை செய்யப்பட்டது என்றாலும் அரசாங்கத்
தார் கட்டுப்பாட்டுக்குட்பட்டிருந்தன என்று கூறுவதற்கில்லை.
1905-க்கு முன் ரகசியமாகவும், பின் பகிரங்கமாகவும் இடது
சாரிப் பத்திரிகைகள் நடந்து வந்தன.

எதிர்ப்பு மனப்பான்மையுள்ள ரஷ்யர்கள் தாராள
மாக நாட்டைவிட்டு வெளியே சென்றும், திரும்ப உள்ளே
வந்துகொண்டு மிருந்தனர். தற்காலிகமாக நாட்டுக்கு வெளி
யேயிருந்த லெனின் போன்றவர்களும், உள்ளேயிருந்த
ஸ்டாலின் போன்ற புரட்சி வீரர்களும் அடிக்கடி தங்களுக்குள்
தகவல்களும், கட்சித் தாக்கீதுகளும், பரிமாறிக் கொள்ள
லாயினர். ஸ்டாலினை ஜார் மன்னன் கைது செய்தபோதும்
அவரை சைபீரியாவுக்கு அனுப்புவதுடன் அரசன் திருப்தி
யடைந்தான். ஆனால் ஒருதரம் ஸ்டாலினை எதிர்த்தவர்களில்
எத்தனை பேர் மீண்டும் அவரை எதிர்க்க உயிருடனிருந்தனர்?

எனினும் ஜாரின் அதிகார அடிப்படை அசையாமல்
வலுவாகவே இருந்தது. படை, அரசாங்க அமைப்பு,
குடியானவர்களுக்கு மன்னன் ''சிறிய தந்தை''யாக இருந்
தது—இவற்றில் எதுவும் குலைந்துவிடவில்லை. இதன் விளை
வாக தீவிர எதிர்ப்பாளர்கள் தலைமறைவாகவே செயல்புரிய
வேண்டிவந்து விட்டது.



எந்த அளவுக்கு ஜாரின் ரகசிய போலீஸ்படை மிரு
கத்தனமாகவும், தூக்கிலிட்டும் எதிர்க்கட்சியை அடக்க
முயன்றதோ, அதே அளவுக்கு எதிர்க்கட்சியினரும் வெடி
குண்டை உபயோகிக்க முனைந்தது இயல்பே. கடைசி
நான்கு ஜார் மன்னர்களின் உயிரை மாய்க்க முன்னேற்
பாடில்லாத முயற்சிகள் நடந்தன. இதனால் இரண்டு ஜார்கள்
கொலையுண்டனர். ரஷ்யர்கள் பலாத்கார முறைகளைச்
சிறப்பாக கற்றறிந்தது உலகத்தின் துர்ப்பாக்கியமாகும்.

1917-இல் இரண்டாவது நிக்கோலஸ் வீழ்த்தப்பட்ட
பிறகு, இயற்கை மரணமடைந்த அவனுடைய தந்தை
மூன்றாவது அலெக்ஸாண்டரின் சிலை லெனின்கிராட் ரெயில்
நிலையத்திற்கெதிரில் உள்ள சதுக்கத்தில் எப்போதும் போல்
இருக்கவேண்டும் என்றும், அந்தச் சிலையின் அடியில் பின்
வரும் வாசகம் பொறிக்கப்பட வேண்டும் என்றும், போல்ஷ்
விக்குகள் உத்தரவிட்டனர்.

## சோளக்கொல்லை பொம்மை

'என் தந்தையும், மகனும் உயிருடனிருக்கும்போது,
தூக்கிலிடப்பட்டனர். ஆனால் இறந்த பிறகும் கூட என்னை
அவமானம் சூழ்ந்திருக்கிறது. யதேச்சாதிகாரத்தை உதறித்
தள்ளிய நாட்டில், சோளக் கொல்லைகளில் காக்கைகளை
விரட்டுவதற்கு வைக்கப்பட்டிருக்கும் பொம்மை மாதிரி
மானங்கெட்டு நான் இங்கே நிற்கிறேன்.'

ரஷ்யாவின் பரந்த நிலப்பரப்பும், அதனிடம் எதிர்
காலத்தில் திரளக்கூடிய ராணுவ பலமும் பத்தொன்ப
தாவது நூற்றாண்டில் ஐரோப்பாவின் சக்திச் சமநிலைக்
கொள்கையை நிலைக்கச் செய்வதற்குப் போதிய சாதனங்க
ளாக இருந்திருக்கலாம்: நெப்போலியனை ஒன்றுசேர்த்து,
தோற்கடித்த நாடுகளில் ரஷ்யா முக்கிய ஸ்தானம் வகித்தது.

பத்தொன்பதாவது நூற்றாண்டு கால ரஷ்யாவுக்குள்
சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலே கூறப்
பட்ட நோக்கத்தைவிட ஆட்சியினரை மிகுதியாகக் கவர்ந்
தது. ''ரஷ்யா சாம்ராஜ்யத்தின் மூன்று புனிதத் தலைநக
ரங்கள் மாஸ்கோ, பீடர்ஸ்பர்க், கான்ஸ்டாண்டிநோபிள்.
வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் ரஷ்யாவின்
எல்லைகள் யாவை? நமது எதிர்காலத்திற்கான வழி,
நம்மை ஏழு கடல்களுக்கும், ஏழு மாபெரும் நதி
களுக்கும் இட்டுச் செல்லும் என்பதை நமது தலைவிதி

நிர்ணயம் செய்யும். நைல் (Nile) நதியிலிருந்து நீவா (Neva) வரை, எல்பே (Elbe) யிலிருந்து யாங்டிஸி (Yangtze) வரை வால்காவிலிருந்து (Volga) யூப்ரடீஸ் (Euphrates) வரை கங்கையிலிருந்து (Ganges) டான்யூப் (Danube) வரை இது தான் ரஷ்ய சாம்ராஜ்யம். இது காலமுள்ளவரை நீடிக்கும்.'' இவ்வாறு ஸ்லாவ் (Slav) ராஜ்ய விஸ்தரிப்பு ஆர்வமுள்ள டியூட்சேவ் (Tyutchev) எழுதினுன்.

19-ஆவது நூற்றுண்டின் பிற்பகுதியில் ரஷ்ய சாம்ராஜ்யத்தின் மண்ணுசை, அதனைத் துருக்கி, பால்கன் நாடுகள், மத்தியக் கிழக்கு நோக்கியும், மற்ருெருபுறம் தூரக்கிழக்குப் பக்கமும் கவனம் செலுத்தத் தூண்டியது. கிரிமியா, ஸான் ஸிடிபாஸ்ே என்ற இடங்களில் கிழக்கு மத்தியதரைக் கடலுக்கு ரஷ்யர்கள் பாய்ந்ததை ஐரோப்பிய அரசுகள் தடுத்ததும், ஸைபீரியாவை மேலும் குடியேற்றநாடாக அமைப்பதிலும் சிதைவுற்று வந்த மஞ்சு ஆட்சியினரிடம் நிர்ப்பந்தமாகச் சலுகை பெறுவதிலும் ரஷ்யர்கள் தங்கள் கவனத்தைத் திருப்பலாயினர். இதன் விளைவாக ஜார், ஜப்பானின் எழுச்சியை எதிர்க்க நேர்ந்து அவர்களிடம் 1904-இல் தோல்வியடைந்தான்.

இப்படி ஜப்பானிடம் தோல்வி ஏற்பட்டதும் தனது ராஜதந்திர கவனத்தை தென் மேற்கே திருப்புவதைத் தவிர வேறு வழி ரஷ்யாவுக்கு இல்லாமற் போய்விட்டது. இதில் வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் ஜாரின் படை பலம் மட்டுமல்ல; ரஷ்ய வைதிகக் கிறிஸ்தவ போதனைகளை அடிப்படையாகக் கொண்ட இலட்சியங்களின் கவர்ச்சியும் ஸ்லாவ் ஜாதியினர் ஒன்றுபட்டு வாழ வேண்டும் எனும் கனவும்தான். இந்த நூற்றுண்டுத் தொடக்கத்தில் ஜார் அரசாங்கம் ஆஸ்திரியா, ஹங்கேரி நாடுகளையும், துருக்கியின் ஆட்சிக்குட்பட்ட

---

நைல்:—(Nile) வட ஆப்பிரிக்காவில் உற்பத்தியாகி எகிப்து வழியாக ஓடும் நதி.

நீவா :—(Neva) டான்லாண்டு வளைகுடாவின் மூலம் வடகடலில் விழும் சிற்றுறு.

எல்பே :—(Elbe) செகொஸ்லாவெகியா, ஜெர்மனி மூலம் ஓடி வட கடலில் சேரும் நதி.

யாங்டிஸி :—யாங்டிஸி திபெத்தில் உற்பத்தியாகி சீன வழியாக ஓடும் நீண்ட நதி.

வால்கா :—(Volga) ரஷ்யா பூராவும் ஓடும் ஐரோப்பாவிலேயே நீண்ட நதி.

யூப்ரடீஸ் :—(Euphrates) துருக்கியில் உற்பத்தியாகி பெர்ஷியக் குடாக் கடலில் விழும் நதி.

டான்யூப் :—(Danube) ஜெர்மனியில் உற்பத்தியாகி கருங்கடலில் சேரும் நதி. இவைகள்தான் ரஷ்யர்கள் கனவு கண்ட சாம்ராஜ்யத்தின் எல்லைக்கோடு என்பதற்காக ஆசிரியர் இந்நதிகளைக் குறிப்பிடுகின்றுர்.



பால்கன் பிரதேசத்தில் எஞ்சியிருந்த பகுதிகளையும், ஸ்லாவ்
ஆதிக்கத்திற்குட்படுத்துவதற்காக ரஷ்யா செய்த சூழ்ச்சியின்
விளைவுதான் முதல் மகாயுத்தம்.
ரஷ்யா கம்யூனிஸ்டு நாடாக மாறுததற்கு வெகு காலத்
திற்கு முன்பே, பிறர் புரிந்துகொள்ள முடியாத உயர்பணிக்
காகத் தோன்றிய நாடு என்று கருத ஆரம்பித்துவிட்டது.
ரஷ்யத் தாய்நாடும் அதன் புனித மதஸ்தாபனமும்
ஏசுநாதரின் சின்னங்களை மாசுபடியாமல் பரிசுத்தமாக
வைத்திருக்கப் பாடுபட்டு வருகின்றன என்பதை லட்சக்
கணக்கான மக்கள் நம்புகின்றனர், என டாஸ்டாவ்ஸ்கி
(Dostoyeusky) கூறினுர். ரஷ்ய நட்சத்திரம் உச்ச நிலைக்கு
உயரும். தங்களது நாட்டை வேகமாக ஓடும் குதிரை பூட்
டிய வண்டிக்கு ஒப்பிட்டு, அதற்கு வழிவிடுவதற்கு உலக
மக்கள் இருமருங்கிலும் பணிவுடன் ஒதுங்கி நிற்கின்றனர்
எனவும், பல 19-வது நூற்றுண்டு ரஷ்ய ஆசிரியர்கள் எழு
தினர்.
ஆனுல் இந்த அதிநம்பிக்கை வாய்ந்த கருத்தை டாஸ்
டாவ்ஸ்கி ஏற்கவில்லை. 1849-இல் இந்தப் புகழ் பெற்ற நாவலா
சிரியர் சைபீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டார். 1848-ஆம்
ஆண்டு நிகழ்ச்சிகளாலும், ஐரோப்பியக் கருத்துக்களாலும்
தூண்டப்பட்டு புரட்சிச் சதிகளில் ஈடுபட்டார் என இவர்
மீது குற்றஞ்சாட்டப்பட்டது. சைபீரிய பாலைவன வாழ்வின்
மனவேதனையால் அரசியல் கதிமோட்சம் தனது நாட்டிற்
குண்டு எனும் நம்பிக்கையை இவர் இழந்துவிட்டார்.
இம்மாதிரி தேசப்பிரஷ்டத்திலிருந்து மற்றும் பலர்
தங்களது புரட்சி ஆர்வம் தீட்சண்யம் பெற்றுத் திரும்பி
வந்தனர். ''ஜாரின் ஆட்சிமுறை தலைகீழாகிவிடக்கூடாதே''
என டாஸ்டாவ்ஸ்கி அஞ்சியபடியே செயல்கள் நிகழ்ந்தன.
ஆனுல் ஜாருக்குப் பதிலாக கம்யூனிஸ்ட் சர்வாதிகார ஆதிக்
கம் ஏற்படுமுன் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. பல எண்ணங்
கள் துளிர்விட்டன. பல மனிதர்கள் தோன்றினுர்கள்.

## அத்தியாயம்—4

# மார்க்ஸ் ஒரு கோட்பாட்டை அளிக்கிருர்

**தா**டி வளர்த்துக் கொண்டிருந்தார்: தலைமயிரைச் சீர் செய்துகொள்ளுவதில்லை; லண்டனில் சேரிப்பகுதியில் வசித்தவர்: தனது தாய்நாடான ஜெர்மனியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டவர். பிரிட்டிஷ் 'லிபரல்' பத்திரிகைக்கு அயல் நாட்டு விவகாரங்களைப் பற்றி விமர்சனம் செய்து, அற்ப ஊதியம் பெற்று வாழ்ந்தவர். அவரைப்பார்த்தால் இப்பேர்ப்பட்டவரா புரட்சி விளைவிக்கக்கூடியவர் என்று சந்தேகிக்கத் தோன்றும். நாள் தவருமல், இவர் இருளடைந்த பிரிட்டிஷ் மியூசியத்திற்குச் சென்று வந்தார். அங்கே புத்தகங்களையும், துண்டுப் பிரசுரங்களையும் கிளறி, தமது புரட்சிக் கொள்கைகளை சீராகவும் விவரமாகவும் வகுக்கக் கஷ்டப்பட்டு உழைத்தார்.

பலாத்காரப் புரட்சியை ஆதரித்து, அதற்காக மக்களைத் திரட்டினர் என்பதற்காகவோ, அல்லது அவருடைய பெயரை வைத்துக்கொண்டு மக்கள் புரட்சி செய்து வெற்றி பெற்றனர் என்பதற்காகவோ மட்டும் கார்ல் மார்க்ஸைப் புரட்சியாளர் என அழைக்கவில்லை. அவருக்குப் பின்னர் அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஈடுபட்டோரது சிந்தனையை அவரது எழுத்துக்கள் ஆழ்ந்த முறையில் பக்குவப்படுத்தின என்பதனால்தான் அவரைப் புரட்சியாளர் என்று மதிக்கவேண்டும். உலகத்தில் பாதிக்கு மேற்பட்ட நாடுகளிலுள்ள படித்தவர்கள் கூடுதலாகவோ, குறைவாகவோ அவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுகின்றனர். தற்கால சரித்திரத்தை உருவகப்படுத்திவரும் அடிப்படைச் சக்திகளைச் சமாளிக்க வேண்டுமெனில் இந்தக் குறிப்பிடத்தக்க மனிதரையும், அவரது கோட்பாடுகளையும் பற்றி ஓரளவாவது தெரிந்துகொள்ள வேண்டும்.

மார்க்ஸின் சிந்தனை, சக்தி வாய்ந்தது. அதற்கு முக்கிய காரணம், தன்னைச்சுற்றியுள்ளோர் வாழ்க்கையை நுட்பமாக அவர் கவனித்ததுதான். ஆனால் அவரது கவனிப்பு குறுகிய அளவில்தான் சென்றது. பார்ப்பதற்கு வேண்டிய அவகாசம், பார்க்கவேண்டிய இடம். பார்ப்பதற்கேற்ற மனப்பான்மை எல்லாம் ஏற்றபடி அமைந்தபோதுதான் அவர் கவனிக்க முடிந்தது:



யந்திரப் புரட்சி* நிகழ்ந்த மிகப் பயங்கர நாட்களில்
பார்த்தோருடைய மனத்தை துன்புறுத்தும் உண்மை
களையே அவர் கண்டார். லண்டன் சேரிகளில் அவருக்கு
அருகாமையில் வாழ்ந்தவர்கள் மிகவும் சொற்பமான
கூலியைக்கொண்டே பிழைத்தனர்; பொந்துகள் போன்ற
இடங்களில் நெருக்கமாக வாழ்ந்தனர்; களைத்துவிழும் வரை
யில் உழைத்தவர். இதையெல்லாம் அவர் கண்டார். நிர்ப்பந்
தத்தின் மீது விரைவதுபோல், விரிவடையும் ஒரு பொரு
ளாதார அமைப்பு மனிதனை மிருகமாக்குவதைப் பார்த்
தார். அவர்கள் வேலைசெய்யும் ஆலைகளின் உரிமையாளர்
களே தங்களை ஆளும் ஆட்சியை ஆட்டிவைப்பவர்கள்;
இவர்களது சக்திக்கு எதிராக ஆலைகளில் வேலை செய்யும்
மக்களின் பீதியையும், நிராதரவான தன்மையையும்,
வேர் அற்ற மரம் போன்ற வாழ்வையும், அவர் கவனித்தார்.

இதே நிலை ரஷ்யாவில் இன்னும் அரை நூற்றுண்டிக்
குப்பின் நிலவப்போவதைக் காணலாம். விவசாய நாகட்
லிருந்து ஆலைத்தொழில் நாடாக மாறும் கஷ்டமான கட
டத்தைத்தாண்டும் பெரும்பாலான நாடுகளில் ஏறக்குறைய
இதே நிலை நிலவலாம். மனிதர் படும் இம்மாதிரியான கஷ்
டங்களைச் சாமர்த்தியமாகவும், அநுதாபத்துடனும் ஆராய்
வதன் மூலமும் இவைகளைச் சமாளிக்க அவர்களுக்கு, தாம்
வழி காட்டுவதாகச் சொல்லியும், மார்க்ஸ் தமது கொள்
கையின் கவர்ச்சி நீடித்த பயனளிப்பதற்கு வகை செய்தார்.

மார்க்ஸிஸம் என்பது வளர்ந்து வரும் ஆலைத் தொழி
லின் அக்கிரமங்களை எதிர்த்தெழும் கண்டனக் குரல் மட்டு
மல்ல, குறைகளுக்கு சோஷலிஸ முறையில் பரிகாரம்
காண்பது மட்டுமல்ல, மார்க்ஸிஸம் இவைகளுக்கெல்லாம்
மேம்பட்டது. ராபர்ட் ஓவென் (Robert Owen) † என்பவரும்
அவருக்குப்பின் தோன்றிய பல ஆங்கில, ஃபிரஞ்சு தத்து
வாசிரியர்களும், இதே கண்டனங்களையும், பரிகாரங்களையும்
வெளியிட்டுள்ளனர். ஆலை முதலாளிகளையும், அதிகாரம்
வகிப்பவர்களையும் தங்களது தனி உரிமைகளைப் பிறருடன்
பகிர்ந்துகொள்ளும்படி வேண்டுவது கனவு காண்பதற்
கொப்பாகும் என மார்க்ஸ் கருதினர். தனிப்பட்டோர்

* யந்திரப் புரட்சி :—(Industrial Revolution) கையால் செய்த தொழில்
களை யந்திரங்கள் மூலம் செய்ய முனைந்தவுடன் ஆலைத்தொழிலில் ஈடுபட்ட
பாட்டாளி மக்கள் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டதுடன், கிராமங்களி
லிருந்து நகரங்களுக்கு மக்கள் குடியேறியதனுல் சமூக வாழ்க்கையில் ஏற்
பட்ட சங்கடங்களைத்தான் குறிக்கிறது யந்திரப் புரட்சி.

† ராபர்ட் ஓவன்:—(Robert Owen) 1936-45 இல் அமெரிக்க பிரதம நீதி
பதிகளில் ஒருவராயிருந்தவர். 1941இல் பேர்ல் துறைமுகத் தாக்குதல் பற்றி
விசாரிக்க நியமிக்கப்பட்டவர்.

சிலர் தியாக உணர்வுள்ளவர்களாயிருக்கலாம்; ஆனால் ஒரு
வகுப்பினரே தன்னலமற்றவர்களாயிருப்பர் என எதிர்
பார்க்க முடியாது என அவர் கூறினார்.

வாழ்க்கையில் படிப்படியான வளர்ச்சியே ஏற்படுகிறது
என டார்வின் கருதிய மாதிரி பொருளாதார வளர்ச்சியி
லும், இதே மாதிரி ஒரு சக்தி துலங்குகிறது என்பதை
மார்க்ஸ் கண்டார். இதிலிருந்து சம்பவங்கள் எப்படி நிக
ழும் என்பதைப் பொதுப்படையாக முன்கூட்டி அறிந்து கூற
முடியும் என அவர் கருதினார்.

ஜெர்மன் தத்துவ ஆசிரியர் ஹெகல் (Hegel) என்ப
வரது கொள்கைகள் பொருத்தமானவை என்று மார்க்ஸுக்
குத் தோன்றிற்று. ஹெகலின் கொள்கை வருமாறு: சரித்
திரத்தில் ஒவ்வொரு சிறந்த கருத்தும், அதற்கு எதிரிடை
யான கருத்தைத் தோற்றுவிக்கிறது. இவ்விரு கருத்துக்களும்
எதிராடி இணைந்து ஒரு உடன்பாட்டுக் கருத்தாகிறது; ஒரு
புதிய வாதமாகிறது. இதுவே முந்தியதைவிடத் தெளிவாகப்
பூர்ணமானதாக அமைந்துவிடுகிறது. இந்த மாற்றத்திற்
குத்தான் ஹெகல் தர்க்கவாத முறை (Dialectic) எனப்
பெயர் சூட்டினார்.

ஹெகலின் கொள்கைகளைத் தாம் தோற்கடித்துவிட்ட
தாகப் பின்னர் மார்க்ஸ் மார்தட்டிக்கொண்டார். கொள்
கைப் போட்டியின் விளைவாகவே சரித்திரம் உருவகமாகிறது
என்பதற்குப் பதிலாகச் சமூகத்தில் பொருளாதாரச் சக்திகள்
இடம் மாறுவதால் சரித்திரம் உருப்பெருகிறது என மார்க்ஸ்
கருதினார்.

இவ்வாறு ஒவ்வொரு பொருளாதார வகுப்பிற்குள்
ளேயே, "நேர்மாறான இயல்புகள்" அடங்கியிருக்கின்றன
என மார்க்ஸ் கூறினார். உற்பத்திச் சாதனங்கள் மாறமாற
தொழில் நுட்பங்களும் சீர்திருந்தின. இதன் விளைவாக ஒரு
புதிய பொருளாதாரவர்க்கம் உருப்பெற்றது. இவ்வர்க்கம்
பெருகி கிடைக்கக்கூடிய லாபத்தில், கூடுதலான பங்கு
கேட்டனர். பழைய ஆட்சியினர், இந்தக் கோரிக்கையை
எதிர்த்தனர். இந்த எதிர்ப்புக்கு அரசாங்க உத்தியோகங்
களையும், அதிகாரத்தையும் பயன்படுத்தினர். பலாத்
காரத்தைப் பிரயோகம் செய்தனர். புதிய சந்தர்ப்பங்களுக்
கேற்றபடி புதிய உபாயங்களைக் கையாளும் இந்தமுறையைக்
கனவு காணும் சோஷலிஸ்டுகள் புரிந்துகொள்ளவில்லை என
மார்க்ஸ் வாதம் செய்தார்.

முக்கியமாக பலாத்காரத்தின் மூலமே ஒரு பொருளாதார
வர்க்கம் தனது நலன்களைப் பாதுகாக்க முடியும் எனலாம்.
ஒவ்வொரு புதிய பொருளாதார முறை தோன்றும்



காலத்திலும் பலாத்காரப் புரட்சி அது தோன்று
வதற்கு உதவி புரிந்திருக்கிறது. புதிய வர்க்கம் தோன்றி
யதும், அதற்கு எதிர்ப்பு, எதிர்ப்பை அடக்கியதும் மற்று
மோர் வர்க்கம்—இதேமாதிரிச் சக்கரம் சுழன்றுகொண்டே
வருகிறது.

இந்த முறைக்குச் சிறந்த உதாரணத்தை மேற்கத்தி
வரலாற்றில் நிலப்பிரபுத்வ முறை முதலாளித்துவ சமூக
மாக மாறுகையில் கண்டோம். இந்த மாறுதல், உலகில்
பல பாகங்களில் இன்னும் முடிவடையவில்லை. நமது வாழ்
நாளிலேயே அது இன்னும் பூர்த்தியாகவில்லை யெனில்
மார்க்ஸ் காலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.
நிலப்பிரபுத்துவ முறையில் இன்றுபோல் அன்றும் பொருளா
தார யந்திரம் விவசாய உற்பத்தியென்னும் அச்சின்மீதே ஓடி
வந்தது. ஆகையால் மார்க்ஸிற்கு உற்பத்தி சாதனங்களின்
உரிமை யாளர்களாகிய நிலப்பிரபுக்களே ஆட்சி வர்க்கத்
தினர்.

நிலப்பிரபுத்துவத்தின் சமூக, அரசியல் அமைப்புக்கு
ஒரே ஒரு தலையாய குறிக்கோள் உண்டு என்று மார்க்ஸ்
கூறினார். உழவனை அவன் பயிர் செய்யும் நிலத்தின்
அடிமையாக்கி அதன் மூலம், அதற்குடையவர்களாகிய ஒரு
சிலரது நலனுக்கு பயன்படச் செய்வதே அந்தக் குறிக்கோள்.
இதிலிருந்து முரண்பாடுகள் தோன்றுவது இயல்பே
யாகும். சீரான போக்குவரத்துச் சாதனங்கள் ஏற்பட்டன;
வர்த்தகம் பெருகிற்று; படிப்படியாக விவசாயத்தின் மூலம்
தானியங்கள் உபரியாக உற்பத்தியாயின. நிலத்தைக்
கொண்டு சுக வாழ்வுக்கான பொருள்களை வாங்கவோ, ராணு
வத்தைப் பராமரித்துவிடவோ முடியாது. ஆகையால் பணத்
திற்குத் தேவை ஏற்பட்டது. இம்மாதிரி காரணங்களால்
நாளடைவில் நகரங்கள் தோன்றின; அங்கே புது வகை வர்த்
தகர்கள் தோன்றினர்; மேலும் பிற தொழில் திறனுள்ள
வர்கள், பணம் கடன் கொடுப்பவர்கள் தோன்றினர்.

இந்தப் புதிய வர்க்கத்தினர்-பூர்ஷ்வாக்கள்-புதிய உற்
பத்தி சாதனங்களான மூலதனத்தையும், தொழிற் பட்டறை
களையும் நிர்வகித்தனர். இந்தப் புது வகுப்பினரின் அக்
கறைகள் நிலவுடைமை அடிப்படையில் துவங்கிய பழைய
சமூக, அரசியல் அமைப்புக்கு மாறுபட்டதாயிருந்தது எனச்
சொல்லத் தேவையில்லை.

ஒழுங்கும் நிலையான வாழ்வும், குடியானவனுக்கும் தனக்
கும் உள்ள தற்கால உறவு நீடிப்பதுமே, நிலச்சுவான்தார்
விரும்புவது. இது தவிர, இம்மாதிரி வாழ்க்கை முறையைப்
பேணி வரும் நிலப்பிரபு-பணப்பிரபுக்களது ஆதிக்கம் செலுத்
தும் வகையில் இருக்கும் ஒரு அரசியல் ஏற்பாடு நீடிக்க

வேண்டும் என்று விரும்பினுன். புதிய பூர்ஷ்வா தனக்கு
இஷ்டமான உழைப்பாளிகளே அமர்த்திக்கொண்டு தன்னிஷ்
டப்படி வர்த்தகம் செய்யும் உரிமை வேண்டும் என வற்
புறுத்தினுன். இந்த நோக்கங்கள் நிறைவேறுவதற்காக
அவன் முதலில் பிரபுக்களுக்கெதிராக அரசனே ஆதரித்தான்.
அடுத்தபடியாக அரசனுக்கு எதிராக அரசாங்கத்தை நடத்து
வதில் பங்கு வேண்டும் எனக் கோரினுன். பிரபுக்களேவிட
நகர மக்கள் எண்ணிக்கை கூடுதலாக இருந்ததனுல், இறுதி
யில் 'ஜனநாயக பிரதிநிதித்துவ ஆட்சி அடிப்படையில்' தங்
களது அரசியல் கோரிக்கைகளே வகுப்பதனுல் நகர மக்களுக்கு
நன்மையே ஏற்படும். இதன் மூலம் தங்கள் இயக்கத்திற்குப்
பிற வகுப்பினரின் ஆதரவைப் பெற முடியும்.

மேலே கூறப்பட்ட இயக்கத்தின் தவிர்க்க முடியாத
விளேவாக பிரபுத்வ சமூக அமைப்பு பூர்ஷ்வாக்களால் பலாத்
காரமாக வீழ்த்தப்பட்டது என்று மார்க்ஸ் கருதினுர்.
இதற்குச் சிறந்த உதாரணமாக அவர், ஃபிரஞ்சுப் புரட்சி
யைச் சுட்டிக் காட்டினுர். மார்க்ஸிய ஆராய்ச்சிப்படி இந்தப்
புதிய விளேவு நிலேயாயிருக்கவில்லே. உடனேயே அதற்
குள்ளேயே முரண்பாடுகள் தோன்றின. வாதமும் எதிர்
வாதமும், ஒன்று வெற்றி பெறுவதும், மற்றென்று தோல்வி
யுறுவதுமாகச் சக்கரம் சுழன்றுகொண்டே வந்தது.

உதாரணமாக யந்திரப் புரட்சிக்குக் காரணமாயிருந்த
பொருளாதார சக்திகளே எடுத்துக்கொள்ளுவோம். யந்திரப்
பொருளாதார முறை நல்ல முறையில் பயனளிக்கவேண்டு
மானுல், மேலும் மேலும் பெரிய பெரிய ஆலேகளே அமைக்க
வேண்டும். ஆலேகள் அமைக்க ஏராளமான மூலதனம்
வேண்டும். மூலதனம் உடையவர்களிற் சிலர் புதிய ஆட்சி
வர்க்கத்தாராயினர். சமூகத்தின் இந்தப் புதிய பொருளா
தாரப் பாணி தனக்கே அழிவு தேடிக்கொண்டது என்று கூற
லாம். ஏனெனில் முதலாளிகளுக்கெதிராக ஆலேத் தொழி
லாளிகள் எண் ணிக்கைப் பெருகியது.

மேற்கத்தி ஐரோப்பாவில் 19-வது நூற்றுண்டு யந்திரங்
களின் கோரப் பசிக்கு, இந்தப் பெருகிவரும் தொழிலாளர் கூட்
டம் இரையாகி வந்ததை மார்க்ஸ் கவனித்தார். நிலவுடைமை
யற்ற இந்த உழைப்பாளிகளே-பாட்டாளி மக்களே-லாபம் ஒன்
றையே குறியாகக்கொண்ட புதிய மூலதன உரிமையாளர்கள்
உறிஞ்சிப் பிழைப்பர் என்ற நம்பிக்கையுடன் மார்க்ஸ்
முன்கூட்டியே கூறி வந்தார். தொழிற் பெருக்கம் நாளாவட்
டத்தில் சிலருடைய ஏகபோக உரிமையாகிவிடும் என்றும்,
மிகவும் குறைந்தபட்சத் தேவையான அளவுக்குக் கூலி
குறைந்துவிடும் என்றும் மார்க்ஸ் வகுத்திருந்த அடிப்படை



பொருளாதார ஜோஸ்யம் பிரிட்டனில்
யான அவரது பொருளாதார ஜோஸ்யம் பிரிட்டனில்
19-வது நூற்றுண்டிலேயே பொய்த்துப் போய்விட்டது.
சிறிய வியாபாரிகள், ஒருங்கே திரண்டு நிற்கும் முத
லாளியின் பொருளாதாரச் சக்தியை எதிர்த்து நிற்க முடியா
மல், தங்களது வியாபாரத்தை விட்டுவிட்டு, பாட்டாளி
களுடன் சேர்ந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.
நாளாவட்டத்தில் பகைமை பூண்டு இரு கூறுகச் சமுதாயம்
பிரிந்து நிற்கும். அப்போது கொடுமைக்குள்ளான பாட்
டாளிகள் அவர்களேக் கொடுமைப்படுத்தும் முதலாளிகளே
எதிர்த்து நிற்பர்.

பாட்டாளிகளிடையே எதிர்ப்பு உணர்ச்சி பெருகப்
பெருக அரசியல் அமைப்பில் தங்களுக்குள்ள ஆதிக்கத்தைப்
பயன்படுத்தி அவர்களே ஒடுக்க முதலாளிகள் முற்படுவார்கள்
என்று மார்க்ஸ் திட்டமாகக் கூறுகிறுர். அவர்களே
ஒடுக்குவதில் அமைதியான முறைகள் பயன்படாவிட்டால்
அதிகாரத்தின் முக்கிய ஆயுதங்களாகிய ராணுவத்தையும்,
போலீசையும் உபயோகிக்கும் நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்
படும். இதற்கு எதிரிடையாகப் பாட்டாளிகள் வெற்றி
முழக்கத்துடன் பலாத்காரத்தில் இறங்குவார்கள். தங்கள்
உரிமைகளேப் பறிமுதல் செய்தவர்களின் உடைமைகளேப்
பறிமுதல் செய்வார்கள். கடைசியாகப் பாட்டாளி மக்கள்
தங்களது எதேச்சாதிகாரத்தை நிலேநாட்டுவார்கள். இந்த
ஆட்சியில் தொழிலாளர்கள் சார்பாக உற்பத்திச் சாதனங்கள்
அரசாங்கத்தின் உடைமைகளாக நிர்வகிக்கப்படும்.

முந்திய புரட்சிகள் போன்றல்லாது, இந்தப் புரட்சி
யின் விளேவாக "பாட்டாளி மக்கள்" என்ற ஒருவர்க்கம்
மட்டுமே எஞ்சி நிற்கும். மற்ற வர்க்கங்கள் யாவும் அழிக்
கப்பட்டுவிடும். அரசாங்கமே வர்க்க ஆட்சியின் கருவியாக
மாறிவிடும். ஆகையால் அம்மாதிரி ஆட்சிக்கு அவசியமில்
லாமல் போய் லெனின் கூறியதுபோல "அது நலிவுற்று
மறைந்து போகும்". இவைகளின் பயனுகக் கடைசியில்
வர்க்கபேத மற்ற கம்யூனிஸ்ட் சமூகம் உதயமாகும். இந்த
உதயம் மார்க்ஸின் சமூக வளர்ச்சி அல்லது மாறுதல் பற்றிய
கோட்பாட்டுக்கு நிலேயானதொரு வெற்றியாகும்.

1848-ஆம் ஆண்டு, பிப்ரவரியில் ஐரோப்பாவெங்கும்
பரவியிருந்த முதற் புரட்சி ஜெர்மனியிலும், ஃபிரான்ஸிலும்
கூட நிகழ்ந்தது. அந்த மாதத்திலேயே கார்ல் மார்க்ஸின்
கம்யூனிஸ்ட் பிரகடனம், (Communist Manifesto) வெளி
வந்தது. இதைப் புரட்சி விளேவிக்கும் பிரசுரங்களிலே
தலே சிறந்தது என்றுகூடக் கூறலாம். இந்தப் பிரசுரத்தில்
தனது கோட்பாட்டை அவர் விவரமாக விளக்கி எழுதியிருந்
தார். இதன் இறுதியில் அபாய அறிவிப்பு போன்ற பின்வரும்

வாசகங்கள் காணப்படுகின்றன. ''தற்போதுள்ள சமூகச் சூழ்
நிலைகளை நிர்ப்பந்தமாகக் கவிழ்த்தால்தான், தங்களது
லட்சியம் கைகூடும் எனக் கம்யூனிஸ்டுகள் பகிரங்கமாக அறிவிக்
கின்றனர். கம்யூனிஸ்ட் புரட்சியைக் கண்டு ஆட்சி வர்க்கத்
தினர் நடுநடுங்கட்டும். இந்தப் புரட்சி மூலம் பாட்டாளி
மக்கள் தங்களது விலங்குகளைத் தவிர இழப்பதற்கு ஒன்று
மில்லை, உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்.''

மக்களை உலகப் புரட்சிக்கு இந்தப் பிரசுரம் பகிரங்க
மாக அழைத்தது. ''ஒவ்வொரு நாட்டுத் தொழிலாளர்
களும் முதன்முதலில் தங்கள் நாட்டு பூர்ஷ்வாக்களிடம்
தங்களுக்குள்ள குறைபாடுகளைத் தீர்த்துக்கொள்ளவேண்
டும்.'' இவ்வாறு மார்க்ஸ் பிரகடனம் ஒப்புக்கொண்டது.
மேல் பார்வைக்கு இது தேசியப் போராட்டம்போல்
தோன்றினாலும், உண்மையில் சர்வதேச வியாபகம்
வாய்ந்தது. பாட்டாளிகளுக்கு தங்கள் நாடு என ஒன்றும்
கிடையாது எனப் பிரகடனம் பறைசாற்றியது. 19-வது
நூற்றாண்டில் நிலவிய தேசிய அரசாங்கங்கள் யாவும் முத
லாளிக் கொடுங்கோன்மைக்கான சாதனங்கள், வெற்றி
கொண்ட புதுப் பாட்டாளி வர்க்கம் அவைகளில் எதற்கும்
விசுவாசமாயிருக்காது.

ஆனால் இதற்கு நேர்மாறாக, வர்க்க நலனும் அநு
தாபமும் பிறநாட்டுப் பாட்டாளிகளுடன் ஒன்றுபட வழி
காட்டும். பாட்டாளி மக்களின் பொது எதிரிகளான அந்த
நாட்டு முதலாளித்வ ஆட்சிகளின் மீதுள்ள வெறுப்பு இந்
தப் பிணைப்புக்குத் துணை புரியும். புரட்சிக்குக் காரணமா
யிருந்த பொருளாதார நிலை உலகெங்கும் வியாபித்தி
ருந்ததுபோல், அந்த நிலையைச் சீர்ப்படுத்துவதற்கான பரி
கார முறையும் உலகம் பூராவிற்கும் பொருந்துவதாயிருக்க
வேண்டும். இறுதியில் புரட்சியின் வெற்றி உலகெலாம்
வர்க்க பேதமற்ற சமூகம் அமையவும், நேர்மையுடன் நிர்
வகிக்கப்படும் உலகப் பொருளாதார முறையை அமைக்கவும்
உதவி புரியும்.

தேசிய மயமாகவுள்ள இந்த மார்க்ஸியப் பரிகாரங்கள்
மார்க்ஸின் பிரகடனத்திற்குச் சற்றுக் கூடுதலான ஆதரவு
கிடைக்கக் காரணமாயிருந்தன. இந்தப் பிரகடனத்தை
ஃபிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய
நாடுகளிலிருந்து வந்த சர்வதேசச்சிறப்பு வாய்ந்த சில பிரதி
நிதிகள்தான் அங்குரார்ப்பணம் செய்தனர். இதற்குப்
பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்புதான் மார்க்ஸ் சர்வ
தேசப் பாட்டாளி மக்கள் சங்கத்தை-அதாவது முதல்
இன்டர்நேஷனல் (First International) ஸ்தாபித்தார்.



அவருடன் ஒத்துழைத்த 'எங்கல்ஸ் (Engels) இன் வியாக்யா
னப்படி இந்தச் சங்கத்தின் நோக்கம், ''போர்த் துடிப்பு
வாய்ந்த ஐரோப்பிய அமெரிக்கப் பாட்டாளி மக்கள்
யாவரையும் ஒருங்கே பிணைப்பது'' தான்.
எதிர்காலத்தைப் பற்றி வியக்தமாகக் கூறாமல்,
போனது மார்க்ஸுக்கு சௌகரியமாகப் போய்விட்டது.
போராட்டத்தின் போக்கையும், முறையையும் பற்றி அவர்
கவலை கொண்டாரேயொழிய எதிர்காலக் கம்யூனிஸ்ட் சமூக
அமைப்பைப் பற்றி அவர் அக்கறை கொள்ளவில்லை. சோஷ
ளிஸத்திற்காகப் போராடும்படி மார்க்ஸ் தனது சிஷ்யர்
களைத் தூண்டினார், தட்டிக்கொடுத்தார், ஒன்று திரட்டி
னார். ஆனால் அதே சமயத்தில் சோஷலிஸம் வருவதைத்
தவிர்க்கமுடியாது என்று நிருபணம் செய்யவும் முயன்றார்.
நிச்சயம் கைகூடப்போகும் ஒரு காரியத்திற்காக உழைப்ப
திலும், தியாகம் செய்வதிலும் என்ன பயன் என்பதுதான்
மார்க்ஸிய சித்தாந்தங்களைப் படிப்போர் மனத்தில் எழக்
கூடிய சந்தேகம்.
இந்தத் தெளிவற்ற தன்மையே மார்க்ஸின் சித்தாந்தத்
திற்கு ஆதரவைத் தேடித் தருகிறது என்பது புதிர்போன்றி
ருந்தாலும், உண்மை. அநேக அறிவாளிகளும், இலட்சி
யத்தில் ஆர்வமுள்ளவர்களும் இந்தச் சித்தாந்தத்தில் பல
உயர்தர சன்மார்க்கக் குறிக்கோள்கள் புதைந்து கிடப்ப
தாக எண்ணி மகிழ்ந்தனர். இதே சமயத்தில் மனத்
தளர்ச்சியடைந்த புரட்சியாளர்கள் சரித்திரப்போக்கு தங்
களுக்குச் சாதகமாகவே இருக்கிறது என்று ஆறுதல்
அடைந்தனர்.
புரட்சி நிகழ்ந்தே தீரும் எனும் கொள்கை, ''முடிவு
முக்கியமேயொழிய மார்க்கத்தைப் பற்றிக் கவலைப்பட
வேண்டிய அவசியமில்லை'' என்கிற கம்யூனிஸ்ட் போக்குக்கு
ஏற்றதாயிருந்தது. இறுதி முடிவு பற்றி சந்தேகமே இல்லை
யாதலால், தீவிர கம்யூனிஸ்ட் ஒருவர் தாம் கையாளும்
முறைகள் நல்லவையா தீயவையா என்பதில் அவ்வளவாக
அக்கறை கொள்ளுவதில்லை.
ஜனநாயக சோஷலிஸ்டு
கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்கள், கட்சியைச் சேர்ந்தவர்களில் பெருவாரியானவர்கள் தங்களை
மார்க்ஸிஸ்டுகள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர்
களது விசேஷமான நோக்கம் கம்யூனிஸமா, தற்கால
முறையா என்று நிர்ணயிக்கவேண்டிய அவசியம் இல்லை
என்பதுதான். இந்தக் கூற்று முரண்பாடானது என்று
யாராவது நினைப்பார்களானால், அவர் மார்க்ஸிஸ்ட்
அல்ல என மார்க்ஸே ஒரு சமயம் கூறினார். தங்களது
குருநாதர் கோட்பாடுகளைப் பற்றி தங்களிஷ்டப்படி வியாக்

கியானம் செய்ய தங்களுக்கு மட்டுமே உரிமையுண்டு என்று
கம்யூனிஸ்டுகள் கருதினர்.
மார்க்ஸ் தமது கொள்கைகளை வகுத்த பிறகு அவருடைய
சித்தாந்தத்தின் பல்வேறு அம்சங்களை அவருடைய சீடர்கள்
தத்தம் இஷ்டப்படி வலியுறுத்தி வருகின்றனர். இதன் விளைவு
களும் பல்வகைப்பட்டவை. பலாத்காரமாக மாறுதல் செய்
யும் கோட்பாட்டை மறுத்த ஜனநாயக சோஷலிஸம் மேற்கு
ஐரோப்பிய தொழிலாள இயக்கத்திற்கு அடிப்படைக்
கோட்பாடாக அமைந்தது. இதன் நற்பலன் அமெரிக்க
அரசியலையும் பாதித்தது. இந்த விஷயத்தைப் பின்வரும்
அத்தியாயம் ஒன்றில் மீண்டும் கவனிப்போம்.

## அத்தியாயம்—5

# தீப்பொறி லெனின் கைப்பட்டு ஜ்வாலையாகிறது

சதி செய்யும் சூழ்நிலை படர்ந்திருந்த பத்தொன்பதா
வது நூற்றாண்டு ரஷ்யாவைப் பற்றிப் போதிய அளவு அறிந்
திருக்கிறோம். இதிலிருந்து மார்க்ஸியக் கொள்கைக்கு தீவிர
மற்ற நிதானமான முறையில், எதுவும் ஒன்றிலிருந்து மற்
றொன்று படிப்படியாக வளர்கிறது என்கிற கொள்கை
அடிப்படையில் வியாக்யானம் கூறுவது பொருந்தாது
என்று திட்டமாகக் கூறலாம்.

187் அல்லது 1880-ஆம் ஆண்டு வாக்கில் பொறுக்கி
யெடுத்த சில பயங்கர வாதிகள், இரக்கமற்ற ஜார் ஆட்சி
யின் அடக்குமுறை அட்டகாசத்தை எதிர்த்து ஆட்சியை
ஸ்தம்பிக்கச் செய்தனர். 1881-இல் பல உயர்தர அரசாங்க
அதிகாரிகளையும், ஜார் மன்னன் இரண்டாவது அலெக்
ஸாண்டரையும் கொன்றொழித்தனர். ஆனால் ஜார் மன்ன
னின் ஆட்சி யந்திரம் கருணையின்றிப் பல்லாண்டுகள்
செயல்புரிந்தே வந்தது. பயங்கரவாதிகள் ஒவ்வொருவ
ராகத் தூக்கிலிடப்பட்டனர். இப்படி உயிரிழந்தவர்களில்
லெனின் தமையனார் 21 வயதான அலெக்ஸாண்டர்
உலியனூவ் (Alexander ulianov) என்பவரும் ஒருவர்.



மார்க்ஸின் சித்தாந்தம் ரஷ்யாவில் தோன்றிய காலம்
கவனிக்கத்தக்கது. ஆழ்ந்த கருத்துக்களோ, திட்டங்களோ
யின்றி, தான்தோன்றித்தனமாகப் பயங்கரச் செயல் புரி
வதில் பயனில்லையென்ற உணர்வு தலைமறைவுப் புரட்சி
வாதிகளிடையே உச்ச நிலையிலிருந்தது. மற்றொருபுறம்
டால்ஸ்டாய் (Tolstoy) மாதிரிக் கிறிஸ்தவ மதப்பற்றுள்ள,
சமாதான ஆர்வம் கொண்டவர்கள் புதிய ஜனநாயக
முறையில் வேண்டுகோள் விடுத்தது பயனற்றது என்னும்
உணர்வும் ஏற்பட்டிருந்தது.
இந்த நிலையில் இதற்கு மார்க்ஸிஸ்டுகள்தான் அநு
பவசாத்தியமான பரிகாரம் காண முடியும் என்று தோன்
றிற்று. பாட்டாளிகளிடையே ஒரு கிளர்ச்சி இயக்கத்தைத்
தூண்டக்கூடிய முறையில், சாதுர்யமாகக் கருத்துக்கள்
வகுத்துக் கூறப்பட்டன. கட்டுப்பாடுமிக்க, ஸ்தாபன
ரீதியில் ஒன்றுபட்ட, இலட்சிய ஆர்வம் உருவேற்றப்பட்ட
கோஷ்டிகள் இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் செயல்
புரிய வேண்டும். ஆலைத் தொழிலாளிகளிடையே இடை
விடாது பிரசாரம் செய்து மக்கள் கிளர்ந்தெழ வேண்டி
யதன் அவசியத்தையும், உரிய காலத்தில் அந்த எழுச்சி
நிகழ்வதற்கு எந்தெந்த முறைகளை மக்கள் கையாளவேண்
டும் என்பதையும் போதிக்க வேண்டியதுதான் பின்கூறப்
பட்ட இலட்சிய ஆர்வமுள்ளவர்கள் வேலை.
மற்றெல்லாப் புரட்சி வீரர்களையும் விட லெனின்,
புரட்சிக்கான சந்தர்ப்பத்தைத் தெளிவாகத் தெரிந்து
கொண்டிருந்தார். 1895-இல் அவருடைய இருபத்தி ஏழாவது
வயதில் அவர் சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். "பாட்
டாளி மக்களின் விடுதலைச் சங்கம்" என செயிண்ட் பீட்
டர்ஸ்பர்க்கில் ஒரு ஸ்தாபனம் அமைத்தார் என்பதே அவ
ருக்கு தண்டனை விதிக்கப்பட்டதற்கு காரணம். அங்கே
யிருந்த ஐந்து ஆண்டுகளில் மார்க்ஸிய இதிகாசங்களை நன்கு
ஆராய்ந்து கிரகித்துக்கொள்ள அவருக்கு அவகாசம் இருந்
தது. இதன் விளைவாகவே அவரது சிறப்பு வாய்ந்த
"ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி" எனும்
நூல் தோன்றியதுடன், எதிர்காலத்தில் செயல் புரியவும்
அவரைத் தகுதி வாய்ந்தவராகச் செய்தது.
தலைமறைவுப் புரட்சிச் சூழ்நிலையில் வளர்ந்து, ஆனால்
வறட்டு பயங்கரத்தினால் விளையக்கூடிய தொன்றுமில்லை
யென்று உணர்ந்த இளம் அறிவாளிகளுக்கு அவர் பேச்சு
கவர்ச்சிகரமாயிருந்தது. இதன் விளைவாக அவர் சமூக
ஜனநாயகக் கட்சி (Social Democratic Party)யின் தலைமைப்
பதவி ஏற்றார். இதனால் அவருக்கு அநுகூலமான சந்தர்ப்
பங்கள் கிடைத்தன. அவர் விரும்பியபடியே ரஷ்யப் புரட்சி

யின் முதல்தரப் போர்த் தந்திரவாதியானார்; 1917-இல்
தோன்றிய இந்தப் புரட்சிதான் உலகத்தையே ஒரு
உலுக்கு உலுக்கிவிட்டது.
1900-இல் லெனின் வெற்றி பெறுவார் என்று யாரும்
துணிந்து கூறியிருக்க மாட்டார்கள். சைபீரியாவிலிருந்து
விடுதலை செய்யப்பட்டதும், அவர் இஸ்க்ரா (Iskra) எனும்
பத்திரிகையைத் தொடங்கினார். இது மார்க்ஸியக் கொள்கை
யைப் பரப்பும் நோக்குடைய சஞ்சிகை. இது முதலில்
ஜெர்மனியிலும், பின்னர் இங்கிலாந்திலும், கடைசியாக
ஸ்விட்ஜர்லாந்திலிருந்தும் வெளிவந்து கொண்டிருந்தது. ''தீப்
பொறியிலிருந்து ஜ்வாலை'' என்பதே இதனுடைய கோஷம்.
புரட்சியின் தந்திரங்கள் பற்றி இவரும், இவருடைய அகதி
நண்பர்களும் ஓயாமல் சர்ச்சை செய்து வந்தனர். தங்களது
விவாதங்களின் விளைவுகள் அடங்கிய இந்த சஞ்சிகைகளை
இவர்கள் திருட்டுத்தனமாக ரஷ்யாவுக்குள் புகுத்தினர்.
அங்கே ஆவல் நிறைந்த இளைஞர்கள் கூடி இவைகளை
ரகஸ்யமாகப் படித்தனர்.
1917-இல் அக்டோபரில் புரட்சி தொடங்குவதற்கு
இரண்டு மாதங்களுக்கு முன்வரை டிராட்ஸ்கி பலத்த
இடதுசாரியாக லெனினுடன் சேரவில்லை. ஆனால் அப்
போதிருந்த சூழ்நிலை தலைமறைவாயுள்ள புரட்சி வீரர்
கள் கட்சியில் மாறுபட்ட இரு கூறுகப் பிரிந்து நிற்கக்
காரணமாயிருந்தது.
1903-இல் பிரஸ்ஸல்ஸில் ரஷ்ய சோஷலிஸ்ட் கட்சி
இரண்டாவது காங்கிரசுக்காகக் கூடுகையில் நிலைமை நெருக்
கடியாகத் தொடங்கியது. ஆனால் கூட்டத்தைப் போலீ
ஸார் பலாத்காரமாகக் கலைத்துவிட்டதனால், அவர்கள்
லண்டனில் கூட வேண்டியதாயிற்று. அங்கே லெனின்
கோஷ்டி, போல்ஷிவிக் (பெரும்பான்மை ஆட்கள்) நிதானக்
கட்சியினரான மென்ஷ்விக்குகளைச் சிறு வோட்டு வித்தியாசத்
தால் தோற்கடித்தனர். வித்தியாசத்திற்குக் காரணமா
யிருந்தது ''புரட்சி பாமரமக்கள் ஆதரவை நம்பியிருக்க
வேண்டுமா? அல்லது சதி செய்வதில் சக்தி வாய்ந்த சிறு
கோஷ்டியினரை நம்பியிருக்க வேண்டுமா?'' என்பதுதான்.
1905-இல் போல்ஷிவிக் மென்ஷ்விக்—தகராறு முற்றுவ
தற்கு முன் புரட்சிக்கான புதிய மார்க்லிஸ்ட் திட்டம்
முதன் முறையாக சோதனைக்குள்ளாயிற்று. ஜப்பானிய
சண்டையில் ரஷ்யர்கள் அடைந்த தோல்விகளின் விளைவாக
மாஸ்கோவிலும், பீடர்ஸ்பர்க்கிலும் உள்ள அச்சகத் தொழி
லாளர்கள் அரசாங்கத்திற் கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர்.
பீடர்ஸ்பர்க்கில் வேலை நிறுத்தம் செய்த அச்சகத் தொழி
லாளர்கள் தாங்கள் வேலை செய்த ஒவ்வொரு அச்சகத்



திற்கும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தனர். தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய பொதுச்சபை புரட்
சித் திட்டம் வகுத்துப் போராட்டத் தந்திரங்களையும் முடிவு
செய்யும். ''பாட்டாளிப் பிரதிநிதிகளின் சோவியத்,''
(Soviet of workers Deputies) என்று இந்த சபைக்குப்
பெயர். இது மென்ஷ்விக் தலைவர்களால் நிறுவப்பட்டது.
இதில் டிராட்ஸ்கியும் அங்கம் வகித்தார். தொண்ணூறு
நாட்களுக்கு இந்தச் சபை, தலைநகரில் ஒரு போலி அரசாங்கம்
அமைத்து ஆட்சி புரிவதாகப் பாவனையும் செய்தது.
இந்தக் குறுகியகாலத்தில் இயல்பாகத் தோன்றிய,
ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தப் பாட்
டாளிகள் ஸ்தாபனத்தின் ஆற்றலினால், சொற்பகாலம்
அமுலிலிருந்தாலும் பல சமூக, அரசியல் சீர்திருத்தங்கள்
மலர்ந்தன. பூரணப் பத்திரிகை சுதந்திரம் நிலைநாட்டப்
பட்டது. தாராள, சோஷலிஸ்ட், பிற்போக்கு முதலிய
பல்வேறு கட்சித் தாள்கள் தழைத்தோங்கி நிலவின.
தினம் எட்டு மணி நேரம் தான் வேலை செய்யவேண்டும்
என்று பிரகடனம் செய்யப்பட்டது. 1906-இல் மற்ற
சோவியத் தலைவர்களுடன் கைது செய்யப்பட்ட பின்,
டிராட்ஸ்கி தமது வழக்கு விசாரணையை நன்கு பயன்படுத்
திக்கொண்டார். பின்னர் இந்தியாவின், அஹிம்சைப் புரட்சி
வாதிகள் தங்களது விசாரணைக் கூடங்களைப் புரட்சிக் கருத்துக்
களைப்பரப்பும் பிரசார மேடைகளாக அமைத்துக்கொண்டதை
நினைவூட்டுகிறது டிராட்ஸ்கி கையாண்ட இந்தத் தந்திரம்.
லெனினும் மற்ற அகதி நண்பர்களும், வெளிநாட்டி
லிருந்து வந்து புரட்சியைப் பரவச் செய்து நடத்துவதில்
ஈடுபட்டனர். மாஸ்கோ சோவியத்தின், ஆயுதம் தாங்கிய
எழுச்சி அடக்கப்பட்டது. இப்படித் தோல்வி ஏற்பட்டா
லும் இதன்மூலம் நன்மை அடையலாம் என்பதை லெனின்
கண்டார்.
1905-ஆம் ஆண்டு ஏற்பட்ட தோல்வியின் மூலம் லெனின்
மற்றோர் படிப்பினையை அறிந்துகொண்டார். இறுதியாக
எழுச்சியை அடக்கி சோவியத்தினரைக் கலைத்த படையி
னர் விவசாயிகள் என்பதை அவர் அறிந்தார். 1904-1906 ஆம்
வருடங்களில் இங்குமங்குமாக பல விவசாயிகள் கலகங்
கள் நடந்தாலும், பொதுப்படையாக நகரத் தொழிலாளி
களை ஆட்கொண்ட புரட்சி மனப்பான்மையும், உத்
வேகமும் பிற்போக்கு நிலவியிருந்த கிராம விவசாயிகளை
எட்டவில்லை. இந்தக் கிராம விவசாயிகளிலிருந்து தான்
சோவியத்தினரைத் தோற்கடித்த படை அமைந்தது. அவர்
கள் ஜார் ஆட்சிக்கு விசுவாசமாயிருந்தனர் என்பதே
1905-ஆம் ஆண்டு தோல்விக்கு முக்கிய காரணம். இந்த

விவசாயிகளின் அத்தியாவசியமான ஆதரவைப் பெறுவது
கடினமாயிருக்காது என லெனின் நினைத்தார்.
அதிகாரத்தைக் கைப்பற்ற போல்ஷிவிக்குகள் செய்த
முயற்சி பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் வெற்றி பெற்
றது. இந்த வெற்றி 24-10-1917-இல் பெட்ரோகிராடில்
கிடைத்தது. இந்த நகரம்தான் பின்னர் லெனின்கிரா
டாயிற்று. இந்த வெற்றிக்காக ஆறு மாத காலம் ஜுர
வேகத்தில் அரசியல் பணியும் கிளர்ச்சியும் செய்யவேண்டி
யிருந்தது. ஒரு உலக யுத்தத்தின் விளைவாகவே வெற்றி
கிட்டும் என்று எங்கல்ஸ் (Engels)* கூறிய மாதிரியே நிகழ்ந்
தது. "இனி ரஷ்யாவும், ஜெர்மனியும் மட்டும் யுத்தம்
நடத்திவிட முடியாது. இனி யுத்தம் எனில் உலகயுத்தம்
தான், அதுவும் இதுவரையில் கனவுகூடக் கண்டிராத அளவு
பலாத்காரம் வாய்ந்த உலக யுத்தம்" என்று ஒரு சமயம்
எங்கல்ஸ் எழுதினார்.

முதலாளித்வ சமூகத்துடன் வர்க்கப் போராட்டம்
நடத்தி வெற்றி காண வேண்டுமெனில் தனது கட்சிக்கு
ஒரு மத்யத் தலைமைப்பீட மிருக்கவேண்டுமெனவும், போர்
அரங்கில், படைவீரர்களுக்குள்ள கட்டுப்பாடு கட்சி உறுப்
பினர்களுக்கு இருக்கவேண்டுமெனவும், லெனின் வற்புறுத்
தினார். இறுதி நோக்கத்தை அடைய எந்தச் சாதனத்தை
யும் கைக்கொள்ளலாம், தர்ம நியாயம் பற்றி அவஸ்தைப்
படுவது கண்டிப்பாகத் தடுக்கப்பட வேண்டும்; அவருடைய
"ஜனநாயக மத்ய நிர்வாகத்தில்" கொள்கையை விவா
தித்து வகுக்கும் தலைமைச் சபை ஒரு முடிவுக்கு வந்துவிட்
டால் யுத்தத்துறையில் நேர்மை என நெடுங்காலமாகக்
கருதப்பட்ட எல்லா ரகஸ்ய, பலாத்காரச் செயல்களையும்
கட்சி அங்கத்தினர் செய்யத் தயாராயிருக்கவேண்டும்:
1917 அக்டோபருக்குள் சந்தர்ப்பம் நேரும்பொது, தாக்கு
தல் செய்ய லெனின் படை தயாராயிருந்தது.
அந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ஜாரின் ஆட்சியந்திரம்
வியப்பூட்டும் வகையில் ஜெர்மன் படைகளிடம் தோல்வி
மேல் தோல்வி அடைந்ததனால், அசந்துபோய் செயலற்று
ஸ்தம்பித்து விட்டது. ஆலைகளிலும், யுத்தத்தினால் சோர்

*எங்கல்ஸ் (Engels) 1820லிருந்து 1895 வரை வாழ்ந்த ஜெர்மன் சோஷ
லிஸ்ட். இவர் ஒரு பணக்காரத் துணி ஆலை முதலாளியின் மகன். 1841-இல்
இவர் மார்க்ஸை பாரிஸில் சந்தித்தார். அதிலிருந்து இருவரும் ஒன்றுபட்டு
உழைத்தனர். கம்யூனிஸ்ட் பிரகடனம் தயாரிப்பு, முதலாவது, இரண்டா
வது இண்டர்நேஷனல் நடத்தியதில் மார்க்ஸுடன் ஒத்துழைத்தார். மார்க்ஸ்
இறந்தபின்பு, அவரது "டாஸ்காபிடல்" எனும் புஸ்தகத்தின் இரு பதிப்பு
களைத் தயாரித்து வெளியிட்டார் மார்க்ஸின் வியாக்யானகர்த்தா என்
பதுடன் "குடும்பத்தின் தோற்றம்" (Grigin of the family) எனும் புஸ்த
கமும், பிறநூல்களும் வெளியிட்டார்.



வடைந்த விவசாயிகளிடையேயும் கலகங்கள் பரவின:
தலைவர்களின் கட்டளைகளைப் படையினர் நிறைவேற்ற மறுத்
தனர். பெட்ரோகிராடிலுள்ள கிரோன்ஸடாட் (Kronstadt)
கடல் தளத்தில் மாலுமிகள் தீர்மானமாகக் கலகம் புரிந்த
னர். ஒரு வாரக் குழப்பநிலைக்குப் பிறகு, ரோமனவ் அரச
குடும்பம் அப்புறப்படுத்தப்பட்டது. அதற்குப்பதிலாக
ஒரு தற்காலிக அரசாங்கம், ஆட்சிப்பொறுப்பை ஏற்றது.
அதில் தாராளப் போக்குள்ளவர்களும், நிதானம் வாய்ந்த
சோஷலிஸ்டுகளும் இடம் பெற்றனர்.
இந்தப் புதிய அரசாங்கம், தனது ஆட்சியை நிலைக்
கச் செய்வதற்குக் கொஞ்சம் கொஞ்சமாக வழி செய்து
கொண்டிருக்கையில் அதை ஆதரித்த மென்ஷ்விக்குகளுக்கு
பெட்ரோகிராட் சோவியத்தில் எதிர்ப்பு அதிகரித்தது. இந்
தப் போட்டிச் சங்கத்தில், எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும்
படைகளும், வேலை நிறுத்தம் செய்த ஆலைப் பிரதிநிதிகளும்
இடம் பெற்றிருந்தனர். இந்தச் சோவியத்தில் கணிசமான
அளவுக்கு மென்ஷிவிக்குகள் இருந்தனர். 1917-ஆம் ஆண்டு
கோடைக்கால இறுதிக்குள் போல்ஷிவிக்குகள் இச்சபை
யில் பெரும்பான்மை பலம் பெற்று, புதிய அரசாங்கத்
திற்கு நேர்மாறான உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டி
ருந்தனர்.
" எல்லா அதிகாரங்களும், சோவியத்தினருக்கே"
என்ற நாலாவது கோஷத்தைக் கவனம் செய்து கொண்டு
லெனின் தற்காலிக அரசாங்கத்தைத் தகர்த்தெறிய தீர்
மானத்தோடு புறப்பட்டார். போல்ஷ்விக் கட்சிக்கு எதிராக
அரசாங்கத்தார் அடக்குமுறைப் பிரயோகம் செய்யதனர்:
டிராக்ட்ஸ்கி உள்படப் பலர் சிறையிடப்பட்டனர். சாதுர்ய
மாக லெனின் பின்லாந்துக்குத் தப்பியோடினார். அக்டோபரில்
அவரது கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்புதான்
அவர் பகிரங்கமாக திரும்பி வந்தார்.
இதற்கிடையில் முதல் தற்காலிக அரசாங்கம் மென்
ஷ்விக் வக்கீல் கெரன்ஸ்கி (Kerensky) கைக்கு மாறியது.
இத்தருணத்தில் பின்லாந்தில் தமது மறைவிடத்தி
லிருந்து கொண்டு புதிய அரசாங்கத்திற்கெதிராக ஆயுதந்
தாங்கிக் கிளர்ந்தெழும் கடைசி ஆயுதத்தைப் பிரயோகிக்
கும்படி மத்தியக் கமிட்டியை வற்புறுத்தத் தொடங்கினார்
லெனின். கமிட்டியில் கடுமையான எதிர்ப்பு இருந்தபோதி
லும் லெனின் திட்டம் வெற்றி பெற்றது. லெனின் இல்
லாவிட்டாலும் அவரது திட்டத்தைக் கமிட்டியில் ஸ்டாலி
னும், டிராட்ஸ்கியும் வற்புறுத்தி வாதாடினர்.
அடக்குமுறையை கெரன்ஸ்கி கையாண்டான். அக்டோபர்
24-ஆம் தேதி இரவு போல்ஷ்விக்குகள் தாக்கினர். கவனத்

துடன் தயார் செய்யப்பட்ட ராணுவத் திட்டப்படிக் குறை
வான உயிர்ச்சேதத்துடன் தலைநகர் கைப்பற்றப்பட்டது.
இதற்குச் சில மணி நேரத்திற்குள் கெரன்ஸ்கி ஓட்ட
மெடுத்தான். பெட்ரோக்ராட் சோவியத்தினர், நகரைத்
தங்கள் வசப்படுத்திக் கொண்டனர். உறுதிவாய்ந்த, எஃகு
உள்ளம் படைத்த சகாக்களின் உதவிகொண்டு சோவியத்
தில் லெனின் ஆதிக்கம் செலுத்தினர். அடுத்த நாள்
லெனினும், அவரது சிஷ்யர்களும்—அச்சமயம் கூடியிருந்த
அகில ரஷ்ய சோவியத் காங்கிரஸ் முன் ஆஜராஞர்கள்.
அந்தக் காங்கிரஸ் பிரதிநிதிகளும் அவர்களைப் புதிய ரஷ்ய
அரசாங்கத்தினர் என ஏற்றுப் பிரகடனம் செய்தனர்.

போல்ஷ்விக்குகளுடைய செல்வாக்கு ஆலைத் தொழி
லாளர்களிடையேயும் ராணுவத்தினரிடையேயும் தான் மிகு
தியாயிருந்தது. அவர்கள் ஸ்தாபனம் ரஷ்ய உள்நாட்டை இன்
னும் ஊடுருவிச் செல்ல வில்லை. இன்னும் ரஷ்ய மக்களில் எண்
பது சதவிகிதத்தினர் விவசாயிகளேயாவர். 1905-ஆம் ஆண்டு
தோல்வியிலிருந்து விவசாயிகளின் மறைமுகமான ஆதரவா
வது இல்லாவிட்டால் புரட்சி பலிக்காது என்பதை லெனின்
உணர்ந்திருந்தார். இந்த விவசாயிகளைத்தான், "கிராம
வாழ்க்கை எனும் அசட்டுத்தனத்திஞல் பயனற்றுப் போனவர்
கள்" என மதித்து மார்க்ஸ் ஒதுக்கித் தள்ளினர். ஆஞல்
உண்மை என்னவென்ருல் தமது மதிப்பீட்டில் விவசாயி
களை மார்க்ஸ் ஒரு பொருட்டாகக் கருதவேயில்லையென்
பதுதான். பிரிட்டன், ஜெர்மனி முதலிய நாடுகளில் உள்ள
ஆலைத் தொழிலாளர்களையே அவர் முக்கியமாக அறிந்
திருந்தார். ஆகையால் புரட்சிக்கு அவர் ஆலைத் தொழி
லாளர்களையே அடிப்படையாகக் கருதினர். 1848-இல் வெளி
யான கம்யூனிஸ்ட் பிரகடனத்திலும், அவர் சுருக்கமாகவே
விவசாயத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். அந்தப் பிர
கடனத்தில் ஏதோ யதேச்சையாக அவர். "விவசாயமும்
ஆலை உற்பத்தித் தொழில்களும் சேர்ந்து" என்றும், "நக
ரத்திற்கும், கிராமத்திற்கும் உள்ள வித்தியாசங்களைப் படிப்
படியாக அகற்றுவது" என்றுமே குறிப்பிட்டிருக்கிருர்.

இதன் விளைவாகவோ என்னவோ ரஷ்யப் புரட்சிக்கு
முன்பு கிழக்கு ஐரோப்பாவில் விவசாயக் கிளர்ச்சி இயக்கத்
தலைவர்கள் மார்க்ஸைப் பெரிதும் ஒன்று உதாசீனம் செய்
தனர், அல்லது எதிர்த்தனர். மார்க்ஸிய சித்தாந்தத்தில்
உள்ள இந்தக் குறைபாட்டையறிந்து, அதை நிவர்த்திக்க
முயன்றதே லெனின் மேதாவிலாசத்திற்குச் சான்ருகும்.
புத்திசாதுர்யத்துடன், போல்ஷ்விக் திட்டத்தில் நிலப்புனர்
விநியோகத்திற்கு லெனின் முக்கிய இடமளித்தார்.



அரசாங்கப் பொறுப்பேற்றதும், லெனின் செய்த முதல்
காரியங்களில் ஒன்று நிலப் பிரபுக்களை ஒழித்து நிலத்தைக்
குடியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என முன்பு
இயல்பாக முடிவு செய்யப்பட்டதை 7-11-1917-இல் [illegible]
செய்ததுதான். அவர் தம் சகாக்களுக்குப் பின்வருமா[illegible]
ஞர்: "இந்த அரசாங்கக் கட்டளையை நாம் நா[illegible]
பறைசாற்றவேண்டும். அப்புறம் அதை யார் ரத்[illegible]
கின்றனர் பார்க்கலாம். இதுதான் புரட்சியின் கீழ் [illegible]
மான சாதனை. இன்று போல்ஷ்விக் புரட்சி உதய[illegible]
அப்புறம் அதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது."

பின்னர் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் குடியா[illegible]
கள் நடுநிலைமை வகித்தனர். பிரிட்டிஷ், ஃபிரஞ்சு, [illegible]
னியப் பணம், ஆயுதம், ஆள் பலமும், அமெரிக்கப்[illegible]
உதவியும்கொண்டு, ஜாரின் அதிகாரிகள் புதிய போ[illegible]
விக் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் புரிந்தனர். ஆ[illegible]
குடியானவர்கள் ஜார் கட்சியின் ஆதரவுக்கு வர மறுத்தனர்.
இந்த மறுப்பிஞல்தான் எதிர்ப் புரட்சியினரால் எவ்வித
அபாயமும் விளையவில்லை. தமது போல்ஷ்விக் புரட்சி வெற்றி
பெற, நிலம், ரொட்டி, சமாதானம் எனும் எண்ணங்களையே
லெனின் பயன்படுத்தினர்; தமது தந்திரத்தின் முக்கியமான
பகுதியை விளக்குகையில், "பூரணத்தில் யுத்தம் ஒரு பகுதி.
பூரணம் என்பது அரசியல்" என லெனின் கூறினர்.

இந்தப் பூரணத்தில் குடியானவர்கள் அத்தியாவசியமான
பகுதியினர். புரட்சியின் மூலம் நகரப் பாட்டாளி மக்கள்
ஆலைகளைக் கூட்டுப் பொறுப்பில் அமைத்துத் தங்களுக்குப்
பாதுகாப்புத் தேடிக்கொண்டனர். அதே மாதிரி, மந்தமா
யுள்ள, சம்பிரதாயப் பற்றுள்ள, அரசியல் விழிப்பற்ற குடி
யானவர்கள், தங்கள் நிலத்தின்மீது உடைமை பெறுவதன்
மூலம் பாதுகாப்புப் பெற முயன்றனர்.

ஆஞல் யுத்தத்தையும், அரசியலையும், உள்நாட்டுக்குள்
அடைத்து வைக்க முடியாது. ரஷ்யப் புரட்சி கர்த்தாக்கள்
அது ரஷ்யாவுக்கு மட்டும் பயன்பட வேண்டும் எனக் கருத
வில்லை.

*அத்தியாயம்—6*

# வெளிநாடுகளுக்கும் புரட்சி

உலகெங்கும் பலமாக எதிரொலித்த மார்க்ஸிய கோஷம்
''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' என்பதுதான்.
இதுமட்டுமல்ல. எந்தப் பிரச்னையையும் தீர்ப்பதற்கான
தோரணையில், கம்யூனிஸ்டுகளுக்கும் பிற புரட்சி வாதி
களுக்கும் வித்தியாசமிருக்கிறது என்பதை இந்த கோஷம்
தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியது. மார்க்ஸின் பிர
கடனத்தின்படி, ''பாட்டாளி மக்கள் எத்தேசத்தவரா
யினும், அவர்கள் எல்லோருடைய பொது நலனை வளர்ப்
பதற்கேற்ற முறையில் கம்யூனிஸ்டுகள் பணி புரிவர்.''

ஆனால் மார்க்ஸ் தமது வாழ்நாளிலேயே அமைத்த சர்வ
தேச தொழிலாளர் சங்கத்தினால் எவ்வித பயனும் ஏற்பட
வில்லை, 1889-இல் மார்க்ஸ் மரணமடைந்து ஆறு ஆண்டு
களுக்குப் பின் அமைக்கப்பட்ட இரண்டாவது இண்டர்நேஷ
னல் (Second International) ஓரளவு வெற்றி கண்டது.
முதல் மகாயுத்தத்திற்கு முந்திய வருஷங்களில் முக்கியமான
ஐரோப்பிய சோஷலிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்த
ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களாயிருந்தனர்.

1912-இல் கெய்ஸருடைய படைகள் பெல்ஜியத்திற்குள்
புயல் வேகத்தில் புகுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு,
இண்டர்நேஷனல் காங்கிரஸ் பேசலில் (Basel) கூடி ''யுத்
தத்திற்கு எதிராகப் போர் புரிய வேண்டும்'' என்று ஏகமன
தாகத் தீர்மானித்தது. ''உலக யுத்தம் என்கிற அக்கிரமத்
தைக் கேட்டதும் கண்டிப்பாகப் பாட்டாளி மக்கள் கொதித்
தெழுவர் என்பதை அரசாங்கங்கள் உணராமலிருப்பது
பைத்தியக்காரத்தனமாகும். முதலாளிகள் லாபமடைவதற்
காக, அரச குடும்பத்தினரின் பேராசை கைகூடுவதற்காக,
ரகஸிய ராஜதந்திர உடன்பாடுகளில் புகழ் பெறுவதற்காகத்
தங்களை ஒருவரையொருவர் சுட்டுக் கொள்வது அக்கிரமம்
எனப் பாட்டாளிகள் கருதுகின்றனர்.'' இவ்வாறு பேசல்
பிரகடனம் எச்சரிக்கை செய்தது. ஐரோப்பா பூராவும்,
வேலை நிறுத்தம் செய்வது உள்பட எல்லா விதங்களிலும்
யுத்தத்தை எதிர்ப்பதாக உற்சாகத்துடன் சபதம் செய்தனர்
அங்கே கூடியிருந்த பிரதிநிதிகள்.



இந்தப் பிரச்னை மட்டும் அல்ல, பிற பிரச்னைகளிலும
நிதானம் வாய்ந்த ஜனநாயக சோஷலிஸ்டுகளுக்கும் புரட்சிகர
சோஷலிஸ்டுகளுக்கும் உள்ள கருத்து வேற்றுமை நீடித்
திருந்தது. போராட்ட ஆர்வமுள்ள இடதுசாரி கோஷ்டி
கள், வரப்போகும் புரட்சி தேசியத்திற்கு எதிரானதாயிருக்
கும் எனும் அம்சத்தை வலியுறுத்தினார்கள். ஆனால் மிதவாதி
நோக்குடையவர்களிடையே, பார்லிமெண்ட் மூலம் தாங்கள்
பணி புரியும் நாட்டிற்கு ஏதோ ஒருவகையில் கட்டுப்பட்ட
வர்கள் எனும் மனோபாவம் நிலவியது. அவர்களது யுத்த
எதிர்ப்புக் கருத்துக்கள் உண்மையானவையே யானாலும்
அவைகள் சம்பிரதாயமான சமாதானப் போக்கையே பிரதி
பலித்தன.

ஐரோப்பாவில், சமாதானம் நிலவுகையில் இந்த வித்தி
யாசங்கள் அவ்வளவாகத் தெரியவில்லை. சத்திரம் சாவடி
களிலும், தேநீர் விடுதிகளிலும் இலட்சிய அடிப்படையில்
இவைகள்பற்றிச் சர்ச்சைகள் செய்யப்பட்டன. திடீரென
யுத்தம் தோன்றியதும், வெறும் கொள்கையளவிலிருந்து
மாறி, செயல் மூலம் அவர்களுடைய சிந்தனை எவ்வாறிருக்
கிறது என்பது தெரியலாயிற்று.

1914-ஆம் ஆண்டு ஆகஸ்டில் இரண்டாவது இண்டர்
நேஷனலின் இருபத்தி ஐந்தாவது ஆண்டு நிறைவுக்கு முன்
கெய்ஸர் (அக்காலத்து ஜெர்மன் அரசர்) தமது பெர்லின்
அரண்மனை உப்பரிகையிலிருந்து ''எனக்கு கட்சிகள் பற்றித்
தெரியாது. ஜெர்மானியர்களை மட்டுமே அறிவேன்''
என்று உரைத்தார். ஐரோப்பிய சோஷலிஸ்ட் கட்சிகளில்
மிகப் பெரியதும், பேச்சாளர்கள் நிறைந்ததுமான ஜெர்மன்
''சோஷலிஸ்ட் டெமோக்ரட்'' (சமூகஜனநாயகக் கட்சியினர்)
கெய்ஸரின் இந்தப் பிரகடனத்
தைக் கேட்டு யுத்தத்திற் கலந்துகொள்ள அணிவகுத்துச்
சென்றனர்.

ஃபிரான்சில் பிரபல யுத்த எதிர்ப்புத் தலைவரான ஜுவா
ரஸை (Juares) ஒரு தேசிய வெறி பிடித்தவன் கொலை
செய்தான். நேசநாடுகளிலுள்ள சோஷலிஸ்டுகள் தத்தம்
நாட்டுக் கொடிக்காகப் போராட முன்வந்தனர். இரண்
டாவது இண்டர்நேஷனலின் தலைவரான வாண்டர்வெல்டு
(Vandervelde) ''பெல்ஜியத் தொழிலாளர்கள் வீடுகளில்
ஜெர்மன் சிப்பாய்களைக் கட்டாயம் உபசரிக்க வேண்டும்
என்று இருக்கும் வரையில் இண்டர்நேஷனலின் நிர்வாக
சபையைக் கூட்டுவதென்பது நடக்கக்கூடிய காரியமல்ல''
என்று சபதம் செய்தார்.

சர்வதேச சோஷலிஸத்தின் அமைப்பு இவ்வாறு தேசிய
வெறியினால் சிதைவுறுவதைக் கண்டு நடுநிலைமை நாடுகளில்

வசித்து வந்த மார்க்ஸியவாதிகள் வியப்புற்று மனம் கசந்து போயினர். சண்டையில் பங்குகொண்ட அமெரிக்கா போன்ற நாடுகளிலும் அமெரிக்கரான யூஜீன் டெப்ஸ் (Eugene Debs) போன்றவர்களும் 1917-இல் யுத்தத்தை எதிர்த்து நீடித்து உழைத்து அதற்காக சிறைக்கும் சென்றனர்.

மேற்கத்தி நாடுகளில் உள்ள மிதவாத சோஷலிஸ்டுகள் புரட்சிக்கு ''துரோகம்'' செய்துவிட்டது பற்றி லெனின் மனம் நொந்து எழுதினார். லெனின் வெறுத்தது யுத்த சம்பந்தமான கருத்துக்களையல்ல. மேற்கத்தி சோஷலி[illegible] களின் ''வருந்தத்தக்க குறுகிய மனப்பான்மை கொ[illegible] தேசியத்தை''யே அவர் வெறுத்தார்.

உலகமெங்கும் வியாபிக்கக்கூடிய இந்தப் புரட்சி எங்கே, எப்படிக் கிளம்பும்? உலக யுத்தத்தினால் ஏற்பட்ட குழப்பத்தையும், நாசத்தையும் இந்தப் புரட்சி தொடங்குவதற்காக எப்படிப் பயன்படுத்தலாம்?

முதலாளித்துவத்தை உலகெங்கும் நிலவும் ஒரு முறையாக கம்யூனிஸ்ட் பிரகடனம், (Communist Manifesto) கருதியது. ''தனது உற்பத்திப் பொருள்களை விற்பதற்கான சந்தை இடைவிடாது விரிந்துகொண்டு போகவேண்டியது அவசியம். ஆகையால் இந்தச் சந்தையைப் பிடிக்க பூர்ஷ்வா உலகெங்கும் ஓடி அலைய வேண்டியிருக்கிறது. முதலாளித்வம் எங்கும் ஒண்டி ஒட்டிக்கொள்ள வேண்டும். எங்கும் நிலைத்திருக்க வேண்டும். எங்கு பார்த்தாலும் தொடர்பு கொண்டாக வேண்டும். சுருங்கக் கூறவேண்டுமானால் தன்னைப்போன்ற ஒரு உலகை அது அமைத்துக்கொள்ளுகிறது எனக் கூறிவிடலாம். முதலாளித்துவம் நகரங்களையே நம்பி கிராமங்களை வாழச் செய்துவிட்டது. அதேமாதிரியே காட்டுமிராண்டி அல்லது அரைகுறை காட்டுமிராண்டி மக்கள் வாழும் நாட்டினர் நாகரிக நாட்டினரையும், குடியானவர்கள் நிறைந்த நாட்டினர் பூர்ஷ்வாக்கள் நிறைந்த நாட்டினரையும், கிழக்கத்தியர் மேற்கத்தி நாட்டினரையும் நம்பி வாழும்படிச் செய்துவிட்டது.'' இவ்வாறு கம்யூனிஸ்ட் அறிக்கை முதலாளித்வம் பற்றி விளக்கம் தருகிறது.

வெற்றிகரமான புரட்சி முதன் முதலாக ஜெர்மனி போன்ற ஆலைத்தொழில் கொழிக்கும் நாட்டில்தான் ஏற்படும் என மார்க்ஸியவாதிகள் பொதுவாகக் கருதினர். ஆனால் லெனின் மிகுந்த சாதுர்யத்துடன் மார்க்ஸிய ஆராய்ச்சியில் ஒரு புதுக் கருத்தைப் புகுத்தி முதலாளித்வத்தின் பலக்குறைவான இடத்தில் (ரஷ்யா போன்ற) தான் புரட்சி நிகழும் எனத் தீர்க்கதரிசனத்துடன் கூறினார்.



இந்தப் புரட்சி எந்தவகையில் நிகழும் என்பதை பல
ஆண்டுகளுக்கு முன் லெனின் விவரித்திருந்தார். அந்த
ஆராய்ச்சி இன்று கூட குடியேற்ற நாடுகளில் மக்கள்
மனத்தை கவர்கிறது. முதலாளிகள், ஆலைத்தொழிலாளி
களைச் சுரண்டிப்பிழைப்பது பற்றி ஆசிய அறிவாளிகளுக்கு
அவ்வளவாக நேரடியான அநுபவம் கிடையாது. ஆனால்
ஏகாதிபத்திய ஆட்சி பற்றிய லெனினின் கொள்கை குடி
யேற்ற நாட்டு ஆட்சியின் கீழ் நடக்கும் அக்ரமங்களுக்கு
நம்பக்கூடிய முகாந்திரம் அளிக்கிறது.
நாடுகளுக்கிடையில் பொருளாதாரப் போட்டி குறை
யக் குறைய, பிரம்மாண்டமான தேசங்களின் ஏகபோக
ஆட்சிகளுக்கிடையே எல்லைப்போட்டியும் பொறாமையும்
தீவிரமாக வளரலாயிற்று. தங்களது சரக்குகளுக்கும்
தளப்பொருள்களுக்கும் சந்தை கண்டுபிடிக்க வேண்டிய
நிர்ப்பந்தம் அதிகரிப்பது முதலாளித்வத்தின் உற்பத்திப்
பெருக்கத்தின் இயல்பான விளைவேயாகும். சந்தை கண்டு
பிடிப்பதற்கான சண்டையின் பயனாக அபிவிருத்தியடை
யாத நாடுகள் மீதும், அவ்வளவாக முன்னேற்றமடையாத
மக்கள் மீதும் ஆதிக்கம் பெறுவதற்கு நீ, நான் என அடித்துக்
கொள்ளத் தலைப்படுகின்றனர்.
ஒவ்வொரு நாட்டிலும் முதலாளிகள் நீடித்து லாபம்
பெற குடியேற்ற நாடுகளும், சாம்ராஜ்ய ஆட்சிக்குட்பட்ட
மக்களும், அவசியமாயிருப்பதனால் மக்களைப் பணியவைப்
பதில் ஏனோதானோ வென்றோ, தற்காலிகப் பொருளாதார
வசதி கிடைத்தால் போதுமென்றோ ஆட்சியாளர்கள்
இருந்துவிடமாட்டார்கள். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஆட்சி
வர்க்கத்தினரும் தங்கள் நோக்கம் நிறைவேறுவதற்காக
தங்கள் வசமுள்ள அரசாங்க அதிகாரம் பூராவையும் பயன்
படுத்திவிடுவார்கள்.
பெருகி வரும் உலகப் புரட்சி, முதலாளித்வ நாடு
களில் பலக் குறைவாயுள்ள நாட்டையே முதலில் தாக்
கும். பின்தங்கிய நாடுகளிலுள்ள மக்களும் குடியேற்ற
நாடுகளிலுள்ள மக்களும் புரட்சிக்குப் பேராதரவளிப்பர்.
அந்நிய ஆட்சியையும் நிலப் பிரபுத்துவத்தையும் எதிர்த்து
அங்குள்ள மக்கள் எழுவதனால், ஐரோப்பாவில் முதலா
ளித்துவத்தின் கற்கோட்டைகளில் உள்ள பாட்டாளி மக்க
ளிடையே புரட்சித் தீ மூளும். இவ்வாறு குடியேற்ற நாடு
களில் ஏற்படும் புரட்சி மேற்கத்திப் பாட்டாளி மக்கள்
வெற்றிக்கு நேரடியாக உதவிபுரியும். இதே போல குடி
யேற்ற நாடுகளில் நிலப் பிரபுத்துவத்தை எதிர்த்து நடக்
கும் கிளர்ச்சியும் கலகமும், கஷ்டம் நிறைந்த யந்திரத்
தொழில் அபிவிருத்தியையும் கடந்து இறுதியில், கம்யூனி

ஸத்தை ஒப்புக்கொள்ளும் நிலையை யடைய மேற்கத்திய
புரட்சி வழி காட்டவேண்டிய அவசியம் ஏற்படும்.
''மேற்கத்திய புரட்சி வெற்றி பெற வேண்டுமானுல்,
அந்த இயக்கம் காலனிகளும், அடிமை நாடுகளும் நடத்
தும் விடுதலை இயக்கங்களுடன் புரட்சிகர ஒருமைப்பாடு
அடையவேண்டும் என்பதை லெனின் நிரூபித்துவிட்டார்''
என ஸ்டாலின் பின்பு கூறினுர்.

ஆசியா, ஆஃபிரிக்காவிலுள்ள காலனிகளின் ஆதிக்கத்
திற்காக நேச நாட்டு முதலாளிகளும், ஜெர்மன் முதலாளி
களும் புரிந்த ஏகாதிபத்ய யுத்தம் என்றே லெனின் முதல்
உலகப் போரைக் கருதினுர். ஆகையால், இந்தப் போர்
முதலாளித்வத்தின் மரணுவஸ்தைக்கு அறிகுறி என்றே அவர்
நினைத்தார். ரஷ்யப் புரட்சியின் இறுதி வெற்றிக்கு உத்தர
வாதமளிக்கக்கூடிய புரட்சிகள் ஐரோப்பிய நாடுகளில்
சீக்கிரத்தில் நிகழும் என அவர் எதிர்பார்த்தார்.
லெனின் முன்கூட்டிச் சொல்வதை நிரூபிக்கும் வகை
யில் சம்பவங்கள் நிகழத்தொடங்கின. அக்டோபரில் ரஷ்
யப் புரட்சி ஆரம்பமாக வேண்டுமென்று அவர் போல்ஷி
விக் மத்யக் கமிட்டியில் வற்புறுத்திக்கொண்டிருக்கும்
போது, ஜெர்மன் கடற்படையில் கலகம் நிகழ்ந்தது.
அக்டோபரில் போல்ஷிவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்ற
முன்வரவேண்டும் என்பதற்கு இந்த ஜெர்மன் கடற்படைக்
கலகத்தை முக்கியமானதொரு உதாரணமாகச் சுட்டிக்காட்
டினுர் லெனின்.

அடுத்த சில மாதங்களுக்கு கிழக்கு, மத்திய ஐரோப்பா
வெங்கும் புரட்சித் தீ சுடர்விட்டுப் படர்ந்தது. முதல் சோவி
யத் அயல்நாட்டு மந்திரியாயிருந்த லியான் டிராட்ஸ்கி
தமது சகாக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் முறை
யில் பேசினுர். ''நான் சில புரட்சிப் பிரகடனங்களை வெளி
யிட்டால்போதும். அப்புறம் எதுவும் செய்யவேண்டிய
தில்லை: என் வேலை மிக எளிது'' என டிராட்ஸ்கி கூறினுர்.
ஜெர்மனியில் கிட்டத்தட்ட ரஷ்ய சோவியத்துக்கள்
மாதிரி நகரங்களில் பாட்டாளிகள் சபைகளும், உள்நாட்டில்
படை வீரர் சபைகளும் அமைக்கப்பட்டன. 1919 ஜனவ
ரிக்குள் பெர்லின் தெருக்களில் புரட்சிக் கலகங்கள் விளைந்து
ஜனக்கூட்டத்தினர் முக்கியமான அரசாங்கக் கட்டிடங்களைக்
கைப்பற்றினர்.

மார்ச் மாதத்தில் கம்யூனிஸ்ட் **பேலா குன் (Bela kun)**
தலைமையில் ஹங்கேரியில் பாட்டாளிகள், குடியானவர்கள்,
படைவீரர்கள் நிறைந்த குடியரசு ஸ்தாபனம் அமைக்கப்
பட்டது.



வேலை நிறுத்தங்கள், கலகங்கள் நகரங்கள்-கிராமங்
களில் கலவரங்கள் இதாலியில் பரவின. ஃபிரான்ஸில் கூட
பின்னர் கம்யூனிஸ்டாக மாறிய சோஷலிஸ்ட் கட்சியில்
போராட்டத் துடிப்பு வாய்ந்த பகுதியினர் பாட்டாளிகளி
டையே தங்களுக்குப் பெருவாரி ஆதரவிருப்பதாகச் சாதித்
தனர். ''ஐரோப்பாவில் மட்டுமல்ல, உலகப் பாட்டாளிகள்
புரட்சி நம் கண்முன் கனிவடைந்து வருகிறது'' என
லெனின் நம்பிக்கையுடன் அறிவித்தார்.
இந்தக் கொந்தளிப்புக்கிடையே மாஸ்கோவில் லெனின்
அழைப்பின்பேரில், ஐரோப்பிய சோஷலிஸ்ட் கட்சிகளின்
மகாநாடு கூடிற்று. இந்த மகாநாடு மூன்ருவது இண்டர்
நேஷனலின்-காமின்டேர்ன் அமைப்பைப் பிரகடனம்செய்து,
உலகப் புரட்சி கிளம்பவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்
தியது. காமின்டேர்ன் (Comintern) முதல் வருஷத்தில்
எதையும் சாதிக்கமுடியவில்லை. ரஷ்யாவில் இன்னம் உள்
நாட்டுச் சண்டை நிகழ்ந்துவந்ததனுல், அதை அடக்குவ
திலேயே காமின்டேர்னின் முழு கவனமும், பலமும் ஈடுபட
வேண்டியிருந்தது.
இதற்கிடையில் ஐரோப்பியப் புரட்சிகளின் வேகம்
தணிந்தது. ஜெர்மன் கலவரம் அடக்கி ஒடுக்கப்பட்டு,
அதன் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். பின்னிர் புரட்சி
யும் தோல்வியுற்றது.
இதாலியில் தக்க தலைவர்களில்லாததால் தீவிர சோஷ
லிஸ்ட் கிளர்ச்சி 1920 இறுதிக்குள் பிசுபிசுத்துவிட்டது.
மாஜி சோஷலிஸ்டான முஸோலினி பலம் திரட்டி தமது
சகாக்களுடன் ரோம் நகர் மீது] தனது ஃபாஸிஸ்டு படை
யெடுப்பு நடத்தினுர்.
லெனின் கருத்துப்படி 1920-இல் நம்பிக்கையூட்டும் ஒரே
சக்தி செம்படை இருந்ததுதான். அச்சமயம் அந்தப் படை
போலந்துக்குள் புகுந்து ஜெர்மனியில் எஞ்சியுள்ள புரட்சி
சக்தியுடன் ரஷ்யக் கம்யூனிஸ்ட் சக்தியைப் பிணைத்து அபாயம்
விளைவிக்கும் என்ற பயத்தை ஏற்படுத்தியது. காமின்டேர்
னின் இரண்டாவது காங்கிரஸ் கூடுகையில் சோவியத் துருப்பு
கள் வார்ஸாவின் நுழைவாயிலை நெருங்கி விட்டன.
1924-இல் லெனின் இறந்த பிறகு, ரஷ்யாவிற்கு
வெளியே புரட்சி ஆர்வம் தணிந்துவிட்டது. ஐரோப்பாவில்
உடனடியாகப் புரட்சி ஏற்பட்டால்தான் சோவியத் யூனி
யன் நிலைத்துச் செழித்திருக்கும் என்ற பழைய போல்ஷ்விக்
சித்தாந்தத்தில் நம்பிக்கையுள்ள ரஷ்யர்கள் மதிப்பிழந்
தனர். அவர்கள் விரும்பிய புரட்சி நிகழவில்லை.
இதன் விளைவாக புதிய நிகழ்ச்சிக்கு ஏற்ப தங்கள்
கட்சிக் கோட்பாடுகளை ஸ்டாலின் மாற்ற வேண்டி வந்து

விட்டது. ''ஒரு சமயத்தில் ஒரு நாட்டில் கம்யூனிஸத்தை நிலைக்கச் செய்தால் போதும்'' எனும் புதுக் கொள்கையை ஸ்டாலின் வகுத்தார். இந்தப் புதிய கொள்கைப்படி புரட்சியின் தாயகமாகிய ரஷ்யாவைப் பாதுகாப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சிகள் தத்தம் நாடுகளில் புரட்சியை துரிதப்படுத்தாமல் நிதானம் காட்ட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. இவ்வாறு பின் நோக்கிச் செல்லவேண்டி வந்ததை உலகத்தின் பிறபாகங்களில் உள்ள கம்யூனிஸ்டுகள் வேண்டா வெறுப்பாக ஏற்றுக்கொண்டாலும், அப்போதிருந்த நிலையில் வேறு முடிவுக்கு வந்திருக்க முடியாது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். பிறநாட்டு கம்யூனிஸ்டுகளின் கருத்தைப் பிரதிபலித்து மா சே துங், சோஷலிஸத்தை அநுஷ்டிப்பதற்கு ஒரு நாடின்றி அதைப் பிரசாரம் செய்து பயனில்லை எனக் கூறினார்.

1920, 1930 ஆண்டுகளில் உலகப் புரட்சி ஆர்வம் தணிந்து வருகையில் வெளிநாடுகளில் சோவியத் யூனியனிடம் நேசபாவம் வளரத் தொடங்கியது. மேற்கத்திய நாடுகளையும், வில்ஸன், ஹார்டிங் முதலியோர் ஜனாதிபதிகளாயிருந்த காலத்திய அமெரிக்காவையும், ஆட்கொண்டிருந்த போல்ஷ்விஸத்தின்பால் ஏற்பட்டிருந்த அச்சம் படிப்படியாகத் தணிந்து வந்தது.

புதிய அபிவிருத்தித் திட்டங்களில் உதவி புரிய அமெரிக்க வர்த்தக ஸ்தாபனங்கள் தங்களது என்ஜினீயர்களை ரஷ்யாவுக்கு அனுப்பிவந்தன. ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி, ஃபோர்டு மோட்டார் ஸ்தாபனம் முதலியவைகளுடன் பெரிய அளவில் ரஷ்யர்கள் வர்த்தக உடன்பாடுகள் செய்து கொண்டனர். ரஷ்ய ஆட்சியை 1930-இல் நாம் உத்தியோக பூர்வமாக அங்கீகரித்த பிறகு இருந்ததைவிட 1920-இல் கூடுதலாக சோவியத்-அமெரிக்க வியாபாரம் நடந்தது.

கண்ணியம் வாய்ந்த வர்த்தகர்கள் தங்கள் குடும்பத்தாருடன் கோடைகாலப் பிரயாணக் கப்பல்களில் லெனின்கிராடுக்குச் சென்றனர். அவர்கள் திரும்பிவந்து ஸ்டாலின் ஆட்சியின் சாதனைகளைப்பற்றி வாயாரப் புகழ்ந்தனர். பொருளாதார மந்தம் நிலவிய 1930-இல் அமெரிக்க யுவர்களும், ரஷ்யாவைப் புகழ்ந்தனர்; வேலையில்லாமல் தவித்த, சுபிட்சம் நிலவாததால் ஏமாற்றமடைந்த இந்த யுவர்கள் லெனின்கிராடிற்குச் செல்லாமலே, வர்க்கபேத இனபேதமற்ற சுவர்க்க பூமி என்று ரஷ்யாவைப் பற்றி சோவியத் பிரசாரகர்களது வர்ணனைகளை நம்பத் தயாராக இருந்தனர்.

'' சோவியத் யூனியன் ஒரு நாடு மட்டுமல்ல, அதற்கும் மேம்பட்டது. அதன் மூலம்தான் உலகப் புரட்சி நிக



ழப்போகிறது '' என்று தமது இரண்டாவது வாதத்தை
ஸ்டாலின் கைவிடவில்லை.
சம்பவங்களின் இயல்பான போக்கினால் ரஷ்ய தேசி
யத்திற்கும், உலக கம்யூனிஸத்திற்கும் நிர்ப்பந்தக் கூட்
டுறவு ஏற்பட்டது. இந்தக் கூட்டுறவால் உலகத்தின்
பலம் வாய்ந்த இரண்டு சக்திகள் ஒன்றுபட்டன. ஒரு
பிரம்மாண்டமான ஜனக்கூட்டம் உள்ள ராஜ்யமும், உலக
மெங்கும் வியாபிக்கக் கூடிய ஒரு கருத்தும் இணைந்தன;
ரஷ்யா உலக ரட்சகர் என்ற எண்ணம், விரிவடையும் சாம்
ராஜ்யத்தை அமைக்க வேண்டும் என்று சரித்திர பூர்வ
மாகத் துலங்கி வந்த ரஷ்யப் பேராவல்—இவ்விரண்டையும்
ஊக்குவிப்பதற்கான ஸ்தாபன பலம் கொண்ட இயக்கமும்
சேர்ந்து கொண்டது. இந்த இயக்கத்தை நாட்டுக்குத் துரோ
கம் செய்யும் ஐந்தாம் படை என்று தள்ளிவிடுவதற்கில்லை;
உலக கம்யூனிஸத்திற்கு வசதியான தேசியத் தலைமை ஸ்த
லம் கிடைத்தது. அதனுடைய இலட்சியத்தை நிறைவேற்றச்
செஞ்சேனை தக்க சாதனமாக அமைந்தது.
'' சரித்திரம் எனும் சக்கரம் சுழன்று முன்னேறத்
தொடங்கிவிட்டது. உலகெங்கிலும் வியாபிக்கும் சோவி
யத் குடியரசுகளின் கூட்டணி அமையும்வரை, உலகெங்
கும் சோஷலிஸம் வெற்றி பெறும் வரையில் அந்தச் சக்கரம்
சுழன்று முன்னேறிக் கொண்டே யிருக்கும். '' இவ்வாறு
பல்கேரியக் கம்யூனிஸ்ட் தலைவர் ஜியார்ஜி டிமிட்ராவ்
(Georgi Dimitrov) 1935-இல் நடந்த இண்டர்நேஷனலின்
ஏழாவது உலகக் காங்கிரசில் கூறினார்.
ஆனால் காமின்டேர்ன் நடவடிக்கைகள் சக்கரம் சுழல்
வதுபோல் இயல்பான முறையில் முன்னேறவில்லை. அந்த
ஸ்தாபனத்திற்குள் பல்வேறு முரண்பாடுகள் இருப்பது வெளி
யாயிற்று. அதனால் ரஷ்ய அரசாங்கத்திற்கு என்ன ஆபத்து
நேர்ந்தாலும் உலகப் புரட்சி நிகழ்வதைத் துரிதப்படுத்த
வேண்டும் என விரும்பிய டிராட்ஸ்கியை ஸ்டாலின் வீழ்த்தி
விட்டார். இதிலிருந்து பிறநாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குச்
சுதந்திரம் கிடையாது என்பது தெரிந்துவிட்டது. இதன்
பிறகு அவைகள் மாஸ்கோவில் தாக்கீதுகளுக்குப் பணிந்தே
போக வேண்டி வந்துவிட்டது. காமின்டேர்ன் ஸ்தாபனம்
ஸ்டாலினுடைய கட்டளைகளைப் பிற நாட்டுக் கட்சியினருக்
குத் தெரிவிக்கும் தபால் நிலையம் போலாகிவிட்டது.
1927 லிருந்து 1932 வரை ஹிட்லரும், அவரது நாஜிகளும்
படிப்படியாகப் பலம் திரட்டிக்கொண் டிருக்கையில் ஜெர்
மன் கம்யூனிஸ்டுகள் இவர்களைத் தாக்கலாகாது என்றும்,
சோஷல் டிமொக்ராட் (Social Democrats) களைத்தான்
தாக்க வேண்டுமெனவும் காமின்டேர்ன் கட்டளையிட்டது.

ஹிட்லர் விளைவிக்கும் குழப்பத்திலிருந்து தாங்கள் வெற்றி காணலாம் என்று கம்யூனிஸ்டுகள் நம்பினர் என மேற்கூறப்பட்ட காமின்டேர்ன் உத்தரவுக்கு வியாக்யானம் கூறப்படுகிறது. ஆனால் ஜெர்மனியில் சோஷல் டிமொக்ராட்கள்தான் இங்கிலாந்து, ஃபிரான்ஸ் நாடுகளுடன் உடன்பாடு செய்து கொள்ள விரும்பியவர்களில் தலை சிறந்தவர்கள் என்பதும் உண்மை. 1918-ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுச் சண்டைக்குப் பிறகு, இங்கிலாந்தும் ஃபிரான்சும் சோவியத் யூனியனின் பகைவர்களாகக் கருதப்பட்டு வந்தனர் என்பதும் உண்மை. காரணம் எதுவாக இருப்பினும் நாஜிகள் ஆதிக்கம் பெற கம்யூனிஸ்டுகள் உதவி புரிந்தனர்.

1933-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் புதிய அபாயகரமான பகைவனை சிருஷ்டிக்கத் தாம் உதவியதை ஸ்டாலின் இறுதியாக உணர்ந்தார். இந்த உணர்ச்சியின் பயனாக ஹிட்லர்பால் அவரது தந்திரம் தலைகீழாக மாறியது. இந்த மாற்றத்தின் விளைவாக டிராட்ஸ்கி பக்தர்களை நூற்றுக்கணக்கில் ஜெர்மன் அரக்கர்களிடம் ஒப்புவித்து கொல்ல முனைந்தது மட்டும் மாறவில்லை.

ஆனால், ஹிட்லர் சோவியத் யூனியனை நெருக்குவதைத் தவிர்ப்பதற்காக ஸ்டாலின் தமது பழைய பகைவர்களான பிரிட்டனையும், ஃபிரான்சையும் புதிய நாஜி ஜெர்மனி மீது ஏவிவிட்டார். பிரிட்டிஷ், ஃபிரஞ்சு கம்யூனிஸ்டுகள் தங்கள் அரசாங்கங்களை எதிர்ப்பதை நிறுத்திக்கொண்டு, மக்கள் ஐக்கிய முன்னணிகள் மூலம் அவைகள் ஒத்துழைக்க வேண்டுமெனக் கட்டளை பிறந்தது.

பின்னர், இந்தத் தந்திரத்தைக் கைவிட்டு ஹிட்லருடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதை ஆதரித்தனர். 1939-இல் இந்த தந்திரங்களின் விளைவாக கேலிக்கூத்தான நாஜி சோவியத் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின் விளைவாக அதற்கு இரண்டு வாரங்களுக்குப் பின் ஜெர்மனி போலந்தைத் தாக்குவதும் இரண்டாவது உலக யுத்தம் தொடங்குவதும் எளிதாயிற்று.

உலகெங்குமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் பிரிட்டிஷ், ஃபிரஞ்சு யுத்த முயற்சிக்கு உதவலாகாது எனும் தாக்கீது பிறந்தது. இதற்குக் காரணம், இந்த யுத்தம், சாம்ராஜ்யத்திற்கான போர் எனச் சோவியத் ரஷ்யா கருதியதுதான். 1941 ஜூன் மாதத்தில் நாஜி படைகள் சோவியத் எல்லையைக் கடந்ததும், விசுவாசமுள்ள கம்யூனிஸ்டுகள் மீண்டுமோர் முறை குட்டிக்கரணம் அடிக்கும்படி பணிக்கப்பட்டனர். ஜெர்மனிக்கு எதிரான போர் இப்பொழுது ''மக்கள் போர்'' ஆக மாறிவிட்டது.



இவ்வாறாக உலகெங்குமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் சோவியத் அயல்நாட்டுக்கொள்கையை நிறைவேற்றும் கருவிகளாகவே பயன்பட்டு வந்திருக்கின்றன. இந்த சோவியத் அயல்நாட்டுக் கொள்கைக்கும் ஜார் மன்னர்களின் அயல் தேசக் கொள்கைக்கும் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணியின் தலைமையில் பாட்டாளி மக்களின் உலகப் புரட்சி தோன்றப் போகிறது என்ற தீங்கனவு பலிக்கவில்லை. ஆனால் பல நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் இலட்சியவாதிகளது மனதிலிருந்து இந்தக் கனவு மறையவில்லையென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அந்தக் கனவிற்கு ஒரு புது உருவம் கற்பிக்கப்படுகிறது. செஞ்சேனையின் சக்தியையும், சதி வேலையையும் அடிப்படையாகக்கொண்டு ரஷ்யாவின் தலைமையில் உதயமாகப்போகும் உலக கம்யூனிஸம்தான் இந்தக் கனவில் புதிய அபாயகரமான தோற்றம்.

அத்தியாயம்—7

# ஸ்டாலின் திட்டங்களும் கொலைகளும்

**1924**-ஆம் ஆண்டு ஜனவரியில் லெனின் இறந்த பின்பு அவருக்குப் பின் அதிகாரம் வகிக்க ஸ்டாலின், டிராட்ஸ்கி, ஜினோவிவ் (Zinoviev), காமனேவ் (Kamenev) முதலியோர் போட்டியிட்டனர். இந்நால்வரில் ஒவ்வொருவரும் புரட்சி வீரன் லெனினுடன் சேர்ந்து உழைத்து, அவரது அரசாங்கத்தில் பதவி வகித்த தலைவர்களில் ஒருவராக இருந்தனர்.

லெனின் இறந்த பின்பு அச்சமின்றி சுதந்திரமாக வாழலாம் என இந்நால்வரில் ஒருவர் நிச்சயமாக நம்பி இருக்க இடமிருந்தது. அவர்தான் ஸ்டாலின். தாம் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன், ''தன்னிடத்தில் ஏராளமான அதிகாரத்தை சேகரித்து வைத்திருப்பதாக'' ஸ்டாலினைப் பற்றி லெனின் எழுதியிருந்தார்: ''ஸ்டாலின் ரொம்ப முரடன். இந்த முரட்டுத்தனம் நமக்குள் இருந்தால் பரவாயில்லை. ஆனால் கட்சியின் பொதுக் காரியதரிசி என்கிற முறையில் இப்படி நடந்துகொள்ளுவதை ஆதரிக்கவே முடியாது. எனவே, என் தோழர்களுக்கு நான் சொல்லுகிறேன்:

ஸ்டாலினைப் பதவியினின்றும் விலக்க ஏதாவது வழி கண்டு பிடிக்க வேண்டும்.'' இவ்வாறு லெனின் ஸ்டாலினைப் பற்றி மேலும் குறிப்பிட்டிருந்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பின் லெனின் வாரிசு யார் என்பதற்கான போராட்டம் நடந்தது. அது ஸ்டாலினுக்குப் பூரண வெற்றியுடன் முடிவடைந்தது. எஃகுக்குச் சமமான உறுதியுள்ளவர் என்று தம்மைப்பற்றி பெருமை யடித்துக்கொண்டவர் இந்த ஸ்டாலின்தான்.

இறுதியாக ஸ்டாலின் வெற்றி பெற்றதற்குக் காரணங்கள், 1917-இல் லெனின் செய்த மாதிரியே கோட்பாடுகளையும், தந்திரத்தையும் சேர்த்துக் கையாண்டதும், கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியாக இருந்ததனால் கிடைத்த வாய்ப்பும்தான். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் எம்மாதிரி முறையைக் கையாளவேண்டும் என்பதை லெனின் முன்கூட்டியே முன்ஜாக்கிரதையுடன் வகுத்திருந்தார். ''ஓர் நாட்டில் ஐந்து கட்சிகள் இருந்தால் அவைகளில் மூன்றுடன் சேர்ந்து ஐந்தாவது கட்சியை ஒடுக்கவேண்டும். அப்புறம் எஞ்சியுள்ள கட்சிகளில் இரண்டுடன் சேர்ந்து கொண்டு, நான்காவது கட்சியை அழிக்கவேண்டும். கடைசியாக பாக்கியுள்ள இரண்டில் ஒன்றுடன் சேர்ந்துகொண்டு மூன்ருவது கட்சியை அடக்கவேண்டும். அப்புறம் எதிர்க் கட்சி ஒன்றுதான் மிஞ்சுமாகையால் அதைச் சுலபமாகச் சமாளித்துவிடலாம்.''

லெனின் போதனையைப் பின்பற்றி ஸ்டாலின், லெனின் கிராடு, மாஸ்கோவின் கட்சித் தலைவர்களான ஜினோவிவ் காமனேவ் முறையே உடன் சேர்ந்துகொண்டு, டிராட்ஸ்கியை எதிர்த்தார். அவரை எதிர்த்த நால்வரில் டிராட்ஸ்கி தான் மிகுந்த பலம் பொருந்தியவர். லெனின் இறந்துபோன ஓராண்டுக்குள் புரட்சிப் போர்ச்சபையில் தலைமைப் பதவியை டிராட்ஸ்கி துறக்கவேண்டி வந்துவிட்டது. அவரது ஆதிக்க சக்தி அதோடு முடிவடைந்தது. பல ஆண்டுகள் வெளி நாடுகளில் தேசப்பிரஷ்டனாக வாழ்ந்துவிட்டு, இறுதியில் மாஸ்கோ தலைமைப் பீடத்தின் கையாட்களால் மெக்ஸிகோவில் கொல்லப்பட்டார் டிராட்ஸ்கி.

ஓரளவு டிராட்ஸ்கியின் கருத்துக்களைக்கொண்ட மற்றிருவர் மீது ஸ்டாலின் கவனம் செலுத்தினார். அவ்விருவரும் நாட்டில் சோஷலிஸத்தையும், யந்திரத்தொழில் பெருக்கையும் துரிதப்படுத்துவது, பிறநாடுகளில் புரட்சியை விளைவிப்பது, கட்சிக்குள் சற்று கூடுதலான அபிப்பிராய சுதந்திரம் அளிப்பதுபோன்ற டிராட்ஸ்கியின் கொள்கைகளை ஆதரித்தனர். அபிப்பிராய சுதந்திரம் கோருவதற்கு ஓரளவு ஆதரவு இருந்தாலும், சோஷலிஸம், தொழில் பெருக்கம், வெளிநாட்டில் புரட்சி முதலிய கருத்துக்களுக்கு அவ்வள



1925 இறுதியில் நடந்த கம்யூனிஸ்டுக்
வாக ஆதரவில்லை. 1925 இறுதியில் நடந்த கம்யூனிஸ்டுக்
கட்சியின் பதினன்காவது காங்கிரசில் ஸ்டாலினிடம்
விசுவாசமாயிருந்தவர்கள் இந்த வாதங்களை ஏற்கவில்லை.
இதற்கப்புறம் இரண்டு ஆண்டுகளுக்குள் ஜினோவிவ், காம
னேவ் இருவரும் வகித்த எல்லாப் பதவிகளும் அதிகாரமும்
அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன.
எதிர்ப்பு மாய்க்கப்பட்டதும், தமது அதிகாரத்தைப்
பலப்படுத்துவதற்காக, தாம் கையாண்ட கொள்கைகளை
ஸ்டாலின் தலைகீழாக மாற்றினார். இதன் பயனை முதலில்
அநுபவித்தவர்கள் குடியானவர்கள்தான். 1917-ஆம் ஆண்டு
நவம்பர் மாதம் லெனின் நில விநியோகம் செய்தார்.
ஆனால் இதற்குப் பின்பு நடந்த உள்நாட்டுச் சண்டையில் குடி
யானவர்களின் தான்யங்களைக் கட்டாயப்படுத்திப் பறித்து,
பல்வேறு தண்டவரிகளுக்கும் அவர்களை உள்ளாக்கினார்.
உள்நாட்டுச் சண்டை முடிவடைந்ததும், இந்த நிர்ப்
பந்தக் கொள்கைகளுக்கு மிகுதியான எதிர்ப்பு ஏற்பட்டது.
உடனே லெனின் இந்தத் தந்திரங்களைக் கைவிட்டுவிட்டு,
புதிய பொருளாதாரக் கொள்கையை வகுத்தார். தங்கள்
நிலத்தில் கிடைக்கும் தான்யத்தை விற்பதில் குடியானவர்
களுக்கு கணிசமான அளவுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது
இந்தக் கொள்கையின் ஒரு அம்சம்.
இந்த நிதானம் வாய்ந்த திட்டங்களைத் தற்காலிக
மாக நீடிக்கவேண்டும் என்று ஸ்டாலின் வற்புறுத்திய
தற்குக் காரணம் புரட்சியை ரஷ்யாவில் பலப்படுத்தவே.
இதன் விளைவாக ரஷ்ய மக்களில் முக்கியமான பகுதியினரின்
ஆதரவை அவரது அதிகாரவேட்டையின் நெருக்கடியான
கட்டத்தில் பெறுவதற்கு வசதியளித்தது.
முதலாளித்வ நாடுகளால் ரஷ்யா எந்தக் காலத்திலும்
தாக்கப்படலாம் என்கிற அபாய அறிவிப்பின் மூலம், ஸ்டாலின்
பல ஐந்தாண்டுத் திட்டங்களை வகுக்கலானார். முதலாளித்வ
ஆக்ரமிப்புப் பூச்சாண்டி இன்னமும் ரஷ்யாவால் கையாளப்
பட்டு வருகிறது. நிர்ப்பந்தமாக யந்திரத்தொழில் பெருக்
கம் செய்வதில் இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் போல் எங்கும்
கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.
இதற்காக, சமீபத்தில் தாராளப்போக்குடன் விவசாயி
களை நடத்திய திட்டத்தை ஸ்டாலின் கைவிட வேண்டியிருந்
தது. நிர்மாண வேலைக்கும் ஆலைத்தொழில் பெருக்கத்திற்கும்
அதிகப்படியாகப் பாட்டாளிகள் வேண்டியிருந்தது. இதற்கு
உதவுவதற்காக விவசாயிகள் தங்கள் தான்யங்களைக் கூடுத
லாக, ஆனால் குறைந்த விலையில் நகரங்களுக்கு அனுப்பும்படி
நிர்ப்பந்திக்கப்பட்டனர். கூட்டுப்பண்ணைகள் அமைப்பதில்
அரசாங்கத்தார் வெகு தீவிரமாக இருந்தனர். விவசாயத்திற்

கான யந்திரங்களை, யந்திரக்கலப்பை நிலையங்களில் திரட்டி விவசாயிகளுக்கு உதவி புரிந்தனர். விவசாயத்தை இப்படித் தீவிரமாக அரசியல் ஆதிக்கத்திற்குட்படுத்தியது விவசாயிகளின் வெறுப்புணர்ச்சியைச் சமாளிப்பதற்கு உதவியது. இது மட்டுமல்ல; எதிர்க்கத் துணிந்த லட்சக்கணக்கான குடியானவர்களை ஒழித்துக்கட்டவும் பயன்பட்டது. தான்ய உற்பத்தி விரைவாகச் சரிந்து போனாலும் நகரங்களுக்குக் கூடுதலாகவே தான்யங்கள் அனுப்பப்பட்டன.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் தேசம் முழுதிலும் எவ்வளவு உற்பத்தியாக வேண்டும், பொருளாதார அமைப்பின் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு ஆலையிலும் எவ்வளவு உற்பத்தியாக வேண்டும் என்ற அளவு திட்டம் செய்யப்பட்டது. அளவு திட்டம் செய்யப்பட்டதும் அதன்படி உற்பத்தி செய்வதற்கான எல்லா முறைகளையும் நயமாகவோ, பயமுறுத்தியோ கையாண்டனர். அமெரிக்கத் தொழில் நுட்பங்களை அறிந்து பயன்படுத்தியாவது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என அதிகாரிகள் கூறியதைக் கேட்டால், கேலியாக சிரிக்கவே தோன்றும். ''லெனினிஸத்தின் அடிப்படை'' என ஸ்டாலின் எழுதிய நூலில் (1924 ஏப்ரலில் ஸ்வர்டுலாவ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள் அடங்கியது) ''அமெரிக்கத்திறன்'' என்றால் என்ன என்பதை விளக்கியுள்ளார். ''தடங்கல் என்றால் என்னவென அறியாமல், அப்படியே தடங்கல் ஏற்பட்டாலும் மனம் தளராமல் உழைக்கும் கட்டுப்படுத்த முடியாத ஆற்றலும், எல்லா இடைஞ்சல்களையும் அகற்றும் வரையில் ஒழுங்குக்குட்பட்ட விடாமுயற்சியுடன் சலியாது உழைத்தல், ஒருவேலையை ஏற்றால் அது அற்பமானதாயிருந்தாலும் அது முடிவடையும் வரை உழைத்தல்; இம்மாதிரி ஆற்றல் இல்லாவிடில் எந்த முக்கியமான நிர்மாண வேலையும் சாத்தியமன்று.''

இந்தப் புகழுரைக்கும் ஸ்டாலின் நிபந்தனை விதித்தார். ''ரஷ்யர்களின் பரந்த, புரட்சிகரமான செயல் ஆர்வம் அமெரிக்கருக்கு இல்லாததனால், அவர்களது திறன் குறுகிய, கொள்கை நிர்ணயமில்லாத வர்த்தகமாக மாறிவிடுகிறது'' எனக் கூறி அதற்கு ரஷ்யர்கள் இடம் கொடுக்கலாகாது என எச்சரிக்கை செய்தார். ஆனால் இதிலிருந்து அவர் கண்ட முடிவில் வெற்றிப் பெருமிதம் காணப்படுகிறது. கட்சி வேலையிலும், அரசாங்கப் பணியிலும், ''ரஷ்யர்களின் பரந்த புரட்சிகரச் செயல் ஆற்றலும், அமெரிக்கச் செயல் திறனும் சேர்ந்திருந்தது. இதில்தான் லெனினிஸத்தின் சாரம் அடங்கியிருக்கிறது.''

கொள்கை கெடுபிடி சற்றுத் தளர்ந்ததும் வாராந்தரக் கூலிக்குப் பதில், வேலைக்கேற்ற கூலி முறை அநுஷ்டிக்கப்பட்



திட்டத்திற்கு அதிகமாக
டது. அவர்களுக்கு வகுக்கப்பட்ட சன்மானமாகக்
உற்பத்தி செய்தவர்களுக்கு கூடுதலான கூலி நீடிக்கவில்லை;
கொடுக்கப்பட்டது. ஆனால் இந்தச் சலுகை காட்டிய
ஏனெனில் வேலை செய்யும் நேரம் முந்தி அவர்கள் உயர்த்தப்பட்டதனால்
அசாத்திய உற்பத்தி அளவுக்குமேல் நற்சாட்
உபரிக்கூலி கிடைப்பதில்லை. பலவிதமான பரிசுகள், வழங்
சிப் பத்திரங்கள், பதக்கங்கள் யாவும் தாராளமாக வெளித்தோற்றத்திற்குப்
கப்பட்டன. ஆனால் சுமுகமான கமிஸ்ஸாரி
பின் குண்டாந்தடி தயாராகக் காத்திருந்தது. வேலைக்குறைவுக்குச்
லிருந்து கீழ்க்கடையிலுள்ளவன் வரையில் அறிவர். வேலை
சமாதானம் கூறித் தப்ப முடியாது என்பதை சந்தேகமின்றி சர்வ
யில் தவறி, திட்டம் நிறைவேறாவிடில்
நாசம் விளையக்கூடும் என்பதும் திண்ணம்.
வாய்ந்தவையா
இந்த முறையில் யாவும் முரட்டுத்தனம் கண்டிராத
யிருப்பினும், அவைகளின் பயனாக சரித்திரமே யந்திரத்தொழில் மய
அளவுக்கு ஒரு சக்தி வாய்ந்த நவீன தோன்றியது. இந்த
ராஜ்யம் மிகக் குறுகிய காலத்தில் சோவி
வெற்றிக்கு ருசுவாக இரண்டாவது உலகயுத்தத்தில் உற்பத்தி செய்து
யத் மக்கள் ஏராளமாக யுத்த சாதனங்கள் எஃகு போன்ற
குவித்ததைக் கூறலாம். யுத்தத்திற்குப்பின் ஜலவாயு
கனத்தொழில்களில் மட்டுமல்ல, அணுசக்தி, அசாத்ய
குண்டுகள், ராணுவ விமான உற்பத்தியிலும் ரஷ்யா ஊர்ஜிதம்
முன்னேற்றம் கண்டது மேற்கூறிய வெற்றியை
செய்கிறது.
வெற்றிகாண ரஷ்யா
தொழில் துறை முன்னேற்றத்தில் இதன் விளைவாக
எத்தனை உயிர்ச்சேதம் அடைந்திருக்கிறது? மக்களுக்கு துவே
ரஷ்யாவுக்குள்ளேயே அரசாங்கத்தினிடம் பெறவேண்டும்.
ஷம் ஏற்பட்டிருக்கக்கூடும். புரட்சி வெற்றி முக்கியமான,
அது சிதைவுறாமல் இருக்கவேண்டும் என்பதே ஸ்டாலினின் சித்தாந்
தவிர்க்கமுடியாத குறிக்கோள் என்பதே பயன்படுத்துவ
தம். ஆகையால் மக்களை யந்திரங்கள் போல் நியாயம்
தும், மனித உணர்ச்சிகளை மதிக்காமலிருப்பதும்
என்றே கருதப்பட்டது.
காட்டும் உறுப்பி
சற்றுப் பலஹீனம் அல்லது தயக்கம் போல்ஷ்விக்
னர்களை அவ்வப்போது ஒழித்துக்கட்டுவது காமின்
ஸ்தாபனத்தின் அடிப்படைக் கோட்பாடாயிருந்தது. அயல்நாட்டுக்
டேர்னின் இருபத்தியொரு நிபந்தனைகளின்படி கொள்கையை
கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்த ஒழித்தல் ஸ்டாலின்
நிறைவேற்ற வேண்டும். ஆதிக்கம் பெறுவதற்கு மாய்க்க
நடத்திய போராட்டத்தில் எதிராளிகளை இம்மாதிரி
இது ஒரு கைதேர்ந்த தந்திரம். ஆதியில் அநுமதி
அழித்தல் வேலைக்கு கட்சியின் அரசியல் துறை

வேண்டும். இதை சர்க்காரின் தண்டோபாயமாக மாற்றியது ஸ்டாலினின் கைங்கரியம். அரசாங்கமும், அதை நடத்தும் கட்சியும் ஒன்றாக மாறிவந்ததற்கு இது ஒரு அத்தாட்சி.

நிர்ப்பந்தம் செய்து ஆலைத்தொழில் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்ப்பு அதிகரித்ததும் ஜினோவிவும், காமனேவும் சிறையில் அடைக்கப்பட்டனர். 1936-ஆம் ஆண்டு, ஆகஸ்டில் எதிரிகளை ஒழித்துக்கட்டுவது சம்பந்தமான முதல் பகிரங்க விசாரணை உலகத்தோருக்கு பயங்கர அதிர்ச்சியை அளித்தது. நாசவேலை, கட்சித்துரோகம், பிளவு விளைவித்தல்தான் அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள். பார்ப்போர் கண்டு பிரமிக்கும்படியான, புதிர்போன்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் மூலம் ஸ்டாலினுக்குப் போட்டியாயிருந்தவர்கள் ஒவ்வொருவராக தாங்களாகவே தங்களைத் தண்டிப்பதற்கான வாக்கு மூலங்கள் அளித்தனர்.

அரசாங்க வக்கீலான விஷின்ஸ்கி (Vishinsky) பிரதிவாதிகளிடமிருந்து தனது கேள்விகளுக்குப் பின்வரும் பதில்களைப் பெற்றது கண்டு சட்டஞானமுள்ளவர்கள் வியப்படைந்தே வருவர்.

விஷின்ஸ்கி :—1933-இல் நீங்கள் எழுதிய கட்டுரைகளில் கட்சியிடம் விசுவாசமாயிருப்பதாகக் கூறினீர்களே, அவைகளை இப்பொழுது எவ்வாறு மதிப்பிடலாம்? ஏமாற்றுவது எனக் கூறலாமா?

காமனேவ் :—இல்லை, ஏமாற்றத்தைவிட மோசமானது.

விஷின்ஸ்கி :—நம்பிக்கை மோசம் எனலாமா?

காமனேவ் :—அதையும் விட மோசம்.

விஷின்ஸ்கி :—ஏமாற்றத்தைவிட மோசம். நம்பிக்கை மோசத்தைவிட கேவலம், உங்கள், செய்கையை ராஜாங்கத் துரோகம் எனக் கூறலாமா?

காமனேவ் :—அதுவே சரியான வார்த்தை.

தலைவர்களுடைய ஒப்புதல் வாக்குமூலங்கள், ஐந்தாண்டுத் திட்டங்களை எதிர்த்ததாகக் கருதப்பட்ட, நிதானம் மிக்க அரசியல்வாதிகளையும், குற்றவாளிக் கூண்டில் தள்ளிவிட்டன. இவர்கள்தான் அடுத்தபடியாக ஸ்டாலினின் கொடூரத்திற்கு இலக்கானவர்கள். சோவியத் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தவர்களும், தாக்குதல்களுக்குள்ளாயினர். கட்சியும், அதில் ஸ்டாலினால் நியமிக்கப்பட்ட சில்லறை உத்தியோகஸ்தர்களும் அடியிலிருந்து மேல்வரை, இந்த ஒழித்தல் முறைக்குட்பட்டனர். ராணுவத்தில் பகுதித் தலைவர்களாயிருந்த முந்நூறு பேரில் 183 பேரின் தலைகள் வாங்கப்பட்டன. கடைசியில் பிறரைத் தூக்கிலிடப் பாடுபட்டவர்களே தூக்குமேடை ஏறினர்.



இந்த ஒழித்துக்கட்டலில் அதிக்கிரமங்கள் நிகழ்ந்த
தற்கு, பல புதுக் காரணங்கள் கூறப்படுகின்றன. ஸ்டாலி
னுடைய அதிகார மோகப்பித்து, பொருளாதார அபிவிருத்தி
காண்பதற்கான நிர்ப்பந்தத்திற்கு யாரையாவது காவு
கொடுக்க வேண்டிய நிலை,—சூழ்ச்சிகள்,—தேசத்துரோகம்
மூலமே தாங்கள் முன்னேறலாம் என்பதனால், இந்தத் தீய
வழிகளில். என். கே. வி. டி*யினருக்குள்ள அக்கறை—இவை
போன்ற பல காரணங்கள். இதற்கு முழு விளக்கம் யாதா
யிருப்பினும், யந்திரத் தொழில் அபிவிருத்திக்காக ரஷ்யா
அளவற்ற ரத்தம் சிந்தி, துயரங்களும், அநுபவிக்கவேண்டி
வந்துவிட்டது. இவ்வளவு துயரங்களும் அநுபவித்துத்தான்
முன்னேற வேண்டுமா என்று நாம் கொள்ளக்கூடிய அதிர்ச்சி
யில் இவ்வளவு கஷ்டப்பட்டு ரஷ்யா அடைந்துள்ள பொரு
ளாதாரச் சக்தியைக் குறைவாக மதித்துவிடலாகாது.
சோவியத் யந்திரத் தொழில் அபிவிருத்தியின் அளவும்
மகத்துவமும், ஆஃபிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்காவில்
லட்சோபலட்சம் மக்களை மயக்கிவிட்டது. சுய முயற்சியால்
ஒரு பின்தங்கிய நாடு எவ்வளவு தூரம், எவ்வளவு துரிதமாக
முன்னேறலாம் என்பதற்கு ரஷ்யா ஒரு அத்தாட்சி என
அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களில் பலர் சோவியத்
முறைதான் சிறந்த முறை என்றும், அவர்கள் அடைந்த
பயனிலிருந்து அதற்காக அவர்கள் மகத்தான உயிர்ப் பலி
கொடுத்தது நியாயமே என்றும் நினைக்கின்றனர்.

அத்தியாயம்—8

# ரஷ்யாவும், யுத்த கெடுபிடியும்

இரண்டாவது மகாயுத்தத்தில் ஐரோப்பிய வெற்றி
இரண்டாவது மகாயுத்தத்தில் ஐரோப்பிய வெற்றி ஸ்டாலின் சிந்
தினத்தன்று, உலகத்தில் தமது நிலைபற்றி ஸ்டாலின் சிந்
தித்தபொழுது, அவர் மிகுந்த ஆத்ம திருப்தியடைய இட
மிருந்தது. போரின் மத்தியில், முடிவு பற்றிக் கவலை மிகுந்
திருந்த காலத்தில் எதிர்பார்த்ததைவிட ரஷ்யா, மிகுதியான
பலம் பொருந்தியிருந்தது. ரஷ்யா அடைந்திருந்த நஷ்டம்
அசாத்யமானதுதான். ஆனாலும் எதிர்பார்த்திருந்ததைவிட
ரஷ்யா பலம் பெற்றிருந்தது. ஸ்டாலின்கிராடில் அந்

*என். கே. வி. டி. என்பது ரஷ்ய ரகசிய போலீஸ் படை.

நாட்டு மக்கள் காட்டிய தீரம் காவியச் சிறப்பு வாய்ந்தது என்று கூறலாம். ராணுவ எதிர்ப்புத் துறையில் சில நூறு பேர் நின்று கிரேக்க நாட்டில் **தர்மாபிலே*** (Thermopylae) எனும் மலைக் கணவாயருகில் பகைவர்களை எதிர்த்து நின்ற சம்பவத்திற்கு ஈடாகும் ஸ்டாலின்கிராடு காட்டிய துணிவு.

ரஷ்ய யுத்த முயற்சியை நேச நாட்டினர் மனமாரப் புகழ்ந்தனர். ரஷ்ய மக்களின் மதிப்பும், செஞ்சேனையின் சிறப்பும் உச்ச நிலையடைந்தது. உலகத்தின் எதிர்காலத்தையே பாதிக்கவல்ல மூன்று வல்லரசுகள் கூட்டம் டெஹ்ரானிலும் (Tehran), யால்டாவிலும் (Yalta) கூடுகையில் அந்தச் சபைகளில் மற்றவர்களுடன் ஸ்டாலின் சரிசமானமாகக் கலந்துகொண்டார். ரஷ்யப் போர் வீரர்கள் கிழக்கு ஐரோப்பா, பால்கன் நாடுகளிலிருந்து நாஜி ஆக்ரமிப்பாளர்களை அநேகமாக அப்புறப்படுத்திவிட்டனர். இதாலியிலும், ஃபிரான்சிலும் கம்யூனிஸ்ட் கட்சியினர் பகைவர்களை எதிர்த்துத் தீரமாகப் போராடினர்.

பெருத்த அளவில் புதிய சோவியத் ஆலைகள் யுத்த சாதனங்களை உற்பத்தி செய்து குவித்தன. ரஷ்யாவில் சிறு சிறு எதிர்ப்பு இயக்கங்கள் இருந்தாலும், அவைகளை நாஜிகள் பயன்படுத்தத் தவறிவிட்டனர். இதை ஒதுக்கி விட்டுப் பார்த்தால் சோவியத் மக்கள் ஒன்றுபட்டுத் தங்களது தாய் நாட்டை பாதுகாத்தனர் என்றே கூறவேண்டும்.

யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கையில், ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் கிட்டத்தட்ட குழப்பம் மிகுந்த நிலை அவர்களை எதிர்நோக்கி நின்றது. பல தலைமுறைகளாக பொருளாதார, அரசியல் அநீதிகளால் துன்புறுத்தப்பட்டு வந்த மக்களை புதிய துயரமும், நாசகாரச் செயல்களும் பெரிதும் வாட்டின. மேற்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், சோவியத் நாட்டினர் தலையிட்டுப் பரிகாரம் செய்யும்படியான அளவுக்கு சூன்யம் நிலவியது.

இருபத்து எட்டு ஆண்டுகளுக்கு முன், அக்டோபர் புரட்சி நிகழ்ந்த நாட்களில் மேற்கத்தி நாடுகளில் புரட்சி தோன்றி தங்களுக்கு உதவி புரிய வேண்டும் எனப் போல்ஷிவிக்குகள் கவலையுடன் எதிர்பார்த்தனர். அச்சமயம், ''ஜெர்மனி கிளர்ந்தெழாவிடில், அல்லது ஜெர்மனி துணிவின்றி பலஹீனமாக எழுந்தால், நமது படைகளுடன் அந்நாட்டில் நுழைவோம். இந்தப் படையெடுப்பு நம்மைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்கல்ல, புரட்சிப் படை முன்சென்று தாக்க'' என டிராட்ஸ்கி முழங்கினர்.

*தர்மாபிலே: இங்கு கி. மு. 480வது ஆண்டில் லியோனிடாஸ் என்பவன் தலைமையில் சில நூறு ஸ்பார்ட்டாவாசிகள் பெர்ஷியர்களைத் தடுத்து நிறுத்தினர்.



ஆங்காங்கு தம்மிச்சையாக எழுந்த கம்யூனிஸ்ட் எழுச்சிகளுக்கு உதவி புரியும் நோக்கத்துடன்தான் டிராட்ஸ்கி படையெடுக்க விரும்பினர். வார்ஸாவின் எல்லைப்புறத்திற்கப்பால் செல்வதற்கான சக்தி செஞ்சேனைக்கில்லை, அப்படிச் செல்ல விரும்பவுமில்லை. இந்த எல்லையை அப்படை 1920-இல் அடைந்தது.

1945-ஆம் ஆண்டு மே மாதம் நிலை முற்றிலும் மாறாக இருந்தது. வெற்றி பெற்ற செஞ்சேனை சோவியத் எல்லையிலிருந்து எல்பே (Elbe) நதிவரையிலுள்ள நிலப் பரப்பை வசப்படுத்திக்கொண்டது. இந்தப் படையுடன் மாஸ்கோவில் பயிற்சி பெற்ற நாடு கடத்தப்பட்டவர்கள், அரசாங்கம் நடத்தவோ அல்லது தற்காலிகமாக ஸ்தல ஐக்கிய முன்னணிகளில் சேரவோ தயாராக வந்து சேர்ந்தனர்.

யுத்தத்திற்குப் பின் சோவியத்தினரின் ராஜதந்திரம் பண்படாத முறையில் வியாபித்து வந்ததை உலகம் கண்டது. அக்காலத்தில் நிகழ்ந்த எந்தப் பிரச்னையையும், தங்கள் நலனுக்கு உகந்த முறையில் அவர்கள் பயன்படுத்தி வந்ததையும் உலகம் கவனித்து வந்தது. மார்க்ஸின் கொள்கைகள் லெனினுடைய தந்திரங்கள், ஸ்டாலினுடைய படைகள் யாவற்றையும் தங்களிஷ்டப்படி, தங்களுக்கு யுத்தம் என்று தோன்றிய சமயங்களிலெல்லாம் திகைப்பூட்டும் வகையில் சோவியத் நாட்டினர் பயன்படுத்தி வந்தனர்.

இம்மாதிரி பல்வேறு வகை அநுஷ்டானங்களிலும் ஒரே கொள்கை துலங்குவதைக் காணலாம். அதாவது ரஷ்ய சாம்ராஜ்ய நலன் பெருகி விரிவடைய வேண்டும் எனும் துடிப்பு, அணுசக்தி கட்டுப்பாட்டுக்காக தாராள நோக்குடன் அக்கிசன்-லிலியந்தால்—பருக்- (Acheson-Lilienthal-Baruch) யோசனைகளைத் தடுத்ததிலிருந்து, கல்நெஞ்சுத்தனமாக பெர்லினை முற்றுகை செய்ததுவரை, ஐ.நா. சபையின் விசேஷப் பணி புரியும் ஸ்தாபனங்களை துவக்க முதல் பகிஷ்கரித்ததிலிருந்து, மறைமுகமாக கிரேக்க உள்நாட்டுச் சண்டையில் தலையிட்டதுவரை, பட்டவர்த்தனமாக ஈரானில் புகுந்ததிலிருந்து, துருக்கியைப் பயமுறுத்தியதிலிருந்து வட கொரியரைத் தூண்டிவிட்டு தென் கொரியாவில் புகுந்ததுவரை; எல்லாவற்றிலும் சாம்ராஜ்ய நலன் பெருக வேண்டும் எனும் துடிப்பின் சின்னத்தைத்தான் காண்கிறோம்.

எனினும் யுத்த அமளி அடங்கியதும், கிழக்கு ஐரோப்பாவில் யுத்த காலத்தில் செஞ்சேனை புகுந்த எல்லையிலேயே ரஷ்யர்கள் ஆக்ரமிப்பு தடைப்பட்டு நின்றுவிட்டது. இந்த எல்லைக்கப்பால், ஈரான், துருக்கி, கிரீஸ், இதாலி, பெர்லின் நகர் முதலிய விடங்களில் ரஷ்ய முன்னேற்றம் எதிர்த்துப்

பின்னுக்குத் தள்ளப்பட்டது. முன்னேற்றம் தடைப்பட்ட
தற்கான காரணம் அந்தந்த நாட்டு மக்களும், அரசாங்கங்
களும் உறுதியுடன் எதிர்த்தது; ரஷ்யர்களின் கர்வம் மிகுந்த
பிடிவாத குணம்; ட்ருமன் கொள்கை; மார்ஷல் திட்டம்; வட
அட்லாண்டிக் உடன்பாட்டுக் கூட்டுறவு; நேடோ (Nato) முத
லியவற்றில் மக்களின் அறிவுமிக்க ஆதரவு எல்லாம் சேர்ந்
ததன் பலன்தான். ரஷ்யாவின் கைப்பொம்மை நாடுகளில்
மிகப் பணிவானது எனப் பெயர் வாங்கிய டிட்டோவைத்
தலைவராகக் கொண்ட யூகோஸ்லாவியா ரஷ்யப் பிடியிலிருந்து
பூரணமாக விடுபட்டு மேற்கு நாடுகளின் நேசத்தை நாடி
வந்தது.

ரஷ்யாவின் தொடர்பை அறுத்துக்கொள்ளும் வரையில்,
தேர்ந்த மார்க்ஸியவாதியாக இருந்ததன் மூலம், கிழக்கு
ஐரோப்பாவில் பிற நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளிடையே
டிட்டோவின் செல்வாக்குப் பெருகி இருந்தது. 1948-ஆம்
ஆண்டு ஜனவரியில் ஹங்கேரியின் சக்தி வாய்ந்த கம்யூனிஸ்ட்
தலைவர் மட்யாஸ் ரகோஸி (Matyas Rakosi) பால்கன் நாடு
கள் டிட்டோவுக்குத் துணை நிற்குமே யொழிய ரஷ்யாவுடன்
சேராது என தமது புடாபெஸ்ட் காரியாலயத்தில் என்னிடம்
கூறினர். ரஷ்யாவுடன் நேசப்பான்மையுடனும், ஆனால் சுதந்
திரத்துடனும் கூடிய தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளின்
ஐக்கிய ராஜ்யம் தோன்றும் என ரகோஸி கூறினர்.

பிற பால்கன் நாடுகள் போலன்றி யுகோஸ்லாவியர்கள்
பிறர் உதவியின்றியே தங்கள் நாட்டிலிருந்து ஜெர்மானியர்
களை விரட்டிவிட்டனர். 1945-லிருந்து 1948 வரையுள்ள
இடைக்காலத்தில் யுகோஸ்லாவியாவின் மதிப்பு கிழக்கு
ஐரோப்பாவில் உயர்ந்திருப்பதை அந்தப் பிராந்தியங்களுக்கு
விஜயம் செய்தவர்கள் தெளிவாகக் கண்டனர்.

ஐ.நா.வின் அலுவலாக நான் 1948 ஜனவரியில் இரண்டு
வார காலம் இந்தப் பிராந்தியத்தில் பிரயாணம் செய்தேன்.
நான் அச்சமயம், சந்தித்தவர்கள் ஸ்டாலின் பெயரை
ஒருதரம் குறிப்பிட்டால் டிட்டோவின் பெயரைப் பன்
னிரண்டு முறை பிரஸ்தாபித்ததை நான் கேட்டேன்.
நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் கம்யூனிஸம்
வந்தே தீரும் என இந்நாட்டினர் நம்பினாலும், இந்
நாடுகள் டிட்டோவின் கொடியின் கீழ் ஒன்றுபட்டு சோவி
யத் யூனியனின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டே வாழ்வர் என
பகிரங்கமாக மக்கள் தங்களது நம்பிக்கையை வெளியிட்
டனர்.

1953 ஜூனில் கிழக்கு ஜெர்மனி பாட்டாளிகள் கிளர்ந்
தெழுகையில் சோவியத் யதேச்சாதிகாரத்தை எதிர்த்தே
கலகம் செய்தனர். டிராட்ஸ்கி மறைந்து முப்பது ஆண்டு



களுக்குப் பின் (பிறநாடுகளில் கம்யூனிஸத்தைப் புகுத்திப்
படையெடுக்க வேண்டும் என்கிற அவரது கொள்கையை
அநுஷ்டித்து) செஞ்சேனை ஐரோப்பாவின் உயிர்நாடி எனும்
இடங்களில் படையெடுத்துச் சென்றது. உலகப் புரட்சி
நிகழ்த்துவதற்குத் தங்களது பாட்டாளித் தோழர்களான
ஜெர்மானியர்களுக்கு உதவி புரிவதற்காகவல்ல, அவர்கள்
ரஷ்யாவின் பகைவர்களெனச் சுட்டுத்தள்ளுவதற்காகப்
படையெடுத்தனர் என்பதை நினைக்கையில் கேலிக் கூத்தா
கவே இருக்கிறது.

1950-இல் ஐரோப்பாவிற்குள் படையெடுத்துச் செல்
லும் ரஷ்ய முயற்சி தடைப்பட்டது. ஆகையால் தங்கள்
பேராசையைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக ரஷ்யர்கள்
கிழக்கே தங்கள் கவனத்தைச் செலுத்தினர். ஐரோப்பாவில்
ஸ்டாலின் எதிர்பார்த்ததற்குக் குறைவாகவே பலன்
கிடைத்தது. ஆசியாவில் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே
கிடைத்தது.

சீன நிகழ்ச்சிகளை அமெரிக்கா மாதிரியே சோவியத்
அரசாங்கமும், தவருக மதிப்பிட்டது. சீனர்கள் சுயமுயற்சி
யினால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்கிற அடிப்
படையில் ரஷ்யா செயல்புரிவதாகத் தோன்றிற்று. சில
காலத்திற்கு சியாங்கே தேசிய ஆட்சி சின்னமாக விளங்குவார்
என்றும் ரஷ்யர் நம்பினர். 1949-இல் சீனு புயல்வேகத்தில்
அதிகாரபீடத்தை நெருங்கும் காலத்தில் ரஷ்யா, காலந்
தாழ்த்தி சீனுவுக்கு உதவிபுரிந்தாலுங்கூட, ரஷ்யாவின்
முயற்சியோ, அன்றி அதிகார பலமோ, அல்லது அதனு
டைய தீர்க்கதரிசனமோ சீனரின் இறுதிவெற்றிக்கு காரண
மாக இருக்கும் என்று சீனர்களோ, ரஷ்யர்களோ நம்பி
யிருக்க மாட்டார்கள்.

மேற்கே கம்யூனிஸ்ட் முன்னேற்றம் தேக்க நிலையை
அடைந்துவிட்டது. சீனுவில் உறுதியான கம்யூனிஸ்ட் ஆட்சி
நடக்கிறது. இந்த நிலையில் ரஷ்ய முன்னேற்ற வேகம் கிழக்
குத் திசையில் விரைவாகச் சென்றது. 1950 ஜூன் மாதம்
இந்த வேகத்தின் விளைவு வட கொரியா 38-வது அக்ஷ
ரேகையைத் தாண்டிச் செல்ல உதவியது. வட கொரியா
வுக்கு ஆயுத உதவி புரிந்து, சரியான காலத்தில் கோட்
டைத்தாண்டும்படிச் செய்ததும், ரஷ்யாவின் தீர்க்காலோசனை
யின் விளைவாகவே இருக்கலாம்.

கொரியாவிலும், ஒவ்வொரு
பிறவிடங்கள் போலவே
தந்திரத்தின் சாதகபாதகங்களையும் ஆராய்ந்து பார்த்தே
சோவியத்தினர் செயல்புரிந்ததாகத் தெரிகிறது. கொரியா
வில் அவர்கள் கடைப்பிடித்த கொள்கைக்கு வெற்றியே
கிடைத்தது. அவர்களுடைய கொரியா தந்திரத்தின் விளைவாக

மேற்கத்தி நாடுகளுக்கிருந்த ராணுவ பலத்தை யெல்
லாம் அவ்வளவாக முக்கியத்துவமில்லாத அரங்கில் பயன்
படும்படிச் செய்ததுடன் மேற்கத்தி நாடுகளுக்கும், கம்யூ
னிஸ்ட் சீனாவுக்கும் நிரந்தரமான பிளவு ஏற்படும்படியும்
செய்து விட்டது. சீனாவுக்கு சோவியத் உதவியின் அவசி
யத்தை வலியுறுத்தியது. ஆனால் அதே சமயத்தில் தினசரிப்
போராட்டத்தின் முழுச் செலவையும் சீனாவே பொறுத்துக்
கொள்ளும்படியும் ஆகிவிட்டது.

ஒரு ரஷ்ய வீரனின் உயிரையும் இழக்காமல், ரஷ்யா
வின் நவீன யுத்த சாதனங்களைப் பரீட்சை பார்க்க
கொரியா சண்டை சந்தர்ப்பம் அளித்தது. சீன நிதிநிலைமை
நெருக்கடியாகப் போனதும், ஒருவகையில் ரஷ்யாவின் நோக்
கங்கள் ஈடேற உதவியாயிருந்தது. மேலும் கொரியா சண்டை
சோவியத் பிரசாரத்திற்கு உரம் அளித்தது. அதை அவர்கள்
செம்மையாகப் பயன்படுத்திக் கொண்டனர். மேற்கத்தி
நாட்டினரின் நோக்கங்கள் பற்றி ஆசியா மக்கள் அச்சங்
கொண்டிருந்தனர். காலனி ஆட்சியில் மேற்கத்தி நாட்டின
ரிடம் பட்ட கஷ்டங்களை அவர்கள் இன்னும் மறந்துவிடவில்லை.
இந்த மனோநிலையில் வட கொரியர்களே ஆக்கிரமித்தனர்
என்று தெளிவாகத் தெரிந்தும், ஐ. நா. படைகளை ஏகாதி
பத்யப்படைகள் என்று கருதும்படிச் செய்ததில் கஷ்டமேற்
படவில்லை.

ஆனால் எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால்
கொரியா சண்டை ரஷ்யாவுக்கு வெற்றி என்று கூறுவதற்
கில்லை. இதன் விளைவாகச் சோவியத் யூனியனுக்கு இருவகை
இடைஞ்சல்கள் ஏற்பட்டன என்பது தெளிவு.

1. வட அட்லாண்டிக் உடன்பாட்டு ஸ்தாபனம் ஆரம்ப
தசையிலிருந்ததற்கு கொரிய ஆக்கிரமிப்பு ஊக்கமும், ஆக்க
மும் அளித்ததுடன் அமெரிக்க ராணுவ பலம் பெருகவும்,
காரணமாயிருந்தது. இந்த ராணுவ பலப்பெருக்கு அட்
லாண்டிக் நாடுகளைப் பலப்படுத்தியதுடன், இந்தப் புதிய
நிலையின் விளைவாக மிகுந்த பணச் செலவில் ரஷ்யா தன்னு
டைய ஆயுதபலத்தை அபரிமிதமாய்ப் பெருக்கும்படியான
நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டது. கொரியாச் சண்டை
மூலம் ரஷ்யாவுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளைவிட இந்த
அம்சங்கள் மட்டுமே பெரிதும் ரஷ்யாவிற்குச் சங்கடம்
விளைவிக்கக் கூடியவை.

2. கொரியா யுத்தத்தின் மூலம் கம்யூனிஸ்ட் சீனா
வுக்குப் புதிய மதிப்பு, புதிய பலம், புதிய முக்கியத்துவம்
கிடைக்கலாயிற்று. இதன் விளைவாக தூரக்கிழக்கில் சோவி
யத் நாட்டின் செல்வாக்கு மங்கியதுடன் பீகிங் ஆட்சிக்குப்
பொருளாதார உதவி அளிப்பதாக ரஷ்யா வாக்குறுதி



அளிக்கும் நிலையும் ஏற்பட்டது. கொரிய சமாதானத்திற்
குப் பின் கம்யூனிஸ்ட் சீனாவிற்கு உதவி செய்வதற்கான
செலவின் அளவையும், அந்நாடு தனக்குப் போட்டியாக
வளர்வதனால் ஏற்படக்கூடிய சங்கடங்களையும் ரஷ்யா
நன்கு உணர்ந்திருக்கவேண்டும். ரஷ்யாவுக்கு கம்யூனிஸ்ட்
சீனா போட்டியாக மூண்டெழும் எனும் அம்சம் மிகுந்த
கவனத்திற்குரியது. கம்யூனிஸ்ட் சீனாவிடம் அநுதாப
முள்ள ஒரு பிரபல ஆசிய ராஜதந்திரி "சீனாவை ரஷ்யா
கைநழுவவிட்டு வருவது பற்றித் தாம் கவலைப்படுவதாக
என்னிடம் 1955-ஆம் ஆண்டு கோடைகாலத்தில் கூறினார்.
ரஷ்யத் தலைமைப் பீடத்தில் நேர்மாறான இருவித யோசனைகள்
விவாதிக்கப்படலாம் என அவர் கூறினார். சிலர் பீகிங்
ஆட்சியினர் கேட்டு வருவதை யெல்லாம் அளிக்க வேண்
டும் எனக் கூறுவர். நாளாவட்டத்தில் பிரிட்டனிடமும்,
அமெரிக்காவிடமும் நீடித்த உறவு கொள்ளும் முறையில்
நடந்து கொள்ளத்தக்க கொள்கை வகுப்பதே நல்லது,
பாதுகாப்பளிக்க வல்லது எனச் சிலர் வாதிக்கலாம்".

இவ்வளவு தெளிவான கொள்கை மாறுபாடு அங்கு
துலங்குவதாக நான் நினைக்கவில்லை. ஆனால் கம்யூனிஸ்ட்
சீனாவின் பலம் பெருகி வருவதுபற்றி ரஷ்யத் தலைவர்கள்
கவலையடைந்து வருகின்றனர் என்பதில் சந்தேகமே இருக்க
முடியாது. பல நூற்றாண்டுகளாக ரஷ்யா ஒரு சமயம்
மேற்கு நாடுகளுடனும், மற்றொரு சமயம் கிழக்கு நாடுக
ளுடனும் உறவுகொள்வது என ஊசலாடிக்கொண்டு வந்
திருக்கிறது. அச்சமயத்தில் சீனாவை உதாசீனம் செய்த
தனால், கேடொன்றுமில்லை. ஆனால் அதே நிலை இன்றைய
அமைப்பிற்குப் பொருந்தாது. பீகிங்கும், மாஸ்கோவும்,
ஒரேவிதமான கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றன என
எவ்வளவுதான் வெளித்தோற்றத்திற்குக் காணப்பட்டாலும்
இரு ராஜ்யத் தலைநகர்களிலும் அடித்தளத்தில் மாறுபட்ட
கருத்து முரண்பாடுகள் இருக்கலாம் என்றே தோன்றுகிறது.

1950லிருந்து கம்யூனிஸ்ட் சீனாவுக்கும், சோவியத்
ரஷ்யாவுக்கும் உள்ள உடன்பாடுகளின் நற்பயன்களும்,
முரண்பாடுகளுமே நமது அயல்நாட்டுக் கொள்கை வகுப்
பதில் அடிப்படைக் காரணங்களாயிருந்து வந்திருக்கின்றன.
யுத்தத்திற்குப் பின் ரஷ்யாவின் யந்திரத் தொழில்
வளர்ச்சி உலக நிலை உருவகமாகி வருவதற்குப் பெரிதும்
காரணமாயிருந்து வந்திருக்கிறது.

1945-55-ஆம் வருஷங்களில் அமெரிக்காவிற்கு அடுத்தபடி
யான யந்திரத் தொழில் சக்தி வாய்ந்த நாடாக ரஷ்யா
மாறிவிட்டிருக்கிறது. ரஷ்யாவில் இடைவிடாது பொரு
ளாதாரச் சிக்கல்கள் தோன்றி வந்தாலும், அந்நாட்டில்

கிராமப் பகுதி பின்தங்கியது. விவசாய அடிப்படைப்
பொருளாதாரத்தில் இயங்கும் விகாரமான சமுதாயம்
எனும் எண்ணத்தைக்கொண்டு ரஷ்யாவின் யந்திரத்தொழில்
சாதனையைக் குறைவாக மதிப்பிடலாகாது.

'' அமெரிக்கா உள்பட முதலாளித்வ நாடுகளின் யந்
திரத் தொழில் முறை உற்பத்தி, ரஷ்யா, மக்கள் ஜன
நாயக நாடுகளில் உற்பத்திக்கு மிகவும் பின்னடைந்தே
இருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்கள் நிரூபிக்கின்
றன.'' இவ்வாறு மாலங்காவ் 1952-இல் கூறினார். மாலங்
காவ் முதன் மந்திரிப் பதவியிலிருந்து வீழ்ந்துவிட்டார்.
ஆனால் பல ஆண்டுகளாக கம்யூனிஸ்ட் தலைவர்கள் டம்ப
மாகப் பேசியதுபோல் அல்லாமல் இந்தக் கூற்று மிகைப்
படுத்திக் கூறப்பட்டதல்ல என்பதை நமக்குக் கிடைத்
துள்ள தகவல்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

அமெரிக்கப் பொருளாதார நிபுணர்களால் ரஷ்ய அர
சாங்க அறிக்கைகளிலிருந்து ஆராய்ந்தறிந்த புள்ளி விவ
ரங்களிலிருந்து பார்த்தால், 1913-க்குப் பிறகு ரஷ்யப் பொரு
ளாதார அமைப்பின் மூலம், அந்நாட்டின் நிலக்கரி உற்பத்தி
பத்து மடங்கும், தேனிரும்பு ஏழு மடங்கும், எஃகு உற்
பத்தி ஆறு மடங்கும், பெட்ரோல் ஆறு மடங்கும், மின்சார
வசதி அறுபது மடங்கும் பெருகி இருக்கிறது என்பதை
அறிகிறோம்.

1954 இல் அமெரிக்க உற்பத்தி தற்காலிகமாகக் குறைந்
ததன் விளைவாக முதல் தடவையாக சோவியத் தொழில்
துறையில் அமெரிக்க உற்பத்தியைவிட பாதிக்கு மேலாக
எஃகு உற்பத்தி செய்துவிட்டனர். அதாவது 450 லட்சம்
டன்கள். 1955 இல் ரஷ்யாவின் நிலக்கரி உற்பத்தி அமெரிக்
காவின் அளவை எட்டிவிட்டது.

ரஷ்யாவின் மொத்த சராசரி உற்பத்தி வருஷா வரு
ஷம் ஏழு அல்லது எட்டுச் சத விகிதம் அதிகரித்து வரு
கிறது. ஆனால் அமெரிக்காவின் சராசரி வருஷாந்தர உற்
பத்தி மூன்று அல்லது நான்கு சத விகிதமாகவே இருந்து
வந்திருக்கிறது. இது கைதேர்ந்த பொருளாதார ஆராய்ச்
சியாளரின் திட்டமான முடிவு.

கனரகத் தொழில் அபிவிருத்தியில் ரஷ்யா கண்டிருக்
கும் கூடுதலான சத விகித வளர்ச்சியைப் பார்த்தால்,
இந்தப் பொதுப்படையான புள்ளி விவரங்கள் மிகுந்த
கவலையளிக்கக்கூடியதா யிருக்கின்றன. உலகப் புரட்சி
விளைவிப்பதில் இன்னமும் கருத்துள்ள சோவியத் திட்டம்
வகுப்பவர்கள் இனிய பானங்கள் தயாரிக்கும் யந்திரங்
களும், சுயமாக இயங்கும் இசைப் பெட்டிகளும் தயாரிப்ப
தில் காலத்தை வீணாக்கமாட்டார்கள்.



ரஷ்ய யந்திரத் தொழிலுக்குத் தேவையான தளப்
பொருள்கள், மட்டின்றி கிடைக்கின்றன. நாம் திட்டமாக
எதிர்பார்க்சக் கூடிய எதிர்காலத்திற்கெல்லாம் தேவை
யான தளப்பொருள்கள் கம்யூனிஸ்ட் நாடுகளிலேயே
கிடைப்பதற்கான வசதி இருக்கிறது. ஆனால் நமது அத்
தியாவசியமான தேவைகளில் ஐம்பது சத விகிதம் நாம்
இறக்குமதி செய்து வருகிறோம்.

மொத்தத்தில் ரஷ்ய யந்திரத் தொழில் உற்பத்தி
பெருகி வருகையில், நவீனத் தொழில் நுணுக்க அபிவிருத்
தியை கிரகித்துக்கொள்ளும் திறமையும் பெருகி வருகிறது;
அவர்களது சிறப்பு மிக்க ஜெட் யுத்த விமானங்களும்,
வெடி விமானங்களும், நாம் எதிர்பார்த்ததைவிடச்
சீக்கிரத்தில் அவர்கள் ஜலவாயு குண்டு, நுணுக்கத்தைத்
தெரிந்துகொண்டதும், அவர்களது யந்திர ஞான அபிவிருத்
திக்கு நிதர்சனமான உதாரணங்கள்.

விஞ்ஞானத் தொழில் நுணுக்கப் பயிற்சித் துறைகளில்
சோவியத் யூனியன் அடைந்துள்ள முன்னேற்றம் மேற்கூறப்
பட்டவைபோல், எதிர்காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த
தாயிருக்கும். 1950-இல் யுத்த வீரர்கள் உரிமைகள் மசோ
தாவின் உதவி மூலம் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் 52
ஆயிரம் என்ஜினியர்கள் தயாரானார்கள். ஆனால் 1954
ஜூனில் என்ஜினியர்கள் தயாரிப்பு 20 ஆயிரத்துக்குக்
குறைந்துவிட்டது. நமக்குக் கிடைத்துள்ள நம்பகமான கணக்
குப்படி ரஷ்யாவில் முன்னேற்றம் ஏறுமுகத்திலிருக்கிறது;
1928-இல், 8 ஆயிரம் என்ஜினியர்கள் தயாரானார்கள். ஆனால்
1950-இல் 26 ஆயிரமாகவும், 1954-இல் 54 ஆயிரமாகவும்
பிரமிப்பூட்டும் வகையில் என்ஜினியர்கள் எண்ணிக்கை
உயர்ந்து விட்டது.

சோவியத் திட்டத்தில் பயனே சிறுவிலிருந்தும், கைப்
பொம்மை நாடுகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான மாணவர்
கள் அடைந்திருக்கின்றனர். அங்கே அவர்களுக்கு அளிக்கப்
படும் போதனை, தரத்தில் நமது நாட்டிலிருப்பதைவிடக்
குறைந்ததில்லையென்று அமெரிக்க விஞ்ஞானிகளே கூறுகின்
றனர். '' விஞ்ஞான அறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை
யைப் பெருக்குவதற்கான போராட்டத்தில் நாம் அநேக
மாகத் தோற்றுவிட்டோம். நம் நாட்டில் இருப்பதுபோல்
விஞ்ஞானிகளும் என்ஜினியர்களும் ரஷ்யாவிலும் இருக்கின்
றனர். மேலும் நம்மைவிடத் துரிதமாக அவர்கள் மேற்
கொண்டு தயார் செய்தும் வருகின்றனர்.'' இவ்வாறு
அணு ஆராய்ச்சி விஞ்ஞானியும், கொலம்பியா பல்கலைக்
கழக என்ஜினியரிங் பகுதித் தலைவருமான டாக்டர் ஜான்
ஆர். டன்னிங் (John R. Dunning) கூறுகிறார்.

பொருளாதார, தொழில் நுணுக்க வளர்ச்சித் துறை
களில் அமெரிக்காவையும், ரஷ்யாவையும் ஒப்பிடுவதில்
சிலர் ஒருவேளை கவலைதரும் முடிவைக் கூறியிருக்கலாம்.
1955 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ராணுவ சாதன உற்பத்திக்கு
ரஷ்யா அதிகப் பிராதான்யம் அளித்ததனால், 1954-இல் இருந்
ததைவிட விவசாயமும் மக்கள் தேவைக்கான யந்திரத்
தொழில் மூலம் உற்பத்தியும் குறைந்திருக்கிறது. சோவியத்
எண்ணெய் உற்பத்தி திருப்திகரமாயில்லை. ரஷ்யாவின் பரந்த
விஸ்தீரணத்திற்குத் தேவையான அளவுக்கு போக்குவரத்து
வசதி இல்லை. சோவியத் தேசிய வருவாயை எந்தத் தரத்தைக்
கொண்டு பார்த்தாலும் அங்கே குடியிருப்பு வசதி மோச
மான நிலையில் இருக்கிறதென்றுதான் கூற வேண்டும். குடி
யிருப்பு, போக்குவரத்து இரு துறைகளிலும் ஜார் ஆட்சி
காலத்திலேயே முன்னேற்றம் இருந்தது என்பதை நினைத்துப்
பார்த்தால், சோவியத்தினர் அடைந்த முன்னேற்றம் திருப்தி
யளிப்பதாயில்லை யென்பது உண்மை.

கொரியா யுத்த காலத்தில்கூட, அமெரிக்காவின் உற்
பத்தி அளவு ரஷ்யாவினுடையதைவிடக் குறைவாகவே இருந்
தது. ரஷ்யாவில் வாரத்திற்கு நாற்பத்தியெட்டு மணி நேரம்
வேலை செய்கையில், அமெரிக்காவில் வாரத்திற்கு நாற்பது
மணி நேர வேலை செய்கின்றனர் என்பதைக் குறிப்பிட
வேண்டும். மேலும் ரஷ்யாவில் அமெரிக்காவைவிட அதிக
மான சதவிகிதம் பெண்கள் வேலை செய்கின்றனர். இப்போது
அமெரிக்காவுக்குள்ள யந்திர ஆலை வசதிகளைக்கொண்டு
பார்த்தால், நீடித்த நெருக்கடி ஏற்படும் காலத்தில் சோவி
யத் யூனியனைவிட அமெர்க்கா கூடுதலான உற்பத்திசெய்ய
முடியும் எனக் கூறினால் அது நியாயமேயாகும்.

ஆனால் வாழ்க்கைத்தரம் அமெரிக்காவைவிடக் குறைவா
யிருப்பதனால், ரஷ்யாவுக்கு ராணுவ ரீதியில் சில நன்மைகள்
ஏற்படலாம். மேற்கத்தி நாடுகளில் உள்ளவர்களுக்கு உயிர்
வாழ்வதற்குக் கூடுதலான வசதிகள் அவசியமாயிருக்கின்றன:
மேலும் மேற்கத்தி நாட்டு சாமானிய மனிதன் பேச்சு சுதந்
திரமுள்ளவனானகையால் கட்டுப்பாட்டுக்குட்பட்டுப் பழக்க
மான ரஷ்யனைப்போல் அவனைச்சிக்கன வாழ்க்கை முறைக்குட்
படுத்திவிட முடியாது. யுத்த காலத்தில் விலைவாசி, உணவுப்
பங்கீடு அதிகாரியாயிருந்த என் அநுபவத்திலிருந்து மேற்
கூறியது உண்மையென்று நான் அத்தாட்சியளிக்க முடியும்.

ரஷ்யப் பொருளாதார அமைப்பு, குறிப்பாக விவசாயத்
துறையில், பலஹீனம் வாய்ந்ததாக இருக்கலாம். விவசாயி
களின் உடன்பாட்டினால்தான் லெனின் கிளப்பிய புரட்சி
சிறப்பான வெற்றியடைந்தது. ஆனால் விவசாயிதான் நாட்
டின் நீடித்த முன்னேற்றத்திற்கும், ஸ்திரத்தன்மை அடைவ



தற்கும் கடும் பகைவனாயிருந்து வந்திருக்கிறான். ரஷ்யாவின்
எதிர்காலச் சிறப்புக்கு அவன் ஆதரவே பெரிதும் அவசியமா
யிருந்தாலும் அவன் கதியைப்பற்றி அந்நாட்டில் நினைப்பா
ரில்லை.
சோவியத் முன்னேற்றத்தின் ஆரம்பகாலத்தில் ரஷ்யா
வில் ஏராளமான நிலவசதியும் அதற்கேற்ற விளைச்சலும்
இருந்தது. தலா உற்பத்தியின் அளவு விவசாயியைக் கடுமை
யாகப் பிழிந்தெடுத்த பிறகும் நகரமக்களுக்கு உயிர்வாழத்
தேவையான சாமானிய உணவு அளிக்கப்போதியதாயிருந்
தது. மாமிச உணவு, பட்சிகள், பால் பதார்த்தங்கள்,
முட்டைகள் முதலியவற்றின் உற்பத்தி குறைக்கப்பட்டது.
ஜீவசத்துக்கள் அளிக்கக்கூடிய காய்கறி, தான்ய வகைகள்
உட்கொள்ளும்படி தீவிரமாக வற்புறுத்தப்பட்டது.
ஆனால் மக்களை வாட்டி வதைப்பதற்கும் ஓர் எல்லை
யுண்டு. உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவைமட்டும்
உட்கொள்ள வேண்டும் எனும் கொள்கையை நீடித்து நிலை
நாட்டலாகாது. பகைவர்களையும், சர்வதேச நெருக்கடிகளை
யும் சுட்டிக்காட்டி உணவுத்தியாகம் செய்யச் சொல்வதற்கும்
எல்லையுண்டு. இதை உணர்ந்து 1955-இல் சிறந்த வாழ்க்கை
நடத்துவதற்கு அவசியமான தயாரிப்பை இரட்டிப்பாக்க
பெருமுயற்சி செய்யப்பட்டது.
சோவியத் திட்ட நிபுணர்கள் நோக்கிலிருந்து பார்த்
தால், இந்த இரண்டுங்கெட்டான் நிலையைச் சுலபமாக எடுத்
துக் கூறலாமே யொழிய, அதற்கு, அவ்வளவு சுலபமாகப் பரி
காரம் காணமுடியாது. குறைந்தபட்ச ஆட்களைக்கொண்டு,
கூடுதலான உணவு உற்பத்தி எப்படிச் செய்வது, அதுவும்
உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அத்தியாவசியத் தேவை
யான சரக்குகளைக் கொடுக்காமலும், கொள்முதலிலும், விற்ப
னையிலும் அதிக சுதந்திரமளிக்காமலும், அவனை எப்படி அதிக
உற்பத்தி செய்யச் செய்வது என்பதே பிரச்னை. சோவியத்
பொருளாதாரத்தில் விவசாயமே பெரிய தலைவலிக்குக் கார
ணமாயிருக்கப்போகிறது.
எவ்வாறாயினும், சோவியத் பொருளாதாரத்தின் சாதனை
கள், குறைபாடுகள் இரண்டுமே அவர்களது அயல்நாட்டுக்
கொள்கை வகுப்பதில் முக்கியமான இடம் பெறும். சாதனை
களையோ குறைபாடுகளையோ பிரமாதப்படுத்துபவர்கள் இரு
சாராரும் யுத்த கெடுபிடிப் பிரசாரம் குறைய வேண்டும் என்று
வற்புறுத்துவார்கள். முன்னுக்குப்பின் முரணாகத் தோன்
றினாலும் இது உண்மை என்பதைப் பின்னர் விரிவாக
விளக்குகிறேன்.
ரஷ்ய வரலாறு, மார்க்ஸியக்கொள்கை, ரஷ்யாவில் அதன்
அநுஷ்டானம், யாவற்றையும் சுருக்கமாக ஆராய்ந்தோம்;

இந்த ஆராய்ச்சியிலிருந்து தீர்மானமான மிருகத்தனத்தை
விட மாஸ்கோவிலிருந்து தோன்றும் கம்யூனிஸம் மிகுந்த
சிக்கல் வாய்ந்தது என்பதை அறிந்தோம்; ரஷ்யாவின் கொள்
கைக்கு மார்க்ஸிய தத்துவத்தைக் கேட்போரை மயக்கும்
லட்சியவாதக் கவர்ச்சியை அளித்திருக்கிறது. ஆனால் அந்தக்
கொள்கை நடைமுறையில் ஏமாற்றமளித்ததும், அது விற்கா
மல் தங்கிவிட்ட கடைச் சரக்குப்போல் சீந்துவாரற்ற
தானது. சோவியத் பொருளாதார முன்னேற்றம் பற்றிய
புள்ளி விவரங்களும், அந்த முன்னேற்றத்தைப் பிரத்தியட்ச
மாகப் பார்ப்பதனாலும், அதேமாதிரி முன்னேற்றத்தைக்
காணவிரும்பும் பின்தங்கிய நாடுகளையும், அந்நாட்டு மக்களை
யும் அவை கவர்ந்திருக்கின்றன. சோவியத்தினரின் ராணுவ
பலமும், சோவியத் மதிப்பை மேலும் உயர்த்துகிறது.

இந்தக் கவர்ச்சிக்கு எதிரிடையாக இந்தப் பயன்களை
அடைவதற்கு சோவியத்தினர் கைக்கொண்ட மோசடி,
சூழ்ச்சி, பலாத்காரம் யாவும் அதனிடம் அருவருப்பு ஏற்
படும்படிச் செய்துவிட்டது. ஐரோப்பாவைப் பொறுத்தமட்டி
லாவது இலட்சிய ஆர்வமுள்ள அறிவாளிகளிடையே கம்யூனி
ஸத்தின் கவர்ச்சி மங்கி வருகிறது என்பது உண்மை. ஆனால்
ஆசியாவில் இதன் விளைவு வேறு வகையானது என்பதைப்
பின்னர் பார்ப்போம்.

இதிலிருந்து நாம் ஒரு அடிப்படைப் பிரச்னையை ஆராய
வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இரண்டாவது உலக யுத்
தத்திற்கு இருபது வருஷங்கழித்து மாஸ்கோவின் தந்திரம்
எத்தன்மையதாயிருக்கும்? யுத்த கெடுபிடியைத் தளர்த்த
வேண்டும் எனும் மாஸ்கோ ஆர்வம் உண்மையானதா? அதில்
நம்பிக்கை வைப்பது நியாயமா?

ரஷ்யாவைப் பற்றிய மேற்கத்தி நாட்டினரின் பழங்காலச்
சிந்தனையின் அடிப்படையில், மகத்தான, அசைக்க முடியாத
ஒரு சக்தி ரஷ்யாவைத் தங்குதடையின்றி, முன்கூட்டியே திட்
டம் செய்யப்பட்ட குறிக்கோள்களை நோக்கி ஊக்குவித்துச்
செல்கிறது எனும் எண்ணம் தோய்ந்திருக்கிறது. ஆனால் ரஷ்
யப் புரட்சி தோன்றி முன்னேறிவருவது பற்றிய இச் சுருக்க
மான ஆராய்ச்சியில் ரஷ்யக் கொள்கையின் அநுஷ்டானத்தில்
பல்வேறு மாறுதல்களும், திருப்பங்களும், இருப்பதைக் கண்
டோம். இந்த மாறுதல்களில் சில அடிப்படையானவை யாத
லால் அவர்களுடைய நோக்கங்களையே அவை பாதிக்கத்
தக்கனவாயிருக்கின்றன.

தற்கால நிலைக்குப் பொருத்தமான சில திருப்பங்களை
இங்கு ஆராய்வோம். முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு
ஐரோப்பாவின் கேந்திரமான இடங்களில் ராணுவ சூன்ய
நிலையைப் புரட்சிக்குப் பயன்படுத்தும் நோக்குடன் லெனின்



சோவியத்தின் ராணுவ, அரசியல் சாதனங்களை உலகெங்கும்
பிரயோகிப்பதில் முனைந்தார். ஆனால் செஞ்சேனை ஜெர்மனி
யிலும், ஹங்கேரியிலும் தோல்வியுற்றதும், இம்முயற்சிகளை
அவர் கைவிட்டார். லெனினைப் பின்பற்றி ஸ்டாலின் சோவி
யத் கொள்கையின் முழுப் பலத்தையும், ரஷ்யாவிற்குள்ளேயே
கம்யூனிஸத்தை நிலைக்கச் செய்வதற்குப் பயன்படுத்தினார்.
1941-இல் ஹிட்லர் தமது ஆயுதப்படையை சோவியத்தின் கேந்
திரப் பகுதிக்குள் செலுத்தியதும், கூடிவாழ்தல் கொள்கையின்
ஆதிக்கம் முற்றுப்பெற்றது. யுத்தம் ஏற்படாதிருந்தால் உள்
நாட்டு அபிவிருத்தியிலேயே கவனம் செலுத்த வேண்டும்
என்கிற கம்யூனிஸ்ட் கொள்கை எவ்வளவு காலத்திற்கு நீடித்
திருக்கும் என்று யாராலும் கூற முடியாது. எப்படியும் யுத்தம்
ஐரோப்பிய ஆதிக்க உலகை ஆட்டங்காண வைத்துவிட்டது.
இந்த நிலையில் உலகப்புரட்சியைத் தோற்றுவிக்க வேண்டு
மெனும் கொள்கையுடைய ரஷ்யா, ஐரோப்பாவையும் தாண்டி
மத்யக்கிழக்கு வரையில் நிலவிய பிரம்மாண்டமான அர
சியல் சூன்ய நிலையைப் பயன்படுத்திக்கொண்டு செயல்
புரிய முனைந்தது.

1948-இல் கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யா தனது ஆதிக்
கத்தைப் பலப்படுத்திக் கொண்டதற்குப் பின், பிறவிடங்களில்
அதன் அதிகாரத்திற்கு எதிர்ப்புகள் ஏற்பட்டதும், எதிர்
பாராதவகையில் மா சே துங் சீனாவில் வெற்றி பெற்றதும்,
இவைகளின் விளைவாக யுத்தத்திற்கு முன் நிலவிய கூடி
வாழ்தல் கொள்கைக்கு ரஷ்யா திரும்பும் என்று எதிர்
பார்க்க இடமளித்திருக்கலாம். ஆனால் ரஷ்ய ராணுவமும்,
அரசியல் தந்திரங்களும் ஓரளவு வெற்றி பெற்றது. இன்
னும் சிறிது காலத்திற்கு ஆக்ரமிப்புக்கொள்கையை நீடிக்க
ஸ்டாலினைத் தூண்டியது.

ஸ்டாலினுடைய பிடிவாத குணத்தினால் நன்மை ஏது
மில்லை, அதனால் மிகுந்த அபாயம் ஏற்படலாம் என்பதை
1952க்குள் பல விமர்சகர்கள் அறிந்து கொண்டுவிட்டனர்.
அந்த ஆண்டு ஜூலை மாதத்தில் புது டில்லியில் ஒரு நாள்
மாலை ஆறு அல்லது ஏழு அரசாங்கங்களின் பிரதிநிதிகளான
சகாக்களுடன் நான் கழித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது.
ரஷ்ய தந்திரங்களைத் தீவிரமாக மாற்றுவதன் அவசியத்
தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி உணரும்
என்பதற்கான காரணங்களை விவாதிப்பதில் அன்று பொழுது
போக்கினோம். நாங்கள் கண்ட காரணங்கள் வருமாறு:

1. அணுசக்தி ஆயுதங்கள் உற்பத்தியின் அபிவிருத்தி
யும், அதைப் பிரயோகிப்பதும் சாத்யம் என்பதனால் எந்த
யுத்தம் ஏற்படினும், அதன் விளைவாக வெற்றி கண்டவர்
கள், தோல்வியுற்றவர்கள் இரு சாராரும் நாசமடைவார்கள்.

சோவியத் விமானப்படை பூரணமாக பலம் பெறுவதற்குள் யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான தாக்குதலை அமெரிக்கா தொடங்கவேண்டும் எனும் கருத்து சில அமெரிக்கத் தீவிர வாதிகளிடையே வலுப்பெற்று வந்தது.

2. வட அட்லாண்டிக் நாடுகளின் உடன்பாட்டு ஸ்தாபனத்தின் சக்தி பெருகிவந்ததனால் மேற்கு ஐரோப்பா ராணுவப் பாதுகாப்புப்பெற்றது. இதன் விளைவாக புயல் வேகத்தில் ஆங்கிலக் கால்வாயையும், அட்லாண்டிக் கரை நாடுகளையும் சோவியத் தரைப் படைத் தாக்கி வென்று விடலாம் என்றிருந்த பயம் தணிந்துவிட்டது.

3. கொரியா யுத்தம் இரண்டு ஆண்டுகள் நிகழ்ந்த பிறகு தேக்க நிலையை அடைந்துவிட்டது. நடந்தவரையில் அதனால் சீனாவுக்கும், ரஷ்யாவுக்கும் ஏராளமான பொருள் நஷ்டம் ஏற்பட்டது; சுலபமாக அது யாரும் விரும்பாத பெரிய யுத்தமாக மூண்டிருக்கலாம்.

4. படிப்படியாக ஐரோப்பாவின் பொருளாதார நிலை சீர்ப்பட்டதனால், பலாத்கார வர்க்கப்போராட்டத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகளில் உள்நாட்டுச் சண்டைகளை ரஷ்யா கிளப்புவதற்கான சந்தர்ப்பம் குறைந்தது. ஆசியாவில் புதியதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளில் தேசிய உணர்ச்சி பெருகியதனால், ரஷ்யத் தூண்டுதலின்பேரில் ஏற்பட்ட புரட்சிகள் பலிக்கவில்லை. ஆனால் காலனி ஆட்சி ஓரளவு நீடித்திருக்குமிடங்களில் ரஷ்யா விஷமம் செய்ய இடமிருந்தது.

5. யுத்த அபாயம் நீடித்ததனால் நேசநாட்டினரின் எதிர்ப்புச் சக்தி உறுதி பெற்று மேற்கத்தி நாடுகளிடையே கூட்டுறவு பலம் பெற்றது. ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ, சோவியத் பயமுறுத்தலுக்கு யாரும் பணிந்துவிடவில்லை.

6. ஆனால் யுத்தக் கெடுபிடி குறைந்ததும், மேற்கத்தி நாடுகளிடையேயிருந்த கூட்டுறவு தளர்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

7. ராணுவத் தளவாடத் தயாரிப்பினால் ஏற்பட்ட சுமையை சோவியத் பொருளாதார அமைப்பு தாங்க முடியவில்லை. அந்தச் சுமை அதிகரிக்கும் அளவுக்கு பொருளாதார அபிவிருத்தியும் குறைந்தது. சோவியத் விவசாயத் துறையில் இயல்பாயுள்ள சங்கடங்களுடன் கம்யூனிஸ்ட் சீனாவில் பொருளாதார நெருக்கடி ஏற்படலாம் என்பதும் சேர்ந்து கஷ்டத்தைப் பெருக்கியது.

8. ராணுவ, ஆயுத, தயாரிப்பு மட்டுப்படுவதனால் மிச்சமாகும் பணத்தைக்கொண்டு சோவியத் யூனியன் சீனாவுக்கும், ஐரோப்பியக் கைப்பொம்மை நாடுகளுக்கும் அதிகப் படியான உதவிசெய்வதுடன், இந்தியா போன்ற நடுநிலைமை



நாடுகளுக்கு அரசியலில் பயனளிக்கும் அளவுக்கு உதவித் திட்டங்களை வகுக்கமுடியும்.

9. ரஷ்யாவின் கிழக்கெல்லையில், ஐக்கியம் பெற்ற
சீனா கம்யூனிஸ்ட் கொள்கை அபிமானத்தின்மூலம் ரஷ்யா
வுடன் இணைந்து நின்றாலும், சோவியத் கொள்கை வகுப்ப
வர்களுக்கு அதனால் பல சங்கடங்கள் நேரலாம். ரஷ்யாவின்
புறக்கடையில் சக்திவாய்ந்த சீனா அமைந்திருப்பது மிகுந்த
கவலையளிக்கக்கூடிய அம்சம். சீனாவைச் சுலபமாகக் கட்டுப்
படுத்தமுடியும் என்று சொல்வதற்கில்லை.
10. முதலாளித்வப் பொருளாதார வளம் யுத்தத் தயாரிப்
பைப் பொறுத்திருக்கிறது என மார்க்ஸிஸ்ட் தத்துவம்
சாதிக்கிறது. இதிலிருந்து மேற்கத்தி நாடுகளின் யுத்தப்
பாதுகாப்பு முயற்சி தளர்ந்தால் அமெரிக்கா பெரியதோர்
பொருளாதார மந்தத்திற்குள்ளாகலாம் என்று ரஷ்யர்
கனவு காணலாம். 1929 லிருந்து அமெரிக்காவில் யுத்த
காலத்திலோ அல்லது யுத்தம் முடிந்த சிறிது காலத்திற்கோ
தான் எல்லோருக்கும் வேலை கிடைத்தது. யுத்த காலத்தில்
பூர்த்தி செய்யப்படாமலிருந்த மக்கள் தேவைகளைத் திருப்தி
செய்ய யுத்தப் பிற்காலத்தில் எல்லோருக்கும் வேலையிருந்
தது.
11. கடைசியாக ரஷ்யாவின் சமாதானப் பிரசாரம் எல்
லோரும் திருப்தியடையும் வகையில் வெற்றிபெற்றால் அந்
நாட்டின் மீது யாரும் குற்றம் காண முடியாத நிலையை ஏற்
படுத்தும். கடைசியில் சமாதானம் ஏற்பட்டால் அதற்கான
புகழ் முழுதும் ரஷ்யத் தலைமைப் பீடத்திற்குக் கிடைத்து
விடும் என்பதுடன் ராஜதந்திர சாமர்த்தியத்தினால், அமெ
ரிக்காவைப் பிறநாடுகளிலிருந்து பிரித்துவிடும் சந்தர்ப்பமும்
கிடைக்கும். சமாதானம் வரவேயில்லையானால், அதற்குக் கார
ணம் அமெரிக்காவும், அதன் அட்லாண்டிக் நேசநாடுகளும்
தான் எனக் குற்றம் சாட்டப்படும். இதன் விளைவாக சோவி
யத் நாட்டின் மதிப்பு பெருகும்.
இந்த வாதங்களின் நேர்மை சோவியத் கொள்கை
வகுப்பவர்களுக்கு விளங்கியிருக்கும் என்று எங்களுக்குத்
தோன்றினாலும், ரஷ்யா வளைந்து கொடுக்கும் என்பதற்
கான அறிகுறிகள் தென்படவில்லை. இதற்கு மாறாக அந்தச்
சமயம் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவிற்கும் உள்ள உறவு
மிகமோசமான நிலையிலிருந்தது.
இந்த நிலையின் சாயை புது டில்லி உள்பட உலகத்தின்
எல்லாத் தலைநகர்களிலும் காணப்பட்டது. சமூக நிகழ்ச்சி
களால் சோவியத் பிரதிநிதிகள் சாமான்ய சம்பிரதாய முறை
யில் வணக்கம் செலுத்தக்கூட மறுத்தனர். 1952 நவம்
பரில் ஐ. நா. மூலம் கொரிய விவகாரத்தில் மத்தியஸ்தம்

செய்ய நேரு செய்த முயற்சியை விஷின்ஸ்கி மரியாதைக் குறைவாக மறுத்தார்.

எனினும் ஸ்டாலின் மரணத்திற்கு முன்பே மாறுதலுக் கான அறிகுறிகள் தென்பட்டன. திடீரெனச் சோவியத் பிரதிநிதிகள் சுமுகமான முறையில் பழகத்தொடங்கினர். இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதவர் காரியாலயத்திலுள்ள பத்துப் பன்னிரண்டு பேருக்கு சோவியத் தூதர் காரியா லயத்தில் அதே பதவி வகிப்பவர்களிடமிருந்து கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்திகள் கிடைத்தன. எட்டு மாதங்களுக்கு முன் அவர்கள் நிராகரித்த நிபந்தனைகளின் பேரில் 1953 மார்ச்சில் கொரியாவில் தற்காலிக உடன்பாடு ஏற்பட்டது.

ஆகஸ்ட் எட்டாந் தேதி யன்று ஸ்டாலினுக்குப் பின் அவரது பதவியை அடைந்த மாலங்காவ் தந்திர மாறுதலுக் கான காரணங்களை ஒளி மறைவின்றி வெளியிட்டார். ''இன்று சர்வதேச உறவில் கெடுபிடி இருக்கையில் வட அட்லாண்டிக் உடன்பாட்டு நாடுகளிடையே உளைச்சலும், மாறுபாடுகளும் தோன்றுமானல், இந்தக் கெடுபிடி தளர்ந்ததும், அந்நாடுகள் சிதறுண்டுபோகும்.''

சில மாதங்களுக்குள் சோவியத் சமாதான பிரசார வேகத்தின் தோரணை கணிசமான அளவுக்கு ஸ்டாலினின் முரட்டுத்தன முறைகளுக்கு மாறுபட்டுச் சென்றது. இதற்குச் சில உதாரணங்கள் கூறலாம். ஆர்தர் துறைமுகம் சீனவுக் குத் திருப்பியளிக்கப்பட்டது. பல்கேரியத் தொழில்களில் சில தனிப்பட்டோர் நிர்வாகத்திற்கு விடப்பட்டன. **டிரீஸ்டி உடன்பாடு*** ஒப்புக்கொள்ளப்பட்டது. முன்பு, பகிஷ்கரித்தி ருந்த ஐ. நா. கல்வி உதவிஸ்தாபனம், தொழில் நுணுக்க உதவி ஸ்தாபனம் முதலியவற்றின் கூட்டங்களில் ரஷ்யர் கலந்து கொள்ளத் தொடங்கினர். துருக்கி, டார்டனெல்ஸ், இவை சம்பந்தமான கோரிக்கைகள் கைவிடப்பட்டன. டான்யூப் நதியில் போக்குவரத்து வசதிகள் மீண்டும் அளிக்கப்பட்டன.

1955 பிப்ரவரி எட்டாம் தேதி மாலடோவ் ஒரு எச்ச ரிக்கை விடுத்தார். மேற்கு ஜெர்மனி மீண்டும் ஆயுதபலம் பெறுவது சம்பந்தமான பாரிஸ் உடன்பாடுகளை நேடோ நாடுகள் அங்கீகரித்தால் அவர்களைச் சும்மா விடுவதில்லை யென சோவியத் உயர்சபையில் மிரட்டினர். ஜெர்மன் பிரச்

---

**டிரீஸ்டி உடன்பாடு:—** டிரீஸ்டி எனும் சுதந்திர நாடு 298 சதுரமைல் கொண்டது. 1947-இல் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி இது ஐ. நா. வின் பாதுகாப்பில் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1954 அக்டோபர் நான்காம் தேதி ஏற்பட்ட உடன்படிக்கைப்படி இந்த நிலப்பரப்பில் 202 சதுர மைல் யுகோஸ்லாவியாவையும், பாக்கியுள்ள 91 சதுரமைல் விஸ்தீரணம் மட்டுமே உள்ள. ஆனால் ஜனநெருக்கமாயுமிருந்த பகுதி இதாலிக்கும் சேருவதை ஒப்புக்கொள்ளப்பட்டது.



னையைத் திருப்திகரமாகத் தீர்த்தால்தான் ஆஸ்திரியா சம்பந் தமாக உடன்பாடு சாத்தியம் என்று அவர் கூறினர். ஆனல் இதற்கு மூன்று மாதங்களுக்கப்பால் திடீரென மாலடோவ் விசேஷ சலுகைகள் காட்டினர். ஆஸ்திரிய உடன்பாடும் ஏற் பட்டது.

பிரிட்டன், ஃபிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஸ்காண்டி நேவியா, யூகோஸ்லாவியா, கிரீஸ், ஆர்ஜெண்டீனு, எகிப்து முதலிய நாடுகளுடன் வர்த்தக உடன்பாடுகள் ஏற்பட்டுவிட் டன. கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு மட்டுமல்ல, கம்யூனிஸ்ட் ஆதிக்கத்திற்கு அப்பாற்பட்ட ஆப்கானிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுக்கு தொழில் நுணுக்க, பொருளாதார உதவி விரிவான முறையில் அளிக்கப்படுகின்றன. 1955-இல் இந்தியாவை மயக்கி இழுப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக நடைபெற்றன. சீனவின் பூகோள அமைப்பு, அரசி யல் முக்கியத்துவம் வளரவளர, அளவுக்கு மீறிய சீனக் கோரிக் கைகள் கிளம்பாமல் செய்ய இந்தியாவைப் பயன்படுத்துவ தற்கான நீடித்த முயற்சிகள் செய்ய ரஷ்யா முன்வரலாம்.

1955 மே மாதம் பெல்கிரேடில் மிகுந்த பரபரப்பூட் டும் சம்பவம் நிகழ்ந்தது. ஏழு ஆண்டுகளாக ''ஊளைச் சதை பிடித்தவன்,'' ''பெண் தன்மை வாய்ந்தவன்'' ''குரூரமான வன்,'' ''ஃபாஸிஸ்ட்,'' ''மனிதபட்சணி,'' ''உளறிக்கொட் டும் பெல்கிரேட் கிளி'' என்று எல்லாம் விவரிக்கபட்ட மார் ஷல் ஜோஸப் பிராஸ் டிட்டோ (Joseph Broz Tito) திடீரென சோவியத் தலைமைப் பீடத்தார்களில் ஒருவராகச் சேரும்படி அழைக்கப்பட்டார்.

ஒரு வார சம்பாஷணைக்குப் பிறகு டிட்டோவும் சோவியத் பிரதமர் புல்கானினும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட னர். ''சோஷலிஸ்ட் அபிவிருத்தியில் பல்வேறு பாணிகளைக் கடைப்பிடிப்பது தனிப்பட்ட நாடுகளின் பொறுப்பு'' என்று அந்த ஒப்பந்தம் பிரகடனம் செய்தது. ''இலட்சிய மாறுபாடு களையோ, சமூக அமைப்புகளில் மாறுபாடுகளையோ பொருட் படுத்தாமல் எல்லா நாடுகளும் ஒன்று கூடி வாழ்வதை'' இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொண்டதுடன், பிறரும் பின்பற்றுமாறு வற்புறுத்தியது.

இந்தப் புதிய திருப்பமும், அதற்குப்பின் குருஷ்சேவும், புல்கானினும் பெல்கிரேடில் பழைய சம்பவங்களுக்கு வருத் தம் தெரிவித்ததும், சோவியத் எல்லைக்குள் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்துவதுடன் அந்நாட்டு மக்கள் எதிர்காலத் தைப்பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்யவும் தூண்டும். டிரீஸ்டி யிலுள்ள இதாலிய கம்யூனிஸ்ட் தலைவர் விட்டோரியா விடாலி (Vittorio vidali) நடத்திய பத்திரிகை, ''புதிய குருஷேவ் கொள்கை, நமது ஏட்ரியாடிக் கடல் காற்று மரங்களை உலுப்

புவதுபோல் நமது கட்சியைக் கலகலக்கச் செய்துவிட்டது'' என்று எழுதியது. இந்தக் கருத்து பலபேருடைய எண்ணத்தைப் பிரதிபலித்தது.

டிட்டோவின் வெற்றி எதிர்பாராத வகையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மாஸ்கோவின் உறவை பாதிக்கலாம். யுகோஸ்லாவியாவின் செல்வாக்கு மிக்க தத்துவாசிரியன் எட்வர்டு கார்டெல்ஜ் (Edward Kardelj) மார்க்ஸிஸ்ட் சம்பிரதாயத்திற்கு விரிவான வியாக்யானம் கூறிய முறையை, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சில பின்பற்றலாம். ஸ்காண்டிநேவிய சோஷல் டிமொகிராட்டுகள் (Social Democrats) முன் ஓஸ்லோவில் 1954 அக்டோபரில் பேசுகையில் கார்டெல்ஜ்' அதிகாரவர்க்கத் தேக்க நிலையைத் தாக்கி, பிற நாடுகளில் பலாத்காரமாகப் புரட்சியை விளைவிக்க வேண்டும் எனும் ரஷ்யாவின் பழைய கொள்கையையும் எதிர்த்தார்.

''புரட்சிகர சோஷலிஸம், படிப்படியாய் வளர்ந்து மாறுதல் ஏற்படுத்தும் சோஷலிஸம், இரண்டுக்கும் உள்ள முரண்பாட்டை, இரண்டு முறைகளையும் அங்கீகரிப்பதன் மூலம் சரித்திரம் தீர்த்துவைத்துவிட்டது'' எனக் கார்டெல்ஜ் கூறிவிட்டார்.

1953-இல் தொடங்கி, 1955 ஜுலையில் ஜெனிவாவில்கூடிய வல்லரசு மகாநாட்டில் முடிவடைந்த புதிய சோவியத் தந்திரத்தின் இறுதிப் பொருள் யாதாயினும், வெளுத்ததெல்லாம் பால் என நம்பும் அமெரிக்காவும் அதன் அட்லாண்டிக் நாட்டுக் கூட்டாளிகளில் பெருவாரியானவர்களும், இந்த மனப்பான்மையினுல் ஏற்படக்கூடிய அபாயத்தை அறிந்துகொண்டுவிட்டனர். ரஷ்யா சமாதானம் பற்றிப் பேசுவதைக் கண்டு மயங்கி, இனி அவர்கள் படைக்கலேப்பில் ஈடுபடமாட்டார்கள். ஆனுல் சோவியத் நாட்டினர் நீண்ட காலம் சமாதான ஆர்வம் காட்டும் தந்திரத்தைக் கடைப்பிடிக்கலாம் என்பதை மேற்கத்தி நாட்டுக் கொள்கை வகுப்போர் அலட்சியம் செய்வதும் ஆபத்தானது. அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இந்தத் திருப்பமே ரஷ்யாவின் சர்வதேச உறவுகளில் பிரதானமாயிருக்கலாம்.

1957-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ஆம் தேதியோடு, ரஷ்யப் புரட்சியின் நாற்பதாவது ஆண்டின் பூர்த்தி. இது அந்நாடு மத்திய வயதடைந்ததற்கொப்பாகும். நடுத்தர வயதில் ஒருவித நிதானம் ஏற்பட்டு பிறர் மதிப்பைப்பெறும் ஆவலும் தோன்றும். சமூகத்தில் திறமை, கலாசாரம், பிராந்திய அடிப்படையில் காணும் வித்தியாசம் முதலியவைகளுக்கு கம்யூனிஸ்ட் நாட்டிலேயே அதிக சுதந்திரமளிக்கப்படலாம்.

வருவாயின் விநியோகம், கட்சியில் அந்தஸ்து, பூரணத் தொழில் திறமை யில்லாதவர்கள், தொழிலில் நடுத்தர



உயர்தர நிர்வாகம் வகிப்பவர்கள்—இவர்களது பணிக்கேற்ற
சமுதாயப் பாராட்டுதல்கள் முதலியனபற்றி மாறுபட்ட கருத்
துக்கள் தோன்றுவதற்கான சூசகங்கள் தென்படுகின்றன.
1937இல், துரோகிகளை ஒழித்துக் கட்டுதல்களுக்குப் பின்பும்,
யுத்தத்தில் வெற்றி பெற்றதற்குப் பின்பும், ராணுவத்தினரின்
செல்வாக்கு குறைத்துக் கூறப்பட்டே வந்திருக்கிறது. ஆனுல்
ஸ்டாலினுக்குப் பிறகு ராணுவத்தினர் செல்வாக்கு விசேஷ
மாகப் பெருகிவருகிறது. ஆலைத்தொழில், சுரங்கத்தொழில்,
போக்குவரத்து சாதனம், ரஸ்தா அமைப்பு முதலிய துறை
களிலும், மாறுபட்ட கருத்துக்கள் வெளிவருகின்றன. சோவி
யத் குடியானவப் பிரதிநிதிகள் அமெரிக்காவின் மத்திய மேற்
குப் பிராந்தியத்தில் 1955 ஆம் ஆண்டு கோடை கால மத்தியில்
வரவேற்கப்பட்டனர். அமெரிக்காவின் சுபிட்சத்தைப்
பார்த்து அவர்களும் உயர்வான வாழ்க்கைத்தரம் பெறும்
ஆர்வம் பெற்றிருப்பார்கள். நகர வாழ்க்கைக்கும், கிராம
வாழ்க்கைக்கும் தேசியத் துறைக்கும், கலாசாரத் துறைக்கும்
பல்வேறு வகை வித்தியாசங்கள் தோன்றலாம்.
சோவியத் மக்கள் வாழ்க்கைபற்றிய தத்ரூபமான விவ
ரங்களைச் சோவியத் அறிக்கைகளிலிருந்து காண முடியாது.
அமெரிக்காவுக்குச் சோவியத் குடியானவர்கள் வந்ததுபோல்,
அமெரிக்காவிலிருந்து 1955-இல் ரஷ்யாவுக்குச் சென்ற குடி
யானவர்கள் சோவியத் மக்கள் வாழ்க்கை நிலையை நன்
கறிந்து வந்திருக்கலாம் பல மணி நேர வேலை, உணவுப்
பொருள்களின் அகாத விலை, யுத்தத்திற்குப் பின் புனர்
அமைப்புப் பெருதவர்கள் குடும்ப வாழ்க்கை போன்ற பல
சங்கடங்களை ரஷ்யப் பாமர மக்கள் எதிர்த்துப் போராட
வேண்டியிருக்கிறது என அங்கு சென்ற மேற்கத்தி விமர்ச
கர்கள் அடிக்கடி கூறுகின்றனர். நகரிலே மோசமான குடி
யிருப்பு வசதி, குறைந்தவிடத்தில் பலர் நெருங்கி வாழ
வேண்டிய நிர்ப்பந்தம், புராதன முறையில் சுகாதார வசதி
கள், எல்லாச் சாமான்களுக்கும் வரிசையில் நிற்கவேண்டிய
தனுல் ஏற்படும் அலுப்பு, எல்லாம் சேர்ந்து வாழ்க்கையை
உப்புச்சப்பற்றதாகச் செய்துவிட்டது. சமீப காலத்தில்
குடிப்பழக்கம் பெருகி வருவதனுல், இந்தச் சலிப்பு மட்டுப்
பட்டிருக்கலாம்.
சாமான்ய சரக்குகள் கூடுதலாகக் கிடைக்கலாம் என
மாலங்காவ் வாக்களித்தார். ஆனுல் ராணுவப் பாதுகாப்
பைப் பெருக்க வேண்டிய நிர்ப்பந்தமும், யுத்த விமானங்கள்
தயாரிக்க வேண்டிய அவசியமும் சேர்ந்து அவர் தம்முடைய
வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் செய்துவிட்டது.
இந்த விளைவு நமது நிபுணர்களையே ஆச்சரியத்தில் மூழ்கித்
திகைப்படையச் செய்துவிட்டது. 1955-இல் அத்தியாவச்ய

சரக்குகளின் உற்பத்தி ஐந்து சதம் என்று கூறப்பட்டது.
யுத்தத்திற்குப் பிறகு இவ்வளவு குறைவாக எந்த வருஷத்
திலும் உற்பத்தி செய்யப்படவில்லை. ரஷ்யாவின் ஜனத்
தொகை வருஷத்திற்கு ஒன்றரை சதமே அதிகரிப்பதனால்
யுத்தக் கெடுபிடி நீடிக்கும்வரையில் உற்பத்தியில் கணிசமான
அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது.

ஸ்டாலின் இறந்த பிறகு, பல மாறுதல்கள் ஏற்பட்
டிருப்பதைக் காண்கிறோம். இந்த மாறுதல்கள் மூலம் மனித
னுக்கு மதிப்பு ஏறி வருகிறது என்பதைக் குறிப்பிட
வேண்டும். சில வருஷங்களுக்குப் பிறகு ரஷ்யாவுக்குச்
சென்று திரும்பிய நிருபர்களும், பார்வையாளர்களும், ரஷ்ய
மாறுதல்கள்பற்றி ஏகோபித்த கருத்துக்களை வெளியிடுகின்
றனர். முந்தியெல்லாம் அந்நாட்டில் யாருடன் பேசினாலும்.
தாங்கள் ஒரு கம்யூனிஸ்டுடன் பேசுகிறோம் என்பதே பிர
தானமாயிருந்தது. ஆனால் இப்பொழுது பேசுகையில் தாங்
கள் ரஷ்ய நாட்டினருடன் பேசுவதை உணர்வதாகக் கூறு
கின்றனர். யுத்தத்திற்குப் பிறகு, இப்பொழுதுதான் ரஷ்யர்
களுடன் தாராளமாகப் பேச முடிகிறது.

ரஷ்யர்களில் வெகு சிலரே அரசியல் விஷயங்களில் அக்
கறை கொள்கின்றனர் என்பதும், அவர்களைப் பெரிதும்
கவர்ந்தது. மற்றெல்லா நாடுகளைப்போலவே அங்கும்,
''காரியாலயம், குழந்தைகளுக்குக் கல்வி வசதியளிப்பது,
மகளுக்கு ஏற்ற காதலன், ஓய்வு நாட்களை எங்கு கழிப்பது,
டெலிவிஷன் செட் வாங்கலாமா, நாளைக்குக் கசாப்புக்கடைக்
காரன் மாமிசம் கொடுப்பானா'' என்பனபோன்ற விஷயங்
களைப்பற்றியே மக்கள் பேச விரும்புகின்றனர் என லண்டன்
**'டைம்ஸ்'** பத்திரிகை நிருபர் கூறுவது உண்மை.

இந்த நிருபர் மேலும் கூறுகிறார்: ''அரசியல்பிரச்னைகளில்
மக்களுக்கு அக்கறை குறைவதைக் கட்சிப்பித்தர்கள் அங்கீ
கரிக்காவிடினும், ரஷ்யாவில் புரட்சி வேகம் தற்போதைக்கு
தணிந்துவிட்டது. இதே நிலை நீண்ட காலம் நீடிக்கக்கூடும்.
பல ஆண்டுகள் சமூகப் புயல் அடித்து ஓய்ந்த பிறகு, சமூகம்
தனது இயல்பான நிலையை அடைந்துவிட்டது. சாமானிய
சமூகத்தில் காணும் பதவி, அந்தஸ்து, அதற்கேற்ற சலுகை
கள், சம்பிரதாயங்கள்-புதியன மட்டுமல்ல பழங்காலத்ததும்-
அதிகமாகத் தேவைப்படும் வாழ்க்கை வசதிகள் யாவும் ரஷ்
யாவிலும் காணக்கூடும்.

இப்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும் என்பதில்
அக்கறையுள்ள சோவியத் பிரஜைகள் சோவியத் அயல்
நாட்டு உறவுக்கொள்கை விரிவுபடுத்தக்கூடாது என்று
விரும்பலாம். சோவியத் கொள்கை போகப் போக நிதா
னம் வாய்ந்ததாயிருக்கும் எனத் திட்டமாகக் கூறிவிடவும்



முடியாது. சற்றுக் கூடுதலான நிதானம் வாய்ந்த தந்திரங்
கள் போகப்போகக் கையாளப்படலாம் என நிச்சயமாகக்
கூறலாம். ஆனால் அதுவும் நிர்ணயமான திட்டமுடைய
போக்காக இருக்காது. கொஞ்ச காலத்திற்கு நிதானப்
பல்லவி பாடப்பட்டு வரலாம். திடீரெனக் கடுமை தோன்ற
லாம். மீண்டும் சமூகப் போக்கும், சலுகைகளும் இடம்
பெறலாம்.

இம்மாதிரி தந்திர மாறுதல்களின் விளைவாக சோவியத்
கோட்பாடுகளில் தீவிர திருத்தங்கள் ஏற்படவேண்டி வருமா?
நிச்சயம் வந்துதான் ஆகவேண்டும் என்று கூறுவதற்கில்லை.
ஒரே சமயத்தில் மாறுபட்ட கோட்பாடுகளைப் பின்பற்று
வதும், பேசுவதொன்றும், செய்வது மற்றொன்றுமாயிருப்
பதும், கம்யூனிஸ்டுகளுக்கு சாத்யம் என்பதைக் கண்டோம்.
உண்மை, தர்க்கவாதம், அறிவு முதலியவைகளில் பழக்கப்
பட்டவர்களுக்கு ''இருவகைச் சிந்தனை'' செய்யும் கம்யூ
னிஸ்ட் திறமை வியப்பளிக்கலாம். அநுபவத்தின் மூலம் ஒரு
கோட்பாடு தவறானது, நிலைமையைச் சமாளிக்கச் சக்தி
யற்றது என்று தெரிந்தால் நம்மில் பலர் அதுபற்றிப் புனரா
லோசனை செய்வோம், அல்லது அதை உதறித் தள்ளுவோம்.
ஆனால் கம்யூனிஸ்டோவெனில், முன்கூட்டியே திட்டம்
செய்த தத்துவத்திற்குப் பொருந்தாத ருசுக்களை நியாயமல்ல
எனத் தள்ளிவிடுவான்.

''இரட்டைச் சிந்தனை'' கம்யூனிஸ்ட் தத்துவாசிரியனை
எந்தப் பிரச்னையையும், தனது விவரணப்படித் தீர்ப்பதற்கு
உதவி புரிகிறது. கம்யூனிஸ்ட் சித்தாந்தப்படி எந்தக் கம்யூ
னிஸ்ட் தலைவனும், தனது நாட்டு மக்களையோ, பிறரையோ
கொடுமைப்படுத்தமாட்டான், ஆக்கிரமிப்புச் செய்யமாட்டா
ஞைகையால், இம்மாதிரிக் கொடுஞ்செயல்கள் புரிவதாகக் குற்
றம் சாட்டுபவர்கள் குரோத மனப்பான்மையுள்ளவர்கள்,
பிறரை அவதூறு செய்யும் முதலாளிகள் என்றழைப்பான்.
பிறர்மீது ஆக்கிரமிப்புக் குற்றம் சாட்டுகையில் 1940 லிருந்து
1948 வரை தனது எல்லையிலுள்ள ஐரோப்பிய நாட்டினரிட
மிருந்து ரஷ்யா நிர்ப்பந்தித்துச் சலுகைகள் பெற்றதில்,
முரண்பாடு இருப்பதாகச் சோவியத் தத்துவாசிரியர்கள் கருது
வதில்லை.

மேற்கத்தி விமர்சகர்களின் தர்க்க சாஸ்திர முறைப்படி
காண முடியாத ஒரு தர்க்க ரீதி நேர்மை சோவியத் சிந்தனை
யில் துலங்குகிறது என்று பிரிட்டிஷ், அமெரிக்க விமர்சகர்கள்
தங்களையுமறியாமலே அனுமானிக்கக்கூடும். சமாதானமும்
வேண்டும், ஆதிக்கமும் எல்லையற்று விரிவடைய வேண்டும்
என்பதே தங்களது நோக்கம் என்பதுபோல் கம்யூனிஸ்ட்
தலைவர்கள் பேசுகின்றனர். தங்களது கோட்பாடுகளுக்குப்

போதிய அளவு பக்தி செலுத்திக்கொண்டே இம்மாதிரி
முரண்பாடுகளையும், கட்டுப்படுத்திக்கொண்டிருக்க முடியுமா?
இவ்வாறு மாறுபட்ட ''இருவகைச் சிந்தனை'' புரியும் ரஷ்யர்
களால் சமாதானத்தில் உள்ள நமது நம்பிக்கை எப்படி
பாதிக்கப்படும்? கம்யூனிஸ்ட் தத்துவாசிரியர்கள் தாங்கள்
கொண்டுள்ள வறட்டுக் கொள்கைகளின் முரட்டுத்தனமான
அம்சங்களைக் கைவிட்டால்தான் உலகப் பாதுகாப்பு
நிலைக்குமா?

கம்யூனிஸ்டுகள் தங்களது கொள்கைகளையோ, முறை
களையோ பகிரங்கமாகக் கைவிடுவர் என்று எதிர்பார்ப்பதற்
கில்லை. மார்க்ஸியக் கோட்பாட்டில் ஒரு பகுதியைக் கைவிட்
டால், நிலைமை சீர்பட அது உதவுமாலுைம், அப்படிக்
கைவிட வேண்டிய அவசியமில்லை. நேர்மாருன சிந்தனைகளை
மேற்கொள்ளுவது கம்யூனிஸ்டுகளிடையே ஊறிப் போயிருந்
தாலும், கம்யூனிஸ்டுகளின் பேச்சைவிட அவர்கள் செயலுக்கே
பிராதான்யம் அளிக்கவேண்டும் என்பதை ராஜதந்திரத்
துறையில் கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பவர்கள் உணரவேண்டும்.
இஸ்லாம் மதத்தில் பிற மதத்தினர்மீது ''புனிதப் போர்
(Holy War) புரிந்தே ஆகவேண்டும்'' என்பதுபோன்ற பிற
மதக் கோட்பாடுகள்போலவே கம்யூனிஸ்ட் அடிப்படைக்
கோட்பாடுகளில் சிலவற்றிற்கு மக்கள் வாசா கைங்கரியம்
செய்யலாம். ஆனுல் நடைமுறையில் அவை செயற்படாமல்
மறந்து மடிந்து போகக்கூடும்.

இதற்கிடையில் கம்யூனிஸ்ட்களில்லாத ராஜதந்திரிகள்
ஆற்றவேண்டிய கடமை ஒன்றிருக்கிறது. கொள்கைகளை
உருவகப்படுத்தக்கூடிய இருதலைக்கொள்ளி மனப்பான்மை
யைக் கைவிட்டு பயனுள்ள முறைகளில் ஏதாவது ஒன்
றைக் கடைப்பிடிக்கும்படி, அவர்களைக் கட்டாயப்படுத்து
வதில் முனையவேண்டும். கொஞ்ச காலத்திற்கு சமா
தானம் நிலவி, அந்தக்காலத்தில் தங்களைப் பலப்படுத்திக்
கொள்ள வேண்டும் என்று சோவியத் தலைவர்கள் விரும்பு
கின்றனர் என்பதற்குப் போதிய முகாந்திரம் இருக்கிறது.
ஆனுல் இதைப்பற்றி உறுதியாகக் கூறமுடியாது. மாலங்
கோவ் தலைமையில் மக்களுக்கு அத்தியாவசியமான பொருட்
கள் தயாரிப்பதில் ரஷ்ய நாட்டினர் ஆர்வம் காட்டினர்.
ஆனுல் புல்கானின் ஆட்சியில் இந்த ஆர்வத்தையே அடக்கி
யுத்த விமானத் தயாரிப்பில் ஈடுபட்டனர். சோவியத்
பொருளாதார அமைப்பு அஸ்திவாரமின்றிக் கலகலத்திருக்
கிறது என்னும் வதந்தியைப் பொய்ப்பிப்பதற்கே இம்மாதிரி
மாறுதல் செய்தனரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

மாறுதல்களை லாகவமாக மேற்கொள்ளும் தங்கள்
சாமர்த்தியத்தை நிருபித்துவிட்டு, 1955 ஆம் வருஷம் ஜூலை



யில் ஜெனிவாவுக்குச் சென்று அங்கே சமாதானத்தை
வளர்ப்பதாகப் பிரதிக்ஞை செய்தனர். மாறுபட்ட
சித்தாந்தங்களை ஒரே சமயத்தில் மேற்கொள்வதனுல்
தர்மசங்கட நிலை ஏற்பட்டாலும், தங்களது சமாதான
ஆர்வத்தை நடைமுறையில் நிறைவேற்றும் சந்தர்ப்பம்
அவர்களுக்குக் கிடைத்தது.

யுத்தக் கெடுபிடி தளர்தல், காமின்ஃபார்மைக் கலைத்தது,
ஆயுதப் பரிஹரணப் பிரச்னை பற்றி விவாதிப்பதில் உண்மை
யான ஆர்வம், தற்போதுள்ள வித்தியாசங்களைத் தீர்த்துக்
கொள்ளுதல் யாவும் சோவியத் நிலைபற்றிய மேற்கூறிய
மதிப்பீட்டிற்கு பொருத்தமானவைதான்; 1920லிருந்து
1939-இல் ஹிட்லர்...ஸ்டாலின் உடன்பாடு ஏற்பட்ட வரையில்
சோவியத் நாட்டினர் கையாண்ட தந்திரங்களுக்தும் இவை
பொருத்தமானவைதான். ஹிட்லர்—ஸ்டாலின் உடன்பாடு
ரஷ்யாவைச் சமாதான ஆர்வமுள்ள நாடாகவும், அந்நாட்
டினர் தீவிரக்கருத்துக்கள் கொண்டவர்களாயினும். அவை
களைத் தங்கள் நாட்டிலே மட்டும் அநுஷ்டிப்பவர்கள் என்
றும் உலகத்திற்குக் காட்டியது என்பதையும் நாம் மறந்து
விடலாகாது.

ஆயுதப் பரிஹரணத்தில் சோவியத்தினரின் அக்கறை
உண்மையானது என்ருல், கம்யூனிஸ்ட் ஆதிக்கம் ஏற்
படுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே ஆயுதக்குறைப்பு
யோசனைகள் கூறுவது ரஷ்ய சம்பிரதாயமாயிருந்து வந்திருக்
கிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஜார் அரசன்
முதலாவது அலெக்சாண்டர் 1816-இல் காஸ்டல்ரீ பிரபு
வுக்கு ''வல்லரசுகள் தயாரித்த ஆயுதங்களை எல்லா நாடு
களும் ஒரே சமயத்தில் குறைத்துக்கொள்ள வேண்டும்''
எனக் கூறினுர். 1868-இல் இரண்டாவது அலெக்ஸான்டர்
மன்னன் வெடிகுண்டுகள் உபயோகத்தைத் தடைசெய்ய
வேண்டும் எனக் கூறினுர். இதற்கு ஆறு ஆண்டுகளுக்குப்
பின் பிரஸ்ஸல்ஸில் இதே அரசன், ''அநாவசியமாக கஷ்
டங்களை விளைவிக்கும் எல்லா ஆயுதங்களையும் தடைசெய்ய
வேண்டும்'' எனக் கோரினுர். 1899-இல் இரண்டாவது நிக்
கோலஸ், ஹேக் (Hague) மகாநாட்டைக் கூட்டியதன்
மூலம் சமாதானம் நிலவச் செய்பவர் என உலகப் புகழ்
பெற்ருர்.

1916-இல் அதிகாரம் அடையுமுன் ''பாட்டாளி மக்கள்
பூர்ஷ்வாக்களின் ஆயுதங்களைப் பறித்தபின்பே, ஆயுதப் பரி
ஹரணம் சாத்தியம், அதற்கு முன்பு சாத்தியமில்லை'' என்று
லெனின் கூறினுர். ஆனுல், 1927-இல் சர்வதேச சங்கத்தில்
''தரை, கடல், விமானப் படைகள் யாவற்றையும் கலைத்து
விடவேண்டும்'' என்று யோசனை கூறி, மிகுந்த பரபரப்பை

ஊட்டினுர். இதைத் தவிர அச்சமயம், இருந்த ஆயு
தங்கள், யுத்தக் கப்பல்கள், விமானங்கள், ஆயுத உற்
பத்திச்சாலைகள் யாவற்றையும் அழித்து, எல்லாவித
ராணுவப் பயிற்சியையும் நிறுத்தி, இந்தத் திட்டத்தை
நிறைவேற்ற ஒரு சர்வதேச ஸ்தாபனம் நிறுவவேண்டும்
என்றும் கோரினுர்.

1955-ஆம் ஆண்டு உலகத்தையும், ஜெனிவா மகாநாடு
நடந்ததற்குப் பின்புள்ள காலத்தையும், ரஷ்யத் தலைவர்
கள் நினைத்துப் பார்க்கையில், மீண்டும் ஆயுத ஒழிப்புச் சம்
பிராயத்தை பின்பற்றுவதற்கான காலம் நெருங்கிவிட்டது
என்று அவர்கள் நினைக்கக்கூடும் எனத் தோன்றுகிறது. இம்
மாதிரி அவர்கள் தங்களது கடுமையை ஓரளவு தளர்த்திஞல்,
சில நன்மைகள் ஏற்படலாம் என்று நான் கூறியிருக்கிறேன்.
இதைத் தவிர மற்றுமோர் நன்மையும் ஏற்படலாம். இன்
றைய நிலையில் முக்கியத்துவம் வாய்ந்த மத்திய உலகை செஞ்
சேனையின் உதவி கொண்டும், மதிப்பிழந்த காமின்பார்மின்
குரூரம் வாய்ந்த சதிவேலை மூலமும் அணுகுவதைவிட இந்
தப் பழைய சம்பிரதாயத்தின் மூலம் சுலபமாக வசப்படுத்
தலாம்.

சோவியத் தலைவர்கள் எப்பொழுதுமே மிக ஜாக்கிர
தையாக. தங்களுக்கு ஆபத்து சம்பவிக்காத முறையிலேயே
செயல்புரிந்து வந்திருக்கின்றனர். அவர்களுடைய இந்த
புதிய மாறுபாட்டை அடையக்கூடிய கொள்கை அவர்களுக்கு
அபாயம் வராமல் பாதுகாக்கும் என்பதுடன், அவர்களுடைய
கம்யூனிஸ்ட் குறிக்கோள்களை எளிதில் அடைவதற்கு உதவும்
என்று அவர்களில் சிலர் நினைக்கக்கூடும். பரந்த அடிப்படை
யில் ரஷ்யர்களின் கொள்கைகள் அமைந்திருப்பதன் மூலம் ஏற்
படும் கம்யூனிஸ்ட் அபாயத்தை அலட்சியம் செய்தால் அமெ
ரிக்கர்களுக்கு ஆபத்தே விளையும். ரஷ்யர்கள் ஆக்கிரமிப்புத்
தோரணையில் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்திக்கொண்
டாலும், பிறநாடுகளுடன் போட்டி போட்டுப் பணிபுரிவதன்
மூலம் கூடிவாழும் முறையைக் கையாண்டாலும், அவர்களது
அபாயகர வளர்ச்சியைப் பயன் உள்ள முறையில் சமாளிக்க
நம் நாட்டிஞல்தான் முடியும்.

இந்த நாடுகளின் போட்டி எந்த ரூபத்தில் தோன்றும்,
இந்தக் கருத்துக்கள் எம்மாதிரி விளைவுகளை உண்டாக்கும்
என்பதை இன்று கூட திட்டமாகக் கூறமுடியாது. ஆலைத்
தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் பாட்டாளி மக்கள்
புரட்சி தோன்றும் என்று அன்று மார்க்ஸ் எழுதி வைத்த
முறையில்தான் முக்கியமான போராட்டம் நிகழும் என்று
கூறுவதற்கில்லை.



இதைச் சோவியத் தலைவர்களே ஒப்புக்கொள்ளுகின்றனர்
போல் தோன்றுகிறது. 1924-இல் "லெனினிஸத்தின் அடிப்
படை" என்பது பற்றி ஸ்டாலின் நிகழ்த்திய சொற்பொழிவு
களில் அவர் கூறியதாவது: "உலகம் இரண்டு கூறுகப்
பிரிந்து நிற்கிறது. ஒரு பக்கம் ஒரு சில நாகரிக நாடுகள்
மூலதனத்தை வைத்துக்கொண்டு உலகத்திலுள்ள பெரும்
பான்மை மக்களைச் சுரண்டிப் பிழைக்கின்றன. மற்ருெரு
புறம் துன்புறுத்தப்படும், சுரண்டப்படும் காலனி நாட்டுக்
குடிமக்களே பெரும்பாலோர். இந்த இரண்டாவது வகை
யினரை விடுவிக்கும் தூதர்களாக கம்யூனிஸ்டுகள் செயல்
புரியவேண்டும்" என்றும் அவர் கூறினுர்.

பிற நாட்டினரை விட சுபிட்சமாக வாழும் அட்லாண்டிக்
நாட்டினர் ரஷ்ய ரகஸ்ய போலீசும், எதிரிகளை வாட்டிவதைக்
கும் சிறை முகாம்களும் தமது சிஷ்யர்கள் சாதிக்கப்போவ
தாக மார்க்ஸ் கண்ட கனவைச் சிதைவுறச் செய்துவிட்டன
என்பதை அறிந்து கொண்டுவிட்டனர். ஆனுல் ஸ்டாலின்
மனத்தில் கொண்டு கூறிய ஏராளமான பின்தங்கிய நாட்டி
னர் இந்த உண்மையை அறியவில்லை. ஏனெனில் இவர்கள்
தாங்கள் அடைந்த கஷ்டத்திற்குப் பரிகாரம் காண்பது பற்
றியே நினைத்து வாழ்வதனுல் இந்த உண்மையை அவர்கள்
அறிந்துகொள்ளமுடியவில்லை. ஆசியா, ஆஃப்பிரிக்கா, தென்
அமெரிக்காவில் வாழும் லட்சோபலட்சம் மக்கள் தாங்கள்
அநுபவிக்கும் சோக நாடகத்திற்கு விடிவு காண்பதிலேயே
கருத்துக்கொண்டிருப்பதால் அவர்களிடம் தூரதிருஷ்டியை
எதிர்பார்க்கமுடியாது. ஒரே தலைமுறையில் பின்தங்கிய
நிலையிலிருந்து இருபதாவது நூற்ருண்டில் யந்திரத்தொழில்
வளர்ச்சியில் உச்சநிலை யடைந்த 200 கோடி ரஷ்ய மக்களையே
அவர்கள் காண்கின்றனர். உலகமெங்கும் வியாபித்துள்ள
ஒரு அரசியல் கட்சி இனமாறுபாட்டை எதிர்ப்பதையும் மக்
களிடம் அக்கறை காட்டி உணவு, நிலம், சமாதானம் யாவற்
றையும் அளிப்பதையும் அவர்கள் காண்கின்றனர். இந்தக்
காட்சிகள் அவர்களது மனத்தைக் கவருகின்றன.

இன்னும் மற்ற வாக்குறுதிகளும், துரித அபிவிருத்திக்
கான உதாரணங்களும், பெரும்பாலான உலக மக்கள்
காணக்கூடிய பிற புரட்சிகள், பின்தங்கிய கண்டங்களின்
கதியை நிர்ணயிப்பதுடன், அணுகுண்டு போட்டியில் சிக்கிக்
கொண்டிருக்கும் இரு பெரும் நாடுகளின் எதிர்காலத்தையும்
முடிவு செய்யும்.

*

## பகுதி—3

# சீனப் புரட்சி தடம் புரளுகிறது

சீனு—அதோ தூங்கும் அரக்கன் மாதிரி கிடக்கிறது. அது தூங்கிக் கொண்டேயிருக்கட்டும். ஏனெனில் அது விழித்தெழுந்தால், உலகத்தையே உலுக்கிவிடும்.

—நெப்போலியன் போனபார்ட்.

*அத்தியாயம்-9*

# சீன - முன்னுரை

இரண்டாவது மகாயுத்தம் முடிந்த கொந்தளிப்பு
நிறைந்த அடுத்த பத்து ஆண்டுகளில் ரஷ்யா பற்றி முந்தி
நாம் எதிர்பார்த்தபடி ஏதும் நடக்கவில்லை. நமது நம்பிக்கை
யில் ஏமாற்றமே கண்டோம். ஆகையால் ரஷ்யாபற்றிய
அமெரிக்க மதிப்பீடு தீவிர மாறுதலடைந்தது. ஆனால்
ரஷ்யரின் நடத்தை பற்றி சங்கடப்படுவது சரித்திரத்தில்
இது முதல் தடவையல்ல.

ஆனால் கம்யூனிஸ்ட் சீனு தோன்றி வளர்ந்தது சரித்
திரம் கண்ட புதுமைதான். 1945-இல் அணுகுண்டு வெடிப்பை
எப்படி எதிர்பார்க்கத் தயாராயில்லையோ அவ்வாறே கம்யூ
னிஸ்ட் சீன ஆதிக்கத்தையும் எதிர்பார்க்க நாம் தயாரா
யில்லை என்றே கூறலாம். எனினும் ஜனத்தொகையிலும்,
இயற்கை வளத்திலும், ரஷ்யாமாதிரி சீனுவும் பிரம்மாண்
டமாயிருப்பதனுல் உலக விவகாரங்களில் அது தலையாய பங்கு
கொள்ளும் எனத் திட்டமாகக் கூறலாம்.

தீர்க்கதரிசனம் வாய்ந்த சிலர் இந்த உண்மையைத்
தெளிவாகக் கண்டனர். "உலக சமாதானம் சீனுவைப்
பொறுத்திருக்கிறது. யார் சீனுவை நன்கு புரிந்துகொள்
கின்றனரோ, அவர்களே அடுத்த ஐந்து நூற்றுண்டுகளுக்கு
உலக அரசியல் சிக்கல்களைச் சமாளிக்கும் ரகஸ்யத்தை அறிந்
தவர்களாவார்கள்". இவ்வாறு இருபதாவது நூற்றுண்டு
தொடக்கத்தில் ஒரு அமெரிக்க அரசாங்கக் காரியதரிசி கூறி
னர். ஆனுல் இந்த, "தெய்விக சாம்ராஜ்யத்துடன்" முந்திய
ஐந்து நூற்றுண்டுகளில் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட அநுப
வத்தின் விளைவாக சுயதிருப்தி பூண்ட ஐரோப்பா - அமெ

ரிக்கா வாசிகள் ஜான் ஹே* (John Hay) யின் எச்சரிக்கையில் அவநம்பிக்கை கொண்டு அலட்சியம் செய்தனர். சமீப காலம் வரையில் இதே மனோநிலைதான் விடாப்பிடியாய் நீடித்துவந்தது.

சில பாதிரிகள், வர்த்தகர்கள், ஒரு சில அரசாங்க அதிகாரிகள் தவிர, 'ஹே' காலத்தில் வசித்த பிற அமெரிக்கர்களில் சீனாவைப்பற்றி ஓரளவு அறிந்தவர்கள் வெகு சிலரே. பள்ளிப்பட்டம் பெற்றவர்கள் மட்டும் சீனர்கள் உலகமக்களில், ஐந்தில் ஒரு பங்கினர், அவர்களது நாகரிகம் பழம் பெரும் இரண்டு அல்லது மூன்று உலக நாகரிகங்களில் ஒன்று என்பதையும் அறிவர். ஆனால் அவர்களில் யாரும் உலக விவகாரங்களைப் பெரிய அளவில் உருவகப்படுத்தும் செல்வாக்கைச் சீனா பெறும் என்று எண்ணினார்களில்லை.

சீன நாகரிகம் மந்தகுணத்திற்குப் பெயர்போனது, அந்த நாடு அடிக்கடி அந்நியர் படையெடுப்புக்குட்பட்டது என்று மட்டும் படித்தவர்கள், ஹேயின் தீர்க்கதரிசனமான வாக்கைக் கேட்டு வியப்பே அடைந்தனர். டாங்† (T'ang) வம்சத்தினரின் ஆட்சிச் சிறப்புக்குச் சீனாவின் முந்திய சரித்திரத்திலோ, பிந்திய வரலாற்றிலோ ஈடு இணைசாண முடியாது என்ற நம்பிக்கை கொண்ட இளம் சீன சரித்திர ஆராய்ச்சியாளர்கள், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்ட வெற்றி பற்றிப் பெருமிதம் கொண்ட சீனமக்கள் திடீரெனத் தீவிர மாறுதல் செய்ய முனையமாட்டார்கள் என முடிவு கட்டிவிட்டனர்.

டாங் ஆட்சிகால மக்கள் பற்றி ஒரு விமர்சகர் கூறுகிறார்: ''அவர்கள் பழங்கால மக்கள் போலாகிவிட்டனர், சலித்துப்போய்விட்டனர்; ஏமாற்றமடைந்தவர்களாகிவிட்டனர், எல்லாவற்றையும் அநுபவித்துப் பார்த்தவர்கள் போல் சலிப்படைந்துவிட்டனர், உலக விவகாரங்கள் யாவும் அநித்தியம் என்பதை அறிந்த துயருற்றவர்கள் போல் பண்பட்டுவிட்டனர்; சந்தேகங்கள் யாவும் முன்னமே தீர்க்கப்பட்டு இனி கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியவைகளே இல்லை, அவர்களுடைய வாழ்க்கை முறையிலே நிம்மதியடைந்து இனி

*ஜான் ஹே:—(John Hay) 1898 லிருந்து 1905-இல் மரணமடையும்வரை அமெரிக்க அரசாங்கக் காரியதரிசியாயிருந்தார். 1899-இல் சீனாவுடன் சரியான முறையில் வியாபார உறவு கொள்ள வேண்டும் எனும் கொள்கை வகுத்தார். இதற்குத்தான் திறந்த வாயில் (Open door) கொள்கை என்று பெயர்.

†டாங்:—(T'ang) வம்சத்தினர் சீனாவை 1618-இலிருந்து 1906 வரை ஆண்டனர். இந்த வம்சத்தின் முதல் அரசன் லியூவான் (Liyuvan) முன் ஆண்ட சூயி (Sui) மன்னனைக் கொன்று பட்டத்திற்கு வந்தான். உடனே கொரியா, மங்கோலியா, மஞ்சூரியா, டர்க்கிஸ்தான் முதலிய பகுதிகளைக் கைப்பற்றினான். இவர்கள் காலத்தில் கலை, சிற்பம், ஓவியம், இலக்கியம் யாவும் தழைத்தோங்கின.



வேறு முறை இருக்கமுடியாது என்ற ஞானம் பெற்றவர்கள் ''யாலாகிவிட்டனர். அவர்களுக்கு ஏக்கம் உண்டு, ஆனால் ஆசைகள் இல்லை.''

பழைய சீனா தன்னை, ''மத்ய ராஜ்யம்'' என்று கருதிக் கொண்டது. உலக நாகரிகத்தின் சக்தி தோன்றிப் பரவும் கேந்திரஸ்தானம் எனத் தன்னை மதித்தது. கன்பியூஷியஸ் தத்துவத்தின் அரசியல் சமூக சிந்தாந்தங்களில் ஊறிப்போன அந்நாடு சம்பிரதாயத்தை வணங்கியது. சோதனை செய்வதையும், புதிய மாறுதலையும் வெறுத்தது. எழுத்தறிவும், புராதன சாஸ்திர அறிவும் உள்ளவர்கள் ஆட்சித்திறமையும், ஆதிக்க உரிமையும் பெற்றவர்கள் எனக் கருதப்பட்டது. குடும்ப நலன்களே உயர்ந்த குணச்சிறப்புகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்ததனால் உறவினர்களுக்கு உத்தியோகம் அளிப்பதும், ஊழலே தொழிலாக இருப்பதும் மலிந்துவிட்டது. ஆகையினால் தேசிய உணர்வு வளர இடமின்றிப் போய்விட்டது.

பழைய தத்துவம் பட்டவர்த்தனமாக வர்க்க உணர்ச்சியை வளர்த்ததனால், சமூக முன்னேற்றமும் தடைப்பட்டது. ''பாமர மக்கள் மரியாதைக் குகந்தவர்களல்ல. பிரபுக்கள் தண்டனைக்குரியவர்களல்ல'' என கன்பியூஷியஸ் போதித்தார். ''கனவான்களில்லையேல் பாமர மக்களை யார் ஆள்வர்? பாமர மக்கள் இல்லையேல் கனவான்கள் எப்படி சம்ரட்சணை பெறுவர்?'' இவ்வாறு கன்பியூஷியஸின் சிஷ்யர் மென்ஷியஸ் (Mencius) உபதேசித்தார். இதே கருத்துக்கு லட்சியம் எனும்மேல் பூச்சுப் பூசிக் கவர்ச்சிகரமாகச் செய்து 1943-இல் கூட சியாங்-கே-ஷேக் தமது நாட்டினருக்குப் போதித்தார். ''கன்பியூஷியஸால் வெளியிடப்பட்டு மென்ஷியஸால் விரிவுபடுத்தப்பட்டு போதிக்கப்பட்ட சீனநாட்டின் பிரத்தியேக தத்துவம் உலகத்தின் பிற தத்துவங்களுக்கு மேம்பட்டதாகி விட்டது''. இவ்வாறு சியாங் கூறினார்.

சீனாவின் புராதானப் பண்புகளான பரம்பொருளை நம்பியிருத்தலும், பரஸ்பர உறவு* (Relativism) முறையும் புரட்சியைத் தூண்டுவனவாயிருப்பினும் அவைகள் தற்காப்புக்கான சக்தியை அளிக்கவில்லை. சென்ற ஆயிரம் ஆண்டுகளில் பாதி காலம் வட சீனாவை அந்நிய ஆக்ரமிப்பாளர்களே ஆண்டு வந்திருக்கின்றனர். இரண்டு தடவை சீனா முழுதுமே அந்நியர் வசப்பட்டிருந்தது.

*பரஸ்பர உறவுமுறை:— (Relativism) கன்பியூஷியஸின் போதனைப்படி ஒருவன் தன்னைப் பிறர் சிறப்பாக மதிக்க வேண்டும் என விரும்பினால் அவன் தனக்குக் கீழ்ப்பட்டவர்களை மதித்து, நேர்மையாக நடத்த வேண்டும், தன்னைப்போல் பிறரையும் நினைத்தல்தான் இந்த தத்துவத்தின் சாரம்.

செங்கிஸ்கான் ஆசியா பூராவிலும், ஐரோப்பாவின் பெரும்பகுதியிலும், தனது சாம்ராஜ்யத்தை நிலைநாட்டிய பிறகு, பதின்மூன்றாவது நூற்றாண்டில் அவனது பேரன் குப்ளாகான் தலைமையில் மங்கோலியர்கள் சீனாவை வசப்படுத்தினர். அவனது சாம்ராஜ்யத்தின் உச்சநிலையில் அவனது ஆட்சி ஒழுங்காக அமைந்திருந்ததைப் பாராட்டி ஒரு சீன சரித்திர ஆசிரியன் எழுதினான். ''ஒரு பானை பொன் நாணயத்தைச் சுமந்துகொண்டு ஒரு கன்னிப் பெண் எவ்வித தீங்குக்கும் உட்படாமல் மங்கோலிய சாம்ராஜ்யத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு எல்லைக் கோட்டிற்குப் போகலாம்.''

பதினேழாம் நூற்றாண்டு மத்தியில், வடக்கே இருந்து படையெடுத்து வந்த மஞ்சுக்கள் மிங் வம்சத்தினரை வீழ்த்தி விட்டனர். ஒரு சிறு இனத்தவர்களான மஞ்சுக்கள் எப்படி மத்திய சமவெளியினரை வெல்லும் பலம் பெற்றனர் என்பதை சியாங்-கே-ஷேக் வர்ணிக்கிறார். இந்த வர்ணனை அவருடைய வீழ்ச்சியைப்பற்றி ஓரளவு தீர்க்கதரிசனத்துடன் கூறுவதுபோல் அமைந்திருக்கிறது. ''மிங் வம்சத்தினரின் இறுதி காலத்தில் அரசியல், ஊழல் மயமாயிருந்தது. அபிப்பிராயங்கள் பலதரப்பட்டனவாயிருந்தன. அரசியல் கட்சியினர் முட்டி மோதிக்கொண்டனர். கொள்ளை தலைவிரித்தாடியது. அலிகள் அதிகாரப் பீடத்தைக் கைப்பற்றினர். படைத் தலைவர்கள் தளபதியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில்லை.''

இந்த விசித்திரமான ஒருமைப்பாடு வேறு ஒரு அம்சத்திலும் காணப்படுகிறது. 1661-ஆம் ஆண்டில் மிங் வம்சத்தில் எஞ்சி நின்றவர்கள் சியாங் மாதிரியே ஃபார்மோஸாவுக்கு ஒதுங்கி அடுத்த தலைமுறை பூராவும் சீன நாட்டை எதிர்த்துப் போராடினர்.

மஞ்சு ஆட்சியில் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக சீனா தனித்தே இயங்கிவந்தது. இந்தக் காலத்தில் அதன் எல்லைகளில் வாழ்ந்த ''காட்டுமிராண்டி''களை ஒன்று வென்றோ, அல்லது தங்களுடன் சேர்த்துக்கொண்டோ வந்தனர். மற்றப்படி தம்பிச்சையாகவே வெளி உலகுடன் தொடர்பு கொள்ளாமலே வாழ்ந்து வந்தனர். இந்தத் தனிமையினால் சீனர்கள் தங்களை 'உலகத்தை ஆள்பவர்கள்' என்றும், தங்களது மன்னனை ''மோக்ஷ உலகக் குமாரன்'' என்றும் கற்பனை செய்து கொண்டு வாழ்ந்து வந்தனர்.

மஞ்சு மன்னர்களில் இருவர் காங்ஸே (K'ang Hsc), சின்லுங் (Ch'ien Lung) சரித்திரம் கண்ட சிறந்த அரசர்கள் வரிசையில் இடம் பெற்றவர்கள். நடுவிலே பதினான்கு ஆண்டுகள் தவிர இவர்கள் 1662-இலிருந்து 1796-ஆம் ஆண்டு வரை



ஆட்சி புரிந்தனர். இருவரும் மிகுந்த அறிவு படைத்த, திறமை மிக்க மன்னர்கள். அவர்களுடைய குடிமக்கள் அவர்களை அமானுஷ்யமான சக்தி வாய்ந்தவர்கள் எனக் கருதியதற்கு ஓரளவு நியாயமுண்டு.

உதாரணமாக, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 1792-இல் பீகிங்கிற்கு ஒரு வர்த்தகத் தூது கோஷ்டியை அனுப்பிய பொழுது, சின்லுங் அந்த கோஷ்டித் தலைவரைத் திருப்பியனுப்பிவிட்டு, மூன்றாவது ஜார்ஜ் மன்னனுக்குப் பின்வரும் வாழ்த்தையும் அனுப்பினான்: ''எங்களது நாகரிகத்தின் நற்பயன்களை அடைய நீங்கள் ஆவல் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் மன்னனே! எதிர்காலத்தில் நீ இன்னும் கூடுதலான பக்தியும், விசுவாசமும் நம்மிடத்தில் காட்டவேண்டும்; இடைவிடாது நமது ஆட்சிக்கு உட்பட்டிருப்பதன் மூலம் நீ சுபிட்சமும், சமாதானப்பேறும் பெற லாம். நடுநடுங்கிக் கொண்டே நமக்குக் கீழ்ப்படிந்து நட. அலட்சியமா யிராதே''

அரண்மனைப் பாரபட்சத்தினாலும் ஊழலினாலும், மஞ்சு வம்சத்தின் ஆட்சிச் சிறப்பு பதினெட்டாம் நூற்றாண்டுடன் முடிவடைந்தது. 1840-ஆம் ஆண்டுவாக்கில் மேற்கத்தி நாட்டினர் தங்களைத் துப்பாக்கிப் படகுகளுடன் தாக்கிய பொழுது மஞ்சுக்கள் மறுபேச்சின்றிப் பணிந்தனர்.

அபின் சண்டை*க்குப் பிறகு செய்து கொண்ட உடன்பாட்டின் மூலம் சீனா ஹாங்காங் தீவை 1842ஆம் ஆண்டு பிரிட்டனுக்குத் தத்தம் செய்ததுடன் ஐந்து துறைமுகங்களைத் தாராளமான வியாபாரத்திற்குத் திறந்து விட்டது. ஏற்கனவே அழிக்கப்பட்ட அபினுக்கு நஷ்டஈடு அளிப்பதாக ஒப்புக்கொண்டது. பின்னர் அபின் இறக்குமதிக்குச் சட்டபூர்வ அநுமதியும் அளித்தது. வியாபார வசதி யளிக்கப்பட்ட துறைமுகங்கள் மூலம் அந்நியர் எல்லாவிதமான பிரத்தியேகச் சலுகைகள் பெறலாயினர். சீனாவிடமிருந்து ஒரு அளவு காப்பு வரி வசூல் செய்யவும், சீன ஆதிக்கத்துக்குட்படாமல் பிரிட்டிஷார் அநுமதிக்கப்பட்டவுடன், அமெரிக்கா, ஃபிரான்ஸ், ரஷ்யா யாவும் அதே மாதிரி உரிமைகள் கோரத்தொடங்கின.

*அபின் சண்டை:—(Opium war) 1839-இல் சீனா அபின் இறக்குமதியைத் தடை செய்தது. இதை மீறிவந்த பிரிட்டிஷ் அபின் காண்டனில் சீனரால் அழிக்கப்பட்டது. பிரிட்டன் உடனே சீனக் கடற்கரைத் துறைமுகங்களைத் தாக்கிற்று. நவீன ஆயுதங்களை எதிர்க்கமுடியாமல் சீனா பணிந்தது. 1842-இல் நான்கிங் உடன்பாட்டின்படி, பல துறைமுகங்கள் பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டதுடன் ஹாங்காங் அதன் வர்த்தக வசதிக்கு அளிக்கப்பட்டது.

மற்ற நாடுகளைவிட அமெரிக்காதான் சீனாவிடம் பிரத்தியேகச் சலுகை பெற்ற நாடு. சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் இந்தப் பிரத்தியேகச் சலுகை ஷரத்தையும் சேர்த்துக்கொண்டது அமெரிக்கா. வேறு எந்த நாடாவது சீனாவிடமிருந்து கூடுதலான சலுகைகள் பெற்றால் அந்தச் சலுகைகள் அமெரிக்காவுக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதுதான் அந்த ஷரத்தின் சாரம். 1860-இல் அயல்நாட்டு தூதர்கள் சீனத் தலைநகரில் வாழ்வதற்கு வசதியளிக்கும் உடன்பாட்டை மன்னர் ஏற்க மறுத்ததும், டீன்ஸ்டீனில் இருந்த பிரிட்டிஷ், ஃபிரஞ்சுப் படைகள் பீகிங் மீது படையெடுத்தன. இங்கே புகழ்பெற்ற அரண்மனை ஒன்றையும், விலை மதிப்பற்ற கலைப்பொருள்களையும் அழித்தனர். இம்மாதிரி தொல்லைகளால் துன்புற்ற மன்னன் உடன்பாட்டிற்கிணங்கினான்.

வர்த்தகச் சலுகைகளுக்காக இவ்வாறு கொள்கையற்ற முறையில் போட்டி போட்டியிட்டுக் கொண்டுதான் மேற்கு நாடுகள் சீனாவிற்குள் புகுந்தன. இதன் விளைவுகளையே இன்னும் நம்மிடையே காண்கின்றோம். இன்னும் பல்லாண்டுகளுக்கு அவை நீடித்திருக்கும்.

மேற்கத்தி ராணுவ அதிகாரத்திற்குட்பட்டே கிறிஸ்துவ மத போதகர்கள் பணி புரிந்தனரென்று, துரதிருஷ்டவசமாக சீனர்கள் மதிக்கின்றனர். அந்நியருக்கு அளிக்கப்பட்ட அநேக சலுகைகளில் தங்குதடையின்றி கிறிஸ்துவ மதத்தை அநுஷ்டிப்பதும் பரப்புவதும் ஒன்று.

1840-ஆம் ஆண்டு வாக்கில் மேற்கத்திநாட்டினர் சீனாவில் பிரவேசிக்கையில், படித்த ஆட்சியாளர்கள், எழுத்தறிவில்லாத விவசாயிகள் என இரு கூறுகளாக சீனர்கள் பிரிக்கப்பட்டிருந்தனர். விவசாயிகள் கஷ்டமான வேலை செய்து வயிற்றைக் கழுவும் நிலையில் வாழப் பழகி விட்டனர். ''காற்றுதான் என் உடை, பனிதான் என் போர்வை, மழைதான் குடிதண்ணீர்.'' இது ஓர் உண்மை உரைக்கும் சீனப் பழமொழி.

சீன சமூகத்தின் தீர்மானமான பல நம்பிக்கைகளை கலகலக்கச் செய்துவிட்டது மேற்கத்தி நாட்டினர் பிரவேசம். மேற்கத்தி ராணுவ, பொருளாதார ஆக்ரமிப்பின் மூலம் தலைகுனிந்து நின்ற சீன அரசாங்கம், மக்களிடையே மதிப்பிழந்தது மட்டுமின்றி மேற்கத்திக் கருத்துகள் புகுந்து சீன வாழ்க்கையின் அடிப்படையையே செல்லரிக்கச் செய்துவிட்டன.



மேற்கத்தி நாட்டினருடன் தொடர்பு கொண்டதனால்,
சீன மக்களிடையே ஒரு புதிய தேசிய உணர்ச்சி ஏற்பட்டு,
மேற்கத்தி உடன்பாடுகள்மீது அவர்களுக்கிருந்த வெறுப்
பைப் பெருக வைத்தது. இவ்வாறாக அபின் யுத்தத்திற்குப்
பின் சில ஆண்டுகளுக்கு ஒரு புதிய சமூக உத்வேகம் சீன
சம்பிரதாயங்களைத் துளைக்க ஆரம்பித்துவிட்டது. அந்தக்
காலத்தவர்கள் இம்மாதிரி மாறுதல்கள் ஏற்படும் என்று
அறிந்து கூற முடியாவிட்டாலும், மேற்கத்தியார் துரிதப்
படுத்திய ஒரு புதுச் சகாப்தத்தைச் சீனா கண்டது. ஆனால்
இந்த . மாறுதல் வேகத்தை இறுதியில் மேற்கத்தியரால்
கட்டுப்படுத்த முடியவில்லை.

1849-ஆம் ஆண்டில், மா சே துங்கின் செஞ்சேனை சியாங்
கே ஷேக்கை ஃபார்மோஸாவில் ஓய்வுபெறத் துரத்துவதற்கு
நூறு ஆண்டுகளுக்கு முன்,முரட்டு ஆயுதங்கள் படைத்த,வெறி
பிடித்த விவசாயிகள் கும்பல் மலைச்சாரல்களிலிருந்து தென்
சீனாவில் இறங்கிற்று. அவர்கள் பல கிராமங்களைக் கைப்
பற்றினர். கிராம வாசிகளை ஒரு புதிய தத்துவத்தைக்
கடைப்பிடிக்கும்படிச் செய்தனர். இறுதியில், நுழைந்த
வேகத்திலேயே திரும்பிச் சென்றனர்.

இம்மாதிரித் திடீர்த் தாக்குதல்கள்தான் மஞ்சுக்களுக்
கெதிராகத் தோன்றிய **டெய்பிங் கலகத்தின்***தொடக்கம். அவர்
களது தலைவன் தியாக பூஷணனான ஹுங் ஸியூ சுவான் (Hung
Hsiu chu'an), இவன் தன்னை ஏசுநாதரின் சகோதரன் எனக்
கூறிக்கொண்டு, ''விண்ணுலகின் இளவரசு'' என நாமம்
சூட்டிக்கொண்டான்.

இதற்கு ஓராண்டுக்கு முன் கம்யூனிஸ்ட் பிரகடனம்
பிரசுரம் செய்யப்பட்டாலும் ஹுங் கார்ல் மார்க்ஸைப்
பற்றிக் கேள்விப்பட்டிருப்பான் என்று கூறுவதற்கில்லை.
எனினும் டெய்பிங் திட்டத்திற்கும் ஒரு நூற்றாண்டுக்
குப் பிறகு சீனாவை வசப்படுத்திக்கொள்ள மா சே துங்கிற்கு
உதவி புரிந்த கம்யூனிஸ்ட் திட்டத்திற்கும் உள்ள ஒருமைப்
பாடு வியப்பிற்குரியதே.

தன்னுடைய இளம்பிராயத்தில் மஞ்சு கொடுங்
கோன்மையிலிருந்து சீனாவை விடுவிக்கும்படி தன்னை ஆண்ட
வன் அழைப்பதுபோன்றதொரு தெய்வதிருஷ்டி ஹுங்கிற்குத்
தென்பட்டது. காண்டனில் இரண்டு மாத காலம் ஒரு

---

* **டெய்பிங் கலகம்:**—(Taiping Rebellion) 1850-லிருந்து 1865வரை நடந்
தது. மஞ்சு அரசன் சிங்கை எதிர்த்து ஹுங் ஸியூ சுவான் தலைமை
யில் கலகம் நடந்தது. இவன் தீர்க்கதரிசனம் வாய்ந்த பண்டிதன். மே
கத்தி நாடுகளின் உதவியால் கலகம் அடக்கப்பட்டாலும், மக்கள் அதிருப்
தியின் காரணமாக சிங் வம்சத்தார் 1912-ல் வீழ்ச்சியுற்றனர்.

புரோடஸ்டண்ட் மத போதகரிடம் தங்கியதனல் அவன் கிறிஸ்தவ மத உபதேசங்களை அறிந்துகொண்டான். உடனே ஆலயங்களில் புகுந்து விக்ரகங்களை உடைக்கத் தொடங்கிஞன். தனக்குத்தானே ஞானஸ்நானம் செய்துகொண்டான். கிறிஸ்தவ வேத ஆகமங்களில் ஊறித் தோய்ந்தான். இதன் விளைவாக அரசியல் கோட்பாடொன்றை வகுத்தான். அதில் சீர்திருத்த அம்சமும், இலட்சிய வெறியும் இருந்ததோடு கிறிஸ்துவ மதக் கோட்பாடு பற்றித் தவறுதலான வியாக்யானமும் அடங்கியிருந்தது. சொந்தமாக வேதங்களை வெளியிட்டான். தனது சிஷ்யர்கள்கொண்ட '' கடவுள் சங்கம் '' அமைத்தான்.

சாதாரணப் போலி மத குருவைவிட ஹுங் மிகவும் சக்தி வாய்ந்தவன் என்பதை மஞ்சுக்கள் சீக்கிரம் தெரிந்துகொண்டனர். அவன் விவசாயிகள் குறைகளைத் தீர்க்க சக்திவாய்ந்த முறையில் முன் வந்தான். '' உலகம் நீதியாக அமையவும், பலவான் எளியோனைத் துன்புறுத்தாமலிருக்கவும், அறிவாளி அறியாதவனைக் கொடுமை செய்யாமலிருக்கவும், தீரன் கோழையை அடிமைப்படுத்தாமலிருக்கவுமே வீழ்ந்த சமூகத்திற்குப் புத்துயிரளிக்க விரும்புகிறோம் '' என அவன் விவசாயிகளுக்கு உறுதி கூறினுன்.

1840-ஆம் ஆண்டைத் தொடர்ந்து மிகக் கொடிய அளவில் நோய், மழையின்மை, வெள்ளம், பஞ்சம் முதலியவைகள் தோன்றியதனல் மக்களிடையே வறுமை மிகக் கொடுமையாகப் பெருகிற்று. மேற்கத்தி ஆக்ரமிப்பைச் சமாளிக்க முடியாமல் பீகிங் ஆட்சி பலஹீனமாயிருந்ததனுல், மக்களிடையே எதிர்ப்பு உணர்ச்சி பெருகியது.

விவசாயிகளது இந்தக் கிளர்ச்சிக்கு ஹுங் தலைமையேற்று நடத்திஞன். சீக்கிரத்தில் பெருகிவரும் டெய்பிங்கின் வெறி பிடித்த படைகள் மனச்சோர்வுற்றிருந்த மன்னர் படைகளைப் பல சண்டைகளில் தோற்கடித்தன. ஹுங்கைப் பின்பற்றியவர்கள் குவாங்ஸியிலிருந்து முன்னேறி யாங்டீஸி பள்ளத்தாக்கில் தங்களது ஆட்சியை ஸ்தாபித்தனர்.

இந்தக் கலகங்கள் பதிஞன்கு ஆண்டுகளுக்குப் பின் அடக்கப்பட்டன. அதற்குள் கலகக்காரர்கள் பதிஞெரு மாகாணங்களைக் கைப்பற்றிவிட்டனர். பிரம்மாண்டமான அளவுடைய நிலப்பரப்பில் நாசம் விளைவிக்கப்பட்டது. பத்து லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர் 1853-ஆம் ஆண்டுக்குள் டெய்பிங்கினர் ஹாங்கோ, ஊசாங், ஹானியாங், நாங்கிங் முதலியவிடங்களைக் கைப்பற்றிவிட்டனர். நாங்கிங் தலைநகராக அமைந்தது.



ஹுங்கின் துறவு மனப்பான்மையும், சன்மார்க்க நோக்
குள்ள அறக்கோட்பாடுகளும் அவனைப் பின்பற்றியவர்களிடமும் பரவின. இவர்களை எப்படியும் வசப்படுத்தித் தவருன
வழிக்கு இழுக்க முடியாது. ஆனுல் மஞ்சுக்கள் மோசமான
வர்கள். இந்த வித்தியாசம் கிராம மக்களைப் பெரிதும்
கவர்ந்தது. சமீபத்தில் நடந்த சீன உள்நாட்டுச் சண்டை
யில் கம்யூனிஸ்டுகள் நடந்துகொண்ட மாதிரி டெய்பிங் தலை
வர்களும், கிராம மக்களைத் தொந்தரவு செய்யலாகாது
எனத் தங்களது துருப்புகளுக்கு உத்தரவிட்டனர். ஆகை
யால் அவர்கள் மதிப்பு உயர்ந்தது. டெய்பிங்குகளின் தலை
நகருக்கு 1853-ஆம் ஆண்டில் விஜயம் செய்த ஒரு பிரிட்டிஷ்
கடற்படை அதிகாரி, '' எல்லாவிதத்திலும் இவர்கள் புதிய
ஜாதியினராக விளங்குகின்றனர் '' எனக் கூறிஞன். இரண்
டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு மாவின் '' விவசாயச் சீர்
திருத்த வாதிகள் '' பற்றிச் சில மேல்நாட்டு விமர்சகர்கள்
தவருன நம்பிக்கை கொண்டமாதிரி பிரிட்டிஷ் கடற்படை
அதிகாரியின் மதிப்பீடும் தவறெனக் கருதலாம்.

சில ஆண்டுகளுக்குள் ஹுங் விவசாயச் சீர்திருத்தங்
களில் சிலவற்றை வெளியிட்டான். இவைகள் மூலம் எதிர்
காலத்தில் நிலங்கள் சமமாக அநுபவிக்கப்படும் எனவும்,
நிலத்தின் வளத்திற்கேற்ப எல்லா நிலங்களும், ஒன்பது தர
மாகப் பிரிக்கப்படும் என்பதும் தெரிந்தது. '' எல்லோருக்
கும் உண்ண உணவு வேண்டும், எல்லோருக்கும் உடுக்க
உடை வேண்டும், பணம் பகிர்ந்து அநுபவிக்கப்பட
வேண்டும், எல்லா விஷயங்களிலும் சமத்வம் நிலவ வேண்டும்,
உணவின்றி, குளிர் தாங்கும் வசதியின்றி யாரும் இருத்த
லாகாது '' என ஹுங் பிரகடனம் செய்தான்.

நூறு ஆண்டுகளுக்குப் பின் சீன கம்யூனிஸ்டுகள் செய்த
மாதிரி நிலச்சுவான்தார்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன.
ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கின்றனரோ, அதற்
கேற்ப இருபத்திஐந்து குடும்பத்தினரின் உடைமைகள் ஒரு
பொதுப் பகுதியாகக் கருதப்பட்டது. இந்தப் பகுதியில்
நிலம் பொதுவில் உழப்பட்டது. அறுவடையில் மிஞ்சியது
பொதுக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டது. டெய்பிங் ராணு
வத்தினரால் நிர்வகிக்கப்பட்ட பிராந்தியங்களில் இந்தத்
திட்டம் முதன் முதலில் அமுல் செய்யப்பட்டது. நாளடை
வில் இது சீனுவெங்கும் அநுஷ்டானத்திற்கு வரும் எனும்
லாக்குறுதியின் விளைவாக எங்கும் கலகத்திற்கு ஆயிரக்கணக்
கில் ஆள் சேர்ந்தனர்.

பெரியோர் ஏற்பாடு செய்த திருமணங்கள், அடிமை
முறை, மஞ்சுக்கள் கட்டளைப்படி தலையைப் பின்னித்
தொங்கவிடுவது, அபின் உபயோகிப்பது முதலியவற்றை

ஹூங் தடை செய்தான். இன சமத்வத்தை நிலைநாட்டுவதற்கான சட்டங்கள் இயற்ற முயன்றான்.

ஆனால் ஹூங்கின் சீர்திருத்தங்கள் சீராக அமுலுக்கு வருமுன் புரட்சியின் வேகம் தளர்ந்து, பலஹீனங்கள் தென்பட ஆரம்பித்தன. திறமை வாய்ந்த, நிலையான தலைவர்கள் அச்சமயம் இல்லை. பண்டிதர்கள், மஞ்சு எதிர்ப்புச் சங்கத்தினர், புரட்சிக்கு ஊக்கமளித்த கிறிஸ்தவப் போதனை புரிந்த சாமியார்களைக் கூட அவர்கள் கவரவில்லை. ராஜ தந்திரத் துறையில் இவர்கள் கற்றுக்குட்டிகள் என்பதை அந்நியர் அறிந்து கொண்டனர். பல நூற்றாண்டுகளாக சீனாவின் சாபக் கேடாக இருந்துவந்த, லஞ்ச ஊழலுக்கு இவர்களும் இறுதியில் அடிமைகளானார்கள்.

ஈவிரக்கமின்றி நடந்த ஓயாப் போரினால், ஹூங்கின் படைகள் களைப்புற்றுவந்தன. மஞ்சுக்களின் தரைப்படை, கடற்படைக் கூலிகள், வீரச் செயலார்வம் கொண்ட அமெரிக்கன் பிரடரிக் டவுன்ஸெண்டு வார்டு, பிரிட்டிஷ் மேஜர் சார்ல்ஸ் ஜார்ஜ் கார்டன் போன்ற தலைவர்களின் கீழ் போர்புரிந்ததனால் ஹூங்கினர் விரைவில் தோல்வியுற்றனர். 1864-இல் தனது தலைநகர் நாங்கிங்கைப் பகைவர்கள் சூழ்ந்து கொண்டதனால், ஹூங் தற்கொலை செய்து கொண்டான்.

டெய்பிங் புரட்சிக்குக் காரணமாயிருந்த நிலைமை பத்தொன்பதாவது நூற்றாண்டில் பெரிதும் மாறாமலே இருந்து வந்தது. கொந்தளிப்புச் சிறிது காலம் அடக்கப்பட்டிருந்தாலும் மீண்டும் தலைகாட்டிப் பெருகத் தொடங்கியது. ஹூங்கிடமும், அவனுடைய புரட்சி வீரர்கள்பாலும் பரந்த அளவில் அமெரிக்க அநுதாபம் நிலவி வந்தது.

## அத்தியாயம்—10

# ஸன் யாட் ஸென்

சீனாவின் புரட்சிகரமான அரசியல் உணர்வு ஸன்யாட் ஸென் (Sun yat-Sen) தலைமையில் மீண்டும் தெளிவான முறையில் தலைதூக்கிற்று. டெய்பிங் கலகம் தோல்வியுற்ற பின் 1867-இல் ஸன்யாட் ஸென் பிறந்தார். மாவின் தலைமையில் ஹூனானில் கம்யூனிஸ்ட் கட்சி நிகழ்த்திய முதல் விவசாயிகள் கலகத்திற்குச் சிறிது முன்பு 1925-ஆம் ஆண்டில் அ[illegible]



காலமானார். இந்த இரண்டு சீனப் புரட்சிகளின் இடைக் காலத்தில் அவர் வாழ்ந்தார்.

ஹூங் மாதிரியே ஸென்னுக்கும், கொடுங்கோன்மையை எதிர்த்துப் புரட்சி செய்யும் ஆதர்சத்தை மேற்கத்தி ஜனநாயக லட்சியங்களே அளித்தன. "நானும் ஒரு கூலி. நான் ஒரு கூலியின் மகன்; நான் ஏழைகளிடையே பிறந்தேன்; நான் இன்னும் ஏழையாகவே வாழ்கிறேன். வாழ்க்கையில் போராடித் தத்தளிக்கும் பாமர மக்களிடமே நான் என்றும் அநுதாபம் கொள்கிறேன்''. இவ்வாறு பெருமையுடன் கூறிக்கொண்டார் ஸென்.

சிறு பையனாயிருக்கும்போதே அவர் வீட்டை விட்டு ஹோனோலூலு (Honolulu)விலுள்ள ஓர் ஆங்கிலப் பள்ளிக்குப் படிக்கப் போனார். உட்ரோ வில்ஸன் (Woodrow Wilson) நீங்கலாக அவர் தலைமுறையிலுள்ள பிரமுகர்களை விட அதிகமாக மேற்கத்தி அரசியல் நூல்களைப் படித்தார். அமெரிக்க இலட்சியங்களில் அவருக்கு இருந்த அநுதாபத்தினால் உற்சாகமாகச் சில சந்தர்ப்பங்களில் பொருத்தமில்லாதபோதுகூட அந்த லட்சியங்களைச் சீன நிலைக்குப் பயன்படுத்த முயற்சித்தார். ஸன் காலத்தில்தான் சீனா உலக விவகாரங்களில் தலையிடத் தொடங்கியது. அவர் வாழ்நாளில்தான் அந்நாட்டில் மேற்கத்தி தூரக் கிழக்கு நாடுகளின் கலாசாரங்கள் ஒரே காலத்தில் பின்பற்றப்பட்டு வந்தன. இந்தப் பரஸ்பர மோதலினால் எவ்வித மாறுதல்கள் ஏற்படும் என்கிற நுட்பமான பிரச்னைக்குத் திட்டமாகப் பதில்கூற முடியாமலிருந்தது. இந்த முக்கியமான பிரச்னைகளுக்கு மற்றெல்லாத் தற்கால சீனத் தலைவர்களை விட ஸன் சின்னமாக விளங்கினார்.

ஆகையால் அவர் புரட்சிக்கு தயார் செய்து கொண்டிருந்த ஆண்டுகளில், புரட்சி வந்தே தீரும் என்றும் நம்பியிருந்த காலத்தில் ஜப்பானிய உதவி மட்டுமல்ல, மேற்கத்தி, குறிப்பாக அமெரிக்க தார்மிக, நிதி உதவியையும் அவர் நம்பியிருந்ததில் ஆச்சரியமில்லை. ஜப்பானிய உதவியும், மிகுதியாகவே கிடைத்தது. ஆனால் பத்தொன்பதாவது நூற்றாண்டு இறுதியில் பகிரங்கப் புரட்சிக்கு ஸன் தயாராயில்லாத சமயத்தில் சீன அரசியல் அரங்கை மிகவும் பாதிக்கக்கூடிய பல சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்த ஆண்டுகளில் தான் சீனாவுடன் தாராள வியாபார* (Open door-notes) சம்பந்தமான கடிதப் போக்குவரத்

---

**தாராள வியாபாரம் :—** (Open door-notes) அமெரிக்க ராஜாங்க காரிய தரிசியாயிருந்த ஜான் ஹே (John Hay) என்பவர் சீனாவுடன் தங்குதடையின்றி வியாபாரம் செய்வதற்கான கொள்கை 1899ல் வகுத்தார். இதற்கு (Open door Policy) என்று பெயர்.

துக்கள் வெளியாயின. இதனடியாக பிரபலமான அந்த **பாக்ஸர் கலகமும்*** நிகழ்ந்தது.

சீனாவின் சிறப்பையும், நேர்மையையும் மீண்டும் நிலை பெறச் செய்ய வேண்டுமானால் அதற்கான சிறப்பான வழியைத் தாங்கள் கண்டுபிடித்துவிட்டதாக ''பாக்ஸர்கள்'' எனும் சீன கோஷ்டியினர் நினைத்தனர். அந்நியர்களைச் சமாளிப்பதெனில் அவர்களைக் கொல்லுவது, அல்லது நாட்டைவிட்டு விரட்டிவிடுவது தான் சிறந்த வழி என அவர்கள் நம்பினர். அவர்களது நேரடி நடவடிக்கையை விளக்கவே, ''பாக்ஸர்'' (Boxer) என அவர்கள் பெயர் பூண்டனர். அதாவது ''உயர்த்திய முஷ்டிப் பிரயோகத்தின் நியாயம்.''

டெய்பிங் இயக்கத்தவர்களின் சமூக நல நோக்கங்கள் பாக்ஸர்களுக்கு இல்லை. ஆகையால் பரந்த அடிப்படையில் ஒரு இயக்கத்தை நடத்தும் சக்தி அவர்களுக்கு இல்லை. 1900-ஆம் ஆண்டு நிகழ்ந்த பாக்ஸர் கலகத்தை வலதுசாரி ரகஸ்ய சங்க வெறியர்கள் தலைமை தாங்கி நடத்தினர். தங்களுடைய மாயாஜால முறைகளினால் சீனா அந்நிய பீரங்கிகளை எதிர்த்து நிற்க முடியும் என அக்கால மன்னனின் தாயாரான ராணியை நம்பச் செய்தனர்.

திடீரெனக் கிளம்பிய ஆவேசத்தில் பாக்ஸர்கள் 242 கிறிஸ்தவப் பாதிரிகளையும் அயல்நாட்டு சிவில் உத்தியோகஸ்தர்களையும் வட சீனாவிலும், மஞ்சூரியாவிலும் கொன்றனர். சென்ற ஐம்பது ஆண்டுகளில் மேற்கத்தியாருடன் சீனா எதிர்த்துச் செய்த கிளர்ச்சியில் இதுவே மும்முரமான கடைசிப் போராட்டம். பீகிங்கிலுள்ள அந்நியத் தூதர் காரியாலயங்கள் முற்றுகையிடப்பட்டன. சிறிது காலத்திற்கு அந்நியர்களெல்லாம் உயிருக்குப் பயந்தே வாழ்ந்து வந்தனர். ஒரு அமெரிக்கப் பாதிரியின் எட்டு வயதுப் பெண்ணான பெர்ல் பக் (Pearl Buck) அச்சமயம் தனது அநுபவத்தைப் பற்றி, பின்னர்

---

*பாக்ஸர் கலகம்:—(Boxer Rebellion) பத்தொன்பதாவது நூற்றாண்டு பிற்பகுதியில் மேற்கத்தி நாடுகளும் ஜப்பானும் சீனாவை அடிமைப்படுத்தும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றன. குவாங் ஷூ (Kwang Hsu) எனும் சீன அரசன் தானே மேற்கத்தி முறைகளை அநுஷ்டித்து, இந்த மேற்கத்திய செல்வாக்குப் பயன் பெறாமல் செய்ய முயற்சித்தான். ஆனால் அவனுடைய தாய் ஸு ஹிஸி (Tsu Hsi) இதை ஆதரிக்காமல் மேற்கத்தியாரை எதிர்ப்பதற்கு பலாத்காரத்தைப் பயன்படுத்த வேண்டும் என ஏற்பாடு செய்தாள். முஷ்டியால் தாக்குவதற்கு ஆங்கிலத்தில் பாக்ஸிங் (Boxing) என்று பெயர். ஆகையால் இந்த வீரர்களுக்குப் பாக்ஸர்கள் என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. 1890 வாக்கில் இவர்கள் அந்நியர்களையும், கிறிஸ்தவர்களையும் தாக்கத் தொடங்கினர். 1900 இல் இவர்கள் பீகிங்கைக் கைப்பற்றினர். பிரிட்டிஷ், ஃபிரஞ்சு, ரஷ்ய, அமெரிக்க, ஜெர்மன், ஜப்பானியத் துருப்புகள் இவர்களை முறியடித்தன. இதன் விளைவாக, அந்நியர்களுக்கு வியாபாரச் சலுகைகளும், பீகிங்கில் அந்நியத் துருப்புகள் நிறுத்த அநுமதியும் அளித்து ஒரு உடன்பாடு ஏற்பட்டது.



முக்கிய
எழுதுகையில் ''வாழ்க்கையில் நான் அநுபவித்த
மான முதல் அநீதி இதுதான். என் தோல் வெள்ளையாகவும்,
என் கண்கள் நீலமாகவும், எனது ஜாதியினருக்கு இயல்பான
பழுப்பு நிறத்தலைமயிரும் இருந்ததனால் என்னை வெறுத்தனர்.
எனக்கும் என் இனத்தாருக்கும் என்ன ஆபத்து நேருமோ
என்று அஞ்சியே நான் வாழ்ந்தேன்'' என்று குறிப்பிட்டி
ருக்கிறார்.
ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின் சீன-அமெரிக்க நட்புற
வுக்காக ஆயுள் முழுதும் சேவை செய்தபின், இந்தப் பழைய
அநுபவத்தைப் பற்றி பெர்ல்பக் எழுதினார்: ''ஒரு நூற்றாண்
டுக்கு மேலாக ஒருவித ஆவேசம் சீனாவில் புகைந்து கொண்டே
இருந்தது. இந்த ஆவேசம், இருப்பதை வெள்ளையர் புரிந்து
கொள்ள முயலுவதில்லை. புரிந்து கொள்ள விரும்பவுமில்லை.
இந்தப் புரியாத்தன்மையின் விளைவாகவே தான் சியாங் கே
ஷேக் சீனாவை இழந்தார். கம்யூனிஸ்டுகள் வென்றனர்.
மற்ற வெள்ளையர் போல் நாம் இல்லையென்பதை சீனர்களுக்கு
நிரூபிக்கும் வேலையே நமக்கு இனிச் சரியாயிருக்கும்.''
பாக்ஸர்கள் சீக்கிரத்தில் தோல்வியுற்றனர். இறுதியில்
ஒரு ஜெர்மன் தளபதியின் தலைமையில் ஒரு சர்வதேசப் படை
டூன்ஸ்டூனிலிருந்து இடைவிடாது கடந்து சென்று பீகிங்கை
அடைந்தது. வழக்கம்போல் கொடூரமாகத் தலைநகரைத்
தரைமட்டமாக்கியது. 330 கோடி டாலர் நஷ்டஈடு கோரியது.
பாக்ஸர்கள் இழைத்த நஷ்டத்தைவிட மிகக் கூடுதலானதே
இந்த நஷ்டஈட்டுத் தொகை.
''மேற்கத்தி மாகாண நிலவரம் அறிய'' என்று கூறி
விட்டு கலவரமடைந்து ஓடிய மஞ்சு அரச கோஷ்டியினர்
திரும்பிவந்து வெற்றி கொண்டவர்கள் கட்டளைப்படி தாங்
கள் நாசநிலை அடைய இசைந்தனர். இந்த ராணுவ நடவடிக்
கையினால் ஏற்பட்ட தங்களைப் பற்றிய நினைவை சீனர்கள்
மறப்பதற்காகப் பின்னர் அமெரிக்கா எவ்வளவோ நன்
முயற்சி செய்தது. இந்த நஷ்ட ஈட்டில் தங்களுக்குச் சேர
வேண்டிய பணத்தை அமெரிக்கர் தங்கள் நாட்டில் படிக்கும்
சீன மாணவர்கள் கல்விக்காகப் பயன்படுத்தினர். ஆனால்
பாக்ஸர் கலகத்திற்குப் பின் பத்து ஆண்டுகளுக்கு, ''அடியில்
பொங்கி ஓடும் நதியை மறைத்துப் படர்ந்திருந்த பனிபோல்
சீனாவில் சமாதானம் நிலவியது.''
அந்நிய நாட்டினர் திரும்பத் திரும்பச் சீனர்களை இழிவு
படுத்தியதிலிருந்தே ஸன் யாட் ஸென்னின் புரட்சிக்கொள்கை
கள் தோன்றின. 1905-இல் அவர் டுங் மெங் ஹ்யூ. (Tung
Meng Hui) புரட்சிச் சங்கத்தை ஆரம்பித்தார். இதுதான்
பின்னர், கோமிண்டாங் (Kuomintang) ஆக மாறியது. மேற்
கத்தியாரை எதிர்ப்பதற்கு, தனது மக்களை ஒன்று சேர்ப்ப

தற்கு, அவர் பல ஆண்டுகள் ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்
பாவில் வாழும் சீனர்கள், மேற்கத்தி நாடுகள் அல்லது மேற்
கத்தி நாடுகளுக்குட்பட்ட நாடுகளில் வசிக்கும் நண்பர்களின்
பண உதவியை நம்பியிருந்தார். மஞ்சுக்களுக்கெதிராக அவர்
நடத்திய கலகங்களுக்கான தந்திரங்களை ஹாங்காங் அல்லது
ஃபிரஞ்சு இந்தோ சீனவிலுள்ள தனது தளங்களிலிருந்தே
வகுத்தார்.

இம்மாதிரி பத்துக் கலகங்கள் தோல்வியுற்ற பின் 1911-இல்
அவர் அமெரிக்காவிற்குப் புறப்பட்டார். புரட்சிக்கு மேலும்
பணம் திரட்டவே அவர் அங்கு சென்றார். அயல் நாடு
சென்றிருக்கையில் தான் அவரது படையினர் யாங்டீசீ மாகா
ணங்களில் உள்ள மன்னர் பிரதிநிதிகளை விரட்டியடித்தனர்.
சீரழிந்த சாம்ராஜ்யம் அட்டைப் பெட்டி மாதிரி சிதறுண்டு
போயிற்று. வெளிநாட்டிலிருந்த ஸன்னைப் புரட்சிப் படையி
னர் சீனக் குடியரசின் தலைவராகப் பிரகடனம் செய்தனர்.
டென்வரில் (Denver) அவரது ரயில் வந்து நின்றதும், அமெ
ரிக்கப் பத்திரிகை மூலம் தமக்குக் கிடைத்த புதுப்பதவி பற்றி
அறிந்தார்.

ஆசியாவின் பிற பாகங்களிலுள்ளவர்களும், சீனவில்
நிகழ்ந்துவரும் சம்பவங்களைக் கூர்ந்து கவனித்து வந்தனர்.
ஒரு இந்தியக் கூட்டத்திற்கு மஞ்சுக்கள் நிலைபற்றி பின்னர்
நேரு எழுதினர். இதில் காணும் உவமையின் பொருளை அவர்
கள் எளிதில் உணருவார்கள். ''புலிமாதிரி சீறிவந்த அவர்
கள், பாம்பின்வால் மாதிரி மறைந்து சென்றனர்'' எப்படி
யாவது மஞ்சுக்களை விரட்டவேண்டும் என்கின்ற ஒரே
நோக்கத்துடன் ஒன்று கூடிய, தற்காலிக நலன்களை விரும்
பிய, பல கோஷ்டியினரின் ஆதரவை நம்பியே ஸன் புதிய
ஆட்சி அமைக்க வேண்டியிருந்தது. விவசாயிகள், பாட்டாளி
கள், அறிவாளிகள், தளபதிகள், நிலச்சுவான்கள், லேவா
தேவிக்காரர்கள், ஷாங்ஹாயிலுள்ள சீன, அயல்நாட்டுவர்த்த
கர்கள் - இவர்கள் போன்று மாறுபட்ட அக்கறைகளைக்
கொண்டவர்கள் இருக்கையில் எல்லாருக்கும் நலன் பயக்கக்
கூடிய அரசியல், பொருளாதாரத் திட்டத்தை வகுப்பது
அசாத்தியம். தன்னை ஆதரித்த நான்கு பேர்களில் மூவர்
மஞ்சுக்களை விரட்டிவிட்டுத் தாங்களே மன்னராக வரலாம்
எனும் ஆசையினல் தான் ஆதரித்தனர் என ஸன்னே குறைப்
பட்டுக் கொண்டார்.

தனது கூற்றின் நியாயத்தை ஸன் அறிவார். 1912-இல்
அவர் தன் பதவியைக் கைவிட வேண்டிவந்தது. தனக்குப்
பதிலாக வட சீனப் படையின் தளபதியான யுவான் ஷிகாய்
(Yuan Shih-Kai) என்பவனைத் தலைவனாக்கினர். இவன் அடுத்த



நான்கு ஆண்டுகள், தான் மன்னர் பதவி அடைவதற்கான
முயற்சியில் ஈடுபட்டான்.

* * * * *

1916-இல் யுவானின் மரணத்திற்குப் பிறகு சீனவில் மீண்
டும் ராணுவ தளபதிகளும், யுத்த வெறியர்களும் தங்கள்
சுயநலனுக்காகத் தத்தம் படைகளைத் தங்களுக்குப் போட்டி
யாயுள்ளவர்களை வெல்வதற்குப் பயன்படுத்தினர். இந்தச்
சண்டைகளால் ரத்தம் பெருக்கெடுத்தோடியது; மாகாண
ராணுவத் தலைவர்களிடையே பெயரளவுக்காவது ஒற்றுமை
நிலவப் பாடுபட்டுப் பயன்காணமல் 1919-இல் ஸன் பரந்த
முறையில் பொதுஜன ஆதரவைப் பெறுவதன் அவசியத்தை
உணர்ந்தார்.
கோமிண்டாங் இன்னமும் ஒரு பிராந்தியக் கட்சியா
கவே இருந்தது. தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் குடி
யரசுக்கும், சோஷலிஸத்திற்காகவும் பாடுபடுவதாகக் கூறி
வந்தது. இளைஞர்களான விவசாயிகள், வர்த்தகர்கள்,
பாட்டாளிகள், மாணவர்களிடையே அதன் செல்வாக்கு எம்
மட்டு என்பதை மதிப்பிட முடியாமலிருந்தது. தமக்குச்
சொந்தமான ராணுவ பலம் இல்லாததனல் அந்தக் கட்சி,
ஊழல் மிக்க ராணுவ கோஷ்டியின் உதவியை நாடி அதையும்
விட மோசமான ஊழல் நிறைந்த ராணுவக் கும்பலுடன்
போராட வேண்டியிருந்தது.
இந்தப் பலஹீனங்களை அகற்றுவதற்காக ஸன் தீவிர
மாக வேலை செய்ய முனைந்தார். அடுத்த ஐந்து ஆண்டுகளில்
அவர் ''தேசிய புனருத்தாரண திட்டம்,'' ''ஐந்து அரசு
அரசியலமைப்பு,'' ''மக்களின் மூன்று கொள்கைகள்'' ஆகிய
தமது நூல்களை வெளியிட்டார். கோமிண்டாங்கிற்குப்
புத்துயிரளிப்பதற்குத் தேவையான அரசியல், பொருளா
தாரப் பிரசார சாதனங்களை இவை அளித்தன.
ஸன்னின் எழுத்துக்களில் அதிகார தோரணையும்
மேற்கு நாடுகளின் தாராளக் கோட்பாடுகளும் ஒருங்கே
விசித்திரமாக அமைந்திருப்பதைக் காணலாம். தேசி
யம், ஜனநாயகம், வாழ்க்கை வசதி ஆகிய தமது மூன்று
கொள்கைகளை லிங்கனின் ''மக்களுக்காக, மக்களால் நடத்
தப்படும் மக்கள் அரசாங்கத்திற்கு'' ஸன் ஒப்பிட்டார்.
ஆனல் அவரது எழுத்துக்களில் லிங்கனைவிட, லெனினின்
சாயையே அதிகமாகத் தென்படுகிறது.
இம்மாதிரி இருபொருள்படும்படி ஸன்னின் எழுத்துக்
கள் அமைந்திருப்பது பற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. உள்ள
படியே ஸன் 1924-இல் காண்டனில் நிகழ்த்திய சொற்பொழிவு
கள், மைக்கேல் பரோடின் (Michael Borodin) யோசனைகளை

அநுசரித்துச் செய்யப்பட்டதாயிருக்கலாம். இந்த பரோடின் சீனாவுக்கு வந்த சோவியத் தூதன்; கோமிண்டாங்கிற்கு புரட்சி, பிரசாரம், கட்சிக்கட்டுப்பாடு சம்பந்தமான கொள்கைகளைக் கற்பிப்பதற்காக அவன் அனுப்பப்பட்டான். ''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம்'' என்கிற தமது நூலில் மாசே துங், ''1921-க்கு முன் சீன அறிவாளிகள் உண்மையை அறிய மேற்கத்தியாரை வீணாக எதிர்பார்த்திருந்தனர்'' என எழுதியபோது பரோடினின் தூதை மனத்தில் வைத்துத்தான் எழுதினாரோ என எண்ணத்தோன்றுகிறது. ''ஒரே ஒரு தடவைதான் ஸன் யாட் ஸென் சர்வதேச உதவி பெற்றார். இதுவும் சோவியத் யூனியனிடமிருந்துதான் கிடைத்தது'' என்று மா எழுதினார்.

மாவின் இந்தக் கூற்று உண்மையல்லவாயினும் ஆதி காலத்தில் தார்மிக, நிதி, ராணுவ ஆதரவு கோமிண்டாங் தலைவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு ஐரோப்பாவிலிருந்தோ, அமெரிக்காவிலிருந்தோ கிடைக்கவில்லை. 1920-லும் 1921-லும் நியூயார்க், லண்டன், பாரிஸ் முதலிய இடங்களிலிருந்து சீனப் பொருளாதார அபிவிருத்திக்குக் கடன் உதவி பெற ஸன் செய்த முயற்சிகள் வீணாயின. மேற்கத்தி உதவி கிடைக்காததன் விளைவு ஓரளவு ஸன்னை மாஸ்கோவின் உதவியை நாடத் தூண்டியது எனக் கூறலாம்.

இம்மாதிரியே ஜார் மன்னர்கள் சீனாவிடமிருந்து பெற்ற சலுகைகளை 1922-இல் துறந்ததனால் லெனின் சீனர் மனதை இளக வைத்தார். பொருளாதாரத் துறையில் தங்களால் உதவி புரிய இயலாது என்பதைப் பயன்படுத்திக்கொண்டு இந்த சலுகைகளைத் துறந்த ஒரே செயலின் மூலம் ரஷ்யா அட்லாண்டிக் வல்லரசுகளைத் திணற அடித்தது. இந்தச் சமயத்தில்தான் மேற்கத்தி உதவி கிடைக்காதென்பதை அறிந்து ஸன் சீனாவை மாய்க்கவல்ல மேற்கத்தி உடன்பாடுகளை மூர்க்கத்தனமாகத் தாக்கி வந்தார். இந்த உடன்பாடுகளின் மூலம் ஐரோப்பியச் சுரண்டல் நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி டாலர்கள் சீன மக்களிடமிருந்து பறித்துச்செல்வதாக ஸன் மதிப்பிட்டார். இந்தக் குற்றச்சாட்டுகளில் அமெரிக்காவை அநேகமாக விலக்கியே அவர் பேசியதனால், அவர் அமெரிக்காவிடம் வைத்த மதிப்பைக் கைவிடவில்லை எனக் கூறலாம்.

கொந்தளிப்பைக் கிளப்பக்கூடிய இந்தச் சலுகைகள், ஏழ்மை மிகுந்த சீனப் பொருளாதார நிலையில் அதை மேலும் சட்டபூர்வமாகச் சுரண்டுவது-இந்த இரு விஷயங்களில் அட்லாண்டிக் வல்லரசுகளுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் உள்ள விசேஷ வித்யாசமே மற்றெல்லா விஷயங்களையும் விடச் சீனர் மனத்தை அதிகமாகப் பாதித்தது. 1930-ஆம் ஆண்டு வாக்கில்



ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும், சீனாவில் உடன்
பாடுகள் மூலம் பெற்ற சலுகைகளின் விளைவாக ஷாங்ஹாய்
போன்ற நகர்களைக் கவர ஜப்பான் வகுத்த திட்டத்தைப்
பாழ்படுத்தின என்றாலும், இந்த ஒருமைப்பாடு பெரிதும்
அகஸ்மாத்தாக நிகழ்ந்தது என்றே கூறலாம்.
எப்படியும் ரஷ்யாவையும், பிற மேற்கத்தி நாடுகளையும்
அந்தமான முறையில் சீனர் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்.
சீனாவிலிருந்து ரஷ்யா தாமாகவே வெளியேறியதற்கு இருபது
ஆண்டுகளுக்குப் பிறகும், மேற்கத்தி நாடுகள் பிரத்தியேக
சலுகைகளில் விடாப்பிடியாக உரிமை கொண்டாடினர்.
சீனாவைப் பாதிக்கும் இந்த உடன்பாடுகளை அமெரிக்காவும்,
அதன் ஐரோப்பிய நேசநாடுகளும், 1942 வரையில் விடவில்லை.
அதற்கப்புறம் தான் சீனாவின் காலனி அந்தஸ்துக்கு முற்றுப்
புள்ளி வைக்க இசைந்தனர். இதற்குள் ஜப்பானியர் ராணு
வப் படையெடுப்பு ஏற்பட்டு விட்டதனால் மேற்கத்தி நாடு
கள் அளிக்க இசைந்த சலுகைகள் அர்த்தமற்றவையாகி
விட்டன எனச் சீனர் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்நியர் அநுபவித்து வந்த விசேஷ சலுகைகளை ஒழிப்
பதில் தமது இறுதிக் காலத்தில் ஸன் யாட் ஸென் ஈடுபட்டிருந்
ததனால், ஏகாதிபத்திய எதிர்ப்பு அரணைப் பயன்படுத்திக்
கொண்டு, கொடுமைப்படுத்தப்பட்ட ஆசிய நாடுகள்,
கொடுங்கோன்மை புரிந்துவரும் மேற்கத்தி நாட்டினருடன்,
''வர்க்கப்போராட்டம்'' தொடங்கவேண்டுமென அழைத்
தார். இதே வாசகத்தை இன்னும் கூடுதலான மன வெறுப்
புடன் அவர் ஸ்தானத்தை இன்று வகித்துவரும் கம்யூனிஸ்டு
கள் நாள் தவறாமல் உபயோகிக்கின்றனர்.

சர்வாதிகார உலக ஆட்சி மாஸ்கோவிலிருந்து நடத்தப்
படவேண்டும் எனும் கம்யூனிஸ்ட் குறிக்கோளுக்கு எதிரிடை
யாகவே இருந்தது ஸன்னின் தீவிர தேசியம். மேலும் கம்யூ
னிஸ்ட் தலைமைப்பீடத்தில் முரட்டுத் தந்திரங்களையும்,
''புரட்சி வீரர்களில் அன்பு மிக்கவர்'' எனப் பெயர் பெற்ற
ஸன்னின் கொள்கையையும் ஒன்றெனக் கூறிவிட முடியாது.
ஸன்யாட் ஸென் பரந்த சீன நாட்டை அரசியல் பிடியிலிருந்து
தளர்த்தி சட்டம் இயற்றல், பொதுஜன வாக்கெடுத்தல்,
ஒழுங்காக நடக்கவில்லையெனில் தவறு செய்தவர்களின் அதி
காரத்தைப் பறிப்பது போன்ற நேரடி ஜனநாயகத்தின்
இயல்பான சாதனங்களை நிலைநாட்டும் காலத்தை அவர்
எதிர்பார்த்திருந்தார். பெற்றோரிடம் தூய பக்தி, ஜீவ
காருண்யம், தானம், பண்டிதர்களின் ஆட்சி, போன்ற
கன்பியூஷியஸின் போதனைகளை ஸன் பின்பற்றுபவர். இதற்
கும் மார்க்ஸிஸ்ட் கோட்பாட்டிற்கும் ஒவ்வாது.

மேற்கத்தி முறை முதலாளித்வம் சீனாவில் சாத்திய
மில்லையென ஸன் அதை எதிர்த்தார். ஆனால் மிகுந்த அபி
விருத்தியடைந்த அமெரிக்காவில் முதலாளித்வத்தின் சாத
னைகளை அவர் புகழ்ந்தார். அவரது மரணத்திற்கு எட்டு
மாதங்களுக்கு முன் 1924-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில்,
''சமூகப் பிரச்னை'' என்பது பற்றி அவர் செய்த முதல்
பிரசங்கத்தில் ஹென்றி ஃபோர்டின் அபார சாதனைகளைப்
புகழ்ந்து பேசினார். நிலைமை மாறக்கூடும் என்பதை
மார்க்ஸ் எதிர்பார்க்கத் தவறிவிட்டார் என ஸன் கருதி
னார். ஃபோர்டு ஆலைகளின் செழிப்பான செல்வ நிலையி
லிருந்து மார்க்ஸின் கொள்கை மூன்று அம்சங்களில் அடி
பட்டுப் போகிறது என ஸன் சுட்டிக் காட்டினார். கூடுத
லான மணி நேர வேலை, குறைந்த கூலி, உயர்வான விலை
வாசிகள் இவைகளுக்குப் பதிலாக 'ஃபோர்டு' ஆலைகளில், 1.
குறைந்த நேரவேலை, 2. கூடுதலான கூலி, 3. தங்களது சரக்
குகளைக் குறைந்த விலைக்கு விற்பது யாவற்றையும் காண்
கிறோம். சரக்கின் விற்பனைக்குப் பிறகு, உபரியான பொருள்
முதலாளிகளிடம் மிஞ்சியிருக்கிறது எனும் மார்க்ஸிய
கொள்கையை அவர் ஆட்சேபித்ததுடன், வர்க்கப் போராட்
டம் வந்தே தீரும் எனும் அவர் நம்பிக்கையை வன்மையாகக்
கண்டித்தார்

திட்டமிட்டு யந்திரத் தொழில் வளர்ச்சியடைவதுடன்
ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் முதலாளித்துவ வளர்ச்சி
யில் ஏற்பட்ட சங்கடங்களையும் தவிர்த்து, தான் விரும்பிய
''செல்வச் சேகரிப்புப் புரட்சியை'' அடையலாம் என்று
ஸன் நம்பினார். ''லோகாயத நாகரிகத்தின் குறிக்கோள்
தனிப்பட்டோர் லாபமல்ல. 'பொதுஜன லாபமேயாகும்.
அதைச் சீக்கிரம் அடைய வேண்டுமானால், போட்டியினால்
சாத்தியமில்லை, ஒத்துழைப்பின் மூலம்தான் முடியும்'' என்று
அவர் ஒரு சமயம் கூறினார். பாங்குகள், போக்குவரத்து
சாதனங்கள், ரெயில்கள் முதலியவைகளை அரசாங்கமே நிர்
வகித்தல், வருவாய்களுக்கு நேரடி வரி விதித்தல், கூட்
டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகித்தல்-இவைதான் அவ
ருடைய திட்டமிட்ட ஒத்துழைப்பின் அம்சங்கள். டெய்
பிங்குகளுடன் போர்புரிந்த விவசாயிகளின் பேரன்மார்
களுக்கு, ஸன் புதிய நில உரிமை, புதிய உற்பத்தி முறைக்
கான திட்டம் வகுக்கப் போவதாகக் கூறினார். சுதந்திர
விவசாயிகளுக்கு உரம் உபயோகித்தல், விவசாய சாதனங்
கள் அளித்தல், பயிர்ப் பூச்சிகளை அகற்றுதல், போக்குவரத்
தைச் சீர்திருத்தல், தண்ணீரைத் தேக்கி பயனுள்ள முறை
யில் உபயோகித்தல், காடு வளர்த்தல் முதலிய விஷயங்க
ளில் அரசாங்கம் உதவிபுரியும்.



அமெரிக்கப் பொருளாதாரத் தத்துவாசிரியர் ஹென்றி
ஜார்ஜின் யோசனைப்படி அரசியல் சீர்திருத்தம் அல்லது
சமூக அபிவிருத்தியின் மூலம் நிலத்தின் விலை மதிப்பு
உயர்ந்தால், அந்தக் கூடுதலான மதிப்புக்கு வரி விதிக்க
வேண்டும் என்பதை ஸன் ஆதரித்தார். ''சுருங்கக்கூறின்
முதலாளித்துவமே சீனாவில் சோஷலிஸத்தைத் தோற்றுவிக்க
வேண்டும் என்பது என் கருத்து. அப்போதுதான் மனித
வளர்ச்சிக்கு உதவும் இவ்விரு சக்திகளும், ஒன்றுபட்டு எதிர்
கால நாகரிகத்தை வளப்படுத்தும்'' என்று அவர் கூறினார்.

சீன சமுதாயத்திற்கு உறுதியான அரசியல் அடித்தளம்
அமைப்பதற்கு ஸன் செய்த இறுதி முயற்சிதான் சோவி
யத் யூனியனுடன் அவர் உடன்பாடு செய்து கொண்டது.
சௌகரியத்திற்காகத் திருமணம் செய்து கொள்வதற்
கொப்பானதே அந்த உடன்பாடு.

இந்த ஏற்பாடு ஐந்து ஆண்டுகளுக்கே பயன்பட்டது.
ஆனால் 1923-இல் 'ஸன்'னிடமிருந்து லெனினுக்கு ஒரு சிபார்சுக்
கடிதம் வாங்கிக்கொண்டு மாஸ்கோவில் ராணுவப் பயிற்சி
பெற இளைஞன் சியாங் கே ஷேக் புறப்பட்டபோது, சோவி
யத்துடன் உடன்பாடு ஐந்து ஆண்டுகளுக்குத்தான் நீடிக்கும்
என்று சொல்லி இருந்தால் அது அசட்டுத்தனமாக மதிக்
கப்பட்டிருக்கும். அதே சமயத்தில் திறமைவாய்ந்த பரோ
டின் (Borodin) மாஸ்கோவிலிருந்து கோமிண்டாங்கிற்குப்
பயிற்சியளிக்க காண்டன் (Canton) வந்து சேர்ந்தான். ஸன்
னின் கடைசி முயற்சியான மூவகைக் கொள்கையின் அங்கு
ரார்ப்பணம் இத்துடன் தொடங்கியது. 1. ரஷ்யாவுடன்
பிரத்தியேக நட்புறவு. 2. கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்
களைக் கோமிண்டாங்கில் சேர்த்துக்கொள்ளுவது. 3. பாட்
டாளிகளுக்கும் விவசாயிகளுக்கும், அரசியல் விடுதலை
யளிப்பது.

1923-இல் ஸன்னும் சோவியத் தூதர் ஜாபேயும் (joffe)
சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கை மிகவும் உறுதியளிப்பதா
யிருந்தது. ''கம்யூனிஸ்ட் முறையையோ அல்லது சோவி
யத் முறையையோ சீனாவில் அப்படியே ஸ்தாபித்துவிட
முடியாது. ஏனெனில் கம்யூனிஸத்தையோ, சோவியத்திஸத்
தையோ வெற்றிகரமாக நிலைநாட்டுவதற்கான சூழ்நிலை
இங்கே இல்லை'' என்று கூறியது அந்த அறிக்கை.

ஆனால் காமின்டர்னின் உதவிகொண்டு தொடங்கப்
பட்ட புதிய கோமிண்டாங் அமைப்பு சோவியத் சாயை
யைப் பெற்றது. சோவியத் நாட்டிலுள்ள கட்சிக்கூடங்
கள், கொள்கை வகுக்கும் மத்திய கமிட்டி, யாவும் இங்கே
யும் தோன்றின. சில மாதங்களுக்குள் கோமிண்டாங்கில்
கம்யூனிஸ்ட் கட்சியே பிரதான ஆதிக்கம் பெற்றது.

1925-ஆம் ஆண்டு மார்ச்சில், இம்மாதிரி அபாயமூட்டும் போக்கு நிலவுகையில், ஸன் யாட் ஸென் இறந்துவிட்டார். பரோடினுடன் அவர் கொண்ட கூட்டுறவின் விளைவுபற்றி மாறுபட்ட கருத்துக்கள் தோன்றலாயின. ஸன் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தாரானால் அவருடைய புரட்சி எந்தவகையில் மாறியிருக்கும் என்பது பற்றி நாம் ஹேஷ்யமாகவே மதிப்பிட முடியும்.

ஸன்னுக்குப் பின்னால் அவர் பதவிக்கு வந்த சியாங் கே ஷேக் அவருடைய கொள்கைகளை இடைவிடாமல் பின்பற்ற வேண்டும் என அடிக்கடி வற்புறுத்தி வந்தார். ஸன் யாட் ஸென் கோட்பாட்டை வளர்ப்பதில் கோமிண்டாங் தீவிரமாக ஈடுபட்டது. ஞாபகச் சின்னங்கள் எழுப்பியும், தேசியச் சீனாவின் தேவதூதர் என்று பாட்டுக்கள் பாடியும் அவரைப் பூஜிக்க தீர்மானமான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மற்றொருபுறம் ஸன்னின் மனைவியும், ஸ்ரீமதி சியாங் கே ஷேக்கின் சகோதரியுமான திருமதி ஸூங் இன்று பீகிங்கில் வாழ முடிவு செய்துவிட்டார். அவர் ஏமாற்றம் அடைந்த ஜனநாயக வாதியாகக் காணப்படுகிறார். மக்கள் காங்கிரசின் நிரந்தரக் கமிட்டியில் அவர் ஒரு அங்கத்தினர். கம்யூனிஸ்ட் பிரசாரத்திற்குகந்த சின்னமாக அவர் பயன்படுகிறார்.

வெறும் தத்துவாசிரியர் என்கிற முறையில் ஸன் யாட் ஸென்னை சுலபமாக மதிப்பிட்டுவிட முடியாது. ஒரு மதிப்பு மிக்க மகான் என்கிற முறையில் அவர் மனம் மேற்கத்தி ஜனநாயகத்தின் ஆணிவேருக்கும், குழப்பம் மிக்க மார்க்ஸியத்திற்கும் இடையே ஊசலாடியது. தலைவர் என்கிற முறையில் அவரை மக்கள் போற்றினர், வெறுத்தனர், கேலி செய்தனர், ஆனால் சாகும் வரையில் அவரை எல்லோரும் பூஜித்தனர்.

## அத்தியாயம்—11

# வாரிசு யார்?

ஸன் இறந்து இரண்டு ஆண்டுகள்வரை சின—ரஷ்யக் கூட்டுறவு ஏனோதானோ என்று நீடித்திருந்தது. 1925-26ல் சோவியத் பிரசாரகர்கள் பிரம்மாண்டமான அளவில் ஏகாதிபத்ய எதிர்ப்புப் பிரசாரம் செய்தனர். இந்தத் தாக்குதலுக்கு



முக்கியமாக இலக்கானது பிரிட்டன். இந்த துவேஷப் பிரசாரத்தைச் சமாளிப்பதற்காக பிரிட்டன், ஹாங்கோ, யாங்டீஸி துறைமுகங்களில் சீனர்களுக்கு விசேஷச் சலுகை அளித்தது.

இதற்கிடையில் சீன அரசியல் வானில் ஒரு புதிய மனிதன் தோன்றினான். நிலச்சுவான்தார்கள் குடியில் பிறந்து, நான்கு ஆண்டுகள் ஜப்பானில் ராணுவப் பயிற்சி பெற்று, ஷாங்ஹாயில் ஒரு தரகுக்கடையில் சில காலம் தன்னந்தனியே வேலை செய்து, மாஸ்கோவுக்கு தூது சென்று திரும்பியதனால் பொதுமக்களிடையே பிராபல்யமடைந்த சியாங் கே ஷேக், ஸன்னின் வாரிசுப் பதவியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு ஊக்கத்துடன் வேலை செய்தார். கிடைத்த பலத்தை ஸ்திரப் படுத்திக்கொண்டு, ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டுமென பரோடின் கூறிய புத்திமதியையும் புறக்கணித்து, சியாங் வட சீனாமீது படையெடுப்பைத் தொடங்கினார். இதன் மூலம் மத்திய ஆட்சியின் அதிகாரம் ஷாங்ஹாய், நான்கிங் முதலியவிடங்கள் வரை பரந்து நின்றது.

மத்திய ஆட்சியில் ஆதிக்கம் பெற்றதும், சியாங் சோவியத் கோஷ்டியுடன் இருந்த தொடர்பை அறுத்துக் கொண்டார். நான்கிங்கில் தமது தலைநகரை அமைத்துக் கொண்டு, கோமிண்டாங்கில் இடதுசாரிக்காரர்களும் கம்யூனிஸ்ட் தலைவர்களுமாகச் சேர்ந்து ஹாங்கோவில் இடதுசாரி அரசாங்கம் அமைப்பதை எதிர்த்தார். 1923-ஆம் வருஷம் ஏப்ரலில் ஃபிரஞ்சு சலுகைப் பிரதேச போலீஸ் தலைவன் அளித்த ஆயுதங்களைக்கொண்டு ஷாங்ஹாயில் பெருகிவரும் தொழிலாளர் இயக்கத்தை இரக்கமின்றி நசுக்கி, ஆயிரக் கணக்கான பேர்களைத் தூக்கிலிட்டார். பின்னர் உலகம் புகழ்ந்த சௌ என் லாய் (Chou En Lai) எனும் மிருதுபாஷியின் தலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகச் செய்யப்பட்ட முயற்சியையும், ஒடுக்கினார். ஹாங்கோ ஆட்சி ஒரு ஸ்தல தளபதியால் கலைக்கப்பட்டது. பரோடின் மாஸ்கோவுக்கு ஓடினான்.

நிலைமை இவ்வாறு மாறியது ஸ்டாலினுக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக் கமிட்டிக்கும் மிகுந்த அதிர்ச்சியை அளித்தது. கோமிண்டாங் மூலம் செயல் புரிவதை டிராட்ஸ்கி எதிர்த்தார். ''கோமிண்டாங் கூட்டுறவின் மூலமே ஆதிக்கம் பெறவேண்டும். தக்க தருணத்தில் அவர்களைக் கசக்கிப் பிழிந்து எலுமிச்சம்பழம்போல உதறி எறிந்துவிடலாம்'' என்று ஸ்டாலின் கூறினார். ஆனால் இப்போது நடந்தது என்னவெனில் கம்யூனிஸ்டுகள்தான், ''பிழிந்தெடுத்த எலுமிச்சம்பழம் மாதிரி'' உதறித் தள்ளப்பட்டனர்.

ரஷ்யத் தலைமை முகாமில் தனது சர்வாதிகாரத்தை
ஸ்டாலின் நிலைநாட்டியதும், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை
நிறுவியவர்களில் ஒருவரான சென் டு ஹ்ஸு (Ch'en Tu
Hsiu) மீது பழி சுமத்தி, காமிண்டர்ன் அவரைக் கட்சியி
லிருந்து விலக்கியது. பரோடின்மீதே பலத்த குற்றம் சாட்
டப்பட்டது. இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின், இதை
விட அற்ப குற்றங்களுக்காக அவன் நாடு கடத்தப்பட்டு
கிழக்கு சைபீரியச் சிறை முகாமுக்கு அனுப்பப்பட்டான்.
அங்கே 1952-இல் ஸ்டாலின் இறப்பதற்குச் சில மாதங்களுக்கு
முன் காலமானான்.

லெனின் கனவுகூடக் கண்டிருக்க முடியாத அவ்வளவு
சுமுகமான சூழ்நிலையில்தான் சோவியத் யூனியனின் உதவி
யைச் சீனா நாடியது. ஆசியாவில் முதன் முதலில் தோன்றிய,
மக்கள் ஆதரவு பெற்ற, பெரியதோர் புரட்சியை நிர்வகித்து
நடத்தி முடிவான பயன் பெறும்படிச் செய்வதற்கான எல்லா
அதிகாரங்களும், ரஷ்யாவுக்கு அளிக்கப்பட்டது.

அந்தப் புரட்சி வெட்கித் தலைகுனியுமாறு இவ்வளவு
மோசமாகத் தோல்வியுற்றதன் காரணமென்ன? நிச்சய
மான ஒரு காரணம் தொலைவில் நடக்கும் மகத்தான புரட்
சியை கம்யூனிஸ்ட் தத்துவாசிரியர்கள் ரஷ்யாவிலிருந்த
படியே, நடத்த முடியாததுதான். அதுமட்டுமின்றி ரஷ்யாவி
லேயே கட்சிக்குள் நடந்த போராட்டம் உச்சநிலையிலிருந்த
தனால் நிலைமை மேலும் குழப்பமடைந்துவிட்டது.

1923-இல் லெனின் மரணத்தறுவாயில் இருந்தார். விசேஷ
மாக கிராமிய வாழ்க்கை நடத்துபவர்களை எம்மாதிரி
சக்திகள் ஊக்குவிக்கின்றன என்பதை அவர் புத்தி சாதுர்யத்
துடன் அறிந்திருந்தார். அவரைப் பின்பற்றியவர்கள் அதை
மறந்துவிட்டனர். மாணவர்களையும், நகரப் பாட்டாளிகளை
யும் புரட்சிக்கு அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்கிற
மார்க்ஸியக் கோட்பாட்டை விடாப்பிடியாக அவர்கள்
கடைப்பிடித்தனர். சீனப் புரட்சியில் விவசாயிகளின்
பங்கை பரோடினின் காமிண்டர்ன் ஆலோசகர்கள் குறை
வாக மதிப்பிட்டனர். ஆசியாவில் விவசாயிகள் ஏராளமாயிருப்
பதனாலும், பொருளாதாரத் துறையில் அவர்கள் கேந்திர
மான ஸ்தானம் வகித்தனராகையினாலும், இங்கு வெற்
றியோ, தோல்வியோ விவசாயிகளைப் பொறுத்தது என்பதை
இந்தத் தலைவர்கள் அறிந்தார்களில்லை.

விவசாயிகளின் சக்தியை உணர்ந்து அதைப் பயன்படுத்
தியவர்களே ஆசியாவில் புரட்சியில் வெற்றி கண்டு அதிகாரப்
பீடம் ஏறுகின்றனர், இன்றும் ஏறியிருக்கின்றனர் என்பதை
அநேக சந்தர்ப்பங்களில் திரும்பத் திரும்பக் காண்போம்.
1929-லிருந்து 1949-வரை உள்ள இருபது ஆண்டுகளில் சீனா



வில் இந்த உண்மையை அறிந்தவர்கள் எல்லாம் மா ஸே துங்
கின் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்
தனர் என்பது அந்நாட்டின் துயரமிக்க உண்மை. மிகமிக
நெருக்கடியான இருபது ஆண்டுகளில் சியாங் கே ஷேக்
ஒன்று இந்தக் கொள்கையை உணரவில்லை, அல்லது அவரை
இருவித சக்திகள் நேர்மாறாக நிர்ப்பந்தம் செய்ததனால்
இந்தக் கொள்கையைச் செயல்படுத்த முடியவில்லை.

1893-ஆம் ஆண்டில் ஹுனானில் ஒரு சிறு கிராமத்தில் விவ
சாயிகளுக்குப் பிள்ளையாக ஜனித்தார் மா ஸே துங். ஓயாமல்
படிப்பதில் ஆர்வம்கொண்ட அவர் மேதாவிலாசம்
படைத்த எழுத்தாளரும்கூட. மார்க்ஸ், லெனின் எழுதி
யவைகளைப் படிப்பதனால் பேருற்சாகம் கொண்டார். மாஸ்
கோவிலிருந்து பரோடின் வந்ததும் கோமிண்டாங்கின்
மத்தியக் கமிட்டியில் உறுப்பினராக இவர் பெயர் பிரேரிக்
கப்பட்டது. 1924 க்குள் ஸன் யாட் ஸென்னுக்கும், சியாங் கே
ஷேக்குக்கும் இவர் அறிமுகப்படுத்தப்பட்டார். கம்யூனிஸ்ட்
கட்சியிலும், கோமிண்டாங்கிலும் ஆடம்பரமின்றி வேலை
செய்தார். அந்த ஆண்டு பிற்பகுதியில் நோய்வாய்ப்பட்ட
தனால் மா ஹுனான் மாகாணத்திலுள்ள ஷாவ் ஷான் (Shav
Shan) எனும் கிராமத்திற்குத் திரும்பினார். பெரு நகரங்களி
லுள்ள பாட்டாளி மக்கள் மூலம்தான் புரட்சி தோன்றும்
எனும் மார்க்ஸியக் கோட்பாட்டின் நியாயத்தை இங்குதான்
மா பகிரங்கமாக ஆட்சேபித்தார். வெற்றிகரமான புரட்
சிக்கு வித்தூன்ற வேண்டுமெனில், காண்டன் அல்லது ஷாங்
ஹாய் பாட்டாளிகளிடையே புரட்சிக் கருத்துக்களைப் பரப்பிப்
பயனில்லை. தனது ஷாவ்ஷான் போன்று சீனாவிலுள்ள லட்
சோபலட்சம் கிராமங்களில் பரப்பவேண்டும் என்று அவர்
திடநம்பிக்கை கொண்டார். லெனின் அறிந்த, அப்பழுக்
கற்ற, மார்க்ஸியத்தைப் பின்பற்றியதனால் ஸ்டாலின் உணரத்
தவறிய படிப்பினையை இவ்வாறாக மா அறிந்து கொண்டார்.

தனது உடல் நலன் சீர்பட்டதும் மாணவர்கள், பாட்
டாளிகள் சுரங்கத் தொழிலாளிகளை ஒன்று கூட்டும் பணி
யைக் கைவிட்டுவிட்டு, கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள
குடியானவர்களிடையே கிளர்ச்சி செய்து அவர்கள் சக்தியைத்
திரட்டுவதில் முனைந்தார். 1926 அக்டோபருக்குள் அவரு
டைய 'குடியானவர்கள் ஸ்தாபனத்திற்கு' ஹுனான் மாகாணம்
பூராவிலும் செல்வாக்கு ஏற்பட்டது. அந்த ஸ்தாபனத்தில்
சுமார் இருபது லட்சம் அங்கத்தினர்கள் இருப்பதாகப் பெரு
மைப்பட்டுக் கொண்டனர்.

இந்த அநுபவத்தின் மூலம் சீனாவில் புரட்சியின் பரந்த
சக்தியைக் குடியானவர்களிட மிருந்துதான் பெற வேண்டு
[illegible] மாவின் நம்பிக்கை உறுதிபெற்றது. அவர்களின்

செல்வாக்கையும், ஆதரவையும் பெறுவதில் மூர்த்தண்யமாக ஈடுபட்டனர். ''பாமர மக்களிடமிருந்து கற்று, அப்புறம் அவர்களுக்குப் போதனை செய்யுங்கள்'' என ஒரு சமயம் அவர் எழுதினார்.

சீனக் குடியானவர்கள் இன்னும் நிலச் சீர்திருத்தங்கள் பெறத் தகுதியடையவில்லை யென்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ரஷ்யத் தலைமைப்பீடம் எச்சரிக்கை செய்ததனால் மாவின் முயற்சிகள் சிறிது காலம் தடைப்பட்டது. இதற்குப் பின்பு மா, ''சித்தாந்தங்கள் மாட்டுச் சாணத்தைவிடப் பயனற்றவை. சாணத்தையாவது உரமாகப் பயன்படுத்தலாம்'' எனத் தெரிவித்தார். கட்சிக் கொள்கையிலிருந்து புரண்டு விட்டதாக இருமுறை மாவே கட்சியிலிருந்து விலக்கப் பட்டார்.

ரஷ்யாவிலிருந்து வந்திருந்த நிபுணர்கள் சீக்கிரம் நிந்திக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மா உணர்ந்தார். இரு நூறுக்குக் குறைவான துப்பாக்கிகளுடனும், சுமார் ஆயிரம் சிஷ்யர்களுடனும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான லட்சோப லட்சம் குடியான மக்கள் மனதைக் கவரக்கூடிய கருத்துடன், வாய்ப்பாகப் போராடக்கூடிய ஒரு இடத்தை நாடிச் சென்றார்.

தெற்கு மத்தியச் சீனாவில் ஹூனான்-கியாங்ஸி எல்லையில் சிங்கான்ஷான் (Chingkanshan) மலையுச்சியில் மா, சூ டே (Chu Teh) சந்திப்பின் மூலம் சீனத்தலைமைப்பீடம் உருவகமாயிற்று. இந்த சூ டே 1955-இல் பீகிங் ஆட்சியில் உதவித் தலைவனாக இருந்தவன்.

ஷெக்வான் (Szechwan) நிலச்சுவான்தாரான ஒரு பணக்காரக் குடும்பத்தில் சூ பிறந்தான். யூனான் எல்லையில் படைப் பகுதியொன்றின் தலைவனாயிருக்கையில் ''கொரில்லாச் சண்டை'' முறைகளை அறிந்துகொண்டான். முப்பத்திமூன்றாம் வயதில் பிரிகேடியரானான். இவன் உயர்தரச் சுகபோக வாழ்வில் ஆசைகொண்டவன். 1924-ஆம் ஆண்டில் ஜெர்மனிக்குச் செல்லும் வரையில் ராணுவத்தைத் தொழிலாகக்கொண்டு வீரசாகசங்கள் புரிவதில் நாட்டங்கொண்டவனாயிருந்தான். ஜெர்மனியில் கோட்டிங்கனில் சமூக சாஸ்திரம் பயின்று தனது பழக்கவழக்கங்களைச் சீர்செய்துகொண்டு, பெர்லினில் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தான்.

சிறுபிராயத்தில் கிராம வாழ்க்கையை அறிந்த சூ, அந்தக் காலத்திலிருந்து டிரான்ஸ் ஸைபீரியா ரஸ்தா வழியாக வெளிநாடுகளிலிருந்து சீனாவுக்குத் திரும்பிய வரையில், ஆசியாவின் கிராம வாழ்க்கையை நன்கறிந்திருந்ததனால், அது பற்றி அவனுடைய கருத்தும் மாவினுடையதை ஒத்திருந்தது.



''மக்கள் கடல் போன்றவர்கள். நாம் கடலில் வாழும் மீன்
கள். கடல் நீர் சூடாகவும், இதமாகவும் இருக்கும் வரையில்
நாம் அதில் நீந்தி உயிர்வாழலாம்'' என்பது மாவின்
கருத்து. சூ-வும், மா-வும் சந்தித்ததிலிருந்து கோமின்
டாங்கை ஒழித்துவிட்டு சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை
நிறுவவேண்டு மென்று இருவரும் உறுதி பூண்டனர்.

சூவிடம் துப்பாக்கிகளைவிட சிப்பாய்களே அதிகமாயிருந்ததனால், நான்கு ஆண்டுகளுக்குள் செம்படையினரின் எண்
ணிக்கையை நூறு ஆயிரத்திற்குப் பெருக்கிவிட்டான்.
1955-இல் கம்யூனிஸ்ட் சீனாவின் நாற்பது லட்சம் படை
யினருக்கு சூ தலைவனாயிருந்தான். கால் நூற்றாண்டுக்கு இரு
வரும் சேர்ந்து உழைத்ததன் பயனாக சூ மாவின் உற்ற துணை
வனாகவே விளங்கினான்.

ஹூனானில் இந்த ஆரம்ப நாட்களில் இவ்விருவருடன்,
மற்றும் இரு தலைசிறந்தவர்களும் இருந்தனர். எதிர்காலச்
சீனத் தலைமைப் பீடத்தில் சிறந்த பதவி வகிக்கப்போகிற
வர்கள் இவ்விருவரும். இவர்களில் மெலிந்த, உறுதிவாய்ந்த,
துறவு மனப்பான்மையுள்ள, கட்சிக் கொள்கைகளை உருவகப்
படுத்தும் லியூ-ஷா-சி ஒருவன் (Liu Shao-chi). மற்றவன்
பிறரை வசப்படுத்தக்கூடிய, சாமர்த்தியம் வாய்ந்த, பாரி
ஸில் பயிற்சிபெற்ற, அயல்நாட்டுக் கொள்கைகளை விளக்கும்
சௌ என் லாய். (Chou En lai) செஞ்சீனாவின் வரலாற்
றில், சங்கடமும் பெருவெற்றியும் நிறைந்த ஒரு தலைமுறையி
னர் வாழ்ந்த காலத்தில், இந்த நான்கு தலைவர்களும் ஒற்று
மையாக நட்புறவுடனே இருந்து வந்திருப்பதாகவே தோன்று
கிறது.

1928-லிருந்து சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆட்சித்துறை
யிலும், புரட்சி நடத்துவதிலும் பெரிய அளவுக்கு பிரத்தி
யட்ச பூர்வமான அநுபவம் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி
அநுபவம் பிறநாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஏற்பட்டி
ருக்காது. விவசாயப் புரட்சி அடிப்படையில் ஒரு செம்படை
அமைப்பது எனும் முக்கியமான குறிக்கோளை நிறைவேற்ற
அவர்கள் முயன்று வந்திருக்கின்றனர். இந்த முயற்சியில்
மா-வும், அவருடைய ஆதரவாளர்களும், கியாங்ஸி, ஹூனான்
எனும் தென் சீன மலைப்பிரதேசங்களில் குடியானவர்கள் கல
கங்களைத் தூண்டிவிட்டனர். இவைகளில், பல ரத்தக்களரி
நிறைந்தனவாயிருந்தன.

''ஹூனான் கியாங்ஸி பிராந்திய தொழிலாளிகள் விவ
சாயிகள் ஆட்சி,'' எனும் பெயர் சூட்டிக்கொண்ட அவர்க
ளுடைய புதிய புரட்சி அரசாங்கம், நிலச்சுவான்தார்களின்
நிலங்களைப் பறிமுதல் செய்து அவைகளைக் குடியானவர்களுக்
குப் பங்கிட்டுக் கொடுக்கத் தொடங்கிற்று. மார்க்ஸிற்கு மரி

யாதை செலுத்தும் முறையில், எதிர்கால கம்யூனிஸ்ட் அர
சாங்கத்தின் சக்தியைப் பெருக்கும் சாதனமாகக் கருதப்
பட்ட, இனிமேல் தோன்றப் போகும் ஆலைத்தொழிலாளிக
ளுக்குச் சாதகமான சட்டங்கள் இயற்றப்பட்டன.
1931-ஆம் ஆண்டில் மா சீன சோவியத் குடியரசைப் பிர
கடனம் செய்தார். அதன் தலைநகர் கியாங்ஸியில் உள்ள
ஜியூ சின் (Jui-chin), னில் அமைந்தது. அதன் ஆதிக்கத்தில்
ஆறு ஜில்லாக்கள் இருந்தன. மஞ்சூரியாவை ஜப்பான் தாக்
கியதன் விளைவாக இந்தப் புது சீன அரசாங்கம், ஜப்பான்
மீது போர் தொடுத்தது.

* * * *

இதற்கிடையில் நான்கிங் (Nanking) கில், சியாங் சே
ஷேக்கின் தேசிய அரசாங்கம், 1927-லிருந்து 1937 வரை,
உள்ள பத்தாண்டுகளில் முந்திய அரசாங்கங்களைவிட நவீன
முறையிலும். மிகத் திறமையாகவும் ஆட்சி புரிந்துவந்தது.
கட்சி அடிப்படையில் கோமிண்டாங்கின் கட்டுப்பாட்டிற்குட்
பட்டே ஆட்சி நடந்தது. அரசாங்கத்தின் நிதி பலத்திற்கு
ஷாங்ஹாயிலுள்ள வர்த்தக வர்க்கத்தையே நம்பி யிருந்தது.
தனது ஆட்சியில் கணிசமான முன்னேற்றமடைந்ததாக
சியாங் பெருமைப்பட இடமிருந்தது. ஸன் யாட் ஸென்
எதிர்த்த சீனவுடன் வல்லரசு நாடுகள் வகுத்த பல உடன்
பாடுகள் ரத்தாயின; அவைகளால் இழந்த பல பகுதிகள் சீன
நிர்வாகத்துக்கு வந்து சேர்ந்தன. நியாயஸ்தலங்களில்
அந்நிய நீதிபதிகள் அகற்றப்பட்டனர். இந்தப் பாதுகாப்பு வரி
வசூல் அரசாங்கத்திற்கு கிடைத்து வந்தன. சிவில் கிரிமினல்
சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டன; போக்கு வரவு சாதனங்கள்
பெருகின; உத்தியோகஸ்தரின் எண்ணிக்கை அதிகரிக்கப்
பட்டன. பழைய தீய பழக்கவழக்கங்களை நீக்கும் முயற்சி
நடந்தது.
பொதுஜன ஆரோக்கியம், பயிர் வளர்த்தல், கால்நடைப்
பராமரிப்பு, உபரி தானிய விளைச்சல் முதலிய துறைகளில்
விசேஷ முன்னேற்றம் காணப்பட்டது.
டாக்டர் ஜேம்ஸ் ஒய். ஸி. யென் (Yen)னின் பாராட்டத்
தக்க முயற்சியினால், இன்று இந்தியாவில் வெற்றிகரமாகக்
கையாளப்பட்டு வருவது மாதிரி இருநூறு லட்சம் மக்கள்
கிராம அபிவிருத்தித் திட்டத்தின் பயனைப் பெற்றனர்.
சியாங்கின் சாதனைகளில் பல உண்மையாகவே சிறப்பு
வாய்ந்தவை. அவைகள் எதிர்காலத்தைப் பற்றி, நம்பிக்கை
யுடனிருக்க உதவின. ஆனால், அக்காலத்திய அத்தியாவசியத்
தேவைகளைக் கொண்டு பார்த்தால், இந்தச் சாதனைகள்,
சூசகங்கள், பரவலான பலனளிக்கவில்லை, குறுகிய காலத்



திற்கே பயன்பட்டன என்றுதான் கூறவேண்டும். முக்கியமாக
மக்களை வாட்டி வதைத்துவந்த வறுமை நீங்கவில்லை.
அகாதமாயிருந்த நில வாரப் பகுதி செலுத்தமுடியா
மல் மக்களில் பலர் கஷ்டப்பட்டனர். குடியானவர்கள்
தங்கள் பகுதியை ரொக்கமாகச் செலுத்தமுடியாவிட்டால்,
அதைத் தான்யமாகவோ, உழைத்தோ தீர்க்கவேண்டும்.
குத்தகைப் பாக்கிக்காக முன்பணம் பெற்றதாகவோ, கடன்
வாங்கியதாகவோ பத்திரம் எழுதிக்கொடுத்தவர்கள், பதினைந்
திலிருந்து இருபது சதம் வரை வட்டி செலுத்தவேண்டியிருந்
தது. ராணுவ சேவைக்காகக் கிராமவாசிகள் கந்தாயம் கட்ட
வேண்டியிருந்தது. படைக்கு ஆள் சேர்க்கும் ஸ்தல அதிகாரி
கள், யாரைச் சேர்க்கவேண்டும், விலக்கு விரும்புபவர்களிடம்
அதற்காக எவ்வளவு கட்டணம் வாங்கவேண்டும் என்பதை
முடிவு செய்யும் பொறுப்பளிக்கப்பட்டிருந்தனர். அநேகமாக
இந்தப் பணமெல்லாவற்றையும் இந்த அதிகாரிகளே விழுங்கி
வந்தனர்.
செல்வாக்கு மிகுந்த சீன மாணவர் ஸ்தாபனங்கள் சில
சமயம் இவைகளில் ஈடுபடாமலும், அநேகமாக அரசாங்கத்
திற்கு எதிரிடையாகவும் இருந்தன, ஆர்ப்பாட்டத்திற்குத்
தூண்டக்கூடிய மாணவர் கருத்துக்களுக்கு மேலும் ஆதர்ச
மளித்து, அவைகளை ஆக்கப்பாதையில் திருப்புவதற்கான
அவசியத்தை அரசாங்கம் போதிய அளவு உணரவுமில்லை.
1919-இல் மே மாதம் நான்காம் தேதி நடந்த ஆர்ப்பாட்டத்
திற்கப்புறம் பல தடவைகளில் மாணவர்கள் பகிரங்கமாகத்
திரண்டு நின்று, அந்நியருக்கு நாட்டில் உள்ள செல்வாக்கை
யும், உள்நாட்டுப் பிற்போக்கையும் கண்டனம் செய்தனர்;
ஜப்பானை எதிர்த்து நிற்க, சியாங் தயங்கியதைக் கண்டு
1936-இல் மக்கள் ஆத்திரம் கொண்டனர்.
பெரும்பான்மையான சீன மக்கள் வெளி ஆடம்பரம்
இன்றி, நிதானமாகவே, சியாங்கின் ஆதிக்கத்தை உதறித்
தள்ள முயற்சி செய்ததனால், அது மக்களின் மனமொப்பிய
எதிர்ப்பல்ல என்று கூறிவிடலாகாது. கோமிண்டாங்கின
ரிடம் ஜனரஞ்சகமான கருத்துக்களோ, பொதுஜன ஆதரவு
பெற்ற லட்சியங்களோ இல்லை என்பது கொஞ்சம் கொஞ்ச
மாகத் தெளிவாகத் தெரிந்துவிட்டது.
பல தர்மசங்கடமான நிலைமைகள் ஏற்பட அவரே
காரணமா யிருந்தாலும், நலன் செய்யும் உறுதியற்றவர்
என்று சியாங்கைக் கருதிவிடலாகாது. சரித்திரப் போக்கில்
தற்செயலாக நிகழ்ந்த சம்பவங்கள், அரசியல் சக்திகள்,
தனிப்பட்டவர்களின் நிர்ப்பந்தம் யாவும் சேர்ந்து ஏற்பட்ட
ஒரு நிலை அவரைச் சூழ்ந்துவிட்டதனால், அவைகளைத் தடுத்து
நிறுத்த அவர் அசக்தராகிவிட்டார். கடைசியாக சம்பவங்

களின் போக்கு அவரை எதுவும் செய்யமுடியாத நிலைக்குக்
கொண்டுவந்துவிட்டது.

மற்ற ராணுவத்தினர் போலவே சியாங்கும் பலம்
பொருந்திய தேசியப் போர்ப்படை அமைப்பதற்கே முதலிட
மளித்தார். கருத்துக்களின் முக்கியத்துவத்தையும், கட்
டுண்ட மக்கள் அவைகளால் பெறும் அபார சக்தியையும்
அநேக சமயங்களில் அலட்சியம் செய்ததனால், கம்யூனிஸத்தை
ஒடுக்குவது ராணுவ சம்பந்தமான பிரச்னை என்று கருதி
னார். இதே தவறை இன்னும் பல ராணுவத் தளபதிகள்
செய்கின்றனர்.

திறன் வாய்ந்த படை சேர்ப்பதற்கு அவர் ஏராளமான
செலவில் போர்த்தொழில் புரியும் அந்நிய ராணுவ
ஆலோசகர்களின் உதவியை நாடினார். 1940 வாக்கிலும்,
1950 வாக்கிலும் அமெரிக்க தளபதிகள் ஆலோசகர்களா
யிருந்தனர். 1920 வாக்கில் ரஷ்யர்களும், 1930 வாக்கில்
ஜெர்மன் தளபதிகளும் புரிந்த பணியைத்தான் அமெரிக்கர்
களும் செய்தனர்.

உள்நாட்டில் கம்யூனிஸ்ட் எழுச்சியையோ, வெளியே
ஜப்பானிய ஆக்கிரமிப்பையோ சமாளிப்பதற்குத் தன் படை
அவசியம் என்பதை சியாங் அறிந்திருந்தார். 1931-ஆம்
ஆண்டு ஆரம்பத்தில், மஞ்சூரியாவில் ஜப்பானியர் படை
யெடுத்து வந்த சமயத்தில், வெளிநாட்டு ஆக்ரமிப்பையா,
உள்நாட்டுக் கலகத்தையா—இரண்டில் எதை முதலில் எதிர்ப்
பது என்று அவர் முடிவு செய்யவேண்டியிருந்தது. தன்
னந்தனியாக இரு அபாயங்களையும் ஒரே சமயத்தில் சமா
ளிக்க முடியாது.

ஜப்பானியரும், சரியான சந்தர்ப்பம் பார்த்துத்தான்
படையெடுத்திருந்தனர். உள்நாட்டில் பொருளாதார மந்தம்
பெருகிவந்ததைச் சமாளிக்கவேண்டி யிருந்தது. நாட்டில்
ஏற்பட்ட மாறுபட்ட அக்கறைகளின் மோதல்களைச் சீர்
செய்யவேண்டியிருந்தது. எதற்கும் துணிந்து நிற்கவேண்டி
யதாயிருந்தது. இந்த இக்கட்டான நிலையில் மேற்கத்தி
அரசுகள் சீனாவுக்குத் தார்மிக ஆதரவு அளித்ததைத் தவிர
வேறு எவ்வித உதவியும் புரியவில்லை. ஜெனிவாவில் சர்வ
தேச சங்கக் கூட்டத்தில் ரஷ்ய அயல்நாட்டிலாகா மந்திரி
லிட்வினாஃப் எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து, ஜப்பானிய
ஆக்ரமிப்பை எதிர்க்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.
பிரிட்டிஷாரும், ஃபிரஞ்சுக்காரரும் ஆக்ரமிப்பைக் கண்டிப்
பதைத் தவிர வேறு எதுவும் செய்ய மறுத்தனர். ஜப்பான்
தனது ஆக்ரமிப்பினால் அடையும் லாபத்தை அங்கீகரிக்க
மாட்டோம் என்று கூறியதுடன் நமது அரசாங்க இலாகா
திருப்தியடைந்தது.



சீனாவுக்கு உதவிசெய்ய அட்லாண்டிக் நாடுகள் தவறி
யதை சோவியத் யூனியன் இடைவிடாது சுட்டிக்காட்டி,
அதனாலான பயனை அடைந்துவந்திருக்கிறது. 1937 ஜூலை
22-ஆம் தேதி இஸ்வெஸ்தியா பத்திரிகை (Izvestia) பின்
காணும் விமர்சனத்தை வெளியிட்டது: ''மேற்கத்தி நாடுகள்
வாளாவிருந்ததன் பயனாகவே, ஜப்பான் மஞ்சூரியாவில்
தனது ஆக்ரமிப்புத் திட்டத்தில் வெற்றி பெற்றது. இந்த
அக்கிரமத்திற்கு இங்கிலாந்து பகிரங்கமாக உடந்தையா
யிருந்ததனால்தான் 1931-லும், 1932-லும் ஜப்பான் பெரிதும்
வெற்றி பெற்றது.''

ஜப்பானுடன் பிரிட்டன் ரகசிய ஒப்பந்தம் செய்து
கொண்டிருப்பதாகவும், இந்த ஏற்பாட்டின்படி மஞ்சூரி
யாவை ஜப்பான் விழுங்குகையில் பிரிட்டன் ஒதுங்கியிருக்க
வேண்டுமெனவும், இதற்குப் பிரதியுபகாரமாகப் பிரிட்டன்
அபரிமிதமாக வர்த்தக வசதி பெற்றுள்ள மத்திய சீனாவில்
ஜப்பான் தலையிடுவதில்லையென்று இணங்கியதாகவும் லிட்
வினாஃப் ஜினீவாவில் குற்றம் சாட்டினார். ''ஒன்பது வல்
லரசுகள் உடன்பாட்டைப்*'' பயன்படுத்தி, அதன்மூலம்
ஜப்பானிய ஆக்ரமிப்பை நிறுத்திவிடுவதாக நமது அர
சாங்க இலாகா காரியதரிசி கூறியதை ரஷ்யப் பிரதிநிதி
வரவேற்றாலும், அதற்குப் பின்பு ஜப்பானுக்கு எண்ணெயும்
யுத்த தளவாடங்களும் விற்பதில் முதன்மையாயிருந்து,
அமெரிக்கா ஏராளமாக லாபம் சம்பாதித்தாகச் சாதுர்ய
மாக அவர் சுட்டிக்காட்டினார்.

சொல்வதொன்று, செய்வதொன்று என்பதற்கும்,
விளைவுகளை யோசியாமல் வாக்குறுதி அளிப்பதற்கும் இந்தச்
சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு. ஆனால் இந்த உண்மையை
அறிவதற்கு நாம் அளவுக்கு மீறிய நஷ்டம் அடைந்துவிட்
டோம். 1900-ஆம் ஆண்டில் ஹேயின் ''தாராள வியா
பாரச் சலுகைக் கொள்கை'' மூலமும், 1922-இல் வாஷிங்ட
னில் கையெழுத்திட்ட ஒன்பது வல்லரசுகள் உடன்பாட்
டின் மூலமும் ராஜதந்திரத் துறையில் மஞ்சூரியாவில் நாம்
நம் சக்திக்கு மீறிய உத்தரவாதங்கள் அளித்துவிட்டோம்.
இவ்விரண்டின் மூலமும் நாம் சீனாவின் ஆதிபத்ய உரிமை
யைக் காப்பதாக உத்தரவாதம் அளித்தோம்.

எனினும், நமது உத்தரவாதங்களுக்கேற்ப நமது
ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்ளுவதற்குப் பதிலாக
ஒன்பது வல்லரசு உடன்பாட்டை உருவாக்கிய அதே
வாஷிங்டன் மகாநாட்டில் மேற்குப் பசிபிக்கில் ராணுவத்

*''ஒன்பது வல்லரசு உடன்பாட்டி''ன் மூலம் சீனாவின் ஆதிபத்திய உரி
மையை, சம்பந்தப்பட்ட நாடுகள் உத்தரவாதம் செய்ததுடன் அந்நாட்டில்
காப்பு வரி வசூலில் சீனாவுக்குக் கூடுதலான உரிமை அளிக்கப்பட்டது.

துறையில் அமெரிக்காவைச் சக்தியற்றதாகச் செய்யக்கூடிய ஆயுதப் பரிஹரண உடன்பாடுகளும் செய்துகொண்டோம்.

பல்லைக் கடித்து, கையைப் பிசைவதைத் தவிர நாம் ஒன்றும் செய்யமாட்டோம் என்பதை 1931-இல் ஜப்பானியர் சரியாகப் புரிந்துகொண்டனர். சக்தியிழந்து, யாவராலும் கைவிடப்பட்டு, பிளவுபட்ட சீனாவுக்கு, இரண்டாவது மகா யுத்தத்திற்கு முன்பு நிகழ்ந்த பல ஆக்ரமிப்புகளைத் தனது சக்தியானுசாரம் எதிர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தங்கள் சார்பாக உதவிபுரியக் கூடிய ஒரே நாடு ரஷ்யாதான் என்ற எண்ணம் சீன மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

## அத்தியாயம்—12

# "நெடுந்தொலைப் பிரயாணம்"

சியாங்குக்கு இருவிதமான பகைவர்கள் இருந்தனர். ஜப்பானியப் படையெடுப்பு ஒருபுறம்; சீனக் கம்யூனிஸ்ட் தொல்லை மற்றொரு புறம்; சீனக் கம்யூனிஸ்டுகளை, "ஒழித்துக்கட்டும் நடவடிக்கையை" முதலில் மேற்கொள்ள சியாங் முடிவு செய்தார். ஹியூனன், கியாங்ஸி இரு இடங்களிலும் கம்யூனிஸ்டுகளுக்குப் பலத்த ஆதரவு இருந்தது. இவ்விடங்களில் அவர்களை முறியடிப்பதில் சியாங் முனைந்தார். சிங் கன்ஷானில் (Chingkanshan) உள்ள மா-வின் தலைமை முகாமில் நான்குவிதக் கோஷங்களை வழங்கி வந்தனர். இந்தக் கோஷங்களின் அடிப்படையில் ஏற்பட்ட பாதுகாப்பு அரணை சியாங் எதிர்க்கவேண்டியிருந்தது. அவர்கள் பின்பற்றிய 'கொரில்லாச் சண்டைக்கு' இந்தக் கோஷங்கள் சிறந்த விளக்கமாக இருந்தன. இதையே செஞ்சேனையினர் பின்னர் கையாண்டது மட்டுமின்றி, இந்த முறையைப் பின்பற்றியதனால்தான், ஹோ சி மின் (Ho Chi Minh) பின்னர் இந்தோ-சீனாவிலிருந்து ஃபிரஞ்சுக்காரர்களை விரட்ட முடிந்தது. மா வின் முகாமில் முழங்கிய நான்கு கோஷங்களைக் கீழே காணலாம்.

1. பகைவர்கள் முன்னேறுகையில் நாங்கள் பின்வாங்குவோம்.



2. எதிரி எங்காவது தங்கி முகாம் செய்கையில், அவர்களுக்கு நாங்கள் தொல்லை விளைவிப்போம்.
3. எதிரி பின்வாங்குகையில் நாங்கள் அவர்களைத் துரத்துவோம்.
4. சண்டை செய்வதை எதிரி தவிர்க்க முயற்சித்தால் நாங்கள் தாக்குவோம்.

இந்த முறைகள் மூலம், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மாவும், சூடேயும் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடிந்தது. ஆனால் 1934 முடிவில் சியாங்கின் நீடித்த தாக்குதலால் சீன சோவியத் குடியரசு சிதைந்து போயிற்று. அப்பொழுதிருந்த நிலையில் கம்யூனிஸ்ட் படை முழுவதும், பின்னடைவதைத் தவிர வேறு வழியில்லாமற் போய்விட்டது. இந்தப் பின்வாங்குதலில் பெற்ற அநுபவம் தான் கம்யூனிஸ்ட் படை சியாங்கின் படையிடம் பிடிபடாமல், சீனாவில் நெடுந்தூரம் கடந்து சென்று சரித்திரப் பிரசித்தி அடைந்தது. இந்த நெடுந்தொலைப் பிரயாணத்தைத் தான் சரித்திராசிரியர்கள் "லாங் மார்ச்"* (Long March) எனக் குறிப்பிடுகின்றனர். இந்தச் சாதனையின் விளைவாகவே பின்வாங்கிய செம்படை இறுதியில் வெற்றிபெற்றது.

கடைசியில் இந்தப் படையினரில் 20,000 பேரே எஞ்சி நின்றனர். புறப்பட்டு இரண்டு வருஷம் கழிந்து வடசீனாவில் அவர்களுடைய புதிய படைத்தளமான யேனானுக்கு வந்து சேர்வதற்குள் இவர்கள் பஞ்சத்தில் அடிபட்டனர்; கொள்ளை நோய்களால் பீடிக்கப்பட்டனர்? எண்ணற்ற சண்டைகளையும், மறைந்திருந்து போர் புரிவதையும் சமாளித்து மீண்டும் வந்தனர். அமெரிக்கா கண்டத்தைப்போல் இரு மடங்கு அகலமான விஸ்தீரணம், அதாவது 6,000 மைல்கள், காலால் நடந்து வந்திருக்கின்

*லாங் மார்ச்:-நெடுந்தொலைப் பிரயாணம். 1927-இல் ஜப்பான் யுத்தம் முடிந்ததும், சியாங்கே ஷேக் தனது ஆட்சியில் கம்யூனிஸ்டுகளைச் சேர்த்துக்கொள்ளவில்லை அதுவரையில் அவர்கள் சியாங்குடன் சேர்ந்து ஜப்பானியரை எதிர்த்துப் போராடியும், கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதமானதெனக் கலைக்கப்பட்டது. யுத்த வெறியர்களை எதிர்த்து சியாங் போராடிக்கொண்டிருக்கையில், கம்யூனிஸ்டுகள் தங்களைப் பலப்படுத்திக்கொண்டனர். 30 ஆயிரம் பேர் இருந்த செம்படையில் நான்கே ஆண்டுகளில் 120,000 பேர் சேர்ந்துவிட்டனர். இப்படிச் சேர்ந்தவர்களில் அநேகர் சியாங் படையை விட்டு ஓடி வந்தவர்கள். 1934-இல் சியாங் நேரடியாகக் கம்யூனிஸ்டுகளைத் தாக்க முனைந்ததும், 1936 அக்டோபர் பத்தாம் தேதி கியாங்ஸியிலிருந்து புறப்படும்படி செம்படைக்கு உத்தரவளிக்கப்பட்டது. முதலில் தெற்கு நோக்கியும், பின்பு மேற்குப் புறமும், பல பிரம்மாண்ட நதிகளையும் மலைகளையும் கடந்து, தேசியப் படையினரிடம் சிக்கிக்கொள்ளாமல், இடம் விட்டு இடம் சென்றனர். ஓர் ஆண்டில் 6 ஆயிரம் மைல் கடந்துசென்று கடைசியில் ஷான்ஸி (Shansi) ஷென்ஸி மாகாணங்களில் தங்கள் ஆட்சியை ஸ்தாபித்தனர். இதைத்தான் 'நெடுந்தொலைப் பிரயாணம்' அல்லது 'லாங் மார்ச்' எனப் பெயரிட்டனர்.

றனர். பன்னிரண்டு மாகாணங்களைக் கடந்தனர். தற்
காலிகமாக அறுபத்திரண்டு நகரங்களை வசப்படுத்தினர்.
இருபத்தி நான்கு மிகப் பெரிய நதிகளைக் கடந்தனர்.
ஆசியாவில் மிகப் பெரிய மலைத்தொடர்களான பதினெட்டு
மாபெரும் மலைகளைத் தாண்டி வந்தனர். பல்லாயிரக்
கணக்கான கோமிண்டாங் துருப்புகளை எதிர்த்துத் தப்பி
வந்தனர். இந்த ஆயுதம் தாங்கிய படை இருபது கோடி
மக்கள் வாழ்ந்த பிராந்தியங்களைத் தாண்டி வந்தது.
சண்டையில்லாத இடைவேளைகளில் தங்கள் வசமுள்ள
நகரங்களில் பிரம்மாண்டமான பொதுக்கூட்டங்கள் கூட்டி,
தங்களது கிராமாந்தரப் புரட்சி பற்றியும், ஜப்பானியருக்கு
எதிரிடையாகத் தங்கள் கொள்கையையும், விளக்கிக் கூறு
வார்கள். அவர்கள் அநேக நாடகங்கள் நடித்துக்காட்டினர்.
அநேக கைதிகளை விடுதலை செய்தனர். கோமிண்டாங் அதி
காரிகள், பெரிய நிலச்சுவான்தார்கள், வரி வசூலிப்போர்கள்
முதலியவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்து,
கைப்பற்றிய சாமான்களை ஏழை மக்களுக்குப் பங்கிட்டுக்
கொடுத்தனர். மக்களைப் பரவசப்படுத்தியதில் இந்த நெடுந்
தொலைப் பிரயாணத்திற்கு ஈடு இணை காணமுடியாது.
எண்பதினாயிரம் பேர்—அதாவது மிஞ்சி நின்றவர்கள்
போல் நான்கு மடங்கு பேர்—வழியில் உயிர் துறந்தனர்.
யேனானை வந்தடைந்த முப்பது பெண்மணிகளில் மா,
சௌ என் லாய் இருவர் மனைவிமார்களும் இருந்தனர். இந்
தப் பிரயாணத்தின்போது, மா-வின் மூன்று குழந்தைகள்
வழியிலே குடியானவர்களின் பராமரிப்பில் விடப்பட்டன.
அவர்கள் இருக்கின்றனரா என்று கண்டுபிடிப்பதற்காகச்
செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. பலஹீனமானவர்களும்
உறுதிக் குறைவானவர்களும் வழியிலே விழுந்துவிட்டனர்.
உயிர் பிழைத்தவர்கள் களைத்து ஓய்ந்து போயினர்;
ஆனால் எதிர்காலப் போராட்டங்களுககுப் பயன்படும் உறுதி
பூண்டிருந்தனர். நம்பமுடியாத கஷ்டங்களுக்கிடையே, மா
படைத்தலைமையைத் தாமே வகித்து வந்தார். செஞ்சேனை
யும், அதன் தலைவர்களும் படையினருக்கு மிகக் கடினமான
பயிற்சி அளித்தனர். செஞ்சீனாவை இறுதியாக ஆளப்போகிற
வர்களுக்கு, அதிகாரபீடத்தை அடைவதற்கான மேலும்
கடினமான சங்கடங்களைச் சமாளிப்பதற்கு ஏற்ற, ஒற்றுமை
உணர்ச்சியையும், அசாதாரண சக்தியையும் இந்த நெடுந்
தொலைப் பிரயாணம் அளித்தது.
1931-லிருந்து 1936-வரை சியாங், மாவின் கம்யூனிஸ்ட்
படையுடன் போர் புரிந்து வருகையில், மஞ்சூரியாவிலும்,
வட சீனாவிலும் ஜப்பானியர் புக இடமளித்துவிட்டார்.
1936 டிசம்பரில் அவருடைய படையினர் உள்நாட்டுக் கலகக்



காரர்களை விட்டுவிட்டு, அயல் தேச ஆக்ரமிப்பாளர்களை
எதிர்க்க அனுமதி கோரத் தொடங்கினர்.
இந்தச் சமயத்தில், மஞ்சூரியப் படைத்தளபதி சாங்
ஹிஸியூ லியாங் (Chang Hsueh liang) திடீரென சியாங் கே
ஷேக்கைக் கடத்திச் சென்றுவிட்டார். இந்த நிலையின் விளை
வாக ஜப்பானை எதிர்த்து ஐக்கிய முன்னணி அமைப்பது
என்று சியாங்கிற்கும், சௌ என் லாய்க்கும் உடன்பாடு ஏற்
பட்டது. சியாங்கின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. அவ
ரைச் சுட்டுவிடும் வாய்ப்பு சௌவிற்கு இருந்தது. இப்படித்
தன் உயிரைக் காப்பாற்றியதனால்தானோ என்னவோ, பின்
னர் சியாங் ஒருசமயம், சௌவை, ''நியாய உணர்வுள்ள
கம்யூனிஸ்ட்'' என அழைத்தார். அதாவது, தற்காலிகமாக
வாவது, சௌவுடன் மட்டுமாவது கூடிவாழ்வது சாத்யம்
என்று அர்த்தம் கொள்ளலாம் போலும்.
யேனானில் கம்யூனிஸ்டுகள் அமைத்த புதிய தளம்,
நெடுந்தூர யாத்திரையில் உயிர் பிழைத்தவர்களுக்குப் புக
லிடமாக மட்டும் அமையவில்லை. அது எல்லாவிதத்திலும்,
பாதுகாப்புக்கும், தாக்குதலுக்கும் வசதியான இடமாகவும்
இருந்தது. பூகோள அமைப்பு ரீதியில், யேனானில் சீனா, ஜப்
பான், ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளின் எதிர்காலமும், பின்
னிப் பிணைந்து இருந்தது. இந்த உண்மையையும், சியாங்கின்
தலைமையில் அமைந்த ஐக்கிய முன்னணி மூலம் தேசிய
உணர்ச்சி உறுதிபெறும் என்பதையும் அறிந்த ஜப்பானியர்
சீனாவைத் தாக்க விரைந்தனர். 1937-இல் பீகிங்குக்கு அருகா
மையிலுள்ள மார்க்கோ போலோ பாலத்தைத் தாக்குவதன்
மூலம் சீன-ஜப்பான் யுத்தம் ஜரூராகத் தொடங்கியது.
எதிரியைத் தாக்குவதற்குத் தேசிய ஒற்றுமை அவசியம்
என்பதை அறிந்து விட்டனர் என்பதற்கறிகுறியாக, செம்
படை, மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்குட்படுத்தப்
பட்டது. இதுமட்டுமல்ல, கம்யூனிஸ்ட் திட்டத்தின் தீவிரத்
தன்மை மட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் கம்யூனிஸ்ட் கொள்
கைகள் பசுமையாகப் பாதுகாக்கப்பட்டன. சீனர் சக்தியின்
அடிப்படை என்ன என்பதுபற்றிய மா-வின் கருத்துக்கள்
நெடுந்தொலைப் பிரயாண அநுபவத்தின் மூலம் தீட்சண்யம்
பெற்றன. ''விழிப்படைந்த விவசாயிகளின் ஆதரவின் உதவி
கொண்டுதான் ஜப்பானியரை எதிர்த்துப் போராட முடி
யும்'' என அவர் தெரிவித்தார்.
1945 ஆகஸ்ட் வரையில், ஜப்பான் இறுதியாக வீழ்ச்சி
யடையும் வரையில், கோமிண்டாங்கிற்கும், கம்யூனிஸ்டுக
ளுக்கும் ஒற்றுமை பெயரளவில் காணப்பட்டது. நீடித்த ஒத்
துழைப்பு இல்லை. சிலசமயம் அவர்களுக்குள் சண்டையும்
நிகழ்ந்தது. ஏனெனில், 1940-லேயே ஐக்கிய முன்னணி

தகர்ந்துவிட்டது. போராட்டத்திற்கான வசதிபெற இருதரப்பினரும் அடிக்கடி சூழ்ச்சிகள் செய்துவந்தனர்.

1938-இல் கடற்கரைகளையும், போக்குவரத்துச் சாதனங்களையும் ஜப்பானியர் கட்டுப்படுத்தியதனால் சியாங் உள்நாட்டில் ஷெக்வானுக்கு (Szechwan) முகாமை மாற்றும்படியாகிவிட்டது. இங்கே தனது புதுத் தலைநகரான சுங்கிங்கில் அதிகார பூர்வமான ஆட்சியின் பிரதிநிதியாகத் தொடர்ந்து செயல்புரிந்தான். தனது தலைமை முகாமான யேனானில் மா சே துங், கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தில் விரிந்து வரும் பகுதியின் உண்மைத் தலைவனாகத் திகழ்ந்துவந்தார்.

இந்த ஆண்டுகளில் மா, பல சிறிய நூல்களை எழுதி வெளியிட்டார். யுத்தத்தினால் ஒத்திப்போடப்பட்ட உள்நாட்டுப் போராட்டத்திற்கும், ஜப்பானை எதிர்ப்பதில் கையாண்ட தந்திரங்கள் பொருந்தும் என இந் நூல்களில் வாதம் புரிந்தார். "கிராமங்களும், கிராமப்புறங்களும் நகர்களையும், பெருநகர்களையும் வீழ்த்திவிடும். எதிர்ப்புகள் யாவும் உண்மையில் விவசாயிகளின் போராட்டங்கள். இந்த எதிர்ப்பில் நாம் பயன்படுத்தும் சகல சாதனங்களும், நாம் உயிர்வாழ்வதற்கும் பயன்படும் யாவும் உண்மையில் விவசாயிகளால் நமக்கு அளிக்கப்பட்டவை. அவர்கள்தாம் நமது உயிர், உடைமை, யாவும்". இவ்வாறு அவர் கூறியது பின்னர் நடக்கப்போவதை முன்கூட்டியே அறிந்து கூறியது போலிருக்கிறது.

கடற்கரை நகரங்களை ஜப்பானியர் கைப்பற்றியதும், சியாங் சுங்கவரி வசூலை இழந்ததுடன், உள்நாட்டு ஆதரவின் மூலத்தையே இழந்தார். கடற்கரை நகர்களில் உள்ள வர்த்தகர்களில் பண லேவாதேவிக்காரர்களில் பலரும் ஓரளவு நவீன வர்த்தக நுட்பம் அறிந்த தலைமுறையைச் சேர்ந்த அறிவாற்றலுள்ள பிற்போக்காளர்கள்தாம். மேற்கத்தி மாகாணங்களில் உள்ள நிலப்பிரபுக்கள் உளுத்துப்போன பழங்காலத்துக் கொள்கைகளைப் பின்பற்றும் பிற்போக்காளர்கள்.

ஆகையால் சுங்கிங்கிற்கு வந்த பிறகு, சியாங் பெரிதும் புரட்சி வேகத்தின் தன்மை அறியாதவர்களின் உதவியையே நம்பவேண்டியிருந்தது. அதன் விளைவாகத் தேசிய அரசாங்கம், படிப்படியாக வளர்ந்துவரும் விவசாயிகளின் எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டிவந்தது.

ராணுவ ரீதியில் பார்த்தால், ஜப்பான் யுத்தத்தின் விளைவாக சுங்கிங்கில் சியாங் தங்கிய இடைக்காலத்தைத் தவிர்த்திருக்க முடியாது. ஆனால் இந்தச் சிறிது காலம் அங்கு தங்கியதன் விளைவாக, ஜப்பானை இறுதியாகத் தோற்கடித்த பின்பும், கம்யூனிஸ்ட் அல்லாத ஐக்கிய சேனை உருவகப்படுத்த சியாங் செய்த முயற்சிகள் பயனற்றுப்போயின. வரி விதிப்பு,



படைக்கு ஆள் சேர்த்தல் கொள்கைகளின் விளைவாக விவசாயிகளிடையே மனக்கொதிப்பு ஏற்பட்டது. ஊழலினால் நாட்டினரின் நல்லுணர்வு பாதிக்கப்பட்டது. பணவீக்கம் பொருளாதார அமைப்பைச் சிதைவுறச் செய்ததுடன், அரசாங்க உத்தியோகஸ்தர்களின் பணிபுரியும் ஆற்றலையும் பாதித்தது.

கம்யூனிஸ்ட் தொல்லை, பொருளாதார வசதிக்குறைவு, கீழ்ப்படியாத பிராந்திய தளபதிகள், நீடித்த லஞ்ச ஊழலால் பீடிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகள், பொதுஜன ஆதரவை ஈர்க்கும்படியான கருத்துக்களின்மை—இவ்வளவும் சூழ்ந்திருந்ததனால், நாட்டைக் காப்பதற்கு உடனடியாகத் தேவையான தார்மிக ஆற்றலை மக்களுக்கு ஊட்ட முடியாத நிலையில் சியாங் இருந்தார். மேற்குறிப்பிட்ட குறைபாடுகளின் விளைவாக சியாங் புரிந்த சாதனைகளின் சிறப்பும் படிப்படியாக மங்கத் தொடங்கிற்று. சுங்கிங்கில் தேசியவாதிகளிடையே சந்தேகமும் பிளவும் நிலவுகையில் வடக்கே மா-வும், அவரது சகாக்களும் நம்பிக்கையுடன் அளித்த வாக்குறுதிகள் கவர்ச்சிகரமாயிருந்தன.

ஒரு நூற்றாண்டுக்கு முன் ஹுங் (Hung), கிளப்பிவிட்ட புரட்சி சக்திகளுடன், ஏகாக்ர சித்தம் வாய்ந்த பிடிவாதத்துடன் கம்யூனிஸ்டுகள் ஒன்றுபட்டனர். 1945 ஆகஸ்டில், யுத்த முடிவில், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அவர்கள் நடத்திய நீண்ட போராட்ட காலத்தில் தூவிய விதை, சீன பூமியை உடனடியாய்ப் பயனளிப்பதற்கு ஏற்ப பக்குவப்படுத்தியது.

* * *

தாங்கள் இருவரும் ஒற்றுமையையும், சமாதானத்தையும் விரும்புவதாக மா-வும், சியாங்கும் 1945 அக்டோபரில் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர். மஞ்சூரியாவை யார் முதலில் கைப்பற்றுவது என்கிற போட்டியில் ஏற்கனவே கம்யூனிஸ்டுகளுக்கும், தேசியவாதிகளுக்கும் சண்டைகள் தொடங்கிவிட்டன. அக்டோபர் இறுதிக்குள் பதினொரு மாகாணங்களில் சண்டை நிகழ்ந்தது.

ஜப்பானியர் காலி செய்த இடங்களில், திரும்பி வந்த தேசியவாதிகளை முதலில் மக்கள் வரவேற்றனர். ஆனால் சீக்கிரத்தில் ஆர்வம் தணிந்தது. சுங்கிங்கிலிருந்து வந்தவர்களிடையே புதிய முகங்கள் குறைவாகவே காணப்பட்டன. பழையவர்களில் பெரும்பாலோர், தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டதுடன், 1938-லிருந்து 1945-க்குள் தங்களது சொந்த நலன்களைப் பலப்படுத்திக்கொண்டிருந்தனர். நெஞ்சில் ஈரமின்றி லஞ்சம் வாங்குவதும், திறமையின்மையும்,

அதிகாரத்திற்கு மீண்டும் வந்தவர்களிடம் தெளிவாகத்
தெரிந்தது. இதனால் சுதந்திர ஆர்வம் மங்கிவிட்டது.
மீண்டும் போராட்டம் தொடங்குகையில், பணவீக்கம் கங்கு
கரையின்றி வளர்ந்தது.

அமெரிக்காவின் சிறப்புமிக்க போர்வீரர்களிலும், ராஜ
தந்திரிகளிலும் ஒருவரான தளபதி ஜார்ஜ் மார்ஷல் டிசம்
பர் மாதத்தில் ஜனாதிபதியின் விசேஷப் பிரதிநிதியாகச் சீனா
வுக்கு அனுப்பப்பட்டார். பொறுமையாக, சலிப்படை
யாமல் நீடித்து சமாதானம் நிலவவும், கூட்டு ஆட்சி அமைக்
கவும், ஒரு வருஷ காலம் பேச்சு வார்த்தை நடத்தினார். சில
மாதங்களுக்குப் போராட்டம் ஓய்ந்திருந்தது. பின்னர் ஒவ்
வொரு கட்சியும் மற்றக் கட்சியே மீண்டும் யுத்தம் தொடங்
கியதாகக் குற்றம் சாட்டிற்று.

சியாங் தலைமையிலோ அல்லது தாராளப் போக்குள்ள
நிதானக் கட்சியினர் தலைமையிலோ, கூட்டாட்சி அமைக்க
இடமில்லை யென்பது தெரிந்தது. ராஜாங்கக் காரியதரிசி
பதவி வகிப்பதற்காகத் தளபதி மார்ஷல் 1947-ஆம் ஆண்டு
ஜனவரியில் சீனாவைவிட்டுப் புறப்படுகையில், பரஸ்பர அவநம்
பிக்கையும், இருதரப்பிலுமுள்ள தீவிரவாதிகளுமே தமது
முயற்சிகள் பலிக்காமல் போனதற்குக் காரணம் என்று
கூறினார்.

உள்நாட்டுச் சண்டையில் நாடு இறங்கியிருந்த நிலையில்
தற்செயலாக அங்கே சென்றவர்களுக்குத் தேசியவாதிகள்
சௌகர்யமான நிலையில் இருந்ததாகவே தோன்றியிருக்கும்.
அவர்கள் ஆட்சிதான் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்
டிருந்தது. அவர்கள் ஆதிக்கத்திலேதான் கம்யூனிஸ்டுகளிட
மிருந்ததைவிடக் கூடுதலான நிலப்பரப்பு இருந்தது. அவர்
களிடம் கம்யூனிஸ்டுகளைவிட அதிகமான சிப்பாய்களும்,
உயர்தரமான ராணுவ சாதனங்களும் இருந்தன. காலாட்
படைக்குத் துணையாகக் கடற்படையும் விமானப் படையும்
அவர்களிடம் இருந்தன. கம்யூனிஸ்டுகளுக்கு இந்தச் சாத
னங்கள் இல்லை.

இரண்டு மிலியன் டாலர் பெறுமான சரக்குகளும், பண
உதவியும் சீன மத்திய அரசாங்கத்திற்கு அமெரிக்கக் காங்
கிரஸ் அநுமதித்தது. இதைத் தவிர, யுத்த அரங்கங்களில்
மிஞ்சியிருந்த ஒரு பிலியன் டாலர் பெறுமானமுள்ள அமெ
ரிக்க சாதனங்களை ஒரு டாலர் பெறுமானமுள்ளதை இரு
பத்தைந்து செண்டுக்கு வாங்கிக்கொள்ள தேசியவாதிகள்
அநுமதிக்கப்பட்டிருந்தனர். 1946-ஆம் ஆண்டு குளிர் காலத்
திற்குள் நாற்பது கோமிண்டாங் படைகளுக்கு அமெரிக்க
ராணுவத்தினர் பயிற்சி அளித்து, ராணுவச் சாதனங்களும்
கொடுத்திருந்தனர். இது தவிர, ஏற்கனவே ஜப்பானுக்கு



எதிராக யுத்தம் நடக்கையில், இருபது டிவிஷன்களுக்குப்
பயிற்சியும், ராணுவ ஆயுதங்களும் அளிக்கப்பட்டிருந்தன.

இவ்வளவு வசதிகள் அளிக்கப்பட்டும், 1947 இறுதிக்குள்
மா சே துங்கின் செஞ்சேனை பொதுவாக முன்னேறிக்
கொண்டே வந்தது. பார்ப்பதற்குப் பிரமாதமாயிருந்த,
ஆனால் உற்சாகமற்ற சியாங்கின் படைகள்மீது கம்யூனிஸ்டு
கள் தோட்டாக்கள், வெடி குண்டுகள், கைகுண்டுகளைப் பிர
யோகிப்பதுடன் நிற்கவில்லை. அவர்களிடையே கொந்தளிப்
பைக் கிளப்பும், கருத்துக்களையும் பரவச்செய்தனர். இதற்
கெதிரிடையாக தேசியவாதிகள் பெரிதும் துப்பாக்கிகளையே
உபயோகிக்க முடிந்தது. அந்தத் துப்பாக்கி ஏந்தியவர்
களும், லட்சியத்தில் நம்பிக்கையற்றவர்களாயிருந்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின், தொடர்ந்து பல பிர
மாதமான வெற்றிகள் அடைந்த பின், "சீன மக்கள் குடி
யரசு" பீகிங்கில் பிரகடனம் செய்யப்பட்டது. 1949-ஆம்
ஆண்டு, டிசம்பர் ஏழாம் தேதி, அதாவது பெர்ல் துறை
முகத்தை ஜப்பானியர் தாக்கியதற்குச் சரியாக எட்டு ஆண்டு
களுக்குப் பின், சியாங்-கே-ஷேக் ஃபார்மோஸாவில் தனது
புதிய தலைமை முகாமை அமைத்தார். அதற்குப் பிறகு
சீன நாடு கம்யூனிஸ்ட் வசமாகிவிடும் என்பது உறுதியாகி
விட்டது.

கம்யூனிஸ்டு எதிர்ப்புச் சக்திகள் தோல்வியுற்றதற்கு
யார் பொறுப்பு என்பதை முடிவுகட்டுவதில் அன்றிலிருந்து
இன்றுவரை, அமெரிக்க நாட்டு இரு கட்சிகளுக்குள் வாதப்
பிரதிவாதங்கள் கடுமையாக நடந்து வருகின்றன. இந்த
வாதம் நடத்துபவர்கள் பெரிதும் உணர்ச்சி வசப்பட்டு கட்சி
கட்டுகிறார்கள். இந்த சர்ச்சையில் பயன் ஏதுமில்லை. இந்த
அபிப்பிராய பேதத்தை இங்கு நான் வளர்த்துக்கொண்டு
போவதனால் எவ்வித நன்மையும் விளையாது. இது சம்பந்த
மான விவரங்கள் சிக்கல் நிறைந்தவை. அவற்றில் சில தெளி
வற்றவையாகவும் இருக்கின்றன. இந்தப் பரஸ்பர குற்றச்
சாட்டுகளிலிருந்து சீன நிகழ்ச்சிகளின் மூலம் நாம் தெரிந்து
கொள்ளவேண்டிய படிப்பினைகளைத் தெளிவாக அறிந்து
கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்தப் படிப்பினைகளைப்
பற்றி எவ்வித அபிப்பிராய பேதமும் இல்லை.

டாக்டர் ஜான் லெய்டன் ஸ்டுவர்ட் (John Leighton
Stuart) என்பவர் சீனாபற்றிய தம்முடைய நாற்பது வருஷ
அநுபவத்தைக் கொண்டு 1954-இல் பின்காணும் முறையில்
எழுதினார்: "உளுத்துப்போன அந்நிய சாம்ராஜ்ய முடியரசை
யும், பிராந்தியங்களில் செல்வாக்குடன் இருந்த யுத்த வெறி
யர்களையும் உதறித்தள்ள வேண்டும் எனும் பேரார்வத்தினால்
தான் கோமிண்டாங் அதிகாரத்திற்கு வந்தது. ஜனநாயக

ஆர்வமோ அல்லது சமூக சீர்திருத்த நோக்கமோ, அது அதிகாரத்திற்கு வந்ததற்குக் காரணமாகக் கூற முடியாது.''

மேலும் அவர் கூறினார்: ''சியாங்கின் ஆட்சியில்பொது நிதிகளிலிருந்து சொந்த லாபம் அடைதல், நாட்டு நலனைவிட தனது குடும்பம், தனது நண்பர்கள் அல்லது தனது கோஷ்டிக்கு நலன் செய்ய வேண்டும் என்பதில் கூடுதலான அக்கறை, உள்ளூற எப்படியிருந்தாலும், வெளித் தோற்றத்திற்கு நல்லவர்கள்போலக் காணப்படவேண்டும் எனும் நிர்ப்பந்தம், அதிகார வர்க்கத்தார் செயல்புரிவதில் தாமதம், திறமையின்மை, மக்கள் சுரண்டப்பட்டு ஏழைகளாக்கப்பட்ட நாட்டில், சொற்ப கையிருப்பைக் கொண்டு அபாரமாகச் செயல்புரியும் கம்யூனிஸ்டுகள் இருந்த நாட்டில் இவ்வளவு குறைபாடுகளும் சியாங்கின் ஆட்சியில் நிலவின.''

எவ்வளவுதான் நாணயமானவர் என சியாங் புகழ் பெற்றிருப்பினும், அவரைச் சுற்றி எங்கணும், அவரது தலைமையைத் துச்சமாக மதிக்கும் உத்தியோகஸ்தர்கள் குழுமியிருந்தனர். அவருடைய தேசியப் படையில் பலர் சிறப்பாகவும், தீரமாகவும், போர்புரியத் தயாராயிருந்தாலும், சில தளபதிகள் துப்பாக்கியால் ஒரு முறைகூடச் சுடாமல் பல படைகளை எதிரிகளிடம் சரணாகதியடையத் தூண்டினர். தேசியப் படைகளுக்கு அளிக்கப்பட்ட அமெரிக்க ராணுவ சாதனங்களில் பெரும் பகுதி இம்மாதிரி துரோகத்தினாலும், சரணாகதிகளாலும் கம்யூனிஸ்டுகளிடம் வந்து சேர்ந்தன. நிலைமை மோசமாக ஆக நம்பமுடியாத அளவுக்கு ஊழல் மலிந்தவுடன், பயங்கர முறைகளை அதிகமாகக் கோமிண்டாங்கினர் கையாண்டனர். கோமிண்டாங் தீர்க்கவேண்டிய பிரச்னைகள் பெருகப்பெருக, அதன் தலைவர்கள் உடனடியாகத் தேவையாயிருந்த அரசியல் பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்வதற்குப் பதிலாகப் பிற்போக்கு நிலையை அடைந்தனர். இதன் விளைவாகக் கம்யூனிஸ்டுகளல்லாத சீர்திருத்தவாதிகள், நிதானஸ்தர்கள், அறிவாளிகள் யாவரும் இடது சாரியாக மாறத்தொடங்கினர்.

'டைம்' எனும் அமெரிக்க சஞ்சிகை சியாங்கை ஆதரிக்கும் அமெரிக்கர்களில் மிகவும் தீவிரமானது. ஃபார்மோஸாவுக்குப் போனபின் டெய்பே (Taipeh)யில் கூடிய தேசிய சபையில் பின்வருமாறு சியாங் பேசியதாக ''டைம்'' எழுதுகிறது: ''குற்றம் எல்லாம் என்னுடையது என்றுதான் கூற வேண்டும். சீன நாட்டில் ஏற்பட்ட படுதோல்விகள் கம்யூனிஸ்டுகளின் கூடுதலான படைபலத்தினால் ஏற்பட்டதால் நமது ஸ்தாபனம் சீர்கெட்டுக் குலைந்தது. கட்டுப்பாடின்மையும், கட்சி அங்கத்தினர்களின் உற்சாகக் குறைவுமே தோல்விக்குக் காரணங்கள்.''



அவர்களுடைய நெருங்கிய குடும்பப் பாசமும், சமயப் பற்றும் காரணமாகச் சீனர்கள் கம்யூனிஸத்தை ஏற்கவே மாட்டார்கள் என அநேக அமெரிக்கர்கள் நம்பினர். கம்யூனிஸ்டுகளின் பலம் வாய்ந்த புரட்சிச் சக்தியும், மக்கள் மனத்தைக் கவரும் மா, அவருடைய சகாக்களின் சிறப்புக்கும் எதிராக மதப்பற்றும் குடும்பப்பாசமும் ஒன்றும் செய்யமுடியவில்லை என்பது நிரூபணமாகிவிட்டது.

சீனர்களின் ஆர்வம் முதலில் டெய்பிங்குகள் காலத்தில் தோன்றியது. ஸன் யாட் சென்னின் எழுத்துக்கள், செயல்திறனால் அந்த ஆர்வம் வளம்பெற்றது. கடைசியாக இந்த ஆர்வம் சியாங்கிடமிருந்து மா-வின் கைக்கு மாறியது. இந்த ஜீவசக்தி மேற்கத்தி எண்ணங்கள் மூலம் உரம்பெற்று வளர்ந்தது. அது எங்காவது சென்று உயிரூட்ட வேண்டும். தங்கள் நலனுக்கு இந்தச் சக்தியைச் சாதுர்யமாகப் பயன்படுத்தக் கம்யூனிஸ்டுகள் தயாராயிருந்தனர். தேசியவாதிகளின் கையாலாகாத்தனத்தினாலும், ஊழலினாலும், சீன மக்களின் அரசியல் நம்பிக்கை மங்கியதனாலும் மீண்டும் உயிர் பெறுவதற்குக் கம்யூனிஸம்தான் தக்க சாதனம் என்று அதனிடம் அவர்கள் அடைக்கலம் புகுந்தனர்.

ஜனநாயக முறைகள் மூலம் ஒன்றும் நடக்காது என்றும், கம்யூனிஸம் ஒன்றுதான் கடைத்தேற வழி என்றும் மக்கள் நம்புவதற்கு ஜப்பானிய ஆக்கிரமிப்பு உதவியது. முன்னர் நிகழ்ந்தவற்றை இன்று நினைத்துப்பார்த்தால், ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. சீனாவின் பத்து லட்சம் கிராமங்களில் அப்போதிருந்த நிலைமையை அடியோடு மாற்றக்கூடிய அரசியல், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செய்யாமல், அதுவும் 1940-இல் கம்யூனிஸ்டுகளுடன் அமைத்த இரண்டாவது ஐக்கிய முன்னணி முறிந்த உடனேயே செய்யாமல் எப்படி சீனாவில் கம்யூனிஸம் வராமல் தடுத்திருக்க முடியும்?

ஜப்பானுடன் யுத்தம் முடிந்தவுடன் சீனாவில் கம்யூனிஸம் வராமல் தடுக்க மற்றுமொரு வழி, பிரம்மாண்டமான அளவில் அமெரிக்க தரை, கடல், விமானப்படைகள் மும்முரமாகத் தலையிடுவதுதான். 1945-க்குள் அமெரிக்க ராணுவத் தலையீடு அரசியல் முறையில் நடக்கக்கூடியதல்ல என்பதை அறிந்ததனால், தலையிடுவது உசிதமா அல்லவா என்பதை முடிவு செய்யும் சந்தர்ப்பமே ஏற்படவில்லை. சியாங்கின் வருந்தத்தக்க வீழ்ச்சியினால் பின்பு அரசியல் நலம்பெற முயற்சித்தவர்கள், அச்சமயம் உடனடியாக அமெரிக்கப் படையைக் கலைக்க வேண்டும் என்று தீவிரமாக வற்புறுத்தினார்கள்.

நமது சீன நாட்டுக் கொள்கை பற்றி, நமது கட்சி விவாதம் அமெரிக்காவை மிகுதியாகப் பாதித்துவிட்டது:

மத்திய உலகு மக்களுடன் திருப்திகரமான உறவு கொள்ள
வேண்டுமானுல், நாம் தெரிந்துகொள்ளவேண்டிய வெகு
முக்கியமான படிப்பினையை இந்த விவாதம் தெளிவாக நமக்
குப் புலப்படாமல் செய்துவிட்டது. மற்றெல்லாவற்றையும்
விட படிப்பினையை அறியாமல் போனது அமெரிக்காவுக்கு
ஏற்பட்ட பெரிய நஷ்டமாகும்.

சீன கிராமவாசிகளின் ஏழ்மை நிலையைப் பயன்படுத்
திக்கொண்டு, விவசாயிகளைத் தன்பக்கத்தில் சேர்த்துக்கொள்
வதில், மா மகத்தான வெற்றி பெற்றுவிட்டார். ஆசியா
வில் குடியானவர்களே எந்தக் கட்சிக்கும் நிலையான பலத்தை
அளிப்பவர்கள். அவர்களுடைய உற்சாகத்தைக் கிளப்பி
விட்டால், அதனுல் ஏற்படும் சக்தியைக்கொண்டு, சிறந்த
ராணுவ சாதனங்கள் பெற்ற பெரும்படைகளை எதிர்த்து
இறுதியில் வீழ்த்தியும் விடலாம் என்பதை மா உணர்ந்தார்.
தியாக உணர்வுள்ள, ஒன்றுபட்ட சிறந்த தலைமையில் செயல்
புரியக்கூடிய சிறுபான்மையினர் மனத்தில் கருத்துக்கள்
இடம் பெற்றுல், அவர்கள் உதவியினுல் சரித்திரத்தையே
உருவகப்படுத்தலாம் என்பதில் அவர் நம்பிக்கை வைத்தார்;
வெற்றியும் பெற்றுர்.

மா-வின் வெற்றியின் ரகஸ்யத்தையும் பொருளையும்
அறிந்துகொள்ள நாம் பிடிவாதமாக மறுத்தோம். இதன்
விளைவுதான் ஐந்தாண்டுகளுக்குப் பின் இந்தோ-சீனுவில், நிச்
சயம் தோல்வியுறுவோம் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்
தும் தோல்வியுற்றோம்;

அத்தியாயம்—13

# சீனுவும் யுத்த கெடுபிடியும்

பீகிங்கில் புதிய கம்யூனிஸ்ட் ஆட்சி அமைந்தவுடனே,
1950 பிப்ரவரியில் மாஸ்கோவில் முப்பது ஆண்டுகளுக்கு
நீடிக்கக்கூடிய ரஷ்ய—சீன உடன்படிக்கை கையெழுத்தாகி
விட்டதாக ஸ்டாலின் அறிவித்தார். இதற்கு நான்கு
மாதங்களுக்குப் பின்பு கொரியா நாட்டு கம்யூனிஸ்டுகள்
38-வது அக்ஷரேகையைத் தாண்டி வந்தனர். 7-வது கடற்
படை ஃபார்மோஸாவை யாரும் தாக்காமல், சுற்றிப் பாது
காத்தது; ஐக்கிய நாட்டுப் படைகள் போரில் நுழைந்தன;



அக்டோபர் மாதத்தில் சீன கம்யூனிஸ்டுகளே யாலு* நதியைத்
தாண்டி வந்து தாக்கினர். சரித்திரத்திலேயே முதல் தட
வையாகச் சீனர்களும், அமெரிக்கர்களும் எதிர்த்து நின்று
போர் புரிந்தனர்.

ரஷ்யாவும், சீனுவும் ஒன்றுபட்டுச் செயல்புரிய முடி
யாது என எதிர்பார்த்தவர்களுக்கு இந்தச் சம்பவங்கள்
மிகுந்த சங்கடத்தை அளிக்கும். குடியானவர்கள் நிலையைச்
சீர்திருத்த வேண்டும் என மா வற்புறுத்தி வந்ததும், சில
பகுதிகளில் தனிப்பட்டோர் சொத்துரிமை வகிக்க இடம்
அளிக்கலாம் என மா நிதானத்துடன் அறிக்கை வெளியிட்
டதும், சீனுவும், ரஷ்யாவும் ஒன்றுபட்டுச் செயல் புரிய
முடியாதா என்கிற ஆசை சிலர் மனத்தில் தோன்றி
யது. மா அதிகாரத்திற்கு வந்ததும், மார்க்ஸியக் கோட்
பாட்டை உதறித் தள்ளிவிடுவார், சர்வதேசக் கொள்கை
கள் விஷயத்தில் கூட சோவியத் யூனியனுடன் ஒன்றுபட
மாட்டார் எனக்கூடச் சிலர் எண்ணினர்.

இம்மாதிரி எதிர்பார்த்தவர்கள் வெள்ளை உள்ளம்
படைத்தவர்கள் என்றாகிவிட்டது. சீன நிலைமைக்குப்
பொருந்தாத ஏட்டுச் சித்தாந்தங்களைக் கைவிட்டபோதெல்
லாம் லெனின் கூறியதை மா மேற்கோளாகக் காட்டுவ
துண்டு. ''தங்களை எதிர்நோக்கியிருக்கும் சிக்கல் வாய்ந்த
பிரச்னைகளை அவர்களே ஆராய வேண்டியது அவசியம்
என்பது தெளிவு. எல்லா நாடுகளுக்கும் பொருந்தக்கூடிய
மார்க்ஸிஸ்டுக் கொள்கையையும், சீனப் புரட்சியின் பிரத்தி
யட்ச நடைமுறையையும் அடிப்படையாகக் கொண்ட
தாகவே அவர்கள் முடிவு அமையவேண்டும்.'' இவ்வாறு
லெனின் ஒரு சமயம் கூறினுர்.

இம்மாதிரிக் கோட்பாடுகளை எழுத்துக்கு எழுத்துப்
பின்பற்ற வேண்டும் என்கிற அவசியமில்லை. சந்தர்ப்பத்திற்
கேற்றபடி கொள்கைகளைக் கடைப்பிடிக்கையில், சமயம்
நேரும்போதெல்லாம் லெனின் கொள்கைகளுக்கு வாசா
கைங்கரியம் செய்ய மா தவறுவதில்லை.

ரஷ்யத் தலைமைப்பீடத்தின் கொள்கைகளைப் பற்றி
மனவருத்தமடைய நிறைய இடமிருந்தாலும், ஸ்டா
லினை உலகப் புரட்சியின் தலைவராக ஏற்க மா தயங்கியதே
யில்லை. ஆசியாவில் ஜப்பானின் ஆக்கிரமிப்பை எதிர்த்த
ரஷ்யா, 1941 ஏப்ரலில் ஆக்கிரமிப்பின் விளைவுகளைப் பொருட்
படுத்தாதது போல், குட்டிக்கரணம் அடித்ததற்காக ஸ்டா
லினை மா மன்னித்துவிட்டார் போலும்! தென் கிழக்கு

---

*சீனுவில் உற்பத்தியாகி கொரியா வழியாகச் சென்று, கொரியாக் கட
லில் விழும் நதிதான் யாலு என்பது.

ஆசியா மீது படையெடுக்கவும், பெர்ல் துறைமுகத்தைத்
தாக்கவும், ஜப்பானியப் படைகள் ஏற்பாடு செய்து
கொண்டிருக்கையில், சோவியத் யூனியன் நேசமாயிருப்ப
தாகவும், நடுநிலைமை வகிப்பதாகவும் ஜப்பானுடன் ஒப்பந்
தம் செய்துகொண்டது. இதை உற்சாகமாகப் புகழ்ந்து
'' இஸ்வெஸ்தியா'' பத்திரிகை பின்வரும் முறையில் எழு
தியது; '' ஏராளமான சங்கடம் நிறைந்த அநுபவங்
களுக்குப் பிறகு பயனளிக்கக்கூடிய முறையில் சோவியத்—
ஜப்பான் உறவு புதுக் கட்டத்தை அடைகிறது.''
இந்தப் பயனுக்கு ஓர் உதாரணம் சீக்கிரமே நிகழ்ந்
தது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட அறுபது நாட்களுக்குள்
ஜப்பானின் நேச நாடான ஜெர்மனி, சோவியத் யூனியன்
மீது படையெடுத்தது. எட்டு மாதங்களுக்குள் ஜப்பான்
பெர்ல் துறைமுகத்தைத் தாக்கியதுடன், தென் கிழக்கு
ஆசியாவிலும் தனது படைகளைச் செலுத்தியது. இம்மா
திரிச் செயல்களினால் ஐரோப்பாவிலுள்ள ரஷ்யாவின் புதிய
மேற்கத்தி நேச நாடுகளின் முயற்சி பயனற்றுப் போகும்படிச்
செய்துவிட்டது.
சோவியத் தந்திரங்கள் பற்றி மா மனத்தாங்கல்
அடையப் பிரத்தியேகக் காரணங்கள் உண்டு. இரண்டாவது
உலக யுத்தம் முடிந்த சமயத்தில் சியாங்கை அசைக்க
முடியாது என்று ஸ்டாலின் உறுதியாக நம்பினார். இதன்
விளைவாக 1945 ஆகஸ்டில் மாஸ்கோவில் கையெழுத்தான
சின-ரஷ்ய உடன்படிக்கையுடன் ரஷ்யர் அனுப்பிய குறிப்
பில் '' ரஷ்யாவின் தார்மிக, பொருள் உதவிகள் யாவும்
சீனாவின் மத்திய அரசாங்கமான தேசிய அரச ங்கத்திற்கே
அளிக்கப்படும் '' என்று குறிப்பிடப்பட்டிரு தது. 1947
அக்டோபரில் கூட வெகு சாமர்த்தியமாகத் த க்கு ஆதர
வான சக்திகளை மா திரட்டிக்கொண்டிருந்தது ஸ்டாலினுக்
குத் தெரியாது போலும்! ஆனால் மா யதார்த்த நிலை
அறிந்து செயல் புரிபவர். ஆகையால் அவர் புகழ வேண்டிய
வர்களைப் புகழ்ந்து காத்திருக்கலாம்.
ஸ்டாலினின் அறுபதாவது பிறந்த தினத்தன்று,
'' மார்க்ஸ் இறந்துவிட்டார். அவ்வாறே எங்கல்ஸும்,
லெனினும் இறந்துவிட்டனர். ஆனால் இன்று, ஸ்டாலின்
உயிரோடிருப்பது மிகவும் நலன் விளைவிக்கக் கூடியது.
ஸ்டாலின் இல்லாவிட்டால் நாம் எவ்வாறு செயல் புரிய
வேண்டும் என்பதற்கு வழிகாட்ட யார் இருக்கின்றனர்?
அவர் நம்மிடையே இருப்பதனால் எல்லாம் சரியாக நடக்
கும்'' என மா கூறினார். இவ்வாறு புகழ்வதனால் அவ
ருக்கு நஷ்டம் ஒன்றுமில்லை, இது அளவு கடந்த புகழுரை
யாகும். ஆனால் சீனப் புரட்சியின் சக்தியைத் தொடர்ந்து



தவறாகவே மதிப்பிட்டு வந்தவனைப் புகழ்ந்தது சந்தர்ப்பம்
தெரிந்து புகழ்ந்ததாகும்.
கொரியா யுத்தத்தின் விளைவாக ரஷ்ய-சீனக் கொள்
கைகள் மீண்டும் ஒரே வகையில் துலங்கத் தொடங்கின.
இந்தச் சண்டையில் சீனக் கம்யூனிஸ்டுகள் பிரவேசித்தது
பற்றி ஏராளமாக வாதப் பிரதிவாதங்கள் செய்யப்பட்டு
வருகின்றன. நம்பக்கூடிய விளக்கங்களில் சிலவற்றைக் கீழே
காணலாம்.
'' யாலு நதியை ஒட்டி அமெரிக்கப் படை முகாம் செய்
யலாம் என்பது பற்றிச் சீனர்களின் உண்மையான அச்சம்;
தங்கள் நாட்டுக்கப்பால் நடக்கும் சண்டைகளில் சீனர்களை
மாட்டி வைப்பதற்காக ரஷ்யர்களின் தீவிர முயற்சி; உள்
நாட்டுச் சங்கடங்களை மறந்து அந்நிய எதிரியைத் தாக்குவ
தற்கு மக்கள் ஒன்றுபடுவதில் கவனத்தைத் திருப்புவதற்குச்
சீன ஆட்சியினருக்குச் சந்தர்ப்பம்; ஆலைத்தொழில் அமைப்
புத் தளமாக மஞ்சூரியாவைக் கைப்பற்றி தொழில் துறை
யில் ரஷ்ய ஆதிக்கத்தை அகற்றச் சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு
வாய்ப்பு; ஆசியா வெங்கிலும் ராணுவத் துறையிலும், அர
சியல் துறையிலும் சீனாவின் மதிப்பு உயர்வதற்கேற்ற தரு
ணம்.'' இது நியாயமற்ற மதிப்பீடு எனப் பல அமெரிக்கர்
களுக்குத் தோன்றலாம். ஆனால் ஆசியாவிலுள்ள பல கம்
யூனிஸ்டல்லாதவர்கள் வேறுவிதமாக நினைக்கின்றனர்.
மாஸ்கோ தவிர உலகத்தில் பிற பகுதியினருடன், தொடர்
பின்றிப் போனதனால், தங்களை அழித்துவிட அமெரிக்கர் தீர்
மானம் செய்துவிட்டனர் என்ற அனுமானத்தின்பேரில்,
சீனர்கள் செயல்புரிகின்றனர், எனப் பிற நாட்டினர் கூறுகின்
றனர். காரணம் யாதாயிருந்தாலும், சீனாவின்மீது தங்கள்
பிடியை உறுதிப்படுத்துவதற்குக் கொரியா யுத்தத்தைக் கம்யூ
னிஸ்டுகள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர்.
1952 இறுதியில் யுத்தம் சீன அரசாங்கத்திற்குச் சங்
கடம் விளைவிப்பதாகப் போய்விட்டது போலிருக்கிறது.
1952 அக்டோபரில் நான் புது டில்லியிலிருந்தேன். ஐ. நா.
வில் இந்தியா சமர்ப்பித்திருந்த சமாதானம் பற்றிய
தீர்மானம் தங்களுக்குப் பிடித்திருக்கிறத என அச்சமயம்
செள என் லாய் பீகிங்கிலிருந்து இந்தியத் தூதரிடம் சூசக
மாகத் தெரிவித்திருந்தார்.
ஆனால் சீனர்கள் சமாதான யோசனையை நிராகரித்து
விட்டனர். சோவியத் வற்புறுத்தலின் பேரிலேதான் அவர்
கள் நிராகரித்தனர் என என்னைப்போலவே இந்திய அரசாங்
கத்தினரும், புது டில்லியில் இருந்த பிற தூதர்களில் பெரும்பா
லோரும் நம்பினர். சமாதான யோசனைகளில் யுத்தக் கைதிக
ளின் விடுதலைப் பிரச்னை பற்றி விஷின்ஸ்கி (ஐ. நா. வில் அச்

சமயம் ரஷ்யப் பிரதிநிதி) உதவாக்கரைத் தீர்மானம் என்று பேசியதனுல் எங்கள் நம்பிக்கை ஊர்ஜிதமாயிற்று.

ஸ்டாலின் மரணம், சீன-ரஷ்ய பேரத்தில் இரு நாடுகளும் சமநிலைபெற உதவி புரிந்தது. ஸ்டாலின் உயிருடனிருக்கையில், ''மனிதவர்க்கத்தின் மாபெரும் தலைவர்'' ஸ்டாலினுடன் மா-வை சமமாக மதிக்கமுடியாது. ஆனல் ஸ்டாலின் சவ ஊர்வலத்தில் சவப்பெட்டிக்குப் பின் சௌ என் லாயும், மாலங்கோவும், அக்கம் பக்கமாகச் சென்றனர். ஞாபகச் சின்னத்தின் படிக்கட்டுகளில் தோளோடு தோளாக ஏறிச் சென்றனர்.

1950-இல் சோவியத்—சீன ஒப்பந்தம் மாஸ்கோவில் கையெழுத்தாகின்ற சமயம், ஸ்டாலின், மா, மாலங்கோவ் மூவரும் சேர்ந்திருப்பதுபோல் ஒரு படம் தயாரித்து ''பிராவ்டா'' வெளியிட்டது. 1953 டிசம்பரில் மா-வின் பிறந்த நாள், தற்போது ரஷ்யாவை ஆட்சிபுரியும் தலைவர்கள் பிறந்த நாட்களைவிட ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. மா-வின் நூல்களில் சிறப்பானவைகள் மாஸ்கோவிலும், பீகிங்கிலும் ஒரே காலத்தில் அச்சமயம் பிரசுரம் செய்யப்பட்டன. மா-வின் நூல்களில் நான்காவது பகுதி 1955-இல் பிரசுரம்செய்யப்பட்டபொழுது, தங்களது சிறப்புமிக்க ஆசிய நேயரைப் புகழ்வதில் ஒருவரையொருவர் மிஞ்சுவதற்குச் சோவியத் பத்திரிகைகளுக்குப் புதிய சந்தர்ப்பம் கிடைத்தது.

இதற்கு நன்றி செலுத்தும் முறையில் புதிய மாஸ்கோ தலைவர்களுக்குத் தனது நம்பிக்கையும், நீடித்த நேசமும், தொடர்ந்து கிடைக்கும் என்று மா உறுதி கூறினர். ''பிராவ்டா''வுக்கு இச்சமயத்தில் அவர் ஒரு விசேஷ கட்டுரை எழுதினர். ''ஸ்டாலின் போற்றி வளர்த்த மகத்தான கம்யூனிஸ இயக்கம் புதிய தலைவர்களின் கீழ் கண்டிப்பாக முன்னேறும்'' என அக்கட்டுரையில் எழுதினா.

மக்களுக்குத் தங்கள் கொள்கைகளை உருவேற்றுவதற்கு ரேடியோ, பத்திரிகைகள், மேடைப் பிரசங்கங்கள், பள்ளிக்கூட நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும் முக்கியமான சாதனங்கள். இரு நாடுகளிலும், இச் சாதனங்கள் மூலம் சீன-ரஷ்ய ஒற்றுமை சிதையாமல் சுருங்காமல் இருப்பதுபோல் பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. சிந்தனையிலும், செயலிலும் இரு நாடுகளும் ஒன்றுபட்டு நிற்பதாகவே சாமான்ய மக்கள் ரேடியோ மூலமும், பத்திரிகைகள் மூலமும் அறிந்து கொள்ளுவார்கள்.

இரண்டு நாடுகளுக்குள்ளும், நிபுணர்கள் பரிவர்த்தனை நாளுக்கு நாள் பெருகிவந்தது. சோவியத் யந்திரங்கள் மட்டுமல்ல, அந்நாட்டுத் திட்டம் வகுக்கும் விற்பன்னர்கள், இயந்திர நுட்ப நிபுணர்கள், தேர்ந்த தொழிலாளர்கள் சீனவுக்கு



அனுப்பப்பட்டு வருகின்றனர். இதேமாதிரி சீனவில் விசேஷ ஆராய்ச்சி செய்பவர்களும், மாணவர்களும் பயிற்சி பெறவும், கல்வி கற்கவும், ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். சோவியத் பல்கலைக்கழகங்களில் படித்துவரும் அயல்நாட்டு மாணவர்களில் பெரும்பாலோர் சீன மாணவர்களே.

சீனவில் கூடுதலான சீனர்களுக்கு விரைவாக ரஷ்ய பாஷை கற்பிப்பதற்கு மூர்த்தன்யமாகப் பிரயத்தனம் செய்யப்பட்டு வருகிறது. ''ரஷ்ய மொழி லெனின் பேசியமொழி. அதுதான் சோஷலிஸத்தை அடைவதற்கான சாதனம்'' எனச் சீன சோவியத் நேசச் சங்கத்தின் பொதுக் காரியதரிசியான சியன்-ஸுன்-ஜு (Chien-Tsun-Jui) கூறுகிருர். ''ரஷ்ய பாஷையில் பாண்டித்யம் பெற்றுவிட்டால் மொழித்தடையும் சீன சோவியத் நட்புறவுக்கான தடங்கலும் அகன்றுவிடும்'' என அவர் மேலும் கூறுகிருர்.

சீனர்கள் தேவைக்கு சோவியத் அநுபவம் பயன்படும் இடங்களில் சோவியத் முன்மாதிரிகள் தடையின்றி நீடித்து உபயோகப்படுத்தப்படும். உதாரணமாக, 1954 செப்டம்பரில் தேசிய மக்கள் காங்கிரஸ் பீகிங்கில் கூடி, தங்கள் நாடு முப்பத்தி ஐந்து மந்திரிகள் அடங்கிய சபையினுல் ஆளப்படும் என்கிற சட்டத்தை இயற்றியது. (மக்கள் காங்கிரஸ் என்பது கம்யூனிஸ்ட் அகராதிப்படி நமது சட்டசபைகள் போன்றவை). நமக்குத் தெரிந்துள்ள தகவல்களிலிருந்து மந்திரிகளில் பதினறுபேர் சோவியத் நிர்வாக முறையைப் பின்பற்ற வேண்டும் என திட்டமிடப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. சீன ஐந்தாண்டுத் திட்டம், தொழில்நுட்பத்திலும், ஆலைத் தொழில் அபிவிருத்தி முறையிலும் சோவியத் திட்டத்தை அப்படியே ஒத்திருக்கிறது.

இம்மாதிரி ஒருமைப்பாடுகள் இருப்பதனுல் அநேக அமெரிக்கர்கள் கம்யூனிஸ்ட் அப்பாவியைப்போல், ஆனல் பெரிதான கைப்பொம்மை நாடு என சீனவை மதிக்கின்றனர். இது மாபெரும் தவறு. ரஷ்யத் தலைமைப்பீடம் சீனவைத் தனக்குச் சமமாகவோ அல்லது கிட்டத்தட்ட சமமாகவோ பாவிக்க வேண்டும். ஏனெனில், பேரம் செய்வதில் சீனர்கள் மகா சமர்த்தர்கள். சீனப் பேராசையைத் திருப்தி செய்ய ரஷ்யா எவ்வளவு வேண்டுமானுலும் செய்யத் தயாராயிருக்கிறது என்பதற்கு, 1954 குளிர்காலத்தில் புல்கானினும், குருஷேவும் சீனத்திற்குச் சென்றிருந்தபோது, * போர்ட் ஆர்தரைத் திருப்பித் தந்ததை உதாரணமாகக் கூறலாம்.

*போர்ட் ஆர்தர் துறைமுகம் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் ஜப்பான் வசமிருந்தது. யுத்தத்திற்குப் பின் ரஷ்ய சீனக் கூட்டு நிர்வாகத்திலிருந்த ரஷ்ய ஆதிக்கத்தைத்தான் புல்கானின், குருஷேவ் விட்டுக்கொடுத்தனர்.

இரு நாடுகளுக்கும் பொதுவான பகைவர்கள் இருக்கின்
றனர். இருநாடுகளும் ஒரே இலட்சியத்தைப் பின்பற்றுகின்
றன என்கிற பிணைப்பு தளர்ந்தாலும், சீனா இயன்றமட்டில்
தன்னை ஒட்டியே செயல்புரியும்படிச் செய்ய ரஷ்யாவுக்கு
ஒரு முக்கியமான வசதியிருக்கிறது. ஆயுதங்களுக்கும், தள
வாடப் பொருள்களுக்கும், தன்னுடைய பிரம்மாண்டத்
தொழில் அபிவிருத்தித் திட்டம் கைகூடுவதற்கான தொழில்
நுட்ப உதவிக்கும், சீனா ரஷ்யாவையே பெரிதும் நம்பியிருக்
கிறது.

பீகிங் ஆட்சி வெற்றி பெறுவதற்கும், ஆசியாவில் தான்
அடைய விரும்புகிற மதிப்பு உயரவும், இந்தத் தொழில் அபி
விருத்தித் திட்டம் வெற்றி பெறுவது மிகமிக முக்கியமாகும்.
இந்த உண்மையை அறிந்து, சீனாவின் யந்திரத் தொழில் அபி
விருத்தி ஆசையைப் பூர்த்தி செய்து, அதே சமயத்தில் தங்க
ளுக்கு அபாயம் விளைவிக்கும் அளவிற்கு அந்த அபிவிருத்தி
பெருகாமலும் காத்துக்கொள்ளக்கூடிய மையமான கொள்
கையைச் சோவியத்தினர் பின்பற்றுவர் என எதிர்பார்க்
கலாம்.

*

*

*

1951-லிருந்து 1955-வரை கம்யூனிஸ்ட் சீனாவுக்குச்
சென்று வந்த பல பேர்களுடன் பேசும் வாய்ப்பு எனக்கு
இருந்தது. அவ்வாறு நான் கண்டு பேசியவர்களில் பிரிட்டி
ஷார், இந்தியர், பாகிஸ்தானியர், பர்மியர், இந்தோனேஷி
யர்கள், ஜப்பானியர் முதலியோர் இருந்தனர். இவர்களில்
சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், கல்வி நிபுணர்கள், சமூகச்
சேவைபுரிபவர்கள், கிளப்புகளில் உல்லாசமாகப் பொழுது
போக்கும் பெண்கள், என்ஜினியர்கள் முதலியோர் இருந்த
னர். இவர்களில் பெரும்பாலோர் மனச்சாட்சிப்படி நடப்ப
வர்கள், நிதானஸ்தர்கள். இவர்கள் கம்யூனிஸ்டுகளல்ல.
இவர்களைத்தான் தங்கள் திட்டம் உத்தமமானது என்று நம்
பும்படிச் செய்யவேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் ஆவலா
யிருந்தனர்.

இவர்கள் வெளியிட்ட கருத்துக்களில் அதிசயிக்கத்தக்க
ஒருமைப்பாடு இருக்கிறது. சீனர்களிடையே காணப்பட்ட
பழைய சிரிப்பு, உல்லாச வாழ்க்கை, கவர்ச்சி யாவும் பீகிங்
வாசிகளிடமிருந்து மறைந்துவிட்டதாக அவர்களில் பெரும்
பான்மையினர் கூறுகின்றனர். இதற்குப் பதிலாக அசடு வழிந்
ததுபோலும், எல்லோரும் ஒரே மாதிரியாகத் தங்கள் வாழ்க்
கையைத் தத்தம் செய்தவர்கள் போலும் காணப்பட்டனர்.
தெருவில் செல்லும் போர்வீரர்கள் நன்றாகத் தின்று கொழுத்
திருந்தனர். தொழிலாளிகள் தினசரி எட்டு மணி நேரமும்,



வாரத்திற்கு ஆறு நாட்களும் விடுமுறையின்றி வேலை செய்த
னர். மாதம் சராசரி சுமார் இருபத்திமூன்று டாலர்கள்
சம்பாதித்தனர். அரசாங்க உத்தியோகத்திலிருந்து, ரஷ்யர்
கள் அமைத்துக்கொடுத்த அருமையான ஆலைகளை மேற்
பார்வை பார்ப்பது வரை பொறுப்பு வாய்ந்த முக்கியமான
பதவிகள் பெரிதும் இளம் வயதுள்ள ஆண் பெண்களுக்கு
அளிக்கப்பட்டன. இம்மாதிரி புதுப்பொறுப்புப் பெற்றவர்
களுக்கு தங்களுக்குப் பதவி அளித்த அரசாங்கம் நீடிப்பதில்
தனி அக்கறை ஏற்பட்டது.

காரியாலயங்கள், ஆலைச் சுவர்களில் பிரசாரச் சுவ
ரொட்டி விளம்பரங்கள் கீழே வேலை செய்பவர்களை உற்று
கவனிப்பதுபோல் அமைந்திருந்தன. இந்த விளம்பரங்களில்
''**வால் தெரு*** (Wall Street) சாம்ராஜ்ய வாதிகளை'' ஃபார்மோ
ஸாவிலிருந்து ''சீன மக்கள் படையைச் சேர்ந்த விடுதலை
வீரர்கள்'' கனத்த துப்பாக்கிகளைக்கொண்டு விரட்டுவது
போல் அவலட்சணம் பிடித்த கேலிச் சித்திரங்கள் காணப்
பட்டன.

அமெரிக்காவே சீனர்களின் விரோதி; ஒரு நூற்றாண்டாக
அந்நிய நாடுகளுக்கு உட்பட்டிருந்ததனால், மேற்கத்தி நாடு
கள் மீதிருந்த பகைமை உணர்ச்சி இப்போது வேண்டு
மென்றே அமெரிக்காவுக்கு எதிரிடையாகத் தூண்டப்பட்
டிருக்கிறது. ஒரு காலத்தில் அமெரிக்கா சீனாவின் மாபெரும்
நேச நாடாயிருந்தது. அக்காலத்தில் ஆயிரக்கணக்கான சீன
இளைஞர்களுக்கு கல்வியளித்திருக்கிறது. சீனாவைச் சிதை
வுறாமல் காத்த நாடு என்று பகிரங்கமாகப் பாராட்டப்
பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட அமெரிக்க நாட்டை இன்று
''காகிதத்தில் வரையப்பட்ட புலி'' என்றும், பெருமை
வாய்ந்த ஒரு புராதான நாட்டினர் மன எரிச்சலடையும்படி
கேவலமாகச் சித்தரிக்கிறார்கள்.

கொரியா யுத்தத்தை அமெரிக்காவே தொடங்கிற்று
என்றும், நாடெங்கும் கொள்ளை நோய்கள் பரவுவதற்காக
விஷக் கிருமிகள் பிரயோகம் செய்தனர் என்றும், சீன நாட்டு
மக்களில் பெரும்பாலானவர்கள் இன்னமும் நம்புகின்றனர்
என்று தோன்றுகிறது. கிருமிப் பிரயோகத்தின் விளைவாக
சீனர்கள் மேற்கத்தி நாடுகளுக்கு எதிராக ஒன்று பட்டது
மட்டுமல்ல, பொதுச் சுகாதாரத்தில் அவர்களுக்குப் புது

***வால் தெரு**:—(Wall Street) என்பது அமெரிக்காவில் நியூயார்க் நகரில் மன்ஹாட்டன் தீவில் உள்ள குறுகலான தெரு. இங்கே அமெரிக்காவின் மிகப் பணம் படைத்த வர்த்தகக் காரியாலயங்கள் இருக்கின்றன. இவர்கள் தங்கள் நலனுக்காக அரசாங்கத்தைத் தாண்டி சாம்ராஜ்யத்தை அமைக்க விரும்புகிறார்கள் என்று குற்றம் சாட்டி அவர்களை ''வால் தெரு சாம்ராஜ்ய வாதிகள்'' என எதிரிகள் நையாண்டி செய்கின்றனர்.

அக்கறை ஏற்பட்டுவிட்டது என்றும், சீன அதிகாரிகள்
சிரித்துக்கொண்டே கூறி வருவதாகச் சொல்லப்படுகிறது.
அமெரிக்காவின் மீதுள்ள வெறுப்பும், கொரியா யுத்
தத்தை நடத்துவதற்கான ராணுவத் தேவைகளும், சீன
கம்யூனிஸ்டுகளுக்குப் பல நற்பயன்களை அளித்தன. பரந்த
தங்கள் நாட்டின்மீது தங்கள் பிடியை இதனால் நிலை நிறுத்த
முடிந்தது. புராதன குடும்ப வாழ்க்கை முறையைத் தகர்க்க
இயன்றது. உலகத்திலே பெரிய யுத்த சன்னத்தமான படை
யைச் சேர்ப்பது சாத்தியமாயிற்று. விவசாய நாடாயிருந்
ததைச் சக்தி வாய்ந்த இயந்திரத் தொழில் நாடாக மாற்று
வதற்காக உபயோகிக்கப்பட்ட முரட்டுத்தனமான முறை
களை ஓரளவு மக்கள் ஏற்பதற்கு உதவியது.
சீனாவில் கிறிஸ்தவ மதபோதனை இயக்கத்தை ஒழிப்
பதற்குத் திட்டமான முயற்சி செய்யப்பட்டது.
1945-க்குள் கிறிஸ்தவப் பள்ளிகளில் படித்த நூற்றுக்
கணக்கான சீன யுவர்கள் அபாயங்களைத் துணிவுடன்
எதிர்த்து, தங்களது மனக் கஷ்டங்களை அடக்கிக்கொண்டு,
யேனான் வந்து சேர்ந்தனர். கிறிஸ்தவப் பல்கலைக் கழகங்
களில் முன்பு படித்த மாணவர்களில் பலர் செம்படையில்
'கொரில்லாப் படைப்' பகுதியில் சேர்ந்தனர். மா சே துங்கி
னிடம் விசுவாசம் கொண்டனர். அவர்களெல்லாம் இன்று,
புதிய ஆட்சியில் முக்கியமான பதவி வகிக்கின்றனர். இவர்
களில் சிலர் அந்நிய நாட்டு கிறிஸ்தவ மதச் சாமியார்களை
அப்புறப்படுத்துவதில் உதவி புரிந்ததுடன் நிற்கவில்லை.
கம்யூனிஸ்டுகளால் பிரசார நலனுக்காக சிருஷ்டிக்கப்பட்ட
போலி மத ஸ்தாபனங்களைத் துணிந்து எதிர்த்த மத
போதகர்களைத் துன்புறுத்துவதிலும் ஈடுபட்டனர்.
தங்களுக்கு அவசியம் ஏற்படுகின்றபொழுது தற்சமயம்
சீனாவை ஆட்சி புரியும் நாஸ்திகர்கள் மதத்தைப் பயன்
படுத்தத் தயங்குவதில்லை. "மக்கள் குடியரசின் அலுவலில்
மதம் குறுக்கிடாமலிருக்கும் வரையில் மத விஷயங்களில் குடி
யரசும் தலையிடாது" என மாஸே துங் கூறுகிறார். "அரசாங்க
நலனுக்கு மதத்தைப் பயன்படுத்துதல் நீங்கலாக" எனும்
விதிவிலக்கை அவருடைய வாக்கில் சேர்த்துக்கொள்ளலாம்.
புத்த மதத்திற்குக் கம்யூனிஸ்டுகள் ஏன் அளவு கடந்து
துதி பாடுகிறார்கள் என்பதற்குப் பல காரணங்களிருக்கின்
றன. புத்த மதத்திலிருந்து தோன்றிய **லாமா*** மதத்தின் மத
பீடம் கவலையளிக்கக்கூடிய திபேத்தின் மத்தியில் இருக்கிறது.

*லாமா:—திபேத்திலுள்ள புத்தமத குருக்களுக்கு லாமாக்கள் என்று
பெயர். ஏழாவது நூற்றாண்டில் ஒரு இந்திய, ஒரு சீன இளவரசிகள், புத்த
மதத்தை திபேத்தில் பரப்பினார்கள். புத்த மதத்தில் லாமா மதம் என்பது
மிக வைதீகமானது என அதைப் பின்பற்றுபவர்கள் கருதுகின்றனர்.



மேலும் ஸிங்கியாங்கிலும், வெளி மங்கோலியாவிலும் லட்சக்
கணக்கான புத்த மதத்தினர் இருக்கின்றனர். தெற்கே
ஏராளமாக நெல் விளையும் வளம்மிக்க சீனாவின் கேந்திரமான
பகுதியிலும் ஏராளமான புத்த மதத்தினர் இருக்கின்றனர்.
புதிதாகப் பழுது பார்க்கப்பட்டு, அலங்காரமாக அமைக்
கப்பட்டிருக்கிற **லாமா** ஆலயம் பீகிங்கில் கண்கவர் காட்சி
யாக அமைந்திருக்கிறது. ஆட்சியினர் ஆதரவு பெற்ற
அகில சீன புத்தர்கள் சங்கம், "தாய்நாட்டையும் உலக
சமாதானத்தையும் பாதுகாக்கும் வகையில் எல்லா புத்த
மதத்தினரும் ஒன்றுபடுவதற்கு உழைக்கும்படி" தனது அங்
கத்தினர்களை அழைக்கிறது.
மதத்தை தங்களிஷ்டப்படிப் பயன்படுத்துவதில், அர
சாங்கத்தின் நோக்கம் என்ன என்பதை மறக்க முடி
யாது. சீன வாழ்க்கையின் தார்மிக அடிப்படையையும்,
ஒழுக்க முறையையும் மாற்றுவதும், "புதிய சன்மார்க்
கத்தை அமைப்பதும்" தான் அவர்களுடைய திட்டவட்ட
மான நோக்கம். "பொதுத் திட்டத்தின்" 42-வது ஷரத்
துப்படி, "தாய்நாட்டுப் பற்று, மக்களிடம் பற்று, உழைப்
பில் பற்று, விஞ்ஞானத்தில் பற்று, பொதுச் சொத்துக்களைப்
பாதுகாத்தல்—இவைகளே எல்லா தேசமக்களின் பொதுக்
கடமையாகும்". இந்த ஐந்துவிதப் பற்றுக்களே மக்கள் குடி
யரசுப் பிரஜா உரிமையின் அடிப்படை.
ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும் என அடிக்கடி
வற்புறுத்துவதன் மூலம், தனிப்பட்டவன் அரசாங்கத்
திற்கு அடங்கியவனாகிறான். அரசாங்கத்தின் நலன்களைப்
பெருக்குவது குடும்பத்தின் கடமையாக விதிக்கப்பட்டிருக்
கிறது. வர்க்க உணர்ச்சியே எல்லா அரசியல் பணிக்கும்
அடிப்படையாகக் கருதப்படுகிறது. புரட்சியை ஆதரித்த
வர்களிடம் ஒருவகையாக நடந்துகொள்ள வேண்டும்.
அழிக்கப்பட வேண்டிய பகைவர்களிடம் வேறு முறையில்
நடந்துகொள்ள வேண்டும்.
அநேக வழிகளில், ஸ்திரீகளின் அந்தஸ்து அபிவிருத்தி
யடைந்திருக்கிறது. ஆனால் குடும்ப விசுவாசத்தைக் குலைக்க
எல்லாவித முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. பெற்
றோர்களுக்கெதிராக சாட்சியங்கூற வேண்டும் எனப் பிள்ளை
கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். கம்யூனிஸ்ட் பத்திரிகை
களில் வெளியான தகவல்களிலிருந்து சியாங் கே ஷேக்கின்
மாஜி ராணுவ சகா ஒருவரின் கம்யூனிஸ்ட் பெண் தனது
தந்தையைத் தூக்கிலிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட
தாகத் தெரிகிறது. மக்களின் எதிரிகளுக்கு என்ன கதி
நேரும் என்பதைப் பிறர் அறிய வேண்டும் என்பதற்காக
அவள் இவ்வாறு வேண்டிக் கொண்டாளாம். இம்மாதிரி

நிகழ்ந்த பல சம்பவங்களைச் சீன ரேடியோ அடிக்கடி ஒலி
பரப்புகிறது. பரஸ்பர வேவு பார்த்தலுக்கும், கோள்
சொல்லுவதற்கும் ஆதரவு அளிக்கப்படுகிறது. பீகிங்கி
லிருந்து வெளிவரும் ''மக்கள் தினசரி'' (People's Daily)
கட்சி அங்கத்தினர்களை, ''கண்டிப்பாக, திட்டமாகத் தவரு
மல் பிற அங்கத்தினர்களையும், பொறுப்பு வாய்ந்த பதவி
வகிப்பவர்களையும் கூட'' வேவு பார்க்கும்படி வேண்டிக்
கொள்கிறது. தனிப்பட்டோர் சுதந்திர வியாபாரத்திற்கு
ஓரளவு ஆதரவளிப்பதாக ஒரு சமயம் மா திட்டமாகக்
கூறினர். ஆனல் இந்த உறுதிமொழி பொய்த்துப் போய்
விட்டது. கட்சிப் பிரசாரகர்கள் மக்களைத் தீர்மானமாகத்
தூண்டிவிட்டதனுல் பெரிய வர்த்தகர்கள், சில்லறை வியா
பாரிகள் யாவரும் அவர்களின் ஆத்திரத்திற்குள்ளாகின்
றனர். கிராமப் புறங்களில் வேண்டாதவர்களை அடித்துத்
துன்புறுத்தும் பழக்கத்தைத் தூபம் போட்டு வளர்க்கின்ற
னர். மேடைப் பிரசங்கமே தொழிலாயுள்ளவர்கள் கிரா
மாந்தரங்களுக்குச் சென்று, சில நிலச்சுவான்தார்களைப்
பொறுக்கி, அவர்களைப் பகிரங்கமாக ஏராளமான மக்கள்
முன்னிலையில் தூக்கிலிடச் செய்கின்றனர். இந்தச் செய
லுக்கு ''எதிர்ப் புரட்சி நடத்தியவர்களைத் தண்டிப்பது''
என்று பெயர். கைதிகள் மூளை கலங்கும்படிச் செய்வதற்குப்
புது முறைகள் கையாளப்பட்டன.

கொரியா யுத்தம் நடக்கையில் பத்திரிகைகளின் எண்
ணிக்கை இரண்டாயிரத்திலிருந்து ஐம்பத்து மூன்ருகக்
குறைக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகார பூர்வ
மான ''மக்கள் தினசரி'' எனும் பத்திரிகையை அநுசரித்து,
பிற பத்திரிகைகள் கட்சி நடைமுறையை ஒட்டியே செய்தி
கள் வெளியிட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது.
சரித்திரப் புத்தகங்களில் ''ஜனங்கள் கருத்துக்''களுக்கு
மாருக உள்ள பகுதிகளை நீக்குவது எனும் சோவியத் கம்
யூனிஸ்ட் பழக்கம் இங்கும் பின்பற்றப்பட்டது. லட்சக்
கணக்கான புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டுக் கொளுத்
தப்பட்டன அல்லது, ஆலைகளில் புதுத்தாள்கள் தயாரிப்ப
தற்குப் பயன்படுத்தப்பட்டன. சீனவிலிருந்த பெரும்பான்
மையான மேற்கத்தியர்கள் நிர்ப்பந்தமாக ஒன்று நாடு
கடத்தப்பட்டனர் அல்லது சிறைப்படுத்தப்பட்டனர். சிலர்
இருந்தவிடம் தெரியாமல் மறைந்துவிட்டனர்.

எல்லோரையும் தங்கள் கொடியின் கீழ் கொண்டு
வருவதற்கான சாதனம் கம்யூனிஸ்ட் கட்சிதான். கொரியா
யுத்தம் நடக்கையில், இம்மாதிரி சம்பவமும் மும்முரமாக
நிகழ்ந்து கொண்டிருக்கையில், கட்சி அங்கத்தினர் எண்
ணிக்கை அதிகரித்தது. கம்யூனிஸ்ட் கோட்பாடுகள் உரு



வேறிய அங்கத்தினர்கள் அறுபது லட்சம் பேர் இருந்தனர்.
இதில் முப்பது லட்சம் பேர் வெறிபிடித்துச் செயலாற்றக்
கூடிய இளைஞர்களாய் இருந்ததே கட்சியின் தனிச் சிறப்பு.
கட்சி ஸ்தாபனத்தில் இவ்விளைஞர்கள் ''பயங்கர முறை
யில் செயல் புரியக்கூடியவர்கள்.''

1951 பிப்ரவரியில் இருபத்தியொன்று புதுச் சட்டங்
கள் இயற்றப்பட்டன. இந்தச் சட்டங்கள் மூலம் குற்ற
வாளிகளுக்கு மரண தண்டனை, ஆயுள் தண்டனை, அல்லது
காவல் தண்டனை விதிக்க ஏற்பாடாகியிருந்தது. அரசியல்
விசாரணை என்ற போலி நடவடிக்கைக்கோ, ஆத்திரங்
கொண்ட மக்கள் முன் தூக்கிலிடுவதற்கோ அதிர்ஷ்டவச
மாகத் தப்பியவர்களைப் ''புனர் நிர்மாணம்'' செய்வதற்
காக கட்டாய உழைப்பு முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டன.

சீனவுக்குச் சென்று வந்த ''டைம்ஸ் ஆப் இந்தியா''
ஆசிரியர் ஃபிராங்க் மோரே 1952-க்குள் இருபது லட்சம்பேர்
சீனவில் தூக்கிலிடப்பட்டதாக மதிப்பிடுகிருர். மற்ற இந்
திய யாத்ரீகர்கள் ஐம்பது லட்சம் பேர் தூக்கிலிடப்பட்
டிருக்கலாம் எனக் கூறுகின்றனர்.

''இதற்கு என்ன சமாதானம் கூறுகிறீர்கள்'' எனச் சீனப்
பிரதிநிதிகளைக் கேட்டால், அவர்கள் முகம் சுளிக்காமல்
பதில் கூறுகின்றனர். ''எதிர்ப் புரட்சிச் சக்திகள் மீது மக்
கள் உண்மை உணர்வுடன் பழி வாங்கினர்'' என்று கூறி
விட்டுப் பிற விஷயங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்து விடு
கின்றனர். இதுபற்றி தமது அரசியல் தத்துவத்தை விளக்கி
மா ஒரு கட்டுரை எழுதினர். ''புரட்சியில் ஈடுபட்டவர்
களுக்கு ஜனநாயகம், பிற்போக்காளர்களுக்கு சர்வாதிகாரம்,
இவ்விரண்டையும் ஒன்று சேர்த்தால் மக்களின் ஜனநாயக
சர்வாதிகாரமாகி விடுகிறது.'' இதுதான் அவர் அளித்த
விளக்கம்.

அத்தியாயம்—14

# பீகிங் ஆட்சி—சாதனைகளும் பிறவும்

இவ்வளவு பயங்கர முறைகள் மூலமே செயல்படக்
கூடிய திட்டம் எத்தகைய மக்களைக் கவரும் என மேற்
கத்தியார்களில் பெரும்பாலோர் கேட்கலாம். உலக விவ
காரங்களில் இந்தப் புதிய சக்தி எவ்வளவு வியக்கத்தக்க

முறையில் மக்கள் மனத்தைக் கவருகிறது என்பதை மறுக்க
முடியாது. அமெரிக்கர்கள் இந்த உண்மையை அவ்வள
வாக உணர்வதில்லையென்பது வருந்தத்தக்க விஷயம்.
ஆனால் அமெரிக்காவிடத்தில்தான் சீனர்கள் பிரத்தியேக
மாகப் பகைமை பாராட்டுகிறார்கள். இந்தக் காரணத்திற்
காகவாவது இவ்விஷயத்தில் அமெரிக்கர் விசேஷ கவனம்
செலுத்த வேண்டியது அவசியமாகும்.

சீனாவின் தற்போதைய சாதனை என்ற மண்டபம்
ரத்தத்தைக் குழைத்து எழுப்பப்பட்டு வருகிறது. அந்த
மண்டபம் எழுப்பப்பட்டு வருகிறது என்பதை யாரும்
மறுக்க முடியாது. உலக வல்லரசுகளில் ஒன்றாக சீனா
வளர்ந்து வருகிறது என்பதற்கு ஐயமற்ற சூசகங்கள் தென்
படுகின்றன. அவர்கள் புரிந்த ஐந்து சாதனைகள் தெளி
வாகத் தெரிகின்றன.

1. நவீன கால சீன வரலாற்றில் ஒன்றுபட்ட, திறமை
மிக்க ஆட்சிக்கு அத்தாட்சியாக முதன் முதலாக கம்யூ
னிஸ்ட் ஆட்சி விளங்குகிறது. ராணுவத் துறையிலோ,
ஆட்சித் துறையிலோ கண்டிப்பு மிக்க கட்டுப்பாட்டிற்குட்
பட்ட மனிதர்கள் நாட்டின் ஆட்சியை நடத்துகின்றனர்.
ஆட்சியாளர்களில் அநேகர் சம்பளம் பெறுவதில்லை. குடி
யிருப்பு, சாப்பாட்டு வசதி, குறைந்தபட்ச உடை, கொஞ்
சம் சிகரெட்டுகள், அவர்கள் குழந்தைகளுக்கு இலவசக்
கல்வி, வைத்திய வசதி மட்டுமே இவர்களுக்கு அளிக்கப்
படுகின்றன. தன்னலமற்ற சீன யுவர்கள் வெளி நாடுகளி
லிருந்து திரும்பி வந்து கடினமான எளிய வாழ்க்கை நடத்
தினர்.

"நிர்வாகம் மிக மிக நாணயமாக நடைபெறுகிறது"
என்று சமீபத்தில் அங்கிருந்து நாடு கடத்தப்பட்ட கத்தோ
லிக்கப் பாதிரியார் ஒருவர் கூறுகிறார். பீகிங் ஆட்சியின்
பலத்தைக் குறைவாக மதிப்பிடலாகாது என அவர் எச்ச
ரிக்கை செய்தார். "மேற்கு நாடுகளில் ஒரு அரசாங்க
அதிகாரியை லஞ்சம் கொடுத்து வசப்படுத்துவதை விட, தற்
போதைய சீன ஆட்சி அதிகாரி ஒருவனைத் திருப்புவது கடி
னம் என நான் கருதுகிறேன்." இவ்வாறு அவர் கூறுகிறார்.

சம்பளமும் மிகக் குறைவாகவே கொடுக்கப்படு
கிறது. மா ஸே துங்கிற்கு மாதத்திற்கு 150 டாலருக்குக்
குறைவாகவே சம்பளம் கொடுக்கப்படுவதாகக் கூறப்படு
கிறது. இதற்கேற்றபடி அவருக்குக் கீழ் வேலை செய்கிற
வர்கள் சம்பளமும் குறைவாகவே இருக்கும். "மாவிடம்
ஒரே ஒரு ஸெட் உடைதானிருக்கிறது. அவருடைய மனைவி
வாரக் கூலிக்கு வேலை செய்கிறாள்" என பயபக்தியுடன் ஒரு
இந்திய அதிகாரி ஒரு சமயம் என்னிடம் கூறினார்.



இம்மாதிரி துறவறம் போன்ற வாழ்க்கையின் பலனாக
நாட்டில் ஒற்றுமை, ஒழுங்கு நிலவுவதுடன், தெருக்கள்
சுத்தமாயிருக்கின்றன. கூடியமட்டில், நியாயமான வகையில்
வரி வசூல் செய்யப்படுகிறது. ஈக்கள், கொள்ளைக்காரர்கள்
விபசாரிகள், அபின் புகை பிடிப்பவர்கள் யாவரும் ஒழிக்கப்
பட்டுவிட்டனர். இந்த நலன்களை வரவேற்று பத்திரிகைகள்
முழங்குகின்றன. விருப்பு வெறுப்பற்ற அந்நியர்களும் இதே
முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

புதிய அமைப்புகளையும், சுத்தமாக இருப்பதையும் மக்
கள் உற்சாகமாகயிருப்பதையும் பாராட்டினார் ஒரு இந்திய
அதிகாரி. "1955-இல் கண்ட பீகிங்கிற்கும், ஹிட்லர் தாக்குவ
தற்குமுன் 1939-இல் பெர்லின் நகர் இருந்ததற்கும் எவ்வாறு
வித்தியாசம் காண்கிறீர்கள்? அந்நிய நாடுகளிலிருந்து வந்த
வர்களுக்கு அக்கால ஜெர்மனி கவர்ச்சிகரமாயில்லையா?
ஜெர்மனி மாதிரி சீனா அபாய அறிவிப்பில்லை என எப்படி
நீங்கள் கூற முடியும்" என்று அவரை நான் கேட்டேன்.

நான் கூறியதில், ஓரளவு நியாயமிருக்கிறது என்பதை
அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் சீனாவின் பொருள் வள
முன்னேற்றத்தையும், மக்களிடம் தற்போதைய அரசாங்கத்
திற்குள்ள பிடிப்பையும் குறைவாக மதிப்பிட வேண்டாம்
என்று அவர் என்னை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

2. சீன ராணுவப் படைகளை புதிப்பிப்பதில் விரை
வான, பிரமிப்பூட்டும்படியான முன்னேற்றம் ஏற்பட்டிருக்
கிறது. 1954-இல் எல்லோரும் ராணுவப் பயிற்சி பெறவேண்
டும் எனும் திட்டம் அமுலுக்கு வந்தது. செஞ்சேனைப் பகுதி
களுக்கெல்லாம், முறைப்படி தயார் செய்யப்பட்ட நல்ல ஆயு
தங்கள் துரிதமாக அளிக்கப்பட்டு வருகின்றன. புதிய ராணுவ
தந்திரங்களும் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

கொரியாவில் ஐ. நா. படைகளின் தளபதியாகப் பணி
புரிகையில் நமது ராணுவப் பிரதம அதிகாரி ஜெனரல் மாக்ஸ்
வெல் டெய்லர் (General Maxwell Taylor) கொரியாவில்
ஸியோல் (Seoul) நகரில்தனது காரியாலயத்தில் என்னிடம்
தெரிவித்தார்: "கொரியாச் சண்டையின் சிறு விளைவுகளில்
ஒன்றை சீக்கிரம் மறக்க முடியாது. நவீன யுத்த முறையை
சீனர்களுக்கு நாம் கற்பித்துவிட்டோம். கொரியாவில் போர்
புரிந்த அமெரிக்கப் படையினரும், ஒரு புதிய யுத்த முறையை
அறிந்துகொண்டனர் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடு
வது நியாயமாகும்."

அவர்களுடைய பிரம்மாண்டமான தரைப்படையைத்
தவிர ஆசியாவிலேயே பெரிதான விமானப்படையையும், அவர்
கள் அமைத்துவிட்டனர். நமது விமானப் படை பிரதம அதி
காரியான ஜெனரல் நாதன் ட்வைனிங் (General Nathan

Twining) உலகத்திலே சீன விமானப் படை நான்காவது
ஸ்தானம் வகிக்கிறது என்று கூறுகிறார். 1955-வது ஆண்டுக்
கணக்குப்படிச் சீனாவிடம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 850-க்கு
மேற்பட்ட ஜெட் சண்டை விமானங்களும்—இவைகளில்
குறைந்தபட்சம் எம்ஐஜி-15 (MIG) ரகத்தைச் சேர்ந்தது
என்றும் தெரிகிறது. 100-II-28 ஜெட் சண்டை விமானங்களை
அவர்கள் தயார் செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.
சோவியத்தினர் முதலில் கண்டுபிடித்த டி.யு (Tu) ரக
அணுகுண்டு விமானப்படையில் சீன விமான ஓட்டிகள்
பயிற்சி பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. பழைய ரக
விமானங்களையும் சேர்த்தால் அவர்கள் வசம் 2,000 விமானங்
கள் இருக்கக்கூடும் என்று சொல்லுகிறார்கள். இப்போது வரு
ஷத்திற்கு 2,400 மேனி விமான ஓட்டிகள் பயிற்சி பெற்று
வருகின்றனராம். ஆகையால் கையிலுள்ள விமானங்களை
ஓட்ட, தேவைக்கு அதிகமான விமானிகள் தயாராக இருக்
கின்றனராம். ஆனால் சண்டை ஏற்பட்டுவிட்டால், இந்தப்
படை செம்மையாகப் போரிடுமா என்பது, பழுதுபோன
விமானங்களுக்குப் பதில் விமானங்கள் ரஷ்யர்கள் கொடுப்
பார்களா, இவைகளை ஓட்டுவதற்குத் தேர்ந்த விமானிகள்
கிடைப்பார்களா என்பதைப் பொறுத்திருக்கிறது.
4. நீடித்த விடா முயற்சியுடன் கம்யூனிஸ்டுகள் மகத்
தானதோர் கல்வித் திட்டத்தை அமுல் செய்வதில் முனைந்
திருக்கின்றனர். எழுத்தறிவின்மையைப் போக்கி, மக்க
ளுக்கு கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கையை உருவேற்றுவதே
இந்தக் கல்வித் திட்டத்தின் இரு நோக்கங்கள். கலாசார அபி
விருத்திக்கான திட்டங்களை அரசியல் பிரசாரம், பொருளா
தாரப் புனருத்தாரணம் இரண்டுடன் நன்கு பிணைத்து வேலை
செய்கின்றனர்.
யந்திர நுட்பங்களை அறிந்துகொள்ளுவதிலும், விஞ்ஞான
ஞானம் அடைவதிலும், மிகத் தீவிரமாகப் பயிற்சி அளிக்கப்
பட்டு வருகிறது. சீனப் பல்கலைக் கழகங்களில் படித்துவரும்
250,000 மாணவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள், இன்று
என்ஜினியரிங் தொழில் கல்வி பெற்று வருகின்றனர்.
ஆசியாவில் பல பகுதிகளில் கேட்கும்படி பல்வேறு
மொழிகளில் சீன ரேடியோ தினசரி ஒலிபரப்புகளில் சீனாவின்
சாதனைகளைப் பற்றி மிகவும் மிகைப்படுத்தியே விவரித்துக்
கூறி வருகிறது. இம்மாதிரி பிரசாரத்திற்குச் சீனாவிற்கு
வெளியே உள்ள நாடுகளில் சிறப்பான வரவேற்பு கிடைக்
கிறது. குறிப்பாக தாய்லாந்து, பர்மா, இந்தோனேஷியா மற்
றும் சீனர் வாழும் இடங்களில் இந்தப் பிரசாரம் பயனளிக்க
வேண்டும் என்பதே ஒலிபெருக்குவதன் நோக்கம். வெளிநாடு
களிலுள்ள சீனர்களில் பத்தாயிரம் பேர் இப்போது சீனாவில்



மாணவர்களாகச் சேர்ந்து, கல்வி கற்று வருவதாகக் கூறப்
படுகிறது.
நமது காலச் சீனாவைப் பற்றியோ, ரஷ்யாவைப் பற்
றியோ நாம் அறிந்து கொள்ளக் கூடிய விவரங்களிலிருந்து
ஓரே ஒரு முடிவுக்குத்தான் வரமுடியும். தேசிய சக்தியென்
றால் முரட்டு ராணுவ பலமும், பூகோள அமைப்பில் கேந்திர
மான நிலையிலிருப்பதும், தொழில் வளமும் மட்டுமல்ல,
அந்நாட்டு மக்களின் நாட்டுப் பற்றைக் காட்டும் கட்டுப்
பாட்டை வளர்க்கக் கூடிய மனோபலமும் லட்சிய, ஆர்வமும்
சேர்ந்ததுதான். மேலும் இம்மாதிரி சிறப்பு வாய்ந்த மக்களின்
போக்கும் அக்கம்பக்க நாடுகளிலுள்ளவர்களைக் கவருவதா
யிருக்க வேண்டும். இதுதான் நாட்டு வரலாற்றை ஆராய்
பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை. இத
னுடைய முக்கியத்வத்தை அமெரிக்காவின் கொள்கை வகுப்
பவர்களில் பலர் அநேகமாக மறந்துவிடுகின்றனர். ஆனால்
இந்தச் சிறப்பியல்களை கம்யூனிஸ்ட் சீன ஆட்சியினர் சாமர்த்
தியமாகவும், ஊக்கத்துடனும் பயன்படுத்தி நாட்டிலே மகத்
தான ஒற்றுமையை ஏற்படுத்தி வாழ்க்கையில் உத்வேகமும்
மிளிரும்படி உழைத்து வருகின்றனர்.
5. சீனத் தேசியச் சக்தியை புதிய அரசாங்க அமைப்பிற்
குட்பட்டு உறுதிப்படுத்தி வருகின்றனர். 1954 செப்டம்ப
ரில் தேசிய மக்கள் காங்கிரஸ் கூடிற்று. இதில் புதிய சீன
அரசியல் அமைப்பையும், நாட்டை சோஷலிஸத்திற்கு மாற்
றக் கூடியதற்கான நடவடிக்கைகளையும், அங்கே கூடியிருந்த
சோவியத் நாடு, அதன் கைப்பொம்மை நாடுகளின் பிரதி
நிதிகள் கரகோஷம் செய்து அங்கீகரித்தனர்.
சீனா ஒரு மக்களின் ஜனநாயக ராஜ்யம் என்றும், பாட்
டாளிகள்-குடியானவர்கள் கூட்டு அடிப்படையில் அந்த ராஜ்
யத்தை தொழிலாளர் வர்க்கம் நடத்துகிறது என்றும், அரசி
யல் அமைப்பு விவரிக்கிறது. ராஜ்யம் என்றால் என்ன என்று
அரசியல் அமைப்பு விவரிக்கையில் மத்யதர வகுப்பினரைப்
பற்றிய பிரஸ்தாபமே கிடையாது.
செஞ்சீன ஆட்சியில் முதல் நான்கு ஆண்டுகளில் நாடு
பல்வேறு மாகாணப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு
பகுதியும் உள்நாட்டுச் சண்டையில் போர் புரிந்த கம்யூ
னிஸ்ட் தளபதிகளால் ஆளப்பட்டது.
1954 ஜூன் மாதத்தில் அரசாங்க கவுன்சில் இந்தப்
பிராந்தியப் பிரிவினையை ரத்துச் செய்துவிட்டது. இதற்குப்
பதிலாக மாகாணங்களுக்கும் மத்திய ஆட்சிக்கும் நேரடியான
தொடர்புள்ள நிர்வாகம் அமைக்கப்பட்டது. 1954-இல்
மிகுந்த செல்வாக்குள்ள உறுதிவாய்ந்த, கட்சிப் பொதுக்
காரியதரிசி லியூ-ஷா-சி (Liu Shao Chi) அச்ச மூட்டும்

முறையில், ''மாகாண நிர்வாகிகள் தங்கள் பதவிக்கு மீறிய அகந்தை பிடித்தவர்களாகி விட்டார்கள்'' எனக் கூறினான்.

1955 மார்ச் மாதத்தில் கட்சியில் உயர் பதவி வகித்த காவ்காங் (Kao kang), ஜாவ் ஷு ஷி (Jao shu-shi), இருவரும் கட்சித் துரோகம் செய்துவிட்டதாகவும், ஆகையால் அவமானப்பட்டுப் பதவியிலிருந்து அவர்களை அகற்றிவிட்டதாகவும், பீகிங்கிலிருந்து அறிவிக்கப்பட்டது. காவ் காங் என்பவன் மஞ்சூரியா ஆலைத்தொழில் தளத்தின் அதிபனாகவும், ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் நடத்துவதில் பிரதானமானவனாகவும் இருந்தான். இவன் தற்கொலை செய்து கொண்டுவிட்டதாகக் கூறப்பட்டது. நெடுந்தொலைப் பிரயாணத்தில் மிஞ்சியவர்கள் ஷென்ஸி மாகாணத்தில் தலைமை முகாம் அமைத்திருக்கையில், இவன் 'கொரில்லாப் படைத்' தலைவனாயிருந்தான். 1953 மார்ச்சில், நான் இந்தியாவை விட்டுப் புறப்படும்போது, இவன் சீன அரசியலில் மிகுந்த செல்வாக்கு வாய்ந்தவன் எனவும், மா-வுக்குப் பிறகு தலைமைப் பதவி வகிக்கக் கூடியவன் என்றும் கூறப்பட்டது. இவன் நீக்கப்பட்டது சீனத் தலைமை வர்க்கத்தில் முதன் முறையாக தகாதவர்கள் களைந்தெறியப்பட்ட நிகழ்ச்சியாகும்.

1955 கோடைகாலத்தில் ஓரளவு சுதந்திர மனப்பான்மையுள்ள ஹூ ஃபெங் (Hu Feng) என்பவனைச் சுற்றியுள்ள அறிவாளிகள் குழாம் அரசாங்கத்தாரால் கண்டிக்கப்பட்டு, கட்டுப் பாட்டுக்குட்படுத்தப்பட்டனர். ஆட்சியினர் வறட்டு சித்தாந்த வாதிகளாகப் போய்விட்டனர் போலும்! உதாரணமாகச் சீன கம்யூனிஸ்ட் வரலாறே திருத்தி எழுதப்பட்டது. இந்தப் புதிய விவரணையில் ரஷ்யாவிலிருந்து உதவி புரிய வந்திருந்த பரோடின் பற்றிய விவரமும், அக்காலத்திய சோவியத் கொள்கைக்கு அடிப்படையில் மா மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டதைப் பற்றியும் குறிப்பிடவேயில்லை.

அரசாங்க அதிகாரத்தை அமுல் செய்வது தேசிய மக்கள் காங்கிரஸ் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஆட்சி நடைமுறை கட்சியினிடமே இருந்தது. குடியரசுத் தலைவர், மக்கள் காங்கிரசின் நிரந்தரக் கமிட்டியின் துணைத் தலைவர், அரசாங்க மந்திரி சபையின் பிரதமர், பிரதம நீதி ஸ்தலத்தின் தலைவர், புரொக்யூரேடர் ஜெனரல் (Procurator general) முதலிய உயர்தர அரசாங்கப் பதவிகள் யாவும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களே வகிக்கின்றனர்.

நான்காம் முறையாக குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மா சே துங். ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சித் தலைவராயிருந்து எல்லாவற்றையும் நிர்வகித்து வருகிறார். அவரே தேசியப் பாதுகாப்புக் கவுன்ஸிலின் தலைவராகவும், உயர்தர அரசாங்க ஆலோசனை சபை (Conference)



யின் தலைவராகவும், இருந்து வருகிறார். மா-வின் தனித் துணைத் தலைவர் பதவிக்கு சூ டே (Chu Teh) நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்போதுள்ள நிலையில், இவரே மா-வின் வாரிசு என்று தோன்றுகிறது.

* * * *

இந்தத் தலைவர்களெல்லாம் ஒரு பெரும் தடையைச் சமாளித்தாகவேண்டும். இவர்கள் ஏற்படுத்தியுள்ள மகத்தான மாறுதல்களையும், இவர்களையுமே இந்தத் தடை இறுதியில் வீழ்த்திவிடக் கூடும். மா வை அதிகார பீடத்திற்குக் கொண்டு வந்ததும், கடைசியில் அவரையே வீழ்த்தக்கூடியதுமான சீனக்குடியானவன்தான் இந்தத் தடை.

சுமார் 58 கோடிக்கு மேற்பட்ட சீன மக்களில் ஏறக்குறைய 47 கோடி பேர் கிராமவாசிகள். இன்று, நிலம் அவர்களுடைய உடைமையாயிருக்கிறது எனில், அமெரிக்காவில் **ஜெஃபர்ஸன்*** செய்த மாதிரி சீன ஆட்சியினர் சிறுசிறு நிலவுடைமையுள்ள குடியான வர்க்கத்தை சிருஷ்டிக்கத் தயாராயிருக்கின்றனர் என்பதனால் அல்ல. நிலங்களைத் துண்டு துண்டாகப் பிரிப்பதனால், கிராம நிலப்பிரபுக்கள், சுபிட்சமாயுள்ள குடியானவர்கள் சக்தியை அழித்து உடைமையற்ற பாமரக் குடியானவர்களின் ஆதரவைப் பெற்று, அதிகார பீடத்தை அடையலாம் என்பதனால்தான்.

இந்தக் காரியத்தை முடித்தவுடன் மா-ஒரு தர்ம சங்கடமான நிலைமையைச் சமாளிக்க வேண்டி வந்தது. அரசியல் பொருளாதாரக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்ட கிராம மக்கள் அடங்கிய சமூகம்-அதுவும் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழும் நாட்டில்-சீக்கிரத்திலோ, தாமதித்தோ சுதந்திரமாகத் திகழத் தொடங்கிவிடுகிறது. இம்மாதிரி சீனாவில் நிகழுமானால், எல்லா அதிகாரங்களையும், தங்களிடமே வைத்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட் மத்திய ஆட்சிக்கு முடிவு காலம் கிட்டிவிட்டது என்றுதான் அர்த்தம்.

மேலும், பெருகிவரும் ஆலைத்தொழிலாளிகளுக்கும், ராணுவத்தினருக்கும் சுதந்திரமான கிராம மக்கள் கூடுதலான தான்யம் அளிக்கவேண்டுமெனில், அவர்களுக்குக் கூடுதலான ஆரோக்கிய க்ஷேமநல வசதிகளும், தேவைப்படும் அத்தியாவசியமான சகல சாமான்களும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். சோவியத் உதவிபெற்றும், சீனாவின் உற்பத்தி

---

**ஜெஃபர்ஸன்:**—1801 லிருந்து 1808 வரை அமெரிக்க ஜனாதிபதியாயிருந்தார். பொருளாதாரக் கோணத்திலிருந்து பார்த்தால், ஜனநாயகம் என்றால் சிறுசிறு சுதந்திர நிலச்சுவான்தார்கள் உள்ள ஜனசமூகம் என அவர் கருதினார். 1778-லேயே நிலப் பிரபுத்துவச் சின்னங்களை ஒழிப்பதற்கான திட்டத்தை அவர் வகுத்தார்.

சக்தி மிக்க குறைவாகவே இருக்குமாகையால், ஐந்தாண்டுத் திட்டப்படி எதிர்பார்க்கப்படும் கனத்தொழில் அபிவிருத்தி வேகம் மட்டுப்பட்டுவிடும்.

இந்த நிலையில், தன்னை உள்நாட்டுச் சண்டையில் ஆதரித்த குடியானவர்களுக்கு மா-அளித்த முக்கியமான வாக்குறுதியை மீறவேண்டிவரும். கூடுதலான சுதந்திரம் அநுபவிப்பதற்குப் பதிலாக குடியானவர்கள் மிகவும் கடுமையான அரசியல், பொருளாதாரக் கட்டுப்பாட்டிற்கு உட்பட நேரிடும். இதைச் சமாளிப்பதற்காக, கையாளப்பட்ட பிரத்தியேக ஏற்பாடு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சபை அமைப்பதுதான். இந்தத் திட்டப்படி 1960-க்குள் சீனவெங்கும் விவசாயப் பொருள்களின் உற்பத்தி, விலை, விநியோகம் யாவற்றையும் நிர்த்தாட்சண்யமாகக் கட்டுப்படுத்துவதற்கான பரந்த ஸ்தாபனம் அமைக்கவேண்டி வரும்,

இதற்காக மா-வின் புதிய அரசாங்கத்திற்குப் பலவித அபாயங்கள் ஏற்படலாம். இம்மாதிரி அபாயத்தைச் சென்ற தலைமுறையில் ஸ்டாலின் மிகவும் கஷ்டப்பட்டு ஒருவாறுதான் சமாளிக்க முடிந்தது. இவ்விஷயம் இன்னும் சோவியத் யூனியனுக்கு மிகுந்த பலஹீனமாயிருக்கிறது. கட்டுப்பாட்டினல் இதற்கு முன்பு உணவு உற்பத்தி விழுந்துவிட்டது என்பது சரித்திரம் கண்ட உண்மை. இந்த நிலையை ரஷ்யா மாதிரி சீன சமாளிக்க முடியாது. தங்கள் நாட்டு மக்களுக்குத் தேவையான உணவுப்பொருளே சீனவினல் உற்பத்தி செய்ய முடிகிறது. ஒவ்வொரு வருஷமும் நியூயார்க் நகரத்தின் ஜனத்தொகை அளவுக்கு சீனவின் ஜனத்தொகை கூடிவருகிறது.

அதனுடைய நெல் அல்லது பிறதான்ய உற்பத்தி அளவிலிருந்து கூடுதலாக சீனவில் தான்ய உற்பத்தி செய்யமுடியும் என்று தோன்றவில்லை. ஏற்கனவே சீன ஒரு ஏக்கராவுக்கு 2,000 பவுண்ட் நெல் உற்பத்தி செய்கிறது. இந்த அளவு இந்தியாவின் உற்பத்தியை விட இரண்டு மடங்கு கூடுதலாகும். சீனவின் பெரும் பகுதியில் குளிர்காலத்தில் இருபோகம் சாகுபடி செய்யமுடியவில்லை. கூடுதலான க்ஷேமநல வசதிகளோ அல்லது அதிகப்படியான அத்தியாவசியச் சரக்குகளோ கொடுத்து, விவசாயிகளுக்கு உற்சாகமூட்டினலும், ஒரு ஏக்கருக்கு பெருகிவரும் ஜனத்தொகைக்குப் போதிய உணவு அளிக்க முடியாது. புதிதாகச் சாகுபடிக்கு வரக்கூடிய தரிசு நிலமும் இந்நாட்டில் குறைவாகவே இருக்கிறது.

எதிர்பார்க்கிறபடி, இயந்திர ஆலைத் தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமெனில், ஐந்தாண்டுத் திட்டப்படி உணவு உற்பத்தி பத்து சதம் கூடுதலாக வேண்டும். இந்த



அதிகப்படி உற்பத்தி சாத்தியமில்லையெனில் அதன் விளைவு என்ன?

போலீஸ் அடிப்படை ராஜ்யம், எவ்விதமான கிளர்ச்சியையும் அதிக சிரமமின்றி அடக்கிவிடலாம். ஆனல் சில வருஷங்களில் மழை பெய்யாமல் போகலாம். அதைச் சமாளித்தாக வேண்டும். நீண்டகால நஷ்டத்திற்குட்பட்ட சீன விவசாயியும், அளவுக்கு மீறி கஷ்டத்தைத் தாங்கிக்கொண்டிருக்க முடியாது. மேலும் ஆசியாவில், சீன தன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். சீனவின் விவசாய உற்பத்தி முறை தோல்வியுற்றாலோ அல்லது முதல்தர நெருக்கடி ஏற்பட்டாலோ இந்த நிலையைக் கொண்டு, கம்யூனிஸத்தை இந்தியா, ஜப்பான் மற்றும் பிறவிடங்களில் விளம்பரம் செய்ய முடியாது.

சீனவுக்கு விஜயம் செய்த பல ஆசியாவாசிகளுடன் நான் பேசியிருக்கிறேன். இவர்களெல்லாம் சீன கிராமாந்தரப் பகுதிகளை மேலோட்டமாகத்தான் பார்த்து வந்திருக்கின்றனர் என்பது ரஸமான விஷயம். தாங்கள் பார்த்தமட்டில் எல்லாம் திருப்தியளிப்பதாயிருந்தது என அவர்கள் கூறினர். ஆனல் தங்களுக்குக் காட்டுவதற்காக மாதிரி நிலையங்களை அமைப்பது சுலபம் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர். சீனக்கிராமப் பகுதிகளில் எவ்வளவுதூரம் அவர் பார்த்திருக்கிறார் எனக் கம்யூனிஸ்டில்லாத ஆசிய நாட்டின் தூதராகச் சீனவில் உள்ள ஒருவரை ஒரு சமயம் நான் கேட்டேன். "மிகச் சொற்பம்தான்" என அவர் ஒப்புக்கொண்டார். "பிராந்திய அல்லது தேசிய விவசாயிகள் குழுக்கள் நிறுவப்பட்டு வருகின்றனவா?" என்று கேட்டேன். "இல்லை" என அவர் பதிலளித்தார்.

புரட்சிச் சரித்திரங்களை நன்கு கற்றறிந்த இந்தியாவின் ஜனநாயக அரசாங்கம், குடியானவனின் நலனைப் பாதுகாப்பதற்கே முதல் இடம் அளிக்கிறது. ஆலைத் தொழில் அபிவிருத்திக்கு முக்கியத்வமளித்திருக்கிறது. ஆனல் சுதந்திரம் வாய்ந்த, நிலையான கிராம சமுதாயம் இருந்தால்தான் ஸ்திரத் தன்மையுள்ள, சுதந்திரம் வாய்ந்த பொது சமூகம் நிலைபெற முடியும் என்பதை அவர்கள் நன்குணர்ந்து இருக்கின்றனர். ஆகையால் விவசாய நலனுக்கு அவர்கள் முதலிடமளிக்கின்றனர்.

எவ்வாருயினும் கம்யூனிஸ்டுகளைச் சீனவில் அதிகாரத்திற்குக் கொண்டுவந்தது சீன விவசாயிகளே. அவர்களுக்குத் திருப்தி ஏற்படாதவரையில், சீனவின் எதிர்காலச் சிறப்பிற்கு விவசாயிகள் முட்டுக்கட்டையாகவே இருப்பர். இறுதியில் விவசாயிகள் செய்யும் முடிவே சீனவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்.

நம்மில் ஜனநாயகத்தை ஆதரிப்பவர்களும், கம்யூனிஸத்தின் சங்கடம் நிறைந்த விளைவுகளை எண்ணி அஞ்சுபவர்களும் விவசாயிகளின் அதிருப்தியின் பயனாக சீனக் கம்யூனிஸ்ட் ஆட்சியினரின் கொள்கைகளில் சற்று நிதானம் காணக் கூடும் என எதிர்பார்ப்பது இயல்புதான். ஆனால் நிலைமை சிக்கல் வாய்ந்ததாயிருக்கிறது. பல தொல்லைகளுக்குட் பட்ட, எது நேரினும் நேரட்டும் என்கிற மனப்பான்மையுள்ளசீன ஆட்சியினர் நிதானத்தை மேற்கொள்வார்களா, அல்லது தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதில் முனைவார்களா?

இன்று தரிசாகக் கிடக்கும் வளம் மிக்க நிலங்கள் நிறைந்த பர்மா, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், மலாயா, சுமத்ரா முதலிய நாடுகளில் புகுந்தால் என்ன என்கிற சபலம் அவர்களுக்கு ஏற்படக்கூடும். இந்தச் சபலத்தை ஒட்டிச் செயல்புரிந்தால் உலகப் போர் கட்டாயம் நிகழும். கலப்பை கண்டறியாத ஏராளமான நிலங்கள் உள்ள சைபீரியாவை ஆளும் ரஷ்யாவின் மீது அரசியல் நிர்ப்பந்தம் செலுத்த சீனா முன்வருமா? இதன் மூலம் மாஸ்கோவில் கொள்கை வகுப்பவர்கள் கவலைப்படக் காரணம் ஏற்படும்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். மா—வை எதிர்நோக்கியுள்ள இந்த தர்ம சங்கடமான நிலை உலக விவகாரங்களில் இனி சீனாவுக்கு ஏதாவது பங்கு உண்டா என்கிற முக்கியமான பிரச்னையைப் பாதிப்பதுடன், இனி ஆசியாவில் கம்யூனிஸம் செலாவணியாகுமா என்கிற சந்தேகத்தையும் கிளப்பக்கூடும். கிராமங்களில் கட்டுப்பாடுகளை நுழைக்க மா-விரும்புவாரானால் குடியானவர்களின் கலவரங்களை அவர் சமாளிக்க வேண்டி வரும். இம்மாதிரிக் கலவரங்கள் பெரிய உள்நாட்டுப் போராகவும் மூளலாம். அந்த நிலை ஏற்பட்டால், ஏற்கனவே நெருக்கடியாயுள்ள உணவு நிலை மேலும் சங்கடம் நிறைந்ததாக மாறக்கூடும். ஆனால் கட்டுப்பாட்டை அமுல் செய்வதில் நிதானம் காட்டினால் திட்டமிட்ட பொருளாதாரம் எனும் பெரிய சூதாட்டத்தில் தோல்வியே ஏற்படலாம்.

கம்யூனிஸ்ட் தலைமை வர்க்கத்தினுள் பல்வேறு சர்ச்சைகள், தந்திரங்கள், நிலைமைக்கேற்றபடி மாறுதல்கள் செய்யாமல், இந்தப் பிரச்னைக்கு முடிவுகாண இயலாது. இதைப்பற்றி 1955-இல் பீகிங்கிலுள்ள 'மார்க்ஸ்-லெனின் இன்ஸ்டிட்யூட்'டில் பேராசிரியரான ஹு ஷெங்க் (Hu sheng) ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரை மிகவும் பிரபலப்படுத்தப்பட்டது: ''சீனா இன்று மாறுதலடைந்து வருகிறது. சரணாகதியடையக் கூடியவர்களும், துரோகிகளும் கட்சியில் இருந்தாலும், இப்போது படிப்படியாகத் தொழிலை யந்திரமயமாக்குவதில் துரிதமாக ஈடுபட்டு, முன்னே செல்ல வேண்டிய காலம் இது.



படிப்படியாக விவசாயத்தைச் சோஷலிஸ முறையில் மாற்ற
வேண்டியகாலம் இது. இதை யார் மறுக்கின்றனரோ
அவர்கள் கம்யூனிஸ்டுகளல்ல.'' இவ்வாறு அவர் குறிப்பாக
ஆராய்ந்து கூறினார். ஒரு மார்க்ஸ்யவாதி தன் கொள்கைகளைப்
பதம் பார்க்கப் பாட்டாளி மக்களைத் தேடிச் செல்வதற்கு
இவரை உதாரணமாகக் கூறலாம்.

இதற்கு மாறுபட்ட கருத்துள்ளவர்களுமிருக்கலாம். அப்
படிப்பட்டவர்களில் சில ராணுவ தளபதிகளுமிருக்கலாம். இப்
படி வறட்டுலட்சியவாதம்செய்பவர்களால், பெரிதும்விவசாயி
கள் அடங்கிய ராணுவத்தின் உற்சாகமும், ஒழுங்கும் கெட்டு
விடும் என இவர்கள் கவலைப்படுகிறார்கள். காலங்கடந்து
போன மார்க்ஸிய வாதங்கள் செய்வதனால், புரட்சியின்
நீடிப்பு பாதிக்கப்படலாம் என இவர்கள் அஞ்சுகின்றனர்.

ஆனால் இது ஹேஷ்யமேயாகும். ஒரு விஷயத்தைமட்டும்
திட்டமாகக் கூறலாம். இன்று சீனாவை, ஒன்றுபட்ட, தன்
னம்பிக்கையுள்ள,. பேராவலுள்ள ஒரு கோஷ்டியினரே ஆளு
கின்றனர். இன்று, பின்தங்கிய நாடுகளிலுள்ள மக்கள்
யாரும் கோரும் அத்தியாவசியமான பொருளாதார ஏற்
பாட்டை, என்ன ஆள் சேதமானாலும் சரி கொடுங்கோன்
மையையும், பலாத்காரத்தையும் உபயோகித்து பெறுவ
தற்கு இவர்கள் தயாராயிருக்கின்றனர்.

மா—வும், அவரை ஆதரிப்பவர்களும், குறுகிய கால திட்
டங்களைப் பற்றி நினைக்கவில்லை. ''பதினாயிரம் ஆண்டுகளுக்கு,
பதினாயிரம் ஆண்டுகளுக்கு,'' என்ற மக்கள் கோஷம் மண்ட
பமே கிடுகிடுக்கும்படி ஒலிக்க 1954-ஆம் ஆண்டு மக்கள் காங்
கிரஸ் தீர்மானித்தது. அத்தனை நீண்ட காலத்திற்குத் தாங்
கக்கூடிய ஏற்பாட்டையே அவர்கள் விரும்புகின்றனர்.

## பகுதி—4

# காந்தி அருளிய திட்டம்

ரஷ்யாவை நான் நோக்குகையில் - அவர்க ளுடைய வாழ்க்கை என் மனத்தைக் கவரவில்லை. கிறிஸ்தவ வேதமாகிய பைபிள் கூறுவதுபோல், ''நமது ஆன்மாவை இழந்துவிட்டு, உலகத்தை யெல்லாம் ஜெயித்தாலும் என்ன பலன்?'' ஒரு யந்திரத்தின் ஆணிபோல் வாழ்வது மனித வாழ் வின் கௌரவத்திற்கு ஏற்றதல்ல. ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தின் பூரண பக்குவம் பெற்ற உறுப்பினனாக விளங்க வேண்டும் என விரும்பு கிறேன்.

—மோஹனதாஸ் கே. காந்தி

*அத்தியாயம்—15.*

# இந்தியா-பூர்வ பீடிகை

''**போ**ராட்டத்தின் முடிவு ரஷ்யா, இந்தியா, சீனு ஆகிய மூன்று நாடுகளிலும உலக ஜனத்தொகையில் மிகப் பெரும்பாலோர் வசிக்கின்றனர் என்பதையே பொறுத்தி ருக்கிறது. இந்தப் பெரும்பான்மை பலமே இந்நாடுகளைச் சமீபகாலத்தில் எதிர்பார்க்க முடியாத வேகத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும்படி இழுத்திருக்கிறது. அதன் முடிவு என்னவாயிருக்கும் என்பதுபற்றிச் சந்தேகமே இருக்கமுடியாது. இந்த முறையில் பார்த்தால் சோஷலிஸத் தின் இறுதிவெற்றி நிச்சயம் என்பது ஆட்சேபணைக்கிட மின்றி உறுதிபெற்றுவிட்டது.'' இவ்வாறு லெனின் 1923, மார்ச் மாதத்தில் கூறினுர்.

இதற்கு இருபத்தியாறு ஆண்டுகளுக்குப் பின், ஒன்று பட்ட கம்யூனிஸ்ட் முன்னணியில் ரஷ்யாவும், சீனுவும் இணைக் கப்பட்டுவிட்டன. ஆனல் இந்தியா தனது அண்டை நாடுக ளான சீனுவிடமும், ரஷ்யாவிடமும் நேசப்பான்மையை வெளியிட்டாலும், பொருள் துறையில் அந்நாடுகள் அடைந்த வெற்றிக்காக அவைகளை ஓரளவு போற்றினுலும், தன்னைப் பொறுத்த மட்டில் தனக்குகந்த வழியில் செல்ல விரும்புவ தாக வற்புறுத்தி வந்திருக்கிறது. மார்க்ஸிஸ்ட், லெனினிஸ்ட் கோட்பாடுகளுக்கு சவால்விடும் முறையில், அந்நாடு புது முறைப் புரட்சி நடத்தியதுப், மாறுதல், முன்னேற்றம், அபி விருத்தி முதலியவற்றை அடையப் பலாத்காரம் அவசியமில்லை என பிறநாடுகளுக்கு எடுத்துக்காட்டி வருவதும் குறிப்பிடத் தக்க அம்சங்கள்.

இம்மாதிரி புரட்சி எப்படி சாத்யமாயிற்று? அது எல்லா நாடுகளையும்விட இந்தியாவில் நிகழக் காரணமென்ன? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்துகொள்ள வேண்டு மாஞல், நான் 1951-இல் அந்நாட்டுக்குச் சென்றபோது, ஜனுதிபதி ராஜேந்திர பிரசாத்தும், பிற பலரும் என்னிடம்

கூறிய மாதிரி, இந்தியாவின் வியப்புறத்தக்க பழங்கால
சரித்திரத்தை ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டும். அந்தப்
பழம்பெருமையை இன்றும் பார்க்கலாம். அந்தப் பெரு
மையை மனத்தில்கொண்டே மக்கள் இன்றும் வாழ்கின்றனர்.

கிழக்கத்தி நாடுகளும், மேற்கத்தி நாடுகளும் பல நூற்
ருண்டுகளாக தொடர்பு கொண்டுதான் வாழ்ந்து வந்திருக்
கின்றன. இவ்விஷயத்தில் * **கிப்ளிங்** என்பவர் மாறுபட்ட
கருத்தை வெளியிட்டிருக்கிருர். தங்கள் பள்ளிப்படிப்பில்
ஏதாவது ஒரு கட்டத்தில் பெரும்பாலான அமெரிக்கர்கள்,
மகா அலெக்சாண்டர் எனும் பிரபல ஐரோப்பியன் தனது
சாம்ராஜ்யத்தை எகிப்திலுள்ள அலெக்சாண்டிரியாவிலிருந்து
டில்லிக்கு வடகிழக்கிலுள்ள அமிருதசரஸ் வரை விஸ்தரித்து,
கி. மு. 325-இல் இந்தியா வந்தடைந்தார் என்றும், மேலும்
வெற்றிகொள்ள வேறு நாடுகள் இல்லையே என்று அவர் அழு
தார் என்றும் படித்திருப்பார்கள்.

நான் இந்தியா சென்ற சிறிது காலத்திற்குள் ஒரு
கவிதை என் காதில் விழுந்தது. இதை நான் மீண்டும் பன்
முறை கேட்கும்படி நேர்ந்தது. இந்தக் கவிதை இந்தியாவி
லுள்ள பள்ளி மாணவர்களில் பெரும்பாலோருக்குத் தெரி
யும். இந்தக் கவிதை அலெக்சாண்டர் படையெடுப்பு எழுப்
பியதை விட மாறுபட்ட, ஆத்திரமூட்டக்கூடிய மனோபாவத்
தைக் கிளப்பும்.

"அலட்சியப் பொறுமையில் ஆழ்ந்தது கிழக்கு
அதிர்வெடி முன்தலை அடியுறத் தாழ்ந்தது
படிநடுங் கிடுமிடிப் படையது செலமறு
படிபழஞ் சிந்தனைப் பாழிலே மூழ்குமே."

பின்னர் வரப்போகும் அஹிம்சைக்கு அறிகுறியா இந்
தப் பான்மை? இருக்கலாம். இந்தியாவின் பழங்காலப்
போர்ப் பழக்கத்தை மூடிமெழுகும் முயற்சியா இது? அப்ப
டியு மிருக்கக்கூடும். ஆனால் இந்திய மனப்பான்மையைப் பற்
றிப் பொதுவாகக் கொள்ளப்பட்ட ஒரு அபிப்பிராயத்தின்
சூசகமாகும் இந்தக் கவிதையில் அடங்கியுள்ள விமர்சனம்.

அலெக்சாண்டர் இந்தியா மீது படையெடுத்து வந்த
தற்கு வெகு காலத்திற்கு முன்பே, ஆதிகாலத்தில் ஆரியர்கள்
இந்நாட்டில் புகுந்ததன் விளைவாக இந்தியர்களுக்கும் ஐரோப்
பிய மக்களுக்கும் ஒருவித இன ஒற்றுமை நிலவிவந்திருக்
கிறது. இன்று இந்தியாவுக்கு வரும் மேற்கத்தி நாட்டினர்

* **கிப்ளிங்:**—(Kipling) இவர் இந்தியாவில் உத்தியோகம் பார்த்த ஆங்கி
லேயர்.—கவிஞர், சிறந்த நூலாசிரியர். இவர் எழுதிய கவிதை ஒன்றில் மேற்
கத்தியார், மேற்கத்தியார்தான், கிழக்கத்தியார் கிழக்கத்தியார்தான், இவர்
கள் ஒன்றுபட்டு இணைவது முடியாது எனப் பொருள்பட எழுதியுள்ளார்.



இந்தியர்களிடம் சில ***காகேசிய சாயலைக்** கண்டு ஆச்சரிய
மடைகிருர்கள். சரித்திரபூர்வமான அம்சம் என இதை ஆவ
லுடன் ஆராயலாமே ஒழிய இந்த ஒருமைப்பாடு இன்றைய
நிலையில் முக்கியமல்ல. ஆனால் மற்றெல்லா ஆசியர்களைவிட
இந்தியர்களும், பாகிஸ்தானிகளும் உடல் தோற்றத்தில்
நம்மை ஒத்திருக்கிருர்கள் என்பதுதான் குறிப்பிடத்தக்க
விஷயம்.

அலெக்ஸாண்டர் படையெடுப்புக்கும், பிரிட்டிஷார் பிர
வேசித்ததற்கும் இடையேயுள்ள 2000 ஆண்டு இந்திய சரித்
திரம் மேற்கத்தி சரித்திரப் புத்தகங்களில் இடம் பெறுவ
தில்லை. எனினும் அநேக இந்தியர்கள், இன்று சரித்திரத்தின்
தொடக்கக் காலத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர்.
ஏனெனில் இந்தியரின் மதம், தத்துவம், அறநெறி சம்பந்த
மான கருத்துக்கள் கி. பி. மூன்ருவது நூற்ருண்டுக்கு முன்
வகுக்கப்பட்டு அபிவிருத்தியடைந்து வந்திருக்கின்றன என்
பதை அவர்கள் அறிவர்.

உதாரணமாக அலெக்ஸாண்டர் படையெடுப்புக்கு ஒரு
நூற்ருண்டுக்குப் பின், அசோக மன்னன் ராஜ்யம் ஆப்கா
னிஸ்தானத்திலிருந்து மைசூர் வரையில் பரந்திருந்தது.
இதில் மத்திய இந்தியாவிலுள்ள தக்காணமும், தென்னிந்தி
யாவில் பெரும் பகுதியும் அடங்கியிருந்தன. † "**கான்ஸ்டன்
டைன்,** ‡ **சார்லமேன்** போன்ற (Constantine, Charlemagne)
மன்னர்களின் பெயர்களைவிட அசோக மன்னனுடைய
பெயரை அதிகம்பேர் போற்றி பூஷிக்கின்றனர்" என
எச். ஜி. வெல்ஸ் எழுதியிருக்கிருர்.

பரந்த ராஜ்யத்தின் மன்னனுக இருந்தார் என்பதற்
காக மட்டும் அசோகனை மக்கள் மதிக்கவில்லை. மனித குலத்
தினர் என்றே அவரை அதிகமாகப் போற்றி பூஜிக்கிருர்கள்.
ஹிந்து சமூகத்தின் புராதனமான நான்கு வருணங்களில்,
பிராம்மணர்களுக்கு அடுத்தபடியாக, போர்புரியும் க்ஷத்திரி
யர்களுக்கு இடமளித்ததிலிருந்து பழங்கால இந்திய சமூகத்
தில் போர்த் தொழிலுக்கு எவ்வளவு மதிப்பளிக்கப்பட்டு

* **காகஸஸ் மலைப்** பகுதியில் வசிப்பவர்கள் காகேசியர்கள். இவர்கள்
வெள்ளையர்கள் போன்று சிவப்பு நிறமாயும், நீண்ட அல்லது உருண்டை முகம்
வாய்ந்தவர்களாயு மிருப்பவர்கள். இதைத்தான் காகேசிய சாயை என்று
கூறுகின்றனர்.

† **கான்ஸ்டன்டைன்:**— 288-337 வரை ஆண்ட ரோமாபுரி மன்னன்.
பைசான்ஷியம் வரை இவன் வெற்றிகொண்டதனுல், அதன் தலைநகருக்கு
கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பெயர் ஏற்பட்டது.

‡ **சார்லமேன்:**—742 லிருந்து 814 வரை இன்று ஃபிரான்ஸ் என விளங்கும்
பகுதியின் அரசன். போப்பாண்டவர் ஆதிக்கத்திற்கிருந்த எதிர்ப்பை அடக்
கியவன். ஐரோப்பாவில் பல பகுதிகளை வெற்றிகொண்ட அரசன்.

வந்தது என்பதற்கு அசோகனைப் போற்றுதல் ஒரு அத்தாட்சி
யாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், கி. மு. ஆறாவது நூற்றாண்டில்
சீர்திருத்த இயக்கமாகப் புத்தமதம் தோன்றிற்று. இந்து
மதம் க்ஷீணித்து வருவதையும், ஜாதிப் பாகுபாட்டையும்
புத்த மதம் தாக்கியது. ரத்தம் சிந்துவதை இம்மதம் கடுமை
யாக எதிர்த்ததனால் அதனுடைய செல்வாக்கு இந்தியாவெங்
கும் பரவியது. ''புத்த'' மதம் தோன்றியது ''சுத்தமான
தென்றல் வீசியது போலிருந்தது'' என நேரு வர்ணிக்கிறார்.
புத்தருக்கு 2500 ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய மோகன்
தாஸ் காந்தியின் தோரணையில் புத்தர் அருளினார். ''வெறுப்பை
வெறுப்பின் மூலம் ஒடுக்கமுடியாது, அன்பு மூலம் கோபத்தை
அடக்குவோம். சத்தியத்தின் மூலம் பொய்யை மாய்ப்
போம். நல்லதைக்கொண்டு தீமையை ஒழிப்போம். தாரா
ளப்போக்கின் மூலம் பேராசையை வெல்வோம். இதுவே நிலை
யான நியதி.''

புத்த மதம் தன்னை ஆட்கொண்டதனால், அசோகர்
யுத்த முறையைக் கைவிட்டார். அவரது அரண்மனையில்
சைவ உணவே மேற்கொள்ளப்பட்டது. புத்த மதத்திலிருந்த
பேரார்வத்தினால், அவர் துறவறம் பூண்டார். புத்த மதப்
பிரசாரத்தில் மட்டற்ற பற்றிருந்ததனால் அவர் தமது
சொந்தச் செலவில் 64 ஆயிரம் புத்த பிக்ஷுக்களை சம்ரட்சித்
தார். வாள்பலம் கொண்டு பிறரை புத்த மதத்தில் சேர்க்
கக்கூடாதெனவும், ''அமைதியாக அயல்நாடுகள் சென்று
மேலான விஷயங்களைப் போதிக்குமாறு'' அவர் கட்டளை
யிட்டார்.

இதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே தமது சிஷ்
யர்கள் என்ன போதனைகள் செய்ய வேண்டுமென்பது பற்றி
புத்தர் பிரானே உபதேசித்திருக்கிறார். ஏழைகளும் எளிய
வர்களும், பணக்காரர்களும், மேலோர்களும் எல்லோரும்
ஒன்று என்றும், ஆறுகளெல்லாம் கடலில் போய்ச் சேருவது
போல், இந்த மதத்தில் யாரும் ஒன்றே என்றும், எல்லா
நாடுகளுக்கும் சென்று பரப்புங்கள் என்றும் கூறினார்.

இந்தியாவின் பிரதம மந்திரியாவதற்கு வெகு காலத்
திற்கு முன்பே, ''மக்கள் எம்மாதிரித் தலைவர்களைப் பின்பற்று
கின்றனர் என்பதைக்கொண்டுதான் ஒரு நாட்டின் கலாசார
அடிப்படையைப் புரிந்து கொள்ளலாம்'' என்று நேரு எழுதி
னார். காந்தி தோன்றுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு
முன்பே லட்சக்கணக்கான இந்தியர்கள் புத்தரையும்,
அசோகரையும் பின்பற்றினர்.

அசோகர் காலத்திற்குப் பின், கி. பி. 320-480-இல்
சிறப்புமிக்க குப்த சாம்ராஜ்யம் ஏற்படும் வரையில், பல



நூற்றாண்டுகளுக்கு அந்நியப் படையெடுப்புகளும், முரண்பாடு
களும், பிளவுகளும் இந்தியாவில் ஏற்பட்டன. பிந்திய
நூற்றாண்டுகளின் சரித்திரத்தை மேலோட்டமாகப் பார்த்
தால் இந்தியாவின் கலாசாரமும், செல்வாக்கும் தென்கிழக்கு
ஆசியாவெங்கும் பரவியது என்பதை அறிந்து கொள்ளலாம்.
இறுதியில், ''மகா பாரதம்'' கிழக்கிலும், வடக்கிலும் இப்
போது, கம்போடியா, மலாயா, பர்மா, லேஆஸ் (Laos),
இந்தோனிஷ்யா, தாய்லாந்து என விளங்கும் நாடுகள்
வரையிலும் விரிவடைந்து, சீன ஆதிக்கம் பெருகாமல்,
தடுத்தது. இந்த சாம்ராஜ்யத்தின் செல்வாக்கு பிலிப்
பைன்ஸ் வரையிலும் எட்டியது.

சீனாவுக்கும், இந்தியாவுக்கும் பழங்காலத்தில் தொடர்பு,
குறைந்த அளவிலேயே இருந்தது. ஆனால் இரு நாட்டு பொரு
ளாதார, கலாசார நலன்களுக்குள் தென்கிழக்கு ஆசியப்
பகுதிகளில் போட்டி ஏற்பட்டபொழுது தொடர்பு சற்று
நெருக்கமாயிருந்தது. ஆதிகாலத்தில் இரு நாடுகளுக்குள்ளும்
நெருங்கிய கலாசார உறவு இருந்ததாக டில்லியிலும், பீகிங்
கிலும் இப்போது பிரமாதமாகப் பேசினாலும், இந்தத்
தொடர்பு பெரிதும் இந்தியாவிலிருந்து புத்த பிக்ஷுக்கள் சீனா
வுக்குச் செல்வதும், சீனாவிலிருந்து அதைவிடக் குறைவான
புத்த சன்யாசிகள் இந்தியாவுக்குச் செல்வதுடன் முற்றுப்
பெற்றது. கொஞ்சங் கொஞ்சமாக ஆயிரம் ஆண்டு காலம்
வியாபாரத் தொடர்பு பெருகிற்று. ஆனால் இவைகளைக்
கொண்டு இரு நாடுகளுக்குள் நீண்ட காலமாக நெருங்கிய
தொடர்பு இருந்தது என்று கூறிவிடுவதற்கில்லை.

பதின்மூன்றாவது நூற்றாண்டில் ஹிந்துப் பேரரசர்கள்
ஆதிக்கம், அலையலையாக வந்த முஸ்லிம் படையெடுப்பு
வெற்றிகளால் தகர்க்கப்பட்டுவிட்டது. ஹிந்து சாம்ராஜ்
யத்தின் சிறப்புச் சின்னங்கள் பெரிதும் முஸ்லிம் ஆக்ரமிப்பா
ளர்களால் அழிக்கப்பட்டுவிட்டன. உதாரணமாக 30 ஆயிரம்
மாணவர்களுக்குக் கல்வி யளித்து வந்த நளந்தா (Nalanda)
பல்கலைக்கழகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. நீண்ட கால
முஸ்லிம் ஆதிக்கம் 1556-1605 காலத்தில் ஆண்ட அக்பர்
காலத்தில் மலர்ச்சி அடைந்தது.

அக்பர் மரணத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு முன் பிரிட்டனை
ஆண்ட எலிசபெத் ராணி கிழக்கிந்திய கம்பெனிக்கு இந்தியா
வுடன் வர்த்தகம் செய்யும் உரிமைச்சாஸனம் அளித்தாள்.
அப்புறம் உயர்தர ராணுவ தந்திரத்தின் உதவியினால் பிரிட்
டிஷார் இந்நாட்டில் புகுந்தனர். இதற்குச் சில காலத்திற்
குப் பின் இந்தியாவில் இடம் பெறுவதற்காக பிரிட்டிஷ்,
போர்த்துகீசியர், ஃபிரெஞ்சு, டச்சு வர்த்தகக் கும்பல்களுக்

குள் சண்டை ஏற்பட்டது. அடுத்த நூற்றுண்டு மத்திக்குள்
பிரிட்டனின் ஆதிக்க ஏற்றம் உறுதியடைந்தது.

''நாங்கள், எங்கள் சுதந்திரத்தை இழந்த அதே சமயத்
யில் நீங்கள் (அமெரிக்கர்), சுதந்திரம் பெற்றீர்கள்'' என
வருத்தத்துடன் இந்தியர்கள் என்னிடம் கூறினுர்கள். அமெ
ரிக்காவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஒழிந்ததற்கறிகுறியாக
ஜனுதிபதி வாஷிங்டனிடம் தன் வாளைத் துறந்த அதே கார்ன்
வாலிஸ் பிரபு, பின்னர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலானுன்
என்பது விசித்திரமான ஒருமைப்பாடு என்றுதான் கூற
வேண்டும்.

இவன், இவனுக்குப் பின் வந்தவர்களின் சாதுர்ய
மிக்கத் தலைமையினுல், காலனி ஆட்சியின் சிறப்பான உதா
ரணமாக இந்தியா தோன்றிற்று. இங்கே நடந்த காலனி
ஆட்சி, பின்னர் லெனின் வகுத்த பல சித்தாந்தங்களுக்கு
ஆதாரமாக உதவிற்று. ஆலைத்தொழில் வளம் பெற்ற
இங்கிலாந்தின் பிரம்மாண்டமான, விவசாயச் சிறப்புப்பெற்ற
உடைமையாகவும், ஆங்கில ஆலைகளுக்குத் தேவையான தளப்
பொருள்களை உற்பத்தி செய்யும் நாடாகவும், பிரிட்டிஷ்
ஆலைகளில் தயார் செய்யப்பட்ட சரக்குகளுக்கு லாபகரமான
விற்பனைச் சந்தையாகவும் இந்தியா விளங்கிற்று.

பிரிட்டனுல் இந்நாட்டிற்குச் செய்யப்பட்ட நன்மை
களை மறந்துவிடுவது மனித இயல்புதான். பொருளாதாரத்
துறையில் இரண்டு நூற்றுண்டு பிரிட்டனுக்குட்பட்டுக் கிடந்
தோமே எனும் மன உளைச்சலும், ஆங்கில நாட்டு ஆலைத்
தொழில் புரட்சியினுல் ஏற்பட்ட சங்கடங்கள் இந்தியாவுக்கு
ஏற்றுமதி செய்யப்பட்டதும், தவிர்க்கமுடியாத கலாசாரப்
போராட்டமும், வெள்ளையரின் இனவேற்றுமைக் கொடுமை
யும்தான் பிரிட்டனின் இரு நூற்றுண்டு காலனி ஆட்சி பற்றி
அவர்கள் மனத்தில் நிலவும் எண்ணங்கள். சீனுவுக்குப் புறம்
பாக, கம்யூனிஸத்தைப் பற்றி நேரடி அநுபவமில்லாத பிற
ஆசியர்கள் காலனி ஆட்சி என்றுல் எரிச்சல் அடைகிருர்கள்
என்பதற்கு மேற்கூறிய எண்ணங்கள் போதிய விளக்கம்
அளிக்கலாம்.

சமீபத்தில் அஹிம்சை முறை மூலம் தங்களது சுதந்
திரத்தை இந்தியர்கள் அடைந்தனர் என்பதை அறிந்து
கொள்கையில், பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கான அவர்க
ளுடைய முதல் முயற்சி பலாத்கார முறையில் அமைந்திருந்
தது என்பதைத் தெரிந்துகொள்ளுவது அவசியம். 1857-ஆம்
ஆண்டில், சீனுவில் டெய்பிங் கலகம் நடந்ததற்கு ஏழு ஆண்
டுகளுக்குப் பிறகு, பிரிட்டனின் கூலிப்படைகளான வங்காள
சிப்பாய்களிடையே பெரிய இந்தியக் கலகம் நிகழ்ந்தது.



900 ஐரோப்பிய படையினர், இரண்டாயிரம் இந்திய
சிப்பாய்கள் உதவி கொண்டு கிளைவ் 1757-இல் பிளாசியில்
பெரும் வெற்றி அடைந்தான். இதிலிருந்து ஏழு ஆண்டு
களுக்குள் பல சிப்பாய்க் கலகங்கள் நடந்தன. பின்னர்
1824-இல் 47-வது வங்காளக் காலாட் படை பர்மாவிற்குள்
படையெடுக்க மறுத்ததனுல், அந்தப் படையினர் யாவரும்
பீரங்கியால் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஆனுல் அடக்கு
முறை, எதிர்ப்புக் கிளர்ச்சியை வளர்க்கவே செய்தது.
1844-இல் ஏழு இந்தியப் படைகள் கலகம் செய்ததனுல்,
மிகக் கடுமையாக ஒடுக்கப்பட்டன.

1850-வாக்கில் இந்திய தேசிய வாதிகள் தங்கள் சக்
தியை உணரத்தொடங்கினர். 36 ஆயிரம் பிரிட்டிஷ்
துருப்புகளுக் கெதிராக பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி
களின் கீழ் 257 ஆயிரம் சிப்பாய்கள் இருந்தனர். கிரிமியா
சண்டையின் போக்கை அக்கறையுடன் கவனித்துக் கொண்
டிருந்த இந்தியச் சிற்றரசர்கள், பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க
பிரிட்டனின் புராதனப் பகைமை நாடான ரஷ்யா, தங்க
ளுக்கு உதவி செய்யும் என்று எதிர்பார்த்தனர்.

புதிய கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு, 1856-இல் இந்தி
யாவுக்கு கப்பல் மூலமாக வரும்போது, சற்று கவலையுடன்
தான் இருந்தார். ''இந்திய வானம் நிர்மலமாகத் தோன்
றினுலும், மனிதன் கையளவுக்கு ஒரு மேகத் திட்டுத் தோன்
றினுலும், அது படிப்படியாகப் பெரிதாகி இடியிடித்து, கடை
சியில் மழையடித்து நம்மை மூழ்கடித்துவிடலாம்'' எனக்
கூறினுர்.

இதற்கு ஒரு ஆண்டுக்குப் பிறகு, மேகம் வங்காளத்தில்
மழையாகப் பொழிந்தது. தங்களுடைய தோட்டாக்களில்
பசு, பன்றிக் கொழுப்புத் தடவப்பட்டிருப்பதைக் கண்ட
றிந்து சிப்பாய்கள் தங்கள் மதக் கோட்பாடுகள் பாழ்பட்
டதை உணர்ந்தனர். இதன் மூலம், இந்தியர்களைக் கிறிஸ்
தவர்களாக்க பிரிட்டிஷார் சூழ்ச்சி செய்கின்றனர் என்று
நினைத்த பத்தொன்பதாவது வங்காளக் காலாட்படையினர்
ராணுவப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, இந்தத் தோட்
டாக்களை உபயோகிக்க மறுத்தனர்.

இந்தச் சுடரிலிருந்து வங்காளமெங்கும் விரைவில் கல
கத் தீ பரவியது. வடக்கு, மத்ய இந்தியாவிலிருந்து பிற
படைகள், டில்லி நோக்கி வந்து அங்கே மாஜி மொகலாய
அரசனை இந்தியாவின் புதிய பேரரசனுக முடிசூட்டினர். இந்
தக் கலகத்தை அடக்குவதற்கு அனுப்பப்பட்ட இந்தியப்படை
கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டது. அதிகமான எதிரி
கள் பிரிட்டிஷ் படையினரைச் சூழ்ந்து விடுவரோ என்று கவ
லைக்கிடமாயிருந்தது. ஆனுல் வட, மத்திய இந்தியாவில் சில

விடங்களில்தான் விவசாயிகளும், சில்லறை வியாபாரிகளும்,
கலகக்காரர்களுடன் ஒன்று சேர்ந்தனர். சீக்கியர்களும்,
நேபாளத்திலிருந்து உறுதி வாய்ந்த கூர்கூகர்களும் பிரிட்டி
ஷாரின் உதவிக்கு வந்ததும் நிலைமை அவர்களுக்கு சௌகரிய
மாக மாறிற்று.

இந்தச் சண்டையை அநேக இந்தியர்கள் முதல் சுதந்திர
யுத்தம் எனக் கூறுகின்றனர். தனது சிறிய ராஜ்யத்தை
புரட்சியில் ஈடுபடுத்திப் போர்புரிந்து மரணம் எய்திய
ஜான்ஸி ராணி போன்ற தலைவர்களைத் தேசபக்தர்கள் எனப்
போற்றிப் புகழ்கின்றனர். ஆனால், "இந்தியாவைக் கண்டு
பிடித்தது" எனும் தனது புத்தகத்தில் நேரு வேறுவித
மான விமர்சனம் அளிக்கிறார். "இது நிலப் பிரபுத்வத்தின்
எழுச்சி. பழங்காலச் சிற்றரசர்களும், அவர்களது பரிவாரங்
களும் இதற்குத் தலைமை தாங்கினர். இவைகளுடன் அந்
நிய ஆட்சியை எதிர்க்கும் பொதுஜன ஆத்திரமும் சேர்ந்
தது. சிற்றரசர்களுக்கு வெகு இடங்களில் பாமர மக்களின்
அநுதாபம் இருந்தது. அவர்கள் திறமையற்றவர்கள்,
உதிரியாக இருந்தார்கள். இவர்களை ஒன்றுபடுத்தக்கூடிய
ஒரேவித அக்கறையோ, ஆக்கப்பணி ஆர்வமோ கிடையாது.
சரித்திரத்தில் அவர்கள் பங்கு முடிந்துவிட்டது. அம்மாதிரி
யானவர்களுக்கு எதிர்காலத்தில் இடமில்லை" இதுதான்
நேரு கூறியது.

1857-ஆம் வருஷத்திய கலகத்திலிருந்து படிப்பினை
அறிந்துகொள்ள இந்தியர்கள் முயன்றனர்; பின்னர் நேரு
கூறியமாதிரி, "அழிந்துபோன, நிலப் பிரபுத்வத்திற்காகப்
போர் புரிவதனால், சுதந்திரம் பெற முடியாது" என்பதை
அவர்கள் உணர்ந்தனர். துரதிருஷ்டவசமாக 1857-ஆம்
ஆண்டு கலகத்திலிருந்து பிரிட்டிஷார் எதையும் தெரிந்து
கொள்ளவில்லை. பலாத்காரத்தினாலும், பழி தீர்த்துக்கொள்
ளும் ஆர்வத்தினாலும் ஒரு நாட்டு மக்களின் விசுவாசத்தைப்
பெற்றுவிட முடியாது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள
வில்லை. தன்னுடைய அலகாபாத் நகரில் விசாரணை என்ற
பெயரால் பிரிட்டிஷ் போர்வீரர்களும், அரசாங்க அதிகாரி
களும் எப்படி ரத்தம் சிந்தினார்கள் என்றும், விசாரணையே
இல்லாமல் எவ்வாறு நூற்றுக்கணக்கில் இந்தியர் தூக்கிலிடப்
பட்டனர் என்றும் நேரு விவரித்திருக்கிறார்.

நேரு மேலும் எழுதுகிறார். "நாணயமான, நேர்மை
யுள்ள சில சரித்திர ஆசிரியர்கள் திரையை விலக்கி, எவ்
வாறு இனி வெறியும், மிருகத்தனமாக மக்களைத் துன்புறுத்
தும் ஆர்வமும் தலைவிரித்தாடின என்பதை நாம் ஓரளவு
அறிந்து கொள்ள உதவியிருக்கிறார்கள். இதையெல்லாம்
மறந்து விடத்தான் எல்லோரும் விரும்புவர். ஏனெனில்



தற்காலப். போர்முறை மூலமும், நாஜி முறை மூலமும் பார்த்
தால் கூட, காட்டுமிராண்டித்தனம் என்று கருதக்கூடிய
முறையில் மனிதன் மிகமிகக் கேவலமாக நடந்துகொண்டி
ருப்பதை இந்தச் சம்பவங்களில் காண்கிறோம். இதை நாம்
கண்டிக்க முற்பட்டால், சாம்ராஜ்ய இனத்தாரின் புலிக்
குணங்கள்பற்றி நமக்கு நினைப்பூட்டி பயமுறுத்துகின்றனர்."

பின்னர் பிரதம மந்திரியாக வரப்போகிற நேரு முடி
வுரையாகக் கூறுகிறார்; "இந்தியன் என்கிற முறையில்
இதையெல்லாம் எழுதுவது, எனக்கு அவமானமாயிருக்கிறது.
ஏனெனில் இதை ஞாபகப்படுத்திக் கொண்டால், மனம் சங்
கடப்படுகிறது. இந்த இழிவுக்கு இத்தனை காலம் உட்பட்
டிருந்ததை நினைத்தால் மனவேதனை அதிகரிக்கிறது;"

ஆனால் கடைசியாக அந்நிய ஆட்சிக்கு ஏற்பட்ட எதிர்ப்பு
விசேஷமான முறையில் அமைந்திருந்தது. கடைசியாக இந்
தியப் புரட்சி ஏற்பட்டபோது, அது தனிச் சிறப்பு வாய்ந்ததா
யிருந்தது.

*அத்தியாயம்—16*

# ஆஃப்பிரிக்காவிலிருந்து புதுமாதிரிப் புரட்சி

**1857**-இல் நடந்த "கலகத்திற்குப்" பன்னிரண்டு
ஆண்டுகளுக்குப் பின், "சூரியாஸ்தமனமே கண்டறியாதது"
எனப் புகழ்பெற்ற சாம்ராஜ்யத்தின் மகாராணியாக விக்
டோரியா முடிசூட்டிக் கொள்வதற்கு எட்டு ஆண்டுகளுக்கு
முன் மேற்கு இந்தியாவில், மோகன்தாஸ் காந்தி ஜனித்தார்;
நிகொலாய் லெனினும், ஸன் யாட் ஸென்னும் பிறந்து
இரண்டு வருஷத்திற்குள் காந்தி தோன்றினார்.

வக்கீல்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் நிறைந்
திருக்கும் குடும்பத்தில் அவர் பிறந்தார். லெனின் மாதிரியே
அவரும் வக்கீலாகப் பயிற்சி பெற்றார். லெனினைப் போலவே
காந்தியின் கருத்துக்களும், பல நாட்டுக் கருத்துக்களின் நிறை
வினால் உருப்பெற்றவை. அவைகளில் மேற்கத்திச் சாயை
பெரிதும் காணப்பட்டது. வக்கீல் தொழிலுக்குப் படிப்ப
தற்காக காந்தி சிறு வயதில் லண்டனுக்குச் செல்ல நேரிட்

டது. எளிதில் மனப் பக்குவமடையக்கூடிய சிறு பிராயத்
தில் ஆங்கிலக் கருத்துக்கள் தன்னை ஆட்கொண்டதைப்
பற்றி பின்னர் அவர் பன்முறை போற்றியிருக்கிறார்.

மனச்சோர்வளிக்கக் கூடிய வறுமைச் சூழ்நிலைக்கேற்ற
முறையில் தமது வக்கீல் தொழிலை நடத்த முடியாமல் சங்க
டப்பட்டதிலும், இவர் லெனினை ஒத்திருந்தார். ஜார் மன்
னனின் போலீஸ் அதிகாரிகள் லெனினை சைபீரியாவுக்கு
அனுப்பிய சமயத்தில், காந்தி சில இந்திய வர்த்தகர்கள்
சார்பாக வழக்காட, தாமாகவே தென் ஆஃப்பிரிக்கா
சென்றார்.

வக்கீல் தொழிலை ஏற்று முதல் வழக்கை காந்தி நடத்தி
யது ஒரு ரசமான சம்பவம்; நீதிபதியின் முன் பேச எழுந்ததும்
சங்கோசமேலீட்டால், அவரால் பேச முடியவில்லை. இந்த
நிலையைப் பார்த்து, அங்கிருந்தவர்கள் நகைத்தனர். பிரிட்
டிஷாரைப் பற்றிய அவர் முதல் அநுபவமும் அவ்வளவு
திருப்திகரமாயில்லை. தமது சகோதரருக்கு ஏதோ காரியம்
நடக்கவேண்டும். அதற்காக பிரிட்டிஷ் ஏஜெண்டிடம் சென்
றார். அந்தப் பெரிய மனிதர் காந்தியை வெளியே தள்ளி
விட்டார். இனி பிரிட்டிஷாரிடம் பல்லைக்காட்டி நலன்கள்
நாடுவதில்லையென்று, அன்று அவர் பிரதிக்ஞை செய்து
கொண்டார்.

தமது கொள்கைப்படி செயல்புரியும் துணிவை அவர்
வாழ்க்கையில், பொன்னான விதியாக வகுத்துக் கொண்டார்.
'' சுதந்திரத்தை விரும்பும் சமூகத்தில் கோழைத்தனத்திற்கு
இடமில்லை '' என அவர் கூறினார்.

சீக்கிரத்திலேயே தென் ஆஃப்பிரிக்காவில், அவருடைய
தைரியம் சோதனைக்குட்பட்டது. பழுப்பு நிற இந்தியர்
மீதும், கறுப்பு நிற ஆஃப்பிரிக்கர்கள் மீதும் வெள்ளை ஐரோப்
பியர் இன வித்தியாசம் பாராட்டி இழிவுபடுத்தினர்.

முதல்தரமான பாணியில், மேற்கத்தி உடையணிந்த
காந்தி, ஐரோப்பியர்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்
பட்ட ரெயில் பெட்டியில் பிரயாணம் செய்யவேண்டும் என
வற்புறுத்தினார். ரெயில் பெட்டியைவிட்டு வெளியேற மறுத்
ததும், அவரைப் பலாத்காரமாக வெளியே தள்ளினர்.

குளிர் மிகுந்த இரவில் அவர் பிளாட்பாரத்தில் நின்று
கொண்டிருக்கையில், அவரை விட்டுவிட்டு ரயில் புறப்
பட்டது. ''எனது உரிமைக்காகப் போராடுவதா அல்லது,
இந்தியாவுக்குத் திரும்புவதா ?'' என சிந்தனை செய்துவிட்டு,
''இந்தியாவுக்குத் திரும்பி ஓடுவது கோழைத்தனமாகும்
எனப் பின்னிரவில் முடிவுக்கு வந்தேன்'' என்று காந்தி
கூறியுள்ளார்.



தென்னாஃப்பிரிக்காவிற்கு வந்த ஒரு வாரத்தில் பிரிடோரி
யாவிலுள்ள இந்தியர்களை ஒரு இடத்தில் கூட்டினார். ''அவர்
கள் உள்ள நிலையைப் படம் பிடித்துக் காட்டப் போவதாக''
அவர் அழைப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இருபத்திநான்சாவது வயதில் அவர் செய்த முதல்
மேடைப் பிரசங்கத்தில் முந்திய சங்கோஜம் மறைந்துவிட்
டது. தமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்று
கூறிய காந்தி, அதற்கு இதுவரையில் யாரும் கேட்டிராத ஒரு
யோசனை கூறினார். ''ஐரோப்பியர் நம்மீது கூறும் நியாய
மான குறைகளை முதலில் அகற்ற முற்படவேண்டும். இப்போ
திருப்பதைவிட மேலான சுகாதார முறையில் வாழவேண்
டும்; ஜாதி, மதபேதங்களைப் பாராட்டலாகாது. வர்த்தகத்
துறையிலும், உண்மையை உரைக்கவேண்டும். இந்த
முறைப்படி அவர்கள் வாழ முற்பட்டு அமைதியாக, ஆனல்
உறுதியாகத் தங்கள் உரிமைகளுக்காகப் போராட வேண்
டும்.'' இதுவே காந்தி அந்தக் கூட்டத்தில் அளித்த புத்திமதி.

''உங்கள் போன்றவர்களுக்கு இந்த நாடு ஏற்றதல்ல.
பணம் சம்பாதிப்பதற்கே இங்கு நாங்கள் வந்திருக்கிறோம்.
அதற்காக அவமதிப்புகளையும் பொறுத்துக்கொள்ள வேண்
டும்.'' இவ்வாறு வருத்தத்துடன் ஒரு இந்திய வர்த்தகச்
செல்வர் அவரிடம் கூறினார். ஆனல் காந்தியின் புதிய துணி
வும், புதிய நடைமுறையும், இந்திய சமூகத்தினர் மனத்தைக்
கவர்ந்தது.

அந்த ஆண்டு முடிவுக்குள் காந்தி வந்த காரியம்,
வெற்றிகரமாக முடிந்துவிட்டது. பொறுமையாக இருதரத்
தாரையும் கூட்டி வைத்துப் பேசியதனல், நீதி ஸ்தலத்திற்கு
வெளியிலேயே அவர்களுக்குள் சமரஸம் செய்து வைத்தார்.
இப்படிச் செய்வதுதான் வக்கீல்களின் உண்மையான கடமை
என்று அவர் நம்பினார். அவர் இந்தியாவுக்குப் புறப்படத்
தயாரா யிருக்கும்பொழுது, ஐரோப்பியர் சட்டசபை திடீ
ரென ஒரு சட்டம் இயற்றியது. இதன் விளைவாக, குறுகிய
அளவுக்கு இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த வோட்டுரிமை
யும் ரத்துச் செய்யப்பட்டது. இம்மாதிரியான பாரபட்
சத்தை எப்படி எதிர்ப்பது என்பதைக் காந்தி ஒருவரே அறி
வாராகையால் அவர் உதவியை, மக்கள் நாடினர். அவர் ஒரு
மாதம் அங்கு தங்க இசைந்தார். ஆனல் இருபது ஆண்டு
களுக்கு அந்நாட்டில் இருந்தார்.

இவருடைய கருத்துக்கள் ஆஃப்பிரிக்காவிலும், இந்தியா
விலும், பிற இடங்களிலும் மக்களிடையே அபார சக்தியைக்
கிளப்பிவிட்டிருப்பதனல், பொதுப்படையாகவாவது, இந்தக்
கருத்துக்கள் யாவை, அவருடைய தத்துவத்திலும் அநுபவத்

திலுமிருந்து அவை எப்படி உருப்பெற்றன என்பதை அறிந்து
கொள்வது முக்கியமாகும்.

1894-இல் காந்தி நேடால் இந்தியர் காங்கிரஸை ஆரம்
பித்தார். இம்மாதிரி ஸ்தாபனங்கள் டிரான்ஸ்வாலிலும்,
கேப்டவுனிலும் அமைக்கப்பட்டன. இந்தியாவில், இந்திய
தேசிய காங்கிரஸ் பயனின்றி பிரிட்டிஷாரிடம் ஆண்டு
தோறும் விண்ணப்பங்களைக் குவித்த மாதிரியே இங்கும்
செய்வது காந்தியின் நோக்கம்போல் தெரிந்தது.

சீக்கிரத்தில் அவரது திட்டத்தில் பல புது அம்சங்கள்
சேர்ந்தன. இந்தியர்களுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்க
வேண்டும் என்று ஐரோப்பியர்களை வேண்டிக்கொண்டதுடன்
இதற்கு முன் கண்டிராதபடி, தங்கள் தேச மக்களிடையே
நிர்மாண சேவை புரியத் தொடங்கினார்.

வீட்டுச் சுகாதாரம், தனிப்பட்டவர் ஆரோக்கியம்,
மேம்பட்ட குடியிருப்பு வசதி முதலியவைகள்பற்றி சொற்
பொழிவுகள்நிகழ்த்தவும், பயிற்சி அளிக்கவும் நேடால் இந்தி
யக் காங்கிரஸ் ஏற்பாடு செய்தது. இந்தியர் வாழும் குடிசை
களும், அவைகளில் காணப்பட்ட அழுக்கும், அசுத்தமும்
அவர்களை ஒதுக்கி வைப்பதற்கு ஐரோப்பியர்களுக்கு முகாந்
தரமாயிருந்தன. இவைகளை இந்தியர்களே அகற்றிச் சுத்த
மாக வைத்துக்கொள்ளலாம் என்று காந்தி கூறினார். இந்தக்
காரியம் கைகூடவேண்டுமானல், இந்தியர்கள் ஒன்றுபட்டு
உழைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எழுத்தறிவில்லாத,
கீழ் ஜாதித் தொழிலாளர்களே சமூகத்தில் பெருவாரியாயிருந்
தனர். இவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக அவர்,
"நேட்டால் இந்தியர் கல்விச் சங்கத்தை" ஆரம்பித்தார்.
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸிலிருந்து இதற்காகப்
பண உதவியைப் பெற்றார்.

படிப்படியாக நிர்மாண வேலைக்கு முக்கியத்துவமளித்து,
எந்த அநீதிக்கும், முதலில் பொறுப்பேற்க வேண்டியவன்
தனிப்பட்டவனே என்று நிர்ணயித்ததனல், காந்தி தமது
வாழ்க்கையையே புரட்சிகரமாக மாற்றிக்கொள்ளவேண்டி
வந்துவிட்டது. உடனே தம்முடைய மேல் வர்க்கப் பழக்க
வழக்கங்களைத் துறந்தார். ஏழை மக்களின் எளிய நிலைக்
கேற்ற உடை அணிந்தார். தமது நகர வீட்டைவிட்டு,
கிராமத்தில் வயல்வெளிப் பகுதியில் குடியேறினார். இந்தப்
புதிய விடுதிக்கு இந்தியர்கள் யாவரும், அவர்கள் அந்தஸ்து
யாதாயினும், தாராளமாக வரலாம்.

அரசாங்கத்தைத் தேர்தல் மூலமோ, பலாத்கார
மாகவோ கைப்பற்றும் வரையில், சீர்திருத்தங்கள் செய்ய
முனைய வேண்டியதில்லையென, பெரும்பாலான ஜனநாயக
வாதிகளும், தாராளப் போக்குள்ளவர்களும், பலாத்காரப்



புரட்சியில் நம்பிக்கையுள்ளவர்களும் நினைக்கின்றனர் என்று
காந்தி கூறினார். உடனடியாக நிறைவேற்றக்கூடிய சீர்
திருத்தத்திற்காகத் தியாகம் செய்யத் தயாராயில்லாதவர்கள்
பின்னர் வரப்போகும் புரட்சிக்குத் தியாகம் செய்ய முன்வரு
வார்களா என அவர் சந்தேகித்தார். "அசுத்தத்தைக்
களைந்தெறிய சுயராஜ்யம் வரும்வரைக் காத்திருப்பா
னேன்?" என்று அவர் கேட்டார்.

ஜனநாயக முறையில் இந்த நிர்மாண வேலை செய்வ
துடன் காந்தி நின்றுவிடவில்லை. பழைய புரட்சிவாதிகள்
விரும்பியதற்கு மாறுபட்ட, அதைவிடக் கடுமையான குறிக்
கோளை வகுத்துக் கொண்டார். எதிரிகளைப் பலாத்காரமாக
வெல்ல அவர் விரும்பாததுடன், அவர்களுக்கெதிரிடையாக
வோட்டுக்களைக் குவித்து வீழ்த்தவும், அவர் இஷ்டப்பட
வில்லை. அவர்கள் மனத்தை மாற்றவே அவர் விரும்பினார்.
இன்னும் சற்றுத் தெளிவாகக் கூறவேண்டுமென்றால், அவர்
களுடன் பேசி உண்மையை எடுத்துரைத்து, தம் வழிக்கு
இணங்கும்படிச் செய்யவோ, அல்லது அவர்களுடைய வாதத்
திற்கு தான் உடன்படவோ விரும்பினார்.

காலனி ஆட்சி, பொருளாதாரச் சுரண்டல், இரண்டின்
கொடுமைகளை அகற்றுவதன் மூலம் பாட்டாளி மக்கள்
சர்வாதிகாரத்தையோ அல்லது பெரும்பான்மை பலத்தினால்
ஏற்படும் ஜனநாயகக் கொடுங்கோன்மையையோ அமைப்
பது அவர் நோக்கமல்ல. சம உரிமை உள்ள பிரஜைகள்
ஒன்றுகூடி, பொதுநலனை வளர்க்கவே அவர் விரும்பினார்.
பலாத்காரம்தான் அநுபவ சாத்தியமான வழி என்று நம்பிய
புரட்சிவாதிகளுக்கு அவரது வாதம் நூதனமாகத்
தோன்றிற்று.

ஒரு சிறந்த சமுதாயம் அமையவேண்டுமானல்,
நமது அண்டையிலிருப்பவர்களிடம் நம்பிக்கையும், பேச்சு
மூலம் பிறரைக் கவரும் முறையில் மதிப்பும் இருக்க
வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். சத்திய வழி
யைப் பின்பற்றுவதெனில், தனிப்பட்ட மனிதனிடமோ,
கட்சியிடமோ, வகுப்பினரிடமோ அல்லது ஒரு ஜாதியின
ரிடமோதான் சத்தியம் பூரணமாக நிலைத்திருக்கவில்லையென்
பதை ஒப்புக்கொள்ள வேண்டும். மனிதர்கள் அபிப்பிரா
யம் ஒருதலைப்பட்சமாயிருக்கின்றது. ஆகையால் பிறர்
கருத்துக்களை நிராகரிக்கவோ, அதே மாதிரி அவரவர்கள்
தத்தம் அபிப்பிராயத்தை வெளியிடவோ சுதந்திரமிருக்க
வேண்டும்; அவைகளை ஆராய்ந்து பார்த்து மதிப்பும் அளிக்க
வேண்டும்; உண்மையை நாடி, அதை அறிந்து கொள்ள ஒவ்
வொருவனுக்கும் சுதந்திரமிருக்கவேண்டும் என்று அவர்

கூறினார். சத்திய ஆர்வமே மனிதர்களைச் சுதந்திர புருஷர்
களாக்கும் என்பது அவர் கருத்து.

சத்தியத்தைப் பற்றிய அவருடைய இந்தக் கருத்தி
லிருந்துதான் அவருடைய அஹிம்சை அல்லது அன்பு எனும்
தத்துவம் உதயமாயிற்று. ''மன்னுயிரைத் தன்னுயிர் போல்
நினை.'' ''யாராவது உன்னை வலது கன்னத்தில் அடித்தால்
அவர்களிடம் இடது கன்னத்தையும் காட்டு.'' ''அயலானை
யும் உன்னைப்போல் நினைத்து அன்பு காட்டு.'' கிறிஸ்துவின்
இந்த போதனைகள் மதபோதகர்கள் ஒப்பிக்கும் மந்திரங்
கள் என காந்தி நினைக்கவில்லை. அரசியல் அரங்கில் செயல்
புரிவதற்கு அத்தியாவசியமான, அநுபவ சாத்யமான
கொள்கைகளெனவே இவைகளை அவர் மதித்தார்.
ஏசுநாதரின் மலைச் சொற்பொழிவையொட்டி வாழ்ந்தால்,
எதிராளியின் சிறப்பியல்புகள் பிரகாசிக்கும்படி செய்யலாம்.
மேலும் மனமும் உள்ளமும் ஒன்றுபட்ட மனித சமுதாயம்
அமைவதை துரிதப்படுத்த இந்த தூய வாழ்க்கை உதவி
புரியும் என்று அவர் கருதினார்.

நடைமுறையில் இந்த லட்சியம் பூரணமாகக்
கைகூடாது என்று பிறர் கூறியபோதிலும் அவர் கலங்கிவிட
வில்லை. ''க்ஷேத்திர கணித ஆதிகர்த்தா யூக்லிட் (Euclid)
குறிப்பிடும் நேர்கோட்டைப் பலகையில் கோடிட்டுக்காட்ட
முடியாது'' என்பது போல்தான் லட்சியமும் என்று அவர்
கருதினார். ''நேர்கோடு என்பது நமது கற்பனையில்தான்
இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அதை ஆட்சேபிக்க முடி
யாத விதிபோல் பிரகடனம் செய்து வந்திருக்கிறோம். கற்
பனையில் தோன்றும் யூக்லிடின் நேர்கோடு மாதிரி லட்சிய
வாழ்க்கை அமைக்க முயன்று கொண்டே இருக்கவேண்டும்.''
இவ்வாறு காந்தி விளக்கி எழுதியிருக்கிறார்.

இந்தக் கொள்கைகளை அவர் பின்பற்றியதனால் எதிரி
களின் பலஹீனங்களை அவர் பயன்படுத்த மறுத்துவந்தார்.
1897-இல் தென் ஆஃப்பிரிக்க வெள்ளையர் கூட்டம் அவரை
அடித்துக்கொல்ல முற்பட்டபோது கூட, அரசாங்கம் தயா
ராயிருந்தும், கூட்டத் தலைவர்கள் மீது வழக்குத் தொடர
அவர் மறுத்துவிட்டார். 1899இ-ல் நடந்த **போயர் யுத்தத்தில்***
பிரிட்டிஷார் மிகச் சங்கடமான நிலையிலிருக்கையில், காந்தி
கிளர்ச்சியை நிறுத்திவிட்டு, 1000 இந்தியர் கொண்ட வைத்

***போயர் யுத்தம்:**—தென் ஆஃப்பிரிக்காவிலுள்ள டச்சுக்காரர்களுக்கும்,
பிரிட்டிஷாருக்கும் 1899-லிருந்து 1902 வரையில் நடந்த யுத்தம். 1902-மே
31-ஆம் தேதி விரினிகிங் (Vereaniging) உடன்பாட்டின் மூலம், டச்சுக்காரர்
பிரிட்டிஷ் ஆதிபத்யத்தை ஒப்புக்கொண்டனர். தென் ஆஃப்பிரிக்காவுக்கு சுய
ஆட்சி அளிப்பதாக பிரிட்டிஷார் ஒப்புக்கொண்டனர். இப்போது தென்
ஆஃப்பிரிகா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு சுய ஆட்சி உள்ள நாடு.



தியத் தொண்டர் படை சேர்த்தார். இந்த வைத்திய உதவி
புரிய வந்தவர்களில் பலரை போர் முன்னணிக்கே சேவை
செய்ய அனுப்பி வைத்தார். இந்த உதவி புரிவதற்காக
காந்திக்கும் மற்றும் முப்பத்தியாறு இந்தியர்களுக்கும், அர
சாங்கம் சாம்ராஜ்ய யுத்த சேவைப் பதக்கங்கள் அளித்தது.

எதிராளியிடையே சாத்விக முறையில் மனமாற்றம் ஏற்
படுத்துவதில் கௌரவமான சமரஸம் ஏற்படுவதற்கு
முயற்சி செய்யவேண்டும். எதிரியால் அளிக்கமுடிந்த பரி
காரங்களை மட்டும் பெறுவதே நோக்கமாயிருக்கவேண்டும்.
எதிரி துரோகம் செய்ய நேரிட்டாலும் அவனுடைய வார்த்
தையிலும், நல்லெண்ணத்திலும் நம்பிக்கை இருக்கவேண்டும்.
''ரோமாபுரி பற்றி எரிகையில் அந்நாட்டு மன்னன் நீரோ
(Nero) பிடில் வாசித்துக்கொண்டிருந்தான் என்று கூறுவ
துண்டு. இவன் போன்றவர்களைக்கூட இருதய மற்றவர்கள்
என நினைக்கலாகாது'' என்பது காந்தியின் கருத்து.

தென் ஆஃப்பிரிக்கா பிரதமராயிருந்த ஜான் கிறிஸ்தியன்
ஸ்மட்ஸின் எழுத்துருப் பெறாத வாய் வார்த்தை மூலம் ஏற்
பட்ட உடன்பாட்டை இந்தியர்கள் ஏற்றுக்கொள்ளும்படி
காந்தி கோரினார். அவருடைய சிஷ்யர்களில் போராட்ட
ஆர்வமுள்ளவர்கள் ஸ்மட்ஸ் பன்முறை வார்த்தை தவறி
யிருக்கிறான் என்று வாதாடினர். ''அஹிம்சைச் செயல் புரி
பவன் அச்சம் என்பதை அறியான்'' என இவர்களுக்கு
காந்தி பதில் கூறினார்.

''எதிராளி, இருபது தடவை சொன்ன சொல் மீறினா
லும், இருபத்தோராவது தடவையும், அஹிம்சை வீரன்
அவனை நம்பத் தயாராயிருக்க வேண்டும். ஏனெனில் மனித
இயல்பில் தளராத நம்பிக்கை கொள்வது எனது கொள்கை
யின் சாரம்'' என்றார் காந்தி.

சமரஸம் செய்து கொள்ள காந்தி தயாராயிருக்கையில்
என்றுமே அழியாத சில கொள்கைகளைப் பொறுத்தமட்டில்
சமரசம் செய்து கொள்வது சாத்தியமில்லை. அவைகளை
அநுஷ்டிக்கையில் ஒருவன் தன் உயிரையே தியாகம் செய்ய
வேண்டியிருக்கும் எனவும் காந்தி நம்பினார். ஆளப்படு
வோரின் சம்மதம் பெற்ற ஆட்சியிலுள்ள சமூகத்திற்குட்
பட்டு வாழ்வதற்கு காந்தி இணங்கியதனால், கொள்கைகளைக்
காப்பதற்காக பலாத்காரமாகப் பிறர் உயிரை மாய்க்கும்
முறையை அவர் நிராகரித்தார்.

1905-இல் ரஷ்யாவில் நடந்த புரட்சி தோல்வியுற்றது:
''மக்களை ஒன்றுபடுத்த பலாத்காரத்தைப் பயன்படுத்துவது
வீண். அதனால் தீமையே விளைகின்றது என்பதை இந்தத்
தோல்வி நிரூபணம் செய்கிறது'' என டால்ஸ்டாய் எழுதினார்.

டால்ஸ்டாயின் இந்த முடிவை காந்தி ஏற்றுக்கொண்டார். கிறிஸ்தவ உலகத்தில் எவ்வளவோ புரட்சிகள் நிகழ்ந்திருக்கின்றன. புரட்சி வீரர்களும் தோன்றி இருக்கின்றனர். ஆனாலும், ''பெரும்பான்மையோர் மீது ஒரு சிலர் ஆதிக்கம் செலுத்துவது, ஊழல், பொய்கள், ஒடுக்கப்பட்டவர்களின் அச்சம், அடிமை முறை, கோபம், மக்களை மாக்களாக மாற்றுவது-இந்தத் தீமைகளெல்லாம் புரட்சிக்கு முன் இருந்தது போலவே நீடித்திருப்பதுடன், அவைகள் புதிய இடங்களுக்கும் பரவிப் பெருகி வருகின்றன'' என்பதை டால்ஸ்டாய் விவரித்தார்.

சோம்பிக்கிடப்பது, அடிமைத்தனத்தை ஏற்று வாளாவிருப்பது இவைகளைவிடப்போராடித் தோல்வியடைவதுமேல் என்று காந்தி கருதினார். 'எதிர்க்காமல் பின்வாங்குவதைவிட, ரத்தம் சிந்துவதைக் கூடச் சகித்துக்கொண்டிருக்கலாம்' என்பது அவர் கருத்து. ''கோழையாயிருப்பதா, பலாத்காரத்தைக் கைக்கொள்வதா என்பதற்குப் பதில் கூறும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், பலாத்காரத்தை மேற்கொள்ளலாம் என நான் கூறுவேன்'' என அவர் தெரிவித்தார்.

டால்ஸ்டாயின் நூல்களில் தமது அஹிம்சைக்கு நியாயமான ஆதாரம் இருப்பதை காந்தி உணர்ந்தார். ஆகையால் டால்ஸ்டாயை அவர் தனது 'ஆசானாக'க் கருதினார். எனினும் பலாத்காரம் கூடாது என டால்ஸ்டாய் கூறியது தனது கொள்கையை வகுப்பதற்கு முதல்படி என்றே அவர் கருதினார். அநீதியை எதிர்த்துப் பலபேர் ஒன்றுபட்டுப் புரட்சிகரமாகப் போராட வேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். ''அமைதியைவிடச் சத்திய ஆர்வமே முக்கியமானது'' என அவர் எழுதினார்.

சத்தியத்தையும், நீதியைய்யும் காப்பதற்காகப் போராட காந்தி புது வழியைக் கண்டுபிடித்தார். இந்த வழியைப் பின்பற்றினால் பலாத்காரப் புரட்சியில் காணப்படும் ஊழல்கள் ஏற்படாது என்று அவர் நினைத்தார். இதனால் பலாத்காரமா? அஹிம்சையா? எது வேண்டும்? என்று முடிவு செய்ய வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. ''பலாத்கார எதிர்ப்பில் இயல்பாகவே தீயசக்தி பெருகுகிறது. ஆனால் நான் விரும்பும் அஹிம்சை மூலம் தீய சக்திகளை பலாத்காரத்தைவிடத் தீவிரமாக, உண்மையாக எதிர்க்க முடியும்'' எனக் காந்தி கூறினார்.

தென் ஆஃப்பிரிக்கா இந்தியரிடையே நிர்மாணப் பணிபுரிவதனாலும், ஐரோப்பியரிடம் முறையிட்டுக்கொள்வதனாலும், இந்தியர் உரிமைகளை அடைய அவர் செய்த முயற்சிகள் பயனளிக்காததால்தான் இந்த அஹிம்சைப் போராட்ட முறையை காந்தி வகுத்தார். ஒரு இந்தியனுக்கு பத்து



ஐரோப்பியர் அங்கே வசித்ததனால் பலாத்கார முறையினால் அவர்களை வெல்ல முடியாது. ஜனநாயக முறையில் வோட்டுக் கணக்கு மூலமும் அவர்களை வெல்ல முடியாது. இந்த தர்ம சங்கடமான நிலையின் விளைவாகவே காந்தியின் இந்தப் புதிய முறை உருவாயிற்று,

* * *

1906-இல் ஆசிய எதிர்ப்புச் சட்டத்தை ஐரோப்பியர் இயற்றினர். இந்தச் சட்டத்தை பகிரங்கமாக, ஆனால் அமைதியாக எதிர்க்கும்படி தன்னைப் பின்பற்றுவோரை காந்தி அழைத்தார். மூவாயிரத்திற்கு பேற்பட்டவர்கள், அவர் கூறியபடி நடப்பதாக உடனே பிரதிக்ஞை செய்துகொண்டனர். இவ்வாறு பாமரமக்களின் சாத்விகச் சட்ட மறுப்பு உதயமாயிற்று. காந்தி முதன் முறையாகச் சிறைசென்றார்.

எதிரியைப் பணிய வைக்கும் இப்புதிய முறையை ஏன் வகுத்தார் காந்தி? ''மனிதன் அறிவை வசப்படுத்தும் வகையில், செயல் புரிந்தால் பலன்கிட்டும் என 1906 வரையில் நம்பியிருந்தேன். என்னைவிட யாரும் அதிகமான விண்ணப்பங்கள் தயாரித்து அனுப்பியிருக்க மாட்டார்கள். எல்லோரும் கைவிட்ட இயக்கங்களை என்னைவிட அதிகமான பேர் மேற்கொண்டிருக்கமாட்டார்கள். உண்மையிலேயே முக்கியமான காரியத்தைச் சாதிக்க வேண்டுமானால், எதிராளியின் அறிவைத் திருப்திசெய்தால் மட்டும் போதாது. அவனது உள்ளத்தையும் உருகச் செய்யவேண்டும் என்ற தீர்மானமான முடிவுக்கு நான் வந்துவிட்டேன்.'' இதுதான் புது முறை வகுத்ததற்கு காந்தி கூறிய காரணம்.

''அறிவைப் பயன்படுத்தினால், அது எதிராளியின் மூளையை வசப்படுத்தும். ஆனால் கஷ்டத்தை அநுபவித்தால்தான் அவனுடைய உள்ளத்தை இளகச் செய்யமுடியும்; தாம் படும் கஷ்டம், அவனுடைய உள்ளுணர்வைக் கிளப்புகிறது. கஷ்டம் அநுபவிப்பது மனிதவர்க்கத்தின் அடையாளச் சின்னமே யொழிய, வாளல்ல.'' இவ்வாறு காந்தி தமது கருத்தை மேலும் விளக்கிக் கூறுகிறார்.

அரசியல் செயல்புரிவது பற்றிய ஜனநாயகவாதிகளின் சம்பிரதாயமான கருத்துக்கு பலவகையில் தாம் புதுப் பொருள் கண்டு வருவதை அவர் உணர்ந்தார். ''பிரிட்டனின் சரித்திரத்தை மேலோட்டமாகப் பார்த்து, பார்லிமெண்டுகள் மூலம் அதிகாரம் மக்களுக்கு கிடைக்கிறது என்று நினைத்து வந்தோம். ஆனால் உண்மையில் சக்தி மக்களிடமே இருக்கிறது'' என்ற அவர் வாக்கிலிருந்து ஜனநாயகத்திற்கு அவர் கண்ட புதுப்பொருளை அறிந்துகொள்ளலாம்.

அரசாங்கத்திற்கு விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு மதிப்போ பலனோ ஏற்பட வேண்டுமானால், அரசாங்கத்தாரைச் சேராதவர்கள் மக்கள் தேவைகளைக் கவனித்துச் சேவை செய்ய வேண்டும். இந்த உண்மையை 1894-இல் அவர் நிரூபித்துக் காட்டத் தொடங்கினார். ஒரு பக்கம் சேவைசெய்து வருகையில் மற்றொருபுறம் அநீதியை அமைதியான முறையில் எதிர்க்க வேண்டும் என 1896-இல் முடிவு செய்தார். ''சட்ட மறுப்புதான் சக்தியின் உறைவிடம்'' என அவர் எழுதினார். இந்த எதிர்ப்புபற்றி 'தோரு' (Thoreau) கருத்தை புதிதாக அவர் சிருஷ்டித்த '' சத்தியாக்கிரஹம்'' எனும் பெயர் மூலம் ஏற்றுக்கொண்டார். சத்தியாக்கிரஹம் என்றால் ஆத்ம சக்தி என்று பொதுப்படையாகக் கூறலாம். சத்யம் என்றால் உண்மை. ''ஆக்ரஹா'' என்றால், ''இடைவிடாமல் கடைப்பிடித்தல்'' என்று பொருள்.

''சத்தியாக்கிரஹம்'' எனில் தீமை செய்பவனின் மனோ பலத்துக்குத் தலைகுனிந்து வாழ்வதல்ல. கொடுங்கோலனின் பலத்தை எதிர்த்து ஆத்மபலத்தைப் பிரயோகித்தல் என்று காந்தி இந்தப் புதிய பதத்திற்கு விளக்கம் கூறினார். ''சத்தியாக்ரஹத்தின் மூலம் அநீதிவாய்ந்த ஒரு ஏகாதிபத்யத்தின் முழு பலத்தையும் ஒரு தனிமனிதன் எதிர்த்து, தன் மானம், மதம், ஆன்மா யாவற்றையும் காப்பாற்றிக்கொள்ளமுடியும். இதன் மூலம், அந்த ஏகாதிபத்யம் வீழ்ச்சியுறவோ, திருந்தி அமையவோ வகை செய்யவும் முடியும்.'' இதுதான் சத்தியாக்ரஹத்தின் சக்தியைப் பற்றிக் காந்தி கூறிய விளக்கம்.

''பாமர மக்கள் சட்டமறுப்பில்'' தீர்மானமாகக் காந்தி செய்த முதல் சோதனையின் விளைவாக தென் ஆஃபிரிக்காச் சிறைகளில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் குவிந்தனர். ''புது மணமகன் மணவறைக்குச் செல்வதுபோல், சுதந்திரமான மக்கள் மனமுவந்து சிறைக்குச் செல்லக் கற்றுக்கொள்ள வேண்டும்'' எனக் காந்தி கூறினார். சட்டம் தனது மனச்சாட்சிக்கு ஏற்றதாயில்லை என அறிந்ததும், அதை எதிர்த்துச் சிறை செல்வதனால் சட்டத்திற்குத் தனது மதிப்பை அளிக்கையில் அநீதியான சட்டங்களை எதிர்க்கலாம்.

''நாங்கள் அநீதியானது என்று கருதும் உங்கள் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய முடியாது, ஆனால் சட்டமியற்றும் உங்கள்

தோரு:—(Thoreau) ஒரு அமெரிக்கர். 1817-லிருந்து 1862-வரை வாழ்ந்தவர். சொந்தமாகக் கட்டிய குடிசையில் வாழ்ந்தார். தேவைக்கு மேற்பட்டு சம்பாதிக்கலாகாது என்ற கருத்துள்ளவர். அரசாங்கத்திற்கு வரிகொடுக்க வேண்டாம் எனக் கூறினார். அவர் 'சாத்விகச் சட்டமறுப்பு' (Civil Disobedience) என ஒரு நூல் எழுதியிருக்கிறார். இந்தச் சட்ட மறுப்புக் கருத்தைத்தான், தமது சத்தியாக்ரஹம் எனும் முறையில் அமைத்துக்கொண்டார் காந்தி என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.



உரிமையை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். இந்தச் சட்
டத்தை மாற்றவேண்டியது அவசியம் என்பதை நீங்கள் உண
ரும்படிச் செய்யும் வரையில், நாங்கள் சிறையில் வதிகிறோம்.
நாங்கள் சிறைவாசம் செய்வதன் மூலம் சட்டத்தைப் பற்றிப்
புனராலோசனை செய்யும்படி உங்களைத் தூண்டமுடியும் என
நம்புகிறோம். இவ்வாறு சிறுபான்மையினர் பெரும்பான்மை
யினரைப் பார்த்துச் சொல்வதைவிட, வேறு எவ்வகையில்
அவர்களுக்கு நம் மரியாதையைத் தெரிவிக்கமுடியும் ?''

ஸ்மட்ஸ் புனராலோசனை செய்து, கைதிகளை விடுதலை
செய்து, சட்டத்தையும் திருத்துவதாக வாக்களித்ததும்,
காந்தியின் புதிய போராட்ட முறை வெற்றியளித்ததுபோ
லிருந்தது. ஆனால் ஐரோப்பியர்களின் நிர்ப்பந்தத்தின்
பேரில், ஸ்மட்ஸ் தமது வாக்குறுதியை மீறவேண்டியதா
யிற்று. உடனே மீண்டும் போராட வேண்டி காந்தி தமது
சிஷ்யர்களை அழைத்தார். மறுமுறையும் சிறைகள் நிரம்பின.
ஆனால் இந்தத் தடவை போராட்டம் பல ஆண்டுகளுக்கு
நீடித்தது.

ஆதியில் உற்சாகமாகச் சிறைசெல்ல முன்வந்தவர்கள்
கொஞ்சங்கொஞ்சமாக ஏதேதோ காரணங்களுக்காக மீண்
டும் சிறை செல்லத் தயாராயில்லை. பெரும்பாலான சிஷ்யர்
கள், காந்தியைக் கைவிட்டனர். இந்தியாவில் தென் ஆஃபி
ரிக்க இயக்கத்தை உற்சாகத்துடன் கவனித்து வந்தனர். அங்
குள்ள நண்பர்களுக்கு தென் ஆஃபிரிக்க இந்தியர் நிலைபற்றி,
வருத்தத்துடன் காந்தி எழுதினார். ஆயுள் தண்டனை கிடைப்ப
தானாலும், நீடித்துப் போராடத் தயாராயுள்ளவர்கள் எண்
ணிக்கை அறுபத்தியாறுக்கு அதிகமில்லாமல் பதினாறு பேருக்
குக் குறையாமல் இருக்கின்றனர் என்று காந்தி தெரிவித்தார்.
ஆனால் அதிகாரிகள் சும்மா இருந்துவிடவில்லை. மேலும்
கடுமையான இன வேற்றுமை அவசரச் சட்டங்களைப் பிரகட
னம் செய்தனர். இதன் விளைவாக சத்தியாக்கிரஹத்தினால்
ஏற்படக்கூடிய கஷ்டங்களை மேற்கொள்ளத் தயாராக உற்சா
கத்துடன் இந்தியர் முன்வந்தனர். காந்தி தமது சிஷ்யர்களை
நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அனுப்பினார். அங்கே தொழிலாளி
களை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டி அதன் மூலம் சிறை
செல்லும்படி கட்டளையிட்டார். அவர் சொன்னதும் முன்
போல் மக்கள் அவரைப் பின்பற்றிய கவர்ச்சி மீண்டும் மக்களை
ஆட்கொண்டது. ஆயிரக்கணக்கான சுரங்கத் தொழிலாளிகள்
வேலைநிறுத்தம் செய்தனர்.

அநுமதிச் சீட்டின்றி ஆசியர்கள் தங்கள் இருப்பிடத்தை
விட்டு வெளியேறலாகாது என ஒரு சட்டம் இயற்றப்பட்
டது. அநுமதிச் சீட்டுகளின்றி எல்லோரும் தத்தம் இல்லங்
களை விட்டு தம்முடன், ஊர் எல்லையைத் தாண்டி வரும்படி

காந்தி அழைத்தார். இந்த அழைப்புக்கும் அவர் எதிர்
பார்த்ததைவிட அதிகமான பேர் இணங்கி வந்தனர்.

1913 அக்டோபர் 28-ஆம் தேதி காந்தியின் சாந்தி சேனை
நேடால் சமவெளியைக் கடந்து சென்றது. அச்சமயம்
பிளாஸி* சண்டையில் கிளைவிடமுய, ஃபோர்ஜ் (Forge) பள்
ளத்தாக்கில் வாஷிங்டனிடமும், பொயாகா (Boyaca)வில்
*போலிவரிடமும் (Bolivar) இருந்ததைவிடக் காந்தி சேனையில்
அதிகம்பேர் இருந்தனர். டிரான்ஸ்வால் எல்லைக்கு காந்தி
சென்றதும், சுவர் எழுப்பியதுபோல் ஆயுதம் தாங்கிய
போலீஸ் படையினர் நின்று கொண்டிருந்தனர். அவர்களு
டைய துப்பாக்கிகளை நோக்கி நேராகச் சென்றார் காந்தி.
நிராயுதபாணிகளான அவருடைய ஆயிரக் கணக்கான சிஷ்
யர்கள் பின்தொடர்ந்தனர். துப்பாக்கிப் பிரயோகம் செய்
யாமல் போலீசார் பின்வாங்கினர்.

காந்தி கைது செய்யப்பட்ட பின்புய், அவரது சிஷ்
யர்கள் கட்டுப்பாடு மிக்க அஹிம்சை முறையில் மேற்
கொண்டு சென்றனர். கடைசியாக அரசாங்கத்தார் சத்தி
யாக்ரஹப் படையினரையும் கைது செய்தனர். சுரங்கத்
தொழிலாளிகளைச் சுரங்கங்களுக்கு அனுப்பி அங்கே அவர்
களை அடைத்து நியூகாஸிலில் சிறையின் கிளைச் சிறைக்
கைதிகள் போல் நடத்தினர்.

முதல் மகா யுத்தம் தொடங்குவதற்குச் சில வாரங்
களுக்கு முன் மீண்டும் ஸ்மட்ஸ் பணிந்தார். விசாரணைக்
கமிஷன் நியமித்தார். சிறைக் கைதிகளை விடுதலை செய்
தார். காந்தியின் நிபந்தனைகளில் பெருவாரியானவைகளை
நிறைவேற்ற இசைந்தார். இந்தத் தடவை அவர் சொன்ன
சொல்லைக் காப்பாற்றினார். பின்னர் தென் ஆஃப்பிரிக்கா
பார்லிமெண்டில் இயற்றிய இந்திய நிவாரண மசோதா
மூலம், இதுவரை காந்தி போராடிய பல பிரத்தியேக
உரிமைகளை அளிப்பதாக உத்தரவாதம் செய்யப்பட்டது.

---

பிளாஸி:—மேற்கு வங்காளத்தில் இருக்கிறது. இங்கே 1757-இல்
கிளைவின் பிரிட்டிஷ் படைக்கும் இந்திய கலகப்படைக்கும் சண்டை நடந்து
கிளைவ் வெற்றி பெற்றான். பிரிட்டிஷார் இந்தியாவில் நிலைத்ததற்கு
இந்த வெற்றியே காரணம்.

அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டன், போர்ஜ் பள்ளத்தாக்கில் சண்டை
நடத்துகையில், அவரிடம் 11 ஆயிரம் ராணுவத்தினர் இருந்தனர். அவர்
கள் கிழிந்த சட்டைகள் அணிந்து கலகம் செய்யும் தருவாயிலிருந்தனர்.
ஆனால் வாஷிங்டனின் லட்சிய ஆர்வத்தால் பரவசமடைந்து போர்புரிந்தனர்..
அமெரிக்கப் புரட்சியில் பிரிட்டிஷாரைத் தோற்கடித்த சண்டை இது.
1777-1778-இல் இச்சண்டை நடந்தது.

போலிவார்:—(Bolivar) என்பவன் தென் அமெரிக்கப் புரட்சி வீரன்.
இவன் பொயாகாவில் (Boyaca) ஸ்பானிஷ் படைகளை எதிர்பாராத முறையில்
முறியடித்தான். இவன் வாழ்ந்த காலம் 1783-1830.



போராடி அதன் மூலம் கஷ்டங்களை அநுபவிப்பது
என்கிற காந்தியத் திட்டம் பல இந்தியர்களையும், சில
ஐரோப்பியர்களையும் சிறப்பாகக் கவர்ந்தது. "உங்கள்
நாட்டு மக்களை எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்கு உதவி
புரிவதில் எனக்கு அக்கறையில்லை. ஆனால் நான் என்ன
செய்வது? எங்களுக்கு கஷ்டம் ஏற்படுகையில் நீங்களே உதவி
புரிகிறீர்கள். நாங்கள் எப்படி உங்களைத் துன்புறுத்த முடி
யும்? ஆங்கிலேய வேலை நிறுத்தக்காரர்கள் போல் நீங்க
ளும் பலாத்காரத்தில் இறங்கக்கூடாதா என நான் பன்
முறை விரும்பியதுண்டு: அப்போது உங்களை எப்படித் தீர்த்
துக்கட்டுவது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்
களோ பகைவனைக் கூடத் துன்புறுத்த மாட்டீர்கள். அத
னால்தான் நாங்கள் நிர்க்கதியான நிலையிலிருக்க வேண்டி
வந்துவிடுகிறது." இவ்வாறு ஸ்மட்ஸின் காரியதரிசிகளில்
ஒருவர் அரசாங்கத்தின் நிலையையும், சத்தியாக்ரஹத்தின்
சக்தியையும் விளக்கிக் கூறினார்.

"ஆசிய இனம் எனும் தீயபுண் தென் ஆஃப்பிரிக்கா
வின் உயர்நிலை உறுப்புக்களை ஏற்கனவே அடியோடு அரித்
துத் தின்றுவிட்டது. அதை உறுதியுடன் களைந்தெறிய
வேண்டும்" என்று போராட்ட ஆரம்பத்திலேயே ஸ்மட்ஸ்
கூறியிருந்தார். எனினும் போராட்டம் முடிவடைவதற்குள்,
காந்தி சிறையில் படிப்பதற்கென ஸ்மட்ஸ் புத்தகங்கள்
அனுப்பியிருந்தார். இந்த அன்பைப் பிரதிபலிக்கும் முறையில்
காந்தியும், ஜோஹான்ஸ்பர்க்கில் டால்ஸ்டாய் பண்ணையில்
தயாரிக்கப்பட்ட ஜதை ஜோடுகளை ஸ்மட்ஸுக்கு அனுப்பி
னார். பின்னர் காந்தியின் எழுபதாவது பிறந்த தினத்
தன்று இதே ஜோடுகளை, தனது பழைய நண்பரை இன்ன
மும் போற்றி வருவதற்கு அறிகுறியாக ஸ்மட்ஸ் இந்தியா
விற்கு அனுப்பிவைத்தார். "இவ்வளவு மேலான மனித
ரின் இடத்தை ஏற்க நான் தகுதியற்றவன்" என ஸ்மட்ஸ்
இந்தப் பரிசுடன் கடிதம் எழுதினார்.

அதிகார ஆசை அடிப்படையில் இயங்கும் அரசியல்
நோக்கிலிருந்து பார்த்தால் ஆஃப்பிரிக்காவில் காந்தியின்
முயற்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி வெற்றி பெற்றதாகக்
கூற முடியாது: இதற்கு நாற்பது ஆண்டுகளுக்குப் பின்
அபார்திடு (Apartheid) எனும் இனவேறுபாட்டுக் கொள்கை
யினால் தீமை அதிகரித்து தென் ஆஃப்பிரிக்காவின் சரித்திரத்
திற்குக் கேவலமான களங்கம் விளைவித்துவிட்டது. புதிய
அஹிம்சைப் புரட்சி முறையை ஆஃப்பிரிக்காவில் காந்தி
சோதனை செய்து வருகையில், இந்த முறைக்கு நேர்மாறாக
சன் யாட் ஸென்னின் சிஷ்யர்கள் பலாத்காரமாக மஞ்சு அரச
வம்சத்தினரை வீழ்த்திவிட்டனர். துரதிருஷ்டம் வாய்ந்த

புரட்சியில் 1905-இல் கலந்துகொண்டு தோல்வியுற்ற பின்,
ரஷ்யாவில் லெனின், பார்லிமெண்டரி முறைப்படி தனது
போல்ஷ்விக் கட்சியைத் திருத்தியமைத்துக் கொண்டிருந்
தார். இந்த முயற்சியின் மூலம் தான் இறுதியில் அவர் ரஷ்
யாவைத் தனது பக்கம் இழுக்க முடிந்தது.

தமது அஹிம்சா முறை எதிர்ப்புச் சிரானமுறையில் தென்
ஆஃப்பிரிக்காவில் நிரூபணம் செய்து காட்டப்பட்டதாகவே
காந்தி என்றும் நினைத்துக்கொண்டிருந்தார். ஐரோப்பியரை
விடப் பத்து மடங்கு குறைவாகவும், சிறுபான்மையினராக
வும் இருந்த தென் ஆஃப்பிரிக்கா இந்தியர்களிடையேதான் இந்
தப் புது முறை சோதனை செய்து பார்க்கப்பட்டது. ஆகை
யினால் இந்தியாவில், பின்னர் அவர் கண்டதைவிட இடைஞ்
சல்கள் இங்கு அதிகமாகவே இருந்தன. ஆனால் இந்தியா
வில், இதே முறையைப் பிரயோகிக்கையில், பலன் வேறு
மாதிரி இருக்கும் என அவர் எதிர்பார்த்தார். என்றோ ஒரு
நாள் பெரும்பான்மை பலம் கொண்டு நாட்டை ஆளப்
போகும் மக்களிடையே இம்முறையை அவர் சோதனை செய்
வார். அப்படி அவர் செய்யக்கூடிய பரிட்சை மூலம் இந்த
இயக்கத்தினால் பாமர மக்களிடையே ஏற்படக்கூடிய அபார
சக்தியை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும்படி நிரூபித்துக்
காட்ட முடியும். இதற்கிடையில் காந்தியப் புரட்சி முதன்
முதலில் ஆஃப்பிரிக்காவில் தோன்றியதனால் விசேஷ பலன்
உண்டு. இந்தப் புது முறையின் வியாபகம் இந்தியாவை
பாதிப்பதுடன் நின்றுவிடாது உலகத்தில் பிற பாகங்களையும்
அது உருவகப்படுத்தும் என்பதற்கு தென் ஆஃப்பிரிக்கா
சோதனை முன் அறிவிப்புபோல் அமையும்.

அத்தியாயம்—17

# இந்தியா காந்தியைப் பின்பற்றுகிறது

**1857**-ஆம் ஆண்டுக் கலகம் முடிந்து, அதன் விளைவாக
பிரிட்டிஷார் கையாண்ட அடக்குமுறைத் தாண்டவத்திற்
குப் பின் பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்தன. அத்துமீறிய
அடக்குமுறை காரணமாகவே ''இந்தியாவைச் சீராக ஆளு
வதற்கான'' சட்டத்தை அடுத்த ஆண்டில் பிரிட்டிஷ் பார்லி



மெண்டு நிறைவேற்றியது. கிழக்கிந்தியக் கம்பெனியாரின்
ஆட்சி இந்தச் சட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் முடியரசிடம்
ஒப்படைக்கப்பட்டது.

மற்றுமோர் பார்லிமெண்ட் சட்டத்தின் மூலம் கம்
பெனியின் கீழ் சேவை செய்து வந்த படையினர் பிரிட்டிஷ்
மன்னர் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். கம்பெனி
யின் கவர்னர் ஜெனரலாயிருந்தவர் ராஜப்பிரதிநிதியானார்.
டில்லியில் 1877-இல் ஆடம்பரமாக நடந்த தர்பாரில் விக்
டோரியா ராணி இந்தியாவின் பேரரசியாகப் பிரகடனம்
செய்யப்பட்டார்.

பிரிட்டிஷ் முடியில் ஜொலிக்கும் ஒளிமிக்க ரத்னம் என
இந்தியாவை வர்ணிப்பதுண்டு. ஆனால் இந்த ரத்னம்
பிரிட்டிஷ் ஆட்சியில் நிலைத்திருக்குமா என்று கூற முடியாம
லிருந்தது. விக்டோரியா பேரரசியான காலத்தில் ஆலன்
ஆக்டேவியன் ஹியூம் (Allan Octavian Hume) எனும் ஆங்
கிலேய அரசாங்க அதிகாரி இந்திய ஆட்சிபற்றிய விவ
ரங்கள் அடங்கிய ஏழு அறிக்கைத் தொகுப்புகளை ஆராய்ந்
தார். இந்தியாவில் நிலவிய அரசியல் அதிருப்தி ரகஸ்யமாக
வேலை செய்யத் தொடங்கிவிட்டது என்பது இவர் செய்த
பரிசீலனையின் முடிவு. பலாத்காரப் புரட்சியைத் தவிர்க்க
வேண்டுமானால், புதிய மார்க்கத்தை உடனடியாகக் கண்டு
பிடித்தாக வேண்டுமென்று இவர் திட்டமாகக் கூறினார்.

இந்திய அதிருப்தி வெளிப்படுவதற்கு-ஏதாவது ஒரு
போக்குக் கண்டுபிடித்து, அதன் மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை
இன்னும் சிறப்பாகப் பாதுகாக்கலாம் என்பதுதான் ஹியூ
மின் நோக்கம் என்று இன்னும் சில இந்தியர்கள் அழுத்த
மாகக் கூறி வருகின்றனர். இது உண்மையாயிருக்குமானால்,
இறுதியில் இந்தியா விடுதலை பெறுவதற்குரிய ஸ்தாபனத்தை
தன்னையறியாமலே இவர் சிருஷ்டித்தார் என்றுதான் கூற
வேண்டும்.

இது எவ்வாறாயினும், 1893-இல் கல்கத்தா பல்கலைக்
கழகப் பட்டதாரிகள் முன் பேசுகையில், ஒரு யோசனையை
ஹியூம் வெளியிட்டார். இந்தியாவெங்கிருந்தும், பிரபலஸ்
தர்கள் ஆண்டுதோறும் எங்காவது கூடவேண்டும்; இது அதி
காரச் சார்பற்ற பார்லிமெண்ட்போல் அமைந்த இந்திய
தேசியக் காங்கிரஸாக இருக்கவேண்டும் என்பதே அவர்
குறிப்பிட்ட யோசனை. ''ஐம்பது உண்மையான, ஆர்வ
முள்ள நல்லவர்கள் ஒன்றுகூடி வேலை தொடங்க விரும்பி
னால், அம்மாதிரி ஸ்தாபனம் அமைத்துவிடலாம். அம்
மாதிரி மனிதர்கள் செயல் புரியும் வகையறிவார்கள்'' என்று
அவர் அந்தச் சந்தர்ப்பத்தில் கூறினார்.

முதல் காங்கிரஸ் பம்பாயில் கூடிற்று. அதற்கு வக்கீல்
கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், வர்த்தகப் பிர
முகர்கள் வந்திருந்தனர். அவர்களிடையே முன்னுரையாகச்
சில வார்த்தைகள் பேச ஹியூம் அங்கே யிருந்தார். அப்
போதைய சூழ்நிலையைப்பற்றி ஒரு பிரிட்டிஷ் சரித்திர ஆசிரி
யர் விமர்சனம் செய்தார். ''துரதிருஷ்டம் பிடித்த, பிற்
போக்கு வாய்ந்த சில சட்டங்களும், ரஷ்யாவில் நடந்தது
போல் கலகத்திற்குப்பின் அநுஷ்டிக்கப்பட்ட அடக்குமுறை
யும் சேர்ந்து, இந்தியாவைப் புரட்சிப் பிரளயத்தை விளைவிக்
கும் நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. சரியான சமயத்தில்
தலையிட்டு நிலைமையைத் தவிர்க்கவேண்டும் எனும் எண்ணம்
ஹியூமிற்கு உதித்தது.''

மன்னரிடம் முறையிடுவதன் மூலம் எந்தப் பிரச்னை
யையோ, தகராறுகளையோ தீர்த்துவிட முடியாது என்பதைக்
காங்கிரஸ் உணர்ந்தது. 1915-இல் காந்தி இந்தியாவிற்குத்
திரும்புகையில், அங்கே பலாத்கார முறை மீண்டும் தலை
தூக்க ஆரம்பித்தது. சுய ஆட்சிக் கோரிக்கையை வற்
புறுத்துவதில் காங்கிரசிடம் எதிர்ப்பு உணர்ச்சி பெருகி வந்
தது. ஆஃப்ரிக்காவில் நூதனமாக காந்தி கையாண்ட புது
முறைப் புரட்சி இனி இந்தியாவில் காங்கிரசின் மூலம் படிப்
படியாக பிரயோகிக்கப்படவிருந்தது.

அக்காலத்தில் இந்தியாவில் காந்தியைத் தவிர, பிற
புரட்சித் தலைவர்களும் இருந்தனர். அவருடைய கருத்துக்
களை ஆட்சேபணையின்றி எல்லோரும் எப்பொழுதும் ஏற்றுக்
கொண்டனர் என்று கூறுவதற்கில்லை. ஆனால் இந்தியப்
புரட்சியை யாராவது, தனிப்பட்ட ஒருவர் நடத்தினார்
என்று கூறுவதானால், காந்திதான் அதை நடத்தினார் என்றே
சொல்ல வேண்டும். புரட்சிகள் பற்றிய நம் ஆராய்ச்சியில்
இந்த காந்தியப் புரட்சியின் வரலாற்றை விவரிப்பதே முக்கிய
மாகும்.

தமது சிறிய முதல் சத்தியாக்கிரகத்தை காந்தி1917-இல்
தொடங்கினார். அதாவது ரஷ்யப் புரட்சியை லெனின் கைக்
கொள்ளுவதற்கான இறுதிமுயற்சி செய்யப் பெட்ரோகிராடில்
வந்து சேர்ந்ததற்குச் சில மாதங்களுக்கு முன்னர், ஸன்
தொடங்கிய புரட்சி, யுத்த வெறியர்களின் சண்டைகளாக
மாறி, முடிவு பெறாத நிலையில் சீனா இருந்த சமயம்.
இந்திய தேசிய காங்கிரஸிற்குத் தலைமை தாங்கி அதைத்
தம் சாத்விகப் புரட்சிக்குத் தக்க சாதனமாகக் காந்தி மாற்று
வதற்குள், வர்க்கப் போராட்டத்தை சாஸ்திரிய முறையில்
ரஷ்யாவில் பக்குவப்படுத்திவிட்டதாகக் கம்யூனிஸ்டுகள்
சாதித்துக்கொண்டிருந்தனர். இதே சமயத்தில் முதல்
இந்திய கோஷ்டியினர் பழைய கால்நடைப் பாதை வழியாக



மாஸ்கோவுக்குச் செல்லத் தொடங்கிவிட்டனர். நிலப்
பிரபுக்கள் வசப்பட்டிருந்த குடியானவர்களின் சக்தி விடு
பட்டுச் செயல் புரியவும், பின்தங்கிய சமூகத்தினரை இருப
தாவது நூற்றாண்டு நிலைக்கேற்றபடி மாற்றவும், உண்மை
யாகவே லெனின் வழி கண்டுபிடித்துவிட்டாரா என்று பார்க்
கவே இந்த கோஷ்டி பிரயாணம் செய்தது.

தங்கள் திட்டத்தைப் பரப்ப இந்தியா உகந்த இடம்
எனக் கம்யூனிஸ்டுகள் கருதக்கூடும் என்பதை காந்தி உணர்ந்
தார். இந்நாட்டில் மக்கள் ஏழ்மை நிலையிலிருந்தனர்;
அவர்கள் சுரண்டப்பட்டு வந்தனர். ஆகையால் இந்தப்
பெரிய உபகண்டம் மேற்கத்தி ஏகாதிபத்தியத் தொடரில்
பலஹீனமான பாகமா யிருந்தது. இப்படிப் பலஹீனமா
யிருக்கும் பகுதியைச் சுலபமாகத் தகர்த்துவிடலாம் என
லெனின் எண்ணினார்.

படித்த இளைஞர்களிடையே, குறிப்பாக வங்காளி இளை
ஞர்களிடையே, புரட்சி வேகம் பெருகி வந்ததனால், லெனி
னைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய முறைகளைச் சோதனை
செய்ய இந்நாடு வசதியாயிருந்தது. ஒரு அரண்மனை யானை
மீது 1912-இல் ராஜப்பிரதிநிதி டெல்லிக்குள் பவனி வரும்
போது, ஒரு வெறிபிடித்தவன் அவர்மீது குண்டு வீசினான்;
பிரிட்டிஷ் சிறையிலிருந்து தப்பியோடி ஜப்பானியருடன்
சேர்ந்து வெள்ளையரை சுபாஷ் போஸ் தாக்கினார் என்பதை
நாம் அறிவோம். அச்சமயத்தில் போஸ் சில மாணவர்
களுடன் சேர்ந்துகொண்டு, ஒரு வெள்ளை ஆசிரியரைத் தாக்கி
னார் என்பதனால், பிரபல்யமடைந்திருந்தார். இந்தியா
பற்றி அவதூறாகப் பேசியதற்காக அந்த ஆசிரியரைத்
தாக்கியதாகக் கூறப்பட்டது.

ஆயிரக்கணக்கான இந்தியச் சிப்பாய்களை முதல் உலக
யுத்தத்தின் போது, பிரிட்டிஷ் ஆட்சியினர் மத்தியக் கிழக்கு,
ஐரோப்பா போர் அரங்குகளுக்கு அனுப்பியதனால் கொந்
தளிப்பு வேகம் அதிகரித்தது. போர் முனைகளில் மேற்கத்தி
விஞ்ஞான, தொழில் நுணுக்க அபிவிருத்திகளை நேருக்குநேர்
கண்டதனாலும், போர் நிலவரங்களைப்பற்றி இவர்கள்
ஜோடித்துக் கூறியதனாலும், இந்தியாவில் புரட்சி அமளி
மேலும் அதிகரித்தது.

இந்தியாவில் கம்யூனிஸம் வெற்றி பெற்றால் அது
பிரிட்டிஷார் வெளியேற்றத்துடனே, இந்தியர் அடங்கிய அர
சாங்கம் அமைப்பதுடனே நின்றுவிடாது என்பதைக் காந்தி
அறிந்திருந்தார். அதன் விளைவாகச் சமூக அடிப்படையையே
மாற்றக்கூடிய தீர்மானமான புரட்சி ஏற்படும் என்றும்,
குடியானவர்கள் நில அடிமைத்தளையைத் தகர்க்கவும்
நிலப் பிரப்புக்களைக் கொன்று, நிலத்தைக் கைப்பற்றவும்

அழைக்கப்படுவர் என்றும் அவர் அறிவார். 1857-இல் திக்கா
லிக்கொன்ருய்ப் பலாத்காரப் புரட்சி நிகழ்ந்தது போலன்றி,
மிகவும் சக்திவாய்ந்த புரட்சிவேகம் மக்களிடையே பெருகும்
என்றும் காந்தி அறிந்திருந்தார்.

ஆனுல் கம்யூனிஸத்தின் அடிப்படையான பலாத்காரத்
திற்குக் காந்தி தீவிரமான எதிரியாகவே இருந்தார். "நாம்
இதுவரை கண்டிராத அளவுக்கு அராஜகத்தை இந்த இரக்க
மற்ற முறை விளைவிக்கும்" என காந்தி தீர்க்கதரிசனத்துடன்
கம்யூனிஸத்தை மதிப்பிட்டுக் கூறினுர்.

"இம்மாதிரி பலாதகாரத்தின் மூலமோ, அல்லது வெற்
றிக்கு முதல்படியென கம்யூனிஸ்டுகள் கருதும் கட்சிச் சர்வா
திகாரத்தின் மூலமோ சீரான சமூகம் உருப்பெறும் என்று
நம்புவது காட்டுச்செடியை நட்டுவிட்டு அதிலிருந்து
ரோஜாப்பூ மலரும் என்று கூறுவதற்கொப்பாகும்" என
அவருக்குத் தோன்றிற்று. "அவர்கள் கூறும் பரிகாரம்
நோயை விடக்கொடியது என்பதைக் கம்யூனிஸ்டுகள் மறந்து
விடுகின்றனர்" என அவர் கூறியிருக்கிருர்.

ரத்தம் சிந்தாமல், புரட்சிகர மாறுதல் அடையலாம்
என்று நம்புகிறவர்களுக்கு கம்யூனிஸ்டுகள் சவால் விடுவது
ஒருவகையில் வரவேற்கத்தக்கது எனக் காந்தி அறிந்து
கொண்டார். "இன்று உலகெங்கும் பரவிவரும் பிரளயம்
ஒரு சிறந்த சூசகமாகும். குழப்பம் விளைவிக்கும் சக்தி என்
கிற முறையில் இது மிகத் தீயதுதான். ஆனுல் அதை ஊக்கு
விப்பவர்கள் மனத்தில் உயர்நோக்கம் இருக்கிறது. அந்தச்
சக்தி சீர்திருத்தத்தை விரும்புகிறது. நியாயமும், தர்மமும்
ஆட்சி புரியவேண்டும் என்பதே அதன் அவா." இவ்வாறு
காந்தி கூறினுர்.

உலகெங்கும் புரட்சிக்கு மக்கள் தயாராயிருக்கின்றனர்.
சுரண்டப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், மேலோரால்
மறக்கப்பட்டவர்கள் யாவரும் பழைய முறை ஒழியவேண்
டும் எனக் கோருகின்றனர். இந்த உலக நிலை காந்திக்கு
ஊக்கமும் உற்சாகமும் அளித்தது. சமுதாயத்தை வாட்டி
வரும் நோய்க்குப் பரிகாரம் அவசியம் என்பதில் அவர் கம்
யூனிஸ்டுகளுடன் ஒன்றுபட்டு நின்ருர். இந்த நோய் தீர
வேண்டுமானுல், ஆட்சி மாறுதல் அடைந்தால் மட்டும்
போதாது என்பதிலும் அவர் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துப்
போனுர். எல்லா கிராமங்களிலும், சமூகங்களிலும் பூரணப்
புரட்சி ஏற்படவேண்டும் என்பதையும் அவர் ஒப்புக்கொண்
டார். ஆனுல் தன்னுலியன்ற அளவு தீவிரத்துடன் புரட்சி
யின் தன்மை பற்றி கம்யூனிஸ்டுகளுக்கு மாறுபட்ட கருத்தே
கொண்டார்.



நாடெங்கும் அநீதியை எதிர்த்துப் போராடுவதற்கான
பொறுப்பை காந்தி ஏற்றுக்கொண்டதும், இந்த வழியில்
ஏதாவது செய்தாகவேண்டும் என அவர் உறுதி கொண்ட
தும் புதிதல்ல. சகோதரப் பிரஜைகளைக் காப்பதே தங்கள்
கடன் என்று உலகத்தில் எல்லாச் சமயத் தலைவர்களும், எல்
லாக் காலங்களிலும் பிரதிக்ஞை செய்து வந்திருக்கின்றனர்.
ஆனுல் இந்தப் பலனை அடைவதற்குத் தற்கால விஞ்ஞான
மும், தொழில் நுட்ப சாஸ்திரமும், புதிய சாதனங்களை மக்
களுக்கு அளித்திருக்கின்றன. இவைகள் மூலம் பெரிய அள
வில் பொறுப்புள்ள முறையில் செயல் புரிந்து வறுமையையும்,
அநீதியையும், ஒழிப்பது அரசியல், பொருளாதாரத் துறை
களில் சாத்தியம்.

நவீன தொழில் நுணுக்கங்களில் பல அம்சங்களைப் பற்றி
காந்திக்குச் சந்தேகமிருப்பினும், நியாயம் அடைவதற்கான
சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்பதை மக்கள் உணரும்படி
செய்வதிலேயே இந்தியாவுக்கு வந்ததும் அவர் முயற்சி செய்
தார். இந்தியாவிலுள்ள ஏழைகளில் தானும் ஒருவன் என்
பதைக் காட்டுவதற்காக அவர் குடியானவன் மாதிரி எளிய
உடை அணிந்தார். ஹிந்துஸ்தானியில் பேசினுர். மூன்ரு
வது வகுப்பு ரெயில் வண்டியில் பிரயாணம் செய்தார். (அது
வும் நாலாவது வகுப்பு இல்லாததனுல் மூன்ரும் வகுப்பில்
பிரயாணம் செய்வதாகக் கூறினுர்.) கிராமக் குடிசைகளில்
வாழ்ந்தார். "கிராமத்திற்குச் செல்லுங்கள்" என்பதே
படித்த இளைஞர்களுக்கும், மேற்கத்தி பாணியில் அமைந்த
வீடுகளில் வசித்த, அவர்களது தலைவர்களுக்கும் அவர் செய்த
உபதேசம். ரஷ்யப் பிரபுக்கள் அந்நாட்டுக் குடியானவர்
களுடன் தொடர்பின்றி வாழ்ந்ததுபோல, இந்தியாவிலுள்ள
600,000 கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கையில் ஒன்
ருமல் இந்தத் தலைவர்கள் வாழ்ந்ததனுல்தான் அவர்களை
யும், கிராமங்களுக்குச் செல்லுங்கள் எனக் காந்தி போதித்
தார்.

பெரிதும் படித்தவர்கள், மேல்குடிப் பிறந்தோர்
அடங்கிய கட்சியாகவே காங்கிரஸ் இருந்தது என்று காந்தி
மனச்சங்கடம் அடைந்தார். கிராம மக்களுடன் காங்கிர
சுக்குத் தொடர்பே இல்லையென்று கூறிவிடலாம் சுய ஆட்சி
அல்லது சுயராஜ்யம் அடைவது தவிர அதற்கு வேறு திட்டம்
ஏதுமில்லை. அதையும் கூட்டங்கூடுவது, விண்ணப்பங்கள்
அனுப்புவது மூலமே அடைந்துவிடலாம் என்று எண்ணினர்.
"புதுடெல்லியில் மாளிகைகளும், அதற்கருகாமையிலேயே
ஏழைத்தொழிலாளர்கள் வசிக்கும் பொந்துகள் போன்ற
குடிசைகளும் இருந்தன. இந்த நிதர்சனமான ஏற்றத்
தாழ்வு சுதந்திர இந்தியாவில் ஒருநாள் கூட நீடிக்காது.

சுதந்திர இந்தியாவில் பணக்காரர்களுக்குள்ள எல்லா உரிமைகளையும், ஏழைகள் அநுபவிப்பர்'. இவ்வாறு காந்தி காங்கிரசுக்கு எச்சரிக்கை செய்தார்.

காங்கிரசின் வருஷாந்தரக் கூட்டத்திற்கு காந்தி முதல் தடவையாக வந்த பொழுது, காங்கிரஸ் முகாமிலுள்ள கக்கூஸ்கள் சுத்தம் செய்யப்படாமலிருந்ததைக் கண்டார். இந்த வேலையைத் தீண்டப்படாதவர்கள் செய்யவேண்டுமெனச் சக காங்கிரஸ் ஊழியர்கள் அவரிடம் கூறியதும், ஒரு துடப்பத்தை எடுத்துக்கொண்டு, தாமே அதைச் சுத்தம் செய்தார்.

அவர் விரும்பிய புரட்சி முதலில் புரட்சிவாதியை சீர்திருத்தவேண்டும். ஆக்கத்திறன் உள்ள படிப்பாளிகள் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு கட்டுப்பாடாக, கிராமசேவை செய்யவேண்டும். இதனுடன் விழிப்படைந்த விவசாயிகள், ஆலைத்தொழிலாளிகள் இரு சாராரின் சக்தி ஒன்றுபடவேண்டும். இந்த ஒன்றுபட்ட ஒத்துழைப்பின் மூலம், ஜனநாயக முறையில் அமைதியாகப் புரட்சி செய்தால், ராமராஜ்யம், சுயராஜ்யம் இரண்டும் பெறலாம்-அதாவது நன்முறை ஆட்சி-சுய ஆட்சி இரண்டும்.

தென் ஆஃபிரிக்காவில் அவர் உருவகப்படுத்திய இரு அம்சங்களை அதன் அரசியல் செயல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி கொஞ்சம் கொஞ்சமாகக் காங்கிரசை இசைய வைத்தார். நிர்மாண வேலையும் சாத்விக எதிர்ப்பும்தான் அவர் தென் ஆஃபிரிக்காவில் கண்டுபிடித்த இரு புது சாதனங்கள். மேலும் அவர் ஒரு பதினான்கு அம்சத் திட்டத்தையும், காங்கிரஸ் திட்டத்தில் சேர்த்தார். தீண்டாதார்களுடன் நெருங்கிப் பழகுவதன் மூலம் தீண்டாமையை ஒழித்தல், எல்லா மதக் கொள்கைகளையும் அநுமதித்தல், சுகாதாரம், பெண்கள் அந்தஸ்தை உயர்த்துவது, கிராமக் கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பது, கைநூலால் ஆக்கப்பட்ட கதர்த் துணியை உபயோகித்தல், தினசரி நூல் நூற்றல் மூலம் ஜனங்களிடையே ஜனநாயகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தல்-இவைகள் இந்தப் பதினான்கு அம்சத் திட்டத்தில் சில. புரட்சி பூரணமாக ஏற்படவேண்டுமானால் இம்மாதிரித் திட்டத்தை மேற்கொள்வது அவசியம் என அவர் நம்பினார்.

இந்தத் திட்டத்தைத் தமது சொந்த வாழ்க்கையில் நிறைவேற்றி, ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறச்செய்தால், இந்தியாவில் உள்ள பணக்காரர், ஏழை யாவரும் ஜனநாயகப் பழக்கங்களை மேற்கொண்டு, ஜனநாயக ஸ்தாபனங்களையும் அமைப்பர் என்று காந்தி நினைத்தார். ''இந்தியாவை ஆங்கிலேயர் கைப்பற்றவில்லை. நம் நாட்டை நாம் அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம். நம்மை நாம் ஆளக் கற்றுக்கொண்டுவிட்டால், அதுதான் சுயராஜ்யம். ஆகையால்



சுயராஜ்யம் அடைவது நம் கையில் இருக்கிறது.'' இவ்வாறு காந்திஜி கூறினார்.

சட்ட மறுப்பை ஆரம்பிப்பதிலும், காந்தி தாமதம் செய்யவில்லை. பீஹாரில் முதலாளிகளால் சுரண்டப்பட்ட அவுரித் தொழிலாளர்கள் தங்களது அவல நிலை பற்றி காந்தியிடம் தெரிவித்ததும், அவர்களுடைய நிலைபற்றி கவனித்து விசாரணை செய்ய முடிவு செய்தார். ஆனால் இந்த ஜில்லாவைவிட்டு வெளியேறும்படி காந்திக்கு பீஹார் அதிகாரிகள் உத்தரவிட்டனர். அந்த உத்தரவை அவர் மீறினார். அரசாங்கம் அவரைக் கைது செய்தது. தான் குற்றவாளி என விசாரணையின்போது ஒப்புக்கொண்டார்.

அவர் கைதானது பற்றி அந்த ஜில்லாவே கொதித்தெழுந்ததனால் அவரை ஆட்சியினர் விடுதலை செய்தனர். நில உரிமையில்லாத இருபதினாயிரம் குடியானவர்களிடமிருந்து வாக்குமூலங்கள் வாங்கினார். அப்புறம் அரசாங்கமே விசாரணைக் கமிட்டி அமைக்க இசைந்தது. இறுதியில் மோசமான குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டன.

முதல் மகா யுத்த காலத்தில் இந்தியாவுக்கு விரிவான அரசியல் சீர்திருத்தங்கள் வழங்குவதாக பிரிட்டிஷார் வாக்களித்திருந்தனர். ஆனால் 1919இல் அவர்கள் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. அதற்குப் பதிலாக மக்களின் பிரஜா உரிமைகளைக் கட்டுப்படுத்திப் பல்வேறு தடைகளை விதித்தனர். காந்தி உடனே நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். ''இந்தச் சட்டங்களை அமைதியாக மீறுவோம். போராட்டத்தில் நாம் உண்மையாக நடந்து கொள்வோம். உயிருக்கோ, தனி நபருக்கோ, சொத்துக்கோ ஊறு விளைவிக்க மாட்டோம் என மனப்பூர்வமாகச் சபதம் செய்கிறோம்.'' இம்மாதிரிப் பிரதிக்ஞையை மேற்கொள்ளுமாறு நாட்டினரை அழைத்தார்.

இந்தச் சோதனையில் ஈடுபடக் காங்கிரசே இணங்கிற்று. தேசத்தினரிடையே உற்சாகம் பெருகிற்று. இந்த உற்சாகத்தைப் பலாத்காரமாக அடக்க பிரிட்டிஷார் முன்வந்தனர். அமிருதசரசில் ஒரு மக்கள் கூட்டத்தினர் கலைந்து போக மறுத்தனர். அங்கே ராணுவ அதிகாரம் வகித்த ஒரு தளபதி கூட்டத்தை நோக்கிச் சுடும்படி தனது சிப்பாய்களுக்கு உத்தரவளித்தான். ஆயிரம் பேருக்குமேல் இந்த ரணகளத்தில் உயிர் துறந்தனர்.

பிரிட்டிஷாருடன் பூரண ஒத்துழையாமை செய்யும்படி மக்களைக் காந்தி அழைத்தார். இந்தத் திட்டப்படி பிரிட்டிஷ் பட்டங்கள், பதவிகள், சாமான்கள் யாவற்றையும் நாட்டினர் பகிஷ்கரிக்க வேண்டும். ''சாத்வீக ஒத்துழையாமைக்குச் சந்தர்ப்பமளித்துச் சோதனை செய்து பார்க்குமாறு

பலாத்காரத்தில் நம்பிக்கையுள்ளவர்களையும் அழைக்கின்றேன்'' எனப் போர்த்துடிப்பு மிக்க வங்காள பயங்கர வாதிகளை நோக்கிக் கூறினார்.

இந்தியாவில் சாத்விக எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் விரும்பிச் சிறை செல்ல ஆரம்பித்ததும், இங்கே பெருகி வரும் போராட்டத்தைப் பற்றிய விவரம் ரஷ்யர்களுக்கு எட்டியது. இந்தச் சம்பவம் டிராட்ஸ்கியின் உள்ளத்தைக் கவர்ந்தது. இந்தியாவில் புரட்சி நிலைமை எப்படிப் பெருகி வருகிறது என்பதைப் பற்றி கம்யூனிஸ்ட் மத்தியக் கமிட்டிக்கு 1919 இல் சமர்ப்பித்த ஒரு யாதாஸ்தில் டிராட்ஸ்கி சுட்டிக் காட்டினார்; இனி ரஷ்ய கம்யூனிஸம் மேற்கத்தி நாடுகளைவிட்டு கிழக்கத்தியரை ஊக்குவிப்பதில் ஈடுபட வேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

அக்காலத்து சோவியத், ஹங்கேரி எனும் நாட்டில் பிரவேசிப்பதைவிடச் செஞ்சேனை இந்தியாவுக்குச்செல்லுவது சுலபம், சீக்கிரமும் பலன் காணலாம் என டிராட்ஸ்கி எண்ணினார். ஒரு குதிரைப்படை அமைத்து, அதை ஆசியாவில் மத்தியப் பகுதி மூலம் இந்தியாவுக்கு அனுப்பி, காலனி ஆட்சிக்குட்பட்டிருந்த அந்நாட்டினரை பிரிட்டிஷாருக்கு எதிராகக் கிளம்புவதற்கு உதவி புரியலாம் என ஒரு செம்படை அதிகாரி திட்டம் வகுத்திருந்தான். இந்தத் திட்டத்தை டிராட்ஸ்கி கம்யூனிஸ்ட் மத்யக் கட்சியின் பரிசிலனைக்கு அனுப்பி வைத்தார்.

ஆனால் காந்தி தமது நூதனமான முறைகள் மூலம் நல்ல பயனடைந்து வந்தார் எனத் தோன்றிற்று. ஒரே மூச்சில் சுதந்திரமடைந்து விட இந்தியா தயாராயிருக்கிறது என்பதை இளைஞர் நேரு சிறையிலிருந்தபடியே உணர்ந்தார். சாத்விக எதிர்ப்புச் செய்ததற்காக ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட இந்தியர்கள் சிறைத் தண்டனை பெற்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உத்தரப் பிரதேசத்தில் ஒரு காங்கிரஸ் ஊர்வலத்தினர் கலகம் செய்தனர். இந்தக் கலவரத்தில் இருபத்திரண்டு போலீசாரை மக்கள் கொன்றனர். மிகுந்த ஏமாற்றமடைந்த காந்தி எதிர்ப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு உண்ணாவிரதம் மேற்கொண்டார். கிராமாந்தரங்களில் மீண்டும் நிர்மாணப் பணி புரியும்படி காங்கிரஸைக் கேட்டுக் கொண்டார். ''சாத்விகப் போராட்டத்திற்கான கட்டுப்பாட்டை இந்தியர் அடைந்துவிட்டனர் என்று நான் நம்பியதில், ஹிமயம் போன்ற அளவு பெருந்தவறு செய்துவிட்டேன்'' என அவர் கூறினார்.

இந்தப் போராட்ட நிறுத்தத்தைப் பற்றிச் சிறையில் கேள்விப்பட்ட நேருவும் அவரது சகாக்களும் ஆத்திரமடைந்தனர். ஆனால் காந்தி உற்சாகமாகவே இருந்தார். அவர்



ஆறு ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். ''பறவை மாதிரி ஆனந்தமாக வாழ்கிறேன். எம். கே. காந்தி, 827-ஆம் நெம்பர் கைதி'' எனச் சிறையிலிருந்து சந்தோஷமாக எழுதினார்.

''தீயுடன் பழகுகிறேன் என்பதை நான் அறிவேன், எனினும் எதற்கும் துணிந்து செயல் புரிந்தேன். என்னை விடுதலை செய்தால், மீண்டும் அதையே செய்வேன்.'' இவ்வாறு காந்தி நீதிபதியிடம் வாக்குமூலம் அளித்தார். ஆனால் 1924-இல் அவர் விடுதலையடைந்ததும், இவ்வாறு செய்யவில்லை. மீண்டும் போராட்டம் தொடங்கி, கஷ்டத்தைப் பொறுத்துக் கொள்வதெனில் இன்னும் சில ஆண்டுகளுக்கு கிராமங்களில் நிர்மாணப் பணி புரிய வேண்டுமென அவர் முடிவு செய்தார். ராணுவத்தினர் அணிவகுத்துச் செல்வதும். பலவித ராணுவத் தந்திரங்கள் பயிலுவதும், போர் முறைக்கு எப்படி அவசியமோ, அவ்வாறே நிர்மாணப் பணி புரிதல் அஹிம்சைப் போராட்டத்திற்கு அவசியம் என நம்பினார்.

உடனடியாக சுதந்திரம் அடைய முழுப் போராட்டம் தொடங்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறிய குணதோஷ விமர்சனங்களைக் காந்தி நிராகரித்தார். பிரிட்டிஷாரை வெளியேற்றுவது மட்டும் அவர் நோக்கமல்ல. இந்தியர் சுய ஆட்சி நடத்துவதற்குத் தகுதிபெறும் வகையில் அந்நியரை அப்புறப்படுத்த வேண்டும் என்பதே அவர் எண்ணம். ''ஆங்கிலேயரல்லாமல் ஆங்கில ஆட்சி நடத்துவது'' என்பதைவிட மேலான நிலையை அடையவே அவர் விரும்பினார். இம்மாதிரி ஆங்கில ஆட்சி ''புலியல்லாது புலிக்குணம் படைத்திருப்பதற் கொப்பாகும்'' என அவர் கருதினார்.

''பெரியதோர் நாட்டு மக்களிடையே எல்லாத் துறைகளிலும், சாத்விக முறையில் தார்மிகப் புரட்சி ஏற்பட வேண்டும். இந்தப் புரட்சியில் இறுதியில் ஜாதி வித்தியாசம், தீண்டாமை போன்ற மூடப் பழக்கங்கள் மறைந்துவிடும். ஹிந்து, முஸ்லிம் வேற்றுமை ஒழிந்துவிடும். ஆங்கிலேயர், ஐரோப்பியர் மீதிருந்த வெறுப்புணர்ச்சியை மறந்துவிட வேண்டும். ஜாதி, வர்க்க வித்தியாசங்களற்ற சமூகத்தை அமைப்பதற்கான சமூகப் புரட்சி தொடங்க வேண்டும். சுய ஆட்சி அதிகாரமுள்ள ஜனநாயக முறையில் அமைந்த கிராமக் குடியரசுகள் தோன்ற வேண்டும்.'' இவைதான் சாத்விகப் புரட்சி மூலம் காந்தி அடைய விரும்பிய நலன்கள்.

சுதந்தரத்திற்கு ஆசைப்படும் காங்கிரஸ் அஹிம்சைக் கொள்கைகளை அநுஷ்டிக்க வேண்டும். ''இப்போது பல காங்கிரஸ் தலைவர்கள் நாட்டுப் பணி என்று வாயால் சொல்லி

விட்டு, அவ்வாறு செயல் புரியாமலிருக்கின்றனர். இந்த
நிலை பூரணமாக மாற வேண்டும். இந்த மாற்றம் ஏற்படா
விடில் நாம் பிறந்த சமயம் இருந்ததைவிட, சாகும்
தறுவாயில் நம் நாடு அதிகமாக இன்ப வாழ்க்கை அநுபவிப்
பதை நம் கண்ணால் பார்க்க முடியாது'' என அவர் கூறினார்.
மனிதனைத் தீயவனுக்கக் கூடிய அதிகாரத்தை வகிக்கை
யில், திடீரெனக் காங்கிரஸ் தான் வகுத்த கொள்கைகளை
அநுஷ்டானத்தில் நிறைவேற்றக் கற்றுக்கொண்டுவிட முடி
யாது; நமது வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் சொல்
லும், செயலும் ஒன்றுபட்டாலொழிய சமூகப் புரட்சியை
எளிதில் நிகழ்த்திவிட முடியாது என்றே அவர் நினைத்தார்.
1930-இல் மக்களின் புரட்சி வேகம் நிதானமாகப் பெருகி
வந்தது. பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தின் பிரதிநிதி
கள் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தனர்.
அவர்கள் இந்தியத் தொழிலாளர் இயக்கத்தில் ஓரளவு
செல்வாக்கு அடைந்தனர். இந்தியாவிலே நிலையாக
வாழ விரும்பிய சில பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் உள்பட
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சதி செய்ததாகக்
குற்றம் சாட்டப்பட்டு, விசாரணைக்குப் பின் நீண்ட காலச்
சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.
சிறை செல்லுதலுக்கு மதிப்பை மக்கள் மனத்தில் ஏற்
படச் செய்தார் காந்தி. இந்த மதிப்பே, கம்யூனிஸ்டுகள்
பலம் பெருகுவதற்கு உதவியாயிருக்கிறது என்பதை அவர்
உணர்ந்தார். மேலும் காங்கிரசில் போர்த் துடிப்புள்ளவர்
கள் காந்திய முறையை ஆட்சேபிக்கத் தொடங்கினர். உதா
ரணமாகத் தம் திட்டப்படி சிறை சென்ற சுபாஷ் போஸ்
போன்றவர்களைக் கூறலாம். சில காலம் போராடுவதும்
சில காலம் நிர்மாண வேலையில் ஈடுபட்டிருப்பதுமான திட்
டத்தின் அரசியல் அதிபன் என்கிற முறையில் மற்றுமோர்
போராட்டத்தைத் துவக்கத் தக்க தருணம் வந்துவிட்டது
என்பதைக் காந்தி உணர்ந்தார்.
1930-ஆம் ஆண்டு 26-ஆம் நாளன்று காங்கிரஸ் சுதந்திரப்
பிரகடனம் செய்தது. அதன் ஆரம்ப வாசகம், அமெரிக்கர்
கேட்டுப் பழக்கப்பட்ட சொற்றொடர்தான். ''இந்திய மக்
களின் உரிமை பராதீனம் செய்யமுடியாதது என நாங்கள்
நம்புகிறோம்..'' 1776 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அமெ
ரிக்கச் சுதந்திரப் பிரகடனத்திலிருந்து கையாளப்பட்ட இந்த
வாசகம் நாடுமுழுவதிலும் நடந்த பிரம்மாண்டமான கூட்டங்
களில் படிக்கப்பட்டது. ''இந்த உரிமைகளை எந்த அரசாங்க
மாவது மக்களிடமிருந்து பறித்து, அவர்களைத் துன்புறுத்து
மானால் அந்த அரசாங்கத்தை அகற்றவோ, மாற்றவோ
அவர்களுக்கு மேலும் உரிமை உண்டு.''



புதிய போராட்டத்தை எவ்வாறு துவக்குவது என்ப
தற்குக் காந்தியின் தாக்கீதை எதிர்பார்த்து நின்றனர் இந்திய
மக்கள். ராஜப் பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில், குறைந்த
பட்சக் கோரிக்கைகளை வகுத்திருந்தார் காந்தி. அரசியல்
கைதிகளை விடுதலை செய்தல், குடியானவர் நில வரியைக்
குறைத்தல், கிராமங்களில் உப்பெடுப்பதற்கெதிரான தடை
களை நீக்குதல், கிராம வாழ்க்கையைப் பெரிதும் பாதித்த
உப்பு வரியை ரத்து செய்தல்-இவைகள் அவரது கோரிக்கை
களில் சில.
''ஏழை மக்கள் நோக்கில் இந்த வரியே மிகவும் அக்
கிரமமானது என நான் கருதுகிறேன். இந்தியாவில் மிகவும்
ஏழ்மை நிலையிலிருப்பவர்களின் நலனுக்காகவே நாம் சுதந்
திரம் கோருகிறோம். ஆகையால் இந்த உப்பு வரித் தீமையை
ஒழிக்க முற்படுவதன் மூலம் நமது போராட்டத்தைத்
தொடங்குவோம்.'' இவ்வாறு காந்தி தமது நிலையை விளக்
கிக் கூறினார். தமது கோரிக்கைக்கு ராஜப்பிரதிநிதி இணங்
காவிடில் உப்புச் சட்டங்களை மீறுவதுடன், தனது சிஷ்யர்
களையும் அவ்வாறே மீறும்படி அழைக்கப் போவதாகத் தெரி
வித்தார்.
நகரங்களில் வாழ்ந்த காங்கிரஸ் தலைவர்களுக்கு உப்பு
என்றால், அற்பமாகத் தோன்றிற்று. ஆகையால் உப்புச்
சட்ட மறுப்பு பயன்படுமா என்று ஐயமடைந்தனர். ''இது
கேட்டு நாங்கள் குழப்பமடைந்தோம். சாமானிய உப்புக்
காக ஒரு தேசியப் போராட்டம் நடந்தால் அதில் எப்படிக்
கலந்துகொள்ள முடியும் எனக் கலக்கமுற்றோம்.'' இவ்வாறு
நேரு எழுதினார்.
1930 மார்ச் 12-ஆம் தேதி அஹமதாபாதிலுள்ள தனது
ஆசிரமத்திலிருந்து இருநூறு மைலுக்கப்பாலுள்ள கடற்
கரை ஊரான தாண்டி எனும் இடத்திற்கு நடந்து செல்லப்
போவதாக காந்தி அறிவித்தார். அங்கு சென்று பிரிட்டிஷ்
சட்டத்தை லட்சியம் செய்யாமல் உப்பு உற்பத்தி செய்யப்
போவதாகத் தெரிவித்தார். ''உப்பு எனும் சொல் திடீ
ரென மர்மம் வாய்ந்த, சக்தி வாய்ந்த சொல்லாக மாறி
யது'' என இச்சமயத்தில் நேரு கூறினார்.
குறிப்பிட்ட தினத்தன்று தமது அருமையான ஆசிர
மத்தை விட்டு, துரிதமாகச் சந்தில் நுழைந்து வெளியேறினார்.
ஸ்வராஜ்யம் அடைந்தாலொழிய ஆசிரமத்திற்குத் திரும்புவ
தில்லையென்று சபதம் செய்துவிட்டுப் புறப்பட்டார். ''பட்
டினி கிடப்பவர்கள், உடுக்க உடையற்றவர்கள், வேலையில்
லாதவர்கள் சார்பாகத் தொண்டுபுரிகிறோம். கடவுள்
நாமத்தைத் துதித்துக்கொண்டு செல்லுகிறோம்'' எனக் காந்தி

தனது யாத்திரையின் புனிதத் தன்மையைப் பற்றிக் குறிப்
பிட்டார்.

இருபத்துநான்கு நாட்களுக்கு நாடு பிரமிப்படைந்து
நிகழ்ச்சிகளைக் கவனித்து வந்தது. தாண்டி செல்லும் வழியில்
தாங்கள் மதித்து வகித்து வந்த கிராம அதிகார பதவிகளை
இருநூறு இந்தியர் துறந்துவிட்டுப் போராட்டத்தில் கலந்து
கொண்டனர். வழி நெடுகிலும், அநேக விடங்களில் இரு
மருங்கிலும் பலவகைத்தொழில் புரிந்த லட்சக்கணக்கான
மக்கள் மகாத்மா கையை வீசிக்கொண்டு, கைத்தடியைச்
சுழற்றிக்கொண்டு, தமது நூதனமான புரட்சி சகாக்களுடன்
ஹாஸ்யமாகப் பேசிக்கொண்டும் செல்வதைப் பார்ப்பதற்
காகக் காத்திருந்தனர்.

ஏப்ரல் ஐந்தாம் தேதி இரவு கோஷ்டி கடற்கரையை
அடைந்தது. ''ஆண்டவன் அருள் இருப்பின் நாளைக் காலை
6.30 மணிக்கு எனது சகாக்களுடன் சட்ட மறுப்பை உண்மை
யிலேயே தொடங்கலாம் என எதிர்பார்க்கிறேன்'' என்று
காந்தி அறிவித்தார். சூரிய உதயமானதும், வழக்கம்போல்
பிரார்த்தனைக் கூட்டம் நடத்திய பிறகு, அவர் கடலில்
நீராடினார். உடனே அருகிலுள்ள உப்பளத்திற்குச் சென்று
ஒருகை உப்பு அள்ளினார்.

ஆண்டவன் அருளிய அலைகடலிலிருந்து ஒருகை உப்பு
அள்ளினார். இது சாமானியச் செயல்தான். ஆனால் இதன்
மூலம் மனிதனால் அமைக்கப்பட்ட சாம்ராஜ்யங்களில் பெரி
தான சாம்ராஜ்யத்தின் கட்டளையை மீறினார். சமீபத்தில்
வெளியான சுதந்திரப் பிரகடனத்தைப் பன்முறை படிப்பதை
விட, காந்தி செய்த இச்சிறு செயல் மூலம் நாட்டுக் குடி
யானவர்கள் சுதந்திரத்தின் பொருளை நன்கு அறிந்துகொண்
டனர். ''திடீரென ஒரு ஊற்றுத் தோன்றி அதிலிருந்து நீர்
பீறிட்டு வருவது போலிருந்தது. மக்கள் உற்சாகம் கட்டுக்
கடங்காமல், பெருக்கெடுத் தோடுவதையும் உப்பு
உற்பத்தி முறை காட்டுத் தீ போல் பரவி வருவதையும் கண்
டோம். இந்த உப்புச் சட்டம் மீறுவதைப் பற்றி முன்பு
எங்கள் சந்தேகத்தை வெளியிட்டது பற்றி வெட்கித் தலை
குனிந்தோம்'' என நேரு தன் மனத்திலிருந்ததை வெளியிட்
டுக் கூறினார்.

நேரு உள்பட ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்
பட்டாலும், காந்தி சுதந்திரமாகவே இருந்தார். ஒரு அர
சாங்க உப்பளத்திலிருந்து சாத்விகமாக உப்பை தாமும்,
தமது படையினரும் எடுக்கப்போவதாக காந்தி, ராஜப்பிரதி
நிதிக்கு எழுதினார். இரண்டு நாட்களுக்குப் பின் அவர்
கைது செய்யப்பட்டதனால், சாத்விக எதிர்ப்பு மேலும் பரவி
யது. சீக்கிரத்தில் 12 ஆயிரம் முஸ்லிம்கள் உள்பட 100,000



பேர் சிறை வாழ்க்கை மேற்கொண்டனர். இதையும் விட
அதிகமான மக்கள் குதிரைப் போலீஸாரின் தடியடியை
அமைதியாக அநுபவித்தனர்.

காந்தி திட்டமிட்ட உப்பள முற்றுகை அவர் சிறை
சென்ற பின்பும் நீடித்து நடந்தது. தலைவரின்றி நடந்த
இந்தப் போராட்டம் இந்தியப் புரட்சி வரலாற்றில் இடம்
பெறத்தக்க வீரச்செயல்களில் ஒன்றாகும். அப்பழுக்கற்ற
அஹிம்சையைப் பின்பற்றுவதாகப் பிரதிக்ஞை செய்து
கொண்ட 25 ஆயிரம் தொண்டர்கள் இந்தப் பாமர மக்கள்
சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர். முள்வேலியால் தடுக்கப்
பட்ட பகுதியில் ஆயுதம் தாங்கிய போலீசார் காவல் புரிந்
தனர். இதையும் மீறிச் சிறுசிறு கோஷ்டிகளாகத் தொண்டர்
கள் முன் சென்றனர். மக்கள் அலையலையாக வரப் போலீசார்
அவர்களைத் தடியால் அடித்து வீழ்த்தி வந்தனர்.

கொஞ்ச நேரத்தில் ரத்தம் தோய்ந்த தரையில், அடி
பட்டதனால் மயக்கமுற்றவர்கள் உடல்கள் கிடந்தன. அப்படி
யும், காந்தியவாதிகள் தடை செய்யப்பட்ட இடத்தை
நோக்கி விரைந்தனர். தங்களைக் காத்துக்கொள்வதற்காக
அவர்கள் கையைக்கூட உயர்த்தாமல் சென்றனர். அன்று
பொழுது சாய்வதற்குள் முந்நூறு பேர் அபாயகரமான காய
மடைந்தனர். இருவர் உயிர் துறந்தனர். மயிரிழை கூடப்
பிசகாமல் அஹிம்சை முறையைப் பின்பற்றினர் தொண்
டர்கள். இது கேட்டுச் சிறையிலிருந்த காந்தி மட்டற்ற
மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால் காந்திக்கு மகிழ்ச்சியளித்த மற்றோர் செய்தி,
''எல்லைக் காந்தி'' என அழைக்கப்பட்ட கபார்கானின் தீரச்
செயல்தான். மிக உயரமான, இந்தப் பழுத்த முஸ்லிம் தலை
வர் ஏராளமான முரட்டுப்பட்டாணியர்களை கட்டுப்பாடு
மிக்க சாத்விக எதிர்ப்பு முறைக்குட்படுத்தி அதில் வெற்றி
கண்டதுதான் காந்தி பரவசமடைந்ததற்குக் காரணம். பரம்
பரையாக பலாத்கார முறையில் பழக்கப்பட்ட இவர்கள்,
போலீசார் மிருகத்தனமாகத் தங்களை நடத்தியபோதிலும்
அவர்களை எதிர்த்துத் தாக்கவேயில்லை.

''சிறையில் வதியும் மகாத்மாதான் இந்தியாவின் ஆன்
மாவின் அவதாரமாக விளங்குகிறார் என்பதை பகிரங்கமாக
ஒப்புக்கொண்டால், விவரிக்க இயலாத அபாயம் நிகழ்வதை
இன்றுகூடத் தவிர்த்துவிடலாம்.'' இவ்வாறு லண்டன்
''டெய்லி ஹெரால்டின்'' இந்திய நிருபர் தனது பத்திரி
கைக்குச் செய்தி அனுப்பினார்.

பின்னர் ஹாலிஃபாக்ஸ் பிரபுவான ராஜப்பிரதிநிதி
இர்வின் பிரபு நிபந்தனையின்றி காங்கிரஸ் தலைவர்களை விடு
தலை செய்தார். தன்னைக்கண்டு பேசும்படி காந்தியை அழைத்

தார். ஆனால் இந்தச் செய்தி வின்ஸ்டன் சர்ச்சிலுக்குத்
திருப்தியளிக்கவில்லை.

''ராஜத்துரோக மனப்பான்மை கொண்ட காந்தி எனும்
பாரிஸ்டர் இன்று, பக்கிரிபோல் பாவனை செய்துகொண்டு—
இம்மாதிரிப் பேர்வழிகளைக் கீழ் நாடுகளில் சகஜமாகக் காண
லாம்—அரை நிர்வாணமாக ராஜப்பிரதிநிதியின் அரண்
மனைப் படியேறி வருகிறார். அப்படி வரும்போதும் அத்து
மீறிய சாத்விகச் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துகிறார்.
மன்னர்பிரான் பிரதிநிதியுடன் சம அந்தஸ்து உரிமையுடன்
பேரம் பேச வருகிறார். இந்தச் செய்தி அச்ச மூட்டுவதுடன்
கேட்பதற்கு அருவருப்பாயுமிருக்கிறது.'' இவ்வாறு சர்ச்சில்
எழுதினார்.

சகிப்புத்தன்மையும், காந்திபோலவே மதப்பற்றும்
உள்ள இர்வினுடன் காந்தி உடன்பாடு செய்துகொண்டார்.
போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்திய
சுய ஆட்சி பற்றி லண்டனில் நடக்கவிருந்த வட்டமேஜை
மகாநாட்டிற்குச் செல்ல இசைந்தார். (காங்கிரஸ் பிரதிநிதிக
ளில்லாத முதல் வட்ட மேஜை மகாநாடு முந்திய ஆண்டில்
நடந்தது).

இந்திய அரசாங்கத்தில் இந்தியரும் பங்கு கொள்வதற்
கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள பிரிட்டிஷார்
தயாராயிருப்பது போல் இந்தத் தடவை காணப்பட்டது.
ஆனால் காந்தியின் குறைந்தபட்சக் கோரிக்கைகளுக்கு இணங்க
அவர்கள் தயாராயில்லை. கடைசியில் மகாநாடு தோல்வி
யுற்றது என்று காந்தி அறிவிக்க வேண்டிவந்துவிட்டது.
மேலும் போராடவும் தொண்டு புரியவும் அவர் இந்தியாவுக்
குத் திரும்பினார். இர்வின் இதற்குள் தாய்நாடு திரும்பிவிட்
டார். அவருக்குப் பின் பதவிக்கு வந்தவருக்கு இர்வினிடம்
காணப்பட்ட தூரதிருஷ்டியில்லை. உறுதியாயிருக்க வேண்டு
மெனச் சர்ச்சில் திட்டப்படி அமைந்திருந்தது ஆட்சியினரின்
போக்கு. காந்தி தாய் நாட்டிறகுத் திரும்பிவந்த சமயத்தில்
அநேக காங்கிரஸ் தலைவர்கள் சிறையிலடைக்கப்பட் டிருப்ப
தைக் கண்டார்.

இந்த நிலையில் தீண்டாதாருக்குத் தனித்தொகுதி முறை
அளித்திருப்பதாக பிரிட்டிஷார் அறிவித்தனர். தன் உயி
ரைக் கொடுத்து, இந்த முறையை எதிர்ப்பதாக லண்டனி
லிருக்கையில் காந்தி சபதம் செய்து கொண்டிருந்தார். இந்
தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு காலனி ஆட்
சியை நேரடியாக எதிர்ப்பதிலிருந்து, பழைய அரசியல், சமூ
கப் புனரமைப்புப் பணிக்கு நாட்டினர் கவனத்தைத் திருப்
பினார்.



''சாகும்வரை உண்ணாவிரதத்தை'' மேற்கொண்டார்.
பிரிட்டிஷாரின் இந்தத் திட்டம் நிலைக்குமானால், இந்தியா
வில் என்றென்றும், ஜாதிப்பிளவு நிலைத்துவிடும் என்றும்,
தீண்டாதார் என்றென்றும், ஜாதிப்பிரஷ்டர்களாகவே இருப்
பர் என்றும், அவர் நம்பினார். ஆகையால் பிரிட்டிஷார்
இந்தத் திட்டத்தை ரத்து செய்தால்தான் உண்ணாவிரதத்
தைக் கைவிடமுடியும் என்று தெரிவித்தார். வாளுக்குப் பதி
லாக அஹிம்சைவாதி உபயோகிக்கக் கூடிய கடைசி ஆயுதம்
உண்ணாவிரதம்தான் என அவர் கூறினார்.

ஆறு நாட்களுக்கு நாடெங்கும் மக்கள் செயல் ஆர்வம்
ஓங்கி காந்திக்கு ஆதரவளித்தனர். முதல் முறையாக, ஹிந்து
ஆலயங்கள் தீண்டாதாருக்குத் திறந்துவிடப்பட்டன. ஜாதி
வித்தியாசத்தை ஒழிப்பதென உயர்ஜாதித் தலைவர்களும்,
தீண்டாதார் தலைவர்களும், மனம் ஒப்பி உடன்பாடு செய்து
கொண்டனர்.

அரசியல் போராட்டத்தைக் காந்தி நிறுத்தியதும், தாம்
மனமொடிந்து போனதாக முதலில் நேரு தெரிவித்தார்.
''தனது இறுதித் தியாகத்திற்கு இந்தச் சில்லறைப் பிரச்
னையை அவர் தேர்ந்தெடுத்தது'' பற்றி, தன் மனவேதனை
யைத் தெரிவித்தார் நேரு. ஆனால் உண்ணாவிரதத்தால்
அபார எழுச்சி ஏற்பட்டதை உணர்ந்து, எரவாடா சிறையி
லிருந்து கொண்டு, ''என்ன ஜாலவித்தை செய்துவிட்டார்
இந்தச் சிறுமனிதன். மக்கள் உள்ளத்தை உருக்கும் வகையை
இவர் எவ்வளவு சிறப்பாக அறிந்திருக்கிறார்'' என்று எழு
தினார்.

பிரிட்டிஷ் மந்திரிசபை என்ன செய்யப்போகிறது என்ப
தையே பொறுத்திருந்தது காந்தியின் உயிர். உணவின்றி ஒரு
வாரம் இருந்த பிறகு, நோயாளி அபாய நிலை அடைந்து
விட்டார் என அரசாங்க வைத்தியர்கள் அறிவித்தவுடன்,
தனது பிரதான பகைவனின் உயிரைச் சாம்ராஜ்ய மந்திரி
சபை காப்பாற்றியது. பழைய முடிவை ஆட்சியினர் கைவிட்
டனர்.

''மந்தகதியிலுள்ள மனச்சாட்சியைக் கிளறிவிட்டு,
அன்புமிக்க உள்ளங்களைச் செயல் ஆற்றத்தூண்டுகிறது உண்ணா
விரதம்'' என்று காந்தி கூறினார். தீண்டாதாரை ''ஹரிஜனங்
கள்'' அல்லது ''ஆண்டவனின் குழந்தைகள்'' என்று பெய
ரிட்டார். தனது உயிர் அவர்கள் கையிலிருந்தது என்று கூறி
னார். சில மாதங்களுக்குப் பிறகு சிறையிலிருந்து விடுதலை
செய்யப்பட்டார். வெளிவந்ததும், ஹரிஜனங்கள் சார்பாக
நாடெங்கும் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கால்நடையாகப்
பிரயாணம் செய்தார்.

உப்பு பவனியினால் சுதந்திரம் கிடைத்துவிடவில்லை: ஆனால் இந்திய மக்களிடையே தன்னம்பிக்கை பெருகி வருவதையும், இங்கிலாந்தும் மேற்கத்தி நாடுகளும் தமது இயக்கத்தைப் புரிந்து கொண்டு ஆதரவும் தருவதுமான சூசகங்கள் தென்படுவது கண்டு காந்தி தெம்படைந்தார். 1931-இல் லண்டன் சென்றபோது, அந்நாட்டு மக்கள் அவரை அன்புடன் வரவேற்றதிலிருந்தும் பிரசித்தி பெற்ற அவரது உண்ணாவிரதத்தின்போது, அவரது உயிரைக் காப்பாற்ற பிரிட்டிஷார் கிளர்ச்சி செய்ததிலிருந்தும் இந்தச் சூசகங்களை அவர் நேரிடையாக அறிந்துகொண்டார்.

மகத்தான இரண்டாவது போராட்டத்தின் போது, ஜவாஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு தனது மரணத்தறுவாயில் காந்திக்கு எழுதிய கடிதம் தீர்க்கதரிசனம் வாய்ந்ததா யிருந்தது. ''மகாத்மாஜி, நான் சீக்கிரத்தில் இறந்துவிடுவேன். சுயராஜ்யம் அடைவதை நான் பார்க்கப் போவதில்லை. ஆனால் சுயராஜ்யத்தை நீங்கள் அடைந்து விட்டீர்கள். சீக்கிரம் நாடும் சுயராஜ்யத்தை அடைந்துவிடும்.'' இதுதான் மோதிலாலின் வாக்கு.

அத்தியாயம்—18

# மனிதவர்க்கத்தில் ஐந்தில் ஒரு பங்கினருக்கு சுதந்திரம்

**1933**-இல் போராட்டத்தைக் காந்தி நிறுத்தியது ''தோல்வியை ஒப்புக்கொள்வதாகும்'' என்று மூர்த்தன்யமான நேரடிப் போர் முறையை ஆதரிக்கும் சுபாஷ் போஸ் கூறினார். ஆனால் போராட்டம் நிறுத்தியதற்கு நீண்டகாலத்திற்குப் பின் 1935-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தை பிரிட்டிஷார் இயற்றினர். இதன் மூலம் மாகாணங்களுக்கு பெரிய அளவில் சுய ஆட்சி அளிக்கப்பட்டது. காந்திக்குப் பணிந்து இயற்றப்பட்ட சட்டம் என இதை பிரிட்டிஷார் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், இருபது ஆண்டுகளாகச் சக்தி வாய்ந்த முறையில் காந்தி நடத்திய தேசிய இயக்கத்தின் பயனாகவே இச்சட்டம் இயற்றப்பட்டது என்பதை வெகு



சிலரே மறுப்பர். குறுகிய அளவு வோட்டுரிமையுடன் 1937 இல் மாகாணங்களில் தேர்தல்கள் நடந்தன: முஸ்லிம்கள் பெருவாரியாக இருக்கும் வடமேற்கு எல்லைப்புற மாகாணம் உள்பட ஒன்பது மாகாணங்களில் காங்கிரசுக்கு வெற்றி கிடைத்தது.

காந்தி பதவி ஏற்க மறுத்தாலும், காங்கிரஸ் கட்சியினர் மாகாணங்களில் ஆட்சி அமைத்தனர். முதன் முறையாக அவர்கள் அரசியல் பொறுப்புணர்ச்சி பெற்றனர். இதற்குப் பத்து ஆண்டுகளுக்குப் பின் பிரிட்டிஷார் இந்தியாவை விட்டே வெளியேறினார்கள். இத்துடன் இந்தியப் புரட்சியில் காலனி ஆட்சி எதிர்ப்புப் படலம் முற்றுப் பெற்றது.

தங்களது வர்க்கப் போராட்டப் புரட்சிக்கு காந்தி ஒரு பெருந்தடை என்றே கம்யூனிஸ்டுகள் என்றும் கருதி வந்திருக்கின்றனர். இந்தியாவில் உள்ள காந்தியம் போன்ற சக்திகளை எதிர்க்கும்படி 1939-இல் கூடிய கம்யூனிஸ்ட் இண்டர் நேஷனல், கட்சி அங்கத்தினர்களுக்குக் கட்டளையிட்டது. ஏனெனில் காந்தியம் வாளாயிருத்தலைப் போதித்ததாம்; காந்தியம் வர்க்கப் போராட்டம் நேராது என்று உபதேசித்ததாம்; காந்தியம் பிற்போக்கு முறைகளுக்கு மக்களை அழைத்துச் சென்றதாம். இவ்வாறு கம்யூனிஸ்டுகள் கூறினர்.

சமீபத்தில் 1954-இல் கூட, சோவியத் கலைக்களஞ்சியத்தின் புதிய பதிப்பில் காந்தியைத் தாக்கி எழுதப்பட்டிருந்தது. ''பிற்போக்காளர்'', ''அகாத வட்டி வாங்குவோர் பரம்பரையில் தோன்றியவர்'' ''மதத் துவேஷங்களைப் பயன்படுத்துபவர்,'' ''பழங்காலத் துறவிகளைப் போல் வேஷம் போட்டு ஜனரஞ்சகமாகப் பேசுபவர்,'' தென் ஆஃப்ரிக்காவில் ஜூலுக்களுக்கு எதிராக, ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் தீவிர உதவி புரிந்தவர்'' என்றெல்லாம் அந்தப் பிரசுரத்தில் காந்தியை வர்ணித்திருந்தனர்.

காந்தி உயிருடனிருந்த வரையில், கம்யூனிஸ்டுகளால் பாமர மக்களின் ஆதரவைப் பெறமுடியவில்லை. அதனால் ஏற்பட்ட மனக் கசப்பின் விளைவாக, இவ்வாறு அவர்கள் எழுதியிருக்கக்கூடும். ஆனால் காந்திக்குப் பிறகும், அவர்களுக்கு இந்தியாவில் கணிசமான ஆதரவு எங்கும் கிடைக்கவில்லை. கம்யூனிஸ்டுகளிடம் மக்களுக்கு இருந்த கவர்ச்சிக்குக் கூட காந்தியின் சிறப்புகளில் சில அவர்களிடம் காணப்பட்டதுதான் காரணம். உதாரணமாக அவர் போலவே இவர்களும் அநீதியைக் கண்டு சகிப்பதில்லை. ஏழைகளுடன் ஒன்றுபட்டு வாழ்கின்றனர். தங்கள் கொள்கைக்காகக் கஷ்டங்கள் அநுபவிக்கத் தயாராயிருக்கின்றனர்.

1947-இல் பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு வெளியேறுவதென்று முடிவு செய்ததும், 110 பவுண்ட் கனம் கூட இல்லாத, நீண்ட கைத்தடியும், சத்தியாக்ரஹமும் தவிர வேறு ஆயுதமில்லாத இந்தச் சிறிய ஆகிருதியுள்ள மனிதனே அவர்கள் வெளியேறப் பெரிதும் காரணமாயிருந்தவர் என்ற முடிவுக்கே வர வேண்டியிருந்தது. இது மட்டுமல்ல, இந்தியாவும், பிரிட்டனும், நேசநாடுகள் எனும் அடிப்படையில் பிரிட்டிஷ் காமன்வெல்த் புனர் நிர்மாணிக்கப்பட்டு இயங்குவதற்கும், காந்தி போராட்டம் நடத்திய காலத்தில் கையாண்ட சாத்விக சாதனங்களே காரணம் என்பதிலும் சந்தேகம் இல்லை.

காலனி ஆட்சியை எதிர்த்து நடந்த புரட்சிக்கு எவ்வளவு விசித்திரமான, ஆனால் மகத்தான முடிவு? பல வர்ணப்பட்ட உடை அணிந்த இந்தியப் படை வீரர்கள், ஸ்காட்டிஷ் மலைப் படையினருடன் தோளோடு தோள் அணிவகுத்து நின்று, ''மன்னர் வாழ்க'' எனும் பிரிட்டிஷ் தேசிய கீதத்தை பாண்டு வாத்தியம் மூலம் முழங்கினர். பிரிட்டிஷ் மன்னரின் வெள்ளைச் சின்னம் தாங்கிய கொடி, கொடிமரத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இறக்கப்படுகிறது. உடனே, மத்தியில் காந்தியின் ராட்டையைத் தாங்கிய சுதந்திர இந்தியாவின் மூவர்ணக் கொடி கம்பீரமாக உயர்கிறது. முன்பு புரட்சி வீரர்கள் மட்டும் பாடி வந்த இந்திய தேசிய கீதத்தை இருபடையினரும தங்கள் பாண்டு வாத்தியங்களில் முழக்குகின்றனர்.

இந்தியாவின் பல பாகங்களில் இதே காட்சியை மக்கள் கண்டுகளித்தனர். எங்கும் பிரிட்டிஷ் கவர்னர்கள், அரசாங்க அதிகாரிகள், சாமானிய பிரிட்டிஷார் முதலியோரை உற்சாகமிகுந்த மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர். பிரிட்டிஷ் மன்னரின் நெருங்கிய உறவினரும், வந்தவுடன் தானே கடைசி ராஜப் பிரதிநிதி என அறிவித்தவருமான மவுண்ட்பேட்டன் பிரபுவுக்குக் கிடைத்த வரவேற்பு மற்றெந்த ஆங்கிலேயருக்கும் கிடைக்கவில்லை. மவுண்ட்பேட்டன் நேருவைப் பிரதம மந்திரியாக நியமித்தார். சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக மவுண்ட்பேட்டனை நியமிக்கும்படி நேரு மன்னரைக் கேட்டுக்கொண்டார்.

பிரிட்டனுக்கும், இந்தியாவுக்கும் ஏற்பட்டுள்ள நேசபாவம் நீடித்து வருகிறது. இதனால் கம்யூனிஸ்டல்லாத நாடுகள் நிலையான அமைதியை அநுபவித்து வருகின்றன. இந்த சிறப்பான உறவு நீடித்து வருவதற்கு இரு நாட்டு மக்களும், அவர்களது தலைவர்களும் பெருந்தன்மையுடனும், கண்ணியமாகவும் நடந்துகொண்டு வருவதே காரணம். பிரிட்டனின் காலனி ஆட்சி மிகக் கேவலமான நிலையில் இருக்கை



யில், அது பற்றிய கண்டனக் குரல் முதலில் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில்தான் கேட்டது. பிரிட்டிஷாரிடமிருந்து எவ்வளவோ விஷயங்கள் தெரிந்துகொண்டதாக காந்தி ஒப்புக்கொண்டிருக்கிறார். காலந்தாழ்த்தாமல் கடமை புரிவது, அதிகம் பேசாமல் அடக்கமாயிருப்பது, பொதுஜன சுகாதாரம், சுதந்திரமாகச் சிந்திப்பது, எதையும் நியாயமாக மதிப்பிடுதல் முதலியவைகளைக் குறிப்பாகப் பிரிட்டிஷாரிடமிருந்து கற்றறிந்ததாக அவர் கூறியிருக்கிறார்.

காந்தியின் சாத்விகப். போராட்டம் வெற்றி பெற்றதென்றால் பிரிட்டிஷார் மனச்சாட்சிப்படி நடந்ததுதான் காரணம் என்று அவர்களைப் பாராட்ட வேண்டும். ''இரக்கத் தன்மையற்ற பயங்கர முறைகள், சமரசத்திற்குச் சம்மதிக்காத பிடிவாதம், தாங்கள் தவறே செய்யமுடியாது என்கிற திடநம்பிக்கை-இந்த குணங்கள் பிரிட்டிஷாரிடம் இருந்திருக்குமானால் அவர்கள் எங்களை நசுக்கி இருக்கக்கூடும். பிரிட்டிஷார் போதிய அளவு கடின சித்தமுடையவர்களாயில்லை.'' புரட்சியில் கலந்துகொண்ட காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் இவ்வாறு என்னிடம் கூறினார்.

பிரிட்டிஷார் பல சந்தர்ப்பங்களில் புகழ் பெறத்தக்க சாதனைகள் புரிந்திருக்கின்றனர். தெற்கு ஆசியாவில் தங்களது ஆதிக்கத்தை கண்ணியமாகவும் தீர்மானமாகவும் கைவிட்டது போல, அவர்கள் சரித்திரத்தில் வேறு சம்பவம் எதையும் கூறமுடியாது. இந்தியாவுக்கு சுதந்திரமளித்த பிறகு, பர்மாவையும், இலங்கையையும் விட்டு, அதே பெருந்தன்மையுடன் வெளியேறினர். அவ்வாறே பாகிஸ்தானைச் சிருஷ்டித்தனர். காங்கிரசே இந்தியாவில் பலம் பொருந்திய கட்சி என நிதர்சனமாகத் தெரிந்ததனால் 584 சிற்றரசர்கள் இந்திய யூனியனில் தங்கள் ராஜ்யங்களை இணைப்பதற்கு இசைந்தனர். இந்த ராஜ்யங்களில் சிறியவையும் இருந்தன, பெரியவையும் இருந்தன. தங்களுக்கு உதவிப் பணம் அளிக்கப்படும் என்னும் வாக்குறுதியை நம்பியே இவர்கள் தங்களது ராஜ்ய உரிமைகளைத் துறந்தனர். இந்த உதவிப் பணம் கொடுப்பதற்கு பலமான எதிர்ப்பு இருந்தும் நேரு இந்த வாக்குறுதியை இம்மியும் பிசகாது காப்பாற்றி வந்திருக்கிறார். ஹைதராபாத்திலும், காஷ்மீரிலும் ஆயுதப் போராட்டங்கள் நிகழ்ந்தாலும், காஷ்மீரில் நடந்ததுபோல் பிற ராஜ்யங்களில் நிகழவில்லையென்றே நாம் ஆச்சரியப்படவேண்டும்.

இவ்வளவு பிரமாதமான வெற்றி கிடைத்ததும், 15-8-1947 சுதந்திர தினத்தன்று காந்தி வெற்றிக் கொண்டாட்டம் நடக்குமிடத்திற்கு வெகு தொலைவிலேயே இருந்தார். கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்குப் பதிலாக

அவர் உண்ணா விரதம் மேற்கொண்டு, நூற்பதிலும்,
பிரார்த்தனையிலும் ஈடுபட்டிருந்தார். இந்தியாவைத் துண்
டாடியதும், அதற்குப் பின் நாட்டினருக்குள்ளேயே கலகங்
கள் நிகழ்ந்ததும் தோல்வியடைந்ததற் கறிகுறிகள் என
அவர் கருதினார்; ''என்னைத் துண்டு போடுங்கள். ஆனால்
இந்தியாவைத் துண்டாட வேண்டாம்'' எனக் கண்ணீர்
விட்டுக் கூறினார். மேலும் ஹிந்து முஸ்லிம் கலகங்கள் நிக
ழாமல் தவிர்ப்பதற்காகக் காங்கிரஸ் தலைவர்கள் வேண்டா
வெறுப்பாகப் பாகிஸ்தான் அமைவதை ஏற்றுக்கொண்டனர்.

காந்தியின் போராட்டத் தொடக்கக் காலத்தில் முஸ்
லிம்கள் முக்கியமான பங்கு கொண்டிருந்தனர். பிரிட்டி
ஷார் ஜாதிவாரியாகத் தேர்தல் தொகுதிகள் பிரித்ததனாலும்,
மத அடிப்படையில் தனி ராஜ்யம் அமைக்க முஸ்லிம்கள்
மூர்த்தன்யமாக முயற்சி செய்ததனாலும், குறுகிய அளவு
சுய ஆட்சியிருந்த 1937க்குப் பிந்திய ஆண்டுகளில் காங்கிரஸ்
செய்த தவறுகளாலும், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை படிப்படி
யாகக் குறையத் தொடங்கிற்று.

1946-இல் கல்கத்தாவில் கலகங்கள் முதன் முதலாக
நிகழ்ந்தன. போலீஸ் நடவடிக்கைகளாலும், கலகம் நடந்த
விடங்களுக்கு காந்தி யாத்திரை செய்ததனாலும் சண்டை
கட்டுக்கடங்கியது. ஆனால் பிரிவினையின் விளைவாக பஞ்சாபில்
கலகங்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. இந்தப் பெரிய மாகா
ணம் எவ்விதத் திட்டமான கொள்கையுமின்றிப் பிரிக்கப்பட்
டது. ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், தங்கள் இனத்
தார்கள் பெருவாரியாக இல்லாத விடங்களில் விடப்பட்
டனர். அவர்கள் அச்சத்தால் வெளியேறினர் அல்லது
விரட்டப்பட்டனர்.

தன்னுடைய கொள்கைகளை மக்கள் பூரணமாக ஏற்க
வில்லை, அல்லது புரிந்துகொள்ளவில்லை என்பதைக் காந்தி
உணர்ந்தார். 1925-ஆம் ஆண்டிலேயே ''படிப்பாளிகளில்
பெருவாரியானவர்களை என் வழிக்குக் கொண்டு வரமுடிய
வில்லை என்பதை நான் அறிவேன்'' என அவர் கூறியுள்
ளார். இதற்கு முப்பது ஆண்டுகளுக்குப் பின் ஒரு இந்திய
ராஜ்யத்தில் முதன் மந்திரியாயிருந்த பழைய காந்திய
வாதி, ''எங்களில் பலருக்கு சத்தியாக்ரஹமே மதம். ஆனால்
மற்றவர்களுக்கு இரு ஒரு வெற்றிகரமான தந்திரம் என்றே
தோன்றுகிறது'' என என்னிடம் கூறினார்.

1942-இல் ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தில்
அஹிம்சை முறை பயனளிக்கவில்லை எனத் தோன்றியதும்,
போர்த் துடிப்பு வாய்ந்த இளம் சோஷலிஸ்டுகள் நேரடி
நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்த முறையின்
மூலம் அவர்கள் தனிப்பட்ட பிரிட்டிஷாரைத் தாக்கவில்லை.



பிரிட்டிஷ் உடைமைகளையே தாக்கினர். அவர்களது தலை
மறைவான செயல்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்தன.
இவைகள் மூலம் பல மாதங்களுக்கு பல கிராமங்களில்
ஆயுத உதவிகொண்டு சுய ஆட்சி அமைத்து நடத்தி
னார்கள்.

1938-இல் காந்தி பகிரங்கமாக எதிர்த்தும், காங்கிரஸ்
தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுபாஷ் போஸ் இந்தி
யாவை விடுவிப்பதற்காக ஒரு இந்திய தேசியப் படை அமைத்
தார். ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவை விடுதலை பெறச்
செய்த மாதிரி தானும் செய்யப் போவதாக அவர் அறிவித்
தார். ஜப்பானியப் படையெடுப்பு உச்சநிலை அடைந்து
வருகையில் இவருடைய படை சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு
நீண்டதூரம் வந்து இந்தியாவிற்குள் கொஞ்சகாலம் தங்
கிற்று.

பலாத்கார முறைக்கு ஆதரவு பெருகி வருவது கண்டு
சிறையிலிருந்த காந்தி மிகுந்த கலக்கமுற்றார். சுபாஷ்
போஸின் படைத் தலைவர்கள் தாய்நாட்டிற்குத் திரும்பி
யதும், அவர்களை மக்கள் தேசிய மாவீரர்கள் எனக் கொண்
டாடியதைக் கண்டு, மக்கள் மீது தனக்கிருந்த பிடி தளர்ந்து
வருகிறது எனக் காந்தி நினைத்தார். இன்னும் கஷ்டப்பட்டு
இந்தியாவை ஒன்றுபட்ட நாடாக்க வேண்டுமெனும் தனது
திட்டத்திற்குப் பதிலாக நாட்டைப் பிரிப்பதற்குக் காங்
கிரஸ் இணங்கியதைக் கண்ட காந்தி சுதந்திரமடைந்தது
பற்றி எவ்வித விழாவும் கொண்டாட விரும்பவில்லை. இந்தி
யப் புரட்சியில் பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. இவை
களில் காந்தியத்திற்கு மாறான அம்சங்களும் இருக்கின்றன.
இவைகள் புரட்சியில் இடம் பெற்றதனால் துயர்மிக்க இந்த
நூற்றாண்டில் வேறு எங்கும் கண்டிராத அளவுக்கு ரத்தக்
களறியும் நிர்ப்பந்தமாக மக்கள் தங்கள் பிறப்பிடத்தை
விட்டு ஓடுவது போன்ற சம்பவங்களும் நிகழ்ந்தன.

காந்தி அநுஷ்டித்த கடைசிச் சத்தியாக்கிரஹ விரதம்
ஓரளவு அவருடைய சிஷ்யர்களைத் திருத்துவதற்காகவே
மேற்கொள்ளப்பட்டது. சுதந்திரம் கிடைத்த நான்கு
மாதங்களுக்கெல்லாம் அவர் சாகும்வரை உண்ணாவிரத
மிருக்க முடிவு செய்தார். அப்போது நடந்து வந்த ஹிந்து
முஸ்லிம் கலவரங்களை நிறுத்தவும், காஷ்மீரில் சண்டை
நடந்தாலும் இந்திய அரசாங்கத்தார் பொக்கிஷத்திலுள்ள
கையிருப்பில் பாதியைப் பாகிஸ்தானுக்குப் பகிர்ந்தளிக்க
வேண்டுமெனவும் இவ்விரதத்தை அவர் அநுஷ்டித்தார்.

'' சுதந்திரப் போராட்டம் முடிந்த பின் நான் உயி
ருடனிருந்தால், என் நாட்டினருடனேயே நான் சாத்விக
எதிர்ப்பு செய்ய வேண்டியிருக்கும்'' என அவர் ஏற்

எனவே கூறியிருக்கிறார். உண்ணாவிரதம் தொடங்கின ஆறு நாட்களுக்குப் பின் பிரிவினைக்குப் பின் இந்திய அரசாங்கத்திற்குக் கிடைத்த பணத்தில் இருபத்தி ஐந்து கோடி டாலர் பாகிஸ்தானுக்குக் கொடுக்க அரசாங்கம் இசைந்தது. ஹிந்து முஸ்லிம் தலைவர்கள் ஒருவர் மதத்தை மற்றவர் மதித்துக் காப்பதாகப் பிரதிக்ஞை செய்தனர். உண்ணாவிரதம் பூரண வெற்றியடைந்ததெனக் காந்திக்குத் தோன்றியதனால், அவர் புதிய நம்பிக்கை பெற்று 125 ஆண்டு தான் வாழப்போவதாகக் கூறினார்.

முதலில் பூரண சுதந்திரமடைவதைத் தமது குறிக்கோளாகக் கொண்டார் காந்தி. அடுத்தபடியாக ஹிந்து-முஸ்லிம் வேற்றுமையை அகற்றுவதில் முழுக் கவனத்தைச் செலுத்தினார். இதில் பெரிய அளவுக்கு வெற்றியும் பெற்றார். பின் சமூக, பொருளாதார விஷயங்களில் கவனம் செலுத்தப் போவதாகக் கூறினார். இந்தப் பிரச்னைகளிலும், தமது செயல் முறைகளைக் கையாண்டு சுயராஜ்யத்திற்குப் பூரணப் பொருளளிக்கக் கூடிய சமத்துவத்தையும், பரவல் முறையில் பொருளாதாரத் திட்டங்களை நிறுவப் போவதாகவும் கூறினார். "இவ்வளவு வறுமைக்கிடையே எப்படி சுதந்திரம் நிலைத்திருக்கும். நான் உயிருடனிருந்தால் அரசியலைச் சீர்திருத்துவதே என் கடமையாகும்" என்றும் அறிவித்தார்.

1948-ஆம் ஆண்டு ஜனவரி முப்பதாம் தேதி, அவர் உண்ணாவிரதத்தை முடித்த ஆறு நாட்களுக்குப் பிறகு, எவ்விதப் பாதுகாப்புமின்றி வழக்கம்போல் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வருகையில், அவரை ஒருவன் மும்முறை சுட்டான். குண்டுபட்டு அவர் இறந்தார். வெறிபிடித்த ஹிந்துக்களின் பயமுறுத்தலையும், சில நாட்களுக்கு முன் யாரோ அவர் மீது குண்டு வீசியதையும் அவர் பொருட்படுத்தவில்லை. போலீஸார் அளிக்க விரும்பிய பாதுகாப்பையும் அவர் நிராகரித்துவிட்டார்.

காந்தியின் சடலம் தகனம் செய்யப்பட்டபோது, இந்தியாவின் புதிய பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு தரையிலே காலடியில் உட்கார்ந்திருந்தார். அவர் அருகிலே மாஜி ராஜப்பிரதிநிதி மவுண்ட்பேட்டனும், அவருடைய மனைவியும் அமர்ந்திருந்தனர். கண்ணீரே கடலாகப் பெருகியது போலிருந்தது இவர்களைச் சுற்றி நெருக்கி வந்த ஜனத்திரள். பின்னர் காந்தியின் அஸ்தியை கங்கையில் கரைத்த பொழுது, நதிக்கரையில் நாற்பது லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். சரித்திரத்தில் இதுவரை கண்டிராத அளவுக்கு அங்கே ஜனங்கள் கூடியிருந்ததாக வேறு சிலர் கூறுகின்றனர்.



ஐ. நா. வில், பிரிட்டிஷ் மன்னர் பிரதிநிதி, "ஏழையான, நிர்க்கதியான மக்களின் நண்பரின்" மரணத்திற்காகத் துக்கம் தெரிவிக்கையில், "காந்தியின் மாபெரும் சாதனைகளை இனித்தான் காணப்போகிறோம்" என்று தீர்க்கதரிசனத்துடன் கூறினார்.

ஜப்பானில் அச்சமயம் நேசப்படைகளின் உயர் தளபதியாயிருந்த ஜெனரல் மக்ஆர்தர் கூறினார். "நமது நாகரிகம் நிலைத்திருக்குமானால், அதன் வளர்ச்சியில் எல்லோரும் ஒரு உண்மையைத் தவறாமல் உணரவேண்டும். விவாதத்திற்குரிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் மக்கள் திரளாக பலாத்காரத்தை உபயோகிப்பது அடியோடு தவறு மட்டுமல்ல, அப்படி உபயோகிப்பவர்களே நாசமடைவர் என்கிற காந்தியின் நம்பிக்கையை எல்லோரும் தெரிந்து பின்பற்ற வேண்டும்."

மக்களை காந்தி நம்பினார். அவர்களிடம் சக்தியிருப்பதை நிரூபித்துக் காட்டினார். அஹிம்சை முறையில் நேரடி நடவடிக்கை மூலம் அமைதியாக மாறுதல் விளைவிக்கலாம் என்பதைச் செய்து காட்டினார். இந்த நலனடைய அரசாங்கத்தை மாற்றினால் மட்டும் போதாது, மக்களின் பரஸ்பர உறவில், அடிப்படை மாறுதல் வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர் செய்த உபதேசப்படியெல்லாம் மக்கள் நடக்க முடியவில்லையெனில், தவறு செய்வது மனித இயல்பு என்று நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

அவர் காலத்தில் வாழ்ந்த புரட்சித் தலைவர்கள் எல்லோரையும் விடக் காந்தி தனது சக்தியை அதிக வெற்றிகரமாகப் பயன்படுத்தினார் என்றும், அதனால் நீடித்த பயன் ஏற்பட்டதெனவும், சிலர் கூறலாம். இருபதாவது நூற்றாண்டில் நிகழ்ந்த புரட்சிகளில் பூரணமான, மிகச்சிறந்த புரட்சி காந்தி நடத்தியதல்லவா? ஜலவாயுக்குண்டு சகாப்தத்தில் இன்னும் எவ்வளவோ புரட்சிகள் நிகழப்போகின்றன. அவைகளுக்கெல்லாம் காந்தியின் புரட்சி வழிகாட்டியாயிருக்கும் என நாம் ஏன் நம்பலாகாது?

## அத்தியாயம்-19.

# நவ இந்தியா உதயம்

**தெ**ற்கு ஆசியா, ஆஃப்ரிக்கா, மத்தியக் கிழக்கு, தென் அமெரிக்காவில் சில பகுதிகளிலுள்ளவர்கள் யாவரும் தத்தம் நாடுகளிலுள்ள ஆட்சி முறையை மாற்றவே விரும்புகின்றனர். இவர்கள் எந்த அளவுக்கு காந்திய லட்சியமாகிய பூரண ஜனநாயகப் புரட்சி முறையை மேற்கொள்வார்கள்? மகாத்மா இயற்றி வந்த பணியை இந்தியாவின் 37-கோடி. மக்கள் எந்த அளவுக்குச் சிறப்பாகத் தொடர்ந்து நடத்துவார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது இந்தக் கேள்விக்குப் பதில்.

காந்தி விரும்பியது காலனி ஆட்சியினரை வெளியேற்றுவது, அயல் நாட்டுத் தலைவர்களுக்குப் பதிலாக உள்நாட்டுத் தலைவர்கள் ஆட்சி புரிவது, அல்லது பொருள்துறை அபிவிருத்தி மட்டுமல்ல என்பதை ஏற்கனவே கண்டோம். தேசியச் சுதந்திரம், பொருளாதார அபிவிருத்தி இரண்டையும் காந்தி வற்புறுத்தி வந்தார் என்பது உண்மை. ஆனல் இவை இரண்டுடன் முக்கியமான மற்றொன்றையும் சேர்த்துக் கொண்டார். இந்திய மக்கள் ஆன்மிகத் துறையிலும், தார்மிகத் துறையிலும் புத்துயிர் பெற்று, இதன் விளைவாக மனித கண்ணியத்தைக் காக்க வேண்டும் என்றும் விரும்பினர்.

காந்தியின் மரணத்திற்குப் பிறகு காந்தியம் ஒரு சோதனைக்குட்பட்டிருக்கிறது போலிருக்கிறது. காந்தியம் எனும் பேரொளி ஒரு கண்ணடிபோன்ற வஸ்துவில் பட்டால் அதன் பிரதிபலிப்பு பல்வேறு ஒளிக்கிரணங்களாகச் சிதறுவதுபோலிருக்கும். ஒவ்வொரு கிரணமும் பேரொளியின் சிற்சில அம்சங்களைப் பெற்றிருந்தாலும் பூரண ஒளியின் வண்ணம் தனிக் கிரணத்தின் மூலம் தெரிவதில்லை. இதேபோல காந்தியத்தின் சில அம்சங்கள் சிறப்பாகக் காணப்படுகின்றதே யொழிய ஒரு சாம்ராஜ்யத்தை வீழ்த்திய, அதன் பூரண சக்தியை நடைமுறையில் கண்கூடாகப் பார்க்க முடியவில்லை. சரியான வழியைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான ஆன்மிகப் போராட்டம் இன்று, இந்தியாவில் நடந்து வருகிறது.

பிரிட்டிஷ் படைகள் வெளியேறியதும் சுதந்திரப் போராட்டம் வெற்றிகரமாக முடிந்தது. ஆனல் தேசிய ஒற்றுமை ஏற்படுவதற்குப் பல பெரும் தடைகள் இன்னமும் இருக்கின்றன. சுதந்திர இந்தியாவை எதிர்நோக்கியிருக்கும் பல பிரச்னைகளில் பூரண மாறுதல் பெறுவதற்கு முக்கியமான இரு விஷயங்களைக் கூர்ந்து கவனிப்போம். மனித கண்ணியத்திற்கு மதிப்பு, பொருளாதார அபிவிருத்தி.

நான்கு கோடிக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் பூரணமாகப் பிரஜா உரிமைகளை அநுபவித்து, நிர்ப்பயமாக வாழ்வதற்கேற்ற மதச்சார்பற்ற ராஜ்யத்தை அமைக்க நேரு ஆட்சி, பிரிவினை ஏற்பட்ட பிறகு தீவிரமாக வேலை செய்து பெரிதும் வெற்றியும் கண்டிருக்கிறது. அறுபது லட்சத்துக்கும் மேற்பட்ட ஹிந்து அகதிகளுக்கு அமைதியான முறையில் வாழ்க்கை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்திலும், பல்கலைக் கழகங்களிலும் பல முஸ்லிம்கள் இன்று, உயர்பதவி வகிக்கின்றனர்.

1950-இல் புதிய இந்திய அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டது. அமெரிக்க, பிரிட்டிஷ் அநுபவத்தைப் பெரிய அளவில் பயன்படுத்திக் கொண்டு, இந்தியாவில் பார்லிமெண்டரி ஆட்சி முறை அமைக்கப்பட்டது. அமெரிக்காவில் உள்ளது போல் உரிமைப்பட்டியல் ஒன்றும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

காந்தியின் ''ஹரிஜனங்களான'' தீண்டாதாருக்குச் சட்ட பூர்வமாகப் பூரண உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களிடம் ஜாதி வித்தியாசம் பாராட்டுபவர்களுக்கு அபராதமும், ஆறு மாதம் வரை சிறைத் தண்டனையும் அளிக்கப்படும் என 1955-இல் சட்டம் இயற்றப்பட்டது.

இந்தியாவில் என்றுமே பெண்களின் பொருளாதார அந்தஸ்து தாழ்ந்தே இருந்து வந்திருக்கிறது. இன்று, அவர்கள் விடுதலை பெற்று, எல்லா ஜனநாயக நாடுகளிலும் உள்ள பெண்கள் அநுபவிக்கும் சகல உரிமைகளையும், சட்ட பூர்வமாக அநுபவிக்கின்றனர். முன்பு வழக்கமாகச் சிறு பெண்களுக்கு விவாகம் செய்யப்பட்டு வந்தது. இன்று பதினைந்து வயதுக்குக் குறைவாயுள்ள பெண்களுக்கும், பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆண்களுக்கும் திருமணம் நடந்தால் அது சட்ட விரோதமானது.

1951-இல் நான் இந்தியாவுக்கு வந்தவுடன் வயது வந்தவர்கள் யாவரும் ஓட்டளிக்கலாம் எனும் அடிப்படையில் புதிய குடியரசிற்கு நாடெங்கும் தேர்தல்கள் நடைபெற்றன. ஜனநாயக நாடுகளில் நடந்த தேர்தல்களில் இதுவே மிகப் பெரியது. இதில் பத்து கோடி மக்கள் அமைதியாகச் சென்று ஓட்டளித்தனர். அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தல்களில் அளிக்கப்பட்ட ஓட்டுகளைவிட அதிக ஓட்டுகள் இந்தியத் தேர்தலில் குவிந்தன.

காந்தியப் போராட்டத்தின் நேர்வார்சுதார்கள் எனும் தகுதியுள்ள நேருவின் காங்கிரஸ் கட்சிக்கு மொத்த ஓட்டு

களில் 45 சத விகிதம் கிடைத்தது. பார்லிமெண்ட் ஸ்தானங்
களில் 73 சதத்தை காங்கிரஸ் அடைந்தது. எதிர்க் கட்சியி
லிருந்தவர்களில் பிரஜா, சோஷலிஸ்ட் (இப்போது பிரஜா
சோஷலிஸ்ட் என ஒன்ருக அமைந்துள்ளது) இரு கட்சிகளுக்
கும் 16 சத விகிதம் ஓட்டுகள் கிடைத்தன. கம்யூனிஸ்டுக
ளுக்கு ஐந்து சதம் ஓட்டுகளே கிடைத்தன. ஆனுல் இப்
போது ஆந்திராவில் ஒரு பகுதியான தெலுங்கானுவில் அதி
கப்படி ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைத்தன. தீவிர
வலதுசாரியினரும், வைதிக ஹிந்துக் கட்சியினரும் ஐந்து சத
ஓட்டுகள் பெற்றனர். பாக்கியுள்ள ஓட்டுகளை உதிரியாயிருந்த
சுதந்திர அபேட்சகர்களும், ஸ்தல அக்கறைகளுள்ள கட்சியி
னரும் பகிர்ந்து கொண்டனர். மத்திய அரசாங்கத்திலும்,
அநேகமாக எல்லா ராஜ்யங்களிலும் நேருவின் காங்கிரஸ்
கட்சி தனது ஆதிக்கத்தை நீடித்து ஆட்சி புரியும் நிலை ஏற்
பட்டது.

சீனர்கள் ஒரு தலைமுறை பலாத்காரத்தில் திளைத்தவர்
கள். ஆயுதம் தாங்கிக் கிளர்ச்சி செய்தவர்கள். ரகஸ்யமாக
தலைமறைவாகக் கிளர்ச்சி செய்தவர்கள். இம்மாதிரி மக்க
ளும், சூழ்நிலையும் உள்ள சீன நாட்டில் இந்தியாவில் நடந்த
மாதிரி தேர்தல் நடப்பது அசாத்தியம்.

பிரிட்டிஷ் சட்டத்தின் நற்பயனும், காந்திய வழியில்
அஹிம்சை முறையில் செயல்புரிதலும் சேர்ந்து ஒரு நலனை விளை
வித்தது. மாறுபட்ட கருத்துள்ளவர்களை வாதாடித் திருப்
பும் முறையில் உள்ள நம்பிக்கை வலுப்பெற்றதுடன், சுய
ஆட்சி அநுஷ்டானங்களில் மக்களுக்குப் பழக்கம் ஏற்
பட்டது.

* * * *

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றமும்
அதிகப்படியான நம்பிக்கை அளிக்கிறது. பொருளாதார அபி
விருத்திக்கான ஒரு ஐந்தாண்டுத் திட்டம் 1951-இல் ஆரம்பிக்
கப்பட்டது. திட்டம் 1956 ஏப்ரலுக்குள் பூர்த்தியாக வேண்
டும் என கெடு குறிக்கப்பட்டது.

1953 மார்ச் மாதத்தில் தூதர் பதவியிலிருந்து விலகி
நான் இந்தியாவை விட்டுப் புறப்படுகையில், திட்டத்தின்
நோக்கங்கள் அளவுக்கு மீறிய உற்சாகத்தால் வகுக்கப்பட்
டவை எனச் சிலர் கூறினர். சீனுவின் அபிவிருத்தித் திட்டம்
இன்னும் மகத்தான முறையில் அமைந்திருக்கிறது எனப்
பொருமைப்பட்டு சிலர் பேசியதும் உண்டு. ஆனுல் சீனுவில்
ஜனநாயக நாடுகள் மாதிரி சர்ச்சை செய்து, ஆட்சேபனைக
ளுக்குச் சமாதானம் கூறவேண்டிய அவசியமோ, அல்லது



தேர்தலில் பொது ஜன ஆதரவு கிடைக்குமோ என்கிற அச்
சமோ இருப்பதற்கு இடமில்லை.
இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நான் மறுமுறை இந்தியா
வுக்கு வந்தபோது திட்டத்தில் கணிசமான முன்னேற்றம்
ஏற்பட்டிருந்ததைக் கண்டேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்
தின் பல அம்சங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாக வெற்றி
கண்டதன் விளைவாக மக்களிடையே நம்பிக்கை ஏற்பட்டிருப்
பது அநேகமாக எங்கும் தென்பட்டது. இந்த முன்னேற்றத்
தின் பயனுக, ஆந்திராவில் நடந்த விசேஷத் தேர்தலில்,
பொருளாதாரப் பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு பிர
சாரம் நடத்திய கம்யூனிஸ்ட் கட்சி செம்மையாக முறியடிக்
கப்பட்டது. சந்தேகப் பிரகிருதிகள் கூட ஐந்தாண்டுத் திட்ட
வெற்றியிலிருந்து, இந்திய ஜனநாயகம் வெற்றி கண்டுவிட்
டது என ஒப்புக்கொண்டனர்.
இன்னும் தீர்க்க வேண்டிய பிரச்னைகள் எவ்வளவோ
இருக்கின்றன என்பதை இதிலிருந்து மறந்துவிடலாகாது;
இந்தியாவிலுள்ள குடும்பங்களில் பாதிக்கு மேற்பட்டவை
வருஷத்திற்கு 250 டாலர் வருவாயைக் கொண்டே காலக்
ஷேபம் நடத்த வேண்டியிருக்கிறது. ஆலைத் தொழிலாளி
கள் தினசரி சராசரி ஒரு டாலரே கூலி பெறுகின்றனர்;
மத்தியப் பிரதேசம் போன்றவிடங்களில் ஆரம்பப்பள்ளி
ஆசிரியர்கள் மாதத்திற்கு இருபது டாலரே சம்பளம் பெறு
கின்றனர். முழுதும் வேலையில்லாமலோ அல்லது தினத்
தில் ஒரு பகுதி மட்டும் வேலை செய்தோ பிழைப்பவர்கள்
லட்சக் கணக்கில் இருக்கின்றனர். உணவு தான்யங்கள்
முன்னைவிட இப்பொழுது கூடுதலாகக் கிடைப்பினும் கிராம
வாசிக்குப் போதிய அளவு உண்பதற்கு வகையில்லை. கிடைக்
கும் உணவும் சீராகப் புஷ்டியளிக்கக் கூடியதாகவுமில்லை.
திருப்திகரமான வாழ்க்கை நிலை ஏற்படுவதற்கு இன்
னும் எவ்வளவோ பாடுபட வேண்டும் என்பதை நினைத்
தால் கவலையாகத்தானிருக்கிறது. ஆனுல் சுதந்தரத்திற்
குப் பின் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கவனித்தால்
நிதானமான நம்பிக்கை அடைய இடமிருக்கிறது. இந்த
நூற்றுண்டிலேயே பொருளாதார அபிவிருத்தித் துறையில்
மிக முக்கியமானது என்று எதிர்காலச் சரித்திராசிரியர்கள்
கருதக்கூடிய போராட்டத்தில் இந்தியா ஈடுபட்டிருக்கிறது
என்பதை நினைத்துப் பார்த்தால் இந்த ஐந்தாண்டுத் திட்ட
வெற்றிக்கு விசேஷ முக்கியத்துவம் ஏற்படுகிறது. இந்தி
யாவும் சீனுவும் அபிவிருத்தியடையாத நாடுகளில் மிகப்
பெரியவை. இவ்விரு நாடுகளிலும் உலக மக்களில் நாற்
பது சதத்தினர் வாழ்கின்றனர். தத்தம் நாடுகளின் கதியை
நிர்ணயிக்கக் கூடிய போட்டியில் இரு நாடுகளும் ஈடுபட்

டிருக்கின்றன. அபிவிருத்தி முறைகள், அவைகளின் வேகம்
இருவகைகளிலும் அந்தப் போட்டி நிலவுகிறது. பொருளா
தார அபிவிருத்தியில் ஜனநாயக நாட்டிற்கும் சர்வாதிகார
நாட்டிற்கும் உள்ள மாறுபாடுகளையும், மாறுபாட்டினுல்
ஏற்படக் கூடிய விளைவுகளையும் பிரத்தியட்சமாக உலகத்
தோர் பார்த்தறிந்து கொள்ளலாம்.

இவ்விரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ள போட்டி மகத்
தானது, வெற்றி தோல்வியின் பலாபலன்கள் முக்கியத்வம்
வாய்ந்தவை என்பதை ஆசிய விவகாரங்களை ஆராய்ந்தறி
பவர்களில் பெரும்பாலோர் உணருகிருர்கள். யுத்தம் நீங்
கலாக இந்தப் போட்டியின் பலன் வேறு யாதாயிருப்பி
னும், அதன் விளைவு இவ்விரண்டில் எந்த வழியைப் பின்
பற்றலாம் என்பதை மற்ற அபிவிருத்தி யடையாத நாடுகள்
நிர்ணயிப்பதற்கு உதவி புரியக்கூடும்

ஜனநாயக முறையைப் பின்பற்றுவதனுல் சில பிரச்னை
களை இந்தியா தீர்க்க வேண்டியிருக்கிறது. ஆனுல் சர்
வாதிகார முறையை மேற்கொண்டுள்ள சீனு இவைகளை
அலட்சியம் செய்யலாம். உதாரணமாக இந்திய அரசாங்
கம் விவசாயிகளான ஓட்டர்களை உற்சாகப்படுத்த வேண்
டும். அப்படிச் செய்யத் தவறினுல் தங்களுக்கு அரசியலில்
ஆதரவளிக்கும் பெரும் பகுதியினரின் நம்பிக்கையை இழக்க
வேண்டிவரும். ஆனுல் ஓட்டுகளை நம்பி வாழ வேண்டி
யில்லாத சீன ஆட்சியினர் கடுமையான நடவடிக்கைகள்
மூலம் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம்.

ரஷ்யாவிலும், சீனுவிலும் குடியானவர்கள் மிகக் கடு
மையாகச் சுரண்டப்படுகின்றனா என்பதை நாம் ஏற்கனவே
அறிவோம். குடியானவர்களுக்குக் குறைவான அத்தியாவசி
யச் சரக்குகளோ, வாழ்க்கை வசதிகளோ அளித்து, அவர்
களிடமிருந்து நகரப் பாட்டாளிகளுக்கு அதிகப்பட்சமான
உணவுத் தானியங்களை இவ்விரு நாடுகளிலும் வழங்குகின்
றனர். ஆலைத் தொழில் அபிவிருத்திக்கே கம்யூனிஸ்டுகள்
பிராதான்யமளிக்கின்றனர்.

சர்வாதிகார ஆட்சியில் கூட ஆலைத் தொழில் அபி
விருத்திக்கே முதலிடமளிப்பது அபாயகரமானது. இந்தியா
போன்ற ஜனநாயக நாடுகளிலோ கண்டிப்பாகப் புரட்சியும்
கொந்தளிப்பும் ஏற்படும். இந்தியாவில் வாழும் கோடிக்
கணக்கான மக்களில் எழுபத்தைந்து சதத்தினர் கிராம
வாசிகள். அவர்களது ஆதரவு இல்லையெனில் எந்த ஜன
நாயக ஆட்சியும் நிச்சயமாக வீழ்ச்சியடையும். ஆசியா
வில் சுதந்திர சமுதாயத்தை அமைப்பதற்காக, இந்தியா
வின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் கிராம அபிவிருத்திக்கே
மிகுந்த முக்கியத்துவம் அளித்தது.



சீனுவும், இந்தியாவும் திட்டத்தை உருவகப்படுத்திய
வகையிலும் ஜனநாயக ஆட்சிக்கும் சர்வாதிகார ஆட்சிக்கும்
வேறுபாடு தென்படுகிறது. 1950 மார்ச் மாதத்தில் பிரதமர்
நேருவைத் தலைவராகக் கொண்டு, ஒரு திட்டக் கமிஷன்
அமைக்கப்பட்டது. பல்வேறு மத்திய அரசாங்க ஸ்தாபனங்
களுடனும், ராஜ்ய அரசாங்கங்களுடனும், விசேஷ நிபுணர்
களுடனும் பதினைந்து மாத காலம் ஆலோசனை நடை
பெற்றது. இதற்குப் பிறகு நகல் ஐந்தாண்டுத் திட்டம் தயா
ராகி நாடெங்கும் மக்கள் அபிப்பிராயத்தை அறிவதற்காக
அனுப்பப்பட்டது.

விரிவான விவாதம் நடந்ததன் விளைவாகத் திட்டம்
திருத்தி யமைக்கப்பட்டது. இதற்குச் சில மாதங்களுக்குப்
பிறகு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிக்கான
திட்டமாக இது பார்லிமெண்டின் அங்கீகாரத்தைப்பெற்றது.
நமது காலத்தில் ஜனநாயக முறையில் நடந்த மாபெரும்
கிராம வாழ்க்கைப் புரட்சி செய்வதற்கான திட்டமாகவே
இதனைக் கொள்ள வேண்டும்.

சீனுவின் முயற்சி இதற்கு எதிரிடையாகவே இருக்
கிறது. சீனுவின் திட்டம் அமைப்பதற்கான முயற்சி முறை
பற்றி நமக்கு விசேஷமாக ஒன்றும் தெரியாது. ஆனுல் 1952
டிசம்பரில் பீகிங்கிலிருந்து வெளியிடப்பட்ட ஐந்தாண்டுத்
திட்டம், இயன்றமட்டில் சந்தர்ப்பத்திற்கேற்றபடி ரஷ்யா
வின் முதல் திட்டத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த ஒருமைப்
பாட்டிலிருந்து நாம் சில முடிவுகளை ஊகித்தறிந்து கொள்
ளலாம். சோவியத் திட்டகர்த்தர்கள் தானிய உற்பத்தி
செய்யும், ஆனுல் அமைதியைக் கண்டறியாத உக்ரேன் பகுதி
யின் நலனை அலட்சியம் செய்தனர். அவ்வாறே சீனர்களும்,
நெல் சாகுபடியில் சிறந்ததும் சீன அசாங்கத்திடம் போதிய
அளவு விசுவாசமற்றதுமான தென் சீனுவை அலட்சியம்
செய்தனர்.

ரஷ்யா யூரல் பகுதியை முக்கியமாகக் கருதியதுபோல்
சீனுவின் திட்டத்தில் தங்களிடம் பற்றுக்கொண்ட சீன உள்
பகுதி மாகாணங்களின் அபிவிருத்திக்காக முக்கியத்துவமளித்
தனர். இந்தியத் திட்டத்தின் எல்லை நிர்ணயமாகவும், விஸ்
தாரமாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து திட்
டத்தின் முன்னேற்றத்தை அறிந்து மதிப்பிடலாம். குறைகள்
இருப்பின் எடுத்துக்காட்டலாம். ஆனுல் சீனத் திட்டத்தில்
ஐந்தாண்க்டுகான நோக்கங்கள் பொதுப்படையாகக் கூறப்
பட்டிருக்கின்றன. ஆனுல் அரசியல், பொருளாதார நெருக்
கடிகளால் சீன மத்திய ஆட்சியின் தேவைகளில் மாறுபாடுகள்
ஏற்படலாம். இந்த மாறுபாடுகளுக்கேற்பத் திட்டத்தின்
நோக்கங்களும் திருத்தியமைக்கப்படும்.

திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முறைகளிலும் இரு
நாடுகளுக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாகத் தெரிகிறது.

சர்வாதிகார நாடுகளிலும் சரி, ஜனநாயக நாடுகளிலும்
சரி, பொருளாதார அபிவிருத்திக்கான மூலதனம் அத்தியா
வசியம். பொருளாதாரத் துறையில் வளமாயுள்ள எந்த
நாடும் உற்பத்தி செய்வதைவிடக் குறைவாகவே செலவு
செய்ய வேண்டும். அப்போதுதான் உபரியாயிருப்பதைக்
கொண்டு புதிய ஆலைகள் அமைப்பதுடன், உற்பத்திக்கான
வசதிகளையும் பெருக்கிக் கொள்ளலாம். இந்த விஷயத்தில்
ஜனநாயக முறையின் கீழ் பொதுஜன ஆதரவை நம்பியிருக்க
வேண்டிய இந்தியாவைவிட, மிகுந்த கட்டுப்பாடும் கெடு
பிடியும் உள்ள சீன அரசாங்கத்திற்கு அதிகமான சௌகரியம்
இருக்கிறது என்றே தோன்றுகிறது.

வரிகள் மூலம் எவ்வளவு பணம் கிடைக்குமோ அந்த
அளவுக்கே அத்தியாவசியச் சரக்குகள் உற்பத்தி செய்வ
தென இந்தியா திட்டம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்
தியக் குடியானவன் சுதந்திரமாகவே தனது தானியங்களை
விற்பனை செய்கிறான். வரிகள் மூலம் வருமானம், நோட்டு
அச்சடிப்பதன் மூலம் கிடைக்கும் மூலதனம், அந்நிய நாடு
களின் கடன் உதவி, தானமாகக் கிடைக்கும் பணம் முதலிய
வற்றைக்கொண்டே ரயில் பாதை அமைப்பு, துறைமுகங்கள்
கட்டுதல், ஆலைகள் அமைத்தல், நீர்வீழ்ச்சிகள் மூலம் மின்
சார உற்பத்தி, நீர்ப்பாசனத்திற்கான அணைகள், மலேரியா
ஜுரத்தை அகற்றுதல், மற்றும் அத்தியாவசியமான தொழில்
களை இந்தியா நிர்வகிக்கிறது.

சீனாவிலும் வருவாய்க்கு முக்கிய சாதனம் வரி விதிப்
பதே. ஆனால் சர்க்கார் நிர்வகிக்கும் தொழில்களில் ஏராள
மாகக் கிடைக்கும் லாபத்தைக்கொண்டு வருமானத்தைப்
பெருக்கிக் கொள்கிறார்கள். கனரகத் தொழில்களில் 80
சதமும், சிறு கைத்தொழில்களில் 60 சதமும், பாங்குகளில்
90 சதமும், மொத்த வியாபாரத்தில் 80 சதமும், சில்லறை
வியாபாரத்தில் 50 சதமும் அரசாங்கத்தாரால் நிர்வகிக்கப்
படுகின்றன. கம்யூனிஸ்ட் நாடுகளிலெல்லாம், ''கடன் வாங்கு
வது,'' ''தம்மிச்சையாகத் தானம்'' செய்வதன் மூலம்
ஏராளமாகப் பணம் கிடைக்கிறது. ''கடன் வாங்குவது''
''தானம்செய்வதனால்'' மக்கள் சேமிப்பைக் கட்டாயப்படுத்
திப் பெறுவது, அல்லது கட்டாய உழைப்பின் மூலம் பணம்
பெறுவது என்று தான் அர்த்தம்.

இந்தத் துறைகளில் கிடைக்கும் பணம் சம்பந்தமான
புள்ளி விவரங்கள் கிடைப்பது மிகவும் கஷ்டம். இம்மாதிரி
கட்டாய முறைகள் மூலம் உள்நாட்டில் உபரியாயுள்ளதை
முதலீடாகப் பெறுவது, நாட்டின் வருஷாந்தர வருவாயில்



16 சதம் என்று தெரிகிறது. ஆனால் இந்தியாவில் ஜனநாயக
முறைகள் மூலம் கிடைத்த மூலதனம் ஆண்டு வருவாயில்
சுமார் 7 சதம்தான் என்று தெரிகிறது.

மக்கள் செய்யவேண்டிய தியாகத்தைப் பொருட்படுத்
தாமல் சீனாவை, நவீன சக்தி வாய்ந்த, ஆலைத்தொழில்
நாடாக மாற்றும் நோக்கத்துடனே தான் அந்நாட்டுப்
பொருளாதாரத் திட்டம் வகுக்கப்பட்டது என்பதை முன்
அத்தியாயம் ஒன்றில் பார்த்தோம். அங்கே கனரகத்
தொழிலுக்கு முதலிடம் அளித்து, விவசாயத்தையும், அத்தி
யாவசியச் சாமான்கள் உற்பத்தியையும் இரண்டாம் பட்ச
மாகத் தள்ளிவிட்டனர்.

இதற்கு நேர்மாறாக அமைக்கப்பட்டிருக்கிறது இந்திய
முதல் ஐந்தாண்டுத் திட்டம். இந்தியத்திட்டப்படிவாழ்க்கைத்
தரத்தை நிதானமாக உயர்த்த வகை செய்யப்பட்டிருக்
கிறது. விவசாய அபிவிருத்தியைத் தள்ளிப்போடாமல்,
அதற்கு முதலிடமளிக்கப்பட்டிருக்கிறது. இரு நாட்டுப்
பொருளாதார முறைகளும், வெற்றியடையவேண்டுமானால்
படிப்படியாக உணவு வகை, விவசாய உற்பத்தி அவசியம்
பெருகியே ஆகவேண்டும். உணவு தான்ய உற்பத்தி பெருகு
வதற்காக எல்லா வகையிலும், இந்தியா குடியானவர்களுக்கு
ஊக்கமளித்து வருகிறது. ஆனால் சீனாவில் குடியானவர்கள்
கடுமையான கட்டுப்பாடுகளுக்குட் படுத்தப்படுகிறார்கள்.

1956 ஏப்ரலுக்குள் விவசாயம் நீர்ப்பாசனம் இருதுறை
களிலும் 2 பிலியன் டாலர் (சுமார் 200 லட்சம்) கூடுதலாக
முதலீடு செய்ய வேண்டுமென இந்தியா திட்டமிட்டிருக்
கிறது. ஆனால் இந்தியாவைவிட 20 கோடி கூடுதலாக ஜனத்
தொகையுள்ள சீனாவில் இதே துறைகளில் 1.6 பிலியன்
(சுமார் 100 லட்சம்) டாலர் கூடுதல் முதலீட்டிற்கே வகை
செய்யப்பட்டிருக்கிறது. ஆலைத்தொழில், மின்சார உற்
பத்தி இரண்டிலும் இரு நாடுகளுக்கும் நேர்மாறான நிலை
காணப்படுகிறது. இந்தியா 2.3 பிலியன் (ஒரு பிலியன் என்
பது 100 லட்சம்) டாலரும், சீனா 5.2 பிலியன் டாலரும் இத்
துறைகளில் அதிகப்படியாக முதல் போட்டிருக்கிறது.

இந்தியத் திட்டம் ஜனநாயக முறையில் வகுக்கப்பட்
டது. அது பொதுஜன நலத்தையே அடிப்படையாகக்
கொண்டது. நீடித்துப் பொருளாதார நலம் விளைவிக்கக்
கூடிய தளத்தை மேற்கூறப்பட்ட அடிப்படையில் இந்தியா
எழுப்பமுடியுமா? சீனாவில் 45 கோடி மக்கள் கிராமங்களில்
வாழ்கின்றனர். போலீஸ் கெடுபிடி தாங்காமல் இந்த மக்
கள் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கட்டுமீறிச் செல்லாமல்
பாதுகாக்கும் முறையில் சீனா துரித கதியில் ஆலைத்தொழில்
அபிவிருத்தி பெறமுடியுமா? இம்மாதிரிப் பிரச்னைகளுக்கு சீ

கிரத்தில் முடிவு காணஆசியாவெங்கும், ஆஃபிரிக்காவிலும்,
தென் அமெரிக்காவில் அபிவிருத்தியடையாத நாட்டிலும்
விரும்புகின்றனர். இந்நாட்டினர் இந்திய-சீனப் போட்டி
யைக் கூர்ந்து கவனித்து வருகின்றனர்.

ஆனல் ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இந்
திய முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் எதிர்பார்த்
ததைவிட 1955-இல் முன்னேற்றம் அதிகமாகவே காணப்பட்
டது. வளமான கிராம சமுதாயத்திற்கு அவசியமான நிலச்
சீர்திருத்தம் பூரணமாக ஏற்படாவிட்டாலும் வெகு தூரம்
முன்னேற்ற மடைந்திருக்கிறது. ஜமீன்கள் போன்ற நில
வுடைமை ரத்து செய்யப்பட்டுவிட்டது. இன்று, இந்தியக்
குடியானவர்களில் முன்னிருந்ததைவிட அதிகமான பேர்
சிறு நிலங்களுக்கு உரிமையாளராயிருந்து கொண்டு தாங்
களே பயிர் செய்கிறார்கள். நிலச்சுவான்தார்களுக்குக்
கொடுக்கவேண்டிய நஷ்டஈடு ஒரு பிலியன் டாலர்களாக
லாம்.

இந்தியாவில் விவசாய உற்பத்தி பெருகி வருவதும்,
உற்சாகமளிக்கிறது. 1953-லிருந்ததைவிட 1955-இல் உற்பத்தி
இருபது சதம் அதிகரித்திருக்கிறது. பருவத்தில் மழை நன்கு
பெய்ததனல் கடைசியாக 1954-இல் நாட்டிற்குத் தேவையான
உணவு இந்தியாவில் உற்பத்தியாயிற்று. அயல் நாட்டுச்
செலாவணி வசதி மூலம் முன்பு வெளிநாடுகளிலிருந்து அரிசி
யும் கோதுமையும் வாங்கினர். இந்த வகையில் ஆண்டுக்கு
25 கோடியிலிருந்து 50 கோடி டாலர் வரை செலவாகி வந்த
அந்நிய நாணய வசதி இப்போது அயல் தேச ஆலைச் சாதனங்
கள், டிரக்குகள், மற்றும் அத்தியாவசியச் சாமான்கள் வாங்
கப் பயன்படுகிறது. 1956-க்குள் அதிகமான நீர்ப்பாசன
வசதிகள் ஏற்படக்கூடுமாகையால் பருவகால மழையை
நம்பியிராமல் உணவு உற்பத்தி போதிய அளவு பெருகலாம்.
தண்ணீரே இந்தியாவின் உயிர்போன்ற சாதனமாகை
யால் ஐந்தாண்டுத் திட்டம் நீர்ப்பாசன வசதிக்கு அதிக முக்
கியத்துவமளிக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடி
வடையவேண்டிய 1956 ஏப்ரல் முதல் தேதிக்குள் 160.7 லட்சம்
ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கவேண்டும் என
எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலப்பரப்பு, இன்று ஜப்பா
னில் சாகுபடியாகிவரும் நில அளவை விட அதிகமானது.
அமெரிக்காவில் இன்று பாசன வசதி பெற்றுவரும் விஸ்தீர
ணத்திற்குக் கொஞ்சம் குறைவானது.

இந்திய கிராம அபிவிருத்தி திட்டத்தில் உணவு உற்
பத்தியுடன் பொதுஜன ஆரோக்கிய வசதி, கல்வி வசதி,
இரண்டும் சேர்ந்திருக்கின்றன. திட்டத்தின் இந்த அம்சங்
கள் தொடங்குகையில் அதை நீண்ட காலம் கவனித்தறிந்து



அது வெற்றியடையும் எனப் பெரிதும் எதிர்பார்த்தேன்.
இந்தத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி உற்சாக
மளிக்கக்கூடியதா யிருக்கிறது.

1955 பிப்ரவரியில் முலூக் (Mulug), சமுதாய அபி
விருத்தி முகாமுக்குச் சென்றேன். இந்த வேலையில் 75 கிரா
மங்களும் 68 ஆயிரம் மக்களும் பங்கு கொண்டிருந்தனர்.
இந்த இடம் கிழக்கு ஹைதராபாத்தில் தெலுங்கான பகுதி
யில் இருக்கிறது. இங்கேதான் 1948-இல் கம்யூனிஸ்டுகள் ரத்தக்
களறி பெருகும் கலகம் விளைவித்தனர். பர்மா, பிலிப்பைன்,
இந்தோனேஷ்யா முதலியவிடங்களில் இம்மாதிரிக் கலகங்கள்
ஏற்படும்சமயத்தில் இங்கு கம்யூனிஸ்டுகள் அமளி நடத்தினர்.
இங்கேதான் ஒரு சில நிலச்சுவான்தார்கள் பெருவாரியான
நிலங்களில் உடைமை பெற்றிருந்தனர். இங்கே பெருவாரி
யான மக்கள் சொற்ப நிலம் உடையவர்களாகவோ, நிலமே
இல்லாமலோ வாழ்ந்தனர். நிலச்சுவான்தார்களை விரட்டி
விட்டு நிலங்களைப் பகிர்ந்தளிக்கையில் இங்கே கம்யூனிஸ்டுகள்
பல்லாயிரம் பேர்களைக் கொன்று, பல கிராமங்களைக்
கொளுத்தினர், இந்திய படையில் இருபகுதிகளும் 30
ஆயிரம் ராஜ்யப் போலீஸாருமாகச் சேர்ந்து, அமைதியை
நிலைநாட்டினர். 1952-இல் கூட நான் இந்தப் பக்கம் போக
வேண்டாம் என எச்சரிக்கை செய்தனர். ஏனெனில் பாது
காப்பின்றி இங்கே செல்வது அபாயம் எனக் கருதப்பட்டது.

கலகங்கள் நிகழ்ந்ததை ஞாபகப்படுத்தும் பல சின்னங்
கள் அங்கு இன்னும் காணப்பட்டன. காடுகளில் மறைந்தி
ருந்து தாக்குவதைத் தவிர்ப்பதற்காக ரஸ்தாவின் இருமருங்
கிலும் ஐந்நூறு கஜ தூரத்திற்கு மரங்கள் வெட்டப்பட்டிருந்
தன. கண்ணால் பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொள்ள
முடியாத இடங்களில் திட்ட அதிபர் வருவோருக்குப் பின்
வரும் எச்சரிக்கைகளை வாய் மொழியாக அளித்தார்:

''இந்த கிராமம் பூராவும் கம்யூனிஸ்டுகளால் அழிக்கப்
பட்டது.''

''இங்கு நிலச்சுவான்தாரும் அவரது குடும்பத்தினரும்
கொல்லப்பட்டனர்.''

''இந்த இடத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் உடனே
வெளியேருவிடில் கொல்லப்படுவார்கள் என எங்கள் தொண்
டர்கள் எச்சரிக்கப்பட்டனர்.''

''இந்த ஜில்லாவெங்கும் ஒவ்வொரு வீட்டின் முன்பும்
சம்மட்டி அரிவாள் சின்னம் பதித்த செங்கொடி பறந்தது.''

130 சதுர மைல் விஸ்தீரணமுள்ள 68 ஆயிரம் மக்கள்
வசித்த ஒரு பகுதியில் செங்கொடி பறந்து, வெறுப்புணர்ச்சி
நிலவியதற்குப் பதிலாக இன்று நேசபாவமும் உற்சாகமும்
நிலவுவதுடன் கணிசமான முன்னேற்றத்தையும் காணலாம்.

எண்பது சத நிலம் உழவர்களுக்கே உரிமையாயிருக்கிறது;
100இல் 60 பேருக்கு முன்பு மலேரியா ஜுரம் கண்டவிடத்தில்
இன்று, இரண்டு பேர்தான் அந்நோயினால் பீடிக்கப்படுகின்ற
னர். ஆறிலிருந்து பதினொரு வயதிற்குட்பட்ட குழந்தை
களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பள்ளிக்கூடத்தில் படிக்
கின்றனர். கிராமத் தெருக்கள் ஒழுங்காக அமைக்கப்பட்
டிருந்தன. தெருக்கோடிகளில் சாக்கடைகள் கட்டப்பட்
டிருந்தன. மூன்று புதிய கிராமங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்
தன. இவ்வளவு வேலையையும் அந்தந்த இடத்து மக்களே
தங்கள் நலனுக்காக கூலி பெற்றுச் செய்தனர்.

1955 வசந்த காலத்தில் எட்டு கோடி மக்கள் வாழும்
இம்மாதிரி 100,000 கிராமங்களில் கிராம அபிவிருத்தித் திட்
டங்கள் நடைபெற்று வந்தன. உலகத்திலேயே இம்மாதிரி
பிரம்மாண்டமான முயற்சி வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை;
அமெரிக்க நாட்டு கிராம விஸ்தரிப்புத் திட்டங்களையொட்
டியே இவை அமைந்திருக்கின்றன. இந்தத் திட்டத்தின் கீழ்
மக்களுக்கு நவீன விவசாய முறைகளைப்பற்றிப் போதனை செய்
கின்றனர். உயர்தர விதைகள், உரம் முதலியவற்றை எப்படி
உபயோகிப்பது என்பதுபற்றி யோசனை கூறுகின்றனர்.
சாமானியமான சுகாதாரப் பிரச்னைகள், மலைஜுரக் கட்டுப்
பாடு, சுத்த ஜலம் உபயோகித்தல்பற்றி யோசனைகள் கூறு
கின்றனர். மக்கள் தங்கள் சுய முயற்சியினால் பள்ளிக்கூடங்
களைக் கட்டுவது பற்றியும் கற்பிக்கின்றனர்.

இந்தத் திட்டங்களை ஒழுங்காக அமுல் செய்ய ஐந்து
அல்லது ஆறு கிராமங்களுக்கு ஒரு பயிற்சி பெற்ற தொண்
டரை நியமிக்கின்றனர். இந்தத் தொண்டருக்கு பிரத்தி
யேக சந்தர்ப்பங்களில் உதவி புரிவதற்கு விவசாயம், பொது
ஜன ஆரோக்கியம், கல்வித் துறைகளில் நிபுணர்கள் தயாரா
யிருக்கின்றனர்.

வயிறு வளர்ப்பது மட்டுமே மனிதனின் நோக்கமல்ல
என்பதை உணர்ந்து ஒரு சமூகக் கல்வி டைரக்டரை நியமித்
திருக்கின்றனர். இவர் நடனங்கள், கிராமியக் கலை, பல்
வேறு கலாசார நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்கிறார்.
இந்தப் பல்வேறு அம்சங்கள் கொண்ட விஸ்தரிப்புத் திட்டம்
எல்லா கிராமங்களுக்கும் எட்டுவதற்கான ஏற்பாடு செய்து
வருகின்றனர்.

இவ்வகையில் பயிற்சி அளிப்பதும், நிர்வாகம் நடத்து
வதும் மிகக் கடினமான காரியம். இதற்காக ஃபோர்டு (Ford)
ஸ்தாபனத்தார் அளிக்கும் பண உதவியைக் கொண்டு சகல
வசதிகளுமுள்ள நாற்பத்தியாறு பள்ளிக்கூடங்கள் நிறுவப்
பட்டிருக்கின்றன. இந்தப் பள்ளிகளில் ஆண்டுதோறும் 5
ஆயிரம் கிராம அபிவிருத்தித் தொண்டர்கள் பயிற்சி பெறு



கின்றனர். இதுதவிர பொதுஜன ஆரோக்கியம், விவசாயம்,
நீர்ப்பாசனம், என்ஜினியரிங் கல்வி, சமூகப் பணி, மருத்
துவம், கலாசார நிகழ்ச்சிகள் முதலிய துறை வல்லுனர்களும்
நிர்வாகிகளும் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றனர்.

பொதுஜன ஆரோக்கிய விஷயத்தில் விசேஷ முன்னேற்
றம் ஏற்பட்டிருக்கிறது. மலேரியா வியாதியினால் பாதிக்கப்
பட்ட இடங்களில் கிருமிநாசினி (D.D.T.) யை ஆண்டுக்கு
இரு முறை தெளிப்பது, கிராம அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு
பகுதியாகும். மலேரியா மனித உயிரையும், அவனது
உழைப்புச் சக்தியையும் பாதிக்கிறது என்பதனால், இயன்ற
மட்டில் 1957 முடிவுக்குள் அதை ஒழிக்க முடிவு செய்யப்
பட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தில் பிற அம்சங்கள் முடிவுறு
வதற்குக் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு நான்கு ஆண்டு
களுக்கு முன்பே மலேரியாவை அகற்ற வேண்டும் என்று
திட்டமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நோயை ஒழிக்க வேண்டியது மிகவும் அவசியம்
என்பதைத் தெளிவாக உணர்ந்தனர். 1953 வரையில்
வருஷத்திற்குப் பத்து கோடி மக்களுக்கு மலேரியா ஜுரம்
கண்டது. பல லட்சம் ஏக்கர் நிலங்களில் மலேரியாக் கொசு
மண்டியிருந்ததனால் நிலத்தைச் சாகுபடி செய்ய முடிய
வில்லை. மலேரியா வழக்கமாக அறுவடை காலத்திலேயே
தோன்றுவதனால், இந்தியாவில் விளைச்சலில் சுமார் ஆறு
சதம் குறைந்துவிட்டதாகக் கணக்கிட்டிருக்கின்றனர்.

1953-இல் மலேரியாவால் பீடிக்கப்பட்ட பகுதிகளை 190
ஜில்லாக்களாகப் பிரித்தனர். இந்த ஜில்லா ஒவ்வொன்றி
லும் பத்து லட்சம் ஜனங்கள் வசித்தனர். 18,750 பயிற்சி
பெற்ற தொண்டர்கள் நாடெங்கும் சென்று, வீடு வீடாக,
கிராமம் கிராமமாக, டி.டி.டி. (D.D.T.) தெளித்தல்
தொடங்கப்பட்டது.

மொத்தம் பத்துக் கோடி மக்கள் வசித்த 100 ஜில்லாக்
களில் இரண்டு அல்லது மூன்று தடவை 1954-க்குள் டி.டி.டி.
தெளிக்கப்பட்டுவிட்டது. இந்த திராவகம் அமெரிக்க அர
சாங்க உதவி மூலம் கிடைத்தது. 1955-க்குள் பதின்மூன்று
கோடி மக்களுக்கு மேல் வசிக்கும் இடங்களில் இந்த கொசு
நாச மருந்து தெளிக்கப்பட்டுவிட்டது. 1957-க்குள் 190
ஜில்லாக்களிலும் வேலை முடிந்திருக்கும். ஆண்டுதோறும்
பத்துக் கோடி மக்களை மலேரியா பீடித்திருந்தது, இரண்டு
கோடி ஐந்து லட்சத்திற்குக் குறைந்துவிட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியமான நோக்கம்
உணவு உற்பத்தியைப் பெருக்குவதும், கிராம அபிவிருத்தி
[illegible] அதிகப்படுத்துவதுமாயிருப்பினும் ஆலைத்தொழில்
[illegible]ம், கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

**1952-லிருந்து 1955-க்குள் ஆலைத்தொழில் உற்பத்தி 37 சதம் கூடுதலாகி யிருக்கிறது.**

இந்திய ரெயில் பாதைகளைத் துரிதமாக நவீன முறையில்
திருத்தியமைத்து வருகின்றனர். வருஷத்திற்கு 6 ஆயிரம்
ரெயில் பெட்டிகள் தயார் செய்த இடத்தில் 1955 இல் பன்னி
ரண்டாயிரம் பெட்டிகள் தயாராகி வருகின்றன. வருஷத்
திற்கு இரண்டு ஆயிரம் என்ஜின்கள் புதிதாகத் தயாராகி வரு
கின்றன. இவைகளில் மூன்றில் ஒரு பங்கு இந்திய ஆலைகளி
லேயே தயாராகின்றன. 1956-ஆம் வருஷம் ஏப்ரலுக்குள்
நீர்வீழ்ச்சி மூலம் மின்சார உற்பத்தி 51 சதம் கூடுதலாகக்
கிடைப்பதற்கான ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தில் 93 சதம் உள்நாட்டுப்
பண வசதி மூலமே நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தப்
பணமும், முக்கியமாகக் கடுமையாக வரி விதிப்பதன் மூலமே
சேகரிக்கப்படுகிறது. பாக்கிப் பணம் உலகப் பாங்கு கடன்
கள், அல்லது கொழும்புத் திட்டத்தின் மூலமும், அமெரிக்க
இலவச உதவி மூலமும் சரிக்கட்டப்படுகிறது. யுத்தப் பிற்
காலத்தில் ஏற்பட்டதைவிட இம்மாதிரி அந்நிய உதவி
மூலம் 1955 வரையில் இந்தியாவில் பண வீக்கம் ஏற்பட
வில்லையென்பதைக் கண்டு பொருளாதார ஆசிரியர்களும்,
நிதி நிபுணர்களும் ஆச்சரியப்படுகிறார்கள். உண்மையில்
தான்ய விளைச்சல் சிறப்பாயிருந்ததனால் மக்களுக்குத் தேவை
யான சாமான்களின் விலை 1952-இல் இருந்ததைவிட
1955-இல் சற்றுக் குறைவாகவே இருந்தது.

சில அம்சங்கள் தவிர முதல் ஐந்தாண்டுத் திட்டம் எதிர்
பார்த்தபடியோ அல்லது சற்றுக் கூடுதலாகவோ 1956 ஏப்ர
லுக்குள் நிறைவேறிவிடும் . என்றே தோன்றுகிறது.
போட்டியாயுள்ள சீனத் திட்டத்தின் வெற்றிக்காகச் செய்யப்
படும் முயற்சிகளை மனத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால்,
இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி
பெறவேண்டுமானால், ஆலைத்தொழில் அபிவிருத்தியில் அதிக
மான கவனம் செலுத்துவதுடன் கிராம அபிவிருத்தி வேலை
நிதானமாக விரிவடைவதற்கும் பாடுபட வேண்டும். பார்க்கப்
போனால் ஆலைத்தொழில் உற்பத்தி ஏற்கனவே சிறப்பாயிருப்
பினும் 1961-க்குள் இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படு
கிறது. இதற்குள் எஃகு உற்பத்தி ஐம்பது லட்சம் டன் ஆகப்
பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உற்பத்தி
பெர்ல் துறைமுகத்தைத் தாக்குவதற்கு முன் ஜப்பானின்
உற்பத்தி நிலைக்கு ஈடாகும்.

**இந்தத் திட்டம் அளவுக்கு மீறிய ஆர்வத்தால் வகுக்கப்பட்டதென்றே கூறவேண்டும்; 1955-இல் நான் கண்ட திருப்தி கரமான சூழ்நிலை நீடித்தாலும், இந்தியா தன் நோக்கத்தை**



நிறைவேற்ற முடியுமா? இந்திய மக்கள் உயிர்வாழ்வதற்குப்
போதுமான உணவளிக்க இந்தியா தனது குறைவான உற்
பத்தியில் 93 சதத்தை உட்கொள்ள வேண்டிய நிலை 1955-இல்
இருந்தது. அந்த உற்பத்தியில் பாக்கியிருந்த ஏழு சதப்
பொருள்களை விற்றே இந்தியா தனது விஸ்தரிப்பு, அபி
விருத்தி திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

நிதானமான தொழில் பெருக்கத்தினாலும், நீடித்துக்
கடினமாக வரி விதிப்பதன் மூலமும் 1961-க்குள் உற்பத்தி
யில் 88 சதமே உபயோகிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்
படுகிறது. மக்களுக்கு கூடுதலான வசதிகள் அளிக்க 12 சதமே
மிஞ்சுகிறது. இப்படி வயிற்றைக் கட்டி முன்னேறுவதை கல
வரமின்றி ஒரு ஜனநாயக நாடு சமாளிக்க முடியுமா?

விருப்பு வெறுப்பின்றி நாட்டின் நிலையைக் கவனிப்பவர்
களுக்கு, இம்மாதிரி பல பொருத்தமான சந்தேகங்கள் எழக்
கூடும் என நான் நினைக்கிறேன். மற்றுமோர் பிரச்னையும்
தோன்றக்கூடும். இந்தியாவின் ஜனத்தொகை அமெரிக்காவி
னுடையதைவிட இரு மடங்கு அதிகம். இவ்வளவு பேருக்
கும் எல்லா கிராமங்களுக்கும் பயன்படக்கூடிய கிராம விஸ்த
ரிப்புத் திட்டம் ஆறு ஆண்டுகளுக்குள் பூர்த்தியடைய வேண்
டும். இதைச் சாதிக்கக் கூடிய முறையில் தற்போதுள்ள அர
சாங்க அதிகார அமைப்பை விரிவுப்படுத்த முடியுமா? இந்த
வேலையை நன்கு செய்து முடிக்க 400,000 பயிற்சிபெற்ற
ஆண் பெண் அதிகாரிகள் தேவையாயிருக்கும்.

மக்கள் மீளா வறுமையில் உழன்று கொண்டிருக்கையில்,
அரசியல் நெருக்கடி ஏற்படாது. வாழ்க்கை விரிவடைந்து
உன்னத நிலையடைவது சாத்யம் என்பதை அறிந்து சிறப்
பான வாழ்க்கை முறை விரைவாகக் கிடைக்கவேண்டும் என்று
மக்கள் ஆவல் கொள்கையில் தான், நெருக்கடி ஏற்படக்
கூடும் என்பதை முந்திய அத்தியாயம் ஒன்றில் நான் கூறி
யிருக்கிறேன். அவர்கள் எதிர்பார்ப்பது நியாயமில்லையெனக்
கூறலாமானாலும் அவர்கள் விரும்புவது நீண்ட காலத்திற்குக்
கிடைக்காவிட்டால், அதனால் எவ்வித அரசியல் விளைவுகள்
ஏற்படும்? தோல்விகளையும், குறைபாடுகளையும் மிகைப்
படுத்திக்கூறி மக்கள் மனத்தைப் பாழ்படுத்தக்கூடிய மேடைப்
பிரசங்கிகளுக்குக் குறைவிருக்காது என்பதையும் மறக்க
லாகாது.

ஒவ்வொரு ஆண்டிலும் இந்தியப் பல்கலைக் கழகங்களி
லிருந்து 50 ஆயிரம் ஆண், பெண் பட்டதாரிகள் வெளியேறு
கின்றனர். மனதை விரிவுபடுத்தக்கூடிய கலை அம்சப் பட்ட
தாரிகளே இவர்களில் பெரும்பாலோர். அடித்தளத்தி
லிருந்து, மக்களை உயர்வாழ்வுக்கு உயர்த்தக்கூடிய, சலிப்
பளிக்கும் வேலையை மேற்கொள்ள இந்தக் கனவான் மனப்

பாங்குள்ளவர்கள் தயாராயிருக்க மாட்டார்கள், உணர்ச்சி
வசப்பட்டு, உடலுழைப்பை மேற்கொண்டு கிராமங்களிலும்,
ஆலைகளிலும், சேரிகளிலும் அத்தியாவசியமாயுள்ள பணிக
ளைச் செய்ய இவர்களைத் தூண்டி வழி கண்டு பிடிக்க முடி
யுமா? அல்லது அறிவாளிகளில் மேலோர் என்று தங்களை
எண்ணிக்கொண்டு, ஒதுங்கி நின்று, ஏமாற்றமடைந்த,
வெறுப்புமிக்கவர்கள் போல் பலாத்கார முறையில் சபலம்
கொள்வார்களா? புரட்சியை அநேகமாகப் பட்டினியால்
வாடும் விவசாயிகள் தலைமை தாங்கி நடத்துவதில்லை. வாழ்க்
கையில் ஒருநாள்கூட பட்டினி கிடந்தறியாத, ஏமாற்ற
மடைந்த மத்யதர வகுப்பைச் சேர்ந்த அறிவாளிகளே புரட்சி
விளைவித்துள்ளனர்.

இந்தியாவில் நிலச்சீர்திருத்தத் திட்டமும், அபிவிருத்தி
யடைந்திருக்கிறது. அரசியல் செல்வாக்குள்ள நிலச்சுவான்
தார்களின் எதிர்ப்புக்கிடையே இந்தத் துறையில் இதே ரீதி
யில் நீடித்து முன்னேற்றமடைய முடியுமா? முடியாவிட்டால்
உற்பத்திப் பெருக்கினால் ஏற்படும் நலனை மக்கள் அநுபவிக்க
மாட்டார்கள். நிலவுடைமையுள்ள ஒரு சிலரே அடைவர்.
இந்த நிலையை வகையாகப் பயன்படுத்திக் கொள்ள கம்யூ
னிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கு மற்றுமோர் சந்தர்ப்பம்
வாய்க்கும்.

குறிப்பிடத்தக்க ஒரு சிலர் தவிர இந்தியாவின் ஆலை முத
லாளிகள் சீக்கிரத்தில் முயற்சிக்கு மீறிய லாபம் அடைவதி
லேயே கவனம் செலுத்துகின்றனர். தொழில் அபிவிருத்திக்
கான நீண்டகாலத் திட்டம் வகுத்துச் சொற்பலாபம் பெறுவ
தில் அவர்களுக்கு அவ்வளவாக அக்கறையில்லை. இவர்களில்
சிலர் வரி வசூல் அதிகாரிகளுக்குப் பொய்க் கணக்குச் சமர்ப்
பிக்கத் தயங்குவதில்லை. இம்மாதிரி நடத்தைகளால் தனிப்
பட்ட வியாபாரிகள் இந்தியாவில் மதிப்பிழப்பதற்கு இட
மேற்பட்டுவிட்டது. அபிவிருத்தித் திட்டத்தில் இதைவிடச்
சீரான பங்கு கொள்ளும் வகையில் இந்திய தனிப்பட்ட வியா
பாரப் பகுதியை ஊக்குவிக்க முடியுமா?

அதிகப்படியான பெயர்களுக்கு வேலை கிடைக்க வசதி
செய்வது மிகவும் முக்கியம். இந்த வகையில் இன்னும் எவ்வ
ளவோ முன்னேற்றமடைய வேண்டியிருக்கிறது என்பது
அபாயகரமான நிலையாகும். தொழில் முன்னேற்றமடை
வது அத்தியாவசியமானது. ஆனால் இதை அடைந்துவிட்
டால் அப்புறம் செய்வதற்கொன்றுமில்லையென்றும் நினைத்து
விடலாகாது. (உலகத்திற்குத் தேவையான மோட்டார்களில்
60 சதம் அமெரிக்காவில் தயாராகின்றது. இதற்காகச் சுமார்
பத்து லட்சம் பேர்களே வேலை செய்கின்றனர்.) இந்தியாவில்
வேலையில்லாதவர்கள் அல்லது ஒரு பகுதி வேலையில் இருப்ப



வர்கள் லட்சக்கணக்கில் இருக்கின்றனர். இவர்களுக்கெல்
லாம் வேலை கொடுப்பது, கிராமங்களில் வீடுகட்டுதல்,
ரஸ்தாக்கள் அமைப்பது, சிறு தொழில்கள், கிராமக் கைத்
தொழில்கள் அபிவிருத்தியைப் பொறுத்திருக்கிறது. ஆனால்
இந்த முன்னேற்றங் காணுவதற்குப் போதிய வசதி இப்
போதையத் திட்டத்தில் இல்லையெனத் தோன்றுகிறது.

தேச கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற
உணர்வும், ஒவ்வொருவரும் இந்தப் பணியில் பங்குகொள்ள
வேண்டுமென்கிற ஆவலும் சேர்ந்து அபிவிருத்தி வேலையைத்
தொடர்ந்து நடத்தி, மேலும் அதை விஸ்தரித்துக்கொண்டு
போக முடியுமா? இதுதான் மற்றெல்லாவற்றையும்விட
முக்கியமான பிரச்னை. அரசாங்கமும் மக்களும் ஒன்று
சேர்ந்து இதை நடத்த வேண்டும் என்கிற பரஸ்பர உணர்வு
இருக்க வேண்டும். இந்த உணர்வுதான் நாட்டு மக்களை ஒன்று
படுத்தி, உடனடியாகச் செய்ய வேண்டிய வேலைக்கான ஆன்
மிக வேகத்தையும் உற்சாகத்தையும் அளிக்கும். காந்தி
வாழ்ந்த நாட்டில், இந்த வேகமும் ஆவலும் மக்களுக்கு
இருந்தே ஆகவேண்டும்.

காந்தியின் சக்தி எப்படிப் பரிணமிக்கப் போகிறது?
இந்தியாவின் நெடுங்கால வரலாற்றில் அவர் கண்ட வெற்றி
தற்காலிகமானதுதானா? ஏதோ உற்சாகத்தைக் கிளப்பி
விட்டு, அடங்கிவிடும் தன்மை வாய்ந்ததா? காந்தியத் திட்டம்
சுதந்திரமடைவதற்கான தந்திரம்தானா? அல்லது இந்தியா
வின் எதிர்கால அபிவிருத்திக்கு தீவிர ஆக்கமளிக்கக்கூடிய,
ஜீவசக்தியுள்ள, நீடித்த பயனளிக்கக்கூடிய நாட்டில்
வேரூன்றிவிட்ட ஒரு இணையற்ற சக்தியை காந்தி நமக்கு
அளித்துவிட்டுப் போயிருக்கிறாரா?

இந்தியா தனது பிரச்னைகளைத் தீர்ப்பதுடன் நில்லாது,
லோகாயத நோக்கும், எதிலும் சந்தேகமும் உள்ள பிறநாடுக
ளுக்கும் வழி காட்டும் என நான் பெரிதும் நம்பிக்கை கொண்
டிருந்தேன். ஆனால் சில சமயங்களில் ஏமாற்றம் அடைந்
தேன் என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இதற்குக் காஷ்மீர் விஷயம் ஒரு உதாரணமாகும். இந்
தியாவில் அமெரிக்கத் தூதர் என்கிற முறையில் இந்தப் பிரச்
னையின் சட்டபூர்வமான, அரசியல் அம்சங்களை நான் கவ
னித்து ஆராய வேண்டியிருந்தது. இந்தப் பிரச்னையில் இந்தி
யர்களுக்கு நியாயமான உரிமை கொண்டாடச் சட்ட பூர்வ
மான ஆதாரமிருக்கிறது என்பதே என் கருத்து.

எனினும் 1947 நவம்பர் மாதம் ''காஷ்மீரிலிருந்து
எல்லா அந்நியத் துருப்புகளும், வெளியேறியதும்'' பொது
ஜன வாக்கு எடுக்கப்போவதாக, இந்திய அரசாங்கம் வாக்
களித்தது. 1955 வரை இந்த வாக்கெடுப்பு நடைபெறவில்லை;

இது என்ருவது ஒருநாள் நடந்தேதீரும் என்றும் கூறுவதற்
இல்லை.

காஷ்மீர் பிரதம மந்திரியாயிருந்த ஷேக் அப்துல்லா
வைக் கைது செய்த பின், மிக ஜாக்கிரதையாக திட்ட
மிட்டதுபோல் தோன்றிய அமெரிக்க எதிர்ப்புப் பிரசாரம்
நடந்ததைப் பார்த்து, 1953 கோடைக்காலத்தில் நான் கலக்க
முற்றேன். தற்செயலாக அங்கே பிரயாணம் செய்த
அமெரிக்கர்கள் வேவுகாரர்கள் என்று குற்றம் சாட்டப்பட்
டனர். சில நாட்கள் ஓய்வு கொள்வதற்காக அங்கு
சென்ற *அட்லாய் ஸ்டீவன்ஸன் (Adlai Stevenson), தூஷணைக்
குத் தப்பவில்லை. இந்தியப் பத்திரிகைகள் அவரை அமெ
ரிக்க அரசாங்கத்தின் கையாள் என்றும், காஷ்மீர் மலைச்
சாரலில் ரகஸ்ய விமான தளங்கள் அமைக்க வந்திருக்கிருர்
எனவும் எழுதின. ரஷ்யா, சீனுவுடன் சற்று இளக்கமான
முறையில் நமது அமெரிக்க கொள்கை வகுப்பவர்கள்
நடந்துகொள்ள வேண்டும் என இந்தியர் கூறுவதில் தவ
றென்றுமில்லை. இவ்வாறு இந்தியா கூறுவதையொட்டி,
பாகிஸ்தானுடன் உடன்பாடு கொள்ள இந்தியா தீர்மான
மான முயற்சி செய்ய வேண்டாமா?

பாகிஸ்தானுடன் ஒன்றுபட்டுப்போகக் கூடியமட்டில்
விட்டுக் கொடுத்திருக்கிறோம் என இந்தியா கூறுவது நியாய
மானாலும், இது போதுமா? மாபெரும் தேசியத் தலைவரை
இந்தியா படைத்திருக்கிறது. நாட்டை ஒன்றுபடுத்தும்
அரசியல் கட்சி இருக்கிறது. பாகிஸ்தானைவிடப் பலம் பொருந்
திய அரசாங்கம் ஆட்சி புரிவதனுல் நலன் பெற்றிருக்
கிறது. இந்தச் சௌகரியமான நிலையில் கூடிய அளவு விட்டுக்
கொடுத்துவிட்டோம் என்று சொல்லிவிட்டுக் காந்தி திருப்தி
யடைந்து விடுவாரா? முஸ்லிம்களுக்காகவும், பாகிஸ்தானை
சிறப்பான முறையில் நடத்தவேண்டும் என்பதற்காகவும்,
அவர் மேற்கொண்ட கடைசி உண்ணுவிரதத்திலிருந்து அவர்
அரைகுறை நடவடிக்கைகளில் திருப்தி கொண்டிருக்க
மாட்டார் என்பதை ஊகிக்கலாம்.
மேலும் பிரஜா உரிமைகளுக்கு முழு மதிப்பளிப்பதில்
பிற நாடுகளுக்கு காந்தி சிருஷ்டித்த இந்தியா வழி காட்டக்
கடமைப்பட்டதல்லவா? ஷேக் அபதுல்லா காங்கிரஸ் கட்
சித் தலைவர்களில் பலரின் நண்பர். 1955-இல் அவர் இன்ன
மும் காவலில் வைக்கப்பட்டிருந்தார். ''எல்லைக் காந்தி''
என்றழைக்கப்பட்ட கபார்கானைக் காவலில் வைத்திருந்த

* அட்லாய் ஸ்டீவன்ஸன்:--(Adlai Stevenson) இவர் அமெரிக்க ஜனாதி
பதி தேர்தலில் ஐஸன்ஹோவருடன் போட்டி போட்டார்.



தற்காக வருஷக் கணக்காக இந்தியா பாகிஸ்தானைக் குறை
கூறத் தவறவில்லை.
1955-இல் நான் மீண்டும் இந்தியா சென்றேன். 1951-
53-இல் இருந்ததைவிட அதிக ஊழல் நிலவுவதாகப் பலர்
பேசிக்கொண்டது என் காதில் விழுந்தது. இப்போது
இந்தத் தீமை சில ராஜ்யங்களில் மந்திரிகளைக் கூடப்
பீடித்துவிட்டதாகக் கூறப்பட்டது. அநேக ராஜ்ய சட்ட
சபைகளில் நிலச்சுவான்தார்கள் செல்வாக்குப் பெற்றிருப்
பது வெட்கக் கேடானது என்று பேசிக்கொண்டனர்.
சுதந்திரத்திற்காக இந்தியா நடத்திய போராட்டத்தின்
மூலமும், அதன் தலைவர்கள் வகுத்துள்ள கொள்கைகளி
லிருந்தும் இந்தியா உயர்ந்த நடைமுறைகளைப் பின்பற்ற
விரும்பியது என்பது தெரிந்தது. இந்த நடைமுறைகளை
அளவுகோலாகக் கொண்டு, இந்தியாவின் செயல்களை அதன்
நண்பர்கள் மதிப்பிட்டால், அது தவறு எனக் கூற முடியுமா?
தென்னிந்தியாவில், மதராஸ் ராஜ்யத்தில் கிராம
சேவைப் பயிற்சி முகாமான காந்தி கிராமத்திற்கு நான்
1955 பிப்ரவரியில் சென்றபொழுது, மேலே நான் குறிப்
பிட்ட விஷயங்கள் என் மனத்தை ஆட்கொண்டன. காந்தி
அறிந்து ஆக்கமளித்த பணிகளுக்கான பயிற்சி பெற
இங்கே முந்நூறு ஆண் பெண்கள் குழுமியிருந்தனர். நாங்
கள் மாலைப் பிரார்த்தனைக்குச் சென்றிருந்தோம். உணர்ச்
சியுடன், அழகாகப் பஜனைக் கீர்த்தனங்கள் பாடியதைக்
கேட்டோம். இப்பாட்டுகளில் சில புதிய நிலைக்கேற்ப
புனையப்பட்டவை. பிற பழங்கால வேதத்திலிருந்து தொகுக்
கப்பட்டவை. கிறிஸ்தவ வேதம், குர்ஆன், கீதையிலிருந்து
சில பகுதிகள் படிக்கப்பட்டன; இவை எல்லாவற்றின்
மூலமும் எல்லோரும் ஓர் குலம் என்பதும், ஒருவன் எந்த
இனம், மதம், நிறத்தவனுயினும் தனி மனிதனுக்குச் சிறப்
பளிக்க வேண்டும் என்கிற படிப்பினை போதிக்கப்பட்டது.
காந்தியுடன் நெருங்கிப் பழகி அவருடைய வெற்றி
தோல்விகளில் பங்கு கொண்ட ஒரு கோஷ்டியினருடன்
அன்றிரவு நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அந்தப்
பள்ளியில் அவர்கள் யாவரும் ஆத்மார்ப்பண உணர்வுடன்
பணிபுரிந்து வருவது என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது
என்பதை நான் அவர்களிடம் தெரிவித்துக் கொண்டேன்.
ஆனுல் இந்த சேவா உணர்ச்சி, வாழ்க்கை முறை எதிர்கா
லத்தை உருவாக்க எவ்வகையில் உதவி புரியும் என்று
அவர்களை நான் கேட்டேன்.
''இந்தியாவின் புகழ்மிக்க காலம் இனித்தான் வரப்
போகிறது. நேரு இல்லாவிட்டால் தாங்கள் ஒரு தேசத்
தினர் என்று சொல்லிக்கொள்ளும் வகையில் மீண்டிருக்க

மாட்டோம். அவருடைய நாட்டுப்பற்றும், அரசியல் சாதுர்
யமும்தான் எங்களை ஒன்றுபடுத்திச் சிறந்த தலைவரை எங்க
ளுக்கு அளித்தது. எங்களைச் சர்வநாசத்திற்குள்ளாக்கியிருக்
கக் கூடிய மதவெறியர்களை அவர் தனது தீரத்தினால்
தோற்கடித்தார்.

"ஆனால் இந்தியாவைப் பொறுத்தமட்டில், நேரு எவ்
வளவுதான் மேன்மை படைத்தவரானாலும் அவரைக்
கொண்டு, லட்சியங்களில் முழு வெற்றியடைந்துவிட முடி
யாது. நேரு விலகிக் கொண்டாலும் அல்லது மரண
மடைந்தாலும் காந்திய வழியில் இந்தியா குறைவான
ஆர்வம் காட்டும் என எண்ண வேண்டாம். அவ்வழியில்
இந்தியா மேலும் தீவிர ஆர்வம் காட்டும்." இவ்வாறு
காந்தி கிராமத் தொண்டர்களில் ஒருவர் எனக்குப் பதி
லளித்தார்.

நேருவுக்கு அடுத்தபடியாக நாட்டுக்குத் தலைமை
தாங்கக் கூடியவர்கள் யார் எனும் கேள்விக்கு பதிலளிக்கை
யில் இருவருடைய பெயர்கள் அதிகமாகப் பிரஸ்தாபிக்கப்
படுவது, எனக்கு ஞாபகமிருக்கிறது. அவ்விருவரும் நாட்
டுப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட காந்தி
சிஷ்யர்கள்; இவர்களில் ஒருவர் பம்பாய் முதலமைச்சர்
மொரார்ஜி தேசாய் (தற்போது மத்திய சர்க்கார் நிதி
மந்திரி); மற்றொருவர் ஜெயப்பிரகாஷ் நாராயண். முன்பு
சோஷலிஸ்ட் கட்சித் தலைவராயிருந்தவர். வின்ஸ்கான்
ஸின் (அமெரிக்காவில் உள்ளது) பல்கலைக் கழகப்பட்டம் பெற்
றவர். இவ்விருவரையும் பல்லாண்டுகளாக நான் அறிவேன்.
அவர்களைப் பார்த்துப் பேசியதை நான் மறக்க முடியாத
அநுபவம் எனக் கருதுகிறேன்.

நான் சமீபத்தில், காங்கிரஸ் அதிபர் யு. என். தேப
ருடன் பேசியதும் எனக்கு ஞாபகமிருக்கிறது. அவர்
சிரத்தை மிகுந்த திறமை வாய்ந்த காந்தி பக்தர். கட்சி
யில் உள்ள ஊழல்களைப் பூரணமாகக் களைந்து, காங்கிரஸ்
காரர்களிடம் காந்தியச் சிறப்பான பொதுநலப் பற்றுதலை
ஏற்படுத்த உறுதிகொண்டிருப்பதாக அவர் என்னிடம்
கூறினார்.

மேலும், இந்தியாவில் நடமாடும் முனிவர் விநோபா
பாவேயை ஒரிஸ்ஸாவில் ஒரு நாள் சந்தித்ததைப் பற்றி
என் மனைவி விவரமாக ஆர்வத்துடன் என்னிடம் கூறிய
தும் எனக்கு ஞாபகமிருக்கிறது. இல்லாதவர்களுக்குப்
பகிர்ந்தளிக்கும்படி இவரிடம் நிலச்சுவான்தார்கள் தாங்க
ளாகவே, நாற்பது லட்சம் ஏக்கரா நிலத்தைக் கொடுத்திருக்
கின்றனர். அதிகாலையில் 3-30 மணிக்கு அவர் எழுந்து
காலைப் பிரார்த்தனை செய்கிறது பற்றியும், நாள் பூராவும்



இவரைப் பார்த்துப் பேசவரும் ஆயிரக்கணக்கான மக்கள்
அவரை எப்படிப் பூசித்து அவருடைய வாக்குகளைக்
கவனித்துக் கேட்கின்றனர் என்றும் என் மனைவி கூறி
யிருந்தாள்.

காந்தி இறந்துபோன பிறகு ஹைதராபாத்தில் கம்
யூனிஸ்டுகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பறித்
துப் பங்கிட்டுக் கொடுத்தனர். அஹிம்சையின் பிரத்தியட்ச
பூர்வமான பக்தன் எனக் காந்தியால் வரிக்கப்பட்ட, துறவு
மனப்பான்மை கொண்ட விநோபா 1951-இல் ஹைதரா
பாத்திற்கு விஜயம் செய்தார். காந்திய முறையில் நிலமில்
லாதார் பிரச்னையைத் தீர்ப்பது என முடிவு செய்தார்.

ஒரு ஹைதராபாத் கிராமத்தில், நிரம்ப நிலமுடைய
வர்கள், கொஞ்சம் நிலமுடையவர்கள் யாவரையும் அழைத்
தார். நிலமில்லாதவர்களைத் தங்களுடைய சகோதரர்க
ளாகப் பாவித்து நிலத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்
படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். இதற்கு ஒரு நிலச்
சுவான்தார் இணங்கினார். இதிலிருந்து பூமிதான யாத்திரை
உதயமாயிற்று.

ஒவ்வொருவரும் தங்களுக்கு ஆறாவது மகன் பிறந்திருப்
பதாக எண்ணிக்கொண்டு நிலத்தில் ஆறில் ஒரு பங்கைத்
தானமாகக் கொடுக்கும்படிக் கேட்க திட்டமிட்டார். இவ்
வாறு உபதேசம் செய்து கொண்டு, நாடெங்கும் நடந்து
செல்வதென 1951-இல் ஆரம்பித்தார். போகுமிடமெல்லாம்
நிலமில்லாதாருக்கு நிலம் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டே
சென்றார். இந்தியாவெங்கும் மூலைக்கொருவராய் வேலை
செய்த காந்தி பக்தர்கள் ஆர்வத்துடன் இந்த இயக்கத்தைப்
பரப்புவதற்குக் கூடினர்.

இந்தியா வெங்கும் பூதான இயக்கத்தின் மூலம் தார்மிக
மறுமலர்ச்சி ஏற்பட்டு வருகிறது என்பதை 1955-இல் உணர்ந்
தோம். இந்தியா போன்ற பிரம்மாண்டமான நாட்டில்,
மாறுபாடான அம்சங்கள் நிரம்ப உள்ள ஒரு தேசத்தில்,
ஒரு சிலரின் தனிப்பட்ட அநுபவங்களைக் கொண்டு பொதுப்
படையான முடிவுக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும்.
ஆனாலும், இந்தியாவில் எங்கள் வாழ்க்கையிலிருந்தும்
கேட்டு, பார்த்துத் தெரிந்துகொண்டதிலிருந்தும் இந்த இயக்
கம் நம்பிக்கையூட்டுகிறது என்பதைக் கூறியாகவேண்டும்.
இந்தியாவில் ஆன்மிக வாழ்க்கை வேரூன்றி வளம் பெறும்
என்பதற்கான நம்பிக்கை, சுதந்திரம் பெற்றதும் சற்று
மங்கியிருந்தது. இந்தப் பூதான இயக்கத்தின் மூலம் அந்த
நம்பிக்கை தீட்சண்யம் பெற்றிருப்பது போல் காணப்படு
கிறது. இந்தியர் முன்னைவிடத் தார்மிக அம்சங்களுக்கு அதிக
மான மதிப்பளிக்கிறார்கள்.

ஒவ்வோர் இரவு பத்து அல்லது பதினைந்து மைல் தூரம் கிராமங்களிலும் கிராமப்புறங்களிலும் நடந்துவிட்டு விநோபா பாவே மண்வெட்டியால் மண்ணெடுக்கிறார். இதன் மூலம் உழவர்களுக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமையை நிரூபித்துக் காட்டுகிறார். நிலச்சுவான்தார்கள் புரியும் அநீதி, கொடுமை யாவும் குடியானவர்களுக்குக் கஷ்டம் அளிப்பதில்லை. இச்செயல்களால் கஷ்டம் அநுபவிக்கப்போகிறவர்கள் உடைமையாளர்களே என்பதைப் பிரிட்டிஷாருக்குக் காந்தி எடுத்துக்காட்டிய மாதிரி விநோபாவும் சுட்டிக்காட்டுகிறார்.

விநோபா தம் வழிக்குத் திருப்பியுள்ளவர்களைப் பார்த்து, அவருக்குள்ள தார்மிகச் செல்வாக்கின் தன்மையை ஓரளவு புரிந்துகொள்ளலாம். சோஷலிஸ்ட் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண், பூதான இயக்கத்திற்கும், தற்கால ஜனநாயக இந்தியா அஹிம்சை முறையில் மேம்பாடு அடைவதற்கும் தமது வாழ்நாளைச் செலவிடுவதாகப் பிரதிக்ஞை செய்து கொண்டுவிட்டார். விநோபாவின் துணைவர் என்கிற முறையில் அநேக இந்திய இளைஞர்களை இந்தப் பணியில் அவர் ஈடுபடச் செய்கிறார். இதுவரையில் சேர்ந்துள்ள லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைப் பகிர்ந்தளிப்பது, கிராமம் பூராவும் தானம் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான கிராமங்களில் புனர் நிர்மாணம் செய்வது ஆகிய வேலைகளில் இவ் விளைஞர்கள் ஈடுபடுவார்கள்.

பூதானம் செய்தால் சட்டபூர்வ நிலச்சீர்திருத்தத்திற்கு அவசியமே இராது என்று விநோபாவோ, ஜயப்பிரகாஷோ கருதவில்லை. ஆனால் கிராம மக்களிடையே பூமிதான இயக்கத்தைப் பரப்பினால் ஒழுங்கான நிலச் சீர்திருத்தச் சட்டம் இயற்றுவதற்குத் தேவையான சூழ்நிலை ஏற்படும் என்பது இவர்கள் வாதம். இந்தப் பிரசாரத்தின் மூலம் காந்திய சக்தி—லட்சியத்தில் நம்பிக்கை உள்ள மக்களின் சக்தி—யாவரையும் ஆட்கொண்டு நிலச்சீர்திருத்தம் ஏற்பட உதவி புரியும் என்பதே இவர்கள் கருத்து.

முடிவாகக் கம்யூனிஸத்தைத் தோற்கடிக்க வேண்டுமானால், அதைவிடச் சக்திவாய்ந்த கருத்தினால்தான் அது சாத்தியம் என வாதம் செய்பவர்கள் இந்த மெலிந்த, முதிர்ந்தவர் தான் ஆசியாவிலே மிக்க வலிமையான ஜனநாயக சக்தியின் அவதாரம் என்பதை ஒப்புக்கொள்வார்கள். ''பலாத்கார மின்றிப் புரட்சி செய்ய முடியாது என்கிற கம்யூனிஸ்டுகள் கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியா போன்ற ஜனநாயக ரீதியில் ஆட்சி நடைபெறும் ஒரு நாட்டில், பலாத்காரத்தைக் கைக்கொள்ளாமல், ஓட்டுப்பெட்டிகள் மூலமே புரட்சி விளைவிக்க முடியும் என நாங்கள் நம்புகிறோம்.'' இவ்வாறு விநோபா கூறுகிறார்.



''நமக்குச் சுயராஜ்யத்தை வாங்கித் தந்ததன் மூலம் காந்தியம் தனது சிறப்பை நிரூபித்துவிட்டது. இனி அதை அநுபவசாத்தியமற்றது. கனவு காண்பதற்கொப்பானது என்று கூறித் தட்டிக்கழித்துவிட முடியாது. பழம் பெரும் சீனுவுக்கும் புத்துயிரூட்டுவதன் மூலம் கம்யூனிஸமும், தற்காலிகமாகத் தனது சக்தியை நிரூபித்துவிட்டது. இதிலிருந்து இரு முறைகளையும் ஏன் ஒன்றுபடுத்திப் பார்க்கலாகாது என்று சிலருக்குச் சபலம் தட்டுகிறது. ஆனால் இவ்விரு லட்சியங்களும், ஒன்றுக்கொன்று பொருந்தாது என்பதுதான் உண்மை. இவ்விரு கோட்பாடுகளுக்கும் உள்ள மாறுபாடுகள் அடிப்படையானவை. சூரியன் பிரகாசிப்பது எப்படி உண்மையோ அதே போல் இவ்விரண்டும் நேர்மாறான முறைகள்.'' இவ்வாறு மேலும் தெளிவாக விநோபா கூறினார்.

1955-இல் இந்தியாவில் நாங்கள் தங்கிய கடைசி நாளன்று ராஷ்டிரபதி மாளிகையில் காந்தியின் 1929-30 ஆண்டு வாழ்க்கையைச் சித்திரிக்கும் படம் காட்டப்பட்டது. பிரம்மாண்டமான, கட்டுப்பாடான, சக்தி வாய்ந்த ஜனத்திரள் போலீஸ் தடியடியையும் தாங்கிக்கொண்டு, அஹிம்சை முறையில் பொறுமையாக இருந்த காட்சி, காந்தியின் அந்நியத் துணி பகிஷ்காரத்தினால் வேலையிழந்த லங்காஷயர் ஆலைத்தொழிலாளிகள், காந்தியின் பிரிட்டிஷ் விஜயத்தின்போது அவரை உற்சாகமாக வரவேற்ற காட்சி எல்லாம் காட்டப்பட்டன.

எங்களைத் தவிர அந்தப் படத்தைப் பார்த்த சுமார் நாற்பது பேர்களில், காந்தியின் சுதந்திர சாதனமான காங்கிரசின் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் இருந்தனர். அவர்களில் பலர் இளைஞர்களாயிருந்த காலத்தில் தாங்கள் மகாத்மாவின் கீழ் தேசத்திற்காகத் தங்களை அர்ப்பணம் செய்து கொண்டு வேலை செய்த காட்சி படத்தில் இடம் பெற்றிருந்தது. படம் பார்த்த பிறகு, அன்றிரவு நேரு மிக உருக்கமாக எங்களிடம் பேசிக்கொண்டிருந்தார். காந்தி போதித்த கொள்கைகள் பற்றியும், தன்னிடமும் தமது சகாக்களிடமும் அவர் ஒப்படைத்துவிட்டுப்போன பொறுப்புகள் பற்றியும் அவர் பேசிக்கொண்டிருந்தார்.

ஹைதராபாத், காந்தி கிராமப் பள்ளிகளில் உள்ள கிராமங்களில் தொண்டுபுரிந்துவரும் கிராம ஊழியர்களின் சிரத்தை மிக்க முகங்கள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. இவர்கள் பெற்றுள்ள உணர்ச்சி இந்திய மக்களின் சுதந்திரம், அபிவிருத்தி இரண்டையும் உறுதிப்படுத்துவதுடன் நின்று விடாமல், கடல் கடந்த நாடுகளில் வாழும் லட்சோபலட்சம் மக்களுக்கு வழிகாட்டியாகவும் இருக்குமா என்று வியப்புடன் கேட்கத் தோன்றுகிறது.

"காந்தி, மார்க்ஸ் இவ்விருவரின் கொள்கைகளை ஒப்பிட்
டுப் பார்ப்பதை விடக் கவர்ச்சிகரமான ஆராய்ச்சி இருக்க
முடியுமா? லெனின், மார்க்ஸைக் கரைத்துக் குடித்தவர்.
காந்தியோ டால்ஸ்டாய் மயமாயிருப்பவர். இவ்விரு கொள்
கைகளும் நேருக்கு நேர் ஒன்றை மற்றொன்று விழுங்கிவிடும்
போல் நிற்கின்றன.

"மேலோட்டமாகப் பார்த்தால் போராட்ட அரங்கில்
எதிர்த்து நிற்பவர்கள் ரஷ்யாவின் தலைமையில் கம்யூனிஸ்டு
களும், அமெரிக்காவின் தலைமையில் முதலாளிகளும் போல்
தென்படலாம். ஆனால் கொள்கையளவில் அமெரிக்கா வலு
விழந்துவிட்டது. ராணுவ பலத்தைக்கொண்டு அமெரிக்கா
பலம் வாய்ந்தது போல் காணப்பட்டாலும். அந்நாடு கம்யூ
னிஸத்திற்குப் போட்டியாக நிற்கமுடியும் என நான் நினைக்க
வில்லை. இறுதியில் காந்தியத்துடன் தான் கம்யூனிஸம் பலப்
பரீட்சை செய்யவேண்டி வரும் என நான் நம்புகிறேன்."
வினோபாவின் இந்த வாக்குத் தீர்க்கதரிசனம் வாய்ந்தது என்
றாகிவிடுமா?

ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கைத் தளர்ந்துவிட்டோம்
எனும் வினோபாவின் கடுமையான குற்றச்சாட்டை அமெ
ரிக்கர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நமது புரட்சிக்
கொள்கைகளை நாம் பின்பற்றி நடக்கிறோமா என்பது பற்றிப்
புனராலோசனை செய்ய இந்தக் குற்றச்சாட்டு நம்மைத்
தூண்டவேண்டும். வினோபா போன்ற ஒருவர் நாம் தகுதி
யிழந்து விட்டோம் என ஏன் கூறவேண்டும் என்பதைச்
சிந்தித்துப் பார்க்கவேண்டும். எவ்வாறாயினும், கம்யூனிஸத்
திற்குப் புரட்சிகரமான மாற்றைக் காந்தியம் அளிக்கிறது
என்பது நல்லதொரு சூசகமாகும். ஏனெனில், அந்த மாற்று,
மனித கண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது.

அத்தியாயம்—20

# இந்தியாவும் யுத்த கெடுபிடியும்

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தை இணையற்ற முறை
யில் காந்தி தலைமை தாங்கி நடத்தியதையும், சமீப
காலத்தில் நவ இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளா
தார முன்னேற்றத்தையும் பெருவாரியான அமெரிக்கர்கள்



அநுதாபத்துடன் அறிந்து மிகவும் போற்றுகிறார்கள். ஆனால்
சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் பங்கைப் பற்றி
அவர்கள் மிகுந்த சந்தேகங் கொள்ளக்கூடும். இந்தியா
தனித்து நிற்க விரும்புகின்றதா, நடு நிலைமை வகிக்க
விரும்புகிறதா, அமெரிக்காவுக்கு எதிரிடையாக இருக்கிறதா
அல்லது அப்பட்டமான கம்யூனிஸ்ட் அபிமானம் கொண்
டிருக்கிறதா என்பதை அவர்கள் அறிந்துகொள்ள விரும்பு
கின்றனர். இந்தியாவின் இருபுறங்களிலும், பிரம்மாண்ட
மாக அமைந்துள்ள ரஷ்யா, சீனா விஷயத்தில் இந்தியாவின்
மனப்பாங்கு என்ன என்பது பற்றியே அவர்கள் மிகுந்த
கவலைகொள்கிறார்கள்.

இந்தக் கவலையுடன்தான் அவர்கள் நேருவின் மனப்
பான்மை பற்றி அநேக சந்தர்ப்பங்களில் கவனிக்கிறார்கள்.
இது முக்கியமாக ஆலோசிக்க வேண்டிய விஷயம். ஏனெ
னில், 1925-லிருந்து பெருவாரியான இந்தியர்களின் அயல்
நாட்டு விவகாரச் சிந்தனையை நேருவின் கருத்துக்களே
விசேஷமாக உருவகப்படுத்தி வந்திருக்கிறது. 1925-இல் தான்
காங்கிரஸ் கான்பூரில் கூடி அயல் நாட்டு விவகார இலாகா
ஒன்றை ஆரம்பித்து வைத்தது. இந்த இலாகா அயல்
நாட்டு விவகாரங்களை ஆராய்ந்தறிந்து தனது சிபார்சுகளைக்
காங்கிரசுக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

அயல் தேச விஷயங்களில் இதைவிட முக்கியமான சம்
பவம் 1927-இல் நடந்தது. 1955, ஜனவரி 15-ஆம் தேதியன்று
சென்னையில் பத்திரிகை நிருபர்களிடம் நேரு பேசினார்.
"சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியா பின்பற்றி வரும்
அயல்நாட்டு விவகாரக் கொள்கை சென்னையில் 1927-இல்
நடந்த காங்கிரசில்தான் உதயமாயிற்று" என அச்சமயம்
அவர் கூறினார்.

"எந்த நாட்டுடனும் பிணைந்தில்லாமலும், ஆனால்
எல்லா நாடுகளுடனும் நேசமாயிருக்க வேண்டுமெனும்
கொள்கையும், எல்லா நாடுகளும் சுதந்திரமாயிருக்க வேண்
டும், காலனி ஆட்சியை எதிர்க்க வேண்டும் என்கிற எதிர்
காலத்தைப் பற்றிய நமது மனப்போக்கும் அந்தக் காங்கிரசி
லிருந்துதான் தொடங்கிற்று. நமது அயல்நாட்டு விவகாரக்
கொள்கை திடீரெனத் தோன்றியதல்ல. பல ஆண்டுகளாக
நாம் சிந்தித்து வந்ததன் இயல்பான விளைவு அது என்பதை
அறிந்துகொள்வதற்கு 1927-ஆம் ஆண்டு காங்கிரஸ் நிகழ்ச்சி
களை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்." இவ்
வாறு நேரு மேலும் கூறினார்.

ஒரு கட்சி அரசாங்கப் பொறுப்பு வகிக்கையில் அது
நடந்துகொண்டிருக்கக் கூடிய முறையும், ஆட்சிப் பொறுப்
பில்லாமலிருக்கையில் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றும்

தீர்மானமும் எப்போதும் ஒரேமாதிரியிருக்கும் என்று கூறு
வதற்கில்லை. எனினும் நேரு கூறிய மாதிரி, தற்போதைய
இந்திய அரசாங்கம் ஒரு தலைமுறை காலத்திற்கு ஒரே
மாதிரியான அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றி வந்
திருக்கிறது எனக் கூறுவது நியாயமாகும்.

பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்சி காலனி ஆட்சி
எதிர்ப்பு, இன, நிற வேற்றுமை எதிர்ப்பு இவ்விரண்டு துறை
களிலும் ஒரேமாதிரித் தீர்மானங்களையே நிறைவேற்றி வந்
திருக்கிறது. ''பூரண ஆதிபத்தியம் அடைந்து அந்நிய ஆதிக்க
சகாப்தத்திற்கு முற்றுப்புள்ளிவைத்ததற்காக'' சியாங்-கே-
ஷேக்கிற்கு 1925-ஆம் ஆண்டு நடந்த காங்கிரஸ் சற்று அவ
சரப்பட்டுத் தனது பாராட்டுதலைத் தெரிவித்தது.

1955-இல் வெளிநாடுகளில் சுற்றிவரும் இந்தியத் தூத
ராக நியமிக்கப்பட்ட வி. கே. கிருஷ்ண மேனன் 1936-இல் காங்
கிரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தார். ''ஏகாதிபத்திய
முறையே யுத்தத்தைப் பரப்ப என்றுமே காரணமாயிருந்து
வருகிறது. சமாதானம் நிலவவேண்டுமென்றால் ஏகாதி
பத்திய முறையை ஒழித்தே ஆகவேண்டும்.'' இவ்வாறு
மேனன் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்;

ஃபாஸிஸ்ட் ஆக்கிரமிப்பைக் காங்கிரஸ் பட்டவர்த்தன
மாக எதிர்த்து வந்தது. ஸ்பெயின் மக்களுக்குத் தனது
ஆழ்ந்த அநுதாபத்தையும், அதன் நிலைமை பற்றிய கவலை
யையும் தெரிவித்து 1936-இல் காங்கிரஸ் தீர்மானம் செய்
தது. 'ஐரோப்பிய ஃபாஸிஸ்ட் அரசுகளை, அயல் தேசக்
கூலிப்படைகளை'' எதிர்த்துப் போராடியதற்காக ஸ்பெயி
னைப் பாராட்டியது. இதற்கு ஓர் ஆண்டுக்குப் பிறகு,
ஷாங்ஹாயில் ஜப்பானியத் துருப்புகள் வந்திறங்கின. ''சீன
மக்களுக்கு அநுதாபம் தெரிவிக்கும் முறையில் ஜப்பானிய
சாமான்களைப் பகிஷ்கரிக்குமாறு காங்கிரஸ் இந்திய மக்களை
வேண்டிக் கொண்டது. 1938-இல் ஏகாதிபத்தியப் போர்
தொடங்கியது பற்றிக் காங்கிரஸ் தனது வருத்தத்தைத்
தெரிவித்துக்கொண்டது. சண்டை தொடங்கியதும் நாஜி
ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றியது.

பிரிட்டனுக்குத் துணையாக இந்தியத் துருப்புகள் போர்
புரிந்து கொண்டிருக்கையிலும், காலனி ஆட்சியை ஒழிக்க
வேண்டும் என்று வற்புறுத்தித் தீர்மானம் நிறைவேற்றக்
காங்கிரஸ் தவறியதில்லை. 1946-இல், பிரிட்டன் இந்தியாவை
விட்டு வெளியேறுவதற்குப் பதினேழு மாதங்களுக்கு முன்
இந்தோனேஷ்யா, மஞ்சூரியா, இந்தோ சீனா, ஈரான்,
எகிப்து முதலிய நாடுகளிலிருந்து அந்நியத் துருப்புகள்
வெளியேற வேண்டுமெனக் காங்கிரஸ் கோரியது. அதே
சமயத்தில் ''ஆசியாவில் சுதந்திரத்திற்கு இந்தியா இன்ன



மும் உரைகல் மாதிரி இருக்கிறது. பல நாடுகள் சுதந்திரம்
பெறுவதும், உலகத்தில் சமாதானம் நிலவுவதும் இந்தியா
சுதந்திரமடைவதைப் பொறுத்தே இருக்கிறது'' என்று
அழுத்தமாகக் கூறியது.

சுதந்திர இந்தியா எம்மாதிரியான அந்நிய நாட்டு
விவகாரக் கொள்கையைப் பின்பற்றும் என்பதை அதே
ஆண்டு செப்டம்பர் மாதம் புது டில்லியில் நடந்த பத்
திரிகை நிருபர் கூட்டத்தில் நேரு விளக்கிக் கூறினார். அதே
கொள்கையை இன்றுவரை பார்த்தோர் பிரமிக்கும்படி எள்
ளளவும் பிசகாமல் பின்பற்றி வருகின்றார். ''அயல்
நாட்டு விவகாரங்களில் இந்தியா பிரத்தியேகமான கொள்
கையைப் பின்பற்றும்; எதிரும்புதிருமாக நிற்கும் எந்த
வல்லரசு கோஷ்டியிலும் இந்தியா சேராது. அந்நிய
ஆதிக்கத்தின் கீழுள்ள மக்கள் யாவரும் சுதந்திரம் பெற
வேண்டும் எனும் கொள்கையை நீடித்துக் கடைப்பிடிக்
கும். எங்கே நிற வேற்றுமை கண்டாலும் அதை எதிர்க்
கும். எல்லாத் தேசங்களும், பரஸ்பரம் ஒத்துழைக்கவும்,
எல்லா நாடுகளிடையேயும் நல்லெண்ணம் பரவவும், ஒரு
நாடு பிற நாடுகளைச் சுரண்டிப் பிழைப்பதைத் தடுக்கவும்
இந்தியா மற்ற சமாதான ஆர்வமுள்ள நாடுகளுடன் ஒன்று
பட்டு உழைக்கும்.'' இவ்வாறு நேரு அந்தப் பத்திரிகை
நிருபர்கள் கூட்டத்தில் கூறினார்.

ஐ. நா. சபையை எவ்வித நிபந்தனையுமின்றிப் பின்
பற்றுவதாகவும், அச்சபையுடன் முழுமனதுடன் ஒத்துழைப்ப
தாகவும் நேரு பிரதிக்ஞை செய்துகொண்டார். உலக அமைப்
பில் இந்தியாவுக்குள்ள கேந்திரமான நிலை, அதன் ஏராள
மான ஜனத்தொகை, அமைதியான முன்னேற்றத்திற்கு
அது செய்துள்ள சேவை-இவை யாவற்றிற்கும் ஏற்ப இந்
தியா தீவிரமாக ஐ. நா. நடவடிக்கைகளில் பங்குகொள்
ளும் என்று வாக்களித்தார். காலனி ஆட்சிக்கோ, அந்நிய
ருக்கோ உட்பட்ட மக்கள் சுதந்திரம் பெற வேண்டும்,
அவர்களுக்குச் சுய நிர்ணய உரிமை உண்டு என்று ஐ.
நா.விலுள்ள இந்தியப் பிரதிநிதி எப்பொழுதும் தெளிவாக
வற்புறுத்தி வருவார் எனவும் நேரு கூறினார்.

ஒரு தேசத்தின் அயல்நாட்டு விவகாரக் கொள்கையை
இதைவிடத் தெளிவாக வேறு யாரும் எடுத்துக் கூறியிருக்க
முடியாது. இதனுடன் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இந்தியா
தானாகவே சேர்ந்து கொண்டதையும் சேர்த்துப் பார்த்
தால் சென்ற பத்து ஆண்டுகளில் இந்த விளக்கமான
அறிக்கையை எச்சமயம் வெளியிட்டிருந்தாலும், பொருத்த
மாகவே இருந்திருக்கும். இந்தியாவின் அயல்நாட்டு விவகாரக்
கொள்கை உருவான இந்தப் பின்னணியையும், சோவியத்

யூனியனிலும், சீனாவிலும் நிகழ்ந்த சம்பவங்களையும், அந்நாட்டு ஆட்சியினரின் போக்கையும் மனத்தில் வைத்துக் கொண்டு பார்த்தால், சென்ற சில ஆண்டுகளாக இந்தியா தனது அண்டையிலுள்ள கம்யூனிஸ்ட் நாடுகளுடன் நடந்து கொண்டு வருவதன் பொருள் தெளிவாகப் புலப்படும்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் கடைசி கட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பிற இந்தியரின் வெறுப்புக்காளானார்கள். பிரிட்டிஷ் ராஜப்பிரதிநிதிக்குப் பூரண ஆதரவளிக்கும்படி மாஸ்கோ தாக்கீதுப்படி இந்தியக் கம்யூனிஸ்டுகள் யுத்தத்தில் பிரிட்டிஷாரை ஆதரித்ததுதான் இந்த வெறுப்புக்குக் காரணம்.

சாத்விக வேலை நிறுத்தம் செய்யும்படி காந்தியும், நேருவும் இந்தியர்களுக்குத் தலைமை தாங்கி அழைக்கையில், வேலை நிறுத்தத்தை ஒடுக்க கம்யூனிஸ்டுகள் பிரிட்டிஷாருக்கு உதவி புரிந்தனர். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்டுகள் உண்மையில் தேசிய இயக்கத்தை எதிர்த்தனர். ஆகையால் அவர்கள் மக்களின் நிந்தனைக்குள்ளானார்கள்.

சுதந்திரம் அடைந்த சிறிது காலத்திற்குள், ஹைதராபாத்தில் தெலுங்கானா பகுதியில் இந்தியக் கம்யூனிஸ்டுகள் பெரியதோர் கலகத்தை விளைவித்ததும், இந்தியாவெங்கும் கம்யூனிஸ்ட் வெறுப்புணர்ச்சி பெருகத்தொடங்கிற்று. சர்வதேசக் கம்யூனிஸம் உலகெங்கும் கையாண்ட தந்திரத்தை ஒட்டியே இந்தக் கலகம் நிகழ்ந்தது எனவும், மிகுந்த செலவு செய்து கடுமையான ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொண்ட பிறகே இந்தக் கலகம் அடக்கப்பட்டது எனவும் ஏற்கனவே அறிவோம். 1951-இல் நான் இந்தியாவிற்கு வந்ததும் ''ரஷ்யா நீங்கலாக மற்றெல்லா நாடுகளையும்விட எங்கள் அரசாங்கச் சிறைகளில் அதிகமான கம்யூனிஸ்ட் கைதிகள் இருக்கின்றனர்'' என ஓர் இந்திய அதிகாரி முகத்தைச் சுளித்துக் கொண்டு என்னிடம் கூறினார்.

இன்னமும் மாஸ்கோவின் விருப்பப்படியே இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் செயல்புரிந்தாலும், பிரிட்டனை ஆதரித்த நாட்களுக்கப்புறம் அவர்கள் தங்கள் தந்திரங்களை வெகுவாக மாற்றிக்கொண்டு விட்டனர். சில சமயங்களில் அஹிம்சையை மதிப்பதாகக் கூட பாவனை செய்கிறார்கள். ஆனால் அஹிம்சையைப் போற்றுவது எனும் இக்கூற்று 1955 பிப்ரவரியில் நடந்த ஆந்திரத் தேர்தலில் பலிக்கவில்லை. காந்தியத்திற்குப் புறம்பான முறைகளில் ராஜ்ய அசெம்பிளியைக் கைப்பற்றத் தீவிரமாக அவர்கள் முனைகையில் காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டன. எதிர்க்கட்சியினரை அடிப்பதாகவும், உதைப்பதாகவும் அவர்கள் பயமுறுத்தி வந்ததாக எங்கும் பேசிக்கொண்டனர்.



இம்மாதிரி அதிக்கிரமங்களுக்கு இந்தியர் சோவியத் தலைவர்களையே குறை கூறுகின்றனர். ஏனெனில், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை இன்னமும் சோவியத்தினரே நடத்தி வருகின்றனர் என்று இந்தியர் நினைக்கின்றனர். சீனநாட்டை சீன கம்யூனிஸ்டுகள் கைப்பற்ற முயற்சித்த இறுதி கட்டத்தில் கூட, அதற்கான யோசனைகள், திட்டங்கள் யாவும் ரஷ்யாவிலிருந்தே வந்தன என்பது தெளிவாகத் தெரிந்தது. முதலில் மா அடைந்த வெற்றி பற்றி ரஷ்யாவும், அதன் ஆதிக்க நாடுகளும் அலட்சியமாகவே இருந்தன. உதாரணமாக 1949 ஜூலையில் கூட, மா-வின் படை சீனாவில் பெரும் பகுதியைக் கைப்பற்றிய பின்பும், இந்தியக் கம்யூனிஸ்டு பத்திரிகைகள் மாவை ''விவசாயச் சீர்திருத்த வாதி'' என்றே குறிப்பிட்டு வந்தன. ''இந்தியாவின் கம்யூனிஸ்டு கட்சி மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகிய நால்வரிடமிருந்தே பரிசுத்த மார்க்ஸிஸத்தை அறிந்துகொள்ளலாம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறது. இவர்கள் தவிர, புதிதாக மார்க்ஸிஸத்தை விளக்கிக் கூறக்கூடிய வேறு யாரையும் அது ஏற்கவில்லை.'' இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோக பூர்வமான அறிக்கை கூறுகிறது.

1950-வது ஆண்டில், பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகள் மா-வின் அரசாங்கத்தை அங்கீகரிப்பதற்கு முன் மா-வின் சித்தாந்தம் கம்யூனிஸத்தின் உண்மையான ஒரு பகுதி என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டது. இதுவும் ரஷ்யாவின் தாக்கீதின் விளைவாகவே நிகழ்ந்தது எனலாம். 1955-ஆம் ஆண்டு ஜூன் மாதம், மாஸ்கோவின் அழைப்பின்மீது நேரு, ரஷ்யச்சுற்றுப்பிரயாணத்தை முடித்ததற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திடீரெனத் தனது காங்கிரஸ் எதிர்ப்பைக் கைவிட்டுவிட்டதாக அறிவித்தது. ரஷ்யாதான் இன்னமும் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வருகிறது என்பதற்குகம்யூனிஸ்டுகட்சிகாங்கிரஸ்எதிர்ப்பைக் கைவிட்டது மற்றுமோர் அத்தாட்சி. ஆனால் ஆந்திரத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் செம்மையாக முறியடிக்கப்பட்டதிலிருந்து காங்கிரஸ் எதிர்ப்பைக் கைவிடுவது தவிர அவர்கள் வேறு ஒன்றும் செய்வற்கில்லை என்றே நான் நினைக்கிறேன்.

தங்களுக்கு எதிரிடையான இந்த அம்சங்களைச் சரிக்கட்ட சோவியத் யூனியனுக்குச் சில வருஷங்களாக மூன்றுவித சௌகரியங்கள் இருக்கின்றன. முதல் அம்சம் மார்க்ஸிய லெனினிஸவாதிகள் நெடுங்காலமாகக் காலனி ஆட்சியை எதிர்த்து வந்திருக்கின்றனர் என்பதுதான். அவர்களுடைய இந்த எதிர்ப்பு இந்தியத் தலைவர்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. இரண்டு மகா யுத்தங்களுக்கிடையே

நடந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு மகாநாடுகளில், அதுவும் சுதந்
திரப் போராட்டம் பெரிதும் இந்தியத் தலைவர்கள் மனத்தை
ஆட்கொண்டிருந்த நாட்களில், சோவியத் பிரதிநிதிகள்
சந்தேகத்திற்கு இடமின்றி, பட்டவர்த்தனமாகக் காலனி
ஆட்சியை எதிர்த்துப் பேசி வந்திருக்கின்றனர். இவ்வாறு
இடைவிடாது காலனி ஆட்சியை எதிர்த்து வருகையில்,
ரஷ்யாவின் அண்டை நாடுகளை ஜார் மன்னர்கள் துன்புறுத்தி
வந்ததுபோலில்லாமல், ரஷ்யத் தலைவர்கள் தற்காலிகமாக
இந்தக் கெடுபிடியைத் தளர்த்தி வந்தனர். இந்த உண்மை
யையும் நாம் ஏற்கனவே அறிவோம்.

ரஷ்யர்களுக்கு இருக்கும் மற்றொரு சௌகரியத்தைப்
பற்றி முந்திய அத்தியாயம் ஒன்றில் நான் சுருக்கமாகக் குறிப்
பிட்டிருக்கின்றேன். வல்லரசுகளுக்குள் யுத்தப் பிரசாரக்
கெடுபிடி எப்படிப் பெருகி வந்தது என்பதைப் பற்றிப்
படித்த இந்தியர்களில் பெரும்பாலோர் அறியாமலிருந்தது
தான் இந்த இரண்டாவது சௌகரியம். 1945-55 ஆகிய
பத்து ஆண்டுகளில், ஸ்டாலின் கொள்கைகளின் கொடு
மையை மேற்கத்தி நாடுகள் அநுபவித்துக் கொண்டிருக்கை
யில், பிரிட்டிஷார் இறுதியாக வெளியேறுவதில் இந்தியா
கவனம் செலுத்திக்கொண்டும், புதிய ராஜ்யத்தை அமைப்ப
தில் ஈடுபட்டு மிருந்தது. சோவியத் யூனியன் தனது யுத்தக்
கெடுபிடித் தந்திரங்களைப் போலந்து, ஈரான், கிரீஸ், துருக்கி,
ஜெர்மனி, கொரியா முதலிய நாடுகளில் பதம் பார்த்துக்
கொண்டிருப்பதன் படிப்பினைகளை அமெரிக்கா அறிந்து
கொண்டிருக்கையில் இந்த விவரங்களை இந்தியர் படிக்க
வில்லை. படித்தாலும் சிரத்தையின்றிப் படித்தனர்.

1955-இல் புதுடில்லியில் உலக விவகாரங்கள் ஆலோசனை
சபை முன் நான் ஒரு பிரசங்கம் செய்தேன். யுத்த பிற்கா
லத்தில் அமெரிக்க அயல்நாட்டுக் கொள்கை பதினுன்கு சந்
தர்ப்பங்களில் நியாயமாகவே இருந்தது என்பதை ருசுப்
படுத்தலாம் என நான் அந்தப் பிரசங்கத்தில் குறிப்பிட்
டேன். நான் பேசியது என் பேச்சைக் கேட்டவர்களுக்கு
முற்றிலும் புதிதாயிருந்தது.

ரஷ்யாவுக்குள்ள மூன்றாவது சௌகரியம், சோவியத்
செயல்களைப் பற்றிய இந்தியர்களின் அறியாமையின் விளைவே
யாகும். ரஷ்யர்களின் குறைபாடுகள் யாதாயினும் அவர்
கள் உண்மையில் சமாதானத்தை விரும்புகின்றனர் என்று
இந்தியர் பிடிவாதமாக நம்பி வருகின்றனர். இப்போது
நிலவிவரும் அணு ஆயுதப் போட்டிக்கு அமெரிக்கர்களே
காரணம் என்றும், அவர்கள் இந்தப் போட்டியைக் கைவிட
மாட்டார்கள் என்றும் கம்யூனிஸ்டுகளல்லாத இந்தியர்களில்
பலர் நம்புகின்றனர். அணுசக்திக் கட்டுப்பாடு சம்பந்தமாக



அமெரிக்காவில் அகீசன்-லிலியந்தால்-பரூக் உடன்பாடு ஒன்று
இருக்கிறது என்பது இந்தியத் தலைவர்களுக்குக் கூட ஞாபக
மில்லை. ஆயுதக் குறைப்புக்காகவும், உலக கெடுபிடி குறை
யவும் சோவியத்தினர் முயற்சித்து வருவதாகப் பாவனை
செய்து வருவது இந்தியரைப் பெரிதும் கவர்ந்திருக்
கிறது. சமரசம் செய்து கொள்ள முந்தி ரஷ்யா மறுத்
ததைச் சீக்கிரம் இந்தியர் மறந்து விடுகின்றனர் அல்லது
அதைப் பொருட்படுத்துவதில்லை.

அடுத்த பத்து ஆண்டுகளில் இந்தியாவை நைச்சியம்
செய்துகொள்ள சோவியத் யூனியன் தீவிர முயற்சி செய்யு
மானால் ஆச்சரியப்படுவதற்கில்லை. மக்கள் சக்தி என்றால்,
அதற்கு இப்போது ஏற்பட்டுள்ள புதுப்பொருளை ரஷ்யத் தலை
மைப்பீடம் தெரிந்துகொண்டிருக்கிறது. புதிய உலகில்
இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள விசேஷ முக்கியத்துவத்தை
அது ஒப்புக்கொள்ளுகிறது. சமாளிப்பதற்கு மிகக் கஷ்டமா
யுள்ள சீனாவின் பலத்திற்கு எதிராக இந்தியா பலம்பெற்ற
நாடாய் உருவாகி வருகிறதன் முக்கியத்துவமும் ரஷ்யத் தலை
மைப் பீடத்திற்குத் தெரிந்திருக்கவேண்டும். ரஷ்யா இந்தி
யாவைப் புகழுமானால் அந்தப் புகழுரையை இந்தி... ...வ
ளவு தூரம் உண்மை என நம்பும் என்பதை இப்போது
திட்டமாகக் கூறமுடியாது.

கம்யூனிஸ்டுச் சீனா உலக அரங்கில் தோன்றியதும் தான்,
இந்தியர்களிடையே கம்யூனிஸத்திற்கு அதிகப்படியான
மதிப்பு ஏற்பட்டது என்பது பற்றிச் சந்தேகமில்லை. உலக
அரங்கில் சீனா சமீபகாலத்தில்தான் இடம் பெற்றது. ஆகை
யால் கொஞ்ச காலத்திற்கு முன்பு இந்தியாவில் கம்யூனிஸ்டு
கள் நிகழ்த்திய கொடுமைகளுக்குச் சீனக் கம்யூனிஸ்டுகளைப்
பொறுப்பாளிகளாக இந்தியர் கருதவில்லை.

1951-53-இல் இந்தியரின் இந்த மனப்போக்கை நான்
அறிந்திருந்தேன். 1955-இல் இந்த மனப்பான்மை அவர்க
ளிடையே மேலும் வேரூன்றிவிட்டது. அரசாங்கத் தலைவர்க
ளிடம் மட்டுமின்றி பல படித்த இந்தியர்களிடமும் புதுச் சீனா
விடம் ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறமுடியாவிட்டா
லும், ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு அவர்களிடம் தாரா
ளப் போக்குடன் நடந்து கொண்டதை நான் அறிந்து
கொண்டேன்.

மா-வும், அவரது சகாக்களும் எவ்வாறு தங்கள் எதிரிகளை
பலாத்காரமாக ஒழித்துக்கட்டினர் என்பதையும், காந்தியத்
திற்கு மாறான வகையில் அவர்கள் தார்மிகக் கொள்கைகளைத்
துச்சமாக மதித்ததையும் பெருவாரியான இந்தியர் உணரு
கின்றனர். நீண்டகாலமாக மேற்கத்தியரால் சுரண்டப்
பட்டு அவமதிக்கப்பட்ட தங்களது சக ஆசிய மக்கள்; ஸன்

யாட்ஸென், சியாங்கேஷேக் தலைமையில் காலனி ஆட்சியை மூர்த்தன்யமாக எதிர்த்தவர்கள்; மா-வின் தலைமையில் இறுதியாக அந்த அந்நிய ஆதிக்கத்தை ஒழித்தவர்கள்; இன்று நவீனப் பொருளாதார முறையை அமைக்க முனைந்திருப்பவர்கள்; இம்மாதிரி மக்களையே சீனாவில் இந்தியர்கள் காணுகின்றனர். இந்த அம்சங்களையும், சீனாவும் இந்தியாவும் அண்டை நாடுகள் என்பதையும் பொருத்திப் பார்த்தால் சீனா பற்றிய இந்தியாவின் கொள்கை எளிதில் விளங்கும்.

''சரித்திரத்திலும், நாகரிகத்திலும் புராதனப் பெருமை பெற்ற இரு நாடுகளை ஒன்றாகப் பிணைக்க முயற்சித்து வந்த இந்தியர் வரிசையில் நான் ஒருவன் என்றே என்னை மதிக்கிறேன்'' என 1940-இல் சியாங் கே ஷேக்கை சுங்கிங்கில் பார்க்கச் சென்றபோது, நேரு கூறினார். 1954-இல் அவர் பீகிங்கிற்குச் சென்றபோதும் இதே பாணியில்தான் பேசினார்.

இலட்சியத் துறையில் இரு நாடுகளுக்குள் எவ்வளவோ வித்தியாசங்கள் இருந்தும், நேருவும் அவரது சகாக்களும், படித்த இந்தியர்களில் பெரும்பான்மையினரும் இயல்பாகவே மிகுந்த நம்பிக்கையுடன் சீனரை மதிக்கின்றனர். ஆனால் இவ்வளவு நம்பிக்கை காட்டுவதற்கு இடமில்லையென்று அமெரிக்கர் கருதுகின்றனர். இந்த மனப்பான்மை சீனரின் அன்பைப் பெறுவதற்கான முயற்சி என்றே தோன்றுகிறது. இம்மாதிரி அன்பு காட்டுவதன் மூலம் பிரச்னைகளை ஆராய்ந்து முடிவு செய்வதில் சீனா சற்று நிதானம் காட்டும் என்று எதிர்பார்க்கிறதுதான், இந்தியாவின் அயல்நாட்டு விவகாரக் கொள்கைக்கு அடித்தளம். இந்தக் கொள்கையை நேரு மேற்கொள்வதனால் என்ன பலன் ஏற்படும் என்று முடிவு கட்டுவது சூதாட்டத்தின் முடிவுபோல் நிச்சயமற்றதாகும்.

* * *

இம்மாதிரி சிக்கல் வாய்ந்த, உணர்ச்சி மயமான பின்னணியில்தான், அமெரிக்காவிடமும், அமெரிக்கக் கொள்கை பற்றியும், இந்தியா பின்பற்றும் கொள்கை நடைமுறையை ஆராயவேண்டும். சீனா பற்றிய இந்தியர் மதிப்பீடு போலவே, அமெரிக்கா பற்றிய அவர்கள் அபிப்பிராயமும் தெளிவற்றதாயிருக்கிறது. இந்தியச் சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்தே, மேற்கத்திய காலனி ஆட்சியை இந்தியர்கள் பொதுப்படையாகத் தாக்குகையில் அமெரிக்கரை இந்தத் தாக்குதலுக்கு உட்படுத்தாமலே இருந்து வந்திருக்கின்றனர்.

ஓர் ஐரோப்பிய சாம்ராஜ்யத்தின் பிடியிலிருந்து விடுபட்ட பெரிய நாடுகளில் அமெரிக்கா முதன்மையானது என்பதை இந்தியர் அறிவர். சில பிரபலஸ்தர்கள் நீங்கலாக



அமெரிக்கர் சென்ற நூறு ஆண்டுகளில் அடிமை மக்கள் சுய ஆட்சி பெற முயற்சிப்பதை ஆதரித்தே வந்திருக்கின்றனர். ''ஏகாதிபத்தியம், ஃபாஸிஸம், பலாத்காரம், ஆக்கிரமிப்பு, மிகக் கேவலமான சந்தர்ப்பவாதம் முதலியவைகளுக்குட்பட்டிருக்கும் உலகில் ஜனநாயக சுதந்திர ஜோதியை அணையாமல் காத்துவரும் பெரிய ஜனநாயக நாடு'' என 1940-இல் நேரு அமெரிக்காவைப்பற்றி எழுதினார். இந்தியர்களின் சிந்தனைகள் அமெரிக்க நாட்டை ஒட்டியே வளர்ந்து வந்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

யுத்த காலத்தில், இந்தியா சுதந்திரப் போராட்டம் நடத்திவருகையில், அமெரிக்கா அவர்களை ஆதரிக்கும் என்பது பற்றிப் பெருவாரியான இந்தியர்கள் சந்தேகப்படவேயில்லை. இரு பிரபல அமெரிக்கர்கள் பகிரங்கமாகக் காங்கிரஸ் கோரிக்கைகளை ஆதரித்தனர் எனப் பிரிட்டிஷார் வற்புறுத்தியதன் பேரில் அவர்களை நாம் திருப்பியழைத்திருக்கிறோம்.

ஆனால் அமெரிக்கா ஒரு புதிர்போலவே படித்த இந்தியருக்குத் தோன்றுகிறது. ஜப்பானின் ஆட்சியிலிருந்து கிழக்கு ஆசியாவை விடுவித்து, பிலிப்பைன்ஸுக்குச் சுதந்திரம் அளிப்பதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி, கடைசியாக இந்தோனேஷ்யா சுதந்திரம் பெறுவதை ஆதரித்த பிறகும், இந்திய ஜனநாயகவாதிகளுக்கு ஆதர்சம் அளித்த கொள்கைகளிலிருந்து அமெரிக்கா பிறழ்ந்து போவதாகத் தோன்றுகிறது.

அமெரிக்கா நேசப்பான்மை கொண்டுள்ள பெருவாரியான ஆசிய நாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆட்சி நடைபெறவில்லை. அமெரிக்காவின் நேட்டோ நேச நாடுகளில் பல இன்னும் ஆஃப்ரிக்காவிலும், ஆசியாவிலுங்கூட ஆதிக்கம் செலுத்திவருகின்றன. அந்த ஆதிக்கத்தை விடாப்பிடியாக நீடித்துவருகின்றன. இவ்வாறு இந்தியர் அமெரிக்கா மீது குறைகூறிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தியர் பிரிட்டிஷ் சம்பிரதாயத்தைப் பின்பற்றி வளர்ந்தவர்கள். அந்த சம்பிரதாயம் ராணுவத்தினர் பகிரங்கமாகப் பொது விஷயங்களைப் பற்றிப் பேசுவதை அனுமதிப்பதில்லை. ஆனால் நமது ராணுவத் தலைமை முகாமிலிருந்து பல செய்திகள், நிருபர்கள் மகாநாட்டு அறிக்கைகள், ராணுவத்தினரின் யுத்தப்போக்குள்ள அறிக்கைகள் வந்தவண்ணமிருக்கின்றன.

மத்தியக் கிழக்கிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் பிரிட்டிஷார் வெளியேறியதனாலோ, பிரிட்டனின் இந்தியப் படை நடுநிலைமை வகிக்கவேண்டி வந்துவிட்டதனாலோ ஏற்பட்ட ராணுவ சூன்யநிலை இந்தியருக்குக் கவலையளிப்பதாகத் தோன்றவில்லை. இந்த சூன்யநிலையை நிரப்ப அமெரிக்கா

முன்வந்தால், அதன்மூலம் கம்யூனிஸத்தைத் தடுத்து இந்
தியா போன்ற நாடுகள் தங்குதடையின்றி அபிவிருத்தி
யடைய உதவிபுரியவந்த நண்பர்கள் என அவர்கள் நம்மைக்
கருதுவதில்லை. அதற்குப் பதிலாகக் காலனி ஆட்சி அமைக்கப்
புதிய தந்திரத்தை நாம் கையாண்டு பிற நாடுகளின் விவகா
ரங்களில் குறுக்கிடுகிறோம் என்றே நினைக்கின்றனர்.

இம்மாதிரி குற்றச்சாட்டுகளைக் கேட்டு நாம் மன
வெறுப்பை வெளியிட்டோமானால், இதைக் காலனி ஆட்சி
புரிந்த பிரிட்டிஷாரின் அகம்பாவத்திற்கு ஒப்பிடுகின்றனர்.
நம்மை ஆதரிக்காமல் நமது தலைமையையும ஏற்காமலிருப்
பதற்காக அவர்களைக் கடிந்து கொண்டோமானால், 1930
வாக்கில் நாம் பிரிட்டிஷாரை ஆதரிக்கத் தவறியதற்காக
நம்மை நாஜி அநுதாபிகள் என்று கூறிவிடமுடியுமா என்று
நம்மைக் கேட்கின்றனர்.

சீனாவுடனும், அமெரிக்காவுடனும் இந்தியா மாறுபட்ட
முறையில் நடந்துகொள்கிறது. இந்தப் போக்கைச் சீர்
தூக்கிப் பார்த்தால் இந்தியாவின் நிலைமைபற்றித் திட்டமான
முடிவுக்கு வரமுடியாது.

நவ இந்தியாவின் தலைவர்கள் தனிப்பட்ட முறையிலும்,
அரசியல் துறையிலும் ஜனநாயக சுதந்திரத்தில் தங்களுக்
குள்ள பற்றுதலை சந்தேகத்திற்கிடமின்றி நீண்ட காலத்
திற்கு முன்பே நிரூபித்துவிட்டனர். நாம் ஏற்கனவே விவரித்
துள்ள இந்தியப் புரட்சி வரலாறு, புதிய ராஜ்யத்தின்
தாராளப்போக்குள்ள ஜனநாயக அரசியலமைப்பு, அரசியல்
பார்லிமெண்டரி நடவடிக்கைகளில் இந்தியாவின் உத்வேகம்,
பொருளாதார அபிவிருத்தி முதலியவற்றிலிருந்து அவர்களுக்
குள்ள இந்த ஜனநாயகச் சுதந்திரப்பற்று ஊர்ஜிதம் பெறு
கிறது.

இந்தியாவின் தேசிய நலன்கள் கண்டிப்பாகப் பாதிக்கப்
படுகிறது என்பதை அவர்கள் உணரும்பொழுது, அந்த நலன்
களைப் பாதுகாப்பதில் உறுதியாயிருப்பதை நிதர்சனமாகக்
காட்டுகின்றனர். உதாரணமாக, ஹிமாலய எல்லைகளில்
உள்ள நேபாளம், ஸிக்கிம், பூடான் முதலிய ராஜ்யங்களின்
ஆதிபத்ய உரிமையைக் காப்பதாக உத்தரவாதம் செய்திருக்
கின்றனர். இந்த நாடுகளில் சீனா நுழைவதைத் தடுக்கவே
இந்த உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதில்
யாருக்கும் சந்தேகமில்லை.

வடக்கே இருந்து தாக்குதல் ஏற்பட்டால் பர்மாவுக்
கும், பாகிஸ்தானுக்கும்கூட இந்தியத் துருப்புகள் சென்று
பாதுகாக்கும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. திபேத்தைச்
சீனா கைப்பற்றியதை இந்தியா இறுதியில் ஒப்புக்கொண்டா



லும், அதுபற்றி இந்தியத் தலைநகரில் மிகுந்த கலக்கம் ஏற்
பட்டது.

சீனாவின் கொள்கைகள் சாம்ராஜ்ய விஸ்தரிப்புத்
தோரணையில் உருவாகுமானால் இந்தியாவும் சீனாவும் ஒன்றை
யொன்று எதிர்த்து நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.
எந்த எல்லைக்கோட்டை மீறினால் சீனாவை இந்தியா பகைமை
நாடாகக் கருதும்? கி.பி. 600-லிருந்து 1200 வரை இரு
நாட்டுக் கலாசாரங்களும், தென்கிழக்கு ஆசியாவில் எங்கு
கூடிக் குலவினவோ அந்த எல்லைதான் என்று நான் நம்பு
கிறேன். அதாவது, தற்போது கம்போடியா, லாவோஸ்,
தாய்லாந்து, பர்மா எனப்படும் நாடுகளின் வட எல்லையை
ஒட்டியே இரு நாடுகளையும் பிரிக்கும் அந்தக் கோடு அமைந்
திருக்கும்.

ஆசியாவில் தங்கள் நாட்டுக்கப்பால் எழக்கூடிய ராணு
வப் பிரச்னைகள்பற்றி இந்தியாவின் நிலை என்ன? நேரடியாக,
தெளிவாக ஆக்ரமித்து வந்தாலொழிய இந்தியா நடு
நிலைமையே வகிக்கலாம். இதிலிருந்து இந்தியா கம்யூனிஸ்
டுகள் சார்பில் நிற்கும் என்று எண்ணிவிடலாகாது. கவ
னித்துப் பார்த்தால் இந்தப் பிரச்னைகளில் மிக நெருக்கடி
யானவைகள்பற்றி இந்தியாவின் முடிவு அமெரிக்கர்கள்
நினைப்பதைவிட நியாயமானதாக இருந்துவந்திருக்கிறது.

இதற்கு உதாரணமாக கொரியாவில் தற்காலிக சமா
தானத்தைக் குறிப்பிடலாம். தென் கொரியாவைக் கம்யூ
னிஸ்டுகள் தாக்கியதை ஆக்ரமிப்பு என 1950-இல் ஐ. நா.
சபை கண்டித்ததற்கு சாதகமாக இந்தியா ஓட் செய்தது.
இஞ்சானில் (Inchon), மக் ஆர்தர் படைகள் வெற்றியடைந்
ததும், ஐ. நா. தீர்மானம் நிறைவேறி மூன்று மாதங்களுக்
குப்பின், சீன அரசாங்கம் ஒரு எச்சரிக்கை விடுத்தது. ஐ. நா.
படை 38-வது அக்ஷரேகையைத் தாண்டினால் சீனா யுத்தத்தில்
பிரவேசிக்கும் என அவ்வரசாங்கத்தார் பீகிங்கிலுள்ள
இந்தியத் தூதர் மூலம் தெரிவித்தனர்.

அந்த எல்லைக்கோட்டையொட்டி இரு படைகளும் தற்
காலிக யுத்த நிறுத்தம் செய்யலாம் என இந்திய அரசாங்கம்
யோசனை கூறிற்று. இந்த யோசனையைப் புறக்கணித்துவிட்டு
நாம் வடக்கு நோக்கிப் பாய்ந்தோம். சீனச் செம்படை
தாமதமின்றி யாலு நதியைக் கடந்தது. கிட்டத்தட்ட
38-வது அக்ஷரேகையை ஒட்டிப் போர் நிறுத்தம் செய்வ
தாக மூன்று ஆண்டுகளுக்குப் பின் நாம் ஒப்புக்கொண்
டோம். இதற்குள் மேற்கொண்டு 96 ஆயிரம் அமெரிக்கர்
உயிர் இழந்தனர் அல்லது காயமடைந்தனர். இன்னும் எவ்
வளவு சீனர்களும், கொரியர்களும் உயிரிழந்தனர் அல்லது
காயமடைந்தனர் என்பதைக் கடவுளே அறிவர்.

''கம்யூனிஸ்டல்லாத தென் கொரியாவைக் கம்யூனிஸ்டு ஆக்ரமிப்பிலிருந்து பாதுகாப்பது எனும் கொள்கையை நாங்கள் ஆதரித்தோம். இந்தக் கொள்கையை மீறிக் கொரியாவை பலாத்காரமாக ஒன்றுபடுத்த நீங்கள் முன்வந்ததாக நாங்கள் நினைத்ததும்தான் உங்களை விட்டுப் பிரிந்தோம்.'' இவ்வாறு இந்தியத் தலைவர்கள் நம்மிடம் கூறுகின்றனர்.

இந்தோ-சீனாவில் ஃபிரஞ்சுக் காலனி ஆட்சியை ஆதரிப்பது வீண் என்று இந்தியா பல முறை எச்சரிக்கை செய்தது. 1954 ஜனவரியில் சமாதானமாகப் போகும்படி நேரு வற்புறுத்தினார். இதற்காக அவரை ''கம்யூனிஸ்டு அநுதாபி'' என்று பொறுப்பு வாய்ந்த அமெரிக்கர்கள் குறைகூறினர். ஹோசிமின் உடனடியாகத் தோல்வியுறுவதைத் தவிர்ப்பதற்காகச் சமாதான யோசனை கூறுகிறார் என அவர் மீது குற்றம் சாட்டினர். இதற்கு மூன்று மாதத்திற்குப் பின் தீபின்பூ (Dienbienphu) வீழ்ச்சியடைந்தார். செந்நதி முகவாய்ப் பகுதியில் ஃபிரஞ்சுப் படை மாபெரும் ராணுவத் தோல்வியுறும் நிலையிலிருந்தது.

குயூமாய் (Quemoy), மாட்ஸு (Matsu) பற்றி சியாங்குக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் தகராறு நிலவுகையில் அமெரிக்கர் சற்று நிதானமாக நடந்துகொள்ளவேண்டும் என இந்தியா வற்புறுத்தியது. புத்திசாலித்தனமாகத் தனது சொந்தப் பொறுப்பில் ஐசன்ஹோவர் முடிவு செய்ததனால், இந்தியா வற்புறுத்தி வந்த யோசனை இறுதியில் ஒப்புக்கொள்ளப்பட்டது. சீனாவில் கைது செய்யப்பட்டிருந்த அமெரிக்க விமானிகளை விடுதலை செய்வதில் இந்தியா மத்யஸ்தம் செய்ய உதவி புரிந்தது. ஃபார்மோஸா கம்யூனிஸ்டு சீனாவைச் சேர்ந்தது என்று இந்தியா வற்புறுத்தி வந்திருக்கிறது. தங்களது பாத்தியதைபற்றி யுத்த மோஸ்தரில் சீனப் பிரதமர் சௌ அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார். எனினும், இந்த விஷயத்தைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என இந்தியா நீடித்து வற்புறுத்தி வருகிறது.

பல ஆண்டுகளாக, உணர்ச்சி மிக்க சூழ்நிலையில் இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கையின் இந்த அம்சங்கள் உருப்பெற்று வந்திருக்கின்றன. தங்கள் நாட்டின் தேவைகளையும் நோக்கங்களையும் இந்தக் கொள்கை பிரதிபலிக்கிறது என்று சரியாகவோ, தவறாகவோ ஆனால் மனப்பூர்வமாக இந்தியாவின் தலைவர்கள் நம்பி வந்திருக்கின்றனர். இந்தத் தேவைகளில் முக்கியமானது அந்நாட்டின் தர்மசங்கடமான பொருளாதார நிலையினால் ஏற்பட்டது. அவர்களது பொருள் வளத்தைப் பெருக்கிக்கொண்டு, தாங்கள் அநுஷ்டிக்கும் ஜனநாயக முறை பயனளிக்கவல்லது! என்று நிரூபிக்கவும் அமைதியான சூழ்நிலை அத்தியாவசியமாக நிலவவேண்டும்.



''இந்தியாவைக் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றுவார்களெனில், அவர்கள் எங்கிருந்து வருவார்கள் என்று எண்ணுகிறீர்கள்?'' என்று அநேக சந்தர்ப்பங்களில் இந்தியத் தலைவர்கள் கேட்கின்றனர். ''அவர்கள் ரஷ்யாவிலிருந்து கைபர் கணவாய் மூலமோ, அல்லது சீனாவிலிருந்து அஸ்ஸாம் மலைகள் மூலமோ வருவார்கள் என நீங்கள் எண்ணினால் அது பெருந் தவறு.''

''ஜனநாயக சக்திகளைக் கம்யூனிஸ்டுகள் தோற்கடிப்பதானால் அந்தத் தோல்வி கல்கத்தாவிலுள்ள சேரிகளிலோ அல்லது ஹைதராபாத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களிலோ நிகழும். இந்திய ஜனநாயகத்தின் வெற்றியோ, தோல்வியோ அதன் சார்பாகப் போர்புரியும் படையின் அளவைப் பொறுத்ததல்ல. இந்தியாவில் நாம் செய்வது அல்லது செய்யத் தவறியதைப் பொறுத்தே இருக்கும் அந்த வெற்றி, தோல்வி.'' இவ்வாறு அவர்கள் கேட்ட கேள்விக்கு அவர்களே பதில் கூறுகின்றனர்.

இந்தியர்கள் மனப்போக்கு பற்றி நாம் எவ்வித முடிவுக்கு வந்தாலும் நமது தேசிய நோக்கங்களைக் கொண்டோ, யுத்த கெடுபிடி பற்றிய நம் ஆராய்ச்சியைக் கொண்டோ எவ்விதத் தீர்மானத்திற்கும் வருவது தவறேயாகும். நடுநிலைமைக் கொள்கையை நேரு வற்புறுத்துகிறார் என்பதிலிருந்து இந்தியா மட்டும்தான் நடுநிலைமையை ஆதரிக்கிறது என்று கொள்வதும் தவறு. ஆசியா, ஆஃப்ரிக்கா, தென் அமெரிக்காவிலுள்ள அபிவிருத்தியடையாத நாடுகளில் கூடுதலாகவோ, குறைவாகவோ இந்தக் கொள்கை மிகுதியான இடம் பெற்றிருக்கிறது. இந்நாடுகள் மட்டும் இந்தக் கொள்கையைத் தழுவி வருகின்றன என்றும் கூறிவிடுவதற்கில்லை. ஜப்பான், இதாலி, ஃபிரான்ஸ் முதலிய நாடுகளில் சக்தி வாய்ந்த சிறுபான்மையினர் தங்களது அரசியல் திட்டங்களில் இதற்குப் பகிரங்கமாக இடமளித்திருக்கின்றனர்.

அணுகுண்டு ஆயுத பலம்கொண்ட இரு கோஷ்டியினர் வலையில் விழாமல் நடுநிலையிலுள்ள நாடுகளைப் பிரிக்கும் முயற்சி நீடிக்குமானால், இந்த வகையில், இந்தியாவின் பங்கு முக்கியத்துவமடையும். ஆகையால் இந்தியாவை மதிப்பிடுவதில் அது பகிரங்கமாக வெளியிட்டுள்ள கொள்கைகளைக் கொண்டே முடிவுக்கு வரவேண்டும். அமெரிக்கா அல்லது ரஷ்யக்கோஷ்டிகளில் ஏதோ ஒருபக்கம் சேர விரும்பும் நாடாக அதை மதித்து முடிவுசெய்யலாகாது. உலகிலேயே இரண்டாவது பெரிய நாடு, பிரம்மாண்டமான ஜனநாயக நாடு, ஆசியாவிலும் ஆஃபிரிக்காவிலும் புதிதாகச் சுதந்திரம் பெற்றுள்ள அல்லது சீக்கிரத்தில் சுதந்திரம் அடையப்போகிற நாடுகளுக்குச் சிறப்பாகத் தலைமை தாங்கும் நாடு என்பதை

மனத்தில் கொண்டு, இந்தியாவின் கொள்கைகளை மதிப்பிட
வேண்டும்.

எதிர்காலத்தில் சீனு அடையக்கூடிய பலத்தைச் சிந்தனு
சக்தியுள்ள இந்தியர்களில் பலர் அறிகின்றனர். ஆகையால்
அது பற்றி அவர்கள் கவலை கொள்கின்றனர். கம்யூனிஸ்டு
ஏகாதிபத்திய ஆட்சிமுறையில் அவர்களுக்கு நேரடியான அநு
பவமில்லாததனுல் அதுபற்றி, நாம் எதிர்பார்க்கிற அள
வுக்கு அவர்கள் கவலைப்படுவதில்லை. மேலும் ரஷ்யாவையும்
சீனுவையும் இணைக்கும் சக்தியைச் சுலபமாகத் தகர்த்துவிட
லாம் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

''ரஷ்யாவையும், சீனுவையும் ஒன்ருகப் பிணைக்கும்
நோக்குடனேயே உங்கள் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன
போலிருக்கிறது. உங்களுடைய இந்தப் போக்கு தோல்வி
மனப்பான்மையைக் காட்டுகிறது. சரித்திரத்தை உருவகப்
படுத்துவதற்கான சக்திகள் சீக்கிரத்திலோ அல்லது நாள்
பட்டோ தலைதூக்கும் என்பதை நீங்கள் அறியவில்லை.
ரஷ்யாவுடனும், சீனுவுடனும் நாங்கள் தாராளமாகப் பழகு
வதனுல் யுத்தம் நிகழ்வதற்கான நெருக்கடி ஏற்படாமல்
தவிர்க்கிருேம். சீனக் கிராமியப் பகுதிகளில் கம்யூனிஸம்
தோல்வியுருது என்று எப்படிக் கூறமுடியும்? அப்படித்
தோல்வி ஏற்பட்டால், மா ஸே துங் கம்யூனிஸத்திற்கு மாறு
பட்ட கருத்துக்களை எங்களிடமிருந்து பெறக்கூடும்.'' இவ்
வாறு இந்தியர் வாதம் செய்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஏற்கனவே குறிப்பிட்ட
முக்கியமான ஒரு உண்மையைத் திரும்பவும் கவனிக்கவேண்
டும். பொது அறிக்கைகள், பரஸ்பர நல்லெண்ண கோஷ்டி
கள் விஜயம் முதலியவைகளால் ஏற்பட்ட குழப்பத்திலிருந்து
இந்த உண்மை தெளிவாகப் புலப்படலாம். ஆசியாவின்
தலைமைப்பதவிக்கு உண்மையாகச் சீனுவும் இந்தியாவும்
போட்டியிடுகின்றன என்பதே அந்த உண்மை. இம்மாதிரிப்
போட்டி நிலவுகிறது என்பதை இந்தியாவிலேயே உணரத்
தொடங்கிவிட்டனர். இந்தப் போட்டியை ஒட்டி இரு நாடு
களுக்கும் உள்ள நேசப்பான்மையைக் குறிப்பிட்டு அறிக்கை
கள் வெளிவரலாம். இந்தப் போட்டி ராணுவத்துறையில்
இல்லாமல், சமூக, பொருளாதாரத் துறையில் ஏற்படலாம்.
அப்படி ஏற்படுமானுல் அதுவும் நல்லதுதான்.

எப்படியிருந்தாலும் இம்மாதிரி நல்லெண்ண அறிக்கை
கள் ஓர் உண்மையை மறைத்துவிட முடியாது. போதிய
அளவு அபிவிருத்தியடையாத ஆசியா, ஆஃப்ரிக்கா நாடுக
ளுக்கு யார் தலைமை தாங்குவது என்பது சம்பந்தமாக இந்
தியா, சீனு இரு நாடுகளுக்கும் போட்டியிருக்கிறது. யுத்த
பிற்கால உலகில் பின்தங்கிய நாடுகள் பற்றிய பிரச்னைகளில்



இந்தியாவின் கருத்து, இந்தியாவின் நிலை முதலியவற்றைக்
கவனித்துப் பார்க்கையில் இந்தப் போட்டியிலிருந்து பின்
வாங்குவதில்லையென இந்தியா உறுதியாயிருக்கிறது என்பதும்
தெளிவாக விளங்குகிறது.

ஐ. நா. கூட்டங்களில் காலனி ஆட்சியின் பரம வைரி
யாகவும், இன்னும் அடிமைகளாயிருப்பவர்களின் பூரண
சுதந்திர உரிமையை ஆதரிக்கும் நாடாகவும் இந்தியா
விளங்கி வந்திருக்கிறது. அரசியல் சம்பவங்களின் நெருக்கடி
யால் செயல்புரிவதற்கு முன், சுய நிர்ணய உரிமை வழங்க
வேண்டுமென அமெரிக்கர் வற்புறுத்துவதனுல் இந்தியாவுக்
கும், அமெரிக்காவுக்கும் சில சமயங்களில் முரண்பாடு ஏற்
படுகிறது. இந்த முரண்பாட்டினுலும் ஒரு நன்மை விளையக்
கூடும். சில சந்தர்ப்பங்களில் அமெரிக்கா சுதந்திரத்தை ஆத
ரித்துப் பேசமுடியாத நிலை ஏற்படுகிறது. அம்மாதிரி தரு
ணங்களைக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக்கொள்ளவிடாமல்,
இந்தியா போன்ற ஜனநாயக நாடு சுதந்திரத்தை ஆதரித்துத்
தெளிவாகப் பேசுவதனுல் நமக்கு நன்மையே விளையும்.

இந்தோனேஷ்யா, இந்
பாகிஸ்தான், பர்மா, இலங்கை, இந்தோனேஷ்யா, இந்
தியா முதலிய கொழும்பு வல்லரசுகள் எனப்படும் நாட்டின
ரின் பரஸ்பர நலன்களைக் காப்பதற்காகக் கூட்டங்கள் கூட்
டுவதில் இந்தியா பிரதானப் பங்குகொண்டு வந்திருக்கிறது.
ஆசிய ஆஃப்ரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் மகாநாட்டை பாண்
டுங் (Bandung) கில் கூட்டிய நாடுகளில் இந்தியா ஒன்று.
இந்த மகாநாட்டின் விளைவுகள் மகத்தானதாயிருக்கலாம்.
1955-இல் நமது யோசனையின் பேரில் ஆசிய அரசாங்கங்களின்
மகாநாட்டை இந்தியா சிம்லாவில் கூட்டிற்று. இந்தக் கூட்
டத்தில் நமது அயல்நாட்டு உதவித் திட்ட நிதிகள், பிராந்திய
வாரியாகக் கூட்டுறவு முறையில் பிரயோசனப்படுத்துவது
பற்றி ஆலோசிக்கப்பட்டது.

ஆஃப்ரிக்கா, ஆசிய நாடுகளுக்குள் நிலையான, தன்னம்
பிக்கையுள்ள அரசாங்கங்களின் பரஸ்பரத் தொடர்பு அபி
விருத்தியடைவதில் இந்தியா பலவகைகளில் குறிப்பிடத்
தக்க சேவை செய்திருக்கிறது. அதன் ஜனத்தொகை,
ஏராளமாகப் பொருள்வளம், அந்நாட்டுத் தலைவர்கள் பொது
ஜன சேவை செய்வதில் நீண்டகாலப் பயிற்சி பெற்றிருப்பது
முதலியவைகளால் மேற்குறிப்பிட்ட விஷயங்களில் நீடித்து
இந்தியா தலைமை தாங்கி வரலாம் என்பது நிச்சயம். இந்
தியாவின் இந்தத் தலைமை நீடிக்குமானுல், இத்துறைகளில்
கம்யூனிஸ்டு சீனுவின் பிராதான்யம் மங்கிவிடும் என்பதும்
தெளிவு.

ஏராளமான ஜனத்தொகை, வளம்மிக்க பொருள்
வசதி, மக்களை ஈர்க்கக்கூடிய காந்திய உபதேசம், சுதந்திரம்

பெற்ற பிறகு அமைதியான முன்னேற்றமடைந்து வந்திருப்பது, இடைவிடாது ஜனநாயக லட்சியங்களில் பற்றுக்கொண்டிருப்பது—இவைகளெல்லாம் இந்தியாவின் சேவைக்கு ஊக்கமளிக்கும். இந்த அம்சங்களின் நற்பயனை இந்தியாவில் படித்துக்கொண்டிருக்கும் ஆஃப்பிரிக்க மாணவர்கள் ஓரளவு பெற்று வருகிறார்கள். இந்தியாவின் அநுபவத்திலிருந்து ஆஃப்பிரிக்கா அடையக்கூடிய பயனைப்பற்றி நேரு 1954-இல் டில்லியில் நடந்த ஆஃப்பிரிக்க மாணவர் காங்கிரசில் பேசுகையில், அவர்கள் மிகக் கவனமாக அவர் மொழிகளுக்குச் செவி சாய்த்தனர்.

''புரட்சியே தன் பக்தர்களைப் பலிவாங்குகிறது'' என அவர் எச்சரிக்கை செய்தார். இம்மாதிரித் தீமைச் சுழலைத் தவிர்ப்பதற்கு இந்தியா ஒரு வழி கண்டிருக்கிறது எனத் தாம் நினைப்பதாக அவர் கூறினார். ''இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் உடன்பாடு ஏற்படுவதற்கான தருணம் வந்தவுடன் நாங்கள் அமைதியாகவே பிரிந்தோம். எவ்வித மனக்கசப்பின் சாயைகூட இல்லாத நிலையில் பிரிந்தோம். சரியான வழியில் செயல்புரிவதனால் ஏற்படும் நன்மைக்கு இது ஓர் உதாரணம்.''

''குறிக்கோளைவிட அதை அடைவதற்கான சாதனமே முக்கியம் என என்றுமே காந்தி கூறி வந்தார். இவ்வாறு காந்தி வற்புறுத்தி வந்ததனாலும், அவ்வாறே அவர் நடந்து காட்டியதனாலும், இந்திய ஜனத்திரளிடையே யாரும் எவ்விதத் தொந்தரவும் செய்யாமல் ஒரு ஆங்கிலேயன் நடந்து செல்லலாம். அவர் கற்பித்த கட்டுப்பாடு, மனோபக்குவத்தின் ஒரு பகுதியே இங்கு நான் குறிப்பிட்ட சிறப்பு. குறைவான வெறுப்புணர்ச்சியுடன் நடந்த ஒரு தேசிய இயக்கத்திற்கு இதைத்தவிர வேறு எங்கும் உதாரணம் காணமுடியாது.

''இந்த அம்சத்தைப் பற்றி உங்களைச் சிந்திக்கும்படி நான் விரும்புவதற்குக் காரணம், ஆஃப்பிரிக்காவில் ரத்த ஆறு ஓடக்கூடிய நிலை ஏற்படலாம் என்பதை நினைத்து நான் பயப்படுவதுதான். இம்மாதிரி ரணகளம் ஏற்பட்டால் ஆஃப்பிரிக்கா ஆக்கத் துறையில் கவனம் செலுத்த ஆரம்பிக்கு முன், ஒன்று அல்லது இரண்டு தலைமுறை மக்கள் உயிர் இழக்கக்கூடும்.'' இவ்வாறு நேரு அவர்கள் முன் பேசினார்.

ஆஃப்பிரிக்காவின் நிலை வேறு என்பதை நேரு ஒப்புக்கொண்டார். ஆனால் ''அமைதியான இம்முறைகள் எப்படி இந்தியாவில் நியாயமானவை, ஒழுங்கானவை, மிகவும் அநுபவசாத்தியமானவையோ, இதைவிட ஆஃப்பிரிக்காவில் அவை அநுபவ சாத்தியமானவை, மிகுந்த பயனளிக்கக்கூடியவை. மேலும் பலாத்கார முறைகளைக் கைக்கொள்ளுவதனால்



மிகுந்த சங்கடங்கள் விளையக்கூடும்'' என்று தனது நம்பிக்கையை அவர் தெரிவித்தார்.

தார்மிக முறையிலும், பிரத்யட்சபூர்வமாகவும், பலாத்காரம் தீயது என அவர் கூறினார். மக்களைப் பிரிப்பதற்கு உதவாமல் அவர்களை ஒன்றுபடுத்துவதற்குப் பயன்படும் முறைகளைக் கைக்கொண்டாலொழிய ஆஃப்பிரிக்க மக்களின் பரந்த ஒற்றுமையையும், ஆக்கத் திறனையும் சிருஷ்டித் திறனையும் வளர்க்க முடியாது என அவர் நம்பினார்.

எஞ்சியுள்ள காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளுக்கும், அபிவிருத்தியடையாத நாடுகளுக்கும், இந்தியா எவ்வாறு சேவை புரியக்கூடும் என்பதை அந்நாட்டின் பிரதமர் இவ்வாறு விவரித்தார். அவர் சாந்தமாகவும், சந்தர்ப்பத்திற்கேற்ற முறையிலும் அளந்து பேசினார். அவருடைய வார்த்தைகள் சர்ச்சையும் முரண்பாடுகளும் நிறைந்த நம் காலத்துக்குப் பொருத்தமில்லையென்று கூறலாம். ஆனால் இம்மொழிகளோ அல்லது அவைகளை உண்மையாகப் பின்பற்றும் மக்களோ, பிறமக்களையும் அவர்களது உள்ளங்களையும் கவரவல்லவர்கள் அல்ல என்று யாரும் கூறிவிட முடியாது.

பகுதி — 5

# பாண்டுங்கிலிருந்து சவால்

நமக்கு என்ன நலன் விளையும் என்பதைப் பொறுத்ததல்ல இந்த மகாநாட்டின் வெற்றி. மனித சமுதாயம் முழுதிற்கும் என்ன நலன் விளைவிக்கப் போகிறோம் என்பதையே பொறுத்திருக்கிறது அதன் வெற்றி. சரித்திரத்தை நாம் எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறோமோ, எதிர்காலத்தைச் சிருஷ்டிப்பதில் நமது சக்தியை எந்த நோக்கத்துடன் பயன்படுத்துகிறோமோ அவைகளிலிருந்தே நமது சக்தி பெருகும். அந்த நோக்கம் வெறுப்புணர்ச்சியினாலோ, பழிவாங்கும் ஆர்வத்தினாலோ களங்கமடையுமானால், இந்த மகாநாடு அற்பமானதாக, மறந்துவிடத் தக்கதாகவே இருக்கும்.

மனமொடிந்து போவதனாலோ, அன்றி பிறருக்குத் தீங்கு விளைவிப்பதனாலோ நமது சக்தியைப் பெருக்கிக்கொள்ள முயற்சிக்கவேண்டாம். நமது பொதுப்படையான நம்பிக்கைகள் மூலமே பலம் பெறுவோமாக. பிறர் குற்றத்தை மன்னிக்கும் ஆற்றலே நமது பலத்திற்கறிகுறியானால், நமது சகாப்தத்தில் அசாதாரண சக்தி வாய்ந்தவர்கள் எனும் பெயர் பெறத் தகுதியுடையவர்களாகத் திகழ்வோமாக.

**கார்லஸ் ரொமுலோ,**
பாண்டுங் மகாநாட்டிற்கு பிலிப்பைன் பிரதிநிதி.

*அத்தியாயம்-21*

# புது ஆசியாவும் நவ ஆஃப்ரிக்காவும்

ரஷ்யாவையும், சீனாவையும் தலைகீழாக மாற்றிய ரத்தப் புரட்சி, இந்தியாவை நிதானமாக உருமாற்றி வரும் அமைதியான புரட்சி-இவை இரண்டும் நாம் கண்கூடாகப் பார்த்து வரும் உலகப் பிரளயத்தின் மிகப் பெரிய கவர்ச்சிகரமான புரட்சிகளாகும். மணிலாவிலிருந்து (Manila) கேப்டவுன் (Capetown) வரை வியாபித்துள்ள மத்திய உலகில் ஆசியா ஆஃப்பிரிக்கா இரு கண்டங்களின் அமைப்பையே தீவிரமாக மாற்றியுள்ள விழிப்பு மக்களிடையே ஏற்பட்டு வருகிறது. இந்த விழிப்பின் மூலம் எதிர்காலத்தில் மேலும் பல மாறுதல்கள் ஏற்படக்கூடும் என்றும் தெரிகிறது.

இந்தப் புத்துணர்வின் தன்மையை நல்ல வாய்ப்பான கோணத்திலிருந்து கண்டறிந்து கொள்ளவேண்டுமானால், இந்தோனேஷ்யாவில் பாண்டுங் (Bandung) என்னுமிடத்தில் 1955 ஏப்ரல் மாதத்தில் நடந்த மகாநாட்டிலிருந்து ஆராய்வது பயனளிக்கும். கவர்ச்சிகரமான இந்த மலைச்சாரல் நகரத்தில்தான் 29 நாடுகளின் பிரதிநிதிகள் கூடினர். 150 லட்சம் மக்களின் பிரதிநிதிகள் இங்கே கூடினர். ஆக்ரா, அடிஸ் அபாபா, கெய்ரோ, பாக்தாத், புது டில்லி, கராச்சி, காபூல், பாங்காக், மற்றும் ஆசிய, ஆஃப்பிரிக்கத் தலைநகர்களிலிருந்து வந்திருந்த இந்தப் பிரதிநிதிகள் உலக நிலையை தத்தம் மனோ நிலையிலிருந்து ஆராய்ந்தனர்.

மகாநாடு நடக்கும் காலத்திற்கு பாண்டுங்கின் முக்கியமான ராஜபாட்டைக்கு ''ஆசியா-ஆஃப்பிரிக்கா தெரு'' என்று பெயரிடப்பட்டது. மகாநாடு நடந்தவிடமான கான்கார்டியா கிளப் (Concordia Club) பின் பெயர் **கெடங் மர்டேகா** (Gedunk Merdeka-சுதந்திர மண்டபம்) என்று மாற்றப்பட்டது. இங்கே முன்னர் டச்சு அதிகாரிகள் மட்டுமே தங்கலாம். இந்த மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர்

இந்தோனேஷ்யாவின் ஜனாதிபதி டாக்டர் சுகர்ணு(Dr. Sukar-
no). அவரது வரவேற்புரை மகாநாட்டில் முக்கியமான பிர
சங்கமாக அமைந்தது. ஆசியா, ஆஃபிரிக்கா நாடுகளின் சுதந்
திரப் போராட்டங்களுக்கு ஆதர்சமளித்தது ரஷ்ய அல்லது
சீனப் புரட்சி என்று அவர் கூறவில்லை. போராட்ட வீரர்
களை ஆகர்ஷித்தது அமெரிக்கப் புரட்சிதான் என்று அவர்
குறிப்பிட்டார்.

தம் கருத்துக்களுக்கு மேற்கோள்களாக அவர் புத்தர்
உபதேசத்தையோ, நபிகள் நாயகத்தின் நல்லுரைகளையோ,
வேதவாக்கியங்களையோ காட்டவில்லை. லாங்ஃபெலோ
(Longfellow) எனும் அமெரிக்க கவிஞரின் ''பால் ரிவேராவின்
நள்ளிரவுச்சவாரி'' (The Midnight Ride of Paul Revere) எனும்
கவிதையிலிருந்து உதாரணங்கள் கூறினார். பாண்டுங் மகா
நாடு அமெரிக்கப் புரட்சியின் 180-வது ஆண்டு விழாவன்று
கூடுகிறது எனச் சுகர்ணு, அங்கு கூடியிருந்த பிரதிநிதிகளுக்கு
ஞாபகமூட்டினார். அந்தப் புரட்சியின் முதல் துப்பாக்கி
வெடி, ''உலகெங்கும் கேட்டது'' எனக் கவர்ச்சிகரமாக
அவர் எடுத்துக் கூறினார்.

'' 180 ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய புரட்சி இன்
னும் பூரண வெற்றி பெறவில்லை. நமது காலத்து உலகைப்
பார்த்து, காலனி ஆட்சி ஒழிந்தது என்று சொல்ல முடியும்
காலம் வரும்வரையில், அந்தப் புரட்சி வெற்றி பெற்று
விட்டதாகக் கூற முடியாது. ஆசியாவிலும், ஆஃபிரிக்காவி
லும் ஏராளமான இடங்கள் சுதந்திரம் பெறவில்லை.'' இவ்
வாறு அவர் பிரதிநிதிகளை நோக்கிக் கூறினார். '' புது
ஆசியாவும், ஆஃபிரிக்காவும் மீண்டும் தோன்றிவிட்டன''
என்பதை நிரூபித்துக் காட்டுமாறு அவர் பிரதிநிதிகளைக்
கேட்டுக் கொண்டார்.

பாண்டுங் மகாநாட்டு மேடையில், இந்த நூற்றாண்
டில் நிகழ்ந்த மூன்று புரட்சிகளில் இரு புரட்சிகளின் பிரதி
நிதிகள் அமர்ந்திருந்தனர்; ஆஃபிரிக்கா, ஆசிய நாட்டுப்
பிரதிநிதிகள் இந்தப் புரட்சிப் பிரதிநிதிகளின் நடவடிக்
கைகளைக் கூர்ந்து கவனித்து வந்தனர். இதிலிருந்து தங்
கள் நாடுகளை என்ன தோரணையில் மாற்றலாம் என்பதை
அவர்கள் அறிந்து கொள்ள விரும்பினர்.

இவ்விரு புரட்சிகளில் ஒன்றிற்குச் சீன கம்யூனிஸ்ட்
பிரதமர் செள என் லாய் பிரதிநிதியாக வந்திருந்தார். இந்
தியாவில் நடந்த காந்தியப் புரட்சியின் பிரதிநிதியாக பிர
தமர் நேரு வந்திருந்தார். இலங்கை, பர்மா, பாகிஸ்
தான் முதலிய நாடுகளின் பிரதமர்களும் வந்திருந்தனர்.
பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு இன்முகத்துடன் வெளி
யேறுவது என முடிவு செய்ததை ஒட்டியே இந் நாடுகள்



விடுதலை பெற்றதனால், இந்நாட்டுப் பிரதமர்களையும்,
காந்தியப் புரட்சியின் பிரதிநிதிகள் என்றும் ஒருவகையில்
கருதலாம்.

இவர்களில் பர்மாவின் ஊ நூ துறவு மனப்பான்மை
யுள்ள புத்தமத பக்தர், ஆனால் சலிப்பூட்டக் கூடிய தின
சரி நிர்வாக முறைகளில் அபூர்வத் திறமை வாய்ந்தவர்,
அஹிம்சையில் காந்திக்குள்ள நம்பிக்கையை ஓரளவு கிரகித்
துக்கொண்டு பின்பற்றுகிறார். மேலும் சமய ஆன்மிக மறு
மலர்ச்சியில் தமது நாட்டிற்கு வழி காட்டி வருகிறார்.

1947-இல் புது டெல்லியில் கூடிய உத்தியோகச் சார்பற்ற
ஆசிய உறவு மகாநாட்டிற்கு சோவியத்திற்குட்பட்ட ஆசி
யக் குடியரசுகள் அழைக்கப்பட்டிருந்தன. ஆனால் இந்த
பாண்டுங் மகாநாட்டிற்கு அவைகள் அழைக்கப்படவேயில்லை.
கம்யூனிஸ்டுச் சீனா தலை தூக்கிவிட்டது என்கிற ஒரே கார
ணத்தினால் சோவியத் யூனியன் ஆசிய வல்லரசுக்கான
தகுதியை இழந்துவிட்டது போலும்.

ஐரோப்பா, ஆசியா கண்டங்களில் இந்த மகாநாட்
டிற்கு அழைக்கப்படாத வெள்ளையர் அரசாங்கத்தினரில்
பெரும்பாலோர், இந்தக் கூட்டத்தின் விளைவுகளைப் பற்றி
அச்சமடைந்தனர். ஆஃபிரிக்காவிலும், ஆசியாவிலும் சில
பகுதிகளிலும் நிலவிய காலனி ஆட்சியிடம் வெறுப்பு ஒரு
புறம், மற்றொருபுறம் ஆசியாவில் கம்யூனிஸத்தின் எழுச்சி
என்னும் இவ்விரு பிரச்னைகளும், வெள்ளையரல்லாத உலக
மக்களின் இம்முதல் கூட்டத்தில் எவ்விதக் கொந்தளிப்பைக்
கிளப்பக்கூடும் என்கிற கிலேசம் வெள்ளையரிடம் நிலவியது.

1945-இல் கோடை காலத்தில் போர் முடிவடைந்த சம
யத்தில், சீனா, ஜப்பான், தாய்லாந்து நீங்கலாக ஆசியா
வில் பெரும்பகுதி-ஆஃபிரிக்காவில் பெரும் பகுதி, மேற்கு
இந்தியா (West indies) விலும், மத்திய, தென் அமெரிக்
காவில் சில பகுதிகள்-இவ்விடங்களில் காலனி ஆட்சியினர்
தங்கள் ஆதிக்கத்தை விடாப்பிடியாக நீடிக்கவும் விரும்பி
னர். உலக ஜனத்தொகை 2.3 பிலியன் மக்கள். இவர்
களில் 85 கோடி மக்கள் ஐரோப்பிய காலனி ஆட்சிக்குட்பட்
டவர்கள். எட்டுக் கோடி பேர்தான் கம்யூனிஸ்டு ஆதிக்கத்
திலிருந்தனர்.

இதற்குப் பத்து வருஷத்திற்குப் பின் உலக ஜனத்
தொகை 2.5 பிலியனாக உயர்ந்தது. சோவியத் யூனியன்,
கம்யூனிஸ்டு சீனா, கம்யூனிஸக் கைப்பொம்மை நாடுகளின்
ஜனத்தொகை 85 கோடியாகப் பெருகிவிட்டது. பலாத்
காரம் அல்லது சாத்விகப் புரட்சி மூலம் 65 கோடி மக்கள்
விடுதலையடைந்து, ஆக்ரோஷத்துடன் சுதந்திரம் அநுப
வித்து வருகின்றனர். இவர்கள் அநேகமாக ஜனநாயகப்

போக்குள்ள ஆட்சிகளையே அமைத்துக்கொண்டிருக்கின்றனர். எஞ்சியுள்ள மக்களும் சுதந்திரம் அடையும் தறுவாயிலிருக் கின்றனர். ஐரோப்பியக் காலனி ஆட்சிக்குட்பட்டவர்களின் எண்ணிக்கை பதினெட்டுக் கோடியாகக் குறைந்துவிட்டது.

இந்தப் புள்ளி விவரங்கள் அச்சுறுத்துபவையாயிருக் கின்றன. பாண்டுங் மகாநாட்டின் மூலம் கம்யூனிஸ்டு ஆதிக்க ஆர்வம் வலுப்பெறக் கூடும் என்று மேற்கத்தி நாட்டுத் தலைநகர்களில் உள்ளவர்கள் அஞ்சிக்கொண்டிருந் தனர். காலனி ஆட்சிக் கொடுமைகளை ஞாபகப்படுத்தி, மகாநாட்டை மேற்கத்தி எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டமாக மாற்றி விபரீத விளைவுகளைச் சௌ என் லாய் ஏற்படுத்தலாம் எனவும் பயப்பட்டு வந்தனர்.

இந்த மகாநாடு இனவெறி கொண்டதாக மாறிவிடக் கூடும் எனச் சிலர் எச்சரிக்கை செய்தனர். கெனியாவில் ஏற்கனவே இனப் போராட்டம் நடந்து வந்தது. தென் ஆஃபிரிக்கா வானில் இன வெறி இடியும் புயலுமாக ஆர்ப் பாட்டம் செய்து வந்தது. ஆகையால் இவ்விரு கண்டங் களில் பெரும் பகுதியிலுள்ள வெள்ளையர் அல்லாதார் மகாநாட்டில் வெள்ளையர் வெறுப்பு தலைவிரித்தாடும் என்று ஊகிப்பதற்கு இந்தச் சூழ்நிலை இடமளித்தது.

இம்மாதிரி அச்சத்தினலோ என்னவோ, அமெரிக்க அரசாங்கத்தார் இம்மகாநாட்டிற்கு நேரடியாக பாராட் டுச் செய்தி அனுப்பத் தவறிவிட்டனர். இந்தத் தவறுத லுக்குக் காரணம் கேட்டு, ஒரு அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் எழுதியதற்கு அரசாங்க இலாகா அதிகாரி, "தயை வாய்ந்த அசிரத்தை" தான் காரணம் எனப் பதில் கூறினராம். ஆனல் இந்தக் கூட்டத்தைப் பற்றி நாம் அசிரத்தையாயிருந்து விட்டதாகக் கூற முடியாது. இந்த மகாநாட்டின் முக்கியத்துவத்தை அமெரிக்கப் பத்தி ரிகைகள் நன்கு உணர்ந்திருந்தன. ஒரு ஆசிய சம்பவத் தைப் பார்த்து விமர்சிக்க இதுவரை சென்றதைவிட அதிக மான பத்திரிகையாளர்கள் பாண்டுங்குக்குச் சென்றனர்.

மேற்கத்தி நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டு பல ஆசிய ஆஃபிரிக்க பிரதிநிதிகளும், அமெரிக்காவையும், பிரிட்டனையும் போலவே இந்த மகாநாட்டைப்பற்றி அச் சமே கொண்டிருந்தனர். பிலிப்பைன்சின் ஜெனரல் ரொமூலோ இந்த மகாநாட்டைப் பற்றிய தமது முக்கிய நோக்கத்தை எடுத்துரைத்தார். "உலகத்தைக் கிடுகிடுக்க வைக்க வல்ல இன அடிப்படைக் கூட்டுறவு ஏற்படாமல் தடுப்பது" என அவர் கூறினர்.

ஆனல் அவ்வாருன அபாயம் எதுவும் அங்கே ஏற் படவில்லை. அம்மகாநாட்டைக் கவனிப்பதற்காகச் சென்ற



அட்லாண்டிக் நாட்டினர் பல, வன்மையான கம்யூனிஸ்டு எதிர்ப்புப் பிரசங்கங்களைக் கேட்டனர். ஃபிலிப்பைன்ஸுக்குச் சுதந்திர மளிப்பதாகக் கூறிய வாக்கை அமெரிக்கா காப் பாற்றிவிட்டது என்று ஒரு பிரசங்கி சபையோருக்கு ஞாபக மூட்டினர்.

ஜனதிபதி சுகர்ணோ செய்த சிறப்பான பிரசங்கத்தில் புரட்சி புது கட்டத்தை அடைந்துவிட்டது என முன்பு காலனி ஆட்சிக்குட்பட்டவர்களுக்கு ஞாபக மூட்டினர். "இந்தோனேஷ்யர்களும், ஆசியா, ஆஃபிரிக்காவிலுள்ள நமது சகோதரர்களும் அறிந்த புராதனக் காலனி ஆட்சியைப்பற்றி மட்டும் நினைப்பதை விட்டுவிடுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்; காலனி ஆட்சி புது ரூபம் பெற்றிருக்கிறது. பொருளாதாரக் கட்டுப்பாடு, அறிவைக் கட்டுப்படுத்தல், உடலையே கட்டுப்படுத்தல் மூலம்தான் காலனி ஆட்சி புது உருக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் செய்பவர்கள் நம் நாடுகளிலே உள்ள சிறு எண்ணிக்கையினரான அந்நியர். இந்தப் பகைவர்கள் சாதுர்யம் வாய்ந்தவர்கள், உறுதிவாய்ந் தவர்கள். இவர்கள் பல வேஷங்கள் தாங்கி வருவர். காலனி ஆட்சி எங்கே, எப்பொழுது, என்ன ரூபத்தில் தோன்றினலும் அது தீமையேயாகும். அதை உலகத்திலிருந்து களைந்தெறிய வேண்டும்" இவ்வாறு சுகர்ணோ பேசினர்.

காலனி ஆட்சி பல்வேறு நிலையில் அமைந்திருக்கலாம் என்பதை அவர் விரிவாக எடுத்துரைத்தார். அந்த விளக்கம் ஐரோப்பியப் பொருளாதாரச் சுரண்டலுக்கு மட்டுமல்ல, உள்நாட்டு நிலப்பிரபுத்வ முறைக்கும், சர்வதேச கம்யூனிசத் திற்கும் பொருந்தும். துருக்கி, ஈரான், லிபியா, ஈராக், பாகிஸ்தான், இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன் தீவுகள் முதலிய நாட்டுப் பிரதிநிதிகள் கம்யூனிஸ்டு உருக்கொண்ட காலனி ஆட்சியின் கொடுமையையும், தாங்கள் எதிர்ப்ப தாகச் சுட்டிக் காட்டியே பேசினர்கள்.

ஈராக் அரசாங்க மந்திரி டாக்டர் அல் ஜமாலி (Al-Jamali) பேசுகையில், கிழக்கு ஐரோப்பா, மத்ய ஆசியாப் பகுதிகளில் கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பு வரலாற்றை விமர்சனம் செய்து பேசினர். "பழைய காலனி ஆட்சியைவிட நாசசக்தி வாய்ந்த புதிய முறையை உலகின்மீது திணிக்கின்றனர்" என அவர் கம்யூனிஸ்டுகள்மீது குற்றம் சாட்டினர். "காலனி ஆட்சியை எதிர்ப்பதில் நாம் ஒற்றுமையாயிருந்தால், மேற் கத்தி சாம்ராஜ்ய ஆட்சியை எதிர்ப்பதுபோலவே, சோவியத் காலனி ஆட்சியையும் எதிர்ப்பதாய் பகிரங்கமாக அறிவிப்பது நமது கடமையல்லவா?" இவ்வாறு அக்கால இலங்கைப் பிரதமர் சர் ஜான் கோட்லேவாலா பிரதிநிதிகளைப் பார்த்துக் கேட்டார்.

இம்மாதிரிப் பிரசங்கங்கள் பல மேற்கத்தி நாட்டுப்
பார்வையாளர்களுக்கு ஆறுதலளித்தன. ஆனால் ஆர்வம்
மிகுந்த மேற்கத்தி நாட்டு நண்பர்கூட இன்று, ஆசியாவிலும்,
ஆஃப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் நிலவி வரும்
ஐரோப்பியக் காலனி ஆட்சியைப்பற்றி ஒரு நல்வார்த்தை
கூடச் சொல்ல முன் வரவில்லையென்பதை நாம் மறந்துவிட
லாகாது. பாண்டுங் மகாநாட்டிலிருந்து ஏகமனதாக வெளி
யிட்ட இறுதி அறிக்கையில், ''காலனி ஆட்சி எந்த உருவத்
தில் தோன்றினாலும், அது தீமையே. அதை விரைவில் ஒழித்து
விட வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தனர். இதை கம்யூ
னிஸ்ட் எதிர்ப்பாளர்கள், கம்யூனிஸ்ட் அநுதாபிகள், எக்
கட்சியிலும் சேராதவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஆதரித்
தனர்.

''மேற்கு ஈரியனில் (West Irian) டச்சுப் புது கினியா
(Dutch New Guinea) இந்தோனேஷ்யா பாத்யதை கொண்
டாடுவதை'' பிரதிநிதிகள் குறிப்பாக ஆதரித்தனர்.
''இந்தோனேஷ்யாவுடன் அவர்கள் செய்துகொண்ட உடன்
பாட்டையொட்டி,'' சீக்கிரம் பேச்சு வார்த்தை தொடங்கு
மாறு டச்சு அரசாங்கத்தை வற்புறுத்தினர். ''வட ஆஃபி
ரிக்கா மக்களுக்கு சுய நிர்ணய உரிமையைப் பிடிவாதமாக
அளிக்க மறுத்து வருவதைக் குறிப்பிட்டுவிட்டு, ''அல்ஜீரியா,
மொராக்கோ, டுனீஷியா மக்களின் சுய நிர்ணய, சுதந்திர
உரிமைகளை ஆதரித்து, தாமதமின்றி அமைதியாகப் பிரச்னை
யைத் தீர்க்குமாறு ஃபிரஞ்சு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்
வதாக'' ஒரு தீர்மானம் நிறைவேறியது. ஏடனில் (Aden)
யெமான் (Yemen) கொண்டாடும் உரிமையை மகாநாடு
ஆதரித்தது. (செங்கடல் முக்த்துவாரத்தில் ஏடனில் பிரிட்
டன் ராணுவ தளம் வைத்திருக்கிறது.)

அவ்வளவாகப் பழக்கப்படாத புதிய கம்யூனிஸ்டு ஏகாதி
பத்ய முறையை எவ்வளவுதான் ஆர்வத்துடன் கண்டித்தனர்
என்றாலும், புராதனக் காலனி ஆட்சியிடம் உள்ள அச்சம்
பாண்டுங்கில் கூடியவர்களைப் பொதுவாக ஆட்கொண்டிருந்
தது. இந்த உண்மையைக் குறைவாக மதிப்பிடுவது அபாய
மாகும். இந்த அச்சம் காலனி ஆட்சியினரை நேரடியாகத்
தாக்கியதன் மூலமே வெளிப்பட்டது என்று நினைக்கலாகாது.
நிற வேற்றுமை, பொருளாதார அபிவிருத்தியில் அலட்சியம்
இரண்டுமே, பழைய தற்போதைய காலனி ஆட்சிகளின்
விளைவு என்று கூறுவதன் மூலமும் வெளியிட்டனர்.

இம்மாதிரிப் பிரச்னைகளைத் தீர்க்க எவ்வளவோ வழி
களும், சாதனங்களும் இருக்கின்றன. மகாநாட்டில் இத



பற்றிப் பல்வேறு அரசியல் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.
ஆசியாவிலும், ஆஃபிரிக்காவிலும் பல வகைப்பட்டவர்கள்
இருக்கின்றனர். பலாத்காரத்தில் நம்பிக்கையுள்ளவர்களும்
இருக்கின்றனர். சாத்விகத்தில பற்றுள்ளவர்களும் இருக்
கின்றனர். கம்யூனிஸத்தை விரும்புகிறவர்களும் இருக்கின்
றனர். ஜனநாயகத்தை ஆதரிப்பவர்களும் இருக்கின்றனர்.
நிலப்பிரபுத்வத்தை ஏற்பவர்கள் இருக்கின்றனர். நடு
நிலைமை வாதிகளும் இருக்கின்றனர். காந்திய பக்தர்களும்
இருக்கின்றனர். இங்கே ஒரு சில கோஷ்டிகளையே குறிப்பிட்
டிருக்கிறேன். இதிலும் ஒரு சாராரும் மற்றொரு பகுதியின
ரும் சில விஷயங்களில் ஒன்றுபட்ட கருத்துள்ளவர்களாயிருக்
கலாம். ஆனால் கம்யூனிஸ்டு ஆசியர்களும், நிலப்பிரபுத்வ
ஆசியர்களும், ஜனநாயகக் கருத்துக்களுக்கும், சக்திகளுக்
கும் வாசாகைங்கரியம் செய்யவேண்டிய அவசியத்தை
உணர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விஷயம். ''ஜீவா
தாரமான மனித உரிமைகளுக்கு மதிப்பளித்ததுடன், ஐ.நா.
வின் சாசனத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்பதாக''
அவர்கள் முதலில் ஒப்புக்கொண்டனர். குறிப்பாக, ஐ.நா.
மனித உரிமைப் பிரகடனத்தை ஏற்பதாகவும் அவர்கள்
தெரிவித்தனர்.

உலகத்தில் இதுவரையில் தங்கள் அபிலாஷைகளை வெளி
யிடச் சக்தியற்றவர்களாக இருந்தவர்கள், இந்தச் சக்தி பெற்
றதும், மகாநாட்டுக் கூட்டறிக்கையை ஆதரிக்க முன் வருவா
னேன்? நாம் ஒரு நாடாக உருப்பெற்ற நாளிலிருந்து அடைய
விரும்பி வந்த நேரடியான ஜனநாயகக் குறிக்கோள்களையே
இந்த அறிக்கை வற்புறுத்துகிறது. இதுபற்றிப் பின்னர்,
இன்னும் விரிவாக எடுத்துக் கூறுகிறேன்.

கொரியாவில் கம்யூனிஸ்டு ஆக்ரமிப்பை எதிர்த்த, இன்
னும் சீன கம்யூனிஸ்டு ஆட்சிக்குப் பிரதிநித்துவம் அளிக்காத
ஐ.நா.வுக்கு சௌ-என்-லாய் முழு மனதுடன் ஆதரவளிக்க
முன்வந்தது ஏன்? நிலப்பிரபுத்வ ஆதிக்க ஆட்சியினர்,
ஐ.நா.வின் உரிமைச் சாஸனத்தை ஆதரிக்க முன் வருவா
னேன்? இந்த உரிமைகள் நிறைவேற்றப்பட்டால் தங்களது
ஆட்சி முறை ஒழிந்துவிடும் என்பதை அறிந்தும், ஐ.நா.
உரிமைப் பட்டியலை அவர்கள் ஏன் ஆதரிக்க வேண்டும்?

இந்தக் கேள்விகளுக்கு பதில் காணவேண்டுமென்றால்
காலனி ஆட்சி எதிர்ப்புப் புரட்சிகளின் தன்மையையும் வர
லாற்றையும் அறிந்துகொள்ள வேண்டும். இந்த வரலாறு
பெரிதும் கறுப்பு மக்கள் வட அட்லாண்டிக் நாட்டினரை
எதிர்த்துப் போராடிய விவரங்கள் அடங்கியதாயிருக்கும்.
அந்தப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில் ஆஃபிரிக்க ஆசியப்
புரட்சிகளின் உயிர்போன்ற ஜனநாயக அபிலாஷைகள் இடம்

பெற்றன. முற்றுப் பெறாத இந்தப் புரட்சிகள் மூலம் எதிர்
காலத்தில் குழப்பமும் கம்யூனிஸமும் தோன்றுமா, அல்லது
அமைதி, சட்டம், ஜனநாயகம் உதயமாகுமா என்பதற்கு
பதிலை இந்த வரலாற்றில் காணலாம்.

அத்தியாயம்—22

# காலனிப் புரட்சிகள் வரலாறு

மேற்கத்தி நாடுகளுடன் ஆசியாவுக்கு மிகுதியான
தொடர்பு கிறிஸ்தவ மதத்தினர் இஸ்லாமியருடன்
க்ருஸேட்ஸ் (Crusades)* போர் புரிந்த காலத்தில் ஏற்பட்டது.
அப்போதுதான் ஏராளமான ஐரோப்பியர் முதல் தடவை
யாக கிழக்கு நோக்கிச் சென்றனர். அங்கு தங்களைவிடச்
சிறப்பான நாகரிகங்கள் நிலவி வருவதைக் கண்டனர். கிழக்
கத்தி நாடுகளின் செல்வச் செழிப்பு, வீரச்செயல் புரிபவர்களை
யும் புது நாடுகள் கண்டுபிடிக்கும் ஆற்றலுமுள்ள மேற்கத்
திய அரச குடும்பத்தினரையும் காந்தம் போல் இழுத்தது.
பதின்மூன்றாவது நூற்றாண்டில் மார்க்கோ போலோ
(Marco polo)* குப்ளாய் கான் (Kublai khan)* ஆண்ட சீனா
வின் செழிப்பைப் பற்றி எழுதினான். இதைப் படித்த மேற்
கத்தி நாட்டினர் இன்னும் விரைவாக ஆசியாவை நோக்
கிச் சென்றனர். ஒட்டகங்கள் சீக்கிரத்தில் செல்லும் தரை
வழியை விட்டு துணிவுடன் கப்பல்களில் கிளம்பிச் சென்ற
னர். இந்தியாவின் செல்வத்தைப் பற்றிய கதைகள் கேட்டு,
அதை அடையும் நோக்கத்துடன் சென்ற கொலம்பஸ் (Co-
lumbus) தற்செயலாக அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்தார்.

* க்ருஸேட்ஸ் (Crusades):--இந்த மத சம்பந்தமான யுத்தங்கள் 11-லிருந்து
14-வது நூற்றாண்டு வரை நிகழ்ந்தன. கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமாகிய
ஜெருஸலேமை கலீப் உமார் கைப்பற்றினார். இதை மீட்பதற்காகக் கிறிஸ்த
வர்கள் புரிந்த யுத்தங்கள்தான் க்ருஸேட்ஸ்.

* மார்க்கோ போலோ (Marco polo):—1254 - லிருந்து 1324 - வரையில்
வாழ்ந்த இத்தாலியன். இவன் சீனாவை குப்ளாய் கான் ஆண்ட காலத்தில்
அங்கு சென்று அந்த மன்னனின் நம்பிக்கைக்கும், அபிமானத்திற்கும் பாத்
திரமாயிருந்தான். இவன் எழுதிய பிரசித்திபெற்ற பிரயாண நூலில் கீழ்த்
திசை நாடுகளின் பொருள் வளத்தைப் பற்றி விவரித்திருந்தான்.

* குப்ளாய் கான் (Kublai khan) 1215-லிருந்து 1294-வரை வாழ்ந்தவன்.
செங்கிஸ்கானின் பேரன். யுவான் (yuan) அரச வம்சத்தின் முதல்வன்.
இவன் காலத்தில்தான் மார்க்கோ போலோ சீனாவிற்கு வந்து நீண்ட காலம்
தங்கினான்.



தென் ஆஃப்பிரிக்காவின் தென்கோடியைத் தாண்டி இந்
தியக் கடல் மார்க்கமாக வாஸ்கோடி காமா (Vasco da Gama)*
இந்தியா வந்தடைகையில் மேற்
சில ஆண்டுகளுக்குப் பின், இந்தியா வந்தடைகையில் மேற்
கத்தியார் கிழக்கு நோக்கி வந்த காரணம் மதப்பிரசாரம்
செய்வதற்காகவும், வாணிபம் புரிவதற்காகவும் என்றுதான்
தோன்றிற்று. ''கிறிஸ்தவர்களையும், வாசனைத் திரவியங்
களையும் நாடி, நாங்கள் இங்கு வந்தோம்'' என்று அவன்
கூறினான். பதினாறாவது நூற்றாண்டிலிருந்து பத்தொன்ப
தாவது நூற்றாண்டுக்குள் தென் அமெரிக்கா, ஆஃப்பிரிக்கா,
இந்திய உப கண்டம், மலாயா தீப கற்பம், இந்தோ
னேஷியா, ஏன் உலகின் தென்பகுதியே மேற்கத்தியாரின்
காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிட்டது.

1874-இல் ஸ்டான்லி என்பவன், காங்கோ (Congo) மூல
மாக ஆஃப்பிரிக்காவின் மத்திய பாகத்திற்குச் சென்றான்.
மேற்கத்தி நாகரிகத்தினரின் வெற்றிக்கு இதுவரை இலக்
காகாத பகுதி இதுதான். 1874-க்குள் ஐரோப்பா நீங்க
லாக உள்ள உலகத்தின் பெரும் பகுதி அரை டஜன்
மேற்கத்தி சாம்ராஜ்யங்களுக்குள் பங்கு போடப்பட்டுவிட்
டது. ஆசியாவில் பாதியும் அநேகமாக ஆஃப்பிரிக்கா முழு
தும் அக்கால பூகோளப் படத்தில் பிரிட்டன், பெல்ஜியம்,
ஜெர்மனி, ஸ்பெயின், ஃபிரான்ஸ், போர்ச்சுகல், நெதர்
லண்ட் முதலிய நாடுகளில் ஒவ்வொன்றிற்கும் சொந்தமான
பகுதிக்குப் பிரத்தியேக வர்ணம் தீட்டப்பட்டிருந்தது.

காலனி ஆட்சிக் கொள்கைபற்றி இப்படிப் போட்டி
ஏற்பட்டதிலிருந்துதான் லெனினுடைய ஏகாதிபத்யச்
சண்டை பற்றிய கொள்கை தோன்றலாயிற்று. இதை
நாம் ஏற்கனவே விவாதித்திருக்கிறோம். அவருடைய
இந்தக் கொள்கை நியாயமாயிருக்குமோ என்று கூடப்
பலர் எண்ணினர். இதிலிருந்துதான் பிரிட்டிஷ் சாம்ராஜ்
யத்தில் சூரியன் அஸ்தமிப்பதே இல்லை என்று பிரிட்டிஷார்
பெருமையடித்துக் கொண்டனர்.

ஆனால், அந்த சாம்ராஜ்ய ஒளி மங்கத் தொடங்கி
விட்டது. இன்று, ஆஃப்பிரிக்கா கண்டத்தில் மட்டும்தான்
பழைய மேற்கத்திப் பாணிக் காலனி ஆட்சி ஓரளவு நிலைத்
திருக்கிறது. ஆசியாவில் மலேயா, ஹாங்காங், மகேவா
(Macao), வட போர்னியோ, கோவா, மேற்கு நியூகினி

* வாஸ்கோடி காமா:—போர்த்துகலைச் சேர்ந்தவன். 1460-லிருந்து 1524-
வரை வாழ்ந்தவன். தனது நாட்டு மன்னன் மானுவல் உத்தரவுப்படி
இவன் நான்கு கப்பல்களுடன் பிரயாணம் செய்து இந்தியாவில் முதலில்
மலையாளத்தில் கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தான். ஐரோப்பாவி
லிருந்து இந்தியாவுக்கு வந்த முதல்வன் இவன்தான். இதிலிருந்துதான்
இந்தியாவின் மிளகும், லவங்கமும், மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதியாயின.

(West New Guinea)யும், தென் அமெரிக்காவில் கயானாவும்
(Guianas) தவிர மற்றக் காலனி நாடுகள் யாவும் இருபதா
வது நூற்றாண்டுப் பிற்பகுதியில் ஏதோ ஒரு முறையில் சாம்
ராஜ்ய ஆதிக்கத்தின் பிடியை அறுத்துக்கொண்டுவிட்டன.
தென் அமெரிக்கா உட்பட உலக மக்களில் மூன்றில்
ஒரு பங்கினர் எவ்வாறு சுதந்திரம் பெற்றனர் என்கிற
வரலாறு, ரஷ்யாவிலும், சீனாவிலும் நிகழ்ந்த சம்பவங்களை
விட முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கும். சுதந்திரம்
பெற்றவர்கள் எண்ணிக்கை, அவர்கள் கடைப்பிடித்த இலட்
சியச் சிறப்பின் விளைவுகள் இரண்டையும் கொண்டு பார்த்
தால், இந்திய உபகண்டத்தில் நிகழ்ந்த புரட்சியே மிகுந்த
முக்கியத்வம் வாய்ந்தது எனக் கருதலாம். மக்கள் கூட்ட
மாகச் சேர்ந்து சாத்விக முறையில் நேரடியாக நடத்திய
காந்தியப் போராட்டம் காலனி ஆட்சி எதிர்ப்பு வரலாற்
றிலோ, உலகிலோ யாரும் கண்டிராத புதுமையாகும்.
முன்பு வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் விசேஷ
மாக ரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்றதற்குச் சிரியா,
லெபனான், லிபியா, பிலிப்பைன்ஸ் முதலியவை உதார
ணங்களாகும். எகிப்தும், ஓரளவு ஈராக்கும் மேற்கத்திக்
காலனி முறைக் கட்டுப்பாடுகளிலிருந்து நேரிடையாகப்
பேசி சமரசம் செய்து கொண்டதற்கு உதாரணங்கள்;
ஆனால் இந்நாடுகளும் ஓரளவு போராட்டம் நடத்தியே
சமரசம் செய்ய வழி தேடிக்கொண்டன.
கோல்டுகோஸ்ட், சூடான், நைஜீரியா முதலிய நாடுகள்
பலாத்காரமின்றியே சுதந்திரம் பெறவிருக்கின்றன. இதற்
குக் காரணம் பிரிட்டனின் ''ஆக்க முறையில் அதிகா
ரத்தை விட்டுக் கொடுக்கும்'' பெருந்தன்மையேயாகும்.
இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா முதலிய நாடு
களில் இன்முகத்துடன் பிரிட்டன் தன் ஆதிக்கத்தைக்
கைவிட்ட அநுபவத்திலிருந்து எழுந்ததுதான் பிரிட்டனின்
இந்தச் சிறப்பான போக்கு. நைஜீரியாவிலும், கோல்டு
கோஸ்டிலும், ''நாம் காந்தி வழி செல்வோம்'' என்கிற
கோஷம் ஆஃப்பிரிக்கர்களைப் பெரிதும் ஆட்கொண்டிருந்தது.
அந்நாடுகளில் நடந்த தேசியப் போராட்டங்கள் இந்தியப்
போராட்ட அநுபவத்தைப் பின்பற்றியதன் விளைவுகளே
யாகும்.

காலனி ஆட்சி நடந்த நாடுகளிலோ, பிற இடங்களிலோ
இதுவரை நிகழ்ந்த புரட்சிகள் சாத்விக முறைகளைப் பின்பற்
றியதில்லை. 1775-ஆம் ஆண்டு நாம் நடத்திய புரட்சி சாத்
விகமானதல்ல; சில ஆண்டுகளுக்கு முன் புயூர்டோ ரிகோ
(Puerto Rico) கவர்னர் லூயி முனோஸ் மாரின் (Luis Munoz
Marin) நமது காங்கிரஸ் முன் வாக்குமூலமும் அளித்தார்.



அவர் பலாத்கார முறையில் தனது நாடு விடுதலை பெற
விரும்புகிறாரா, என அச்சமயம் காங்கிரஸ் கமிட்டியினர்
அவரைக் கேட்டனர். இதற்கு அவர் புன்முறுவலுடன் பதி
லளித்தார். ''என் பதிலிலிருந்து ஜெனரல் வாஷிங்டனையோ,
புரட்சிப் படையையோ நான் அவமதிக்கிறேன் என நினைக்கக்
கூடாது. சாத்விக முறைகள் மூலமே சுதந்திரம் பெறலாம்
என நினைக்கிறேன்.'' சாத்விக முறை மூலம், அந்த நாடு
சுதந்திரம் பெறுவது சாத்யமாயிற்று.
ஆனால் காலனி ஆட்சி நிலவுமிடங்களில் அதை ஆயுதம்
தாங்கி எதிர்க்கும் முறை இதுவரை நீடித்து வந்திருக்
கிறது. பாண்டுங் மகாநாட்டிற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு
கூட இந்தோனேஷ்யக் கிராம வட்டாரங்களில் கடுமையான
போர் நிகழ்ந்தது. இரண்டு முனைகளில் கடும் போர் நிகழ்ந்த
பின்பு தான் அந்தப் புதிய குடியரசு சுதந்திரம் பெற்றது.
இந்தியாவைப்போலவே இந்தோனேஷ்யாவிலும், தேசிய
வாதிகள் கும்பல் கும்பலாகச் சிறைப்படுத்தப்பட்டனர்.
சிறைவாசம் தகுதிக்கும், மதிப்புக்கும் சின்னமாகக் கருதப்
பட்டது. சுகர்ணு, ஷாரீர் (Sjahrir), ஹாட்டா முதலிய இந்
தோனேஷ்யக் குடியரசின் தலைவர்கள் சமாதானமாகவே
டச்சுக்காரர்களுடன் உடன்பாடு செய்து கொள்ள விரும்
பினர். ஆனால் இரண்டாவது உலக யுத்த இறுதியில் பிரிட்
டிஷார் இந்தியாவில் செய்தது போலல்லாமல் டச்சுக்காரர்
எவ்வகையிலாவது தங்களது ஆதிக்கத்தை நீடிக்கவே விரும்
பினர் என்று தெரிந்தது.
சரணாகதி அடையும் ஜப்பானியர், குடியரசுப் படை
களுக்கு ஆயுத உதவி செய்தனர். அங்கிருந்து வெளியேறும்
டச்சுப் படைகளுக்கு அமெரிக்கா உதவி செய்தது. இவ்விரு
படைகள் எதிர் நின்று போர்புரியும் தறுவாயில், கம்யூ
னிஸ்டுகள் நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, படை
திரட்டி 1948 செப்டம்பரில் திடீரென இந்தோனேஷ்யப்
புரட்சி அரசாங்கத்தைத் தாக்கினர். இதே சமயத்தில்
டச்சுக்காரர்களும் தாக்கியிருந்தால் இந்தோனேஷ்யாவைக்
கம்யூனிஸ்டிடமிருந்து காப்பாற்றிவிட்டதாக அட்லாண்டிக்
நாடுகளிடம் அவர்கள் பெருமையடித்துக்கொண்டிருக்கலாம்.
ஆனால் டச்சுக்காரர்கள் தயங்கினர். புதிய குடியர
சிடம் விசுவாசமுள்ள படைகள் போர்புரிந்தன. கம்யூ
னிஸ்டு கலகம் உடனடியாக ஒடுக்கப்பட்டது. 9 ஆயிரம்
கம்யூனிஸ்டுகளும், அவர்களுடைய சிஷ்யர்களும் குடியரசு
அரசாங்கத்தினரால் காவலில் வைக்கப்பட்டனர். சில
வாரங்களுக்குப் பின் டச்சுக்காரர்கள் இறுதியாகத் தாக்கிய
பொழுது, குடியரசுப் படைகள் உடனே 200 கம்யூனிஸ்டு
களைத் தூக்கிலிட்டனர். அவர்களை விடுதலை செய்யும் சபலம்

யாருக்காவது இருந்தால் அவர்களை பயமுறுத்துவதற்காகவே இந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

நிலைமை இவ்வாறு தெளிவாகத் தெரிந்ததும், நேடோ மூலம் வெற்றிபெறலாம் என்று டச்சுக்காரர் நினைத்தபடி நடக்கவில்லை. அமெரிக்கர் தீர்மானமாக ஜனாதிபதி சுகர்ணோவையும், தேசிய வாதிகளையும் ஆதரித்தனர். முன்னாள் அமெரிக்க செனட் சபை அங்கத்தினரும், வடகரோலினப் பல்கலைக் கழகத் தலைவருமான டாக்டர் கிரஹாம் முதன்மையாக நின்று பேச்சு வார்த்தை நடத்தினார். இதன் மூலம் 1949-இல் டச்சுக்காரர் அந்நாட்டிலிருந்து வெளியேறினர்.

* * *

இந்தோ சீனாவில் நடந்த காலனி ஆட்சி எதிர்ப்புப் புரட்சி மிகுந்த நஷ்டமளிக்கக்கூடிய உள்நாட்டுச் சண்டையாகக் கிளர்ந்தது. ஜப்பானியர் வெளியேறியவுடன் இந்தோனேஷியாவில் நிகழ்ந்தது போலவே, இங்கும் ஸ்தல தேசியவாதிகள் சுதந்திரக் குடியரசை அமைத்தனர். இந்தோ சீன மக்கள் சுதந்திரத்திற்குத் தகுதியுள்ளவர்கள் என்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறியபொழுது அமெரிக்கர்கள் அவர் கூற்றில் தங்களுக்கு இருந்த சந்தேகத்தை ஸ்பஷ்டமாகத் தெரிவித்தனர். ஆனால் 1945-46 பனிக் காலத்தில் ஃபிரஞ்சுப் படைகள் இந்நாட்டில் மீண்டும் பிரவேசித்தன.

ஜப்பானுக்கு எதிராகப் போர் நடக்கையில் ஹோ சி மின் (Ho chi Minh) தமது கொரில்லாப் படைகள் கொண்டு எதிர்ப்புக்கு உதவி புரிந்தார். இவர் மாஸ்கோவில் பயிற்சி பெற்ற கம்யூனிஸ்ட். தான் ஒரு ஆர்வமிக்க வியட்நாம் தேசியவாதி எனவும் கருதினார். சாதுர்யம் வாய்ந்த இவர் தமது வாழ்நாளை நாட்டின் நலனுக்கே அர்ப்பணம் செய்து கொண்டார். ஜப்பானிய ஆக்ரமிப்புப் படைகளுக்குத் தொல்லை விளைவிப்பதில் தங்களுக்கு நம்பிக்கை வாய்ந்த துணைவர் என அமெரிக்க ராணுவத்தினர் இவரை மதித்து வந்தனர்.

அச்சமயத்தில் கூட ஹோ சி மின் (பிரகாசம் அளிப்பவர்) னின் வாழ்க்கை வரலாறு சிறப்பு வாய்ந்ததாயிருந்தது. மெலிந்து, துரும்பு போன்று, வளைந்த உடலமைப்பு வாய்ந்தவராயினும், எதையும் சகித்துக்கொள்ளும் இவருடைய உறுதியும், ஆன்மிகப்பலமும் பிரசித்திபெற்றவை. இவர் உலகம் சுற்றி வந்திருக்கிறார். ஃபிரான்ஸில் கப்பற் சேவகனாக வேலை செய்திருக்கிறார். லண்டனில் சமையல் வேலை பார்த்திருக்கிறார். போட்டோப் படக்கலை விற்பன்னராயிருந்திருக்கிறார். ஜனாதிபதி வுட்ரோ வில்ஸன் எல்லா மக்களுக்கும்



சுயநிர்ணய உரிமை உண்டு எனக் கூறிய வாக்கினால் ஆட்கொள்ளப்பட்ட ஹோ, வாடகைக்கு உடை வாங்கி அணிந்து கொண்டு 1919-இல் பாரிஸ் சமாதான மகாநாட்டிற்குச் சென்றார். அங்கு வியட்நாம் மக்கள் சுதந்திரத்தை ஆதரித்து பிரதிநிதிகளுக்கு ஒரு சொற்பொழிவு நிகழ்த்த விரும்பினார். நேச நாட்டினர் இவரைப் பேசுவதற்கு அனுமதியளிக்க மறுத்தனர். அதிலிருந்து வில்ஸன் வகுத்த பதினான்கு உரிமைகள் ஆசியர்களுக்கல்ல என்ற முடிவுக்கு வந்தார்.

1922-இல் மாஸ்கோவில் நடந்த மார்க்ஸிஸ போதனைக்கான சர்வதேசப் பள்ளிக்குச் சென்றார். அங்கே லெனின், டிராட்ஸ்கி, புகாரின் (Bukharin) முதலியவர்களைச் சந்தித்தார். 1925-இல் பரோடினுக்கு மொழிபெயர்ப்பாளராக அவருடன் காண்டனுக்குச் சென்றார். 1927-இல் மாஸ்கோவுக்குத் திரும்பி வந்து அங்கே இந்தோ-சீன கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்து அதை காமிண்டேர்னுடன் இணைத்தார்.

இவர் சோவியத் பயிற்சி பெற்றவராயினும், உணர்ச்சி மிக்க தன்னிச்சையான ஆசியத் தேசியவாதி, தனது நாடு என்ற கர்வம் படைத்தவர். சுதந்திரம் வாய்ந்த வியட்நாமை அமைப்பதே இவரது முக்கியக் குறிக்கோள். இவ்வாறே விஷயம் தெரிந்த பலர் இவரை மதிக்கின்றனர். இந்தக் குறிக்கோளைப் பின்பற்றியதனால் இவருக்கு மேற்கத்தி நாட்டுச் சிறைவாச அநுபவம் ஏற்பட்டது. 1931-இல் ஃபிரஞ்சு தூண்டுதலின் பேரில், பிரிட்டிஷார் இவரை ஹாங்காங்கில் சிறை செய்தனர். பதினெட்டு மாத இந்த சிறைவாசத்தால் காசநோய் கண்டு இவர் இறக்கும் தறுவாய்க்கு வந்துவிட்டார்.

1945-இல் வியட்நாமுக்கு உடனடியாகச் சுதந்திரமளிக்க வேண்டுமென முழங்கினார். 1954-இல் ஜெனிவாவிலும் 1955-இல் பாண்டுங்கிலும் எப்படி சௌ என் லாய், தம்மிடம் பரிவு காட்டலாகாது என்று எண்ணியவர்களின் கரகோஷத்தையும் பெற்றாரோ அவ்வாறே பாரிஸில் இவர் பேச்சு வார்த்தை நடத்துகையில் சந்தித்தவர்கள் யாவரையும் பரவசப்படுத்தினார்.

ஆனால் தம் நோக்கம் ஈடேறவில்லையென்றறிந்ததும், உள்நாட்டுச் சண்டை ஆரம்பிக்கப் போவதாக அச்சுறுத்த அவர் தயங்கவில்லை. "போர் புரிய நேரிட்டால் நாங்கள் போர் புரிவோம். நீங்கள் எங்களில் பத்துப் பேரைக் கொன்றால், உங்களில் ஒருவரையாவது நாங்கள் கொல்வோம். கடைசியில் நீங்கள்தான் சண்டையில் சலிப்படைவீர்கள்," இவ்வாறு ஹோ வெளிநாட்டு ஃபிரஞ்சு சோஷலிஸ்ட் மந்திரி மரியஸ் மௌடெட்டிடம் (Marius Moutet) கூறினார்.

1946-ஆம் ஆண்டு முடிவுக்குள் ஃபிரஞ்சு சண்டைக் கப்பல் ஒன்று ஹைபாங்கை (Haiphong)த் தாக்கியது. அதனால் நாலாயிரம் பேர் மாண்டனர். சண்டையும் மூர்த்தன்யமாக ஆரம்பித்தது. எட்டு ஆண்டுகளுக்குப்பின் 1954-இல் ஹோவின் தீர்க்கதரிசனம் பலித்தது. ஃபிரஞ்சுக்காரர் சண்டையில் சலிப்படைந்தனர். டியன்பியன்பு (Dienbienphu) வீழ்ச்சியடைந்தான். முன்னாள் ஃபிரஞ்சு ஆட்சியினரின் வடக்குத் தலைநகரான ஹனாய் (Hanoi) எங்கும் தலைவர் ஹோவின் பெரிய படங்கள் காட்சியளித்தன.

முழுதும் கம்யூனிஸ்டுகளே தலைமை தாங்கி நடத்தி வெற்றிகண்ட முதல் புரட்சி இதுதான். மற்ற விடங்களில் அடைய முடியாத வெற்றியை இந்தோ சீனாவில் கம்யூனிஸ்டுகள் அடைந்ததற்குக் காரணம் என்ன? இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

ஆரம்பத்திலிருந்தே புராதனப் பெருமை குறையாமல், தங்கள் ஆதிக்கத்தை நீடிக்க வேண்டும் எனத் துடியாயிருந்தனர் ஃபிரஞ்சுக்காரர். மேலும் ஜப்பானியர் தங்கள் ஆக்கிரமிப்பின்போது, பொம்மை ராஜாவாக வைத்திருந்த, மக்களால் அவமதிக்கப்பட்ட பாவ் டாயை (Bao Dai) இவர்களும் பதவியில் வைத்திருந்தனர். ஆசியாவில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இவர்கள் அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ள பிடிவாதமாக மறுத்ததனால், தேசிய இயக்கத்தின் கட்டுக்கோப்பைப் பலப்படுத்துவது ஹோவுக்கு மிகவும் எளிதாகிவிட்டது.

சண்டை நான்கு ஆண்டுகள் நடைபெற்றது. இதில் 300,000 பேர் அடங்கிய ஃபிரஞ்சுப் படை ஈடுபட்டிருந்தது. இவைகளுக்குப் போர் புரிவதற்குப் போதுமான ராணுவ சாதனங்கள் கிடையாது. படைத் தலைவர்கள் யுத்தகளத்தில் உயிர் துறந்தால், அவர்களுக்கு பதிலாக போதிய ஆட்களுக்குப் பயிற்சி அளித்து அனுப்ப இயலவில்லை. இந்த நிலையில் அமெரிக்கர் உதவி வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஃபிரஞ்சுக்காரர்களுக்கு அதிகரித்துக் கொண்டே வந்தது.

அமெரிக்கருக்குத் தர்மசங்கடமான நிலை ஏற்பட்டது. இந்தோ-சீனா ஃபிரான்சின் காலனி நாடு. காலனி ஆட்சிமுறையை நாம் மனமார எதிர்த்து வந்திருக்கிறோம் என்பது சரித்திரப் பிரசித்தம். ஆனால் ஃபிரான்ஸின் வல்லரசு ஸ்தானத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்று ஆவலாயிருந்தோம். ஏனெனில் அப்படிச் செய்தால்தான் ஐரோப்பிய வல்லரசுகளுக்குள் சமபலம் நிலவுவதை வலுவடையச் செய்ய முடியும். மற்றொருபுறம் கம்யூனிஸம் ஆசியாவுக்குள் புகுந்து விடுமே என்று பெரிதும் கவலைப்பட்டோம். தெற்கு ஆசியாவில் வளமான பகுதிகளை ஜப்பான் விரைவாகக் கைப்



பற்றியதை நாம் மறந்துவிடவில்லை. இந்த நிலையில் வேண்டா
வெறுப்பாக ஃபிரான்ஸை நேரடியாக ஆதரிக்க முனைந்தோம்.
மார்ஷல் திட்டப்படி அமெரிக்கா அளித்ததைவிட
அதிகமாக ஃபிரான்ஸ் இந்தோ சீனாச் சண்டையில் செலவு
செய்தது. அமெரிக்கா 1950-லிருந்து 1954-க்குள்ளாக, 300
லட்சம் டாலர் பெறுமான ராணுவ தளவாடங்களை ஃபிரஞ்சுக்
காரர்களுக்கு அளித்திருக்கிறது. 1953 ஏப்ரலில் நான் கடை
சியாக ஸைகானுக்குச் சென்றிருந்தபொழுது, தினசரிப் பத்து
ஆயிரம் டன் தளவாடங்கள் அமெரிக்கக் கப்பல்கள் மூலம்
அங்கு வந்திறங்கின.

கம்யூனிஸ்டுகளைத் தோற்கடித்து, அமைதியை நிலை
நாட்டிவிட்டால், ஃபிரஞ்சுக்காரர்கள் இந்தோ சீனாவுக்கு
சுதந்திரமளித்துவிடுவார்கள் என்று நாம் எதிர்பார்த்தோம்.
பெருவாரியான ஆசியர்களுக்கும், ஆசியாவில் பணிபுரிந்து
கொண்டிருந்த பலருக்கும் ஃபிரஞ்சுக்காரரின் இந்தச் சூதாட்
டம் கண்டிப்பாகத் தோற்றுவிடும் என்பது தெரியும். அந்தப்
போரில் ஜெயம்பெற ஓரே ஒரு வழிதான் உண்டு. நெடு
நாளாக வாக்களித்து வந்த, அத்தியாவசியமான பொருளா
தார அரசியல் சீர்திருத்தங்களை அவசரமாக இந்தோ சீனா
வில் அமுல் நடத்தவேண்டும். குறிப்பிட்ட கால அளவில்
பூரண சுதந்திரம் அளிப்பதாக உறுதி கூற வேண்டும். அந்தச்
சுதந்திரத்தை அடைந்து பாதுகாப்பதற்கான பலம் பொருந்
திய வியட்நாம் படையை அமைத்துப் பயிற்சி அளிக்க
வேண்டும்.

அமெரிக்காவின் வற்புறுத்தலின் பேரில் ஃபிரஞ்சுக்காரர்
கம்யூனிஸ்டு எதிர்ப்பு ஆர்வமுள்ள தேசியவாதிகளுக்கு
அளித்த சலுகைகள் அரைமனதுடன் அளிக்கப்பட்டன—
காலந்தாழ்த்தி அளிக்கப்பட்டன. அவர்களைத் திருப்தி செய்
யப் போதாதவையாயிருந்தன. அநேகமாக இந்தச் சலுகை
கள் கம்யூனிஸ்ட் வெற்றிகளுக்குப் பின்பே அளிக்கப்பட்டன.
கம்யூனிஸ்டு பலத்தை அலட்சியம் செய்யும் நோக்கத்துடன்
அவை அளிக்கப்பட்டனவே யொழிய ஃபிரஞ்சு நல்லெண்ணத்
தைக் காட்டுவதற்கு அறிகுறியாக அளிக்கப்படவில்லை.

பிடிவாதக்கார ஃபிரஞ்சுக்காரர்கள் மிகமிக அவசியமான
கிராமச் சீர்திருத்தங்களைக்கூட ஆதரிக்க மறுத்தனர். இதனால்
அவர்கள் கட்சி பலஹீனமடைந்தது. 1952 ஆகஸ்டில் கிராம
மக்களில் பெருவாரியானவர்களின் ஆதரவை ஹோ பெற்று
விட்டதாக ஃபிரஞ்சு கட்டுப்பாட்டிற் குட்பட்ட பிரதமர்
ஸைகானிலுள்ள தனது காரியாலயத்தில் என்னிடம் ஒப்
புக்கொண்டார். ஹோவின் படைகள் ஒரு கிராமத்தைக்
கைப்பற்றினால் அவைகள் உடனே பழைய கடன்களை ரத்து
செய்துவிட்டு நிலங்களை உழவர்களுக்குப் பங்கிட்டுக்

கொடுத்துவிடுவார்களாம். அதே கிராமத்தை ஃபிரஞ்சுக்
காரர்கள் மீண்டும் கைப்பற்றினால் அவர்கள் நிலங்களை
மீண்டும் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுத்துவிட்டு, ணை
லேவாதேவிக்காரர்களை அதிகாரத்தில் அமர்த்திவிடுவார்
களாம். இம்மாதிரி நிகழ்ச்சிகளிலிருந்து குடியானவர்கள்
கம்யூனிஸ்டுகளை ஆதரிப்பதில் ஆச்சரியமில்லை என்பதைப்
புரிந்து கொள்ளலாம்.

பெரிய வியட்நாம் படை திரட்டினல் தங்களுக்கே
ஆபத்து நேருமோ என அஞ்சி ஃபிரஞ்சுக்காரர் இறுதியில்
அந்தத் திட்டத்தையும் கைவிட்டனர். கிரீஸிலும், கொரியா
விலும் கம்யூனிஸ்டுகளை ஸ்தல வீரர்களே உறுதியாய்
எதிர்த்துத் தடுத்து நிறுத்தியது போல, இங்கு போராட ஆள்
இல்லையென்பது தெளிவாயிற்று.

எந்த அரசியல் கோஷங்களால் ஆகர்ஷிக்கப்பட்டு
இந்தோ சீனர்கள், ஃபிரஞ்சுக்காரர்களைத் தோற்கடித்த
னரோ அவைகள் ஃபிரஞ்சுப் புரட்சி வரலாற்றிலிருந்து
கற்றறிந்தவை என்பது கேட்பதற்கு வேடிக்கையாகவே இருக்
கிறது. ஃபிரஞ்சுப் புரட்சியில் பாஸ்டைல் சிறை தாக்கப்
பட்டத்திலிருந்து இந்தோ சீனவில் டியன்பியன்பு வீழ்ச்சி
வரையில் இந்தப் புரட்சி கோஷங்களின் விளைவுகளும், வரலா
றும், கொந்தளிப்பும், ரத்தக்களறியும், துயரமும் நிறைந்த
தாகவே இருந்து வந்திருக்கிறது. ஃபிரஞ்சுப் புரட்சியில்
பாரீஸில் பலரைத் தூக்கிலிட்டதைவிட, இந்தக் கோஷங்களைச்
சொல்லிக்கொண்டு கம்யூனிஸ்டுகள் புரிந்த கொடுஞ்செயல்
கள் மிகவும் மோசமானவை. ஆனல் எல்லாம் ஓரே இனம்
என்றுதான் கூறவேண்டும்.

காந்திய முறை தோல்வியுற்றிருந்தால், இம் மாதிரி
பலாத்கார முறைகள் கம்யூனிஸ்டுகளால் கையாளப்பட்டி
ருந்தாலும். வேறு எந்தக் கட்சியினரால் மேற்கொள்ளப்பட்
டிருந்தாலும்—தென் ஆசியாவெங்கும் பரவியிருக்கும். இவ்
வாறு இந்தியர், பர்மியர், இலங்கையினர், பாகிஸ்தானி
களின் சுதந்திரப் பேரார்வத்தைப் பார்த்தவர்கள் கூறுகின்
றனர்.

நேரு, ஊ நூ போன்ற ஆசியத் தலைவர்களிடம் இந்த
அபிப்பிராயத்தைப்பற்றி நான் பேசியிருக்கின்றேன். பிரிட்டி
ஷாருடன் ஒத்துப்போவதற்கு அவர்கள் செய்த சாத்விகம்
தோல்வியுற்றிருந்தால், பலாத்கார வேகமுள்ளவர்கள் தங்
கள் முயற்சிகளை அப்பால் தள்ளிவிட்டு, வெற்றி பெற்றிருப்
பார்கள் என்றே அவர்கள் திடமாக நம்புகின்றனர்.

❋

அத்தியாயம் - 23.

# ஆஃபிரிக்கா விழித்தெழுகிறது

ஆஃபிரிக்கப் பிரதி
**பா**ண்டுங் மகாநாட்டுக்கு வந்திருந்த ஆசியப் பிரதிநிதிகளைப்
நிதிகளுக்கு அங்கு கூடியிருந்த பிரச்னைகளுக்கு சமா
போலவே, தங்களது அசாத்யமான என்கிற திடநம்
தான முறையில் முடிவு கண்டுவிடலாம்
பிக்கை இல்லை

ஒருவரான ஆடம்
நமது காங்கிரஸ் உறுப்பினர்களில் என்பவர் பாண்
கிளேய்டன் பவ்வல் (Adam Clayton Powell) போயிருந்தார். "இனி
டுங் மகாநாட்டுப் பார்வையாளராகப் எங்களுக்குத் துப்பாக்கி
நாங்கள் பொறுத்திருக்க முடியாது. அவைகளை இப்
கள் தருவதாகச் சிலர் கூறுகின்றனர். தற்கால சரித்திரத்
பொழுது நாங்கள் ஏற்றுக்கொண்டால், மக்கள் கொல்லப்படு
தில் யாரும் கண்டிராத அளவுக்கு நீக்ரோ பிரதிநிதி
வார்கள்." இவ்வாறு ஒரு தென் ஆஃபிரிக்க
அவரிடம் கூறினராம்.

என்பவர் தென்
மோஸஸ் கோடேன் (Moses Kotane) சேர்ந்தவர். இதுவரை
ஆஃபிரிக்கா ஜோஹான்ஸ்பர்க்கைச் வந்திருக்கும் ஆஃபி
காந்தியின் அஹிம்சை வழியைப் பின்பற்றி அவர் மகாநாட்
ரிக்க நேஷனல் காங்கிரசின் பிரதிநிதியாக கொண்டிருக்கிறோம்.
டிற்கு வந்திருந்தார். "நாங்கள் மூழ்கிக் துரும்பைக்கொண்டு
எங்களுக்கு எது கிடைத்தாலும் அந்தத் அவர் கேட்போர்
கரைசேர முயற்சிப்போம்." இவ்வாறு செய்தார்.
அச்சமடையும் வகையில் எச்சரிக்கை தங்களுக்கு அநு

நீக்ரோ பிரதிநிதிகள் பாண்டுங்கில் அடைந்து வந்தனர்.
தாபமும் ஆதரவும் தேடி அவைகளை தனது நிற
இதே சமயத்தில் தென் ஆஃபிரிக்க அரசாங்கம் வந்தது.
வேற்றுமைத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு ஜோஹான்ஸ்பர்க்
இதன் முதல் அம்சமாக ஆயிரக்கணக்கான நகரத்திற்கு
ஆஃபிரிக்கர்கள், வெள்ளையர்கள் வசிக்கும் வாழும்படி
பன்னிரண்டு மைல்களுக்கப்பாலுள்ள சேரிகளில்
அப்புறப்படுத்தப்பட்டனர்.

தென் ஆஃபிரிக்கச் சட்
ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள அவைகளின்படி, எந்த
டங்களே கொடுமை வாய்ந்தவை. தொடர்பு கொள்ளக்
ஆஃபிரிக்கனும் வெள்ளையர்களுடன் வெள்ளையரல்லா
காரணமாயுள்ள தொழில் புரியலாகாது.

தார் வசிப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் தவிரப் பிற
இடங்களில் அவன் தொழில் புரியலாகாது. எந்த ஆஃப்ரிக்க
னும், தனது மாகாணத்தைவிட்டு வெளியே செல்லலாகாது.
பொறுப்பு வாய்ந்த பதவிகளிலோ, தேர்ச்சி தேவையான
தொழில்களிலோ, எந்த ஆஃப்ரிக்கர்களையும், வெள்ளையன்
வேலையில் வைக்கலாகாது; இம்மாதிரித் தடைகள், காட்டி
லிருந்து வந்த புராதனக் குடிமக்களுக்கு மட்டுமல்ல, பிரிட்
டனில் பயிற்சிபெற்ற ஆஃப்ரிக்க டாக்டர் விஷயத்திலும்
அமுல் நடத்தப்படும்.

உலகத்தின் மற்றொரு பாகத்தில் பாண்டுங்கில் 1955
ஏப்ரலில் பிரதிநிதிகள் கூடியிருக்கையில், தென் ஆஃப்ரிக்க
பாண்டு கல்விச்சட்டம் (South African Bantu Education Act)
அமுல் ஆரம்பமாயிற்று. கிறிஸ்தவ மதத்தினரால் நடத்தப்
பட்ட பள்ளிகளே முன்பு பெரிதும் ஆஃப்ரிக்கருக்குக் கல்வி
யளிக்கும் பணியை நிறைவேற்றி வந்தன. இப் புதிய சட்
டப்படி இந்தப் பணியை சர்க்காரே ஏற்று நடத்த திட்ட
மிட்டிருந்தது. முன்பு வழங்கப்பட்ட கலையம்சம் வாய்ந்த
கல்விக்குப் பதிலாக சாமானிய தொழில் திறனும், பாண்டு
கலாசாரமும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்படும். இம் மாதிரி
தடைகள் விதிப்பதன் நோக்கம் ஆஃப்ரிக்கர் ஆரம்பக் கல்
விக்குமேல் அதிகம் தெரிந்து கொள்ளக் கூடாது என்பது
தான்.

கல்வி போதனையோ அல்லது ஒருவித அபிப்பிராயமோ
அரசாங்கத்தைக் கவிழ்க்கக்கூடிய தன்மை வாய்ந்தது என்று
சுதேசிகள் விவகார மந்திரிக்குத் தோன்றுமானால் அது குற்ற
மாகும். அப்படி தண்டனை விதிக்கப்பட்டால், அப்பீல்
செய்யக் குற்றவாளிக்கு உரிமை உண்டு. கிறிஸ்தவ மதத்தினர்
பள்ளிக்கூடம் வைக்கலாகாது எனத் தென் ஆஃப்ரிக்கா அர
சாங்கம் தடை விதித்திருக்கிறது. மார்க்ஸின் டாஸ் காபிடல்
(Das Kapital) என்கிற நூலைவிடப் பைபிள் தங்களது நோக்கம்
ஈடேறுவதற்குப் பெருந் தடையாயிருக்கும் என்றுதான்
போலும் இம்மாதிரித் தடை விதித்திருக்கின்றனர்.

தென் ஆஃப்ரிக்காவில் இம்மாதிரி அபாயகரமான சூச
கங்கள் தோன்றி வருவதை பாண்டுங்கில் கூடியவர்கள் அறி
வார்கள். தென் ஆஃப்ரிக்க மாஜி பிரதமர் மலானைவிட அவ
ருக்குப் பின் பதவிக்கு வந்த ஸ்ட்ரீடாம் (Strydom) இன
வேற்றுமை விஷயத்தில் இருமடங்கு தீவிரமாயிருக்கிறார்
என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகையால், தென்
ஆஃப்ரிக்கா பற்றிய தீர்மானத்தை அவர்கள் ஏகமனதாக
நிறைவேற்றினர். அந்தத் தீர்மானம் அவர்கள் கருத்தைப்
பட்டவர்த்தனமாக வெளியிட்டது. "தென் ஆஃப்ரிக்காவில்
நடக்கும் நிகழ்ச்சிகள் மனித உரிமைகளை முற்றும் மறுப்ப



தாகும். அது மட்டமல்ல. நாகரிகத்திற்கு நிலையாக உள்ள
மதிப்பையும் மனித கண்ணியத்தையும் மறுப்பதாகும்."
இவ்வாறு அந்தத் தீர்மானம் அமைந்திருந்தது.

சீர்தூக்கிப் பார்த்தால், தென் ஆஃப்ரிக்கப் பிரச்னையை
காலனி ஆட்சி எதிர்ப்பின் ஒரு பகுதியாகக் கருத முடியாது
தான். ஏனெனில் அது அந்நிய ஆட்சி எதிர்ப்பு அல்ல.
பிரஜைகளிடையே பாரபட்சம் காட்டும் ஸ்தல ஆட்சியின
ருக்கு எதிரிடையான செயல்தான். முன்பு குடியேறிய சிறு
பான்மை வெள்ளையர்களின் இந்த ஆட்சி, காலனி ஆதிக்கத்
தின் தீமை வாய்ந்த ஸ்வரூபம் என ஆசியர்களும், ஆஃப்ரிக்கர்
களும் கருதுகின்றனர். உலகத்தில் இன்னும் முடிவு பெறாத
காலனி ஆட்சிப் பிரச்னைகள் பலாத்கார முறையில் தீர்க்கப்
படுமா அல்லது சாத்விக வழியில் பைசல் செய்யப்படுமா என்
பதைத் தென் ஆஃப்ரிக்கா சம்பவங்கள் விசேஷமாகப்
பாதிக்கும்.

அரை நூற்றாண்டுக்கு முன் எப்படி மகாத்மா தென்
ஆஃப்ரிக்க மண்ணில் தமது சத்தியாக்கிரகத்தைக் கண்டுபிடித்
தாரோ அவ்வாறே அவருடைய மகன் மணிலால் (இவர் இப்
போது இறந்துவிட்டார்) அங்கு சாத்விகப் போராட்டம்
நடக்க உதவி புரிந்தார். இதுவரையில் போலீஸ் மிருகத்
தனத்தினால் துரதிருஷ்டவசமாக காந்திய முறை எதிர்ப்பு
ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறது. வேறு வழியின்றித் தென்
ஆஃப்ரிக்கர்கள் இம்மாதிரி சாத்விக வழியைக் கைவிட நேரிட்
டால், அந்நாடு பூராவும் பலாத்காரத் தீ பரவிப் பற்றி எரி
யும். ஆஃப்ரிக்காவில் இன்னும் நம்பிக்கை இழக்காத நிதானம்
வாய்ந்தவர்கள் மிகவும் பலமிழந்து போவார்கள்.

தென் ஆஃப்ரிக்க அரசாங்கத்தை எதிர்த்து விடுதலைப்
போர் தொடுப்பதாகக்கூட மேற்கு ஆஃப்ரிக்க மாணவர்கள்
பேசிக்கொள்ளுகிறார்கள். ஆஃப்ரிக்காவிலும் இந்தியாவிலும்
நான் பல ஆஃப்ரிக்க இளைஞர்களைச் சந்தித்தேன். "தென்
ஆஃப்ரிக்காவில் இம்மாதிரி மிருகத்தனம் நிகழ்வதை நாங்கள்
கைகட்டிக்கொண்டு பார்த்திருக்க முடியாது." இவ்வாறு
அவர்கள் கவலை தோய்ந்த முகத்துடன் என்னிடம் கூறி
னார்கள்.

* * * *

ஆஃப்ரிக்காவில் ஐம்பது லட்சம் வெள்ளையர்கள்தான்
வசிக்கின்றனர். தென் ஆஃப்ரிக்காவில் இருபது லட்சம் வெள்
ளையர்களும், 100 லட்சம் ஆஃப்ரிக்கர்களும் இருக்கின்றனர்.
இந்த வெள்ளையர்களுக்குள்ளே டச்சுக்காரர்களுக்கும், பிற
வெள்ளையர்களுக்கும் வித்தியாசங்கள் பெருகிவருகின்றன.
டச்சுப் பிரிவினரான ஆஃப்ரிகாண்டர்கள் என்பவர்கள்

(Afrikanders) படிப்படியாக சர்வாதிகாரத்தை நோக்கி
முனைந்துசெல்லுகின்றனர். இவர்கள்பிரிட்டிஷார் ஆஃபிரிக்கர்
ஆசியர்கள் யாவரையும் அவமதிக்கத் தயங்குவதில்லை.
ஆஃபிரிக்காவின் வடகோடியில் ஃபிரஞ்சு வட ஆஃபிரிக்கா
இருக்கிறது. அங்கு இருபது லட்சத்திற்கு மேற்பட்ட ஐரோப்
பியர் இருக்கின்றனர். 220 லட்சத்திற்கு மேற்பட்ட அராபிய-
பெர்பர் (Berber) மக்கள் வாழ்கின்றனர். இவர்களிடையே
நிலை பொங்கி வருகின்றது. இந்தோ சீனாவின் நிலையை
தினையூட்டும் அஞ்சத்தக்க வகையில் இருக்கிறது நாட்டு
மக்களுடைய அதிருப்தி இதை ஃபிரஞ்சு காலனி ஆட்சியினர்
சமாளிக்க வேண்டியிருக்கிறது.
இதைத் தீர்ப்பதற்கு 1954 ஆம் ஆண்டு கோடை காலத்
தில் அக்கால ஃபிரஞ்சு பிரதமர் மெண்டஸ் ஃபிரான்ஸ் தீவிர
முயற்சி செய்தார். அவர் முயற்சியின் பயனாக அவ
ருக்கு அடுத்தபடி பதவிக்கு வந்தவர் வசந்த காலத்தில்
ஒரு உடன்பாடு செய்து கொண்டார். டியூனிஷ்யாவுக்கு
உள்நாட்டு ஆட்சி உரிமை அளிக்கப்பட்டது. டியூனிஷ்யா
வின் தேசியப் புது டெஸ்டோர் கட்சி (Neo Destour Party)
யின் சக்தியையும் நிதானப்போக்கையும் பாராட்ட வேண்
டும் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டதற்கு. இந்தக் கட்சியின் தலை
வர் ஹபீப் போர்குப்யா (Habib Bourguiba) காந்தியப்
போராட்ட முறையை அந்நாட்டு மக்கள் பின்பற்ற வேண்டு
மென வற்புறுத்தி வந்தார். அவர் நாடு கடத்தப்பட்டு
வாழ்ந்ததனால் ஆட்சியினரிடம் வெறுப்புக்கொள்ளவில்லை.
இவர்தான் ஃபிரஞ்சுப் பிரதமர் ஃபாரே (Faure)யிடம் பேசி
இந்த உடன்பாடு ஏற்படுத்தியவர்.
நெடுநாளாக ஒத்திப்போடப்பட்டு வந்த இந்த உடன்
பாடு ஏற்பட்டு வருகையில், டியூனிஷ்யாவில் நினைத்தவாறு
பயங்கர நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. மேலும் ஃபிரஞ்சுக்
குடியேற்ற மக்களும் அராபிய தீவிர தேசியவாதிகளும்,
இந்த ஏற்பாட்டை எதிர்த்து வந்தனர். பாண்டுங் மகாநாடு
நடந்த வாரத்தில்தான், இந்த உடன்பாட்டைப் புதிய அர
சாங்கம் பிரகடனம் செய்தது. அதே சமயத்தில் டியூனிஷ்
யாவிலிருந்த ஃபிரஞ்சுக்காரர்கள் கூடி, இந்த உடன்பாடு
செல்லாது எனத் தீர்மானம் செய்தனர்.
''நிர்வாகத்திலுள்ள ஃபிரஞ்சு மக்கள் டியூனிஷ்யாவை
ஃபிரான்ஸ் கைநழுவி விடுவதற்கு நாங்கள் விடமாட்டோம்.
ஃபிரஞ்சு டியூனிஷ்ய சமூகம் விரைவில் சர்வநாசம் அடைவ
தற்கும் நாங்கள் இணங்க மாட்டோம்.'' இவ்வாறு அவர்
கள் அறிவித்தனர். ''எல்லா வகைகளிலும் உறுதியாக
இந்த முயற்சியை எதிர்க்க முடிவு செய்துள்ளோம். இப்படி
போராடுவதன் மூலம் ஃபிரஞ்சு ஆட்சியின் அமைதியை



டியூனிஷ்யா நீடித்து அநுபவிப்பதற்கு உதவுவோம்.'' இவ்
வாறு அவர்கள் அழுத்தம் திருத்தமாகப் பிரகடனம் செய்தனர்.
பழைய டெஸ்டோர் கட்சி இதே கடுமையுடன் உடன்
பாட்டைத் தீவிரமாக எதிர்த்தது. இந்தக் கட்சியினர் நீண்ட
காலமாக ஃபிரஞ்சுக்காரர்களுடன் எவ்வித உடன்பாடு செய்து
கொள்வதையும் எதிர்த்து வந்திருக்கின்றனர். போர்க்குப்
யாவின் புதிய டெஸ்டோர் கட்சியில் ஒரு பகுதியும், நாடு
கடத்தப்பட்ட பொதுக்காரியதரிசி ஸலா பென் யூஸுஃப்
(Salah Ben Youssef)பின் தலைமையில் டெஸ்டோர் கட்சியை
ஆதரித்தது.
பாரிஸ் நகரில் இந்த உடன்பாடு அறிவிக்கப்பட்ட அதே
நாளில், பாண்டுங்கில் இந்த யுஸுஃப் ஃபிரஞ்சுக்கொள்கையை
''சித்திரவதை,'' ''கொலை,'' என்று கண்டித்து வந்தார்.
வட ஆஃபிரிக்கா சம்பந்தமான ஐ நா. தீர்மானத்தை அமெ
ரிக்கா ஆதரிக்கவில்லை. டியூனிஷ்யாவை ரஷ்யா ஆதரித்த
தற்காக, அந்நாட்டைப் பாராட்டினார். டியூனிஷியாவின்
ஒரே லட்சியம் பூரண சுதந்திரம் என்று முழங்கினார்.
எனினும் தேசப் பிரஷ்டனாக வாழ்ந்துவிட்டுத் திரும்பு
கையில், போர்க்குப்யாவை மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்
றனர். நாட்டின் தந்தை எனப் போற்றிப் புகழ்ந்தனர்.
டியூனிஸ்ஸின் கிழ அரசன் நாடகப் பாணியில் தனது சிம்மா
சனத்திலிருந்து எழுந்து, ''மகனே வா, அருமைக் குழந்தையே
வா'' என்று ஆர்ப்பாட்டமாக வரவேற்றான்.
''உள்நாட்டு ஆட்சி உரிமை பூரண சுதந்திரத்திற்கு
முதற்படி தான். நிதானப் போக்கும் பொறுமையும் இலட்சிய
சித்தியடைவதற்கு அவசியம் தேவை. புதிதாக நாம் சுதந்
திரம் பெற்றதனால் நமக்குப் புதிய பல பொறுப்புகள் ஏற்
பட்டிருக்கின்றன. இனி வெறுப்புக்கிடம் அளிக்காமல் ஜாச
கிரதையாயிருங்கள். டியூனிஷ்ய மக்கள் யாவரும் சகோத
ரர்கள். முஸ்லிம்களும், யூதர்களும் சமம் என்று கருத
வேண்டும். இவ்வாறு தன்னை வரவேற்ற மக்களுக்கு போர்க்
குப்யா போதனை செய்தார்.
போராட்டம் முடிந்ததும் பிரிட்டிஷாரிடம் இந்தியர்
நேசபாவத்துடன் பழகிய மாதிரி தமது நாட்டு மக்களும்,
ஃபிரஞ்சுக்காரரிடம் பழக வேண்டும் என இவர் வற்புறுத்தி
னார். ''நம் நாட்டிற்கு வந்திருப்பவர்கள் யாவருக்கும் மதிப்
பும்; மரியாதையும் அளிக்கவேண்டும். விருந்தாளிகளை உப
சரிப்பது நம் நாட்டு சம்பிரதாயம்'' என உயர்ந்த முறை
யில் மக்களுக்கு போதனை செய்தார்.
எதிரிகளைக் கொல்லும் வேகம் வட ஆஃபிரிக்கா, அல்ஜீ
ரியா, குறிப்பாக மோராக்கோ முதலியவிடங்களில் பரவி
வருகிறது. இது மக்கள் படுகொலை அளவுக்கு வளருமுன்,

இந்த வேகத்தைத் தணிப்பதற்கு ஏதாவது செய்யப்படுமா
என்பதை யாரும் அறியார். ஆனால் அங்கு பலாத்காரமாக
உயிர் வாங்குவது அடிக்கடி நிகழ்ந்து வருவதனால், ''கால
தாமதமின்றி சமாதானமாகச் சண்டை தீர்வதற்கு ஃபிரஞ்சு
அரசாங்கம் வழி காண வேண்டும்'' என்ற பாண்டுங் தீர்மா
னத்திற்கு அவசியமிருக்கிறது என்றே தோன்றுகிறது.

இம்மாதிரி கொந்தளிப்பான நிலை ஆஃப்பிரிக்காவின் வட
கோடியிலும் தென் மூலையிலும் நிலவி வருகிறது. ஆஃப்பிரிக்கா
கண்டத்தின் இவ்விரு எல்லைகளுக்கு நடுவில் அமெரிக்காவை
விட இரு மடங்கு விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பு இருக்கிறது.
இங்கே ஐந்து லட்சம் வெள்ளையர் தானிருக்கின்றனர். அமெ
ரிக்காவில் ரோடு தீவில், பிராவிடென்ஸி (Providence) லுள்ள
வெள்ளையர்களை விடக் குறைவானவர்களே இங்கு வாழ்கின்
றனர். ஆனால் ஆஃப்பிரிக்கர்கள் எண்ணிக்கை பதினாறு கோடி.
இந்தப் பகுதி பொருள்வளம் மிகுந்தது. இங்கு பல்வேறு
காலனி ஆட்சி முறைகளைக் காணலாம். இவைகளிற் சில மூர்த்
தன்யமான முறையில் நடக்கின்றன, சில சக்தியிழந்திருக்
கின்றன.

பல ஜாதியினர் அடங்கிய லைபீரியா (Liberia), எதியோ
பியா (Ethiopia), எகிப்து (Egypt), லிபியா (Libya) போன்ற
நாடுகள் மேற்கூறப்பட்ட காலனி ஆட்சி நாடுகளுக்கு
மாறான முறையில் அமைந்துள்ளன. பிறவிடங்கள் மாதிரியே
இங்கும் தீர்க்கவேண்டிய பல பிச்சினைகள் இருக்கின்றன.
ஆனால் இங்கே நிகழும் தவறுகள், தாமதங்களுக்கு பொல்
வாத காலனி ஆட்கி அதிகாரிதான் காரணம் என்று குறை
கூறுவதற்கில்லை.

அடுத்த சில ஆண்டுகளில் இந்தச் சுதந்திர நாடுகள்
குழாத்தில் முன்பு பிரிட்டிஷ் காலனிகளாயிருந்த மூன்று நாடு
கள் சேரும். சூடான் (Sudan), கோல்டு கோஸ்ட், நைஜீரியா
இவை சுதந்திரம் அடையும் தறுவாயிலிருக்கின்றன. ஸோமா
லிலாந்து (Somaliland) மீது இத்தாலி நடத்திவரும் தர்ம
கர்த்தா ஆட்சி 1960-இல் முடிவடையும்.

ஃபிரஞ்சுஆட்சியில் உள்ள மேற்கு, பூமத்ய ரேகை ஆஃபி
ரிக்காவும், பெல்ஜிய ஆதிக்கத்திலுள்ள காங்கோவும் சேர்ந்து
அமெரிக்காவைவிடப் பெரிய நிலப்பரப்பு உள்ளவை. இங்கே
எல்லா அரசியல் முன்னேற்றமும் மந்தகதியில்தான் இருக்
கின்றது. கிழக்குப் பகுதியிலுள்ள மொசாம்பிக் (Mozam-
bique) கும், மேற்கேயுள்ள அங்கோலா (Angola)வும்
போர்ச்சுகல் வசமுள்ளன. போர்ச்சுகீயர் தான் இங்கே
முதலில் இடம் பிடித்தவர்கள். ஆனால் தங்கள் ஆதிக்கத்தை
பிற நாடுகள் வெளியேறிய பிறகே கைவிடுவோம் என
இவர்கள் நம்பிக்கையுடன் சாதிக்கின்றனர்.



கடைசியாக, பிரிட்டிஷ் ஆஃப்பிரிக்கா இருக்கின்றது. பிரிட்
டிஷ் மேற்கு ஆஃப்பிரிக்காவில் ஐரோப்பியர்களுக்கும் ஆஃப்பிரிக்
கருக்கும் எவ்வித போட்டியும் இல்லை. நிலைமை இங்கு மிக
வும் திருப்தியளிப்பதா யிருக்கிறது. இந்தப் பகுதி மிகுந்த
பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது. இங்கே வெப்பம் மிகுந்த
நாடுகளில் மிகுதியாகக் காணப்படும் பல கொடிய நோய்கள்
இருந்தன. பல தலைமுறைகளுக்கு முன்னால் இந்தப்
பகுதியை ''வெள்ளையனின் சுடுகாடு'' என்று கார
ணப் பெயரிட்டு அழைத்தனர். பொன்னைக் கொண்டும்,
அடிமைகள் வாங்கி விற்றும், கொள்ளை லாபம் பெறவே
ஐரோப்பியர் வெகுவாக இந்தவிடத்தை நாடி வந்தனர்:
இந்த நிலையில் இங்குள்ள மக்களை கிறிஸ்தவர்களாக்கவும் வந்
தனர் என்பது சற்று விசித்திரமாகத்தானிருக்கிறது. இம்
மாதிரிச் சூழ்நிலையின் விளைவாகப் பிரத்தியேகச் சலுகைகள்
கோருவதற்கு பிரிட்டிஷ் குடி மக்கள் இங்கில்லை.

பிரிட்டிஷாருக்கு என்றுமே ஆட்சி புரிவதில் அசாத்யத்
திறன் உண்டு. அவர்கள் எப்பொழுதுமே சங்கடங்களைச்
சமாளிப்பதற்குச் சளைத்ததில்லை. இந்த விசேஷ ஆற்றல்களி
னால் பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கு ஆஃப்பிரிக்கக் காலனிகளை
விடுவிப்பதற்கான முறை வகுப்பதில் இப்போது முனைந்திருக்
கின்றனர். இதற்கு ஒரு உதாரணம் கூறலாம். 1955 மாரிக்
காலத்தில் நான் இரண்டு நாட்கள் ஜார்ஜ் சிங்க்ளேர்
(George Sinclair) என்பவருடன் கழித்தேன். இவர்
டோகோலாந்து (Togoland) க்கு ஐ.நா. தர்மகர்த்தா
ஆட்சியில் பிரிட்டிஷ் பிராந்திய அதிகாரி.

''நான் ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்திருக்கிறேன்:
அந்தக் கிளையை தினம் கொஞ்சமாக அறுத்துக்கொண்டிருப்
பது என் வேலை. கடைசியாக நான் முழுதும் அந்தக்
கிளையை அறுத்துவிட்டால், துண்டாக விழுந்துவிடும் அது:
அதை என் ஆஃப்பிரிக்கா சகா எடுத்துக்கொள்வான். அப்
புறம் எனக்கு வேலை இருக்காது.''—இவ்வாறு அவர் உற்சா
கத்துடன் என்னிடம் கூறினார்.

கோல்டுகோஸ்டிலும், நைஜீரியாவிலும் அரசாங்க
இலாகா தலைவர்கள் யாவரும் ஆஃப்பிரிக்கர். அங்கே பிரிட்டி
ஷார், ஆஃப்பிரிக்கர் இரு பகுதியினரும் சேர்ந்த அரசாங்க
நிர்வாகக் கூட்டமைப்பு இருக்கிறது. கோல்டு கோஸ்டில்
குவாமே நிக்ருமா (Kwame NKrumah) என்பவர் பிரதம
மந்திரி. இவர் பென்சில்வேனியாவிலுள்ள லிங்கன் (Lincoln)
பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். இவர் அநேக
ஆண்டுகள் அமெரிக்க தொழிலாளர் சங்கத்தில் அங்கத்
தினராயிருந்திருக்கிறார். இன்னும் இரண்டு ஆண்டுகளில்
தனது நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்துவிடும் என இவர்

நம்பிக்கையுடன் என்னிடம் 1955 ஜனவரி ஆரம்பத்தில் கூறி
னார். இன்னும் சற்று நிதானமாக நைஜிரியாவும் சுதந்திரம்
பெறும் தறுவாயிலிருக்கிறது.

இவ்விரண்டு நாடுகளிலும் சுதந்திரத்திற்குத் தடையா
யிருப்பது பிரிட்டிஷ் விடாக்கண்டர்களின் எதிர்ப்பல்ல.
மேற்கத்தி நாகரிக வசப்பட்ட ஆஃபிரிக்க அறிவாளிகளுக்
கும், ஆதிக் குடிமக்கள் தலைவர்களுக்கும் உள்ள வித்தியாசங்
களும், சுதேசிகளின் பிராந்திய அபிப்பிராய பேதங்களும்
தான். ஆனால் பிரிட்டிஷார் இந்த நாடுகளுக்கு சுதந்திர
மளிக்க விரும்புகின்றனர் என்பதை விஷயமறிந்த ஆஃபிரிக்
கர்கள் அவ்வளவாக சந்தேகிப்பதில்லை என்பது கேட்பதற்கு
ஆறுதலாயிருக்கிறது.

பிரிட்டிஷ் கிழக்கு ஆஃபிரிக்காவில் நிலைமை முற்றிலும்
மாறாயிருக்கிறது. இந்தப் பிராந்தியம் பல நூறு மைல்
களுக்கு பூமத்திய ரேகைக்கு இருபுறத்திலும் அமைந்து இருக்
கிறது. ஆனால் இந்த நிலப்பரப்பில் பெரும்பகுதி மேடிட்
டிருக்கிறது. சீதோஷ்ண நிலையும் ஆண்டு பூராவும் இதமா
கவே இருக்கிறது.

இந்தச் சிறப்பான சீதோஷ்ண நிலையின் விளைவாக இந்த
நாட்டில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஐரோப்பியர்
குடியேறுகிறார்கள். முதலில் வந்தவர்களுக்கு அடுத்த
தலைமுறையினர் இங்கே ஸ்திரமாகத் தங்கிவிட்டனர். கவர்ச்சி
கரமான, செல்வமிக்க இந்த நாட்டில் அவர்கள் மூலதனம்
முடங்கியிருப்பதனால் அவர்கள் இதைவிட்டு வெளியேற முடி
யாது. ஒரு சிலர் தவிர மற்றவர்கள் என்ன கஷ்டம் நேர்ந்
தாலும் சரி, தங்களுக்குள்ள சௌகரியமான செல்வ நிலையை
யும் அரசியல் அந்தஸ்தையும் பாதுகாத்துக்கொள்ளத்
தயாராயிருக்கின்றனர்.

தெற்கு ரொடீஷியாவில் (Rhodesia) ஐந்து கோடி ஏக்கர்
செழிப்பான நிலம் இருக்கிறது. இந்த நிலம் 25 ஆயிரம்
ஐரோப்பியரின் உடைமையாயிருக்கிறது. ஆனால் இந்த
நிலத்தில் பத்து சதம்தான் உழுது பயிரிடப்படுகிறது என்று
கேள்விப்பட்டேன். பாக்கியுள்ள மூன்று கோடி சொச்சம்
ஏக்கர் நிலம் மணற்பாங்காகவும் பயிரிட முடியாததாகவும்
இருக்கின்றன. இவைகளைக் கிராமங்களில் வாழும் பத்து லட்
சத்திற்கு மேற்பட்ட ஆஃபிரிக்கர்களுக்கு அளித்திருக்கின்ற
னர். ''இங்கு முதலில் வெள்ளையன் வருகையில் அவனிடம்
பைபிளும், நம்மிடம் நிலமும் இருந்தது. ஆனால் இப்
பொழுது நம்மிடம் பைபிளும் அவனிடம் நிலமும் இருக்
கிறது.'' இந்த ஆஃபிரிக்கப் பழமொழி இங்கு நிலவுகிறது.

இதனால் இங்கு நிலைமை கொந்தளிப்பாகவே இருந்து
வருகிறது. மணற்பாங்கான சிறிதளவு நிலம் உள்ள ஆஃபி



ரிக்கக் குடியானவன் ஐரோப்பியன் வசம் ஏராளமான,
செம்மண் படிந்த வளமான நிலம் இருப்பதைப் பார்க்கிறான்:
'' என் தோல் கறுப்பு, அவன் தோல் வெளுப்பு, அதனால்தான்
இந்தத் தாரதம்மியம்'' என்று கறுப்பு மனிதன் மனம் நொந்து
கொள்வது இயல்பே. இம்மாதிரிதான் சுரங்கத் தொழி
லிலும் நிலைமை இருக்கிறது. வடரொடீஷியா தாமரச் சுரங்
கங்களில் ஐரோப்பியனுடைய சம்பளத்தில் இருபதில் ஒரு பங்
குக்கும் குறைவாகவே ஆஃபிரிக்கத் தொழிலாளிக்குக் கொடுக்
கப்படுகிறது. இந்நிலைக்குக் காரணம் வெள்ளையர் நிறத்தில்
உயர்ந்தவர் என்கிற கொள்கையே என நீக்ரோ கருதுகிறான்.

1955-இல் கெனியாவில் எங்கும் பலாத்கார உணர்ச்சியும்
வெறுப்புமே நிலவியிருந்ததைக் கண்டோம். இதற்கு மூன்று
ஆண்டுகளுக்கு முன் கிகியூ (Kikuyu) எனும் கணிசமான சிறு
பான்மையினர் தங்களைவிடக் குறைவான புராதனக் குடிமக்க
ளுடன் சேர்ந்துகொண்டனர். இப்படிச் சேர்ந்தவர்கள் தலை
மறைவாக வேலை செய்யும் மாவ் மாவ் (Mau Mau) வினர்
தலைமையில் கொடூரமான முறையில் கலகம் செய்தனர்.
இதன் விளைவாகத் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக்
கொண்டே நாற்பதினாயிரம் ஐரோப்பியர்களும், நூற்றிருப
தாயிரம் ஆசியர்களும் ஐம்பது லட்சம் ஆஃபிரிக்கர்
களிடையே வசித்து வருகின்றனர்.

மாவ் மாவ் நாட்டின் மத்தியில், நைரோபிக்கு 95
மைலுக்கப்பாலுள்ள நயேறி (Nyeri) எனும் நகரில் ஒரு
ஞாயிறு பிற்பகலில் அதிசயக் காட்சி ஒன்று கண்டேன்.
அருகாமையிலிருந்த உணவு விடுதி மதுபானக் கடையிலிருந்து
ஐரோப்பியர்கள் கைத்துப்பாக்கிகளும், துப்பாக்கிகளும்
தாங்கி உள்ளிருந்து வெளியிலும், வெளியிலிருந்து உள்ளேயும்
போய்க்கொண்டிருந்ததைக் கண்டோம். இவர்களில் 75
வயதடைந்த தம்பதிகள் இருவர். அந்தக் கிழவனார்
கைத்துப்பாக்கியும், அவரது மனைவி சுழல் துப்பாக்கியும்
தாங்கியிருந்தனர்.

விழித்திருக்கையிலும், தூங்குகையிலும் தங்கள் வசமோ
அல்லது கைக்கெட்டிய தூரத்திலோ ஒரு துப்பாக்கி வைத்
திருப்பதை ஐரோப்பியக் குடிமக்கள் பழக்கமாக வைத்துக்
கொண்டனர். இருபது ஆண்டுகளுக்கு விசுவாசமாகப் பணி
புரிந்த ஆஃபிரிக்கர்கள் தங்கள் யஜமானர்களின் குடும்பங்
களையே, பயங்கரப் படைகளுக்குத் துணை புரிந்து பூண்டோடு
அழித்துவிட்டதாகப் பல பயங்கரச் செய்திகள் வெளி வந்
தன. இம்மாதிரி கொலை புரிவதாக இவர்கள் மாவ் மாவ்
கட்சியினரிடம் சபதம் செய்துகொண்டனராம்.

மாவ் மாவ் இயக்கம் என்பது பிற்போக்குச் சக்திகளின்
பேயாட்டம் என்று கூறலாம். 1955-இல் இந்தக் கூட்டத்

தினரின் சக்தி பிசுபிசுத்து வருவதாகத் தோன்றிற்று. இதற்குக் காரணம் அத்தியாவசியச் சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்பதல்ல. மாவ் மாவினரின் அளவுக்கு மீறிய கொடுமைகளால் அவர்களைச் சேர்ந்தவர்களே அதிர்ச்சியடைந்துவிட்டனர் என்பதுதான்.

ஆனால் முக்கியமாகத் தீர்க்கப்படவேண்டிய பிரச்னை முடிவு பெறாமலேயே இருந்தது. இங்கு மட்டுமல்ல, உலகத்தில் புரட்சி ஏற்படவிருக்கும் இடங்களிலெல்லாம் அதிருப்திக்குக் காரணமானது நிலப்பிரச்னையேதான். கெனியாவில் செழிப்பான நிலங்கள் யாவும் ஏழாயிரம் ஐரோப்பியக் குடும்பத்தினரிடமிருக்கிறது. இந்த நிலத்தில் பெரும் பகுதி பயிரிடப்படாமல் இருக்கிறது.

''நல்ல விளைச்சல் கொடுக்கும் ஆயிரம் ஏக்கர்களை தாங்களே உழுது பயிரிடும் ஐரோப்பியர்களிடம் எங்களுக்கு விரோதமில்லை. ஆனால் செழிப்பான நிலத்தில் சிறுபகுதிகளை அவர்கள் சாகுபடி செய்துவிட்டு, நாங்கள் கற்கள் நிறைந்த சிறுபகுதி நிலத்தை வைத்துக்கொண்டு திருப்தியடைய வேண்டும் என்று கூறினால்தான், ஆட்சேபணை செய்ய வேண்டி வருகிறது. காபி, சணல்போன்ற வர்த்தகத்திற்கேற்ற பொருள்கள் நாங்கள் பயிர் செய்வதை ஐரோப்பியர் தடுக்கின்றனர். அப்படியே பயிர் செய்ய அநுமதித்தாலும் மிகக் கடுமையான நிபந்தனைகள் விதிக்கின்றனர்.'' இவ்வாறு கிகியூ ஜாதியைச் சேர்ந்த படித்த இளைஞன் ஒருவன் என்னிடம் கூறினான்.

சிரத்தையுள்ள, பெரிதும் நிதானம் வாய்ந்த, படித்த இளம் பிரமுகர்களுக்கு உதாரணமாக இந்த யுவனைக் கொள்ளலாம். காலம் கடந்து போவதற்குள் இவன் போன்றவர்களுடன் சமரசம் செய்துகொள்ள ஐரோப்பியர் முன்வருவரா? இப்படிச் செய்யத் தவறினால் இன்னும் சில ஆண்டுகளில் இவனைவிட முரட்டுத்தனமானவர்களுடன் வெள்ளையர் பேச வேண்டி வரும்.

பொதுஜன ஆரோக்கியம், குடியிருப்பு வசதி, கல்வி முதலிய துறைகளில் கிழக்கு ஆஃபிரிக்கா வெகுதும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்; கெனியாவிலும், மத்ய ஆஃபிரிக்கா சமஷ்டியிலும் பல ஜாதியினர் ஒன்ருகப் படிப்பதற்கான பல்கலைக் கழகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. ஆனால் அரசியல் அரங்கில், அபாயம் விளைவிக்கும் அளவுக்கு முன்னேற்றம் மந்தமாயிருக்கிறது. ஆனால் அரசியல் துறையில்தான் கலவரங்கள் நிகழக்கூடும் என்பது யாவரும் அறிந்ததே.

மிகத் தீவிரமான சீர்திருத்தங்களின் அவசியத்தை அதிருஷ்டவசமாக பிரிட்டிஷ் அதிகாரிகள் அறிந்திருப்பதாகத்



தெரிகிறது. ''நிலைமை இப்பொழுது ராணுவ முறையில் தீர்க்கக் கூடியதாயில்லை. வெள்ளையர், கறுப்பர் வேற்றுமை களை ராணுவத்தினர் தீர்க்க முடியாது. மாவ் மாவ் கிளப்பியுள்ள பிரச்னைகளை தோட்டாக்கள் உதவியைக் கொண்டு மட்டும் தீர்த்துவிட முடியாது.'' இவ்வாறு ஒரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி கூறினார்.

'' சீர்திருத்தம்-அதுவும் நிலையை உருத் தெரியாமல்
மாற்றக்கூடிய சீர்திருத்தம்-உடனடியாக வேண்டும். இல்லை
யேல் ஐரோப்பியன் ஒழிந்தான் என்று வைத்துக்கொள்ள சிலர்
லாம். ஆங்கிலேயர்களில் அறிவாற்றலுள்ள ஒரு தங்க
இதைத் தெளிவாக அறிந்திருக்கின்றனர். அவர்கள் பெரும்பாலோர்
ளாலியன்றதைச் செய்கின்றனர். ஆனால் வாழும் காலத்தி
இணைந்து கொடுக்க மறுக்கின்றனர். தாங்கள் ஆஃபிரிக்கா பூரா
திற்கேற்ப இவர்கள் விழிப்புறவிட்டால், கடைசியில்
வும் நம் கண்ணெதிரே நிலைகுலைந்து போவதைக் காலனி
காண்போம்.'' இவ்வாறு திறமை வாய்ந்த ஒரு
ஆட்சி அதிபர் கூறினார்.

கெனியா, உகந்தா (Uganda) டாங்கனிகா (Tanganyika)
முதலிய இடங்களில் எல்லா இனத்தாருக்கும் பயன்படக்கூடிய
நிலச்சீர்திருத்தம் வழங்க வேண்டும் என 1955 ஜூன் மாதத்
தில் ஒரு பிரிட்டிஷ் ராயல் கமிஷன் துணிந்து சிபார்சு செய்
தது. காலி நிலங்களைப் பயனுள்ள முறையில் சாகுபடி செய்
பவர்களுக்கு நிற வித்தியாசம் பாராட்டாமல் குத்தகைக்குக்
கொடுக்கவேண்டும் என்று இந்தக் கமிஷன் யோசனை கூறியது;
ஆக்கமுறையில் செயல்புரிவதற்குச் சந்தர்ப்பமிருக்கையில்
வெள்ளையர்கள் தங்கள் கடுமையான எதிர்ப்பைத் தளர்த்திச்
கொள்வர் என நம்பிக் கொண்டிருக்கலாமா?

ஸஹாரா பாலைவனத்திற்குத் தெற்கே உள்ள ஃபிரெஞ்சு
ஆஃபிரிக்காவின் நிலை என்ன? பிரிட்டிஷ் மேற்கு ஆஃபிரிக்காவி
லும், ஓரளவு உகாந்தாவிலும் நிலவும் அறிவாற்றல் மிக்க
பிரிட்டிஷ் தாராளப் போக்குச்கும், பிரிட்டிஷ் கெனியாவி
லும், மத்திய ஆஃபிரிக்க பெடரேஷனிலும் நிலவும் ஆட்சிக்
கும் மத்தியில் இருக்கிறது ஃபிரஞ்சு ஆட்சி என்று கூறலாம்;
இந்தப் பரந்த நிலப்பரப்பில் நிலைமை அவ்வளவாகக் கவலை
யளிப்பதாயில்லை. ஏனெனில் இங்கே ஐரோப்பிய நிலச்சுவான்
தார்கள் மிகக் குறைவு: ஆகையினால் இந்தோ சீனாவின் சோக
நிலை போலவோ, அல்லது மொராகோ, டியூனிஷியா, அல்
ஜிரியா போன்ற போர் நிலை எழும் அளவுக்கு நெருக்கடி
மிஞ்சவில்லை.

பூமத்ய ரேகையை யொட்டிய ஆஃபிரிக்காவில் முன்னேற்றத்திற்கான முயற்சியை ஃபிரஞ்சுக்காரர் செய்யவில்லை

யென்று கூறிவிட முடியாது. கல்வி, சுய ஆட்சி, பொது ஜன
சுகாதாரம் முதலிய துறைகளில் நிலைமை படிப்படியாகச் சீர்ப்
பட்டு வருகிறது. உதாரணமாக இருபத்தி ஐந்து ஆண்டு
களுக்கு முன் ஆஃபிரிக்கர்களில் 60 சதத்தினர் அளவுக்கு மீறித்
தூங்கும் வியாதியால் பீடிக்கப்பட்டு வந்தனர் . 1955-ஆம்
ஆண்டு இந்த நோய் மூன்று சதமாகக் குறைந்துவிட்டது.

காலனிகள் ஃபிரஞ்சு நாட்டுடன் நீடித்து உறவுகொள்
ளும் வகையை அவைகளிஷ்டப்படி முடிவு செய்வதற்கான
முறையை வகுக்கலாம் என ஃபிரஞ்சு அதிகாரிகள் எதிர்பார்க்
கின்றனர். படிப்படியாக முன்னேறிக் கடைசியாக ஃபிரஞ்சு
கலாசாரத்தைக் காலனி மக்கள் பூரணமாக மேற்கொள்ள
வேண்டும் என்பதே தங்கள் கொள்கை என ஃபிரஞ்சுக்காரர்
கூறுகின்றனர். ஒரு ஆஃபிரிக்கன் ஃபிரஞ்சுக் கல்வி பெற்று,
ஃபிரஞ்சு தொழில் முறை அந்தஸ்தும் அடைந்துவிட்டால்
ஃபிரஞ்சு வெளி நாட்டிலாகாவில் அவன் முதல்தர பிரஜை
யாகிவிடுகிறான். ஆகையால் அவன் சமூகத் துறையில் சம
மாகவே நடத்தப்படுவான் என்று கூறப்படுகிறது.

" பூரண பிரஜா உரிமை " என்பது பொருளுள்ள வகை
யில் வழங்கப்படுமா என்பதுபற்றி இன்னம் சந்தேகம் இருந்து
தான் வருகிறது. இந்த ஃபிரஞ்சு கொள்கை வெற்றியடை
யும் என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. அப்படிப் பிரஜா
உரிமை அளிக்கப்பட்டால், டியூனிஷியா, மொராக்கோ, அல்
ஜீரியா, மடகாஸ்கர், பூமத்ய ரேகை, ஃபிரஞ்சு மத்திய ஆஃபி
ரிக்காவிலுள்ள ஆஃபிரிக்கர்கள், பாரிஸில் உள்ள சட்ட சபை
ஸ்தானங்களில் நாற்பது சதத்தைக் கைப்பற்றி விடுவார்கள்.
இவ்வாறு நிகழ்ந்துவிடும் என்பதை வெகு சிலரே நம்பு
வார்கள்.

* * *

பெல்ஜியன் காங்கோவில் பெல்ஜிய ஆட்சியினர் ஒரு பிரத்
தியேக விதமான காலனி நிர்வாக முறை மூலம் ஆஃபிரிக்க சமு
தாயமொன்றை உருவகப்படுத்தி வருகின்றனர். காங்கோவின்
பொருள் வளத்திற்கு எல்லையே இல்லைபோல் தோன்றுகிறது.
இந்த வளத்தை பெல்ஜிய அரசாங்கத்தார் சாதுர்யமாகவும்,
சுறுசுறுப்பாகவும் பெருக்கி வருகின்றனர். பல்வேறு தொழில்
நுணுக்கப் பயிற்சி உள்பட நகரங்களில் நாட்டு மக்கள் முன்
னேற அவர்கள் அருமையான சந்தர்ப்பங்கள் அளித்து வரு
கின்றனர். அந்நாட்டு மக்களுக்கு சிறந்த வைத்திய உதவி
யும், குடியிருப்பு வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. நக
ரப்புறங்களிலாவது நாட்டு மக்கள் பொருளாதார ஸ்திரத்
தன்மையில் நம்பிக்கை கொண்டு வாழலாம்.



ஆஃபிரிக்கன் நன்ருகப் படித்து உயர்வான வருவாயும்
பெற்றுவிட்டால், பெல்ஜியனுக்குள்ள சமூக நலன்களில் பெரு
வாரியானவை இவனுக்கும் கிடைக்கும். 1955-இல் இந்த அந்
தஸ்து வெகு சிலருக்கே அளிக்கப்பட்டது. ஆனால் கொள்கை
யளவில் யார் வேண்டுமானாலும், இந்த நிலை அடையலாம்.
ஆஃபிரிக்கனுக்கு இங்கு அதிகாரிகள் ஓட்டுரிமைஅளிக்கவில்லை.
இதனால் இனக்கிளர்ச்சி ஏற்படாமலிருப்பதற்காக 90 ஆயிரம்
பெல்ஜியர்களுக்கும் அவர்கள் ஓட்டளிக்கவில்லை.

ஆனாலும் இங்கும் குறைபாடுகள் இருக்கவே செய்கின்
றன என்பது தெளிவு. பெல்ஜியர்கள் செய்து வரும் முயற்சி
கள் பற்றி 1955-இல் நான் கூறிய அபிப்பிராயத்தைத் தான்
பிறகும் சொல்லக்கூடும். அச்சமயம் என்னைப் பேட்டிகண்ட
லியாபால்டுவில் [Leopoldville] பத்திரிகையாளர் கேட்ட
கேள்விகளுக்கு இந்தப் பதிலைத்தான் நான் கூறினேன்.

" யுத்தத்திற்கு முன் பெருவாரியான காலனி ஆட்சி
யினர் மக்களுக்கு நன்மை செய்து வந்தனர். இப்பொழுது
மக்களுக்காக செயல் புரிகிறீர்கள். இது சிறந்த முன்னேற்
றம்தான். ஆனால் அவர்களுடன் சேர்ந்து உழைக்க முன்
வரும் வரையில் அவசியமான ஆஃபிரிக்க ஒத்துழைப்பை
நீங்கள் பெற முடியுமா என்பது சந்தேகம்தான்.
"கண்ணியம், சுயமதிப்பு, கூட்டுணர்வு முதலியவற்றை
அளிக்காவிட்டால் அவர்கள் சமரஸத்திற்கு இணங்குவரா?"

எங்கும் வெளி உலக விஷயங்களில் ஆஃபிரிக்கர் தங்களுக்
குள்ள அக்கறையை வெளிக்காட்டி வருகிறார்கள். உதாரண
மாகப் படித்த ஆஃபிரிக்கர்கள் ஆசிய விஷயங்களை உன்னிப்
பாகக் கவனித்து வருகின்றனர். பாண்டுங் மகாநாடு போல்
எப்போதாவது நிகழும் சம்பவங்களைக் கவனிப்பதுடன்
அவர்கள் நின்று விடுவதில்லை.

1955 குளிர்காலத்தில் ஓர் இரவு ஆக்ராவிலுள்ள இந்தியத்
தூதர் இல்லத்தில் நாங்கள் கூடியிருந்தோம். கோல்டுகோஸ்டு
மந்திரிகளும், அவர்களது மனைவிமார்களும் அங்கு வந்திருந்த
னர். அச்சமயம் மூன்று திரைப்படங்கள் காட்டினார்கள்.
முதலாவது ஒரு டெலிவிஷன் படம். லண்டனில் ஒரு பத்தி
ரிகை நிருபர் கூட்டத்தில் மூன்று நிருபர்கள் கேட்ட கேள்வி
களுக்கு நேரு பதில் கூறுவதைப் படம் பிடித்திருந்தனர்.
"ஆஃபிரிக்க சுதந்திரப் பிரச்னையை இந்தியப் பிரதமரா
யிருந்து அடிக்கடி கிளப்புவதனால் ஆஃபிரிக்க நெருக்கடியைத்
தீர்க்க நீங்கள் உதவி புரிகிறீர்களா" என ஒரு நிருபர் கேட்
டார். "தற்போதைய நிலை நீடிக்க வேண்டும் என நீங்கள் வற்
புறுத்துவதனால் நான் வாய் புதைந்திருந்து விடமாட்டேன்.
நான் இந்தியாவின் பிரதமராயில்லாவிட்டால், இந்த

விஷயத்தில் இன்னும் வன்மையாகப் பேசியிருப்பேன்'' என்று
பளிச்சென பதில் கூறினார்.
கோல்டுகோஸ்டு மந்திரிகள் ஒருவரையொருவர் பார்த்
துக்கொண்டு புன்முறுவல் பூத்தனர். தங்களை ஆழ்ந்து ஆட்
கொண்டிருக்கும் சுய ஆட்சி ஆவலைப் புரிந்துகொண்ட ஆசியத்
தலைவர் ஒருவர் இருப்பதை நினைத்து அவர்கள் மகிழ்ந்தனர்.
மற்றுமோர் படம் காட்டப்பட்டது. இந்தோனேஷியப்
பிரதமர் ஸஸ்திரமீதோஜோ (Sastroamidjojo) டில்லி விமான
நிலையத்தில் வந்திறங்கப்போகிறார். தன்னிலையறிந்த புன்
முறுவல் பூத்த வண்ணம் நேரு அவரை வரவேற்க, முன் வந்
தார். பாண்டு வாத்தியங்கள் முழங்கின ஒரு இந்தியப் படை
ராணுவ முறையில் அவருக்கு அஞ்சலி செய்தது.
நவ இந்தியாவின் இந்தக் காட்சியைக் கண்டு படம்
பார்த்த ஆஃப்ரிக்கர் பரவசமடைந்தனர். தன்னுடைய நிலை
யில் நம்பிக்கையுடன் தனது சக்தியை உணர்ந்து இந்தியா
காணப்படுவது அவர்களைப் பெரிதும் கவர்ந்தது. ஆஃப்ரிக்கா
வின் இரண்டாவது குறிக்கோளாகிய மனித கண்ணியத்தையும்
சமத்துவத்தையும் இந்தியர் அடைந்து விட்டதை இப்படத்
தின் மூலம் கண்டனர்.
கடைசிப் படம் தாமோதர் பள்ளத்தாக்கு அணைபற்றி
யது. தாமோதர் நதி வெள்ளத்தினால் இந்தியாவின் வட
பாகத்திலுள்ள பீஹார் கிராமங்கள் வெள்ளக்காடாகி வந்தன.
ஆயிரம் ஆண்டுகளாக இது, ''துயரங்களின் பள்ளத்தாக்கு''
என்று பெயர் பெற்று விளங்கியது. படத்தில் முதல் காட்சி
தாமோதர் நதி. அடுத்த காட்சியில் அணைக்கட்டுகள் கட்டப்
பட்டு வருவதைக் காட்டினார்கள். இதன் மூலம் வெள்ளத்
தைக் கட்டுப்படுத்துவதுடன், மின்சார உற்பத்தி, நீர்ப்பாச
னம் முதலிய நலன்களும் கிட்டும் என்பதைப் படத்தின் மூலம்
நம்பிக்கை வாய்ந்த விழிப்புள்ள ஒரு என்ஜினீயர் விளக்கிக்
கூறினார். இதன் மூலம் காலனி ஆட்சி மக்கள் விரும்பும்
மூன்றாவது நலனான பொருளாதார விருத்தியும் கைகூடுகிறது.
படம் முடிந்து மீண்டும் விளக்கொளி வீசியதும் எங்கும்
ஒரே குதூகலம் நிரம்பியிருந்தது. நீண்ட தூக்கத்திற்குப்
பிறகு தூங்கியவன் விழித்துக்கொண்டு, தூக்கம்
கலைவதற்காக கண்ணை அகல விழித்துப் பார்க்கிறான். இளை
ஞன் மனிதப் பருவமடைகையில் செய்வதுபோல் ஆவலுடன்,
ஆனால் அவசரமாக காலை நீட்டிப் பார்த்துக் கொள்கிறான்.
இதன் பொருளைச் சற்று விளக்கிக் கூறினால், ஆஃப்ரிக்காவில்
கொந்தளிப்புகள் விளைவிக்கும் பிரச்னைகளும், மோதல்களும்,
பத்திரிகைகளில் பிரதான இடம் பெறத்தக்க இடி மின்னல்
போன்ற சம்பவங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் என எதிர்
பார்க்கலாம்.



ஆஃப்ரிக்காவில் பொங்கி வரும் புரட்சி ஆக்க ரூபத்தில்
திரும்புமா அல்லது நாசத்திற்கு அழைத்துச் செல்லுமா?
மற்ற புரட்சிகள் மாதிரியே இந்தப் புரட்சி சம்பந்தமான
கேள்விக்கும் பதில் காண்பது அரிது. தென் அமெரிக்காவிலும்,
ஆசியாவிலும், ஏற்கனவே புரட்சி நடந்த விடங்களிலும் இந்
தக் கேள்விக்கு முடிவான விடை காணமுடியவில்லை. காலனி
ஆட்சிமீது வெற்றி கொண்டதுடன் போராட்டம் முடிந்து
விடவில்லை என்பதை இனிக் காண்போம். சமூக, பொருளா
தாரத் துறைகளிலும் நேர்பலன் அளிக்கக்கூடிய தீவிரமான
புரட்சி ஏற்பட்டாலொழிய, பிரஜா உரிமை வழங்கப்பட்டா
லொழிய, காலனி ஆட்சியினர் விட்டுவிட்டுப்போன சூன்ய
நிலையில் குழப்பம்தான் ஏற்படும். இந்த நிலையில் கம்யூனிஸ்டு
களோ அல்லது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
எனும் கோஷங்கள் முழங்கும் போலி மனிதர்களோ புகுந்து
அல்லல் விளைவிப்பார்கள்.
எழுத்துருப்பெறாத இந்த அடிப்படைப் பிரச்னைதான்
பாண்டுங்கில் கூடிய பிரதிநிதிகளை ஆட்கொண்டிருந்தது.

## அத்தியாயம் - 24.

# பூரண ஜனநாயகப் புரட்சி

ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும் காலனி நாடுகளில்
நிகழ்ந்த புரட்சிகளைப் பொதுப்படையாக ஆராய்ந்தோம்.
புரட்சி என்கிற வார்த்தையை பல்வேறு மக்கள் பல்வேறு
வகைகளில் அர்த்தம் செய்து கொள்ளுகிறார்கள் என்பதை
இந்தப் பரிசீலனை மூலம் அறிந்து கொண்டோம். பூரண ஜன
புரட்சி எனும் கருத்தை நாம் ஆய்ந்தறிய முற்படுமுன்,
''புரட்சி'' எனும் பதத்தின் பொருள் என்ன, அந்த
வார்த்தையை என்ன அர்த்தத்தில் பயன்படுத்துகிறோம்
என்பதை கவனிப்பது அவசியமாகும்.
முன்காலத்தில், ஆர்ப்பாட்டமாக நடந்த புரட்சிகள்
எல்லாம் பலாத்கார முறையைப் பின்பற்றி நிகழ்ந்தவை.
புரட்சி என்றால், தீர்மானமான வெறுப்பு, மிருகத்தனம்,
கண்டபடி கொலைபுரிதல், தீயிட்டுக் கொளுத்துதல் என்றே
பலர் நினைத்து வந்திருக்கின்றனர். சில பலாத்காரப் புரட்சிகள்
கொடுமைகளை எதிர்த்துக் கிளம்பிய நியாயமான எழுச்சிகளா

யிருந்திருக்கின்றன. மற்றும் சில அர்த்தமற்ற முறையிலும், எவ்வித நன் நோக்கமுமில்லாத நாசம் விளைவிக்கும் கலவரங்களாகவே இருந்திருக்கின்றன. உலகத்தில் திக்காலிக்கு ஓர் இடங்களில் இந்தப் புராதான பலாத்காரப் புரட்சி இன்னமும் நிகழ்ந்து வருகிறது.

இதற்கு நேர்மாறான முறையிலும் புரட்சி ஏற்பட்டு வந்திருக்கிறது. காந்தி போன்ற ஒருவரின் அமைதியான, விரிவான மாறுதல்கள் ஏற்படக்கூடிய கருத்துக்களை உதாரணமாகக் கூறலாம். இம்மாதிரிக் கருத்துக்களை ஏற்று செயல்படும் சமூகம் அமைதியாக, பூரணமாக, தீவிரமாக மாறுதலடையும். பூரண பலாத்காரம், பூரண அஹிம்சை இரண்டு முறைகளுக்கு மிடையே பலாத்காரத்தை ஏதோ ஒரு அளவுக்கு கைக்கொண்டு அரசியல், சமூக, பொருளாதார மாறுதல்களை விளைவிக்க முயற்சித்த புரட்சிகளும் உண்டு.

இவை தவிர, புரட்சியில் வேறு ரகங்களும் இருக்கலாம். புரட்சி எப்படி பலாத்கார முறையில் தான் நிகழவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இல்லையோ, அவ்வாறே அவைகள் திடீர் என நிகழவேண்டும் என்கிற அவசியமும் இல்லை. புரட்சியிலும் சரி, படிப்படியான வளர்ச்சி முறையிலும் சரி, மாறுதல்கள் ஏற்பட்டேயாகவேண்டும். புரட்சியின் கீழ் மாறுதல்கள் விரைவாகவும், சாதாரண வளர்ச்சியில சற்று நிதானமாகவும் ஏற்படலாம். புரட்சியா, நிதான வளர்ச்சியா என்பதைத் திட்டம் செய்வது மாறுதலின் வேகத்தைப் பொறுத்ததல்ல. மாறுதலை மட்டும் கொண்டும் அதை முடிவு செய்யலாகாது.

இதற்கு ஒரு உதாரணம் கூறலாம். யந்திரங்கள் மூலம் உற்பத்திப்பெருக்கு ஏற்பட்டது. அதனால் மகத்தான மாறுதல்கள் நிகழ்ந்தன. இதைத்தான் யந்திரப் புரட்சி என்று கூறினார்கள். ஆனால் இந்தப் புரட்சி ஒரு நூற்றாண்டு பொருளாதார அபிவிருத்தியின் மூலம் நிகழ்ந்தது. நான்காவது நூற்றாண்டில் கிறிஸ்தவ மதத்தில் புரட்சி என்றும், ஏழாவது நூற்றாண்டில் இஸ்லாமிய சமயப் புரட்சி என்றும், பதினாறாம் நூற்றாண்டில் புராடஸ்டண்டு மதப் புரட்சி நடந்தது என்றும் கூறுகிறோம். இவைகளைப் புரட்சி என்று குறிப்பிடுவதற்குக் காரணம், மதங்களில் மாறுதல்கள் விரைவாக ஏற்பட்டது என்பதல்ல. மாறுதலினால் ஏற்படக் கூடிய சமூக விளைவுகளின் முக்கியத்துவமேயாகும். வரலாற்றில் இடம் பெற்றுள்ள எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. பலாத்கார எழுச்சிகளுக்குள்ள பிரமிப்பூட்டும் தன்மையோ, எதிர்பாராமல் நிகழும் அம்சமோ இல்லாததனால் இந்த மாறுதல்களைப் படிப்படியான வளர்ச்சி ரகத்தில் சேர்த்து விடுகிறோம். ஆனால் இந்த மாறுதல்கள் புரட்சிகர



மானவை என்று கூறத்தக்க சமூகச்சிதைவுகளை விளைவித்திருக்கின்றன.

இந்த நோக்கிலிருந்து பார்த்தால், பாண்டுங்கில் கூடியிருந்த பிரதிநிதிகளில் பெருவாரியானவர்கள், ''எல்லா மக்களுக்கும், எல்லா தேசங்களுக்கும் பொதுப்படையாக மனித உரிமைகள் வழங்கப்படும் என பிரகடனம் செய்யப்படவேண்டும்'' எனும் தீர்மானத்தை ஆதரித்ததன் பொருளைப் புரிந்து கொள்ளலாம். இதன் மூலம் அவர்கள் வெள்ளையரான அந்நியரை விரட்டுவதுடன் நில்லாமல் அதையும் விடப் பெரிய கடினமான பணியை மேற்கொண்டனர்.

இத்தனை காலமாக அவர்கள் காலனி ஆட்சியை எதிர்த்துப் போராடிவந்தனர். உலக விழிப்பு எனும் சூரிய ஒளியில் அந்த ஆட்சி விரைவாகக் கரைந்து வருகிறது. ஆனால் அவர்களை எதிர்நோக்கியுள்ள மாபெரும் பிரச்னையில் இந்தக் காலனி ஆட்சி என்பது பனி மலையின் மேல் பகுதிதான். இந்த உண்மையை பாண்டுங் மகாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் அறிவார்கள். ஐ. நா.-வின் உரிமைச் சாஸனம், பூரண அரசியல் ஜனநாயகம், பொருளாதார நலன், எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் யாவற்றிற்கும் அளவுகோல் வகுத்திருக்கிறது. இந்த அளவுகோல் பசி, வறுமை, நோய், அறியாமையால் பீடிக்கப்பட்டுள்ள எல்லாக் கண்ட மக்களுக்கும் பொருந்தும்படி அமைந்திருக்கிறது.

''அரசாங்க மாளிகை மீது நமது தேசியக் கொடி உயர்ந்ததும், அந்நிய ஆட்சியினர் அகன்றதும், நமது தலைவர்களுக்கு அதிகாரம் மாறியதும், சுதந்திரம் சித்தித்து விடுகிறதா? பலம் பொருந்திய சில அந்நியர் ஆட்சிக்குப் பதிலாக அதே மாதிரியுள்ள நம் நாட்டுச் சிறு கும்பல் அதிகாரத்துக்கு வருவதற்குத்தானா சுதந்திரப் போராட்டம் நடத்துவது?'' இவ்வாறு பிலிப்பைன் தலைவர் ரொமுலோ கேட்டார்.

இந்தக் கேள்விக்கு பாண்டுங்கில் கூடியிருந்தவர்கள் ஏகமனதாக ''இல்லை'' என்று தான் பதில் கூறினார்கள். ஆனால் அந்தப் பிரதிநிதிகளில் பலர் அதிகார ஆசைபிடித்த சிறு கூட்டத்தினரைச் சேர்ந்தவர்களாதலால், அவர்கள் அரை மனதுடன் தான் ''இல்லை'' எனப் பதிலளித்திருக்க வேண்டும். ஆனாலும் பாண்டுங் தீர்மானங்களிலிருந்து நான்கு ஜனநாயகக் குறிக்கோள்கள் உருப்பெற்றன. இவைகள் அட்லாண்டிக் நாட்டினருக்கு ஆறுதலளித்திருக்கும். அது மட்டுமல்ல; அவர்களது சமூக அமைப்புகளைத் திருத்த வேண்டிய முக்கியமான பிரச்னை பற்றிச் சிந்திக்கவும் அவர்களைத் தூண்டும்.

1. அந்நியர் செல்வாக்குக்குட்படாத ஜனநாயக சுயஆட்சி. 2. ஜாதி, மதம், நிறம் முதலிய வித்தியாசங்கள்

பாராட்டாத மனித கண்ணியத்திற்குப் பூரண உத்தர
வாதம். 3. விரைவான பொருளாதார அபிவிருத்தியும், அதில்
யாவரும் சமமாகப் பங்கு கொள்ளுதலும். 4. யுத்தத்தை
அகற்றி நல்லெண்ணம் நிலவும் இடங்களை விரிவுபடுத்தல்.
இந்தக் குறிக்கோள்களை ஒன்று சேர்த்துப் பார்த்தால்,
அவைதான் பூரண ஜனநாயகப் புரட்சியின் லட்சணங்கள்.
இம்மாதிரிப் புரட்சி, சரித்திரத்தில் எப்பொழுதாவது நிகழ்ந்தி
ருக்கிறதா? ஒருநாட்டின் ஒரு தலைமுறை வரலாற்றை மட்
டும் நினைத்துக் கொண்டு பார்த்தால், ''இல்லை'' என்றுதான்
இந்தக் கேள்விக்குப் பதில் கூற வேண்டும்.
பூரண ஜனநாயகப் புரட்சி லட்சியத்தை எவ்வளவு
நாடுகள் அடைந்துவிட்டன? சில நாடுகள் இந்த லட்சியத்தை
குறிப்பிட்ட கால அளவில் கிட்டத்தட்ட நெருங்கிவிட்டன
என்றுதான் இதற்குப் பதில் கூறலாம். முதல் மூன்று அம்சங்
களில் பெரும் அளவில் அமெரிக்கப் புரட்சி வெற்றி பெற்றி
ருக்கிறது என்பதை அமெரிக்கா பற்றிய பகுதியில் கவனிப்
போம். பிரிட்டிஷ் காலனி ஆட்சியை அமெரிக்கா உதறித்
தள்ளியது. உரிமைப்பட்டியலுடன் கூடிய ஜனநாயக அர
சாங்கத்தை அமைத்தது. மக்களுடைய சக்தியைப் படிப்படி
யாக விடுவித்தது. அந்தச் சக்தியின் மூலம் பக்குவப்படாத
ஒரு கண்டத்தை தொழில் பெருக்கிற்குக் கேந்திரமாகச்
செய்ததுடன், எல்லா மக்களுக்கும் சம சந்தர்ப்பம் கிடைப்
பதற்கான ஏற்பாட்டையும் செய்தது. அமெரிக்காவில் உள்
நாட்டுச் சண்டை நிகழ்ந்தாலும், அதன் வினைவாக நாற்
பத்தியெட்டு ராஜ்யங்கள் போட்டி போட்டு மடியாமல்
சமாதானமாக வாழ வழி ஏற்பட்டது.
அமெரிக்க அநுபவத்தின் மூலம் புரட்சிகரமான சாதனை
கள் புரிந்தோம். இந்த சாதனைகள் முக்கியத்துவம் வாய்ந்
தவையாயிருப்பினும் கனவு காணும் அமெரிக்கச் சிறப்பினால்
ஏற்படக்கூடிய பயன்கள் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்
தவை. அமெரிக்கர்களில் ஒவ்வொரு தலைமுறையினரும்,
அவர்கள் காணும் அப்போதைய நிலைமை நீடிப்பதைவெறுத்து
வந்திருக்கின்றனர் என்பது சரித்திரம் கண்ட உண்மை.
அமெரிக்கப் புரட்சி நீடித்து, வாழ்க்கையின் எல்லாத் துறை
களிலும் மக்களுக்கு ஜனநாயக முறையில் கூடுதலான சந்தர்ப்
பங்கள் அளிக்கவேண்டும் எனச் சில அமெரிக்கத் தலைவர்கள்
வற்புறுத்தி வந்திருக்கின்றனர். இம்மாதிரித் தலைவர்களுக்கே
அமெரிக்க மக்கள் ஆழ்ந்த மதிப்பளித்து வந்திருக்கின்றனர்.
இந்திய அநுபவமே தங்கள் நிலைக்குப் பொருத்தமானது
எனப் பெரும்பாலான ஆசியர்களும், ஆஃப்பிரிக்கர்களும் நினைப்
பது இயல்பேயாகும். வெள்ளை யஜமானுக்குப் பதிலாக
பழுப்பு நிற யஜமானுக்குட்பட்டு வாழ்வது புலியைக்



கொன்றுவிட்டு, புலிக் குணத்தை விடாமலிருப்பதற்கு ஒப்
பாகும் எனக் காந்தி கூறியிருக்கிறார். பிரிட்டிஷ் ராஜ்யத்
திற்குப் பதிலாக, ''சுயராஜ்யம்'' அல்லது சுய ஆட்சி நிலவ
வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ''ஜாதி அல்லது
வகுப்பு வித்தியாசமற்ற சமுதாயமே இலட்சிய சமுதாயம்''
என்பது அவர் கருத்து.
கிராம அபிவிருத்தி செய்வதே அவரது பேராவல்.
அஹிம்சையே அவரது நீடித்த சாதனம். இந்த சாதனத்தை
அவர் அந்நிய ஆட்சியினரை எதிர்ப்பதற்கு மட்டுமல்ல,
தனது மக்களில் ஒரு சாராரை எதிர்த்தும், அவசியமேற்பட்
டால் சுதந்திர இந்திய அரசாங்கத்தை எதிர்த்துக்கூடப்
பயன்படுத்தலாம் என எச்சரிக்கை செய்தார். ஜனநாயக
லட்சியம், சம சந்தர்ப்பம் பெறுதல், அமைதியை நிலை
நாட்டுதல், இவை யாவற்றிற்கும் ஏற்றதாயிருக்கவேண்டும்,
இவைகளை அடைவதற்கான சாதனம் என்று அவர் வற்
புறுத்திக் கூறினார்.
அநீதிக்கு உடனடியாகப் பரிகாரம் செய்யவேண்டும்;
என்றோ நல்லாட்சி வரப் போகிறது என்று அதுவரையில்
காத்திருக்கலாகாது. சத்தியத்தையும், அஹிம்சையையும்
என்றென்றும் கடைப்பிடிக்க வேண்டும் இதுவும் சக ஊழியர்
களுக்கு அவர் செய்த போதனையாகும். காந்திஜி நினைத்த
மாதிரி பூரணப் புரட்சி நிகழ்த்துவதில் இந்தியா வெற்றி
பெற்றுவிடவில்லை என்பது உண்மைதான். ஆனால் வாழ்க்
கையைப் பிரதிபலிக்கும் அதனுடைய அரசியலமைப்பு,
சுயேச்சையாக நடக்கும் பிரம்மாண்டமான தேர்தல்கள்,
கிராம முன்னேற்றத்திற்குப் பிரதான்ய மளிக்கும் ஐந்தாண்டுத்
திட்டம்—இந்தப் புரட்சியின் எதிர்கால சக்திககான அத்
தாட்சிகள். இந்தப் புரட்சியில் மேற்குறிப்பிட்ட எல்லா
அம்சங்களும் அடங்கியிருக்கின்றன.
மேலே கண்ட குறிக்கோள்களில் சிலவற்றை மட்டும்
அடைந்து, அதனுடன் புரட்சி முடிவு பெறுமானால் என்ன
நிகழும்? இதுபற்றி பாண்டுங்கில் கூடியிருந்தவர்களுக்குத்
தெளிவாகத் தெரிந்திருக்கவேண்டும். தடைப்பட்ட புரட்சி
களின் வினைவுகளை அவர்கள் உலகில் பல பகுதிகளில் பார்த்
திருப்பர். நமது நாட்டுக்குத் தெற்கே உள்ள * லாடின்
அமெரிக்காவில் பெரும்பகுதி பூர்த்தி பெறாத புரட்சியினால்
ஏற்படக்கூடிய அபாயத்திற்கு நிலையான உதாரணமாகக்
காட்சியளிக்கிறது.

* லாடின் அமெரிக்கா:—(Latin America) வடக்கு, தெற்கு, மத்திய அமெரிக்காவிலும் மேற்கு இந்தியத் தீவுகளிலும் ஸ்பானிஷ், போர்ச்சுகீசிய, பிரெஞ்சு பாஷைகள் பேசுவோர் வசிக்கும் பகுதி. இவைகளில் இருபது குடியரசுகள் சேர்ந்ததே லாடின் அமெரிக்கா.

தென் அமெரிக்க நாடுகள் பாண்டுங் மகாநாட்டிற்கு
அழைக்கப்படவில்லை. எனினும் அந்நாடுகளின் பூர்வீக வர
லாற்றிலிருந்து பல படிப்பினைகளை அறிந்துகொள்ளலாம்:
தென் அமெரிக்காவின் ''விடுதலை வீரன்'' பொலிவார்
(Bolivar) 1783-இல் வெனிசிலாவில் (Venezuela) உயர்குடியில்
பிறந்தான். ஐரோப்பாவில் படித்தான். ஃபிரஞ்சுப் புரட்சி
யின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்தவைகளைப் பாரிசில் அவன்
நேரில் பார்த்தவன். அந்தப் புரட்சி க்ஷீணித்து வருவதை
யும் நெப்போலியன் பிரபல்யமடைந்ததையும் அவன் அறிந்
திருந்தான்.

அவன் 1810-இல் அமெரிக்கா வழியாக வெனிஸுலாவுக்
குத் திரும்பினான். அங்கே சீக்கிரத்தில் ஸ்பானிஷ் ஆட்சியி
லிருந்து விடுதலை பெறுவதற்கான இயக்கத்தில் ஈடுபட்டான்.
ஆயுதம் தாங்கிய கலகத்தில் கலந்துகொண்டான். 1811
ஜூலை நான்காம் தேதியன்று தென் அமெரிக்கக் கலகக்காரர்
களும், தங்கள் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டனர்.

தற்காலிகமாக பொலிவர் தோல்வியுற்றான். ஆகை
யால் உடனே நாடு கடத்தப்பட்டான். இந்த நிலையில்
1812-ஆம்ஆண்டில் காலனி ஆட்சிபுரியும் ஸ்பெயின் நாட்டுடன்
சாகும்வரை சமர் புரிவதாகச் சபதம் செய்துகொண்டான்.

புது கிரானடா (Granada) மக்கள் கொண்ட புரட்சிக்
காங்கிரஸை அமைத்தான். 1814-இல் 2,000 படையினர் உதவி
கொண்டே போகோடா (Bogota) வைக் கைப்பற்றினான்.
நீண்டகாலம் கொரில்லாப் போர் செய்த பிறகு, 1820-இல்
வெனிஸுலா, புது கிரானடா, குவிடோ (இப்போது இக்
வடார் Ecuador) முதலிய இடங்களைப் பூரணமாக வசப்படுத்தி
னான். இவைகளைக் கொலம்பியாக் குடியரசாக ஒன்றுபடுத்தி
அதற்கு அதிபனானான்.

இவன் மாதிரியே ஆர்ஜண்டைனை ஸான் மார்ட்டின்
(San Martin) என்பவன் விடுதலை செய்திருந்தான். இவனும்
பொலிவாரும் சேர்ந்துகொண்டு ஸ்பானிஷ்காரர்களை பெரு
(Peru)வை விட்டு விரட்டினர். பெருவின் மேல்பகுதி 1825-இல்
சுதந்திர ராஜ்யமானதும், அந்நாட்டிற்கு ''பொலிவார்''
எனும் பெயர் சூட்டப்பட்டது. ''என்றென்றும் தங்கள்
நாட்டின் ரட்சகர்'' என அவனைப் பிரகடனம் செய்தனர்.

பொலிவார் அவனது காலத்தவரான ஸான்மார்ட்டின்,
ஓ ஹிக்கின்ஸ் (O'Higgins) முதலியவர்களால் எழுந்த புரட்சி
ஆர்வம் தென், மத்திய அமெரிக்க மக்களையும் ஆட்கொண்
டது. இதன் விளைவாக, இங்கெல்லாம் ஐரோப்பிய ஆட்சி
உதறித் தள்ளப்பட்டது. பல்லாண்டுகள் போர் புரிந்து
கடைசியில் 1821-ஆம் ஆண்டில் மெக்ஸிகோவும் மூன்று நூற்
றாண்டு ஸ்பானிஷ் ஆதிக்கத்தை ஒழித்தது.



இவ்வாறு அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று
லும், அமெரிக்காவிலும், ஓரளவு கூடுதலாக இந்தியாவிலும்
நிகழ்ந்ததுபோல ஆக்க வேலையோ, நிர்மாணப் பணியோ சமூக
சேவையோ ஆற்ற இந்நாடுகள் முனையவில்லை. பொலிவாரின்
நாட்டில் அவனது ஆயுட்காலத்திலேயே பழைய நிலப்
பிரபுத்வ முறையைச் சீர்திருத்துவதற்கு அவன் வகுத்த மித
மான திட்டத்தைக்கூட நிறைவேற்ற முடியவில்லை.

இவ்வாறு தன் முயற்சி பயனற்றுப்போனது கண்டு
பொலிவார் தன் நண்பன் ஒருவனுக்கு எழுதினான். ''எனக்கு
வயதாகிவிட்டது. நான் நோய்வாய்ப்பட்டு இருக்கிறேன்.
ஏமாற்றமடைந்துவிட்டேன். என்னைப்பற்றி அவதூறாகவும்
பேசுகிறார்கள். என் சேவைக்கேற்ற ஊதியமும் இல்லை.
நான் புரட்சியை என்றும் ஆதரித்ததில்லை. என் கடைசி
காலத்தில் ஸ்பெயினுக்கு எதிராகப் புரட்சி செய்ததைப்
பற்றிக்கூட வருந்துகிறேன்.''

பெருவாரியான மக்கள் நிலப்பிரபுக்களால் சுரண்டப்
பட்டே வாழ்ந்து வந்தனர். அந்நிய ஆட்சியினருக்குப் பதில்
ஸ்தல சர்வாதிகாரிகள் அதிகாரம் செலுத்தினர். தான் இறப்
பதற்குச் சில நாட்களுக்கு முன் மனம் நொந்துபோனதனால்
ஏற்பட்ட மனத்தளர்ச்சியுடன் பொலிவார் எழுதினான்:
''சரித்திரத்தில் மூன்று முட்டாள்கள் இருப்பதைக் காண்
கிறோம். ஏசுநாதர், * டான் குவிக்ஸாட், (Don Quixote) நான்...
புரட்சிக்குப் பணி புரிவது கடலை உழுவதற்கொப்பாகும்.''
பொலிவாரின் வாழ்நாளிலேயே அவன் அடைந்த வெற்றி
தோல்வியாக மாறிற்று.

தலைமுறை தலைமுறையாக லாடின் அமெரிக்க நாடுகளில்
உள்நாட்டுக் குழப்பங்கள் நிகழ்ந்துகொண்டே வந்திருக்கின்
றன. இவைகளில் பெரும்பாலானவை ராணுவத்துறையில்,
அதிகாரப் பேராசைப் போட்டிகளால் நிகழ்ந்தவை. திடீ
ரென அதிகாரத்தைக் கைப்பற்றுதல், அதிகாரத்திலிருப்பவர்
களைக் கொன்று பதவி அடைதல், உள்நாட்டுச் சண்டை—
இவைதான் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அம் மக்கள்
அறிந்த முறைகள்.

1821-லிருந்து 1876-இல் டயஸ் (Diaz) சர்வாதிகாரம் ஏற்
பட்டவரை மெக்ஸிகோவில் இரு பேரரசர்கள், வயது நிரம்
பாத மன்னர்களுக்காக ஆட்சி புரிந்த இரு ரீஜண்டுகள், பல
சர்வாதிகாரிகள், தற்காலிக நிர்வாகங்கள் மூலம் எழுபத்தி
ஞன்கு ஆட்சிகள் நடந்திருக்கின்றன. இம்மாதிரி உள்நாட்
டுப் பிளவுகள் நிலவியபோதிலும் மீண்டும் ஸ்பானிஷ் ஆட்

* டான் குவிக்ஸாட் (Don Quixote):—ஸெர்வாண்டிஸ் எனும் ஸ்பானிஷ் ஆசிரியன் 1605-இல் எழுதிய நாவலின் கதாநாயகன். இந்தக் கதாநாயகன் போலவே நல்லது செய்து ஏமாந்தவன் பொலிவார்.

சியை சுமத்துவதற்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் முறி
யடிக்கப்பட்டுவிட்டன. அமெரிக்கா, உள்நாட்டுச் சண்டை
யில் ஈடுபட்டு இருக்கையில், மூன்ருவது நெப்போலியனின்
கையாளாகிய மாக்ஸ்மிலியன் ஐரோப்பாவின் காலனி ஆட்சி
அமைக்க முயற்சித்தான். அவன் இறுதியில் துர்மரண
மடைந்தான்.

மெக்ஸிகோவிலும், உரகுவே (Uruguay) போன்ற தென்
அமெரிக்க நாடுகளில் ஜீவசக்தியுள்ள, ஜனநாயக ஆதாரம்
உள்ள நிலையான அரசாங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.
அநேகமாக அமெரிக்க அரசாங்கத்தாரின், தனிப்பட்டோரின்
உதவிகொண்டு பல லாடின் அமெரிக்க நாடுகளில் விரைவாகப்
பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. ஆனால் ஜன
நாயக அபிவிருத்தியில் லாடின் அமெரிக்கா அடைந்திருக்க
வேண்டிய அளவுக்கு முன்னேற்றமடையவில்லை. இதற்கு
சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் ஏராளமான
சான்றுகள் காணலாம்.

1954 ஒரே ஆண்டில் நிகராகுவா (Nicaragua) வுக்கும்
காஸ்டா ரிகா (Costa Rica) வுக்கும் சிறு சண்டையே நிகழ்ந்
தது. ஈக்வடார், பெரு, பராகுவே, பொலிவியா முதலிய
அரசாங்கங்கள் புரட்சி எழுந்ததை அடக்கிவிட்டதாக அறி
வித்தன. ஒரே சூழ்ச்சிகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கு
மிடையே பிரேசில் ஜனாதிபதி தற்கொலை செய்து கொண்
டார்: பனாமா ஜனாதிபதி கொல்லப்பட்டார்; கௌதமாலா
ஆட்சி, ராணுவக் கலகத்தினால் வீழ்த்தப்பட்டது. பிரிட்டிஷ்
கயானாவுக்கு அளிக்கப்பட்ட புது அரசியல் அமைப்பை
லண்டனிலிருந்து ரத்து செய்ததனால் அந்நாட்டு ஆட்சி
கவிழ்ந்தது.

தென் அமெரிக்காவின் மாபெரும் நகர்களுக்கு வெளியே
சென்று பார்ப்பவர்கள் அங்கே குடியானவர்கள் இந்தியக்
குடியானவர்கள் போன்றே வறுமையில் வதிவதைக் காண்
பர். ஆகையால் பாண்டுங் மகாநாடு வற்புறுத்திய ஜன
நாயகத் தன்மை வாய்ந்த, பொருளாதார, சமூகச் சீர்
திருத்தங்கள் இந்தக் குடியானவர்களுக்கு அத்தியாவசியம்
என்பதை உணர்வார்கள்.

லாடின் அமெரிக்கர் வாழ்க்கை நிலையற்றதாயிருப்ப
தற்கு மற்றுமோர் காரணம் வர்த்தகத்திற்கான தான்ய
விளைச்சலையோ, அல்லது எண்ணெயையோ ஏற்றுமதி செய்
வதைப் பொறுத்திருக்கிறது அந்நாட்டுப் பொருளாதாரம்
என்பது. உதாரணமாக, காஃபியோ அல்லது எண்
ணெயோ விற்பனையால்தான் அவர்கள் பிழைக்கலாம்.
இந்தப் பொருள்களின் விலை சர்வதேசச் சந்தையில் வீழ்ச்சி



யுற்ருல், இதை நம்பி வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்
கள் சீர்கெட்டுப்போம்.

இம்மாதிரிச் சங்கடத்தைத் தவிர்க்கும் நோக்குடன்தான்
பாண்டுங் மகாநாடு, "தங்களது தளப் பொருள்களை இயன்ற
மட்டில் சுத்தப்படுத்தி அப்புறமே ஏற்றுமதி செய்யவேண்
டும்; மேலும் பல பொருள்களில் வாணிகம் செய்ய வேண்
டும்," என ஆசிய ஆஃபிரிக்க நாடுகளை வேண்டிக்கொண்டது.

நிலப்பிரபுத்வம் இன்னமும் நீடிக்கிறது. மக்கள் யாவ
ருக்கும் பயன்படக்கூடிய சீரான பொருளாதார அபி
விருத்தி முயற்சி போதிய அளவு கிடையாது. இவைகளே
லாடின் அமெரிக்க நாடுகளில் காலனி ஆட்சிப் புரட்சி
எதிர்பார்த்த நலன் அளிக்காததற்குக் காரணங்கள். இந்
நாடுகளில் இது உண்மையானால், மத்யக் கிழக்கிலும், இதே
நிலைதான் இன்னும் இருந்து வருகிறது. இங்கேயும், சட்ட
பூர்வமாகச் சுதந்திரம் கிட்டிவிட்டது என்ருலும், அதனால்
பெருவாரியான மக்கள் கூடுதலான சுதந்திரம் பெற்று
விட்டனர் என்று கூறுவதற்கில்லை. ஸ்தலத்திலுள்ள கொடுங்
கோலர்கள், பலாத்காரமாக ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்ரு
விட்டாலும், ஜனநாயக ஆட்சி முறை செல்வாக்குள்ள,
படித்த சிறு கூட்டத்தினர் கையிலேயே இருக்கிறது.

அராபிய உலகில் ஆறு கோடி அராபியர்கள் வசிக்கின்
றனர். அது 36 கோடி முஸ்லிம்களுக்கு புனித மத ஸ்தலமா
யிருக்கிறது. ஆனாலும் அந்நாட்டு மக்கள் கோரமான
வறுமையினால் வாடுகின்றனர். இந்தப் பகுதி புராதன
மானது, சரித்திரப் புகழ்பெற்றது. ஆனால் முப்பது லட்
சத்திற்கு மேற்பட்ட சதுர மைல் விஸ்தீரணத்தில் 90 சதம்
பாலைவனமாயிருக்கின்றது. அமெரிக்காவில் லோவா [Lowa]
ராஜ்யத்தில் சாகுபடியாகும் அளவுக்கே அராபிய நாட்டில்
நிலம் சாகுபடியாகிறது.

சாகுபடி நிலம் தவிர, இந்த நாட்டில் பூமியிலிருந்து
கிடைக்கும் பெரியதோர் சாதனம் எண்ணெய்தான். உலகத்
தோருக்கு அத்தியாவசியத் தேவையான எண்ணெயுடன் மற்
ருேர் முக்கியத்வமும் சேர்ந்திருக்கிறது. சர்வதேசக் கடல்,
தரை, ஆகாய மார்க்கங்களில் இந்த நாடு கேந்திரமான
நிலையிலிருக்கிறது. இவ்விரண்டுமாக ராஜதந்திர உலகில்
இந்தப் பிராந்தியத்திற்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது.
1939-ஆம் ஆண்டில் மத்திய அராபியப் பாலைவனமும்,
யெமெனின் [Yemen] மலைச்சாரல்களுமே ஐரோப்பிய வல்
லரசுகளின் பாதுகாப்புக்குட்படவில்லை.

ஒரு தலைமுறை காலத்திற்கு மத்தியக் கிழக்கு யுவர்
கள் உள்ளத்தில் அமெரிக்கா தனியிடம் பெற்றிருந்தது.
ஜனாதிபதிகள் வில்ஸனும், ரூஸ்வெல்டும் அவர்களைப் பெரிதும்

ஆகர்ஷித்தனர். மத்தியக் கிழக்குத் தலைவர்களில்
அதிக பேர் பெய்ருட் (Beirut)டில் உள்ள அமெரிக்கப் பல்
கலைக் கழகத்தில் படித்தவர்கள். ஆனால் இன்று இங்கே
அமெரிக்கர் மதிப்பு மங்கிவிட்டது. இதற்குப் பல கார
ணங்கள் இருக்கின்றன.

மத்தியக் கிழக்கில் அராபிய சமூகத்தில் பல்வேறு
மக்கள் இருக்கின்றனர். கொழுத்த பணம் படைத்த நிலச்
சுவான்தார்களும், வர்த்தகர்களும் சில ஆயிரம் பேர் இருக்
கின்றனர். மத்தியதர வகுப்பைச் சேர்ந்த உத்தியோ
கஸ்தர்கள், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் சொற்பப்
பேர் இருக்கின்றனர். நிலமேயில்லாத அல்லது சொற்ப நில
முள்ளவர்கள் ஏராளமாக இருக்கின்றனர். பாமர மக்க
ளுக்கும் அவர்களது தலைவர்களுக்கும், பொருளாதார இடை
வெளி சரிக்கட்ட முடியாதபடி பெரியதாயிருப்பதுடன் இப்
போது சகிக்க முடியாத முறையிலும் இருக்கிறது. 1952-இல்
எகிப்தில் நிலச் சீர்திருத்தம் தொடங்கப்பட்டது, இதற்கு
முன் நிலமுள்ளவர்களில் ஒரு சதத்தினர் பெரிய மிராசு
தார்கள்; மக்களில் 94 சதத்தினரைவிட இந்த மிராசுதார்
கள் நிரம்ப நிலம் படைத்திருந்தனர். இந்த முறை நில
வியதனால் அதிக நிலமுள்ளவர்கள் பஞ்சணைமீது படுத்துறங்
குவதும், பாமரர் சொல்லொணுத் துயரத்திற்காளாவதுமா
யிருந்தது.

பாண்டுங்கில் எகிப்தின் பிரதிநிதியாக அதன் பிரத
மர் நாஸர் (Nasser) வந்திருந்தார். (இப்போது இவர்
எகிப்து-சிரியா அடங்கிய அராபியக் கூட்டுக் குடியரசின்
தலைவர்) 1952-இல் எகிப்திய ராணுவக் குழுவினர் அதிகாரத்
திற்கு வந்தனர். பூரண ஜனநாயகப் புரட்சி நிகழ்த்துவ
தாக வாக்களித்தனர். போதிய அளவு பொருளாதார
அபிவிருத்தி பெருத நாட்டில் அரசியல் ஜனநாயகத்தை
ஸ்தாபிப்பது எனும் தர்ம சங்கடமான பிரச்னைக்கு எப்
படி முடிவு காண்பது என்பதில் இன்னமும் அவர்கள் ஈடுபட்
டிருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளை தேர்தலில் போட்டியிடவிட்டால்
வெற்றி பெற்றவர்களைத் தனிச் சலுகையுள்ளவர்கள் லஞ்சம்
கொடுத்து சரிக்கட்டிவிடலாம். எகிப்திய மக்களின் நலன்
என்றும்போல் லட்சியம் செய்யப்படாமல் போய் விடும்.
இவ்வாறு நேரலாம் என நாஸரும், புரட்சித் தலைமைச்
சபையிலுள்ள அவரது சகாக்களும் உண்மையிலேயே அச்ச
மடைகின்றனர்.

பொருளாதாரச் சீர்திருத்தம் முக்கியத்துவம் வாய்ந்தது.
ஆகையால் இந்தச் சிரத்தை மிக்க—இவர்கள் ஜனநாயக மனப்
பான்மையும் உள்ளவர்கள் என நான் எண்ணுகிறேன்—



தலைவர்கள் சில காலத்திற்கு தர்மசிந்தனையுடன் யதேச்
சாதிகார ஆட்சி புரிந்து சீரான சமூகத்திற் கேற்ற
அடித்தளம் அமைக்கலாம் என நம்புகின்றனர். பெரிய
நிலச் சுவான்தார்கள், அல்லது ஈராக், பிரிட்டன், அமெரிக்கா
அல்லது ரஷ்யா முதலிய நாடுகளின் நலனுக்காக உழைத்
துக்கொண்டு தங்களை எகிப்தியர்கள் எனச் சொல்லிக்கொள்
பவர்கள் பார்லிமெண்டில் இடம் பெறுவதனால், எகிப்திற்கு
எவ்வித நன்மையுமில்லை. முன்பு போலவே சுயநலத்திற்குப்
பயன்படுவதற்காக சுதந்திரத்தை மீண்டும் அளிக்க நாங்கள்
தயாராயில்லை.'' இவ்வாறு நாஸர் 1955 மே 18-ஆம் தேதி
கெய்ரோவில் கூறினர்.

''திட்டமான எதிர்காலத்திற்குப் பயன்படும்படி சுதந்
திரத்தை எகிப்து தர்மமாகப் பாதுகாக்கும். இதற்குள் கல்வி
வசதி பெருகும். சாமானிய மக்களின் தலைவர்கள் தோன்ற
வகை செய்யப்படும். நிலச் சீர்திருத்தம் மூலம் சுயேச்சையான
குடியானவர் சமூகம் தோன்றும். பொருளாதார அபிவிருத்தி
மூலம் வாழ்க்கைத்தரம் உயரும்.''

''தர்மமாகச் சுதந்திரம் பாதுகாக்கப்படும்'' என்பது
அபாயகரமான சித்தாந்தம். பாதுகாப்பவர்கள் எவ்வளவு
உயர்ந்த எண்ணமுடையவர்களாயினும், அபாயம் அபாயமே.
1920-இல் துருக்கியில் கெமால் பாட்சா செய்தமாதிரி நாஸரும்
ஜனநாயக முறைக்கு மாறுன வகையில் நிலப்பிரபுத்வத்தைக்
களைவதற்கு முனைவதானல் அதன் அரசியல் சக்தி இன்னும்
அழியவில்லை என்பது புலனுகிறது. தடைப்பட்ட புரட்சியை
மீண்டும் ஜனநாயகச் சீர்திருத்தப் பாதைக்குத் திருப்புவது,
ராஜதந்திரத் துறையினர் இதுவரை கண்டிராத கடினமான
பிரச்னையாகும்.

மத்தியக் கிழக்கு மாதிரி இந்தியாவில் இந்தப் பிரச்னை
ராஜதந்திரிகளுக்கு அவ்வளவாகச் சங்கடமளிக்கவில்லை. பிரிட்
டிஷ் காலனி ஆட்சிமீது எவ்வளவோ வகையில் குற்றஞ்சாட்
டலாமாயினும், இந்தப் பிரச்னையைச் சுலபமாக்கியதற்குப்
பிரிட்டிஷாரைப் பாராட்டவே வேண்டும். முதலில் பிரிட்டிஷ்
சட்ட அநுபவமும், சுதந்திரம் கிட்டுவதற்கு முன் பார்லி
மெண்டரி சபைகளிலும், ஆட்சி வர்க்கத்திலும் பங்கு
கொண்டதனுலும், பொறுப்புள்ள சுயாட்சித் துறையில்
இந்தியர் பயிற்சி பெற்றுவிட்டனர்.

பாகிஸ்தானிலும், திறமை வாய்ந்த, ஜனநாயக மனப்
பான்மையுள்ள சிலர், சுதந்திர சமுதாயம் வளர்ந்து நிலை
பெறுவதற்கான அடித்தளம் அமைப்பதற்கு முயற்சித்து வரு
கின்றனர். ஆனால் இவர்கள் வேலை கடினமாகவும், ஜன
நாயக வளர்ச்சி நிதானமாகவும் இருப்பதற்குச் சில காரணங்
கள் இருக்கின்றன—வைதிகர்கள், நவநாகரிக முஸ்லிம்கள்

எனும் பிளவுகள், மேற்கு பாகிஸ்தான் முதலில் பல பகுதி
களாகப் பிரிக்கப்பட்டது, தொடர்பில்லாத இருபகுதிகளாகப்
பாகிஸ்தான் அமைந்திருப்பது, பிரிவினையினால் நாட்டின்
தொழில் வளப் பகுதியை இழந்தது, நன்கு பயிற்சி பெற்ற
அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இல்லாதது, நாட்டினர் யாவ
ரும் ஒப்புக்கொள்ளக்கூடிய தலைவர்கள் இல்லாமை.

மத்தியக் கிழக்கிலுள்ள ஓர் ஆசிய நாட்டில் ஜனநாயக
அடிப்படையில் விரைவான பொருளாதார அபிவிருத்தியும்,
சமூகச் சீரமைப்பும் நிகழ்கிறது என்பது விசித்திரமாகத்
தோன்றலாம். ஆனால் இது அரபு நாட்டு எல்லைக்கப்பால்
நிகழ்கிறது. உறுதிவாய்ந்த மக்கள் வாழும் சிறு நாடு அது.
அராபியரின் கடுமையான எதிர்ப்புக்கும் இலக்கான நாடு—
இஸ்ரேல் (Israel). பாலைவனத்திலிருந்து உருவாக்கப்பட்ட
நாடு இது. டயாஸ்போரா (Diaspora) என்கிற இடத்தி
லிருந்து வந்த யூத முன்னோடிகள் அமைத்தனர் இந்நாட்டை.
மேலும் மேற்கத்தியாரின் அபரிமிதமான அபிமானத்தாலும்,
அவர்களுடைய மூலதனத்தின் உதவியினாலும் வளமாக்கப்
பட்டது. இந்நாடு பூரணமான புரட்சியை அநுபவித்திருக்
கும். ஆனால் ஒரே ஒரு குறைபாடு குறுக்கே நின்றது. இந்
நாட்டிற்குச் சமாதானம் கிட்டவில்லை. இந்த நாடு தோன்றிய
சந்தர்ப்பமே இந்நாட்டிற்கு அமைதி கிட்டுவதற்குத்
தடையாயிருந்து வந்திருக்கிறது.

ஆசியாவின் மற்றொரு கோடியில் முடிவுபெறாத புரட்சிப்
புதிருக்கு மற்றோர் சான்றைக் காணலாம். பாண்டுங் மகா
நாட்டிற்குப் பிரதிநிதிகளை யனுப்பிய நாடுகளில் அபிவிருத்தி
யடையாத நாடுகள் ரகத்தைச் சேராதது ஜப்பான் நாடு
ஒன்றுதான். தொழில் துறையில் சக்தி வாய்ந்த இந்த நாடு
சில ஆண்டுகளுக்கு முன் சீனாவையும், தென்கிழக்கு ஆசியாவை
யும் சேர்ந்த ஐம்பது கோடி மக்கள்மீது தனது பிரத்தியேக
ரகக் காலனி ஆட்சியைப் புகுத்தியது. இறுதியில் அமெரிக்க
ராணுவ பலமே அதைத் தடுத்து முறியடித்தது.

ஜப்பானிய சக்தியும், சாமர்த்தியமும் நீண்ட காலத்
திற்கு ஆசியாவையும், உலகத்தையும் பெரிதும் ஊக்குவிக்கக்
கூடும். சமாதானச் சூழ்நிலை நிலவுவதால் இந்தத் தடவை
அதனுடைய செல்வாக்கும் சாமர்த்தியமும் நீடித்த பயனளிக்
கும் என்ற நம்பிக்கையுடன் செயல் புரியலாம். இந்தியாவும்
ஜப்பானும் சேர்ந்தால் எதிர்காலத்தைப்பற்றி நாம் அறிந்து
கூறக்கூடிய அளவுக்கு சக்திவாய்ந்த கம்யூனிஸ்ட் சார்பற்ற
நாடுகளாக அவை விளங்கலாம்.

1542-இல் போர்ச்சுகீசியர்கள் ஜப்பானைக் கண்டுபிடித்
தனர். அர்ச் ஃபிரான்ஸிஸ் ஸேவியர் (St. Francis Xavier)
தலைமையில் ஜெஸூட் பாதிரிகள் 1549-இல் ஜப்பானில்



வந்திறங்கினர். உடனே பிரிட்டிஷார், டச்சுக்காரர்கள், ஸ்பா
னிஷ்காரர்கள் அங்கு வியாபார ஸ்தலங்கள் அமைத்தனர்.
அந்நிய வெறுப்பினால் ஏற்பட்ட ஜப்பானிய தேசிய ஆர்வத்தி
னால் 1673-க்குள் அந்நியர் யாவரும் வெளியேற்றப்பட்டனர்.
சுமார் 200 ஆண்டுகளுக்கு, அதாவது 1853-இல் எல்லாத்
தடைகளையும் மீறி கம்மோடார் பெர்ரி (Perry) தனது சிறு
கடற்படையுடன் அந்நாட்டிற்கு வந்ததுவரை, ஜப்பான்
மேற்கத்தி நாடுகளுடன் தங்குதடையின்றித் தொடர்பு
கொண்டிருந்தது. அமெரிக்க ஐரோப்பிய முறைகளையொட்டி,
அடுத்த இரண்டு தலைமுறைகளில் ஜப்பானில் ஏற்பட்ட அர
சியல், பொருளாதார மாறுதல்களின் வேகத்திற்குச் சரித்திரத்
தில் ஈடுகாண முடியாது.

1867-இல் முட்ஸு ஹிடோ (Mutsu-Hito) ஜப்பானின்
பேரரசனானான். அவன் மேய்ஜி (Meiji) எனும் பட்டம்
சூட்டிக்கொண்டான். இதற்கு அறிவுடைமையான ஆட்சி
என்று பொருள். உற்சாக மிக்க இளம் அரசியல் சீர்திருத்த
வாதிகள், அரசாங்க நிர்வாகிகளின் உதவிகொண்டு இந்த
மன்னன் விரைவாக ஜப்பானை உருத்தெரியாமல் மாற்றிவிட்
டான். 1881-இல் ஒரு தேசியப் பார்லிமெண்ட் அமைக்கப்பட்
டது. ஐரோப்பியப் பாணியில் 1885-இல் மந்திரி சபையும்
ஸ்தாபிக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தியும் விரைவாகவே ஏற்
பட்டது. ஜப்பானிய என்ஜினியர்கள், விஞ்ஞானிகள், நிர்
வாகிகள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பயிற்சிபெற்றுத்
திரும்பி வந்து, ஜப்பானைத் தொழில் வளமுள்ள நாடாக
மாற்றிவிட்டனர். விரைவான தொழில் வளர்ச்சி அடையும்
நாடுகளில் ஏற்படுவதுபோலவே இங்கும் குடியானவர்கள்
மிகுந்த கஷ்டத்திற்குள்ளானார்கள். ஏனெனில், நகரப் பாட்
டாளிகளுக்கு உணவு வசதியளிப்பதற்காக, இவர்கள் மிகவும்
கடினமாக உழைக்கவேண்டியிருந்தது. ஆனால் இந்த உழைப்
புக்கேற்ற ஊதியமோ, பிரதிபலனோ அவர்களுக்குக் கிடைக்க
வில்லை.

ஆனால் பொங்கிவரும் இந்தத் தேசிய ஆர்வம்கொண்ட
வர்களுக்குச் சமாதானத்தில் அவ்வளவாகப் பற்றுதல் இருப்ப
தில்லை. 1895-இல் ஜப்பானியர் அயல் நாட்டுப் போர்களில்
கவனம் செலுத்தத் தொடங்கினர். சீனா மீது போர்
தொடுத்து ஃபார்மோஸாவைக் கைப்பற்றினர். 1902-இல் ஜப்
பான் பிரிட்டனுடன் ராணுவ ஒப்பந்தம் செய்துகொண்டது.
நான்கு ஆண்டுகளுக்குப் பின் ஜார் ஆட்சியிலிருந்த சக்தி
வாய்ந்த ரஷ்யாவைத் தோற்கடித்தது. இது கண்டு உலகமே
வியப்படைந்தது. ஆனால் ஆசியர்கள் பெருமகிழ்ச்சியடைந்
தனர். 1910-இல் ஜப்பான் கொரியாவைத் தனது ராஜ்யத்தில்

சேர்த்துக்கொண்டது. அடுத்த தலைமுறையில் ஜப்பா
னுடைய ராணுவ பலமும் பிரிட்டனுடன் நேசமும் சேர்ந்து
ரஷ்யாவை ஆசியாவில் நுழையாமல் தடுத்தது. பிரிட்ட
னுக்கு ஆசியாவிலிருந்து தொல்லை ஏற்படாமலும் தவிர்த்தது.
ஆனால் ஜப்பான் அளவுக்குமீறி ஆக்கிரமித்துவிட்டது.
சீனச்சண்டை மஞ்சூரியாவில் 1931-இல் சிறிய அளவில்
தொடங்கி நின்றது. 1937-இல் பீகிங்கில் மீண்டும் ஆரம்பித்
தது. தென் கிழக்கு ஆசியாவில் பாய்ந்து, அதே சமயத்தில்
பெர்ல் துறைமுகத்தைத் தாக்கிய சமயம் ஜப்பானின் ஆக்கிர
மிப்பு ஓரளவுதான் வெற்றி பெற்றது. 1945-இல் மிஸ்ஸோரி
எனும் கப்பல் மேல்தளத்தில் ஜெனரல் மக் ஆர்தரிடம் சரணு
கதி அடைகையில் ஜப்பானின் எதிர்காலம் எவ்வாறிருக்கும்
என்று திட்டமாகக் கூறமுடியாமலிருந்தது.
ஜப்பானில் ஜனநாயகம் இன்னும் வேரூன்றவில்லை.
இதற்குக் காரணங்கள், ஏககாலத்தில் பொருளாதார அபி
விருத்தியிலும், யுத்தத்திலும் கவனம் செலுத்தியதும், ஜனங்
களுக்கு நன்மை ஏற்படும் வகையில், பரந்த அளவில் அத்
தியாவசியமான சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்களை
நிறைவேற்றாததும்தான். ஜப்பானிய சமூகம் மேம்படத்
தீவிர சீர்திருத்தங்கள் அவசியம் என்பதை உணர்ந்த
நாம், நமது அதிகார பலத்தைக் கொண்டு அடியிலிருந்து
சமூகத்தைத் திருத்தியமைக்கத் தக்க சீர்திருத்தங்கள் ஏற்
பட வகை செய்தோம்; வர்த்தகத்தில் ஏகபோக நிலை இருந்
ததை ரத்து செய்ய முயற்சித்தோம்; பாக்கியுள்ள பணக்
காரர்களுக்குக் கடுமையாக வரி விதித்தோம்; உழுது பிழைக்
கும் குடியானவர்களுக்கு நிலங்கள் அளித்தோம். பெண்களுக்
குச் சம உரிமைகள் அளித்தோம்.
இம்மாறுதல்கள் யாவும் அந்நிய ஆட்சியினர் வலுக்
கட்டாயமாகச் சுமத்திய மாறுதல்கள். ஒரு வகையான,
தர்மசிந்தனையுள்ள காலனி ஆட்சி என்று இதைக் கூறலாம்.
மக் ஆர்தர் ஆட்சியில் புரியப்பட்ட சில காரியங்கள் யுக்த
மானவையல்ல என்று கூறலாம். ஆனால் ஆசியாவிலே ஏற்
பட்ட நிலச் சீர்திருத்தங்களில் சிறப்பானவை அவர் கொணர்ந்
தவை. அவை சரித்திரங்கண்டிராத தீவிரத்தன்மை வாய்ந்
தவை. இவை மூலம் ஜப்பானுக்குச் சீரிய ஜனநாயக வாழ்வு
கிட்டும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டது. அதிருப்தி கொண்ட
குடியானவர்கள், நிலச்சுவான்தார்களுக்குப் பெருந்தொகை
கள் பகுதிப்பணமாகக் கட்டிவந்தனர். இவர்களும், தன்
னிலையற்ற நகரப் பாட்டாளி மக்களும், மாணவர்களும்
ஒன்று சேர்ந்திருந்தால், ஜப்பானிய அரசியலில் குழப்பம்
பெருகியிருக்கும். இந்த நிலை ஏற்படாமல் தவிர்த்தது மக்
ஆர்தரின் சீர்திருத்தமே.



நமது யோசனையின்பேரில் ஜப்பானிய அரசியலமைப்பில்,
யுத்தத்தைக் கைவிடுவதாகவும், இனிப் படைகள் வைத்துக்
கொள்வதில்லையெனவும் ஒரு ஷரத்தைச் சேர்த்துக்கொண்ட
னர். மீண்டும் ராணுவப் புனரமைப்பில் இறங்க ஜப்பானியர்
மறுத்தனர். இதற்குக் காரணம் ராணுவப் புனரமைப்பினுல்
ஏற்படக்கூடிய ஏராளமான செலவும், அணுகுண்டு யுத்தத்
தில் அவர்களுக்குள்ள அருவருப்பு மட்டுமல்ல, நமது ஆக்கிர
மிப்புப் படையினரே யுத்த வெறுப்பைப் போதிக்கின்றனரே
என்பதனுல் ஜப்பானியரிடையே ஏற்பட்ட குழப்பமுமாகும்.
ஜனநாயக ஸ்தாபனங்கள் நிறுவாமல் விரைவான யந்
திரத் தொழில் அபிவிருத்தி செய்வது, உலக சமாதானத்தை
யும் ஸ்திரத்தன்மையையும் எவ்வாறு பாதிக்கக்கூடும்?
இதற்குச் சமீபகால உதாரணங்களாகக் கம்யூனிஸ்டல்லாத ஜப்
பானும், ஜெர்மனியும் அமைந்திருக்கின்றன. உலகத்தைக்
குழப்பத்தில் ஆழ்த்தும் அளவுக்கு இவ்விரு நாடுகளும் பொரு
ளாதார சக்தியைப் பெருக்கிக்கொண்டன. ஆனால் அந்த
சக்தி திட்டமாகக் கட்டுப்படுத்தக் கூடிய சம்பிரதாயங்களை
வகுத்துக்கொள்ளவில்லை; அதற்கான ஸ்தாபனங்களை அமைத்
துக்கொள்ளவுமில்லை.
ஜெர்மனியும், ஜப்பானும் தங்களது யந்திரத்தொழில்
களைப் பெருக்கிக்கொண்டிருக்கையில், ஐரோப்பியர் அதைக்
கவலையின்றிக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஆனாலும்
இரண்டாவது உலக யுத்தத்தில் இவ்விரு நாடுகளுமே, அட்
லாண்டிக் நாட்டினரின் பெரும்பகை நாடுகளாக இருந்தன.
அவைகளுடைய ஆவேசம் மிக்க தாக்குதலை ஏராளமான
பொருள், உயிர்ச்சேதம் செய்தே முறியடிக்க முடிந்தது.
இந்தியாவிலும், ஸஹாரா பாலைவனத்திற்குத் தெற்கே
யுள்ள காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளிலும் சேர்ந்துள்ள
இயற்கை வளம் ஜெர்மனி அல்லது ஜப்பானுக்குள்ளதை
விட அதிகமானது. இவ்விரு நாடுகளின் ஜனத்தொகை
யும் அதிகம். அவர்களிடையே ஆழ்ந்த மனக்குறையும் இருக்
கிறது. மேம்பாடடைய வழி காட்டி வருந்தியழைக்கும்
முறையில் கம்யூனிஸ்ட் சீனுவும், ரஷ்யாவும் அமைந்திருக்கின்
றன. இவ்விரு நாடுகள் (ஜெர்மனியும் ஜப்பானும்) எவ்வாறு
தங்களது பொருளாதார அபிவிருத்தியைத் தேடிக்கொள்ளும்
என்பது பற்றி நாம் கவலைப்படுவதற்கு முக்கிய காரணம் ரஷ்
யாவும், சீனுவும் இவைகளைக் கவர்ந்துவிடுமோ என்பதல்ல.
ஆனால் இவ்விரு நாடுகளும் அருகாமையில் இருப்பதனுல்
பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதமாகச் செய்து முடிக்க
வேண்டும் என்பதுதான்.
யந்திரத் தொழில் பெருக்கம், பொருளாதார அபி
விருத்தி ஏற்படும் நாடுகளில் பெரிய அளவில் அரசியல் சமூக

மாறுதல்கள் நிகழ்கின்றன. ஆனால் மார்க்ஸ் கூறுகிறபடி,
யந்திரத் தொழில் பெருக்கம் மாறுதலின் தன்மையைப்
பாதிக்கவில்லை என்பதைப் பன்முறை வற்புறுத்திக் கூற
வேண்டியிருக்கிறது.

இதற்கு நேர்மாறானதுதான் உண்மை. பொருளாதார
அபிவிருத்தியின் விளைவாக ஏற்படும் சமூக அரசியல் மாறுதல்
களின் தன்மையே தொழிலில் ஈடுபட்டுள்ள சமூகத்தின் தன்
மையை உருவகப்படுத்துகிறது. எம்மாதிரி மாறுதல்கள்
வேண்டும் என்பது அந்தந்த நாட்டினரின் இஷ்டத்தைப்
பொறுத்தது. இந்தத் தொழில் அபிவிருத்தியின் ஒவ்வொரு
கட்டத்தையும், அதற்கான செயலையும் ஜனநாயக லட்சியத்
திற்கோ, அல்லது ஜனநாயகத்திற்கு மாறான நோக்கங்கள்
ஈடேறுவதற்கோ ஏற்ற சாதனங்களைப் பயன்படுத்தி வகுத்
துக்கொள்ளலாம்.

நிலத்தின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாய
முறைகளைத் திருத்தி அமைத்தல், குடியானவர்கள், நகர
மக்கள் கல்வியும், பயிற்சியும் பெறுதல், அரசாங்க நிர்வா
கம், தனிப்பட்டோரின் தலைவர்கள் முதலியவர்களிடையே
சேவை உணர்வும் சிறந்த சம்பிரதாயங்களும் ஏற்படச்
செய்தல், கனகரகத் தொழில்களுக்கும் பரவல் தொழில்
முறைகளுக்கும் மூலதனத்தைப் பாகுபாடாகப் பகிர்ந்தளித்
தல் - இவை யாவற்றையும் இரண்டில் ஒருவகையில் பயன்
படுத்தலாம். ஆளும் சிலருக்கு மக்களைப் படிப்படியாகப் பணி
யும்படிச் செய்வதற்கும் பயன்படுத்தலாம். மக்களிடையே
செயல் ஆற்றலும், தன்னம்பிக்கை ஏற்படுவதற்கும், கூட்டுற
வுக்கும், ஜனநாயக முறையில் சமரஸ பாவம் பெருகுவ
தற்குமான ஸ்தாபனங்கள் அமைக்கவும், அரசியல் அதிகார
மும், பொருளாதார முன்னேற்றமும் நிலையாக இருப்பதற்
கான ஆதாரங்கள் வகுக்கவும் பயன்படுத்தலாம்.

எந்த அபிவிருத்தித் திட்டமும் உத்வேகத்துடன் செயல்
படுவதற்கு மக்களின் ஜீவசக்தியும் உற்சாகமும் வேண்டும்.
வகுப்பு, ஜாதி, அந்நியர் மீது துவேஷத்தைக் கிளப்புவ
தன் மூலமும், இந்த சக்தியைப் பெருக்கலாம். தேசிய,
சமூக, தனிப்பட்டோர் அபிவிருத்தி ஏற்படுவதற்கான முயற்
சியில் ஒத்துழைக்கவேண்டும் என்கிற ஆக்க உணர்ச்சியை
மக்களிடத்தில் கிளப்புவதன் மூலமும் உற்சாகத்தைப் பெருக்க
முடியும்.

நிலப் பிரபுத்துவத்திற்குப் பதிலாகச் சுதந்திரம், மனித
கண்ணியம், பொருளாதார அபிவிருத்தி—காலனி ஆட்சி
எதிர்ப்புப் புரட்சியில் இந்த மூன்று அம்சங்களையும் ஒன்றாகப்
பொருத்தி வெற்றி காணமுடியுமா அல்லது ஏதாவது ஒரு
வகையில் பயன்காண ஒன்றிரண்டு அம்சங்களைக் கைவிட



வேண்டுமா? ஒவ்வொரு சமயங்களில் இவை ஒன்றிற்கொன்று
முரண்பட்டதுபோல் காணப்படுகின்றன.

ஆனால் இவைகளில் ஏதாவது ஒன்றிரண்டு அம்சத்
தில் கவனம் செலுத்துவதனால் புரட்சி முற்றுப்பெறுவ
தில்லை. மேலும் இந்த அம்சங்கள் மக்களிடையே நிலை
பெறுததுடன் அவைகள் முன்னறிவிப்பின்றி மாற்றப்பட்டுவிட
வும் கூடும். பூரண ஜனநாயகப் புரட்சியின் எல்லா அம்சங்களை
யும் நிறைவேற்ற முற்படுவது பிரமிப்பூட்டும் பணியாகும்.
இம்மாதிரிப் பூரணப் புரட்சியை நிறைவேற்ற முடியுமா
என்று காந்திகூடச் சில சமயம் சந்தேகப்பட்டிருக்கிறார்.

இவற்றில் ஒவ்வொரு அம்சத்திற்குப் பல்வேறு அளவில்
முக்கியத்துவம் அளித்தவர்கள் பாண்டுங்கில் கூடியிருந்
தனர் என்பது தெளிவு. சௌதி அராபியா மூர்த்தன்ய
மான காலனி ஆட்சி எதிர்ப்புப் புரட்சிக் கருத்துக்களைப்
பிரசாரம் செய்தது. ஆனால் ஒளிமறைவற்ற நிலப்பிரபுத்வ
முறையையும் அந்நாடு பின்பற்றி வருகிறது. தாய்லாந்தில்
படித்தோர் எண்ணிக்கை அதிகம். உயர்தர ஆரோக்கிய
வசதியும் இருக்கிறது. நீண்ட காலமாக சுய ஆட்சி நடத்தி
வந்திருக்கிறது. ஆனால் சர்வாதிகாரச் சாயை அதன் அரசிய
லில் காணப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.
1955-இல் ஜனநாயக முறையில் மக்கள் ஆட்சியினருடன் ஒத்
துழைப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டு வருவதாக இந்
நாட்டில் அறிவிக்கப்பட்டது தென்பூட்டுவதாயிருக்கிறது.
சீனக் கம்யூனிஸ்ட் புரட்சி, அப்போதைய நிலையை அடி
யோடு ஒழிப்பது எனும் குறிக்கோளைக் கொண்டது. ஆனால்
இந்த நோக்கம் ஈடேறுவதற்காக அது கையாண்ட முறை
கள், தாங்கள் அரசியல் சுதந்திரம் பெறுவோம் என்ற சீன
மக்களின் நம்பிக்கையைச் சிதற அடித்துவிட்டது.

எவ்வளவோ தடைகள் இருந்தாலும் பூரணமான இந்த
நான்கு அம்சப் புரட்சியை வெற்றிகரமாக நடத்துவதுதான்
ஆஃபிரிக்க ஆசியத் தலைவர்களின் ஆவல். இந்த ஆவல் இருப்
பதற்கான அறிகுறிகளைப் பாண்டுங்கில் கூடியிருந்தவர்க
ளிடையே கண்டதுதான் நம்பிக்கையூட்டுவதா யிருக்கிறது.
காலனி ஆட்சி எதிர்ப்பு எனும் நாஸ்திக அம்சத்தை அவர்
கள் கைவிட்டனர். அதற்குப் பதிலாகப் பூரண ஜனநாயக
ஆட்சி அடைவதைத் தங்கள் நோக்கமாகக் கொண்டனர்.
பாண்டுங்கில் நிலவிய இன வேற்றுமை எதிர்ப்புக்குப் பழைய
வெள்ளையர் பிற நிறத்தினர் விரோதம் என்று மட்டும்
அவர்கள் பொருள் கொள்ளவில்லை. தங்களுக்குப் பிடிக்
காத இனத்தாரை ஒதுக்கி வைப்பது எனும் அடிப்படையில்
தான் ஆஃபிரிக்காவில் பெரும் பகுதியிலும் உலகின் பிற
பாகங்களிலும் அரசாங்கம் நடக்கிறது; மனிதத் தொடர்

பும் நிலவுகிறது. இம்மாதிரிக் கொள்கைகளும், பழக்கங்
களும் நிலவுவது கண்டு வருந்துவதாகப் பாண்டுங்கில் தீர்
மானம் நிறைவேறியது. இம்மாதிரி இனப் பாரபட்சம்
கறுப்பு மக்களின் கலாசாரத்தை ஒடுக்குதல் ஆகும் என்றும்
அவர்கள் கருதினர்.

ஆனால் இன வேற்றுமை உலகெங்கும் நிலவும் நோய்
என்பதைப் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டனர். ஜப்பானி
லிருந்து வந்திருந்த டட்ஸுனேஸுகே டாகஸாகி [Tatsuno-
suke Takasaki]போன்றவர்கள், ''ஆசிய ஆஃப்ரிக்க நாட்டின
ரிடையே இன ஒற்றுமை இருக்கிறது'' என்று பேசினர்.
இதிலிருந்து பாண்டுங்கில் இம்மாதிரி எண்ணங்களே நில
வின என மேற்கத்தியார் கவலை கொண்டனர். இம்மாதிரி
அச்சத்திற்கு இடமேயில்லை என மகாநாட்டினர் தெளிவு
படுத்தினர். குறுகிய மனப்பான்மை கொண்டோ, மற்ற
தேசத்தினரிடம் போட்டி மனப்பான்மையுடனே கூடவில்லை
என்று மகாநாடு தெளிவுபடுத்திற்று. மகாநாட்டிற்கு
அழைப்பு அனுப்பப்படாத ஆஸ்திரேலியா நியூஜிலந்து முத
லிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான முயற்சி
களும் செய்யப்பட்டன.

யுத்த காலத்தில் ஜப்பானிய ஆதிக்கத்திற்குக் கீழ்ப்
பட்ட கஷ்டத்தின் விளைவாகவே அந்த நாட்டு மக்கள்
வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சிக்குப் பதிலாகப் பழுப்பு,
கறுப்பு அல்லது மஞ்சள் நிறத்தினர் ஆட்சிக்கு மாறுவதில்
பயன் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தனர். பல நூற்
றூண்டுகளாக ஐரோப்பியர்கள் தங்களுக்குட்பட்ட மக்களை
வேண்டுமென்றே இழிவுபடுத்தி வந்தனர். இதனால் ஆசிய,
ஆஃப்ரிக்க மக்கள் மனம் புண்பட்டிருந்தது. இந்த நிலையில்
அவர்களை விடுவிக்க வருவதாகக் கூறிக்கொண்டு, படை
யெடுத்து வந்தனர் ஜப்பானியர். ஆகையால் இதுவரையில்
ஐரோப்பியரிடம் கஷ்டப்பட்டு வந்தவர்கள் ஜப்பானியரை
மனமார வரவேற்றனர்.

இதன் மூலம் மேற்கத்தி ராணுவ பலத்தை முறியடிக்க
முடியாது என்கிற ஐதிகம் குலைந்தது. ஜப்பான் படைப்
பீரங்கிகள் மலாயாவை உழுதுகொண்டு சிங்கப்பூரை நோக்கி
விரைந்தன. இந்தப் பலம் பொருந்திய கடல்தளமும், ஆசி
யாவில் பிரிட்டனின் உன்னத ஆதிக்கத்தின் சின்னமுமான
ஹாங்காங்கும் ஆசியப் படைகளுக்கு முன் சுலபமாகப் பணிந்
தன. ஜெனிவாவில், ''ஆசியா ஆசியருக்கே'' எனச் சௌ என்
லாய் பேசியது அவர் புதிதாய்க் கண்டுபிடித்த சுலோக
மல்ல. இதை முழக்கிக் கொண்டுதான் தூரக் கிழக்கு
நாடுகளில் ஜப்பான் வெற்றிமேல் வெற்றி பெற்றது.



நீண்ட கால வெள்ளைக் கொடுங்கோன்மைக்குப் பிறகு
சுதந்திரம் பெறலாம் என்கிற ஆவல் மேலீட்டால் ஆங்
காங்கு மக்கள் ஜப்பானியரை வரவேற்றனர். இந்த நல்
லெண்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய இளக்கத்
தன்மை ஜப்பானியருக்கு இருந்திருக்குமானல் அவர்கள்
ஆசியாவில் இதைவிட நிலையான வெற்றி பெற்றிருக்கலாம்.
ஆனால் உக்ரேனில் நாஜிகள் செய்தமாதிரி ஜப்பானியரும்
சந்தர்ப்பத்தைக் கைவிட்டு விட்டனர்.

ஐரோப்பிய ஆட்சியினரைவிட, மிருகத்தனமாக ஈவிரக்க
மற்ற முறையில் ஜப்பானியர் ஆட்சிபுரிய விரும்புகின்றனர்
என்பது சில வாரங்களுக்குள் தெரிந்துவிட்டது. ஆளப்
பிறந்தவர்கள் போல் ஜப்பானியர் நடந்து கொண்டதனால்
ஆரம்பத்தில் மக்களுக்கிருந்த உற்சாகம் நாளடைவில்,
மனக்கசப்பாகவும், கடுமையான எதிர்ப்பாகவும் மாறிற்று.
ஆசியாவிலேயே பிலிப்பைன்ஸுக்கு மட்டும்தான் யுத்தம்
முடிந்ததும் சுதந்திரமளிப்பதாக ஜப்பானியர் வாக்களித்
தனர். ஆனால் எதிர்பார்த்தபடி நடக்காது போகவே அங்கே
தான் பயனுள்ள வகையில் எதிர்ப்புக் கடுமையாயிற்று.

ஜப்பானிடமிருந்து கற்ற படிப்பினையைத் தவிர தங்க
ளது நாடுகளிலேயே பல்வேறு வகுப்பு அல்லது ஜாதி வித்தியா
சங்கள் நிலவி வருவதைப் பற்றி ஆசிய மக்கள் சங்கடப்
பட்டனர். உதாரணமாக, கறுப்பு மக்களைச் சமமாக
நடத்த வேண்டுமெனச் சர்வதேச அரங்குகளில் இந்தியர்
வன்மையாக வற்புறுத்தி வருகின்றனர். ஆனால் அவர்க
ளிடையே தீண்டாமையெனும் களங்கம் இருக்கிறது. ''வர்
ணம்'' எனும் வடமொழிச் சொல்லிற்கு, ''நிறம்'' என்று
பொருள்.

தீண்டாமையை அகற்றுவதற்கான பல முக்கியமான
போராட்டங்களில் தம்மைக் காந்தி அர்ப்பணித்துக்கொண்
டார் என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். 1950-இல்
வகுக்கப்பட்ட அரசியல் அமைப்பில் தீண்டாதாரிடம் வேற்
றுமை காட்டுவது சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்
டது. இது காந்தியப் போராட்டத்தின் விளைவேயாகும்.
1955-இல் இப்படி வேற்றுமை பாராட்டும் குற்றத்திற்குக்
கடும் தண்டனை விதித்துச் சட்டங்கள் இயற்றப்பட்டன.
எனினும் நெடுங்காலப் பழக்கங்கள் எளிதில் மறைவதில்லை.
ஜாதி வேற்றுமை இன்னமும் குறிப்பாகக் கிராமாந்தரங்களில்
இந்தியாவின் சக்தியைப் பெரிதும் பாதிக்கிறது.

'' தங்களுடைய நாடுகளில் இன வேற்றுமையைப் பூண்
டின்றி அழிக்க ஆசிய ஆஃப்ரிக்க மக்கள் உறுதிகொண்டிருப்ப
தாக,'' பாண்டுங் பிரதிநிதிகள் தீர்மானம் செய்தனர். இந்
தத் தீமையை அகற்றுகையில் அதே தீமைக்காளாகாமல் பாது

ாப்பதற்காகத் தங்களது முழுத் தார்மிக சக்தியைப் பயன்
படுத்துவதாக அவர்கள் சபதம் செய்துகொண்டனர்.

காலனி ஆட்சித் தகராறுக்கு அடுத்தபடியாகப் பொருளா
தார அபிவிருத்திக்காக ஆக்க முறையில் வேலை செய்வது
பற்றி பாண்டுங் மகாநாட்டினர் வற்புறுத்தினர். ''மனித
உரிமைகள், ஜீவாதார சுதந்திரம் இரண்டையும் அநுபவிப்ப
துடன் நின்றுவிடலாகாது. பொருளாதாரத் தேவைகளையும்
இவர்கள் திருப்தி செய்து கொள்ளவேண்டும். பொருளாதார
நலனே ஆசிய, ஆஃப்பிரிக்க நாடுகளின் அத்தியாவசியமான
தேவை. ஆசிய, ஆஃப்பிரிக்க மக்களின் வாழ்க்கைத் தரத்தை
உடனடியாக உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம்.
வேறு எதற்கில்லாவிடினும் பட்டினி, வறுமை, நோய்
முதலியவை பீடிக்காமல் பாதுகாத்துக் கொள்வதற்காக
வாவது வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்.'' இவ்வாறு
தாய்லாந்து இளவரசர் வான் (Wan) கூறினார்.

உலக மக்களில் ஐந்தில் மூன்று பங்குக்கு மேற்பட்ட
வர்கள் பொருளாதார அபிவிருத்தி பெறாத நாடுகளில் வாழ்
கின்றனர் என்றும், இவர்களில் பெரும்பாலானவர்களின்
பிரதிநிதிகள் பாண்டுங்கில் கூடியிருந்தனர் என்றும் வான்
அறிந்திருப்பார்.

தங்களது பொருளாதாரச் சீர்கேட்டிற்குக் காலனிக் ஆட்
சியே பெரிதும் காரணம் என்று அவர்கள் எண்ணியிருப்பர்.
தங்களது பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டிருப்பது,
தங்கள் நாட்டில் தொழில் வளமோ வர்த்தகப் புழக்கமோ
இல்லாதது, தங்களது தளப்பொருள் ஏற்றுமதிக்கு அளவுக்கு
மீறி மேநாட்டுச் சந்தைகளை நம்பி இருப்பது, உதாரண
மாகச் சணல், தேயிலை, பருத்தி, தகரம், கொப்பரை, முத
லியன-தொழில் பயிற்சி குறைவாயிருப்பது - யாவற்றிற்கும்
ஏகாதிபத்ய ஆட்சியாளரே காரணம் என்று சரியாகவோ,
தவறாகவோ அவர்கள் எண்ணி வந்திருக்கின்றனர். ஐரோப்
பியக் காலனி ஆட்சியாளர் பள்ளிகளைவிட சிறைகளே அதிக
மாகக் கட்டினர் எனும் பழைய கூற்றை பாண்டுங்கில் கூடிய
ஆசிய ஆஃப்பிரிக்க பிரதிநிதிகள் மறந்திருக்கமாட்டார்கள்.

பாண்டுங்கில் இருந்து வெளியான முதல் அறிக்கை
யிலேயே, ''ஆசிய, ஆஃப்பிரிக்கப் பகுதிகளில் பொருளாதார
அபிவிருத்தியைப் பெருக்குவதன் அவசியத்தைப்'' பற்றிக்
குறிப்பிட்டிருந்தனர். இன்று, அவர்கள் தீர்க்கவேண்டிய
கடினமான பிரச்னைகளுக்கு காலனி ஆட்சிச் சீர்கேட்டைப்
பழித்தால் மட்டும் போதாது என்பதைச் சிந்தனை சக்தியுள்ள
தலைவர்கள் அறிந்திருந்தனர்.

இதற்குப் பயனுள்ள வகையில் சிந்தித்து திட்டம் வகுக்க
வேண்டும். முதல்படியாக ஆசிய ஆஃப்பிரிக்கர்களுக்குள்



பரஸ்பரத் தொழில் நுணுக்க உதவி பெறுவதற்கு விரிவான
திட்டம் வகுக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்திக்
காக பிரத்தியேகமாக, ஐ. நா. நிதி உதவி கோரினர்.
சர்வதேச பாங்கினர், ஆஃப்பிரிக்கா, ஆசிய நாடுகளுக்கு பிரத்
தியேக பொருள் வசதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்
டனர்; வியாபாரம் நிலையாயிருக்கவும், விலைவாசிகள் திட்டமா
யிருக்கவும் வகை செய்ய வேண்டுமென்றும் விரும்பினர். ஆசிய
ஆஃப்பிரிக்க நாடுகளுக்குப் பயன்படும் வகையில் சாத்விகத்
துறைக்கு உபயோகமாகும்படி அணுசக்திக் கட்டுப்பாடு
செய்வதன் அவசியத்தையும் அவர்கள் வற்புறுத்தினர்.

பொருளாதார முன்னேற்ற ஆர்வம், புதிய தேசியத் துடி
துடிப்பு நிலவுமிடங்களிலும், காலனி ஆட்சி வெறுப்பும் இன
உணர்ச்சியும் கொந்தளிக்குமிடங்களிலும்தான் காணப்
படுகிறது. ஆகையினால், பிராந்திய ஒத்துழைப்பு உணர்ச்சி
வளருவதும், ஐரோப்பாவும், அமெரிக்காவும் அபிவிருத்தி
யடையாத நாடுகளின் இந்தப் பொருளாதாரத் தேவைகளை
திருப்தி செய்வதும் எளிதல்ல.

அபிவிருத்தியடையாத நாடுகள் பிறநாடுகளுடன் பொரு
ளாதாரத் துறையில் அயல்நாட்டு மூலதனத்தைப் பெறுவ
துடன், எல்லா வகைகளிலும் ஒத்துழைப்பதன் உசிததத்தை
யும் அவசியத்தையும் பாண்டுங் மகாநாடு ஒப்புக்கொள்ளும்
எனச் சிலர் எதிர்பார்க்கவில்லை.

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வளர்ச்சியடைந்தத
னால் கட்டுக்கடங்காத தேசிய உணர்ச்சி என்பதற்கே அர்த்த
மில்லாத காலத்தில் காலந்தாழ்த்தி ஆசியாவிலும் ஆபிரிக்காவி
லும் தேசிய உணர்ச்சி தலைகாட்டியிருப்பது இந்தப்புரட்சிகளின்
விசித்திரமான அம்சங்களில் ஒன்று. சிறப்பான அரசியல்
ஒற்றுமையும், சமாதானத்தை நிலைநாட்டக்கூடிய உலக
ஸ்தாபனமும் அவசியம். ஏனெனில் ஜனநாயக அபிவிருத்தியும்,
சீர்திருத்தமும் அடைய வேண்டுமானால், அதற்கு சமாதானம்
அத்தியாவசியமாக வேண்டும். ஆஃப்பிரிக்காவிலும், ஆசியாவி
லும் உள்ள, புரட்சிக்குப் புதிய நாடுகள் சமாதானத்தையும்,
தேசிய ஆதிபத்ய உத்வேகத்தையும் விரும்புகின்றன. இவ்விரு
விருப்பங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை என்பதைச்
சரித்திரவாயிலாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

அமெரிக்காவிற்குச் சில சௌகரியங்கள் இருந்தன. ஒரு
நூற்றாண்டுக்கு சுதந்திரம் அநுபவித்தபொழுது, பிற நாடு
உடன்பாடுகளில் அது சிக்கித் தவிக்கவில்லை. உலக ஸ்தாபனங்
களுடன் உறவு கொண்டு சங்கடப்படவில்லை. தனது உள்
நாட்டு முன்னேற்றத்தில் முழுக் கவனம் செலுத்த முடிந்தது.
உலகம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று உபதேசம்
செய்து விட்டு, அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளுக்குப்

பொறுப்பேற்காமலிருந்து விடலாம். ஆனால் புதிதாகத்
தோன்றியுள்ள ஆசிய, ஆஃப்பிரிக்க நாடுகள் இவ்வாறு ஒதுங்கி
யிருந்துவிடமுடியாது. பிராந்திய அல்லது உலக ஒற்றுமைக்
காகத் தங்களது புதிய தேசிய உணர்ச்சியை அடக்கிக் கொண்
டால் முன்னேறலாம் என்பதை இந்நாடுகள் உணர்ந்திருக்
கின்றன என்பதை அவர்கள் பாண்டுங்கில் கூடியதிலிருந்தே
அறிந்துகொள்ளலாம்.

''சுதந்திரமும், சமாதானமும் ஒன்றுகப் பிணைந்தவை''
என்று பாண்டுங் மகாநாடு தீர்மானித்தது. இதிலிருந்து
சுதந்திரமில்லாத இடங்களில் சமாதானத்திற்கு ஆபத்து ஏற்
படும் என மகாநாட்டினர் கருதினர் போலும். அதே போல்
சமாதானமில்லையெனில் சுதந்திர வளர்ச்சி தடைப்படுகிறது.

சமாதானம் நிலவுவதற்கு ''யுத்தத் தளவாடங்கள்
குறைக்கப்பட வேண்டும், அணு ஆயுதங்களை அகற்றி அவை
களைச் சர்வதேசக் கட்டுப்பாட்டிற்குட்படுத்தவேண்டும்'' என
மகாநாடு வேண்டிக்கொண்டது. இந்த நிலை ஏற்பட்டால்,
சமாதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கே அணுசக்தி
பயன்படும். இதன் மூலம் வாழ்க்கைத்தரம் உயர்ந்து எங்கும்
மக்கள் அதிகப்படியாகச் சுதந்திரம் அநுபவிப்பார்கள்.

இம்மகாநாடு ஆதரித்த கொள்கைகளில், ஐ.நா.வை
ஆதரிக்க வேண்டும் என்பது முதலிடம் பெற்றது. ஐ.நா.வை,
சமாதானத்தை நிலைநாட்டுவதற்கேற்பப் பலப்படுத்துவதற்கு
அவ்வளவாக மனோதர்மம் வாய்ந்த யோசனைகள் எதும் கூறப்
படவில்லை. ஆனால் பெருவாரியான ஆசியர்களும், ஆஃப்பிரிக்
கர்களும் எளிதில் அறிந்திருக்கக்கூடிய யோசனைகள் கூறப்
பட்டன. ஐ.நா.வில் எந்நாடும் அங்கம் வகிக்கலாம். ஆகை
யால் கம்போடியா, இலங்கை, ஜப்பான், ஜோர்டான்,
லேஆஸ், (Laos) லிபியா, நேப்பாளம், ஒன்றுபட்ட வியட்நாம்
முதலிய நாடுகள் ஐ.நா.வில் அங்கத்தினராக அநுமதிக்கப்பட
வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஆசிய, ஆஃப்பிரிக்கப் பகுதி
களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கவில்லையென்று கூறு
கிறார்கள். உலகத்தில் மூன்றில் இரண்டு பகுதியினர் ஆசிய,
ஆஃப்பிரிக்கப் பகுதிகளில் வசிக்கின்றனர். எனினும், இவ்வளவு
மக்களுக்குமாக தேசியச் சீனாவின் பிரதிநிதியே இந்தச் சபை
யில் அங்கம் வகிக்கிறார் என்று எவ்வளவு தடவை கூறினாலும்,
அவர்கள் சலிப்படைவதில்லை. மேலும் இந்தத் தேசியச் சீனா
வில் 90 லட்சம் மக்களே வசிக்கின்றனர். இவர்கள் பாண்டுங்
கிற்கு அழைக்கப்படவில்லை.

ஒவ்வொரு நாடும் தனியாகவோ, பல நாடுகள் ஒன்று
சேர்ந்தோ, ஐ.நா. சாஸனக் கொள்கைகளை ஒட்டித் தங்களைப்
பாதுகாத்துக்கொள்ளும் உரிமையை இம் மகாநாடு ஏற்றுக்



கொண்டது. ஆனால் இந்த ஏற்பாட்டை வல்லரசுகள் தத்தம்
நலனுக்குப் பயன்படுத்திக்கொள்ளவிடலாகாது என்று எச்
சரிக்கை செய்தது.

இதன் மூலம் மணிலாவில் நிறுவப்பட்ட தென்கிழக்கு
ஆசிய உடன்பாட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களை ஒரு
வாறு அங்கீகரித்தது இம்மகாநாடு என்று கூறலாம். ஆனால்
இந்த உடன்பாடு சம்பந்தப்பட்ட பிராந்தியங்களின் பாது
காப்புப் பிரச்னையைத் தக்க முறையில் தீர்ப்பதற்கு உதவி
புரிந்ததாக இந்தத் தீர்மானத்தைக் கருதுவதற்கில்லை.
பாண்டுங் மகாநாட்டில் கம்யூனிஸ்ட் சீனப் பிரதிநிதியுமிருந்
ததனால், இதைவிட அதிகமாக எதுவும் செய்ய இயலவில்லை
போலும்! ஆனால் ஒரு பிராந்தியத்தின் பாதுகாப்புக்காக ஒரு
பிராந்திய ஸ்தாபனம் நிறுவவேண்டும். அதில் இரு வல்லரசு
கோஷ்டியையும் சேராத இந்தியா போன்ற நாடுகள் இடம்
பெறவேண்டும். அம்மாதிரி ஒரு ஸ்தாபனம் அமைந்தால்
சமாதானத்தை நிலைநாட்ட உண்மையிலேயே உதவியா
யிருக்கும்.

ஆசிய, ஆஃப்பிரிக்கப் பிராந்தியமெங்கும் இந்தக் கண்டங்
கள்பற்றி ஆராய்ந்து அறிந்துகொள்ளத்தக்க பல்கலைக் கழ
கங்கள் தொடங்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறை
வேறியது. இதன் மூலம் இந்த வட்டாரங்களில் பரஸ்பர
நல்லுறவு ஏற்பட்டு இக்கண்டங்களின் புராதன நிலைபற்றி
ஆராய்ச்சி செய்யவும் உதவியாயிருக்கும்.

பாண்டுங்கில் எல்லாவற்றையும் உலக நோக்குடன்
பார்ப்பதற்கு விடாமுயற்சி நடைபெற்றது. ''நமக்கு என்ன
நலனைத் தேடிக்கொண்டோம் என்பதைக் கொண்டு, இந்த
மகாநாட்டை மதிப்பிட மாட்டார்கள். உலக மக்கள் யாவ
ருக்கும் என்ன நன்மை செய்தோம் என்பதைக் கொண்டே
மதிப்பிடுவார்கள்''. இவ்வாறு ஜெனரல் ரொமுலோ தனது
இறுதி உரையில் தெரிவித்தார்.

பாண்டுங் மகாநாட்டைக் கவனிப்பதற்குச் சென்ற
ஆசிய, ஆஃப்பிரிக்கப் பகுதிகளைச் சேராதவர்கள், அம்மகா
நாட்டு நடவடிக்கைகள் உலக மக்களை எவ்வாறு பாதிக்கும்
என்பதை நன்குணர்ந்துகொண்டு திரும்பினார்கள். இம்மகா
நாட்டிற்குச் சென்றிருந்த ஓர் அமெரிக்கப் பத்திரிகையாளர்,
தான் பின்னர் சௌதி அரேபியா, ஆஃப்கானிஸ்தான்,
இந்தியா, பர்மா, தாய்லாந்து முதலியவிடங்களுக்குச் சென்
றதுபற்றி எழுதியிருக்கிறார். தமது அநுமதிச் சீட்டில்
பாண்டுங் சென்று வந்ததற்கு அத்தாட்சியைக் கண்டதும்,
சுங்க அதிகாரிகள் தம்மை எளிதில் அனுப்பிவிட்டதைப்பற்றி
அவர் குறிப்பிடுகிறார். கைபர் கணவாயில்கூட பாண்டுங்

எனும் மந்திரச் சொல்லைக் கேட்டதும், ஏராளமாக மக்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு விட்டனராம்.

ஆசியாவிலும், ஆஃப்பிரிக்காவிலும் உள்ள மக்களில் பெருவாரியானவர்கள் சரித்திரத்தை ஆராய்வதன் மூலம் எவ்வாறு புரட்சியைப் பூரணப் பொருளுள்ளதாகப் பூர்த்திசெய்வது என்பதை அறிவார்களானால், அப்படி அறிந்துகொண்டதன் மூலம் ஜனநாயக அபிவிருத்தியைப் பூர்த்திசெய்வார்களானால், வெறுப்பையும், அச்சத்தையும் விட்டு நம்பிக்கை, எதிர்காலத்தில் உறுதி எனும் அடிப்படையில் அட்லாண்டிக் நாடுகளுடன் நட்புறவுகொள்ளும் முறையில் தத்தம் நாட்டை மேன்மையுறச் செய்வார்களானால், மேற்கத்தி நாடுகளிலுள்ள சந்தேகப் பிரகிருதிகள்கூட பாண்டுங்கினால் நம்பிக்கைப் பெறலாம் என்பதை ஒப்புக்கொள்வார்கள். தங்களது சிறப்பான உபதேசங்களில்கூட நம்பிக்கை இழந்து சந்தேகம் கொண்ட உலகிற்குப் பாண்டுங் நம்பிக்கை ஊட்டுகிறது என்பதை உலகம் ஒப்புக்கொள்ளும்.

## அத்தியாயம்—25

# பாண்டுங்கும், யுத்த கெடுபிடியும்

**பா**ண்டுங் மகாநாட்டில் கூடியிருந்தவர்கள் தங்கள் பிராந்தியங்களுக்குப் பொதுவான பிரச்னைகளை ஆராய்ந்து முடிவு செய்வதற்கே கூடினர். ஆனால் சௌ என் லாய் அங்கு வந்திருந்ததனால் பிரதிநிதிகளின் கவனம் வேறு திசையில் திரும்பிவிட்டது. அட்லாண்டிக் நாடுகளுடன் சீனா எவ்வித உறவு கொள்ளும் என்பதற்குப் பிரதிநிதிகள் அளவுக்குமீறிய முக்கியத்துவம் அளித்துவிட்டனர்.

''கம்யூனிஸ்டுச் சீனாவை மேற்கத்தி நாட்டினர் ஒதுக்கி வைத்திராவிட்டால், மற்ற கம்யூனிஸ்ட் சர்வாதிகார நாடுகள் மாதிரி சீனாவுக்கு ஐ. நா.வில் இடமளித்திருந்தால், சௌ என் லாயை பாண்டுங்கிற்கு அழைத்திருக்கவே மாட்டார்கள்.'' இவ்வாறு ஒரு ஆசிய நாட்டு ராஜதந்திரி குத்தலாகக் குறிப்பிட்டார். சீனா பெரிய நாடு; அங்கு ஆசியாவிலேயே நிகழ்ந்திராத பெரிய புரட்சி நிகழ்ந்தது. இதை ஏற்றுக் கொள்ளுவது சற்று மனச் சங்கடத்தைவிளைவிக்கலாம். ஆனால்



இப்படிச் சீனாவை அமெரிக்கா ஏற்க மறுத்ததனால்தான், மற்ற ஆசிய நாடுகள் எப்படியாவது சீனாவை சர்வதேச சபைக்குக் கொண்டு வரவேண்டும் என்று உறுதியுடன் முனைந்தன. இவ்வாறு அந்த ராஜதந்திரி தமது நம்பிக்கையை வெளியிட்டார். ஒரு கனியை உண்ணலாகாது என்று தடுத்தால், எப்படி அதை உண்ணுவதற்கே முயலுவார்களோ, அவ்வாறே அமெரிக்கா ஒதுக்கிய பீகிங் அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச, கூடிப் பணிபுரிய, பிற ஆசிய நாட்டினர் முனைந்தனர்.

பாண்டுங்கில் கூடியிருந்தவர்களைச் சௌ பெரிதும் கவர்ந்து விட்டார் என்பதில் சந்தேகமில்லை. அவர் அந்த வெற்றி அடைந்ததற்குக் காரணம் அவருக்கு இயல்பாயுள்ள கவர்ச்சியும், அவர் காட்டிய நிதானப் போக்கும் மட்டுமல்ல. அங்கு கூடியிருந்த நாடுகளின் மக்களுடைய ஆழ்ந்த அபிலாஷைகளைத் தாம் ஆதரிப்பதாக மிகச் சாமர்த்தியமாக அவர் காட்டிக் கொண்டதே இந்த வெற்றிக்குச் சிறப்பான காரணமாகும்.

பாண்டுங்கில் ஆராய்ந்து முடிவு செய்வதற்கான நான்கு பிரச்னைகள், காலனி ஆட்சி, இன வேற்றுமை, பொருளாதார அபிவிருத்தி, சமாதானம் ஆகியவைதான். இவை ஒவ்வொன் அவர் வெளியிட்டார். றையும், ஆதரிப்பதில் தமது ஆவலை ''ஒரே காரணத்தினால் கஷ்டப்பட்டு ஒரே குறிக்கோளை அடைவதற்காக நாம் போராடுவதனால், ஆசிய-ஆஃப்பிரிக்க மக்களாகிய நம்மிடையே பரஸ்பரம் ஆழ்ந்த அநுதாபம் நிலவுகிறது.'' இவ்வாறு சீனப் பிரதமர் பேசினார்.

காலனி ஆட்சிக்குத் தமது எதிர்ப்பைக் காட்ட மகாநாடு விரும்புகிறதா? ''ஆசியாவிலும், ஆஃப்பிரிக்காவிலும் பெருவாரியான நாடுகளை காலனி ஆட்சியினர் கொள்ளையடித்து வந்திருக்கின்றனர், கொடுமைப்படுத்தி வந்திருக்கின்றனர். ஆகையால் காலனி ஆட்சியை எதிர்த்துக் கிளர்ந்தெழுவது தவிர நமக்கு வேறு வழியில்லை'' என்று சௌ முழங்கினார்.

அடிமைகளாக வாழும் மக்களுக்கு சுய ஆட்சி வேண்டும் என்று மகாநாடு கருதுகிறதா? ''அல்ஜீரியா, மொராக்கோ, டூனிஷியா மக்கள் சுய நிர்ணயமும், சுதந்திரமும் அடைவதற்காக நடத்தும் போராட்டத்தை ஆழ்ந்த அநுதாபத்துடன் சீன மக்கள் ஆதரிக்கின்றனர். பாலஸ்தீனிலுள்ள அராபியர் போராட்டத்தையும் மேற்கு ஈரியன் மீது இந்தோனேஷ்ய மக்கள் கோரும் ஆதிபத்ய உரிமையையும், சீனர் ஆதரிக்கின்றனர்.'' இவ்வாறு இந்தப் பிரச்னை பற்றியும் சௌ பேசினார்.

இன வேற்றுமை, மனித உரிமைகள் ஆகிய விஷயங்களில் மகாநாடு அக்கறை காட்டுகிறதா? ஆசிய, ஆஃப்பிரிக்க மக்களில் ஏராளமான பேர் நிறவேற்றுமை காரணமாக துன்புறுத்

தப்படுகின்றனர். அவர்களுடைய மனித உரிமைகள் பறிக்
கப்பட்டு வருகின்றன என்றெல்லாம் சௌ குறிப்பிட்டார்.

மகாநாடு பொருளாதார அபிவிருத்தி பற்றியும், நிலப்
பிரபுத்வத்தைப்பற்றியும் ஆலோசித்தது. ''நீண்ட கால
காலனி ஆட்சியின் விளைவாகச் சீனு உள்படப் பெருவாரியான
ஆசிய ஆஃபிரிக்க நாடுகள் பொருளாதாரத் துறையில் பின்
தங்கியே இருக்கின்றன. ஆகையினுல்தான், நாம் அரசியல்
சுதந்திரத்துடன் பொருளாதாரச் சுதந்திரத்தையும் விரும்பு
கிருேம்.'' இம்மாதிரி பேசியவர் சௌ தான்.

சமாதானத்தைப் பற்றிப் பேசுகையில், கூடிவாழ்தல்
என்கிற கம்யூனிஸ்ட் கோஷத்தையும், ஆயுதக் குறைப்புப்
பற்றிய சோவியத் திட்டத்தையும் வற்புறுத்தியதுடன்,
சௌ நின்றுவிடவில்லை. ஐ. நா. வின் மேற்பார்வையை
யும், கூட்டுப் பாதுகாப்புத் திட்டங்களையும் உரிமைப் பட்டியலை
யுங்கூட ஆதரித்தார். இதன் மூலம் கம்யூனிஸ்ட் சீனுவின்
ஆசைகள், நடைமுறைகள், கொள்கைகள் முதலியவற்றிற்கு
மாருக நடப்பதை அவர் பொருட்படுத்தவில்லை. எனினும்
ஐ. நா.வில் அங்கம் பெற வேண்டிய நாடுகள்பற்றி பாண்டுங்
கில் தயாரிக்கப்பட்ட ஜாபிதாவில் கம்யூனிஸ்ட் சீனுவின்
பெயர் இல்லை.

ஃபார்மோஸா விஷயமாக ஏற்பட்டுள்ள மனக்கசப்பு
பற்றி அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்த தாம்
தயாராயிருப்பதாக சௌ அறிவித்தார். சீனுவைத் திரை
யிட்டு மூடியிருக்கின்றனர், அங்கு போலீஸ் ராஜ்யம்தான்
நடக்கிறது என்று எண்ணும் பிரதிநிதிகள் தமது நாட்
டிற்கு தாராளமாக வந்து பார்த்துக்கொள்ளலாம் என்றும்
அவர் கூறினுர். ''நாட்டிலுள்ள நல்லது, தீயது, இரண்டு
மல்லாதது எல்லாவற்றையும் பார்க்குமாறு என்னிடம் சௌ
கூறினுர்'' என்று ரொமுலோ தெரிவித்தார்.

சௌ எவ்வளவுதான் சாதுபோல் நடித்தாலும், புதுச்
சீனுவின் தீய போக்கைப் பாண்டுங்கில் கூடியவர்கள் நன்கு
அறிவர். எவ்வளவோ நஷ்டம் அடைந்தே சீனர்கள் கம்
யூனிஸ்ட் புரட்சி நிகழ்த்தினர் என்பதை, அந்த ஆட்சியை
அங்கீகரித்த பாகிஸ்தான், பர்மா, இலங்கை, இந்தியா,
இந்தோனேஷ்யா, ஆஃப்கானிஸ்தான் போன்ற நாடுகள் தங்
களுடைய தூதர்கள் மூலம் அறிவர். நிலப்பிரபுத்வத்தை
விரைவில் அழித்துத் துரிதமாகப் பொருளாதார அபிவிருத்தி
யடைந்ததன் பலனுகச் சீனுவுக்கு என்ன கிடைத்திருக்
கிறது? நிர்ப்பந்தமாகக் கம்யூனிஸ்ட் கொள்கைகளை ஏற்பது,
கட்டாய உழைப்பு, தடம் புரண்டதற்காக மக்களைக் கும்
பல் கும்பலாகக் கொல்லுவது, பிரஜா உரிமைகள் யாவற்றை
யும் இழப்பது-இவைதான் கண்ட பலன். இந்த விளைவுகளி



லிருந்து பார்த்தால் சீனப் புரட்சியைப் பூரணப் புரட்சி
என்று எவ்விதத்திலும் கருதுவதற்கில்லை. ஏனெனில் மனித
உரிமைகளை ஆதரிப்பதாகவும், ஜீவாதார உரிமைகளை விரும்
புவதாகவும் எவ்வளவுதான் அவர்கள் மேடைமீதேறிப் பிர
கடனம் செய்தாலும், இந்த உரிமைகளைக் குறைத்திருக்கின்
றனரேயொழியப் பெருக்கவில்லை.

புரட்சிகரக் கம்யூனிஸ்டுகள் கையாளும் பலாத்காரத்தை
கம்யூனிஸ்டல்லாத ஆசியர்கள் தங்கள் நாட்டிலேயே அநுப
வித்திருக்கின்றனர். ஆகையால் சௌ என் லாயின் சமாதான
ஆர்வப்பேச்சை அப்படியே உண்மையென அவர்கள் எடுத்துக்
கொண்டுவிட மாட்டார்கள். சமாதானத்தைப் பற்றி வாய்
நிறையக் கம்யூனிஸ்டுகள் பேசினுலும், இதுவரை பலாத்
காரத்தையும், சதி செய்தலையும் உலகத்தார் கண்டிருக்கின்
றனரேயொழிய சமாதானத்தையல்ல.

ஆசிய நாட்டினரில் பெரும்பாலோர் சுதந்திரம் பெற்ற
புதிதில் தங்கள் நாடுகளில் ஆயுதம் தாங்கிக் கம்யூனிஸ்டு
கள் கலகம் செய்ததைக் கண்டிருக்கின்றனர். 1948-இல்
தெற்கு ஆசியாவெங்கும் கம்யூனிஸ்ட் பலாத்காரக் கலகங்கள்
நிகழ்ந்தன. கலகங்களின் செயல் முறைகள் மாஸ்கோவில்
தான் முடிவு செய்யப்பட்டன.

சுதந்திர ஆசியர்களுக்கு இந்த உண்மைகள் யாவும்
தெரியும். அவைகளை அவர்கள் மறக்கவும் மாட்டார்கள்.
ஆனுல் மக்களைத் திகைக்கவைக்கும் முறையில் சம்பவங்கள்
துரிதமாக நிகழ்வதனுல் அவைகள் அவர்களுடைய ஞாபக
சக்தியை மங்கச் செய்துவிடுகின்றன. கம்யூனிஸ்டுகளின்
கலக முயற்சிகள் பலிக்காமற்போய் விட்டதனுல், எந்த
மக்களை அவர்கள் ஆகர்ஷிக்க விரும்புகின்றனரோ அவர்க
ளுடன் சமாதானமும் பேசுவதற்கான முயற்சிகளைச் சாதுர்ய
மாகச் செய்து வருகின்றனர்.

எல்லாப் பிரச்னைகளையும், பொருளாதார நோக்கி
லிருந்தே பார்க்கவேண்டும் என்கிற கோட்பாட்டில் பற்றுள்
ளவர்கள் கம்யூனிஸ்டுகள். ஆனுல் காலனி ஆட்சி நாடு
களில், தங்களது அரசியல் கிளர்ச்சியில் பெரிதும்
பொருளாதார சம்பந்தமில்லாத அம்சங்களையே பயன்படுத்தி
வந்திருக்கின்றனர். ஆனுல் அமெரிக்கர் இதற்கு நேர்மாருன
முறையிலேயே நடந்து வந்திருக்கின்றனர். அரசியல் பிரத்யட்ச
நிலையையும், மனுேதத்துவ ரீதியில் பிரச்னைகளைத் தீர்க்கவேண்
டும் என்பதையும் அமெரிக்கர் முக்கியமாகக் கருதவில்லை.

1954-இல் ஸைப்ரஸ், மொராக்கோ, டூனிஷியா, டச்சு
மேற்கு கினி (இரியன்) முதலிய நாடுகள் சம்பந்தமான காலனி
ஆட்சிப் பிரச்னைகளை ஐ. நா. பொதுச் சபை ஆராயவேண்
டும் என வற்புறுத்தப்பட்டது. முன்பு காலனி ஆட்சியிலிருந்த

அராபிய, தென் அமெரிக்கப் பிரதிநிதிகளில் பெருவாரியான
வர்கள் கருத்துக்கு மாறாக, அமெரிக்க கோஷ்டி சுய ஆட்சிக்
கோரிக்கையைப் பொதுஜனசபை ஆராய வேண்டியதில்லை
யென்று முடிவு செய்வதற்குக் காரணமாயிருந்தது. ''இம்
மாதிரி செயல்களினால் அமெரிக்கா காலனி ஆட்சியை ஆத
ரிக்கிறது என்று பிறர் நினைக்கும்படிச் செய்துவிட்டது''
என்று செனடர் வால்டர் ஜார்ஜ் 1955 ஜுலையில் நமக்கு
எச்சரிக்கை செய்தார்.

இதற்கு நேர்மாறாக 1930-லிருந்து நடந்த ஒவ்வொரு
சர்வதேசக் கூட்டத்திலும், ரஷ்யா காலனி ஆட்சி எதிர்ப்பு
இயக்கத்தை ஆதரித்தே பேசி வந்திருக்கிறது.

ஐரோப்பிய காலனி ஆட்சி முறையை எதிர்ப்பதை
ஒட்டியே, ரஷ்யர் இனவெறுப்பையும் எதிர்க்கின்றனர்.
தென் ஆஃபிரிக்காவில் நிறவேற்றுமை நிலையை அறிந்து வர
மூன்று அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு கமிஷனை ஐ. நா.
நியமித்தது. இந்தக் கமிஷனுடன் தென் ஆஃபிரிக்கா அரசாங்
கம் ஒத்துழைக்க மறுத்தது. அப்படியிருந்தும், இந்தக் கமி
ஷன் நீடித்து வேலை செய்யவேண்டும் என்ற ஆசிய, ஆஃபிரிக்க
பிரதிநிதிகள் தீர்மானத்தை சோவியத் கோஷ்டி ஆதரித்தது.
பிரிட்டன், கானடா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய
நாடுகள் எதிர்த்தன. அமெரிக்கா நடுநிலைமை வகித்தது.
இந்தக் கமிஷன் வெளியிட்ட முதல் அறிக்கையை நாம் ஆதரிக்க
வில்லை. தாங்கள் இனவேற்றுமையை சட்டபூர்வமாக அகற்றி
விட்டதாக சோவியத்தினர் கூறியதை அப்படியே இந்தக்
கமிஷன் நம்பிவிட்டது என்பதுதான் நமது ஆட்சேபணைக்குக்
காரணம். ஆனால் நமது இந்தப் போக்கு, பின்தங்கிய நாட்டி
னருக்கு திருப்தியளிக்கவில்லை. ஏனெனில் ஆஃபிரிக்காவில் இன
வேற்றுமை நிலவுவதைப் பற்றி அவர்கள் கவலை கொண்ட
னரே யொழிய ரஷ்யாவில் அத்தீமை இருப்பது பற்றியல்ல.

இதுபற்றி, ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகை 5-4-1955
இதழில் பின்வருமாறு எழுதியது: ''ஒருவகை அபிப்பிரா
யம் கொண்டிருப்பதற்காக மக்களை ரஷ்யாவிலோ சீனாவிலோ
ஒடுக்கினால் அது தவறுதான். ஆனால் மக்களின் நிறம் காரண
மாக ஆஃபிரிக்காவில் அவர்களை ஒடுக்குவது இதைவிடப்
பெரும் தவறு. கம்யூனிஸத்தை நினைத்துக் கலங்குவதனா
லும், இனமாறுபாட்டை அனுஷ்டிப்பவர்களுக்கு உடந்தையா
யிருப்பதனாலும், மேற்கத்தி வல்லரசுகள் சுதந்திர விரோதி
களுக்கு தார்மிக ஆதரவும் அளிக்கின்றன.''

இனச் சமத்துவ விஷயத்தில் தங்கள் சாதனை மிகச் சிறப்
பானது என்று உலகத்தார் நம்பும்படி ரஷ்யர் செய்துவிட்
டனர். ஆனால் இந்தச் சமத்துவம் கஷ்டம் அனுபவிப்பதில்
சமத்வமாயிருக்கலாம். கொடுங்கோலாட்சியில் எல்லோரும்



சமமாகச் சங்கடப்படுகிறார்கள் என்றிருக்கலாம். ஆனால் ஒரு
உண்மையை நாம் மறுப்பதற்கில்லை. ஸ்டாலினின் கடைசி
நாட்களில் யூத வெறுப்புக்கொள்கையை முரட்டுத்தனமாக
நிறைவேற்ற முற்படும் வரையில், யுத்தத்திற்குப் பிறகு சில
தேசிய இனங்களைக் கொடூரமாக ஒழித்துக் கட்ட முனைந்த
தற்கு முன்-இன வேற்றுமை அடிப்படையில் மக்களை ரஷ்யர்
அவ்வளவாகத் துன்புறுத்தவில்லையென்றே கூறவேண்டும்.

இந்தத் துறையில், உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு
சிறந்த பலம் கிடைத்தது. அதுதான் கம்யூனிஸ்ட் சீனாவின்
உதயம். ஏனெனில், இந்த மாபெரும் கம்யூனிஸ்ட் நாடு
ஒரு கறுப்பர்கள் நாடு. அதுவும் ஒரு ஆசிய நாடு. பாண்டுங்கில்
சௌ விற்கு மிகச் சௌகரியமாக அமைந்த ஒரு அம்சம்,
அவர் ஒரு ஆசிய நாட்டினர் என்பதுதான்.

அமெரிக்காவிலேயே நிறவேற்றுமை பாராட்டப்படு
கிறது என்பதனால், அமெரிக்கரையே பிறர் சந்தேகக் கண்
கொண்டு பார்க்கின்றனர். இதிலிருந்து சௌ போன்ற
வருக்கு ஆசியர்களிடையே ஏன் மதிப்பிருக்கிறது என்ப
தன் காரணத்தைப் புரிந்து கொள்ளலாம். நான்
இந்தியாவிலிருக்கையில், என்னைத் திரும்பத் திரும்ப ஒரு
கேள்வி கேட்டனர். அதைக் கேட்டு நான் திகைத்துவிட்
டேன். ஜப்பான் மீது நாம் அணுகுண்டு வீசியதற்குக்
காரணம் அவர்கள் மஞ்சள் நிறத்தவர் என்பதுதானா? ஜெர்
மானியர் மீது அணுகுண்டு நாம் வீசாததற்குக் காரணம்
அவர்கள் வெள்ளையர் என்பதுதானா? இதற்கு நாம் என்ன
சமாதானம் கூறினாலும், அவர்கள் திருப்தியடைவதில்லை.

நம் நாட்டில் நிற வேற்றுமையைச் சமாளிப்பதில் எவ்
வளவு தூரம் முன்னேற்றம் அடைகிறோமோ அவ்வளவுக்கவ்
வளவு நாளடைவில் உலக விவகாரங்களில் நமது செல்வாக்குப்
பெருகும். சமீப காலத்தில் நமது அயல் நாட்டு விவகாரக்
கொள்கைபற்றி எவ்வளவோ பிரகடனங்கள் வெளி வந்திருக்
கின்றன. இவைகளில் மிக முக்கியத்வம் வாய்ந்தது ஜனாதி
பதி காரியாலயத்திலிருந்து வெளி வரவில்லை. நமது ராஜாங்க
காரியாலயத்திலிருந்தும் வரவில்லை. ஆறஅமர யோசித்து,
வார்த்தைகளை அளந்து பேசி நமது சுப்ரீம் கோர்ட் பிரதம
நீதிபதி கூறிய தீர்ப்பின் மூலம்தான் அது வெளி வந்தது.
பொதுப்பள்ளிகளில் நிற வேற்றுமை பாராட்டலாகாது
என்ற அவர் தீர்ப்பே இவ்வளவு சிறப்பு வாய்ந்தது.

பொருளாதார அபிவிருத்தியை விரும்பும் ஆசிய, ஆஃபி
ரிக்க மக்களைத்தான் கம்யூனிஸம் பெரிதும் கவருகிறது.
இரண்டு தலைமுறை காலத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியில்
ரஷ்யா அபிவிருத்தி யடைந்திருக்கிறது. இப்போது யந்திரத்
தொழில் துறையில், மிகச் சக்தி வாய்ந்த நாடாகத் திகழ்ந்து

அட்லாண்டிக் நாடுகளை அச்சுறுத்தும் நிலை அடைந்திருக்
கிறது. இந்த மாறுதல் ஆசிய மக்களின் உள்ளத்தைப்
பெரிதும் கவர்ந்துவிட்டது. குடியானவர்கள் சீரமைப்பு,
உணவு உற்பத்தி ஆகிய இரு மகத்தான பிரச்னைகளைத் தீர்ப்
பதில் வெற்றி கண்டு, விரைவாக யந்திரத் தொழில் பெருக்
கத்தையும் சீனா அடைந்துவிடுமானால், ஒரு ஆசிய நாடு இவ்
வளவு முன்னேற்றம் அடைந்துவிட்டது என்பதனால் ரஷ்
யாவைவிட இந்நாடு பிற ஆசிய ஆஃப்பிரிக்க நாட்டினரைப்
பெரிதும் ஆகர்ஷிக்கும்.

கம்யூனிஸத்திடமும், சீனாவிடமும் உள்ள இந்தக் கவர்ச்சி
கரமான அம்சங்களைப் பாண்டுங்குக்கு வந்த நாட்டினரில்
பெருவாரியானவர்கள் ஏற்கவில்லை. ஆனால் அவர்கள் ஒரு விஷ
யத்தை நன்கு அறிந்துகொண்டுவிட்டனர். கம்யூனிஸமும்,
சீனாவும் ஆசிய ஆஃப்பிரிக்கத் தலைவர்களை அவ்வளவாகக்
கவர்ந்துவிடவில்லை. பட்டினியால் வாடும் குடியானவர்களை
யும், தொழிலாளர்களையும்கூடக் கவர்ந்துவிடவில்லை. இளை
ஞர்கள் அதிலும் வாழ்க்கையில் வெற்றி காணாத அறிவாளி
களையே கவர்ந்துவிட்டது. இந்த அறிவாளிகள்தான் அநேக
மாகப் புரட்சித் தலைவர்களாகின்றார்கள்.

அவர்களுக்கு மேற்கத்தி ஆசியர்கள் பலவித போதனை
கள் செய்தனர். தனிப்பட்டவனே முக்யத்வம் வாய்ந்தவன்;
அவனுக்குத் தன்னிஷ்டப்படி சிந்தித்துச் செயல் புரிய உரிமை
உண்டு, அவன் தன் சக்தியுள்ளமட்டும் முன்னேறிக்கொண்டு
போகலாம். மேற்கத்தியாருக்கு இந்தக் கொள்கைகள் இயல்
பானவையாகத் தோன்றலாம். ஆனால் ஆசியாவிலும்,
ஆஃப்பிரிக்காவிலும் இந்தக் கொள்கைகளே புரட்சியாகக்
கருதப்படும்.

அறிவைக் கிளறக்கூடிய மேற்கத்திக் கருத்துக்களை இவ்
விளைஞர்கள் உற்சாகமாக கிரகித்துக்கொண்டனர். தத்தம்
நாடுகளுக்கு வந்ததும், இந்தக் கருத்துக்கள் அமெரிக்காவுக்
கும், ஐரோப்பாவுக்கும் அப்பால் செலாவணியாகாது
என்பதை துயரத்துடன் அறிந்தனர்.

அவர்களிடம் நிலைபெறத் தொடங்கிய போதனைகளை
அந்த இனப் பாகுபாடு பொய்யாக்கிவிட்டது. இதனால் அந்த
இளைஞர்களிடையே ஏமாற்றமும், மன வெறுப்பும் குடி
கொண்டன. அமெரிக்காவும், ஐரோப்பாவும் தங்களது
ஜனநாயகப் புரட்சிக்கு மாறாக நடந்துகொண்டுவிட்டன
என்றே இவ்விளைஞர்களுக்குத் தோன்றிற்று.

இந்த இளைஞர்களை பணத் தட்டுப்பாடும் பாதித்தது.
இவர்களில் பலர் இலட்சிய ஆர்வமுள்ளவர்கள், தங்கள்
நாட்டுக்குச் சேவை செய்யும் ஆர்வம் கொண்டவர்கள். தங்
களைச் சுற்றி துயரம் குடிகொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சி



யடைந்தனர். இந்தத் துயரத்தை எப்படியாவது அகற்ற
வேண்டும் என்று ஆவல்கொண்டனர். பாம்பை அடிக்கும்
தடியுடன் வருவதுபோல், கம்யூனிஸ்டுகளைப்பற்றி நாம்
கேலிச் சித்திரம் வரைந்திருக்கிறோம். ஆனால் கம்யூனிஸ்டு
கள் இம்மாதிரி கொடியவர்கள்போல் இந்த யுவர்களுக்கு
தோன்றவில்லை. தங்களது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து,
மனித சமுதாயத்திற்கு ஒழுங்காக, தீவிரமாக சேவை புரிய
வழி காட்டுபவர்கள்போல் காட்சியளிக்கின்றனர்.

கம்யூனிஸம் இவ்வாறு புதியதொரு கட்டுப்பாட்டைக்
கற்பிக்கிறது. லட்சிய ஆர்வமுள்ள இளம் ஆசியர்கள்
சிறிது காலத்திற்குத் தாங்கள் ஏதோ சாதித்துவிட்டது
போலும், இனிக் கவலைப்படுவதற்கு இல்லை யென்ற நினைப்
போடும் வாழ்கின்றனர். எதை விரும்பலாம், எதை வெறுக்க
வேண்டும், சர்வ வியாபகமான மார்க்ஸிஸ்ட் லட்சியத்தைப்
பின்பற்றி என்ன சேவை புரியலாம் என்றெல்லாம் கட்சி
அவர்களுக்கு திட்டமிட்டுக் கூறுகிறது. உடனே இந்த
இளம் கம்யூனிஸ்டுகள் தாங்கள் ஏதோ முக்கியமான வேலை
செய்பவர்கள் என்கிற உணர்ச்சி பெறுகின்றனர். ஏதோ
நற்பணியில் பங்குகொண்டிருப்பதுபோல் பெருமையடைகின்
றனர். தங்கள் தலைமுறையில் வாழும் பிறருடன் சேர்ந்து
பணி புரிகிறோம் என எண்ணுகின்றனர். இந்த மகத்தான
இயக்கத்தின் மூலம் ஒன்றுபட்ட, வர்க்கபேதமற்ற சமு
தாயம் தோன்றும் என்று மயக்கம் கொள்கின்றனர்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் திருப்தியளிக்கும் அம்சங்கள்
இருப்பதாக ஆசிய இளைஞர்களுக்குத் தோன்றுகிறது. கம்
யூனிஸ்ட் தலைவர்கள் லஞ்சம் வாங்குவதில்லை. தங்களுக்
கென அவர்கள் எதையும் விரும்புவதாகக் காணப்பட
வில்லை. நாணயமான ஆட்சி உள்ள அமெரிக்கா, கனடா,
ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து போன்ற நாடுகளில் இந்தச் சிறப்
புகள் பிரமாதமாகத் தோன்றுவதில்லை; ஏழைகளைப் பணக்
காரர்கள் இழிவுபடுத்துவதும், ஊழலும் நிறைந்த ஆசியாவில்
இம்மாதிரி நற்குணங்கள் எளிதில் கொந்தளிப்புகளை விளை
வித்துவிட முடியும்.

''கம்யூனிஸ்டு அல்லாதாரிடையே ஒரு தார்மிகப் பேரார்
வம் ஏற்படுத்தினர் கம்யூனிஸ்டுகள். குடியானவர்களிடம்
இவர்கள் பேராதரவு பெற்றனர்.'' இதுதான் இந்தோ-
சீனாவில் தம்மைப் பெரிதும் கவர்ந்தது என்று ஜோஸப்
ஆல்ஸாப் (Joseph Alsop) என்பவர் எழுதுகிறார்.

பரபரப்பூட்டும் லட்சிய ஆர்வத்துடன் இளம் கம்யூ
னிஸ்டுகள் சில காலம் வாழ்கின்றனர். இந்த ஆரம்ப
நாட்களுக்குப் பிறகு அவர்களுக்கு ஏமாற்றம் ஏற்படுகிறது.
கம்யூனிஸத்தில் அவர்கள் முதலில் மயங்கியதற்குக் காரணம்

ஓர் இன்ப உலகத்தை அடையலாம் என்பதுதான். இந்த லட்சியத்தை அடைவதற்கு மோசடியும், பலாத்காரமும் பழக்கிக்கொள்வது சில சமயம் சாத்தியமாகிறது. மற்றும் சில சமயம் சாத்தியப்படுவதில்லை. இறுதியில் கம்யூனிஸ்டுக் கோட்பாடுகளை நிராகரிப்பவர்களின் வாழ்க்கை சோகம் நிறைந்ததாகிவிடுகிறது. அவர்கள் சமூகத்தை மீறியிருக்கின்றனர். ஆகையால் அந்த சமூகத்தில் அவர்கள் இன்பமாக வாழ முடியாது.

இவ்வாறு கம்யூனிஸ்டுகள் ஏமாற்றமடைந்ததால், அந்தக் கொள்கை பரவாமல் தடைப்பட்டுவிடும் என்று நினைத்துப் பாண்டுங்கில் கூடிய கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள் சும்மாயிருக்கவில்லை. இவர்களிடையே நிதானமாக ஏமாற்றம் ஏற்பட்டதால், அதற்குள் தங்கள் நாடுகளில் கம்யூனிஸம் பெருத்த அபாயமாக மூண்டுவிட்டால் என்ன செய்வது என அஞ்சினர். கம்யூனிஸத்தில் புரட்சி அம்சம் இருந்தாலும், ஆசியாவிலும் ஆஃப்ரிக்காவிலும் புதிதாக உருவான நாடுகள் சுய முயற்சியால் விருத்தியடையலாம் என்று நம்பினர். இந்த நம்பிக்கையே அவர்களுக்கு உற்சாகமளித்தது.

கம்யூனிஸத்தில் கவர்ச்சிகரமான இலட்சியச் சிறப்பு இருந்தது; அதன் தலைவர்களில் பலர் அசாத்திய திறமை வாய்ந்தவர்களாயிருந்தனர் என்றாலும், சென்ற நாற்பது ஆண்டுகளில் உலகத்தில் கீழ்க்காணும் இரு சந்தர்ப்பங்களில் ஒன்று நிலவுகின்ற காலத்தில்தான் கம்யூனிஸம் வெற்றி பெற முடிந்திருக்கிறது.

ஒரு நாடு பலஹீனமாகவும், பிளவுபட்டும் இருந்து, அந்நாடு செஞ்சேனையின் வசப்பட்டிருக்க வேண்டும்; அல்லது அந்நாட்டின் எல்லையில் செஞ்சேனை தயாராகக் காத்திருக்க வேண்டும். உதாரணமாக, 1945-லிருந்து 1948-க்குள் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற அச்சுறுத்தலும், சாதுர்யமான அரசியல் தந்திரமும் சேர்ந்து, யுத்தத்தில் சோர்ந்து போன பால்கன் நாடுகள், ஹங்கேரி, செகோஸ்லோவேகியா, போலந்து முதலிய நாடுகளை ரஷ்யா கைப்பற்ற முடிந்தது.

கம்யூனிஸம் வெற்றி பெறுவதற்கான இரண்டாவது சந்தர்ப்பம் எப்பொழுது ஏற்படுகிறது? ஒரு நாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் மார்க்ஸிஸ்ட் கோட்பாட்டை அநுஷ்டிப்பதில் சற்று இளக்கம் காட்டக் கூடியவர்களாயிருக்க வேண்டும். மக்களிடையே நிலவும் அநீதி, வறுமை, ஊழல், ஏமாற்றம் யாவற்றையும் பயன்படுத்தி அவர்களைக் கிளர்ந்தெழுவதற்கேற்ப கோட்பாடுகளைத் தளர்த்த, தலைவர்கள் தயாராயிருக்க வேண்டும். மேலும் இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்கப் பூரண ஜனநாயகப் புரட்சி நிகழ்த்தக் கம்யூனிஸ்ட் அல்லாதார் தவறியிருந்தால், கம்யூனிஸ்டுகள்



வெற்றி பெறலாம். இதே நிலைதான் லெனின் கீழ் ரஷ்யாவிலும், மாவின் கீழ் சீனாவிலும், ஓரளவு ஹோசி மின் தலைமையில் இந்தோ-சீனாவிலும் உருவாயிற்று:

பலஹீனமான, பிளவுபட்ட நாடு, செஞ்சேனைப் பிரவேசம் இவைகள் ஆஃப்ரிக்காவில் இல்லை; ஆசியாவில் கொரியா, இந்தோ-சீனா, பர்மா, துருக்கி, தாய்லாந்து, ஈரான், நேபாளம், ஆஃப்கானிஸ்தான் முதலிய நாடுகளில்தான் நிலவுகின்றன. நிறைந்த சக்தியும், எதிர்காலத்தில் மேலும் சக்தி பெருகுவதற்கான ஆற்றலும் உள்ள இரு கம்யூனிஸ்டல்லாத நாடுகள் இந்தியாவும் ஜப்பானும் தாம். இவ்விரண்டு நாடுகளில் கம்யூனிஸம் புகுவதற்குக் கடினமான மலைகளும், கடல்களும் இடைஞ்சல்களாயிருக்கின்றன.

சக்திவாய்ந்த உள்நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் உள்ள நாடு வியட்நாம் ஒன்றுதான். இந்தியா, பிலிப்பைன், பர்மா, இந்தோனேஷ்யா, ஜப்பான் முதலிய நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட் தலைவர்களை யந்திரத் தொழிலாளிகளுக்கு ஒப்பிடலாம். அவர்களுடைய சிந்தனைகள் ரஷ்யாவாலும், சீனாவாலும் கட்டுப்படுத்தப்பட்டுச் செயல்புரிகின்றன. கொள்கைகளை மாஸ்கோ அல்லது பீகிங்கின் தாக்கீதுகளுக்கு ஏற்ப வியாக்கியானம் செய்கிறார்கள். இதுதான் 1955-இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் அரசியல் ஞான சூன்யங்களாக விளங்கியதற்குக் காரணம்.

ரஷ்யாவிலிருந்து பிறநாட்டுக் கம்யூனிஸ்டுகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் முறை நிலவும் வரையில், ஏராளமான பாமர மக்கள் ஆதரவு பெற்று, சிறப்பு வாய்ந்த தலைவர் தோன்றுவது மிகவும் கடினம். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள கொள்கையின் தத்துவாசிரியர்கள் சொற்படி நடக்கவேண்டும் என்றிருந்தால், லெனினோ, மாவோ வெற்றி பெற்றிருக்கமாட்டார்கள்.

ஆசியக் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு யார் தலைமை தாங்குவது-ரஷ்யாவா, சீனாவா என்கிற போட்டி ஏற்படலாம். இதனால் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வெற்றியே தடைப்படக் கூடும். ரஷ்யர்களுக்குக் கட்சி ஸ்தாபனம் கட்டுக்கோப்பாயிருப்பதுடன், அதை நடத்துவதற்கான சாதனங்களும் ஏராளமாய் இருக்கின்றன. ஆனால் சீனர்கள் ஆசியர்கள் என்கிற முறையில் சீனா ஆசியர்களை எளிதில் கவரலாம்.

சீனாவுக்கு மற்றுமொரு சௌகரியம் இருக்கிறது. சீனப் புரட்சி, கிராம மக்கள் ஆதரவை அடிப்படையாகக் கொண்டது. எங்கு நிலங்கள் ஒரு சிலருக்குச் சொந்தமாயிருக்கின்றனவோ, எங்கு குத்தகைத் தொகை அகாதமாயிருக்கின்றதோ, எங்கு பண லேவாதேவிக்காரர்கள் நெருக்கிப் பிடித்துக் கடன்காரர்களிடம் பண வசூல் செய்கின்றனரோ அங்கெல்

லாம் மக்களிடையே வெறுப்பு உணர்ச்சி பொங்கி எழும். இதைச் சிறப்பான முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மா சீனுவில் தெளிவாக நிருபித்துக் காட்டியிருக்கிறார்.

ஆசியாவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை நடத்தியதில் சோவியத்தினர் ஒரு பெருந்தவறு செய்தனர். முன்பு சீனுவில் இயந்திரத் தொழிலாளர்கள் என்கிற வர்க்கம் இல்லையென்றே சொல்லலாம். அப்படி ஒரு வர்க்கம் இருப்பதாக நினைத்துக்கொண்டு செயல் புரிந்ததனுலேதான் ரஷ்யர் தோல்வியுற்றனர். 1949-இன் இறுதியில்தான் தங்கள் தவறை அவர்கள் உணர்ந்தனர். வறட்டுத் தத்துவாசிரியர்களும், பெருவாரியான ரஷ்யர்கள் அடங்கியதுமான காமின்ஃபார்ம் என்கிற சர்வதேசக் கம்யூனிஸ்ட் ஸ்தாபனம், வேண்டா வெறுப்பாக மா வின் கிராமப் பிராதான்ய முறையை ஆசியாவுக்கு முன் மாதிரியாக ஏற்று அநுஷ்டித்தது.

1949-இல் மா சீனுவில் வெற்றி பெற்ருர். அதிலிருந்து ஆசியக் கம்யூனிஸ்ட் விவகாரங்களில் சீன கம்யூனிஸ்ட் செல்வாக்கு படிப்படியாகப் பெருகி வந்தது. பாண்டுங்கில் செள என் லாய், செல்வாக்குள்ள அராபிய, ஆஃபிரிக்கத் தலைவர்களுடனும், ஆசியத் தலைவர்களுடனும் பேசிக் கொண்டிருப்பது போன்ற படங்கள் வெளி வந்தது மாஸ்கோ தலைவர்களுக்கு திருப்தியளித்திருக்கும் என்று கூறுவதற் கில்லை.

ஆசியாவில் கம்யூனிஸத்தின் எதிர்காலம் எதைப்பொறுத் திருக்கிறது? பாண்டுங்கில் கூடிய கம்யூனிஸ்டல்லாத நாடுகள் தாங்கள் வாக்களித்தபடி பூரண ஜனநாயகப் புரட்சி நிகழ்த்துவதைப் பொறுத்திருக்கிறது என்று கூறலாமே யொழிய மாஸ்கோவில் அல்லது பீகிங்கில் செய்யப்படும் முடிவுகளைப் பொறுத்திருக்கிறது என்று கூறுவதற்கில்லை.

மேற்கத்திக் காலனி ஆட்சியிலிருந்து சுயமுயற்சியால் விடுபட்டு, பிற உதவியின்றி துரிதமாக சீர்திருத்தங்களும், ஆக்க வேலையும் செய்து ஜனநாயகப் புரட்சி நிகழ்த்தி வரும் நாடுகளில் கம்யூனிஸம் இடம் பெற வழியில்லை. இதற்கு பர்மாவின் சமீபகால சரித்திரத்தை உதாரணமாகக் கூற லாம் பர்மாவின் அநுபவம் இந்த வகையில் இந்தோ சீனுவுக்கு நேர்மாருக இருக்கிறது. இவ்விரு நாடுகளுக்கும் உள்ள இந்த மாறுபாட்டிலிருந்து ஆசியா, ஆஃபிரிக்காவின் எதிர் கால வரலாற்றை, ஏன், உலகத்தின் எதிர்காலத்தையே புரிந்துகொள்ளலாம்.

மேலோட்டமாகப் பார்த்தால், இரு நாடுகளுக்குள் ஒருமைப்பாடுகள் இருப்பது போல் தோன்றும். இரு நாடு களும் இயற்கை வளம் பொருந்தியவை. இரு இடங்களிலும்



நிரம்ப மழைபெய்கிறது. பாங்கான நிலங்கள் இருக்கின்றன. ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உபரித்தான்யம் விளைகிறது. இரு நாடுகளிலும் ஜனநெருக்கம் இல்லை. ஃபிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து எல்லாம் சேர்ந்து உள்ளதைவிடக் கூடுதலான நிலப் பரப்புள்ள பர்மாவின் ஜனத்தொகை 190 லட்சம். கிட்டதட்டத் இத்தாலியளவு பெரிதுள்ள வியட்நாமின் ஜனத் தொகை 240 லட்சம்.

இந்த ஒருமைப்பாடு பூகோள அமைப்பு, ஜனத்தொகை யுடன் நின்றுவிடவில்லை. இரு நாடுகளும் நீண்டகாலமாக காலனி ஆட்சிக்குப்பட்டவை. ஃபிரஞ்சு ஆதிக்கம் 19-வது நூற்ருண்டு மத்தியில் வியட்நாமில் நிலையாக அமைந்தது. பர்மியர் அநுபவித்த ஓரளவு சுதந்திரத்தைப் பிரிட்டிஷார் 1886-இல் ஒழித்தனர். இரண்டாவது உலக யுத்தத்தின்போது, இரு நாடுகளும் ஜப்பானிய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தன.

யுத்தத்தின்போது, இரு நாடுகளிலும் ஜப்பானியரை எதிர்த்து, பிரிட்டிஷ், அமெரிக்க உதவியுடன் 'கொரில்லாச்' சண்டை நிகழ்ந்தது. இந்தச் சண்டையில் கம்யூனிஸ்டுகள் பிரதான பங்கு கொண்டனர். கடைசியில் ஜப்பானியர் வெளியேற்றப்பட்ட பிறகு, இரு நாடுகளிலும் பூரண சுதந் திர ஆர்வம் பொங்கி வழிந்தது.

ஒருமைப்பாடுகள் இதனுடன் முற்றுப் பெற்றுவிடு கின்றன. வியட்நாமிலும், அதன் அண்டையிலுள்ள லேஆஸ், கம்போடியா நாடுகளிலும், ஃபிரஞ்சுக்காரர் தயங்கினர், நிதானித்தனர், பேரம் செய்தனர். இதன் விளைவாக எட்டு ஆண்டுகளுக்குக் கடுமையான உள்நாட்டுச் சண்டை நிகழ்ந் தது, ஃபிரஞ்சு ராணுவ பலம் முறியடிக்கப்பட்டது. பிளவு பட்ட நாடுகளுக்குள் கவலைதரும் தற்காலிகச் சமாதான உடன் பாடு ஏற்பட்டது. இவைகளை நாம் ஏற்கனவே அறிவோம்.

1941-இல் பர்மாவில் உள்நாட்டுச் சண்டை அபாயம் நிலவியது. பிரிட்டிஷாரை ஆயுதம் தாங்கி எதிர்க்கவும் தயாரா யிருந்தனர் பர்மியர். 1947-இல் பொங்கி வரும் பர்மிய தேசிய உணர்ச்சியை அடக்கப் பிரிட்டிஷார் அதிகப்படி யாகப் படைகளை அனுப்பவில்லை. அதற்குப் பதிலாய் புத்திசாலித்தனமாக ஆசியப் புரட்சியின் சக்தியை உணர்ந்து வெளியேற இசைந்தனர்.

1948-இல் கம்யூனிஸ்டுகள் ஏமாற்றமடைந்தனர். ''காலனி ஆட்சி ஒழிக'' என்று கோஷம் செய்வதற்கு முடியா மல், பிரிட்டிஷார் பர்மாவைவிட்டு வெளியேறிவிட்டனர். ஆனுல் வியட்நாமில் ஃபிரெஞ்சுக்காரர்கள் இதற்கு வசதி யளித்திருந்தனர். கம்யூனிஸ்டுகள் புதிய பர்மிய அரசாங் கத்தை ஆயுதம் தாங்கி எதிர்த்தனர். 1949-இல் இவர்களுடன் கிழக்கு பர்மாவிலுள்ள யுத்த ஆர்வமுள்ள கரான்கள்

(Karans) சேர்ந்து கொண்டனர். இந்த கரான்கள் சுதந்
திரத் தனியரசு அமைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.
1951-க்குள் பர்மாவெங்கும் சண்டை பரவியது. சுதந்திர
பர்மியக் குடியரசின் எதிர்காலம் சந்தேகத்திற் கிடமா
யிருந்தது.

இதே ஆண்டில் புதிய பர்மிய ஆட்சியினரின் சங்கடங்
கள் பெருகின. சீனக் கம்யூனிஸ்டுகளால் பர்மாவின் வட
ஷான் ராஜ்யத்திற்குத் துரத்தப்பட்ட எட்டு அல்லது பத்
தாயிரம் சீனத் தேசியத் துருப்பினர், கரான்களுடன் சேர்ந்து
கொள்வதென முடிவு செய்தனர்.

புதிய பர்மிய அரசாங்கம், ராணுவ முறையில் பல
ஹீனம் வாய்ந்திருப்பதை 1951-இல் அமெரிக்க அரசாங்கம்
அறிந்து, இனி அந்த அரசாங்கம் தோல்வியுறத்தான் போகி
றது என்றும் முடிவு செய்தது. இதே மாதிரியான முடிவிற்கே
வந்த சீனத் தேசிய அரசாங்கம், ஃபார்மோஸாவிலிருந்து
அமெரிக்க ராணுவத் தளவாடங்களை விமான மூலம் பர்மா
அரணுக்கு அனுப்ப ஆரம்பித்தது. ஜெனரல் லிமியன் தலை
மையில் போர்புரிந்த தேசியக் கலகக்காரர்களுக்கு உதவவே
இவை அனுப்பப்பட்டன. இதனால் புதிதாக அமைந்த பர்மி
யக் குடியரசுக்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

இதற்கு நேர் மாறாகச் சீனக் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தார்
செயல் புரிந்ததாக புது டில்லிக்கு அக்காலத்தில் தகவல்கள்
கிடைத்தன. ஆசியாவில் ஜனசக்தியின் உறைவிடத்தை
அவர்கள் நன்கறிந்திருந்தனர். ஆகையால் பர்மாவில் கம்யூ
னிஸ்ட் புரட்சி வெற்றி பெறாது என்று முடிவு செய்தனர்.
புதிய பர்மியக் குடியரசு ராணுவ முறையில் பலஹீனமாகக்
காணப்பட்டாலும், நமக்குத் தெரிந்த மட்டில் சீன ஆயு
தங்களோ, ராணுவ சாதனங்களோ பர்மியக் கம்யூனிஸ்டு
களுக்கு அனுப்பப்படவில்லை. பர்மிய விவகாரங்களில் தலை
யிட்டால், கம்யூனிஸ்டுக் கலகக்காரர்களுக்கு சீனர்கள் உதவி
புரிந்தனர் என்று பர்மா பிரசாரம் செய்யும் என்று பீகிங்
அரசாங்கத்தார் பயந்தனர்போலும்! இதன் மூலம் சீனர் ஆதிக்
கம் செலுத்த விரும்புகின்றனர் என்று பர்மியர் முன்புபோல்
அச்சமடைவதைத் தவிர்க்கச் சீன ஆட்சியினர் விரும்பினர்.

கூடிய மட்டில், பலமான ஆதாரத்தின் கீழ் அரசாங்கம்
அமைப்பதில் பிரதமர் ஊ நூ வும், அவரது சகாக்களும்
சிறிது சிறிதாக வெற்றி பெற்றனர். உரியகாலத்தில் பொரு
ளாதார அரசியல் சீர்திருத்தங்களை ஆதரித்தனர். அவைகளை
நாணயமாகவும் நிறைவேற்றினர். இந்தச் சீர்திருத்தங்களின்
விளைவாக கம்யூனிஸ்டுகள் ஆதரவிழந்தனர்.

1954 பர்மா கம்யூனிஸ்ட் தலைவர்களில் சிறந்தவன்
சரணடைந்தான். ''நாம் மக்களுக்கு அளிப்பதாகக் கூறி



வந்த கிராமச் சீர்திருத்தங்களை ஊ நூ நிறைவேற்றிவிட்
டார். ஆகையால் மக்கள் ஆதரவைப்பெற இனிவழியில்லை.''
இவ்வாறு அந்தத் தலைவன் வருத்தத்துடன் கூறினான்.

ஆசியாவில் உள்நாட்டுத் தேசிய இயக்கத்தின் சக்தியை
மதிப்பிடுவதில் கம்யூனிஸ்டுகளுக்கும் மேற்கத்தி நாட்டினருக்
கும் உள்ள மாறுபாட்டை மேற்கூறிய விவரங்களிலிருந்து
அறிந்து கொள்ளலாம். பர்மா, வியட்நாம் இரு இடங்களி
லும் இருந்த தேசிய ஆர்வத்தின் சக்தியைச் சீனக் கம்
யூனிஸ்டுகள் அறிந்து கொண்டனர். ஆகையால் பர்மிய
அரசாங்கத்தை எதிர்க்காமல் விலகினர். ஆனால் வியட்நா
மியரின் தேசியவாதிகள் ஃபிரஞ்சு ஆதிக்கத்தை எதிர்ப்
பதற்கு நம்பிக்கையுடன் உதவி புரிந்தனர். அமெரிக்கா
தேசிய ஆர்வத்தின் சக்தியை உணரவில்லையென்று தோன்று
கிறது. பர்மா வெற்றி பெறும் என்பது பற்றி நம்பிக்கை
இழந்தனர். ஆனால் இதே சமயத்தில் வாழ்வுக்கான
போராட்டத்தில் பர்மா வெற்றி பெற்றுவந்தது.

1955-ஆம் வருஷம் மார்ச் மாதத்தில் நான் ரங்கூனுக்குச்
சென்றேன். அங்கு ஒன்பது மாதங்களாக அமெரிக்க தூதர்
நியமிக்கப்படவில்லையென்று அறிந்தேன். பர்மாவை அலட்
சியம் செய்த இந்த ஆண்டுகளில், இதற்கு அருகாமையில்
தோல்வியுற்று வரும் ஃபிரஞ்சு ஆதிக்கத்திற்கு உயிர் அளிக்க
மூன்று கோடி டாலர்கள் செலவு செய்தோம்.

பர்மாவுக்கும் இந்தோ சீனாவுக்கும் உள்ள மாறுபாடுகள்
பாண்டுங்கில் கூடியிருந்த தேசத் தலைவர்கள் மனங்களில்
பசுமையாக இருந்திருக்கும். பர்மா மாதிரியே தங்கள்
நாடுகளும், தீவிரமாக ஜனநாயக அபிவிருத்தியடைந்து
துரிதமாகச் சீர்திருத்தங்களை நிறைவேற்றினால் கம்யூனிஸத்
தைக் கண்டு அஞ்ச அவ்வளவாக அவசியம் இருக்காது.

பாண்டுங்கிலுள்ளவர்களை அச்சுறுத்தியது கம்யூனிஸமல்ல,
கம்யூனிஸ்ட் சவாலைச் சமாளிப்பதற்கான துணிவும், திறனும்
இல்லாமற்போய் விடுமோ என்றுதான் அங்கு கூடியிருந்த கம்யூ
னிஸ்டல்லாதார் கவலைப்பட்டனர். இந்த அச்சத்திற்கு ஓரளவு
தூபம் போட்டது ஒருவகையான கவலை. அமெரிக்காவும்,
மேற்கத்தி நாடுகளும் சீனாவில் மா-வெற்றி பெற்றதன் படிப்
பினையைப் புரிந்து கொள்ளத் தவறி விட்டன. அதிகமாகக்
கவலையளிக்கக்கூடிய வியட்நாமின் படிப்பினையையும், வட
ஆஃபிரிக்காவில் மூண்டு வரும் நெருக்கடியையும் சரிவர மதிப்
பிட்டு அறிந்து கொள்ள அமெரிக்கா தவறிவிடுமோ என்
கிறதுதான் அவர்களது அச்சத்தை வளர்த்தது.

''அரசியல் பொருளாதார உதவி புரிவதில், அமெரிக்கா
வின் முடிவு திட்டமான பயனை அளிக்கக்கூடும். ஏழ்மை
நிலை, அறியாமை, நோய், கம்யூனிஸம் முதலிய எல்லா

இடைஞ்சல்களையும் சமாளித்து, அமெரிக்க உதவி மூலம் ஜனநாயக முறை வெற்றி பெறலாம். சீனாவுக்கும் சுதந்திர ஆசியாவுக்கும் பொருளாதார அபிவிருத்தித் துறையில்தான் ஆசியாவில் கடுமையான போட்டி நிலவும். ஆசியாவில் ஜனநாயக அபிவிருத்தி வாயுவேகத்தில் நடைபெறவேண்டும்.'' இவ்வாறு அக்காலத்திய இலங்கைப் பிரதமர் ஸர். ஜான் கோட்லேவாலா கூறினார்.

''நிமிர்ந்து தலைதூக்குவதற்கு, ஆசியாவில் ஏழ்மை மிக்க நாடுகளுக்கு உலகத்திலுள்ள செல்வம் படைத்த நாடுகள் தாமதம் செய்யாமல் உதவி புரியவேண்டும். இப்படி உதவி செய்யத் தவறினால் சீனாவின் உதாரணம் இந்த நாடுகளில் நாசத்தை விளைவிக்கும். ஜனநாயகம் தனது இறுதிப் போராட்டத்தை ஆசியாவில்தான் நிகழ்த்தவேண்டும்.'' இவ்வாறு கோட்லேவாலா மேலும் பேசினார்.

ஆனால் ஆசியர்களும், ஆஃப்பிரிக்கர்களும் எவ்வாறு தங்கள் கடமைகளை நிறைவேற்றுகின்றனர் என்பது முக்கியமேயொழிய அட்லாண்டிக் நாடுகள் தங்கள் கடமையைச் சரிவர ஆற்றுகின்றனவா என்பது அவ்வளவு முக்கியமல்ல என்பதை ஸர் ஜான் ஏற்றுக்கொள்வார்: சுதந்திர ஆசியா, ஆஃப்பிரிக்கா தலைவர்களும், அவர்களுடைய மேற்கத்தி நாட்டு நண்பர்களும் தத்தம் நாட்டு மக்களின் தேவைகளையும், நம்பிக்கைகளையும் அறிந்து பணி புரிவார்களானால், இன்று ஜனநாயகத்திற்காக இறுதிச் சண்டை புரியவேண்டாம், வெற்றியே அடைந்துவிடலாம்.

''நல்லசேவை செய்து முன்னேற அருமையான சந்தர்ப்பமிருக்கிறது. அதைத் துரிதமாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் நாம் மங்கிமறைந்து விடுவோம். தடுமாறி, வீழ்ச்சியும் அடைவோம். அப்புறம் நீண்டகாலத்திற்கு மீண்டும் எழமுடியாது.'' இவ்வாறு நேரு பாண்டுங் மகாநாட்டில் நிகழ்த்திய முடிவுரையில் கூறினார்.

மீண்டும் ஆசிய, ஆஃப்பிரிக்கா நாட்டினர் கூட வேண்டுமெனவும், முதல் கூட்டத்தைக் கூட்டிய பர்மா, இலங்கை, இந்தியா, இந்தோனேஷ்யா, பாகிஸ்தான் முதலிய நாடுகளே அதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமெனவும் பாண்டுங்கில் தீர்மானம் செய்யப்பட்டது.

அந்த அடுத்த கூட்டம் கூடுகையில், உலகத்தின் பாதிக்கு மேற்பட்ட பகுதியினரை உருவகப்படுத்தும், ஆசா பாசங்களையும், அபிலாஷைகளையும், அச்சங்களையும், அமெ ரிக்கா நெருங்கி நின்று அறிந்து கொள்ளும் என்று எதிர் பார்ப்போம். ''பெருந்தன்மையான அசிரத்தை'' அல்லது ''நேசப்பான்மையற்ற அச்சம்'' காட்டுவது அமெரிக்கரின் இயல்பான தோரணைக்கேற்றதல்ல. நமது குடியரசின் போர்



முரசுகளால் ஆகர்ஷிக்கப்பட்டு, 100 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் முன்னேறுகையில் நாம் இவ்வாறு நம் இயல்புக்கு மாறான முறையில் காணப்படுவது பொருத்தமல்ல.

இன்று, ஆசியாவிலும், ஆஃப்பிரிக்காவிலும் நிகழ்ந்துவரும் புரட்சிக்கு அமெரிக்கப் புரட்சியே முன்னோடி என்று ஜனாதிபதி சுகர்னா தனது ஆரம்பப் பிரசங்கத்தில் கூறினார். இந்த இருபதாவது நூற்றாண்டுப் புரட்சிகளை நாம் புரிந்து கொள்ள வேண்டுமெனில், கான்கார்டுக்கருகில் ஒரு முரட்டுப்பாலத்தின் மீது வெடித்த குண்டு சப்தம் ஏன் உலகெங்கும் எதிரொலித்தது என்பதையே புரிந்துகொள்ள முயலவேண்டும். இதை அறிந்து கொள்ள நாம் கவனத்தைப் பாண்டுங் சுதந்திர மண்டபத்திலிருந்து பிலடல்பியா சுதந்திர மண்டபத்திற்குத் திருப்ப வேண்டும்.

## பகுதி—6

# ஜெஃபர்ஸன், வில்ஸன், ஹென்றி ஃபோர்டு நிகழ்த்திய புரட்சி

நாமும், பிறரும் அறிந்த சொற்கள்தான் அவை. அவை நமக்குப் பழக்கமான சொற்கள் தான். நாம் பயன்படுத்திய சொற்கள்தான். நாம் கேட்டவைதான், அவை. நாம் பாடமாக ஒப்பித்தவைதான். நாம் மறந்து கூடப் போய் விட்ட சொற்கள்தான்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம், உரிமை, நீதி இவைகளை-நாம் யாருக்கும் பயன் கருதி வழங்க மாட்டோம். இவைகள் யாருக்கும் இல்லை என்று கூறமாட்டோம், வழங்க மறுக்க மாட்டோம்.

யாரும் இயல்பாக அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் என்று நாம் இவ்வுண்மைகளைக் கருது கிறோம்.

இவைகளை நாம் மறந்து போய்விட்டால், என்ன ஆகும்? வெறும் பேச்சுக்காகச் சொல்லு கிறேன்.

இவைகள் வழக்கொழிந்து மறைந்து மறந்து போய்விட்டால் என்ன ஆகும்?

மிகவும் கஷ்டப்பட்டு, உறுதியான நம்பிக்கை கொண்டு, உணர்ச்சி வசப்பட்டு இச்சொற்களில் அடங்கிய பேறுகளை நாம் அடைந்தோம்.

ஊர்பேர் தெரியாத குடியானவர்கள், உபாத்தியாயர்கள், சக்கிலிகள், அப்பாவிகள், பழைய சட்டங்களையும், மன்னர்களையும் மீறி தங்கள் ரத்தத்தைச் சிந்தி, இந்த உரிமைகளைப் பெற்றனர்.

இந்தச் சொற்களில் அடங்கிய உரிமைகளைப் பெற நீண்ட காலம் சொல்லொணாக் கஷ்டப்பட்டனர்.

**ஸ்டீபன் வின்சென்ட் பெனட்**

## அத்தியாயம்-26.

# சுதந்திரம் அளி – இல்லையேல் கொன்றுவிடு

ஆசியா, ஆஃப்பிரிக்கா, தென் அமெரிக்காவில் பெரும் பகுதியில் நூறு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சகிக்க முடியாத கஷ்டத்திற்குட்பட்டு வாழ்கின்றனர். அவர்களுக்கு புரட்சி எனும் சொல் நம்பிக்கை ஊட்டுகிறது. அவர்கள் புரட்சி எனக் கருதுவதற்கு குறைந்த பட்சம் நான்கு லட்சணங்களாவது இருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். சுதந்திரம் கோருகின்றனர். இன, நிற, மத மாறுபாடு பாராட்டாமல் மனித கண்ணியத்தை மதிக்க வேண்டுமென வற்புறுத்துகின்றனர். சிலருக்கு மட்டுமல்லாமல் பலருக்குப் பயன்படக்கூடிய முறையில், துரிதமான பொருளாதார அபிவிருத்தியை விரும்புகின்றனர். சமாதானமான நிலையில் வாழ விரும்புகின்றனர்.

இந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் அமெரிக்கா நிர்மாணிக்கப்பட்டது. சாமானிய அமெரிக்கருக்கு இந்தக் கொள்கைகள் புதியவையாகவோ, தீவிரமானவையாகவோ தோன்றுமானால், அன்றே சுதந்திரத்திற்குக் கெட்ட காலம் வந்துவிட்டது என்று கொள்ளலாம்.

நமது புரட்சிக்கு ஆக்கமளித்த கருத்துக்கள் இப்பொழுது உலகெங்கும் பரவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கருத்துக்களைக் கம்யூனிஸ்டுகள் ஏற்று, தங்கள் நோக்கங்கள் நிறைவேறுவதற்காக அவைகளைத் திரித்துப் பயன்படுத்துவதை அடிக்கடி காண்கிறோம். நம் கருத்துக்களுக்கு உயிர்ப்புத்தன்மை இருக்கிறது என்று பாராட்டுவதற்கு இதைவிடச் சிறந்த அத்தாட்சியைக் காணமுடியாது.

நேரு, ஊ நூ, மக்ஸாய்ஸே(Magsaysay)நாஸர், நிக்ருமா, குலாம் மகம்மத் முதலியவர்கள், நமது ஜெஃபர்ஸன், வில்ஸன், லிங்கன் முதலியோரின் தோரணையில், அவர்கள் பயன்

படுத்திய வாசகங்களையே உபயோகித்துப் பேசுகின்றனர்.
அவர்கள் பேசும் வார்த்தைகள் புதியவையாக சில சமயம்
நமக்குத் தோன்றுமானால், நமது பழங்கால சரித்திரத்தை
நாம் மறந்துவிட்டோம், அவர்களும் அவர்களது மக்களும்
உயிர்வாழ்வதற்காகப் போராடி வருவதை, நாம் அறிய
வில்லை என்றுதான் பொருள்.

பர்மா பிரதமர் அமெரிக்கா வந்திருந்தபோது, 1955
ஜூன் 3-ஆம் தேதி பிலடல்பியாவில் சுதந்திர மண்டபத்தில்
பேசினார். நமது, ''வெடி விமானங்கள், அணுகுண்டு முதலி
யவைகளைவிட சக்தி வாய்ந்தவை நமது அமெரிக்கப் புரட்சி
லட்சியங்கள். உலகெங்கும் மக்கள், எங்கு கொடுங்கோன்
மைக்குட்பட்டிருக்கின்றனரோ அல்லது அந்நிய ஆதிக்கத்
திற்குட்பட்டிருக்கின்றனரோ, நிலப்பிரபுத்வ முறையின் கீழ்
சங்கடப்படுகின்றனரோ, அங்கெல்லாம், சுதந்திரக் கனவு
காண்பவர்கள், அதை அடைவதற்காகச் சதி செய்து,
போராடுபவர்கள் எல்லோரும், எந்த நிலையான கொள்கை
களுக்காக உங்கள் புரட்சி நடந்ததோ, அந்தக் கொள்கை
களைக் கோஷம் செய்துகொண்டே போராடுகின்றனர்,''
என்று ஊ நூ அதே பிரசங்கத்தில் கூறினார்.

உலகெங்கும் காலனி ஆட்சியை எதிர்த்தவர்கள், நமது
சுதந்திரப் பிரகடனம் நமது அரசியல் அமைப்பின் வாசகங்
களையே எடுத்து, தங்கள் பிரகடனங்களிலும் உபயோகித்
தனர். அமெரிக்கப் புரட்சி காங்கிரஸ் ஜூலை மாதம் நான்
காம் தேதி ஒப்புக்கொண்ட ஜெஃபர்ஸன் கூறிய அதே வாச
கங்களை 1930-இல் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ்
அப்படியே ஒப்புக்கொண்டது.

''நாட்டு மக்களாகிய நாங்கள்'' என்று தொடங்கும்
நமது சுதந்திரப் பிரகடனத்தை பர்மா, இந்தியா, ஜப்பான்,
லைபீரியா, பிலிப்பைன், கொரியா, லிபியா முதலிய நாடுகள்
அப்படியே பெயர்த்து தங்கள் பிரகடனங்களில் வெளியிட்
டன.

இந்தச் சொற்றொடர்கள் மூலம் சுதந்திரமும், உயர்வான
வாழ்க்கையும் கிட்டும் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது.
இவைகள் ஆசிய, ஆஃபிரிக்க ஆண் பெண்களின் உள்ளங்களைக்
கொள்ளை கொண்டு விடுகின்றன. தத்தம் நாடுகளுக்கு சுதந்
திரம் வேண்டி இவர்கள் நடத்தும் கடுமையான போராட்
டங்களில், நமது நாட்டுப் போர் முரசங்களிலும், கோஷங்
கள் முதலியவற்றிலும் இயல்பாகவே நாட்டம் கொண்டு,
ஆதர்சம் பெறுகின்றனர். 1945-இல் அமெரிக்க ஆயுதங்கள்
தாங்கிய டச்சுப்படையினர் நமது நாட்டில் தயாரான ஷெர்
மன் டாங்கிகளில் ஏறிக்கொண்டு இப்போது, ஜாகர்த்தா
எனப்படும் படேவியா மீது படையெடுத்தனர். எதற்காகப்



படையெடுத்தனர்? அவர்கள் இன்னமும் நம்பிக்கையுடன்
டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் என அழைக்கும் நாட்டில்
காலனி ஆட்சியை நிலைநாட்டுவதற்கே, போர்புரியச் சென்ற
னர். அச்சமயம் அந்நகரச் சுவர்களில் ஒவ்வொரு அமெரிக்
கப் பள்ளி மாணவனுக்கும் தெரிந்திருக்கும்படி பின்காணும்
கோஷங்களைக் கலகக்காரர்கள் அச்சடித்து, ஒட்டியிருந்ததை
டச்சுக்காரர்கள் கண்டனர். ''எல்லா மக்களும், சுதந்திர
மாகவும், சமமாகவும் படைக்கப்பட்டனர்.'' ''சுதந்திரம்
அளி - இல்லையேல் என்னைக் கொன்றுவிடு.''

இந்தக் கருத்துக்கள் திரும்பவும் நமது நாட்டை நோக்கி
வருகின்றன. ஆசியாவிலும், ஆஃபிரிக்காவிலும் புதிதாகச்
சுதந்திரம் பெற்ற நாட்டினரும், இன்னும் அடிமை வாழ்வு
நீங்கப் பெறாத நாட்டினரும், இந்தக் கோஷங்களை நாம்
கேட்கும்படி ஒலிக்கச் செய்கின்றனர். எதற்காக, இந்தக்
கோஷங்களை நாம் மீண்டும் கேட்க வேண்டும் என அவர்கள்
விரும்புகின்றனர்? நம் நாட்டை வளர்த்த இந்த லட்சியங்களை
நாம் மறக்காமல் கடைப்பிடிக்க வேண்டும் என்றுதான்.

நமது சுலோகங்களின் சக்தியை ஸ்டாலின்கூட அறிந்
திருந்தார். அவைகளைத் தமது நாட்டு அரசியலமைப்பில்
சேர்த்துக்கொள்ள முயற்சித்தார். 1936-இல் நிறைவேறிய
சோவியத் அரசியலமைப்பில் ''பேச்சு சுதந்திரம், பத்திரிகை
சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம்'' எனும் சொற்
றொடர்கள் இடம் பெற்றுள்ளன என்றால் யாரும் நம்ப மாட்
டார்கள்.

இந்த கோஷங்களைத் தோற்றுவித்த அமெரிக்கர் அவை
களை மீண்டும் தங்களதாக்கிக் கொண்டுவிட்டால், நமது
பழைய புரட்சிக்கும் பிற விடங்களில் நிகழும் புரட்சிகளுக்
கும், தொடர்பு ஏற்படுத்திவிடலாம். நமது பழைய சரித்தி
ரத்தை மீண்டும் படிக்க வேண்டும். உலகெங்கும் எதி
ரொலித்த அந்தச் சொற்றொடர்களின் சக்தியை நாம் மீண்டும்
புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இப்படி நாம்
செய்தோமானால், உலக விவகாரங்களை அறிந்து கொள்ளும்
நமது திறனை விருத்தி செய்துகொள்ளலாம்.

ஏகாதிபத்ய ஆட்சியை எதிர்த்து ஒரு காலனி வெற்றி
பெற்றதற்கு அமெரிக்கப் புரட்சி முதல் எடுத்துக்காட்டு என்
பதை நாம் மறந்துவிடலாகாது. 1776-இல் நாம் அடைந்த
வெற்றி உலகத்தில் பாதிப்பேருக்கு இருபதாவது நூற்
றாண்டு வரையில் கிட்டவில்லை. அநேக மக்களுக்கு இன்னும்
சுதந்திரம் கனவாகவே இருந்து வருகிறது. ஒரு நூற்றாண்
டுக்கு முன் பிலடல்பியா சுதந்திர மண்டபத்தில் கூடியவர்
கள், சுதந்திரம் என்பது இயல்பானது, பிறர் சொல்லாமல்

புரிந்து கொள்ளக்கூடியது என்று கருதினர். அவர்கள் கூறி யதை ஏற்றுக்கொள்ள நாம் தயாராயிருக்கிறோமா?

''பராதீனம் செய்ய முடியாத மனித உரிமைகளை அடை வதற்கே மக்களிடையே அரசாங்கங்கள் அமைக்கப்பட்டன. அரசாங்கத்திற்கு வேண்டிய நியாயமான அதிகாரங்களை அவைகள் ஆளப்பட்டவர்களின் சம்மதத்தின் பேரில் அடைந் தன.'' இவ்வாறு நாம் அந்தக் காலத்தில் கூறினோம்.

''இந்த நோக்கங்களை அழிக்கும் முறையில், அரசாங்க முறை மாறுமானால், அதை ஒழிக்கவோ, திருத்தவோ மக்க ளுக்கு உரிமை உண்டு.'' இவ்வாறு நமது சுதந்திர சாஸனம் பிரகடனம் செய்தது. இந்தக் கொள்கைகளைக் காக்கவே நமது சுதந்திரத்தை ஸ்தாபித்தவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி யாவற்றையும் தத்தம் செய்தனர்.

''பொது நலனுக்கும், மக்களைப் பாதுகாக்கவும், அவர் கள் பத்திரமாக, சுபிட்சமாக, இன்பமாக வாழவுமே அர சாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட ஒருவன் அல் லது குடும்பம், அல்லது கோஷ்டியின் லாபத்திற்கோ, பெரு மைக்கோ, சொந்த நலனுக்கோ அது ஏற்படவில்லை.'' இவ் வாறு 1780-இல் வெளியான மஸ்ஸாசுஸட்ஸ் (Massachusetts) உரிமைச் சாஸனம் குறிப்பிட்டது. ''ஆகையால், அரசாங் கத்தை அமைக்கவும், அதைச் சீர்திருத்த, மாற்ற அல்லது அடியோடு அகற்ற மக்களுக்கே நிராட்சேபணையான, பார தீனம் செய்ய முடியாத உரிமை உண்டு. தங்களது பாது காப்பு, சுபிட்சம், இன்பம் இவை பாதிக்கப்படும் என்று அவர்களுக்குத் தோன்றும் சமயத்தில் இவ்வுரிமையை அவர் கள் பயன்படுத்தலாம்.'' இவ்வாறு அந்தச் சாஸனம் மேலும் குறிப்பிட்டது.

அமெரிக்காவை அமைத்தவர்கள், ஏதோ வறட்டுக் கொள்கையைப்பற்றி மட்டும் பேசினார்கள் என்று கூறிவிடுவ தற்கு இல்லை. அவர்கள் ''புரட்சி'' எனும் சொல்லைப் பிர யோகிக்கையில், அதன் பொருளை அறிந்தே பயன்படுத்தினர். தாங்கள் பிரகடனப்படுத்திய உரிமையின் விளைவுகளை அவர் கள் அறிவார்கள். இதன் மூலம், ரத்தம் சிந்த நேரிடும், சங்கடங்கள் அநுபவிக்க வேண்டி வரும் என்பதையும் அவர் கள் அறிவர். ''அவர்கள் ஆயுதம் ஏந்தட்டும், சுதந்திரம் என்கிற மரத்தை அடிக்கடி தேசாபிமானிகள், கொடுங் கோலர்கள் ரத்தத்தை ஊற்றி வளர்க்க வேண்டும். இதுவே அந்த மரத்திற்கு ஏற்ற உரம்.'' இவ்வாறு தாமஸ் ஜெஃபர்ஸன் கூறினார்.

புரட்சி செய்ய எல்லோருக்கும் உரிமையுண்டு. இதை நமது மூன்றாவது ஜனாதிபதி கூறியபடி தெளிவாகவே நமது பதினாறாவது ஜனாதிபதியும் கூறினார். ''இந்த நாடும் அதில்



உள்ள ஸ்தாபனங்களும் இங்கே வசிக்கும் மக்களுக்குரியவை. ஆட்சிபுரியும் அரசாங்கத்திடம் அவர்கள் சலிப்படைவார்க ளானால், அவர்கள் அதை மாற்றுவதற்கான சட்டபூர்வமான உரிமையைப் பயன்படுத்தலாம். அல்லது தங்களது புரட்சி செய்யும் உரிமையைப் பயன்படுத்தி, அதை அகற்றிவிடலாம். இந்தப் புரட்சி புரியும் உரிமை மிகப்புனிதமானது. இந்த உரிமை மூலம் உலகத்தையே விடுவிக்கலாம் என்று நாம் நம்பு கிறோம்- எதிர்பார்க்கிறோம்.'' இவ்வாறு லிங்கன் கூறினார்.

அமெரிக்கப் புரட்சியின் ஆதிகர்த்தாக்கள் உலகத்தி லுள்ள எல்லா அடிமை மக்களையும் தங்கள் புரட்சி ஆகர்ஷிக்க வேண்டும் என்று விரும்பினர். ''பெரிய சாம்ராஜ்யத்தைச் சிறியதாக்குவதற்கான விதிகளை'' பெஞ்சமின் ஃபிராங்க்லின் வகுத்தார். ஜெனரல் வாஷிங்டனின் முகாமில் எரிந்து கொண்டிருந்த தீயின் வெளிச்சத்தில் ஒரு டமாரத்தின் மீது தாமஸ் பெய்ன்* எழுதினார். ''அமெரிக்காவில் பற்றவிடப்பட்ட ஒரு பொறியிலிருந்து தீ கொழுந்துவிட்டெரிகிறது. அதை யாரும் அணைக்க முடியாது.''

இந்த தீ ஜ்வாலையின் வெளிச்சத்தைப் பிற நாட்டினரும் கண்டனர். ஃபிரான்ஸிலிருந்து 'லாஃபாயத்தும், (Lafayette) இந்த போலந்திலிருந்து 'கோஷிஷ்கோ'வும் (Kosciusko) 1776-லிருந்து சுதந்திரப் ஜ்வாலையினால் இழுக்கப்பட்டனர். புது உலகில் சுதந்திர பிரியர்கள் பழைய உலகத்திலிருந்து சுதந்திரத்தின் தாயகமென உதயத்தைக் காண வந்தனர். இவர்களை வர நவ அமெரிக்கா தன்னைக் கருதிக்கொண்டு, வேற்றது.

''சுதந்திரத்தின் புனித ஜோதி அணையாமலும், குடி யரசு ஆட்சி முறையின் எதிர்காலத்தையும் பாதுகாக்க வேண்டும். இவைகளைப் பாதுகாப்பது அமெரிக்க மக்கள் செய்து வரும் சோதனையின் வெற்றியையே பொறுத்திருக் கிறது.'' இவ்வாறு வாஷிங்டன் 1797-இல் தமது முதல் பிரசங் கத்தில் கூறினார்.

''அமெரிக்க நாடு அமைந்ததை நினைத்தால், என் மனத்தில் பணிவு ஏற்படுகிறது. அதை ஒரு அற்புதம் என்று மதிக்கத் தோன்றுகிறது. உலகெங்கும் அடிமைகளாக வாழ் பவர்கள் விடுதலை பெறுவதற்காக, இந்த மகத்தான காட்சியை ஆண்டவன் சிருஷ்டித்ததாகக் கருதுகிறேன்.'' இவ்வாறு வாஷிங்டனுக்கு அடுத்தபடி ஜனாதிபதியாக வந்த ஜான் ஆடம்ஸும் அதே தோரணையில் பேசினார்.

---

*தாமஸ் பெய்ன்:— (Thomas Paine) 1787-1809 வரை வாழ்ந்தவர். இங்கி லாந்தில் பிறந்து, அமெரிக்காவில் வாழ்ந்து புரட்சி கருத்துக்களைப் பரப்பின வர். மனித உரிமைகள், முடியாட்சிபற்றிப் பல அரசியல் கட்டுரையை எழுதியவர்.

''நமது புரட்சிபற்றியும், அதன் விளைவுகள்பற்றியும் அறிந்துகொள்வதற்கான ஆவல் உலக மக்களிடையே ஏற்பட்டிருப்பது, உலகில் பெரும் பகுதியிலுள்ள மக்கள் மேம்பாடடைவதற்கு உதவும் என்று நம்புவதில் உங்களை நான் ஆதரிக்கிறேன்.'' இவ்வாறு ஜெஃபர்சன் தாம் ஜனாதிபதியாக வந்த முதல் ஆண்டில் கூறினார்.

நமது குடியரசு தோன்றிய முதல் சில வருஷங்களில் நமது முதல் மூன்று ஜனாதிபதிகளின் ஆற்றல் எல்லையின்றி பெருகியது. டேனியல் வெப்ஸ்டர் என்பவர் ஆடம்ஸ், ஜெஃபர்ஸன் இருவர் சேவையையும் பாராட்டிப் பேசினார். ''புதிதாகத் தோன்றிய ஒரு உலகத்திற்கே சேவை செய்யும் நம்பிக்கையும் ஆற்றலும் அவர் பேச்சில் தொனித்தது.'' ''அமெரிக்காவில் உலக விவகாரங்களில் ஒரு புது சகாப்தம் தொடங்கிவிட்டது. சுதந்திரம் வாய்ந்த, பிரதிநிதித்வ ஆட்சி, பூரண மத சுதந்திரம் எதையும் அறிந்துகொள்ள வேண்டும் எனும் கட்டுக்கடங்காத ஆற்றலும் விழிப்பும், இதுவரை கண்டிராத அளவுக்கு ஞானத்தை மக்களிடம் பரப்புதல்-இவைதான் இந்த சகாப்தத்தின் தனிச்சிறப்புகள்.'' இவ்வாறு டேனியல் வெப்ஸ்டர் கூறினார்.

''நம் நாடே உலகம், நம் நாட்டு மக்களே உலக சமுதாயம்'' என வெப்ஸ்டர் காலத்தில் மஸ்ஸாசுஸட்ஸில் வாழ்ந்த எட்வர்டு எவரெட் (Edward Everett) வெப்ஸ்டர் கருத்துக்கள் பிரதிபலிக்கப் பேசினார். இவர் 1826-இல் சுதந்திரம் என்பதுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். ''உலகெங்கும் மக்கள் சக்தி வாய்ந்து இருப்பதுபோல் தெரிகிறது. இந்த சக்தி முதன் முதலில் நம் நாட்டில்தான் தோன்றியது. இது நம் வளர்ச்சியுடன் வளர்ந்து வந்திருக்கிறது. நாம் பலம் பெற்றபோதெல்லாம் இந்தச் சக்தியும் வளம் பெற்று வந்திருக்கிறது. நம்முடைய உதாரணத்தைப் பார்த்து ஊக்கமடைந்து, அதனால் மூன்று அற்புதமான புரட்சிகள் ஒரே தலைமுறையில் தோன்றியுள்ளன.'' இவ்வாறு ஃபிரான்ஸ், கிரீஸ், தென் அமெரிக்காவில் எழுந்த புரட்சிகளைக் குறிப்பிட்டு அந்தப் பிரசங்கத்தில் எவரெட் பேசினார்.

ஐரோப்பாவில், அக்கால நிலைமை மாறாமல் அச்சத்துடன் பாதுகாத்தவர்கள், நேரடியான மாறுதலைத் தூண்டும் நாடு என்று அமெரிக்காவைக் கண்டு நடுக்குற்றனர். இது பற்றி ஆஸ்திரியாவின் அயல் நாட்டு விவகார மந்திரி மெட்டர்னிக் (Metternich) குறை கூறினார். ''புரட்சி தோன்றுமிடங்களில் அவைகளுக்கு ஊக்கமளித்து வளர்ப்பதனாலும், தோல்வியுற்ற புரட்சிகள்பற்றி வருந்தியும், மூன் றுக்கு வரக்கூடியவர்களுக்கு, அரசாங்க துவேஷத்தைப் பரப்புபவர்களுக்கு உதவி புரிந்தும், சதிசெய்வோர் தைரி



யத்தைப் பெருக்கியும் பணி புரிந்து வருகின்றனர் அமெரிக்கர்.''

இந்தப் புரட்சிகளுக்கு அமெரிக்கப் புரட்சி ஊக்கமளித்ததுடன், நின்றுவிடவில்லை. அமெரிக்கப் புரட்சி வீரர்களே சென்று உதவியும் புரிந்தனர். இவர்களில் பலருக்கு அமெரிக்கா ஒரு நாடு மட்டுமல்ல, அது ஒரு மனோநிலையுமாயிருந்தது. ''எங்கு சுதந்திரம் நிலவுகிறதோ அதுவே என் நாடு'' என பெஞ்சமின் ஃபிராங்க்லின் கூறினார். ஆனால் இதற்கு தாமஸ் பெய்ன் போன்ற இளைஞர்கள் ''எங்கு சுதந்திரம் இல்லையோ, அது என் நாடு'' என்று பதில் கூறினர்.

இந்த மனப்போக்குடன் பெய்ன் ஃபிரான்சுக்குச் சென்றார். 1879-இல் தொடங்கிய அந்நாட்டுப் புரட்சியில் கலந்து கொண்டார். ஃபிரான்சில் பாஸ்டைல் சிறை தகர்க்கப்பட்ட பொழுது, ''சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம்'' எனும் மூவகை கோஷமே முழங்கப்பட்டது. ஜார்ஜ் வாஷிங்டனுக்கும் தாமஸ் பெய்னுக்கும் ஃபிரஞ்சு பிரஜா உரிமை அளித்து புதிய ஃபிரஞ்சு சட்டசபை தீர்மானம் செய்ததில் ஃபிரஞ்சு புரட்சிக்கும், அமெரிக்கப் புரட்சிக்கும் உள்ள ஒருமைப்பாட்டைப் புரிந்துகொள்ளலாம்.

* * *

புரட்சி மூலம் கொடுமைகளும், அக்கிரமங்களும் புரிந்ததில் ஃபிரஞ்சுப் புரட்சி, பின்னர் நிகழ்ந்த ரஷ்யப் புரட்சி போலாகிவிட்டது. மேரி அண்டாய்நெட்டை (Marie Antoinette)* தூக்கிலிட்டது கண்டு தாமஸ் பெய்ன் அதிர்ச்சி யடைந்தார். சந்தேகத்தின் மீது ராபஸ்பியரியால் பெய்ன் சிறைப்படுத்தப்பட்டார். அவர் தலை தப்பியது தம்பிரான் புண்யம் என்றுதான் கூறவேண்டும். ஃபிரஞ்சுக்காரர்களின் நாஸ்திகத்தைக் கண்டு அமெரிக்கர் வெறுப்புற்றனர். உதாரணமாக நாட்டர் டேம் (Notre Dame)† எனும் மாளிகைக்கு ''அறிவுக் கோயில்'' (Temple of Reason) என்று பெயரிட்டனர். மதகுருக்களை அவர்களுடைய சமயக் கருத்துக்களுக்காகப் பல வகைகளில் துன்புறுத்தினர். வேண்டாதவர்களைத் தூக்கிலிட்டு தேசிய கன்வென்ஷன் சர்வாதிகாரமாக மாறியதும், ஏமாற்றம் அதிகரித்தது. கடைசியில் புரட்சி

---

* மேரி அண்டாய்நெட் (Marie Antoinette) 1755-1798 வரை வாழ்ந்தவள். ஃபிரஞ்சு மன்னன் 14-வது லூயியின் மனைவி. கெட்ட நடத்தையுள்ளவளாகவும், அரண்மனை சூழ்ச்சிகளில் ஈடுபட்டும் இருந்ததனால், ஃபிரஞ்சு புரட்சிக் கமிட்டியினர் அவளை 16—10—1798-ல் தூக்கிலிட்டனர்.

† நாட்டர் டேம் (Notre Dame):—ஆதியில் காதிக் முறையில் பதின்மூன்றாவது நூற்றாண்டில் மாதாகோவிலாகக் கட்டப்பட்டது. இதைப் புரட்சியினர் உள்ளிருந்த சிற்பங்களை அழித்துவிட்டு, ''அறிவுக் கோயிலாக்கினர்.''

நெப்போலியன் வசப்பட்டது. புரட்சியின் தீவிர ஜனநாயக
ஆர்வம் மேலும் க்ஷீணித்தது.
அமெரிக்கப் தபுரட்சி நீடித்த வெற்றி அளித்தது. ஃபிரஞ்சுப்
புரட்சி அதை ஆட்கொண்ட ஆவேசத்திற்குப் பெயர்
பெற்றது. இவ்விரண்டு புரட்சிகளும் ஜனநாயக முறையில்
தேசிய அரசாங்கம் அமையக் காரணமாயிருந்தன. அக்
காலத்தில் பிரசித்தி பெற்ற ஜனநாயகம், தேசியம் ஆகிய
இரு சக்தி வாய்ந்த கருத்துக்கள் இப்புரட்சிகளில் காணப்
பட்டன. பாண்டுங் பிரதிநிதிகளின் ஆதரவு பெற்ற ஆசிய
ஆஃபிரிக்கப் புரட்சிகளின் அடிப்படையாக அமைந்துள்ள
இவ்விரு கருத்துக்களும், ஐரோப்பாவில் இவ்விரு கருத்துக்
களின் ஆணிவேர் எது என்பதைச் சிறிதளவு ஆராய்வோம்.
தேசிய அரசாங்கம் என்பது சமீப கால அரசியல்
சிருஷ்டிதான். அது தோன்றி நான்கு நூற்றுண்டுகளே
ஆகின்றன. 18-வது நூற்றுண்டில் ஃபிரஞ்சு, அமெரிக்கப்
புரட்சிகள் நிகழ்கையில், மேற்கு ஐரோப்பாவில் சில பகுதி
களில் நிலப்பிரபுத்துவம் ஆதிக்கம் செலுத்தி வந்தது.
ஜமீன்கள் ராஜ்யங்களாக இன்னும் மாறவில்லை.
ஒரு காலத்தில் பலஹீனமாயிருந்த முடியரசுகள் தொழில்
பெருக்கம் ஏற்பட்டதும், புது ஆதரவு பெற்றன. வர்த்த
கர்கள், வியாபாரம் செய்பவர்கள், தொழில் நுட்பம்
தெரிந்தவர்கள், முடியாட்சியை ஆதரித்தனர். இவர்கள் அந்த
ஆட்சி முறையை ஆதரித்ததற்குக் காரணம் நிலப்பிரபுத்வ
ஆட்சியை ஒழிக்க விரும்பியதும், நிலப்பிரபுக்கள் தத்தம்
ஜமீன்களில் அரசர்கள் போல் ஆண்டு வந்ததை ஒழிக்கவும்,
பல்வேறு வரிகளையும், தடுப்பு வரிகளையும் ஒழிக்க வேண்
டும் என்று இவர்கள் விரும்பியதும்தான். இம்மாதிரி
தொல்லைகள் அற்ற பலம் பொருந்திய மத்திய ஆட்சியை
அவர்கள் விரும்பினர். பெரிய ஜமீன்களையும், மடாலயங்
களையும் சில்லறை நில உரிமையாளர்களையும் ஒழிப்பதற்கு
மேற்கத்தி நாடுகள் வரலாற்றில் பல நூற்றுண்டுகள் ஆயின.
இறுதியில் தேசிய அரசாங்கம் ஏற்பட்டு ஒருபுறம் மன்ன
னும், மற்றொருபுறம் மக்களுமாக நின்றனர்.
நவயுகத் தொடக்கத்தில் மன்னனும் மக்களுமே ஆதிக்
கத்திற்குப் போராடினர். ஆகையால் தெய்விக ஆதாரத்
தின்கீழ் ஆட்சி உரிமை கொண்டதாக மன்னர்கள் சவால்
விட்டதால், மனிதனின் புனித உரிமை எனும் பெயரால்,
அதை மக்கள் எதிர்த்தது இயல்பேயாகும். "நான்தான்
அரசாங்கம்" என ஃபிரஞ்சு மன்னன் லூயி (Louis) வாதாடி
ஞன். இரண்டு தலைமுறைக்குப் பின்னர் இதற்குப் பதில்
கிடைத்தது. ஃபிரஞ்சுப் புரட்சி சபை தானே அரசாங்கம்



என மதித்து, "மக்களிடையே ஆதிபத்ய உரிமை இருக்
கிறது" என்று பிரகடனம் செய்தது.
1776-இல் அமெரிக்காவிலும், 1789-இல் ஃபிரான்சிலும்
தேசிய அரசாங்கம் ஏற்படுவதற்கு முன் பல நூற்றுண்டு
களுக்கு மேற்கத்தி நாடுகளில் ஜனநாயகம் வளர்ச்சி அடைந்து
வந்தது. இங்கிலாந்தில் 1215-ஆம் ஆண்டில் ரன்னிமிட்
(Runnymede) எனுமிடத்தில் பிரபுக்கள் கூடி மாக்ஞ கார்ட்டா
(Magna Carta) எனும் உரிமைச் சாஸனத்தில் மன்னன்
கையெழுத்திடும்படிச் செய்தனர். இதன்மூலம் அவர்கள்
பெற்ற உரிமைகள் சிறிதளவே ஆயினும், அவர்கள் அடைந்த
வெற்றியின் விளைவுகள் எல்லையற்றவை. அடுத்த ஏழு நூற்
றுண்டுகளுக்கு ஆங்கில அரசியல் சட்ட நிபுணர்களின் சிந்தனு
சக்தியை இந்த சாஸனம் பெரிதும் தூண்டி வந்தது.
இந்த சாஸனத்தில் புரட்சித்தன்மை வாய்ந்த ஷரத்து
ஒன்று இருந்தது. அதன்படி இந்த உடன்பாட்டை மன்
னன் எந்த அம்சத்திலாவது மீறினுல் கிளர்ந்தெழ பிரபுக்
களுக்கு உரிமை உண்டு. ஆனுல் ஆங்கில சம்பிரதாயங்களில்,
இந்தக் கலகம் செய்யும் உரிமையைவிட உரிய சமயத்தில்
சமரஸம் செய்து கொள்ளும் பழக்கமே இடம் பெற்றது.
அமைதியாகவும், அநேகமாக சமாதானமாகவும் ஆங்கில
பார்லிமெண்ட் மாறுதலடைந்து வந்தது. முதலில் பார்லி
மெண்ட் மன்னனின் ஆலோசனைக் குழுவாயிருந்தது. மன்ன
னின் உயர் நீதிமன்றமாயிற்று. இதிலிருந்து அதிகாரம்
வகிப்பதில், மன்னனுடன் போட்டிபோட ஆரம்பித்தது.
கடைசியில் மன்னன் பெயரால் பார்லிமெண்டே ஆட்சிபுரி
யத் தொடங்கிற்று.
ஆனுல், கிராம்வெல் (Cromwell) கலகம் செய்யும் பழைய
உரிமையைக் கையாண்டான். அவனுடைய **பியூரிடன்கள்**
(Puritans)* அடங்கிய படை 1642-இல் முதலாவது சார்லஸ்
மன்னனை எதிர்த்தது. அவன் முறைகளும், சாந்தமான
வைகளாயில்லை. 1649-இல் முதலாவது சார்லஸ் மன்னன்
தலையை வாங்கிவிட்டனர். இதைக் கண்டு ரஷ்யர்கள்
அதிர்ச்சியடைந்து, ரஷ்யாவிலிருந்த ஆங்கிலேய ஸ்தானிகரை,
அவருடைய நாட்டிற்குத் திருப்பியனுப்பிவிட்டனர். இதே
மாதிரிதான் ரஷ்யர்கள் 1918-இல் தங்களுடைய மன்ன
னைக் கொன்றதும், பிரிட்டிஷார் அதிர்ச்சியடைந்தனர்.
அமெரிக்கப் புரட்சி ஐரோப்பிய அரசியல் நிலையையும்,
உலகத்தில் இதர பாகங்களையும் எவ்வாறு பாதிக்கும்

---

*பியூரிடன் :—((Puritan) கிறிஸ்தவ மதத்தில் ஒரு பகுதியினர், கத்தோ
லிக்க வழி பிடிக்காமல் தோன்றிய சீர்திருத்தவாதிகள். (Protestant) போதிய
அளவு ஆர்வம் இல்லை என்று கருதியவர்கள் பியூரிடன்கள் என்று அழைக்
கப்பட்டனர்.

என்பதை 1781-இல் ரஷ்யர்கள் உடனே புரிந்துகொண்டுவிட்
டனர். நமது புரட்சிக்குப் பிறகு முப்பத்திமூன்று ஆண்டு
களுக்கு ரஷ்யா அமெரிக்க அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை.
பழைய நிலையில் நமக்குள்ள பற்றுதலினால் பழங்கால ரஷ்
யாவைப் பின்பற்றி நாம் சீனாவை அங்கீகரிக்கவில்லையென
ஒரு இந்திய சரித்திராசிரியர் என்னைக் கடிந்து கொண்டார்.

நமது புரட்சியைக் கண்டு, அக்கால ரஷ்யப் பிரபுக்கள்
அஞ்சியது நியாயம் என்பது நிரூபணமாகிவிட்டது. மேற்
கத்தி நாடுகள் ஜனநாயக தாராளப் போக்குக்கு உறைவிட
மாயிருந்தன. இதற்கு அமெரிக்கா சிறந்த உதாரணமாக
விளங்கிற்று. இவ்விடங்களிலிருந்து அரசியல் புரட்சி முத
லில் வட அட்லாண்டிக் பகுதிக்கும், தென் அமெரிக்காவிற்
கும் பரவிற்று. கடைசியாக இருபதாவது நூற்றாண்டில்
ஆசியாவையும், ஆஃபிரிக்காவையும் வந்தடைந்தது.

1850-க்குள் இதாலிய புரட்சித் தலைவன் கரிபால்டி
(Garibaldi) கந்தையணிந்த தனது புரட்சித் தொண்டர்
களைப் பார்த்துக் கூறினான்: "உங்களுக்கு நான் சம்பளம்
கொடுக்க முடியாது. தங்குவதற்கு இடம் அளிக்க இயலாது.
உண்பதற்கு உணவுப் பொருள்கள் கொடுக்க வழியில்லை.
நீங்கள் பட்டினி கிடக்கலாம், குடிக்கத் தண்ணீர் இல்லா
மல் தவிக்கலாம், நடந்து நீண்ட தூரம் அணிவகுத்துச்
செல்லலாம். போர் புரியலாம், உயிர் துறக்கலாம். இவை
களைத் தான் உங்களுக்கு நான் அளிக்க முடியும்." 1880-இல்
ஐரிஷ் மக்களைப் பார்த்து பார்னெல் (Parnell) கூறினான்:
"ஆங்கிலேயனுக்கு ஒரே ஒரு விஷயம்தான் விளங்கும்.
அவனை எதிர்த்து நில்."

நூற்று ஐம்பது ஆண்டுகளுக்குள் கான்கார்டு, ஃபோர்ஜ்
பள்ளதாக்கு, பிலடல்பியா முதலிய இடங்களில் வீரர்க
ளுக்கு ஆக்கமளித்த கருத்துக்களும், உணர்ச்சிப் பெருக்கும்
ஒவ்வொரு கண்டத்திலும் புத்துயிர் பெற்றெழுந்தன. இன்று
இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால், அன்று தோன்
றியது உலகப் புரட்சி என்றுதான் கூற வேண்டும்.

காலனி ஆட்சிப் புரட்சி முடிந்ததும், அமெரிக்கப் புரட்
சியும் முடிந்துவிட்டது என்று பின்னர் தோன்றிய விமர்ச
கர்களில் சிலர் கூறுகின்றனர். இதன் மூலம் உலகத்தோர்
அறிந்துகொள்ளக் கூடிய படிப்பினை முக்கியத்வம் வாய்ந்த
தாயிருப்பினும், கான்கார்டு பாலத்தில் நடந்த சண்டை
யில் ஆரம்பித்து, யார்க்டவுன் சண்டையுடன் அது முடி
வடைந்துவிட்டது என இவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் அமெரிக்கப் புரட்சி இவ்வாறு ஒரே ஒரு குறிக்
கோளுடையதாக இல்லை. அது பரந்து பரவி நீடித்து நடக்
கின்ற புரட்சி. மனித உரிமைகளும், வாழ்வுக்கான சந்



தர்ப்பங்களும் விரிவடைந்து செல்வதற்கான பூரண ஜன
நாயகப் புரட்சிக்கனவே அதை ஊக்குவித்து வந்திருக்கிறது.
பூரண ஜனநாயகப் புரட்சி முழு வெற்றி அடைந்துவிட
வில்லையென்பதை அறிவோம். ஆனால் இந்த லட்சியத்திற்
குள்ள சக்தியையோ, இந்த லட்சியத்தை ஆதரிப்பவர்கள்
புரட்சி வாதிகள் என்பதையோ வெகு சிலரே மறுப்பர்.

1781-லிருந்து அமெரிக்கப் புரட்சியின் நற்பயன் படிப்
படியாகவே வளர்ந்து வந்திருக்கிறது. ஆனால் அமெரிக்கச்
சரித்திர நிகழ்ச்சிகளின் பொருள் புரட்சிகரமாகவே இருந்து
வந்திருக்கிறது. அந்நிய ஆட்சியிலிருந்து அமெரிக்கர் சுதந்
திரம் பெற்றதும், தங்கள் நாட்டிலும் வெளியிலும் அச்சம
யம் இருந்த நிலையை அடியோடு மாற்றுவதில் ஈடுபட்டனர்.
இந்த ஈடுபாட்டின் நோக்கம் இன்னும் விரிவான அரசியல்,
சமூக, பொருளாதார. ஜனநாயகத்தை அமைக்கவேண்டும்
என்பதுதான் என்பதைப் பின்னர் காண்போம். நமது நோக்
கங்கள் உலக யுத்தக் கொடுமைகளால் பாழ்படக்கூடும்
என்பதை நாம் உணர்ந்ததும், நமது கனவு உலகத்தோர்
யாவருக்கும் பலிக்க வேண்டும் எனும் ஆவல் கொண்ட
தில் ஆச்சரியமில்லை.

பூரண ஜனநாயகப் புரட்சி நிகழ்த்த வேண்டும் என்று
ஆர்வம் கொண்டவர்களில் காந்தியும் ஒருவர். அவர் தாம்
நடத்திய போராட்டத்தில் பிரிட்டிஷ் துணிகளை தீயிட்டுக்
கொளுத்தினார். பிரிட்டிஷ் சாமான்கள் பகிஷ்கார இயக்
கத்தைத் தொடங்கினார். "சுதந்திரம் எனது பிறப்புரிமை,
அதை அடைந்தே தீருவேன்" என்று கூறினார். பிரிட்டிஷ்
ஆட்சியை நாம் எதிர்க்கையில் அந்நாட்டிலிருந்து வந்த
தேயிலையை நாம் பாஸ்டன் துறைமுகத்தில் கடலில் எறிந்
தோம். அன்று நாம் தொடங்கி, ஆனால் முடிவு பெறாத
அந்த இயக்கத்தைத்தான் காந்தி தொடர்ந்து நடத்தினார்.
இந்த இயக்கத்தின் அடிப்படை என்ன? "நல்லாட்சி சுய
ஆட்சிக்கு ஈடாகாது, மக்களுக்காக, மக்களால் நடத்தப்
படும் மக்கள் ஆட்சி" என லிங்கன் அருளிய இந்த சூத்தி
ரமே உலகத்திற்கு நம்பிக்கையூட்டும் தாரக மந்திரம்.

*

அத்தியாயம் - 27.

# யந்திரத் தொழிலும் ஜனநாயகமும்

**1776-இல்** அமெரிக்கா சுதந்திரப் பிரகடனம்
செய்தது. அதே ஆண்டில், மற்றுமோர் புரட்சிகரமான
சம்பவமும் நிகழ்ந்தது. அன்றுதான் ஜேம்ஸ் வாட் (James
Watt) டின் நீராவி என்ஜின் வேலைசெய்ய ஆரம்பித்தது.
பொருளாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய அதிசயிக்கத்
தக்க ஒரு சக்தி இதன் மூலம் வெளிப்பட்டது. இதனால் ஏற்
பட்ட நன்மைகள் படிப்படியாகவே வளர்ச்சியுற்றன என்பது
உண்மை. ஆனால் பத்தொன்பதாவது நூற்றாண்டு மத்திக்குள்,
இதன் மூலம் தொழில் புரட்சி (Industrial Revolution) ஏற்
பட்டது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர்.

ஜேம்ஸ் வாட்டின் நீராவி என்ஜின் மூலம், சிறப்பான
யந்திரத்தொழில் வளம் பெறுவதற்கு முன்பே, கிறிஸ்தவர்
களில் பியூரிடன் எனும் மதப்பிரிவைச் சேர்ந்தவர்களின்
சிக்கன வாழ்வின் காரணமாகவும், கடினமான உழைப்பின்
காரணமாகவும் முதலாளித்வம் தோன்றலாயிற்று. இதற்கு
முன்பே மத்ய காலத்தில் கிறிஸ்தவ மடங்களைச் சேர்ந்தவர்
கள் விஞ்ஞான முறை, விவசாயம், தொழில் ஸ்தாபனங்கள்
மூலம் வர்த்தகம், வர்த்தகத் துறையில் கணக்கு வைத்துக்
கொள்ளல், தொழில் பாகுபாடு இவைகளையெல்லாம் சமூகத்
தில் ஏற்படுத்தியிருந்தனர். இதன் விளைவாக மணிப்பிரகாரம்
உற்பத்தியும், கோஷ்டி வாழ்க்கையும் வளரலாயின.

உற்பத்தி முறைகளை மாற்றியதன் விளைவாக புரட்சி
ஏற்பட்டது எனக் கூறும்படி என்ன விசேஷ மாறுதல் பதி
னெட்டாவது நூற்றாண்டு இறுதியில் ஏற்பட்டுவிட்டது?

படிப்படியாக வர்த்தக முறை வளர்ந்து வந்ததனால் ஏற்
பட்ட புதிய சக்திகள், நிலப்பிரபுத்வ முறையையே தகர்த்
துக்கொண்டு, புதிய தொழில் வகை ஜனநாயக ராஜ்யமாக
அமைந்தது என்று பதில் கூறுவர் சிலர். மறுமலர்ச்சியினால்
அறிவாளிகளிடையே ஏற்பட்ட கொந்தளிப்பினாலும், வட
அட்லாண்டிக் பிராந்தியத்தில் பெரும் பகுதியில் அரசியல்
சுதந்திரம் பெருகி வந்ததனாலும், ஜனநாயக ராஜ்யம் அமைந்
தது என்று கூறுவோருமுண்டு.

மேற்கத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குக்
காரணம் வர்த்தக ஸ்தாபனங்கள் (Corporations) தோன்றி



யது தான் என வேறு சிலர் கூறுகின்றனர். கூட்டுறவு ஸ்தாப
னங்களே நாகரிக வாழ்க்கையின் உன்னத அமைப்புகள் என
நீதிபதி பிராண்டீஸ் (Brandeis) கூறுகிறார். இந்த கார்ப்ப
ரேஷன்கள்தான் நவீன தொழில் வளர்ச்சிக்குக் காரணம்
என்பதற்குச் சிறப்பான ஆதாரங்கள் காட்டலாம்.

கார்ப்பரேஷன்களால் ஏராளமான மூலதனத்தைத்
திரட்ட முடிந்தது. தொழிலாளிகளையும், தொழில் நுணுக்
கம் தெரிந்தவர்களையும் ஒன்று கூட்டவும் அவற்றால் முடிந்
தது. கார்ப்பரேஷன் எனும் ஸ்தாபனம் ஜான் லாக் * (John-
Locke) எனும் அரசியல் தத்துவாசிரியர் முயற்சியால் முதலில்,
இங்கிலாந்தில்தான் தோன்றிற்று. எனினும் அது மிக விரி
வாக மலர்ச்சியடைந்தது அமெரிக்காவில்தான். 19-வது நூற்
றாண்டில் ஒரே ஒரு ஆண்டில் நமது சமஷ்டியில், ஒரு ராஜ்யத்
தில் தோன்றிய கார்ப்பரேஷன்களின் எண்ணிக்கை, அதற்கு
முன் உலக முழுதும் தோன்றியதைவிட அதிகமாகும்.

கோழியிலிருந்து முட்டை வந்ததா அல்லது முட்டையி
லிருந்து கோழி தோன்றிற்றா என்று தத்துவாசிரியர்கள் புதிர்
போடுவார்கள். அதே மாதிரிதான் யந்திரத்தொழில் முந்தி
தோன்றிற்றா அல்லது, அதற்கு முன்பே ஜனநாயகம் உதய
மாகிவிட்டதா? என்ற கேள்வியும், புதிய தொழில் நுணுக்
கம் முந்தியா, புது சுதந்திரம் முந்தியா என்பதைத் தீர்க்க
முற்படுவதும் அவ்விதமே. ஆனால் ஒன்று மட்டும் நிச்சய
மாகக் கூறலாம். இவ்விரண்டும் கூடியதனால்தான் நாகரிகம்
தோன்றிற்று. கொந்தளிப்பினாலும், கிளர்ச்சியினாலும் உல
கின் எல்லா பாகங்களிலும் உள்ள மக்கள் புத்துணர்வு பெற்றி
ருக்கின்றனர். ஏதோ ஒரு காரணத்தால், ஒருவகை அலை,
லண்டன், லங்காஷயர், லிவர்பூல் முதலிய விடங்களி
லிருந்து கிளம்பிற்று. அது வாயுவேகத்தில் அட்லாண்டிக்
பிராந்தியத்திற்குப் பரவி, இந்த நூற்றாண்டில் உலகெங்கும்
வியாபித்திருக்கிறது.

பதினெட்டாவது நூற்றாண்டில் இங்கிலாந்தில், பலபுதிய
தொழில் நுட்பங்களைக் கண்டு பிடித்தனர். இன்று நமக்கு
அணுசக்தி தோன்றுவது போல், அன்று அந்தக் கண்டு பிடிப்பு
கள் மாயஜாலச் சக்தியுள்ளவை போல் தோன்றின. இந்த
ரகசியத்தை தங்களுக்கே உரிமையானது என பாவிப்பது
போல அக்காலத்து பிரிட்டிஷ் சட்ட நிபுணர்கள் அந்தப் புதிய
யந்திரங்களை தங்கள் நாட்டுத் தனி உரிமைகள் எனப் பாது
காத்தனர். இங்கிலாந்தில் இருந்து எந்த யந்திரத்தையும்
வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லலாகாது என்று சட்டம்

*ஜான் லாக்:— 1682-லிருந்து 1704-வரை வாழ்ந்த ஆங்கில அரசியல் தத்துவாசிரியர்.

இயற்றப்பட்டது. இந்த யந்திரங்களைத் தயார் செய்பவர்கள்
வெளிநாடுகளுக்குச் செல்லலாகாது எனவும் தடை விதிக்கப்
பட்டது.

இந்த சமயத்தில் நம் நாட்டில் யந்திரப் புரட்சி ஆரம்ப
தசையிலிருந்தது. முட்டையிலிருந்து வெளிப்பட்ட குஞ்சு
சிறகடித்து தன் பறக்கும் திறமையைச் சோதித்துப் பார்ப்
பதுபோல், இந்தப் புரட்சியும் இருந்தது. பத்தொன்பது வய
துள்ள ஆங்கிலச் சிறுவன் துணி ஆலை ஆரம்பிப்பதற்கான திட்
டத்தை தனது சட்டைப் பைக்குள் மறைத்துக்கொண்டு நம்
நாட்டிலும் அதே தொழிலை ஆரம்பிக்கலாம் என்று வந்தான்.

அமெரிக்கர்களுக்கு இயல்பாயுள்ள சாமர்த்தியம், எதை
யும் செய்து பார்க்கலாமே என்று நினைக்கிற ஆற்றல், (மனித
சஞ்சாரமற்ற எல்லைப்புறத்தைக் கொண்ட அமெரிக்கா
போன்ற ஒரு நாட்டில் வாழ்வதற்கு இந்த ஆற்றல் அவசிய
மாகும்) இரண்டும் சேர்ந்து இந்த யந்திரத்தைப் பரப்புவதற்
கான தூண்டுதலளித்தன. பருத்தியிலிருந்து கொட்டையை
நீக்குவதற்கு எலி விட்னி (Eli Whitney) என்பவர் ஒரு இயந்தி
ரம் கண்டுபிடித்திருந்தார். இதனால் இங்கிலாந்திலும், புது இங்
கிலாந்து ராஜ்யங்களிலும் இருந்த நெசவுத்தறிகளுக்கான
பருத்தி வேண்டிய அளவு கிடைத்து வந்தது. மேலும் விட்னி
மற்றொன்றும் கண்டு பிடித்தார். இயந்திரத்தின் பல பகுதி
களை ஒன்றுகூட்டி ஒரு முழு யந்திரமாக்கும் வகையைக்
கண்டு பிடித்தார். மஸ்ஸாசுஸட்ஸில் உள்ள தமது ஸ்பிரிங்
ஃபீல்டு (Springfield) ஆலையில் தயாரான பல பகுதிகளைக்
கொண்டு பன்னிரண்டு துப்பாக்கிகளைக்கூட்டி, காட்டினார்.
இதைப் பார்த்த யுத்த இலாகா அதிகாரிகள் வியப்புற்றனர்.

இன்று நம் பிரம்மாண்டமான மோட்டார் உற்பத்தி
ஆலைகளை வாட்டோ, விட்னியோ பார்ப்பார்களானால், அவர்
கள் முகங்களில் காணக்கூடிய வியப்புக்குறியிலிருந்து, நமது
இயந்திர உற்பத்தி எவ்வளவு புரட்சிகரமாக அபிவிருத்தி
யடைந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இப்
போது ஒரு நிமிஷத்திற்கு ஒரு பூர்த்தியான கார் வெளிவரு
கிறது. அந்தந்தக் காருக்கேற்ற முறையில், குறிப்பிட்ட காலத்
தில் அந்தந்தப் பகுதிகள் அதனதன் இடத்திற்கு வந்து
பிணைந்து கொள்கின்றன.

மேலே ஒரு திரையிட்டிருக்கிறது. அதற்கு மேலுள்ள ஒரு
துவாரத்தின் மூலம் தேவைப்படும் வர்ணம் அடிக்கப்பட்ட
ஒரு கார் தரையிலிறங்கும். இது இறங்குவதுதான் தாமதம்.
உடனே ஒரு கோஷ்டியினர் அதை முன்னும் பின்னும் ஆக
ஓட்டிப் பார்த்து சோதனைக் கூடத்திற்குக் கடத்திச் செல்லு
கின்றனர். சரியானபடி ஓடுகிறதா, குறிப்பிட்ட கால அள
வில் குறிப்பிட்ட தூரம் ஓடக்கூடியதா என்பதை வழிநெடுக



நிபுணர்கள் நின்று கவனிக்கின்றனர். இப்படிப் பார்ப்
பதன் மூலம் கார் தயாரிப்பில் இன்னும் மனித உழைப்பைக்
குறைக்கலாமா என்று ஆராய்கின்றனர்; ஒரு வருஷத்திற்கு
அமெரிக்காவில் அறுபது லட்சம் கார்கள் தயாராகின்றன.
இவ்வாறாக யந்திரத் தொழில் புரட்சியில் கார் உற்பத்தி
முன்னணியிலிருக்கிறது. தொழில் திறமையைப் பெருக்கு
வதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் செய்து பார்க்கின்
றனர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் சரக்கு
அதிகமாக உற்பத்தியாயிற்று என்பதனால் மட்டும் யந்திரப்
புரட்சி ஏற்பட்டுவிட்டது என்று கூறிவிடலாகாது. கால்
வாய்கள் வெட்டப்பட்டன. சிமின்ட் ரஸ்தாக்கள் அமைக்
கப்பட்டன. ரயில் என்ஜின் தோன்றியதும், லிவர்ப்பூலுக்கும்,
மான்செஸ்டருக்கும் ரயில் பாதை அமைக்கப்பட்டது.

அமெரிக்கா மீண்டும் இந்தப் புரட்சிச் சாவலை ஏற்றது.
ஃபுல்டனின் நீராவிப் படகைக் கண்டுபிடித்து, பல கண்டங்
களைக் கடந்து செல்லும் ரயில் பாதை அமைத்தது.
கடைசியாக ஃபோர்டின் (Ford) மோட்டார் உற்பத்தி வந்
தது. முதலில் உலகம் தந்தி மூலம் பிணைக்கப்பட்டது.
இன்று கண்ணுக்குத் தெரியாத ரேடியோ அலைகள் உலகை
ஒன்றாக வளைத்துவிட்டது. தன் இருக்கையைவிட்டு அசை
யாமல் உலகெங்கும் கருத்துக்களைப் பரப்பும் வகையை மனி
தன் அறிந்து கொண்டு விட்டான். மனிதன் வெகு காலமா
கக் கனவு கண்டது இறுதியில் பலித்துவிட்டது. அவன் பறக்
கவும் தொடங்கிவிட்டான்.

மனிதனையும், அவனுடைய சாமான்களையும் சுமந்து
செல்வதற்கான சக்தி, குளிர் காய்வதற்கு, வெப்பத்தை
அடைய, இருட்டில் வெளிச்சம் தோன்ற-இவ்வாறாக வாட்
கண்டுபிடித்த என்ஜின் பல்வேறு வகைகளில் பயன்பட்டது.
எப்படித் தண்ணீர் சக்திக்குப் பதிலாக நிலக்கரிச் சுரங்கம்
ஏற்பட்டதோ, குதிரை சக்தியை ஏராளமாகப் பெருக்கிய
தன் விளைவாக மின்சாரம் தோன்றியதோ அதேபோல்,
குதிரை சக்தி என்பது மின்சக்தியை அளிப்பதற்காக சாதன
மாயிற்று. கடைசியில் சூரியனின் சக்தி ரகசியத்தை
அறிந்து மனிதன் அணுசக்தியை தனக்கு அடிமையாக்கிக்
கொண்டான்.

யந்திரப் புரட்சி தொடங்கி, நூற்றைம்பது ஆண்டு
களுக்குள் பலம் வாய்ந்தவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்
கனவு கூடக் கண்டிருக்க முடியாத அளவுக்கு அமெரிக்கக்
குடும்பத்தினர் செல்வம் படைத்தவர்களாகிவிட்டனர்.

இயந்திரத் தொழில் பெருக்கம், அதன் ஆதிகர்த்தாக்கள்
எதிர்பார்த்ததை விட அதிகமாகவே ஏற்பட்டுவிட்டது;

இது உண்மையே யானாலும் அதற்காக மக்களை மிகுந்த
கஷ்டத்திற் குள்ளாக்கி விட்டது என்பதும் உண்மை. ஒரு
நிலப்பிரபுத்வ சமுதாயத்தை யந்திரத் தொழில் வளம்பெற்ற
தாகச் செய்வதற்கு ஏராளமான மூலதனம் சேசரிக்கவேண்டி
யிருக்கிறது. ஆனால் மூலதனமோ அச்சமயத்தில் மிகக்
குறைவாகவே யிருந்தது. ஆகையால் குறைந்த கூலிகொடுத்து
மக்கள் உழைப்பைப் பெறவேண்டியிருந்தது. மூலதனம்
சேகரிப்பதற்காக மக்களைச் சேமிக்கும்படி நிர்ப்பந்தப்படுத்த
வேண்டியிருந்தது.

புதிய யந்திரங்கள் தோன்றியதனால் மத்ய சகாப்த
ஆங்கிலத் தொழில் குழுவைச் (Guild) சேர்ந்த. தேர்ந்த
தொழிலாளிகள் வேலை இழந்தனர். விவசாயத்தை நவீன
மாக்கியதனாலும், சில நிலச் சட்டங்களாலும், அக்காலக்
குடியானவர்கள் தங்கள் நிலங்களை இழந்தனர். இவர்களுக்
குப் புதிய ஆலைகளில் சொற்பக் கூலியிலோ அல்லது கூலியே
இல்லாமலோ வேலை கொடுக்கப்பட்டது. வேலை நேரமோ,
பொழுது விடிந்ததிலிருந்து பொழுது சாயும் வரையில்
என்று திட்டம் செய்யப்பட்டது.

வேலை செய்த தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம்
யந்திரப் புரட்சியினால் குறைந்ததா என்பது விவாதத்திற்
குரியது. ஏனெனில், பதினெட்டாவது நூற்றாண்டிற்கு
முந்திய இங்கிலாந்தில் ஏழை மக்கள் மிகுந்த கஷ்டத்திற்குட்
பட்டே வாழ்ந்தனர். இயந்திரம் வந்ததனால் சிலர் நிலை உயர்ந்
திருக்கலாம். மற்றும் சிலர் நிலை தாழ்ந்திருக்கலாம்.

எவ்வாறாயினும் தொழில் யந்திரமயமானதனால் பெரிதும்
கஷ்டப்பட்டவர்கள் பெண்களும், குழந்தைகளும் தான்.
இங்கிலாந்தில் ஏழைகள் நிவாரணச் சட்டங்கள் நிறைவேற்
றப்பட்டன. தொழிலில் ஈடுபட்டோருக்கு உதவி புரிவதற்
காக அவர்களுடைய குழந்தைகளுக்கு மதஸ்தாபனங்கள்
தொழில் பயிற்சி அளிக்கவேண்டும். இந்தச் சட்டத்தை
ஆலை முதலாளிகள் நன்கு பயன்படுத்திக்கொண்டனர். ஐந்து
அல்லது ஆறு வயதுக் குழந்தைகளை வண்டிகளில் ஏற்றிச்
சென்று, தினசரி பன்னிரண்டு மணி அல்லது அதற்கு மேற்
பட்டும் வேலை வாங்கினர். வேலை முடிந்ததும் அவர்களை
ஏழை விடுதிகளில் போட்டுப் பூட்டி வைத்திருந்தனர். சில
மதாலயங்கள் தங்களிடம் பயிற்சி பெறுபவர்களில் ஓரளவு
மூளை மழுங்கிய குழந்தைகளையும் வேலைக்கு அழைத்துச்
செல்ல வேண்டுமென்று நிபந்தனை விதித்தனர்.

அநேக சந்தர்ப்பங்களில் இந்தச் சிறுவர்கள் வேலை
செய்கையிலேயே பகல் உணவு உட்கொள்ளவேண்டும்.
இயந்திரம் ஓடிக்கொண்டிருக்கையில், அதைச் சுத்தம் செய்ய
வேண்டும். பனிக்காலத்தில் குழந்தைகள் ஆலைகளைவிட்டு



வெளியேறுகையில் வியர்வை கொட்டும். ஆனால் வெளி
யேறியதும், அவர்கள் அணிந்து கொள்ள வேண்டிய உடை
கள் பனியில் உறைந்து போயிருக்கும். இயந்திரத் தொழி
லால் ஏற்பட்டுள்ள விபத்துக்கள், அங்கஹீனங்கள், காச
நோயால் பீடிக்கப்பட்டவர்கள், முதலாளிகளால் இழிவுப்
படுத்தப்பட்டவர்கள் இந்தப் பட்டியல் யந்திர நாகரிகத்
தைத் தோற்றுவித்தவர் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ற ஞாப
கச் சின்னங்களாக்கும். மேலும் இந்த நாகரிகத்தை ஏற்பவர்
களுக்கு எச்சரிக்கையாகவும் இருக்கும்.

இந்த இயந்திரப் புரட்சியால், கஷ்டப்பட்டவர்கள்
ஐரோப்பியர் மட்டுமல்ல. இங்கிலாந்தின் காலனிகள், உற்பத்
திக்கு வேண்டிய தளப்பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு
அனுப்பி வைத்தன. இந்தப் பொருட்களை உற்பத்தி செய்த
காலனி மக்கள் இங்கிலாந்து மக்களைவிட கொடூரமாகச்
சுரண்டப்பட்டனர். இங்கிலாந்தில் தயாரான சரக்குகளை
வாங்க வேண்டிய சந்தையாகவும் காலனிகள் பயன்பட்டன.
இம்மாதிரி வர்த்தக முறைகளை எதிர்த்து அமெரிக்கா போர்
புரிந்து 1776-இல் சுதந்திரம் பெற்றது. ஆனால் இந்தியா இந்
தக் கொடுமைக்கு உட்பட்டு வாழ வேண்டி வந்துவிட்டது.

நேரடியாக பிரிட்டனுக்கு இந்தியா மூலதனம் அளிக்க
ஒரு வழி ஏற்பட்டது. அங்கே, கொள்ளையடித்த பணத்தை
இங்கே கொண்டு வந்து போட்டனர். அங்கே ஆட்சி புரிந்த
ஆங்கிலேயர், 1757-இல் பிளாஸியில் கிளைவ் வெற்றி
பெற்றதும், வங்காளத்தின் தனமெல்லாம் லண்டனுக்குத்
திருப்பப்பட்டது. யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, மூல
தனத்திற்கு தேவை ஏற்பட்டபோது, இந்தப் பணம் இங்கு
திரும்பியது சௌகரியமாகப் போய்விட்டது. இந்தியாவில்
பணம் திரட்டியவர்கள் புதிய வர்த்தக நிலையங்களுக்கு
மூலதனமாகத் தங்கள் பணத்தை அளித்தனர். ஆகையால்
இந்தப் புது யந்திரங்கள் பெரிய ஆலைகள் அமைக்க
உதவியாக இருந்தன.

அமெரிக்கா காலனிகளை நம்பியிருக்கவில்லை. பயிராகாத
வளமான நிலங்களும் தேவையான தளப்பொருள்களும் ஏராள
மாக மேற்குப் பகுதியில் இருந்தன. எனினும், அமெரிக்கா
விலும் ஒருவகை காலனிப் பிரச்னை இருந்தது. தெற்கே
அடிமைகள் இருந்தனர். நமது பொருளாதார அமைப்பின்
பெரும் பகுதியின் வளம் இந்த அடிமைகளைப் பொறுத்ததா
யிருந்தது.

நமக்கு அத்தியாவசியத் தேவையாயிருந்த மூலதனத்தை
ஏராளமாக பிரிட்டிஷ் பண முதலாளிகள் நமக்குக் கொடுத்து
உதவினர். குறிப்பாக, ரயில் பாதை அமைப்புக்கு அவர்கள்
பணம் உதவியாயிருந்தது. நமது பொருளாதார முன்னேற்

றத்திற்கு ரயில் பாதை அமைப்பு அத்தியாவசியமா யிருந்தது.
மேலும் ஐரோப்பாவெங்குமிருந்து குறைந்த கூலிக்கு வேலை
செய்யும் தொழிலாளிகள் ஏராளமாகக் கிடைத்தனர்.

எனவே, இயந்திரத் தொழில் வளர்ச்சியில் பிறநாடுகள்
போல் கஷ்டப்படாமல் அமெரிக்கா முதல்தரமாக முன்
னேறியது.

பதினெட்டாவது நூற்றுண்டில் தான் கண்டுபிடித்தவை
களை ரகசியமாக வைத்திருந்தது பிரிட்டன். அதுபோல
இன்று தொழில் வளத்தில் வளமுற்ற நாடுகள்கூட உரிமை
பாராட்ட முடியாது. அணுசக்தித் துறையில் அமெரிக்கா
அதிசயிக்கத்தக்க வெற்றி அடைந்திருக்கிறது. இந்த வெற்
றிக்காக ஐன்ஸ்டீன் (Einstein), ஸில்லார்டு (Szilard), ஃபெர்மி
(Fermi) போன்ற அயல்நாட்டு விஞ்ஞானிகள் பெரிதும்
உழைத்திருக்கின்றனர். ஆனால் இந்த விஞ்ஞான உண்மை
களில் அமெரிக்கா தனி உரிமை கொண்டாட முடியாது.

ஐரோப்பிய விஞ்ஞானிகள் அறியாத எவ்வித விஞ்ஞான
ரகஸ்யமும் நம்மிடம் கிடையாது என்று, 1955-இல் அமெரிக்க
அணுசக்தி விஞ்ஞானிகள் கூறிவிட்டனர். இயந்திரப் புரட்
சியில் பிரிட்டன் போல் நாம் யந்திரத்தின் நடைமுறைகளை
யும், நுணுக்கங்களையும் முன்னதாகவே அறிந்துகொண்
டோம். ஆகையால், பிறநாடுகளைவிட நாம் முன்னதாகவே
முன்னேறத் தொடங்கி விட்டோம். இவ்வளவுதான்
நாம் பெருமைப்படக் கூடியது. பிரிட்டிஷாரையும்,
ஜப்பானியரையும்விட இயந்திர அணுசக்தி அபிவிருத்தி
யில் நாம் இனி பின்தங்கிவிடக்கூடும் என்றும் சொல்ல
லாம். தங்களது தொழில் சிறப்பை நீடித்து நிலைநாட்ட
வேண்டுமானால், இந்த நாடுகள் உடனடியாகப் பிரத்தியேக
மாக அணுசக்தியை உபயோகிக்க வேண்டியிருக்கும். இந்த
நாடுகளில் நிலக்கரி நீர்வசதி பற்றுமல் போய்க்கொண்டு
வருகிறது. ஆகையால் அவற்றுக்கு அணுசக்தி நீண்டகாலத்
திற்குத் தேவைப்படலாம்.

ஐரோப்பாவில் நமது நேசநாடுகள் அணுசக்தி அபி
விருத்தி செய்வதில் அநாவசியமாகக் காலதாமதம் செய்கின்
றன. மேலும் இந்தத் துறையில் அவைகள் பொருளை வீண்
செய்கின்றன. இந்த விஷயங்களை மனத்தில் கொண்டு பார்த்
தால், அணுசக்தி விஷயத்தில் நாம் விதித்த கட்டுப்பாடுகள்
சிந்தித்துப் பார்த்து விதித்தவைகள்போல் தோன்றவில்லை.
ஆகையால் அணுசக்தித் துறை பூராவையும், புதிய முறையில்
பாகுபாடு செய்யவேண்டும் என்று அமெரிக்கா அணு விஞ்
ஞானிகள் வற்புறுத்துகின்றனர். 1955-ஆம் ஆண்டு ஆகஸ்ட்
மாதம் ஜெனிவாவில் அணுசக்தியை தொழில் அபிவிருத்திக்
குப் பயன்படுத்துவது சம்பந்தமாக மகாநாடு கூடிற்று. அம்



மகாநாட்டில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதற்காக நம்மை
வெகுவாகப் பாராட்டினர்.

அமெரிக்காவின் இந்தப் புதிய யந்திரப் புரட்சி பயங்
கரமாகத் தோன்றுவதற்குக் காரணம், அது இப்பொழுது
தான் தொடங்கியிருக்கிறது என்பது. மேற்கத்தி நாட்டினரின்,
இரண்டு நூற்றுண்டு இயந்திர வளர்ச்சியின் முழுச் சக்தியை
அணுசக்தியின் எதிர்கால பயன்களிலிருந்து அறிந்து வரு
கிறோம். தொழில் நுணுக்கத் துறையில் சுயமாக இயங்கும்
இயந்திரம் தோன்றியிருப்பதனுல், மற்றுமோர் புரட்சி
ஏற்படப்போகிறது. மனிதனின் சாதனங்களாக இயந்திரம்
பயன்பட்டு வந்திருக்கிறது. அது நூல் நூற்றுத் தருகிறது.
துணி நெய்து அளிக்கிறது. மரத்தைப் பிளக்க உதவுகிறது.
தண்ணீர் இறைக்கப் பயன்படுகிறது, சாமான்களைச் சுமந்து
செல்லுகிறது, நிலத்தை உழுகிறது, தான்ய அறுவடை செய்
கிறது. நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட இதுவரை
மனிதன் தன் சுய உழைப்பால் செய்து வந்தவைகளை இப்
போது இயந்திரம் செய்கிறது. இருபதாவது நூற்றுண்டு
மத்தியில் சுயமாக இயங்கக்கூடிய இயந்திரங்கள் செய்வது
சாத்தியம் என்பது தெளிவாயிற்று.

இந்த நூதனமான இயந்திரங்களை முதன் முறையாகப்
பார்த்தபோது, தமது மனத்தில் எவ்வித அச்சம் ஏற்பட்டது
என்பதை சி. ஐ. ஓ. (C.I.O.) வின் தலைவர் **வால்டர் ரூதர்***
(Walter Reuther) விவரித்தார். சில விநாடிகளில் உருளை
களை பெரிய யந்திரங்கள் துளைத்துவிடுவதை அவர் பார்த்
தார். மின்சார முறையில் வேலையின் அளவைக் கண்டு
பிடிப்பதைக் கவனித்தார். திட்டப்படி தயாராகாதவை
களை யந்திரம் ஒதுக்கித் தள்ளுவதையும் நோக்கினர். சிவப்பு,
மஞ்சள், அல்லது பச்சை வர்ணம் தோன்றுவதிலிருந்து யந்
திரம் சூடேறிக் களைத்து விட்டதா என்று அறிந்து கூறுவது
தான் யந்திரத் தொழிலில் ஈடுபட்ட சிலருடைய வேலை.

''உங்களுக்குச் சேரவேண்டியதை இந்த யந்திரம் வாங்
கித் தர நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?'' என்று
ரூதரை ஒரு ஃபோர்டு கம்பெனி நிர்வாகி கேட்டார். ''நீங்கள்
தயார் செய்யும் கார்களை வாங்குவோரை அது எப்படிக்
கண்டுபிடிக்கும்?'' என ரூதர் பதில் கேள்வி கேட்டார்.
யந்திரம் வந்ததும் தங்கள் தொழில் போய்விட்டதே என்று
முன்பு பாட்டாளி மக்கள் கிளர்ந்தெழுந்த மாதிரி இன்று,
தொழிலாளர் தலைவர்கள் தங்களுக்கு என்ன தான் சந்தேகங்
கள் இருப்பினும், சுயமாக இயங்கும் இயந்திரத்தை ஆட்

* வால்டர் ரூதர்—(Walter Reuther) அமெரிக்கத் தொழிலாளிகள் தலைவர்.
மோட்டார் தொழிலாளிகளின் கூட்டுச் சங்கத்தின் தலைவர். இந்தச் சங்கத்
திற்குத்தான் சி. ஐ. ஓ. என சுருக்கப் பெயர் அளிக்கப்பட்டிருக்கிறது.

சேபிக்க மாட்டார்கள். விஞ்ஞானத்தினாலும், தொழில் நுணுக்க வளர்ச்சியினாலும் ஏற்படக்கூடிய நலன்களை மேற்கத்தி உயர்வர்க்கத்தினருக்கு மட்டுமல்ல, உலக மக்கள் யாவருக்கும் கிட்டும்படியான வகையில் செய்யப்படும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

இந்த நம்பிக்கைக்கு அடிப்படையான காரணம், அமெரிக்கப் புரட்சி இன்னும் நீடித்து வருகிறது என்பதுதான். ஒருகாலத்தில் இயந்திரம், மனிதனைப் பணிய வைத்துவிடுமோ என்று அஞ்சினர். ஆனால் சென்ற தலைமுறையில் ஜனநாயக சாதனத்தின் மூலம் யந்திரத்தை வசப்படுத்தும் வழியை மக்கள் அறிந்துவிட்டனர் என்பதுதான் இந்த நம்பிக்கைக்குக் காரணம். இயந்திரப் புரட்சி சக்தி வாய்ந்தது, அசாதாரணமானது என்பது உண்மைதான். ஆனால் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும் என்பதற்காகவே அமெரிக்கப் புரட்சி நிகழ்ந்தது. இந்தப் புரட்சியில் மக்கள் தேவை, மக்கள் நலன்கள், மக்கள் மேம்பாட்டுக்கான கொள்கைகள் முதலியவைகளே வெற்றி பெற்றன.

## அத்தியாயம்—28

# மக்கள் யாவரும் சம உரிமையுடன் பிறந்தனர்

''சுதந்திரம்'' என்றால் அரசியல் சுதந்திரம். இதுதான் அமெரிக்கப் புரட்சியின் முதல் போர் முரசு. இன்று ஆசியாவிலும், ஆஃப்பிரிக்காவிலும் இதே சுதந்திரம் வேண்டும் என்றுதான் மக்கள் வற்புறுத்துகின்றனர். இதற்குப் பின் யந்திரத் தொழிற் பெருக்கம் ஏற்பட்டது. அந்தத் தொழில் வளத்தினால் தோன்றிய சக்தியின் விளைவாக மனித கண்ணியம் வேண்டுமென்று கோரினர். இன, மத, நிற மாறுபாட்டைப் பாராட்டாமல் வாழ்க்கையில் சம சந்தர்ப்பம் தேவையென்று கேட்கத் தொடங்கினர்.

''எல்லா சமூகத்தினரும் இருகூறாகப் பிரிகின்றனர். செல்வம் படைத்த, மேல் குடிகளில் பிறந்த சிலர் ஒருபுறம்; பாமர மக்கள் மற்றொருபுறம்; பாமர மக்கள் கட்டுக்கடங்காதவர்கள்; அவர்கள் மனப்பான்மை மாறிக்கொண்டேயிருக்கும். அவர்களுக்கு எதையும் மதிப்பிடத் தெரியாது; எது நியாயம் என்று திட்டம் செய்வதையும் அறியார். ஆகையால் செல்வச் சிறு கூட்டத்தினருக்கு அரசாங்கத்தில் நிலையான பங்களியுங்கள். பாமர மக்களின் நிலையற்றத் தன்மையை அவர்கள் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்வர்''. இவ்வாறு பிற்போக்காளரான அலெக்ஸாண்டர் ஹாமில்டன் அரசியல் அமைப்பு மகாநாட்டில் கூறினார்.



இதற்கு எதிரிடையான கருத்தைப் பின்னர், ஜெஃபர்ஸன் தெரிவித்தார்.

'' மக்கள் இயல்பாகவே இரு கட்சிகளாகப் பிரிகின்றனர். 1. மக்களைக் கண்டு அஞ்சுபவர்கள், அவர்களிடம் நம்பிக்கை இல்லாதவர்கள். இவர்கள் மக்களிடமுள்ள அதிகாரங்களைப் பறித்து மேல் வகுப்பினரிடம் ஒப்படைக்க விரும்புகின்றனர். 2. மக்களுடன் ஒன்றுபட்டு நிற்பவர்கள், அவர்களிடம் நம்பிக்கை உள்ளவர்கள், பொதுநலனை இம்மக்களிடம் ஒப்புவித்தால் புத்திசாலித்தனமாக நிர்வகிக்க மாட்டார்கள் என இவர்களுக்குத் தோன்றலாம். எனினும் இவர்கள் நாணயமானவர்கள், இவர்களால் எவ்வித ஆபத்தும் ஏற்படாது என நம்புகின்றனர்.''

அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தில், ''எல்லா மக்களையும் சுதந்திர புருஷர்களாகவும், சமத்துவமுடையவர்களாகவும் ஆண்டவன் படைத்தார்'' எனும் வாசகம் இருக்கிறது. இதற்குப் பொருள் காணும் முயற்சிக்காக நீடித்துப் போராட்டம் நடந்து வந்தது. இதுதான் மக்களின் வோட்டுரிமைப் போராட்டம். இந்தப் போராட்டத்தில் மேற்கூறிய இது சாராரும் தத்தம் கட்சியைத் தெளிவாக எடுத்துக் கூறினர்.

1800-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஜெஃபர்ஸன் மகோன்னத வெற்றி பெற்றார். இந்த வெற்றிக்குக் காரணம், அவரது கட்சியினர் மத்திய அரசாங்கத்தினிடம் அவநம்பிக்கை கொண்டதும், மக்கள் தங்களது ஸ்தலங்களிலும், ராஜ்யங்களிலும் தங்கள் விவகாரங்களை நிர்வகித்துக் கொள்வர் என்கிற நம்பிக்கையும்தான். அடுத்து வந்த ஆண்டுகளில் வெள்ளையர்களில் ஆண்களுக்கு வோட்டுரிமை அளிக்கப்பட்டது. உள்நாட்டுச் சண்டைக்குப் பிறகு, எல்லா ஆண்களும் உரிமை பெற்றனர். இருபதாவது நூற்றாண்டு ஆரம்பத்தில் பெண்களுக்கும் வோட்டுரிமை வழங்கப்பட்டது.

அந்நிய ஆட்சியிலிருந்து அரசியல் சுதந்திரம் பெறுவதை முக்கியமாகக் கருதியது போலவே, தனிப்பட்டோர் உரிமைக்கான போராட்டம் உலகத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பல அமெரிக்கத் தலைவர்கள் உணர்ந்

திருந்தனர். "மனிதர் உரிமைகளில் எல்லோரும் கவனம்
செலுத்துகின்றனர். விஞ்ஞானத்தின் மூலம் மக்கள் ஒரு
உண்மையை உணர்ந்துவிட்டனர். ஆண்டவன் அருளால்
உலகத்திலே பாமர மக்கள் அடிமைகளாகவும், ஒரு
சிலர் அவர்களை உரிமையுடன் விரட்டுபவர்களாகவும் பிறக்க
வில்லை." இவ்வாறு ஜெஃபர்ஸன் தம் மரணத்திற்கு இரண்டு
வாரங்களுக்கு முன் தீர்க்க தரிசனத்துடன் கூறினார்.

மக்கள் யாவருக்கும் அரசியல் அதிகாரம் கிடைக்க
வேண்டும் என்று எண்ணிய இயக்கம் படிப்படியாக வளர்ந்து
வந்தது என்பது 1828-இல் ஆண்டிரூ ஜாக்ஸன் ஜனாதிபதியாகத்
தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து சிறப்பாக விளங்கிற்று. தலை
வர்களையும், மக்களையும் ஜனநாயக முறையில் ஜெஃபர்ஸன்
சேர்த்து வைத்தார். மேற்கத்தி எல்லைப்புற மக்களையும்,
கிழக்கத்தி நகர்களிலுள்ள தொழிலாளிகளையும், ஜாக்ஸன்
இந்தக் கூட்டுறவுடன் சேர்த்தார். அவர் ஜனாதிபதியாகப்
பதவி ஏற்ற தினம் அவரைப் பின்பற்றியவர்கள் ஆயிரக்
கணக்கில் வாஷிங்டனுக்கு வந்து குழுமினர். அவர்களில்
சிலர் கந்தைகள் அணிந்திருந்தனர். பலர் பார்ப்பதற்கு
கவர்ச்சிகரமாயில்லை. அவர்களில் வெகு சிலரே பணக்காரர்
கள், உயர் குடியில் பிறந்தவர்கள்.

அவர்கள் மதுபானம் அருந்தினர். ஜனாதிபதியின்
வெள்ளை மாளிகையை வசப்படுத்திக் கொண்டனர். தங்க
ளது அன்புக்குரியவர் ஜனாதிபதியாக வந்து விட்டதனால்
ஆரவாரம் செய்து, அவரை வரவேற்றனர். "ஜனத்திரள்
ஆட்சி வெற்றி அடைந்துவிட்டது போலிருந்தது." இவ்
வாறு நீதிபதி **ஸ்டோரி** (Story) எழுதினார். "அவர்கள்
தான் அவருடைய உடன்பிறந்தோர். அவர்கள் தவிர, அவ
ருக்கு வேறு உறவினர் இல்லை." இவ்வாறு மார்ட்டின் வான்
புயூரான் (Martin Van Buren) குறிப்பிட்டார்.

ஷிலேஸிங்கர் (Schlesinger) என்பவர் "ஜாக்ஸன்
காலம்" (The Age of Jackson) என்று ஒரு நூல் எழுதியிருக்
கிறார் "யுனைடெட் ஸ்டேட்ஸ் பாங்க்" (United States Bank)
நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகித்த வர்த்தகக் கும்பலுடன்
ஜாக்ஸன் போராடியதை இந்தப் புத்தகம் சிறப்பாக வர்ணிக்
கிறது. இந்த பாங்குக்கான புதிய சாஸனம் ஒன்றை ஜாக்
ஸன் நிராகரித்தார். "பணக்காரர்கள் மேலும் பணக்
காரர்களாகவும், சக்தி வாய்ந்தவர்கள் மேலும் பலம்
பொருந்தியவர்களாவதற்கும் ஒரு சட்டம் இடமளிக்கு
மானால், சமூகத்தின் சாமானிய மக்கள்-குடியானவர்கள்,
இயந்திரத் தொழிலாளிகள், பாட்டாளிகள்-இம்மாதிரி சலு
கைகள் பெறுவதற்கான சந்தர்ப்பமோ, அவகாசமோ பெற
முடியவில்லை எனில் தங்களுக்கு அரசாங்கம் இழைக்கும்



அநீதியைப் பற்றிக் குறை கூற அவர்களுக்கு உரிமை உண்டு"
என்று சாஸனத்தை நிராகரிப்பதற்குக் காரணம் கூறினார்.

இதற்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் ஜாக்ஸனைப் பற்றி
பிராங்க்லின் ரூஸ்வெல்ட் தமது கருத்தை வெளியிட்டார்.
"பொருள் பலம் உள்ளவர்களில் பெருவாரியானவர்கள்
அவரை எதிர்த்து நின்றனர். ஒவ்வொரு சமயத்தில்
அமெரிக்க மக்களைத் தவிர மற்ற எவரும் அவருக்கு எதிரிடை
யாக இருந்தது போல் தோன்றிற்று."

ஆனால் ஜாக்ஸனின் இந்த நிராகரிப்பைப் பற்றி
அமெரிக்க பாங்கு அதிபர் **நிக்கோலஸ் பிடில்** (Nicholas Biddle)
மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார். "இந்த அறிக்கை
ஃபிரஞ்சுப் புரட்சித் தலைவர்கள், மாரெட் (Marat) அல்லது
ராபஸ்பியர் (Robespierre) தெருவில் கூடிய ஜனத்திரளுக்குச்
செய்த பிரசங்கம் போல் இருக்கிறது." இதற்கு ஜாக்ஸன்
"நான் குறுகிய வகுப்பு நலனை ஆதரிப்பவனல்ல" என்று
பதில் கூறினார். "இந்நாட்டுக் குடியானவர்களையும், தொழி
லாளர்களையுமே நான் ஆதரிக்கிறேன்; அவர்கள்தான் அமெ
ரிக்காவில் பெரும்பாலோர்; அவர்கள் இந்நாட்டின் எலும்பும்
தசையும் போன்றவர்கள்" என்று ஜாக்ஸன் பதிலளித்தார்.

முன்னேற்றமடைவது ராஜபாட்டையில் நடப்பது
போன்று அவ்வளவு எளிதல்ல. அடிமை முறை அமெரிக்கா
வின் உயிர் போன்ற கொள்கைக்கு மாறானது. அந்த முறை
மூலம் நாட்டில் தார்மிகச் சிதைவு ஏற்பட்டு வந்ததனால்,
சமஷ்டியின் உறுதியைக் குலைத்து வந்தது. இதுபற்றி ஜெஃபர்
ஸன் கவலையுடன் சிந்தித்து வந்தார். "நீதியே உருவானவன்
ஆண்டவன். அவன் நீதி வழங்காமல் இருக்கமாட்டான்.
ஆண்டவன் கடைக்கண் திறந்தால், நமது நாட்டின் கதி
என்ன ஆகும் என்று நினைக்கையில் குலைநடுக்கம் ஏற்படு
கிறது" என அவர் அடிமை முறை பற்றி எழுதினார்.

* * *

பின்னர் நிகழ்ந்தது ஆண்டவன் தண்டனையின் விளைவா
அல்லவா என்று கூற முடியாது; ஆனால் ஒரு உண்மையைப்
பெருவாரியான அமெரிக்கர்கள்-வடக்குப் பகுதியினரும்
தெற்குப் பகுதியினரும்-ஒப்புக்கொள்கின்றனர். நீக்ரோக்கள்
கஷ்டப்பட்டனர். அவர்கள் ரத்தம் சிந்தியது, இதன் விளை
வாக வடக்கு, தெற்குப் பகுதி அமெரிக்கர்களும் கஷ்டம்
அநுபவித்தும், ரத்தம் சிந்தியுமிருக்கின்றனர். உள்நாட்டுச்
சண்டை நிகழ்ந்ததன் விளைவாக அமெரிக்கர் ஒரு விஷயத்தை
உணர்ந்து கொண்டனர். அமெரிக்கர் வகுத்த ஆதி அரசியல்
அமைப்பின் மூலம் தீர்வுகாண முடியாத பிரச்னை இந்த
அடிமை முறை என்பதை அறிந்து கொண்டனர்.

அமெரிக்க ஜனநாயக லட்சியத்தை பாதிக்கக்கூடிய இந்த சவாலை எதிர்த்துப் போராடுவதற்காகக் குடியரசுக் கட்சி புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. கடைசியாக அடிமை முறை ஒழிக்கப்பட்டது. இந்தக் கட்சியின் மூலம், அமெரிக்க லட்சியத்தின் அவதாரம் போன்ற ஆப்ரஹாம் லிங்கனின் சேவை அமெரிக்காவுக்குக் கிடைத்தது.

குடியரசுக் கட்சியின் மூலம் அமெரிக்காவிற்கு மற்று மோர் சிறப்பு வாய்த்தது. அமெரிக்க அரசியல் அமைப்புக்கு 14-வது திருத்தத்தை இந்தக் கட்சி நிறைவேற்றிற்று. இந்தத் திருத்தத்தின் ஷரத்துக்கள் நமது சுதந்திரப் பிரகடனத்திற்கும், உரிமைச் சாஸனத்திற்கும் இணையான சிறப்பு வாய்ந்தவை. ''அமெரிக்கப் பிரஜைகளின் உரிமைகளையும், சலுகைகளையும் குறைக்கக் கூடிய எந்தச் சட்டத்தையும், எந்த ராஜ்யமும் இயற்றவோ, அமுல் செய்யவோ கூடாது. எந்த ராஜ்யமும் எந்தப் பிரஜையின் உயிரையோ, சுதந்திரத்தையோ, சொத்தையோ சட்டபூர்வமான முறைகளில் தவிர, வேறு வகையில் பறிக்கலாகாது. தனது எல்லைக்குள் யாவரும் சட்டபூர்வ பாதுகாப்பளிக்க மறுக்கலாகாது.'' இவைதான் 14-வது திருத்தத்தின் ஷரத்துக்கள்.

அமெரிக்காவிற்கு சீக்கிரத்தில் மேலும் சோதனைகள் ஏற்பட்டன. மனிதனுக்குச் சுதந்திரமாய் வாழ உரிமை உண்டு. எனில், அவனுடைய செயல் திறனின் பயனை அடையவும் உரிமையுண்டு என்பது தெளிவாகப் புலப்பட்டது. இது வரையில் அரசியல் துறையில் நடந்த போராட்டம் பொருளாதாரத் துறைக்கு மாறிற்று. வோட்டுரிமை கிடைத்ததும் ஒவ்வொரு ராஜ்யத்திலும் வாழும் மக்களும் இலவசப் பொதுக் கல்வி பெறுவதற்கான வசதி செய்தனர். நாடெங்கும் குழந்தைகள் பள்ளிகளில் ஒரே வாயிற்படி மூலம் நுழைந்தனர். பெயர் வரிசைப்படி ஆசனம் பெற்றனரே யொழிய, மத, நிற அடிப்படையில் அல்ல. தங்கள் சுய முயற்சியினலேயே கல்வித் துறையில் வெற்றி பெற்றனர்.

அநீதியை ஒழிக்க மற்றுமோர் உபாயம் கண்டுபிடிக்கப் பட்டது. பத்தொன்பதாவது நூற்றாண்டில் அமெரிக்க எல்லைக்கப்பாலுள்ள காலி இடங்களுக்கு தொழிலார்வமுள்ள, எதையும் துணிந்து பரிசீலனை செய்யக்கூடிய அமெரிக்கர் எப்பொழுதும் செல்லலாம். ஜாக்ஸனின் ஜனநாயகக் கன்வென்ஷனில் சேர்ந்து ஆண்டிரூ ஜான்ஸன் (Andrew Johnson) 1846-இல் ஒரு மசோதா கொணர்ந்தார். அதன்படி சமஷ்டி ஆட்சிக்குச் சொந்தமான மேற்கத்தி நிலங்களை ஒவ்வொரு குடும்பத்திற்கேற்றபடி பிரித்து அளிக்கப்பட்டது. இதன் விளைவாக அவர் குடியரசுக் கட்சியின் சார்பில் ஜனதிபதி பதவி வகிக்கையில் மிகுந்த தொல்லைகளுக்குட்பட்டார்.



இந்த மசோதா சட்டமாயிற்று. இதன்படி 28½ கோடி ஏக்கர் நிலம் பங்கிட்டளிக்கப்பட்டது. அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு நகரங்களில் வாழ்க்கைவசதி திருப்திகரமாயில்லையெனில் எந்தக் குடும்பமும் இங்கு சென்று தங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பண்ணை அமைத்துக் கொள்ளலாம். தங்களது உழைப்பும் விடாமுயற்சியும் தவிர நிலத்திற்காகச் சொற்ப தொகை கொடுத்தால் போதும். வர்க்கப் போராட்டம் வந்தே தீரும் என்று கூறிய மார்க்ஸ் நினைத்துப் பார்த்திராத நலன் இந்த எல்லைப்புற நிலங்கள் மூலமும், இலவசக் கல்வி மூலமும் கிடைத்தது.

மற்ற மேற்கத்தி நாடுகளிலும் மக்கள் வோட்டுரிமைக்காகப் போராடிக் காலக்கிரமத்தில் வெற்றியும் பெற்றனர். இங்கிலாந்தில் 1840-ஆம் ஆண்டு வாக்கில் மக்கள் உரிமைச் சாஸனத்தைத் தயாரித்துப் போராடினர். எல்லா ஜில்லாக்களுக்கும் வோட்டுரிமை விஷயத்தில் சமநிலை, ரகஸ்ய வோட்டு முறை, வோட்டுரிமைக்கு சொத்துரிமை யோக்யதாம்சம் கூடாது, வருஷந்தோறும் பார்லிமெண்ட் கூட்டவேண்டும்— இவைதான் அந்தச் சாஸனத்தின் முக்கிய அம்சங்கள். இதில் முப்பது லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டனர். அதுவரை யாரும் கண்டிராத முறையில் இதை ஆதரித்து மக்கள் திரளாகக் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அச்சமயம் பலாத்காரப் புரட்சி பற்றிய தமது கொள்கையை வகுத்துக் கொண்டிருந்த கார்ல் மார்க்ஸ் கூட இதைக் கண்டு அசந்துவிட்டார். அமைதியாக ஜனநாயக முறையில் செயல் புரிவது சாத்தியமோ என்று கூடத் தற்காலிகமாக எண்ணும்படி அவரைத் திருப்பிவிட்டது இந்தப் பொதுஜன ஆர்ப்பாட்டம். இந்தச் சாஸனம் பெறுவதில் ஆங்கில நாட்டு மக்கள் வெற்றி பெற்றதும் 1847-இல் ''இனி உலகத்தோர் சுதந்திரப் பாதையில் தாராளமாகச் செல்லலாம்'' என மார்க்ஸ் கூறினர். ''இந்த மகத்தான நோக்கத்தை நிறைவேற்றினீர்களானல், மனித சமுதாயத்தின் ரக்ஷகர்கள் என்று உலகத்தோர் ஆங்கில நாட்டுப் பாட்டாளிகளான உங்களைப் போற்றுவர்'' என பின்னர் ஜனநாயக வாதிகள் கம்யூனிஸ்டுகளிடம் மேற்கோளாகக் காட்டும் முறையில் மார்க்ஸ் பேசினர். ஆனல் இந்தச் சாஸனம் உடனடியாக நிறைவேறவில்லை. மார்க்ஸ் ஐரோப்பாவுக்கு வந்து கம்யூனிஸ்ட் பிரகடனத்தைத் தயார் செய்தார்; ஏனெனில் சமாதான முறைகளால் ஏமாற்றமே விளையும் என்று அவர் முடிவு செய்தார்.

உலக விவகாரங்களில் இயந்திரப் புரட்சி புதிய நெருக்கடியை விளைவித்துவிட்டது என மார்க்ஸ் கூறியது சரி. ஆனல் ஜனநாயக முறைகளில் அவர் நம்பிக்கை இழந்தது.

தவறு. அவசரப்பட்டு மார்க்ஸ் உருதிக் தள்ளிய முறை மூலம் இருபது ஆண்டுகளில் எல்லோருக்கும் வோட்டுரிமை என்பதன் சாரத்தை பிரிட்டன் அடைந்துவிட்டது. அமெரிக்காவுக்கும் இதே ரீதியில் வெற்றி கிட்டிவிட்டது. பத்தொன்பதாவது நூற்றாண்டு இறுதிக்குள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சோஷலிஸ்டு கட்சிகளுக்கு வேலையின்றிப் போய்விட்டது. ஏனெனில் அவர்கள் கோரிவந்தவைகளை தாராளப் போக்குள்ள, ஏன் பிற்போக்கு அரசாங்கங்கள் கூட நிறைவேற்றிவிட்டன. இது ஒருவகையில் ஜனநாயக சோஷலிஸ்டுகள் செய்த மறைமுகமான பாராட்டுதலாகும்.

* * *

இன்றைய உலக நிலையை அறிந்துகொள்வதற்குக் கூட மார்க்ஸிய சம்பிரதாயத்தின் சிறிய அம்சத்திற்கும், ஜன நாயக சோஷலிஸத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். இந்த முக்கியத்வத்தை உணர்ந்துதான். எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கிடைப்பதற் கான முயற்சியில் அமெரிக்கா பெரிதும் வெற்றி பெற்றது. இது பற்றிய ஆராய்ச்சியை முடிப்பதற்கு முன், மார்க் ஸியத்திற்கும், ஜனநாயக சோஷலிஸத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றி விமர்சனம் செய்ய விரும்புகிறேன்.

''ஜனநாயக சோஷலிஸம்,'' ''மார்க்ஸிஸம்'' என்கிற பதங்களுக்கு பல்வேறு மக்கள், பல்வேறு பொருள்கள் காண் கின்றனர் என்பது தெளிவு. ரஷ்யத் தலைமைப்பீடம் தனது சாதனைகளை மார்க்ஸிஸம், சோஷலிஸம் இரண்டின் வெற்றி எனப் பறைசாற்றுகிறது. அவ்வளவாக விஷய ஞானம் பெருத அமெரிக்க அரசியல் வாதிகளில் சில பிரமுகர்கள் இந்தக் கருத்தின் ஒரு பகுதியை ஒப்புக்கொண்டு பேசுகின்ற னர். ''சோஷலிஸமும், கம்யூனிஸமும் ஒரே வயலில் தோன்றிய இரு முளைகள்'' என்று இவர்கள் கூறுகின்றனர்.

நார்மன் தாமஸ் (Norman Thomas) என்பவர் அமெ ரிக்க சோஷலிஸ்டுகளில் மிகவும் மதிப்பு வாய்ந்தவர். ''சோஷலிஸத்திற்கு கம்யூனிஸம் துரோகம் செய்தது மட்டுமல்ல அது மார்க்ஸிஸத்தையே கவிழ்த்துவிட்டது'' என இவர் மேலே தெரிவித்த கூற்றுக்கு பதில் கூறுகிறார். ''கம்யூனிஸமும், ஜனநாயக சோஷலிஸமும் மார்க்ஸிஸ்டு வயலிலிருந்து முளைத்திருக்கலாம். ஆனால் அவை இப்போது வெவ்வேறாகி விட்டன; அவைகளுக்குள் மிகுந்த வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது.''

இந்த வித்தியாசம் மார்க்ஸ் பிறப்பதற்குப் பல நூற் றாண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டது. அரசாங்கத்தைப் பற்றிய தங்கள் கருத்துக்கள்பற்றியும், தங்கள் நோக்கங்கள்



ஈடேறுவதற்கான சாதனங்கள்பற்றியும், நீண்ட காலமாகவே சோஷலிஸ்டுகள் மாறுபட்டு வந்திருக்கின்றனர். ''ஒவ் வொருவனிடமும் அவனது சக்திக்கேற்றபடி வசூலிக்க வேண்டும். ஒவ்வொருவனுக்கும் அவன் தேவைக்கேற்ப, அளிக்க வேண்டும்'' என்பது அவர்கள் கொள்கைகளில் மிகப் புராதனமானது. இந்தக் கொள்கையை அவர்கள் மார்க்ஸிடமிருந்து கற்றுக்கொள்ளவில்லை. பைபிளையும், கிரேக்கத் தத்துவத்தையும் அறிந்ததனால் தோன்றியது இந்தக் கொள்கை.

இந்தக் கொள்கையின் பயனைப் பெறுவது எப்படி? பலாத்காரத்தின் மூலமா அல்லது மாறுபட்ட கருத்துள்ள வர்களைப் பேசி வசப்படுத்துவதன் மூலமா? சமாதானமான ஜனநாயக முறை மூலமா அல்லது ஆயுதம் தாங்கிய புரட்சி செய்து, பாட்டாளி சர்வாதிகாரம் அமைப்பதன் மூலமா? இவைகளில் எந்த முறையைக் கையாள்வதென்பது அவர்கள் வாழும் சமூகம், சமூகத்தில் எம்மாதிரித் தலைவர்கள் தோன்றுகின்றனர், தலைமை தாங்கி சோஷலிஸ்ட் பின்பற்றும் தத்துவம் முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது.

பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பெரும் பகுதி யில் நிலவி வந்த துயரத்தைக் கண்டு சகியாது மதிப்பு வாய்ந்த கதோலிக ராஜதந்திரி சர். தாமஸ் மூர் (Sir Thomas More) ''உடோபியா'' (இலட்சிய உலகம்) எனும் நூலை எழுதி னார். அவர் ஒரு லட்சிய சமுதாயத்தை வர்ணித்தார். யார் யார் எந்தத் தொழில் செய்யவேண்டுமென பாகுபாடு செய் தார். சாமான்களை நியாயமாக விநியோகம் செய்யவேண்டு மென்று கோரினார். அவருடைய திட்டத்தை இன்று படிக்கும் நிதானஸ்தர்கள் அது கம்யூனிஸ்டுகளுடையது மாதிரி இருக் கிறது என அச்சமுறக்கூடும். ஆனால் இந்த நிலையை பலாத் காரமாக அடையவேண்டும் என அவர் கூறவில்லை.

மார்க்ஸ் காலத்திற்கு முன்னர் நிலவிய சோஷலிஸம் பெரிதும், மத, மாயாவாதச் சூழ்நிலையில் தோன்றி வகுக்கப் பட்டது. இந்தச் சம்பிரதாயத்தில் ஊன்றித் திளைத்தவர் தான் நார்மன் தாமஸ். அவர் நியூயார்க் பிரஸ்பிடீரியன் சர்ச்சில் மத உபந்நியாசங்கள் செய்வதை விட்டுவிட்டு அமெரிக்க சோஷலிஸ்டு கட்சியை வந்தடைந்தார்.

இவர் ஜனாதிபதி தேர்தலில் ஆறு தடவை போட்டியிட் டார். இவருடைய பொது வாழ்வை ஆராய்ந்து பார்த்தால் இவர் சதி செய்பவரென்றோ, அப்போதைய ஆட்சியை கவிழ்ப்பவர் என்றோ கூற முடியாது. இவ்வளவு சீரான வாழ்க்கைச் சிறப்புள்ளவராகையால் இவரது எழுபதாவது ஆண்டு விழாவின்போது பத்திரிகைகள் இவரைப் போற்றிப் புகழ்ந்தன. அமெரிக்க தேசிய மனச்சாட்சியின் பாதுகாப்

பாளர் என்றும், நீடித்த தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர் என்றும் இவரைப்பற்றி எழுதின.

வர்க்கப் போராட்டம் நடந்தே தீர வேண்டும் எனும் மார்க்ஸின் ஜோஸ்யம் அமெரிக்காவில் பலிக்கவில்லை என்பதை சரித்திரம் நிரூபித்துவிட்டது. சுதந்திரம் உள்ள அரசியல் ஸ்தாபனங்கள், விரிவடைந்து வரும் பொருளாதார அமைப்பு, பரந்த அளவில் செல்வம் மக்களுக்குக் கிடைத்தல், குறுகிய வகுப்பு வித்தியாசங்கள் இன்மை - எல்லாம் சேர்ந்து இந்நாட்டில் ஆயுதம் தாங்கிய பாட்டாளி மக்கள் புரட்சி நிகழ்த்துவது அசட்டுத்தனம் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது

சென்ற ஒரு நூற்றுண்டாக சீர்திருத்தம் நிதானமாக ஏற்பட்டு வந்ததனுல், அமெரிக்கா அடைந்துள்ள முன்னேற்றம், இன்று காண்பதுபோல் முன்பு அவ்வளவு தெளிவாகப் புலப்படவில்லை. 1900-ஆம் ஆண்டில் ஒருவன் ஒரு காசுகூட வருமான வரி செலுத்தாமல், ஒரே வருஷத்தில் இரண்டரைக் கோடி சம்பாதிக்கலாம் என்பதை நினைத்துப் பார்த்ததால், இரண்டு தலைமுறைகளுக்கு முன் அமெரிக்க சோஷலிஸ்டுகள் செய்த அனல் கக்கும் பிரசங்கங்கள் முட்டாள்தனமானது என்று இன்று நினைக்கமாட்டோம்.

ஆனுல் இன்று, நாம் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருப்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள். ''பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் போராட்டம் எனும் கருத்து யூஜின் டெப்ஸ் (Eugene Debs) *காலத்தில் பொருத்தமாயிருந்திருக்கலாம். இன்று. அதற்கு அர்த்தமேயில்லை. தொழில் கட்சியின் ஆட்சியில் பிரிட்டனில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கும், அமெரிக்கா போன்று முதலாளித்வக் கட்சிகள் நடத்துவதாகக் கூறப்படும் ஆட்சியில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கும் விசேஷ வித்தியாசமில்லை. புரட்சி என்று பிரகடனம் செய்யாமல் இங்கு புரட்சி நிகழ்ந்திருக்கிறது.'' இவ்வாறு நார்மன் தாமஸ் கூறியுள்ளார்.

பல ஆண்டுகளுக்கு முன் எஸெக்ஸில் கனக்டிக்கட்டிலுள்ள நமது மதாலயப் பொது மேடையில் நார்மன் தாமஸை அறிமுகப்படுத்தவேண்டிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது '' அவர் முதலில் ஜனுதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்தபோது, 14 அம்சத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தார். பாங்குகளை அரசாங்க நிர்வாகத்திற்குக் கொண்டுவருவது தவிர, பிற அம்சங்கள் நிறைவேறிவிட்டன. அவருடைய திட்டத்தை இன்று, இரு கட்சியினரும் ஆதரிக்

யூஜின் டெப்ஸ்:—அமெரிக்கத் தொழிலாளர் தலைவர். இவர் யுத்தத்தை எதிர்த்ததனுல் பன்முறை சிறைப்படுத்தப்பட்டார். தொழிலாளர்கள் பல வகை நலனையடையப் பாடுபட்டார.



கின்றனர் '' என அவரைப் பற்றி நான் கூறினேன். செனட் உறுப்பினரை நேரிடையாகத் தேர்ந்தெடுத்தல், வருமான வரி விதித்தல், சமூகப் பாதுகாப்பு முறைகள், தினசரி எட்டு மணி வேலை நேரம், மற்றும் முன்பு சோஷலிஸ்டுகளின் தீவிர கோரிக்கைகள் என்று கருதிய அம்சங்கள், இன்று மக்களின் மதிப்பைப் பெற்றிருக்கின்றன.

யுத்த பிற்காலத்தில் கம்யூனிஸத்தை எதிர்த்து மேற்கு ஐரோப்பிய, தெற்கு ஆசிய நாடுகள் தங்களைப் பாதுகாக்க ஜனநாயக சோஷலிஸமே ஏற்ற சாதனமாய் இருந்து வந்திருக்கிறது என்றும் கூறலாம். இந்தக் கொள்கை நேரடியான பயன் அளித்து வந்திருப்பதுடன் பொதுவாகப் பிற்போக்குக் கட்சிகளைக் கூடப் பெரிதும் கவர்ந்து வந்திருக்கிறது. தங்களுடைய சமீபகால அநுபவத்தின் விளைவாக ஜனநாயக முறைகளை ஜனநாயக சோஷலிஸ்டுகள் வற்புறுத்துகின்றனர். பொது நிர்வாகத்தில் உள்ள தொழில்களைத் தம்மிச்சையான கூட்டுறவு முறையில் நிர்வகிக்க விரும்புகின்றனர். அரசாங்க நிர்வாகத்திலிருப்பதெல்லாம் சோஷலிஸம் என நினைத்துவிடலாகாது என்றும் எச்சரிக்கின்றனர்.

'' சிறப்பான சமுதாயத்தை அமைப்பதற்கான முயற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும், அந்தப் பிராந்தியத்தில் வசிப்பவர்கள் யாவரும் சுகவாழ்வு பெறவேண்டும். புரட்சியென்ருல் பலாத்காரம் என்று நினைக்கின்றனர். அமெரிக்காவில் இம்மாதிரிப் புரட்சியினுல் சுக வாழ்வு கிட்டாது. சிக்கல் வாய்ந்த நமது நவீன நாகரிகத்தில் பலாத்காரச் சாதனங்கள் சர்வநாசம் விளைவிக்கத் தக்கதாயிருக்கின்றன. இம்மாதிரி சாதனங்களைக் கொண்டு புரட்சி விளைவித்தால் புரட்சி வாதிகள் விரும்பும் சமுதாயம் களங்கமடைந்து ஒடுங்கிப் போய்விடும்.'' இவ்வாறு நார்மன் தாமஸ் கூறுகிருர்.

அமைதியான ஜனநாயக சோஷலிஸ சித்தாந்தத்தைத் செற்கு ஆசியாவில் புதிதாகத் தோன்றியிருக்கும் ஜனநாயக நாடுகளின் தலைவர்களில் பெருவாரியானவர்கள் ஒப்புக்கொள்ளுகின்றனர் என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். பர்மாவில் சோஷலிஸ்ட் அரசாங்கம் ஆட்சி புரிகிறது. இந்தியா, இலங்கை, இந்தோனேஷ்யா முதலிய நாடுகளின் கொள்கைகள் ஜனநாயக சோஷலிஸ சித்தாந்தங்களால் உருவகப்பட்டு வருகின்றன. பாகிஸ்தானிலும், எகிப்திலும் ஆட்சி புரிந்து வருபவர்கள் தங்கள் நாடுகள், '' இஸ்லாமிய சோஷலிஸத்தைப் '' பின்பற்றி வருவதாகக் கூறுகின்றனர்.

ஆஃபிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்கா முதலிய விடங்களில் சோஷலிஸம் எனும் வார்த்தை ஜனங்களுக்குப் பிடித்ததாயிருக்கிறது. மேலும் தங்கள் முறைகளைப் பகிரங்கமாகக் கூறும் இந்தக் கண்டங்களில், ஆற்றலுள்ள மக்கள்

சோஷலிஸத்தை ஆதரிக்கிறார்கள்; சோஷலிஸ்ட் பாணியில் பேசுகிறார்கள்; அவ்வாறே வாழ்கின்றனர். முன்னேற்றம் அமைதியாகவும், ஜனநாயக முறையிலும் இருக்கவேண்டும் என்பது அமெரிக்கர் கொள்கை. இதைப் பிறரும் ஏற்க வேண்டும் என அவர்கள் விரும்பினால் சோஷலிஸத்திற்கும், கம்யூனிஸத்திற்கும் வித்தியாசம் இல்லையென்று கூறுவதை அவர்கள் கைவிட வேண்டும். இதற்குப் பதிலாக இரண்டிற்குமுள்ள வித்தியாசங்களை அவர்கள் சுட்டிக்காட்டவேண்டும். சோஷலிஸத்தின் லட்சியத்தை ஜனநாயகத்தின் மூலமே அடைய முடியும் என்பதை எடுத்துக்கூற வேண்டும்.

1840-ஆம் ஆண்டில் துணி ஆலைகளில் எட்டு மணி வேலை நேரம் சகஜமாக நிலவி வந்தது. அச்சமயம் ஜனநாயகக் கட்சி ஆட்சியினர் சமஷ்டி ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள் தினசரி பத்து மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யலாகாது எனச் சட்டம் இயற்றினர். 1868-இல் யுத்த பிற்காலத்தில் குடியரசுக் கட்சியினர் ஆட்சி புரிந்தனர். அச்சமயம் சமஷ்டி ஆட்சியினர் புரட்சிகரமான எட்டு மணி வேலை நேரத்தை அமுல் செய்தனர். எங்கல்ஸ் 1890-இல் கம்யூனிஸ்ட் பிரகடனத்திற்கு எழுதிய முகவுரையில் இந்தச் சீர்திருத்தம்தான் கம்யூனிஸ்டுகளின் உடனடியான குறிக்கோள் என எழுதினார். 1900-இல் அமெரிக்கத் தொழிலாளர் சங்கங்கள் பத்து மணி வேலை நேரச் சலுகையை அடையவில்லை. ஆனால் அடையக்கூடிய நிலையிலிருந்தனர்.

வியாபாரத்தில் ஏகபோக உரிமை நிலவியதை எதிர்த்து * **பாபுலிஸம்** (Populism) எனும் இயக்கம் தோன்றிற்று. இது ஓர் அரசியல் இயக்கம். இதைக் குடியானவர்களும் சில்லறை வியாபாரிகளும் சேர்ந்து ஆரம்பித்தனர். கிழக்கத்தி வர்த்தக ஏகபோக உரிமையைச் சிதைவுறச் செய்ய மேற்கத்தி சமவெளி நிலவுடைமையாளர்கள் செய்த முயற்சியின் விளைவே இந்த இயக்கம். இந்த ஏகபோக உரிமைகளை ரத்து செய்து ஷெர்மன் என்பவரின் டிரஸ்ட் எதிர்ப்புச் (Anti-Trust) சட்டம் 1890-இல் நிறைவேற்றப்பட்டது. இதை வர்த்தக சுதந்திர சாஸனமென மக்கள் கருதுகின்றனர்.

இந்தப் புதிய தாராளப்போக்கின் சக்தியைக் குடியரசுக் கட்சியினரே உணரத் தொடங்கினர். தியோடர் ரூஸ்வெல்ட், ராபர்ட் லாஃபோலெட் (Lafollette)டும், மற்றும் பல முற்போக்காளரும் ஏகபோக உரிமைகளையும், பிரம்மாண்ட

*பாபுலிஸம்:—பாபுலிஸ்ட் கட்சி அமெரிக்காவில் 1891-இல் தோன்றியது. குடியானவர் பாங்குகளில் கடன் வாங்கிய பிறகு விலைகள் வீழ்ச்சியடைந்தன. ஆகையால் இவர்கள் கடன் கட்ட முடியவில்லை. அதே சமயத்தில் பாங்குகளில் தங்கம் ஏராளமாகக் குவிந்து கிடந்தது. இந்த நிலையை மாற்ற இக்கட்சி தோன்றிற்று.



சிலர் சுதந்திரத்தின் மூலம் சம சந்தர்ப்பம் பெறுவதென்பது இயலாது என்று முடிவு செய்து, மார்க்ஸின் பலாத்காரப் போராட்டத்தைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். ஆனால் தங்கள் பிரச்னைகளை ஜனநாயக முறையில் தீர்த்துக்கொள்வதென்னும் அமெரிக்க உறுதி இறுதியில் வெற்றி பெற்றது.

சரித்திரப் புகழ் பெற்ற தங்கள் நம்பிக்கையை இழக்க வேண்டாம் என அமெரிக்கரைக் கூவி அழைக்க ஒரு மனிதர் தோன்றினார். ஒரு அரசியல் சாதனமும் தோன்றிற்று. ஃபிராங்க்லின் ரூஸ்வெல்டு தான் புதிதாகத் தோன்றிய பெரியார். 'புதிய முறை' (New Deal) என்பதுதான் அவர் வகுத்தத் திட்டம். ''நாட்டில் மூன்றில் ஒரு பங்கு மக்களுக்குப் போதிய உணவில்லை. குடியிருப்பு வசதியில்லை, போதிய உடையில்லை. இவர்களுக்கு வாழ்க்கையில் சம சந்தர்ப்பங்கள் அளிப்பதாக அமெரிக்கா அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை.'' இவ்வாறு திட்டமாக, கவர்ச்சிகரமாக உண்மை நிலையை ரூஸ்வெல்ட் எடுத்துக் கூறினார்.

150 ஆண்டுகளுக்கு முன் சுதந்திர மண்டபத்தில் அமெரிக்கா வகுத்த பாதையில், ரூஸ்வெல்டின் புதிய திட்டம் தங்குமிடம் போன்றதுதான். ரூஸ்வெல்டும் அவரை ஆதரித்தவர்களும், பொருளாதார மந்தத்தை எதிர்த்துப் போராடத் தொடங்கினாலும், தீவிர சமூக மாறுதல்கள் செய்யாவிட்டால் பெரியதோர் மந்தம் ஏற்படும் என்பதை சீக்கிரத்தில் உணர்ந்தனர்.

''அமெரிக்கா தோன்றிய காலத்திலிருந்து மாறுதல் செய்வதில் ஈடுபட்டு வந்திருக்கிறோம். இந்த முயற்சி நீடித்த புரட்சியாகும். இது நிதானமாக நிகழ்ந்து வருகிறது; அமைதியாகவும் நடந்து வந்திருக்கிறது. நிலைமை மாறுவதற்கேற்ப அதன் வேகமும் தன்மையும் மாறி வந்திருக்கின்றன. இந்தப் புரட்சி நிகழ்த்துபவர்களை தனிச் சிறையில் வைக்காமல், சுண்ணாம்புப் புழுதியில் தள்ளாமல் நடந்து வருகிறது'' இவ்வாறு ரூஸ்வெல்ட் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்.

இப்படி நீடித்து நடந்து வரும் அமைதியான புரட்சியின் உட்கருத்துக்கேற்ப நமது அரசியல் உரிமை சாஸனத்தை ஒட்டி பின்வரும் பொருளாதார உரிமைகளையும் சேர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது.

நியாயமான வேலைக்கேற்ற, போதுமான கூலி பெற குடியானவர்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உரிமையுண்டு.

முதுமைப் பிராயத்தில் கஷ்டமற்ற வாழ்க்கையை எதிர்பார்க்கும் உரிமை.

மான வர்த்தகக் கூட்டமைப்புகளையும் கட்டுப்படுத்த வேண்டும், அல்லது ஒழிக்க வேண்டும் என முடிவு செய்தனர். இதைச் செய்தால்தான் சுதந்திரமாக வியாபாரம் நடத்த முடியும் என இவர்கள் கருதினர். ''தாங்கள் விரும்பும் நலன்களைத் தனித்து நின்று பெருக்க முடியாது என்று கருதுபவைகளை அந்த சமூகத்திற்குச் செய்வதுதான் அரசாங்கத்தின் நியாயமான நோக்கம்'' என லிங்கன் கூறினார். இதை மேல் குறிப்பிட்ட இருபதாவது நூற்றாண்டு குடியரசுக் கட்சியினர் மறந்துவிடவில்லை.

முன்பு தோன்றிய பாபுலிஸ்ட் இயக்கத்தின் விளைவாக வில்லியம் ஜென்னிங்ஸ் பிரயான் (William Jennings Bryan) தோன்றினார். அதே சக்தி இன்று புதியதோர் கட்சியைத் தோற்றுவித்தது. இந்தக் கட்சியில் புதிதாகக் குடியேறியவர்கள், நகரப் பாட்டாளிகள், தெற்கேயும், மேற்கேயும் உள்ள சொற்ப நிலமுள்ள குடியானவர்கள் யாவரும் சேர்ந்தனர். குடியரசுக் கட்சியில் பிளவு ஏற்பட்டதும், பிரயான் செய்த வேலையை அவருக்கடுத்தபடி வந்த உட்ரோ வில்ஸன் செய்ய முன்வந்தார். அவர் புதிய சுதந்திரம் எனும் சிறப்பான திட்டத்தைத் தயாராக வைத்திருந்தார்.

வர்த்தகக் கூட்டமைப்புக்கு எதிரிடையான சட்டங்களைக் கண்டிப்பாக அமுல் செய்வதன் மூலம் தமது ஆட்சியைச் சிறப்பாக வில்ஸன் (Wilson) தொடங்கினார். சமஷ்டி ரிசர்வ் சட்டத்தின் மூலம் நிலையாகக் கடன் வசதியளிக்க உதவி புரிந்தார். மேலும் ஜனநாயக வளர்ச்சிக்கான ஒரு சட்டத்தையும் இயற்றினார். வருமானம் உயர உயர வரியும் அதே அளவில் உயர்வதற்கான சட்டம் இயற்றினார். இதுபற்றி அவர் யோசனையை 1909-இல் கூடிய குடியரசுக் கட்சி காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. ஆனால் 1917-இல் உலக யுத்தத்தினால் ஏற்பட்ட நெருக்கடியில் வில்ஸனின் உள்நாட்டு அபிவிருத்திக்கான திட்டம் உதாசீனம் செய்யப்பட்டது. 1920-இல் யுத்தத்திற்குப் பிறகு அமைதியை நாடும் பேராவலில் இந்தத் திட்டத்தை நாட்டினர் மறந்தேவிட்டனர்.

ஆனால் இம்மாதிரி சீர்திருத்தங்களை நீண்ட நாட்களுக்குத் தடுத்து நிறுத்த முடியாது. 1929-33 க்குட்பட்ட காலத்தில் பெரியதோர் பொருளாதார மந்தம் நாட்டைப் பீடித்தது. பொருளாதார அமைப்பு ஸ்தம்பித நிலையடைந்துவிட்டது என்றுகூடக் கூறலாம். 140 லட்சம் மக்கள் வேலை இழந்தனர். எல்லோருக்கும் வாழ்க்கை வசதியளிக்கப்படும் எனும் அமெரிக்க வாக்குறுதி காப்பாற்றப்படுமா என்கிற கேள்வி எங்கும் எழுந்தது. சிலர் எதிர்காலத்தில் நம்பிக்கை இழந்துவிட்டனர். இதைவிட அதிகமான பேர், ஆனால் வெகு





தொழிலாளர்கள் தங்களிஷ்டப்படி சங்கங்களை அமைத்து, அவைகள் மூலம் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ளும் உரிமை.

வசதியான, நேர்த்தியான இடத்தில் வாழும் உரிமை.

நாட்டின் மூலப்பொருள்களில் நியாயமான பங்கு பெறும் உரிமை. அமெரிக்கா வறுமையை ஒழிப்பதற்கு தேசியப் போராட்டம் நிகழ்த்திற்று. இதற்கு அது கையாண்ட உபகரணங்களை வரிசைப்படுத்துவோம். அவசர நிவாரணம், பொது மராமத்து வேலைகள், **டென்னஸி வாலி அதாரிடி*** (T.V.A.) எனும் ஸ்தாபனம்; 1934-இல் வர்த்தக ஸ்தாபனங்களின் பங்குகள், விற்பனை சம்பந்தமான சட்டம், தொழிலாளிகள் வேலைத்தர நிர்ணயச் சட்டம், சமூகப் பாதுகாப்பு வேலைகள், 1935-இல் தொழிலாளர்கள் சங்கம் அமைத்து, அதன் மூலம் பேரம் செய்து தங்கள் நலனைப் பெருக்கிக் கொள்ளுவதற்கான சட்டம், நில வருமானத்திற்கு வரம்பு விதிக்கும் சட்டம் முதலியன.

ரூஸ்வெல்டின் புதுத் திட்டம் எல்லோருக்கும் வேலையளிக்கும் நோக்கம் கொண்டது. ஆனால் நினைத்த அளவுக்கு அது ஈடேறவில்லை. 1939-இல் இன்னமும் 80 லட்சம் பேர் வேலையின்றி இருந்தனர். இரண்டாவது மகாயுத்தம் இந்த வகையில் நமக்குப் படிப்பினையளித்தது. யுத்த காலத்தில் எல்லோருக்கும் வேலை கிடைத்தது. அதே மாதிரி சமாதான காலத்திலும் எல்லோருக்கும் வேலை கிடைக்க வேண்டும் எனில், அரசாங்கமும் வர்த்தகத் துறையினரும் இதற்கான முறைகளை முன் நின்று வகுக்க வேண்டும், மக்களும் மனமொப்பி ஒத்துழைக்க வேண்டும் என்பதை அறிந்தோம்.

பரஸ்பர மேற்பார்வை வசதி உள்பட குறை காண முடியாத ஆயுதக் குறைப்புத் திட்டத்தை வரப்போகும் ஆண்டுகளில் சோவியத் யூனியன் ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்வாறு அந்நாடு ஒப்புக்கொள்ளும் என்பதை நாம் நம்பும்படி அவர்கள் செய்ய வேண்டும். உள்நாட்டுப் பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாக இந்தத் திட்டத்திலிருந்து அமெரிக்கா பின்வாங்கலாகாது. அப்படிச் செய்தால் அது அசட்டுத்தனமாகும். நாம் இன்னும் எவ்வளவோ பள்ளிக்கூடங்கள், ரஸ்தாக்கள், ஆஸ்பத்திரிகள் அமைக்கவேண்டியிருக்கிறது. இன்னும் அதற்கு வேண்டிய சேரிகள் இருக்கின்றன. நமது நகரங்களை நவீனமாக்க வேண்டும். உள்நாட்டுச் செலவுக்கும் வெளி நாட்டுக்கும் ஏற்றுமதி செய்

*டி. வி. ஏ. டென்னஸி வாலி ஸ்தாபனம்:—1933-இல் அமைக்கப்பட்டது. டென்னஸி நதியில் உள்ள அணைக்கட்டுகள், கரையோரத்தில் உள்ள நிலங்கள் முதலியவைகளைப் பராமரிப்பதற்காக ஏற்பட்ட உரிமை உள்ள ஸ்தாபனம்.

வதற்குமான வகையில் நாம் உற்பத்தியைப் பெருக்குவதற்கு
எல்லையே இல்லை.

தனிப்பட்டோர் கார்ப்பரேஷன்களில் நிகழ்ந்து வரும்
சில விஷயங்கள் மார்க்ஸுக்கு ஆச்சரியத்தை அளித்திருக்கக்
கூடும். அவைகள் நமது பொருளாதார அமைப்புக்கு ஜீவ
சக்தி அளிக்கின்றன. முதலாளித்வ முன்னேற்றத்தினால் பல
நூறு பிரம்மாண்டமான கார்ப்பரேஷன் அமைப்பில், பெரும்
பகுதியிலும் மேற்கத்தி நாடுகள் பூராவிலும் ஆதிக்கம்
செலுத்துகின்றன என்பது உண்மைதான். பல கோடி மூல
தனமுள்ள சில கார்ப்பரேஷன்களிடம் சில ராஜ்யங்களைவிட
அதிகமான பண வசதி இருக்கிறது.

இம்மாதிரியான பொருளாதார வளர்ச்சியின் விளைவு
கள் பற்றி மார்க்ஸ் கூறிய ஜோஸ்யங்கள் பலிக்கவில்லை என்
பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

இப்பொழுதெல்லாம் பெரும்பாலான வர்த்தக ஸ்தாபன
நிர்வாகக் குழுவினர் தங்கள் பங்குதாரர்கள் நலனை மட்டும்
சீர்தூக்கிப் பார்த்து, எந்த முடிவும் செய்வதில்லை. தங்கள்
கார்ப்பொரேஷன் லாபகரமாக நடப்பதையும் தொழிலாளி
கள் நலனையும் மனத்திற்கொண்டே முடிவு செய்கின்றனர்.

1954-இல் வர்த்தகத் துறையில் மந்தம் ஏற்படத் தொடங்
கியது. உடனே ஒரு பெரிய வர்த்தக நிலையம் பல கோடி
டாலர் முதலீடு அளித்து பொது நலத்தைப் பெருக்கக்கூடிய
விஸ்தரிப்புத் திட்டம் தொடங்கப் போவதாக அறிவித்தது.
இப்போது பல பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள் கல்லூரிகள்
கட்டவும், பல்கலைக் கழக ஆராய்ச்சிக்கும் ஏராளமான பணம்
ஒதுக்குகின்றன.

நீடித்து நடைபெற்று வரும் நமது அமெரிக்கப் புரட்சி
யில் ஆச்சரியப்படத் தக்க முன்னேற்றத்தைக் காண்கிறோம்.
உற்பத்தி சாதனங்களில் உழைப்பாளிக்கும் உரிமை உண்டு
என்கிற நிலைக்கு வந்துவிட்டோம். இந்த முன்னேற்றத்தை
சர்வவல்லமையுள்ள அரசாங்கத்தின் உதவியால் அடைய
வில்லை. யுத்தத்திற்குப் பின் உழைப்பாளிக்கு ஓய்வு நிதி,
க்ஷேமநல பிரத்தியேக நிதி முதலியவைகள் ஏற்பட்டிருக்கின்
றன. இந்த நிதிகளிலிருந்து தொழிலாளிகள் வர்த்தக ஸ்தா
பனங்களில் பங்குகளை விலைக்கு வாங்கிவிட்டனர். முன்பெல்
லாம் உழைப்பாளிகளின் வேலை உடன்பாடு முதலாளி திட்டம்
செய்தபடி கையெழுத்திடப்பட்டது. இருதரப்பாரும் கூடிப்
பேசி பேரம் செய்தே இப்பொழுது உருப்பெறுகிறது. வரு
ஷாந்தரத்துக்கு திட்டமான கூலி அளவை 1955-இல் உத்தர
வாதம் செய்திருக்கின்றனர் ஃபோர்டு கம்பெனியும்,
ஜெனரல் மோட்டார் கம்பெனியினரும்.



அமெரிக்காவும், மேற்கத்தி நாடுகளும் தங்களுடைய
பொருளாதாரப் பிரச்னைகளை எல்லாம் தீர்த்துவிடவில்லை. சுய
மாக இயங்கும் யந்திரங்கள் வந்து விட்டதனால் புதுப்பிரச்
னைகள் எழலாம். பொருளாதார மந்தம் எப்பொழுதும் நிக
ழக்கூடும் என பயமாகவே இருக்கிறது. சேரிகள் இன்னமும்
இருந்து வருகின்றன. இனவேற்றுமை காட்டலாகாது என
சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினால் பல நலன்கள் விளையும் என நீதி
பதிகள் கூறியிருப்பினும், இந்த வேற்றுமையின் பொருளா
தார விளைவுகள் இன்னமும் நம்மைப் பீடித்து வருகின்றன.

ஆனால் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. உபரியான
உற்பத்தி மூலம் நாசம் விளையாது, நமக்கும் உலகத்திற்கும்
இதன் மூலம் பல அரிய வாழ்க்கை வசதிகள் கிடைக்கின்றன
என்பதை அமெரிக்க மக்கள் உணர்ந்துவிட்டனர். என்னவித
மான பொருளாதார, சமூகப் பிரச்னைகள் தோன்றினாலும்,
நமது அரசியல் ஸ்தாபனங்கள் வளைந்து கொடுத்து, அவை
களைச் சமாளித்து விடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். நமது
கொள்கைகளுக்கும் அவைகளைச் செயல்படுத்துவதற்கும்
அகன்ற இடைவெளியிருக்கிறது என்பது உண்மை. ஆனால்
அந்த இடைவெளி படிப்படியாகக் குறைந்து வருகிறது.
நமக்கு முந்திய நாகரிகங்களிலிருந்ததைவிட சமூகப் பொரு
ளாதார நீதி வழங்குவதில் அதிகப்படியான அளவிற்கு வெற்றி
பெற்றுவிட்டோம்.

மக்களைச் சுரண்டும் பழைய அமைப்பில் புதிய முதலா
ளித்வ முறை வளர்ச்சியுறமுடியாது என மார்க்ஸ் கூறியது
உண்மை. ஆனால் பாமர மக்கள் வாங்கும் சக்தியையும்
பொது நலனை வளர்க்கக் கூடிய பொளாதார அமைப்பையும்
அமைதியான ஜனநாயக முறைகள் மூலம் அடைய முடியாது
என்று அவர் கூறியது பெருந்தவறு.

1776-இல் அமெரிக்கா அரசியல் சுதந்திரத்தைத் தோற்று
வித்தது. 1955-இல் தொழில் பெருக்கத் துறையில் உலகத்திற்
கெல்லாம் வழி காட்டி எனப் பெயர் பெற்றது; அநுபவ
சாத்தியமான சமரசங்கள் செய்ததன்மூலம் அரசியல் சுதந்திர
மும் தொழில் பெருக்கமும் மாறுபட்ட சக்திகளாயிருக்க
வேண்டியதில்லையென்று நிரூபித்துக் காட்டிவிட்டது.

## அத்தியாயம்-29

# சாம்ராஜ்ய அமைப்பு-அமெரிக்கர் நாட்டம்

மேற்கு எல்லை நிர்ணயமானது. அமெரிக்கரிடையே
நெருக்கடியை விளைவித்தது. ஆனால் இதை அவ்வளவாக
அவர்கள் அச்சமயத்தில் உணரவில்லை. ஒரேகானையும் (Oregon)
கலிஃபோர்னியாவையும் (California) அடையவேண்டுமென்
பதே பல தலை முறைகளாக அவர்களது ஆசையின் எல்லையாக
இருந்தது. இந்த ஆசை நிறைவேறி இவ்விரு பகுதிகளும்
அமெரிக்க யூனியனில் சேர்ந்ததும், அவர்கள் நிலைகொள்
ளாமல் செயலாற்றல் மேலீட்டால் துடிதுடித்தனர்.
இருபதாவது நூற்றூண்டில் ஒருதலைமுறை காலம் அமெ
ரிக்க ராஜ்யத்துடன் புதுப் பகுதி எதுவும் சேராமலே கழிந்
தது. இனி அவர்களை விதி எத்திசையில் இழுத்துச் செல்லும்?
பசிஃபிக் கடற்கரையே அமெரிக்காவின் எல்லைக் கோடாக
அமைந்த சமயத்தில், அமெரிக்க இயந்திரத் தொழில் சக்தி
இதற்கு முன் கண்டிராத அளவிற்கு விரிவடைந்தது.
1898-இல் ஸ்பானிஷ் அமெரிக்க சண்டை நிகழ்கையில்
அமெரிக்கா வலிமை பெற்ற நாடாக விளங்கிற்று. அமெரிக்கா
விற்குள் சாதிக்க வேண்டியதெல்லாம் பூர்த்தியாகிவிட்டது:
இனி உலக வல்லரசாகத் தோன்றவேண்டிய சகாப்தம்
தொடங்கிவிட்டது. பழைய புரட்சி சாதனைகளை நன்கு
உணர்ந்த அமெரிக்கா போன்ற நாடு, ஸ்பானிஷ் ஆட்சியை
எதிர்த்து நடந்த கியூபா (Cuba) புரட்சியை ஆதரித்தது
இயல்பே யாகும். ஆனால் பிலிப்பைன்சிலும், பூயுர்ட்டோ
ரிகோ (Puerto Rico) விலும், குவாமிலும் (Guam) ஸ்பானிஷ்
ஆட்சிக்குப் பதில் அமெரிக்க சாம்ராஜ்ய ஆட்சி ஏற்பட்டது
இந்தச் சண்டையின் எதிர்பாராத விளைவாகும். காலனி ஆட்சி
எதிர்ப்பு நாடு சாம்ராஜ்ய ஆட்சி நாடாக மாறிய கேலிக்
கூத்திலிருந்து அமெரிக்காவின் கொள்கைகளில் இருபதாவது
நூற்றூண்டில் தோன்றிய புதிர்களில் ஒன்றை அறிந்து
கொள்ளலாம்.

சாம்ராஜ்ய நாடாக மாற வேண்டுமெனும் சபலம்,
அதிகார மமதைகொண்ட ஒவ்வொரு நாடும் செய்யும்
முதல் பாவம் என்பதை சரித்திரம் படிப்பவர்கள் தெரிந்து



கொள்வார்கள். அமெரிக்கர்களிடம் புரட்சி ஆர்வம்
கொந்தளித்துக் கொண்டிருக்கையில், அந்நிய ஆட்சியை
எதிர்த்து, தென் அமெரிக்கக் கலகங்களை ஆதரிக்கையில்,
தொலைவிலுள்ள கிரேக்கக் கலகக்காரர்களுக்கு ஆதரவு
அளித்து வருகையில் கூட அமெரிக்கர் தங்கள் நாட்டிலுள்ள
ஆதிக்குடி மக்களான இந்தியரை நடத்துவதில் அப்பட்டமான
சாம்ராஜ்யத் தோரணையைக்காட்டி வந்திருக்கின்றனர்.
ஜேம்ஸ் டவுனில் வந்திறங்கிய பின் மூன்று நூற்றூண்டு
களுக்கு வெள்ளை அமெரிக்கர்கள் ஆதி இந்தியக் குடிமக்க
ளைத் தீர்மானமாக, ஈவிரக்கமின்றி விரட்டியடித்து வந்
திருக்கின்றனர். இதற்குத் தப்பிப் பிழைத்தவர்கள் மிகுந்த
நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு ஒதுக்குப் புறமாக வாழ வேண்டி
வந்தது. மேற்குப் புறத்தில் குடியேறுவதற்கு அமெரிக்கர்
அவசரப்பட்டதன் பயனாக ஆதி அமெரிக்கக் குடிமக்களின்
உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன.

நாம் சுதந்திரம் பெற்ற புதிதில் இருந்த புதிய உற்சா
கத்தில் நமக்கு வடக்கிலும், தெற்கிலும் இருந்த அண்டை
நாட்டினருடன் ராணுவ ரீதியில் துப்பாக்கிகொண்டு பழக
நாம் தயங்கவில்லை. 1812-இல் ஹென்றி கிளே (Henry Clay)
யும் அவரது போர்ப் படையினரும், கானடாவைக் கைப்
பற்றப் போவதாக வாய் கூசாமல் கூறினர். இன்னும் சில
ஆண்டுகளில் ஜெனரல் ஆண்டிரு ஜாக்ஸன் ஸ்பானிஷ்
வசமிருந்த ஃபுளோரிடா (Florida) வில் கொள்ளையடிக்கத்
தொடங்கினான்.

ஒரு தலைமுறைக்குப் பிறகு நமது நாடு பிடிக்கும் ஆவல்
மிஸிஸிபி நதியையும் தாண்டிவிட்டது. அச்சமயம் 1846-இல்
நாம் போர் புரிந்து நமக்குத் தென்மேற்கே உள்ள பரந்த
மெக்ஸிகோவைக் கைப்பற்றத் தயங்கவில்லை. கானடாவில்
ஒரு பகுதிக்கு பிரிட்டனிடம் உரிமை கொண்டாடும் அள
வுக்கு நம் பேராசை பெருகிவிட்டது.

இந்த நிலையில் நாம் முடிவு கட்டவேண்டிய முக்கிய
மான பிரச்னை : தனித்து நிற்பதைக் கைவிட்டு உலக விவ
காரங்களில் பங்கு கொள்ள முன்வந்து விட்டோம்; இனி
சாம்ராஜ்ய நாடாகத் திகழப் போகிறோமா அல்லது பழைய
ஜனநாயகப் புரட்சிப் பாதையில் செல்லப் போகிறோமா என்
பதுதான் பிரச்னை. ஆகையால் காலனி ஆட்சி எதிர்ப்பா
ளர்களுடன் நெருங்கிய உறவு கொள்வதுபற்றி ஆராயுமுன்
ஸ்பானிஷ்-அமெரிக்கச் சண்டையில் நமது செயல்கள், அவை
பற்றிய விவாதங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

'' உண்மையில் பிலிப்பைன்ஸைக் கைக்கொள்ள நான்
விரும்பவில்லை. ஆனால் அந்நாடு கடவுள் அருளிய பிரசாதம்
போல் நம் கைக்கு வந்ததும், அந்நாட்டை என்ன செய்வது

என்று எனக்குத் தெரியவில்லை.'' இவ்வாறு ஜனாதிபதி மாக்கின்லே (Mckinley) கூறிவிட்டு, அந்நாட்டைக் கைக்கொண்டதற்குக் காரணத்தையும் விளக்குகிறார்.

'' ஒரு நாள் பின்னிரவில் இந்தப் பிரச்னை என் மனக்கண்முன் ருபமெடுத்து வந்தது. (1) இந்நாட்டை நாம் திரும்ப ஸ்பானிஷாரிடம் கொடுக்க முடியாது. அது கோழைத்தனமான, மானக்கேடான, செயலாகும், (2) இந்நாட்டை ஃபிரான்சிடமோ, ஜெர்மனியிடமோ ஒப்படைக்க முடியாது. இந்நாடுகள் கிழக்குப் பகுதிகளில் நம்முடன் வர்த்தகப் போட்டி புரிபவைகள். இவ்வாறு செய்வது வர்த்தக முறைக்கு மாறானது, வெட்கக்கேடானது. (3) இந்நாட்டை அந்நாட்டு மக்களிடமே விட்டுவிடுவதும் நல்லதல்ல. அவர்கள் சுய ஆட்சிக்குத் தகுதியற்றவர்கள். அப்படி விட்டால் கொஞ்ச காலத்தில் ஸ்பெயின் நடத்தியதைவிட மோசமான ஆட்சியும் அராஜகமும் நிலவும். (4) ஆகையால் அந்நாட்டினரை நம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு, பிலிப்பைன் மக்களுக்கு கல்வி அளித்து, அவர்களை உயர்த்தி, நாகரிகப்படுத்திக் கிறிஸ்தவர்களாக்குவது தவிர வேறு வழியில்லை. ஆகையால் ஆண்டவன் அருளால் அவர்களை நமது மக்கள் போல் பாவித்து, நம்மாலியன்ற நன்மை செய்வோம். இம்மாதிரி மக்களுக்காகத்தான் ஏசுநாதர் உயிர் நீத்தார். இந்த சிந்தனை முடிந்ததும் நான் படுத்துக் கொண்டேன். நிம்மதியாகத் தூங்கினேன்.''

ஆனால் ஜனாதிபதி மாக்கின்லே மாதிரி பிறர் அவ்வளவு கவலையின்றித் தூங்கவில்லை. ஸ்பெயினுடன் நடந்த சண்டையில் முடிவாக பாரிஸ் உடன்பாடு ஏற்பட்டது. இதை அங்கீகாரம் செய்வது பற்றி செனட் சபையில் விவாதம் நடக்கையில் பலர் அமெரிக்க புரட்சி லட்சியங்களைப் பற்றி உருக்கமாகப் பேசினர்.

இந்தப் பிரச்னை பற்றிய இரு தரப்பு வாதங்களும் இந்த நூற்றாண்டு தொடக்கத்தில் நமது காங்கிரஸ் மண்டபத்தில் எதிரொலித்தன. இருதரப்பிலும் செல்வாக்கு மிக்க இரு
குடியரசுக் கட்சியினர் பேசினர். இவர்களில் ஒருவர் மஸ்ஸாசு
ஸெட்ஸைச் சேர்ந்த ஜார்ஜ் ஃபிரிஸ்பி ஹோர் .(George Frisbie
Hoar) என்பவர். இவர் செனட்டில் இருபத்தியேழு ஆண்டு
களாய் பிரபல தலைவராயிருந்திருக்கிறார். இவருடைய பெண்
ஸ்பிரிங்ஃபீல்டைச் சேர்ந்த என் சிறிய தந்தை சாமுவேல்
பௌல்ஸை (Samuel Bowles)த் திருமணம் செய்துகொண்
டார். இவருக்கு எதிரிடையாகப் பேசியவர் இந்தியானாவைச்
(Indiana) சேர்ந்த ஆல்பர்ட் பெவரிட்ஜ் (Albert Beveridge)
என்பவர். இந்த விவாதத்தை சற்று விரிவாகக் கவனிப்பது
நல்லது. ஏனெனில் அன்று விவாதிக்கப்பட்ட பிரச்னைகள்



இன்றைய நிலைக்கும் பொருந்தும். மேலும் ஜனாதிபதி மாகின்லேயின் கட்சியை ஆர்வத்துடன் எதிர்த்ததிலிருந்து நமது புராதன காலனி எதிர்ப்பு சக்தியின் சிறப்பைப் புரிந்து கொள்ளலாம்.

பிலிப்பைன்ஸை அமெரிக்கா கைப்பற்றுவதை எதிர்த்து தலைமை தாங்கி செனட்டர் ஹோர் 1899 ஜனவரியில் செனட் சபையில் பேசினார். இத்தீவுகளை பலவந்தமாக ஆக்கிரமித்துக் கைப்பற்றுவது நமது சுதந்திரப் பிரகடனத்திற்கு முற்றிலும் மாறானது என்று அவர் எதிர்க் கட்சியினர் மீது குற்றம் சாட்டினார். ஜெஃபர்சனும், லிங்கனும் கேட்டிருந்தால் பூரித்துப் போகக்கூடிய முறையில், அடிப்படையான கேள்விகளை ஹோர் கேட்டார். ''எல்லோரும் சமமாகவே படைக்கப்பட்டனர் என்பது உண்மையா? அல்லது ஒரு சிலர் மட்டுமே அப்படிப் படைக்கப்பட்டனரா? ஆண்டவன் மக்களுக்குப் பராதீனம் செய்ய முடியாத சில உரிமைகளை அருளியிருக்கிறார் என்பது உண்மையா? அல்லது அவ்வுரிமைகளை ஒரு சிலருக்கு மட்டும் தான் அளித்திருக்கிறாரா? இம்மாதிரி உரிமைகளில் உயிர் வாழ்தல், சுதந்திரம், இன்ப வாழ்க்கை நாடுதல் சேர்ந்திருக்கின்றன என்பது உண்மையா? அல்லது இவைகளுள் ஒரு சிலருக்குத்தானா? ஆளப்படுவோரின் சம்மதத்தின் பேரில் தான் அரசாங்கம் தனது நியாயமான அதிகாரத்தைப் பெறுகின்றது என்பது உண்மையா? அல்லது ஒரு சிலர் சம்மதத்தின்பேரில் தான் ஆளும் அதிகாரம் பெறுகிறதா?''

தாம் கேட்ட இந்தக் கேள்விகளுக்கு இந்த மஸ்ஸாசுஸெட்ஸ் செனட் அங்கத்தினர் அழுத்தமாக இவ்வாறு பதில் கூறினார். ''ஆதிக்கம் செலுத்துவதற்கு, ஆக்ரமிப்புக்கு அறிகுறியாக உங்கள் கொடியை பிலிப்பைன் தீவுகளில் ஏற்றுவீர்களானால், அந்தக் கொடியை நமது சுதந்திர மண்டபத்திலிருந்து இறக்குவதாகும்.''

இதற்கு செனடர் பெவரிட்ஜ் ஒளிவு மறைவின்றிக் கூறிய பதில் இது: '' சுதந்திரப் பிரகடனம் சுய ஆட்சி அநுபவிக்கும் மக்களால் சுய ஆட்சி அநுபவிக்கும் மக்களுக்காக வகுக்கப்பட்டது. சுய ஆட்சி புரியத் தகுதியுள்ளவர்களுக்கே அது பொருந்தும். சுய ஆட்சி அநுபவிப்போருக்கு உரித்தான இந்த வாசகத்தை காட்டுமிராண்டிகளான, மலாய் நாட்டினரின் சந்ததியாருக்கும், ஸ்பானிஷ் முறைகளிலும் கருத்துக்களிலும், பழக்கப்பட்டவர்களுக்கும் பயன்படுத்த எப்படி ஒருவன் துணிய முடியும்?''

நாட்டிற்காக உயிர் இழந்த லிங்கன், பிரகடனத்தைப் பற்றி கூறிய மொழிகளை ஹோர், பெவரிட்ஜுக்கு ஞாபகமூட்டினார். எதிர்காலத்தில் நிகழக் கூடிய ஆபத்தை லிங்கன் சுட்டிக்காட்டியிருந்தார். வெள்ளையர்கள், பணக்காரர்கள்

ஆங்கிலோ-ஸாக்ஸன் வெள்ளையர்கள் தவிர வேறு யாருக்கும் உயிர்வாழ, சுதந்திரம் அநுபவிக்க, இன்ப வாழ்க்கை நாட உரிமை கிடையாது என சில மனிதர்கள் சில கோஷ்டிகள், சில தனிப்பட்ட அக்கறையுள்ளவர்கள் வாதிக்கலாம். அச் சமயத்தில், சுதந்திரப் பிரகடனத்தை நோக்குங்கள். புரட் சிக்காக ரத்தம் சிந்திய இடத்தில் ஊற்றெடுத்து வந்த, இந்த பிரகடனத்தைப் பாருங்கள்'' என லிங்கன் தனது நாட்டு மக்களுக்கு உபதேசம் செய்திருந்ததையே ஹோர் ஞாபக மூட்டினார்.

முடிவுரையாக செனடர் ஹோர் பேசினார். ''நான் ஆதரிக்கும் கொள்கைகள் உலகத்திலேயே பிரத்தியட்ச நிலை அறிந்த, சிறந்த ராஜதந்திரிகள், பிரத்தியட்ச நிலை அறிந்த தலைமுறையினர் காலத்தில் வகுக்கப்பட்டவை. ''பிறரை ஆளத் தகுதியான மனிதனை ஆண்டவன் படைக்க வில்லை'' என்று லிங்கன் கூறினார். ஆகையால் பிறநாட்டை ஆளத் தகுதியுள்ள நாடும் கிடையாது. நமது சுதந்திர வாழ்க்கையில் முதல் நூற்றாண்டு அநுபவத்திலிருந்து நமது சுதந்திரப் பிரகடனம், நமது அரசியல் அமைப்பு யாவும் பயனற்றவை என்று கூற முடியுமா? ஸ்பெயின் பதினாறாவது நூற்றாண்டில் இருந்த நிலையில் அமெரிக்கா தனது இருப தாவது நூற்றாண்டு வாழ்க்கையைத் தொடங்க வேண்டுமா? நான் அவ்வாறு நினைக்கவில்லை.''

எதிர்க்கட்சி அசந்து போகும்படி செனடர் பெவரிட்ஜ் குத்தலாக இதற்குப் பதிலளித்தார். ''சுதந்திரப் பிரகட னம் எல்லோருக்கும் பொருந்தும் என நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் இந்த உரிமையை ஆதி இந்தியக் குடி மக்களுக்கு மறுக்கிறீர்கள். அப்படியானால் நமது நாட்டுக்கப்பால் உள்ள மலாய்களுக்கு அதை எப்படி வழங்கத் துணிவீர்கள்?''

ருட்யார்ட் கிப்ளிங் (மேற்கத்தியாரும், கிழக்கத்தியா ரும் ஒன்றாக முடியாது எனக் கருதியவர்), தோரணையில் பெவரிட்ஜ் கவர்ச்சிகரமாகப் பேசினார். ''சக அமெரிக்கர் களே, நாம் ஆண்டவனின் செல்வக் குழந்தைகள். விண்ணி லிருந்து அவன் நம்மைக் காத்து வருகிறான். அவன் சக்தியே நமது டூயி (Dewey) யைக் கீழ்த்திசைக்கு அனுப்பியது. நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன் ஸ்பானிஷ் கடற்படையை நமக் குக் கிடைக்கும்படி அருளியதும் அவன்தான்.

''நமது கொடி எங்கும் வெற்றி பெறுவதற்கு அவர் திருவுள்ளம்தான் காரணம். நமது காங்கிரசும், மந்திரி சபை களும் எதிர்பாராத அளவு நாம் வெற்றி பெற்றுவிட்டோம். மனித அறிவால் எதிர்பார்க்க முடியாதபடி பகலில் மேகம் போலவும், இரவில் தீப்பந்தம் போலவும் நாம் முன்னேறிக்



கொண்டே போகிறோம். நமது கொடியை ஆண்டவன் நாட் டிய எந்த இடத்திலிருந்தும் இனி நாம் அகற்ற முடியாது.''

* * * *

இந்த சரித்திரப் புகழ்பெற்ற விவாதமும் 1900-ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரமும் ஒன்று சேர்ந்தன. அந்தச் சமயம் பெவ ரிட்ஜ் ஆடம்பரமாக அறிவித்தார். ''நமது கொடியைப் பின் தொடர்ந்தே செல்வோம். ஏனெனில் அந்தக் கொடி யைத் தாங்கும் கை நீக்கமற நிறைந்திருக்கும் ஆண்டவன் கை''. ஆனால் அவருடைய இந்த வாதத்தை இச்சமயம் எதிர்த்தவர் ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகர்.

அவர்தான் வில்லியம் ஜென்னிங்ஸ் பிரயான்; சாம்ராஜ்ய ஆவலை எதிர்ப்பதையே தேர்தல் பிரச்னையாக்கி அவர் பேசி னார். ''நாம் மற்றுமோர் நெருக்கடியான கட்டத்தை அடைந்துவிட்டோம். பழைய ஏகாதிபத்தியக் கோட்பாடு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே நம் நாட்டிலிருந்து வெளியேற் றப்பட்டுவிட்டது. அது மீண்டும் அட்லாண்டிக்கைக் கடந்து வந்து ஜனநாயகத்தை மீளாச்சண்டைக்கு இழுக்கிறது. அமெ ரிக்க மக்கள் புரட்சிப் போர் புரிந்ததற்கு மன்னிப்புக் கேட் கத் தயாராயிருக்கின்றனரா? தீயும் வாளும் கொண்டு எதிர்த்த காலனி ஆட்சியை அவர்கள் இன்று, பிலிப்பைன் மக்கள் மீது திணிக்கப் போகின்றனரா?''

''சாம்ராஜ்ய ஆட்சியை வளர்ப்பதற்கு நம் நாட் டைத் தாண்ட விரும்புபவர்கள் ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். சாம்ராஜ்ய ஆட்சியினால் பிலிப்பைன் மக்கள் என்ன நிலை அடைவர் என்பது பற்றி மட்டும் சிந்தித்தால் போதாது. இதனால் நமது மக்கள் எப்படி மாறுதலடைவர் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சுய ஆட்சிக் கொள் கையை பிலிப்பைன்களுக்கு மறுப்பதனால், அந்த முறை நம் நாட்டில் பலஹீனமடைவதைத் தவிர்க்க முடியாது'' எனவும் பிரயான் எச்சரிக்கை செய்தார்.

1900-இல் நாம் செய்த முடிவு பேராசை, கர்வம், சாம் ராஜ்ய ஆசை முதலியவைகளின் வெற்றியேயாகும்; இறுதி யில் பிலிப்பைன்களுக்கு சுதந்திரமளிப்பது என்னும் தீர்மானத் திற்கு இரு சாராருக்கும் சம வோட்டுக் கிடைத்தது. ஆனால் உப ஜனாதிபதி எதிரிடையாக வோட்டுச் செய்து நிலைமையைச் சமாளித்தார். இதற்கு முந்திய தினம் தங்களுடைய கடைசி சாம்ராஜ்ய ஆட்சியினரை எதிர்த்துப் பிலிப்பைன் நாட்டி னர் புதுப் புரட்சி தொடங்கினர். இந்தச் செய்தி கேட்ட பின்பே, அநேக செனட்டர்கள் தீர்மானத்திற்கு எதிராக வோட்டுச் செய்தனர் என்று கூறப்பட்டது.

பிந்திய ஆண்டுகளில் அமெரிக்கா சாம்ராஜ்ய ஆர்வத்தைக் காட்டும் சம்பவங்கள் எப்பொழுதோ சில சமயங்களில் நிகழ்ந்தன. மெக்ஸிகோவிலும், மத்திய அமெரிக்காவிலும் நமது அயல் தேச விவகாரக் கொள்கையை நிலைநாட்டகப்பற் படை பயன்படுத்தப்பட்டது.

சாம்ராஜ்ய ஆசையை நாம் பேணி வந்த உச்ச நிலையில் கூட, இதை ஆட்சேபிப்பவர்கள், அமெரிக்கப் புரட்சி சம்பிரதாயத்தைப்பற்றி நமக்கு ஞாபகமூட்டிக் கொண்டுதானிருந்தனர். இதற்கு மாறான எந்தக் கொள்கையையும் அவர்கள் எதிர்த்துக் கொண்டும் வந்தனர். இங்கிலாந்தில் ஜனநாயக உணர்வு வளர வளர, இந்தியாவுக்குத் தீவிர சீர்திருத்தங்கள் அளித்ததுடன், ஆங்கிலேயர் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு அநுதாபம் காட்டியும் வந்தனர். இதே மாதிரி பிலிப்பைன் மக்களுக்குப் பூரண சுதந்திரம் அளிக்க வேண்டும் எனும் இயக்கம் அமெரிக்காவில் வலுப்பெற்று வந்தது. 1934-இல் நமது காங்கிரஸ் பிலிப்பைனுக்கு சுதந்திரம் அளிப்பதாக வாக்குறுதி அளித்தது. 1946 ஜூலை 4-ஆம் தேதி இந்த வாக்கு நிறைவேற்றப்பட்டது.

புயூர்டோ ரிகோவிற்கு அந்தத் தீவு சம்பந்தமான விவகாரங்களில், சுய ஆட்சி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அயல்நாட்டு விவகாரமும் பாதுகாப்பும் அமெரிக்காவின் பொறுப்பிலிருக்கிறது. அமெரிக்கக் கூட்டுறவின் பயனை இழந்து விடலாகாது என்று இந்தத் தீவினரே சுதந்திரமாக இந்த இக்கட்டான நிலைமைக்கு இணங்கினர்.

சாம்ராஜ்ய ஆசை அமெரிக்க சம்பிரதாயத்திற்கு மாறானது. ஒரு தலைமுறை காலத்தில் அமெரிக்காவின் இந்த சோதனை ஆர்வமும் தணிந்துவிட்டது.

அத்தியாயம்-30

# வில்ஸனும், அமெரிக்கக் கனவும்

உலக விவகாரங்களில் அமெரிக்காவின் நோக்கம் சோதனைக்குள்ளாவது எப்பொழுது? ஸ்பானிஷ் அமெரிக்கச் சண்டைக்குப் பிறகு, முதன் முதலில் ஆசியாவுடன் போராடுகையில் அந்தச் சோதனை ஏற்படவில்லை. முதல் உலக யுத்



தத்தின்போதும், அதற்குப் பின்பும் மேற்கத்தி நாகரிகத்தின் உறைவிடமான ஐரோப்பாவை நோக்கி, அமெரிக்கர் மீண்டும் தீவிர நாட்டம் கொண்டபோதுதான் இந்தச் சோதனை நிகழ்ந்தது. யுத்தத்தின்போது எவ்விதச் சந்தடியுமின்றி அமெரிக்கா கடன்பட்ட நாடாயிருந்தது போய், கடன் கொடுத்த நாடாக மாறியது. அதே மாதிரியே அமெரிக்கா யந்திரத் தொழில் துறையிலும், ராணுவத்திலும் பலம் பொருந்திய நாடாயிற்று. உடனே சக்தி பழைய உலகிலிருந்து புது உலகுக்கு (அமெரிக்கா) மாறியது.

உலக விவகாரங்களில் அமெரிக்கா ஒதுங்கியிருந்தது போய் உலகுக்குத் தலைமை தாங்கும் நிலைக்கு வந்துவிட்டது. இந்தச் சோதனையிலிருந்து அமெரிக்கா எப்படி மீண்டு வந்தது? இது பற்றி ஆராய்வது இப்பொழுது பொருத்தமாயிருக்கும். ஏனெனில் அமெரிக்காவின் உலக அந்தஸ்து இப்போது உச்ச நிலையிலிருக்கிறது.

நமது சுதந்திரப் பிரகடனத்திலும், சமஷ்டி அரசியலமைப்பிலும் புதைந்து கிடக்கும் கொள்கைகளே எதிர்கால உலகத்திற்கு நம்பிக்கையூட்டக்கூடிய சிறந்த சாதனங்கள் என்பதை லிங்கன் கண்டார். லிங்கனின் அபூர்வ கற்பனா சக்தியுடன் அமெரிக்காவின் எதிர்காலச் சிறப்புகளை மனக் கண்ணால் பார்க்கும்படி வில்ஸன் மக்களைக் கூவியழைத்தார். இந்த மனோ தர்மம் இல்லாவிட்டால் சுதந்திர மக்கள் சர்வநாசமடைவர் என அவர் கருதினார்.

''உலக மக்களை ஒன்றுபடுத்தவே அமெரிக்கா சிருஷ்டிக்கப்பட்டது'' என்று அவர் நம்பினார். இந்த நற்பணியை அமெரிக்கா ஆற்றுவதற்கான காலம் நெருங்கி விட்டதானால், கடல் அமெரிக்காவின் எல்லையல்ல. அது உலகத்துடன் ஒன்றுபட்டு உழைப்பதற்கான அழைப்பு என வில்ஸன் கருதியது உண்மையெனில் சாம்ராஜ்யம் அமைப்பதோ அல்லது சாம்ராஜ்ய சமபலம் நிலவச் செய்வதோ அமெரிக்கருக்கேற்ற பணியல்ல.

''உலக மக்களை அன்பினால், அநுதாபத்தினால், நீதியினால் ஒன்றுபடுத்த முடியும். இதை அமெரிக்கா உணர வேண்டும். ஏனெனில் உலகிலே அமெரிக்கா ஒன்றுதான் பன்முறை அழிந்து மீண்டும் உயிர் பெற்றிருக்கிறது.'' இவ்வாறு வில்ஸன் கூறினார்.

1915-இல் புதிதாக அமெரிக்கப் பிரஜா உரிமை பெற்றோர் கூட்டத்தில் பிலடல்பியாவில் இதை வில்ஸன் இன்னும் சற்று விரிவாக விளக்கிக் கூறினார். ''பிற நாடுகள் தங்கள் நாட்டு மக்களின் ஜனப்பெருக்கத்தை நம்பி வாழ்கின்றன. ஆனால் புது முறையில் பலம் பெற்று வருகிறது இந்த நாடு. பலம் பொருந்திய ஆடவர்களும், முற்போக்கான பெண்களும்,

தம்மிச்சையாக இங்கு வந்து நம்முடன் கூடுவதனால் நாம் பலம் அடைகிறோம். சுதந்திரமான மக்கள் இஷ்டப்பட்டு நமக்கு உதவுவதனால் தலைமுறை தலைமுறையாக நாம் வளர்ச்சியுற்று வருகிறோம். அமெரிக்காவை ஆதியில் தோற்றுவித்த சக்தியே, இன்று நமக்கு பலமூட்டுகிறது.''

நியூயார்க் துறைமுகத்தில் சுதந்திர தேவியின் சிலைமுன் எம்மா லாஸரஸ் (Emma Lazarus) என்பவர் கவிதையொன்று எழுதிப் பொறித்திருக்கிறார். அதன் கருத்தை மனத்திற் கொண்டே, வில்ஸன் இவ்வாறு பேசியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

> '' களைப்புற்ற ஏழைகளான, சங்கடத்தில் உழலும், சுதந்திர ஏக்கம் கொண்ட உங்களது மக்களை என்னிடம் அனுப்பு.''
>
> '' நீங்கள் ஒதுக்கித் தள்ளியவர்களை, நிற்க நிழலற்றவர்களை, அலைகடலால் ஒதுக்கப்பட்டவர்களை என்னிடம் அனுப்பு.''
>
> '' என் தங்க வாயிலில் தீபமேந்தி அவர்களை வரவேற்பேன்.''

இப்படிப் பிற நாடுகளிலிருந்து வந்தவர்கள் உடனடியாகச் செய்யவேண்டியதைப் பற்றி வில்ஸன் உபதேசம் செய்தார். உண்மையான அமெரிக்கர்களாக இருக்க விரும்பினால் அமெரிக்காவை மட்டும் நினைத்தால் போதாது. ''எப்பொழுதும் உலக மக்களைப் பற்றியே முதலில் நினைக்கவேண்டும்'' என அவர் போதித்தார்.

நாடு பிடிக்கும் ஆவலைப் பற்றித் தம் மனவேதனையை வில்ஸன் வெளியிட்டார். ''நமக்கு நாடுபிடிக்கும் ஆவலோ, ஆதிக்கப் பேராசையோ இருந்தால் அவைகள், நாம் சுதந்திரம் பெற்ற புதிதில் தெரியாமற் செய்த பிழைகளாகும். அவைகளை இப்போது விட்டுவிட்டோம். அமெரிக்கா செய்ய வேண்டிய நற்காரியம், நம் நாட்டை மட்டும் பொறுத்ததல்ல. தங்கள் நாட்டுக்காக மட்டும் போராடும் சந்தர்ப்பம் நேருமானால், உலக மக்களுக்காகப் போராடுவதை நாம் மறந்து விட்டோமானால், அமெரிக்கர்கள் தங்கள் சம்பிரதாயங்களை மறந்து விட்டனர் என்றுதான் கூறவேண்டும்.''

இதே முறையில் அன்னபோலிஸ் (Annapolis) பல்கலைக் கழக மாணவர்கள் முன்பும் ஜனாதிபதி பேசினார். ''மனித சமுதாயத்திற்குப் பணி புரிவதே அமெரிக்காவின் லட்சியம். உங்கள் கொடியை பறக்கவிடும் ஒவ்வொரு சமயத்திலும் மற்றவர்கள் செய்யத் தவறியதை நீங்கள் செய்ய முன்வருகிறீர்கள். நாடு பிடிக்க அல்ல, சேவை செய்யவே நீங்கள் முன் செல்லுகிறீர்கள் என்பதை மறந்து விடலாகாது.''



அமெரிக்கச் செயல் ஆர்வத்திற்கு வில்ஸன் புத்துயிரளித்தது சிறப்பான முறையில் பரிணமித்தது. ஏனெனில் அவர் இந்த வகையில் செயலாற்ற முன்வந்த சமயத்தில். பிறநாட்டுப் படைகளும், கடற்படைகளும், ராஜதந்திரிகளும் அதிகார ஆதிக்கத்திற்கான கடும்போரில் ஈடுபட்டிருந்தனர். ஒரு ஆஸ்திரியப் பிரபுவை ஒரு ஸெர்பிய வெறியன் கொன்றதிலிருந்து பல்வேறு நாடுகள் போரில் ஈடுபட்டன. பல்வேறு கூட்டுறவுகள் மூலம் நிலவியிருந்த ஐரோப்பிய சமபலம் இதனால் கலகலத்துப் போய்விட்டது. எண்பது லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இறந்தனர். இருபத்தொரு கோடிக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். வடக்கு ஃபிரான்ஸ், ஸ்காண்டிநேவிய நாடுகள், கிழக்கு ஐரோப்பாவில் பெரும் பகுதி நாசக்குவியலாகிவிட்டன. இதுதான் யுத்தத்திற்கான ஞாபகச் சின்னம்.

இதன் விளைவாக மக்கள் எதிலும் நம்பிக்கையற்றவர்களாக இருந்ததில் ஆச்சரியமில்லை. எந்த யுத்தத்தின் மூலமும் தங்களது நாட்டைக் காக்கும் ஆர்வமும், பகைவர்கள் மீது வெறுப்பும் ஏற்படுவது சகஜம். ஏதாவது மகத்தான நலனுக்கல்லாது இவ்வளவு பெரிய யுத்தம் நிகழ்வதை நியாய உணர்வுள்ளவர்கள் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

பெரியதோர் நன்மைக்காகவே யுத்தம் புரியலாம் என்று மக்கள் எதிர்பார்ப்பதை வில்ஸன் திருப்தி செய்தார். யுத்தமே நிகழாமல் செய்வதற்காகத் தான் போர்புரியவேண்டும். ''ஜனநாயகம் இடைஞ்சலின்றி வளர்வதற்கு உலகத்தைக் காக்கவேண்டும்'' யுத்தகாலத்தில் வில்ஸன் தலைமை தாங்கிச் செயல் புரிந்ததும், சர்வதேச சங்கத்தை ஸ்தாபிக்க அவர் போராடியதும், அமெரிக்கப் புரட்சிக் கொள்கைகள் மனித உருக்கொண்டு வந்ததுபோல் உலக மக்களைக் கவர்ந்தது. வில்ஸனின் யுத்த கால சேவை உலக ராஜதந்திரத்தில் அமெரிக்காவின் முதல் அநுபவமாகத் திகழ்ந்தது.

ஏகாதிபத்ய ஆட்சி, பல்வேறு முறையில் மக்கள் ஒடுக்கப்பட்டது, இம்மாதிரித் தொல்லைகளால் உலகம் தத்தளித்து வருகையில் போர் தொடுக்க வேண்டும் என்று 1917-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாம் தேதி வில்ஸன் காங்கிரஸைக் கேட்டுக்கொண்டார். இதற்காக அவர் காங்கிரசுக்கு சமர்ப்பித்த அறிக்கை, மின்சக்தி பாய்வது போல் மக்களை ஆட்கொண்டது. ''இந்தப் போர் மூலம் நம் சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ளப்போவதில்லை. பிறநாடுகளைப் பிடிக்கும் ஆவலும் நமக்கில்லை. ஆதிக்க ஆசையும் இல்லை. யுத்தத்தின் விளைவாக நமக்கு நஷ்ட ஈடுவேண்டும் என்று கேட்கப்போவதுமில்லை. நாம் இஷ்டப்பட்டுச் செய்யப்போகும் தியாகத்திற்குப் பொருளாதாரப் பிரதிப்பிரயோசனம் கோரப்

போவதுமில்லை. மனித உரிமைகளுக்குப் போராடும் நாடுகளில் நம் நாடும் ஒன்று.

''சமாதான ஆர்வமுள்ள இப்பெரிய நாட்டினரை யுத் தத்தில் ஈடுபடச் செய்வது பயங்கரமாயிருக்கிறது. ஆனால் சமாதானத்தைவிட உரிமை பெரிது. நாம் ஆர்வத்துடன் பேணிப் போற்றி வரும் நற்பேறுகளுக்காக நாம் போராடு வோம். ஜனநாயகம், ஆட்சிக்குட்பட்டவர்களுக்கு அரசாங் கத்தில் பங்கு கோரும் உரிமை; சுதந்திர மக்கள் யாவரும் ஒன்று கூடி, எல்லா நாட்டினரும் சமாதானமாகவும், பத் திரமாகவும் வாழ்ந்து இறுதியில் உலகமே சுதந்திரமாயிருப் பதற்கு வழி செய்தல்.''

வில்ஸனின் இந்த வேண்டுகோளுக்கு அமெரிக்க மக்கள் ஆர்வத்துடன் இணங்கியது மட்டுமல்ல, பழைய உலகத்தி லுள்ள மக்கள் உற்சாகப் பெருவெள்ளத்தில் மூழ்கினர். வில்ஸனின் சொற்கள் பெரியதோர் தார்மிகப் போராட்டத் தின் சாதனங்களாயின. உலகத்தில் லட்சோபலட்சம் மக்கள் யுத்தத்தை மனித உரிமைகளுக்கான புனிதப் போராகப் பயன்படுத்தினர். ஃபிரஞ்சுக் குடியானவர்கள் தங்கள் குடிசை யில் நம் ஜனாதிபதியின் படத்தை பூஜித்ததை அமெரிக்க வீரர்கள் கண்டனர். ''வில்ஸன்'' எனும் வார்த்தையை மந்திர சக்தி வாய்ந்தது போல் மாணவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கையில் உச்சரித்தனர். வில்ஸனின் சொற் பொழிவுத் தொகுப்புகள் சீனாவிலும், மத்திய உலகிலும் ஏராளமாக விற்பனையாயின. ஸ்பெயின் நாட்டில் இவைகள் பாடப் புத்தகங்களாயின.

நேச நாடுகளின் யுத்த நோக்கங்களைத் தெளிவுபடுத்த வும் வில்ஸன் பாடுபட்டார். ஐரோப்பிய ராஜதந்திரிகளின் அந்தரங்க எண்ணங்களுக்கு மாறாக, வில்ஸனின் பதினான்கு அம்சத் திட்டம் அமைந்திருந்தாலும் மக்களிடையே அது பேருற்சாகத்தைக் கிளப்பிவிட்டது. அதை பகிரங்கமாக எதிர்க்க யாரும் துணியவில்லை. அவருடைய ஜனநாயகக் கருத் துக்கள் மக்களிடையே கொந்தளிப்பைக் கிளப்பினாலும், பழைய அமெரிக்க சம்பிரதாயத்தையொட்டியதாகவே இருந் தன. அவைகளுக்காக எவ்வளவு படைகள் போர்புரிந்தாலும் வீணல்ல என்று மக்கள் கருதினர்.

வில்ஸனின் 14 அம்சத் திட்டத்தின் பயனாகவே ஜெர்மனி யின் போரார்வம் வீழ்ச்சியுற்றது. அதையொட்டி தற்கா லிக சமாதான உடன்பாடு செய்யும்படி 1918 அக்டோபரில் ஜெர்மன் அரசாங்கம் வில்ஸனைக் கேட்டுக்கொண்டது. இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு நேசக் கட்சியினர் சமா தானத்திற்கு ஒப்புக்கொண்டனர். கடலில் எல்லா நாடு களுக்கும் சுதந்திரம் உண்டு எனும் ஷரத்தை நீக்கிவிட



வேண்டுமென்றனர். யுத்தத்தால் விளைந்த நஷ்டத்தை ஜெர்மனி ஈடுசெய்ய வேண்டும் என்று கோரினர்.

வில்ஸன் ஐரோப்பாவுக்கு வந்ததும், உலக ஜனநாயகத் தின் ரட்சகர் எனத் தம்மை மக்கள் திரண்டு வந்து துதிப் பதைக் கண்டார். புதிய உலகத்தைச் சிருஷ்டிசெய்ய வில்ஸன் எவ்வளவோ ஆசைப்பட்டாலும் பழைய ஏற்பாட்டையே நிலைநாட்ட பழைய ராஜதந்திரிகள் உறுதிகொண்டனர்.

வில்ஸன் கண்ட கனவுபற்றி நான்கு வல்லரசுகளில் அமெரிக்கா தவிர பிற அவ்வளவு உற்சாகம் காட்டவில்லை. கிளெமென்ஸோ (Clemenceau), வில்ஸனை ''ஜுபிடர்'' என்று அழைத்தார். ஏசுநாதர் என்று கேலி செய்தார். அவருடைய 14 அம்சத் திட்டத்தை, 14 கட்டளைகள் என்று கிண்டல் செய் தார். இவர் ஜெர்மானியரிடமிருந்து அளவின்றி நஷ்டஈடு கோரினார். அடுத்தபடி பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் (Lloyd George) பிரிட்டனுக்கு சாத்யமான முறையில், ஐரோப்பிய நாடுகளிடையே சமபலம் நிலவவேண்டுமென்று விரும்பினார். கடைசியாக இத்தாலியர் ஆர்லாண்டோ (Orlando) தமது சட்ட நுட்பப் போக்கினால் பிற பிரதிநிதிகளி டையே எரிச்சலைக் கிளப்பினார்.

ஐரோப்பாவுக்கு வெளியேயுள்ளவர்களையும், வில்ஸனின் பேச்சு கவர்ந்தது என்பது பிற நாட்டு ராஜதந்திரிகளின் கவலையை அதிகரித்தது. சமாதான மகாநாட்டுப் பிரசங் கங்களை ஆஃபிரிக்க மாணவர்கள் கூர்ந்து கவனித்து வந் தனர். சுயநிர்ணயக் கொள்கை ஐரோப்பாவுக்குப் புறம்பா யுள்ள நாடுகளுக்கும் வழங்கப்படுமா எனும் ஆவலினால் அவர்கள் இந்த விவரங்களில் சிரத்தை கொண்டனர். இளம் ஹோ சி மின் போன்ற ஆசிய தேசியவாதிகளும் இந்த நட வடிக்கைகளில் கவனம் செலுத்தினர். இக்கால வரலாற்றை அமெரிக்கர் படித்தால், அமெரிக்கரின் கனவு எப்படிப் பிறரைச் செயலாற்றத் தூண்டியது என்பதை அறிந்து கொள்ளலாம். அமெரிக்க அரசியல் தலைவர்களின் பல்வேறு போக்கையும் புரிந்துகொள்ளலாம்.

* * *

சர்வதேச சங்கத்தின் மூலம், சமாதானத்தை நிலை நாட்ட வேண்டும் என்பது வில்ஸனின் பிரதான குறிக் கோளாகிவிட்டது. இந்த நோக்கத்திற்கு வில்லியம் ஹோவோர்டு டாஃப்ட் (William Howard Taft), எலிஹூ ரூட் (Elihu Root) போன்ற பிரபல குடியரசுக் கட்சியினர் ஆழ்ந்த ஆதரவளித்தனர். சமாதான கமிஷன் நியமிக்கையில் இம் மாதிரி செல்வாக்குள்ள, சர்வதேசப் பற்றுள்ள குடியரசுக் கட்சியினரை அதில் சேர்த்துக்கொள்ளாதது வில்ஸன் செய்த முதல் தவறு என்று பின்னர் விமர்சகர்கள் கூறினர்.

பாரிசில் பல வாரங்கள் ரகஸ்யமாகப் பேச்சு வார்த்தை நடத்திய பிறகு, 1919 பிப்ரவரியில் வில்ஸன் சிறிது காலம் தங்குவதற்காக வாஷிங்டனுக்கு வந்தார். சமாதான உடன் படிக்கை எவ்வாறு அமையும் என்பது அச்சமயம் தெளிவா கத் தெரிந்தது. அதை காங்கிரஸ் அங்கீகரிப்பதற்கான ஏற் பாடுகள் செய்ய வில்ஸன் விரும்பினார். தமது யோசனை களுக்குள்ள எதிர்ப்பைச் சற்று தளர்த்தும் நோக்குடன், செனட் அயல்நாட்டு விவகாரக் கமிட்டி அங்கத்தினர்களை யும், பிரதிநிதி சபை அயல்தேச விவகார கமிட்டியினரையும் விருந்துக்கு வெள்ளை மாளிகைக்கு வில்ஸன் அழைத்தார். தவிர்க்க முடியாத சில சமரசங்களுக்குத் தான் இணங்கியது பற்றி அவர் மனம்விட்டுப் பேசினார். இந்த சமரசங்களின் விளைவாகச் சர்வதேச சங்க அமைப்புச் சாஸனம் அங்கீ கரிக்கப்படும் என்று கூறினார்.

இந்தச் சமரசங்களினால் ஏற்படக்கூடிய தீமைகளை அகற்ற முடியும் என அவர் நம்பினார். யுத்தத்தினால் ஏற் பட்ட மனக் கசப்பு குறைந்து, சர்வதேச சங்கத்தில் அமெ ரிக்கா முன் நின்று செயல் புரியுமானால், இவைகள் படிப்படி யாக அகன்றுவிடும் என அவர் நினைத்தார். அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ள லட்சியங்கள் அமெரிக்காவில் மட்டு மல்ல, உலகெங்கும் பரவிவிட்டது. இந்த லட்சியங்கள் கைகூடுவதற்குச் சர்வதேச சங்கத்தின் மூலம் உழைக்கலாம் என்று அவர் கருதினார்.

காங்கிரசில் ஜனாதிபதியின் கொள்கைகளைப்பற்றி குறை கூறியவர்களை அவரால் திருப்தி செய்ய முடியவில்லை. அவர் நடத்திய விருந்துக்கு வந்திருந்த கனெக்டிகட்டைச் சேர்ந்த செனடர் பிராண்டிகி (Brandegee) "வெள்ளை மாளிகையி லிருந்து திரும்புகையில், "ஏதோ கற்பனை உலகுக்குச் சென்று வந்ததுபோலிருக்கிறது'' எனக் கூறினார்.

அநேகக் குடியரசுக் கட்சியினர் தம்மை ஆதரிப்பதாகக் கூறி யதனால் வில்ஸன் கவலையற்றிருந்தார். லாட்ஜின் யாதாஸ்து வெளியான அந்த மார்ச் மாத இரவிலேயே வுட்ரோ வில் ஸனும், மாஜி ஜனாதிபதி டாஃப்டும் கைகோத்துக்கொண்டு, நெரிசலாக ஜனங்கள் கூடியிருந்த நியூயார்க் மெட்ர பாலிடன் இசை நாடகக் கொட்டகை மேடையில் ஏறினர்.

என்ரிகோ கருஸோ (Enrico Caruso) 5,000 பேரோடு சேர்ந்துகொண்டு, கொடி வணக்கப் பாட்டுப் பாடினார். எல் ஸ்மித் (AL Smith) அன்றைய பிரசங்கிகளைச் சபையி னருக்கு அறிமுகம் செய்து வைத்தார். மக்கள் மனத்தில் பதி யும் வகையில் டாஃப்ட் பேசினார். ஜார்ஜ் எம். கோஹனின் (George M. Cohan) யுத்தக் கருத்து தொனிக்கும் வகையில், "நான் போகும் காரியம் கைகூடாமல் திரும்பமாட்டேன்''



என்று வில்ஸன் பேசினார். சபையிலிருந்தவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

மக்களிடம் நேரிடையாகப் பேசி, அவர்கள் ஆதரவைப் பெறுவதன் மூலம் வெற்றி பெறலாம் எனவே வில்ஸன் பெரிதும் நம்பியிருந்தார். சர்வதேச சங்க சாஸன ஷரத்துக் களைத் தளர்த்தவேண்டுமென லாட்ஜ் முதலியோர் கோரி யதை வில்ஸன் பொருட்படுத்தவில்லை. ஏனெனில் ஏற்கனவே வெகு தூரம் விட்டுக்கொடுத்துவிட்டதனால் மேலும் சமரஸம் செய்வதில் பயனில்லையென்று அவர் கருதினார். உடனே பாரிஸுக்குப் புறப்பட்டார்.

கோலாகலமானச் சூழ்நிலையில் வர்சேல்ஸில் சமாதான உடன்படிக்கை 1919 ஜூன் 28-ஆம் தேதி கையெழுத்தாயிற்று. அதை அங்கீகரிக்கும்படி செனட்டின் முன் வாதாடுவதற்கு ஜனாதிபதி தாய் நாட்டிற்குத் திரும்பினார். சர்வதேசச் சங்க சாஸனம் சமாதான உடன்படிக்கையின் முக்கியமான பகுதி மட்டுமல்ல, இரண்டையும் பிரிக்க முடியாது என்று கூறினார். "இந்தச் சிறப்பான உடன்பாட்டை நாமோ மற்றெந்த சுதந் திர நாடோ, ஏற்கத் தயங்குவோமா? இதை நிராகரிப்பதன் மூலம், உலகத்தோர் உள்ளத்தை உடைக்கத்துணிவோமா?'' என வில்ஸன் கேட்டார்.

இல்லினாய்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த மெடில் மெகார்மிக் (Medill Mccormick), கனெக்டிகட்டைச் சேர்ந்த பிராண்டிஹி, ஒஹியோவைச் சேர்ந்த ஹார்டிங் (Harding) முதலிய குடியரசுக் கட்சி செனடர்கள் வில்ஸனின் சவாலை உடனே ஏற்றுக்கொண்டனர். சிறிய, ஆனால் செல்வாக்கு மிகுந்த "நியூ ரிபப்ளிக்'' (New Republic) போன்ற 'லிபரல்' சஞ்சிகைகள் உடன்பாட்டை ஆதரிக்க மறுத்தன. உடன் படிக்கை மிகக் கடுமையாயிருக்கிறது என்று தங்களது ஆதரவு மறுப்புக்கு இவர்கள் காரணம் கூறினர்.

உள்நாட்டு விவகாரங்களில் தாராளப்போக்குடனிருந்த பல செல்வாக்கு வாய்ந்த செனடர்கள் இந்த உடன்பாட்டை யும், சர்வதேச சங்கத்தையும் ஒழித்து விட்டு மறுவேலை பார்க்கப்போவதாகச் சபதம் செய்தனர்.

ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த செனடர்களிலும், ஒரு சிலர் உடன்படிக்கையை எதிர்த்தனர். அப்படி எதிர்த்தவர் களில் மிஸ்ஸோரியைச் சேர்ந்த ஜேம்ஸ் ரீடு (James Reed) என்பவரும் ஒருவர். லீக்கில் வெள்ளையரல்லாதோர் பெரும் பான்மையினராகி விடலாம் என்று இவர் தர்க்கம் செய்தார். இவருடைய சகாவான செனடர் ஷெர்மன் (Sherman) மதப் பற்றைப் பயன்படுத்தி உடன்படிக்கையை எதிர்த்தார். லீக் இல் கத்தோலிகர்கள் பெருவாரியாகி, போப் அதில் ஆதிக் கம் செலுத்தலாம் என்று இவர் கூறினார். செனட்டில் பிரபல

பேச்சாளரான போரா (Borah), ஏசுநாதரே அவதரித்து உடன்படிக்கையை ஏற்கச் சொன்னாலும் அதற்குத் தாம் இசையப் போவதில்லையென்று கூறினார்.

தங்கள் நாடு உலக விவகாரங்களில் ஈடுபடாமல் ஒதுங்கி நிற்க வேண்டும் என்கிற மனப்பான்மை நீங்காத அமெரிக்கர் இன்னும் எத்தனையோ லட்சம் பேர் இருக்கின்றனர். ஐரோப்பிய நாடுகளுடன் நீங்காக் கூட்டுறவு கொள்வதன் அபாயத்தைப் பற்றி வாஷிங்டன் தமது பிரிவுரையில் எச் சரித்துவிட்டுப் போனார். அந்த அபாய முறையை நீடித்துப் பின்பற்ற வைக்கிறது லீக் என்று இந்த தனித்து நிற்கும் கூட்டத்தினர் கண்டனம் செய்தனர். நமது அரசியல் அமைப்பு நிறைவேறுவதற்கு முன் ''நண்பர் சங்கம்'' (League of Friendship) என்று ஒரு ஸ்தாபனம் இருந்தது. அது மாதிரி உறுதியோ, பிணைப்போ இல்லாத சமஷ்டிதான் இந்த சர்வதேச சங்கம் என்றாலும், யார்க் டவுனில் போர் புரிந்து பெற்ற ஆதிபத்ய உரிமையை இந்த உலக ராஜ் யத்திடம் (Superstate) இழக்க நேரிடும் என்று இவர்கள் தங்கள் அச்சத்தை வெளியிட்டனர்.

நியூ இங்கிலாந்தில் அந்நியச் சரக்குகளுக்குத் தடுப்பு வரி விதிக்க வேண்டும் என்று வாதாடியவர்களுடன் என் தந்தை சேர்ந்துகொண்டு தனித்திலங்கும் கட்சியை வளர்த்து வந்தார். இவர் வில்ஸனை எதிர்த்துத் தமது கொள்கை யில் நம்பிக்கையுடன் போராடுகையில் ஸ்பிரிங்ஃபீல் டில் நான் சிறு பையனாயிருந்தேன். அவர் தமது கருத்தை ஹார்வேஸ் வீக்லி (Harvey's Weekly) எனும் வாரப்பத்திரிகை யில் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். தேர்தல் தினம் நெருங்க நெருங்க, இந்தப் பத்திரிகை ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு பக்கத்து அடியிலும் ''இன்னும்......நாள்தான் வில்ஸன் ஆட்சி'' என்று பிரசுரித்து வந்தது.

இப்படி எதிர்ப்பவர்களில் சிலர் உண்மையான ஆர்வம் கொண்டவர்கள். சிலர் அப்பட்டமான அரசியல் காரணங் களுக்காக எதிர்ப்பவர். மற்றும் சிலர் மக்களைக் கிளர்ந்தெழச் செய்ய வேண்டும் எனும் இச்சை கொண்டவர்கள். ஆனால் மக்கள் லீக்கில் நம்பிக்கை கொண்டிருந்ததனால் அதன் கர்த் தாக்கள் மனம் தளராதிருந்தனர். இதை ஆதரித்தவர்களில் முதல்வரான வில்ஸன் மிகுந்த தைரியம் வாய்ந்தவர். நெருக்கடியான காலத்தில், அமெரிக்க மனச்சான்றின் உரு வம் போல் போராடுபவர். இந்தப் போராட்டத்தை அவர் மக்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அவர்கள் என்றும் போல் அவரை ஆர்வத்துடன் ஆதரித்தனர்.

செயின்ட் லூயி (St. Louis) எனும் நகர் தனித்திலங்கு வோர்களின் கோட்டை என்று பெயர். அங்கே வானமே



கலங்கும்படி மக்கள் இவரை ஆரவாரத்துடன் ஆதரித்தனர். ''லீகை ஸ்தாபிப்பதற்கான போராட்டத்தில் நான் தோல்வி யுற்றால் ஃபிரஞ்சு அரங்குக்கு அனுப்பிய வீரர்களை அழைத்து, அவர்களுக்கு இப்படிச் சொல்லுவேன்: சிறுவர்களே, கடல் தாண்டி நீங்கள் செல்லுமுன், யுத்தமேயில்லாமல் செய்வ தற்கு நீங்கள் போர்புரியப் போகிறீர்கள் என்று நான் கூறி னேன்; அந்த வாக்கைக் காப்பற்ற என்னால் இயன்றதைச் செய்தேன். ஆனால் அந்த வாக்கைக் காபபாற்ற என்னால் முடியவில்லை என்று வெட்கித் தலைகுனிந்து மனமொடிந்து உங்களிடம் கூறவேண்டியவனாயிருக்கிறேன். உங்களுக்கு துரோகம் செய்யப்பட்டு விட்டது. நீங்கள் எதற்காகப் போர் புரிகிறீர்களோ அது கிட்டவில்லை. அமெரிக்க தரைப் படை, கடற்படையின் புகழ் இரவில் கண்ட கனவு மாதிரி யாகிவிட்டது.'

''இதற்குப் பழிவாங்கும் நோக்குடன் மற்றுமோர் சண் டையை ஆண்டவன் விளைவிக்கலாம். அதில் பல்லாயிரக்கணக் கான அமெரிக்கர் உயிர் துறக்க வேண்டி வரும். உலக மக் களின் சுதந்திரத்தைப் பெறுவதற்காக லட்சக்கணக்கில் மக் கள் உயிர்த்தியாகம் செய்ய வேண்டி வரும்.'' இவ்வாறு தீர்க்க தரிசனத்துடன் அவர் கூட்டத்தில் கூறினார்.

செப்டம்பர் 25-ஆம் தேதி ஜனாதிபதியும் அவரது நண் பர்களும் கொலராடோ (Colorado)விலுள்ள பியூப்லோ (Pueblo) வந்து சேர்ந்தனர். அச்சமயம் வில்ஸன் களைத்துச் சோர்ந்திருந்தார். அவர் இன்னமும் 22 நாட்கள் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. குறுக்கும் நெடுக்குமாக 8000 மைல் தூரம் செல்ல வேண்டியிருந்தது. முப்பத்தி யாறு இடங்களில் ஒவ்வொரு இடத்தில் குறைந்தது ஒரு மணி நேரம் பேச வேண்டியிருந்தது. 12 இடங்களில் அணிவகுப்பு களைப் பார்வையிட வேண்டியிருந்தது. கணக்கில்லாத இடங் களில் ரெயில் நிலையங்களில் தரிசனம் அளிக்க வேண்டி யிருந்தது.

இவ்வளவு அதிகமான நிகழ்ச்சிகளை ஜனாதிபதி கவனிக்க வேண்டியிருந்ததால், மூச்சுவிடக்கூட நேரமில்லாமலிருந்தது. வில்ஸன் மிகவும் களைத்துப் போயிருந்தாலும், அவருக்குக் கிடைத்த ஆதரவு நம்பிக்கை அளிப்பதாயிருந்தது. மத்ய, மேற்குப் பகுதியில் எதிர்பாராதவகையில், மக்கள் ஏராள மாகக் கூடினர். ஆனால் பசிபிக் கடற் கரையோரப் பகுதிகளில் ஆரவாரத்துடன் மக்கள் அவரை வரவேற்றனர்.

பியூப்லோவிலுள்ள புதிய மண்டபத்தில் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். ஜனாதிபதி மேடைமீதேறினார். மண் டபமே இடிந்து விழும்போல் பத்து நிமிஷ நேரத்திற்கு

ஜனங்கள் நின்று கொண்டு கரகோஷம் செய்தனர். இதற்குச் சில நிமிஷங்களுக்கு முன் தன்னால் பேச முடியுமோ என அவர் சந்தேகப்பட்டார். தாங்க முடியாத தலைவலி வாட்டிக் கொண்டிருந்தது. இவ்வளவு நோய்வாய்ப்பட்டிருக்கும் உணர்ச்சி அவருக்கு முன்பு எப்பொழுதும் இருந்ததில்லை: ஆனால் மக்களின் ஆர்வம் நிறைந்த உற்சாகத்தைப் பார்த்தார்; கேட்டார். முழுப்பிரசங்கம் செய்வதென்று உடனே முடிவு செய்தார். எஞ்சியிருந்த பலத்தை யெல்லாம் பயன்படுத்தி தமது நம்பிக்கை, உணர்ச்சி யாவற்றையும் கொட்டித் தீர்த்துவிட்டார்.

மூன்று மாதத்திற்கு முன் பாரிஸ் அருகிலுள்ள ஸுரெஸ்னெஸ் (Suresnes) ஸிலுள்ள அமெரிக்க வீரர் சவ அடக்கஸ்தலத்திற்கு வீரப்பதக்கங்கள் அளிப்பதற்காக விஜயம் செய்ததைக் குறிப்பிட்டு விட்டு, அங்கே கூடியிருந்தவர்களைக் கேட்டார். ''ஃபிரான்சில் புதையுண்டு கிடப்பவர்களுக்கு நாம் அளித்த வாக்குறுதி என்ன ஆவது? அமெரிக்காவின் வீரத்தைக் காட்டவோ, மற்றொரு யுத்தத்திற்கு நாம் தயார் என்று நிரூபிக்கவோ அங்கு அவர்கள் செல்லவில்லை. மீண்டும் இம்மாதிரி யுத்தம் நிகழாமல் இருக்கச் செய்வதற்கே அங்கு சென்றோம் என்று அவர்களிடம் கூறினோம்.''

ஃபிரான்சில் தங்களது மக்களை இழந்த தாய்மார்கள் அவரிடம் வந்து, அவர் கையைத் தூக்கி அதில் கண்ணீர் வடித்து, ''ஆண்டவன் உங்களைக் காக்கட்டும் ஜனாதிபதியே'' என்று கூறினர்:

''சகப் பிரஜைகளே, ஆண்டவன் என்னைக் காக்கட்டும் என்று ஏன் அவர்கள் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்? அவர்களுடைய பிள்ளைகள் இறந்து போவதற்கான நிலையை ஏற்படுத்தும்படி காங்கிரசுக்கு நான் சிபார்சு செய்தேன். அவர்கள் கடல்கடந்து செல்லுமாறு நான் உத்தரவிட்டேன். என் கைமீது அத்தாய்மார்கள் ஏன் கண்ணீர் சிந்த வேண்டும்? ஆண்டவன் அருள் எனக்குச் சுரக்குமாறு ஏன் அவர்கள் பிரார்த்திக்கவேண்டும்? யுத்தத்தில் மேலோட்டமான நோக்கங்களைவிட மகத்தானதோர் நலனுக்காக தங்கள் மக்கள் உயிர் துறந்ததாக அவர்கள் நம்புவதுதான் காரணம்.

''இந்த மகத்தான பிரச்சினையை சூழ்ந்திருந்த இருள் நீங்கிவிட்டது. இனி மக்கள் உண்மையை நேருக்கு நேர், தெளிவாகக் காண்பர். ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் தான் அமெரிக்க மக்கள் உற்சாகத்துடன் முன் வந்து உதவி புரிய வருவர். நீதியையும், சுதந்திரத்தையும் சமாதானத்தையும் காக்கவே அவர்கள் நிமிர்ந்து வருவார்கள். இந்த உண்மையை நாம் ஏற்றுக்கொண்டு விட்டோம். இதை ஆதரித்துச்



சொல்லுவோம். இந்த உண்மை நம் மூலம் உலகையே உய்விக்கப் போகிறது. இதுவரையில் 'உலகம் கண்டிராத அளவுக்கு அமைதியையும், சமாதானத்தையும் அடைந்து அநுபவிக்கப் போகிறோம்.''

வில்ஸன் பேசி முடிந்தவுடன், கணப்பொழுது, மண்டபத்தில் ஆழ்ந்த அமைதி நிலவியது. உடனே எல்லோர் காதுகளும் செவிடுபடும்படி கரகோஷம் கிளம்பியது. அவரது சுற்றுப்பிரயாணத்திலேயே இம்மாதிரி ஆரவாரத்தை எங்கும் கேட்கவில்லை. அங்கு கூடியிருந்தவர்களில் யாரும் அவருடைய பிரசங்கத்தின் முடிவை மட்டுமல்ல, அவரது பொதுவாழ்வின் முடிவையும் கைதட்டி ஆரவாரிக்கின்றனர் என்பதை அறிந்திருக்கமாட்டார்கள்.

அன்றிரவு தூக்கமின்மையும், தலைவலியும் ஜனாதிபதியை மீண்டும் வாட்டின. அவருடைய வைத்தியர்கள் அஞ்சியபடி அவரது உடல்நிலை மோசமாகிவிட்டது. விசிடா (Wichita) விற்கு ரயில் போய்ச் சேருவதற்குள் பிரயாணத் திட்டத்தின் பிற்பகுதி ரத்து செய்யப்பட்டது. இப்படிச் செய்யவேண்டாம் என அவர் மன்றாடிக் கேட்டுக் கொண்டும் அவர் உடல் நிலையை உத்தேசித்து ரத்து செய்யப்பட்டது. அவரது இயக்கம் வெற்றி பெற்றுவிட்டது, இனி சமாதான உடன்படிக்கைக்கு எவ்வித ஆபத்துமில்லை' யென்று அவருக்கு உறுதி கூறப்பட்டது.

ஜனாதிபதியின் உடல் நிலை மோசமான பின், உடன்பாட்டை அமெரிக்கா அங்கீகரிக்கும் என்றோ, லீக்கில் நீடித்து அங்கம் வகிக்கும் என்றோ, பிற ஜனநாயக நாடுகளுடன் சேர்ந்து மற்றுமோர் போர் நிகழாமல் தவிர்க்கும் என்றோ உள்ள நம்பிக்கையும் மறைந்து விட்டது என்பதை அச்சமயம் யாரும் அறியார். ஆனால் அமெரிக்கா தனது வாக்குறுதியை மீறி மீண்டும் தனித்திலங்குமானால் கடவுள் நமக்கு தண்டனையளிக்கும் முறையில் மற்றுமோர் யுத்தத்தை விளைவிப்பார் என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

* * * *

1920 மார்ச் 19-ஆம் தேதி செனட் சபையில் சமாதான உடன்படிக்கை இறுதியாக தோல்வியுற்றது. செனடர் லாட்ஜ் கூறிய திருத்தங்களுடன் உடன்படிக்கையை ஆதரிக்க வேண்டும் எனும் தீர்மானத்தின் பேரில் வோட் எடுக்கப்பட்டது. 35 பேர் எதிராகவும், 49 பேர் சாதகமாகவும் வோட்டுச் செய்தும் உடன்படிக்கை தோற்றது. சட்டப்படி ஒரு தீர்மானம் நிறைவேறுவதற்குத் தேவையாயிருந்த மூன்றில்

இரண்டு பங்கு வோட்டுகளுக்கு ஏழு வோட்டுகள் குறைவாகவே கிடைத்தன.

உடல் நிலை மோசமாகிவிட்ட வில்சன், போராட்டம் நீடித்து நடக்கும் என்றும், 1920-ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசாரம், உடன்பாடு, லீக் இரண்டும் பற்றிய பொது ஜன வாக்கெடுப்பாயிருக்கும் என்றும் நம்பியிருந்தார். ஜன நாயகக் கட்சி அபேட்சகர் ஜேம்ஸ் எம். காக்ஸ் (Cox) தம்மை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தால் கூடிய சீக்கிரத்தில் அமெரிக்கா லீக்கில் சேருவதற்குப் பாடுபடுவதாக வாக்களித்தார்.

காக்ஸுடன் உப ஜனாதிபதி பதவிக்கு இளைஞர் ஃபிராங்லின் டி. ரூஸ்வெல்ட் (Franklin D. Roosevelt) போட்டி போட்டார். அவர், 1920 ஆகஸ்ட் 9-ஆம் தேதி ஹைட்பார்க்கில் பேசினர். ''எப்படி ஒரு லட்சியத்தையொட்டி நாடு யுத்தத்தில் ஈடுபட்டதோ, அவ்வாறே அந்த லட்சியம் அழியாமல் பசுமையாக இருக்கும் எனும் உறுதியுடன் அது யுத்தத்திலிருந்து மீண்டு வந்திருக்கிறது. தரையிலும், கடலிலும் நாம் அடைந்த ஜெயம் பாதி வெற்றியேயாகும். இதோடு நாம் மற்றொன்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மீண்டும் யுத்தம் நிகழலாகாது.''

வோட்டெடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன் ஒரு சிறப்பு வாய்ந்த தஸ்தாவேஜு வெளியாயிற்று. செல்வாக்கு மிக்க 31 அமெரிக்கர் அதில் கையெழுத்திட்டிருந்தனர். இவர்கள் பெரிதும் சர்வதேச மனப்பான்மை வாய்ந்த குடியரசுக் கட்சியினர். எலிஹூ ரூட் (Elihu Root), சார்லஸ் இவான்ஸ் ஹியூஸ் (Charles Evans Hughes), வில்லியம் ஹோவர்டு டாஃப்ட் (William Howard Taft) முதலியவர்களும் இதில் சேர்ந்தவர்கள். குடியரசுக் கட்சியினர் ஜெயித்தால் திருத்தியமைக்கப்பட்ட லீக்கில் அமெரிக்கா சேரும் எனும் நம்பிக்கையை இவர்கள் யாதாஸ்தில் குறிப்பிட்டிருந்தனர்.

வாரன் ஜி. ஹார்டிங் (Warren G. Harding) என்பவர் ஜனாதிபதி பதவிக்கு, குடியரசுக் கட்சியின் அபேட்சகர். தீரச் செயல் ஆர்வம் காட்டுவது அப்போதைய நிலைக்கு அவ்வளவு தேவையில்லையென இவர் கருதினர். இதே தோரணையில் மக்கள் மனத்தைக் கவர முயற்சித்து வந்தார். ''அமெரிக்காவிற்கு தற்போது என்ன தேவை? ஆவேச அலங்காரப் பேச்சல்ல, கஷ்ட நிவாரணமே. கைகண்ட மருந்துகளைத் தேடுவதல்ல, அமைதியை நிலைநாட்டுவது; சோதனை செய்வதில் பொழுது போக்குவதல்ல மன அமைதி பெறுவது; சர்வதேச விஷயங்களில் மூழ்கிக் கிடப்ப



தல்ல, வெற்றிகரமான தேசிய உரம் பெற்று நிலையாக வாழ்வது.'' இவ்வாறு ஹார்டிங் பேசினர்.

அடுத்த பத்து ஆண்டுகளுக்கு அமெரிக்கா ஹார்டிங் விரும்பிய அமைதியில் மூழ்கி இருந்தது; ஆனால் ஏமாற்றமடைந்த உலகம் அமெரிக்காவின் உதவியின்றித் தன் போக்கில் போய்க்கொண்டிருந்தது.

பின் நோக்கிப் பார்த்தால், வில்ஸனும் தவறு செய்தார் என்றே கூற வேண்டும். அவர் வளைந்து கொடுக்காத முறையில் செயல்புரிந்திருக்கலாகாது. பாரிஸில் சமரஸம் செய்தது போல் வாஷிங்டனில் இணங்க மறுத்ததனால் அவர் சில்லறைக் குறை கூறினவர்களின் ஆதரவை இழந்தார். இவர்களுடைய குறைகள் தீரும் முறையில் சமரஸம் செய்திருக்கலாம்.

வில்ஸன் இலட்சிய ஆர்வமுள்ளவர். ஆனால் அவருடைய இலட்சியத்திற்கு திட்டமான குறிக்கோள்களை அவர் வகுக்கவில்லை. இவ்வாறு சில விமர்சகர்கள் கூறினர். இந்தக் குற்றச்சாட்டு ஓரளவு நியாயமானது என்பதை மறுக்க முடியாது. இந்தப் புரட்சிகரமான காலத்தில், அர்த்தபுஷ்டியுள்ள தார்மிக நோக்குடைய அயல் நாட்டு விவகாரக் கொள்கை என்றால், அது அநுபவ சாத்யமற்றது, பிரத்தியட்ச நிலைக்கு ஒவ்வாதது என்று முடிவு செய்வதும் தவறு.

மற்றும் சிலர் வில்ஸனின் சுய நிர்ணயக் கொள்கையைக் குறை கூறினர்கள். சுய நிர்ணயக் கொள்கையைப் பின்பற்றியதனால் ஒரு குறுகிய தேசிய உணர்ச்சி வளர்ந்தது. பொருளாதார, அரசியல் துறைகளில் நன்கு வாழ்க்கை நடத்திய பெரிய நாடுகள் தேசிய உணர்ச்சி வயப்பட்டு, பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்ளும் சிறு ராஜ்யங்களாகப் பிரிந்தன. இதுதான் இவர்கள் வில்ஸன் மீது சுமத்திய குற்றம்.

இம்மாதிரி விஷயங்களைப் பற்றி பண்டிதர்கள் விவாதித்துக் கொண்டுதான் இருப்பார்கள். குறிப்பாக வில்ஸன் தோல்வியடையாமல், எப்படித் தவிர்த்திருக்கலாம் என்று விவாதம் செய்வார்கள். ஆனால் வில்ஸனின் முக்கியமான இரண்டு சாதனைகளைப் பிற்காலத்தவர் மறக்கமாட்டார்கள்.

லீக்கை ஆரம்பிப்பது பற்றி, அவர் முயற்சி செய்தது அவருடைய முதல் சாதனை என்பதை ஏற்கனவே கவனித்திருக்கிறோம். யுத்தம் நிகழாமலிருப்பதற்கு உலகம் வகை செய்து கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை அவர் உணர்ந்தார். உலகத்தில் சுதந்திர சமுதாயம் தோன்ற வேண்டும் என்பது பற்றி அவர் விளக்கமாகப் பேசியது அவருடைய இரண்டாவது சாதனை.

அமெரிக்கர் அல்லாத உலகத்தாருக்கு வளர்ச்சியடையக்
கூடிய ஸ்தாபனமாக லீக்கை அவர் விட்டுச் சென்றார்.
அமெரிக்கா அதில் சேராததனால் சங்கடம் ஏற்பட்டாலும்,
இரு யுத்தங்களுக்கிடையே லீக் பல ஆக்க வேலைகள் செய்
திருக்கின்றது. லீக்கை ஸ்தாபிப்பதற்காக அவர் நடத்திய
போராட்டமே அமெரிக்கருக்கு அவர் அளித்த பொக்கிஷம்.
இதை அடுத்த தலைமுறையினர் நன்கு உணர்ந்தனர்

இருபதாவது நூற்றாண்டு தொடக்கத்தில் அமெரிக்கா
சாம்ராஜ்ய ஆட்சி முறையுடன் சற்று விளையாடிற்று. ஒரு
உலக யுத்தத்தினால் ஏற்பட்ட மனவேதனைக்கிடையே, அமெ
ரிக்க ஜனநாயகத்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற பிரதிநிதி,
யுத்தம் நிகழாமல் செய்யக்கூடிய ஜனநாயக உலக ஸ்தாபனம்
அமைப்பதற்கான யோசனை கூறினார். இது நிகழ்வதற்கான
ஒத்திகை அமெரிக்க வரலாற்றில் செய்யப்பட்டு வந்திருக்
கிறது. தங்கள் உயிர் வாழ்வுக்கு இம்மாதிரி ஸ்தாபனம் அத்
தியாவசியம் வேண்டும் என உலகத்தோர் கருதி வந்தனர்.

அமெரிக்கா மீண்டும் தனித்து வாழத் தொடங்கியதும்
ஓரளவு அதன் புகழ் இரவில் கண்ட கனவு போல் மறைந்
தது. பழைய சிறப்பு மீண்டும் வராது போலிருந்தது. ஆனால்
தமது அநுபவத்திலிருந்து கடைந்தெடுத்து, உலகத்தையே
மாற்றவல்ல புரட்சி சிந்தாந்தங்கள், வில்ஸன் தோல்வியுடன்
மறைந்து போகத் தக்கவையல்ல.

விமர்சகர்கள் வில்ஸனைப் பற்றி என்ன கூறினாலும் மக்
களை மாற்றவல்ல சக்தி கருத்துக்களுக்கு உண்டு என்று அவர்
நிரூபித்தார். உலகெங்கும் பூரண ஜனநாயகப் புரட்சியை
விளைவிப்பதில் அமெரிக்கத் தலைவர்களுக்குள்ள அபாரமான
உறுதியை அவர் யாரும் உணரும்படிச் செய்தார். அவருடைய
முதல் ஆட்சி காலத்தில் தமது புது சுதந்திரம் எனும் ஏற்
பாட்டின் மூலம் சில சமூக நல திட்டங்களை அமுல் செய்
தார். இந்த நாட்களிலிருந்து அவரது பொது வாழ்க்கை
முடிவுறும் வரையில் மனிதனை ஊக்குவிக்கும் சக்தி அரசிய
லுக்கு உண்டு என்பதை அவர் உணர்ந்திருந்தார். அமெரிக்
காவிற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே பயன்படத்தக்க அர்த்த
புஷ்டியுள்ள ஜனநாயக லட்சியங்களைக் கடைப்பிடித்துச் செய
லாற்றி வந்தார்.

உலக ஸ்தாபனம், உலக ஜனநாயகம் இரண்டுமே வில்
ஸன் விட்டுவிட்டுப் போன தனம். இவைகள் சீக்கிரத்தில்
மக்களை ஆகர்ஷிக்கும் பிரச்னைகளாயின. உலகத்தைத் தனியே
விட்டு ஒதுங்கி நின்றால் இரண்டாவது யுத்தம் நிகழும் என்ற
வில்ஸன் தீர்க்க தரிசனத்துடன் கூறினார். அந்த யுத்தம்
அடுத்த இருபது ஆண்டுகளுக்குள் நிகழ்ந்தது. வில்ஸனின்



பொது வாழ்வின் முடிவு காலத்தில் நடந்த மகத்தான விவா
தம் மீண்டும் தொடங்கிற்று.

ராணுவத் தளங்கள் பெற்று, அதற்குப் பதிலாக
நாம் சண்டைக் கப்பல்கள் அளிப்பது, பிற நாடு
களுக்குக் கடன் உதவி பற்றிய சட்டம் *(Lend Lease Act)
அட்லாண்டிக் சாஸனம் (Atlantic Charter)† போன்ற நட
வடிக்கைகள் மூலம் பழைய முடிவுகள் மாற்றப்பட்டதை நாம்
அறிவோம். பெர்ல் துறைமுகத்தில் குண்டு விழுந்ததும், உலக
விவகாரங்களில் நம் பொறுப்புபற்றி இருந்த கொஞ்சநஞ்ச
சந்தேகமும் மறைந்தது. ரூஸ்வெல்டின் நான்கு சுதந்திரங்கள்
(Four Freedoms) ‡வில்ஸன் பிரகடனம் செய்த கொள்கைகளை
அடிப்படையாகக் கொண்டவை. தற்போது அமெரிக்கர்களில்
பெருவாரியானவர்களின் கொள்கைகளுக்கு ரூஸ்வெல்ட் உருக்
கொடுத்தார்.

இரண்டாவது யுத்தம் முடிந்தது. முன்பு வில்ஸன்
கூறிய யோசனையை நிராகரித்த அமெரிக்கா ஏதாவது ஒரு
வகையான சர்வதேச சங்கத்தில் சேர வேண்டியது எனும்
முடிவுக்கு வந்தது. அமெரிக்காவே ஐ.நா.வை அமைக்க
முன் நின்று வேலை செய்தது. அதன் சாஸனம் செனட்டின்
அங்கீகாரம் பெற்றது. இரண்டே பேர்தான் எதிரிடையாக
வோட்டுச் செய்தனர். அதன் தலைமைக் காரியாலயமும்
அமெரிக்காவிலேயே அமைந்தது.

---

* (1) கடன் உதவிச் சட்டம்:—(Lend Lease Act) இது ஜனாதிபதி ரூஸ்
வெல்ட் காலத்தில் 1941-இல் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, உணவு,
யந்திரங்கள், சேவை உள்பட எல்லா யுத்த உதவிகளும் செய்வது. எந்த நாடு
களுக்கு உதவுவதால் தமது பாதுகாப்பை பலப்படுத்திக்கொள்ளலாமோ
அவைகளுக்கு மட்டுமே இவ்வுதவிகள் உரியவை, உதவி பெறும் தகுதியை
ஜனாதிபதியே நிர்ணயிப்பார்.

† (2) அட்லாண்டிக் சாஸனம்:—(Atlantic Charter) 14-8-1949-ல் அக்கால
பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும், அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டும் செய்து
கொண்ட உடன்பாடு இது. இதன்படி நாடு பிடித்தல் கூடாது. சம்பந்தப்
பட்ட மக்கள் சம்மதமின்றி எந்நாட்டின் எல்லையையும் அகற்றலாகாது. சுய
ஆட்சி பறிக்கப்பட்ட நாடுகள் அதைப் பெற உதவவேண்டும். எல்லா நாடு
களுக்கும் உலகத் தளப் பொருள்கள், வர்த்தக வசதி பெற உரிமையுண்டு.
சீர்திருந்திய தொழில் தரமும் சமூகப் பாதுகாப்பும் எல்லா நாடுகளும் அமைத்
துக்கொள்ள வேண்டும். எல்லோருக்கும் சமாதானமும், அச்சமின்றி, வறுமை
யின்றி வாழும் உரிமையும், உத்தரவாதம் செய்தல், கடல் போக்குவரத்தில்
சம சுதந்திரம், பலாத்காரப் பிரயோகத்தைக் கைவிடுதல்.

‡ (8) நான்கு சுதந்திரங்கள்:—(Four Freedoms) கடன், உதவிச் சட்டம்
நிறைவேறுவதற்காக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் 9-1-1941இல் காங்கிரஸுக்கு
அனுப்பிய ஸ்ரீமுகத்தில் இந்த நான்கு சுதந்திரங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்.

1. பேசும், அபிப்பிராயத்தை வெளியிடும் சுதந்திரம்.
2. வழிபடும் சுதந்திரம்.
8. வறுமையால் வாடாமலிருக்கும் சுதந்திரம்,
4. அச்சமின்றி வாழும் சுதந்திரம்.

அமெரிக்காவை உண்மையிலேயே வில்ஸனின் கருத்துக்கள் ஆட்கொண்டுவிட்டனவா? புதிதாகக் கிடைத்த சக்தியின் சாதனங்களை அமெரிக்கா எப்படிப் பயன்படுத்தப் போகிறது? புதிய சர்வதேச ஸ்தாபனத்தின் மூலம் எவ்வித லட்சியங்களுக்காகப் பாடுபடும்? இந்தக் கேள்விகளுக்கு முடிவு காண உலகம் காத்திருந்தது.

தாம் வகுத்த லீக் மாதிரியே ஐ.நா.வும் பலதரப்பட்ட கொள்கைகளை—அவைகள் உயர்வானவையாயினும் சரி, குறுகிய நோக்குடையதா யிருந்தாலும் சரி,—நிறைவேற்றுவதற்கான சோதனைக்கூடமாகவே இருக்கும் என்பதைப் பிறரைவிட வில்ஸன் நன்கு அறிந்திருப்பார். அச்சமயம் உலக மக்களை வாட்டி வந்த முக்கியமான பிரச்னைகளைத் தீர்ப்பதில், ஐ.நா.வும், அதன் உறுப்பு நாடுகளும் கவனம் செலுத்தவேண்டி வரும். ''எங்கும் அமைதியின்மையும், கலக்கமும் நிலவுவதற்கு ஏதாவது உண்மைக் காரணம் இருக்க வேண்டும். அதற்குக் காரணத்தை மேல்பூச்சான அரசியலிலோ, பொருளாதாரத்துறைத் தவறுகளிலோ காண முடியாது. அதற்குக் காரணம் நமது இக்கால ஆன்மிக வாழ்வின் அடித்தளமாக இருக்கலாம். இம்மாதிரி நிலைதான் புரட்சியை விளைவிக்கிறது.'' இவ்வாறு 1923இல் தமது கடைசிக் கட்டுரையில் வில்ஸன் எழுதினார்.

அமெரிக்காவிலும், பிற நாடுகளிலும் அவர் காலத்திய பொருளாதார முறைகளை அவர் ஆராய்ந்து பார்த்தார். ''இந்த அமைதியின்மைக்கும் கலக்கத்திற்கும் காரணம் முழுவதையும் கிளர்ச்சி செய்பவர்கள்மீது சுமத்திவிடலாகாது'' என்று அவர் கூறினார்.

''அர்த்தமற்ற புரட்சிகள் நிகழாமல் உலகத்தைப் பாதுகாக்க ஜனநாயகம் இன்னம் வழி காணவில்லை. இதற்கு முக்கியமான பரிகாரம் நமது நாகரிகத்தைக் காப்பாற்றுவது தான். இதுதான் ஜனநாயகம் உடனடியாக நிர்ப்பந்தமாகச் செய்யவேண்டிய காரியம். நான் இதுவரையில் செய்தது எல்லாம் வீணாகாமல் இருக்கவேண்டுமெனில் இதைச் செய்தே யாக வேண்டும். அதுவும் அமெரிக்காவே செய்ய முன் வர வேண்டும்.

''புரட்சி நிகழாமல் செய்வதற்கான வழி தெளிவாகத் தெரிகிறது. நாம் அநுதாபம் காட்ட வேண்டும். உதவி புரியும் ஆற்றல் காட்ட வேண்டும். உலக மக்கள் யாவருடைய நலன், இன்ப வாழ்க்கை, திருப்தியாக வாழ்தல் முதலியவற்றைப் பெருக்க சுயநலத்தைத் துறந்து பணி புரிய முன்வரவேண்டும்.'' இவ்வாறு தாம் இறக்கும்தறுவாயில் வில்ஸன் எழுதினார்.



உலக ஸ்தாபனம் அமைக்க வேண்டும் எனும் வில்ஸன் கனவை ஓரளவு பூர்த்தி செய்துவிட்டோம். ஆனால் வில்ஸன் விரும்பியபடி அந்த ஸ்தாபனத்தின் மூலம் ஜனநாயகச் சிறப்பு வாய்ந்த உலக உத்தாரணக் கொள்கைகள் வகுப்பதற்கான உறுதியையும் நம்பிக்கையையும் அமெரிக்கா பெறுமா?

இந்த உறுதியும் சக்தியும் இருந்தால் தாம், நாட்டின் தலைவராயிருக்கையில் வில்ஸன் கூறிய உண்மையை அமெரிக்கர் உறுதிப்படுத்த முடியும். ''நம்மைப்போல் செல்வம் படைத்த நாடுகள் இருக்கின்றன. நம் போன்ற சக்தி வாய்ந்த நாடுகளும் இருந்திருக்கின்றன. நம்போல் உணர்ச்சிப் பெருக்குள்ள நாடுகளும் இருந்திருக்கின்றன. ஆனால் நமது நலனுக்காக மட்டும் அல்லாமல், உலகத்தை உய்விக்கவே இந்த நாட்டைத் தோற்றுவித்தோம் என்பதை மறந்துவிட மாட்டோம் என்று நம்புகிறேன்.''

## பகுதி 7

# சோதனைபற்றிய மதிப்பீடு

உங்கள் பிரம்மாண்ட நிலப்பரப்பைக் கண்டு நான் அசந்துவிடவில்லை. உங்கள் பொருள் வளமும் என்னை மயக்கிவிடவில்லை. நிரம்ப விஸ்தீரணமிருப்பது பெருமைக்குரியதல்ல. நிலப்பரப்பிலிருக்கும் மக்கள் கூட்டம் ஒரு தேசிய இனமாகிவிடாது. ஒரு நாட்டிற்கு உயர்வளிப்பது யாது? அதன் எதிர்கால கதியைக் கண்டு பிறரை நடுக்குறச் செய்வது யாது? இந்த நிலப்பரப்பு, பொருள் வளம் முதலியவற்றைக்கொண்டு ஒரு நாடு எதைச் சாதிக்கப்போகிறது என்பதேயாகும்.

**தாமஸ் ஹக்ஸ்லி**
1876இல் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் பேசியது.

*அத்தியாயம்-31*

# புதிய நம்பிக்கைகளும் பழங்காலமும்

இந்தப் புத்தகத்தின் சாராம்சத்தை எளிய முறையில் கூறிவிடலாம். ஐரோப்பா சுயமாக விளைவித்துக்கொண்ட தொல்லைகளால் சென்ற இரு தலைமுறைகளாகக் கஷ்டப்பட்டது. உலக விவகாரங்களில் தலையாய பங்குகொள்ளும் நிலையை அமெரிக்கா அடைந்தது. இதே சமயத்தில், உலகத்தின் பிற்பாகங்களில் பல்வேறு புரட்சிகள் நிகழ்ந்தன. இவைகள் மிகப் பலம் வாய்ந்த சக்திகளால் விளைந்தன. ஆனால் இந்தப் புரட்சிகளின் முடிவு என்னவாகும் என்பது தெரியவில்லை. இந்தப் புரட்சிக்கும் அமெரிக்க புரட்சிக்கும் தொடர்பு உண்டு.

பத்தே ஆண்டுகளில் 1911-லிருந்து 1921-க்குள் லெனின், ஸன்யாட் ஸென், காந்தி ஆகிய மூவரும், சோம்பிக்கிடந்த பலகோடி மக்களை விழிப்புறச் செய்தனர். ரஷ்யாவைப் பற்றி மேலோட்டமாகத் தெரிந்து கொண்டோம். அங்கே 'ஜார்' ஆட்சியின்கீழ் மக்கள், அறியாமை, வறுமை, கொடுங்கோன்மை முதலியவைகளால் அல்லலுற்றனர். ஆகையால், லெனின் தமது போர்த்துடிப்பு வாய்ந்த புதிய மார்க்ஸியத்தின் மூலம் அந்நாட்டின்மீது கடுமையான ஆதிக்கம் செலுத்துவது சாத்தியமாயிற்று. ஈவிரக்கமின்மை, திறமையான ஸ்தாபனக் கட்டுப்பாடு, தியாக ஆர்வம் எல்லாம் சேர்ந்ததனால் தான் நாற்பது ஆண்டுகளுக்குள் சோவியத் அரசாங்கம் அந்த நாட்டைச் சக்தி வாய்ந்ததாகச் செய்து, அதன் மதிப்பு உயரச் செய்தது. இறுதியில் உலகத்தில் இரண்டாவது தொழில் வள நாடாகி மேற்கத்திய நாகரிகத்திற்குச் சவால் விடும் நிலைக்கும் வந்துவிட்டது.

டெய்பிங் கலகப் படிப்பினையைச் சீனா மறக்கவில்லை. அந்தக் கலகத் திட்டத்தின் சில அம்சங்களை ஸன் யாட் ஸென் நிதானமாகக் கையாண்டு வந்தார். இறுதியில் இதே அம்சங்களை மா சே துங் தலைமையில் புது முறையில் கம்யூனிஸ்டுகள் நன்கு பயன்படுத்தினர். கஷ்டப்பட்டு உழைக்கும் ஏராள

மான ஜனங்கள் உள்ள பரந்த சீனா இன்று ரஷ்யாவைப் பின் பற்றி வெற்றி பெற முயற்சித்து வருகிறது.

காந்தியப் புரட்சியையும் நாம் ஆராய்ந்து பார்த்தோம். அதன் மூலம் 45 கோடி இந்தியரும் பாகிஸ்தானியரும் விடுதலை பெற்றனர். அந்தப் புரட்சியின் விளைவாக இந்தியாவில் புதிய ஜனநாயக அரசாங்கம் உருவகப்பட்டு வருகிறது. கம்யூனிஸ்டுகளின் மோசடியும், பிடிவாதமான கொள்கைப் பற்றும் இந்தியப் புரட்சியில் இல்லாததனால், இது பெரிதும் சிக்கல் வாய்ந்ததாயிருக்கிறது. ஆகையினால் அதைப் பிறர் அவ்வளவாக நன்கு புரிந்துகொள்ளவில்லை.

ஆசியாவில் பிற இடங்களிலும், ஆஃப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் கூட மாறுதல் கோரும் புரட்சி வேகம் சற்றுக் கூடுதலான உணர்ச்சி வேகத்தை விளைவித்திருக்கிறது. உலகத்தோர் கவனத்திலிருக்கும் பல பிரச்னைகள் புரட்சித் தன்மை வாய்ந்தவையாகவே இருக்கின்றன.

பாண்டுங் மகாநாட்டு மேடையில் ஆசிய, ஆஃப்பிரிக்கத் தலைவர்கள் மீண்டும், மீண்டும் முக்கியமான நான்கு புரட்சிகரமான கோரிக்கைகளையே வற்புறுத்திப் பேசினர். தேசியம் வேண்டும், அந்நிய ஆதிக்கம் வேண்டாம், மனித கண்ணியம் மதிக்கப்பட வேண்டும், இன-ஜாதி வேற்றுமைகள் கூடா, விரைவாகப் பொருளாதார அபிவிருத்தி அடைய வேண்டும், அரை உயிராயுள்ள நிலப்பிரபுத்துவம் ஒழிய வேண்டும். ஏனெனில் அந்த முறை மூலம் வறுமையும், துயரமும், பட்டினியும் நீடிக்கின்றன. சமாதானம் வேண்டும். யுத்தப் பயம் ஒழிய வேண்டும்.

எந்த நிலையைப் பயன்படுத்திக் கம்யூனிஸ்டுகள் புரட்சி விளைவிக்கின்றனரோ, அதே காரணங்களைக் கொண்டே காலனி ஆட்சி எதிர்ப்புப் புரட்சிகளும் தொடங்கப்படுகின்றன என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். இந்த அடிப்படையான காரணத்தை நாம் பன்முறை பார்த்திருக்கிறோம். ஆகையால், அதை நாம் புரிந்துகொள்ள முடியும். மனிதர் உள்ளத்தில் நிலவும் நம்பிக்கையைக் கொண்டே புரட்சிகள் விளைவிக்கப்படுகின்றன.

மனித குலத்தில் பெருவாரியானவர்கள் ஏழைகளாயிருந்து வந்திருக்கின்றனர்; கொடுமைப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றனர். இதைத் தவிர்ப்பதற்கான மந்திரச்சொல் தோன்றி விட்டது. புரட்சி காட்டுத்தீ போல் பரவி வருகிறது. ஆகையால் வறுமையிலும் அநீதியிலும் சிக்கித் தவிப்பது தவிர வழியில்லையென்று மக்கள் இருக்கவேண்டாம்.

உலகத்தின் தொலைவான பகுதிகளில் கூட, சரித்திரம் கண்டிராத அளவுக்கு, செல்வம் கொழிக்கும் என்று மக்கள் எதிர்பார்க்க இடமிருக்கிறது. தங்கள் வாழ்நாளில் இந்த



செல்வச் செழிப்பை அடையும் நோக்கத்துடன், நம்பிக்கை அளிக்கவல்ல கொள்கையை, அந்தக் கொள்கையை ஆதரிக்கும் கட்சியை, அந்தக் கட்சியை நடத்தும் தலைவர்களைப் பின்பற்றத் தயாராயிருக்கின்றனர்.

ரஷ்யாவையும், சீனாவையும் ஆள்பவர்கள் உலக கம்யூனிஸ்ட் கட்சியைச் சாமர்த்தியமாக நடத்தும் ஆற்றலுள்ளவர்கள். இந்தப் புரட்சிகரமான சந்தேகங்களை கம்யூனிஸமே தீர்க்க முடியும் என்று அவர்கள் பிரசாரம் செய்கின்றனர். இந்தத் தந்திரம் பலித்தால், அதன் மூலம் உலகக் கொந்தளிப்பைப் பயன்படுத்தி, ஒரு தலைமைப்பீடம் முன் நின்று நடத்தக் கூடிய உலகப் புரட்சியாக அதை மாற்ற விரும்புகின்றனர். தங்கள் நோக்கம் ஈடேறுவதற்கு ஒரு சமயம் பலாத்காரத்தையும், மற்றொரு சமயம் நயமாகப் பேசி மயக்குவதையும் தங்கள் சாதனங்களாக இவர்கள் பயன்படுத்துவர் என்று எதிர்பார்க்கலாம். இந்தப் போராட்ட முறையின் மூலம் அட்லாண்டிக் நாடுகளிடையே பிளவு ஏற்படுத்தி, அமெரிக்காவுக்கு உலகத் தொடர்பின்றிப் பிரித்துவிடலாம் என்று எதிர்பார்க்கின்றனர்.

கம்யூனிஸத்தைப் பரவச் செய்வதையும், அதற்காகக் கலகம் விளைவிப்பதையும் எப்படித் தவிர்ப்பது என்றே மேற்கத்தி நாட்டினர் கவலைப்படுகின்றனர். இந்த முயற்சியின் விளைவாகத் தங்கள் நாடுகள் அணுகுண்டுத் தாக்குதலுக்குட்படலாகாது என்றும் கவலை கொள்கின்றனர்.

கம்யூனிஸம் தனது இயல்பை மாற்றிக்கொள்ள வேண்டும் என நீதி ஆர்வத்துடன் நாம் வற்புறுத்துகிறோம். ஆனால் எந்தக் குறைகளுக்குப் பரிகாரம் காணுவதாகக் கம்யூனிஸம் கூறுகிறதோ அவைகளைத் தீர்ப்பதற்கு நாம் முனைவதில்லை. நம்முடைய இந்தப் போக்கு பசித்தவனுக்கு உணவுக்குப் பதில் கல்லை அளிப்பதற்கொப்பாகும்.

உலகக் குறைகள் நீங்குவதற்கான வழி காண்பதில் நாம் ஈடுபட விரும்பினால், நமது பழைய தனித்தியங்கும் கொள்கையைக் கைவிட வேண்டும். இந்த விஷயத்தில் அதிருஷ்டவசமாக பெருவாரியான அமெரிக்கர் ஓர் உண்மையை உணர்ந்து விட்டனர். உலகமெங்கும் நலன் விளைவிக்கும் கொள்கைகளை வகுத்துப் பின்பற்றுவதில் எவ்வளவு ஆபத்து இருப்பினும், இரண்டாவது உலக யுத்தத்தில் நாம் அறிந்துகொண்ட கடுமையான படிப்பினைகள் மூலம் தனித்து நிற்பது தவறு என்பதைப் புரிந்துகொண்டு விட்டோம்.

விஞ்ஞானத்தின் விளைவாக, மற்றுமோர் விஷயத்தையும் நாம் அறிந்து கொண்டு விட்டோம். நூறு ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா இருந்ததைவிட இன்று, உலகம் சிறிதாகி விட்டது. உலகத்தில் மற்றொரு கோடியில் நிகழும் சம்ப

வங்கள் பற்றிய செய்தி அறிவிப்புகளை மணிக்கொரு தரம்
ரேடியோ ரசிகர்கள் இருந்தவிடத்திலிருந்தே கேட்கலாம்.
நமது நாட்டைத் தோற்றுவித்தவர்கள் நியூயார்க்கிலிருந்து
பாஸ்டன் செல்வதற்கான கால அளவில் ஒரு சிறு பகுதியில்,
ரேடியோ சம்பவங்கள் நிகழ்ந்த இடத்திற்கு இப்போது
பறந்து போய்விடலாம். இந்த உண்மைகளின் விளைவுகளை
பெருவாரியான அமெரிக்கர் ஒப்புக்கொள்கின்றனர். இந்த
நிலையில் பிற மக்களின் ஆசைகள், அச்சங்கள், தேவைகள்
முதலியனவற்றை அலட்சியம் செய்துவிட்டுத் தனித்து நின்று
வாழலாம் என்று நினைப்பது மாயைக்குட்படுவதாகும்.
இப்படித் தனித்து நிற்பது நாசத்தை விரும்பி அடைவதாகும்.
உலக ஜனத்தொகையில் ஐந்து சதவிகிதத்தினர் அமெ
ரிக்காவில் வசிக்கின்றனர். ஆனால் இவர்கள் உலக மூலப்
பொருள்களில் சுமார் ஐம்பது சதத்தைப் பயன்படுத்துகின்
றனர். பாலே (Paley) என்பவர் ஜனாதிபதியிடம் சமர்ப்
பித்த அறிக்கைப்படி 1952-இல் அமெரிக்கா உற்பத்தி செய்
ததைவிட 9 சதம் கூடுதலான மூலப் பொருள்களைப் பயன்
படுத்தியதாகத் தெரிகிறது. தொழிலுக்கும், பாதுகாப்புக்
கும் வேண்டிய 33 முக்கியமான தாதுப்பொருள்களில் 22-இல்
நமக்குப் பற்றாக்குறை இருந்தது. தென் அமெரிக்காவி
லுள்ள பொருள்களைத் தங்குதடையின்றி அடையும் வசதி
நமக்கிருந்தும், பொருளாதார வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்
கும் அவசியமான மூலப்பொருள்களுக்கு நாம் ஆஃப்பிரிக்கா,
ஆசியா உதவியை நாடி நிற்கவேண்டியிருக்கிறது. உதாரண
மாக குரோம் தோல், தகரம், கோபால்ட் துத்தநாகம்
போன்ற உலோகம், மாங்கனீஸ், பாதரசம், உரேனியம்,
ஆஸ்பெஸ்டோஸ், கிராபைட், டங்ஸ்டன் முதலியவைகளைக்
குறிப்பிடலாம்.

நமது பொருளாதார வளர்ச்சியின் போக்கிலிருந்து
1975-க்குள் நமது தொழில் வளர்ச்சிக்கான தளப்பொருள்
களின் தேவை இன்னும் 60 சதம் அதிகரிக்கும் என பாலே
குறிப்பிட்டார். இந்தக் கூடுதலான இறக்குமதி யாவும்,
ஆசியா, ஆஃப்பிரிக்காவிலிருந்தே வரவேண்டும்.
உதாரணமாக நமது விவசாயப் பண்ணைகள், ஆலைகள்,
வியாபார நிலையங்கள் பிற நாட்டினரை நம்பியேயிருக்க
வேண்டி வந்துவிட்டது. தாமரம் வட ரோடீஷ்யாவி
லிருந்து வரவேண்டும். எண்ணெய் ஈரானிலிருந்து கிடைக்க
வேண்டும். மங்கனீஸுக்கு பீஹாரை எதிர்பார்க்கவேண்டும்.
வர்த்தகம் வளர சிக்கல் வாய்ந்த லண்டனில் உள்ள ஸ்தா
பனங்களின் உதவியை எதிர்பார்க்க வேண்டும். பம்பாய்,
அக்ரா (Accra), ரங்கூன், போர்ட்ஸெட் துறைமுகங்களில்
சாமான் ஏற்றுபவர்கள் ஒழுங்காக வேலை செய்யவேண்டும்.



இந்த அணுசக்தி சகாப்தத்தில் அமெரிக்கா தனித்திருப்
பது சாத்தியமில்லை. நமது விமானப்படை துணிந்து தாக்கி
வெற்றி பெறவேண்டுமானால், அதற்கான விமான தளங்கள்
நம் நேய நாடுகளில் இருக்கின்றன. அநுபவசாத்யமான
ஆயுதக் குறைப்புத் திட்டம் ஏற்படாமலிருந்து, நேய நாட்
டினரின் விமான தளங்கள் நமக்குக் கிடைக்காமற்போனால்,
சோவியத் அல்லது சீன ஆக்ரமிப்பை வெற்றிகரமாக
எதிர்த்துத் தாக்குதல் மிகக் கடினமாகிவிடும்.
இந்தப் புதிய நிலையை மறந்து செயல் புரிவது சாத்திய
மில்லை. வெண்டல் வில்கி கூறிய மாதிரி ஒரே உலகத்தில்
நாம் வசிக்கிறோம் என்பது பொருள் பொதிந்த உண்மை.
இந்த உலகம் 80 தனி நாடுகளாக, அபாயகரமான முறை
யில் பிரிந்து நின்றாலும், ஆயுதம் தாங்கிய இரு ஜனக் கூட்ட
மாக எதிர்த்து நின்றாலும், மாறுபட்டிருப்பதுபோல் காணும்
பல்வேறு ஒடுக்க முடியாத இலட்சியங்களைப் பின்பற்றுபவர்
களாக இருந்தாலும், பல சாம்ராஜ்யங்களாகப் பிரிந்து நின்
றாலும், நாம் ஏற்கனவே ஆராய்ந்தறிந்தபடி பல புரட்சி
கள் நிகழ்ந்து வந்தாலும், நாம் வாழ்வதற்கு இந்த ஒரு
உலகம்தானிருக்கிறது. அதில் எப்படி வாழ்வது என்பதை
நாம் கற்றறிந்துகொள்ள வேண்டும்.
இந்த உலகத்தில் நாம் சௌகரியமாக வாழவேண்டு
மானால், நாம் அறிந்துகொள்ளவேண்டிய முதல் படிப்பினை
அமெரிக்கா கொள்கை வகுப்பதற்கு வரம்புண்டு என்பது
தான். சில சமயம் இதைப் புரிந்துகொள்வது சற்றுக் கடினமா
யிருக்கலாம்.
''நமது வாழ்க்கையில் நமக்கு ஏற்பட்ட [illegible] சிக்கலை
சமாளிக்க முடியாது என்கிற நிலை ஏற்பட்டதில்லை. எந்த
நதியாயிருந்தாலும் அதற்குப் பாலம் அமைத்திருக்கிறோம்.
எவ்விதப் பொருளாதார மந்தத்தையும் மீண்டு வந்திருக்
கிறோம். பிற மக்கள் அநுபவித்திருக்கிற சோகம், ஏமாற்
றம், சில சமயம் தோல்வி நமது வாழ்நாளில் அநுபவித்த
தில்லை.'' இவ்வாறு அட்லாய் ஸ்டீவன்ஸன் கூறுகிறார்.
வாழ்க்கைப் பிரச்னைகளை நாம் என்றுமே தன்னம்பிக்கை
யுடன் லாவகமாகச் சமாளித்து வந்திருக்கிறோம். இது ஒரு
கவர்ச்சிகரமான இயல்புதான். ஆனால் இதனாலேயே எதிர்
காலத்தில் நாம் மேலும் ஏமாற்றமடைய நேரிடலாம். புரட்சி
நிலவும் உலக அரங்க மேடையில் நாம் தோன்றிவிட்டோம்.
நாம் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாயிருந்தாலும், நமது
நாட்டின் விஸ்தீரணம், இயற்கை வளம், ஜனத்தொகை,
பூகோள அமைப்பு, அநுபவம் யாவும் நம்மிஷ்டப்படி செயல்
புரிவதற்குத் தடைகளாயிருக்கலாம். இந்தப் புதிய நிலை
யில், நமக்கு வேண்டுவது பணிவு. எல்லாவற்றையும்விட

ஜனதிபதி ஐஸன்ஹோவர் கூறியதுபோல், நமக்கு ''பொறுமையா யிருப்பதற்கான தீரம்'' வேண்டும்.

நமது குறைபாடுகளை உணரவேண்டியது அவசியமானலும், அவைகளை வியாஜமாகக்கொண்டு வாளாயிருத்தல் கூடாது. எதிர்காலம் எப்படி இருக்கும் என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. நாம் தவறே செய்துகொண்டு வந்தாலும் சுதந்திரம் நிலைத்து நிற்கலாம். நாம் நியாயமாகவே நடந்து வந்தாலும், சுதந்திரம் அழிக்கப்பட்டுவிடலாம். உணவுக்கும், சுதந்திரத்திற்கும், சமாதானத்துக்கும் நடந்து வரும் உலக ஜனநாயகப் புரட்சி வெற்றி பெறவோ, தோல்வியுறுவதற்கோ ஆன சக்தி அமெரிக்காவுக்கு இருக்கிறது என்றே தோன்றுகிறது. அமெரிக்காவின் கொள்கையை நிர்ணயிப்பதில் அமெரிக்கர் பெரிதும் உதவி புரியலாம்.

அந்தக் கொள்கையை எவ்வகையில் நாம் உருவகப்படுத்தப்போகிறோம்? புரட்சிகரமான நிலையைச் சமாளிப்பதற்கான முறையில் நமது தற்போதைய அரசியல் தந்திரம் அமைந்திருக்கிறதா? இல்லையென்று தெளிவாகப் பதில் கூறலாம்.

சரித்திர உண்மைகளையும், போக்கையும் அறிந்து அதற்கேற்ப நமது கொள்கைகளைத் திட்டம் செய்யவேண்டியது முக்கியமான முதல் வேலை. சரித்திரத்தின் முக்கியமான திருப்பத்தில் நாம் வாழ்கிறோம் என்பதுபற்றிச் சந்தேகமில்லை. **புனித ரோம சாம்ராஜ்யம்*** சிதறுண்டுபோனதையும், ஐரோப்பாவில் **மறுமலர்ச்சி†** தோன்றியதையும்விடச் சிறப்பான விளைவுகளை ஏற்படுத்தலாம் நாம் செய்யப்போகும் முடிவினால்.

* புனித ரோம சாம்ராஜ்யம்:—(Holy Roman Empire) கி.பி 962-இல் முதலாவது ஆட்டோ (Otto) அரசபீடமேறிய காலத்திலிருந்து 1806-இல் இரண்டாவது ஃபிரான்சிஸ் மன்னன் இந்தப் பட்டத்தைத் துறந்தவரையில் புனித ரோம சாம்ராஜ்ய காலம் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஐரோப்பாவில் பெரும் பகுதியை—இங்கிலாந்து உள்பட ரோம மன்னர்கள் ஜெயித்துப் பின்னர் ராஜ்யத்தை இழந்ததையே ஆசிரியர் இங்கு குறிப்பிடுகிறார்.

† மறுமலர்ச்சி:—(Renaissance) மத்திய சகாப்தத்திலிருந்து நவீன காலத்திற்கு மாறியதையே ஐரோப்பியர் மறுமலர்ச்சி என்று கூறுகின்றனர். இந்த மாறுதல் 14-லிருந்து 16-ஆம் நூற்றாண்டுகளுக்குள் நிகழ்ந்தது. முக்கியமாக கலாசாரம், இலக்கியம், கலை முதலிய துறைகளில் ஏற்பட்ட மாறுதலையே மறுமலர்ச்சி என்று கூறுவர்.

அத்தியாயம் 32

# சரித்திரத்தின் கண்ணோட்டம்

நவநாகரிகத்தை முதன்முதலில் பின்பற்றியவர்கள் நாம்
தாம் என்று எண்ணிவிடலாகாது. இதை ஞாபகத்தில் வைத்
துக்கொண்டு, இப்போது நம்மை வாட்டிவரும் பிரச்னைகளைக்
கவனிப்பது நல்லது. ரோமும், பிற ராஜ்யங்களும் தங்களை
உலக சமுதாயங்களாகக் கருதி வந்தன. ஆகையால் அவைகள்
புரட்சிகரமான எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டி வந்தன.
சரித்திரத்தில் இடம் பெற்ற, குறைந்த பட்சம் இருபது
நாகரிகங்கள் நமது காலத்திற்கு முன்பு புகழ்பெறப் பாடுபட்
டிருக்கின்றன எனப் பேராசிரியர் ஆர்னல்டு டாயன்பீ (Arnold
Toynbee) கூறுகிறார். இவைகளில் ஒவ்வொரு நாகரிகமும்
சோம்பிக்கிடந்த புராதன சமூகமாயிருந்து, அந்த நிலையை
விட்டுவிட்டுப் பின்னர் விழிப்புற்றவைகள். இவைகள் அச்ச
மின்றித் துணிந்து, ஆளப்படுவோர் சம்மதம் பெற்ற ஆட்சி
அடிப்படையில், எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நாகரிக
நிலையடைய முயற்சித்திருக்கின்றன. இந்த முயற்சியில்
தோல்வியுற்று பதினறு நாகரிகங்கள் அழிந்துவிட்டன. நமது
நாகரிகத்தைத் தவிர பிற தட்டுத் தடுமாறிப் போய்விட்டன.
நமது மேற்கத்தி நாகரிகம் இப்போது பல சங்கடங்
களைச் சமாளிக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது என்று
டாயன்பீ கூறுகிறார். மற்ற நாகரிகங்கள் தோல்வியுற்ற
போது, நாம் மட்டும் வெற்றி பெறுவோமா என்பதுதான்
இப்போது நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னை. மனித சமூ
கத்திற்குச் சங்கடம் விளைவித்து வந்திருக்கும் இரு பிரச்னை
களில் ஒன்றினல்தான், முந்திய நாகரிகங்கள் தோல்வியுற்
றிருக்கின்றன என்று டாயன்பீ காரணம் கூறுகிறார். யுத்தம்,
வர்க்க வித்தியாசம் இரண்டும்தான் தோல்விக்குக் காரண
மான பிரச்னைகள்.
உலக நாகரிகத்தை நிலைநாட்ட முயற்சித்த, பரந்த சமூ
தாயங்களில் சில பகுதிகள், ராணுவ பலம், பலாத்காரம்
இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட போரில் ஈடுபட்
டதே அவர்கள் தோல்விக்கு முக்கிய காரணம்.
வகுப்பு என்றால் என்ன என்பதற்கு டாயன்பீ பதில் கூறு
கிறார்: '' பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், இன அல்லது
மத மாறுபாட்டைக் கொண்டு ஒரு வகுப்பினர் பிறரைச்

சுரண்டிப் பிழைப்பது அல்லது ஆதிக்கம் செலுத்துவது அல்
லது ஒருசமுதாயத்தில் பிளவு ஏற்படுத்துவது எல்லாம் வகுப்பு
வித்தியாசங்களே''. நாகரிகம் வீழ்ச்சியுறுவதற்கு இந்த
வகுப்பு வித்தியாசம் இரண்டாவது காரணம் என்று டாயன்பீ
கருதுகிருர்.

''முதல் நாகரிகம் தோன்றிய காலத்திலிருந்து யுத்தம்,
வகுப்பு வித்தியாசம் இரண்டையும் நாம் அறிவோம். ஒவ்
வொரு நிகழ்ச்சியையும், அது நடந்த சமயம், அதன்
முந்திய வரலாறு முதலியவைகளை ஆராய்ந்து பார்த்தால்
மக்கள் மடிவதற்குக் காரணம் ஒன்று யுத்தம், இல்லாவிட்
டால் வகுப்பு வித்தியாசம் என்பதை அறிந்து கொள்ளலாம்.
சில சந்தர்ப்பங்களில் இரண்டும் சேர்ந்ததாகவே இருந்து வந்
திருக்கின்றது.'' இவ்வாறு டாயன்பீ எழுதியிருக்கிருர்.

ஆனுல் தோல்வியுற்ற நாடு ஒவ்வொரு சந்தர்பபத்திலும்
தற்கொலை செய்து கொண்டதாகவே கூறலாம். நாகரிகத்
தில் ஓர் அம்சம் அந்த நாட்டைப பலஹீனப்படுத்தியிருக்க
வேண்டும். போராடுவதற்கான உறுதி தளர்ந்திருக்க வேண்
டும். மக்களின் ஆதரவையும் விசுவாசத்தையும் கவருவதற்
கான சக்தியை மறந்திருக்க வேண்டும். இல்லையேல் நாட்டுக்
குப் புறம்பான எந்தச் சக்தியும் அதை அழித்திருக்க முடியாது.

கிரேக்க நாட்டின் வீழ்ச்சிக்கான காரணத்தைப் பற்றி
ஆராய்ச்சி செய்யும் சரித்திர ஆசிரியன் கி.மு 431-ஆம் ஆண்
டில் பெலோபோனீஷ்யன் யுத்தம் (Peloponnesian War) ஏற்
பட்ட சமயத்தில் அந்நாடு, ''தற்கொலை'' செய்து கொண்
டிருக்க வேண்டும் என அனுமானிப்பான். கிரீஸில் ஏதன்ஸ்
வெற்றி பெற்ருலும், ஸ்பார்ட்டா வெற்றி பெற்ருலும் கவலை
யில்லை. ஏனெனில் பல்வேறு நகர ஆட்சிகளுக்குள்ளும் (city
states), ஒவ்வொரு நகரிலும் பல வகுப்புகளுக்குள்ளும் உள்
நாட்டுச் சண்டை நிகழ்ந்த பிறகு, கிரீஸ் தலைதூக்கவில்லை.

யுத்தத்தை நிறுத்தி, எல்லோருக்கும் கிட்டத்தட்ட சம
சந்தர்ப்பம் அடையச்செய்வதற்கு என்ன வழி? முந்திய நாக
ரிகங்களுக்கெல்லாம் வாழ்வதா, மாள்வதா என்பதை முடிவு
செய்வது போன்ற முக்கியமான பிரச்னையாகவே இந்தக்
கேள்வி இருந்து வந்திருக்கிறது. நம்மையும், இதே கேள்வி
தான் வாட்டி வருகிறது. இந்த அடிப்படையிலேயே நமது
கொள்கைகளின் ஜீவாதார நோக்கங்கள் அமைந்து இருக்க
வேண்டும்.

## யுத்தப் பிரச்னை

மூன்று வகையில் யுத்தப் பிரச்னையைத் தீர்க்க முந்திய
தலைமுறையினர் முயற்சித்து வந்திருக்கின்றனர் என்பதை
சரித்திரத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஒரே நாடு



உலகத்தை ஆள்வது, பல நாடுகளுக்குள்ளோ அல்லது நாடு
களின் கூட்டமைப்புகளுச்குள்ளோ சம பலம் நிலவுவது, தம்
மிச்சையாக நாடுகள் ஒன்றுகூடி வாழ்வது. இப்போது நாம்
உள்ள தர்ம சங்கடமான நிலைக்குப் பரிகாரமாக இம்மூன்றில்
ஒன்றைப் பலர் ஆதரிப்பதனுல் மேற்கத்திய வரலாற்றில்
அவை ஒவ்வொன்றின் சரித்திரத்தையும் ஆராய்வது பய
னளிக்கும்.

இம்மூன்றில் உலகாளும் சாம்ராஜ்ய முறையே பழமை
யானது. கிரேக்க நகராட்சிகள் ஒன்ருேடொன்று முட்டிக்
கொண்டு மடிந்ததற்குப் பிறகு ரோம் நாட்டில் தோன்றிய
புதுக்குடியரசு அக்காலத்தோர் அறிந்திருந்த நாகரிக உலகை
ராணுவ பலத்தின்மூலம் ஒன்றுபடுத்த முயற்சித்தது. ''ரோம்
முறை சமாதானம்'' என்பது ஆயுத பலம் கொண்டு நிலை
நாட்டப்பட்டாலும் பல நூற்ருண்டுகளுக்கு ரோம் சாம்ராஜ்
யம், சமாதானத்தின் நற்பயன்களை மக்கள் அநுபவிக்க வகை
செய்தது. ரஸ்தாக்கள், அணைக்கட்டுகள், பாலங்கள், கால்
வாய்கள், ஒரே மாதிரி வரி விதிப்பு, சுதந்திரமாக வியாபாரம்
செய்யும் வசதி, பொது ராணுவம் அல்லது போலீஸ் படை,
எல்லாவற்றையும்விட முக்கியமாக ரோமன் சட்டம் முதலிய
வைகளே அந்த சாம்ராஜ்யம் செய்த நற்காரியங்கள்.

கடைசியில் ரோம் வீழ்ச்சியுற்றது. ஆனுல் உலகெங்கும்
ரோமன் சட்டம் வியாபித்திருக்கவேண்டும், பொதுவான
ஆட்சியின்கீழ் சமாதானம் நிலவவேண்டும், மீண்டும் ரோம
சாம்ராஜ்யம் புத்துயிர் பெற வேண்டும் எனும் எண்ணம்கூட
கிறிஸ்தவ நாடுகளை வெகுகாலத்திற்கு ஆகர்ஷித்து வந்தன.
இந்த எண்ணங்களே வெகுவாக மேற்கத்தி வரலாற்றை உரு
வகப்படுத்த உதவிபுரிந்தன.

இந்த சாம்ராஜ்ய சாதனத்தை நிர்ப்பந்தமாக உப
யோகித்து வந்ததற்கு மேற்கத்திய வரலாறுகளில் பல சான்று
கள் இருக்கின்றன. புரட்சி நிகழ்த்திய ஃபிரான்ஸ், சாம்ராஜ்
யம் அமைப்பதில் முனைந்தது. இச்சமயத்தில் அதன் புரட்சிப்
படைகள் ஐரோப்பாவில் எழுந்த எதிர்ப்புரட்சிச் சக்திகளை
எதிர்த்துத் தள்ளிக்கொண்டிருந்தன. பத்தொன்பதாவது
நூற்றண்டில் தானும் ஸீஸர் என்று எண்ணிக்கொண்டிருந்த
நெப்போலியன் ஐக்கிய ஐரோப்பா அமைப்பது பற்றிப்
பேசிக்கொண்டிருந்தான். ஃபிரான்சில் ராணுவ ஆதிக்கம்
பெருகி வந்தது. பழைய புனித ரோம சாம்ராஜ்யத் தோர
ணையில் நெப்போலியன் முடி சூட்டிக் கொண்டான். இதி
லிருந்து நெப்போலியன் மீண்டும் பழைய ரோமாபுரியின்
புகழை எய்த விரும்புகிருன் என்பது தெளிவாயிற்று. நெப்
போலியனின் சட்டத் தொகுப்பு கொஞ்ச காலத்திற்கு ஐரோப்
பாவின் பெரும் பகுதியை ஒரே சட்டத்தின் கீழ் கொணர்ந்தது

ஐரோப்பாவில் அரசர்களைச் சிம்மாசன மேற்றுவதும் இறக்குவதும் தன்னிஷ்டப்படிச் செய்து வந்தான் நெப்போலியன். இவ்விரண்டும் சேர்ந்து யாரும் சாதிக்க முடியாத முறையில் ஐரோப்பியர்கள் மனத்தில் அந்தக் கண்டம் ஒன்று எனும் உணர்வை ஏற்படுத்தியது.

பின்னர் ஹிட்லர் ஜப்பானுடன் சேர்ந்து கொண்டு உலக ஆதிக்கம் பெற முயற்சித்தான். சென்ற நாற்பது ஆண்டுகளாக உலக சாம்ராஜ்யம் அமைப்பதே தங்கள் நோக்கம் என்பதைச் சோவியத் யூனியன் மறைக்கவில்லை. கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூலம் இந்நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றிக்கொள்ள விரும்புகின்றனர். சமாதானத்தை நிச்சயமாக நிலைநாட்ட வேண்டுமானால், அமெரிக்காவும் பழைய ரோம சர்வாதிகாரிஸீஸர் தோரணையில் செயல்புரியவேண்டும் என்று பூடகமாகக் கூறுவோர் நம் நாட்டிலும் இருக்கின்றனர்.

யுத்தத்தைத் தவிர்ப்பதற்குப் புராதனமாக அநுஷ்டிக்கப்பட்ட இரண்டாவது முறை சமபலம் நிலவச் செயதல். ரோமின் சாம்ராஜ்யக் கனவு மங்கியதும், மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய அரசியல் தத்துவாசிரியர்கள் ராஜ்யங்களுக்குள் சமபலம் நிலவுவதைக் கண்டுபிடித்தனர். இதை அவர்கள் சிறப்பான ஏற்பாடு என்றனர். வாழ்க்கையில் இயற்கையாகச் சமபலம் நிலவுவதுபோல் ராஜ்யங்களுக்குள் ''இயல்பான சமநிலை'' ''நேர்மையான சமபலம்'' நிலவும் என்பது இவர்கள் கருத்து. சாம்ராஜ்யத்தின் சிறப்பு அதில் காணப்படும் ஒற்றுமையும், எல்லோருக்கும் பொருந்தும் சட்டமும் ஒழுங்கும் என்றால், வெற்றிகரமான சமநிலை உள்ளவிடங்களில் பல்வேறு வித்தியாசங்களுக்கு இடையில் சுதந்திரம் நிலவுவதுதான் அதன் நற்பயன் என்று கருதினர்.

சமபலம் நிலவ வேண்டுமெனில் அதை நிறைவேற்றும் அதிகாரி வேண்டும். ஒருபுறம் பலம் குறைந்தால் அதைச் சரி செய்வதற்கு ஏதாவது ஒரு நாடு முன் வரவேண்டும். இந்த வகையில் வெற்றிகரமாகச் செயல் ஆற்றியது தொழில் வளமுள்ள பிரிட்டிஷ் தீவுகள்தாம். சுமார் 250 ஆண்டுகளுக்கு ஐரோப்பாவில் எந்த நாடோ அல்லது பல நாடுகள் கூடியோ சமபலம் சிதைவுறச் செய்யும் அளவுக்குப் பலம் பெருமல் பிரிட்டன் பாதுகாத்து வந்தது. 1914 வரையில் இந்தச் சமபல முறையே உலகம் சின்னபின்னமாகாமல் காத்துவந்தது.

1815-லிருந்து 1914 வரை பிரிட்டன் தனிப்பெரும் நாடு போல் ஒதுங்கி நின்றது. முந்திய சாம்ராஜ்ய ஆட்சியினர் போல் ஆள் பலத்தையும் பணப் பலத்தையும் வீணுக்காமல், மக்களைக் கொடுமைப்படுத்திச் சங்கடங்களை விளைவித்துக்



கொள்ளாமல் ஐரோப்பிய சமுதாயத்தைச் சீராக பிரிட்டன் தலைமை தாங்கிப் பாதுகாத்து வந்தது. இதன் விளைவாகப் பத்தொன்பதாவது நூற்றுண்டில் தாராளப் போக்கும், ஜீவ காருண்யமும் உதயமாயின.

தொழில் வளத்தினுல் அடைந்த சாம்ராஜ்யத்தின் சக்தியைக் கொண்டே பிரிட்டன் இந்தச் சமபலம் நிலவச்செய்வதில் வெற்றிபெற்றது என்பது விந்தையாகத்தானிருக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பிரிட்டிஷ் கடற்படை பாதுகாத்து வந்தது. இதன் பயனுக, உலகத்தில் பாதிக்கு மேற்பட்ட பகுதியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சட்டம், ஒழுங்கு, ஓரளவு அமைதி எல்லாம் நிலவின. பத்தொன்பதாவது நூற்றுண்டில் பெரும்பகுதி வரை பிரிட்டனின் ஆதிக்கம் எங்கும் நிலவியது. இதற்கு உதவிபுரிந்த இரு சாதனங்கள் காலனி ஆட்சி, ஐரோப்பாவின் சமபல நிலை.

சாம்ராஜ்ய அழிவுக்கான வித்து அதனுள்ளேயே இருக்கிறது. சமபலத்தை நம்பிச் செயல் புரிவது அபாயம். இந்த இரண்டும் சரித்திரம் கண்ட நிதர்சனமான உண்மைகள். சாம்ராஜ்யம் என்ருல் பலாத்காரமாகச் சமாதானத்தை நிலைநாட்டுவதும், நிர்ப்பந்தமாக ஒற்றுமையை நிலைக்கச்செய்வதும் என்றுதான் அர்த்தம். மூன்று சந்தர்ப்பங்களில் சாம்ராஜ்ய ஆட்சி சிதைவுற்றுவிடும். வெற்றி கொள்ளப்பட்ட மக்கள் ஆட்சியினரை வீழ்த்துவதற்கான பலம்பெறவேண்டும்; மக்களை அடிமைப்படுத்துவதற்கான சக்தியையும் மனவுறுதியையும் சாம்ராஜ்ய ஆட்சியினர் இழந்துவிட வேண்டும்; அல்லது, மக்களுடைய விழிப்பும் ஆட்சியினர் பலஹீனமும் சேர்ந்து சாம்ராஜ்யத்தைப் பிறநாட்டினர் எளிதில் தாக்கும் வாய்ப்பு ஏற்படவேண்டும்.

இவ்வாறுதான் ரோம் வீழ்ச்சியுற்றது. அந்நாட்டிலும் வகுப்புகளுக்கிடையே பிளவு நிலவியதனுல் வெளியிலிருந்து நாகரிகமற்ற கோஷ்டியினர் அதைத் தாக்க முடிந்தது. பிரிட்டனில் ஜனநாயக வேர் ஊன்றியதும், காலனி ஆட்சி எதிர்ப்பு உணர்ச்சி அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கும் ஆஃப்ரிக்காவுக்கும் பரவியவுடன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் முடிவுறும் நிலை அடைந்துவிட்டது.

சமபலம் எப்போது நிலவும்? அதில் சம்பந்தப்பட்ட நாடுகளை இந்த முறைக்கு உடன்படும்படிச் செய்வதற்கான சக்தியுள்ள மட்டில்தான். சமபலம் நிலவும் நாடுகளுக்குள் ளேயோ அல்லது புறம்பாகவோ புதிய சக்திகள் தோன்றி இந்தச் சமநிலையைக் கவிழ்த்துவிடலாம்.

தொழில் வளமுள்ள ஜெர்மனி தோன்றியதும், 19-வது நூற்றுண்டில் நிலவிய ஐரோப்பிய அரசியல் சமநிலை ஆட்டங் காணத் தொடங்கிவிட்டது. ஜெர்மனியின் சக்தியை உலகின்

மாபெரும் கடற்படைகூடத் தடுத்து நிறுத்த முடியாதபடி
அது பலம் பொருந்திய சாம்ராஜ்யமாகிவிட்டது. 1870-இல்
ஃபிராங்கோ-பிரஷ்ய சண்டையில் பிரிட்டன் ஒதுங்கி நின்று
வேடிக்கை பார்த்தது. முந்திய இருநூறு ஆண்டுகளில் பிரிட்
டன் பாதுகாத்து வந்த சமபலத்திற்கு ஃபிரான்ஸ் ஆபத்தா
யிருந்து வந்ததனால், ஜெர்மனியிடம் ஃபிரான்ஸ் தோல்வி
யுறுவது விரும்பத்தக்கது எனப் பிரிட்டன் நினைத்தது. நாற்
பது ஆண்டுகளுக்குப் பின் நவீன உலக யுத்தத்தில் பிரிட்
டன் பங்கு கொண்டது. இந்தத் தடவை ஃபிரான்ஸுடன்
சேர்ந்து ஜெர்மனியை எதிர்த்தது. பிரிட்டனின் உதவியால்
பலம்பெற்ற ஜெர்மனி ஐரோப்பாமீது ஆதிக்கம் செலுத்தும்
நிலை அடைவதைத் தவிர்க்கவே ஃபிரான்சுக்கு உதவிபுரிந்தது.
''ஐரோப்பாவில் சம்பலம் நிலவச்செய்வதற்காக உங்
கள் நாடு ஃபிரான்ஸையும், ரஷ்யாவையும் ஆதரிக்கும் என்று
நம்புகிறேன்.'' இவ்வாறு ரஷ்ய மன்னன் இரண்டாவது நிக்
கோலஸ் (Nicholas) பிரிட்டிஷ் அரசர் ஐந்தாவது ஜார்ஜை
1914 ஆகஸ்ட் மாதத்தில் தந்தி மூலம் கேட்டுக்கொண்டார்.
ஆனால் எவ்வளவு சிறப்பாகப் பிரிட்டன் போராடினாலும்,
ஐரோப்பிய சமநிலையைப் பழைய முறையில் காக்கவோ
அல்லது மீண்டும் செயலுறச் செய்யவோ முடியவில்லை. இந்த
சமநிலையைக் கவிழ்ப்பதற்கான புதுச் சக்திகள் ஆர்ப்பாட்டத்
துடன் தோன்றின. இந்தச் சக்திகளின் பலத்தை எடுத்துக்
காட்டும் முறையில் இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின் ஜார்
அரசனையே பீடத்திலிருந்து வீழ்த்தியதுடன், கம்யூனிஸ்ட்
தலைமையில் உலகத்தையே ஆட்டிவைக்கக் கூடிய ஜீவசக்தி
வாய்ந்த நாடாக ரஷ்யாவையே மாற்றிவிட்டது.
யுத்தம் ஏற்படாமல் தவிர்ப்பதற்குச் சாம்ராஜ்யம், சம
பலநிலை இரண்டினால் இயலவில்லையென்பதை அறிந்து, ஒரே
மாதிரி ஆட்சி முறையுள்ள நாடுகள் இஷ்டப்பட்டு ஒன்றுபட்
டால் சமாதானத்தை நிலைநாட்டலாம் என்று நினைத்தனர்.
புராதன கிரேக்க நாட்டில் நகர ஆட்சிகள் ஒன்றுபடு
வதன் மூலம் யுத்தத்தைத் தவிர்க்க முயற்சித்தனர். ஆக்ரமிப்
பாளர்களை ஒன்று சேர்த்து எதிர்க்க முனைந்தனர். ஆனால்
கிரேக்கர்கள் சங்கம் பல நாட்டுத் தூதுவர்கள் கூடிப் பேசுவது
போல் ஆகிவிட்டது. எனினும், ரோமின் வீழ்ச்சிக்குப் பிறகு
யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு விரும்பி ஒன்றுபடுதல் எனும்
எண்ணம் மேற்கத்தியர் கவனத்திலிருந்து வந்தது.
மத்திய காலத்தில் இம்மாதிரி ஒற்றுமையை நிலைநாட்டக்
கிறிஸ்தவ மதாலயங்கள் பெரிதும் முயன்று வந்தன. உலக
விவகாரங்களில் 1514-இல் இராஸ்மஸ் (Erasmus இதை ஆதரித்
தார். இந்த அடிப்படையில் ''எங்கும் சமாதானம்'' நிலவுவ
தற்கான உடன்படிக்கையை அமைக்க 1518-இல் போப்



பத்தாவது லியோவும் (Leo), கார்டினல் வுல்ஸி (Cardina
Wolsey) யும் ஏற்பாடு செய்தனர்.
1625-இல் சர்வதேசச் சட்டத்தின் தந்தையென்று பெயர்
பெற்ற டச்சு சட்ட நிபுணர் ஹியூகோ கிரோஷியஸ் (Hugo
Grotius ) ''யுத்தம், சமாதானம் இரண்டிற்கான சட்டங்
கள்'' எனும் தனது பிரசித்தி பெற்ற நூலை வெளியிட்டார்.
தனிப்பட்டவர்கள் எப்படி தேச அல்லது ஸ்தலச் சட்டங்களுக்
குட்பட்டு நடக்கின்றனரோ அவ்வாறே ஆதிபத்ய உரிமை
யுள்ள ராஜ்யங்கள் சர்வதேச சட்டத்திற்குட்படவேண்டும்
என்று அவர் கூறினார். இயற்கை விதிகளை எல்லோரும்
அநுஷ்டிக்கும்படிச் செய்வதற்கான விதிகளை விவாதித்து
வகுக்க கிறிஸ்துவ இளவரசுகள் அடங்கிய சபை கூட்ட
வேண்டும் என இவர் யோசனை கூறினார். ஐரோப்பாவின்
''பொதுச் சட்டத்தை'' திட்டம் செய்ய அடுத்த நூற்றாண்
டில் ஒன்பது சர்வதேச மகாநாடுகள் கூடின.
அடுத்த மூன்று நூற்றாண்டுகளில் பிரசித்தி பெற்ற
இருபதுக்கு மேற்பட்ட சமாதான திட்டங்கள் வகுக்கப்பட்
டன. ஆனால் இவைகள் யாவுமே மன்னர்கள், ராஜதந்திரிகள்,
புகழ் பெற்ற தத்துவாசிரியர்களால் வகுக்கப்பட்டவை
யல்ல. 1779-இல் பியரி ஆண்டிரி கார்க்காஸ் (Pierre-Andre
Gargaz) எனும் பள்ளி உபாத்தியாயர், நாடுகள் ஒன்றுபடுவ
தற்கான சாதுர்யமான திட்டம் ஒன்று வகுத்தார். இவர்மீது
பொய்யாகக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு இருபது வருஷம்
சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அடிமையாகச் சிறையில்
வேலை செய்து வந்தார். தனது திட்டத்தை இவர் பெஞ்சமின்
ஃபிராங்க்லினுக்கு அனுப்பினார். ஏனெனில் வட அமெரிக்க
ராஜ்யங்கள் ஒன்றுபட வேண்டுமென ஃபிராங்க்லின் வெகு
காலமாக வற்புறுத்தி வந்தார்.
கார்க்காஸ் ''1336-ஆம் நெம்பர் கைதி'' என்று தம் திட்
டத்தில் கையெழுத்திட்டார். அப்போது எல்லோரும் கூறி
வந்த மத்தியஸ்தம் செய்தல், நாட்டின் முக்கியத்துவத்திற்
கேற்றபடி சர்வதேச போலீஸ் படை அமைப்பதற்கான ஆட்
களை ஒவ்வொரு நாடும் அனுப்புதல் எனும் யோசனைகள் கூறிய
துடன் அவர் நின்றுவிடவில்லை. யுத்தம் நின்றதனால் மிச்ச
மான பலத்தைக் கொண்டு உலகெங்கும் உத்தாரண வேலை
கள் தொடங்க வேண்டும் என்றும் அவர் கூறினார். ரஸ்தாக்
கள் அமைத்தல், உபரி உணவுத் தான்யங்களைச் சேகரித்து
வைத்துப் பஞ்சப்பகுதிகளில் பயன்படுத்துதல், நீர்ப்பாசனம்,
வெள்ளக்கட்டுப்பாடு, பனமா, சூயஸ் பூசந்திகளில் கால்
வாய் வெட்டுதல் யாவும் அவருடைய திட்டத்தில் இடம்
பெற்றிருந்தன.
1781-இல் அவர் விடுதலையான பிறகு, பாஸி (Passy)

எனும் இடத்திற்கு நடந்து சென்றார். அங்கேதான் அமெரிக்கா வின் தூதராக ஃபிராங்க்லின் தங்கினார். இந்தத் திட்டத்தை அவர் உடனே அச்சிட்டு வெளியிட்டார். 1786-இல் ஐரோப் பியத் தலைவர்கள் தனதுதிட்டத்தை நிறைவேற்ற உதவிபுரிய மாட்டார்கள் என மனம்நொந்து, ஃபிராங்கிலினுக்குப் பதிலாக ஃபிரான்சுக்கு அமெரிக்காவில் தூதராக வந்திருந்த தாமஸ் ஜெஃபர்சனுக்கு எழுதினார். தனது யோசனைகளை அமெரிக்காவிலாவது நிறைவேற்ற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

1787-இல் பிலடெல்பியாவில் அரசியல் அமைப்பு மகாநாடு கூடிற்று. அதற்கு வந்திருந்தவர்களில் பலர், சமஷ்டி ஷரத்துக் களில் மாறுதல் செய்வது இயலாது என்று கருதினர். அச் சுறுத்திய நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் கன்வென்ஷனில் நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு வாஷிங்டன் பேசியதாகக் கூறப்படுகிறது: ''நாம் கூறும் எவ்விதத் திட்ட மும் அங்கீகரிக்கப்படாமல் போகலாம். மிகப் பயங்கரமான போராட்டம் நடத்தவேண்டி நேரிடலாம். ஆனால் மக்களைத் திருப்தி செய்வதற்காக நாமே ஆதரிக்காத ஒன்றைஅளிப்ப தானால், நாம் செய்த தவறைப் பின்னர் எப்படி ஆதரித்துப் பேச முடியும்? புத்திசாலிகள், நாணயமானவர்கள் கூடி ஆதரிக்கக் கூடிய முறையில் ஒரு திட்டத்தை வகுப்போமாக. முடிவு ஆண்டவனின் கையிலிருக்கிறது.''

அரசியல் அமைப்பு வகுக்கப்பட்டது. விரிவடையக் கூடிய சமஷ்டி யூனியன் அங்கு கண்ட முடிவு. பரந்த விஸ்தீ ரணம், கலாசார, மத, மொழி வித்தியாசங்களால் மத்திய ஆட்சி ஆதிக்கமுள்ள ராஜ்யம் அமைப்பது அசாத்தியம் என்று கருதப்பட்ட பிற நாடுகளில், உரிய காலத்தில் உண்மையான சமஷ்டிகள் வெற்றிகரமாக அமைக்கப்பட்டன. உதாரண மாக ஸ்விட்ஜர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடு களைக் கூறலாம்.

மேற்கூறப்பட்ட நாடுகள் அடைந்த வெற்றியினாலும், இதற்குமுன் நாம் அடைந்த வெற்றியினாலும் ஐரோப்பிய நாடு களில் பல ராஜதந்திரிகள் உள்பட அநேக சமஷ்டி முறையை ஆதரிக்கத் தொடங்கினர். ஐரோப்பாவில் மட்டுமோ, அல் லது வட அட்லாண்டிக் ஜனநாயக நாடுகளுக்குள்ளோ அல் லது உலகம் பூராவிலுமோ சர்வதேச அராஜகத்தைத் தவிர்க்க சமஷ்டி சிறந்த சாதனம் என்று எண்ணத்தொடங்கினர்.

1787-இல் பெஞ்சமின் ஃபிராங்க்லின் ஓர் ஐரோப்பிய நண்பருக்கு இம்மாதிரி எழுதினார்: ''அமெரிக்காவின் புதிய சமஷ்டி அமைப்புத் திட்டத்தை அனுப்பியுள்ளேன். இந்தத் திட்டம் எங்கள் நாட்டில் வெற்றிபெறுமானால், இதேமாதிரி



அரசியல் அமைப்பு மகாநாடு கூட்டி, ஐரோப்பாவிலுள்ள எல்லா அரசாங்கங்களையும் ஏன் ஒன்றுபடுத்தலாகாது?''

யுத்தத்தைத் தடுப்பதற்காக சாம்ராஜ்யம், சமபலம், சமஷ்டி இம்மூன்று முறைகள் போட்டியிட்டன. வரலாற்றி லிருந்து பார்த்தால் உலக நோக்கு பற்றிய நமது திட்டத்தில் இம்மூன்றின் சில அம்சங்கள் இவைகளில் இருப்பதைக் காண லாம். ஆனால் ஒரே நாடு உலகாள்வதோ, நிலையான சமபலம் நிலவுவதோ, சிறப்பு வாய்ந்த உலக சமஷ்டி அரசாங்கம் அமைவதோ சீக்கிரத்தில் ஏற்படும் என்று கூறுவதற்கில்லை.

சாம்ராஜ்யம், சமஷ்டி இவ்விரண்டு எண்ணங்களுக்கும் சென்ற ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக முறையே ரஷ்யாவும், அமெரிக்காவும் பிரதிநிதிகளாயிருந்து வந்திருக்கின்றன என் பது ரசமான விஷயம். அமெரிக்க யூனியனில் கொஞ்சங் கொஞ்சமாகப் புது ராஜ்யங்கள் சேர்ந்துவந்தன. மக்களும் புதிய சுதந்திரங்கள் அடைந்து வந்தனர். இந்தச் சிறப்பு களுடன் அமெரிக்கர் பத்தொன்பதாவது நூற்றாண்டில் அட் லாண்டிக்கிலிருந்து பசிஃபிக்சமுத்திரம்வரையில் சமாதானம், சட்டம், சுதந்திர வியாபாரம் முதலியவைகளை நிலைநாட்ட மேற்கு நோக்கிச் சென்றனர். சகோதரர்கள் மடியும் உள் நாட்டுச் சண்டை நிகழ்ந்தகாலம் நீங்கலாக, மற்றக் காலத்தில் ''சுதந்திரம்-சமஷ்டி, ஒன்றுபட்டு நீங்காத சமஷ்டி'' இவை களே அமெரிக்கரின் கோஷங்களா யிருந்து வந்திருக்கின்றன.

இதே சமயத்தில் மற்றுமோர் ஜனத்திரள் பெருங்கூட்ட மாக, ஐரோப்பா, ஆசிய மத்தியப் பகுதியை நோக்கிச் சென் றது. புகழ் பெற்ற ரஷ்யர்கள் கிழக்கு நோக்கி சைபீரியா வுக்குச் சென்று, அங்கு ஒரு சாம்ராஜ்யம் அமைத்தனர். பத்தொன்பதாவது நூற்றாண்டு முடிவடைவதற்குள் அமெ ரிக்கா, ரஷ்யா இரண்டு நாடுகளும் தங்கள் கண்டத்தின் எல்லை வரையும் விரிவடைந்தால் என்ன நேரிடுமோ என்பது பற்றி உலகம் ஹேஷ்யமாக ஆராய வேண்டிய நிலை ஏற்பட்டது.

1835-இல் அலெக்சிஸ் டி டாகாவில் (Alexis de Tocqueville) எனும் சிறப்பு வாய்ந்த ஃபிரஞ்சுக்காரர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். பின்னர் நிகழப்போவதைப் பற்றி அசாதாரண தீர்க்க தரிசனத்துடன் அவர் எழுதினார்:

''இந்தச் சந்தர்ப்பத்தில் உலகத்தில் இரு பெரிய நாட் டினர் வசிக்கின்றனர். அவர்கள் வெவ்வேறு திக்கிலிருந்து கிளம்பினர். ஆனால் அவர்கள் ஒரே இடத்தை அடைவார்கள் எனத் தோன்றுகிறது. இவ்வாறு நான் ரஷ்யர்களையும், அமெரிக்கர்களையுமே குறிப்பிடுகிறேன்.

''அமெரிக்கரின் சாதனம் சுதந்திரம். ரஷ்யர்கள் சாத னம் அடிமைத்தனம். அவர்கள் வெவ்வேறு நோக்கிலிருந்து புறப்பட்டனர். அவர்கள் கடைப்பிடிக்கும் மார்க்கமும்

ஒன்றல்ல. ஆனால் ஒவ்வொரு நாடும் உலகத்தில் பாதியின்
கதியை நிர்ணயிக்கும் உறுதி படைத்திருக்கவேண்டும் என்பது
ஆண்டவன் திருவுள்ளம் போலும்.''
சுதந்திர நாடுகளும், ரஷ்ய சாம்ராஜ்யத்தினரும்
ராணுவ பலம் படைத்திருப்பினும், அமைதியாக ஐரோப்பா
வின நடுமத்தியிலுள்ள எல்பே நதிக்கரையில் 1945-இல் கூடி
னர். இவ்விரு தரத்தாருக்கும் உள்ள தொடர்புகவலையளிப்
பதாகவே இருக்கும். ஆனால் இந்த உறவை சிக்கல் வாய்ந்த
தாக்கக்கூடிய முரண்பாடு ஏற்பட்டு வந்தது. தொழில் வளம்
பெற்ற காலனி ஆட்சி நடத்தும் வட அட்லாண்டிக் கரை
யோரமுள்ள வெள்ளையர் நாடுகள் ஒருபுறமும் விழிப்புற்
வரும் மூலப்பொருள்கள் உற்பத்தி செய்துவரும் ஆசிய, ஆஃபி
ரிக்கக் கண்டங்களைச் சேர்ந்த கறுப்பு மக்கள் மற்றொரு
புறமுமாக எதிரும் புதிருமாய் நின்றனர்.
இந்த மோதலின் விளைவாக உலகத்தோர் மனத்தைக்
கலக்கக்கூடிய பழைய பிரச்னை புது உருக்கொண்டு கிளம்பி
யது. இதைத்தான் டாயன்பீ, வகுப்பு வித்தியாசப் பிரச்னை
என்கிறார். ஒரு காலத்தில் மேற்கத்தியரின் எட்டாக்கை
மாகாணங்களாக இருந்த ரஷ்யா மேற்கத்தியர் கலங்கும்
முறையில் எதிர்த்து நின்றது. இப்படி எதிர்த்து நிற்கக்
காரணம் அதனிடம் உள்ள செஞ்சேனையைக்கொண்டு புரா
தன முறையில் பலாத்காரமாக ஒற்றுமையை நிலைநாட்ட
முன்வரும் என்பது மட்டுமல்ல; வர்க்கப் போராட்டத்திற்குத்
தனது பலாத்கார முறையில் மாற்று அளிக்கவல்ல இலட்
சியத்தை அது உலகுக்களிக்கிறது என்பதுதான்.

## வகுப்புப் பிரச்னை

ஜாதி, நிறம், மதம், பொருளாதார அந்தஸ்து ஆகிய
எந்த அடிப்படையிலும வகுப்பு வித்தியாசம் ஏற்படலாம்;
யுத்தப் பிரச்னையைவிட இதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.
ஆனல் இதன் காரணங்களைத் திட்டமிட்டுக் கூற முடியாது.
யுத்தத்தில் தனிப்பட்டோர் விருப்பு வெறுப்பு அவ்வளவாகக்
குறுக்கிடாது. வகுப்பு வித்தியாசத்தில் இதற்கிடமுண்டு.
மேலும் யுத்தத்தைவிட அதிகமான மனக் கசப்பு வகுப்பு
வித்தியாசத்திஞல் ஏற்படலாம். புகழ் பெரும் நோக்கத்
துடனே, இதனுடைய ஆடம்பரத்தில் மயங்கியோ போர்
புரிந்தோம் என யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் ஆறுதல் பெற
லாம். அம்மாதிரி திருப்தியடைய வகுப்புப் போராட்டத்
தில் இடமில்லை. எனினும் இந்த முரண்பாட்டுக்கான கார
ணங்கள் சமூகத்தில் ஆழப்பதிந்திருப்பதனல், நாசம் விளை
விக்கக்கூடிய உள்நாட்டுச் சண்டையோ அல்லது யுத்தமோ
அதனல் ஏற்படலாம்.



சமூகத்தில் எப்பொழுதுமே இரு ''நகரங்கள்'' இருந்து
வந்திருக்கின்றன. செல்வந்தர்கள் நகரம், ஏழைகள் நகரம்.
புராதன கிரீஸ் நாட்டிலும் இவ்வாறே இருந்தது என்று
அரிஸ்டாடில் கூறியுள்ளார். இன்று உலகமே இவ்வாறு
பிரிந்து நிற்கிறது. அட்லாண்டிக் கரையோர நாடுகள்—குறிப்
பாக அமெரிக்கா, செல்வச் செழிப்பாளர் நகரம். எஞ்சி
யுள்ள மனித சமுதாயம் பெரிதும் ஏழைகள் நகரமாக இருக்
கிறது.
1920-இல் துரதிருஷ்டவசமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது.
வில்ஸனின் உலக உத்தாரண லட்சியம் மங்கி அமைதியை
நாடும் ஹார்டிங்கின் முறைக்கு அமெரிக்கா மாறி வரும்
சமயம். இந்தத் தருணத்தில் பணக்காரர், ஏழை வித்தியா
சத்தை அகற்றும் தீர்மானமான நோக்குடன் லெனின் முதன்
முறையாக ஒரு திட்டத்தை உலகுக்கு அளித்தார். பிரம்
மாண்டமான முறையில் திட்டமிட்டு விஞ்ஞானத்தையும்
தொழில் நுணுக்கத்தையும் பயன்படுத்திஞல் வகுப்பு வித்தி
யாசம் ஒழிந்துவிடும் என்று அவர் கூறினர்.
ஈவிரக்கமின்றி வகுப்பு வித்தியாசத்தை ஒழிப்பதற்கான
முதல் முயற்சியை லெனின் செய்தார். வகுப்பு வித்தியாச
மற்ற சமூகத்தை வகுக்கப்போவதாக அவர் அளித்த வாக்
குறுதி ஏழைகள் பகுதியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி
யது. சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் கூட்டமைப்
பின் மூலம் உலகத்தில் யுத்தம் நிகழாமல் செய்துவிடுவதாக
லெனின் வாக்களித்தார். யுத்தத்தை அகற்றுவதற்கான சாத
னம் பழைய சாம்ராஜ்யமேயாயினும், அதற்கு லெனின் புது
உடை அளித்து அலங்காரம் செய்திருந்தார்.
லெனினுடைய பாட்டாளிகளின் சர்வாதிகாரம் எவ்
வாறு செயல் புரியும்? அது சர்வாதிகாரமாகவே இருக்கும்;
இதை ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வகிக்கும். ஆகையால்
உலகப் புரட்சியை ஒரு நாட்டினரே நடத்துவர் என்று ஏற்
படுகிறது. ஏகாதிபத்திய ஆட்சியில் ஈடுபட்டிருப்பவர்கள்
மனிதச் சிறப்புகளை இழந்துவிடுகின்றனர்; பலாத்காரமாக
மக்களைக் கட்டுப்படுத்துவதனல் நயமான முறைகளுக்கிட
மில்லை; சர்வாதிகாரமுள்ள அந்த அதிகாரத்தைத் தாங்
களே மேற்கொள்ளும் அதிகார வர்க்கம் தோன்றும்; இந்த
வர்க்கம் உற்பத்திச் சாதனங்களைக் கைக்கொள்ளுவதனல்
தனி வர்க்கமாக அமைந்துவிடுகின்றது. இவைகள் யாவும்,
யாரும் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய தீமைகள்.
உலகெங்குமுள்ள லட்சக்கணக்கான மக்கள் பழைய
நிலைமையில் சலித்துப்போய்விட்டனர். இந்தக் குறைகளைத்
தீர்ப்பதாக யாராவது வாக்களிக்கமாட்டார்களா என்று
ஏங்கிக் கிடந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் உலகத்தில்

முதல் தடவையாக, உலக வியாபகமுள்ள அரசியல் கட்சி
தோன்றிற்று. இந்தக் கட்சி உலகத்தில் பரந்து நிலப் பரப்
புள்ள நாட்டிலிருந்து தோன்றிற்று. மனித வர்க்கத்தை
வாட்டி வந்த மிக முக்கியமான பிரச்னைக்குப் பரிகாரம்
அளிப்பதாக இந்தக் கட்சி வாக்களித்ததை மக்கள் கண்ட
னர். லெனின் தூவிய புரட்சி வித்து, சீனாவிலும் முளை
விட்டது. ஆகையால் அந்த நாட்டில் தேசிய ஆர்வமுள்ள,
வகுப்பு உணர்ச்சியுள்ளவர்கள் கலகம் விளைவித்தனர். இது
உள்நாட்டுச் சண்டையாக மாறிற்று. இதிலும் கம்யூனிஸ்டு
களே வெற்றி பெற்றனர்.

கம்யூனிஸ்ட் எல்லைக்கோட்டுக்கும் புறம்பாக புரட்சி
விளைவிக்கும் சூழ்நிலை இருந்தது. காலனி ஆட்சிக்குட்பட்ட,
பொருளாதாரத் துறையில் பின்தங்கிய, பெரிதும் கறுப்பு
மனிதர்கள் வாழ்ந்த பகுதியிலேதான் புரட்சிக்கான வாய்ப்பு
கள் இருந்தன. பல கோடி மக்களை இந்தப் புரட்சி ஆகர்
ஷித்தது. யுத்தம், வகுப்பு வித்தியாசம் இரண்டையும்
அகற்றுவதற்கே காந்தியப் புரட்சி தோன்றிற்று. வகுப்பு
பேதம் ஒழிந்தால்தான் சமாதானம் நிலவும் என்பதைக்
காந்தி தெளிவாக உணர்ந்தார். ''பலாத்காரமான, நாசம்
விளைவிக்கக்கூடிய புரட்சி என்றாவது ஒருநாள் வந்தே தீரும்.
செல்வத்தையும், அதனால் கிடைக்கக்கூடிய அதிகாரத்தையும்
தம்மிச்சையாகவே துறந்து, அதைப் பொது நலனுக்காகப்
பகிர்ந்துகொள்ள முன்வந்தால், யுத்தம் நிகழாமல் தவிர்க்க
லாம்.'' இவ்வாறு காந்தி கூறினார்.

மேற்கத்தி நாகரிகம் நிலவிய வட்டாரத்திற்குள் நிகழ்ந்த
ரஷ்யப் புரட்சி ஒன்றுக்குப் பதிலாக இப்போது மூன்று புரட்சி
கள் நிகழ்ந்ததை நாம் காண்கிறோம். லெனின், மா, காந்தி
மூவரும் நிகழ்த்திய புரட்சிகள் ஏழை மக்கள் மிகுதியாக
வாழ்ந்த பகுதியிலேயே ஏற்பட்டிருக்கின்றன. உலகெங்கும்
நீடித்து நிலவி வந்த அநீதியையும், துயரத்தையும் எதிர்த்தே
இப்புரட்சிகளில் ஒவ்வொன்றும் நிகழ்ந்திருக்கிறது.

இன்று உலகில் செல்வம் மிகுந்த பகுதியும், ஏழ்மை
நிறைந்த பகுதியும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கிறது;
உலக மக்கள் யாவரையும் கவலையுறச் செய்யும் யுத்தம்,
வகுப்பு வித்தியாசம் ஆகிய பிரச்னைகளுக்கு உடனடியாகத்
தீர்வு காண வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது. கம்யூ
னிஸமும் மேற்கத்தி உலகத்திலிருந்து தான் தோன்றியது.
பணக்காரர், ஏழை என்கிற பாகுபாட்டைப் பலாத்காரப்
புரட்சி மூலம் அகற்றி உலகத்தை ஒன்றுபடச் செய்யப்போவ
தாக அது கூறுகிறது.

இதற்கு மாறான தற்காலிக முறைகளை அநுஷ்டிக்க
லாம் என மேற்கத்தியர் யோசனை கூறினர். சமாதானத்தை



நிலைநாட்டுவதற்கான, தம்மிச்சையான கூட்டுறவாக
ஐ. நா.வை ஸ்தாபிப்பதற்கான யோசனை 1944-இல் கூறப்பட்
டது. 1948-லிருந்து பல்வேறு ராணுவ உடன்பாடுகளும்,
ராணுவத் தளங்களும் அமைத்து வந்திருக்கிறோம். யுத்தம்
ஏற்படாமல் தடுத்துவிடலாம் என்ற நோக்கத்துடன் தான்
இவைகளை அமைத்தோம். ஐ. நா. பிரத்தியேக கிளை ஸ்தாப
னங்கள், அமெரிக்காவின் நான்கு அம்ச உதவித் திட்டம் இவை
கள் மூலம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்ற முயன்று
வருகிறோம். ஆனால் பொதுப்படையாகப் பார்த்தால், வகுப்பு
வித்தியாச ஒழிப்புத் துறையில் நமது பொறுப்பை நிறை
வேற்றாமல் நமது எதிரிகள் சிறப்படைவதற்குத் தாராளமாக
விட்டுவிட்டோம் என்றுதான் கூறவேண்டும். இப்படி நாம்
செய்ததன் காரணம் என்ன?

வகுப்புப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நமது அமெரிக்கப்
புரட்சி நீடித்துச் செயல்புரிந்து வந்திருக்கிறது என்பதை
ஏற்கனவே கவனித்திருக்கிறோம். தாங்கள் வகுத்த பரி
காரமே இந்தப் பிரச்னை தீருவதற்குக் கைகண்ட மருந்து
என்று கூறும் அமெரிக்கப் பிரமுகர்களுக்குக் குறைவில்லை.
ஆனால் கம்யூனிஸத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது பரி
காரங்கள் அவ்வளவு தெளிவாக இல்லை; தத்துவச் சிறப்
புள்ளதாயில்லை; சந்தர்ப்பங்களுக் கேற்றபடி செயலாற்றுவ
தாகவே இருந்து வந்திருக்கின்றன.

ஆனால் இம்மாதிரி முறைகளைக் கொண்டே அமெரிக்கா
வில் வெற்றி அடைந்து விட்டோம். உலகம் கண்டிராத
அளவு இளக்கத்தன்மை வாய்ந்த சமுதாயத்தை உருவகப்
படுத்திவிட்டோம். அநேகமாகப் பெரிய பணக்காரர்கள்
மிகவும் ஏழ்மை நிலையிலுள்ளவர்கள் என்கிற வித்தியாசத்தை
யும், வகுப்பு வேறுபாடுகளையும் ஒழித்துவிட்டோம். ஆனால்
நமது முறைகளை ஆராய்ந்து பார்க்கும் தோரணையில் செயல்
புரிந்தோம்; அதில் வெற்றியும் கண்டோம். ஆனால் மக்கள்
தங்கள் குறைகள் உடனடியாகத் தீரவேண்டும், தங்கள்
சந்தேகங்களுக்குத் தெளிவான பதில் வேண்டும் என்று விரும்
புகின்றனர். கம்யூனிஸ்டுகளுடன் லட்சியத் துறையில்
போட்டி போடுகையில் இம்மாதிரிச் சில சங்கடங்கள் நமக்கு
ஏற்படுகின்றன.

இந்தப் போட்டியின் வேகம் ஏறிக்கொண்டே போகிறது
என்பதை இரு சாராரின் ராஜதந்திரிகள் பேச்சுகளில் காண்
கிறோம். இந்தச் சம்பாஷணைகள் ஒருசமயம் நம்பிக்கையூட்டு
கின்றன. மற்றொரு சமயம் அபாயமான அளவுக்குக் கவலை
அளிக்கின்றன. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா மற்றும்
மத்திய உலகம் பூராவிலும் ஒவ்வொன்றும் இந்த நூற்றாண்
டில் தங்கள் நாடு மட்டுமே பிரமாதமாகச் செயலாற்றப்

போவது போல் பேசுகின்றன. ஆனுல் திட்டமான எதிர்
காலத்தில் எல்லா நாடுகளும் சேர்ந்தே உலக அரங்கில் பணி
யாற்றப் போகின்றன என்பதற்கான சூசகங்கள் தென்படு
கின்றன இந்த உண்மை அந்நாடுகளில் சிலவற்றிற்குக் கசப்பா
யிருப்பினும் அவ்வாறுதான் நிகழும்போ
இந்த நாடுகளில் ஒவ்வொன்றும் திருப்தி விருக்கிறது.
உலக நிலை மாருவிட்டால், யாருமே சகித்துக்கொள்ள முடி
யாத நிலை ஏற்படும் என்பது தெளிவாகப் புலப்படுகிறது.
இதன் மூலம் பலதரப்பட்ட நாடுகள் ஒன்றுகூடி வாழ
வேண்டும் என்று அர்த்தமா? ஆம்! கூடி வாழ்தல் என்றால்
வாளாவிருத்தல் என்று கொண்டால், அது அந்தச் சொல்
லிற்கு மாருன பொருள் என்றுதான் கூறவேண்டும். ரஷியா
வும், சீனுவும், யுத்தம், வகுப்பு வித்தியாசம் இரண்டையும்
தீர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு தங்களிஷ்டப்படி
றில்லாவிட்டாலும், பின்னர் செயல் புரியக்கூடும். எம்மாதிரிச் இன்
சாதனங்களை அவர்கள் பயன்படுத்துவார்கள்? ஆயுத பலத்
தைக்கொண்டு மிரட்டலாம், ஸ்டாலின் சகாப்தத்திற்குப்
பிறகு செய்த மாதிரி ராணுவ வாசனையற்ற பிற சலுகைகளை
அளிக்கலாம். புதிய கருத்துக்கள், புதிய வாக்குறுதிகள்,
புதிய சமாதான யோசனைகள், புதிய பொருளாதாரத் திட்
டங்கள், புதிய அரசியல் கொள்கைகள், புதிய கலாசாரப்
பரிவர்த்தனை முயற்சிகள், ராஜதந்திரத் துறையில் சுமுக
மான போக்கு இவைகளில் எதையும் அவர்கள் கையாளலாம்.
இந்த நிலையில் மத்திய உலகில் வாழும் மக்கள் என்ன
செய்வர்? அவர்கள் எதையும் பெரிதும் சந்தேகக் கண்
கொண்டு பார்க்கலாம். தங்களை வாட்டும் பிரச்னைகளைத்
தீர்ப்பதில் ஈடுபட்டிருக்கலாம். எதற்கும் நேரடியான பொறுப்
பேற்கத் தயாராயில்லாதிருக்கலாம். மத்தியஸ்தம் செய்யா
விட்டாலும், எல்லாப் பிரச்னைகளிலும் அணு ஆயுத அ
பலம்கொண்ட இரு கட்சிகளிலும் சேராமல், நடுநிலைமையான
வழியைப் பின்பற்றலாம். எப்படியாவது சுதந்திரம் பெறுவ
தெனும் உறுதி பெற்று, ஜாதி அல்லது நிற வித்தியாசம்
பாராட்டாமல் தங்களைப் பிறர் மதிக்கும் உரிமை பெற்று
அதன் மூலம் தங்கள் நாட்டு மக்கள் சுகவாழ்வு பெறுவதற்கு
வழிகாணலாம்.

புரட்சிகரமான இவ்வுலகில் எல்லா நாடுகளும் ஒன்றை
யொன்று அண்டி வாழவேண்டியிருக்கிறது. புராதனமான,
உலகத்தின் கதியையே பாதிக்கக்கூடிய யுத்தம், வகுப்பு வித்
தியாசம் எனும் பிரச்னைகள் உலக மக்களை வாட்டி வருகின்
றன. சிக்கல் வாய்ந்த, உலக வியாபகமுள்ள, இந்தச் சவாலை
ஏற்று அமெரிக்கா சிறப்பான பணியாற்ற முடியுமா என்பதே
அடிப்படையான பிரச்னை.

## அத்தியாயம்—33

# உலகாளும் அமெரிக்காவா?

**பி**ரச்னை தீர வேறு வழி உண்டா? இனி நாம் தனித்து நிற்கமுடியாது. ஆகையால் இதற்கு நேர்மாருன பழைய ரோம சாம்ராஜ்ய வழியைப் பின்பற்றமுடியுமா? நம்மிடமுள்ள ஏராளமான பொருளாதார, ராணுவ பலத்தைப் பயன்படுத்தி, பழைய பொருளாதார நிலையை நிலைபெறச் செய்யலாமா? எல்லோர் நலனுக்காகவும், ஏன் புதிய வகையில் அமெரிக்க சாம்ராஜ்யத்தை அமைக்கலாகாது?

இந்த முறையைப் பின்பற்றிஞல், அமெரிக்காவைப் புகழேணியில் ஏற்றிய, ஆளப்படுபவர்கள் சம்மதம் பெற்ற ஆட்சி நடத்துவதென்னும் கொள்கையைக் கைவிட்டவர்களாவோம். 'பிரத்தியட்ச நிலையில் அரசியல்' நடத்தவேண்டும் என்று வாதம் செய்பவர்கள் இந்தப் பதிலை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இவர்களைத் திருப்தி செய்யவேண்டுமெனில், சாம்ராஜ்ய சாதனம் சாத்தியமா என்று நிர்த்தாட்சண்யமாக நம்மையே நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.

இது சம்பந்தமாக நாம் கவனிக்கவேண்டிய அம்சங்கள் மிகவும் தெளிவானவை. சாம்ராஜ்யம் அமைப்பதற்குப் பலாத்காரத்தைப் பயன்படுத்தவேண்டும்; அல்லது பயன்படுத்துவதாக எச்சரிக்கை செய்யவேண்டும். எல்லா கண்டங்களிலும் பொங்கிவரும் வகுப்புப் புரட்சிகளையும், தேசியக் கலவரங்களையும் அடக்குவதற்கான ராணுவபலம் நம்மிடமிருக்கிறதா? ரோம சாம்ராஜ்யத்தினர் மாதிரி நிர்ப்பந்தமாக சமாதானத்தை நிலைநாட்ட நம்மிடம் வசதி இருக்கிறதா? இருதரத்தாரிடமும், அணு ஆயுதங்கள் இருப்பதனுலும், அவைகளைப் பிரயோகிப்பதற்கான சக்தி இருப்பதனுலும், முக்கியமான மற்ருெரு பிரச்னையை நாம் கவனிக்கவேண்டும். யுத்தத்தின் விளைவு என்ன ஆகும்? ஒரே ரோம் சாம்ராஜ்யம் ஏற்படுமா அல்லது இரண்டு *கார்த்தேஜ் நகரங்கள் ஏற்படுமா?

*கார்த்தேஜ் (Carthage) என்பது வட ஆஃப்பிரிக்கக் கடற்கரையிலுள்ள நகரம் ரோம சாம்ராஜ்ய காலத்தில் அதற்கும் கார்த்தஜீனியர்களுக்கும் பன்முறை கடும்போர்கள் நிகழ்ந்தன. இந்த நகரம் ஒருமுறை அழிக்கப்பட்டு, புது நகரை ஸீஸர் நிர்மாணம் செய்தார். இந்நகரம் அழிவுற்ற மாதிரி விளைவுகள் ஏற்படலாம் என்பதையே ஆசிரியர் இங்கு சுட்டிக்காட்டுகிருர்.

அணுகுண்டு யுத்தத்தின் விளைவுகள் கார்த்தேஜ் நகர் அழிக்கப்பட்டது போல் பயங்கரமாகவே இருக்கும். மிகுந்த சக்திவாய்ந்த அணுஆயுதங்கள் தரையில் வெடிப்பதனால் சகிக்க முடியாத உஷ்ணம் வெளிப்பட்டு, விழுந்த இடத்தை நொறுக்குவதுடன், 80,000 அடி உயரத்திற்குத் தரையிலுள்ள அசுத்தங்களையும் இடிபாடுகளையும் விசிறியடிக்கும். 1954 வசந்த காலத்தில் அமெரிக்கா, பசிஃபிக் பகுதியில் ஜலவாயு குண்டை வெடித்துப் பார்த்தது. நியூஜெர்ஸி போன்ற 7000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள இடத்தில் சர்வநாசம் செய்யக்கூடிய மின்சக்தி வாய்ந்த துகள்களை வாரி இறைத்தது. இவ்வாறு அணுசக்திக் கமிஷன் அறிக்கை கூறுகிறது. இந்த விளைவுகளை அறிந்தவர்கள் ஜலகுண்டுகள் வெடிப்பதனால் சுற்றுப்புறமுள்ள மக்களுக்கு நரக அநுபவம் ஏற்படுகிறது என்று கூறுகின்றனர்.

நமக்குத் தெரிந்த மட்டில், சோவியத்தினரின் பலத்தையும் இன்னும் அவர்கள் பெறக்கூடிய அழிவு சக்தி வசதிகளையும் கொண்டு, அவர்கள் இழைக்கக்கூடிய தீங்குகளை சமஷ்டி சிவில் பாதுகாப்பு நிர்வாகம் இவ்வாறு வரிசைப்படுத்தி இருக்கிறது. அமெரிக்காவில் எந்த நகரத்தையும் ரஷ்யா தாக்க முடியும். அவர்கள் தாக்குவதாயிருந்தால் அணு ஆயுதங்கள், தெர்மோ அணு ஆயுதங்கள் (Thermo Nuclear weapons) கொண்டு தாக்கலாம். இவைகளை விமானத்திலிருந்து தரைக்குமேலே மக்கள் வேலை செய்து கொண்டிருக்கும் நேரத்தில் எறியலாம். இப்படி எறிந்தவுடன் மிகுந்த நாச சக்தி வாய்ந்த குண்டுகள், விஷக்கிருமி குண்டுகளை எறியலாம். அமெரிக்க ரேடியோ மூலம் மக்கள் மனத்தை மாய்க்கவல்ல முறையில் பிரசாரம் செய்யலாம்.

யுத்தம் நிகழ்ந்தால் அமெரிக்கர் ''குழிவெட்டி அதில் மறைந்து கொள்ளவேண்டும்; அல்லது சாக வேண்டும்; அல்லது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்'' என சிவில் பாதுகாப்பு அதிகாரி வால் பீடர்சன் (Val Peterson) கூறினார். 1955 ஜூன் 15-ஆம் தேதியன்று பாதுகாப்பு நிர்வாகத்தினர் அணுகுண்டுத் தாக்குதல் வந்தால் எப்படி அதைச் சமாளிக்கலாம் என்பதை அறிவதற்கான ஒத்திகை செய்துபார்த்தனர்.

அமெரிக்காவிலுள்ள 61 முக்கிய நகரங்களை ஒரே சமயத்தில் மிகுந்த நாச சக்தியுள்ள அணுஆயுதங்கள் கொண்டு தாக்கினால், எல்லா நகரங்களின் தொழில் ஆலைகளும் அழிந்து, 25 கோடி மக்கள் தங்க நிழலின்றித் தவிக்க வேண்டும்.

நியூயார்க் நகரத்தில் உள்ள பள்ளிச் சிறுவர் உள்பட 20 லட்சம் பேர் மடிந்துபோவார்கள். பிலடல்பியாவில் 740,000 பேர் உயிர் இழந்து விடுவார்கள். லாஸ் ஏஞ்சல்ஸில்



584,000 பேர் உயிர் துறப்பர். நியூ இங்கிலாந்தில் இறந்து போகக்கூடியவர்கள், காயமடையக்கூடியவர்கள் எண்ணிக்கை 60 லட்சமாயிருக்கும்.

இம்மாதிரித் தாக்குதலின் விளைவாக மக்கள் எந்த அளவுக்கு வெளியேறுவர் என்பதையும் ஆராய்ந்து பார்த்தனர். எந்த நகரமும் தங்களது ஜனங்களை வெளியேற்றத் தயாராயில்லை. அகதிகளை ஏற்றிச்செல்ல வாகன, உணவு, வைத்திய வசதிகள் பற்றிய விரிவான திட்டம் தயார் செய்ய ஏற்பாடாகவில்லை. சமஷ்டி, ராஜ்ய அதிகாரிகள், சிவில், ராணுவ ஸ்தாபனங்கள் இவைகளில் யார் யார் எந்தெந்தப் பொறுப்பேற்பது என்பது பற்றி எவ்வித நிர்ணயமான திட்டமும் இல்லை. ஆலைகளை அப்புறப்படுத்த, முனிசிபல் பகுதிகளிலும் வீடுகளுக்கடியிலும் பாதுகாப்பான தங்குமிடம் கட்ட சிவில் பாதுகாப்பு நிர்வாகத்தினரிடம் போதிய ஆட்களோ, பணமோ இல்லை.

உண்மையிலேயே தாக்குதல் ஏற்பட்டால் எவ்வித நஷ்டம் ஏற்படும் என்பது பற்றி இந்த எச்சரிக்கை ஒத்திகை பூரணமான மதிப்பீட்டை வெளியிடவில்லை என விமர்சகர்கள் எடுத்துக்காட்டினர். ஒத்திகையில் உபயோகிக்கப்பட்ட குண்டுகள் பழைய காலத்து, விசை குறைவானவை என்றும் குறை கூறினர். 1954, மார்ச் மாதம் பிக்கினியில் (Bikini) நடத்திய சோதனையில் டி. என். டி.* யில் 200 லட்சம் கனம் சக்தி உள்ளது என்றும், ஒத்திகையில் உபயோகிக்கப்பட்டதைவிட நான்கு மடங்கு சக்திவாய்ந்தது என்றும் கூறப்பட்டது.

இம்மாதிரித் தாக்குதல்களால் மனித உயிர் நாசமாவது பற்றி பத்திரிகை நிருபர்கள் ஹேஷ்யமாக எழுதி வருகையில், விஞ்ஞானிகள் நேரடித் தாக்குதலினால் மனித உயிருக்கு அதிகமாக அபாயம் ஏற்படும் என்பதைத் திட்டமாகக் கூறிவந்தனர். மிக மலிவான அணுசக்தி சாதனங்களைக் கொண்டு அசாத்திய கனம் வாய்ந்த ஜலவாயு குண்டு செய்யலாம் என்று அணுசக்திக் கமிஷன் உறுப்பினரான டாக்டர் வில்லர்டு எஃப். லிபி (Willard F. Libby) 1955 ஜூனில் செய்த பிரசங்கத்தில் கூறினார். மேலும் ஜலவாயு குண்டுகளை வெடிப்பதனாலேயே நாச சக்தியை வெளியிடலாம் என அவர் குறிப்பிட்டார். சாமானியமான, மலிவான 238 எண் உரேனியமே பெரிதும் வெடிக்கும் சக்தியை அளிக்கிறது என்பதை அவர் பௌதிக விஞ்ஞானிகளுக்குச் சுட்டிக்காட்டினார்.

டாக்டர் லிபி கூறிய விஞ்ஞான உண்மைகளின் விளைவுகளைக் கவனிக்கலாம். சாதாரண அணுகுண்டு செய்யக்

* டி. என். டி. (TNT) கரியமில வாயு, ஜலவாயு, நைட்ரஜன் வாயு, பிராணவாயு எல்லாம் சேர்ந்த வெடிகுண்டு. இது பொருத்தினால்தான் வெடிக்கும்.

கூடிய எந்த நாடும் சற்றுச கூடுதலான முயற்சி செய்தால்,
மிகச் சக்தி வாய்ந்த வெடி ஆயுதங்களைச் செய்துவிடலாம்.
238 எண் உரேனியம் மலிவாகக் கிடைப்பதனால் மிகப்பெரிய
குண்டுகளை எளிதில் செய்துவிடலாம். இந்த குண்டு வெடிப்பு
பல நாட்கள், வாரங்கள், மாதங்களுக்குக்கூட நீடிக்கலாம்.
நியூயார்க்கைப்போல் இரு மடங்கு விஸ்தீரணமுள்ள 100,000
சதுர மைல் பூமியை நாசம் செய்யக்கூடிய குண்டுகளுக்கு
எதிராகப் பாதுகாப்பு செய்துகொள்வது சாத்தியமில்லை.

வெளிநாடுகளிலிருந்து, நம் நாட்டில் இவ்வளவு நாசம்
விளைவிக்கக்கூடும் என்பது அமெரிக்கருக்குப் புதுமையாயிருக்
கிறது. ஆகையால் அவர்கள் சோம்பிக்கிடந்துவிடுகிறார்கள்.
அல்லது விதியை நொந்துகொண்டு சும்மாயிருந்துவிடுகின்
றனர். ஏனெனில். இவ்விஷயத்தில் அரசாங்கத்தாருக்குத்
தெளிவான கொள்கை கிடையாது. மக்களுக்கு உண்மை
நிலையை உணர்த்தும் தலைவர்களும் இல்லை. நம் நாட்டில்
பிரத்தியட்ச நிலை அறிந்து நடப்பவர்கள் என்று ஒரு சாரார்
இருக்கின்றனர். பழைய ரோம சாம்ராஜ்யம் மாதிரி அமெரிக்
காவும், ஆயுத பலத்தைக்கொண்டு உலகத்து நாயகனாக
இருக்கலாம் எனும் எண்ணம் இந்தப் பிரத்யட்சவாதிகளின்
மனங்களை ஆட்கொள்ளுகிறது.

இப்படிச் சிந்திப்பவர்கள் தோல்வி மனப்பான்மை
கொண்ட சிறுபான்மையினர். பிரளயத்தைத் தடுப்பதற்கான
யுத்தத்தைத் தொடங்குமாறு பகிரங்கமாக அமெரிக்கர்களை
இணங்க வைப்பது சாத்தியமில்லையென்பதை இவர்கள்
உணர்ந்துவிட்டனர். ஆகையால் தந்திரமாக வேலை செய்
கின்றனர். எதாவது ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு
யுத்தம் தொடங்கவேண்டும். கடுகை மலையாக்குவதுபோல்
சிறு சம்பவங்களைப் பெரிய சண்டையாக வளர்க்கவேண்டும்.
உலக யுத்தத்தைத் தவிர்க்க முடியாது என்கிற நிலைக்கு எப்
படியாவது நாட்டைக் கொண்டுவந்துவிட வேண்டும்.

''தடுப்பு யுத்தம்'' எனும் இந்தத் திட்டம் எவ்வகையில்
தொடங்குவதும் சாத்தியமேயில்லையென்பதற்குப் பல கார
ணங்கள் இருக்கின்றன. உலகப் பிரச்னைகள் எவ்வளவு
கடுமையாகவோ, பயங்கரமாகவோ இருப்பினும், உடனடி
யாகத் தீர்க்கும் வகையிலோ அல்லது ஒரு வழியில்தான் தீர்க்
கலாம் என்றோ கூறத்தக்கதாக இல்லை.

முதலில் மாஸ்கோவினால் தொடரப்பட்டது மாதிரியே
சோவியத் எதிர்த்தாக்குதல் ஆபத்தானதா யிருக்கலாம்.
மேலும் உலக மக்களில் பெரும்பாலோர் அமெரிக்காவிடம்
அநுதாபம் காட்டாத இச்சமயத்தில் எதிரி நம்மைத் தாக்க
லாம். இம்மாதிரி நிலையில் யுத்தம் நிகழாமல் எப்படித்
தடுப்பது? தடுப்பு யுத்தத்தால் என்ன பயனுள்ள அரசியல்



நோக்கங்களைச் சாதித்துக்கொள்ளலாம்? ரஷ்யாவையும்,
சீனாவையும் அணுகுண்டுத் தாக்குதலால் அழிப்பதனால் என்ன
நிகழும்? இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டு ஆசியா
வும், ஐரோப்பாவும் ஸ்தம்பித்துப்போகும். அமெரிக்கா
குற்றவாளி மாதிரி விழிக்கவேண்டி வரும். அப்புறம் நாம்
ரோம் சாம்ராஜ்யம் மாதிரி ஆள்வதற்கு ஒன்றுமிராது. உல
கத்தார் நம்மை மதிக்கவேமாட்டார்கள்

* * *

தடுப்பு யுத்தத்தின் மூலம் அமெரிக்காவை ரோம் சாம்
ராஜ்யமாக்க முடியாது எனில், அவ்வளவு ஆடம்பரமில்லாத
முறையில் ஒரு சாம்ராஜ்யத்தை அமைக்க முடியாதா? சாம்
ராஜ்யம் அமைப்பு கூடாது என்று அமெரிக்கா தீர்மானமாக
முடிவு செய்தாலும், அது அமையாமல் தவிர்க்க முடியுமா?

அதற்கென்று முனையாமல் சில சமயம் சாம்ராஜ்யங்கள்
தாமாகவே உருவாகின்றன. ஒன்றையொன்று ஈர்க்கும்
சக்தியுள்ள உலகத்தில் நாம் வாழ்கிறோம். தனதுபோன்ற
வாழ்க்கை, ஆட்சி முறை நிலவும் நாடுகளில் அமெரிக்கா
முதல் ஸ்தானம் வகிக்கிறது. அதனிடம் ஏராளமான ஆயு
தங்கள் இருக்கின்றன. அநேகமாக எல்லாத் தொழிலும்
பணமும் அதனிடம் மட்டின்றிக் குவிந்து கிடக்கின்றன.
ஆகையால் இதைப்போன்ற நாடுகள்பற்றி முடிவுகள் வாஷிங்
டனில் செய்ய நேரிடுமானால் ஆச்சரியப்படுவதற்கில்லை.
எதையும் பிறர் உதவியின்றிச் சாதித்துவிடலாம் எனும் மனப்
பான்மை நமக்கு ஏற்பட்டால், நமது நேச நாடுகள் நம்மை
அண்டி வாழ முன்வரலாம்.

இலட்சக்கணக்கான அமெரிக்கரல்லாதாரைப் பாதிக்கக்
கூடிய அணுகுண்டுத் தாக்குதல்பற்றி, நாம் பலம் பெற்ற
நாடாயிருப்பதனால் நம் சொந்தப் பொறுப்பில் முடிவு செய்து
விடலாம் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் தங்களைக்
கேட்காமல், எந்தப் பகுதியையும் அழிக்கலாகாது என்று நம்
நேச நாடுகள் வற்புறுத்தினால், நாம் ஆச்சரியப்படுவதற்
கில்லை. யுத்த கெடுபிடி தளரத்தளர அவர்கள் சுதந்திர
உணர்வு வளரும்.

நமது நேய நாடுகளில் பெரிதான பிரிட்டிஷாரின்
உணர்ச்சியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அமெரிக்கா
மீது பகைமை கொள்வதே தொழிலாகக்கொண்டவர்கள்
ஐரோப்பாவைப்போல் அவ்வளவாக பிரிட்டனில் கிடையா.
எனினும், நம்மீது வெறுப்புணர்ச்சி அந்நாட்டில் பரவியிருக்
கிறது. நீண்டகால அதிகாரம் செலுத்திய நாடு பிரிட்
டன்; உலக விவகாரங்களுக்குப் புதிதான அமெரிக்காவுடன்
இணைந்து, கூட்டாளியாயிருப்பதை அந்நாடு சுலபமாக
விரும்பும் என எதிர்பார்க்க முடியாது.

இந்த மனோபாவம், சில சமயம் அமெரிக்கரைப் புண்
படுத்தும் கிண்டல் பேச்சாக வெளிவருகிறது. ''மாஜி
பிரிட்டிஷ் காலனிகளில் பொறுப்புள்ள சுயாட்சி பெறாத நாடு
என்று அமெரிக்கா சீக்கிரம் பெயர் பெற்றுவிடும்'' என்று
லண்டன் தூதராலய விருந்தொன்றில் ஓர் பிரிட்டிஷ்காரர் குத்
தலாகக் கூறினாராம். பிரிட்டிஷ் அயல் நாட்டிலாகா காரியால
யத்தில் பதவி பெறுவதற்கான பரீட்சையில் வெற்றி பெற்ற
ஒருவரை 'வாழ்க்கையில் மூன்று முக்கியமான விஷயங்கள்
என்ன?' என்று கேட்டனராம். அதற்கு, ''கடவுள், அன்பு,
ஆங்கில-அமெரிக்க நல்லுறவு'' என்று அவர் பதிலளித்தாராம்.
அமெரிக்கா சுய ஆட்சி பெறவில்லையென்று கேலி செய்தவர்
இந்தப் பதிலை ஒப்புக்கொள்வர் என எதிர்பார்க்கலாம்.
விவாதத்திற்கிடமான விஷயங்களை மேலோட்டமாகக் காண
முடிகிறது. ஆகையினால் நமக்குள் நிலவும் ஒருமைப்பாடு
மறைந்து விடுகிறது. ஒரே மாதிரியான எதிர்காலத்தை
நோக்கிச் செல்லுகிறோம் என்கிற உணர்வு உந்துகையில்
பழைய காலத்தில் பல நெருக்கடிகளை வெற்றிகரமாகச் சமா
ளித்திருக்கிறோம் என்பதை மறந்துவிடுகிறோம்.
எனினும் மேலுக்குத் தெரியும் பூசல்களே நிலைத்து விடு
கின்றன. இவைகள் அளவுக்கு மீறி நமது மனப்போக்கைப்
பாதித்துவிடுகின்றன. தன்னை எதிர்த்துப் பலதரப்பட்டவர்
கள் நிற்பதனால் தனது சங்கடங்களில் பாதி தீர்ந்து விடு
கிறது என நெப்போலியன் நினைத்தானாம். அவ்வாறே சில
சந்தர்ப்பங்களில் ரஷ்யத் தலைமைப்பீடமும் நம்மைப்பற்றி
நினைக்கலாம்.
நாம் சொல்கிறபடி ஆடுபவர்கள் துணை நிற்பதைவிட,
நமக்குச் சமதையானவர்கள் கூட்டுறவு சாலச்சிறந்தது. அதே
மாதிரி ஒரே வகைக் கோட்பாட்டில் பிணைபட்டிருப்பதை
விட ஜனநாயகம் சிறப்பு வாய்ந்தது. இம்மாதிரி கூட்டுறவி
னால் திறமை குறையலாம். பலதரப்பட்ட அபிப்பிராயங்கள்
உள்ள, ஆனால் பொதுவான குறிக்கோளுள்ளவர்கள் தங்கள்
கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுவதனால், நன்மையே ஏற்படு
கிறது. கூடிப் பேசி சமரசம் செய்யும் முறை அதிகமாக இடம்
பெறும். இதன் மூலம் பிரச்னைகள் தீர்வதற்குத் தக்க யோச
னைகள் உருவாகும். ஏனெனில் ஒவ்வொன்றையும் பற்றி விரி
வாக விவாதித்து வித்தியாசங்கள் அகற்றப்பட்டு விடுகின்றன.
இம்மாதிரி முறைகளின் மூலம் ஏற்பட்ட முடிவுகள் எல்லோ
ருடைய ஆதரவையும் பெறக்கூடும். இந்த முடிவுகளால்
இதில் சம்பந்தப்பட்டவர்களின் உண்மையான நலன்கள்
செவ்வனே பாதுகாக்கப்படலாம். இந்த சர்ச்சையிலும், சமர
சத்திலும் ஈடுபட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் தம்தம் கருத்
துக்களை வெளியிட்டோம் என்கிற மனத்திருப்தி ஏற்படும்.



இந்த மனப்பான்மையுள்ளவர்கள் பழைய தனித்திலங்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தீவிரவாதிகளாய் இன்று நம் நாட்டில் திகழ்கிறார்கள். இவர்கள் தனித்திலங்கும் கொள்கையின் அபாரச் சக்தியைப் புகழ்கிறார்கள். அந்நியர்களைச் சந்தேகித்து, அவர்களைப் பற்றி கவலை கொள்கின்றனர். மற்ற நாட்டினருடன் கலந்து பேசி ஒன்றுபட்டு முயற்சி செய்வதன் சிறப்பையோ அவசியத்தையோ இவர்கள் அறிவதில்லை.

தடுப்பு யுத்தத்தை மேற்கொள்வதையோ, புதிய சாம்ராஜ்யம் அமைப்பதையோ தெரிந்து ஆதரிப்பவர்களுக்குச் சாதகமாயிருப்பது, தங்கள் கருத்து சக்தி வாய்ந்தது, அதைப் பற்றிப் பேசி மக்களைக் கவரலாமென்கிற தன்னம்பிக்கைதான். ஆனால் அவர்கள் நிலையைக் கூர்ந்து கவனித்தோமானால், செய்வதற்கு வேறுவகையில்லையே என்கிற உணர்ச்சி வசப்பட்டுச் செயல் புரிபவர்கள் என்பது விளங்கும்.

அபாயத்தை லட்சியம் செய்யாதவர்கள் போல், தாக்கீதுகளை வெளியிட்டு, யுத்தம் ஏற்பட்டால் அதில் ஈடுபடத் தயாராயிருப்பது போல் காணப்பட்டாலும், மிரட்டி உருட்டுபவன் உள்ளூறப் பயந்துகொண்டிருப்போர் போன்றவர்களே இவர்கள். பார்க்கப் போனால், இம்மாதிரிப் பேர்வழிகளால் சாம்ராஜ்யங்கள் ஏற்பட்டதில்லை. ஆக்க சக்தியுடன், துணிவுடன் வாழக்கூடிய சுதந்திர உலகத்தை இவர்கள் சிருஷ்டிக்கவே முடியாது.

இன்னும் உறுதியான மனத்திண்மை வாய்ந்தவர்கள், சூதாட்டக்காரர் காயை அலட்சியமாக நகர்த்துவது போலல்லாமல் தம்மிடமுள்ள சாதனங்களை வகையாகப் பயன்படுத்தும் ஆற்றலுள்ளவர்களே சுதந்திர உலகைப் படைக்க முடியும். இம்மாதிரி உலகம் நிலைப்பதற்கு ராணுவ சமபலமும் நீடித்திருக்க வேண்டும். ஆயுத பலத்தினால் சாதிக்கக்கூடியது ஓரளவுதான் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

இந்த நலன் விளைவதற்காக நமது ராஜதந்திர சாதுர்யம், பொருளாதார சாதனம் யாவற்றையும் பயன்படுத்த வேண்டும். மேலும் நீடித்துவரும் நமது அமெரிக்கப் புரட்சியைத் தூண்டிய, அதனால் விளைந்த ஏராளமான தார்மிகச் சக்தியை இதுவரைக் கண்டிராத அளவில் பயன்படுத்த வேண்டும்.

நம்மை எதிர்நோக்கியுள்ள சவாலை சமாளிக்கவல்ல கொள்கைகளை வகுக்கையில், மேற்குறிப்பிடப்பட்ட பிரச்னைகளே நமது கவனத்தைப் பெரிதும் கவரும்.

பகுதி-8

# புரட்சி நிறைந்த உலகில் அமெரிக்காவின் கொள்கை

அமைதியான கடந்த காலத்துக் கொள்கை, கொந்தளிப்பு நிறைந்த தற்காலத்திற்குப் பொருந் தாது. தற்காலம் சங்கடம் நிறைந்ததாயிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் பணிபுரிய முன் வரவேண்டும். நமக்கு ஏற்படவிருக்கும் அநு பவம் புதிது. ஆகையால் புதிய முறையில் சிந்தித்துப் புதிய முறையில் செயலாற்ற வேண்டும். நாம் சுதந்திரப் புருஷர்களாக வேண்டும். அப்போது தான் நம் தேசத்தை நாம் காப்பாற்ற முடியும்.

**ஆப்ரஹாம் லிங்கன்**

*அத்தியாயம்—34*

# ராணுவச் சக்தியின் பயனும் வரம்பும்

**யு**த்த பிற்காலத்தில் நம் நாட்டில் இரண்டு ஜனாதிபதி கள் ஆட்சி நடைபெற்றிருக்கின்றது. இந்தக் காலத்தில் சோவியத், சீன வகை கம்யூனிஸத்தைத் தடுத்து நிறுத்தும் வகையிலேயே குறிப்பாக நமது தந்திரம் அமைந்து வந்திருக் கிறது. இந்தத் தந்திரம் "நமது பலம் பொருந்திய நிலை" மூலம் எதிரியை முன்னேறாமல் தடுப்பது தான். பலம் பெறு வதற்கு முக்கியமான ஆதாரம் ராணுவச் சக்தியென்றே நமது தந்திரம் வகுப்போர் கருதி வந்திருக்கின்றனர். இதுபற்றி பின்னர் ஆராய்வோம். முந்திய அத்தியாயங்கள் மூலம் நாம் அறிந்து கொண்ட புரட்சிகரமான உலகில் நமது ராணுவ தந்திரத்தைக் கவனிப்போம்.

சென்ற பத்து ஆண்டுகளில் நமது ராணுவத்திற்கு, மாறு பட்ட இருவகைப் பணிகள் அளிக்கப்பட்டு வந்திருக்கின்றன:- (1) மேற்கு ஐரோப்பாவைத் தாக்குவது, அல்லது அமெரிக் காவை அணு குண்டுகளால் அழிப்பது போன்ற கம்யூனிஸ்ட் செயல்களால் உலகச் சமர் ஏற்படாமல் தடுப்பது. (2) குறிப் பிட்ட சில இடங்களில் ராணுவ சேவை செய்தல். உதாரண மாக புராதன ஆயுதங்களுடன் கம்யூனிஸ்டுகள் கொரியாவில் போர் தொடுத்ததை நம் படைகள் தடுத்ததைக் கூறலாம்.

1945-இலிருந்து 1955 வரையுள்ள பத்து ஆண்டுகளில் நமது ராணுவத்தினர் இவ்விருவகைப் பணிகளை எப்படி நிறைவேற் றினர் என்பதைக் கவனிப்போம். புரட்சிகரமான அடுத்த பத்து ஆண்டுகளில் நமது ராணுவத்திற்கு உற்ற பணி என்ன, எந்த அளவுக்கு ராணுவ பலம் பயன்படும் என்பதை அறிந்து கொள்ள இந்த ஆராய்ச்சி பயன்படும்.

உலக யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும். இந்த யுத்தம் அணு குண்டு சாதனத்துடன் தொடங்கப்படலாம்; இதனால் நாசம் விளையும். பெரியதோர் தாக்குதலை சமாளிக்க வேண்டி வரும். கேந்திரமான இடத்திலிருந்து நமது விமானப்படைத்

தாக்குவதையே இம்மாதிரித் தாக்குதலைச் சமாளிப்பதற்கு இதுவரை நாம் பெரிதும் நம்பி வந்திருக்கிறோம்.

நம் நாட்டிலும் ரஷ்யாவிலும் அணு ஆயுத உற்பத்தியை வெற்றிகரமாகப் பெருக்கியதனால், ராணுவ உலகில், அணுகுண்டின் பிரயோசனம் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது என்பது புதிர் போலத் தான் இருக்கிறது. இந்த ஆயுதங்களின் நாச சக்தி பெருகப் பெருக, இவைகளால் ஏற்படக் கூடிய தீமைகள் வளர வளர இவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் உலக அணு ஆயுத யுத்தத்தை வரவழைப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைந்து கொண்டே வருகின்றன.

இந்த விசித்திரமான நிலையினால் பிரம்மாண்ட அளவில் எதிர்த் தாக்குதல் செய்வது எனும் கொள்கை பயனற்றுப் போய் வருகிறது என்பது ஏற்கனவே தெளிவாகிவிட்டது. அணுகுண்டு ஆயுதம் உபயோகித்தால், நமது காலாட்படைக்குத் தேவையிராது என்று 1954 ஜனவரியில் ஆடம்பரமாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு நான்கு மாதங்களுக்குப் பின், இந்தோ சீனாவில் இந்த முறை பயன்படாது என்பது தெரிந்துவிட்டது.

பிரம்மாண்டமான அளவில் எதிர்த் தாக்குதல் செய்வது என்றால், உலக யுத்தத்தைத் தவிர்ப்பது. ஸ்தல யுத்தங்களில் பங்கு கொள்வது-ஆகிய இரண்டு பணிகளையும் நமது விமானப் படைக்கு அளிப்பது என்றாகிறது. ஆசியாவில் ஒரு பகுதியில் இது பயன்படவில்லை என்பதிலிருந்து இந்த ராணுவ முறை உலக நிலையைச் சமாளிக்கப் பொருந்தாது என்பதும் தெளிவாகத் தெரிந்துவிட்டது.

அணு ஆயுதங்களைக் கொண்டே போர் புரிவதை ஒரு திட்டமான யுத்த முறையாக நிலைநாட்டலாகாது. இந்த முறையையே கைக்கொள்வதனால் பிற வழிகளில் போர்புரிய நாம் அசக்தர்கள் என்கிற நிலையும் ஏற்படலாகாது. இது தெளிவாகத் தெரிகிறது. எனினும் இந்த அணு ஆயுதப் போர் முறையை நாம் கைக்கொண்டால், நமது நேய நாட்டினர் பிரம்மாண்டமான இறுதிப் போரையே நாம் ஆதரிக்கிறோம் என நினைக்கின்றனர்.

ஆனால் ஐரோப்பாவில் இந்த பிரம்மாண்ட அணு ஆயுதப் போர் முறையை அடிப்படையாகக் கொண்ட கொள்கை புதிதல்ல. சோதனை செய்யப்படாததுமல்ல. 1946-இல் நாம் அவசரப்பட்டு படைக் கலைப்பில் ஈடுபட்டதிலிருந்து, 1950-இல் வட அட்லாண்டிக் உடன்பாட்டு ஸ்தாபனம் அமைக்கும் வரையில், எல்பே நதியிலிருந்து அட்லாண்டிக் கடற்கரை வரை ராணுவ சூன்யமான பகுதியில் செஞ்சேனை புகுந்து தாக்காமல் தடுத்த தனிப்பெறும் சக்தி எது? நம்மிடம்



மட்டுமே அணு ஆயுதம் இருந்ததனால் ரஷ்ய நகரங்களை நாம் அழித்துவிடக்கூடும் என்கிற அச்சம்தான்.

ஐரோப்பாவை ரஷ்யா தாக்கினால் அதை நம்மைத் தாக்குவதாகக் கொள்ளுவோம். உடனே நாம் ரஷ்யப் படைகளை மட்டுமல்ல, ரஷ்ய நகரங்களையும், அணு குண்டுகளால் தாக்குவோம். இப்படித் தாக்குவதனால் உலக யுத்தம் ஏற்பட்டு நம் நாடு நாசமடையுமானாலும், ரஷ்யாவைத் தாக்கத் தயங்கமாட்டோம். இதை ரஷ்யர் அன்றும் இன்றும் நன்கு அறிவர். இவ்விஷயத்தில் ''நேடோ''வின் நிலை என்ன என்பது பன்முறை விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. ''நம்முடைய ராணுவ நடைமுறை பாதுகாப்புத் திட்டத்தில் அணு ஆயுதங்களைக் கொண்டு எதிர்த்துத் தாக்குவோம் என்பதை நான் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன்'' என்று தளபதி மான்ட்கோமரி (Montgomory). 1954 அக்டோபர் 21-ந் தேதி கூறினார்.

ஆசியாவில் ஆஃப்கானிஸ்தான், பர்மா, ஈரான் அல்லது இந்தோ-சீனாவில் ஆக்ரமிப்பு ஏற்பட்டால் மாண்ட்கோமரி கூறியபடி அணு யுத்த அபாயத்தை அமெரிக்கா ஏற்குமா? கொரியா யுத்தம் பெரிதாக வளர்ந்ததிலிருந்தும், இதை விடக் குறைவான அளவில் இந்தோ சீன யுத்தத்தில் ஏற்பட்ட அநுபவத்திலிருந்தும் இந்தப் பொறுப்பை நாம் ஏற்க மாட்டோம் என்றே தோன்றுகிறது.

ஐரோப்பிய யுத்தத்தில் அமெரிக்கா ஈடுபடுவதற்கும், ஆசிய யுத்தத்தில் பங்கு கொள்வதற்கும் முக்கியமான வித்தியாசம் இருக்கிறது என்பதை அநேகமாக ரஷ்யர்களும், சீனரும் நன்கு அறிவர். போதிய அளவு ஆயுதக் குறைப்புப் பாதுகாப்பு ஏற்படும் என்கிற நிச்சயமில்லை என வைத்துக் கொள்வோம்; எதிர்பாராத வகையில் அபாயங்கள் விளைவிக்கக்கூடிய எதிர்த் தாக்குதல் முறையில் நம்பிக்கை வைத்து ஆசியாவில் செயல்புரிகிறோம் என வைத்துக் கொள்வோம்; அதே சமயத்தில் குறுகிய நிலப்பரப்பில் நடக்கும் சண்டைகளைச் சமாளிக்கும் சக்தியையும் இழந்துவிட்டால் என்ன நிகழும்? ஆசியாவில் ஸ்தல ஆக்ரமிப்புகள் நிகழாமல் தடுக்க முடியாது என்பதுடன் இம்மாதிரிச் சண்டைகள் நிகழ வழி செய்தவர்கள் ஆவோம்.

உலக யுத்தம் ஏற்படும் எனத் தெரிந்தும் ஸ்தல ஆக்ரமிப்புகளை எதிர்க்க அணு ஆயுதங்களை உபயோகிக்கத் தயாராயிருந்து, ஆனால் குறைவாக அவைகளை நாம் பயன்படுத்தினால், நமது சக்தியை கம்யூனிஸ்டுகள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் போய்விடலாம். சிறு ஆசிய யுத்தங்களைத் தடுப்பதன் மூலம் உலக யுத்தம் தோன்றுவதை நாம் விரும்பவில்லையென்று கம்யூனிஸ்டுகள் நினைப்பார்களானால் இந்தோ-

சனுவில் நிகழ்ந்தது போல், நாம் ஏமாந்து போய்விடு
வோம். ஆகையால் அணு ஆயுதங்கள் மூலம் உலக யுத்
தத்தைத் தடுக்கலாம் என்கிற மதிப்பு மறைந்துவிடும்.
தெரிந்து, பெரிய அளவில் அணுகுண்டுத் தாக்குதலில்
நாம் ஈடுபட்டால், நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான
தார்மிகப் பிரச்னை கிடையாதா? நாம் மதப்பற்றுள்ள மக்கள்;
மனிதன் கடவுளின் புனித உடமை என்று நம்புகிறவர்கள்;
தனிப்பட்டவன் மதிப்புக்குரியவன் எனும் ஜனநாயகக்
கொள்கையில் நாம் என்றும் பெருமை பாராட்டி வந்திருக்
கிறோம். இந்த நம்பிக்கைகள்தாம் நம்மைக் கம்யூனிஸ்டு
களுக்கு மாறுபட்டவர்கள் என நிரூபிக்கிறது.
இந்த நிலையில் சீன நகரங்களில் குண்டு வீசுவது என்றால்
லட்சக்கணக்கான சீன ஆண், பெண் குழந்தைகளைக் கொல்ல
விரும்புகிறோம் என்று கருதுவார்கள். சோவியத் மக்களிடம்
இருப்பது போல் சீன மக்களிடம் தாக்குவதற்கான ராணுவ
அல்லது தொழில் துறை சாதனங்கள் இல்லாமலிருக்கையில்,
அவர்களை நாசம் செய்கிறோம் என்று நினைப்பர். அவர்களை
ஆள்பவர்களைத் தண்டிப்பதற்காக அந்த ஆட்சிக்குட்பட்ட
நிராதரவான மக்களைக் கொல்ல நாம் தயாராயிருக்கிறோமா?
சோவியத்தினர் நம்மைத் தாக்கினால் அதனால் ஏற்படக்
கூடிய அபாயத்தை நம்மைப்போல் அறிந்தவர்கள் ஐரோப்
பாவிலும் இருக்கின்றனர். இந்தத் தாக்குதலை அணுகுண்டு
களின் உதவியினால் எதிர்த்தால், ஐரோப்பாவிலுள்ள
நமது நேயநாட்டினர் சுலபமாக நம்மை ஆதரிக்கமாட்டார்
கள். கடைசிச் சண்டை தவிர மற்றதில் ஜனநாயக நாடுகள்
தோல்விபெறும் என்று அடிக்கடி சிலர் கூறுவதுண்டு. எதிர்
காலத்தில் நிகழக்கூடிய யுத்தத்தில் இந்தப் பழமொழி மூலம்
ஆறுதல் பெறமுடியாது.
ஆயுதக் குறைப்புப் பேச்சு முறிந்து கடைசியில் யுத்தம்
ஏற்பட்டால், அநேகமாக சோவியத் வெடிவிமானங்கள்
கோபன்ஹேகன், பிரஸ்ஸல்ஸ், ரோம், பாரிஸ் யாவற்றை
யும் விட்டுவிட்டு, நியூயார்க், பிட்ஸ்பர்க், கிளீவ்லண்ட்,
ஹார்ஃபோர்டு, சிகாகோ முதலிய அமெரிக்க நகரங்களை
நேரடியாகத் தாக்கலாம். இந்த நிலையில் நமது நேடோ
நேயர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் ஏற்கனவே இரண்டு
யுத்தங்களில் பட்ட அடியை மறந்திருக்கமாட்டார்கள்.
"நடுநிலைமை வகிப்பதாக அறிவிக்கப் போகிறீர்களா, அல்
லது அணுகுண்டடிபட்டு அழிந்துபோகப்போகிறீர்களா?"
என்று ரஷ்யா அந்நாடுகளுக்கு எச்சரிக்கை செய்யலாம்.
இரண்டாவது உலக யுத்தத்தில் பழைய ஆயுதங்கள் தாங்கிய
தால் தங்கள் நகரங்கள் இடிபட்டுக் கிடக்கின்றன. இந்த இடி
பாடுகளை அகற்றுவதற்குள் அமெரிக்க, ரஷ்ய நகரங்கள்



அணுகுண்டுத் தாக்குதலால் அழிந்திருப்பதைப் பார்ப்பார்
கள். அந்த நிலையில் ரஷ்ய எச்சரிக்கையை ஏற்று அவர்கள்
நடுநிலைமையே வகிக்கக்கூடும். இந்தத் தடவை தங்கள்
நாடுகளைப் போர்க்களமாக ஐரோப்பியர் அநுமதிக்கவே
மாட்டார்கள் என்பது நிச்சயம்.

ஐரோப்பாவில் நமது அணு ஆயுதத் தாக்குதல் நேடோக்
கூட்டுறவைப் பாதிக்குமானால், ஆசியாவில் இந்தத் தந்திரத்
தின்மூலம் நமது செல்வாக்கை இழந்து விடவே நேரிடும்.
ஆசியாவிலோ அல்லது மத்தியக் கிழக்கிலோ ஏற்படக்கூடிய
ஆக்ரமிப்பை ஒன்று அணுகுண்டுத் தாக்குதல் மூலம் சமாளிக்க
வேண்டும் அல்லது, படுதோல்வியை ஒப்புக் கொள்ளவேண்
டும் என்கிற நிலை ஏற்படுமானால், இதன் விளைவு மிகவும்
அபாயகரமானதாயிருக்கும்.

இதே நிலை படிப்படியாகப் பெருகி வருமானால் நமது
நேச உடன்பாடுகள் பயனற்றுப் போவதுடன், நாம் யாரு
டைய கூட்டுறவுமின்றித் தனித்து நிற்க வேண்டிவந்துவிடும்.
இதன் விளைவு என்னவாகும்? நமது கையாலாகாத்தனத்தி
னால் எதிரியின் முக்கியமான அரசியல் நோக்கங்கள் ஈடேறி
விடும். அணு ஆயுதத் தாக்குதல்மூலம் வெற்றி பெறுவது
சாத்தியமானால், அணு ஆயுதப் போர்புரியும் நமது சக்தியை
இழந்துவிட்டால், அதுவும் அபாயகரமான விளைவேயாகும்;
ஸ்தல சண்டைகளை அணு ஆயுதத் தாக்குதலின்றிச்
சமாளிக்க வேறு வகை இருக்கிறது என்பதை போர்ப் பிற்
கால அநுபவத்திலிருந்து அறிந்துகொண்டிருக்கிறோம். இந்தப்
பணியை நாமும் நமது நேயநாடுகளும் சாதாரணப் படை
களுக்கு அளித்துவந்திருக்கிறோம். உதாரணமாக, கொரியாப்
போரை எடுத்துக்கொள்ளலாம். இங்கே நமக்கு ஏராள
மான ஆள்சேதம் ஏற்பட்டது. ஆனால் மூன்றாவது உலக
யுத்தத்தினால் விளைந்திருக்கக் கூடியதை விடக் குறைவான
உயிர்ச்சேதமும் பொருள் செலவுமே ஏற்பட்டன. கடைசியில்
அந்த ஸ்தலத்தில் குறுகிய அளவில் எதிர்த்தே கம்யூனிஸத்
தைத் தடுத்து நிறுத்திவிட்டோம்.
பெரியதோர் ஆயுதக் குறைப்புத் திட்டம் நிதானமாக
உருவாகும் என்று வைத்துக்கொண்டால், இரண்டாவது உலக
யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவில் ராணுவக் கொள்கை
களினால் ஏற்பட்ட தர்மசங்கடங்கள் பற்றிய நமது பரி
சீலனையிலிருந்து மூன்று முடிவுகளுக்கு வரலாம்.
1. நாம் எதிர்க்க வேண்டிவரும் ஆக்ரமிப்புகள் பலவகைப்
பட்டவைகளாயிருக்கலாம். அவைகளைச் சமாளிப்பதற்குப்பல
வகைப்பட்ட ராணுவ சாதனங்களைப் பயன்படுத்த வேண்டி
யிருக்கும். எல்லா அரண்களிலும், எளிய முறையில் பாதுகாப்பு

செய்துகொள்ளலாம் என நினைப்பது நம்மையே நாம் ஏமாற்
றிக்கொள்வதாகும். நேரடியான கம்யூனிஸ்ட் தாக்குதலை
எதிர்ப்பதற்குக் கேந்திரமான விமான பலமும் வேண்டும்.
துரிதகதியில் செல்லக்கூடிய சாதாரணப் படைகளும் வேண்டி
யிருக்கும்.

2. இதிலிருந்து ராணுவச் சாதானங்களை அளவின்றிப்
பெருக்கிக்கொள்ள வேண்டுமென்றோ, கணக்கின்றிச் செலவு
செய்ய வேண்டுமென்றோ முடிவுசெய்துவிடலாகாது. அணு
ஆயுதத் தாக்குதல் துறையில், உபரியான அணுகுண்டுகள்
இருப்பதனாலும், அவைகளைக் கொண்டுசெல்லும் விமானங்
கள் தேவைக்கு மீறி இருப்பதனாலும் அவ்வளவாகப் பலன்
இல்லையென்பதை ரஷ்ய, அமெரிக்க விமானத் தலைமை முகாம்
கள் தெரிந்துகொள்ள வேண்டிய கட்டம் வரும். பகைவர்
கள் நாட்டில் கேந்திரமான இடங்களைத் தாக்குவதற்கான
அணுகுண்டுகள் இருந்தால் போதும்; அணு ஆயுதங்கள்
மூலம் பாதுகாப்பு பெறுவதற்குப் போதுமான வசதி இருந்
தால் போதும்; உபரியாக இருக்கவேண்டியதில்லை.

போதிய அளவு சாமானியப் படைகளுக்குப் பயிற்சி
அளித்துப் பயன்படுத்துவதே எதிர்காலத்தில் அநேக சந்தர்ப்
பங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கும். ஆனால் தெற்கு
ஆசியாவில் பெருவாரியான மக்கள், அல்லது முக்கியத்துவம்
வாய்ந்த பிற இடத்து மக்கள் கம்யூனிஸ்டுகளை ஆதரிப்ப
தென முடிவு செய்துவிட்டால், இந்தக் கடைசிக் கட்டத்தில்
அமெரிக்க ராணுவத்தினர் எவ்வளவுதான் தங்களது சாதனங்
களையும், சக்தியையும் இங்கு விரைந்து கொணர்ந்து குவித்
தாலும், கம்யூனிஸ்டு முன்னேற்ற வேகத்தைத் தடுத்து நிறுத்த
முடியாது. உதாரணமாக, மன்மொடிந்து ஏமாற்றமடைந்த
ஆஃபிரிக்கர்கள், அங்கே ஆதிக்கம் செலுத்தும் நாற்பது லட்சம்
ஐரோப்பியர்களை விரட்டி விடுவதென்று முடிவு செய்வார்க
ளானால், ஜெட் விமானங்களும், டாங்கிகளும், துப்பாக்கி
களும் அவர்களை எதிர்த்து நிறுத்த முடியாது.

ராணுவ அமைப்பு, பயிற்சி இவைகளுக்கான செலவு
மூலம் ராணுவ பலத்தின் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.
அதேமாதிரி ராணுவ பலத்தின் மூலம் எந்த அளவு சாதிக்கக்
கூடும் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

3. ராணுவ பலத்தைப் பெருக்கிக்கொள்வதன் மூலம்,
சமீப காலத்தில் ஐரோப்பாவில் நமது ராஜதந்திரம் பலித்
திருக்கிறது. இந்த வகையில் 1947-இல் நாம் வகுத்த திட்டம்
சிதைவுறாமல், அபாயத்திற்குள்ளாகாமல் இருந்து வந்திருக்
கிறது.

சிக்கல் வாய்ந்த மத்திய கிழக்குப் பகுதியிலும், ஆசியா
விலும் இதேமாதிரி உறுதியான போக்கு அவசியமாகிற து



இங்கேயும் எதிர்காலத்தில் சோவியத் யூனியனோ, கம்யூனிஸ்ட்
சீனாவோ நேரடியாகத் தாக்கினால், நாம் பாதுகாத்துக்
கொள்ளக் கூடிய கேந்திரமான அரணை அமைத்துக்கொள்ள
வேண்டியது அவசியமாகும்.

உருட்டி மிரட்டி சமாளித்து விடலாம் என்றோ, முன்
யோசனையின்றி சொல்லலங்காரப் பேச்சுகளை யொட்டியோ,
இந்த அரணை அமைத்துவிட முடியாது. தெளிவற்ற முறை
யில், ஒருதலைப்பட்சமாக எதையாவது செய்வது என முடிவு
செய்தல், தீர யோசிக்காமல் நம்மை உடனிருந்து காப்பதற்கு
நேச நாடுகளில்லாமல் முடிவு செய்தல், நாம் செய்த முடிவைத்
தீர்மானமாக நிறைவேற்றவேண்டும் என்கிற எண்ணமில்லா
மல் முடிவு செய்தல்—இவை எவ்வித முடிவுக்குமே வராதது
போல் அபாயகரமானது.

ஆசியாவில் திட்டமான, நீடித்துப் பாதுகாக்கக் கூடிய
அரண் ஏற்பட வேண்டுமானால், அதற்கு நமக்குத் துணையா
யுள்ள பெரிய நகரங்களின் உறுதியான ஆதரவைப் பெற்
றிருக்க வேண்டும். மேலும் அந்த வட்டாரத்திலுள்ள கம்யூ
னிஸ்ட் அல்லாத ஸ்தல ஆட்சியினரும் மனமுவந்து அதை
ஒப்புக்கொள்ளவேண்டும்.

மேலும் பகிரங்கமான கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்புக்கு எதி
ராகப் பாதுகாப்பு அரண் திட்டமாக அமைப்பதனால், அவ்வப்
போது தோன்றும் பிரச்னைகளை நமது ராஜதந்திரப் பிரதிநிதி
கள் தீர்க்கமுடியாத நிலை ஏற்படலாகாது. உதாரணமாக,
ஐரோப்பியப் பாதுகாப்பு அரண் 1948-இல் வகுக்கப்பட்டது.
ஆனால் ஆஸ்திரியா எதிர்காலத்தில் நடுநிலைமை நாடாயிருக்க
வேண்டும் என்பது 1955-இல் தான் முடிவு செய்யப்பட்டது;
ஆஸ்திரிய உடன்பாட்டில் நமது பொதுப்படையான நோக்கங்
களுக்குக் கணிசமான பலன் கிடைத்ததுபோல் தோன்றிற்று.
அதே போல் மற்ற விஷயங்களில் பேச்சுவார்த்தை மூலம்
மாறுதல்களுக்கு இணங்க நாம் தயாராயிருக்க வேண்டும்.

கம்யூனிஸத்தை ராணுவ முறையில், சமாளிக்க கேந்திர
மான பாதுகாப்பு ஓரளவுதான் பயன்படும். ஆனால் சுதந்திர
மான நிலப்பரப்பு விரிவடைந்து கம்யூனிஸ்ட் ஆதிக்கம் சுருங்கு
மானால், அல்லது தற்போது செஞ்சேனை வசமுள்ள பகுதியில்
பேச்சுவார்த்தை மூலம் பிறரும் பிரவேசிக்கும்படிச் செய்ய
முடியுமானால் இந்தப் பாதுகாப்பு அரண் மூலம் விரிவான
பயன் ஏற்படும். இம்மாதிரி புதிய பாதுகாப்பு அரண் அமைப்
பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததானாலும், அதன் மூலம்
எதிரியைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தலாமேயொழிய,
அதைவிட அதற்குக் கூடுதலான மதிப்பளிக்கலாகாது. இந்த
அரண் அமைப்பது நமது கொள்கையின் ஒரு முக்கியமான
அம்சமேயொழிய அதுவே முடிவுமல்ல; நம் கொள்கையை

நிறைவேற்றுவதற்கான சாதனமுமல்ல. அதன் மூலம், ஆக்ரமிப்பைத் தடைசெய்யலாம்; அதுவும் நாட்டுக்கு வெளியிலிருந்து வரும் ஆக்ரமிப்பைத் தடுக்கலாம். எதிர்காலத்தில் புற ஆக்ரமிப்பை மட்டும்தான் நாம் எதிர்க்க வேண்டியிருக்கும் என்று நினைத்துவிடலாகாது.

ராணுவப் பாதுகாப்பு அரண் அமைக்கையில், ராணுவ சம்பந்தமில்லாத விஷயங்களையும் கவனிக்க வேண்டும். பயனுள்ள முறையில் பாதுகாப்புக்காக ஏற்பாடு செய்கையில் ராணுவத் துடிதுடிப்புடையவர்கள் அல்லது ஆக்ரமிப்பு நோக்குடையவர்கள் எனப் பிறர் நினைக்கும்படி நடந்து கொண்டோமானால், உலகத்தாரிடையே நமக்குள்ள மதிப்பு குறைந்துவிடும். உலகத்தாரின் நன்மதிப்பைப் பெறுவது அவ்வளவு சுலபமான விஷயமல்ல. ராணுவத்தினர் உற்சாகம் குன்றாமலிருப்பதற்காகத் தங்கள் செயல்களுக்கு ஓரளவு விளம்பரம் அவசியம் என அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நம் வரவு செலவுத்திட்டம் தயாரிப்பது, நாம் பிற நாடுகளுடன் உறவு கொண்டாடுவது பற்றிய விவரங்கள் முதலியவை வெளி வந்தால், நாம் போரார்வம் உள்ளவர்கள் என்கிற அபிப்பிராயம் வெளிநாடுகளில் ஏற்படும். ஆனால் இந்த அபிப்பிராயம் வெளியாரிடம் தோன்றுவதை ராணுவத்தினர் விரும்புவதில்லை.

அமெரிக்க ராணுவக் கொள்கை இக்காலத்தில் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்? அதில் காணவேண்டிய அம்சங்களை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்: ராணுவத்துறையில் பலம் வாய்ந்திருக்க வேண்டும். ஆனால் போரார்வமுள்ளவர்கள் எனப் பிறர் கருதும் வகையில் நடந்து கொள்ளலாகாது. தடுப்பு யுத்தம் புரிவதையோ அல்லது பிறரை யுத்தம் செய்யும்படித் தூண்டுவதையோ கைவிட வேண்டும். ராணுவ ரீதியிலான சம்பவங்கள் நிகழ்ந்தால் அவைகளைச் சமாளிப்பதற்கு ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். அகந்தையில்லாமல் நம் நேய நாட்டினருடன் கூடி, பாதுகாப்புக்கான ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். யாரையும் அச்சுறுத்துவது போல் நடந்து கொள்ளாமல் அரசியல் முறையில் சாத்தியமான பாதுகாப்பு அரணை அமைக்க உறுதி கொண்டுள்ளோம் எனத் தெளிவுபடுத்திவிட வேண்டும்.

புரட்சி சம்பவங்களை இந்தப் புத்தகத்தில் பரிசீலனை செய்ததன் விளைவாக நாம் தெரிந்துகொண்டிருக்க வேண்டிய முக்கியமான விஷயங்களில் ஒன்று, உலக யுத்தம் ஏற்பட்டாலொழிய, ராணுவ முறையில் உலகப்போக்கை உருவகப்படுத்துவது எளிதல்ல என்பதுதான். ராணுவ ரீதியில் செயல்புரிவதன் நோக்கங்கள் பலவற்றை ஆராய்ந்தோம். அவை யாவற்றையும் ஒன்று சேர்த்தாலும், நிலைமையைச் சமாளிப்பதற்கான அயல்நாட்டுக் கொள்கையை வகுப்பதற்குப் போதாது.



திறமைவாய்ந்த போலீஸ் படை இருந்துவிட்டால், நல்லெண்ணம் நிலவும் சமுதாயத்தை அமைத்து முன்னேறிவிடலாம் என்று கூறிவிடமுடியாது. ஆனால் இந்தப் படை, நல்லெண்ணமுள்ள சமுதாயத்தை அமைப்பதில் சமூகத் தலைவர்களுக்கு உதவிபுரியலாம். சட்ட விரோதமாகச் செயல் புரிபவர்கள் சமூகத்தை அழித்துவிடவோ, அல்லது அதைத் தங்கள் சுயநலத்திற்குப் பயன்படுத்தவோ முடியாமல் போலீஸ் படை தடுத்து உதவிபுரியும். இதேமாதிரியே எந்த விரிவான, கட்டுக்கோப்புள்ள ராணுவ ஏற்பாடும் சமாதானத்தைப் பாதுகாக்கும் என்றோ, ஒழுங்கான முன்னேற்றத்தை உத்தரவாதம் செய்யும் என்றோ கூறிவிட முடியாது. ஆனால் யுத்தம், வகுப்புவித்தியாசம் ஆகிய இருவகை அபாயங்களையும் தவிர்க்க வேண்டுமெனில், சமாதானமும், ஒழுங்கான முன்னேற்றமும் அத்தியாவசியம்.

"தார்மிக எண்ணங்கள் வேரூன்றுவதற்கே ராணுவப் பலம் பயன்படுகிறது" என்று அமெரிக்காவின் புகழ் பெற்ற ராணுவத் தந்திர நிபுணரும், தத்துவாசிரியருமான அட்மிரல் மஹன் (Admiral Mahan) கூறியுள்ளார்.

அமெரிக்கர் மதப் பற்றும், ஜனநாயக ஆர்வமுமுள்ளவர்கள். அட்மிரல் மஹன் எழுதியதற்கு இரு தலைமுறைகளுக்குப் பிறகு ராணுவப் பலம் பெறுவதே தங்கள் கொள்கையின் முடிவான நோக்கம் என்பதுபோல், அநேக சந்தர்ப்பங்களில் அமெரிக்கர் நடந்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்கு சரித்திராசிரியர்களுக்குத் திகைப்பூட்டும். மனித வர்க்கத்தின் நலனுக்கான, சிக்கல் வாய்ந்த, ராணுவ சம்பந்தமற்ற பிரச்னைகளுக்கு முற்றிலும் ராணுவத் தோரணையில் பரிகாரம் காண முனைகிறோம். நவீன சமுதாயத்தை உருவகப்படுத்தி வரும் மனோதத்துவ, இலட்சிய ஆதாரமுள்ள பொருளாதாரச் சக்திகளைச் சிறப்பான முறையில் சமாளிப்பதற்கான திறமையை நாம் ஏன் பந்தப்படுத்திவிட்டோம் என்றும் சரித்திராசிரியர்கள் வியப்புறுவார்கள்.

"பூரணத்தில் ஒரு பகுதி யுத்தம்; பூரணம் என்பது அரசியல்" என்று லெனின் கூறினார். அரசியலின் முழுப் பொருள் மக்கள் சக்தியைத் திரட்டுவதேயாகும். ராணுவ ரீதியில் மட்டுமல்ல; மக்களை, கருத்துக்கள், லட்சியங்கள், கட்சிகள், அரசாங்கங்கள், பொருளாதார, சமூக ஸ்தாபனங்கள் திட்டங்கள் மூலமும் ஊக்குவித்து, அவர்கள் சக்தியைத் திரட்டுவதுமாகும்.

யுத்தமே சர்வமும் என்று ஹிட்லர் நினைத்தான். அவன் ஒரு நாட்டிலுள்ள மக்களின் ராணுவ பலத்தை மட்டுமே நம்பியிருந்தான். அதனால்தான் அவனுடைய ஆக்ரமிப்புகள் அவைகளுக்குட்பட்டவர்களையோ, உட்படப் போகிறவர்

களையோ கவரவில்லையென்பது மட்டுமின்றி, அவன் இறுதி
யில் தோல்வியும் அடைந்தான். அவனது நிறத்திற்கு மாறு
பட்டவர்களான உலக மக்களில் பத்தில் ஒன்பது மடங்கு
பேருக்கு, அவனது ஜாதியே உலகாளப் பிறந்தது என்கிற
கொள்கை பிடிக்கவில்லை.

" அரசியலே எல்லாம்" என்பதை லெனின் ஏற்றுக்
கொண்டார். மேலும் அவர் உலகப்புரட்சித் திட்டமொன்று
வகுத்தார். இதன் பயனைச் செஞ்சேனை மட்டுமல்ல, பிறரும்
அநுபவிக்கலாம என்று கூறினர். அதனுல்தான் இவர் முதல்
தரப் புரட்சிவாதியானர். இவரது புரட்சியும் பிறர் கண்டு
நடுங்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. சமத்துவ அடிப்படை
யில் சோவியத்ராஜ்யங்களின் கூட்டமைப்புஏற்படுத்தப்போவ
தாக அவர் வாக்களித்தார். உலகெலாம் அபிவிருத்தி
அடைவதற்கு, விஞ்ஞானத்தையும் தொழில் நுணுக்கத்தை
யும் பயன்படுத்தப் போவதாகவும் உறுதி கூறினர். அவ
ருடைய வாக்குறுதி வெறும் வார்த்தைகள் என வைத்துக்
கொண்டாலும், வட அட்லாண்டிக்கை யொட்டிய முன்
னேற்றமடைந்த, சுபிட்சமான, தொழில் வளமுள்ள ஜன
நாயக நாடுகள் தவிர, பிற இடங்களில் மக்கள் மனத்தைக்
கவர்ந்தது.

இவ்வாறு நாஜிஸத்திற்கும், கம்யூனிஸத்திற்கும் முக்கிய
மான வித்தியாசம் இருக்கிறது. அரசியலுக்கு ராணுவப்
பலத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்பதில்தான்
இந்த வித்தியாசம் காணப்படுகிறது. இதிலிருந்து உலக
நிலை பற்றிய நமது ஆராய்ச்சியிலுள்ள குறைபாடுகளை நாம்
அறிந்துகொள்ளலாம்.

நெபோலியன் அல்லது ஹிட்லர் தோரணையில் ரஷ்ய
தலைமைப் பீடம் உலக ஆதிக்கப் பாதையில் செல்லுமானுல்,
அதனுல் விளையக்கூடிய அபாயத்தை நாம் அறிந்துகொண்டு
விட்டோம். அதை எப்படி எதிர்ப்பது என்பதையும்
தெரிந்து கொண்டுவிட்டோம். கம்யூனிஸம் என்பது புரட்சி
கரமான உலக அரசியல் திட்டம். அது ஒரு மிதக்கும் பனி
மலை போன்றது. அதன் முரட்டுப் போக்கு மட்டும் மேலே
தெரிகிறது என்ருல், இதை ராணுவத் தோரணையில் சமா
ளித்துவிட முடியாது என்பது தெளிவாகத் தெரிந்து
விட்டது.

1930-இல் நாம் ஒரு முக்கியமான படிப்பினையைத் தெரிந்து
கொண்டோம். ராணுவ பலம் பெருகிவரும் ஒரு நாட்டைத்
திருப்தி செய்வது வீண் வேலை. ரஷ்யத் தலைமைப் பீடத்திற்
கும் நமக்கும் ஏற்படும் பிரச்னைகளைச் சமாளிப்பதில் பத்து
ஆண்டுகளாக ஐரோப்பா, ஆசியா, மத்தியக் கிழக்கு நாடு
களில் இந்தப் படிப்பினையின் அடிப்படையிலேயே செயல்



புரிந்து வந்திருக்கிறேம். இதே காரியங்களை இருபது ஆண்டு
களுக்கு முன் செய்திருந்தால் இரண்டாவது உலக யுத்தம்
நிகழாமல் தவிர்த்திருக்கலாம்.

ஆனுல் ஹிட்லரைத் தடுத்து நிறுத்தப் போதுமான
சாதனங்களைக் கொண்டு, இன்று, உலகக் கம்யூனிஸத்தை
எவ்வகையிலும் நிறுத்த முடியாது என்பதுதான் வருந்தத்
தக்க விஷயம். சரித்திரம் அசையாப் பொருளல்ல: முன்
னேறி வருகிறது. பழைய யுத்தம், வகுப்பு வித்தியாசம்
இரண்டும் அசுர பலம் பெற்று நம்மை முன்னேக்கி நிற்
கின்றன.

அமெரிக்கரின் சாரீ, கா மனப்போக்கில் பொதுப்
படையான ஓர் அம்சத்தைக் காணலாம். உலக விவகாரங்
களில் சக்தி வாய்ந்தது எது என்பதைப் பிடிவாதமாக நாம்
அறிந்துகொள்ள மறுக்கிறேம். நமது சுதந்திர ஸ்தாபனங்
களுக்கு நாம் ஆழ்ந்த மதிப்பளிக்கிறேம். ஆனுல் பொருள்,
ராணுவ பலம் இரண்டிற்கும் அளவுக்கு மீறிய மதிப்பு அளிக்
கிறேம். மக்களையும், அவர்களை ஆட்கொள்ளும் கருத்துக்
களையும் குறைவாக மதிப்பிடுகிறேம்.

நமது ஜனத்தொகை, இயற்கை வளம், நமது பூகோள
அமைப்பு சம்பந்தமான குறைபாடுகள் தெளிவாகத் தெரி
கின்றன. ஆனுல் கருத்துக்கள், மக்களிடம் அநுதாபம்,
நம்பிக்கை, விஞ்ஞான நுட்பங்கள், பிறரை வசப்படுத்தும்
சக்தி போன்ற குணங்கள் என்றுமே நம்மிடம் அபரிமிதமாக
இருந்து வந்திருக்கின்றன. இந்தக் குறைவு நிறைவினுல்
நமது நேர்மாருன குணங்கள் பிறருக்குத் தெளிவாகத் தெரி
கின்றன. ஒரு நூற்ருண்டில், சரித்திரம் கண்டிராத அளவு
அரசியல், தொழில் துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக்
கிறேம். ஆகையால் மற்றெல்லோரையும்விட அமெரிக்கா,
தனது வளர்ச்சியின் சிறப்புக்கான காரணங்களை நன்கு
அறிந்து கொள்ள முடியும்.

எங்கும் மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் மக்களே. நமது
காலம் நவீன போக்குவரத்துச் சாதனங்களுக்கும், பிரசாரத்
தந்திரங்களுக்கும் பெயர் போனது. ஆகையால் சிறந்த
கருத்துக்கள், சிறந்த கொள்கைகள்—அவை நல்லதாயினும்
தீயதாயினும்—மக்களைச் செயல்புரியத் தூண்டும்.

இந்த விஷயத்தை ஜனுதிபதி ரூஸ்வெல்ட் நன்கு
உணர்ந்திருந்தார். யால்டா மகாநாட்டில் நடந்த விருந்
தில் அவர் இவ்வாறு பேசினர்: " சுகமாகவும், பத்திர
மாகவும் இவ்வுலகில் எல்லா ஆண், பெண் குழந்தைகள்
வாழ வகை செய்ய வேண்டும்." ஆனுல் இருவரும் ஏற்கத்
தக்க அடிப்படையில் ரஷ்யாவுடன் சமாதானம் செய்ய
முயற்சிக்கையில் அவரே ரஷ்ய-அமெரிக்க ஆதிக்கப் போட்டி

தோரணையை மேற்கொண்டது போல் தோன்றியது. சில
சமயம் அவர் வகுத்த நான்கு சுதந்திரக் கொள்கைகளின்
நோக்கத்தையே கைவிட்டது போல் தோன்றிற்று. ஆனல்,
இதுவும் இரண்டாவது உலக யுத்தத்தின் ராணுவ அம்சங்
களை அவர் இடைவிடாது ஆராய்ந்து வந்ததன் விளைவு
என்றே கூறலாம்.

வில்ஸன் முதல் உலக யுத்தத்தில் 14 அம்ச சமாதான
திட்டத்தை வகுத்தார். அதுபோலல்லாமல் இரண்டாவது
யுத்தத்தில் எதிரி ''நிபந்தனையின்றி சரணகதி'' அடைய
வேண்டும் என்று ரூஸ்வெல்ட் கோரினர். ஆகையால் இந்தச்
சமாதானத் திட்டத்தில அரசியல் விஷயங்களுக்கு அவ்வள
வாக இடமில்லை. 1918-இல் ஜெர்மன் நாடே சரணடைந்ததின
மானது போன்று இந்தத் தடவையில்லை. 1945-இல் நேச
நாட்டுப் படையினர் போராடிக்கொண்டே ஜெர்மனிக்குள்
புகவேண்டி வந்துவிட்டது. கருத்துக்களுக்குத் தலைவர்கள்
மதிப்பளிக்காததனல், யுத்தம் அநாவசியமாக நீடித்தது.

யுத்த கால மகாநாடு ஒன்றில், போப்பினிடம் எவ்
வளவு படை இருக்கிறது என ஸ்டாலின் ஏளனமாகக் கேட்
டாரும். சக்தியைக் குறுகிய நோக்கில் அவன் மதித்திருக்
கிருன். லட்சக்கணக்கான மக்களின் ஆன்மிக பலத்தைத்
தடுத்து நிறுத்த முடியாது என இதற்கு நாம் பதில் கூறி
ஞேம். கம்யூனிஸத்தை எதிர்த்து நிற்க முடியும் என்பதைக்
கத்தோலிக்க மதம் நன்கு நிரூபித்துவிட்டது. புரட்சி
முறையிலும் சரி, வேறெந்தத் துறையிலும் செயல் புரிவ
தற்குத் தேவையான சாதனம் மக்கள்தாம் என்பதை
ரஷ்யத் தலைமைப் பீடம் நன்கு புரிந்து கொண்டுவிட்டது
போல் தோன்றுகிறது.

மக்களையும் கருத்துக்களையும் லட்சியம் செய்து,
''போப்பினிடம் எவ்வளவு படை இருக்கிறது?'' என்று கேட்
கக்கூடிய சந்தேகப் பிரகிருதிகளாக அமெரிக்கர் மாறிவிட்
டனரா? நமது புகழுக்குக் காரணம், தனிப்பட்டோருக்கு நாம்
அளித்த மதிப்பு. ஆனல் இன்று அணு ஆயுதங் கொண்டு
எதிர்த்தாக்குதல் செய்பவர்கள்போல் காட்சியளிக்கிறோம்.
இதே சமயத்தில் மாயாவாத லோகாதய லட்சியத்தின்
தலைமைப்பீடம் மக்கள் மனத்தைக் கவர்வதன் மூலம் உலகத்
தலைமையை அடைய விழைகிறது. இதைவிடக் கேலிக்கூத்து
வேறு என்ன வேண்டும்?

மக்களிடமும், கொள்கைகளிடமும் உள்ள நம்பிக்கை
யினல், நம் நாடு தோற்றுவிக்கப்பட்டது. முன்னேற்றப்
பாதையில் இடையில் இந்த நம்பிக்கையை இழந்துவிட்
டோமா? இப்படி நம்பிக்கையை இழந்திருந்தால் அந்த அள
வுக்கு நமது நாடு தோன்றிய காலத்திலிருந்த அறிவு முதிர்ச்சி



இப்போது நமக்கில்லையா? இன்று, நாம் அதிகார ஆடம்பரச்
சின்னம் தாங்கி நிற்கின்றோம். நாம் தோன்றிய காலத்தில்
தனிச் சிறப்பு வாய்ந்தவர்களாகவும், அவைக்குப் பாத்திர
மானவர்களாகவும், உலகத்தோர் நம்மை மதித்து வந்த
தற்குக் காரணமாயிருந்த சம்பிரதாயங்களைக் கைவிடும்படி
வற்புறுத்தப்படுகின்றோம். ஆனல் நன்கு ஆய்ந்து பார்த்தோ
மானல் மாறுதல் தாகத்தினல்தான் கம்யூனிஸம் எனும்
சேற் கலந்த நீரை நாடி மக்கள் செல்லுகின்றனர் என்பதைப்
புரிந்துகொள்வோம். சுதந்திரம் எனும் சுத்த நீர்ச்சுனைக்கு
அவர்களை அணுகவிடாமல் நாம் இருந்ததனல்தான் மக்கள்
சேற்றுநீரை நாடிச் செல்லுகின்றனர்.

நமது சிறப்பான நாட்களில் நாம் ஜனநாயக உலகத்தை
அமைக்க வேண்டும்; அந்த உலகில் ''ஒவ்வோர் ஆண்,
பெண் குழந்தையும் சுகமாகவும், பத்திரமாகவும் வாழ
வேண்டும்'' எனும் பொறுப்பை என்றுமே வற்புறுத்தி வந்
திருக்கிறோம். அதே பொறுப்பை ஏற்பதே மீண்டும் நம்
நோக்கமாயிருக்க வேண்டும்.

கம்யூனிஸத்தை எதிர்ப்பதற்கு அமைந்த பாதுகாப்பு
அரணுக்குப் பின், மாஸ்கோ என்ன செய்கிறது, எதைச் செய்
யத் தவறியது என்பதைப் பொருட்படுத்தாமல், நாம் ஒரு
உலகத் திட்டம் வகுக்கவேண்டும். அந்தத் திட்டம் நீண்ட
காலப் பிரச்னைகளான யுத்தம், வகுப்பு வித்தியாசம் இரண்
டையும் தீர்க்கக்கூடியதாயிருக்க வேண்டும். அட்லாண்டிக்
நாடுகளின் ஆட்சியினர் இம்மாதிரித் திட்டத்தை அளிப்பார்க
ளானல், அவர்களது கொள்கைகள் ஆறு நூற்றாண்டுகளாக
இருந்ததுபோல், எதிர்காலத்தை வளப்படுத்தக்கூடிய
சுதந்திரக் காற்றாக இருக்கும்..

அத்தியாயம்—35

# பொருளாதார உதவியின் அளவும் பயனும்

ஏழைகள் வாழும் நாடுகளில் யுத்தம், வகுப்பு வித்தி
யாசம் சம்பந்தமான பிரச்னைகளை மக்கள் நன்கு அறிந்து
கொண்டுவிட்டனர். அதனல்தான் விரைவாகப் பொருளா

தார முன்னேற்றம் வேண்டும் என்று ஒருமுகமாகக் கேட்கின்
றனர். இந்த முன்னேற்றம் அடைந்தால்தான் அரசியல்
துறையில் ஸ்திரத்தன்மை நிலவும். ஆகையால் யுத்தம்
ஏற்படாமல் தடுப்பதற்கு உலகெங்கும் வெறுப்பு வித்தியா
சத்தை எதிர்ப்பது அத்தியாவசியமாகப் போய்விட்டது.
இவ்விஷயத்தில் ஆசியா, ஆஃபிரிக்கா, தென் அமெ
ரிக்கா வெங்கும் உள்ள அரசாங்கங்கள் இன்று சோதனைக்குட்
பட்டிருக்கின்றன என்பதைப் பாண்டுங் மகாநாட்டின் மூலம்
அறிந்துகொண்டோம். அடுத்த சில ஆண்டுகளில் இந்த
அரசாங்கங்கள் தங்கள் நாட்டு மக்களுக்குத் திருப்தி ஏற்
படும்படி இரண்டு காரியங்கள் செய்ய வேண்டும். ஒவ்வொரு
பிரஜைக்கும், அரசியல் சுதந்திரம் அளிப்பதில் முன்னேற்ற
மடைந்து வருவதாக நிரூபிக்க வேண்டும். படிப்படியாக
மட்டுமல்ல, பார்ப்போர் வியப்புறும்படிப் பொருளாதார
அபிவிருத்தி ஏற்பட்டு வருவதாக ருசுப்படுத்த வேண்டும்.
இந்தச் சோதனையில் தோல்வியுறுபவர்கள் எவ்வளவு
யோக்கியர்களானாலும், கம்யூனிஸ்ட் விரோதிகளானாலும்,
இறுதியில் வீழ்ச்சியடைவது நிச்சயம்.
எவ்வளவு சுமுகமான சூழ்நிலை இருந்தாலும் இந்தச்
சோதனையில் எளிதில் வெற்றிபெற முடியாது. வாழ்க்கைத்
தரம் உயரவேண்டும்; அதிகப்படி உணவு வேண்டும்; நோய்
ஏற்படாமலிருக்க வசதி வேண்டும்; பள்ளிக்கூடங்கள், ரஸ்
தாக்கள் வேண்டும்; நதி நீரைத் தேக்கி நீர்ப்பாசன, மின்
சார வசதி செய்ய வேண்டும்; ரயில் பாதைகள், போக்கு
வரத்து அபிவிருத்தி எல்லாம் வேண்டும் என்று கேட்பார்கள்.
இந்த நலன்களெல்லாம் மிகவும் துரிதமாகக் கிடைக்க
வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். மக்கள் விரும்பும்
நிலைக்கும் தற்போதைய நிலைக்கும் உள்ள வித்தியாசம் முழு
வதையும் அகற்றிவிட முடியாது. இந்த இடைவெளியை
முடிந்த அளவு குறைப்பதற்கான முயற்சி செய்யவேண்டும்.
துரிதமான முன்னேற்றமடைவதற்கு எவ்வளவோ
இடைஞ்சல்கள் இருக்கின்றன. முக்கியமான தடங்கல், இதற்
கான மூலதனம் கிடைப்பதில் உள்ள கஷ்டம்தான். ஒரு
நாடு செல்வம் மிகுந்ததாயிருக்கலாம், அல்லது ஏழ்மை நிலையி
லிருக்கலாம்; அங்கு நிலவும் பொருளாதார முறை முதலாளித்
துவம் அல்லது கம்யூனிஸ்ட் அல்லது சோஷலிஸ்டாயிருக்க
லாம். ஆனால், எல்லாவிடங்களிலும் சேமிப்பினால் கிடைக்கக்
கூடிய மூலதனத்திலிருந்துதான் விரைவாகத் தொழில் அபி
விருத்தி செய்து வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்தலாம்.
இன்று பின்தங்கிய நாடுகளை வாட்டும் பிரச்னை ஒன்று
தான். பொறுமை இழக்கும் மக்களைத் திருப்தி செய்யக்
கூடிய, விரைவான முன்னேற்றத்திற்கான சேமிப்புப் பணம்



எங்கு கிடைக்கும்? இந்தியா, பர்மா, ஜப்பான், பிலிப்பைன்
போன்ற ஜனநாயக நாடுகளில் வரியை ஏராளமாக ஏற்றி
விட்டால் ஆட்சியினர் அடுத்த தேர்தலில் தோல்வியடைய
நேரிடும். ஆனால் சீனா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகள் அடை
யும் முன்னேற்றத்தை இந்த நாடுகள் எட்ட முடியாவிட்டால்
புரட்சிக்குப் பலியாகவேண்டி வரும்.

மிகுந்த சங்கடப்பட்டே பொருளாதார முன்னேற்றம்
அடையவேண்டியிருக்கிறது. நமது நாட்டிலும், இங்கிலாந்
திலும் மிகுந்த கஷ்டப்பட்டே இத்துறையில் முன்னேற்றம்
அடைந்திருக்கிறோம். ரஷ்யாவிலும், சீனாவிலும் நம்மைவிட
அதிகமாகச் சிரமப்பட்டே அபிவிருத்தியடைந்திருக்கிறார்கள்.
சீனாவைப் பொறுத்தமட்டில் இந்தச் சிரமம் சீக்கிரத்தில்
சகிக்க முடியாததாகப் பெருகிவிடலாம். நாம் எவ்வளவு
விரும்பினாலும், அபிவிருத்தி அடையாத கம்யூனிஸ்டல்லாத
நாடுகளில் இந்தச் சங்கடங்கள் நேராமல் தவிர்த்துவிட
முடியாது. அவர்களுக்குத் தேவையான முதலீட்டுக்கு நாம்
பணம் கொடுத்து உதவினாலும், அவர்களது சமூக அரசியல்
நிலை மாறி வருவதனால், எந்தத் தொழிலுக்கு முதலிடம்
அளிக்கவேண்டும் என்பதைத் திட்டம் செய்வதும், மிகுந்த
சங்கடத்தை அளிக்கலாம்.

ஆனால் கம்யூனிஸ்டல்லாத நாடுகளுக்கு நாம் ஒருவகை
யில் உதவி புரியலாம். வளர்ச்சியடைகையில், எப்பொழுதும்
கஷ்டப்பட்டுத்தானாக வேண்டும். ஆனால் சகிக்க முடியாத
அளவு கஷ்டமடையாமல் குறைக்க முயற்சி செய்யலாம்.
இந்த உதவி செய்யத் தொடங்குகையில் ஓர் உண்மையை
நாம் அறிந்துகொள்ள வேண்டும். சுதந்திர நாடுகள் மூல
தனம் சேர்ப்பதற்குக் குறைவான வசதிகளே இருக்கின்றன.
இந்த வசதிகளும் நாம் பொருளாதார அபிவிருத்தி தொடங்கு
கையில் இருந்ததைவிடக் குறைவாகவே இருக்கின்றன.

பத்தொன்பதாவது நூற்றாண்டில், தொழில் வளர்ச்சி
யில் சில சௌகரியங்கள் இருந்தன: 1. கூலி குறைவாக
இருந்ததனால் ஏராளமான லாபம் கிடைத்தது. லாபத்தைச்
சேமித்து முதலீட்டைப் பெருக்கி, மேலும் தொழிலை வளர்ப்
பது சாத்தியமாயிருந்தது. 2. அயல்நாடுகளில் நாம் வாங்கி
யிருந்த கடன்களை நமது நாகரிகத்தைக் காப்பதற்கான
முதல் உலக யுத்தத்தின்போது, யுத்த தளவாடங்களாகக்
கொடுத்துத் தீர்த்தோம். 3. தென் அமெரிக்காவிலிருந்தும்,
மற்றும் அபிவிருத்தியடையாத நாடுகளிலிருந்தும் குறை
வான விலையில் மூலப்பொருள்கள் கிடைத்தன. 4. நமது
எல்லைப்புறத்தின் சிறப்பான இயற்கை வளம் உதவியா
யிருந்தது.

பிரிட்டனுக்குக் காலனிகள் இருந்ததனால், பொருளா
தார சௌகரியத்துடன் ஜப்பானுக்கு இருந்தது போல், மற்
றொரு வசதியுமிருந்தது. வர்த்தகக் கப்பல்கள் ஏராளமாக
இருந்ததனால் உலக வர்த்தகத்தின் மூலம் பணம் திரட்டி
உள்நாட்டில் சுபிட்சம் கொழித்தது.

இவ்வளவு சௌகரியங்கள் இருந்தும், பத்தொன்பதாவது
நூற்றாண்டில் இயந்திரத் தொழில் நாடுகளில் அங்கம் பொரு
ளாதார வளத்தை நிதானமாகத்தான் பெருக்க முடிந்தது. இயந்
திரத் தொழில் துறையில் இன்று அபிவிருத்தியடையாத
நாடுகள் கம்யூனிஸ்டு வலையில் சிக்கிக் கொள்ளாமல்,
தப்புவதற்காக விரைவாக அபிவிருத்தியடைய விரும்பு
கின்றன. இந்த நாடுகளின் அரசியல் நிலை கொந்தளிப்பாயிருப்
பதனால் அவைகள் மேலும் துரிதமாக முன்னேற்றமடைய
வேண்டியிருக்கிறது.

தொழிலாளர்கள் சிறந்த ஸ்தாபனங்கள் அமைத்து
அவைகள் மூலம் அதிகப்படியான கூலி கேட்டு, இந்த நாட்டு
அரசாங்கங்களை வற்புறுத்துகின்றனர். கடனாகவோ, தான
மாகவோ பிறநாடுகளிலிருந்து பணம் பெறுவது கடினமாயிருக்
கிறது. மேலும் சுரண்டிப் பிழைக்க இந்நாடுகளுக்குக் காலனி
கள் இல்லை. அரசியல் கிளர்ச்சிக்காரர்கள் முன்னேற்ற
மடைய வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். இவர்களைத்
திருப்தி செய்வதற்கு ஏராளமாகப் பணம் வேண்டும். மக்க
ளுக்குக் கடினமாக வரி விதித்தாலும் போதிய பணம் கிடைப்
பது சாத்தியமில்லை.

இவர்களுக்கு உதவி செய்வதற்கான பொறுப்பில் பெரும்
பகுதியை அமெரிக்கா ஏன் ஏற்கவேண்டும்? இதற்குப் பல
காரணங்கள் இருக்கின்றன. இதுவரையில் நாம் கூறியதி
லிருந்தே இந்தக் காரணங்களைப் புரிந்துகொள்ளலாம். இவை
கள் யாவுமோ அல்லது இவைகளில் சிலவற்றையோ சிந்தித்
துப்பார்த்தால், உதவியின் அவசியத்தை சிந்தனை சக்தியுள்ள
எந்த அமெரிக்கனும் புரிந்து கொள்ளலாம். அவைகளைச்
சுருக்கமாக இங்கு குறிப்பிடுகிறேன்.

தொழில் துறையில் அபிவிருத்தியடையாதவர்கள் முன்
னேற்றத்திற்காக ஏங்கி நிற்கின்றனர். முன்னேற்றம் நீண்ட
காலம் தடைப்பட்டால் அவர்கள் எளிதில் மேடைப்பிரசங்கி
கள் வலையில் விழுந்து விடுகின்றனர்.

ஜனநாயக இந்தியாவுக்கும், சர்வாதிகார சீனாவுக்கும்
நடக்கும் போட்டியில் எந்த நாடு குறைந்த காலத்தில் சிறந்த
முன்னேற்றமடையும் என்பதை உலகத்தோர் சிரத்தையுடன்
கவனித்து வருகின்றனர்.

நமது உலகம் நவீன விஞ்ஞான வசதிகளினால் சிறிதாகி
வருகிறது. எல்லா நாடுகளும் ஒன்றை, மற்றொன்று நம்பி



வாழும் முறையில் பிணைந்திருக்கின்றன. ஆகையால் செல்வச்
செழிப்புடன் நாம் தனித்திருக்க முடியாது. எங்கும் சேரிகள்
நிறைந்த உலகில், பிறர் கண்டு பொறாமைப்படும்படி நாம்
மட்டும் மாளிகையில் வாழ முடியாது.

யுத்த கெடுபிடி தளர்ந்து, பொருளாதார அபிவிருத்தித்
துறையில், கம்யூனிஸ்ட் முறைக்கும், ஜனநாயக முறைக்கும்
போட்டி கடுமையானதால், இந்தப் போட்டியில் வெற்றி பெற
மாஸ்கோ தன்னிடமுள்ள சாதனைகளை யெல்லாம் பயன்
படுத்தக் கூடும்.

உலகத்தின் இயந்திரத் தொழில் உற்பத்தியில் பாதி நம்
முடையது. ஆகையால் அபிவிருத்தியடையாத, கம்யூனிஸ்
டல்லாத நாடுகளுக்கு உதவிபுரிய நம்மால்தான் முடியும்.

பயனளிக்கவல்ல அயல்நாட்டு உதவித் திட்டம் அமைப்
பதற்கு இந்தக் காரணங்களே போதும் என்றாலும், சில
சாமானிய காரணங்களையும் கூற விரும்புகிறேன். இவைகள்
பொருந்தாதவை என்று நிராகரித்து விடலாம். மற்றும் சில
வாதங்களைப் பரிசீலனைக்கேற்றவை எனக் கருதலாம்.

சில ராஜதந்திரிகளும், ராணுவ தந்திரவாதிகளும் நினைப்
பது போல், அந்நிய நாட்டு உதவி மூலம் நேயநாடுகளையோ
நண்பர்களையோ அடைய முடியாது. தனிப்பட்ட ஒரு சுதந்
திர மனிதனுடைய விசுவாசத்தை எப்படி விலை கொடுத்து
வாங்க முடியாதோ, அம்மாதிரியே ஒரு சுதந்திர நாட்டின்
விசுவாசத்தையும் விலைகொடுத்து வாங்க முடியாது.

ஆசியா, ஆஃப்பிரிக்கா, தென் அமெரிக்காவில் உள்ள
நிராதரவான மக்களின் நன்றியுணர்வைக் கூட, அந்நிய
நாட்டு உதவி மூலம் பெறலாம் என்று நிச்சயமாகக் கூற முடி
யாது. விசுவாசமும், நன்றியறிதலும் கடைச்சரக்கல்ல,
பணம் கொடுத்து வாங்குவதற்கு. ஆத்திரப்பட்டு நாம் பிறர்
நன்றியை எதிர்பார்ப்போமானால் ஏமாற்றமடைவது நிச்சயம்.

கம்யூனிஸ்ட் அபாயம் அதிகமானால்தான் காப்பாற்ற
வேண்டும் என்று நாம் அந்நிய உதவித் திட்டம் வகுக்கலா
காது. ஒரு நாடு பூராவும் கம்யூனிஸ்ட் விஷத்திற்குட்பட்
டால்தான், நமது உதவி பெறும் தகுதியை ஒரு நாடு பெற
முடியுமா? கம்யூனிஸ்டுகளில்லாத நாடுகளுக்குத் தேவையிருக்
கையில், நாம் உதவி செய்ய மறுக்கலாமா? ஒரு நாட்டில்
சிறு கம்யூனிஸ்ட் கூட்டம் தொல்லை கொடுப்பதற்கு அளவு
கடந்த மதிப்பளிப்பது நியாயமாகுமா?

ஒரு நாட்டு மக்கள் வயிற்றை நிரப்பி, அவர்களை மலே
ஜுரத்திலிருந்து காப்பாற்றி, அவர்களுக்கு எழுதப்படிக்கக்
கற்றுக் கொடுத்தால் மட்டும் அவர்களைக் கம்யூனிஸ்ட் விரோதி
களாகச் செய்துவிடமுடியாது. வறுமையைவிடப் பொருளா
தார அநீதியை உணர்வதே மக்களை எளிதில் கொதித்

தெழச் செய்கிறது. நான் முந்திய அத்தியாயம் ஒன்றில்
கூறியபடி ஆசியப் புரட்சிகள் அவ்வளவாகப் பட்டினியால்
வாடும் குடியானவர்களால் ஏற்படவில்லை. ஏமாற்றமடைந்த
மத்திய வகுப்பு அறிவாளிகளே புரட்சி விளைவித்திருக்கின்
றனர்.

அந்நிய உதவி எவ்வளவு தாராளமாகக் கிடைத்தாலும்
அதைக் கொண்டு ஊழல் நிறைந்த, அல்லது நிலப்பிரபுத்துவ
ஆட்சியைச் சப்பைக்கட்டுக் கட்டிக் காப்பாற்ற முடியாது.
இம்மாதிரிச் செய்தால் அந்நிய உதவி வீணாவதுடன், மன்
னுக்கு வரக்கூடிய, அந்நாட்டு ஜனநாயகப் பற்றுள்ள இளை
ஞர்கள் ஆதரவையும் இழந்துவிடுவோம். தன்னைக் காத்துக்
கொள்ள உறுதியற்ற, அதற்காகக் கணிசமாகத் தியாகம்
செய்யத் தயாராயில்லாதவர்கள் உள்ள நாட்டை நாம் காப்
பாற்றிவிட முடியாது. கம்யூனிஸ்டுகள் செல்வாக்கடை
வதற்குக் காலனி ஆட்சிக்கு அடுத்தபடியாகப் பயன்படும்
சாதனம் நிலப்பிரபுத்துவம்தான்.

உதவி பெறும் தகுதி பெறுவதற்கான காரணங்களை
நன்கு தெரிந்துகொள்வதன் மூலம், அந்நிய உதவி அளிப்
பதற்கான அவசியமான, நியாயமான காரணங்களை நாம்
அறிந்துகொண்டு செயல் புரியலாம். மேலும், நாம் ஏமாற்ற
மடைவது, மன எரிச்சல்கொள்வது முதலிய சங்கடங்கள்
ஏற்படாமல் தவிர்த்துக்கொள்ளலாம்.

கேந்திரமான பாதுகாப்பு அரணுக்குப் பின்னணியாக
நல்லெண்ணம், ஸ்திரத்தன்மை, பிறரைப் புரிந்துகொள்ளு
தல் முதலிய நற்குணங்கள் நிலவும் பிராந்தியங்களைப்
பெருக்கிக்கொண்டே போக வேண்டும். இந்த முயற்சி
செய்கையில், ஸ்திரத்தன்மை என்றால் ஏற்கனவே உள்ளதை
நீடிப்பது என்று தப்பர்த்தம் செய்துகொள்ளாமல் ஜாக்
கிரதையாயிருக்க வேண்டும். புரட்சிகரமான ஆசியாவிலும்,
ஆஃப்ரிக்காவிலும் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்துவது
என்றால், சைக்கிள் சவாரி செய்வதுபோல் முன்னேறிச்
செல்வதன் மூலம்தான் முடியும்.

நமது உதவித் திட்டத்தை வகுக்கையில், ஒரு முக்கிய
மான வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.
கம்யூனிஸ்ட் ராணுவ பலத்திற்கு நேரடியான இலக்காயுள்ள
வியட்னாமிலும், கொரியாவிலும் நாம் உதவி புரிவதற்கான
சந்தர்ப்பம் ஒருவகையானது. இந்தியா, பர்மா, பாகிஸ்
தான், இந்தோனேஷ்யா, ஆஃப்ரிக்காவின் சில பாகங்களில்
உதவி செய்வதற்கான சந்தர்ப்பங்கள் வேறு வகையானவை.
பிந்திய நாடுகளில் பரந்த கொள்கை அடிப்படையில் செயல்
புரியவேண்டி வரும்.



கொரியா, வியட்னாமைப் பொறுத்தமட்டில் நாம் உதவி
புரியாவிட்டால், அந்த நாடுகள் உடனடியாகக் கம்யூனிஸ்டுக
ளிடம் அடிபணிந்துவிடும். கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு இடம்
கொடுக்கலாகாது என்பதே, இங்கு உதவிபுரிவதன் உடனடி
யான நோக்கம்.

கம்யூனிஸ்டுகளைத் தடுத்து நிறுத்துவதற்கே துரதிருஷ்ட
வசமாக நமது அயல் தேச உதவிப் பணம் செலவழிந்து வந்
திருக்கிறது. இந்த உதவி புரிதல் அத்தியாவசியமானாலும்,
அவை பெரிதும் நாம் பின்வாங்காமலிருப்பதற்கே பயன்
பட்டு வந்திருக்கின்றன. நாம் முன்னேற வேண்டுமானால்,
நமது பலத்தை நிலையாகப் பெருக்கிக்கொள்வதற்கான சந்
தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சமாதான காலத்தில் நாம் பெரிய அளவில் பொரு
ளாதார அபிவிருத்திக்காகப் பணம் செலவழிப்பதானால், எவ்
வாறு முதலீடு செய்யவேண்டும்? தங்கள் இயற்கை வளத்
தைப் பெருக்கிக்கொள்ளும் சக்தியுள்ள நாடுகள், தங்களது
சுதந்திர அரசாங்கங்களைப் பலப்படுத்திக்கொள்ளும் நாடுகள்,
பெரியதொரு பணியில் ஈடுபட்டிருப்பதாக உணர்வுள்ள
நாடுகள், உலக சுதந்திர சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று
பெருமைப்படக்கூடிய கேந்திரமான நாடுகளிலேயே முதலீடு
செய்யவேண்டும். இம்மாதிரி நாடுகள் தன்னம்பிக்கை
பெற்றுவிட்டால், நம்முடன் மாறுபட்ட கருத்துக் கொள்ள
லாம். நாம் மனத்தளர்ச்சி அடைந்திருக்கும் சந்தர்ப்பங்
களில் நம்மிடம் அதிக உதவி பெற்றவர்கள் உதவி பெற்ற
அளவுக்கேற்பக் கடுமையாக நம் மீது குறைகூறக்கூடும்.

எனினும் இதைப் பொருட்படுத்தாமல் அவர்களது முன்
னேற்றத்தை வரவேற்கும் அறிவு முதிர்ச்சியுள்ளவர்களாக
நடந்துகொள்ள வேண்டும். ஏனெனில், துடுக்காக நம்மைக்
குறை கூறும் இந்தக் குணம் அவர்களிடம் இருப்பதனால்
தான் கம்யூனிஸத்திற்கோ, மற்றெந்த அந்நிய சக்திக்கோ
மசியாமல் அவர்கள் இருக்கின்றனர். பொருளாதார, அர
சியல், மனோதத்துவ—எந்த ரீதியில் பார்த்தாலும்—நாம்
ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பு அசாத்தியமானது.

ஆனால் இதற்கு மாற்று என்ன என்பதும், தெளிவாகத்
தெரிகிறது. ஆசியா, ஆஃப்ரிக்கா, மத்தியக் கிழக்கிலுள்ள
நாடுகள், உலகில் முதல்தரத் தொழில்வளமுள்ள நாட்டுடன்
நெருங்கிய தொடர்புகொள்ளாவிட்டால், அந்த நாடுகள்
சீக்கிரத்திலோ அல்லது காலந்தாழ்த்தியோ உலகத்தில்
தொழில் வளமுள்ள இரண்டாவது வல்லரசுடன் நெருங்கிய
தொடர்புகொள்ளும். பிறவிடங்கள் மாதிரியே ஆசியா
விலும், பொருளாதாரத்தை அரசியல் பின்தொடர்கிறது.

பிறரை வசப்படுத்தும் முறையில் பேசக்கூடிய ரஷ்ய
வியாபாரப் பிரதிநிதிகள் இப்போது ஐரோப்பாவிலும்,
ஆசியாவிலும் தங்கள் புகழ் பாடத் தொடங்கிவிட்டனர்.
நம்முடைய நாலு அம்ச அயல்தேச உதவித் திட்டம்போல்
ஒன்றை ஆப்கானிஸ்தானத்தில் கணிசமான அளவுக்கு
செய்து வருகின்றனர்.

1955 மார்ச் மாதத்தில் நான் இந்தியாவுக்குச் சென்றிருந்
தேன். அச்சமயம், பத்து லட்சம் டன் கனமுள்ள எஃகு உற்
பத்திச்சாலை அமைப்பதுபற்றிப் பேச்சு வார்த்தை நடந்து
வந்தது. இதற்குச் சோவியத்தினர் சௌகரியமான நிபந்தனை
யின் பேரில் கடன் கொடுக்க இசைந்திருந்தனர். இதே
மாதிரிக் காரியத்திற்கு இந்தியா நம்மிடம் கடன் கேட்ட
போது, நாம் உதவ மறுத்துவிட்டோம். சோவியத் திட்டப்
படி 300 இந்தியர் மாஸ்கோவில் பயிற்சி பெற்றுத் திட்டம்
நிறைவேறப் பணிபுரிவார்கள். "இதிலிருந்து இந்த ஆலையை
நீங்களே திட்டமிட்டு அமைப்பீர்கள் என்று அர்த்தம்"
என்று ரஷ்யர்கள் தந்திரமாக இந்தியரிடம் கூறுகின்றனர்.

1955 ஜூன் மாதத்தில் மாஸ்கோவில் செய்த மேடைப்
பிரசங்கங்களில் பிரதமர் புல்கானின், குறிப்பாக இந்தியா
தன் அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றி வருவதைப்
பற்றி நேருவைப் பாராட்டினார். தொழில் நுணுக்க உதவியும்,
சௌகரியமான கடன் உதவியும் மேலும் ரஷ்யாவிலிருந்து
தொடர்ந்து இந்நாடுகளுக்குக் கிடைக்காவிட்டால், நான்
ஆச்சரியமடைவேன்.

சோவியத் கொள்கையில், இம்மாதிரி மாறுதல் ஏற்பட்டு
வருவதன் அரசியல் விளைவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை
யாயிருக்கும். 180 ஆண்டுகளாக ஆசியா, ஆப்பிரிக்கா,
தென் அமெரிக்க மக்கள் அமெரிக்காவை ஜனநாயக சுதந்
திரம், தனிப்பட்டோருக்கு வாழ்க்கைச் சுதந்திரம் இரண்டின்
கற்கோட்டையாக மட்டும் மதித்து வரவில்லை. பொருளா
தார அநீதிகளை சுதந்திர ஸ்தாபனங்கள் மட்டுப்படுத்தி, விரி
வடையும் சமூகத்தைச் சிருஷ்டிப்பதில் தங்களுக்கு ஆர்வம்
நிறைந்த வழிகாட்டியாக அமெரிக்கா இருக்கும் என்றும் கருதி
வந்திருக்கின்றனர்.

வரப்போகும் ஆண்டுகளில் ரஷ்யாவின் புது தோரணை
யில், மக்கள் மனத்தைக் கவரும் முறையில் சில நலன்கள்
அளிக்க அவர்கள் முன் வருவார்கள் எனக் கண்டிப்பாக
நம்பலாம். அபிவிருத்தியடையாத, எந்தப் பக்கமும் சேராத
நாட்டினரிடம் "பொருளாதார அபிவிருத்தி பிரமிப்பூட்டும்
வகையில் தீவிரமாக ஏற்படும், எங்கள் உதவியை ஏற்பவர்
களுக்கு உதவி புரியத் தயாராயிருக்கிறோம்" என்று ரஷ்யர்
கூறலாம். சோவியத் தாராளத்தை ஏற்பதனால் அரசியல்



துறையில் நஷ்டம் அதிகமாக ஏற்படலாமானாலும், கவர்ச்
சிகரமான முறையில் அவர்கள் உதவி அளிக்க முன் வரு
வார்கள் என்பதையோ, முன்னேற்றத்திற்காக ஏங்கித்
தவிக்கும் புதிய சுதந்திர நாடுகளை இது பெரிதும் கவரும்
என்பதையோ மறந்துவிடலாகாது.

இப்படி வாதம் செய்து கொண்டிருக்கையில் உலகப்
பிரச்னை தீர்க்கப்படாமலே இருக்கின்றது. அதை என்றாவது
ஒருநாள் நாம் தீர்த்தேயாக வேண்டும். அதன் மூலம் அவர்
களுக்குத் தேவையான டாலர் வசதி பெற நாம் அநுமதி
அளிப்பது அரசியல் சாத்தியமல்ல என்றால், அவர்களுக்கு
ஏதாவது ஒருவகையில் உதவிபுரிய நாம் ஏற்பாடு செய்ய
வேண்டும். இம்மாதிரி செய்வதனால் இருவகை உதவி புரி
கிறோம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். வேறு
அந்நிய வியாபாரிகளிடம் மலிவாக வாங்கக்கூடிய சரக்கை
அமெரிக்கர் உதவி புரியும் நாட்டினரிடமிருந்து அதிக விலை
கொடுத்து வாங்கவேண்டி வரும். அந்நிய நாட்டினர் நமது
நாட்டில் சரக்கு விற்று அதன் மூலம் டாலர் வசதி பெற நாம்
இடமளிக்காததனால், அமெரிக்காவுக்கு ஏற்படக் கூடிய
பொருளாதாரச் சங்கடங்களைச் சமாளிப்பதற்கான செல
வையும் அமெரிக்க மக்களே பொறுத்துக்கொள்ளவேண்டும்.

உதவி புரிய மற்றுமொரு திருப்திகரமான வகை அபி
விருத்தியடையாத நாடுகளில் தனிநபர்கள் முதல்போடுவது.
ஆனால் தேவையான அளவுக்கு நம் நாட்டு மூலதனம் பிற
நாடுகளுக்கு நகரவில்லை. யுத்தம் முடிந்த பிறகு, அமெரிக்
காவில் தனிப்பட்டோர், வருஷத்திற்கு 46 பிலியன் டாலர்
முதலீடு செய்திருக்கின்றனர். இதே காலத்தில் அந்நிய நாடு
களில் அமெரிக்கர் போட்ட மூலதனம் வருஷத்திற்கு ஒரு
ஒரு பிலியன்தான். இந்தப் பிலியனும் பெரிதும், ஐரோப்
பாவிலும், கனடாவிலும் தான் போடப்பட்டது. இந்த மூல
தனம் இந்நாடுகளில் அமெரிக்க வர்த்தக ஸ்தாபனங்கள்
பெற்ற லாபத்திலிருந்தே போடப்பட்டது.

தென் அமெரிக்காவிலும், சௌதி அரேபியாவிலும் எண்
ணெய்த் தொழில் அபிவிருத்திக்காகப் போட்ட மூலதனத்தை
நீக்கிவிட்டால், அபிவிருத்தியாகாத நாடுகளில் பத்து ஆண்டு
களில் அமெரிக்கர் போட்ட மூலதனம் ஒரு பிலியனுக்குக்
குறைவாகவே இருக்கும்.

சமீப காலத்தில் அமெரிக்கப் பாதுகாப்பு திட்டத்திற்
கான செலவில், ஒரு சிறு பகுதியே பிறநாடுகளுக்கு உதவி
யாக நாம் கொடுக்க வேண்டி வரும். 1949 ஜனவரியில் ஜனா
திபதி ட்ரூமன் அயல் தேச உதவித் திட்டத்தை வகுத்தார்.
அதற்குப் பின் நம் நாட்டில் ஆட்சி புரிந்த ஜனநாயகக் கட்சி
அரசாங்கமோ அல்லது குடியரசுக் கட்சி அரசாங்கமோ

கடன் உதவித் திட்டங்கள் வெளியிட்டிருக்கின்றன. இந்தத்
திட்டங்களில் குறிப்பிட்டிருப்பதைவிட நாம் உதவியாக
அளிக்கவேண்டிய தொகை அதிகமாகவே இருக்கும்.

இந்தத் துறையில் நாம் எவ்வளவு அதிகமாகப் பணம்
செலவு செய்கிருேமோ அவ்வளவும் எங்கு அதிகப் பயனளிக்
குமோ அங்கு செலவு செய்யப்படுகிறதா? நமது பொரு
ளாதார உதவித் திட்டம், ஐ.-நா. வின் திட்டம், கொழும்புத்
திட்டம் முதலியவைகளிலிருந்து அளிக்கப்பட்ட பணம் ஆசி
யாவிலுள்ள கம்யூனிஸ்டல்லாத நாடுகளிலும் ஆஃபிரிக்காவில்
பெரும்பகுதியிலும் எப்படிச் செலவாகிறது என்பதை ஆராய்ந்
தறிந்து கொள்ள எனக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.
அபிவிருத்தித் துறையில் சிறந்த முறையில் செயல் ஆற்று
வதில் முக்கியமான அம்சங்கள் என்ன என்பது எனக்குத்
தெளிவாகத் தெரிகிறது.

முதலாவது, குறிப்பிட்ட நாட்டிற்கேற்ற, நன்கு விளங்
கக் கூடிய விரிவான திட்டத்தை அமைத்துக் கொள்ளவேண்
டும். அந்தத் திட்டம் அந்நாட்டின் தேவைகளுக்கும் செல்வ
நிலைக்கும் ஏற்றதாயிருக்கவேண்டும். அதில் அடங்கியுள்ள
சிறு திட்டங்கள், பொதுத் திட்டத்திற்கேற்ற முறையில்
அமைய வேண்டும். இம்மாதிரித் திட்டமில்லாவிட்டால்,
அதன் பகுதிகளாகிய சிறு திட்டங்கள் சீரிய நோக்குடன்
வகுக்கப்படாததாகவும், உற்ற காலத்தில் தொடங்காதது
போலும், வீண் செலவு ஏற்படுவதுடன், எதிர்பார்த்த பலன்
கிட்டாமலும் போய்விடும்.

பயனளிக்கக்கூடிய திட்டத்தில் முக்கியமான இரு அம்
சங்கள் இருக்கின்றனவா என்று பார்த்த பிறகே, தொழில்
அபிவிருத்திக்கான பிரம்மாண்ட திட்டங்களை அமுல் நடத்த
முற்படவேண்டும்.

1. நாட்டின் பொருள்வளத்தைப் பூரணமாகப் பயன்
படுத்த வேண்டும். இதன் உட்கருத்து என்னவெனில், வரி
விதிப்பு முறை நீதியாயிருக்கவேண்டும்.

மேற்பார்வைக்குத் தோன்றுவது போல், இந்தப் புதிர்
அவ்வளவு சங்கடம் விளைவிக்கக் கூடியதல்ல. மேலே நாம்
குறிப்பிட்டது போல் எல்லாத் துறைகளிலும் சீரான அபி
விருத்தியடைவதில், அபிவிருத்தியடையாத நாடுகளின் தலை
வர்கள் ஆவலாயிருக்கின்றனர் என்பதைப் பாண்டுங் மகா
நாட்டின் மூலம் அறிந்துகொண்டோம்.

இந்த நிபுணர்கள் சேர்த்து வைத்திருக்கும் தகவல்களை
யும், அநுபவத்தையும் பயன்படுத்த இந்நாடுகள் தயாரா
யிருப்பதாகவே காண்கிறது. இந்த நாட்டினர் பொதுவாக
எத்துறையில் முன்னேற முயற்சிக்கிருர்களோ அநேகமாக



அந்த முறையை நாம் ஆதரித்து ஊக்கமளிக்க வேண்டும்.
ஆனல் இதற்கும் விசேஷ விதிவிலக்குகள் இருக்கின்றன.

அயல் நாட்டு அரசியலில் ஆதிக்கம் செலுத்தாமல்,
அவர்களது அபிவிருத்திக்கு ஆக்கமளிப்பதற்கு நமது மூல
தனம் மட்டும் போதாது. வாஷிங்டனிலும், நமது பிற
நாட்டுத் தூதராலயங்களிலும், சிறப்பான பயிற்சி பெற்ற
மென்மையுள்ளம் படைத்தவர்கள் பணி புரிய வேண்டும்.
இந்தப் பதவிகளில் சிறந்த தகுதி வாய்ந்தவர்கள் இருப்
பினும், இந்தப் பணிக்கென்றே திட்டமாக ஆள் சேர்த்து
ஒழுங்கான பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யவில்லை.

அநேக சந்தர்ப்பங்களில் தொழில் நுணுக்க விஷயத்தில்
நல்ல பயிற்சி பெற்றவர்கள் அயல் நாடுகளில் வந்திறங்கு
கின்றனர். ஆனல் அவர்கள் தாங்கள் பழக வேண்டிய
மக்களின் பாஷை, சரித்திரம், பழக்க வழக்கங்கள், சம்பிர
தாயங்கள் பற்றி ஒன்றும் தெரியாதவர்களா யிருக்கின்றனர்.
அமெரிக்கராயினும், பிற நாட்டினராயினும் திறமை வாய்ந்த
சேவை ஆர்வம் உள்ளவர்களையே நாம் தேர்ந்தெடுக்க
வேண்டும். இவர்கள் போகவிருக்கும் நாட்டின் அபிவிருத்
தியில் ஊக்கமுள்ளவர்களா யிருக்க வேண்டும்.

அரசாங்க அல்லது தர்ம ஸ்தாபனங்களின் ஆதரவு
பெற்று, பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பள்ளி அமைத்து
அங்கே வெளிநாட்டுப் பணிக்கான பயிற்சியளித்தால், இவ்
வகையில் நற்பயன் காணலாம். தாங்கள் செல்லும்
நாட்டின் பொருளாதார, அரசியல், கலாசாரப் பின்னணியை
அறிந்து கொள்வதன் மூலம் அவர்களுடைய பணி வெற்றி
பெற்றுப் பரிமளிக்கும் இந்தப் பள்ளியில் பயிற்சி பெறுவோ
ரின் மனைவிமார்களை அலட்சியம் செய்யலாகாது என்பதற்குப்
பல காரணங்கள் இருக்கின்றன.

பிறநாட்டு மக்களிடையே பகையை அல்லது வெறுப்
புணர்ச்சியைக் கிளப்பாமல் அந்நாட்டு அபிவிருத்திக்கு
அமெரிக்கா ஊக்கமளிக்க இன்னுமொரு வழியும் இருக்கிறது.
தனிப்பட்டோரின் தொழில், மத அல்லது தர்ம ஸ்தாபனங்
களை உதவி புரியச் செய்யலாம். ஃபோர்டு, ராக்ஃபெல்லர்,
கார்னீஜீ முதலிய செல்வந்தர்கள் நிறுவிய தர்ம ஸ்தாப
னங்கள், அபிவிருத்தியடையாத பகுதிகளில் பலவிடங்களில்
சிறந்த சேவை செய்திருக்கின்றன.

இந்தியாவில் டக்ளஸ் என்ஸ்மிங்கரின் (Douglas Ensmi-
nger) இணையற்ற தலைமையில், விசேஷச் சிறப்பு வாய்ந்த முறை
யில் ஃபோர்டு ஸ்தாபனம் பணிபுரிந்திருக்கிறது. கிராம அபி
விருத்தி, சிறு தொழில்கள், கல்வி முதலிய துறைகளில் இவர்
கள் செய்துள்ள சேவை விலைமதிப்பற்றது என்று இந்திய
அரசாங்கத்திலுள்ள உயர்தர அதிகாரிகள் கூறியதை நான்

அறிவேன். பொதுஜன ஆரோக்கியத் துறையில் ராக்
ஃபெல்லர் ஸ்தாபனம் புரிந்திருக்கிற சேவையை யாவரும்
பாராட்டி யிருக்கின்றனர்.

ஐ. நா.-வின் அபிவிருத்தித் திட்டங்களைப் பயனளிப்ப
தாகச் செய்வது பற்றிய விவாதங்களில் துரதிருஷ்டவசமாக
அமெரிக்கா சிரத்தை கொள்ளாமல் இருந்து வந்திருக்கிறது.
இருயோசனைகள் பற்றியே இந்த விவாதங்கள் நடந்தன.
இவைகளை அபிவிருத்தியடையாத நாடுகளும், அவைகளின்
தேவைகளை நன்கறிந்த நிபுணர்களும் சிறப்பாக ஆதரித்தனர்

முதல் யோசனை, பொருளாதார அபிவிருத்திக்காக ஒரு
பிரத்தியேக ஐ. நா. நிதி அமைக்க வேண்டும் என்பது. அபி
விருத்தியடையாத நாடுகளில் பொருளாதார வளர்ச்சித்
திட்டங்களுக்கு இந்த நிதியிலிருந்து பெரிய அளவில் உதவி
அளிக்க வேண்டும் என்பது. இதை அமைத்தவர்களின்
நோக்கம். இரண்டாவது யோசனை, உலக பாங்குக்கோ அல்
லது பிரத்தியேக அபிவிருத்தி பாங்குக்கோ, கொடுத்த கடன்
திருப்பி வசூலாகக் கூடிய திட்டங்களுக்குக் கடன் அளிக்க
அதிகாரமளித்தல்.

இந்த யோசனைகளின் விளைவாகக் கடன் கொடுக்க
வேண்டி வந்தால், அதற்கு 35 கோடி டாலர் வேண்டியிருக்
கும். இதில் பாதித் தொகையை அமெரிக்கா கொடுக்க
வேண்டியிருக்கும். 1954-இல் இரண்டாவது யோசனை பற்றி
நமது நிலையை மாற்றிக்கொண்டோம். ஆனால் பிரத்தியேக
ஐ. நா. பொருளாதார அபிவிருத்தி பற்றி நமது அசிரத்தை
யைக் கைவிடவில்லை.

ஆஃப்பிரிக்காவில் ஐ. நா. ஸ்தாபனத்தின் சேவைக்குத்
தனிச்சிறப்பு இருக்கிறது. தர்மகர்த்தா சபை மூலம்
கிட்டத்தட்ட நேரடியான முறையில் அந்தக் கண்டத்தில்
பெரும் பகுதியில் பணி புரியப்படுகிறது. ஐ. நா. மூலம்
சிறந்த நலம் பெறலாம் என அங்கே எதிர்பார்க்கின்றனர்.
அதற்கேற்ற முறையில் ஐ. நா.-வுக்குச் சந்தர்ப்பமும்
பொறுப்பும் அளிக்க இணையற்ற வாய்ப்பு நமக்கு இருக்கிறது.

ஐ. நா.-வை என்றும் ஒரே மாதிரியாக ஆதரித்து வந்
திருக்கிறவன் என்கிற முறையில் நான் ஒரு யோசனை கூற
விரும்புகிறேன். ஐ. நா.-வை ஒழுங்காக நிர்வகித்தால், அதன்
பொருளாதார, சமூக அபிவிருத்தி முயற்சியில் சிறந்த பணி
புரியலாம். தொல்லை தரும் வகுப்பு வித்தியாசங்களை ஜன
நாயக, கூட்டுறவு முறைமூலமே தீர்த்துவிடலாம். பொதுவான
பொருளாதார அக்கறைகளால் ஒன்றுபட்டு, துணிந்து வாழக்
கூடிய, இளமை ஆற்றலுள்ள ஜனநாயகங்கள் தோன்ற
வேண்டும்.



ஐ. நா. தவிர பிரத்தியேக பணிபுரியும் சர்வதேச ஸ்தா
பனங்களுக்குச் சில விசேஷ சௌகரியங்கள் இருக்கின்றன.
இவைகள் அமெரிக்க உதவியை விநியோகிப்பதற்கேற்றவை.
மார்ஷல் திட்ட நிர்வாக அநுபவத்தினால் ஒரு விஷயத்தை
நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். நம் உதவி பெறும் நாடு
களுக்குப் பிரதிநிதித்துவம் உள்ள, பிராந்திய ஸ்தாபனங்
களுக்கு நாம் பூரண ஆதரவு அளித்தால், இதில் இடம்
பெற்ற நாடுகள் அபிவிருத்தி வேலைகளை மேல்பார்வை செய்
வதில் கண்டிப்பான பணிபுரியும்.

இதேமாதிரி கொழும்பு திட்ட ஸ்தாபனம் ஆசியாவில்
வேலை செய்கிறது. இந்த ஸ்தாபனத்தில் முதலில் பிரிட்டிஷ்
சாம்ராஜ்ய உறுப்பினரே இருந்தனர். பின்னர் இந்திய
மகாசமுத்திரத்திற்குக் கிழக்கே உள்ள எல்லா நாடுகளும்
சேர்த்துக்கொள்ளப்பட்டன. அமெரிக்கா இதில் அங்கத்தின
ராக இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனத்
தின் நுணுக்க, பொருளாதார முறைகளை ஒன்றுபடுத்தி
அமெரிக்கா பணிபுரிகிறது.

ஆனால் இந்த இணைப்பு பேச்சளவில்தான் இருக்கிறதே
யொழிய, உண்மையான பயனளிக்கவில்லை. அமெரிக்கா
அளிக்கும் அபிவிருத்திச் செலவைப் பாகுபாடு செய்வதிலோ,
பரிசீலனை செய்வதிலோ கொழும்புத் திட்ட அங்கத்தினர்
களுக்கு எவ்விதப் பொறுப்பும் அளிக்கப்படவில்லை.

லாடின் அமெரிக்க நாடுகளின் அபிவிருத்தி நிதிகளை
நிர்வகிக்க பிராந்திய அடிப்படையில் ''அமெரிக்க ராஜ்ய
அமைப்பு (Organisation of American States) ஸ்தாபனத்
திற்கு'' வசதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பிராந்
தியத்தில் அபிவிருத்தி முயற்சியை விஸ்தரிக்க அமெரிக்கா
நீடித்து மறுத்துவருவதனால், முன்னேற்றம் தடைப்படுகிறது.

பொருளாதார உதவி அளிப்பதில், விரிவான பொறுப்
பேற்றோமானால், நமது முயற்சிகள் அதிகப்படியான பய
னளிக்கும். எவ்வாறாயினும், இந்தப் பொறுப்பை சீராக
ஏற்று, பல ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்யவேண்டும்.
இந்தச் சமயத்தில் முக்கியமாக மேற்கூறப்பட்ட சர்வதேச
ஸ்தாபனங்கள் மூலம் உதவி அளிப்பதை நிர்வகிக்க அரசியல்
ரீதியில் சாத்தியமில்லையானால், இதற்காக நமது ''ஏற்றுமதி—
இறக்குமதி பாங்கை'' (Export-Import Bank) பயன்படுத்திக்
கொள்ளலாம். ஏனெனில் 1955-இல் இந்தப் பாங்கில் இரண்டு
பிலியன் டாலர் மூலதனம் முடங்கிக் கிடந்தது.

* * *

உலகத்தின் முதன்மையான தொழில் வளமுள்ள
அமெரிக்கா இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்

கடியை எவ்வளவு பல்வேறு பரந்த வகைகளில் சமாளிக்கலாம் என்பதுபற்றிப் போதிய அளவு கூறியாகிவிட்டது. உலகப் புரட்சிகளைப் பரிசீலனை செய்ததில் ஓர் உண்மையைத் தெரிந்துகொண்டோம். அநேக நாடுகளில் பழைய பொருளாதார முறை, கவர்ச்சி இழந்துவிட்டது. அதன் அடித்தளம் தகர்ந்து அந்த முறை சரிந்து வருகிறது. இந்நாடுகளின் மக்களில் பெருவாரியானவர்களுக்கு அவர்களுடைய சமீபகால சரித்திரத்தில் ஏதாவது ஒரு சமயத்தில் அமெரிக்கா இலட்சிய நாடாக இருந்து வந்திருக்கிறது. மக்களுக்குப் பொருளாதார வளர்ச்சிக்கான சந்தர்ப்பமளித்ததற்காக அமெரிக்காவை அவர்கள் பாராட்டியதுமின்றி பின்பற்றவும் முயற்சித்திருக்கிறார்கள்.

அபிவிருத்தியடையாத இந்த நாடுகளில் பலவற்றில், அரசாங்க அமைப்பு சம்பந்தமானத் தத்துவங்களைப் பொறுத்தமட்டில், ஜனநாயக முறையையும் மேற்கத்திய நாடுகளையும் தாற்காலிகமாகவாவது பின்பற்றி வந்திருக்கின்றனர். சமை..சியில் கம்யூனிஸம் வெற்றி பெறுமானால், அதற்கு ஒரே காரணம்தான் கூறமுடியும். இந்த நாடுகள் உடனடியாக அபிவிருத்தியடைய விரும்புகின்றன. இந்த விருப்பம் ஈடேற, அமெரிக்கா, அட்லாண்டிக் நாடுகள் கையாளும் முறைகள் போதக்கூடிய அளவு இல்லை என அவைகள் கருதுகின்றன.

சில விஷயங்களில் நல்ல காரியங்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். தொடர்ந்து பணிபுரியாமல் நடுவில் தயங்கினோமானால், ஆபத்து விளைவது நிச்சயம். அமெரிக்காவிடம்தான் இதற்கான சாதனங்கள், திறமை எல்லாம் இருக்கின்றன. பொருளாதார உதவி செய்வதற்கான தொழில் நுணுக்க ஆற்றலும் சாமர்த்தியமும் இருக்கின்றன. உலகத்திலுள்ள லட்சக்கணக்கான மக்கள் சுதந்திரமடையவோ, பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்றவோ முனைந்திருக்கையில், இந்த உதவி அளித்தால் அவர்கள் வெற்றி பெறுவார்கள்; இல்லையேல் தோல்வியுறுவார்கள்.

பாதுகாப்பு போன்று, பொருளாதாரமும், சமாதானத்தின் ஒரு அம்சம்தான். நமது காலத்தில் நிலவும் அரசியல் பிரத்தியட்ச நிலையை அறிந்துகொள்ளத்தக்க தேர்ந்த ராஜதந்திரம் மற்றோர் அம்சமாகும்.

## அத்தியாயம்—36

# சமாதானத்தின் அரசியல் அம்சம்

ஸ்டாலின் இறந்த பிறகு சோவியத் ராஜதந்திர முறையில், ஒருவித இளக்கம் தோன்றியிருக்கிறது. ஆகையால் எதையும் ராணுவரீதியில் தீர்க்கவிரும்பும் நமது போக்கைக் கொண்டு நிலைமையைச் சமாளிக்க முடியாது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. விரிவான, துரிதமாகப் பயனளிக்கும், பொருளாதார உதவிதிட்டம் அவசியமானாலும், அதைக் கொண்டே நிலைமையைச் சமாளித்துவிட முடியாது என்பதும் நன்றாகத் தெரிகிறது. 1955-இல் ரஷ்யா மட்டுமல்ல, சீனாவும் கடுமையான யுத்த கெடுபிடி மிரட்டல் முறையில் நம்பிக்கை கொள்வதை விடுத்து, மக்களைக் கருத்துக்கள் மூலம் கவர முயற்சிக்கத் தொடங்கிவிட்டன. பிரசாரம், வாக்குறுதிகள், கோஷங்கள், சுமுகமான ராஜதந்திரப் போக்கு முதலியவற்றைக் கையாள ஆரம்பித்துவிட்டன.

யுத்த கெடுபிடிக்குப் பதிலாக இனிய முறைகளை ரஷ்யர்கள் கைக்கொண்டதன் முக்கியத்தைச் சிலர் குறைவாக மதிப்பிட்டனர். ஏனெனில் ரஷ்ய ராஜதந்திரத்தின் உடனடியான நோக்கங்களில் தீவிர மாறுதல் ஏற்பட்டிருப்பது போல் காணப்பட்டது. உலகின் இரு கோடிகளிலும் இரு மாபெரும் வல்லரசுகளான ரஷ்யா-அமெரிக்கா அமைந்திருக்கின்றன. இவ்விரண்டில் ஒன்று, உலக அரசியலின் தற்போதுள்ள ஈர்ப்புச் சக்தியைத் தனது பக்கம் திருப்ப முயற்சித்து வருகிறது.

ரஷ்யாவைப் பிறநாடுகள் தாக்கினால், அதை முதலில் தாங்கள் தடுத்து நிறுத்துவதாக அதன் எல்லையிலுள்ள நடுநிலைமை நாடுகள் ஒப்புக்கொண்டால், முந்தி பகைமையாயிருந்த ஜெர்மனியும் ஜப்பானும் சகஜமான தொடர்பு கொள்ள இசைந்தால், சோவியத் ராஜதந்திரம் மூர்க்கத்தனமாக இல்லாமல், சுமுகமாக மாறியதன் விளைவாகப் பிற நாட்டினர் தங்களிடம் நல்லெண்ணம் காட்டினால், தங்களது ஆதிக்க எல்லையைக் குறைத்துக் கொள்ளலாமா என்பது பற்றிப் புதிய சோவியத் தலைமை யோசித்து வருவதுபோல் காண்கிறது.

சோவியத் கொள்கைகளில், ஏற்படக் கூடிய இந்த மாறுதல்கள் மூலம் அவர்களுடைய உட்கருத்துக்களிலோ,

நோக்கங்களிலோ விசேஷ மாறுதல்கள் ஏற்படாது; ஆனால்
இதன் மூலம் பல அரசியல், பொருளாதார விளைவுகள்
ஏற்படலாம். ''பிற அரசாங்கங்களின் உறுதியின்மையும், அசி
ரத்தையும் எவ்வளவு தூரம் இடம் தருமோ, அவ்வளவுக்கு
அந்த நாடுகளில் புகுவது, ஆனால் தீர்மானமான எதிர்ப்பு
ஏற்பட்டதும் பின்வாங்குவது, இதுவே ரஷ்ய அரசாங்கத்
தின் கொள்கையாகவும், செயல் முறையாகவும் இருந்திருக்
கிறது'' என பாமர்ஸ்டன் (Palmerston) பிரபு கூறியுள்ளார்.
ஆய்ந்தோய்ந்து பார்ப்பதன் மூலமோ, எக்காரணங்கள்
பற்றியோ, சோவியத் நாட்டினர் யுத்த கெடுபிடி முறையைத்
தளர்த்துவதென முடிவு செய்வார்களானால், அந்தக் கெடு
பிடியை நீடிக்கும் முறையில் அமெரிக்கர் கொள்கை அமைப்
பது முட்டாள்தனமாகும். யுத்த கெடுபிடியை நாம் என்றும்
விரும்பியதில்லை. அதை நாம் ஆரம்பிக்கவும் இல்லை. குறிப்
பிட்ட பிரச்னைகள் பற்றி அநுபவசாத்தியமான உடன்பாடு
ஏற்படக்கூடுமானால், அதற்கு நிச்சயமாக நாம் தடையா
யிருத்தலாகாது. யுத்த கெடுபிடிக்கான சாதனங்களைப் படிப்
படியாகக் கைவிடமுடியுமானால், அந்த மட்டில் உலகத்திற்
கும் நல்லது, நமது கொள்கைகளுக்கும் நல்லது. கெடுபிடி
நீங்கி கூடிவாழ்தல் நிலவுகையில், நாம் பல்வேறு சோதனைக்
குள்ளாக நேருமானால் அந்தக் கொள்கைகளைக் கஷ்டப்பட்டே
காப்பற்றவேண்டிவரும்.
வேறு முறைகள் மூலம் ராஜதந்திரத்தை மாற்றுவது
தான் யுக்தமெனில், ராஜதந்திர அட்டவணையில் முதலாவது
அம்சம் நேரடி யுத்தத்தையோ, யுத்த கெடுபிடியையோ
அறவே அகற்றுவதெனில், நமது ராஜதந்திர நடைமுறையின்
போக்குக்கான சில விஷயங்களைத் திட்டம் செய்துகொள்ள
வேண்டும். நமது அயல் நாட்டுக் கொள்கையில் பெரிதும்
ராணுவ, பொருளாதார அம்சங்களே இடம் பெற்றிருந்தா
லும், அயல் நாட்டு விவகாரங்கள் ராஜதந்திர முறையிலேயே
நடைபெறுகின்றன. யுத்த முறையை மேற்கொள்ளாமல்
நமது சங்கடங்களும், பரஸ்பர மனக்கசப்புகளும், ராஜதந்
திர சம்பிரதாயங்கள், நடைமுறைகள் மூலமே தீர்க்கப்பட்டு
வருகின்றன.

## ராஜதந்திர அட்டவணை

பிரிட்டிஷ் அயல்நாட்டு விவகாரக் காரியாலயத்தில்
நீண்டகாலமாகவே, பலவித ராஜதந்திர சம்பிரதாயங்கள்
நடைமுறையிலிருந்து வருகின்றன. இந்த சௌகரியம் நமது
நாட்டில் இல்லை. எல்லோருக்கும் சுதந்திரமுண்டு என்கிற
சம்பிரதாயம் நமது நாட்டில் நிலைபெற்றிருக்கும் வரையில்
ராஜதந்திரத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் தங்க



ளிஷ்டப்படி, விரிவாக ஆதிக்கம் செலுத்த இடமளிக்கப்பட
மாட்டாது. பிரிட்டனைவிட அமெரிக்காவில், ராஜதந்திரம்
பொதுமக்கள் அறியும் வகையிலேயே கையாளப்படுகிறது.

இம்மாதிரி நிலைமை நீடிக்கும் வரையில், நமது ராஜ
தந்திரத்தில் மட்டுமல்ல, நமது எல்லா சர்வதேச நடவடிக்
கைகளின் முதல் தேவை நமது நோக்கங்களைத் தெளி
வாக உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதுதான். இந்த நோக்
கங்கள் சுலபமாக நிறைவேறக்கூடியதா யிருக்கவேண்டும்.
அமெரிக்கர்களில் பெருவாரியானவர்கள், இந்த நோக்கங்களை
ஆதரிக்கவேண்டும் என்பது அவசியந்தான். ஆனால் ஒரு விஷ
யத்தில் நாம் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். பல
விஷயங்களில் நாம் முன்கூட்டியே ஓர் அபிப்பிராயத்திற்கு
வந்துவிடுகிறோம். சில விஷயங்களைப் பற்றி முன்கூட்டியே
மதிப்பீடு செய்துவிடுறோம். நம்முடைய நோக்கங்கள் இம்
மாதிரி அபிப்பிராயங்களின், நன்கு ஆராய்ந்தறியப்படாத
சமரசக் கதம்பமா யிருந்துவிடலாகாது. அறிவாற்றலுள்ள
தலைவர்கள் கூடி, ஜனநாயக முறையில் சர்ச்சை செய்து
அதன் விளைவாக ஏற்பட்ட முடிவா யிருக்கவேண்டும்.

கம்யூனிஸ்ட் கொள்கைகள் இளக்கத்தன்மை வாய்ந்தவை
களாக மாறுமானால், உலகக் கம்யூனிஸத்தைப் பற்றிய நமது
நோக்கங்களைப் புனராலோசனை செய்து தெளிவுபடுத்தவேண்
டும். கம்யூனிஸம் நமக்குப் பிடிக்கவில்லை யென்பது தெளிவு;
அது மறைந்தொழிந்து போவதையே நாம் விரும்புகிறோம்;
ஆனால் அதைத் தீர்மானமாக ஒழித்துக் கட்டுவதெனில்,
ராணுவ முறைகளைக் கைக்கொண்டாகவேண்டும். ஆனால் இம்
முறைகளை அமெரிக்கர் விரும்பவில்லை என்பதும் நியாயமே.

கடைசியாக நமக்குச் சங்கடமளிக்கும், ஆனால் மிகத்
தெளிவான ஒரு கேள்விக்கு நாம் பதில் கூறியாகவேண்டும்:
சோவியத் யூனியனுடனும், கம்யூனிஸ்ட் சீனாவுடனும் எந்த
அடிப்படையில் நாம் சமாதானமாக வாழத் தயாராயிருக்கி
றோம் என்பதுதான் அக்கேள்வி.

நமது சரித்திரத்தில் பல சர்வாதிகாரங்களுடன் அமெ
ரிக்கா கூடிவாழ்ந்து வந்திருக்கிறது. சர்வாதிகாரத்தை நாம்
அங்கீகரிக்காவிட்டாலும், நம்மை அச்சுறுத்துவது சர்வாதி
காரமல்ல. அண்டை நாடுகளில் நேரடியாக ஆக்ரமித்தோ,
அல்லது உட்புகுந்து நாசம் விளைவித்தோ விழுங்கப்பார்க்கும்
சர்வாதிகாரம்தான் நம் எதிரி.

கம்யூனிஸ்டுகள் ராணுவ ஆக்ரமிப்புச் செய்யாமல்,
குறிப்பிட்ட காலத்திற்கு நாம் பாதுகாப்பு அரண் அமைத்து
ஜாக்கிரதையா யிருந்தோமானால், இன்று கம்யூனிஸ்ட் அர

லாத உலகில் மூன்றில் இரண்டு பகுதியினரை விரிவான அர
சியல், பொருளாதார ஒத்துழைப்பின் மூலம் படிப்படியாக
ஒன்றுபடுத்தி வந்தோமானால், நமது முன்னேற்ற முறை,
அதன் வேகம் இரண்டின் மூலம் உள்நாட்டில் குழப்பம் ஏற்
படாமல் தடுத்து வந்தோமானால், சில தலைமுறைகளில் கம்
யூனிஸ்ட் தலைவர்கள் சரித்திர பூர்வமான உண்மைகளுக்
கேற்ப தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்வார்கள். இம்
மாதிரி இதற்குமுன் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

அணுகுண்டு யுத்த கெடுபிடியை அரசியலிலிருந்து விடு
[illegible]டிருக்க விரும்பும் உலகில், தங்கள் அயல்நாட்டுக் கொள்
[illegible]யை விவரிக்கையில் சோவியத் ராஜதந்திரிகள் பல்வேறு
வியாக்கியானங்கள் கூறுவார்கள் என எதிர்பார்க்கலாம்.
ஜெனீவா மகாநாட்டில் நிலவிய புதிய சுமுகமான சூழ்
நிலையில் இம்மாதிரிப் புதிய மாறுதல்கள் காணப்பட்டன.
இந்த மாறுதல்களால் உலகத்தோர் யுத்த பயம் நீங்கி, சற்று
மன நிம்மதியுடன் மூச்சுவிடுகின்றனர்.

சோவியத் தோரணையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள்
உண்மையானவை என்று காலக்கிரமத்தில் நிரூபணமாகிவிட்
டால், நிலையான உலகத்தை அடைவதற்கு அமெரிக்க ராஜ
தந்திரம் என்ன பணிபுரியும்? இருதரத்தாரும் ஒப்புக்
கொள்ள வேண்டுமானால், எந்த அடிப்படையில் உடன்பாடு
அமைய வேண்டும் என்பதை நமக்குள்ளே நாம் தெளிவு
படுத்திக்கொள்ள வேண்டும். இம்மாதிரி இணைவதனால் ஏற்
படக்கூடிய அபாயங்களை எந்த அளவில் நாம் சமாளிக்க
முடியும்? சோவியத் நல்லெண்ணத்தைச் சோதிக்கும் முறை
யில் நாம் எந்தமட்டில் இணங்கி, சாத்தியமான சந்தர்ப்
பத்தில் நேர்மையான பரஸ்பர உடன்பாடு செய்ய முடியும்?
இவ்வளவையும் நமக்குள் நாம் தெளிவாக ஆராய்ந்து திடப்
படுத்திக் கொள்ள வேண்டும். யுத்த கெடுபிடியால் ஏற்
படக் கூடிய சங்கடங்களைத் தவிர்ப்பதற்காக நிபந்தனை
யின்றிச் சரணாகதி செய்வது, இரண்டாவது உலக யுத்
தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் செய்த செலவு,
அடைந்த நஷ்டத்துக்கொப்பாகும்.

கூடி வாழ்தல் துறையில் ரஷ்யாவுக்கும், அமெரிக்கா
வுக்கும் ராஜதந்திரப் போட்டி நடக்கையில், இருதரப்பி
லும் சேராத உலகத்தோர், நம்மைக் கவனித்து நம்மிடம்
அநுதாபம் காட்டவேண்டுமென்றே விரும்புவோம். இவ்
விஷயத்தில் தீர்ப்புக் கூற வேண்டிய, எவ்விதச் சார்புமற்ற
உலகத்தினர் நமது உள்நோக்கங்களை மதிப்பிடுவர். நமது
ராஜதந்திரிகளின் நடவடிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்தே
அவர்கள் முடிவு செய்வர்.



சர்வதேச அரங்குகளில் இறுமாப்புடன் பேசும் சபலம்
நமக்கு ஏற்படுமானால் மற்றொரு பிரிட்டிஷ் ராஜதந்திரி பிறி
தொரு சந்தர்ப்பத்தில் கூறியது நமக்குப் பொருந்தும்.
"ராஜ தந்திரம் என்றால் என்ன? உங்களுக்கு என்ன வேண்
டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் சந்
தித்துப் பேசப்போகும் உங்கள் பதவி வகிப்பவர்கள் என்ன
விரும்புகின்றனர் என்பதை அறிந்து கொண்டு, அதற்கேற்ப
உங்களுக்குத் தேவையானதை வெளியிட வேண்டும்."

அமெரிக்க ராஜதந்திரிகள் செய்ய வேண்டிய அத்தியா
வசியமான வேலை ஒன்று உண்டு. பிரச்னைகளைத் தீர்ப்பதில்
நமது முறை, அதுபற்றிய விளக்கம் இரண்டும் கூடிய மட்
டில் இதர கம்யூனிஸ்டல்லாத நாட்டினரின் போக்குக்கு
இசைந்ததாயிருக்க வேண்டும். சமீப காலத்தில் இந்த வகை
யில் நமது சாதனை அவ்வளவு சிறந்ததாயில்லை. அமெரிக்க
ராஜதந்திரத்திற்கு முக்கியமான தேவை, உத்தியோக
தோரணையில் இல்லாவிட்டாலும் நாம் ராஜதந்திர முடிவுகள்
செய்யுமுன் எல்லா கம்யூனிஸ்டல்லாத நாடுகளையும் கலந்து
ஆலோசிக்க வேண்டும் என்பதுதான். இம்மாதிரிக் கூட்டு
ஆலோசனையின் முடிவுக்கு சோவியத் யூனியனோ, கம்யூனிஸ்ட்
சீனாவோ எதிரிடையாயிருந்தால், அதன் விளைவுகளை நாம்
மட்டும் தனித்து அநுபவிக்க வேண்டியிருக்காது. பரஸ்பர
ஒற்றுமையான நோக்கங்களைத் திட்டம் செய்வதில் நாம்
தோல்வியுற்றால் அது சுதந்திர உலகு முழுவதையும் பாதிக்கும்.

விருப்பு வெறுப்பின்றிப் பார்க்கும் ஆற்றலுடைய பல
தரப்பட்டவர்களுக்கு நமது நோக்கங்கள் நியாயமானவை,
நிறைவேற்றக் கூடியவை என்கிற முறையில் அவைகளை
வகுக்க வேண்டும்; சோவியத் யூனியனையோ, கம்யூனிஸ்ட்
சீனாவையோ குழப்பிவிடும் நோக்கத்துடன் அவைகளைத்
தயார் செய்யலாகாது. அவர்கள் சமரசம் செய்து இணங்கு
வதற்கேற்ற முறையில் அவைகளை அமைக்க வேண்டும்.
கூடிய மட்டில் சொல்வதொன்று, செய்வதொன்று என்கிற
அவர்கள் மனப்பான்மையிலிருந்து கம்யூனிஸ்ட் தலைவர்களை
விடுவிக்கும் முறையில் இருக்கவேண்டும். இந்த மாறுபட்ட
மனப்பான்மையின் விளைவாகவே அவர்கள் சமாதானமும் கம்
யூனிஸ்ட் உலக ஆதிக்கமும் ஒன்றுபோல் இதுவரையில் பேசி
வந்திருக்கிறார்கள். நமது கொள்கையைப் பரந்த அடிப்படை
யில் தெளிவாக அமைப்பதன் மூலம் கம்யூனிஸ்ட் கொள்கை
தெளிவுபட உதவிபுரியலாம்.

நமது யோசனைகளில் முக்கியமானவைகளை நமது நேய
நாட்டினருடன் மட்டுமல்ல, தற்காலப் போராட்டத்தில்
கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருக்கும் செல்வாக்குள்ள நாடு

களையும் கலந்து நன்கு சர்ச்சை செய்தே முடிவு செய்ய
வேண்டும். இந்தப் பேச்சு வார்த்தைகள் எந்த முறையில்
போகும் என்பதை முன்கூட்டித் திட்டமாகக் கூறமுடியாது.
கொள்கைகளை வளர்த்து, அவைகளை நடைமுறையில் நிறை
வேற்றி வருபவர்களின் திறமை, செல்வாக்கு, மென்மை
உள்ளம் முதலியவைகளைப் பொறுத்திருக்கிறது இதன் முடிவு.

சோவியத்தினரிடம் ஒரு புதிய இளக்கத்தன்மை தோன்றி
யிருப்பதனால் அமெரிக்க ராஜதந்திரத்தின் முக்கிய நோக்கம்
ரஷ்ய கெடுபிடியைச் சமாளிக்கும் முறையில், நமது ஐரோப்
பிய நேச உடன்பாடுகளைச் சீராகக் காப்பாற்றுவதாயிருக்க
வேண்டும். மிகுந்த கஷ்டப்பட்டு, செலவு செய்து இந்த
உடன்பாடுகள் ஏற்பட்டன. எப்பாடுபட்டாவது கூடுதலான
சிரமப்பட்டு செலவும் செய்து, அவைகளைக் காப்பாற்ற வேண்
டும். ஆகையால் வட அட்லாண்டிக் கடற்கரை நாடுகளுக்
கும் நமக்குமுள்ள வித்தியாசங்களையும், மனக்கசப்புக்கான
காரணங்களையும் குறிப்பாகக் கவனித்து அகற்றவேண்டும்.

ஐரோப்பாவில் நேச நாட்டினரிடையே மாறுபட்ட
கருத்துக்கள் நிலவுவதற்குக் காரணமாயுள்ள சிலவற்றை
இங்கே குறிப்பிடலாம். இவைகளைப் பயன்படுத்தித் தங்கள்
நிலையை அபிவிருத்தி செய்து கொள்ளலாம் என்று ரஷ்யத்
தலைமைப்பீடம் நினைக்கக்கூடும்.

1. நமது நேடோ நேசநாடுகள் அணுகுண்டுகளால்
தாக்கப்படுமானால், அதைச் சமாளிக்கமுடியாத நிராதரவான
நிலையில் அவைகள் இருக்கின்றன. பூகோள அமைப்பில் அவை
கள் இருக்கும் நிலைதான் அவைகள் பிறருடைய கூட்டுறவை
ராஜதந்திர முறையில் நாடுவதன் நோக்கம். ஆனால் இதே
அளவுக்கு அமெரிக்கா அணுகுண்டுத் தாக்குதலுக்கு உள்
ளாகாதாகையால், அவைகள் நம் உறவை நாடுவதன் நோக்
கத்தை—அதாவது உலகக் கொந்தளிப்பைத் தளர்த்துவது—
அமெரிக்கர் மறந்துவிடுகின்றனர்.

2. ஐரோப்பிய நாடுகளில் உள்ள அயல்நாட்டு விவகார
மந்திரிகள் ராஜதந்திரத்தையே தொழிலாகக் கொண்டிருப்
போர் தோரணையில் ஒரேமாதிரி, கவர்ச்சியற்ற முறையில்
நடந்து கொள்வதுடன், ரகஸ்யமாகவே தங்கள் பணியை
ஆற்றுகின்றனர். ஆகையால் அமெரிக்கக் கொள்கை எதிர்
பாராத வகையில் திடீர் மாற்றமடைவது, யால்டா மகாநாடு
சம்பந்தமான கடிதப்போக்குவரத்துக்களைப் பிறரைக் கலக்கா
மல் வெளியிட்டது, கோஷங்களில் நமக்குள்ள ஆர்வம் முதலி
யவைகளைக் கண்டு ஐரோப்பிய ராஜதந்திரிகள் அதிர்ச்சி
யடைகின்றனர்.



3. அமெரிக்காவின் நிலையான கொள்கைக்கு மாறாகச்
செயல்புரிந்த மக்கார்த்தி முறை *(McCarthyism) செயல்களா
லும், மக்காரன்சட்டம் †(McCarran) சட்டத்தைத் தாறுமாறாக
அநுஷ்டித்ததனாலும் அமெரிக்கக் கொள்கைகள் பற்றி பல
ஐரோப்பிய, ஆசியப் பத்திரிகைகள் தவறான முறையில் எழுதி
வந்தன. இதன் விளைவாக மா-வின் சீனாவுக்கு எதிரிடையா
யிருக்கையில் நம் செல்வாக்கு குறைந்தும், நாம் நட்புரிமை
பாராட்டுகையில் நமது செல்வாக்கு உயர்ந்தும் வந்தது.

4. உயர்தரக் கொள்கை வகுப்பதில் சமீபகாலத்தில்
பிரிட்டன் உண்மை நிலைக்கேற்பவும், விருப்புவெறுப்பின்றியும்
செயல்புரிந்து வந்திருக்கிறது. அமெரிக்காவைப் போல் பிரிட்
டன் நடந்துகொள்ளவில்லை என்று பல ஐரோப்பியர்களும்,
கம்யூனிஸ்டல்லாத ஆசியர்களும் கருதுகின்றனர். அவர்கள்
அதிகமாக பிரிட்டனின் தலைமையையே நம்பியிருக்கின்றனர்.
அயல்நாட்டுக் காரியதரிசியாயிருக்கையில் சர்வதேச நிவார
ணத் துறையிலும், இந்தோ-சீனாவிலும் ஈடன் (Eden) ஆற்றிய
பணி பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் மதிப்பைக் குறைத்துவிட
வில்லை. பிரிட்டிஷ் அயல்நாட்டுக் காரியாலயத்தினர் அமைதி
வாய்ந்த தன்னம்பிக்கையுடன் பணிபுரிந்ததனால், அயல்தேச
விமர்சகர்களின் நம்பிக்கையைப் பெற்றனர். இந்தப் பணி
யைக் கண்டு அவர்கள் பொறாமையுமடைந்தனர். 1955-இல்
ஜெனிவாவில் ஐஸன்ஹோவர் நாம் இழந்த மதிப்பை மீண்டும்
அடையும் வகையில் செயல்புரிந்தார்.

5. மாறுபட்ட அக்கறைகளைச் சமரசம் செய்து கொள்
வதற்கு ஏற்ற சாதனம் என்று ஐ. நா.-வை ஐரோப்பியர்கள்
மதிக்கின்றனர். ஆனால் ஆக்ரமிப்பைத் தடுப்பதற்கான சாத
னமாக அதை நாம் மதிக்கிறோம். இந்த மாறுபாடு, செஞ்
சீனா ஐ. நா.-வில் அங்கம் வகிக்க விரும்புவதை நாம் எதிர்த்
தும், பிறநாடுகள் இடம்பெறுவதை நாம் ஆதரித்தும் வரு
வதன் மூலம் பிரதிபலிக்கிறது.

நமது பாதுகாப்பு அரணுக்குப் பின்பலமாக, சமாதானத்
தையும் முன்னேற்றத்தையும் வளர்க்கவல்ல அமைப்புகளை
நிறுவுகிறோம். மேற்குறிப்பிட்ட அபிப்பிராய பேதங்கள் மூலம்
இந்தத் துறையில் அமெரிக்க ராஜதந்திரிகளை எதிர்நோக்கி
யுள்ள பொறுப்பும் மகத்தானது என்பதை உணரலாம்.

---

* மக்கார்த்தி என்பவர் ராணுவப் பதவியிலிருந்துகொண்டு, அரசியல் விவ
காரங்களில் தலையிட்டுப் பன்முறை அரசாங்கக் கொள்கைகளையே தாக்கியவர்.

† மக்காரன் சட்டம் இன அடிப்படையில் பிறநாட்டினர் அமெரிக்கா
வில் பிரவேசிப்பதை ரத்து செய்து, ஒரு தேசத்திலிருந்து ஆண்டுக்கு எத்தனை
பேர் வரலாம் என்பதைத் திட்டம் செய்தது.

மேற்கத்தி ஐரோப்பாவில் உள்நாட்டு நெருக்கடி அதி
கரித்து, சோவியத் நிர்ப்பந்தமும் குறைந்தால், நேசநாட்டின
ரின் அரசியல் நடவடிக்கைகள் தெளிவற்றதாகிவிடும்.

மேற்கு ஜெர்மன் தலைமைப் பதவியிலிருந்து அடினார்
(Adenauer) விலகினால், அந்நாட்டின் எதிர்காலம் எப்படி
யிருக்கும் என்று கூறமுடியாது. அவர்களது நிலையற்ற தன்
மையே நீண்டகாலமாக அவர்களை வாட்டிவருகிறது. இது
இன்னும் தீர்க்கப்படவில்லை. ஐரோப்பாவின் நடுமத்தியில்
பிளவுபட்ட ஜெர்மனியிருப்பது அபாயகரமானது. இந்த
அபாயத்தை அகற்றாமல் நீண்டகாலம் விட்டு வைப்பது
ஆபத்தையே விளைவிக்கும்.

ஃபிரஞ்சு, இத்தாலி பொருளாதார அமைப்பில், தொழிலை
யந்திரமயமாக்குவது அத்தியாவசியம். இந்தப் பணிக்கு
அதிகமாக மூலதனம் அளிக்கும் முறையில் எல்லா நேடோ
நாடுகளும் ஒப்புக்கொள்ளக் கூடிய ஏற்பாடு செய்யவேண்
டும். யுத்த கெடுபிடியை விட்டு, சமாதானம் நிலவுவதற்
கான கெடுபிடிக்கு மாறும் இடைக்காலத்தில் உள்நாட்டுப்
பொருளாதாரப் பிரச்னைகளே முக்கியத்துவம் பெற்றுவிடும்.
இந்த நிலையில் அயல்நாட்டுக் கொள்கை வகுப்பதில் எதற்கு
முதலிடம் அளிப்பது என்பதுபற்றி இவ்விரு நாட்டு மக்களும்
கவனம் செலுத்தாதிருந்து விடலாம். ஃபிரான்ஸில் குடியிருப்பு
வசதிப் பிரச்னை நெருக்கடியாயிருக்கிறது. இதைத் தீர்க்கா
மல் அந்நாட்டு அரசாங்கத்தார் அசிரத்தையாயிருந்துவிட
முடியாது. இத்தாலியில் நிலத்தைப் புனர் விநியோகம்
செய்ய வேண்டும். இது ஓர் அரசியல் பிரச்னை; காலதாமத
மின்றி இவ்விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.

ஒருபுறம் இம்மாதிரி உள்நாட்டு நிர்ப்பந்தங்கள் நிலவுகை
யில், மற்றொருபுறம் யுத்த கெடுபிடி குறைந்து வருகிறது.
இந்தச் சூழ்நிலையில் பாதுகாப்புக்கான பொருள் செலவுபற்றி
ஐரோப்பியர் கவலை கொள்கின்றனர் என்பதற்கான சூச
கங்கள் தென்படலாம். தங்கள் நாட்டுப் பொருள்களெல்லாம்
அவசரத்தேவையில்லாத, முடிவற்றது போல் தோன்றும்
ராணுவப் பாதுகாப்புக்காகச் செலவாகி வருகையில், உள்
நாட்டில் கம்யூனிஸ்ட் தூண்டுதலால் பெருகும் சமூக
அதிருப்தி அபாயகரமாகப் பெருகலாம் என அரசியல்
விமர்சகர்கள் கூறக்கூடும்.

ஐரோப்பாவில் நீண்டகாலமாகவே, பொருளாதார,
சமூகச் சீர்திருத்தங்கள் ஏற்படாமல் தாமதப்பட்டு வந்திருக்
கின்றன. இவைகளைத் துணிந்து நிறைவேற்ற வேண்டுமென்று
இந்த விமர்சகர்கள் கூறுவார்களானால், அது எல்லோருடைய
ஆதரவையும் பெறும். நிலைமையை நுட்பமாகக் கவனித்து
வருபவர்கள் மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிஸ்ட் கட்சிகள்



வீழ்ச்சியுற வேறு ஒரு வழி கூறுகின்றனர். உற்பத்திசெய்யும்
சரக்குகளைச் சற்று நியாயமாகப் பகிர்ந்தளிக்ககூடிய திறமை
யான, உண்மை ஆற்றல் உள்ள, தீவிரம் வாய்ந்த மத்தியக் கட்சி
தான் இதைச் சாதிக்க முடியும் என அவர்கள் கூறுகின்றனர்.

இம்மாதிரி முறைகளைப் பிறர் வற்புறுத்துவதற்கு முன்
அமெரிக்க ராஜதந்திரிகள் செய்து காட்டவேண்டும். இதை
எப்படிச் செய்துகாட்டுவது? அரசியல், பொருளாதாரத்
துறைகளில் ஐரோப்பா ஒன்றுபட்டு உழைக்க நாம் தூண்ட
வேண்டும். கற்பனா சக்தியுடனும் நிர்மாண ஆற்றலுடனும்
தக்க சந்தர்ப்பங்களில் இந்த ஒன்றுபடுத்தும் பணியில் நாமும்
கலந்துகொள்ளவேண்டும். நேடோவின் சாஸனம் பரந்த
முறையில் தீர்க்க தரிசனத்துடன் வகுக்கப்பட்டிருக்கிறது.
ராணுவ அபாயம் குறையக் குறைய மாறுபட்டுவரும் அரசியல்
நிர்ப்பந்தங்களுக்கேற்ப பணிபுரிய சாஸனம் இடம் தருகிறது.

## ஐரோப்பாவும், அமெரிக்காவும், காலனி ஆட்சியும்

ஐரோப்பா தனது பிரச்னைகளைத் தீர்ப்பதில் முனைந்
திருந்தால் அது பற்றி யாரும் குறை கூறமாட்டார்கள்.
இந்தப் பிரச்னைகளை முதன்மையாகத் தீர்ப்பதில் ஐரோப்பா
வுக்குள்ள அக்கறை அமெரிக்காவுக்கும் உண்டு. ஆனால்
உலகப் புரட்சி எல்லா நாடுகளையும் நெருக்குகிறது என்பதை
மறக்க முடியாது. அந்தப் புரட்சி ஐரோப்பா, அமெரிக்கா
இரண்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை வெகு
வாகப் பாதிக்கிறது என்பதையும் மறந்துவிடலாகாது.

ஐரோப்பாவில் வசதிக்குறைவாயுள்ள மக்கள் யுத்தப்
பிற்காலத்தில் தங்களை வாட்டிவரும் பலவேறு குறைகளைத்
தீர்க்கவேண்டும் எனத் தங்களது அரசாங்கங்களை வற்புறுத்தி
வருகிறார்கள். இதன் மூலம் இவர்களின் உள்நாட்டு விவகா
ரங்களை உலகப் புரட்சி எப்படிப் பாதிக்கிறது என்பதை
அறிந்துகொள்ளலாம்.

இந்த உலகப் புரட்சி அயல்தேச விவகாரங்களை எவ்
வாறு பாதிக்கிறது என்று கவனிக்கலாம். காலனி ஆட்சி
குலைந்துவிட்டதன் விளைவாக, வெளி நாடுகளில் ஐரோப்
பியருக்கிருந்த தனி உடைமைகள் பாதிக்கப்பட்டன. இந்தப்
புதிய நிலைக்கேற்ப அவர்கள் எப்படித் தங்கள் நிலையை மாற்றிக்
கொண்டனர் அல்லது மாற்றிக்கொள்ளத் தவறினர் என்பதி
லிருந்து புரட்சி இவர்களை எப்படிப் பாதித்தது என்பதை
அறிந்துகொள்ளலாம். இந்த நாடுகளில் பலவற்றுடன் நாம்
நேசப்பான்மையை நிலைப்படுத்த முயற்சிப்பதனால், இவர்க
ளிடையே காலனி ஆட்சிக் கொள்கை மூலம் அமெரிக்க ராஜ

தந்திரிகள் பல முதல்தரமான சங்கடங்களைச் சமாளிக்க
வேண்டியிருக்கிறது.

அமெரிக்கப் புரட்சி அநுபவம், காலனி ஆட்சி நாடு
களில் நமக்கு எவ்வளவு செல்வாக்களித்திருக்கிறது என்பதை
நாம் ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறோம். இந்தச்
செல்வாக்குக்கு பங்கம் விளைவிக்காத முறையில் நாம் எப்படி
நடந்துகொள்ள வேண்டுமென்பதை கர்னல் ரொமுலோ
பட்டவர்த்தனமாகக் கூறியுள்ளார். ''அமெரிக்கா புரட்சி
யில் தோன்றிய நாடு. அதனுடைய புரட்சிப் படிப்பினைகளை
ஆசியாவுக்கு ஈந்திருக்கிறது. தங்களுடைய கடமையைச் சரி
யாக நிறைவேற்றாததனால் அந்தப் புரட்சிப் படிப்பினைகளை
சோவியத் ரஷ்யா ஸ்வீகரித்துக்கொள்ளும்படி அமெரிக்கா
விட்டுவிட்டு நிற்கலாகாது.''

ஆசியர்களின் உள்ளங்களில் 'அமெரிக்கா இடம்பெற
வேண்டுமெனில், அமெரிக்கா இதயபூர்வமாகச் செயல்புரிய
வேண்டும். இப்படிச் செயலாற்றினால் அதைப் புரிந்துகொண்டு
அநுதாபத்துடன் அவர்கள், சுதந்திர ஆர்வமுள்ள, தாராள
உள்ளம்படைத்த ஜீவகாருண்யம் வாய்ந்த, வாஷிங்டன்,
ஜெஃபர்சன், லிங்கன், ஃபிராங்லின் ரூஸ்வெல்ட் முதலி
யோரை ஈன்றெடுத்த அமெரிக்காவை ஆர்வத்துடன் ஆதரிப்
பார்கள். ஆனால் தாங்கள் அடைந்த புகழுக்கு ஐரோப்பிய
நேசநாடுகள் களங்கம் விளைவிக்க அமெரிக்கர் அநுமதிப்ப
ரானால் அது நிச்சயமாகக் காலனி நாட்டு மக்களிடையே
அருவருப்பை விளைவிக்கும்.

ஆனால் ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடலாகாது.
இன்று, தென்கண்டங்களில் பரவி வீசிவரும் புரட்சிப் புயலைக்
கிளப்பியது அமெரிக்கா மட்டுமல்ல, காலனி ஆட்சியில்
முதன்மை வகித்த பிரிட்டனும், ஃபிரான்ஸும்தாம்.

''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' எனும்
கோஷம் ஃபிரெஞ்சுப் புரட்சியிலிருந்து தோன்றியதுதான்.
''ஒவ்வொருவனுக்கும் இரண்டு நாடுகளிடம் அபிமானம்
இருக்கவேண்டும். தன் தாய்நாடு. ஃபிரான்ஸ்''. இவ்வாறு
ஜெஃபர்ஸன் கூறினார். புரட்சியில் ஈடுபட்ட ஒவ்வொரு
நாட்டினரும் இந்த உண்மையை அறிந்திருக்கின்றனர்.

காலனி நாடுகள் சம்பந்தமாக ஃபிரான்ஸ், நாட்டின்
கொள்கை பொருத்தமற்றும், நசித்து வரும் ஆதிக்கத்தின்
சின்னமாகவும் தோன்றுகிறபோதுகூட, உலகப் புரட்சியின்
தாயகமாக ஃபிரான்ஸ் இருந்துவந்திருக்கிறது என்பதை ஞாப
கப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்தோ-சீனா, வட ஆஃபிரிக்
காவில் சூன்யமான காலனி ஆட்சி நடத்துகையில், இந்த நற்
பேறை ஃபிரான்ஸ் அலட்சியம் செய்திருந்தாலும், பழங்கால
ஃபிரெஞ்சுப் புரட்சி ஆர்வத்தின் சின்னங்களைச் சைகானிலோ,



கஸாப்ளாங்காவிலோ காண்பது சற்று விசித்திரமாகவே இருக்
கிறது. நமக்கு மனத்தளர்ச்சி அளிக்கக்கூடிய ஃபிரெஞ்சுக்
காலனி ஆட்சிக் கொள்கை ஒருபுறமிருக்க, நிறவேற்றுமைத்
தீமைக்கு ஃபிரெஞ்சுக்காரர்கள் இடமளித்ததே இல்லை என்பதை
மறந்துவிடலாகாது.

ஃபிரெஞ்சுப் புரட்சிபோல் பிரிட்டிஷாரது, அவ்வளவு
சிறப்பு வாய்ந்ததில்லை. ஆனால் படிப்படியாக அவர்களது
அரசியல் செயல் முறைகள் புதிய உலகப் புரட்சிக்கு ஆக்க
மளித்து வந்திருக்கின்றன.

இங்கிலாந்தை எதிர்த்து, அமெரிக்கர் காலனி ஆட்சிப்
புரட்சி நடத்தியது உலகத்திற்கு வழிகாட்டிபோலிருந்து வந்
திருக்கிறது என அவர்கள் பெருமைப்பட்டுக்கொள்கின்றனர்.
ஆனால் அவர்களது புரட்சிச் செயல்கள் யாவும் ஆங்கிலேய
பாணியிலேயே இருந்து வந்திருக்கின்றன. இதற்குச் சில
உதாரணங்கள் கூறலாம். உலகம் அறியும்படி, இங்கிலாந்தே
அதிரும்படி ஆத்திரத்துடன் அவர்கள் காலனி ஆட்சிபற்றி
கண்டித்து எழுதினர். பழையகால ஹாம்டன் (Hampden)
கிளப்பிய ''பிரதிநிதித்துவம் அளிக்காமல் வரி விதிக்க
லாகாது'' எனும் வாசகத்தை அவர்கள் கோஷித்தனர்.
இங்கிலாந்திலிருந்து வந்த தேயிலையை பாஸ்டன் துறைமுகத்
தில் கொட்டினர்.

பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் சாதனைகளில் தனிச் சிறப்பு
வாய்ந்த ஒன்றை இன்றைய உலக விவகாரங்களில் காணலாம்.
அதுதான் விரிவடைந்து வரும் .காமன்வெல்த். (பொதுக்
கூட்டு அமைப்பு) இந்தப் பெயரையே அவர்களது சரித்திரத்
தில் கிராம்வெல் நிகழ்த்திய புரட்சியிலிருந்து எடுத்துக்
கையாண்டிருக்கின்றனர் பிரிட்டிஷ் அரசியல் சிந்தனையின்
இந்த சமீபகால முன்னேற்றத்திற்கு ஒரு சிறந்த உதாரணம்
கூறலாம். பிரிட்டிஷார் தங்களது அரசியல் கொள்கைகளை,
தெற்கு ஆசியா, கோல்டுகோஸ்ட், ஸூடான் முதலியவிடங்
களில் தங்கள் ஆதிக்கத்தை ஆக்கமுறையில் கைவிட்டதன்
மூலம் நிரூபித்துக்காட்டினர்.

யுத்த பிற்காலத்தில் பிரிட்டிஷாரின் கொள்கைகள்
சாதுரியமாகவும், புத்திசாலித்தனமாகவும் இருந்து வந்திருக்
கின்றது. அதிலிருந்து நாம் ஒரு விஷயத்தை அறிந்துகொள்ள
லாம். காலனி ஆட்சி எதிர்ப்பெல்லாம், பிடிவாதமான ஏகாதி
பத்திய ஆட்சியை எதிர்த்து, நியாய உணர்ச்சி ஆர்வத்தில்
புரிந்த கலகங்களாகக் கருதிவிடலாகாது. சாம்ராஜ்ய ஆட்சியி
லிருந்து காமன்வெல்த்தாக மாறியதை, காலம் வந்தவுடன்
கௌரவமாக ஆதிக்கத்தைக் கைவிட்டதாக மாத்திரம்
கொள்ளலாகாது. நன்மையளிக்கும் வகையில் ஆளப்படுபவர்

களுடன் கலந்தாலோசித்து அவர்களுடன் ஒத்துழைப்பதற்கு
உதாரணமாகவும் கொள்ளவேண்டும்.

இதற்கு உதாரணம் கூறலாம். காமன்வெல்த்
பிரச்னைகளில் தெற்காசியப் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களை
பிரிட்டிஷ் அயல்நாட்டிலாகாவினர் எப்படிக் காது கொடுத்துக்
கேட்கின்றனர் என்பதிலும், கொழும்புத் திட்டத்தில் அதன்
உறுப்பினர்கள் எப்படி ஒன்றுபட்டு அமுல் செய்கின்றனர்
என்பதிலும் தெரிந்துகொள்ளலாம்.

முன்பு காலனி ஆட்சி நடந்தபோது, சாம்ராஜ்யவாதி
களுக்கு இருந்த அந்தஸ்து வேறு, சுதந்திரத்திற்குப் பின்பு
அவர்கள் நிலை வேறு. இந்த மாறுதலுக்கேற்ப அவர்கள்
தங்கள் கொள்கைகளையும், நடைமுறைகளையும் மாற்றி
யமைத்துக் கொள்ளவேண்டும்.

காலனி ஆட்சியை எவ்வளவு விரைவில் கைவிடவேண்டும்
என்பது, ஐரோப்பாவில் நிர்ணயிக்கப்படமாட்டாது. ஃபிரான்
ஸின் முழு பலமும், அமெரிக்கா தாராளமாக அளித்த உதவி
யும் சேர்ந்து யுத்தத்திற்குப் பின்பு இந்தோ-சீனாவில் பிரஞ்சு
ஆதிக்கத்தை நீடிக்கவைக்க முடியவில்லை. வளமிக்க கிழக்கிந்
தியத் தீவுகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டப் போராடு
வது [illegible] என்பதை டச்சுக்காரர்கள் அறிந்துகொண்டுவிட்
டனர். [illegible] கவும், சாதுர்யமாகவும் இந்தியா, பாகிஸ்
தான, பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து பிரிட்டன்
வெளியேறியதனால் பல கடுமையான உள்நாட்டுச் சண்டைகள்
நிகழாமல் தவிர்க்க முடிந்தது.

மற்றவிடங்களில் நிலவும் காலனி ஆட்சியை ஒழிப்ப
தெனில், நமது காலனி ஆட்சி நேயர்கள் என்ன கூறினாலும்,
அதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றாகிவிடுகிறது.
இப்படி ஒத்துப்போவதனால் நம் கொள்கைகளைக் கைவிட
வேண்டி வரும். மிகுந்த நல்லெண்ணத்துடன் நமது
முக்கியமான கொள்கையைப்பற்றி சமரசம் செய்துகொண்ட
தனால் சுதந்திர உலகிற்கு ஏற்கனவே நஷ்டம் ஏற்பட்டிருக்
கிறது.

இம்மாதிரி நம் கொள்கைகளைக் கைவிடவேண்டுமெனில்
மேற்கத்தி நாகரிகத்தின் எதிர்காலம் கவலைக்கிடமாகிவிட்டது
என்றுதான் கூறவேண்டும். நாம் நமது கடமையைச் செய்யத்
தவறியதனால், வரப்போகும் ஆண்டுகளில் ஏழை மக்களின்
உள்ளங்களைச் சோவியத் யூனியனும், கம்யூனிஸ்ட் சீனாவும்
கொள்ளைகொண்டுவிடும். வகுப்பு வித்தியாசப் பிரச்னையைத்
தீர்க்கவில்லையென்றால், நாகரிகம் மோசமான நிலைக்கு வந்து
விடும் எனும் 'டாயன்பீ'யின் எச்சரிக்கை முக்கியத்துவம்
அடைந்துவிடும்.



ஐரோப்பாவையும், அதன் பழைய சாதனைகளையும் எதிர்
காலத்தில் சாதிக்கக்கூடியதையும் அறிந்து மதிக்கும் எந்த
சிந்தனா சக்தியுள்ள அமெரிக்கனும் இந்த எச்சரிக்கையை அப்
படியே ஏற்றுக்கொண்டு [illegible] இதை ஒப்புக்
கொண்டால் பொதுவாக ஃபிரஞ்சுக்காரர்களும், ஐரோப்
பியரும் சமீபகால சரித்திரத்தின் படிப்பினைகளைப் புரிந்து
கொள்ள முடியாது என்று ஒப்புக்கொள்ளுவதாகும்.
காலனி ஆட்சியினர் தங்கள் ஆதிக்கத்தைக் கைவிடுவதா
யிருந்தால் அவர்கள் தங்கள் முறைகளை எவ்வளவோ மாற்றிக்
கொள்ளவேண்டிவரும். இந்த மாற்றத்தை அவர்கள் சுலப
மாக நிறைவேற்றும் முறையில் சாதுர்யமாக, நியாயமாக,
அறிவுடன், அவர்கள் நிலையை நன்கு அறிந்து செயலாற்று
வதுதான் அமெரிக்க ராஜதந்திரிகளின் முக்கிய கடமையாகும்:
ஆனால் இந்த மாற்றத்தைச் செய்வதைப் பொறுத்தே இருக்
கிறது ஐரோப்பாவின் எதிர்காலச் சிறப்பு.
அநேக ஐரோப்பியர்கள் தங்கள் பழங்கால அநுபவத்
தைப்பற்றிச் சங்கடப்பட்டுக்கொண்டே பேசுகிறார்கள்;
நிகழ்காலம் சகித்துக்கொள்ளக் கூடியதாயிருக்கும் என
நம்புகிறார்கள். ஆனால் தங்களுக்கு எதிர்காலமே இல்லை
யென்று நம்புவதுபோல் காணப்படுகின்றனர். பொறுப்பான
புதிய நம்பிக்கையுடன் ஐரோப்பியர் குறிப்பிட்ட சில சந்தர்ப்
பங்களில் தங்கள் எதிர்காலத்தை நோக்கலாம் என்று தெளி
வாகத் தெரிவதுபோல் காண்கிறது. இந்தக் குறிப்பிட்ட சந்
தர்ப்பங்கள், புரட்சி நிகழப்போகும் ஆஃப்ரிக்கா எவ்வாறு
நடந்துகொள்ளும் என்பதைப் பொறுத்திருக்கின்றன.
உதாரணமாக, பெல்ஜியம் நாட்டை எடுத்துக்கொள்ள
லாம். ஜீவசக்தியுள்ள, திறமை வாய்ந்த முப்பது லட்சம்
மக்கள் வாழும் நாடு அது. ஆனால் அந்நாடு தனது காலனி
யான காங்கோவுடன் சேர்ந்து பெரிய வல்லரசாகலாம்.
இந்தக் காங்கோ அமெரிக்காவில் பாதி விஸ்தீரணம் உள்ளது;
அதன் இயற்கை வளமும் அமெரிக்காவில் பாதி இருக்கலாம்.
ஆனால் இங்கே கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம்
ஒன்று இருக்கிறது. காங்கோவிலுள்ள 120 லட்சம் ஆஃப்ரிக்
கர்களுடன் கூட்டு சேர இணங்காவிட்டால், பெல்ஜியத்தைப்
பெரிய வல்லரசாக யாரும் மதிக்கமாட்டார்கள். ஆஃப்ரிக்க
ருக்கு நல்ல உணவளித்து, நல்ல கூலி கொடுத்து, நன்கு பரா
மரித்தால் மட்டும் போதாது. சம அரசியல் உரிமைகளின்
விளைவான மனித கண்ணியம் அளிக்கவேண்டும் என
உடனேயோ அல்லது நாள்பட்டோ அவர்கள் கேட்பார்கள்.
அவர்களின் இந்தக் கோரிக்கைக்கு இணங்கியேயாகவேண்டும்.
இதைச் சிந்தனை ஆற்றலுள்ள பல பெல்ஜியர்கள் புரிந்து
கொள்ளுகின்றனர். 1955 ஜனவரி 22-ஆம் தேதி ஸான்ஃபிரான்

ஸிஸ்கோவில் நடந்த ஐ.நா. மகாநாட்டில் பெல்ஜியத்தின்
அயல்நாட்டு விவகார மந்திரி பால் ஹென்றி ஸ்பாக் (Paul
Henri Spaak) இவ்வாறு பேசினார்: ''இந்த மகாநாட்டின்
மூலம் ஒரு விஷயம் எனக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது:
எல்லா ஜாதியினரும் எல்லா விஷயங்களிலும் சமம் என்பதும்,
அதனால் ஏற்படக்கூடிய இயல்பான விளைவுகளும் உண்மை
என்பதையும் அறிந்துகொண்டுவிட்டேன். இந்த உண்மையை
ஏற்க மறுக்கும் இக்கால ராஜதந்திரி யாராயிருப்பினும், அவர்
பல தவறுகள் செய்ய நேரிடலாம்.''

ஃபிரஞ்சு, மேற்கு ஆஃபிரிக்கா, மொராக்கோ, டியூனி
ஷியா, அல்ஜீரியா முதலிய பகுதிகளில் 250 லட்சம் ஆஃபிரிக்
கர்கள் வசிக்கின்றனர். இங்கே ஆக்க முறையில் நல்ல
கூட்டுறவு ஏற்படுத்திக்கொள்ள ஃபிரான்சுக்கு அருமையான
சந்தர்ப்பம் இருக்கிறது.

பல்வேறு காலனிகளின் சிக்கலான நிலையை அறிந்து
கொள்ள வேண்டும். சீக்கிரம் சுய ஆட்சி அளிக்கப்படும்
என சந்தேகத்திற்கிடமின்றி அறிவிக்க வேண்டும். இந்த
அடிப்படையில் கற்பனை சக்தியுடன் ஒரு செயல் திட்டம்
வகுப்பது ஐரோப்பிய, அமெரிக்கர்களின் சக்தியை மீறிய
காரியமல்ல. இந்தக் காரியத்தை நாம் பிலிப்பைன்ஸில்
சாதித்தோம். இவ்வாறு பிரிட்டிஷார் தெற்கு ஆசியாவில்
நடத்திக் காட்டினர். இப்போது ஸூடானிலும், மேற்கு
ஆஃபிரிக்காவிலும் செய்து காட்டிவிட்டனர். இதேமாதிரி
நல்லெண்ணத்துடனும், நிதானத்துடனும் பிற காலனி ஆட்சி
நாடுகளில் செய்ய முடியவில்லையெனில் ஒரு விஷயம் நிச்
சயம். இந்தியா, பர்மா, இலங்கை, பிலிப்பைன்ஸில் நிலைமை
சுமுகமாக மாறியது போலல்லாமல், இந்தோ-சீனாவில் ஏற்
பட்டதைவிட மிகக் கொடுமை வாய்ந்த பிரளய நிலையை
அட்லாண்டிக் நாடுகள் சமாளிக்கவேண்டி வரும்.

* * * *

நமது கருத்துக்களும், நமது அட்லாண்டிக் நேச நாடுகளின்
கருத்துக்களும் சில சமயம் மாறுபட்டதா யிருக்கின்றன என்
பது இரு சாராரும் அறிந்துகொள்ளக் கூடியதுதான்.

இன்றைய உலகின் பிரத்தியட்ச நிலையை அவர்கள்
அறிந்து கொள்ளாமல் செயல் புரிகின்றனர் என்று நமக்கு
நிச்சயமாகத் தெரியும்போது நமது மாறுபட்ட கருத்துக்
களை வெளியிடத் தயங்கலாகாது. வேண்டா வெறுப்புட
னுவது, முன்பு தயங்காமல் நாம் அவர்களுடன் ஒத்துப்போன
தனால் நமது மதிப்பு ஆசியாவிலும், ஆஃபிரிக்காவிலும் பிற
இடங்களிலும் மங்கிவிட்டது.



கறுப்பு நிற மக்கள் திருப்தியடையும் வகையில், நமது
கொள்கைகளை அர்த்த புஷ்டியுடன் தீர்மானமாக மாற்றிக்
கொள்ளவேண்டும். முன்பு நமது காலனி ஆட்சி எதிர்ப்புப்
போக்கினால் நம் மதிப்பு உயர்ந்தது. அதே மதிப்பை நாம்
மீண்டும் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுகின்
றன. அவைகளை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

போதிய அளவு தகுதி பெற்றவுடன் ஆட்சி பெறும் உரிமை
எல்லா மக்களுக்கும் உண்டு எனும் அடிப்படையில் நம் நாடு
தோன்றிற்று. இதே அடிப்படையில் நேர்மையுடன், மனப்
பூர்வமாகச் செயல்புரிவோம் என்பது நமது ராஜதந்திரிகளின்
நடவடிக்கைகளில் தெரியவேண்டும்.

நாம் பின்பற்றும் கொள்கைகள் பொறுப்பு வாய்ந்த
முறையிலிருக்க வேண்டும்; சாதுர்யமாயிருக்க வேண்டும்.
ஐரோப்பாவிலும், ஆஃபிரிக்காவிலும் இன்றுள்ள பிரத்யட்ச
நிலைக்கேற்றதாயிருக்க வேண்டும். இன்று இன்னும் காலனி
ஆட்சி நிலவும் ஆஃபிரிக்காவில் நமது கொள்கைகள் எந்த முறை
யில் இருக்கவேண்டும் என்பதற்குச் சில குறிப்புகள் தருகிறேன்:

1. ஆஃபிரிக்கா நமது கட்டுப்பாட்டில் இல்லை. அதைக்
கட்டுப்படுத்த நாம் விரும்பவில்லையென்பதை முதலில் தெரிந்து
கொள்ள வேண்டும். நாம் அங்கு சாதிக்கக்கூடியதற்கும் ஒரு
வரம்பு இருக்கிறது.

2. காலனி விஷயங்களில் நமது ஐரோப்பிய நண்பர்கள்
எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றி நாம் அவர்
களுக்குப் போதனை செய்யலாகாது. ஆஃபிரிக்க மக்களின் கர
கோஷத்தைப் பெறுவதற்காக அலங்காரமான மேடைப் பிரசங்
கங்கள் செய்யவும் கூடாது. சுதந்திரம் பெறுவதற்கான,
ஒழுங்கான, பொறுப்பு வாய்ந்த யோசனைகள் நிறைவேறும்
முறையில் நமது செல்வாக்கை அந்தரங்கமாகவும், பகிரங்க
மாகவும் பயன்படுத்தவேண்டும்.

3. எந்த வேகத்தில் தாங்கள் சுய ஆட்சி பெறவேண்டும்
என்பதை நல்லதற்கோ, கெட்டதற்கோ ஆஃபிரிக்கர்களே
முடிவு செய்வார்கள். அவர்கள் எவ்வளவு விரைவில் தங்கள்
நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியுமோ அவ்வளவு
விரைவாக அவர்கள் சுதந்திரம் பெறுவதை நாம் உண்மையில்
ஆதரிக்கிறோம் என்பதை ஆஃபிரிக்கர்கள் நம்பும்படிச் செய்ய
வேண்டும். இவ்வாறு நாம் செய்தால் தகுதி பெறுமுன் சுய
ஆட்சி பெறவேண்டுமென்று விரும்பும் ஆஃபிரிக்கர்கள் கூடத்
தங்கள் கோரிக்கைகளை மிதப்படுத்திக்கொள்ள உதவி
புரியலாம்.

4. இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், ஃபார்
மோஸா கோல்டுகோஸ்ட், நைஜீரியா, சூடான் முதலிய நாடு
களும் ஒழுங்காக, ஜனநாயக முறையில் சுதந்திர நாடுகளாகத்

திகழுமானால் ஆஃப்பிரிக்கர்கள் சீக்கிரத்தில் சுய ஆட்சிக்குத்
தகுதி பெறமாட்டார்கள் என்று நினைத்தவர்கள் கூடத்
தங்களது கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டி வரும். புதி
தாகத் தோன்றி வரும் மேற்கு ஆஃப்பிரிக்க அரசாங்கங்கள்
வெற்றி பெறுவதற்கு அமெரிக்கா இயன்ற உதவிபுரிய வேண்
டும். பொருளாதார உதவி செய்வதன் மூலம் நமது அரசாங்
கம் இந்தப் பணியாற்றலாம். இது தவிர தர்ம ஸ்தாபனங்கள்,
மத ஸ்தாபனங்கள் போன்ற தனிப்பட்டோர்களும் சாதுர்ய
மாக மனோதர்மத்துடன் உதவி புரியலாம்.
5. இதே காரணத்திற்காக ஏற்கனவே சுதந்திரமடைந்
துள்ள எகிப்து, லிபியா, எதியோபியா, லைபீரியா போன்ற
நாடுகளுக்கும் தாராளமாக உதவிபுரிய வேண்டும். இந்நாடு
கள் அடையும் முன்னேற்றம், பிற நாடுகளின் முன்னேற்ற
வேகத்தையும் துரிதப்படுத்தும்.
6. ஆஃப்பிரிக்காவின் பொருளாதார அபிவிருத்திக்கான
திட்டத்தை ஆதரிக்க முன்வருகையில், எவ்வித வித்தியாசமு
மின்றி எல்லா ஜாதியினருக்கும் அது சமமாகப் பயன்படுமா
என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். ஆஃப்பிரிக்காவில்
கொஞ்சநஞ்சமுள்ள ஐரோப்பிய காலனி ஆட்சியையோ, இன
வேற்றுமையையோ நாம் ஆதரித்தால் நமது நன்முயற்சிகள்
கட்டாயம் தோல்வியுறும்.
7. நமது ராஜாங்க இலாகாவினர் ஆஃப்பிரிக்காவை முத
லாவதாகக் கவனிக்கவேண்டும். இன்று ஆஃப்பிரிக்காவில் ஒரு
சில இடங்களில்தான், நமது தூதராலயங்கள் இருக்கின்றன,
1955-இல் இந்தத் தூதர்கள் திறமை வாய்ந்தவர்கள், சிரத்தை
யுள்ளவர்கள் என்பதை திருப்தியுடன் அறிந்தேன். ஆனால்
அவர்கள் அளவுக்கு மீறி வேலை செய்தனர். மேலும் அவர்
களால் நிர்வகிக்க முடியாத அளவுக்குப் பல்வேறு பிராந்தியங்
கள் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டிருந்தன.
8. தாங்கள் பணிபுரியும் நாட்டிலுள்ள ஆட்சி புரியும்
சிறுபான்மையினரை கவனிப்பதுடன் இவர்கள் வேலை முடிந்து
விடவில்லை. ஆஃப்பிரிக்கர்களை நன்கறிந்து அவர்களுடன் நெடுங்
கிய தொடர்பு கொள்வதே இவர்கள் வேலை என்பதை நமது
அரசாங்க இலாகாவினரும் செய்தி ஸ்தாபனத்தினரும்
நன்கு புரிந்துகொள்ளுமாறு வற்புறுத்திக் கூற வேண்டும்.
பொருளாதார முறையில் நமது செய்தி ஸ்தாபனம் வசதி
பெற்று அதன் பயனை எல்லா ஆஃப்பிரிக்கர்களும் அடையும்படிச்
செய்ய வேண்டும்.
9. ஆஃப்பிரிக்க இனத்தைச் சேர்ந்த 160 லட்சம் அமெரிக்
கர்கள் அமெரிக்காவிலேயே இருக்கின்றனர். இவர்கள் ஆஃப்பி
ரிக்க மூதாதையர் வம்சங்களில் பிறந்தவர்கள். உத்தியோகத்
தோரணையிலும் தனிப்பட்ட முறையிலும் இவர்களைப் பிரசங்கி



களாகவோ, ஆசிரியர்களாகவோ, மதப் பிரசங்கிகளாகவோ,
அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவோ ஆஃப்பிரிக்காவுக்கு
அனுப்பினால் இவர்களை விடச் சிறந்த தூதர்கள் நமக்குக்
கிடைக்கமாட்டார்கள்.
10, அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் ஆஃப்பிரிக்காபற்றி
கற்றறிவதற்கு முதல் இடம் அளிக்கவேண்டும்.
11. ஒரு ஆஃப்பிரிக்க சாஸனம் தயாரிக்கவேண்டும். படிப்படி
யாக ஸ்தல, பிராந்திய, தேசிய அரசியல் உரிமைகள் வழங்கி,
கடைசியாகப் பூரண சுதந்திரம் அளிப்பதற்கு அந்தச் சாஸனத்
தில் வகை செய்யவேண்டும். இம்மாதிரி காலவரையறையுள்ள
திட்டம் ஒன்றை 1955 ஜனவரியில் ஐ. நா. தர்மகர்த்தாக்
கமிட்டி தயாரித்தது. இதில் ஓர் அமெரிக்கப் பிரதிநிதியும்
உறுப்பினராக இருந்தார். உடனே பட்டவர்த்தனமாக இந்த
யோசனையைப் பிரிட்டிஷ், பெல்ஜியம், போர்ச்சுகல், ஃபிரஞ்சு
அரசாங்கங்கள் கண்டித்தன.
இம்மாதிரிச் செயல்களால் ஏற்படும் நிலையை அடுத்துவரும்
ஆண்டுகளில் நாம் துணிந்து சமாளிக்கவேண்டும். ஆஃப்பிரிக்கா
இறுதியில் சுதந்திரம் பெறுவதற்கு ஐ. நா.-வை இயன்றமட்
டில் உபயோகிக்கவேண்டும். இந்த ஸ்தாபனம் இந்தத் துறை
யில் ஆதரவு திரட்டி, பல்வேறு சக்திகளை ஒன்றுகூட்டி, ஆஃப்பி
ரிக்கர்களுக்கு உற்சாகமளிக்க வேண்டும்.
ஆஃப்பிரிக்கா சம்பந்தமான இந்த சர்ச்சையில் அமெரிக்க
ராஜதந்திரிகள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள
வேண்டும். ஆஃப்பிரிக்காவின் எதிர்கால சக்தி ஆஃப்பிரிக்க மக்க
ளிடமிருக்கிறதே யொழிய அதை ஆளும் ஐரோப்பியரிடமில்லை.
நாளடைவில் இந்த மாபெரும் கண்டத்தின் சக்திவாய்ந்த
மக்களே ராணுவக் கேந்திரத்திற்கான தாதுப்பொருள்களை
யார் அடையலாம் என்பதை முடிவு செய்வார்கள். இதே
உண்மையை நமது பிற ராஜதந்திர நடவடிக்கைகளிலும்
ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும்.

## சக்தியின் எல்லைகள்

ஐரோப்பாவில் நமது கொள்கை மாற்றத்திற்கு முக்கிய
காரணம், மக்களுக்கும் தொழில்களுக்குமுள்ள சக்தியின்
விளைவுதான் என்பதை நாம் நீண்டகாலமாக அறிவோம்.
பிரான்ஸ், ஜெர்மனி இரண்டிற்கும் பொருந்தும்படியான
பாதுகாப்புத் திட்டம் அமைப்பதற்காக நீண்டகாலம் காத்
திருந்து பொறுமையுடன் உழைத்து வந்திருக்கிறோம். இதே
படிப்பினையை வேறுவிதமான சூழ்நிலையிலுள்ள ஆஃப்பிரிக்கா
விற்குச் சீக்கிரம் உபயோகிக்கவேண்டி வரும்.

இந்த அடிப்படைக் கொள்கை ஆசியாவில் முக்கியத்வம்
வாய்ந்தது என்பதை இனி நாம் அலட்சியம் செய்யமுடியாது.
கம்யூனிஸ்ட்டல்லாத ஆசியாவை, அவசியமேற்படுகையில்
பாதுகாத்து, ஜனநாயக அபிவிருத்தியடைவதில் ஊக்கமளிக்க
வேண்டும். கம்யூனிஸ்ட் நாடுகளின் சக்திக்கு உண்மையான
எல்லைக்கோடுகள் இந்தியாவும், ஜப்பானும்தாம். இவ்விரு
நாடுகளிலும் 45 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.
அதாவது, உலக ஜனத்தொகையில் 20 சதவிகிதம். சீனாவில் 58
கோடிக்கு மேற்பட்ட மக்களின் சக்தியைச் சீராக எதிர்த்து
திற்கக்கூடிய சக்தி இந்தியா, ஜப்பான் இரு நாடுகளிடம்
தானிருக்கிறது.

ஆசியாவின் ஆலைத்தொழில் உற்பத்தியில் 75 சதத்தை
இவ்விரு நாடுகள் தயார் செய்கின்றன. இங்கே தேர்ச்சி
பெற்ற, இனி தேர்ச்சி பெறக்கூடிய தொழிலாளிகள் லட்சக்
கணக்கில் இருக்கின்றனர். இந்தியாவில் இயற்கைவளம்
ஏராளமாக இருக்கிறது. சீனாவின் தொழில் வள சக்திக்குச்
சமமான சக்தி ஆசியாவில் இவ்விரு நாடுகளிடையேதான் இருக்
கிறது. நீண்டகால மதப்பற்றும், கலாசாரச் சிறப்பும் வாய்ந்
தது இந்தியா. சமீப காலத்தில் காந்தியின் மூலம் புத்துயிர்
பெற்றது இந்தியா. ஆகையால் சீனாவுக்குச் சவால் அளிக்கக்
கூடிய ஆன்மிக, லட்சிய ஆர்வ சக்தி குறிப்பிடத்தக்க அளவு
இந்தியாவுக்குத்தான் உண்டு.

கேந்திரமான நிலையிலுள்ள இந்தியா, ஜப்பானுடன்
நாம் ஒத்துழைப்பதற்கான முயற்சிசெய்ய இந்த உண்மைகள்
நம்மைத் தூண்டும். ஆசியாவில் நாம் நிறைவேற்றுவதாக
ஒப்புக்கொண்டதைச் செய்வதுடன் இவ்விரு நாடுகளுக்கும்
உதவுவதற்கு நாம் முதலிடம் அளிக்கவேண்டும். இந்த உதவி
செய்ய நாம் தவறினால், சுதந்திரமான நிலையான ஆசியாவைக்
காண முடியாது.

சீனாவிலிருந்து சியாங் கே ஷேக் ஃபார்மோசாவுக்கு
விரட்டப்பட்டதிலிருந்து நாம் கைக்கொண்ட கொள்கைகளை
மாற்ற வேண்டி வரும். ஃபார்மோஸா, தென் கொரியா,
பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான் முதலிய விடங்
களைத் தளமாகக் கொண்ட ஆசியாவில் நமது ராணுவத்
தந்திரங்களை வகுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். ஆசியாவின்
ஜனத்தொகையில் 12 சதம் பேர் இந்நாடுகளில் வாழ்கின்ற
னர். இந்தியா, பர்மா, இந்தோனேஷ்யா முதலிய நாடுகளின்
கொள்கையை அருவருப்புடன் நோக்காவிட்டாலும், அதை
அலட்சியம் செய்தே வந்திருக்கிறோம். இம்மாதிரி அசிரத்
தையுடன் தான் ஜப்பானையும் நோக்கிவந்திருக்கிறோம்.

பிலிப்பைன்ஸில் சீர்திருத்த நோக்குள்ள, பொதுஜன
ஆதரவு பெற்ற ஜனநாயக அரசாங்கம் நிதானமாக முன்



னேறி வருகிறது. பாகிஸ்தானில் ஜனநாயக நல்லெண்ண
முள்ளவர்கள் சிரத்தையுடன் தங்களது அரசியல் அடித்தளத்தை
விரிவுபடுத்த முயற்சித்து வருகின்றனர். அமெரிக்க உதவி
பெற விரும்பும் நாடு கம்யூனிஸத்தை எதிர்க்கத் தயாராயிருக்க
வேண்டும்; நமது தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும்
என்கிற அடிப்படையில்தான் நாம் உதவி புரிந்து வந்திருக்
கிறோம். அந்த நாட்டு அரசாங்கங்களை அந்நாட்டு மக்கள்
ஆதரிக்கிறார்களா, அவை நிலையாயிருக்கக் கூடியவையா
என்பன போன்றவைகளை நாம் சிந்தித்துப் பார்த்தாலும்
அவைகளை இரண்டாம் பட்சமாகவே கருதி வந்திருக்கிறோம்.

ஆசியாவில் நமது ராணுவ பூகோளப் படங்களில் நம்மு
டன் எந்த நாடுகள் ராணுவ உடன்பாடுகள் செய்துகொண்
டிருக்கின்றன என்பதைக் காட்டுவதற்காக அந்தந்த நாட்டுச்
சிறு கொடிகள் பொறிக்கப்பட்டிருப்பது கவர்ச்சிகரமான
காட்சியாயிருந்து வந்திருக்கிறது. ஆசியப் புரட்சித் தீ பற்
றிக் கொண்டால், இந்த அரசாங்கங்களில் எத்தனை அதி
லிருந்து மீண்டு வந்து தங்கள் நாட்டைச் சீராக அமைக்கும்
என்பது சந்தேகத்திற்கிடமான விஷயம்தான்.

ஜனநாயகத் தலைமை, பிறரை வசப்படுத்துவது, சமரசம்
செய்துகொள்வது, திட்டம் வகுத்து முன்னேறுவது ஆகி
யவை மூலம் பூரணப் புரட்சி விளைவித்துப் பிரமிப்பூட்டும்
தனது பிரச்னைகளை இந்தியா சமாளித்திருப்பதை ஏற்கனவே
அறிவோம். இந்த முயற்சிகளை நேரில் பார்த்த அமெரிக்கர்
கள் இந்தியாவைப் பாராட்டியுள்ளனர். வெளிக்காட்டிக்கொள்
ளாமல், இந்தியாவுடன் போட்டியிடும் கம்யூனிஸ்ட் சீனா
அடைந்த முன்னேற்றத்துடன் ஒப்பிடக்கூடிய வகையில்
இந்தியாவின் சாதனை அமைந்திருக்கிறது.

முன் அத்தியாயம் ஒன்றில் விவாதித்த, இன்னும் தீர்க்க
வேண்டிய அரசியல் பொருளாதாரப் பிரச்னைகள் அசாத்தியமா
யிருக்கின்றன. இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் இந்தியா
வெற்றிபெறுமா, தோல்வியுறுமா என்பதைப் பொறுத்தே
தென் ஆசியா, மத்தியக்கிழக்கின் ஸ்திரத்தன்மை நிலைபெறும்.
ஆசியாவின் பூகோளப்படம், அதன் மக்கள், அதன்
இயற்கை வளம் யாவற்றையும் ஆராய்பவர்கள் இந்தியாவை
அலட்சியமாக ஒதுக்கித்தள்ளுவது, நேருவின் பிரசங்கங்களைப்
பற்றி மன உளைச்சல் அடைவது, நடுநிலைமை நாடு என்று
இந்தியாவைக் குறைகூறுவது யாவும் அபாயகரமான புத்தி
ஹீனமான செயல்களேயாகும். நம் நாட்டின் பிரத்யட்ச நிலைக்
கேற்ப நடந்துகொள்ள வேண்டுமென்று கூறுவதையே
தொழிலாகக் கொண்டவர்கள் இருக்கின்றனர். இந்தியாவில்
ஜனநாயகத்தில் நம்பிக்கை பொங்கிவருகிறது என்று கூறினால்
இவர்கள் நம்பமாட்டார்கள். நம்மிடமிருந்து கற்றறிந்த

கொள்கைகளையே அவர்கள் பெரிதும் மதிக்கின்றனர் என்று
கூறினல், அதையும் பிரத்தியட்சவாதிகள் நம்பமாட்
டார்கள். இவர்கள் பூகோளம், புள்ளிவிவரங்கள் முதலிய
வற்றைக் குறுகிய நோக்குடன் அறிந்து கொள்கிறவர்கள்.
இந்தியா சுதந்திரமா யில்லாவிட்டால், இன்று சுதந்திரமா
யுள்ள ஆசியப் பகுதி நீண்டகாலம் நிலைத்து நிற்க முடியுமா
என்று இவர்களைக் கேட்கிறேன்.

உள்நாட்டுப் பிரச்னைகளால் ஏற்படக்கூடிய நிர்ப்பந்தத்
தினலோ, மற்றெக்காரணம் பற்றியோ உலக விவகாரங்கள்
பற்றிய தனது போக்கைச் சீன மாற்றிக் கொள்ள நேரிடும்.
அப்படியானல் இந்த மாறுதலைத் துரிதப்படுத்த இந்தியா
மிகவும் உதவி புரியலாம். இதற்கிடையில் நாம் செய்ய
வேண்டியதுஒன்றிருக்கிறது. ஏகாதிபத்திய வல்லரசுகளுடன்
உடன்பாடு கொள்ள வேண்டாம்'' என நமது வாஷிங்டன்,
''நீடித்த அளித்த எச்சரிக்கையை யொட்டி நேரு பேசலாம்.
அச்சமயங்களில் நாம் கொதிப்படையாமல் ஜாக்கிரதையா
யிருக்க வேண்டும்.

இந்தியாவில் இருமருங்கிலும் மத்தியக் கிழக்கு நாடுகளும்,
தென் கிழக்கு ஆசிய நாடுகளும் இருக்கின்றன. இந்தியா
தனது பொறுப்பை உணர்ந்து இந்த இடங்களில் பாதுகாப்
பான நிலையை ஏற்படுத்துமானல், அதன் மூலம் நமக்கு
நன்மை ஏற்படும். இந்தியா இந்தப் பணி புரிந்தால் நமது
மன்ரோ கொள்கை மூலம் 130 ஆண்டுகளுக்கு முன் தென்
அமெரிக்காவில் பாதுகாப்பான நிலை ஏற்படுத்தியதை ஒத்தாத
யிருக்கும். நமது தலைமையைப் பின்பற்றும்படி ஆசிய நாடு
களைக் கட்டுப்படுத்துவதனல் நமக்கு நன்மை ஏற்படாது என்
பதை மறந்து விடலாகாது. அவர்கள் போக்கிலேயே விட்டு,
நேரடியாகவோ, குழப்பம் விளைவித்தோ கம்யூனிஸ்டுகள்
ஆக்ரமிப்பதைத் தடுக்கவல்ல உள்நாட்டு அபிவிருத்தியடைய
உற்சாகமளிக்க வேண்டும்.

1945-55 விருந்தது போலவே, அடுத்த பத்து ஆண்டுகளில்
உலக கம்யூனிஸம் ஆக்ரமிப்பு செய்வதிலேயே துடியாயிருக்கு
மானல். இந்தியா, பர்மா, இந்தோனேஷ்யா முதலிய நாடுகள்
இந்த அபாயத்தை அறிந்து, எதிர்ப்பதற்கு இசையும். 1955-இல்
சோவியத் போக்கில் கண்ட ஓர் இளக்கத்தன்மை நீடிக்கும்
என்றே தோன்றுகிறது. இது உண்மையானல், நமது ராஜ
தந்திரம் அசாத்தியமான சோதனைக்குள்ளாகலாம்.

ஜப்பானில் நமது ராஜதந்திரம் வேறு வகையான
சோதனைக்குள்ளாகலாம். இங்கே நாம் ராணுவ உடன்பாடு
களில் நம்பிக்கை வைத்தே செயல்புரிந்து வந்திருக்கிறோம்.
ஜப்பானில் நமது விமானத் தளங்கள் இருக்கின்றன. 1955-இல்
கூட இந்தத் தளங்களை நமது காலாட்படை பாதுகாத்து



வந்தது. கொரியா சண்டையின்போது, ஜப்பானே நமது
முக்கிய ஆயுதக் கிடங்காயிருந்தது.

ஆனல் அமெரிக்கக் கொள்கையை ஜப்பான் எப்படியும்
பின்பற்றியே தீரும் என நமது கொள்கை வகுப்போர் கருது
கின்றனர். இவர்கள் தங்கள் விருப்பப்படியே எதுவும் நடக்கும்
என நினைப்பவர்கள். இம்மாதிரி நினைப்பு மிகவும் அபாயகர
மானது. ஜப்பானில் விமானத் தளங்கள், தோல்வியுற்றவர்
களால் வெற்றியடைந்தவர்களுக்கு அளிக்கப்பட்டவை. நாம்
சாதுர்யமாகவே அவர்களை நிர்ப்பந்தித்தோம். அதுவும் ஜப்
பானின் பாதுகாப்புக்காக. ஆனலும், அந்த நிர்ப்பந்தம் அந்
நியர்கள் அளித்த நிர்ப்பந்தமேயாகும். அவ்வாறே பெரு
வாரியான ஜப்பானியர் கருதுகின்றனர். அணுகுண்டு அபா
யங்களிலிருந்து விலகி நடுநிலைமை வகிக்கவே, இந்தியாவைப்
போல ஜப்பானும் தீவிர ஆவல் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நடுநிலைமை மீது ஜப்பானியருக்கு ஆர்வம்
பெருகுவதில் ஆச்சரியமில்லை. ஆசியாவை உருவகப்படுத்தி
வரும் சக்தியை நாம் அறிந்துகொள்வோம் என்கிற நம்பிக்கை
இப்போதிருப்பதைவிட அதிகமாக ஜப்பானுக்கு ஏற்படாவிட்
டால் அதனுடைய நடுநிலைமை ஆர்வம் மேலும் பெருகும்.

இந்தியா, ஜப்பான் இரு நாடுகளின் உதவி முக்கியம் என
வற்புறுத்துவதிலிருந்து மற்ற சுதந்திர ஆசிய நாடுகள் எப்படி
யும் நம்மை ஆதரித்தே தீரும் என்று நான் கூறுவதாக
நினைத்துவிடலாகாது. பிலிப்பைன்ஸ், பர்மா, இந்தோனேஷ்யா
பாகிஸ்தான், இலங்கை, ஃபார்மோசா, தென் கொரியா
முதலிய நாடுகளின் போக்கு நமது ஆசியா சம்பந்தமான
கொள்கையைப்பெரிதும் பாதிக்கலாம்.

புத்துணர்ச்சி பெற்ற ஜனநாயக அரசாங்கம் ஃபார்மோ
ஸாவில் அமையுமானல், நமக்கு இந்தத் தீவு மிகுந்த உதவி
யளிக்கலாம். ஃபார்மோசாவில் எழுத்தறிவு பெருகி வருகிறது.
நிலச் சீர்திருத்தம் நிறைவேறி வருகிறது. கிராமங்கள் மின்
சார வசதி பெற்று வருகின்றன. ஆகையால் ஆசியாவிலேயே
இங்கேதான் வாழ்க்கைத்தரம் உயர்வாயிருக்கிறது. இந்த ஒரு
காரணத்தை வைத்து அந்நாட்டில் பொதுஜன வாக்கெடுத்
தால், மக்கள் செஞ்சீனவுடன் சேர மறுப்பார்கள் என்று
கிட்டத்தட்ட நிச்சயமாகக் கூறலாம்.

சுதந்திர ஆசியாவின் எதிர்காலத்திற்கு இந்தியாவும், ஜப்
பானும் கேந்திரமான நாடுகள் என்பதை அமெரிக்கக்
கொள்கை வகுப்போர் மறந்துவிடலாகாது. ஆனல் ஆத்திர
மடைந்த அமெரிக்கர்கள் இந்தியாவை அலட்சியம் செய்கிறார்
கள். ஜப்பானைத் தோல்வியுற்ற, எப்படி நடந்துகொள்ளும்
என்கிற நிச்சயமற்ற நாடாகக் கருதுகின்றனர். இவ்விரு நாடு
களும் தங்கள் சுதந்திரத்தையும் முன்னேற்றத்தையும் பேணி

வளர்க்காவிட்டால், இந்நாடுகளை இப்போது நாம் கூறுவது
போல், ''சுதந்திர ஆசியா'' எனச் சரித்திர ஆசிரியர்கள்
மதிக்கமாட்டார்கள். இரண்டாவது உலக யுத்தத்திற்குப்
பின் ஏற்பட்ட பிரளயத்தில், சிறிது நேரம் தோன்றி மறைந்த
ஒளி என்றே கருதுவர்.

## வெளிநாடுகளில் அமெரிக்கர் மதிப்பு

மக்களும், கருத்துக்களும் தீவிரமாக மாறுதலடைந்து
வரும் காலம் இது. ஆகையால் அயல்தேச விவகாரங்களைப்
பற்றி, தனிப்பட்டோர் கருத்துக்கள் நமது கொள்கையை
அதிகமாகப் பாதிக்கின்றன என்பதை நமது ராஜதந்திரிகள்
உணர வேண்டும். அமெரிக்கர் மனப்பாங்கு, வாழ்க்கை,
அவர்கள் பேச்சு முதலியன பற்றி பிற நாடுகளிலிருந்து நமது
நாட்டிற்கு வரும் பிரயாணிகள் என்ன நினைக்கின்றனர் என்
பதைக் கொண்டே நமது ராஜதந்திரிகள் பணி புரிய வேண்
டும். உல்லாசப் பிரயாணத்திற்காகவோ, வர்த்தகத்திற்கோ,
கல்வி பெறுவதற்கோ ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள்
வெளி நாடுகளுக்குச் செல்லுகின்றனர். இவர்களையெல்லாம்
உத்தியோகச் சார்பற்ற நம் நாட்டு தூதர்கள் எனவே நாம்
மதிக்க வேண்டும். இவர்களது நடவடிக்கைகளைப் பற்றிப்
பிற நாட்டினர் ஏதாவது ஒருவித அபிப்பிராயம் கொள்ளுவர்.
இம்மாதிரித் தனிப்பட்டோர் அபிப்பிராயங்கள் எல்லாம்
சேர்ந்தே நம் நாட்டைப் பற்றிய கருத்து, பிறர் மனத்தில்
பதிவாகிறது. அதையே அவர்கள் சரியான மதிப்பீடு என்றும்
கொள்வர். பிற நாடுகளுக்கு நமது மக்கள் செல்வதனால் ஏற்
படுவதற்கு அடுத்தபடியாகத்தான், நமது அரசாங்க செய்தி
ஸ்தாபனங்களின் பிரசாரம் பயனளிக்கும்.

அமெரிக்கர் அகம்பாவம் பிடித்தவர்கள், பணத்தைப்
பூஜிப்பவர்கள், போகுமிடங்களில் எல்லாம் குடித்துக்
கொண்டே செல்லுகின்றனர், இதன் மூலம் பிற நாட்டின
ரிடம் பகைமூட்டுகின்றனர் என்றெல்லாம் நம்மைப்பற்றிக்
கேலிச் சித்திரம் வெளியிடுகின்றனர். இது மிகவும் அநீதி
யான மதிப்பீடு. இந்தியாவில் ஒரு விஷயத்தை நான் கண்
டேன். யுத்த காலத்தில் அமெரிக்கர் எங்கு முகாம் செய்
திருந்தனரோ, அந்த இடங்களில்தான் இன்று நம்மை
விரும்பிப் பாராட்டுகின்றனர். ஆனால் பிராபல்யமடைந்த
சிறு கூட்டத்தினர் வெளிநாடுகளில் நம்மைப்பற்றித் தப்பபிப்
பிராயம் விளைவிக்கக்கூடும் என்பதை இலேசாகத் தள்ளிவிட
முடியாது. இம்மாதிரித் தப்பு அபிப்பிராயம் ஏற்படாமல்
தவிர்ப்பதற்கு உத்தியோக முறையிலும், தனிப்பட்ட முறை
யிலும் முயற்சி செய்யவேண்டும்.



உத்தியோகத் துறையில், நமது அரசாங்கப் பிரசார
ஸ்தாபனங்களை எவ்வளவோ வகையில் பலப்படுத்தலாம்.
வெளியே தெரியக்கூடிய சீன வெறுப்புள்ள அமெரிக்கர்களை
வெளி நாடுகளுக்கு அரசாங்க வேலையாக அனுப்பலாகாது.
அமெரிக்கர் இன வேற்றுமை உள்ளவர்கள் என ரஷ்யர் பிர
சாரம் செய்கின்றனர். எனினும், இந்தத் தோரணையில் பேசும்,
செயல்புரியும் அமெரிக்க அதிகாரிகளை ஆசியாவிலும், ஆஃபிரிக்
காவிலும் நான் சந்தித்திருக்கிறேன்.

நமது அமெரிக்கச் செய்தி ஸ்தாபனங்கள் எவ்வளவோ
கஷ்டங்களுக்கு இடையில் சிறப்பாகச் சேவை செய்திருக்
கின்றன. தங்களது காலத்தையும் திறனையும் நாட்டின்
சேவைக்கு அர்ப்பணித்துக்கொண்ட அசாத்தியமான ஆற்றல்
வாய்ந்தவர்கள் இந்தப் பணியை ஏற்க முன்வருகின்றனர்.
சில சமயங்களில் தவறான விஷய ஞானமுள்ள அநுதாபமற்ற
காங்கிரஸ் உறுப்பினர்களைத் திருப்தி செய்யும் முறையில்
பேசிக்கொண்டு, அதே சமயத்தில் வெளி நாடுகளில் நமது
நல்லெண்ணங்களைப் பிரசாரம் செய்வது வீண்செலவாகும்.

வெளிநாடுகளில் நம்மைப்பற்றித் தவறான கருத்துக்கள்
பரவ ஓரளவு நாமே காரணம் என்று கூறுவதே நியாயமாகும்.
அமெரிக்கா செல்வம் கொழிக்கும் நாடு, பலம் பொருந்திய
சக்தி வாய்ந்த நாடு என்று பிறர் நினைக்கவேண்டும் என நாம்
ஆவல்கொள்ளுகிறோம். இதன் விளைவாகப் பிறர் நம்மைக்கண்டு
பொறாமைப்படுகிறார்கள். வெறுப்புக் கொள்ளுகிறார்கள்.
ஆகையால் நாம் இடறி விழுந்தால் நல்லது என்று அவர்கள்
விரும்புவது மனித இயல்பேயாகும்.

பிறரைக் கொடுமைப்படுத்துவதில் சந்தோஷமடையச்
செய்யும், மலிவான பகட்டுகளில் ஆனந்தமடையச் செய்யும்
சினிமாப் படங்களையும், நகைச்சுவை நிறைந்த புத்தகங்களையும்
எப்படித் தவிர்ப்பது என்பதற்குத் திருப்திகரமான பரிகாரம்
காணவில்லை. பிறநாட்டினர் நம்மைப்பற்றி நல்ல அபிப்பிரா
யம் கொள்ளுவதற்கு இவைகள் பெருந்தடையாயிருக்கின்றன.
சர்க்கார் தணிக்கையை எதிர்ப்பது நம் கொள்கை. சினிமா
முதலாளிகளும், புத்தகப் பிரசுரகர்த்தர்களும் இம்மாதிரிப்
போக்கைத் தடைசெய்யத் தாங்களே ஏதாவது வழி கண்டு
பிடிப்பர் என்று எதிர்பார்த்து வந்திருக்கிறோம். ஆனால்
இதுவரையில் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக்
கொள்ளவில்லை.

நாம் எம்மாதிரி வாழ்கிறோமோ, அம்மாதிரியேதான்
நாளடைவில் பிறருக்குக் காட்சியளிப்போம். இதைவிடச்
சிறப்பாகவோ, தாழ்வாகவோ அவர்கள் நம்மை மதிப்பிட
மாட்டார்கள். நம்மிலே தனிப்பட்டவர்களும் அரசாங்க
அதிகாரிகளும் பிற நாட்டினர் மனத்தில் விளைவிக்கும் அபிப்

பிராயம், முக்கியமாக நமது கல்வி முறை உருவகப்படுத்தி
வந்த நமது மக்களின் குணங்களையே பிரதிபலிக்கும்.
மற்றொரு விஷயத்தை நாம் பகிரங்கமாக விவாதித்துத்
தீர்க்கவேண்டும். ஏனெனில் இதைத் தீர்க்காவிடில் அமெ
ரிக்கா பற்றிய மதிப்பீடு பாதிக்கப்படும். கம்யூனிஸ்ட் கருத்துக்
களுக்கும், ஜனநாயகக் கருத்துக்களுக்கும் போட்டி நடக்கை
யில், அமெரிக்கா கம்யூனிஸ்ட் பிரசாரத்திற்கு எளிதான
இலக்காயிருப்பது துரதிருஷ்ட சம்பவமாகும். இதற்கான
காரணங்களில் ஒன்று, நமது பிரதிநிதிகள் காலத்திற்கேற்ற
முறையில் பேசாததுதான்.

பத்தொன்பதாவது நூற்றாண்டில் நிலவிய சுதந்திர
வியாபாரம் இப்போதில்லை. இப்பொழுது பொருளாதாரப்
பிரச்னைகளை நேரடியான பயனளிக்கவல்ல வகையில் தீர்க்க
முயலுகிறோம். ஆனால் நாம் இன்னமும் பத்தொன்பதாவது
நூற்றாண்டு நிலையிலிருப்பதுபோல் பேசினால், அமெரிக்காவை
முதலாளித்துவ சாம்ராஜ்ய நாட்டிற்கு உதாரணம்போல்
பிரசாரம் செய்யும் கம்யூனிஸ்ட் யந்திரத்திற்கு ஆக்கமளிப்ப
தாகிறது. பழங்கால அமெரிக்கக் கட்டுக் கதைகளின்
தோரணையில் அமெரிக்க அரசியல் வாதிகள் பேசினால் நம்மைப்
பற்றிப் பிறநாட்டினர் மனத்தில் ரஷ்யா விரும்புவதுபோன்ற
அபிப்பிராயமே பதிகிறது.

அமெரிக்கர் வாழ்க்கையில் மற்றுமொரு புதிரை இங்கு
விவாதிக்கிறேன். நமது பொருளாதாரப் பரிபாஷை அநேகமாய்
வறட்டுத் தத்துவத் தோரணையிலும், உலகத்தில் இலட்சியப்
போராட்டங்களில் ஈடுபட்டிருப்பவர்களைக் கவர முடியாமலும்
இருந்து வந்திருக்கிறது. ஆனால் நமது நாட்டுப் பொரு
ளாதார நடைமுறை இதற்கு நேர்மாறாக இருந்து வந்திருக்
கிறது. அந்த நடைமுறை பொருளாதார நீதியை ஒட்டிய
தாகவே இருந்து வந்திருக்கிறது. அதனால் நம் சமூகத்தில்
மார்க்ஸிஸ்டு தீவிரவாதம் வளர முடியவில்லை.

நாம் வழங்கி வரும் அநுபவ சாத்தியமான நீதியைவிட
நமது பரிபாஷைகளையே உலகத்தோர் நன்கறிந்து கொள்ளு
கின்றனர். நமது "டென்னெஸி பள்ளத்தாக்கு திட்ட"
ஸ்தாபனம் இருக்கிறது. (Tennessee Valley Authority) அமெ
ரிக்கப் பொருளாதார நடைமுறையில் இது மிகுந்த பாராட்டு
தலுக்குரியது என்று கருதுகின்றனர். ஆனால் நமது பிரமுகர்
கள் இந்த ஸ்தாபனத்தை சோஷலிஸத்திற்கு உதாரணம்
என்று கண்டித்துப் பேசுகையில் பிற நாட்டினர் அதிர்ச்சி
யடைகின்றனர்.

ஏதோ அபாயங்கள் இருப்பது போல் கற்பனை செய்து
கொண்டு பேசுவதனால், வெளிநாடுகளில் நமக்கு அதிகமாகத்
தீங்கு விளைகின்றது. நமது அரசியல் வாழ்வில் மிகைப்படுத்



திப் பேசுவது சகஜமாகிவிட்டது. ஆனால் இம்மாதிரிக் கட்டுக்
கடங்காத கற்பனையுடன் பேசுவதனால் இனி நன்மை விளை
யாது. நம் நாட்டில் உண்மையில் இரு கட்சிகளும் சேர்ந்து
சாதித்திருப்பதில் பெருமை கொண்டு நமது அரசியல் தலைவர்
கள் பேசக் கற்றுக்கொள்ளட்டும். அப்புறம் நமது பேச்சுக்குச்
செவி சாய்க்காதவர்கள்மீது குறைகூற நமக்கு உரிமையுண்டு.

தேசிய சுதந்திரம், மனித கண்ணியம், பொருளாதார
அபிவிருத்தி, சமாதானம் இந்த நான்கு புரட்சிக் கொள்கை
கள் பற்றி இந்தப் புத்தகத்தில் பன்முறை கூறியிருக்கின்றேன்.
இந்தக் கொள்கைகளே, மத்திய உலகிலுள்ள பெருவாரியான
மக்களை ஊக்குவித்திருக்கின்றன. இந்த அடிப்படையில்
நமது செய்தி ஸ்தாபனங்கள் பணிபுரியுமானால் அதன் பயன்
உற்சாகமளிக்கக் கூடியதாயிருக்கும். அமெரிக்காவின் பகட்
டான அம்சங்களைப்பற்றி அறிந்துகொள்ள உலக மக்கள்
ஆவலாயில்லை. தலைமுறை தலைமுறையாக நமது ஜனநாயக
சமூகத்தை எப்படி வளப்படுத்தி வந்திருக்கிறோம் என்பதைத்
தெரிந்துகொள்ளவே ஆசைப்படுகிறார்கள். இப்படி அறிந்து
கொண்டதனால் நமது பிரச்னைகளும் அவர்களது பிரச்னைகளும்
எந்த அளவுக்கு ஒரே மாதிரியானவை, நமது வெற்றியும்
தோல்வியும் அவர்களது பிரச்னைகளை எப்படித் தீர்க்க உதவி
புரியக் கூடும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்று
நினைக்கிறார்கள்.

ஒரு விஷயத்தை நான் அழுத்திக் கூற விரும்புகிறேன்.
நமது பிரசாரத் திட்டத்திற்கும் சலவை சோப் விற்பதற்கும்
எவ்வித சம்பந்தமும் இல்லை. சற்று வகைப்படுத்திக் கூறுவ
தெனில் சொல்லலங்காரப் பேச்சினால் நீடித்த பலன் இல்லை
என்பது மட்டுமல்ல, அதன்மூலம் நமக்கு நாமே இழிவு
தேடிக் கொண்டவர்களாவோம் என்று சொல்லலாம்.

நமது அசட்டுத்தனத்தினாலோ, அல்லது சிந்தனா சக்தி
யற்ற காங்கிரஸ் உறுப்பினரின் தூண்டுதலினாலோ, நாம்
ஜம்பப் பேச்சு பேசினாலோ, அரைகுறை உண்மைகள் வெளி
யிட்டாலோ, நாம் மிகைப்படுத்திப் பேசுகிறோம் என்பது
நமது சர்ச்சை செய்யும் ஜனநாயக முறை மூலம் அம்பலமாகி
விடும். இதன் விளைவாக நம் பேச்சும் ரஷ்யர்களதைப் போல்
நம்பத்தக்கதல்ல என்று எக்கட்சியிலும் சேராதவர்கள் நினைப்
பார்கள். எச்சார்பும் அற்றவர்கள் ஆசியா, ஆஃபிரிக்கா, தென்
அமெரிக்கா முதலிய இடங்களில் மட்டும்தான் வசிக்கின்றனர்
என்று எண்ணிவிடலாகாது.

"மனோதத்துவப் போராட்டம்" என்பது நாஜி ஜெர்
மனியில் பிரசார மந்திரியாயிருந்த கோபல்ஸும் (Goebbels),
ரஷ்யாவில் ஸ்டாலினும் கையாண்ட, மனித நேர்மையில் நம்
பிக்கையற்ற ஒரு சொற்றொடர். நமது நடவடிக்கைகளை இந்தச்

சொற்றொடர் மூலம்தான் விவரிக்க முடியும் என்றால், அமெ
ரிக்கர் வெறும் தந்திரசாலிகள், அல்லது தீயது நினைப்பவர்க
ளல்ல என்று நினைத்து வந்த இலட்சோபலட்சம் மக்களிடையே
நாம் மதிப்பிழந்துவிடுவோம்.

நாம் வெளியிடும் விஷயங்கள் யோக்யமாகவும், பிசகின்றி
யும் நேரடியான உதவி புரியக்கூடியதாயுமிருக்க வேண்டும்.
நல்ல காரியத்திற்காக அயோக்கியத்தனமாக நடந்துகொண்
டாலும், அது அயோக்கியத்தனம்தான். அம்மாதிரி செயல்
களில் ஈடுபடுபவர்களை அது நிச்சயமாக இழிவுபடுத்துகிறது.

சர்வாதிகார ஆட்சியின் பிரசார திட்டத்திற்கு ஒரு
சௌகரியம் இருக்கிறது. நம் நாட்டில் ஜனநாயக விவாதத்தின்
மூலம் நமது திட்டத்தில் குறைபாடுகள் வெளியாவது போல்,
அந்நாடுகளில் தீய அம்சங்கள் அம்பலமாவதில்லை. உண்மை
நிலை எது என்பதைப்போலவே, உண்மை நிலை எது என்று
மக்கள் மதிக்கிறார்கள் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது
எனும் அடிப்படையில் அவர்கள் பிரசாரம் செழித்தோங்கு
கிறது. இதற்கு ஓர் உதாரணம் கூறலாம். சமாதானத்திற்
கறிகுறியாக பிகாஸோ (Picasso)வில் வெண்புறுக்களை ரஷ்யர்
கள் பறக்கவிட்டனர். இதிலிருந்து ரஷ்யாவின் சமாதானப்
பிரசாரம் உண்மையானது என்று உலகத்தில் பல பாகங்களில்
நம்பினார்கள். உலகில் பெரும் பகுதியில் பல ஆண்டுகளாக
ஆயுதப் பெருக்கத்தை நிறுத்த வேண்டும் என வற்புறுத்து
வது ரஷ்யாவே யொழிய அமெரிக்கா அல்ல என்கிற பொது
ஜன அபிப்பிராயம் நிலவி வருகிறது. அமெரிக்காவின் நன்
மதிப்பை இழிவுபடுத்த இந்த அபிப்பிராயம் ஒன்றே போதும்.

## ஆயுதக்கலைப்பு : பசப்புதலா, உண்மையா ?

சோவியத்தினரின் ஆக்ரமிப்பு மிரட்டலும், பிற நாடு
களில் புகுந்து அவர்கள் குழப்பம் விளைவிப்பர் என்பதும்,
நமக்கு 1947-லிருந்தே தெளிவாகத் தெரிந்து வந்திருக்கிறது.
நம் மாதிரியே பிறரும் இதை அறிந்திருப்பர் எனப் பெருவாரி
யான அமெரிக்கர்கள் நம்பினர். ஆகையால் சமாதானம்,
ஆயுதக் குறைப்பு இரண்டும் பற்றி சோவியத்தினர் பிரசாரத்
தின் பயனை நாம் குறைவாக மதிப்பிட்டோம்.

மாஸ்கோவின் நோக்கங்கள் பற்றி நாம் நிச்சயமாக முடி
வுக்கு வர முடியாமற் போனாலும், சமாதானம், ஆயுதப்பரி
ஹரணம் இரண்டிலும் ரஷ்யர்களுக்கு உண்மையான பற்றுதல்
இல்லை என்பதைப் பெருவாரியானவர்கள் ஒப்புக்கொள்
கின்றனர். கம்யூனிஸ்டில்லாத பகுதிகளிலும், நமது நேய
நாடுகளிலும் நடுநிலைமை நாடுகளிலும், அமெரிக்காவுக்கும்,
சோவியத் யூனியனுக்கும் சமாதானம் ஏற்படுவது சாத்தியம்



என்று பிடிவாதமாக நம்பிவருகின்றனர். துரதிருஷ்டவசமாகச்
சில அமெரிக்க ராணுவ, அரசியல் தலைவர்கள் பேச்சு சமாதான
நோக்கங்களுக்கு மாறாயிருப்பதாக வெளிநாட்டினர் தீவிர
மாய் நம்புகின்றனர். ஆனால் ஜெனீவாவில் ஜனாதிபதி ஐஸன்
ஹோவர் சிரத்தையுடனும், மனப்பூர்வமாகவும் வெளியிட்ட
கருத்துக்கள் அமெரிக்காவின் சமாதான நோக்கங்களில் பிறர்
நம்பிக்கை கொள்ள உதவி புரிந்தது.

சமாதானம் ஏற்படுவது சாத்தியம் என்கிற நம்பிக்கை
வெளிநாடுகளில் வலுப்பெற்று வருகிறது. இதற்குப் பல
காரணங்கள் இருக்கின்றன. அணுகுண்டுத் தாக்குதலால் நாசம்
ஏற்படும் என்கிற அச்சம், இரண்டு உலகயுத்தங்கள், அந்நிய
ஆக்ரமிப்பு அநுபவம், சமாதானம், நல்லெண்ணம் இரண்டி
லும் மக்களுக்குள்ள ஆர்வம் இவைகளுடன் 1955-இல் சமா
தான நோக்கங்களில் திடீரென ரஷ்யா நாட்டங் கொண்டதும்
சேர்ந்து, சமாதானத்தில் மக்களுக்குள்ள நம்பிக்கையை
வளர்த்தது.

அணுசக்தி கட்டுப்பாடு, ஆயுதப்பரிகரணம் இரண்டு
பற்றியும், கற்பனைத் திறனுடன் அமெரிக்கா சமர்ப்பித்த
யோசனைகளைத் தெற்கு ஆசியா, ஆஃப்ரிக்கா, பிரிட்டனில் கூட
மக்கள் அறியவில்லை. அல்லது மறந்துவிட்டனர் என்பதை
1955 மாரிக் காலத்தில் நான் அறிந்தேன். இதிலிருந்து யுத்தத்
திற்குப் பிறகு நமது செய்தி ஸ்தாபனங்கள் சிறப்பாகப் பணி
புரியத் தவறிவிட்டன என்று தெரிகிறது.

நமது கட்சி சிறப்பாயிருக்கையில், செய்தி ஸ்தாபனத்
தினர் எப்படித் தங்கள் முயற்சியில் தோல்வியுற்றனர்
என்பதற்கு முகாந்தரம் கூறமுடியாது. யுத்த காலத்தில் நமது
நேய நாடாயிருந்த ரஷ்யாவை நம்பி இரண்டாவது உலக
யுத்தத்திற்குப் பிறகு நமது ஆயுதப்படைகளைக் கலைத்தோம்.
அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்ட ஓர் ஆண்டுக்குள் அணு
சக்தியை சர்வதேசக் கட்டுபாட்டிற்குட்படுத்த ஐ. நா. ஒரு
திட்டம் வகுக்க வேண்டுமென நாம் யோசனை கூறினோம்.

அதே ஆண்டில் ஐ. நா.-வுக்கு அமெரிக்கப் பிரதிநிதி
யாகச் சென்ற பெர்னார்டு பருக் (Bernard Baruch) மிகத் துணி
வுடன் ஆக்கமுறையில் அணுசக்தி அபிவிருத்தி, கட்டுப்பாட்
டுக்கான திட்டத்தைச் சமர்ப்பித்தார். சில்லறை மாறுதல்
களுடன் இந்தத் திட்டத்தை 1948-இல் ஐ. நா. பொதுச்சபை
பெருவாரியான ஆதரவளித்து நிறைவேற்றியது. இந்தத் திட்
டத்தை ஏற்கையில் பொதுச்சபை ஒரு விஷயத்தைத் தெளி
வாகக் குறிப்பிட்டது.

ஆயுதங்கள் தயாரிப்பதில்லை யென்று ஏட்டளவில் ஒப்புக்
கொண்டு, அதை மீறுவது போலவே அணுசக்தி பற்றி வாக்
களிப்பது மட்டும் போதாது என்று சபை ஒப்புக்கொண்டது :

ஒருதரம் அளித்த வாக்குறுதி காப்பாற்றப்பட்டு வருகிறது என்பதை ஒரு ஐ. நா. கோஷ்டியினர் மேல்பார்வை பார்ப்பது மிகவும் முக்கியம்.

அடுத்த சில மாதங்களில் ஐ. நா. அணுசக்திக் கமிஷனிலும், பழைய முறை ஆயுதங்கள் பற்றிய ஐ. நா. கமிஷனிலும் ஆயுதக் குறைப்பு பற்றிய யோசனைகள் பரிசீலனை செய்யப்பட்டு வந்தன. இந்தப் பேச்சு வார்த்தை முன்னேறுமல் சோவியத் ரஷ்யா அடிக்கடி தடைசெய்து வந்தது. அணுசக்திக் கமிஷன் கூட்டத்தில் கட்டுப்பாடு சம்பந்தமான அம்சங்களை ரஷ்யா நிராகரித்தது. பழையவகை ஆயுதங்கள் கையிருப்பை வெளியிட்டு, பொதுவாக ஆயுதங்கள் மேற்பார்வையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதற்கான யோசனையையும் ரஷ்யா நிராகரித்தது.

1951-இல் இந்த முட்டுக்கட்டையை நீக்குவதற்கு அமெரிக்கா, பிரிட்டன், ஃபிரான்சுடன் சேர்ந்துயோசனை கூறிற்று: புது கமிஷன் ஒன்று நியமித்து அதன் மூலம் அணுஆயுதம், சம்பிரதாயமான ஆயுதங்கள் பற்றி யோசிக்கலாம் என்பதே அவர்கள் கூறிய யோசனை. ஐ. நா. பொதுச் சபை, பெரும்பான்மை வோட்டுகள் மூலம் யோசனையை அங்கீகரித்தது.

பிராங்க்லின் ரூஸ்வெல்ட் வகுத்த நான்கு சுதந்திரங்களில் அச்சமடையாமலிருக்கும் சுதந்திரம் ஒன்று. இதற்கு 1952 ஏப்ரலில் ஐ. நா.-விலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி ஒரு வியாக்கியானம் அளித்தார். "உலகு எங்கும் ஆயுதங்களைக் குறைக்கவேண்டும். திட்டமான முறையில் இந்தக் குறைப்பு ஏற்படுவதன் விளைவாக உலகத்தில் எந்த நாடும் பிறநாட்டை ஆக்கிரமிக்க முடியாத நிலை ஏற்பட வேண்டும்" என்பதுதான் அந்த வியாக்யானத்தின் வாசகம்.

அணுகுண்டு உள்பட எல்லாவித ஆயுதங்களையும் படிப்படியாகக் குறைப்பதற்குப் பல முக்கியமான கொள்கைகளை அமெரிக்கப் பிரதிநிதி வகுத்தார். இவ்விஷயத்தில், "பேரம் செய்தல் தவறு" என அவர் எச்சரிக்கை செய்தார். திடீரெனப் பிரயோகம் செய்யக் கூடிய ஆயுதங்கள் அளிக்கும் பலத்தை நம்பி எந்த நாடும் இருக்கலாகாது எனவும், மக்களுடைய ஆரோக்கிய, இன்ப வாழ்வு, பொருளாதாரச் சக்தியே உண்மையான பலமளிக்கும் என்றும் அவர் கூறினார்.

ஆயுத பலத்திற்கான வரம்பு வகுத்த ஒரு மாதத்திற்குப் பின்பு அமெரிக்கா, ஃபிரஞ்சு, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் ஒரு யோசனை கூறினர். ரஷ்யா, சீனா, அமெரிக்கா இவை ஒவ்வொன்றிற்கும், பத்து லட்சத்திலிருந்து 15 லட்சம் படையினர்; ஃபிரான்ஸ், பிரிட்டன் இவை ஒவ்வொன்றிற்கும் 650,000; மற்ற நாடுகள் ஒவ்வொன்றிற்கும் 150,000 லிருந்து



200,000 வரை. இந்த யோசனைகள் முதலில் கேலி செய்யப்பட்டன; பின்னர் நிராகரிக்கப்பட்டன.

1954-ஆம் ஆண்டு பனிக்காலத்தில் சோவியத் யூனியன் தனது நிலையை மாற்றிக்கொள்ள ஆரம்பித்தது. அடுத்த வசந்த காலத்தில் ரஷ்யர் அரசியல் போக்கில் சற்று இளக்கத் தன்மை காணப்பட்டது. நீண்டகாலமாக அட்லாண்டிக் நாடுகள் பலமாக ஆதரித்து சோவியத் பிரதிநிதிகளால் பன்முறை கண்டிக்கப்பட்ட யோசனைகளை ரஷ்யா திடீரென ஒப்புக் கொள்வதுபோல் காணப்பட்டது.

1955-இல் மாஸ்கோ வெளியிட்ட கருத்துக்களில் பல தெளிவாகவோ, திட்டமாகவோ இல்லை. ஒப்புக்கொண்டதிலிருந்து விலகிக்கொள்வதற்கான பல ஷரத்துக்கள் இருந்தன. மேற்கத்தி நேயநாட்டினர் கூறிய ஆயுதப்படை வரம்பை சோவியத் யூனியன் ஒப்புக்கொள்ளத் தயாராயிருந்தது போல் காணப்பட்டது. படிப்படியாக ஆயுதக்குறைப்புக்கான திருத்தப்பட்ட திட்டம்—ஆயுதக்கட்டுப்பாட்டிற்கான ஒரே ஸ்தா மேல் பனம்,, துறைமுகம், விமானத் தளவசதிகளையாவது பார்வை பார்த்தல்.

இவ்வாறு சோவியத்தினர் விட்டுக்கொடுக்காமல் பிடிவாதமாயிருந்ததால், ஆயுதப் பரிகரண விஷயத்தில் அமெரிக்கர் நிறைவேற்றியதை வெளியுலகத்தார் நன்கு அறிந்து கொள்ளும்படி பிரசாரம் செய்யவேண்டும். சிலர் நினைக்கிறது போல், இந்தப் பிரச்னை சம்பந்தமாக சோவியத் தலைமைப் பீடத்தின் கருத்து மாறியிருக்குமானல், இதுபற்றி அவர்களிடையே சிரத்தையுடன் நாம் பேச்சு வார்த்தை நடத்துவது அவசியமாகும். ஆயுதப்பரிகரண விவகாரங்களில் பிரத்தியேகமாக ஜனதிபதிக்கு உதவிபுரிய மந்திரி அந்தஸ்துள்ள ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதனல் சிறப்பான பலன் ஏற்படும். அந்த மந்திரி இதுசம்பந்தமான கருத்துக்களைச் சேர்த்து, சீர்படுத்தி ஆராய்ந்து பார்த்து, ஆயுதப்பரிகரணத்தின் எல்லா அம்சங்களையும் உலகறியச் செய்யலாம்.

ஆயுதப் பரிகரணம் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நீண்டகாலமாக நடந்து வந்திருக்கிறது. இந்த வரலாற்றில் ஒரு நற்சூசகம் தென்படுகிறது. ஆயுதம் தாங்கிய வல்லரசுகள், ஏராளமான யுத்த சாதனங்களைக் கலைப்பதற்கு முதல்படியாக என்ன செய்யவேண்டுமென்பது பற்றி ஒத்துப்போவாரகள் போல் தெரிகிறது. இதுவரையில் ஆயுதக் கலைப்பு பற்றிய சோவியத் கொள்கை பிடிவாதமாகவும், இளக்கமின்றியும் இருந்து வந்தது. ஆகையால் உடனடியாக ஆயுதக் கலைப்பு செய்வதிலுள்ள பிரத்தியட்சமான சங்கடங்களை அமெரிக்கா சமாளிக்காமலிருப்பது சாத்தியமாயிருந்தது. ஆயுதக் குறைப்பு சம்பந்தமான நம் யோசனைகள் மனப்பூர்வமானவை. ரஷ்

யர்கள் சண்டித்தனம் செய்து வந்ததனுல், அந்த யோசனை
களை நிறைவேற்றுவதனுல் ஏற்படக்கூடிய சங்கடங்களைச்
சமாளிக்க நமக்குச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

முதல் தடவையாக இந்தப் பிரச்னைகளுக்கு நாம் பரி
காரம் காணவேண்டும். இவைகளைத் தீர்ப்பதில் நாம் நான்கு
முக்கியமான கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டும். இவை
களுக்கு நாம் கூறக்கூடிய பதில்களே ஆயுதப் பரிகரணப்
பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஜீவாதாரமானவை. ஆயுதப் பரி
கரணம் செய்வதனுல் நமக்கு நன்மை உண்டா? அணு ஆயு
தங்களைக் கைவிடுவதனுல் தற்போதைய நிலையைவிட நமக்குப்
பாதுகாப்பு அதிகமா அல்லது குறைவா? அதாவது அநுபவ
சாத்தியமான முறையில் இவைகளைக் கட்டுப்படுத்த முடியுமா?
இந்தக் கேள்விகளுக்கு ஆமாம் என்று பதில் கூற முடியுமானுல்,
இதுபற்றி உடன்பாட்டிற்கு வருவது அரசியல் சாத்தியமா?
கடைசியாக, பார்வைக்கு நேர்மையானதுபோலவும், அநுபவ
சாத்தியமானதுபோலவும் உள்ள ஒரு திட்டத்தைச் சோவியத
யூனியன் அளித்து, அதை நாம் நிராகரிப்போமானுல் அதன்
விளைவுகள் எவ்வாறிருக்கும்?

ஆயுதப் பரிகரணம் நமது தேசிய நலனுக்குகந்ததா
என்று கேட்கவேண்டிய நிலையில் நாம் இருப்பதனுல், நீண்ட
காலத்திற்கு ஆயுத முஸ்தீப்புக்கிடையில் இருக்க நாம் நன்கு
பழகிவிட்டோம் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. சமா
தானமாக வாழவேண்டுமானுல், இரண்டு தரப்பிலும் பயங்
கரம் விளைவிக்கும் சாதனம் சமமாயிருக்கவேண்டும் என்கிற
நம்பிக்கை பரவலாக நிலவி வருகிறது. இதனுல் சமாதான
மும், பயங்கரமும் ஒன்றுக்கொன்று முரணுனவை என்பதை
மறந்துவிட்டோம் என்றே தோன்றுகிறது. நாம் எவ்வளவு
ஆபத்தான நிலையில் வாழ்கிருேம் என்பதையும் இதன் மூலம்
நாம் அறிந்துகொள்ளலாம்.

பயங்கரத்தின் மூலமே சமாதானத்தை நிலைநாட்ட முடியு
மானுல், நாம் பயங்கரத்திற்கு இரையாகும் நிலையிலிருக்
கிருேம் என்பது தெளிவு. நமக்கு முந்திய தலைமுறையினர்
உட்படாத பல அபாயங்களுக்கு நாம் ஆளாகவேண்டி வரும்
என்றுதான் இதற்கு அர்த்தம். யுத்தத்திற்குப் பிறகு,
லட்சக்கணக்கான மக்களின் உயிர் ஒரு சில உலகத் தலைவர்கள்
கையிலேயே இருந்து வந்திருக்கிறது. மேலும் பல நாடுக
ளுக்கு அணு ஆயுதச் சக்தி கிடைக்குமானுல் மக்கள் அநுப
விக்க வேண்டிய அபாயங்கள் அதிகரிக்கும்.

இந்த அபாயங்களைக் குறைக்கக்கூடிய எந்த ஆயுதப் பரி
கரணத் திட்டமும் கண்டிப்பாக நமது தேசிய நலனுக்குகந்தது
தான். இதுமட்டுமல்ல. சிந்தனுசக்தியுள்ள ஒவ்வொரு
பிரஜையும், அரசாங்க உயர்தர அதிகாரிகளும் இடைவிடாது



கவனித்துக்கொண்டு வரவேண்டிய முக்கியத்துவம் வாய்ந்
தது இந்தப் பிரச்னை.

ஆயுதப் பரிகரண யோசனைகளை எப்படி நிறைவேற்று
வது என்பதிலேயே இதுவரை பேச்சு வார்த்தைகள் முறிந்து
வந்திருக்கின்றன. அநுபவ சாத்தியமான ஆயுதக் கட்டுப்
பாடு செய்யக்கூடிய அளவு நிலைமை அபிவிருத்தி அடைந்து
விட்டதா? நூற்றுக்கு நூறு நிறைவேறக்கூடிய திட்டத்தைச்
சமீப காலத்தில் யாரும் தயாரித்துவிட முடியாது என்பதை
நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமான தொழில்
நுணுக்கச் சிக்கல்கள் ஏராளமாயிருக்கின்றன. திட்டம் பூரண
மாக நிறைவேறவேண்டுமானுல் ஆரம்ப தசையில் சில தக
வல்கள் அத்தியாவசியமாக வேண்டியிருக்கும். இவைகளைச்
சேகரிப்பதற்கு அநுமதி அளிப்பதெனில், சம்பந்தப்பட்ட சில
அரசாங்கங்களின் அரசியல் சம்பிரதாயங்களை உடனடியாக
மாற்றவேண்டி வரும்.

யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு அநுபவசாத்தியமான ஒரு
முறையை நாம் முதலில் வகுக்கவேண்டும். எங்காவது ஒரு
இடத்தில் ராணுவ முஸ்தீப்புகள் நடந்தால் அதை நமக்குத்
தெரிவித்து எச்சரிக்கை செய்யத் திட்டம் வகுக்கவேண்டும்.
அப்பொழுதுதான் முதல் தாக்குதலிலேயே வெற்றியளிக்கக்
கூடிய பிரம்மாண்ட ஆக்கிரமிப்பு முயற்சியைத் தடுக்கமுடியும்.
இம்மாதிரித் துப்பறிந்து கூறும் முறையின் மூலம்
பரஸ்பர நம்பிக்கை ஏற்படுமானுல், மேற்கொண்டு ஆயுதக்
குறைப்பு முறைகள்பற்றி யோசிக்கலாம். புராதன ஆயு
தங்களை ஒரு சதவிகிதம் குறைக்கும் முறையை அடுத்து அநுஷ்
டிக்கலாம். இதிலிருந்து அணு ஆயுதக் குறைப்புக்கு வழி
காணலாம். அணு ஆயுதக் கட்டுப்பாடும், புராதன ஆயு
தங்கள் கட்டுப்பாடும் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட
வேண்டும் என்பது தெளிவு.

படிப்படியாக ஆயுதங்களைக் குறைத்து ஐந்து அல்லது
பத்து ஆண்டுகளில் முழுப்பயன் அடைய வழி காணலாம்.
ஆரம்ப உடன்பாடுகள் குறைபாடுள்ளவைகளாயிருக்கலாம்.
போகப்போகப் பிந்திய உடன்படிக்கைகள் சீராக அமையக்
கூடும். இந்த முறை மூலம் முன்னேறுவதற்கான நல்லெண்
ணம் பெறுவதற்கு அநுபவம் அவசியமாக வேண்டியிருக்கும்.
எதிர்காலத்தைப்பற்றித் திட்டமாகக் கூறமுடியாத தற்காலப்
பயங்கரத்தைவிட நம்பிக்கையுடன் சோதனை செய்து பார்ப்
பது நல்லது.

ஆயுதப் பரிகரண முறையைத் தொடங்கி நீடித்து
நடத்திப் பார்ப்பது சாத்தியமா? ஆரம்ப உடன்பாடுகள்
அரசியல் சாத்தியமாயிருக்குமா? இந்த உடன்பாட்டிற்கு அமெ
ரிக்க செனட் சபையில் மூன்றில் இரண்டு பங்கு வோட்டுகள்

கிடைக்குமா? ஒக் ரிட்ஜிலோ (Oak Ridge), அல்லது சர்வ
தேச மேற்பார்வை ஸ்தாபனக் குழு நிர்ணயிக்கும் வேறு
இடத்திலோ ஒரு ரஷ்ய மேற்பார்வையாளர் உள்ளிட்ட ஸ்தா
பனம் ஏற்பட்டால் அதனிடம் நாம் நம்பிக்கை கொள்வோமா?

ஜெனீவாவில் ரஷ்யர்களுக்கு ஜனாதிபதி ஐஸன்ஹோவர்
சில யோசனைகள் கூறினார். ராணுவ தளங்கள்பற்றி விவரணைப்
பட்டியலை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளுதல், இருதரத்தாரின்
ராணுவ வசதிகளைப் பரஸ்பரம் விமானத்திலிருந்து மேற்
பார்வை செய்தல்—இவருடைய இந்த யோசனைகளைப் பெரு
வாரியான அமெரிக்கர்கள் ஆதரித்ததனால், இவைகளைப்
பொது மக்கள் ஆதரவுடன் ஆலோசிக்கக்கூடும் என்று எதிர்
பார்க்கலாம்.

ஜெனீவாவில் ஒரு புதிய நம்பிக்கை ஏற்பட்டது. அதற்கு
முக்கிய காரணம், கொள்கையை நிறைவேற்ற யுத்தம் ஏற்ற
சாதனமல்ல என்று இருதரத்தினரும் முடிவு செய்துவிட்டது
தான். பிரச்னைகளை நோக்குவதிலும், நோக்கங்களிலுமே
மிகுந்த வித்தியாசங்கள் இருப்பதை அறிந்து கொண்டு
விட்டனர். மேலும் இந்த வித்தியாசங்கள் முக்கியமானவை
யாயிருப்பினும், அவைகளைத் தீர்க்க யுத்தம் இனி தக்க
சாதனமல்ல என்றும் தெரிந்து கொண்டுவிட்டனர்.

இந்த உணர்வு பெற்றதே உலக அரசியலின் புதிய பரி
மாணமாகும். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

1955-ஆம் ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதியன்று ஜெனரல்
மக்ஆர்தர் லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அமெரிக்க லீஜன் கன்
வென்ஷன் (Legion Convention) என்னும் சபையில் ஒரு
சிறந்த சொற்பொழிவாற்றினார். நமது காலத்தவர்களை
வாட்டி வரும் பிரச்னையை அந்தப் பிரசங்கத்தில் அவர் தெளி
வாக எடுத்துக் காட்டினார். ''தற்கொலைக்கொப்பான யுத்
தத்திற்கு நாள் தவறாமல் தயாரித்து வரும் நிலையில்தான்
தலைமுறை தலைமுறையாக நாம் வாழவேண்டுமா? இதற்கிடை
யில் நாம் தற்கால பயனளிக்கக் கூடிய ஆயுதக் கட்டுப்பாடு,
அணு ஆயுதப் பிரயோகக் கட்டுப்பாடு போன்ற பிரச்னைகள்
பற்றி பேசிப் பொழுதுபோக்கி வருகிறோம்.''

யுத்தத்தை ஒழிப்பதே நம் நோக்கமாயிருக்க வேண்டும்
என்று அவர் கூறினார். இந்த நோக்கம் ஈடேறினால் ஏசுநாத
ரின் மலைச் சொற்பொழிவுக்கு அப்புறம் நமது நாகரிகம் மிகச்
சிறப்பாக முன்னேறியிருக்கிறது என்றும் அவர் கருதினார்.

தேசத்தையே அழிக்கக்கூடிய மனக்கொந்தளிப்புகளுக்கு
இருவகை நினைவுகள் உயிரூட்டுகின்றன என்று அவர் மேலும்
கூறினார். '' ஒருபுறம் அமெரிக்காவும், மற்றொருபுறம் ரஷ்யா
வும் சீக்கிரமோ, அல்லது சிறிது நாள் கழித்தோ ஒரு நாட்டை
மற்றொரு நாடு தாக்க உத்தேசித்திருப்பதாக நினைக்கின்றனர்,



இருதரத்தாருடைய நினைப்பும் தவறு. ஏனெனில் யுத்தம்
நேர்ந்தால் இரு நாடுகளுக்கும் அழிவு ஏற்படுவது நிச்சயம்.''
இவ்வாறு அவர் திட்டமாகக் கூறினார்.

எல்லாம் தலைவர்களைப் பொறுத்திருக்கிறது என்று மக்
ஆர்தர் கூறினார். ''உலகத் தலைவர்களுக்கு எவ்வகைத் திட்ட
மும் கிடையாது. இதுதான் அவர்கள் மீது நாம் சுமத்தக்
கூடிய குற்றச்சாட்டு. சமாதானம் விரைவில் அத்தியாவசியத்
தேவையாகி வருகிறது; மக்கள் சமாதான தாகம் கொண்
டிருக்கின்றனர். இதைத் தீர்க்கவல்ல அதிகாரப் பொறுப்
புள்ள பெரிய மனிதர், என்று தோன்றப் போகிறார்'' என்று
அவர் கேட்டார்.

'' நாம் ஒருபுது சகாப்தத்தில் வாழ்கிறோம். பழைய
முறைகள் இனிப் பயன்படா. பழங்காலக் கட்டுப்பாட்டை
மீறி நாம் எழ வேண்டும். தலைமை தாங்க யாராவது வேண்
டும். அந்தத் தலைவராக நாமே ஏன் இருத்தலாகாது? உலக
வல்லரசுகளுடன் கூடி யுத்தத்தை ஒழிக்கப் போவதாக இப்
பொழுது நாம் பிரகடனம் செய்யவேண்டும். இதன் விளைவு
மந்திரஜாலக் காட்சி போல் பிரமாதமாயிருக்கும்'' என்று
மக்ஆர்தர் அழுத்தமாகக் கூறினார்.

பிரமாதமாகவே இருக்கக் கூடும்.

* * * *

முன்பு ஆராய்ந்து கூறிய பிறதுறைகள் போல ஆயுதப் பரி
கரணத்திலும், நமக்கு அரியதோர் சந்தர்ப்பம் இருக்கிறது.
அதைப் பயன்படுத்தினால் ஐ. நா.-விற்கு மேற்பார்வை அமுல்
செய்யும் அதிகாரங்கள் அளித்து, அதைப் பலப்படுத்தலாம்.
உலகத்தாரில் பெருவாரியானவர்களின் அபிலாஷைகளைப்
பிரதிபலிக்கும் ஸ்தாபனம் இதைப்போன்று வேறு இல்லை.
அதன் இருபெரு நோக்கங்கள் ஐ. நா. சாஸனத்தின் முதல்
ஷரத்தில் கூறப்பட்டிருக்கிறது. யுத்தம், வகுப்பு வித்தியாசம்
இரண்டையும் அதன் மூலம் ஒழிக்கலாம் எனும் நம்பிக்கையை
அந்த வாசகம் மக்களுக்கு அளித்தது.

1. சர்வதேச சமாதானம், பாதுகாப்பு இரண்டையும்
நிலை நாட்டவும், அதற்காக, சமாதானத்திற்கு அபாயம்
விளைவிப்பதைத் தடுக்கவும், அகற்றவும் பயனுள்ள கூட்டு
முயற்சி செய்தல்.

2. பொருளாதார, சமூக, கலாசார, ஜீவகாருண்ய சம்
பந்தமான சர்வதேசப் பிரச்னைகளைச் சர்வதேச ஒத்துழைப்பின்
மூலம் தீர்ப்பது.

3. இந்த நேரடியான சமூகப் பொருளாதாரப் பிரச்னை
களைத் தீர்ப்பதில் ஐ. நா. பல சந்தர்ப்பங்களில் உயிரூட்டும்
வகையில் பணி புரியலாம் என்று நாம் ஏற்கனவேயே

யோசனை கூறியுள்ளோம். ஐ. நா.-வின் அங்கத்தினர் எண் ணிக்கை பெருகி, அபிவிருத்தியடையாத நாடுகள் அதில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டால், இம்மாதிரிப் பிரச் னைகளைத் தீர்ப்பதற்கு உலகத்தோர் அதிகமான முக்கியத் துவம் அளிக்கக்கூடும். ஐ. நா.வின் முதல் பத்து ஆண்டுகளில் அரசியல் துறையில் அது சிறந்த சேவை செய்திருக்கிறது. ஈரானிலிருந்து சோவியத் துருப்புகள் வெளியேறியது, ஸிரியா விலும், லெபனானிலுமிருந்து பிரிட்டிஷ், ஃபிரஞ்சுப் படைகள் வெளியேறியது, பாலஸ்தீனத் தகராறைத் தீர்த்தது, இந்தோ னேஷ்யாவில் சண்டை நிறுத்த ஏற்பாடு செய்தது, கொரியா சண்டையில் கலந்து கொண்டு பின்னர் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தியது, சீனாவிலுள்ள அமெரிக்கக் கைதிகள் பற்றிய பேச்சுவார்த்தை—இவற்றை அதன் அரசியல் சாதனை களுக்கு உதாரணங்களாகக் கூறலாம்.

முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதப் பரிகரணத் துறை யில், ஐ. நா. நேரடியான சாதனை புரிய முயற்சிக்குமா னால், முந்திய சாதனை அனைத்தையும் விட அதற்கு அதிகமான செயல் திறன் ஏற்படக்கூடும்.

இம்மாதிரி நோக்கங்களை நிறைவேற்ற முற்படவேண்டு மானால் ஐ.நா. மேலும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக அமைய வேண்டும். அப்போதுதான் அது பயனுள்ள சேவைபுரிய முடியும். இருபதுக்கு மேற்பட்ட நாடுகள் ஐ. நா.-வில் சேர விரும்பின. இருவித மாறுபட்ட அபிப்பிராயங்கள் ஐ. நா.-வில் நிலவியதனால் இவைகள் யாவும் நிராகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதில் ஒரு சாரார் ஐ. நா. ஒரேவிதமான மனப்பாங்குள்ள நாடுகள் அடங்கிய ஸ்தாபனம் என்றும், ஒப்புக்கொள்ளப்பட்ட, குறிப்பிட்ட ஒரு சில அரசியல் இலட்சி யங்களைப் பாதுகாப்பதே தங்கள் நோக்கம் என்றும் கருது கின்றனர். இந்தக் கருத்தைச் சிலசமயம் ரஷ்யா, அமெரிக்கா இரண்டும் ஆதரித்து வந்திருக்கின்றன. இந்தப் போக்கு யுத்த கெடுபிடியைத் தளர்த்தப் பயன்பட்டு வந்திருக்கிறது. மற்ற சந்தர்ப்பங்களில் ஐ. நா. பயனற்ற ஸ்தாபனமாக இருந்து வந்திருக்கிறது.

மற்றொரு சாரார் ஐ. நா.-வை ஒரு பொதுமேடையாகக் கருதுகின்றனர். எல்லா நாடுகளுக்கும், அங்கத்தினராகச் சேர உரிமையளிப்பதனால், எதிர்காலத்தில் நற்பயன் உண்டு என்று இவர்கள் கருதுகின்றனர். உலகைப் பாதிக்கக்கூடிய முக்கிய மான பிரச்னைகளை இங்கே விவாதித்துப் பயனுள்ள முறையில் தீர்க்கலாம் எனவும் இவர்கள் கருதுகின்றனர். உலகில் கொந்தளிப்பு குறையுமானால், இரண்டாவது சாராரின் கருத்து சபையினரால் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

அத்தியாயம்—37

# காலத்திற்கேற்ற சேவை

சமாதானத்தின் புதிய பரிமாணங்கள் பலதரப்பட்டவை என்பதை இப்புத்தகத்தின் மூலம் அறிந்து கொண்டோம். அணு ஆயுதங்கள் அவசியந்தான். ஆனால் அவைகளைக் கொண்டு சமாதானமான உலகத்தை அமைத்துவிட முடியாது. கருத்துக்கள், நம்பிக்கை, பிறரைப் புரிந்து கொள்ளுதல் இன்றி நமது பணத்தை மட்டும் கொண்டு எதையும் சாதித்து விட முடியாது. எப்படித் துப்பாக்கியின் உதவி கொண்டு நாம் கதிமோட்சம் அடைய முடியாதோ, அவ்வாறே பணத் தின் மூலமாய் அடைந்துவிட முடியாது.

உலக மக்கள் ஆதரவைப் பெற முடியாவிட்டால், அணு குண்டினால் ஏற்பட்ட தேக்க நிலையிலிருந்து சமாதானத்தின் எல்லையைக் கூட எட்ட முடியாது. மனிதன் உயிர்வாழ உணவு மட்டும் போதாது. அவன் நீதியையும் விரும்புகிறான். அவன் சுதந்திரத்தை விரும்புகிறான். அவன் சகோதரப் பான்மை யுடன் வாழ ஆசைப்படுகிறான்.

இதையெல்லாம் நாம் அறிந்து கொள்ள முயற்சிக்க விரும் பினால் இன்றைய உலகப் புரட்சியைத் துணிவுடனும், மனோ தர்மத்துடனும் நோக்கவேண்டும். நம்பிக்கையுடன் அந்தப் புரட்சியில் நாமும் ஈடுபடவேண்டும். நமது புரட்சி 1776-இல் சுதந்திர மாளிகையில் உதயமாயிற்று. அதற்காக நாம் வெட்கப்பட்டு யாரிடமும் மன்னிப்புக்கோர வேண்டியதில்லை. அப்பொழுதும் சரி, இப்போதும்சரி, அதன் குறிக்கோள் ஒன்றே தான்—மனிதனின் உடலும் அறிவும் எவ்விதக் கொடுங்கோன்மைக்கும் உட்படாமல் விடுவிப்பது.

இன்று, அமெரிக்கா செல்வம் கொழிக்கும் நாடு; அறிவு முதிர்ச்சி பெற்ற நாடு. வில்லியம் ஜேம்ஸ் கூறியது போன்று சோர்ந்து கிடக்கும் புரட்சி உணர்வுகளை இந்த நிலையில் நவீன அமெரிக்கா விழிப்புறச் செய்ய முடியுமா? பொறுப்பு வாய்ந்த மாறுதல்களை விளைவிக்கும் வழியில் தலைமை தாங்கி உலகத் தோரை அழைத்துச் செல்லும் ஆற்றல் நமக்கிருக்கிறதா? இதற்கேற்ற மனோ தர்மம் வாய்ந்த விரிவான உலகக் கொள்கையை அமைத்து, அதை நிலையாகப் பயன்படுத்த முடியுமா? வாஷிங்டனில் மட்டுமல்ல, பிற முக்கிய நகர்களிலும்

இந்தப் பணிக்கான தலைவர்களைக் கண்டு, பொதுஜன ஆதர
வையும் பெற முடியுமா?
இந்தப் பணியை ஏற்பது அச்ச மூட்டுவதா யிருந்தா
லும், அதை நிறைவேற்றுவதற்கான சௌகரியங்கள் நமக்கு
இருக்கின்றன. இந்த வசதிகளில் ஒன்று நமக்குப் பிரமிப்பூட்
டக் கூடியதாயிருக்கிறது. அதாவது, நமது உற்பத்தி இயந்தி
ரங்கள், தேர்ச்சி, சொத்துக்கள் முதலியனபற்றிய புள்ளி
விவரங்களைப் படிப்பவர்கள் பிரமிப்படைவார்கள். இவை
களைக் கொண்டே அமெரிக்கரும் அயல் நாட்டினரும் நம்
முடைய சாதனைகளையும் சக்திகளையும் மதிப்பிடுகின்றனர்.
இவைகளை மட்டுமே கொண்டு, அமெரிக்காவின் சக்தி
முழுவதையும் எடைபோடுவதாயிருந்தால் டாயன்பீ கூறி
யது போன்று முந்திய நாகரிகங்கள் மாதிரி நம்முடையதும்
அடுத்த தலைமுறையில் சிதறுண்டு போய்விடும். நம் சரித்திர
விமர்சகர்களுக்கு இன்று நமது நாகரிகம் இருப்பது போலவே,
அஸ்ஸிரிய, ரோம, நெப்போலியன் சாம்ராஜ்யங்கள் அந்தக்
காலத்தில் சர்வ வல்லமையுடனிருந்ததாகவே தோன்றும்.
வெடிகுண்டுகள், விமானப்படைபலம், எஃகு ஆலைகள்,
நான்கு சிறு தெருக்கள் உள்ள ராஜபாட்டைகள் முதலியவை
கள் இருப்பதால் மட்டும் சிறப்புற்ற நாடல்ல அமெரிக்கா.
மற்றும் ஓர் உயர்தர லட்சணம் உள்ளது நம் நாடு. உயிர்வாழ்
தல், சுதந்திரம், இன்பம் நாடுதல் யாவற்றிற்கும் ஆலயமாக
இந்நாட்டை அமைக்க நான்கு நூற்றாண்டுகளாகப் பாடுபட்
டதனால், இந்நாடு உன்னத நிலை அடைந்தது.
கஷ்டப்பட்டு உழைத்தே முன்னேறவேண்டும் என்பதை
அமெரிக்க ஜனநாயகம் ஏற்றுப் பணியாற்றி வந்திருக்கிறது.
அதனால் அடைந்த வெற்றியைப் பற்றிப் பெருமிதம் கொள்
கிறது. நமது நாட்டுக் குடும்பங்களில் சில தாங்கள் ஏதோ
பிரபுக்கள் வர்க்கத்தில் பிறந்தவர்கள் போல் பாவனை செய்
கிறார்கள். அவர்களெல்லாம் இன்றைக்கிருந்து நாளைக்கு
மறைந்துபோய்விடுவார்கள். பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த
அமெரிக்கத் தலைவர்கள் ஜாபிதா ஒன்றைத் தயார்செய்யுங்கள்.
அவர்களது வம்சாவளியை ஆராய்ந்துபார்த்தால், அவர்களோ
அல்லது அவர்கள் தந்தையரோ, பாட்டன்மார்களோ குடி
யானவர்கள், அல்லது எல்லைப்புறவாசிகள், உழைப்பாளிகள்
அல்லது கப்பல் தொழிலாளிகளாயிருப்பர். தங்களது சலியா
உழைப்பினாலும், நாணயத்தினாலும், சொந்தத் திறனினாலும்
வாழ்க்கையில் உயர்வடைந்திருப்பதைக் காணலாம்.
சென்ற ஒரு நூற்றாண்டில் நாம் முப்பது லட்சம் அகதி
களுக்கு இடமளித்திருக்கிறோம். இன்று நீங்கள் காணும் அமெ
ரிக்கர்களில் உலகத்திலுள்ள எல்லா இனம், மதம் தேசத்தைச்
சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். ''அமெரிக்கப் புரட்சிப்



பெண்கள் சங்கத்தில்'' ஃபிராங்க்லின் ரூஸ்வெல்ட் பேசுகை
யில், ''சக அகதிகளே'' எனச் சபையினரை அழைத்துத் தம்
பேச்சைத் தொடங்கினார்.

நமது உற்பத்திப் பொருள்களைச் சீராகச் விநியோகம்
செய்வதில், நாம் இடைவிடாது முன்னேறி வந்திருக்கிறோம்.
இந்த விநியோகம் ஒழுங்காக நடைபெறுவதற்கேற்ற அர
சியல் அதிகாரம் அடைந்ததிலிருந்து பொருளாதார ஜன
நாயகம் அடைவதற்கு யோக்கியமாக உழைத்து வந்திருக்
கிறோம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

நாம் சுக வாழ்வை விரும்பலாம். ஆனால் தேக உழைப்
பின் கண்ணியத்தை மதித்தே வந்திருக்கிறோம். நாம் மதப்
பற்றில் சிரத்தைகொண்டவர்களாயினும் மதமும், அரசாங்க
மும் தனித்தனி என்பதைக் கவனித்துப் பாதுகாத்து வந்திருக்
கிறோம். நமது சமுதாயம் ஒன்றுபட்ட எதிர்காலத்தில்
நம்பிக்கை வைத்திருக்கிறது. இதற்குக் காரணம் முன்னேற்
றத்தில் நமக்குள்ள நம்பிக்கையும் பொது சேவைப்
பொறுப்பை ஏற்க நாம் தயாராயிருப்பதும்தான். நமது
பொது ஜனக் கல்வி முறை ஒரு தனித்த அமெரிக்கப் பாணி
யில் அமைந்திருக்கிறது. ஜனநாயக ஆர்வமுள்ள பிரஜை
களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் நமது கல்வி
யாளர்கள் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து பணி
யாற்றுகின்றனர்.

இந்த அடிப்படையில் பார்த்தால் சுதந்திர மக்களாகிய
நமது ஆற்றல் அளவற்றதாயிருக்கவேண்டும். நமது தாராள
சிந்தனை, அநுதாப உணர்ச்சி, தியாக உணர்வு, கஷ்
டப்பட்டு உழைக்கும் சக்தி, சுதந்திரம், மனித கண்ணியம்,
சமாதானம் முதலியவற்றில் நமக்குள்ள நம்பிக்கை—இவை
கள் உலகத்திலுள்ள பல கோடி மக்களைக் கவருகின்றன.
ஏனெனில் இந்த நற்பேறுகளை அவர்களும் அடைய விரும்பு
கின்றனர். அவைகளில் நம்பிக்கையும் கொண்டுள்ளனர்.
நமது பெருமிதத்தை மட்டுப்படுத்தும், சில குறை
பாடுகள் நம்மிடையே தோன்றிவிட்டது என்பதை மறுப்பது
நியாயமாகாது. இந்தக் குறைபாடுகளால் இன்று நமக்குப்
பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இந்தக் குறைபாடுகளை
யும், அவைகளால் ஏற்படும் தீமைகளையும் கவனித்து ஆராய
வேண்டியது அவசியமாகும்.

நாம் புரட்சியில் பிறந்தவர்கள்; பிற நாடுகளிலிருந்து
அகதிகள் இடைவிடாது வந்துகொண்டிருப்பதனால் நமது
ஜனத்தொகை பெருகி வருகிறது. எனினும், நம்மில் அநேகர்
உலக மக்களில் பெருவாரியானவர்களின் அபிலாஷைகள்,
நம்பிக்கைகளில் தொடர்பில்லாதவர்களாகி விட்டோம்.

உலகத்திலேயே நம் நாட்டில்தான் எழுத்தறிவுள்ள-
வர்கள் அதிகம். ஆனால் நம்மில் ஒரு சதத்தினருக்குக்கூட
ஆசியா, ஆஃப்பிரிக்கா, தென் அமெரிக்காபற்றிய சரித்திர
ஞானம் கிடையாது. ஆனால் உலக மக்களில் பெரும் பகுதி
யினர் இங்குதான் வசிக்கின்றனர். இங்குதான் அநேகமாக
உலகின் எதிர்காலம் உருப்பெறக்கூடும்.

நம்மைப்போல் பிறருக்குத் தாராளமாக உதவி செய்த
வர்கள் கிடையாது. எனினும் நமது பொது அறிக்கை
களைப் பார்த்தால், நாம் லோபிகள், சுயநலக்காரர்கள்
என்றே பிறர் நினைப்பர்.

தனிப்பட்டவனின் சுதந்திரம், அவனுடைய நேர்மை
உணர்ச்சி இவ்விரண்டிலும் உள்ள நம்பிக்கையினால் நம் நாடு
தோன்றியது. ஆனால் பணம், ராணுவம், பிறருக்கு உப
தேசம் செய்தல் முதலியவற்றிலேயே நாம் நம்பிக்கை
கொண்டவர்கள் என்று உலகில் இலட்சோபலட்சம் மக்கள்
நினைக்கும்படி நடந்துகொள்ளுகிறோம்.

உலகத்தில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் கறுப்'
அல்லது மஞ்சள் நிறத்தவர்கள். 180 ஆண்டுகளுக்கு முன் நமது
சுதந்திரப் பிரகடனத்தில் ''எல்லா மக்களும் சமமாகவே
பிறந்தவர்கள்'' என்று கூறியிருக்கிறோம். ஆனால் நம்மிடையே
இன வேற்றுமை முறை நீக்கப்படவில்லை.

உலகத்திலேயே நம் நாட்டில்தான் வாழ்க்கைத்தரம்
உயர்வாயிருக்கிறது. ஆனால் இன்று நமது சுபிட்சம் நிலை
யற்றதாயிருக்கிறது. காரணம் இப்போது நிலவும் யுத்தக்
கெடுபிடியின் மூலம் பெற்ற சுபிட்சம் அது என்பதுதான்.

யுத்த காலத்தில் எவ்விதத் தியாகமும் செய்ய நாம்
தயாராயிருக்கிறோம். ஆனால் துப்பாக்கி வெடிச் சப்தம்
கேட்டாலொழிய யுத்தத்தைத் தவிர்ப்பதற்கான தியாகம்
செய்யத் தயாராயில்லை.

அமெரிக்கர் என்றுமே நம்பிக்கை உள்ளவர்கள். ஆனால்
அணுகுண்டுப் போட்டி நம்மைச் சில சமயம் விதியில் நம்
பிக்கை கொள்ளும்படிச் செய்துவிட்டது.

நாம் மூர்த்தன்யமான ஜனநாயக ஆர்வம் கொண்டவர்
கள்தாம். ஆனால் கம்யூனிஸ்ட் எதிர்ப்பை வியாஜமாகக்
கொண்டு நமது தேசிய விவகாரங்களில் சில தீய பழக்கங்
களுக்கு இடம் கொடுத்துவிட்டோம். இதிலிருந்து ''பகை
வர்கள் தீய பழக்கங்களைப் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளு
கிறார்கள்'' என்கிற கீழ்த்திசைப் பழமொழி உண்மையோ
என்று தோன்றுகிறது.

கல்விக்கும், பாண்டித்யத்திற்கும் அதிகமான மதிப்பளிக்
கும் அடிப்படையில் நமது நாடு வளர்ச்சியடைந்தது. ஆனால்
ஏதோ கலவர மனப்பான்மையினால் நமது பண்டிதர்கள் துணி



வற்றவர்களாவும், மனோதர்மமில்லாதவர்களாகவும், போய்
விட்டனர். தணிக்கையாளர் முன் நமது சுதந்திரத்தைப் பாது
காத்துக்கொள்ளவேண்டிய நிலைக்கு வந்துவிட்டோம். நமது
தனிப்பட்டோர் ஸ்தாபனங்களின் அடிப்படையையே பிறர்
தாறுமாறாகப் பழிக்கும் நிலைக்கு வந்துவிட்டோம்.

இந்தக் குறைபாட்டுப் பட்டியலைப் பார்த்தால், நமது
மக்களைப்பற்றி நான் கடுமையான முடிவுக்கு வந்துவிட்டேன்
என்று தோன்றும். நமது பலஹீனங்களை நான் குறைவாக
மதிப்பிட விரும்பவில்லை. ஏனெனில், இவ்வாறுதான் பிறர்
நம்மைப்பற்றி மதிப்பிடுகின்றனர். 1776-ஆம் ஆண்டில் நாம்
சமாளித்த பிரச்னைகளும், சிக்கல் மிக்க இன்றைய உலகப்
பிரச்னைகளும் ஒன்று என்று இப்புத்தகத்தின் மூலம் நான்
[illegible]ிப்பதாக எண்ணிவிடலாகாது. ஆனாலும் புத்துயிர் பெற்று
[illegible]வடைந்த அமெரிக்கப் புரட்சி, முதல் தடவையாக உலக
[illegible]காரங்களில் கவனம் செலுத்தும் வாய்ப்பு பெற்ற புரட்சி,
[illegible]க மக்கள் யாவரையும் ஊக்குவிக்கக்கூடிய அரசியல்,
[illegible]கப் பொருளாதார சக்தியாக மாறும் என்பதுபற்றி
எனக்குச் சந்தேகமேயில்லை.

இந்த மாறுதல் விளையவேண்டுமானால், நமது நம்பிக்கை
கள் தீட்சண்யம் பெறவேண்டி யிருக்கும். நாம் எவைகளில்
நம்பிக்கை உள்ளவர்கள் என்று கூறுகிறோமோ அவைகளில்
ஆழ்ந்த பற்றுதல்கொண்டு உழைத்தால், அதனால் சிறப்பான
பலன் கிடைக்கும்.

நமது போக்கைக் கவனிக்கும் அயல் நாட்டினர் நம்மைச்
சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். நமது சம்பிரதாயங்
களிலிருந்து புரண்டுவிட்டோம் எனும் வதந்தி உலகெங்கும்
பரவிவிட்டது. ஆகையினால் சிரத்தையுடன் புத்துணர்ச்சி
பெற முயலவேண்டும். அம்மாதிரி செய்யாமல், ஜெஃபர்சன்
மாதிரியும், லிங்கன் தோரணையிலும் பேச ஆரம்பித்தால், அது
கேட்போருக்கு உயிரற்றதுபோலிருக்கும். இல்லை, நாங்கள்
உண்மையாகவே இம்மாதிரிக் கருத்துடையவர்கள் என வற்
புறுத்திக் கூறினால், நாம் மோசடி செய்கிறோம் எனப் பிறர்
நினைப்பர். பிறரை மயக்கும் தந்திரமாக மதித்துப் புரட்சி
சம்பிரதாயங்களில் பற்றுள்ளவர்கள்போல் நடித்தால் அந்த
முயற்சியும் தோல்வியுறும்.

''மனோதத்துவ முறையில் போராட்டம்'' நடத்துவதற்
காகத் தார்மிக வாதம் செய்வது ஒன்று; அந்தக் கொள்கையே
நமது வாழ்க்கையில் பாவும் ஊடையுமாகும் என்று வாழ்ந்து
காட்டுவது வேறு. இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசமே,
சூழ்ச்சி செய்வதற்கும் உண்மை உணர்வுக்கும், தந்திரத்
திற்கும் உண்மைக்குமுள்ள மாறுபாட்டை ஒத்ததேதான். அர
சியல் பிரசங்கங்கள், டெலிவிஷன் ஆடம்பரங்கள், ''அமெரிக்

கக் குரல்'' ரேடியோ ஒலிபரப்புகள் முதலியவற்றில் அடிக்கடி
புரட்சிக் கோஷங்களைக் கலந்து பேசுவதிலிருந்து, நமது மனத்
தூய்மையை மதிப்பிடமாட்டார்கள். உலக மக்களை வாட்டி
வரும் பிரச்னைகளைத் தீர்ப்பதில் நாம் எம்மாதிரி நடந்து
கொள்கிறோம் என்பதிலிருந்தே நம்மை மதிப்பிடுவார்கள்.

அமெரிக்க அயல் நாட்டுக் கொள்கையில் தனிப்பட்ட
அமெரிக்கனின் வாழ்க்கை பின்னிக்கிடப்பதற்கு இது மற்று
மொரு காரணம். இம்மாதிரி அவன் ஈடுபட்டிருப்பது அவனது
சக்தியைச் சோதிப்பதாயிருந்தாலும், அதனால் மிகுந்த நற்
யனும் கிட்டும்.

நமது சுதந்திரப் பிரகடனத்தில் நாம் ஊகித்தறிந்து
கொள்ளக் கூடிய ஜனநாயகத்தின் பொருள் என்ன? மனித
சக்தியே உலக நிகழ்ச்சிகளை உருவகப்படுத்துகிறது. ச
கத்தின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர்கள் எந்த ஜா
மதம், நிறத்தவராயினும் சரி, பொதுநலத்திற்கான உ
கும் உரிமையுண்டு. இந்த உரிமையை ஒவ்வொருவரும்
பயன்படுத்துவதற்கேற்பவே சமூகத்தின் ஆக்க சக்தி பெரு
கும். சமூகத்தில் யாவரும் ஒரு பொதுவான சமூக ஒழுங்குக்
குட்பட்டு நடக்கவேண்டும். இந்தக் கருத்துக்கள் நமது ஜனநா
யக முறையில் அடங்கி இருக்கின்றன. இந்த அடிப்படை
யில்தான் ஜனநாயகம் மலர்ச்சியடைந்து, நமக்கும் உலகிற்
கும் சிறந்த எதிர்காலத்தையளிக்கும்.

ஜனநாயகத்தை இவ்வகையில் செயல்படும்படிப் பாமர
மக்கள் யாரும் கூடிச் செய்துவிடமுடியாது. ஒவ்வொரு
நபரும் சிறப்பாகப் பணிபுரிந்தால்தான் ஜனநாயகம் தழைத்
தோங்கும். எல்லோருக்கும் தெய்வ வழிபாட்டு உரிமையைக்
கத்தோலிக்கர், புரோடெஸ்டண்ட், யூத மதத்தினர் மட்டு
மின்றி, சத்தியம், சகோதரத்துவம் இரண்டில் மட்டும் பற்று
தல் உள்ளவர்கள் யாவரும் ஒன்றுபட்டுப் பாதுகாக்கவேண்
டும். இவ்வாறு மாறுபட்ட மதநம்பிக்கையுள்ளவர்கள் ஒன்று
பட்டு உழைப்பதனால், நம் நாட்டிற்கு, வெளிநாடுகளுக்கும்
ஏற்ற பரந்த கொள்கைகள் வகுப்பது சாத்தியமாகும்.

அநீதியை அகற்றுவதற்கும், சீரான இன்பம் அநுபவிக்
கத்தக்க சமுதாயத்தை ஒன்றுபட்டு அமைப்பதற்கான சந்தர்ப்
பங்களைப் பயன்படுத்திக்கொள்வதனாலும், நமது கொள்கை
களைச் சிறப்பாக வகுக்கமுடியும். *மே:ப்ளவர் உடன்பாடு
(Mayflower Compact) காலத்திலிருந்து, புரட்சிக்கு முந்தி

* மேஃப்ளவர் உடன்பாடு (Mayflower Compact) மேஃப்ளவர் எனும்
கப்பலில் தான் மதவேற்றுமைக் கொடுமை தாங்காமல், ஆங்கிலேயர் அமெ
ரிக்காவுக்கு 1620-இல் வந்திறங்கினர். அவர்கள் கப்பலைவிட்டு இறங்கு முன்
பெரும்பான்மையோர் கருத்தை நிறைவேற்றும் அரசாங்கம் அமைப்பதென
உடன்பாடு செய்துகொண்டனர்.



ய நாம் கையாண்டு வந்திருக்கிறோம். அ
ண்டும் தங்களது பழங்காலச் சிறப்பைப் பெறுவார் ரு
நம்மைப் பிறர் பாராட்டும் உற்சாகம் அவர்களிடம் தான்
றும்படிச் செய்துவிடுவோம். நம்மைப் பற்றி எம்மாதிரி அபிப்
பிராயமும் அவர்கள் மனத்தில் பதியும்! சுதந்திரப் புருஷர்
கள், உழைப்பில் ஆர்வமுள்ளவர்கள், கருணையும் சகிப்புத்
தன்மையும் நிறைந்தவர்கள், ஏனெனில், தனிப்பட்டவன்
அசாத்ய மதிப்பு வாய்ந்தவன் என்று அவர்கள் நம்புவதனால்
நம்மிடமிருந்து மாறுபடப் பிறருக்கு உரிமையுண்டு என்று
ஒப்புக்கொள்கின்றனர். இம்மாதிரி அபிப்பிராயமே பிற
மனத்தில் பதியும்.

சர்வாதிகாரப் போக்குள்ள நாடுகளில் தாங்கள் நம்பு
வது ஒன்றைப்பற்றி மட்டும் பிரசாரம் செய்கின்றனர். அ
நாம் பின்பற்ற முடியாது; பின்பற்றவும் மாட்டே
தேசிய அதிகார பலத்தின் சக்தி கொண்டு, உறுதி வாய்ந்
தலைவர்கள், கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தைப் பரப்புகின்றன

ஜனநாயகம் இதற்கு மாறுபட்டது. இது இலட்சிய
னால் கட்டுண்டதல்ல. பல்வேறு கருத்துக்கள் நிலவு
அவைகள் பற்றி சர்ச்சை செய்தல், சிறுபான்மையினர் கரு
துக்கும் மதிப்பளித்தல் இவைகளே அதன் சிறப்புகள். அநு
பவசாத்தியமான, எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நம்
பிக்கை அளிப்பதே ஜனநாயகத்தின் சக்திக்குக் காரணம்.

நமது அரசியல் பேச்சுத் தோரணை சீர்படுமானால், இரு
கட்சிகளிலும் உள்ள நமது அரசியல் தலைவர்களே பொதுஜன
விவாதத்திற்கேற்ற சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவார்
கள். அப்போது இருகட்சி ஒற்றுமை என்பது வெறும் வார்த்
தையாயிராது. கேட்போர், திகைக்கும்படிக் கேள்விகள்
கேட்பது ஒவ்வொருவரின் ஜனநாயக உரிமையுமாகும். ஆனால்
அரசியல் தலைவர்கள் கட்சி வித்தியாசங்களை மறந்து பணிபுரிய
லாம். அப்படிச் செய்தால் இன்று உலகத்தோர் விரும்பும்
இளக்கத் தன்மையுள்ள, ஜீவசக்தி வாய்ந்த கொள்கைகள்
வகுக்க முடியும். இம்மாதிரிக் கொள்கை வகுப்பது
மான அளவுக்கு அமெரிக்கரின் பெரும்பான்மை ஆதரவு
இருந்தால்தான் சாத்தியம்.

எல்லாவற்றையு ரிக்கரின் ஆற்றலுக்குச்
சோதனையாயிருக் க்கிறது. நமது அயல்
தேச விவகார கொள்கை ல் ஒவ்வொரு தனிப்
பட்ட அமெரி ரும், மனமறிந்து ளிவான முறையில்
பணி புரிவது பெரியதொரு சோதனை கும். இதை அயல்
தேச விவகா பணியைத் தொ க் கொண்ட அறி
வாற்றலுள் கள்தாம் செ டியும் என்று கண்
மூடித்தனமா ஒப்புக்கொ தவறு நகரப் பொதுக்

VI:9(Z8 N30 225603

புருஷர்கள் (Sons of Liberty) சங்கம் ஆர
.76 ரம் .. ரியில், தம்மிச்சையாக ஒன்று பட்டு உழைக்கு
ம்பிரதாயம் அமெரிக்காவில் நிலவிவந்தது. நாம் ஒன்று
கக் டு உழைக்கும் நாட்டினர், ஆக்கவேலைக்கு ஒன்றுபடும்
பு 5 உணர்வு என்றென்றும் நம்மிடையே நீடித்திருக்குமாக!
து இலட்சிய ஆர்வத்தில் தொழிலாளர் இயக்கம் ஒன்று
உ தோன்றுகிறது. அந்த இயக்கம், தனது லட்சியத்தைப்
( பற்றியே பெருமை கொள்ளும்; வேதனையடையாது. அவ்
வாருனல். ஜனநாயகம் நம் நாட்டிலும், உலகிலும் புத்துயிர்
அ பறத் தொழிலாளர் இயக்கம் நேரடியாகப் போராட
( வேண்டும் அகதிகள், நீக்ரோக்கள், கண்டு முதலில் பங்கு
ச கொண்டு பணிபுரிபவர்கள், சேரிவாழ் மக்கள், மற்றும்
ய வசதியல்லாதவர்கள் சார்பாகவே கோஷ்டிகளும் அவை
..து ஸ்தாபனங்களும் நீதியாகப் பணிபுரிகின்றன. இவர்
கெள் தனிப்பட்ட மனிதனின் கண்யத்தில் நங்களுக்குள்ள
சக்ஃபிக்கையை நம் நாட்டிலும், வெளியிலும் இரும்புத் திரைக்
கத்துபின் உள்ள நாடுகளிலும் பறைசாற்ற வேண்டும்.
மதம் தனிப்பட்ட அமெரிக்கர்களே தங்கள் நாட்டின் சிறந்த
ஷ்தர்களாக இருந்து வந்திருக்கின்றனர். யுத்த வீரர்கள்
சிகரெட்டுகள் தானம் செய்கின்றனர். அநாதைகளைத் தேடிப்
பிடித்து உதவுகின்றனர். அமெரிக்கரின் சீரிய நடத்தைக்கும்,
தாராள சிந்தனைக்கும் இம்மாதிரிப் பேர்வழிகள் சிறப்பான
உதாரணங்களாக இருந்திருக்கின்றனரே யொழிய பிரபல்ய
மடைந்த நம் அதிகாரிகள் அல்ல. நம் நாட்டிற்கு வந்துள்ள
அகதிகள் வெளிநாடுகளிலுள்ள தங்கள் உறவினர்களுக்கு
எழுதின கடிதங்கள் மூலம் அமெரிக்க ஜனநாயக நடைமுறை
பற்றி, பல அரசியல்வாதிகளைவிடச் சிறப்பான விவரங்கள்
அளித்திருக்கின்றனர்.

நமது மதகுருக்கள், வைத்தியர்கள், உபாத்தியாயர்களுடைய தன்னலமற்ற தியாகத்தை என்னென்று கூறுவது? உலகிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடன் ஒன்றுபட்டு ஆயிரமாயிரம் வழிகளில் அவர்களுக்கு உதவிபுரிந்து வருகின்றனர். பல ஜனதிபதிகளின் பிரசங்கங்களைவிட இவர்களது சேவை அமெரிக்க ஆற்றல் பற்றிப் பிற மக்கள் அறிந்து கொள்ள உதவியாயிருக்கும்.

பேரரசர்கள், சர்வாதிகாரிகளின் அட்டூழியங்களை அவர்கள் நாட்டு மக்கள் நன்கு அறிவதற்கு மேற்கூறிய முறை

---

* சுதந்திர புருஷர்கள் (Sons of Liberty) 1765-இல் அமெரிக்கரைக் கலந்து கொள்ளாமல் பிரிட்டன் ஸ்டாம்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இதை எதிர்த்து, தலைமறைவாகக் கிளர்ச்சி செய்யவே ''சுதந்திர புருஷர்கள் சங்கம்'' ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்